திருவள்ளுவநாயனார்

அருளிச்செய்த

# ஞானவெட்டியான்

மூலமும்

இதற்கு

மாங்காடு. வடிவேலு முதலியார்

இயற்றிய

உரையும்

இந்நூல் கிடைக்குமிடம்:—

**T. R.** வெங்கடேச முதலியார்

நெ. 84, முத்துகிருஷ்ணன் தெரு,

மிண்ட்பில்டிங் போஸ்டு, மதராஸ்.

உ

சிவமயம்.

திருவள்ளுவ நாயனர்
அருளிச்செய்த

# ஞானவெட்டியான்

1500 பாடல்

மூலமும் - உரையும்.

சென்னை சூளை

ம-ா-ா-ஸ்ரீ அப்பன் செட்டியார்
மாணுக்கர்

ம-ா-ா-ஸ்ரீ,

மாங்காடு வடிவேலு முதலியார்
அவர்களால் எழுதப்பட்டு

திருப்பதி

இரத்தினமுதலியார்
அண்டு ஸன் அவர்களது
கலைக்கியான முத்திராக்ஷரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1925.

REGISTERED COPY RIGHT

Title Page Printed at the L. N. V. Press, Choolai, Madras.

உ
வெள்ளைச்சாமி புஸ்தகம்
திருமங்கலம் - காமாக்ஷியம்மன் கோவில் தெரு

S.V. [illegible],
S/o. Vellaichami,
Uthandar St,
Tirumangalam



திருவள்ளுவநாயனர்.

ஸ்ரீ

பரப்பிரம்மணேநம:

திருவள்ளுவநாயனார்

திருவாய்மலர்ந்த

# ஞானவெட்டியான்

## மூலமும் - பொழிப்புரையும்

## ௲ ௫ ௱.

### பாயிரம்.

காப்பு.

விருத்தம்.

அண்டபிண்ட நிறைந்துநின்ற வயன்மால்போற்றி
யகண்டபரிபூரணத்தி னருளைப்போற்றி
மண்டலஞ்சூழிரவிமதி சுடரைப்போற்றி
மதுரதமிழோதுமகத் தியனைப்போற்றி
எண்டிசையும்புகழுமெந்தன் குருவைப்போற்றி
யிடைகலைபின்சுழிமுனையின் கமலம்போற்றி
குண்டலிக்குளமர்ந்த விநாயகனைப்போற்றி
குகமணியின்தாளிணையைப் போற்றிபோற்றி.

(இ-ள்.) அண்டத்திலும், பிண்டத்திலும், வியாபித்திருக்கின்ற பிரமதேவனையும், விஷ்ணுவையும், கண்டிக்கப்படாத பரிபூரணத்தின் திருவருளையும், பூவுலகத்தைக் சூழ்ந்திருக்கின்ற சூரியசந்திரர்களையும் அக்கினிபகவானையும் இனியதமிழ்க் கல்விக்குத் தலைமை பூண்டவரான அகத்தியமுனிவரையும், அஷ்டதிசைகளும் புகழ்கின்ற என்னுடைய ஞானாசிரிய சுவாமியையும், இடைகலை, பிங்கலை, சுழிமுனை. இவைகளின் மேலிடமான கமலத்தையும், வேதங்களிலும், யோகநூல்களிலும், குண்டலியென்று சொல்லப்பட்டு வருகின்றமூலாதாரத்தில் எழுந்தருளியிருக்கின்ற விநாயகக்கடவுளையும் அவரது தம்பியாகிய சுப்பிரமணியக்கடவுளுடைய திருவடிகளையும் (இந்நூல் இனிது முடியும் பொருட்டு) நமஸ்காரஞ் செய்கின்றேன். எ-று.

அண்டம் என்றது வெளி. பிண்டம் என்றது உள்.

பிரமவிட்டுணுக்கள் அண்டத்திற்செய்வதுபோலவேபிண்டத்திலுந் தத்தம்செய்கைகளைச் செய்யவேண்டியது அத்தியாவசியமாயிருத்தலால் அவர்களை 'அண்டபிண்ட நிறைந்து நின்ற அயன்மால்' என்றும், சர்வவியாபகத்திருவருளையே இந்நூல் உட்கிடையாகக் கொண்டிருத்தலின் 'அகண்டபரிபூ

ணத்தினருள்' என்றும், அப்படியாகச்சொல்லப்பட்ட இந்நூலானது சந்திர சூரியர்கள் உள்ளவரைக்கும் உலகத்தில் நிலவவேண்டுமாதலால், மண்டலஞ் சூழிரவிமதி' என்றும், இந்நூலிற்சொல்லப்பட்டுவரும் ஒவ்வொருவிஷயமும் அக்கினியில்லாமல் முடிவுபெருதாதலால் 'சுடரை'என்றும்சொல்லப்படுவது தமிழாதலால் அத்தமிழ்தெய்வதமதை 'மதுரதமிழோது மகத்தியனை'என்றும், இவ்வளவுங் குருவருளாற்கிடைக்கப் பெற்றதாகலானும் அக்குருஎட்டுத்திசை களிலும்உள்ளாரால்புகழப்பட்டவராதலாலும், 'எண்டிசையும்புகழுமெச்சதன் குரு' என்றும், இந்நூலுள் திரிநாடிகளின் விஷயமேபெரும்பாலும் சொல்லப் பட்டதாதலால், இடைகலைபின் சுழிமுனையின்கமலம்' என்றும், இவையெல் லாம் அகத்தின்கண் ஞானமேயாகுமென்று வெளிப்படுத்தும்படி வேறொரு பெயரால் விநாயகரைக்கூருமல் 'குண்டலிக்குளமர்ந்த விநாயகன்' என்றும், அங்ஙனம் விநாயகனைச்சொல்லி முருகனைச் சொல்லாதிருப்பது முறையன் ருதலாய் 'குகமணியின்தாளிணை' என்றும் கூறினர்.

தான்சொல்லும் இந்நூலானது யாதொருவிக்கினமும் வாராதபடிசுக மே நிறவேறும்பொருட்டு மேலே சொன்னதேவர்களையும் இனிச்சொல்ல விருக்கும் தேவர்களையும் வணங்கிய தெனக்கொள்க. (க)

குகனருளின்கிருபையினு லிந்நூல்ஞானங்
கூர்ந்துநவசித்தர்மொழி குறித்துஆய்ந்து
புகழமிர்தச்செந்தமிழா யிரத்தைந்நூறு
புகலவும்பூதலங்களெல்லாஞ் செழித்துவாழ்க
அகமகிழுமம்பிகைப்பெண் ணருளினலே
யவனிதனில்ஞானவெட்டி யருளயானும்
நிகழ்திருவள்ளுவநாய னுரைத்தவேத
நிரஞ்சனமாகிலவுபொழி ரவிகாப்பாமே.

(இ-ள்.) சுப்பிரமணியக்கடவுளுடைய திருவருளாலும், பார்ப்பதாதேவி யினுடைய கிருபையினுலும், நவசித்தர்களும் திருவாய்மலர்ந்திருக்கும் நூல் களை யெல்லாம் நன்ருகவாராய்ந்து உலகத்தார்கள் உஜ்ஜீவிக்கும் படியாக ஞானங்களையே நன்ருகநிரப்பித்தமிழ்ப்பாக்கள் ஆயிரத்தைஞ்ஞூற்ருல்ஞான வெட்டியான் என்கிறபேரமைத்து ஒரு அருமையானநூலை நான்சொல்லும் பொருட்டு விளங்குகின்ற திருவள்ளுவநாயனுரால் திருவாய் மலர்ந்தருளப் பட்ட சாஸ்திரமாகிய வேதசூரியன் காத்து ரக்ஷிப்பான்.

இந்நூலாசிரியர் முருகக்கடவுளையும், உமையம்மையையும் உபாசிப்பவ ரென்பார், 'குகனருளின்கிருபையினல், எனவும், 'அம்பிகைப் பெண்ணருளி னல்' எனவும் தமிழ்ப்பாஷையைவிட உயர்ந்தபாஷையில்லை யென்பார்.'செந் தமிழ்'எனவும். இந்நூலால்உலகத்தார்கள் க்ஷேமமடைவார்கள்என்பார்"பூத லங்களெல்லாஞ்செழித்து வாழ்க' எனவும், இந்நூலே ஒருவெட்டியானும் அவன்சொல்லுவனவெல்லாம்ஞானமுமாகையால் இதற்குபேர்ஞானவெட்டி.

யான்என்பார் அவனிதனில் ஞானவெட்டியருள்' எனவும்,இதற்குத்திருவள்ளுவருரைத்த நூல்முதற்காரணமாய்க்காப்பாற்றுவதென்பார், 'நிகழ்திருவள்ளுவநாயனருரைத்த வேதநிரஞ்சனமா நிலவுபொழிரவிகாப்பாமே' எனவுங் கூறினர்.

ஆயின்இச்செய்யுளால் இந்நூலுக்காசிரியர் திருவள்ளுவநாயனு ரல்லர் என்று வெளிப்படுகின்றது. ஆனல் கர்ணபரம்பரையாக திருவள்ளுவநாயனுரே இந்நூலுக்காசிரியர் என்றுவழங்கிவருகிறது. இதுபோலவே இந்நூலுள் ஆங்காங்குத் திருவள்ளுவநாயனர் செய்ததாகவே சொல்லப்பட்டிருக்கிறது. இதுபற்றியேபெரியவர் வாக்கெனப்பாட்டைத் திருத்தாமல்விட்டனம். (உ)

நிலவுபொழியிரவிமதி யருளினலே
நின்றிலங்குநாதவிந்தி னிருவிகாப்பு
வலமிடமாய்சூழ்ந்துவருங் காரசாரம்
வழலையெனுமாமதுர வாணிகாப்பு
உலகமதிற்கடல்சூழ்ந்த புவனைவாலை
யோங்காரமூலகணபதியேகாப்பு
தவமதிதசனகாதி ரிஷிகள்பாதஞ்
சடாதாரசூக்ஷ்சடா தாரங்காப்பாம்.

(இ-ள்.) கிரணங்களை வீசாநின்ற சூரிய சந்திரர்களது கிருபையினுலிருந்து விளங்காநின்ற நாதமும், விந்துவும், வலமிடமாகச் சுற்றிச்சுற்றி வருகின்ற, (காரசாரமென்றும் வழலையென்றும் உபசாரமாகக்) சொல்லுகின்ற மதுரவாசகத்தையுடைய சரஸ்வதியும், கடலாற்சூழப்பட்ட இவ்வுலகத்தார்களால் துதிசெய்யப்படுகின்ற வாலையும், பிரணவமயமான மூலாதாரகணபதியும் மிக்கவும் மேம்பாடுடைய சனகன்முதலிய ரிஷிகளுடைய பாதங்களும் தூலசடாதாரமும் சூட்சுமசடாதாரமும் (இந்நூல் இனிதுமுடியும்பொருட்டு) காவலாகவிருக்கும். எ-று.

நாதமும் விந்துவுஞ் சூரிய சந்திரமண்டலங்களிலேயே விளங்கவேண்டுமென்பார், 'இரவிமதியருளினலே நின்றிலங்கு நாதவிந்தினிருவிகாப்பு' எனவும், காரசாரவழலைகளையே இந்நூலிற்கூறப்படும் விஷயத்திற்குச் சரஸ்வதியாகஉவமித்ததென்பார், 'காரசாரவழலையெனுமாமதுர வாணிகாப்பு,எனவும் இந்நூலில் ஆதாரங்களைச்சொல்லி யிருத்தலின்மாணைக்காட்டி மாணைப்பிடிக்க வேண்டுமென்கிற நியாயம்பற்றி அவ்வாதாரங்களையும் 'சடாதாரங் சூட்சும சடாதாரங் காப்பாம்' எனவும் கூறியதெனக்கொள்க. (ங)

சடாதாரமதிலிலகுந்தவளவாணி சரஸ்வதியும்பிரமன்பதமாலின்
பாதம்,* நீடாழிலட்சுமிப்பெண்ணருளின்பாதம்நிரஞ்சனருத்திரன்
பாதநேமிபாதம்,கடாகமெல்லாநிறைந்துநின்ற மயேசன்பாதங்கரு
ணைமயேஸ்வரியினிருகமலபாதம்,தடாதசதாசிவத்தின்மனேன்மணி
யின்பாதஞ் சாம்பசிவன்பொற்பாதஞ் சந்ததமுங்காப்பாம்.

(இ-ள்.) மூலாதாரத்தில் எழுந்தருளியிருக்கும் வெண்மை நிறத்தை யுடையவளான சரஸ்வதியின் திருவடிகளும்பிரமதேவனுடைய திருவடிகளும் விஷ்ணுவின் திருவடிகளும் திருவருள்கடாட்ச வீட்சண்ணியத்தை யுடையவளான இலட்சுமிதேவியின் திருவடிகளும்உருத்திரமூர்த்தியின் திருவடிகளும் அவன்மனைவியாகிய வாமியின் திருவடிகளும் அண்டகடாகமெல்லாம் வியாபித்திருக்கின்ற (சர்வவியாபகனுயிருக்கின்ற) மகேசனுடைய திருவடிகளும் அவன் மனைவி மகேஸ்வரியின் திருவடிகளும் யாவருடையநாவுக்கும் இப்படிப்பட்டவனென்று சொல்லுவதற்குக் கூடாத சதாசிவனுடைய திருவடிகளும் அவன்மனைவிமனோன்மணித்தாயின் திருவடிகளும் இவைகட்கு மேற்பட்ட பதவியோனுகச் சொல்லுகின்ற சாம்பசிவமூர்த்தியினுடைய திருவடிகளும் (இந்நூல் இனிதுமுடியும்பொருட்டு) சதாகாலமும் காவலாகவிருக்கும்எ-று

மேற்கூறிப்போந்த தேவர்களுடைய திருவடிகளையெல்லாம்வணங்கவேண்டியது நூற்பரம்பரையாகையால் அப்பரம்பரை தவிருமல் கூறினரென்க.

பாதமடிமூலநடு விந்தின்மூலம் பராபரையின்வீடு பரப்பிரமவீடு, ஒதுசந்திரபுஷ்கரணி மாலின்வீடு ஓரெழுத்தாய்நின்றிலங்கும் ருத்திரன்வீடு, நாதவிந்தின்மேருமுடிசுடரின்வீடு நாதாந்தமயேஸ்வரத்தின்வாயுவின்வீடு, ருதமுனியீசனுறவாடும்வீடு சோதியெனுமாக்கினையின் காப்புத்தானே.

(இ-ள்.) பாதத்தின் அடிமூலம்நடுமூலமும், விந்துமூலமும் பராசத்தியின்வீடும், பரப்பிரமத்தின்வீடும், சந்திரபுஷ்காணியையுடைய திருமாலின் வீடும்,ஓரெழுத்தின்மயமாய் நின்றிலங்கும் உருத்திரன்வீடும், நாதவிந்துக்களினையுடைய மேருவாகியவீடும், நாததத்துவத்திற்கு அதீதப்பட்டவாயுபூதவிடமான மகேஸ்வரத்தின்வீடும் ருதமுனியும் ஈஸ்வரனும் உறவாயிருந்து விளையாடும்வீடும், தேஜோமயமான ஆக்கினையின்வீடும் (இந்நூல் இனிதுமுடியும் பொருட்டுக்) காத்துரக்ஷிக்கும். எ-று.

அடிமூலமென்றது மூலாதாரம். நடுமூலமென்றதுஅநாகதம். சந்திரபுஷ்கரணிஎன்றதுபிறைவடிவை. அதனிடத்திற் சலம்பெருகுவது சுபாவமாகையால் இவ்வணம் கூறினர். ருதமுனியுமீசனுமுறவாடும்வீடுஎன்றது சுழிமுனைவீட்டை. இதுவே மௌனவீடென்றுஞ் சொல்லப்படும். (௩)

ஆக்கினைக்குள் சத்தம்பிருதிவிபீட மப்புவின்வீடுவன்னிவாயுவின் வீடு, ஏக்கமில்லாவாகாசமேருவீடு இரவிமதிசுடரிலகு மின்பவீடு, பார்க்கபணுமுடிநடுவில் நடனஞ்செய்யும் பராசத்திசிவசிங்காதனத்தின்வீடு, பூக்குமலர்வாசியிருந்துலவும்வீடு புகழ்பெரியவைம்பூதம் புலன்காப்பாமே.

(இ-ள்.) ஆக்கினைக்குள்ளிருக்கும் சத்தமும், பிருதிவி, அப்பு,தேயு,வாயு, ஆகாசம், மேரு, சூரியசந்திரர்கள் ஆகிய இவைகளின்வீடும் ஆதிசேஷனுக்கு நடுவாயிருக்கும் தலையினின்றும் நடனஞ்செய்கின்ற பராசத்தியானவள் சிங்

காசனத்தில் கொலுவமர்கின்றவீடும் சாமானது மாறிமாறி உலாவுதற்குரிய விடும் ஐம்பூதங்களும் அவற்றிற்குள்ளீடாய் விளங்கும் ஐம்புலன்களும் இந்த நூலை யாதொரு இடையூற்றிற்குள்ளும் அகப்படுத்தாமல் காத்து ரக்ஷிக்கும்.

பூதாதியிருந்துவிளையாடுபீடம் பொற்கமலமாயிரத் தெட்டித ழின்பீடம், நாதாக்கள் திருநடனமௌனபீடம் நந்தியொளிவிந்து செகநாதபீடம், வேதாந்தபூரணமெய்ஞ்ஞானபீடம் வித்தாரவாக மத்துக்கதீதமான, ஆதாரமூலவன்னியமர்ந்த பீடமாநந்தநடன சபை யைந்துங்காப்பாம்.

(இ-ள்.) பூதங்களிருந்து விளையாடுதற்குரிய பீடமும் ஆயிரத்தெட்டி தழ்த் தாமரைமலரானது இருக்கத்தக்க இடமும் பெரியநாதாக்களெல்லாம் அசைவற்றிருந்து மௌனஞ்செலுத்தின பீடமும் நந்தியொளியை வீசுகின்ற விந்துஸ்தானமாகிய ஜெகநாதபீடமும் வேதாந்தநூல்களிற்கூறப்பட்ட பூரண ஞானபீடமும் மிகவும் விரிந்திருந்த ஆகமநூல்களுக்கு அதீதப்பட்டுள்ள தான மூலக்கனலிலமர்ந்திருக்கும்பீடமும் பஞ்சகிர்த்தியத் தாண்டவஞ்செய் யும் ஐந்துசபைகளும் ஆகியயாவும்|சேர்ந்துகொண்டு என்னுஞ்சொல்லப்பட்ட இந்த நூலைக்காத்து ரக்ஷிக்கும் எ-று. (எ)

ஐந்துருவாயுடலெடுத்தவாறின்கூறுமசடில்லாத் தேகமெண்சா ணாத்துமக்கூறும், விந்துதித்துச் சடமெடுத்த நாதக்கூறும் விற்பன மாய்க்கடமுதித்தகாயக்கூறும், தந்திரமாய் நீர்க்குமிழியானகூறுந் தத்துவந்தொண்ணூற்ருறு சைலக்கூறும், இந்திரியசுக்கிலசுரோணி தத்தின்கூறு மியம்புதற்குத் தெசநாடியியல்பு காப்பாம்.

(இ-ள்.) இந்தத்தேகமெடுத்த விதத்தையும் இந்த எண்சாண்தேகத்தில் வந்திருக்கும் ஆன்மாவின்கூறும், விந்துநாதங்களால் எவ்வாறு தேகம்வந்த தென்பதையும், அப்படிவந்ததேகக்கட்டுகெழுன்விதத்தையும்அதுநிலையில்லா மல் பீரிற்ருேன்றும்முட்டையைப்போல் அழிந்துபோகும்வகையையும் இது தொண்ணூற்ருறுதத்துவத்தோடு கூடியிருக்கிற தன்மையையும்சுக்கிலம் இப் படிப்பட்டது. சுரோணிதம் இப்படிப்பட்டது என்பதையும் நன்ருகச் சாங் கோபாங்கமாகச் சொல்லுதலபொருட்டு தசநாடிகள் காத்துரக்ஷிக்கும் எ-று.

தெசநாடிசுவாசமதுஞ் செனித்தவாறுஞ் செகதலத்திலென்னைப் பழித்தசெய்திவாறும்,அசைவதிருந்தாக்கையசையாதவாறு மடிநடு வுமுடிவானகற்பவாறும், பசைந்தமண்ணீருப்பு வுவரெடுத்தவாறும் பஞ்சபட்சியஞ்சுகிலைத் திருந்தவாறும், இசையுந்தசதீட்சைமதிரவி யின்வாறு மிராஜயோகத்தினருள் காப்புத்தானே.

(இ-ள்.) தசநாடிகளும், தசவாயுவும் உண்டான விதத்தையும், இவ்வுல கத்திற்கண்என்னைப்பழித்தவிதத்தையும்,இந்தத்தேகத்தைஅழியாமலிருத்தி வைக்கத்தக்க மார்க்கத்தையும் ஆதிநடு அர்த்தமாயிருக்கும் கற்பங்கள் சாதிக்

கும் விதியையும் பூமிகாதத்தை எடுக்கும் விதத்தையும் இந்தத் தேகத்தில் பஞ்சபட்சி நிலைத்திருக்கும் விதத்தையும் தசதிட்சையின்மார்க்கத்தையும் சந்திரசூரியர்களின் தன்மையையும், நான்சொல்லுதற்பொருட்டு சிவராஜயொகத்தின் திருவருளானது காத்துரக்ஷிக்கும் எ-று. (௯)

யோகாதியோகநிலைத்திருந்தபோக்குமுற்பனமாங்கற்பமுண்டு சாவாப்போக்கும்,வேகாத்தலையுமதிரவியின்போக்கும்வெண்சாரை கருநெல்லிவிதித்தபோக்கும், போகாப்புனலுஞ் சவர்க்காரப் பூநீர் போக்கும் பூதலமெலாமகிழும் பொருளின்பொக்கும், ஆகாதமனிதர்களையகற்றும்போக்கு மசடில்லாமாதாசகுளிகை காப்பாம்.

(இ-ள்.) யோகமும், மகாயோகமும், நிலைத்திருந்த விதத்தையும்,கற்பம் புசிக்கவேண்டிய முறைப்படி புசித்துச் சாகாமலிருக்கும் விதத்தையும் வேகாததலையையும், சந்திரசூரியர்களென்று சொல்லப்படுகின்ற கலைகளின்மார்க்கத்தையும், வெண்சாரை, கருநெல்லியென்னும் இவற்றின் விவரத்தையும் எக்காலத்தும் நீங்காதசுத்தசலமார்க்கத்தையும் சவர்க்காரமென்று சொல்லப்படுகின்ற பூநீற்றின்மார்க்கத்தையும் அதினால உலகத்தார்களெல்லாம் பொருளுடையவர்களாக வேண்டியமுறையையும் இத்தொழிலுக்கு உபயோகமாகாத மனிதர்களைநீக்கி விடுகின்ற விதத்தையும் (என்னுடைய ஞானாசிரிய சுவாமிகளின் கிருபைகொண்டு சொல்லும்பொருட்டு) வாலைரசமணியானது காத்துரக்ஷிக்கும் எ-று. (௰)

குளிகைரசமாதுகற்பக் குகையின்மூலங் குருபூசை குண்டலியின்வாசிமூலம், வளியறியுமவிழ்தமொடு நோய்கள்தீர வழலைமுப்பு வைத்தியமுங்கிருதலேகியம், விழிமடவாளம்பிகைப் பெண்ணருளினாலேவிவேகமணிமாத்திரையும்பஸ்பந்தானும்,தெளிவுபெறுஞ்சுண்ணமொடுசெந்தூரங்கள் திராவகமுஞ்செயநீருஞ் சென்னிகாப்பாம்.

(இ-ள்.) ரசக்குளிகை செய்யும் முறையையும் அதுநின்று முடிவுபெறுதற்காதாரமாயிருக்கத்தக்க பூசைசெய்யும்மார்க்கத்தையும் குருமூலகுண்டலி பூசையாகிய இவைகளை முடிக்கும் விபரத்தையும் தாரணை செய்யவேண்டிய மார்க்கத்தையும் தேகத்திலுண்டாகும் நோய்கள்தீரும்பொருட்டு ஔஷதங்களாகிய வழலையென்று சொல்லப்படுகின்ற முப்பூவின் மார்க்கத்தையும் கிருதம், லேகியம், மாத்திரை, பஸ்பம்) சுண்ணம்,செந்தூரம், திராவகம்,செயநீர் ஆகிய இவைகள்செய்யும் விதத்தையும் உமாபரமேஸ்வரியினுடைய கிருபைகொண்டு சொல்லுதற்கு மேலேசொல்லப்பட்டவைகளே காவலாயிருக்கும்.

சென்னிவளர்சிவசிங்கா தனத்தின்மேவுஞ் சிதம்பரமாநடனசபைசித்ரகூடம், வன்னிமதிப்பரகாசகமலபீட மதுரவின்பவமிர்தசர்வாணிபீடம், உன்னிதமாய்கன்னியெனக்கமிர்தமூட்டி யுயிருமுடல்நிலைத்திட வுபாயஞ்சொன்னாள், இன்னிமித்தம் பொருத்தமெனக்களித்தஞ்ஞான விருளகற்றிப்பானரச மீந்தாள்காப்பாம்.

(இ-ள்.) உயர்ந்த சிவபெருமானுடைய சிங்காதனத்திலிருக்கின்ற சிதம்பரகூடன சபையாகிய சித்திரகூடத்தின் கண் ஒளிபொருந்திய சந்திரன்போலும் பிரகாசத்தைவாய்ந்த கமலபீடமும் இன்பாமிர்தசர்வாணி எழுந்தருளியிருக்கும் பீடமும் அதினிடத்தில் எழுந்தருளியிருப்பவளான கன்னிகையானவள் இந்தநூலை நான் உலகத்தில் சொல்லு நிமித்தமே என்மேற்கருணை வைத்து உயிரும் உடலும் நிலைக்கும்படியான உபாயத்தை உபதேசித்துப்பின்னர் என்னுடைய அஞ்ஞானமாகிய அந்தகாரத்தை நீக்கி திருவருண்ஞானமாகியபானரசத்தை அருள்செய்தாள் ஆகையால்அப்படிப்பட்ட அந்தஞானசத்தியானவள் (இந்தநூல்இனிதுமுடியும்பொருட்டுபாதுகாத்தரக்ஷிப்பாள்)

வேறு.

இருள்தனையகற்றுஞ்சோதி யிகபரவெளியேபோற்றி
அருள்தருஞானதேசி யகத்திசாருளினாலே
திருவருதவளவாணி சிரோமணிக்கமலந்தன்னில்
அருமலர்பொழியுஞான மமிர்தசெந்தமிழைச்சொல்வாம்.

(இ-ள்.) எனக்கிருக்கும் அஞ்ஞானயிருளைத் துரத்துஞ் சோதியாகவும் இம்மைமறுமைகளாகிய வெளிகளைப்பாதுகாத்துத் திருவருள்செய்கின்ற ஞானாசிரியனுமான அகத்தியமுனிவருடைய திருவருளினால் அழகியவெண்மை நிறத்தையுடைய சரஸ்வதியின் தாமரைமலர்போன்ற திருவடிகளில் அரிய புஷ்பங்களிட்டு அர்ச்சித்து (அவருடைய ஆக்கினையைமேற்கொண்டு) ஞானாமிர்தத்தைத் திரட்டிவைத்திருக்கின்ற இந்த (ஞானவெட்டியானென்னும்) தமிழ்நூலைச் சொல்லுகின்றோம். எ-று. (கரு)

இந்தநூலில் ஏதாயினும் குற்றங்கள் வருமேயானாலும் அவைகளையெல்லாம் மேற்சொன்ன கடவுளர்கள்நீக்கி என்னைப்புனிதனாக்குவார்களென்பது குறிப்பு.

வேறு.

நந்தியொளிப்பிரகாசவட்டத்துள்ளே நற்கமலமாயிரத்தெட்டிதழைப்போற்றி, உந்திநிலையறிந்ததிருமூலர்பாத முவமையுள்ளகாலாங்கிபோகர்பாதஞ், சிந்தையுள்ளமகிழ்ந்தசட்டைமுனியின்பாதஞ் சிவசமயங்கண்ட கோரக்கர்பாதம், அந்திபகலறிந்த விடைக்காடர் பாதமருளுஞ்சகநாதர் பதமர்ச்சித்தேனே.

(இ-ள்.) சர்வேஸ்வரனுடைய தேஜோமயமானது வீசுகின்றவட்டத்திற்குள் உயர்ந்தஆயிரத்தேட்டிதழ்க்கமலபீடத்தை நமஸ்கரித்துமணிபூரகத்தின் நிலைமையையுணர்ந்த திருமூலநாயனார் உயர்ந்தவரானகாலாங்கிநாதர், போகநாதர், சட்டைமுனிவர். சிவசமயமே உண்மையானதென்றுணர்ந்தகோரக்கர் இராப்பகல்களையுணர்ந்த இடைக்காடர் அருள்செய்கின்றஜெகநாதர் இவர்களுடைய திருவடிகளை உண்மையோடுநமஸ்கரித்து அர்ச்சனைசெய்தேன் (கசா)

மதியிருந்துதமுறி விளையாடும்வீடு மகத்தான செங்கதிரோன் மகிழ்ந்தவீடு, பதியிருந்துவிளையாடுமூலவீடு பத்திதருஞ்சித்திதரும் பரமவீடு, துதிபெறவுநாற்சதுரமேலுநின்று துலங்குமெழிற்கணபதி வல்லபையைப்போற்றி, நிதிபெறவுமெனையீன்ற குருவின்பாதநெகிழாமலனுதினமுங் காப்புத்தானே.

(இ-ள்.) சந்திரனானவன் இருந்துவிளையாடும்வீடு, சூரியனும்மகிழ்ந்தவீடு தலைவனிருந்து விளையாடுகின்றமூலாதாரவீடு பத்தியையும்,சகலசித்தியையும் கொடுக்கின்ற உயர்ந்தவீடு, யாவருந்துதிக்க நாற்கோணத்தின்மேலிருந்து விளங்குகின்றஅழகியகணபதியையும் வல்லபையையும்போற்றிசெய்துஎன்னைப் பெற்றெடுத்த ஆசிரியன்திருவடியையும்துதித்து காப்பாகவணங்குவோம்.

திருவிருந்துகனலெழுந்து ஆடும்வீடு சிறந்தசத்திவல்லபைதன் கணவனை, மருவிருந்துகொஞ்சுதமிழ்நாவில்மேவு மகிழ்ந்தமதகரியினிருகாலைப்போற்றி, கருவிருந்தபெருவீடு தாண்டியப்பால் கண் குளிரநின்றுநடுவணையிலேறி, மருவியுயிர்நாதவிந்துஆயிபாதம்வணங்கியிந்த நூல்வகையைப் புகழ்வேனுண்டே.

(இ-ள்.) லட்சுமியானவள் எழுந்தருளியிருந்து அக்கினியுடன்ரக்ஷிக்கும் வீடும், வல்லபைகணேசன் கொஞ்சுகின்ற இதழ்களில் பொருந்துகின்ற விநாயகனின் இரண்டுதிருவடிகளைப்போற்றி கருக்கள் உதயமாகின்றவித்து வீட்டைக்கடந்து அப்பால் ஞானக்கண்ணானது குளிரும்படி நின்று நடுவணையில் ஏறி,நாதவிந்துக்களின்சொரூபியான ஆயியின் திருவடிகளை வணங்கி இந்தநூலின் வகையைச் சொல்லுவேன். எ-று. (௧௬)

தந்தைதாய்கருவதனிலுதித்தவாறுந் தாரணியில் கருத்திரண்டுபிறந்தவாறும், அந்தமுடன்சாதிகுலம் வகுத்தவாறு மவனிதனிற் பெரியோர்களறிந்தவாறும், சிந்தைதனி லஞ்செழுத்தைப்போற்றி செய்து செப்புகிறேனிந்நூலை யிகழவேண்டாம், தந்திரமாமுக்கோணந்தன்னில்நின்ற தந்திமுகன்கமலபதங் காப்புத்தானே.

(இ-ள்.) தாய்தந்தையர்களால் கருப்பத்தில் தோன்றினதும் உலகத்தில் வந்து பிறந்ததும் உடனேசாதிகுலங்கள் ஏற்பட்டதும் உலகத்தில் பெரியவர்கள் உணர்ந்ததும், மனத்தின்கண் பஞ்சாட்சரதியானஞ்செய்து இந்நூலைச் சொல்லுகிறேன், யாவரும் இகழ்ச்சிசெய்யவேண்டாம் இதைச்சொல்ல முக்கோணசக்கரத்தில் தந்திரமாக எழுந்தருளியிருக்கின்ற கணேசனுடையதிருவடித்தாமரைகள் காப்பாகும். எ-று. (௧௭)

கதிரொத்த விடந்தனிலேயிலகுஞ்சோதி கனகரத்தனமிலகுதிருமண்டபத்தில், மதியொத்துநின்றிலங்குஞ்சுவாதிஷ்டானம் வளர்ந்தவிதழிம்மூன்றுமங்குலத்தில், நிகரொத்தபிரமன்சரஸ்பதியின்பாதம் நினைந்துருகித்தாளிணையைப்போற்றிசெய்து, உதிரத்தில் சுக்கிலந்தான்வந்தவாறு மோரெழுத்தாநாதவிந்தமைந்தவாறே.

(இ-ள்.) கிரணமானது விளங்குகின்ற(கனகரத்தின) மிருக்கின்ற திருமண்டபத்தில் அறிவுஒத்து விளங்குகின்ற சுவாதிஷ்டானத்தில் இருக்கின்ற ஆறிதழ்களில் வாசஞ்செய்கின்ற பிரமன் சரஸ்வதி இவர்களுடைய இரண்டு திருவடிகளையும் போற்றுதல்செய்து உதிரம், சுக்கிலம், ஓரெழுத்தால் நாதவிந்தமைத்தவாறும் உரைக்கிறேன். எ-று. (௧௮)

சொல்வரிது மந்திரத்துக்கெட்டாவீடு சோதிமணி பூரகத்திலமர்ந்தமூர்த்தி, வெல்லரிதுநாபிபதின்கமலத்துள்ளே விளைந்தவிதழ்ரைஞ்சுபத்துமேலும், வல்லபமாய்கின்றிலங்குமாலின்தேவிவளர்ந்தசபைத்திருமாலைவணங்கிப்போற்றித், தொல்லுலகிலுள்ளபெரியோர்கள்பாதந் துதித்திந்நூல் விளம்புகிறேனுண்டேகேளீர்.

(இ-ள்.) சொல்லுதற் கருமையான மந்திரங்களுக் கெல்லாம் எட்டாத வீடான தேஜஸ்ஸாவிளங்குகின்ற மணிபூரகஸ்தானத்தில் நாபியின் கமலத்துள் பத்திதழ்க்குள் வல்லமையுடன்விளங்குகின்றவிஷ்ணுலட்சுமி இவர்களுடைய திருவடிகளைவணங்கிப்போற்றி உலகத்திலுள்ள பெரியோர்களுடைய திருவடிகளைத்துதித்து இந்நூலைச்சொல்லுகிறேன் ஆண்டையேகேள். எ-று. (௧௯)

வட்டமிட்டசட்கோண பாரின்மேலும் வளர்ந்தவிதழிராறுமங்குலத்தில், திட்டமிட்டவனுசதத்தில்வீற்றிருந்த சிறந்தருளும்ருத்திரனும்ருத்திரியைப்போற்றி, வெட்டவெளிவேதமறைநான்குமோதும்வேதமெல்லாந்திருநீறுபானவாறும், அஷ்டதிசையறிந்துணர்ந்தபெரியோர்பாதமைம்பத்தோரட்சரமுங்காப்புத்தானே,

(இ-ள்.) வட்டமிட்டிருக்கின்ற அறுகோணத்தின்மேல் வளர்ந்திருக்கின்ற பன்னிரண்டு இதழ்களையுடைய அநாகதஸ்தானத்தில் வீற்றிருந்தருத்திரனையும், ருத்திரியையும் போற்றுதல்செய்து நான்குவேதங்களால் சொல்லப்படுகின்ற பெரியோர்களுடைய திருவடிகளும், ஐம்பத்தோரட்சரங்களும் காப்பாகும் எ-று. (௨௦)

ஆறுகொண்டவம்பலத்தி னின்றசோதியம்பரமாந்தற்பரத்தையேறிநித்தம், வீறுகொண்டவறுகோணவீட்டின்மேலும் விளங்குமிதழ்பதினாறுமேவுபீடம், பேறுபெற்றமயேசன் மயேஸ்பரியுமங்கேபேணியவரிருவர்பதக்கமலம்போற்றி, பாரிலுள்ளவேதமறியாமல்நின்ற பழம்பொருளைப் பாடுகிறேனுண்டேகேளே.

(இ-ள்.) வழிபாகவிருக்கின்றஅம்பலத்தில்நின்றசோதியம்பலமானஞானசபையில்நிதமும்வதி அறுகோணமான வீட்டின்மேவும், பதினாறுஇதழ்களில் அமர்ந்தமகேசன், மகேஸ்வரியின் திருவடிகளை நமஸ்காரஞ்செய்து வேதங்களாலும் உணரப்படாமல் நின்ற புராதனமாயுள்ளவஸ்துவைநான்பாடுகிறேன்

காலைவட்டமாலைவட்டமாகின்ற கதிர்மதியிற் கருதிமுனையாடுஞ் சோதி, நீலவட்டங்கொண்டெழுந்து கலைபெண்ணுங்கும் நின்றிலங்

குமாக்கினையிலிதழுமூன்று, ஞாலமதிலாதியந்தரூபமானநற்கமலமாயிரத்தெட் டிதழின்மேலும், ஆலவிடமுண்ட சதாசிவனைப்போற்றியம்பிகையின்கமலபதமர்ச்சித்தேனே.

(இ-ள்.) வட்டமாய்நின்ற கிரணங்களையுடைய சுருதிகளின் அந்தத்திலும் அறுபத்துநான்கு கலைகளிலும் நிறைந்திருக்கின்ற ஆக்கினாஸ்தானத்திலுள்ள மூன்றிதல்களிலும் ஆயிரத்தெட்டிதழ்களிலுமெழுந்தருளியிருக்கின்ற சதாசிவனையும், அம்பிகையையும் வணங்கி அர்ச்சனைசெய்தேன். எ-று.

திரைகடந்துதிரைக்குமேற் பெரும்பாழ்தாண்டிசிறந்தசாகாக்காலும்வேகாத்தலையுந்தாண்டி, மறைபுகுந்துவோதுகின்றவேதந்தாண்டிமதன கலியாணதிருவல்லிமாது, வரையெழுந்தபதினெட்டாங்கோட்டின்மேலு மாதளம்பூவடிவுமனோன்மணியைப்போற்றி,கரைகடந்துபறையனென்றுதள்ளிவைத்த கருத்தையினிச்சொல்லுகிறேனுண்டேகேளே.

(இ-ள்.) திரைச்சீலையைத் தாண்டி, அதற்குமேலுள்ள பெரும்பாழைத் தாண்டி சாகாக்காலையும், வேகாத்தலையையும் தாண்டி வேதங்களைத் தாண்டி பதினெட்டாங்கோட்டின்மேல் மாதளம்பூவின் நிறமுள்ள மனோன்மணியைத்துதித்து கரைகடந்த பறையனென்று தள்ளிவைத்தகருத்தை இனிநான் சொல்லுகிறேன்கேள். எ-று. (௨௩)

அந்தமுள்ளகுருவினடிக்கமலம்போற்றி யன்னைதந்தையிருவருந்தானனுபோகிக்க தந்திரமாயிரவுதனிலணையும்போது தாதுவிந்துநாதமதுயெழுந்தபோதில், எந்தவுயிர்வேதமறை யறிந்ததாண்டேயிடும்பரெல்லாநீசனென்றுதள்ளினார்கள்,வந்தவழிபோனவழியிரண்டுஞ்சொல்வேன் வகையறியாமாந்தர்களே யறிந்துகொள்வீர்.

(இ-ள்.) அழகுள்ளகுருவின் திருவடித்தாமரைகளைப் போற்றி தாய்தந்தையர்கள் அநுபோகஞ்செய்ய, விந்துவும்நாதமும் கலந்தபோதிலெந்தவுயிர்தான் வேதத்தையறிந்தது இடும்பர்களெல்லாரும் நீசனென்று தள்ளினார்கள் இனிநான்வந்தவழியையும், போனவழியையும் சொல்லுவேன், வகையையறியாமாந்தர்களே நீங்கள் அறிந்துகொள்விர். எ-று. (௨௪)

பிரமகுலவேதியராய்ப்பிறந்தார்கோடி பெருமையுள்ளக்ஷத்திரியராய்ப்பிறந்தார்கோடி,திறமையுள்வைசியர்களாய்ப்பிறந்தார்கோடி தெளிவானசூத்திரராய்ப்பிறந்தார்கோடி, உறவுதிதநால்வகையாய்ப்பிறந்தார்கோடியுள்ளுணர்ந்துபாராமல்தள்ளினார்கள், அரனருளாற்சமைநிறைந்தவாண்டமாரே யாதியிலேசாதிகுல்முறைசெய்வேனே.

(இ-ள்.) பிராமணர்களாகப்பிறந்தவர்கள் அளவற்றவர் க்ஷத்திரியராய்ப்பிறந்தவர்களும் அளவிலர் வைசியர்களாய்ப்பிறந்தவர்கள் அளவிலர் சூத்திரர்

களாய்பிறந்தவர்களும்அளவிளர்இப்படி நால்வகைச் சாதியாப் பிறந்திருப்பதை நன்ருயுணர்ந்து பாராமல் தள்ளிவிட்டார்கள். ஆனுல் சர்வேஸ்வரனுடைய திருவருளால் சபையில் நிறைந்திருக்கின்ற ஆண்டமாரே ஆதியிலே சாதி குலங்களைச் சொல்லுகிறேன். எ-று. (௨௫)

எங்கள்குலஞ்சுக்கிலத்தாலெடுத்தவாறு மெண்ணரியசுரோணிதத்தால்வளர்ந்தவாறு, மங்காதவஞ்செழுத்தால்வந்தவாறும் வகையுடனேயங்குலமோ தொண்ணூற்ருறு, சிங்காரமானமனம்புத்திசித்தம்செங்கனலாற் கொண்டெழுந்தவாங்காரந்தான், கங்கையணிசங்கானம்பிகைப்பெண் கருத்தாலேயெடுத்ததிந்தக்காயமாண்டே.

(இ-ள்.) எங்களுடைய குலமானது சுக்கிலத்தினுல் எடுத்த விதமும் எண்ணுதற் கருமையான சுரோணிதத்தால் வளரந்தவிதமும், பஞ்சாட்சரங்களினுல் வந்தவிதமும், தொண்ணூற்ருறங்குல மானதும், அதில்மனம்,புத்தி சித்தம், ஆங்காரம், என்னும் அந்தக் கரணங்கள் உண்டானதும் சர்வேஸ்வரனும் பரமேஸ்வரியும் கொண்ட சங்கற்பத்தினுலேயே இந்தச்சரீரம் எடுத்ததாகும். எ-று. (௨௬)

கருதிரண்டுகாயமதாயானவாறுங்கருவியதிலேவளர்ந்துவெழுந்தவாறும், உறுதிரண்டுகால்கைகள்வகுத்தவாறு முடம்புக்குள்சதைநிணங்கள்தரித்தவாறும், திருவிருந்தமண்டபங்கள் சமைந்தவாறும் சிறுபிள்ளையாய்புவியில் பிறந்தவாறும், அருபியெனுநாதாக்கள் பாதம்போற்றி யாதியிலேசாதிகுல முறைப்பேனுண்டே.

(இ-ள்.) கருவானது திரண்டு சரீரமான விதமும், கருவிகரணுதிகள் அதிலேவளர்ந்து எழுந்த விதமும், நால்வகைகள் உண்டாக்கின விதமும், உடம்புக்குள் தசை நிணங்கள் உண்டான விதமும், மண்டபங்கள் உண்டான விதமும், சிறுபிள்ளையாய் உலகத்தில் இருந்தவிதமும், நாதாக்கள் திருவடிகளைத் துதித்து சொல்லுகிறேன் எ-று. (௨௭)

பாயிரம் முற்றிற்று.

---

## நூல்

### தரு.

தந்தன தன தன னு தன தன தந்த னு த னு த னு-தன்ன னு.

மூலமுமுதலறிந்து-சிவசிவ-முத்திதருஞ்சுழிமுனையறிந்து, பால
முந்தாண்டியப்பால்-பரிபூரண-பானுமதியமிர்தபானமுண்டு, சீலமு
நிறைந்துநின்ற - மூலமணி - திருமாலின்பொற்கமலச்செயலறிந்து,
ஞாலமுங்கடந்துநின்ற-வுயர்குல-ஞானவெட்டியானன்காணும்-தந்.

(இ-ள்.) மூலாதாரத்தையும், அதின் முதலையும் அறிந்து, மோட்சங் கொடுக்கின்ற சுழிமுனையையுணர்ந்து, பாலத்தைத்தாண்டி அப்பால்எங்கும் நிறைந்திருக்கின்ற சூரிய சந்திராமிர்த பானத்தையுண்டு திருமாலின் செய்கையையுணர்ந்து, ஞாலத்தைத் தாண்டிநின்ற உயர்ந்த குலஞான வெட்டியான் நானுவேன் எ-று. (௨௮)

நடுவணைதனிலேறி-சிவசிவ-நாடியகுண்டலி வட்டத்துள்ளே'
அடிநடுமுடியறிந்துசுடரதில் அநுதினம்வாசிகொண்டமிர்தமுண்டு,
படியறிந்திசைநாதம்-சிவசிவ-பத்துமொருமித்துவரு பழக்கமதால்
வடிவுள்ளஜெகஜோதி-கமலமலர்-வந்துபணிந்தவனன்காணும்-தந்.

(இ-ள்.) நடுவணையில் ஏறி நாடிய குண்டலியென்னும் வட்டத்திற்குள்ளாக அடி, நடு, முடிகளையுணர்ந்து, தினமும் வாசியினால் அமிர்தமுண்டு நாதம் பத்தும் ஒருமித்து வருகின்ற பழக்கத்தினால், வடிவுள்ளஜெகஜ்ஜோதியை வந்துவணங்கினவன் நானுவேன் எ-று. (௨௯)

வீம்புகள்பேசுகிறீர்-சிவசிவ-வேடிக்கையாயின்பம்விளம்புகிறீர்
வேம்புகரும்பதுவாமோ-மகத்துகளின்-விற்பனத்தைக் கண்டறியா
விழலென்கிறீர், சாம்பவமூர்த்தியர்க்கே-பட்டமது-ஸ்தாபித்த சாம்
புவனன்காணும், தீம்புகளறவீசி-தெளிந்தவர்கள்-சீர்பாதங் கண்ட
வர்போல்தெரிசிக்கிறீர்-தந்.

(இ-ள்.) வீம்புகளையும், வேடிக்கையான இன்பங்களையும் பேசுகிறீர், வேம்பு கரும்பாகுமோ? மகத்துக்களின் விற்பனத்தைக் கண்டறியா விழல் என்று சொல்லுகிறீர், சாம்பவமூர்த்திக்கு பட்டங்கொடுத்தசாம்பவன் நானே யாவேன், (அப்படி யிருப்பதைவிட்டு) தெளிந்தவர்களைப் போலவும் சீர்த்த பாதங்களைக் கண்டவர்கள் போலவும் தெரிசிக்கிறீர் எ-று. (௩௦)

சபைதனிலுள்ளவர்கள்-ஆண்டையேகேள்-சாதியீனனென
ச்சாற்றுகிறீர்,உறுபயமில்லாமலும்-அகங்சுத்தி-யுடலறியாய்ச்செப
ங்களோதுகிறீர், வையமதாகியநூல்கள்-வீண்பிலுக்கா - வாசியறி
யாமலுமேமயங்குகிறீர், ஔவையார்குலத்தில்வந்து - வள்ளுவனெ
னும் ஆதிபீடமுநான்காணும்-தந்.

(இ-ள்.) சபையிலுள்ள ஆண்டைமாரே, கேளுங்கள், என்னை சாதியில் தாழ்ந்தவனென்று சொல்லுகிறீர்கள். நூல்களையும், வீண் பேச்சுகளையும் வீண்பிலுக்காகவாசிபதியாமலும் மயககுகின்றீர். ஔவையார் குலத்தில் உற்பவித்த திருவள்ளுவனெனனும் ஆதிபீடமும் நானேகாணும் எ-று. (௫௧)

சிக்கியநூல்பிணைப்பார்-சிவசிவ-சேணியசாதியிலுள்ளபடி, புக்கியநாலிழைக்கும்-பூதங்களில்புரிந்த நாலிழைகளைப்பூட்டி வைப்பார் தக்கியபறையெனவும்-சிவசிவ-சாதிகளில்முதல்சாதியெனு, முக்கிய நூல்பிணைக்கும்-மெய்ஞ்ஞான-மூர்த்திசாம்பவனான்காணும்-தந்.

(இ-ள்.) கிடைத்த சாஸ்திரங்களை சேணிய சாதியர்போல கோவைசெய்வார், நூலிழைகளைப்பூட்டிவைப்பார், நானே சாதிகளில் முதல் சாதி என்னும் மெய்ஞ்ஞானமூர்த்தி சாம்புவன் நானாவேன் எ-று. (௫௨)

அறுந்தநூல்பிணைக்கும்-சிவசிவ - அச்செனும்பாவதுகண்டமட்டும், சிறந்தநூல்பிணைக்கும்-சிவசிவ-சித்திரச்சாம்புவனான்காணும், பரந்தபஞ்சதுநூலா-இழைபிசகா-பறை-நாலதுபஞ்சவர்ணமதாய், நிரந்தரவிசிதமெனும்-சிவசிவ-நிஷ்டைதனில்மிகுந்த நிர்மலன்காண்-தந்.

(இ-ள்.) அறுந்த நூலைச் சேர்க்கின்ற அச்சென்கின்ற பாவதுகண்டவரைக்கும் நூலைப்பிணைக்கின்ற சாம்புவன் நானேயாவன், நிரந்தரமும் விசதமாகின்ற நிஷ்டையில் மிகுந்த நிர்மலனாவேன் எ-று. (௫௩)

ஆதியந்தமுங்கடந்து-ஆதாரமூலம் - அதுகடந்த பரவெளிதாண்டி, நீதியின்மறைவிளங்கும்-முப்பாழ்கடந்து - நின்றபரிபூரணத்தின் நிலைகடந்து, ஓதுமறைவேதமுந்தாண்டி-பிரகாசவொளி - ஓங்காரரீங்காசனத்திலுறுதியதாய்ச், சோதியின் நிலையில்நின்று - சுழிமுனையில்-துதித்துத் தொழுத சாம்புவன் காணும் தந்.

(இ-ள்.) ஆதியந்தங்களையும், ஆதார மூலங்களையும், பரவெளிகளையும் தாண்டி நீதியுள்ளவேதங்களில் விளங்குகின்ற முப்பாழையுங்கடந்து நின்ற பரிபூரணத்தின் நிலைமையுங்கடந்து வேதத்தையும் தாண்டி பிரணவமென்னும் சிங்காசனத்தில் உறுதியாக சோதிநிலையில் நின்று சுழிமுனையில் துதித்துத் தொழுத சாம்புவன் நானேயாவன் எ-று. (௫௪)

பூணநூல்பிறந்த தெங்கே-சிவசிவ-பின்குடுமையானதுவுமானதெங்கே, வானோர்கள் துதிப்பதெங்கே-மணிமந்திர-வாக்கியசெபதபங்கள் வாழ்க்கையெங்கே, கோனருள் புரிவதெங்கே -யாகசாலைக்குருக்களாசாரியென்றுங் கூறுவதெங்கே, வீணிலேயோதுகின்றவேதியர்களே-வேதம்பிறந்திடமுஞ் சொல்வீர்காண்-தந்.

(இ-ள்.) பூணூல் பிறந்ததும், பின்குடுமி உண்டானதும், வானோர்கள் துதிப்பதும், மணி, மந்திரம், வாக்கியம், ஜெபம், தபம், வாழ்க்கை இவைக

னும் எங்கே? இறைவனருள் செய்வது எங்கே? யாகசாலைக் குருக்கள், ஆசாரியர்கள் எங்கே? வீணாகப்பிறந்த வேதியர்களே! வேதம் பிறந்த இடத்தைசொல்லுவீர்கள எ-று. (௩௫)

ஒளிவெளிமதிதாண்டி-சிவசிவ-ஒன்பதுவாசலுங் கட்டறுத்து, தெளியவும்பொறிபுலனும-சிக்கறுத்துச்-சிந்தையகற்றிமனதொருப்படுத்திப், பொழியவுமமிர்தரசம்-பொசிக்கவின்பம்-பூசிக்கப்பூசிக்க ஞானம்பூரணமதாய், சுழிதனிலெழுந்தொரு-வாசியெனும்-சோதியைக்கண்டவனும் நான்காணும்-தந்.

(இ-ள்.) ஒளியையும், வெளியையுமுள்ள மதியைத்தாண்டி ஒன்பதுவாசல்களையும் கட்டறுத்து, ஐம்பொறிகளையும் ஐம்புலன்களையும் சிக்கறுத்து, மனத்தையொடுக்கி, அமிர்தபானஞ்செய்ய ஞானம் பூரணமாய் சுழியில் எழுந்த ஒருவாசி என்கிற சோதியைக் கண்டவனும் நானே யாவேன் எ-று. (௩௬)

செத்ததோர்மாடெடுப்போம்-சிவசிவ- சுடுகாடனுதினங்காத்திருப்போம்,நித்தமுங்கடவுள்தனை-ரவியின்மதி-நேசமுடனேயுறுதிவாசஞ்செய்வோம், சுத்தவீரசைவமுடன்-வாசிவாவெனும்-தோத்திரஞ்செய்தேபொசித்துக் காத்திருப்போம், கர்த்தனை யந்திசந்தி உச்சமதிலும்-கருத்தினிலே நினைப்போ மாண்டேகேளீர்-தந்.

(இ-ள்.) என்னுடைய ஆண்டைமாரே! நான்சொல்லும் எங்கள்விஷயங்களை நீங்கள் நன்றாய்க்கேளுங்கள் அவைஎன்னவென்றால்;—செத்துப்போவு மாட்டையெடுப்போம், தினந்தோறும் சுடலையைக் காத்திருப்போம், சூரிய, சந்திரர்களின் சகாயங்கொண்டுநம்முடையகடவுளை நமஸ்காரஞ்செய்வோம் அன்றிச் சுத்தவீரசைவமார்க்கத்தில கலந்து வாசிவா! என்று தோத்திரஞ்செய்து உணவையுண்டு மேற்படி கடவுளிடத்தில்வாசஞ்செய்வோம். ஆனால் அந்தி, சந்தியிலும் வேறெந்த வேளையிலும் கடவுளுடைய திருவடிகளைச் சிந்தையில் வைத்துச் சிந்திப்போம் எ-று. (௩௭)

கட்டையுமடுக்கிக்கொள்வோம்-பிணமதற்கு - காற்பணமுழத்துண்டுவாங்கிக்கொள்வோம், அட்டவிதப்பரிட்சைகளும் -ஆண்டைகேளீர்-அங்கசுத்திகளுஞ்செய்ய அடைவெடுப்போம், சுட்டதொரு அஸ்திகளுமே-சேதம்வராமல் - துரிதமாய்பொறுக்கியே சூட்டிடுவோம், நட்டணை நடைநடப்போம்-ஆதியருள் - நாதனை யனுதினமும் போற்றிசெய்வோம்-தந்.

(இ-ள்.) பிணத்தைச் சுடுதற்கான கட்டையை யடுக்குவோம்அப்பிணத்தின்பொருட்டு காற்பணமும், முழத்துண்டும் வாங்கிக்கொள்வோம், அஷ்டவித பரிட்சைகளையும், அங்கசுத்திகளையுஞ்செய்ய முறையெடுப்போம்கூடிய சீக்கிரத்தில் சுட்ட எலும்புகளையெல்லாம் சீக்கிரத்தில் பொறுக்கி அடுக்கி வைப்போம் நடை, நொடி, பாவனையுடன்,நடிப்போம் முதல்வனுஞ்சிவபெரு

மானுடைய திருவருளைத்துதிசெய்து அனுதினமும்நமஸ்காரமுஞ்செய்வோம் ஆகையால் எங்களைவிட உயர்ந்தவர்கள் இல்லை என்பது குறிப்பு. (கூஅ)

நால்வகையோனிதனில்-பிறந்துதித்த-நால்வேதஞானமும் வந்துதித்ததுகாண், கோலமிதையறியாமல் - உலகருமே - குருடர்கள் வேறுசெய்தினம்பிரிப்பார், மாலப்பறையனென்றே-உலசர்கூடிவாய்பிதற்றிவழக்துவாதாடுவர்காண்,பாலரறியாமலென்னைப்-பழித்துப்பகடித்தனராண்டேகேளீர்-தந்.

(இ-ள்.) அண்டஜம், சுவேதஜம் உற்பீதஜம், சாராயுஜம் என்னும் நால்வகையோனிகளிற்பிறந்துவந்தநான்குவேதங்களிற்சொல்லப்பட்டுவந்தஞானமும் வந்து வெளிப்பட்டது, ஆகையால் இப்படியிருப்பதை உலகத்தார்கள் உணராமல் என்னை வேறுபடுத்தி மாலப்பறையனென்று சொல்லிப் பிரித்துவிடுவார்கள், அன்றி வாயினாற்பலபேசி வாதுஞ்செய்வார்கள், இப்படி யெல்லாஞ்செய்து என்னைக் குடிகெடுத்தார்கள் எ று. (கூகூ)

பூணநூல் தரித்துக்கொள்வோம்-சிவசிவ-பொறியுமைம்புலனையுந்தொழுது கொள்வோம், வேணவிருதுகளும் - விசிதமதாய் வெண்குடை வெண்சாமரமும் பிடித்துக்கொள்வோம், வானவர் முனிவர்தொழும்-பொன்விசிறி-மரகதகுண்டலத்தின் கவசங்களும், ஞானப்பிரகாசவொளி-திவ்வியரச-நாதவிந்தர்ச்சனைகளில் நாம் துதிப்போம்-தந்.

(இ-ள்.) நாங்கள் பூணூலைச்தரித்துக்கொள்வோம், ஐம்பொறிகளையும், ஐம்புலன்களையும் நமஸ்காரஞ்செய்வோம. வேண்டிய விருதுகளையும் வெண்கொற்றக்குடை, வெண்சாமரம் இவைகளைப் பிடித்துக்கொள்வோம், தேவர்களாலும், முனிவர்களாலும் தொழப்படுகின்ற பொன்னாற் செய்யப்பட்டவிசிறியையும், மரகதத்தால் செய்யப்பட்ட கவசகுண்டலங்களையும் பெறறுக்கொள்வோம் ஆகிய இப்படிப்பட்ட விஷயங்களைக் கொள்வதுந் தவிர, தேஜோமயமாய் விளங்குவதான நாத விந்துகளுக்கு அர்ச்சனைசெய்து நமஸ்காரமுஞ் செய்வேம்எ-று. (ச0)

சாதியிலுயர்ந்தவன்காண்-நவரத்ன-சங்கைப்பலகையின் மேலிருந்தவன்காண், வேதியர்சாஸ்திரியர்-துதிசெய்யும் - விருதுபெற்றிடும் வீரசாம்புவன்காண்,பாதிமதிசடையணிந்தோன் - சிரசில்வளர் பங்கயக்கங்கையமிர்தச்செங்கைநதியில், சுருதியின்பொற்கமலம்-மதிரவியின்-சூட்டிடுஞ் சாம்புவனென்போன்காணும்-தந்.

(இ-ள்.) நானே, சாதியில் உயர்ந்தவனுவேன் அன்றி, ஒன்பதுரத்தினங்களால் இழைக்கப்பட்ட சங்கப்பலகையின் மேலிருந்தவனும்பிராமணர்களும் சாஸ்திரிமாரும் துதிசெய்யப்பெற்ற விருதுக்களையடைந்திருக்கின்றவீரசாம்புவனுங் அர்த்தசந்திரனைத்தரித்த சிவபெருமானுடைய சடாபாரத்தின்கண்

இருந்து வளர்கின்ற கங்காதேவியின் சுருதிமொழிபெற்றதிருவடிகளை இடைகலை பிங்கலைகளுக்குட் சூட்டுகின்ற சாம்புவனுமாவேன் எ-று. (௪௧)

அந்தணர்வேதியர்கள்-என்குலத்தைஅசட்டுப்பறையனென்று தள்ளினர்காண், சந்தியுஞ் சடங்கறுத்து-வள்ளுவனெனைச் சாம்பவமூர்த்தியென்றேதான்தொழுதார். விந்துவுநாதமுங்கூடி -எங்கெங்கு மேவும்-எண்பத்துனன் குபிர்க்குமேலதிகமாம், வந்தவழி தனையறியார்-பிரமகுல-வங்கிஷவானென்றுமவர் போற்றிசெய்வார்-தந்.

(இ-ள்.) பிராமணர்களெல்லாம் ஒன்றாகக்கூடி கொடியபறையனுவான் இவனென்று என்குலத்தைஇகழ்ந்து என்னையுந்தள்ளிவிட்டார்கள் திருவருட்சத்தி யென்றாலோ மேற்சொன்னகுற்றத்தைநீக்கி திருவள்ளுவனுகிய என்னை சாம்பவமூர்த்தியென்றே கொண்டுநமஸ்காரஞ்செய்தாள் ஆனாலும்விந்துவும் நாதமும்கூடியே எண்பத்துநான்குலக்ஷஜீவகோடிகளுமாயினமையால், இது வே அதிகமாம் இபபடிவந்தவரவை யறியாத அவ்வேதியர்களை உலகத்திலுள்ளார் நல்லவமிசவானென்று துதிசெய்வார்கள் எ-று.

ஆகையால்இவருடைய அறியாமையை என்னவென்றுசொல்லுகின்றது என்பதுகுறிப்பு. (௪௨)

வேதமுநான்காணும்-சிவசிவ-வேதாந்த சாரமுநான்காணும், மாதவமுனிவர்க்கெல்லாம்-உயர்கின்றவள்ளுவசாம்புவனுன்காணும் பேதாபேதங்களறிய-என்னூல்வகையில்-பிரட்டுருட்டுகளும்பிரித்துரைப்போம், ஆதாரமூலமெல்லாம் -அசடில்லாமல் - அவனிதனிலுரைப்போமாண்டே கேளீர்-தந்.

(இ-ள்.) வேதமும்நானே! வேதாந்தசாரமும்நானே. மகத்தாந்தவத்தையுடையபெரியோர்களுக்கெல்லாம்உயர்ந்ததிருவள்ளுவனென்னும் சாம்புவன் நானே, ஆகையால் நான்சொல்லிய இந்நூலில் பேதாபேதங்களை நன்றாயறியும்படி செவ்வையானவிஷயங்களைப்பிரித்துச்சொல்லுவேன் அன்றி, இவ்வுலகத்தின்கண் ஆதாரமூலங்களின் தொகை. வகை, விரிகளையெல்லாம் குற்றமில்லாமல் நன்றாயெடுத்துச்சொல்லுவேன் ஆகையால் என்னாண்டையே! நீர் கேட்டருளும் எ-று. (௪௩)

சத்தியுநான்காணும் - சிவசிவ -சாம்பவமூர்த்தியெனு நான்காணும், புத்தியிலதிதவன்காண்-சிவசிவ-புவனமதில் புகழ்திருவள்ளுவன்காண், சித்தியிலதிதவன்காண்-சிவசிவ-சிங்காதனத்தி லிருந்தெங்கெங்குமாய், அத்திமுதலெறும்புகடை-யாவர்களும் -அற்புதமெய்ஞ்ஞானவெட்டியாண்டே கேளீர்-தந்.

(இ-ள்.) புத்தியிலும்,சித்தியிலும், நான்உயர்ந்தவனுகையாலும்சிவசிங்காசனத்திலிருந்து கொண்டு எங்குமுள்ள அத்திமுதல் எறும்பிறுகவுள்ள உயிர்களுக்கெல்லாம் அர்த்தைபுதர்தாத்தக்க ஞானவெட்டியானும், உலகத்தாரால்

புகழப்படுகின்ற திருவள்ளுவனென்னும் பெயரையுடையவனுமாகையாலும், சத்தியும்நானே, சாம்பவமூர்த்தியும் நானேயாவேனெ-று. (சச)

வித்தையிலதித மெந்தன்-விளங்குந்திரு- வேதாந்தசாரமுண்டு மேதினியில்வாழ், எத்திசையெல்லாம்புகழும்-இரவிமதி - யேகாக்ஷரத்தைக்கண்டு சாகாமல் நான், பத்தியில் முத்திதரும் - உலகமதில் பறை நூலறிந்த சாம்புவன்காணும்,முத்தியுமெய்ஞ்ஞானநெறி-முக்கண்ணுடைய-மும்மூர்த்தியானவர்கள் தம் மூலத்தினால்-தந்

(இ-ள்.) உண்மைஞானமார்க்கத்தால் தம்மையடைந்தவர்களுக்கு மோக்ஷத்தைக் கொடுக்கின்ற மூன்றுகண்களையுடைய மும்மூர்த்திகளுக்குந்தலைவனான சிவபெருமானுடைய திருவருளினால்கல்வியில்மிக்க தேர்ச்சியையடைந்திருக்கின்ற நான்வேதாந்தமென்னு மார்க்கத்தையுண்டு உலகர்களால் புகழப்பட்டுவருகின்ற இருகலைகளுக்கும் ஆதாரமாயிருக்கின்ற ஓரெழுத்தைக் கண்டு சாகாமலிருந்து மோக்ஷத்தை யடைவதற்குக் காரணமா யிருக்கின்ற பறைநூலைச் சொன்னவன் நானேயாவன். எ-று. இப்படியிருக்கும் நியாயத்தால் என்னைத்தள்ளவேண்டாம் என்பதுகுறிப்பு. (சரு)

உதிரமுந்திரண்டதெங்கே-நாதமதி - வோடியேதான் விந்துவும்பாய்ந்ததெங்கே, மதியொளிரவியுமெங்கே- அமிர்தரச-வாருதியுமானவரலாறுமெங்கே, சதிரும்பிறந்ததெங்கே-உலகுதனில் -சாஸ்திரியாசாரிகளே தானுரைப்பீர்காண், அதிதவேதங்களோதும்-சூரியசந்திரர்-அறவிருந்தவர்களாண்மையுரைப்பீர்-தந்.

(இ-ள்.) உலகத்திலுள்ள சாஸ்திரிகளே! நீங்கள் சூரியசந்திரர் முதலிய கிரகங்களையும், அந்தந்தக்கிரகங்களுடைய வல்லமைகளையும் எடுத்துச்சொல்லுவீரன்றோ? ஆம் ஆகையால் உதிரந்திரண்டதும், விந்துநாதத்தின்பாய்ந்ததும் சப்திரசூரியராதியவரைப்பெற்றதுவும், அமிர்தரசபொக்கெடுத்துப் பாய்ந்ததும், சதுர்பிறந்ததும் ஆகிய இவைகளெல்லாவற்றிற்கும் உரிய இடங்களைச் சொல்லுங்கள்? பார்ப்போம் எ-று. (சசு)

கருவதுந்தரித்ததெங்கே-சிவசிவ-காயமாயுதித்தவந்த க்கருத்துமெங்கே, அருவுருவானதெங்கே-அண்டபிண்டங்க-ளாதியுமந்தமுங்கூடியமைத்ததெஙகே-உருவடிநடுவுமெங்கே-ஒங்காரமெனும்உடலுயிரெடுத்த விதவுகமையெங்கே, மருவியநாள் வேதஞ்சொலும் மதிகெட்ட மாந்தர்களிதையறிந்து வகுத்துரைப்பீர்-தந்.

(இ-ள்.) பொருந்திய நான்குவேதங்களையும்பாராயணஞ்செய்கின்றஅதிவிவிகாள்! நீங்கள் கருத்தரித்தவிதத்தையும் அந்தக்கருவானது தாயின்தேகத்தில் வந்த விதத்தையும், அரூபமாயிருந்த அது ரூபமானவிதத்தையும், அண்டபிண்டங்களெல்லாம், முதல் நடு கடைஎன்றுசேர்ந்து உண்டானவிதத்தையும் ரூபமுள்ளபொருளில் அடி, நடு, வந்த இடத்தையும் பிரணவாகார

மான இந்தத்தேகம்வந்து நமக்குச்சேர்ந்தவிதத்தையும், சொல்லுங்கள்? பார்ப்போம் எ-று. (சஎ)

தீர்த்தமுமாடிக்கொள்வீர்-தெளிந்தவர்போல் - செபதபசாஸ்திரங்களோதிக்கொள்வீர், யாத்திரை தீர்த்தங்களாடி - நதிகள்தோறும்-அலைந்து அலைந்துசுற்றி அலையுகிறீர், மாற்றியேபிறப்பமென்று பொய்ப்பிரட்டு-வாய்சமத்து சாஸ்திரஞ்சொல்மடையர்களே, பாத்திராபாத்திரமறியா-பாவிகள் தான் - பாடுபங்குங்கூறறியாமாடுகள் தான்-தந்.

(இ-ள்.) மாத்திமாத்திப் பிறப்போமென்று பொய்பேசுகின்ற மடையர்களே! நீங்கள் எல்லாவற்றையும் அறிந்தவர்கள்போன்று, தீர்த்தமாடிச்செபதபங்கள் செய்கிறீர்கள் யாத்திரைசெய்கிறீர்கள் இப்படியே அலைந்தலைந்து திரிகிறீர்கள் ஆகையால் நீங்கள் பாத்திராபாத்திரமறியாத பாவிகளுங்கூரிய புத்தியில்லாதமாடுகளு மாவீர்கள் எ-று. (சஅ)

அண்டபிண்டம் பிறந்ததெங்கே - சிவசிவ-அந்தணர் முனிவர் வந்துதித்ததெங்கே, பிண்டம்பலவுயிரும்வந்து பிறந்தவகை-பிரபந்தமிதையறிந்துபேசுவீர்காண், மண்டலமும் மண்டலஞ்சூழுங்-கதிர் மதியும்-வன்னியும்பிறந்ததெங்கேவானுமெங்கே,விண்டபொருளண்டருங்காணுர்-வேதியர்களே-விஸ்வரூபமறிந்து விளங்குவீரே-தந்.

(இ-ள்.) ஓ! பிராமணர்களே! அண்டமும், பிண்டமும் பிறந்த இடத்தையும் நீங்களும் முனிவர்களும் பிறந்தஇடத்தையும் பிண்டமானது பலவுயிர்களாகப்பிறந்தவிதத்தையும், உலகம்பிறந்தவிதத்தையும் அவ்வுலகத்தைச்சூழ்ந்திருக்கின்ற சூரிய சந்திரர்களும் அக்கினியுமுண்டான இடத்தையும் ஆகாயம்பிறந்த இடத்தையும் தேவர்களும் அறியாரென்றால் நீங்களோ அறியுந்திறமுடையவர்கள்? அப்படியறிந்திருந்தால் சொல்லுங்கள் பார்ப்போம் எ-று

சாஸ்திரம்பிறந்ததெங்கே-சிவசிவ-சாதியினுல் வகைகளுமானதெங்கே, கோத்திரம்வகுத்ததெங்கே-சிவசிவ -குருவுடன் சீஷனும் வந்துதித்ததெங்கே, போற்றிடுஞ் சற்குருவுமெங்கே - பொய்க்குருவினுல்-பூசையநுஷ்டான முறைப்பொருளுமெங்கே, சோற்றிலெய்துங்கல்லறியா-சுணங்கர்களே - சொர்னமலரென்னமய மன்னமலர் காண்-தந்.

(இ-ள்.) சாஸ்திரம்தோன்றிய இடம் எது! சாதிவகைகள் கோத்திரங்கள் முதலியவைகளை வகுத்தஇடம் எது! குருவென்றும்சீடனென்றும்வந்து பிறந்த இடம்எது? அந்தக்குருவருளாற் கிடைக்கப்பெற்றபூசை அநுஷ்டான முதலியவைகளைச்செய்த இடம்எது? சோற்றிலிருக்கும் கல்லையெடுக்க வழியறியாத நாய்களே! இவைகளெல்லாம் எம்பெருமாட்டியினுடைய திருவடிகளிலே பிறப்பனவாகும் எ-று. (ரு௦)

அண்டபிண்டபுவனத்துக்கும்-சந்திரனொளி -ஆதித்தனவருருவுமானதெங்கே, சண்டைப்பிரசண்டமதாய்-மந்திரமோதுஞ்சவுங்கலேதானறியாய்ச்சாற்றிடுவீர்காண், உண்டதோருணவறியார் -உவரசத்தின்-னுப்புவினுவரகற்றி யுண்டுமறியார், கண்டபொருள்விண்டறியார்-கல்லுப்புவந்த.காரணத்தைக்கண்டறியாக் கர்மிகளேகேள் தந்.

(இ-ள்.) மகாசிறப்புடனெ மந்திரோச்சாடனஞ் செய்கின்றலர்களே! உண்டவுணவையுணராமலும், உவர்ப்பூமியிலுண்டான உப்பையெடுத்து அதினிடத்திருக்கும் உப்பைநீக்கி அதையுண்ண வறியாமலும், கண்டபொருள்களைச்சொல்ல அறியாமலும் கல்லுப்புவந்தகாரணத்தையறியாமலு மிருக்கின்ற கர்மிகளே! நீங்கள் அண்டபிண்ட சராசரங்கள் எவைக்கும் ஆதாரமாய்சந்திர சூரியர்கள் வந்துதித்திருக்கின்றார்களே, அந்தஇடம் எதுவோ அதைச்சொல்லுங்கள்! எ-று. (ரு௧

நாதவிந்துதானறிய-சிவசிவ-நடுவணைச்சுடரதுவுந் தாண்டியப்பால், போதரவாயுடலெடுத்த-தத்துவத்தின்புதுமையைச் சொல்லுகிறேனுண்டையேகேளீர், மாதர்கள்சையோனிதனிலும்-விந்துதித்த மார்க்கமிடவாலெடுத்தவாறறிந்திடீர், ஏதெனவென்றே விளங்கஇப்புவிதனி-லிந்திரியமாதவிடாயினமதுகாண்-தந்.

(இ-ள்.) நாதத்தையும், விந்துவையும் அறியும்படி நடுவணையிலுள்ள அக்கினிமண்டலத்தைத்தாண்டி, அதின்பின் இந்தத்தேகம்வந்த உண்மையைச் சொல்லுகின்றேன். அது என்னவென்றால், மாதர்களிடத்தில் சையோகஞ் செய்யுங்காலத்தில் ஆண்பால்விந்துவானது பெண்பால் நாதத்திற்கலந்துஇவ்வுலகத்தின்கண் பிறந்ததாகும் எ-று. (ரு௨.

தந்தையுந்தாயுங்கூடி-இருவருஞ்-சருவியோதிகேளி யாடையிலே, விந்தையில்யான்பிறந்த-சரித்திரத்தை - விளம்புவேனுண்டே கேளிந்தமேதினிதனிலும், உந்தியின்கமலமதிலுதித்தவித -மூற்பனமாகியதோர்கற்பனைசொல்வேன், சந்தையங்கள்தீர்ந்துவிடும் மாதாபிதாவின்-சங்கைகளறியவிந்நூல் சாக்ஷிபிதுகாண்-தந்.

(இ-ள்.) தந்தைதாயிருவரும் மிகவும் கேளிக்கையாய் வார்த்தையாடினமையால் நான்பிறந்தசரித்திரத்தையும், முதல்தாயின் உந்தியில்தங்கியிருந்த சரித்திரத்தையும், கற்பனைகளின் விளக்கத்தையும், தாய்தகப்பன் மாருக்கிருக்கும் சந்தேகம் நீங்கும்பொருட்டு இந்தநூலை நான் சாட்சிமாத்திரமாய்ச் சொல்லுகின்றேன். என் ஆண்டையேநீர் கேட்டருளும் எ-று. (ரு௩)

விருத்தம்.

சோதிமதிசுடரொளியாய்தரித்தவாறுஞ் சுடருருவாய்நாதவிந்துதோன்றும்வாறும், நீதியில்லாப்பாழ்வீட்டினிலைத்தவாறு நெல்வி

யதின்கனியதுபோல் திரண்டவாறும், கோதிலாக்கனியெனவேபழு
த்தவாறுங்குழவியெனப்புவிதனிலேபிறந்தவாறும், ஆதியிலேகருவூ
ரில்குடியிருந்து அறிவாலேபுவியில்வந் தமைந்தேனுண்டே.

(இ-ள்.) பிரகாசம்பொருந்திய சந்திரனுனவன் தன்னுடைய ஒளியோடு நிலைத்தவிதத்தையும், காதவிந்துக்க ளிரண்டும் காரணகர்த்தர்களாகவிருந்து பாழ்வீட்டில் நிலைத்தவிதத்தையும், அங்ஙனம்நிலைத்த அவ்விரண்டும்நெல்லிக்கனிபோலுருண்டு திரண்டவிதத்தையும், பின்னர் அதின்பழம்போல் பழுத்தவிதத்தையும், பிறகு ஒருகுழந்தையாய்பூமியில்பிறந்தவிதத்தையும் அப்படி பிறந்தகுழந்தை ஆதியில் கருவூரில்குடியிருந்த விதத்தையும்,இப்படியெல்லாமிருந்து உலகத்தில்வந்து சேர்ந்த விதத்தையும் சொல்லுகிறேன் என் ஆண்டையேநீர் கேட்டருளும் எ-று. (௫௪)

தன்னையினிதானறியார் தலமுங்காணுர் தான்பிறந்தசரித்திர
முந்தடமுங்காணுர், இன்னதென்றுவேதமறைவழியுங்காணு ரிடும்ப
ரெல்லாம்வாய்மதத்தாலிகழ்ச்சிசொல்வார், பின்னையொருபொருள
றியார்தவத்தைக்காணுர் பிதற்றுகின்றபேயர்கள்தான் பெருமை
பேசி, என்னைத்தான்பறையனென்று தள்ளினுர்களென்பிறப்பைச்
சபைதனிலே யியம்புவேனே.

(இ-ள்.) தன்னைத்தானறியாமலும், தானிருக்குமிடத்தைச் காணுமலும், தான்பிறந்தவரலாற்றையுணராமலும், வேதநெறியைக்கற்றுணராமலும்,வேறு பொருள்களையறியாமலும், தவத்தைச்செய்யாமலு மிருக்கின்ற அறிவீனர்களெல்லாம் தமக்குத்தாமே பெருமை பாராட்டிக்கொண்டு என்னைப் பறையனென்றுசொல்லித் தள்ளிவிட்டார்கள். ஆகையால் நான் இந்தச்சபையில் என்னுடைய பிறப்பைச்சொல்லுகிறேன் எ-று. (௫௫)

தில்லையெனுமம்பலமாங்கமலபீடஞ் சிறந்தவிந்துநாதமதில்செ
னித்தவாறும், வல்லவர்கள்போற்றுந்திருமண்டபத்தில்வழிகடந்து
ஆறுதலந்தாண்டியப்பால், சொல்லரியமுக்கோணவீடுந்தாண்டிசோ
திமதிநடுவணைமுப்பாழுந்தாண்டி,எல்லையெனுமூலமதி லுதவிந்துவி
ன்பமுடனுதித்தவகை யினிசொல்வேனே.

(இ-ள்.) தில்லையென்ற சொல்லுகின்ற ஆகாயமாகிய கமலபீடத்தில் சிறந்திருக்கின்ற விந்து, நாதங்களால் பிறந்தவிதத்தையும், வலியோர்கள்துதிசெய்கின்ற திருமண்டபத்தின்வழியைக்கடந்து. நதிகள்,க்ஷேத்திரங்கள்முதலியவற்றையுந்தாண்டி, அப்புறம்சொல்லுதற்கருமையான முக்கோண வடிவமாகிய வீட்டையுந்தாண்டி அதன்பின் நடுவணையையுங்கடந்து அவ்வணைக்கு அளவாகிய மூலத்தில் நாதவிந்துக்கள் உண்டானவிதத்தை நான் இனிச் சொல்லுகின்றேன் எ-று. (௫௬)

மடைதிறந்துநாதவிந்துவந்தவாறுமாறியிருகலைபிரிந்துவளர்ந்தவாறும், திடமுடனேபதின்மூன்றுங்கோட்டின்மேலுஞ்செங்கதிபோலவும்வந்துதித்தவாறும், உலலெடுத்துஆவியதினுதித்தவாறுமூமையென்றவெழுத்தசனிலுயர்ந்தவாறும், இடைநடுவேயென்னைப்பறையனென்றவாறுமென்னுடலேயெடுத்தவகை யினஞ்சொல்வேனே.

(இ-ள்.) பெருகிவருகின்ற நாதவிந்துக்கள் உண்டானவிதத்தையும் இரண்டுகலைகளும் மாறிமாறிவரும் விதத்தையும், மேலாறு கீழாறு ஆகியபன்னிரண்டையும் கடந்தபதின்மூன்றுவது இடத்தின்மேல் ஒரு அமிர்தச்சரப்பு வந்த விதத்தையும். இந்தத்தேகத்தில்உயிர்வந்துசேர்ந்தவிதத்தையும், ஊமையென்னும் மௌனபீஜாட்சரத்தினால் நாம்உயர்ந்தவிதத்தையும், இவைகளுக்குமத்தியில் என்னைப்பறையனென்று சொன்னவிதத்தையும், நான்சொல்லுகின்றேன் எ-று. (ருஎ)

ஆதியிலேகருவூநாட்டுக்குள்ளே அம்பரமாஞ்சிற்பரத்துப்பெரும்பாழுள்ளே, வீதியிலேசிறந்தசிவநாதவிந்து வெளிகடந்துவாயிரத்தெட்டிதழிற்பொங்கி,சோதியிலுஞ்சுழிமுனையாய் தோய்ந்தபின்புசுக்கிலமுஞ் சுரோணிதத்தாலெடுத்தபாண்டம், சாதியிலுமென்னைப்பறையனென்றேசொல்லுஞ் சண்டாளர்க்கிந்நூலைச் சாற்றுவேனே.

(இ-ள்.) பூர்வத்தில் கருவூரென்னும் ஒருதேசத்தில், சிற்பரம் என்னும் சூனியத்தில் உள்வீதியில் நாதவிந்துவைத்தாண்டி யிருக்கின்ற ஆயிரத்தெட்டிதழ்க்கமலத்திற்பொங்கி அவ்விடத்தில் சுழிமுனையிற்படிந்தபின்பு சுக்கில, சோணிதசம்பந்தத்தாலெடுத்தது இந்தஉடம்பாகும், அப்படியிருக்க என்னைபறையனென்றுசொல்லும் சண்டாளர்க்கே இந்தநூலைச் சொல்லுகின்றேன்.

கால்கரமும்பாதமுதலானவாறுங் கணுவிரலுநகஞ் சதையுந்தரித்தவாறும், விலாக்கொடிதானெலும்புகிணம்வகுத்தவாறுமிரதமொடுமார்புகழுத்தானவாறுந்,தோலானதுடைவயிறு தொக்கின்வாறுந் தொகுத்தநரம்பதுவுஞ்சடஞ் சூட்டும்வாறும், மாலானமாதர்கருக்குழியிற்சேர்ந்த வயனமிதையின்னதென்று வகுப்பேனுண்டே.

(இ-ள்.) கால்கள், கைகள். கணு,விரல்கள், நகம், சதை, விலா, கொடி, எலும்பு,கிணம், இரதம், மார்பு, கழுத்து, தோல், துடை, வயிறு, தொக்கு, நரம்பு, தேகம், ஆகிய இந்த அங்கங்களெல்லாம் தாய்மார்களது கர்ப்பத்தின்கண்சேர்ந்த வரலாற்றைநான் இன்னதென்று சொல்லுவேன் எ-று. (ருகூ)

நாடிநரம்பதுவுதிரம்நயந்தவாறு நலமானதசவாய்வு சனித்தவாறும், நீடியதோரெலும்புகளுநிகழ்ந்தவாறு நிலையானகருவியெல்லாந்தனித்தவாறும், கூடியதோர்குய்யம்வந்துதித்தவாறுங் குறிப்பறியபஞ்சகர்த்தாள் குடிலவாறும், சூடியதோர்மார்புகண்கள் வந்தவாறுஞ்சொல்லுகிறேன் விபரமினியாண்டேகேளே.

(இ-ள்.) தசநாடிகளும், தசவாயுக்களும், நீண்ட எலும்புகளும், தனித்தனிக்கருவிகளும். குய்யமும், தந்துவும், பஞ்சகர்த்தர்கள் குடியிருப்பும் குடிலாசத்தியின் இருப்பும், மார்பும், கண்களும் ஆகிய இவைகளெல்லாம் வந்த வரலாற்றை இனிமேற் சொல்லுகின்றேன் எ-று. (௯0)

சிறுகுடலுந்தொந்திவயிறுனவாறுஞ்சிறந்தபொறியதிற்கலந்து நின்றவாறும், பெருங்குடலுமொருபுறமாய்ப்பிரிந்தவாறும்பேர்பெரியவீரல்குலைசமைந்தவாறும், மறுமடலாயீரல்நுரை யிரண்டுங்கூடி வளர்ந்ததுவுஞ்சாதகமாய் மகிழ்ந்தவாறும், உருவுடனேசெவிநாசியுதடுநாக்கு வுகமையுடனெடுத்தவகை யுரைப்பேனுண்டே.

(இ-ள்.) சிறுகுடலும், பெருவயிறும், அதில் ஐம்பொறிகள்கலந்தமையும் பெருங்குடல்கள் ஒருபுறத்தில்பிரிந்திருந்தமையும்,ஈரல்கள்உண்டானமையும் அந்தஈரலில் மடலீரல் நுரையீரலென்று இரண்டாயிருக்கின்றமையும்,ரூபத்தோடு சம்பந்தமாய் செவி, மூக்கு, உதடு, நாக்கு, ஆகிய இவைகள் உதித்தவிதத்தையும் நான் இனிச்சொல்லுகின்றேன் எ-று. (௯௧)

த ரு.

தந்தன தன தனனு-தான தன-தந்தன தன தன-தான தனனு.

தந்தையுடனேயெனது-தாயுமிருவர்-சரசவுல்லாசலீலை யாடையிலே, மந்திரமதாகவிந்து-நாதமுங்கூடி-வருகிறவழிசொல்வேனுண்டேயிதுகாண், இந்திரியசாதிலிங்க-முலகுக்கெல்லா- மேகபரநாதவிந்துயாகமதாகி,வந்தவிதங்கோசபீச-பிரபஞ்சமதாய் - வாய்த்தவிதமுலகில்வகுத்தனர்காண்-தந்

(இ-ள்.) என்னுடைய ஆண்டையே! நீர் கேட்டருளும், என்னுடையதந்தையும், தாயும் ஆகிய இருவர்களும் உல்லாசமாகச்சரசத்தோடு கூடியலீலாவிளையாட்டயரும்போது, வெகுமந்திரநிதானமாக அவ்விருவர்களிடத்திலிருந்து முண்டான விந்துவும் நாதமுங்கூடி இவ்வுலகத்தின்கண் பிறக்கிறவழியைச் சொல்லுகின்றேன் தந்தையினிடத்திலிருந்து முண்டாவதான இந்திரியமென்கிற சாதிலிங்கமானது இவ்வுலக உற்பத்திக்கெல்லாம் முதற்காரணமான மேலான பரநாதபிந்துவாகும், அதுவே இந்தத்தேகமாகி வந்ததாகும் அதுவே உலகவிஸ்தாரத்திற்கும் காரணமாகும் என்று பெரியோர்கள் எற்படுத்தியிருக்கின்றனர் எ-று. (௯௨)

ஆவிடையார்கோவிலிலே-யமைத்தகுறி-ஆதாரவாகவேசேர்ந்துமாதர்களினால், மேவியதோர்நாதவிந்து-வெகுவிசித -விற்பனையறியவொருகற்பனைசொல்வேன், பாவிகளிதையறியார்-கல்லுகள் தனில் பாவனையொப்பாகவுமேதாவிதஞ்செய்தார், ஆவியென்றுமறியாமல் செலவழிய-ஆத்துமலிங்கமதனைபார்த்துணராமல்-தந்.

(இ-ள்.) லிங்கசொரூபம் எழுந்தருளியிருக்கின்ற சந்நிதானத்தின் கண் சேர்த்து வைத்திருக்கின்ற உண்மைச்சுருதியை மாதர்களிடத்திற்சேர்த்து, அங்குண்டாகும் நாதவிந்துக்களுடைய விசித்திரக்காட்சியையறியும்படி நான் ஒரு தந்திரமாகப்பழையமார்க்கம் ஒன்றுசொல்லுகின்றேன். அப்படி நான்சொல்வதை அறியாதபாவிகள் ஆலயங்களில்கல்லுகளைத்தாபித்துப் பாவனுமூர்த்த உபாசனஞ்செய்வார்கள். ஆனால்இவர்கள் ஆத்துமலிங்கம் இப்படிப்பட்டதென்று விசாரித்தறிந்து கொள்ளாதபடி அதைவீணே செலவழிக்கின்றனர்.

அவரவர்கள் கோசபீசங்களினிடத்துண்டாகும் இந்திரியங்களைச் செலவிடாதிருப்பதே நன்மை என்பதுகருத்து. (௬௩)

வன்னியும்வாயுவுங்கூடி-உயர்கின்ற-மண்டபமார்க்கத்தின்வீதி தனிலே,உன்னதமாய்நாதவிந்து-உறவாடியுமே- ஒருவழியாகவந்தித்ததுகாண்,முன்னிலையாய்ச்சுடரதனில்-மூலவன்னி - முப்பொருளுஞ்சேர்ந்துவொருவுற்பனமதாய், சென்னிதனில்வளரியல்பாம்-நாதமெனுஞ்-சித்திபூரஞ்சாவடியில்மத்திபத்திலே-தந்.

(இ-ள்.) தேயுபூதமும், வாயுபூதமும், ஒன்றுகச்சேர்ந்து முட்டிக்கிளம்புகின்றமண்டபத்தின்வழியிலுள்ளவீதியில (அக்கினிமண்டலத்தில்)மகாவிசித்திரமாக நாதமும், விந்துவும்கலந்து ஒருவழியாகச்சேர்ந்து உண்டானதாகும் ஆனல் அக்கினியையே முதற்காரணமாகக்கொண்டு மற்றைய பிருதிவி,வாயு ஆகாயங்களைச்சேர்த்து வெகுவிநோதமாக சிரசின்கண்சுபாவமாய் விருத்தியாய்க் கொண்டேயிருக்கின்ற நாதத்துவமென்று சொல்லப்பட்டு வருகின்ற பூவாற் செய்யப்பட்டுள்ள சத்திரத்தின்மத்தியில் எ-று. (௬௪)

வருகிறவழியதனில்-நவரத்ன-மண்டபத்துக்குள்வச்சிரப்பையதனில், பெருகியநாதமது-சதாசிவத்தின் - பிரணவமூலப்பிரகாசப்பேரொளியினில், உருவியமலர்க்கமலம்-போற்றியருள்-உற்பனமருள்தருங்கற்பகத்தில்வாழ், அருள்வந்தெய்திடினுந்-திருவடியதின்-அனுதினம்பூசித்துமிகவடிபணிந்தேன்-தந்.

(இ-ள்.) அப்படிவருகின்ற மார்க்கத்தில் நவரத்தினகசிதமானமண்டபத்திற்குள்ளிருக்கின்ற வச்சிரத்தாற்செய்யப்பட்டதானபையினிடத்திலொழுகியநாதமானது சதாசிவமெழுந்தருளியிருக்கின்ற பிரணவகாரமான மூலாதார தேஜசில்கலந்து உந்திக்கமலத்தை நமஸ்காரஞ்செய்து விசித்திரத்தைக் கொடுக்கத்தக்க தாயின்கர்ப்பத்தில்தங்கியிருந்து அவ்விடத்தில்திருவருள்கிடைக்கப்பெற்று அவனுடைய திருவடிகளில் சதாபூசித்துப்பணிந்தேன் எ-று.

அவனுடைய திருவடியென்றது சதாசிவனுடைய திருவடிகளே. (௬௫)

போற்றியமண்டலம்விட்டு-மறையவர்தன் -புகழுஞ்சிங்காரமெனும்புரவிவிட்டு,சாற்றியமயேஸ்பரத்தில்-சம்பிரமத்துடன்-சத்திரத்தில்வந்து சித்திரசாவடியினில், காத்திருந்தேன் திருநடனம்-ரத்ன

மணி-கனகசபையைக்கண்டு நான்மகிழ்ந்தேன்,பூத்தசெங்கமலமலர்
இங்கிதநாதப்-பொக்கிஷத்தைக்கண்டறிந்துயாள்மகிழ்ந்தேன்காண்

(இ-ள்.) அங்ஙனம் நமஸ்காரஞ்செய்த மண்டபத்தையும், வேதியர்களால் புகழப்படுகின்ற குதிரையையும், விட்டுவிட்டுப் பாதசாரியாய் வந்து மஹேஸ்வரப்பிரபு எழுந்தருளியுள்ள சந்திரன்கண்சேர்ந்து நடனதரிசனத்தின்பொருட்டுக் காத்திருந்து அந்த நடனஸ்தானமாகிய கனகசபையைக் கண்டு நான் உள்ளக்கிளர்ச்சியடைந்தேன். அங்ஙனம் மகிழ்ச்சியடைந்த காலத்தில் ஓர்பத்மநிதிசேர்த்து வைத்திருக்கின்ற பொக்கிஷத்தையும்கண்டுநான் வெகுவாகச் சந்தோஷித்தேன் எ-று. (௬௬)

தெண்டனிட்டுமண்டபம்விட்டுக் - கருவூர்தனில்-சித்திரப்பூஞ்
சாவடிதன் முகப்பும்விட்டு, தொண்டர்கள் பணிருத்திரன்-திருவடி
யை - தொழுதனுதினம்பணிந்து துதித்துநின்றேன், அண்டர்கள்
போற்றுகின்ற-பிரகாசவொளி-அவ்விடத்திலே மனதையடக்கியே
காண்,கண்டுகளிகூர்ந்துமிக-மதியின்மலர் - சங்கையத்தின் பங்கயக்
கண் சிங்காதனத்தில்-தங்.

(இ-ள்.) அங்ஙனம்தெண்டனிட்டு அந்தமண்டபத்தைவிட்டுக் கருவூரென்னும் கர்ப்பத்தின்கண்ணிருக்கும் முன்சாவடியின் சிகரத்தையும்விட்டு அடியார்கள் கோஷித்து நமஸ்காரஞ்செய்கின்ற ருத்திரனுடைய திருவடிகளை நமஸ்காரஞ்செய்து நின்றேன் அல்லாமலும் தேவர்களது கூட்டங்கூடித்துதிக்கின்ற சந்திரமண்டலத்தின் கண்ணிருக்கின்ற பத்மாசனத்திலிருந்துக்கொண்டு மனத்தினை ஒருவழிப்படுத்திக் களித்திருந்தேன் எ-று. (௬௭)

நின்றுபதியம்பரம்விட்டு-நிலைபிசகாநினைவுக்கரியதொருபொறி
கடந்து,வேண்டியவரமருளும்-திருமால்திரு-மெல்லடிபணிந்துபதம்
வணங்கியபின்,சென்றுமூலவாசியைக்கொண்டு இராஜயோகந்-தேவ
ப்பிரகாசமூலகேசரத்தில்யான், ஒன்றுதவநெறிபிசகா - ரேசிக்கவி
ருள்-ஓடியேமூலாக்கினிநாடி வணங்க-தங்.

(இ-ள்.) மேலேநின்றி கொண்டிருந்த அம்பரஸ்தானத்தைவிட்டுநினைப்பதற்குமருமையான ஒரு ஐம்பொறிகளைக்கடந்து அவரவர்களுக்குவேண்டிய வரங்களைக்கொடுக்கின்ற விஷ்ணுமூலத்தினுடைய திருவடிகளைவணங்கிமூலயோகத்தின் அவாவினால பொருந்திய தபோமார்க்கத்தைப்பற்றியிருந்துபிராணயாமத்தை முறையோடுசெய்ய அதினால் எனக்கிருந்த !அஞ்ஞானமானது நீங்கி மூலாக்கினியானது மேற்பட்டது ஆகையால் அதைநான் வணங்கவும்.

வணங்கியபதிகடந்து-திருநடன-மாடியகூத்தனுஞ் சபையதுக
டந்து, இணங்கியபிர்மருத்திரன்-கமலமலர்-இணையடி தொழுதமே
யான்பணிந்தேன், குணமவரதிசயமா-மென்னுளுரைக்ந - கூடுமோ
கோடானகோடி மேடானமெட்டி, மணம்வீசிதமலர்பொழிய-மந்தி
ரவிபின்-மாமதாபூபதிகோ மயங்காமல்-தங்.

(இ-ள்.) மேற்படி தெய்வத்தைவணங்கி நமஸ்காரஞ்செய்து அவ்விடத்தைத்தாண்டி அப்பால் சிருஷ்டியின்பொருட்டுத் தாண்டவஞ்செய்கின்றபிரமபதியைச்சேர்ந்து அந்தப்பிரமதேவனுடைய திருவடிகளை நமஸ்காரஞ்செய்து வணங்கினேன். அவ்விடத்திலுள்ள விநோதங்களை மயங்காதபடி எடுத்துச்சொல்லயாவராலும் முடியாதென்றால் என்னால்முடியுந்தரமோ? ஆகாது.

கொண்டபதிமண்டபம்விட்டுக் -கருவிகளின்-கூடியதிருமுகப்பூஞ்சோலையிலே, அண்டர்களருள்போற்றுங்-கணபதியின் -அடியிணருள் துதித்து அடியில்வந்தேன், குண்டலிகமலமலர் - மேன்மேலவர்தன்-கோபுரசித்திரமதிலின்வாசல்விட்டு, மண்டலஞ்சூழுஞ்சதிர்வலமிடைபின்-மலரடிதொழுதுயான்வணங்கிவந்தேன்-தங்.

(இ-ள்.) அங்ஙன மாயவிநோதங்களையெல்லாம் பெற்றிருக்கின்ற மண்டபத்தைவிட்டுக் கருவிகளினிடமாகத்திருப்பி அவற்றைக்கடந்தஸ்தானமாகிய பூஞ்சோலையின்கண் தேவர்களெல்லாம் திருவருளைப்பெற்று நமஸ்காரஞ்செய்கின்றகணேசமூர்த்தியின் திருவடிகளைத்துதித்து அந்தஇடமாகிய மூலாதாரத்திற்கு அடியிடத்தில்வந்து குண்டலிசத்தியினுடைய திருவடிகளைநமஸ்காரஞ்செய்து அவள்எழுந்தருளியிருக்கின்ற கோபுரவாசலைவிட்டு பூமியைச்சுற்றுகின்ற சூரியமண்டலத்தைப் பின்னிக்கொண்டிருக்கின்ற இடகலை, பிங்கலைகளைத்தொழுது நமஸ்காரஞ்செய்து வந்தவன்நானுவேன் எ-று. (எ0)

வந்துதிருமூலத்திலும்-பானுவிருக்கும்-வச்சிரவளர்சதுஷ்கோணவாசலிலுஞ், சுந்தரவிந்ததிலும்வந்து-சினேகமது - சோதித்துக்கலந்துறவாடிக்கொண்டே,விந்திரபதவிகளெனவே, என்னுண்டையேசேள்-இங்கிதநாதசங்கிதமங்களமதாய், சந்திரப்புட்கரணிவரும்-நந்திப்பிரகாசந்-தாரையதுவேமுழங்குஞ்சாரையைக்கண்டேன்-தங்

(இ-ள்.) அங்ஙனம்வந்து திருமூலர்ஸ்தானத்தில் சூரியனிருக்கும்நான்குகோணத்தையுடைய வாசலில் சுந்தரத்தோடுகூடிய விந்துவிற்கலந்து உறவாடிக்கொண்டிருந்து இந்திரபதவியின்கண் அநுபவிப்பதுபோல; சரச,சல்லாபசங்கீதமங்களமாய்சந்திரபுஷ்கரயினின்றும்வரும் நந்திபிரகாசத்தினையுடைய தாரைதாரையா யொழுகுகின்ற சிவசாரையைக் கண்டேன் எ-று. (எக)

தாண்டியேநாதபரி-பூரணத்தின்-சுகந்தமலர்க்கமலந்துதித்துக்கொண்டேன்,பூண்டுபொற்பதம்பணிந்தேன்-என்னுண்டையேகேள் பூரகத்தினிலும்வந்துபோற்றிசெய்தேன்,வேண்டியமதிமலர்கொண்டாராதனைகள் - மிகுத்தவம்பிசையோமம்விதரணையாய், காண்டிபமென்றுலறிய-வாசியைக்கொண்டு-கருத்திலிருத்திக்கண்டதாரை பூதினேனே-தங்.

(இ-ள்.) அங்ஙனம் கண்டவுடன் நாதத்துவமென்னும் நளிரில் எழுந்தருளியிருக்கும் சர்வவியாபகப்பொருளான ஒரு அருமையானபுஷ்பத்தை நமஸ்காரஞ்செய்து வணங்கினேன் அதின்பிறகு பூரகமார்க்கமாகவும்போய் துதி

செய்தேன் அப்படி துதிக்கும்போது வேண்டிய அறிவென்னும் புஷ்பத்தைச் கொண்டர்ச்சித்து சத்திசம்பந்தமானயோகத்தைமிகவும்நன்றாகத்தொடங்கி வாசிகுதிரையைக்கொண்டுகண்ட ஸ்தானத்தினின்றும் ஊதினேன் எ-று.

பூரகம் மூச்சை உள்ளுக்குப் பூரித்தல். (எஉ)

வந்துதசநாதவிந்து-சுழிமுனையின்வாசலின்கருக்குழி தன்வீட்டுக்குள்ளே, தந்திரமதாகவேதான்-கருவதனில் -சங்கற்பமில்லாமல் கலந்துறைந்ததுகாண், விந்தையெனுநாதவிந்து சையோகந்தனில் விற்பனம்போலவுமெய்துமுற்பனமதாய், சுந்தரசுக்கில சுரோணித மிரண்டுங்கூடி-சொப்பனம்போலுமுதித்த சூக்ஷமிதுகாண்-தந்.

(இ-ள்.) மேலேசொன்னவிதமேசெய்தபோதில் அவ்விடத்தில்வந்து உதயமான நாதமும், விந்துவும், சுழிமுனையென்னுமிடத்தைத்தனக்குக்கடைவாசலாகவைத்திருக்கின்ற கர்ப்பவீட்டுக்குள்ளே அழகாகவந்து சேர்ந்துகலந்து திரண்டன. அப்படி அவ்விரண்டுங்கலந்த எதுவால் சுக்கில, சுரோணிதங்களிரண்டுங்கூடிக் கனவிற் காண்பொருள்போல்வந்தது இந்தச்சரீரம் எ-று.

வெண்பா.

உள்ளொளியாஞ்செந்தணலி லுற்பனமாஞ்சொற்பனத்தில்
வள்ளலெனுநாத விந்துகாண்-தெள்ளியதோர்
சத்தரிக்கோல்மாறல் கனகசபைவீட்டில்
வித்தாய்முளைத்ததுகாண் விந்து.

(இ-ள்.) மனோதேஜஸாகிய செவந்தமூலாக்கினியின்கண் உதயமாகின்ற சொப்பன வஸ்தையைப்போல மிக்கீர்த்தியையுடைய நாதமும், விந்துவும் உண்டாயின. ஆனால்அந்தவிந்துவானது சத்தரிக்கோலைப போல் வலமிடமாய் மாறிக்கொண்டேயிருக்கின்ற வாசிசம்பந்தப்பட்ட கனகசபையென்னும்சிதாகாசவீட்டில் காரணமாகஉண்டாயிற்று எ-று. (எச)

நகாரமகாரமுடனடு சிங்காரமதாய்
வகாரமிருகாலாய் வளர்ந்ததுகாண்-யகாரமது
அஞ்சறிவாய்நின்ற பஞ்சப்பெரும்பூத
மஞ்சும்வளர்ந்ததுகா ணுண்டே.

(இ-ள்.) அப்படி விந்துகாரணமாக இந்தத்தேகம்வந்தாலும்பஞ்சாட்சர உறுப்புக்களாகிய நகாரம், மகாரம், சிகாரம் மூன்றும் இத்தேகத்திற்கு மேலுறுப்புக்களாகவும், வகாரம் கீழுறுப்பாகிய இரண்டுகால்களாகவும். யகாரமோ ஐம்பொறியாகவும் நின்று அம்பொறிகளுண்டாவதற்குக் காரணமானஐம்பூதங்களாகவும் வளர்ந்தது எ-று. (எரு)

கொச்சகம்.

ஓராறுமேலாறு முற்றபெருந்துறைதாண்டி
சீரார்புகழவருந் தெய்வப்பதிதாண்டி

கர்ரார்மதகளிறு கன்னிதிருவீட்டில்
போாய்கருவுதித்துப் பேசியிருந்தேன்காண்.

(இ-ள்.) கீழாதாரம்ஆறு, மேலாதாரம்ஆறு, ஆகியபன்னிரண்டு ஆதாரங்களையுங்கடந்து அவைகட்குமேற்பட்டிருக்கின்றசுழிமுனையைத்தாண்டி அதற்கப்புறத்திருந்து விளங்காநின்ற பிரமரந்திரத்தையுங்கடந்து அதற்குமேல் சத்தியானவள் எழுந்தருளியிருக்கின்ற அழகியவீட்டின்கண் நான் ஒருகருவாகவுதித்து அவளிடத்தில் வார்த்தையாடியிருந்தேன் எ-று. (எசு)

ஆதிக்கருவூரி லங்கேகுடியிருந்து
நீதியந்தநாட்டில்வந்து நெஞ்சறிந்துநேசமதாய்
சாதிகுலந்தவிர்த்து தலமுஞ்சுழிவீடுவிட்டு
சோதிமதிநின்றிலங்குஞ் சுடர்வீட்டில்வந்திருந்தே.

(இ-ள்.) நானே! ஆதியிலே கருவூரில் குடியிருந்துபின்னர்வெளிவீட்டில் வந்து அதினால்மிவுகம்மெலிந்து சாதிமுதலியவற்றினின்றும்நீங்கிச்சுழிமுனையென்கிற நல்லவீட்டைக்கட்டிக்கொண்டு பின்னர் சூரிய, சந்திரர்களிருந்து பிரகாசிக்கின்ற தேஜோமயமான பேரொளிவீட்டில் வந்திருந்தேன் எ-று. ()

விருத்தம்.

விந்தெனவுநாதம்வந்தவாறுஞ்சொன்னேன்வெளிகடந்துவந்தவகைவிபரஞ்சொன்னேன், அந்தவிடைபின்கலையில்மாறல் சொன்னேனதுகடந்துசுழிமுனையையறியச்சொன்னேன், விந்தைமயலாசையது வொழியச்சொன்னேன் விட்டகுறைதொட்டகுறை விபரஞ்சொனனேன், அந்ததிசையதிசயமுமகற்றச்சொன்னேனருள்சொன்னேன் பொருள்சொன்னேனறிவுள்ளோர்க்கே.

(இ-ள்.) விந்துதத்துவமும், நாததத்துவமும் பிறந்தவிதத்தையும், அவற்றைக்கடந்து வெளிவந்தவிதத்தையும். இடைகலைபிங்கலைகள்மாறிமாறிவரும் விதத்தையும், சுழிமுனைதரிசனம் செய்யும்விதத்தையும்,ஆணவமாயைகளால் விளையும் மயக்கத்தை நீங்கிக்கொள்ளும்விதத்தையும், விட்டகுறை,தொட்டகுறைகளின் விவரத்தையும், அவைகளிலுண்டாம் அற்பஆனந்தத்தைநீக்கும் விதத்தையும், திருவருளுண்டாம்தன்மையையும். அதின்பொருளையும் அறிவினையுடையபெரியோர்கள்தெரிந்துகொள்ளும்பொருட்டுநான்சொன்னேன்

ஒங்காரசத்தமுதித்துணர்ந்துநிற்கு முன்னியதோர்நகாரமதும் வளர்ந்துநிற்கும், நீங்காதவகாரமதுமுயர்ந்துநிற்கு நிலையானசிகாரமதுமேலேநிற்கும், பாங்கானஅகாரமதைக்காத்துநிற்கும்பதிவானவுகாரமதுமேலேநிற்கும், ஆங்காரமானவஞ்சுபஞ்சபூத மப்படியேயஞ்சுருவாயாச்சுதாண்டே.

(இ-ள்.) நாதமாத்திரமாய்நின்றுவிளங்குகின்ற பிரணவமானதுசர்வபொருள்களையும் உணர்ந்திருக்கும், நினைக்கின்றநகாரமானதுவளர்ந்திருக்கும்வகா

ரமானது உயர்ந்திருக்கும், சொரமானது அதின்மேல் எதிர்முகமாய்நிற்கும், பலபொருட்டோடுகூடிய அகாரமானதுமேற்சொன்னவைகளை யெல்லாம்காவல்செய்திருக்கும், அந்தஅகாரத்தோடு சம்பந்தப்பட்டிருக்கின்ற உகாரமானது அதின்மேல் எதிர்முகமாய்நிற்கும் இப்படியெல்லாம் வளர்ந்துபஞ்சபூதமாய்நிற்கும் அப்பூதங்களெல்லாம் சேர்ந்து ரூபமாய்வரும் எ-று. (௭௯)

சத்தமதுபிருதிவிமேலேநிற்குந் தாங்கிநின்றபரிசமதுவப்புமேலாம், பத்திதரும்ரூபமதுசிகாரமேலாம் பாங்கானரசமதும்வகாரமேலாம், சித்தமகிழ்ந்ததுவுமொருயகாரமேலாஞ் சீர்பெறவேகாயமெனுந்திரண்டேயாச்சு, வெற்றிதருங்கவியொரு தொண்ணூற்றாறு விரைந்துரைந்தேயுதிரமதில் பிறந்ததாண்டே.

(இ-ள்.) ஐந்துபொறிகளில் சத்தமானது பிருதிவிபூதத்திலும், ஸ்பரிசமானது அப்புபூதத்திலும், ரூபமானது தேயுபூதத்திலும், ரசமானதுவாயுபூதத்திலும், கந்தமானது ஆகாயபூதத்திலும் கலந்திருப்பதினாலேயே தொண்ணூற்றாறு கருவிகளோடு சம்பந்தபபட்டிருக்கின்ற இந்தத்தேகம் தாயின்கருப்பத்திலிருந்து வெளிவந்தது எ-று.

இங்ஙனமில்லாமல் சத்தம் ஆகாயகுணமாகவும், பரிசம் வாயுகுணமாகவும் ரூபம், தேயுகுணமாகவும் ரசம் அப்புகுணமாகவும், கந்தம்பிருதிவிகுணமாகவும் சுபாவமாகவே கொள்வோமானால் இந்தத்தேகம்வருதலில்லையென்பார் அவற்றையெல்லாம் மாற்றிக்கூறினார். (௮௦)

நட்டுவைத்தவெலும்புகால்துண்டுநாலு நலமானகையெலும்புதுண்டுநாலு, ஒட்டிவைத்தபழுவெலும்பு முப்பத்திரண்டு வுன்னதமாந்தண்டுபதினாறுகாண்டம், மட்டுவைத்தவெலும்பு முச்சாணதற்குமேலே வளமானநறுக்கெலும்புவாயிரந்தான், சுட்டலைந்தபாண்டமீதெடுத்தநேர்மை தொகையெல்லாஞ்சபைதனிலே சொல்வேனாண்டே.

(இ-ள்.) உலகத்தின்கண் நடமாடும்படி வைத்த கால்எலும்புத்துண்டு நான்கு, கையெலும்புத்துண்டுநான்கு, பழுவெலும்புத்துண்டு முப்பத்திரண்டு கண்டத்திலிருக்கும்துண்டு பதினாறு அக்கண்டத்தின் மூன்றுசாண்களுக்குப் பின்பொடியெலும்பு ஆயிரம். இப்படிப்பட்டவைகளெல்லாம்சேர்ந்தசேர்க்கையினால் தொக்குஎன்னும் பெயரோடுகூடி வெளிவந்த இந்தத்தேகத்தின்நேர்மையைநான் இச்சபையில் சொல்லுகின்றேன்; எ-று. (௮௧)

வீறானகையெலும்புபிருதிவியின்கூறாம் விதமானவுண்ணீரு பிரமன்கூறாம், பேறானதசநாடிவாய்வுபத்தும்பிலமானநரம்பெல்லாமாலின்கூறாம், கூறானவுதிரமெல்லாஞ்சத்திகூறாங்கூடிநின்றவெலும்பெல்லாம்ருத்ரன்கூறாம், சீரானநிணத்தோடுமச்சைசாவ்வுஞ் சிறந்தருளுசமயேஸ்பரத்தின்கூறுமாண்டே.

(இ-ள்.) மிகுபராக்கிரமத்தையுடைய கையிலுள்ளஎலும்புகளும் நெறுக்கெலும்புகளும் பிருதிவிசம்பந்தமான பிரமனுடையகூறாகும். தசநாடி தசவாயு, நரம்பு இவையெல்லாம் விஷ்ணுவின்கூறாகும். இரத்தமெல்லாம் சத்தியின்கூறாகும் அந்தஇரத்த சம்பந்தப்பட்டிருந்த எலும்புகளெல்லாம்ருத்திரன் கூறாகும். நிணம், மச்சை, சவ்வுமுதலியவைகள் மகேஸ்வரன்கூறாகும் எ-று.

ஆதாரமானபரநாதவிந்துவாதிசதாசிவன்கூறுமாண்டேகேளீர் பாதாரமுடியளவுங்கணக்கதாகப்பாலித்து விபரமதாய்பகரயானும் வேதாகமத்தில்நின்று நடனஞ்செய்யும்விந்துநாதத்தின்செயல்விபரமாக, நாதாக்கள்கமலபதந் துதித்துபானு நவிலவுமேயான்கண்ட நடத்தையாண்டே.

(இ-ள்.) இத்தேகம் உண்டாவதற்கு முதற்காரணமான நாதமும் விந்துவும் சதாசிவன்கூறாகும், இவைகளையெல்லாம் வேதாகமங்களிற் சொல்லியபடியே பெரியோர்களுடைய திருவடிகளை நமஸ்காரஞ்செய்து நான்பாதமுதல் சிரசளவுமிருக்கின்ற விவரங்களையெல்லாம் நான்சொல்லுகின்றேன் என் ஆண்டைமாரே! அவைகளைநீங்கள் கேட்டருள்வீராக எ-று. (அரு)

முத்திதருமூலத்திலக்ஷரமேநாலு முதலானசுவாதிஷ்டானமெழுத்தாறாகும், பத்திதரும்பூரகத்திலெழுத்தும்பத்து பாங்கானவனாகதத்திலெழுந்ததீராறும், சித்திரமாம்விசுத்திதனிலெழுத்தீரெட்டாஞ் சிறந்தவாக்கினையிலெழுத்திரண்டுபாகும் சத்தியெனுமம்பரத்திலெழுத்தொன்றாச்சு சார்வாகுமைம்பத்தோரக்ஷரங்காணுண்டே.

(இ-ள்.) யாவருக்கும் மோக்ஷத்தைக்கொடுக்கின்ற மூலாதாரத்திலுள்ள எழுத்து நான்காகும், சுவாதிஷ்டானத்திலுள்ள எழுத்துஆறாகும் மணிபூரகத்திலுள்ள எழுத்துபத்தாகும், அநாகதத்திலுள்ள எழுத்து பன்னிரண்டாகும் விசுத்தியிலுள்ள எழுத்துபதினாறாகும், ஆக்கினையிலுள்ள எழுத்து இரண்டாகும், சிதாகாசத்திலுள்ள எழுத்து ஒன்றாகும், இப்படியே இவைகளையெல்லாம் அடுக்கிவரிசைப்படுத்திப் பார்க்குமிடத்தில் ஐம்பத்தோரெழுத்துகள் ஆயின எ-று.

அவ்வெழுத்துகளின்விவரம் ஆறாதாரம்விளக்கியஇடத்திற்காண்க (அச)

மும்மலமுந்தரித்ததொருவாசலொன்று முடிகாணுலிங்கமொருவாசலொன்று, நன்மையறுசுவையறிந்தவாசலொன்று நலமான கேள்விகொண்டவாசலொன்று, வண்மையுள்ளவாசமறி வாசல்ரெண்டு வளமானரூபமறிவாசல்ரெண்டு, அன்னமெனுமம்பிகைப் பெண்ணருளினாலே யறிவாலேயெடுத்ததிந்தக் காயமாண்டே.

(இ-ள்.) வாதபித்த கபசம்பந்தப்பட்டமலம் இறங்கும்வாசல் ஒன்றாகும் சலமிறங்கும்வாசல் ஒன்றாகும், ருசிகளை அறியும்வாசல் ஒன்றாகும், நல்லகேள்விகளைக் கேட்கின்றவாசல் இரண்டாகும், வாசனையையறிகின்றவாசல்இரண்

டாகும், ரூபங்களைப்பார்க்கின்றவாசல்இரண்டாகும், ஆகியநவவாசலோடுகூடி யஇந்தத்தேகமானது பராசத்தியின் திருவருளாலமைந்ததாகும் எ-று.

நவவாசலின்விவரம்வருமாறு;—அவை, மலவாசல், சலவாசல், வாய்காது இரண்டு, மூக்குத்துவாரம்இரண்டு, கண்இரண்டு என்பன. (அரு)

கொச்சகம்.

வட்டமதிலேறிவளர் மாமதியைத்தாண்டியொரு
திட்டவளைபோட்டுநவ சித்திரமணிவாசலிலே
முட்டிநின்றகம்பமுனை முதற்சுழிவீட்டினிலே
ஒட்டியதுவளர்ந்து வொருமலராய்ப்பூத்ததுகாண்.

(இ-ள்.) வட்டாகாரமாயிருக்கின்றயாதொரு ஆஞ்ஞாபுரியின் மதிலின் மேலேறி அதற்குமேலிருக்கின்றசந்திரமண்டலத்தையுங்கடந்து அதற்குமேல் சத்தியானவள் நடனஞ்செய்கின்ற நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட சிங்காரத்தைப்பெற்று விளங்கும் மூலாதாரத்தினின்று முண்டான கம்பத்தின் சிகரத்திலிருக்கும் சுழிமுனையென்னும் வீட்டில்வளர்ந்து ஒரேபுஷ்பமாகப் பூத்தது நாமநுபவிக்கவிருக்கும் பொருள் எ-று. (அசு)

பூவிருக்கப்பிஞ்சாகி பூவிலரும்பாகியுமே
மாவிருக்குத்தேனாகி வந்துசிறுவீட்டில்
மேவிருக்கவம்பரத்தே வேரோடித்தூறாகி
யாவருக்குமிங்கிதமா யரும்பாகின்றதுகாண்.

(இ-ள்.) பின்னர் பூவின்கண் பிஞ்சாகியும், அரும்பாகியும், மாவின்கண் தேனாகியும் வெளிவந்து மேலேசொன்ன சிறுவீட்டில்சிதாகாயசம்பந்தமுடையதாகியாவருக்கும்நன்மையைத்தரத்தக்கதாய் அரும்புபோன்றுநின்றது எ-று.

வெண்பா.

வடிவுகொண்டவள்ளையுமாய் மந்திரஞ்சேர்நாதமுமாய்
முடிவுகண்டுமூல முளைத்ததுகாண்-வடிவதுவாய்
கால்வாங்கிவட்டமிட்டு கனகதிருவீட்டில்
மேல்வாங்கிநின்றதுகாண் விந்து.

(இ-ள்.) இங்ஙனமெல்லாஞ் சொல்லப்பட்டபொருளான விந்துவானது ரூபந்தாங்கியமூர்த்தமாகவும், மந்திரசம்பந்தப்பட்டநாதமாத்திரமாகவும், அவ்வவ்வான்மாக்களின்பரிபக்குவத்தைக்கண்டு ஆதிகாரணமா யிருப்பதாகவும் தன்னுடைய வடிவமேஎங்கும் பரவியிருப்பதாகச்சரம்மாறி மாறிச்சுழன்று மேலேசொன்ன சிறுவீட்டிலிருந்தது எ-று.

ஆகையால் இப்படிப்பட்ட விந்துவின் சொரூபத்தை அறிந்தவனே பரயோகி என்பதுகுறிப்பு. (அஎ)

விருத்தம்.

மாலயனும்பிரகாசமதியதாகும்வாழும் வளர்ருத்திரனுமுருவதாகும், சேலானமயேஸ்வரனுமுணர்வதாகுஞ் செப்பரியசதாசிவனுங்குருவதாகும்,காலானநாடியொருகைகாலாகுங்கதிர்மதியால்வளர்ந்தசத்திகருவதாகும், வேலானவிழிமடவா ளுந்திக்குள்ளே விளைகின்றகருவியெல்லாம்விதிப்பேனுண்டே.

(இ-ள்.) மேலேசொன்னஅந்தவிந்துவுக்கு விஷ்ணுமூர்த்தியும்,பிரமதேவனும், புத்திமதிகளாவார்கள், ருத்திரன்ரூபமாவன், மஹேஸ்வரன் அறிவாவன், சதாசிவன்குருவாவன், நாடிகள்கைகாலாதும் இப்படியாகவந்தஅதற்கு சத்தியானவள்கருவாவள், அப்படிப்பட்ட அப்பராபரையினுடையகர்ப்பத்திற்குள்உண்டாகின்ற கருக்களையெல்லாம் நான்விவரித்துச்சொல்லுகின்றேன்.

எட்டுத்தூணுட்டியொருவிட்டம்போட்டு வெழுந்ததின்மேலருகுவளையொன்ருய்க்கூட்டி, மட்டடற்றமோட்டின்வலை யொன்றுநாட்டிவள்மானதுண்டும் வளைரெண்டும்போட்டு, கட்டாகக்கையகத்தில் வளைத்துக்கொண்டு கனமானவரிச்சல்விலாக்கொடியுமாக்கி, முட்டமுட்டநின்றசம்பத்துமேலாய் முகப்புடனேசிங்காரவீடுமாச்சே.

(இ-ள்.) எட்டுத்தூண்கள்நட்டு, ஒருவிட்டம்போட்டு,கொடுங்கைவளைத்துஎல்லாவற்றையும் ஒன்ருய்ச்சேர்த்து நடுமோட்டில்மேல்மூடி இரண்டுதண்டானவளையமொன்றுபோட்டுப்பந்திப்பாக ஒருகையவலைத்துக்கூட்டிவிலாக்கொடிகளை வரிச்சுச்கோல்களாக்கிமூட்டும்படி வீணுத்தண்டாம் கம்பத்தைநட்டுசெய்து அதினால்ஒருவீடு ஏற்படுத்தப்பட்டது எ-று. (௩௦)

பத்தியுடன்விரலுமிருபதுவேயாச்சுபதிந்தநகமதுவுமப்படியேயாச்சு, வெற்றியுள்ளரோமமதுமனேகமாச்சு விதமானவீமெண்சாணதுவேயாச்சு, அத்திபுரமதுவாச்சுவெளியுமாச்சுவங்குலமுந்தொண்ணூற்றுறதிலேயாச்சு, சத்திவாலாம்பிகைப் பெண்ணுலேயாச்சு சார்வானகருவியெல்லாமமைந்ததாண்டே.

(இ-ள்.) மேலேசொன்னவீட்டில் வரிசையாக இருபதுவிரல்கள்உண்டாயின,நகங்களும் அப்படியேஉண்டாயின, ஜெயம்பொருந்திய மயிர்களும்மூன்றரைகோடியாயின, அந்தவீடும் எண்சாண் அளவுடையதும்,தொண்ணூற்றுறங்குலமுடையதுமாயின, இவைகளெல்லாம் வாலாம்பிகைப் பெண்ணருளினால்உண்டானவையாகும் ஆகையால் அவளுடையதிருவருட் பிரகாசங்கொண்டே நானும் அவைகளையெல்லாம் வெளிப்படுத்தினேன் எ-று. (௩௧)

வெண்பா.

அங்குலமுந்தத்துவமு மதிலேவளர்ந்தவகை
இங்கிதமாயானுரைப்பே னீசனே-எங்கள்குலம்

மந்துதந்தமூலம் வளர்ந்தவுயிர்போம்பொழுது
வெந்துதந்தமூல வெளி.

(இ-ள்.) என்தலைவனே! நான் அந்தவீட்டின் அங்குல அளவையும், அது உண்டான உண்மையையும், நான் இவ்விடத்தில் நன்றாகஉரைப்பேன் எப்படியென்றால் எங்கள்சாதியானது உண்டானதும் அந்தவிந்து மூகாந்திரத்திலேயாம் பின்னர் உயிர் இறந்துபடும்தருவாயில் வெந்ததும் அந்தச்சிதாகாய மூகாந்தரத்திலேயாம் எ-று. (௩௨)

கலித்துறை.

கதிரேசிறந்தது கார்கொண்டவட்டக் கனகிரிமேல்
மதுரம்பொழிந்து வழியேநடந்துயர் வாசலிலே
உதிரந்திரண்டு வுடலாகியேவந்த வுண்மையெல்லாம்
சதிரம்பிறந்த விபரஞ்சபைநின்று சாற்றுவனே.

(இ-ள்.) சூரியமண்டலத்தின்கண் சிறந்துவிளங்குவதான வட்டமாகிய மலையின்மேல் ஆநந்தரசம்சிந்தியிருக்கின்ற அந்தவழியே நடந்துபோய் அவ்வாநந்தரசம் உண்டாகிவருகின்றவாசலில்தாயின் கருப்பாசயத்தின்கண் திரண்ட உதிரத்தில்ரூபம்பெற்றுத் தேகமுண்டான உண்மைமார்க்கத்தைநான் இச்சபையின் கண்ணிருந்து சொல்லுவேன் எ-று. (௩௩)

நாடித்திரிந்துயர் நாதாந்தவிந்துள நாட்டத்திலே
கூடிக்கலந்து விருகாலைவாங்கிக் கொடுமுடிமேல்
ஆடித்திரிந்து வளவற்றுநின்ற வறையதுக்கு
ளோடிக்கலந்து வொருமலராகி யுதித்ததுவே.

(இ-ள்.) தேடித்தேடித்திரிந்து நாததத்துவத்தின் அந்தத்தில் விளங்கும் விந்து மேல்காட்டத்தில் கூடிக்கலந்து அவ்விடத்தில் இடைகலை, பிங்கலை யென்னும் இரண்டுகால்களைவாங்கி சுழிமுனையென்னும் முடிமேல் கடித்து யாதொருவரம்பும் சொல்லக்கூடாதபடி யமர்ந்திருக்கும் அறையாகிய மூலாதாரத்திற்குள்போய் அவ்விடத்தில் ஒருபுஷ்பம்போல் மலர்ந்தது எ-று. (௩௪)

விருத்தம்.

நாற்சதுரமேலும்வளர்கணேசனுக்கு நல்லருளைத்தந்தருளும்பிரமாவுக்கும், பாற்கடலிற்பள்ளிகொண்டதிருமாலுக்கும் பன்னிரண்டின்மேனின்ற ருத்திரற்கும், மேற்சதுரமானமயேஸ்பரனுருக்கும் விந்துவதினின்றிலங்குஞ்சதாசிவற்கும், தீர்க்கமுடனவரவற்குக்கட்டும்வீடு செப்புகிறேன்ஜெகச்சோதி செயல்தானுண்டே.

(இ-ள்.) நாற்கோணத்திலமர்ந்திருக்கும் விநாயகமூர்த்திக்கும், உலகத்தார்க்கு நல்லதிருவருளைக்கொடுக்கின்ற பிரமாவுக்கும், திருப்பாற்கடலில் பள்ளிகொள்பவனான விஷ்ணுவுக்கும், அவன்பதிக்குப்பன்னிரண்டங்குலத்தின்மேலிருக்கும் ருத்திரமூர்த்திக்கும், அதற்குமேலமர்ந்திருக்கும் மகேஸ்வரனுக்கும்

லலாடஸ்தானத்தி லமர்ந்திருக்கும் சதாசிவனுக்கும், ஆகியஇவர்கள்எழுந்தரு
ளியிருப்பதற்குரிய வீடுகளைக்கட்டிச் கொள்ளும் விதத்தைநான் இனிச்சொ
ல்லுகின்றேன் எ-று.

நான் இனி ஆதாரங்களை விளக்கிக்காட்டுகின்றேன் என்பது கருத்து.

நாதமென்றுஞ்செகமெல்லாநின்றநாத நல்வினையுந்தீவினையுமாண்
டமூர்த்தி, வேதமென்றகடலுக்குமெட்டாநின்ற வெளிகடந்துஆறு
தலந்தாண்டியப்பால், பாதமடிமுடியாகிநின்றசோதி பதினாலுலோ
கமதுக்கொருவனான, சூக்ஷமதுவானதிருமூலந்தன்னில் சுரூபமாய்
நின்றவகை சொல்வேனாண்டே.

(இ-ள்.) சர்வலோகங்களிலும் நிறைந்திருக்கின்ற நாததத்துவசம்பந்தனா
னகடவுள், நான்குவேதங்களுக்கும் எட்டாமலிருக்கின்ற சிதாகாயத்தைதக்கட
ந்து நெருப்பாற்றையுந்தாண்டி அதற்கப்பால் அடிமுடிகள் விளங்குதற்கரிய
தேஜோமயனாய் பதினான்குலோகங்களுக்கும், தானொருவனேயான திருமூல
னென்போன் முன்சொன்ன ஆதாரமூலங்களிற் கலந்திருக்கின்ற வகையை
நான்சொல்லுவேன் எ-று. (௧௬)

தரு.

வீடுகட்டிக்கொண்டேன்-நானொரு-வீடுகட்டிக்கொண்டேன்.

வீடுகட்டினேன் விண்ணொடுமண்ணையுங் கூறதாச்சுக் குறியிது
ரெண்டினால்பாடுபட்டுச்சலத்தைதத்தெளித்துடன் பற்றிநெருப்பையு
ங்காற்றையுஞ்சேர்த்துமே, கூடுண்டானகுறிமண்ணுந்தண்ணீருங்கூ
ட்டிப்பிசைந்துறவாடியந்தமுடன், நீடுலகும்புகழாவியதுக்குள் நிலை
க்கவெண்சாணுடல் நேர்த்தியைப்பார்த்திரும். வீடு

(இ-ள்.) நான் ஆகாயபூதத்தையும், பிருதிவிபூதத்தையும் ஒன்றாகச்சேர்
த்து அப்பூதத்தால் சலந்தெளித்து தேயு, வாயு பூதங்களால் நெருப்பையும்
காற்றையும் சேர்த்துமுன்சொன்ன இருமண்ணையும்நன்றாகபிதித்துப் பிசைந்
துவெகுஅழகாக உலகத்தார்கள்புகழும்படி உயிரானது நிலைத்திருப்பதற்குக்
கூடுமான எட்டுச்சாண் அளவோடுகூடிய ஒருவீட்டைக்கட்டிக் கொண்டேன்
ஆகையால் அவ்வீட்டினுடைய நேர்த்தியைநீங்கள் பாருங்கள் எ-று. (௧௭)

தச்சுமுழங்கொண்டிருகாலைநாட்டிச்சதிராகவட்டப்பலகையுஞ்
சேர்த்து, உச்சிதமாகவொருமரநாட்டியே உள்ளேபழுவரிச்சல்களு
ங்கோத்துடன், முச்சுடர்வன்னிக்குழைபொன்றுநாட்டியேமுட்டுத்
தூண்டுமுளையதுவாகிப்பின், மச்சுடுகட்டவகையறியாதாண்டே ம
கிழ்ந்திடனுதாரவாசியைக்கொண்டுமோ. வீடு

(இ-ள்.) தச்சனைக்கொண்டு ஒவ்வொருமுழ அளவாக இரண்டுகால்களை
நடுவித்து, வட்டமாகியபலகையொன்றைஅர்த்தக்கால்களிற்சேர்த்துநறுமுக்காக

ஒருமரக்கொம்பை நடுவேநட்டு அதற்குள் வரிச்சுக்கோள்களை அடுக்கிமூன்று சுடர்களாகிய நெருப்புக்குழைகளைநாட்டி, அடைதூண்நட்டு அவைகளுக்குக் கூர்மையுண்டாக்கிப் பின்னர்மேலே கட்டடமார்க்கமாகக்கட்டுகின்ற மச்சுவீட்டைக்கட்ட வகைதெரியாமல், அதுகட்டுவேதற்காக ஆருதாரத்திற் பரவுவதான வாசியைக்கொண்டு எ-று. (௯௮)

ஒட்டுப்பலகையுமுட்டுப்பலகையும் ஓங்கியசிங்காரமோட்டுவளையுடன்,வட்டத்திருகாணிவிட்டத்தில்மேல்நின்றுமாயாமல்கைமரஞ்சாயாமல்நாட்டியே, முட்டுக்கால்வட்டமுக்காணியைப்பூட்டி முறியாமல்தச்சுமுயற்சியதாகவும், நட்டுக்காலாணிகள் முட்டியேதாங்கிடநாதவிந்தாலும் வேதாந்தவீடாச்சுது. வீடு

(இ-ள்.) மேலே சொன்னவீட்டுக்கு, ஒட்டுப்பலகை, முட்டுப்பலகை, மோட்டுவளையம், திருகாணி,விட்டத்தில்மேல்நின்றுவிழாதபடிகைமரமுட்டும் கால்வட்டமாகிய முக்காணி, காலாணி ஆகியஇவைகளைஎவ்வெவ்விதமாகப்பூட்டவேண்டுமோ அவ்வவ்விதமேபூட்டி நாதவிந்துக்களின் சகாயங்கொண்டு இங்ஙனம் செய்தமையால் வேதாந்தவீடாச்சுது இத்தத்தேகம் எ-று. ()

கைமரநாலுகணைக்காகச்சேர்த்துக் காலாணிகொண்டுமேலாணியும்பூட்டியே, மெய்யுறவாகவும்போதிக்கைரெண்டேட்டி வேடிக்கைநாலுகொடியுந்திருப்பியே, துய்யநடுமூலக்கம்பமதாகிய சூக்ஷக்கால்நாட்டிச்சுகாதீதமாகவும், மையத்திலேசுருள்மேருவைகூட்டிப்பின் வச்சிரப்பலகை ரெண்டச்சுழல்மூட்டியே. வீடு

(இ-ள்.) நான்குசிறியமரங்களை ஒருஅளவாகவெட்டிச்சேர்த்து,காலாணிகளைக்கொண்டு மேலாணியிற்பூட்டி அந்தச்சரீரமானது நன்றாய்ப்பந்தப்படும்படி இரண்டுபொதிக்கைமாட்டி மகாவிநோதமாக நான்குகொடிகள் திருப்பி நடுமூலம்என்னும் கம்பமாகிய ஒருசூட்சுமக்கால்நாட்டிச் சுகத்திற்குக்கடந்ததாகவும், நடுமையத்தில் மேருவாகிய சிகரத்தைச்சேர்த்து இரண்டுவச்சிரப்பலகையாலாகிய சுழலைக்கொடுத்து எ-று. (௱)

நகாரமகாரமிரண்டையுஞ்சேர்த்து நடுவேசதுஷ்கோண வீட்டையுங்கட்டிச், சிகாரவகாரயகாரமதுகொண்டுச் சித்திரச்சாவடிவிஸ்தாரமாகவும், அகாரமதுக்குள்ளேயையுமென்றட்சரம் அவ்வெழுத்தாலேயகண்டசராசரம், உகாரமதுக்குளுயர்ந்தகிலியெனும்உவ்வெழுத்தாலுமுதித்தசவ்வானதும். வீடு

(இ-ள்.) நகாரம், மகாரம் என்னும் சுவாதிஷ்டானமணிபூரக எழுத்துக்களைச்சேர்த்து, அதற்குநடுவேநாற்கோணவீட்டைக்கட்டி,சிகாரவகாரமகாரமென்னும் மூன்றையுங்கொண்டு சித்திரச்சாவடியை விஸ்தாரமாகவும். அகாரமென்பதற்குள் ஐயுமென்றஅட்சரமும், அவ்என்னும் எழுத்தால் அகண்ட

சராசரமூர்த்தி, உகாரத்தாலே உயர்ந்தகிலியெனும் உவ்வெழுத்தாலும் உண்டான சவ்வானதும் எ-று. (௱௧)

வஞ்சகமானதோ ரஞ்சுபெரும்பூதம் பஞ்சறிவாகவுங் குஞ்சாவீட்டினில், அஞ்செழுத்துள்வளரைம்பத்தோரக்ஷரம்ஆனந்தமாகவலங்காரமாளிகை, கொஞ்சிவிளையாடும்ரஞ்சிதவீட்டினில் நெஞ்சறியுங்கமலாலயமைம்பொறி, செஞ்சொல்மொழி சிவசிங்காதனத்தினில் கஞ்சமலராயிரத்தெட்டிதழினால். வீடு

(இ-ள்.) கபடமாய்வாசஞ்செய்கின்ற பெரியஐந்துபூதங்களும் ஐந்துஅறிவாகவும், குஞ்சரவீட்டினில இந்தப்பஞ்சாட்சரத்திற்குள் வளர்கின்ற ஐம்பத்தோரெழுத்தும் அடங்கியஆநந்தமாக அலங்காரமாளிகையில் கொஞ்சிவிளையாடுகின்ற ஆநந்தமுண்டாக்கும்வீட்டில் நெஞ்சினையறியும்கமலாலயவீட்டில் ஐம்பொறியாகிய செவந்தசொற்களையுடைய சிவசிங்காதனத்தினில், ஆயிரத்தெட்டிதழ்களையுடைய மலராசனத்தினால் எ-று. (௱௨)

நாலுமுழத்திலுங்காலைவளர்த்தியேநாட்டியேசக்கரம்பூட்டியேவைத்துடன்,மேலுமீரைந்துடன்தாதுவினாடியால் வீட்டுக்குஆக்கையைப்பூட்டிவருந்தியே. மாலுநடுவணைகாலுமடியனும்பாலுமதிவளர்மேலுஞ்சுடரினால், மூலவன்னிச்சுழிமூவரிருப்பிடம் வாலைகுண்டலிதன்மாளிகையாச்சுது. வீடு

(இ-ள்.) நான்குமுழம்வரைக்கும் காலைவளர்த்திநாட்டி, அதற்கோர்சக்கரம்பூட்டி மேலும்பத்துநாடியினால் ஆக்கையாகியவீட்டைக் கூட்டி அதினால் வருந்திமாலும் நடுவணையாகவும், காலும்அடியவனாகவும்மதிப்பிரகாசத்தினால் மூலத்திலுள்ள வன்னியின்சுழியாகிய மூவர்க்கும்இருப்பிடமும் வாலைகுண்டலிக்கு இருப்பிடமுமான மாளிகையாச்சுது எ-று. (௱௩)

நாடித்தசவாய்வுவீரைந்துஞ்சேர்த்துமே நாடியஷ்டதிசையுநலமாகப்பூட்டியே, வீட்டுக்குவாசலொன்பதுவுமுண்டாக்கியேவேடிக்கையாகவு நாடிநரம்பாலே, காட்டியசுக்கிலசுரோணிதத்தாலே கருவியெனுங்கரணாதிகள்சூழ்ந்திடில், ஆட்டியமுட்டுமுடக்குக் கணுவுகளாக்கைப்பலப்படநாக்குவுண்ணாக்குடன். வீடு

(இ-ள்.) தசவாயுக்களையும் நாட்டிச்சேர்த்து அஷ்டதிசைகளிலும்பூட்டி அப்படிப்பூட்டப்பட்டவீட்டுக்கு ஒன்பதுவாசல்களையுமுண்டாக்கி ஒருவிநோதக்காட்சியாக நாடிநரம்பாலும், சுக்கிலசுரோணிதத்தாலும் எற்பட்டிருக்கின்றகருவிகரணாதிகள் சூழ்ந்தால் ஆட்டுகின்ற முடக்கு, கணுவுகள், ஆக்கை, நாக்கு, உண்ணாக்குடனே எ-று. (௱௪)

சிங்காரமானவரமணையஞ்சையுஞ் சிற்றம்பலத்துடன்பேரம்பலங்களும், கங்கைநதிகளுந்தொண்ணூற்றறுவர் கலந்தேயிருக்குங்கண

கசபையெனும், அங்கங்குறைவுபடாமலரமனை அச்சூடுகட்டியேபச்சூடு ஆலயம், எங்கும்பிரகாசிக்குமிந்தியவீடு இடைபின்கலைசுழியே காக்ஷரத்தினால். வீடு

(இ-ள்.) விநோதமான ஐந்து அரண்மனைகளையும், சிற்றம்பலம் பேரம்பலங்களையும், கங்காநதிகளையும், தொண்ணூற்றறுவர் சேர்ந்திருக்கின்ற கனகசபையென்னும் அங்கப்பழுதில்லாத அரண்மனையும், அச்சவீடுமெச்சவீடுகளும் அவ்விடத்தும் விளங்குகின்ற இந்திரியவீடுகளும், இடைகலை, பிங்கலை, சுழிமுனைகளும் ஏகாட்சரத்தினால் எ-று. (௱௫)

ஐந்துபுலனையறிவாகக்கூட்டியே ஆதாரமாறும் வளைதனைநாட்டியே, மைந்துமதசுழிகற்பத்தைபூட்டியே கால்கொண்டுநின்றொரு மேல்கொண்டுவாங்கியே, பைந்தமிழ்சூஸ்திரநாடித்திசைக்கயிறு பாங்குடன்கப்பிக்கயிறுமூன்றும்பூட்ட, ஐந்துபூதத்தைகொண்டாக்கையிலப்பட ஆறாருண்டாக்கியனேகவிசிதமாம். வீடு

(இ-ள்.) சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்என்னும்ஐம்புலன்களையும் ஐந்தறிவாகக்கூட்டி, ஆறுஆதாரங்களையும் வளையமாகநாட்டி மதம்என்னும் சுழித்தகற்பத்தைபூட்டி காலைக்கிளப்பிமேலாகநின்றுவாங்கிப்பசியதமிழ்என்கிற சூஸ்திராதியும், திசைக்கயிறும், கப்பிக்கயிறும் ஆகியமூன்றுகயிற்றையும் பூட்டி ஐந்துபூதங்களும் இந்தத்தேகத்திலாடும்படி விசதமான ஆறுவளர்உண்டாக்கி எ-று. (௱௬)

சுற்றிமதில்களுமாறற்சுவருடன் தூண்டுகளாகியதண்டிகைக்கம்புகள், பத்தியால்நின்றதோர்சித்திரச்சாவடி பார்க்கிறபேர்க்கெலாஞ்சீர்க்கலங்காரமாய், முத்திதருஞ்சிவசத்திமண்டபமோட்டு வளையுநரம்பாலிறுக்கியே, சத்தமெனுநவரத்நக்கதவுடன்சந்நிதிவாச லுன்னதமாகவே. விடு

(இ-ள்.) சுற்றிமதில்களும் அத்துடன்மாறற்சுவர்களும் தூண்டுதூண்டுகளாகிற தண்டிகைக்கொம்புகளும், வரிசையாயிருந்த சித்திரச்சாவடிகளும்பார்க்கின்றவர்களுக்கெல்லாம் சிறந்த அலங்காரமாய் மோட்சந்தருகின்றசிவசித்திரமண்டபமோட்டை வளைநரம்பாலிழுத்துக்கட்டிச் சத்தியாகிய நவரத்தினக்கதவுடன் சந்நிதிவாசலானது உன்னதமாக எ-று. (௱௭)

நவ்வையுமவ்வையும்ரெண்டையுஞ்சேர்த்துநலமான அவ்வையும்வவ்வையுங்கூட்டியே, சிவ்வையுஞ்சேர்த்துடனுசாரிகையில் திடமாயெண்சாணுடல் தேகமதாகவே, அவ்வதுக்குள்ளேயாதாரமுண்டாச்சுது அம்பிகைப்பெண்ணளவாலேவீடாச்சுது, உவ்வதுக்குள்ளேயுடனுமுண்டாச்சது ஒங்காரத்துள்ளேயுயிர்வந்துலாவுது. வீடு

(இ-ள்.) நகார மகார இரண்டெழுத்துகளையுஞ்சேர்த்து அவைகளுடன் நன்றான அவ், வவ், சிவ் இவைகளைச்சேர்த்து குருவின்கையில் எண்சாணுட

லகத்தையும் ஒப்புவித்தப்பின்னர் அவ்வுக்குள் உயிர்வந்துலாவுவதையும், அம்பிகைப்பெண்ணால்வீடானதும், உவ்வுக்குள்உடலானதும், ஓங்காரமாகிய பிரணவத்திற்குள் உயிர்வந்துலாவுவதும் எ-று. (௫௪)

திங்களொன்றானபின்மூங்கின்முளைபோல் திரண்டுருண்டேசனியாகுங்கருவுரு, சிங்காரமானதோர் திங்களிரண்டினில்சேர்ந்து சலந்ததுபாலாடைபோலவும்,இங்கிதசுக்லசுரோணிதமாகியஇந்திரியவச்சிரவின்பவீடாமதில், தங்கியநாதவிந்தாலேசமைந்தசடமதின்வாழ்வினைச்சாற்றுவனண்டேகேள். வீடுகட்டி

(இ-ள்.) இப்படி ஒருமாதமானபின்னர் கருவின்உருவானது மூங்கில்முளைபோல்கனிந்தும் அழகியஇரண்டாந்திங்களில் பாலடைபோற்சேர்ந்துகலந்தும் இந்தசுக்கில சுரோணிதங்களாகிய இந்திரியமாகிய பலம்பொருந்திய வீட்டில் தங்கிய சுரோணிதசுக்கிலங்களால் உண்டான இந்தத்தேகத்தின் விவரத்தைச் சொல்லுகின்றேன் என்னுடையயேசீர்கேளும் எ-று. (௫௫)

விருத்தம்.

மூலமதில்வீடொன்றுமுடிந்ததாண்டே முச்சந்திவீதியதும் புறம்பாய்வைத்து, சீலமுள்ளபிரமனுக்கும்வீடொன்றாச்சு சிறந்தருளுந்திருமால்தன்வீடொன்றாச்சு,ஞாலமதில்ருத்திரன்வீடொன்றேயாச்சு நலமானமயேஸ்பரன்தன்வீடொன்றாச்சு, ஆலவிடமுண்டசதா சிவனுருக்கும் அரமனையுமொன்றாச்சு ஆண்டேகேளே.

(இ-ள்.) என்னுடைய ஆண்டையேசீர்கேளும், மூலம்என்னும்நிலத்தின்கண் முச்சந்திவீதியைப் புறம்பாகவைத்து ஒருவீடுகட்டிமுடிந்தது. அதின் பின்னர் பிரமதேவனுக்கும், விஷ்ணுவுக்கும், ருத்திரனுக்கும், மகேஸ்வரனுக்கும் சதாசிவனுக்கும் அவரவர்கள் இருந்துவாழ்வதற்கு ஒவ்வொருவீடாக ஐந்துவீடுகளும் கட்டிமுடிந்தன எ-று. (௫௬)

மருவுயர்ந்தவதனத்தினுதசத்தி வடிவானமரகதப்பெண் மாதுவாலை, திரிபுரத்துக்கொருபுரமாயிலகுஞ்சோதி சிற்பரத்திதற்பரத்தி சிறுபெண்ணுத்தாள்,சுரிமுகத்தினகதனத்திதுடியிடைச்சிதுலங்கும் ரத்னமானதொருசோதிமாது, அருமறைச்சியம்பரத்தியம்பிகைக்கு அரமனையுமண்டபமுஞ் சமைந்ததாண்டே.

(இ-ள்.) பின்னர் இயற்கைமணம்வீசுகின்றமுகத்தினையுடையாளும், நாதமேதனக்குரிய ரூபமாகக்கொண்ட மரகதப்பெண்ணும்,வாலையும்,திரிபுரத்திற்கும் ஒளிகொடுப்பவளும், சிற்பரத்தியும், தற்பரத்தியும், சிறுபெண்ணாகிய ஆத்தாளும்,சுரிமுகச்சங்கேந்தினவளும்,தனபாரத்தையுடையவளும், உடுக்கைபோலும்சிற்றிடையையுடையவளும்,ரத்தினம்போலும்சோதிமயமாகியபெண்வடிவினளும் அருமையானவேதத்திற் குரியவளும், அம்பரத்தியுமாகிய என்

அம்பிகைக்கும் அரண்மனையும், மண்டபமும் உண்டாயின, இதை ஆண்டையே நீர்கேளும் எ-று. (௧௧௧)

குருவுடனேசிஷனுந்தான்வாழ்ந்தவீடு கூறுனவிந்திரியந்தரித்தவீடு, யருபியெனுநாதாக்கள்துதிக்கும்வீடு அளவற்றவைம்பூதம்வாழ்ந்தவீடு, பருவமெனும்ஞானசிவசத்திவீடு பன்னுமறைக்கெட்டாதநாதவீடு, கருவிருந்தஞானவிந்திரியவீடு கட்டிவைத்தான்திருமால்தன் கயிற்றாலாண்டே.

(இ-ள்.) ஆண்டையே! குருவுஞ்சிடனும்வாழ்ந்ததும், இந்திரியம்தரித்ததும் சொரூபமில்லாத நாதாக்கள்துதிப்பதும் அளவற்றபஞ்சபூதங்கள் வாழ்ந்ததும், சிவஞானசத்திவாழ்வதும் வேதங்களுக்கெட்டாத நாதமென்னும் பெயரினதும், ஞானேந்திரியம் குடியிருப்பதுமான ஒருவீட்டை திருமாலானவன் தன்கயிற்றால் கட்டிவைத்தான் எ-று. (௧௧௨)

அடிநடுவுமுடியுமொருவெண்சாணீளம் அங்குலமுந்தொண்ணூற்றாறுண்டேகேளீர்,கொடியமகாமேருவெனும்வளர்ந்தவீட்டில்குடில்மங்குலத்துக்கோர்கருவியாகும்,படியானபதினெட்டாங்கோட்டின்மேலும் பலபலவாய்கருவிகளுமமைத்ததாகில், முடிசிறந்தஜெகநாதரருளினாலே முடிந்ததுகாண்பெரும்பாத்தி வீடுமாண்டே.

(இ-ள்.) என் ஆண்டையேகேளீர்! அடி, நடு, முடிஉள்பட எட்டுச்சாண்நீளமும் அங்குலம் தொண்ணூற்றாறுமுள்ள கொடியமகா மேருவைப்போல் வளர்ந்தவீட்டில் ஒவ்வொரு அங்குலத்திறதும் ஒவ்வொருகருவியாகும்இப்படிவந்த பதினெட்டாவது அங்குலத்தில்பலபலகருவிகள் அமைந்ததானால்முடியிற்சிறந்த ஜெகநாதசுவாமிகளின் கிருபையால் பெரும்பாத்தியாகியமகாசத்தியின் வீடுமுடிந்ததாகும் எ-று. (௧௧௩)

சரிதையுடன்கிரிகைசிவயோகஞானந் தன்னையினிசெய்திருக்குமாத்தாள்வீடு, வரிசைதந்துவிளையாடுமாதிவீடுவளமானகருவியெல்லாம்வளர்ந்தவீடு,பெரியநாம்பெழுபத்தீராயிரத்தில் பெருநாடிபெலத்தநரம்பானதாலே, பரிபூர்ணவம்பிகைப்பெண்ணிருந்தவீடு பாகமதாயமைத்துமுடிந்தாச்சுதாண்டே.

(இ-ள்.) ஆண்டையே! சரியை, கிரியை, யோகம், ஞானம் இவைகளை ஆன்மாக்களுக்குஉண்டாக்கும் தாயின்வீடும், வரிசையாகமோட்சங்கொடுத்துக்கொண்டு விளையாடுகின்றஆயிவீடும், சர்வகருவிகளும் வளர்ந்தவீடும்,எழுபத்திராயிரநாம்புகளில் பெரியநாம்புபலமுடையதாகையால் எங்குந்நிறைந்தஅம்பிகைப் பெண்மணியானவள் வீற்றிருக்கும் வீடுகட்டிமுடிந்தது எ-று. (௧௧௪)

ஒன்றிரண்டுதிங்களினில்கருவுமூறியொருமூன்றுதிங்களினில்ரூபமாகி,கன்றுசதுரஞ்சுவிருமூன்றில்தானுங்கருத்துடனேயிடைகாசி

மார்புமாகி, என்றுரைத்தவேழுதிங்களெட்டுக்குள்ளேயெண்ணரிய நாதவிந்துவுருவேயாச்சு, அண்டபிண்டமகண்டமதாயமைத்துமேனு மலங்காரவீடாகச்சடைந்ததாண்டே

(இ-ள்.) முதல்மாத இரண்டாவதுமாதங்களில் கருவூறி மூன்றாவதுமாதத்தில் ரூபமாய் நான்காவது ஐந்தாவதுமாதங்களில் கழுத்து, இடுப்பு, நாசி, மார்பு இவைகளுண்டாய், எழாவதுஎட்டாவது மாதங்களுக்குள்சொல்லுதற்கரிய நாதவிந்துஇரண்டும் உருவமுமாச்சு, அதின்பின்னர் அண்டம், பிண்டம், அகண்டமாய் அலங்காரத்துடன் கூடியவீடுமாச்சுது எ-று. (கக௫)

ஆக்கையெனுந்தசநாடிநரம்பினாலே யடி நடுவுமுடியுமாதாரமாகி நீர்க்கமுள்ளயோனிசித்திரமதிலும் வீடுஞ்சிவமபத்தினருளாலே யமைத்தவாறு, மேற்கயினியுளுத்ததொருவுப்புப்பாண்ட மிப்படியே சடமதுவால்வீடுமாச்சு, பார்க்கவொருசிங்கார விசிதமாகும்பன்னிரண்டாங்கோட்டில்வந்துபகிர்ந்ததாண்டே.

(இ-ள்.) தசநாடிகளால் அடி, நடு, முடியும்ஆதாரமாய்நீண்டயோனியாகிய சித்திரமதிலும் சேர்ந்த ஆக்கையென்னும்வீட்டை சிவமயத்தின் திருவருளால் உண்டாக்கினவிதத்தையும் மேலேதிரைச்சீலையாக உப்புளுத்தபாண்டமுமானவீடாகிய சடமுமாச்சு இதுபார்ப்பதற்கு ஒருவிநோதமான விசிதமாகும்ஆனால்இதுபன்னிரண்டாவதுகோட்டில் வந்துபதிந்ததாகும் எ-று. (கக௬)

நாலாச்சு ஆறுக்குவீரைஞ்சாச்சு நலமான வீராறுமீரெட்டாச்சு, மேலானவிரண்டாச்சு இதுக்கப்பாலும் வெளிகடந்துவொன்றுச்சுவருவுமாச்சு, காலாச்சுகையாச்சுவயிறுமாச்சுகட்டியொருவீடாகச்சமைந்தவாறு, சிலமுள்ளசிங்காரவிசிதவீட்டில் சித்திரத்தின்பதுமையைப்போற் செனித்ததாண்டே.

(இ-ள்.) நாலிதழும், ஆறிதழும், பத்திதழும், பன்னிரண்டிதழும், பதினாறிதழும், இரண்டிதழும், அதற்குமேல் ஒருஇதழுமான உருவமாச்சு பின்னர் கால், கைகள், வயிறுஇவைகளுமாயின. இவைகளையெல்லாம் கட்டி ஒருவீடாக உண்டானவிதமும், அப்படியுண்டான சிங்காரவீட்டில் சித்திரப்பதுமையைப்போல் உண்டானதாகும் எ-று. (கக௭)

ஆறுதாரவகை இந்திரியவிவரம்-தரு.

அடையாளஞ்சொல்லுகிறேன்-ஆண்டையேகேளீர்
அடையாளஞ்சொல்லுகிறேன்.

(இ-ள்.) என் ஆண்டையே! நீர்கேட்பீராக நான் அடையாளஞ் சொல்லுகிறேன்.

பிருதிவியப்புவுந்தேய்வுடன்வாயும் பேரானவாகாசமைந்தையுங்கூட்டிக், கருத்தில்வளருஞ்சுழிமுனைவீட்டினில்கண்டுபுறமாகநின்றது

ஆன்டையே, திருவிகமலத்திதழாயிரத்தெட்டு நிர்க்குணநிர்மலநேர் மையிதாகையால், மருமலர்சூழ்திருமாலின் பதிவளர்மாமதுரக்கனி வாழ்க்கையுமிப்படி. அடை

(இ-ள்.) பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் இவ்வைந்தையுங்கூட்டிக் கருத்தின்கண்வளருகின்ற சுழிமுனையெனும்வீட்டில் கண்டு ஒருபுறமாகநின்றது, திருவிகமலம் இதழ்ஆயிரத்தெட்டும் இதுநிர்க்குணநிர்மலம தாகையால் வாசனைபொருந்திய புஷ்பங்கள்சூழ்ந்த திருமாலின்பதியில்வளர்கின்ற மகத்தாகிய மதுரக்கனியின்வாழ்க்கையும் இப்படியேயாம் எ-று. (கசஅ)

தோத்திரமாவதுவாக்குடன்சட்சுவுஞ்சிங்குவைபாக்கிராணமைந் தையுங்கூட்டி, பாத்திரமானசெவியுமுடம்புகண் பாங்கானநாக்கது மூக்குமேயாச்சுது, சத்தபரிசமும்ரூபரசகெந்தஞ் சார்வாகுமீதொருவைந்துமேயாச்சுது, சித்தமுங்கேள்விசுகதுக்க ரூபங்கள்சேர்ந்த வறுசுவைநாவதுமேருசி, அடை

(இ-ள்.) தோத்திரம், வாக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம்என்னும்இவ்வைந்தையும் கூட்டிப்பார்த்தால் தோத்திரமாவது செவியும்தொக்கு என்பது உடம்பும், சட்சுஎன்பதுகண்ணும், சிங்குவைஎன்பதுநாக்கும், ஆக்கிராணம் என்பதுமூக்கும்ஆகும் இவற்றில் காதுசத்தத்தையும், உடம்பு ஸ்பரிசத்தையும் கண்ரூபத்தையும் மூக்குவாசனையையும் அடையும் கந்தங்களாம் இவற்றுள் நாக்கு அறுசுவைகளையறியக் கூடியதாம் எ-று. (ககக)

சந்தனக்கெந்தஞ்சவ்வாதுபனிநீர்சாந்துபுனுகு களபகஸ்தூரியும், சிந்தைமகிழவேகண்டுகளிக்குஞ்செழுந்திருநாசி சுகதுக்கநித்திரை, பைந்தமிழ்வாக்குடன்பாணியும்பாயுருபாங்காயுபஸ்தமைந்தாச்சுதுபாகமாய், அந்தமுங்கால்பரபானமுந்தாரணை யைம்புலனுவதும் லிங்கமிதான்டையே அடை

(இ-ள்.) சந்தனம், சவ்வாது, பனிநீர், புநகு, கலவைச்சந்தனம் கஸ்தூரி இவைகளை மனமகிழ்ந்து பார்த்துச் சந்தோஷிக்கின்ற திருநாசிசுகம் துக்கம் நித்திரை பசியதமிழ்நூலால் சொல்லப்படுகின்ற வாக்கு, பாணி, பாயுரு உபஸ்தம் இவ்வைந்துமாயின, கடைசியாக அழகும், கால்கைகளும், அபானமும் தாரணையும், ஐம்புலன்களும் விளக்கப்பட்டன, இதுவேலிங்கமாகும் எ-று.

வசனங்கமனந்தானவிசற்கம்வாழுமேயானந்த மைந்திதுங்கூடியே, நேசமும்வார்த்தைநடக்கைக்கொடுக்கும்ரேுமலமுமாதாரமீதாச்சுது, நேசமனம்புத்தியாங்காரசித்தமு நேராயிதுநாலு நின்றுநடக்கையால், ஓசைநினைத்திடும்புத்திவிசாரிக்கு மோங்காரக்கோபமுஞ் சித்தம்பொருந்திடும். அடை

(இ-ள்.) முன்சொன்னவாக்கு, பாதம், பாணி பாயுரு, உபஸ்தம் இந்தஐந்திலும்வாக்கின்தொழில் வசனமும், பாதத்தின்தொழிற் கமனமும், பாணியின்

தொழில்தானமும், பாயுருவின்தொழில்விசர்க்கமும், உபஸ்தத்தின்தொழில் ஆநந்தமுமாகும். இவ்வைந்தின்விவரம் என்னவென்றால் வார்த்தையாடலும் நடத்தலும். கொடுத்தலும், நீரையும், மலத்தையும் வெளிப்படுத்தலும்ஆநந்தமுமாதும், அந்தக்கரணநான்கு, நேசத்தையுடையமனம், புத்தி, ஆங்காரம், சித்தம்என்பவைவாம். இந்நான்கும் வரிசையாகநடப்பதால்மனம்நினைத்திடும் புத்திவிசாரிக்கும், ஆங்காரம்கோபிக்கும் சித்தம்முடிக்கும் எ-று. (௧௨௧)

உருவமுங்கொண்டுவுலகெங்குஞ்சுற்றியுழன்றுவுழன்றுவுணர்ந்துதவிப்பதும், அறிவொன்றுழன்றுமேயாகதத்துவமுமையாறு முப்பதுமெய்யாகக்காட்டியே, கருவிலமைத்தநின்காரணசற்குருகாட்டியதத்துவக்சட்டளையின்படி, திருவுருஞான சிவசத்தியம்பிகை சின்மயசுரூபசிரோமயமாது. அடை

(இ-ள்.) உலகத்தின்கண் உருவத்தோடுபிறந்து, சுற்றித்திரிந்து தவிப்பதும், புத்திகெட்டுஉழன்று முப்பதுதத்துவத்தையுங்காட்டி இவையனைத்தும் கருவிலமைப்பென்றுகாட்டிய தத்துவக்கட்டளையின்படி ஞானரூபியாகிய சிவசத்தி அம்பிகை, சின்மயரூபி, சிரோமயமாம் இது எ-று. (௧௨௨)

விருத்தம்.

கங்கையெனுங்கதிர்மதியுந்தரித்தசோதிகனகரத்னமானுடனே மழுவுமேந்தி, பங்கையமாமறுகுதும்பைகொன்றைசூடி பதினறுகலையணிந்தமூலந்தன்னில், திங்களெனும்புவனமெல்லா நிறைந்தசோதி திரிபுரத்தைக்கனலாக வெரித்தவீசன், செங்கநதியென்றதிரு மூலந்தன்னில் செனித்தெழுந்தகருவியெல்லாஞ் செப்புவேனே.

(இ-ள்.) கங்கையும், காந்திவீசுகின்ற சந்திரனையும், தரித்திருக்கின்ற சோதிசொரூபமானவர், இரத்தினம்போலும்மானையும், மழுவையுமேந்தி அறுகு, தும்பை, கொன்றை இவைகளைச்சூடிபதினறுகலைகளையணிந்த மூலத்தில் திங்களைப்போல் புவனங்களெல்லாவற்றிலும் நிறைந்திருக்கின்ற சோதியாகிய திரிபுரசங்காரியானஈஸ்வரன் எழுந்தருளியிருக்கின்ற செங்கநதிஎன்கிற மூலத்திலிருந்து உண்டானகருவிகளையெல்லாம் சொல்லுகின்றேன் எ-று. (௧௨௩)

பூதாதியைந்துநின்றபுகழுஞ்சொன்னேன் புலனைந்தும்விபரமதாய்பொறியுஞ்சொன்னேன், சூதானகர்மவிந்திரியஞ்சொன்னேன் சுகஞானவிந்திரியமைந்துஞ்சொன்னேன், தீதானஅந்தக்கரணநாலுஞ்சொன்னேன் தெளிவானஜெககாதாருளினாலே, ஆதாரவாய்நின்ற தசவாய்வுஞ்சொன்னே னதுகடந்துவறிவதற்குவருள்செய்வேனே.

(இ-ள்.) பஞ்சபூத இலட்சணம், ஐம்புலன், ஐம்பொறி, கர்மேந்திரியம் ஐந்து. ஞானேந்திரியம் ஐந்து, அந்தக்கரணநான்கு தசவாயு இவைகளைஜெக

நாதருடைய கிருபையால் யாவருமுணரும்படி சொல்லி முடித்தேன். இனி அதைக்கடந்து உணர்வதற்கு வழிசொல்லுகின்றேன் எ-று. (௧௨௪)

உணவறிந்துநினைவறிந்துவுணர்ச்சிகண்டு உள்ளறிந்துபுறமறிந்துவிரிசைகண்டு, மனமதிறிந்துமதியினின்றுமகிழ்ச்சிபெற்று வசனமெனுங்கேள்வியதின்வாய்மைகேட்டுக், குணமறியாதாசையினலழிந்துநின்று கூர்ந்துமனமெழுந்தொருகருமஞ்செய்து, நினைவுதவருமலொன்ருய்ப் படைத்துநின்ருேன் நிகருடையதத்துவ முப்பதாஞ்சொன்னேனே

(இ-ள்.) பதார்த்தங்களின் குணங்களையறிந்து. நினைப்பையறிந்துஉணர்ச்சியைக்கண்டு உள்ளும். புறமுமறிந்துருசி, மணம் இவைகளையுமறிந்து புத்திதத்துவத்தினின்றுமிகவும் சந்தோஷித்து வசனமென்கிற கேள்வியின் உண்மையைவிசாரித்து அதின்குணங்களையறியாமல் ஆசையினலழிந்து ஓரிடத்திலிருந்து அறிவுகூர்ந்துமனமானது எழுந்து ஒருகாரியத்தைச்செய்து எண்ணந்தவருமல் ஒன்ருகப்படைத்துநின்றவன் ஒப்பான முப்பதுதத்துவங்களையுஞ்சொன்னேன் எ-று. (௧௨௫)

சொன்னவகைதொகையறிந்துசொல்பேதங்கள் சொல்லவில்லை தசநாடி தசவால்வுந்தான், இன்னமொருவகையறுபத்தாறுஞ்சொல்ல விவர்கள்நின்றநிலைசொல்லவீடுஞ்சொல்ல, வின்னம்வராதிவர்கள் செய்யுந்தொழிலுஞ்சொல்வேதாந்தமறியாதமுடிவுஞ்சொல்ல, அன்னையெனுமம்பிகைப்பெண்ணருளினலே யவதரித்தநின்றநிலையருள்செய்வோமே.

(இ-ள்.) நானேமுன்னே பலபேர்களால் சொல்லப்பட்ட வகையையும் தொகையையும் நன்ருயறிந்துசொல்வில் யாதொருவித்தியாசங்களையுஞ்சொல்லவில்லை ஆனல்தசநாடி தசவாயு இவைகள்தாம் ஒருவகையாக அறுபத்தாறு தத்துவங்களையுஞ்சொல்லவும் இவர்கள்நின்றநிலைகளாகிய வீடுகளையும், பின்னம்வாராதபடி இவர்கள்செய்யும் தொழில்களையும் வேதாந்த முடிவையுஞ் சொல்லுதற்த எமதுதாயாகிய அம்பிகைப்பெண்ணின் திருவருளினல் அவதரித்துநின்ற நிலையை அருளிச்செய்வேன் எ-று. (௧௨௬)

கொச்சகம்.

மருவுதிருப்பொற்கமலம் வல்லபைதன்வீட்டிலொரு
கருவுருவாயைம்பூதங் கலந்தேயொருபுறமாய்
அருவுருவாய்நாதவிந்து அறுகுநுனிமேற்பனிபோல்
மருவியைம்பத்தோரெழுத்தில் வந்தவகைசொல்வேனே.

(இ-ள்.) அழகுபொருந்தியபொன்போன்றதாமரை விளங்குகின்றவல்லபாதேவி எழுந்தருளியிருக்கின்றவீட்டில் ஒப்பற்றகருவுருவமாய்ஐம்பூதங்களி

லுங்கலந்த ஒருபுறமாய் அருவமாயும் உருவமாயும் நாதமாயும் விந்துவாயும் புல்நுனிமேல் பனிநீர்போல் சேர்ந்த ஐம்பத்தோரெழுத்திலும் வந்தவகையைச் சொல்லுவேன் எ-று. (௧௨௭)

தாங்கிநின்றமூலமதில் தானுமொருவீடுகட்டி
வாங்கிநின்றுவட்டமிட்டு மாறியிருகாலாக
ஓங்கிமூளைத்ததுகாணொன்றேகொழுந்தாகி
நீங்காமல்நின்றதுகா ணெல்லிக்கனியாச்சே.

(இ-ள்.) யாக்கையால் தாங்கப்பட்டிருக்கின்ற மூலாதாரத்தின்கண் ஒரு வீட்டைக்கட்டி அவ்விடத்தில்வளைந்துநின்று ஒருவட்டமிட்டு இருகாலாக மாறி உயர்ந்துமுளைத்தது, அப்படிமுளைந்த ஒன்றேகொழுந்தாகிப் பிரியாதிருந்து நெல்லிக்கனியாயிற்று எ-று. (௧௨௮)

சத்தியுதித்ததிருச் சன்னிதியின்முன்பாக
முத்திதருமெஞ்ஞான மூவரனுக்கிரகமதால்
சுத்தியொருபந்தலிட்டுச் சூழ்ந்தசவாய்வுகம்பாய்
பத்திபடர்ந்ததுகாண் பதினாலுலோகமதாய்.

(இ-ள்.) வல்லபா தேவியுதித்த திருச்சந்நிதியின் முன்பாக மோட்சங் கொடுக்கின்ற திரிமூர்த்திகளின் அநுக்கிரகத்தினால் சுற்றியொருபந்தலிட்டு அதைச்சூழ்ந்திருக்கும் பத்துவாசலுக்கப்பால் தொடர்ந்து பதினான்கு லோகமாய்ப் படர்ந்ததுகாணும் எ-று. (௧௨௯)

கலித்துறை.

மாறிக்கலைகொண்டு வப்பரவீதியின வட்டமதில்
தேறித்தெளிந்து வளைத்துக்கொண்டேன் தசவாயுவைத்தாவி
ஊறிநடக்கின்ற பானத்தின்வாசி நுனிபிறழா
ஊறிக்கருவி லுறவாகின்று வுதிக்கின்றதே.

(இ-ள்.) கலையைக்கொண்டுமாறி அம்பரவீதியின்வட்டத்தில்நின்றுஇது இப்படிப்பட்டதென்று தேறித்தெளிந்து அந்தத்தசவாயுவை வளைத்துக்கொண்டு அதையெப்படிநடக்கின்ற அபானவாயுவின் நுனிபிறழாமல் ஊறிக்கருவின்கண் உறவாயிருந்துதிக்கின்றது எ-று. (௧௩௦)

சாதியுங்கண்டு குலமேவகுத்திந்தத் தாரணியில்
வாதிகள்தள்ளி வழக்குரைப்பார்மனு நீதிகண்டு
நீதியும்வேத நிலைகண்டுரைத்த நேர்வீட்டுக்குள்ளே
சோதியைக்கண்டு வுறவாகிநின்று துலங்கினனே.

(இ-ள்.) சாதியைக்கண்டறிந்து குலத்தைவகுத்து இந்தஉலகத்தின்கண் நிவாதிகளாயுள்ளவர்கள்தள்ளி வழக்குச்சொல்லுவார்கள் மநுநீதியையும் வேதநிலையையுங்கண்டு பெரியோர்களாற் சொல்லப்பட்ட வீட்டுக்குள்ளே உண்டாயிருக்கின்ற சோதியைக்கண்டு உறவாய்நின்று விளங்கினேன் எ-று. ( )

வெண்பா.

அத்திபுரத்தி லருகிருந்தாக்கையது
சத்திசிவநாதவிந்து தான்கூடி-வித்ததுமே
மூலக்கருக்குழியில் முச்சந்திவீதிவளர்
பாலகனுயுற்பவிக்கும் பார்.

(இ-ள்.) எலும்புபுரமென்கிற இடத்திற்குச்சமீபமாயிருந்த தேகமானது சத்திசிவமாகிய நாதமும் விந்துவுங்கூடி மூலத்திலிருக்குங் கருக்குழியில் முச்சந்திவீதியிலே பாலகனைப் பிறக்கும்பார் எ-று. (௧௯௨)

குருலிங்கசங்கமது கூறுமறுகோணவரை
இருமென்றழைத்து விருந்தங்கு-உருவாகி
நின்றறுபத்தாறு நிறைந்தகருவியெல்லாம்
கொண்டமைத்த வாறதனைக் கூறு.

(இ-ள்.) குருலிங்க, சங்கமங்களால் கூறப்படும் அறுகோண வரையில் இருமென்றழைத்து அங்கேயிருந்து உருவாகிநின்ற அறுபத்தாறு கருவிகளை யெல்லாம் கொண்டு ஏற்படுத்தியவிதத்தைச் சொல்க எ-று. (௧௯௩)

ஈசனுறவாகி யெங்குஞ்செனித்திருந்த
நேசமதுசாதிலிங்க நேர்மையே-கோசமது
நாதவிந்துற்பவமே நானறிந்துஞானவெட்டி
பேதமில்லை சாதிகுலம் பேசு.

(இ-ள்.) சர்வேஸ்வரரூபமாய் எங்கும்பிறந்திருந்த நேசமானது ஒருசாதியாகிய லிங்கத்தின்குணமேயாகும். ஆனால்கோசமானது நாதவிந்துக்களின் உற்பவமேயாகும். இதைநானுணர்ந்து ஞானவெட்டிபேதமில்லாமல்சாதியையும் குலத்தையும் பேசுக எ-று. (௧௯௪)

ஆறுதாரவகை இந்திரியவிவரம்-தரு.

விபரஞ்சொல்லுகிறேன்-தசநாடி-விபரஞ்சொல்லுகிறேன்.

(இ-ள்.) விவரஞ்சொல்லுகிறேன் பத்துநாடிகளின் விவரத்தையுஞ் சொல்லுகிறேன்.

விபரஞ்சொல்லுதுமிடைபின்கலைசுழிமேவுமத்திச் சிங்குபுருஷன் காந்தாரியும், அலம்புருடன் குருதன்சங்குனியு மாகத்தசநாடியை பிரண்டாண்டையே, இபரம்பெருவிரல்மேலுமிடைகலை யின்பம்வல்துபெருவிரல்பின்கலை, சுபரஞ்சுடரொளிமேலுமோங்காரமாய்சுற்றியேநிற்குஞ் சுழிமுனையாண்டையே. விபரஞ்

(இ-ள்.) விவரமாவது என்னவென்றால் இடைகலை, பிங்கலை, சுழிமுனை அத்தி, சிங்கு, புருஷன், காந்தாரி, அலம்புருடன், குருதன், சங்குனி, ஆகத்

நசநாடிபத்தும் இவைகளாம், இவற்றுள் இடைகலையானது இடதுபெருவி
ரல்மேலும், பின்கலையானது வலதுபெருவிரலிலும் சுழிமுனைசுத்தமாகிய
பரஞ்சுடரொளிமேலும் ஓம்காரமாய்ச் சுற்றியேநிற்கும், இவறறையறிவாய்
ஆண்டையே எ-று. (க௫௬)

மூலச்சுழிதனிலேமுளைத்தாக்கையு மீறியேபெருநாடியுயர்ந்து
டன், மேலைச்சிரமகமேருமுடிவளர் விற்பனமுங்கருவுற்பனஞ்சொல்
வேனன்,கால்கொண்டுநாழிகலைகொண்டுவாய்வதுங்காரணமாகவே
கண்டமதாய்வளர்,வேல்கொண்டுமேகுழல்கொண்டுடன்மூலமேவித்
தாய்முளைத்தொரு பத்திதுநாடிகாண். விபரஞ்

(இ-ள்.) மூலாதாரத்திற்பாயுஞ்சுழியில் இத்தேகமானது உதித்து பெரு
நாடியானது உயர்ந்து மேலேமகமேருவென்னும் உச்சியில்வளர்கின்றவிற்பன
மும்கருவுற்பத்தியும் நான்சொல்லுவேன் காற்றைக்கொண்டு நாழி கலைகொ
ண்டு வாயுவுகாரணமாகவுங் கண்டமாகவும் வளர்கின்றவேல்கொண்டு குழல்
கொண்டு மூலாதாரமேவித்தாக ஒருபத்துநாடிகளும் உண்டாயின எ-று. ()

கண்டமதுநரம்பானகுழைதனில் காந்தாரிநின்றுகலந்து நீர்
பாய்ந்திடில்,அண்டமதிலத்திசிங்குவைத்தானு மவற்றையுநாலுமறி
விப்பதாகுமே, நின்றிடுஞ்சிங்குவையப்பதுவின்மயம் நின்றநிறமது
வுப்பதுவேசலம், விண்டலம்புருடனிருமண்ணளவு மேவுங்காந்தாரி
யிங்காதளவாண்டையே. விபரஞ்

(இ-ள்.) காந்தாரியானது கண்டத்தினின்று கலந்துநீர்பாய்ந்திடும் அத்
தியும், சிங்குவையும் அவசதைநாலையும் அறிவிப்பதாகும்.இவற்றுள்சிங்குவை
அப்புவின்மயமாம் நின்றநிறமும் சலநிறமேலாகும், சொல்லப்பட்டஅலம்புரு
டன் இரண்டுகண்களிலும் பொருந்தும் காந்தாரி காதளவாய்நிற்கும் ஆண்
டையே எ-று. (க௫௭)

அத்தியுநின்றதுவலபாரிசமானதளவாயமைத்தளவாய்பிர்ம,
வித்தையுமாருயிரைம்புலனுதிகள் வேதங்களோதுமேலுந்தாள்வாயி
னி, சுத்திநிற்குஞ்சுகாதிதசங்குனி சுந்தரலிங்கஞ்சுகந்ததாள்பாரிசம்
நித்தமேவுங்குருதனுமானந்தம் சேருந்தாள்வாயுமே நின்றிடுமாண்
டையே. விபரஞ்

(இ-ள்.) அத்தியானது வலபாரிசத்தினின்று பின்வேண்டிய அளவாய
மைத்து பிர்மவித்தையைப்போல் உயிரையும் புலன்களையுமியக்கும், சங்குனி
யானதுதான் பக்கத்திலிருந்து அழகியலிங்கச் சார்பாகநிற்கும். குருஆநந்தத்
தை விளைவிக்கும் எ-று. (க௫௮)

நாடியீரஞ்சுநரம்புகள்கூடியே நல்கிநடப்பதுநட்புகள் கண்டி
டில், நீடியுலாவுமசையுந்தடுக்குமிரந்தந்தாதுசதந்தரநாடியே, நாடிய
சையுமடக்குமுடக்கு நடந்துமேயோடிநகர்ந்துபிரண்டு, மோடிகூடி
யிழுக்குநரம்புநேண்டேறிமாறிபடுக்கும்பாராண்டையே, விபரஞ்

(இ-ள்.) நாடியாவதென்னவென்ருல் பத்துநரம்புகளும் ஒன்ருய்க்கூடி யாக்கையைப் பலப்படுத்தி நடத்துவதாகும், அதின்குணங்களைக் கண்டால் நீண்டுவுலாவும், அசையும், தடுக்கும், எப்பொழுது ம்சொந்தமாய் நரம்பானது அசையும், மடக்கும், நடந்தோடிநகர்ந்து புரண்டோடி ஒன்ருகச் சேர்ந்து இழுக்கும் இச்செய்கைகளையன்றி நரம்புகள்நீண்டு மாறிமாறி எதிப்படுக்கும் பார் ஆண்டையே எ-று. (௧௩௯)

வாய்வுதசபத்தின்வாறும்மறிந்திடில்வளமையாம் பிராணனபானன்வியானனும், சேயுமுதானன்சமானன்கூர்மகனுகன் திரிகரனுகியசித்திரநாடிதான், ஆயுநாடிநரம்பதுவுந்தனஞ்செய னருள்தரும் வேதத்துனீரைஞ்சு, பாயுந்தசவாய்வுபத்துடனுனதும் பார்க்கப்பார்க்கப்பரிட்சைகளாயிடும். விபரஞ்

(இ-ள்.) பத்துவாயுக்களின் விவரத்தைச்சொன்னல் வளப்பம் பொருந்தியபிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், கூர்மன், நாகன் திரிகரன், தனஞ்சயன் தேவதத்தன் ஆகியபத்துவாயுவுக்களும் அவைகளின் செய்கைகளைப் பார்க்கப்பார்க்கப் பரீட்சைகளாமே எ-று. (௧௪௦)

பிராணன்மூலந்தனில் மேல்தொடர்ந்தோங்கியேபின்னும்பனிரெண்டு வங்குலமோடிடில், அறிவதுநான்குபண்டடங்கிநாலோடும் அபானன்மலசலமறிந்துபோக்கிடும், பிரியும்வியானனுமுண்டசாரந்தனைப் பிரித்தெழுந்தெழுபத்தீராயிரநாடிக்கும், தரியுமுதானன்செரிப்பித்தேப்பமிடச்சமானன் சரியாகத்தானிறுக்கும்வாறு. விபரஞ்

(இ-ள்.) பிராணவாயுவானது மூலத்தின்மேல்தொடர்ந்தோங்கிப் பன்னிரண்டு அங்குலம்வெளிப்பாயும் இப்பன்னிரண்டங்குலத்தில்எட்டங்குலம்நின்றும் நான்கங்குலம் வெளியிலுமோடும் அபானன் மலசலத்தை யறிந்துபோக்கும். வியானன் உண்டசாரத்தைப்பிரித்தெழுப்பிஎழுபத்திராயிரநாடிக்குமூட்டும் உதானன் அவைகளைச்செரிப்பிக்கும், சமானன் அவைகளைசரிப்படுத்தும்

நாகன்களைவிக்கல்சோம்பலுண்டாக்கிடில்நற்கண்ணிலேநின்று கூர்மனிவமத்திடில் ,தேகத்திரகரஞ்சோபமுண்டாக்கிடில்தேவதத்தனுங்கெட்டாவிநசைத்திடில், வாகச்சிரித்திடில்தனஞ்செய னுச்சிவாழ்வதுமேலெனுந்தொடங்கியாத்துமம், ஆடமடங்கியப்போதினிலண்டமதுபிளந்தாக்கினையப்பாலோடிடுங்காண். விபரஞ்

(இ-ள்.) நாகன்விக்கல்சோம்பல் இவைகளையுண்டாக்குவன்கூர்மன்கண்ணினின்று இமைக்கச்செய்குவன், கிரிகரன் சோபமுண்டாக்குவன் தேவதத்தன் கொட்டாவிசிரிப்புமுதலியவையுண்டாக்குவன், தனஞ்சயன்உச்சி வாழ்ந்து ஆத்துமம்அடங்கினபின் சிரசின்வழியாகப் போகுங் குணமுடையதாம்.

இந்தவிதமறிந்தெவ்வுயிர்க்குமீசனெறும்புமேகடையானைமுதற்கொண்டு, சிந்தைசெய்யாமல்வெவ்வேறதின்கூறதாய், செந்துக்கழுற்

பனவிந்தையிதாண்டையே, சுந்தரலிங்கஞ்சுகாதிதமந்திரஞ் சுக்குல விந்துசிரசண்டமாயிடில், அந்தரகங்கைச்சடைமுடியீசனமர்ந்திடுங் கோசமரன்கொலுவாண்டையே விபரஞ்

(இ-ள்.) இந்தவகையை ஈஸ்வரனறிந்து எறும்புமுதல் யானைவரைக்குமுள்ள பலஜெந்துக்களுக்கும் பலவேறுவமைபாக வுற்பவித்தி யிருக்கின்றனன் அழகியலிங்கமுஞ் சுகாதிதமந்திரமும் சுக்கிலமாகிய விந்துவும் சிரசண்டமானால் அந்தரகங்கையைச் சடாபாரத்திற் கொண்டிருந்த ஈஸ்வரன் கோசமே சிவபெருமானுடைய கொலுவிடமாட எ-று. (கசக)

## விருத்தம்.

இடைகலையும் பின்கலையுமிரண்டுகூடி யிருகாலில்பெருவிரலில் மேலேநின்று, நடுவிலொருகத்திரிக்கோல்மாறலாகிநாசிமுனைமுட்டி நிற்குநயந்துபார்க்க, திடமுடையசுழிபின்முனைமூலநோக்கிச்சிரசளவுமாதாரமாகிநிற்கும், அடைவானசிங்குவைத்தாலுவுக்குள்ளேயன்னமுடன் தண்ணீருமமைத்ததாண்டே.

(இ-ள்.) இடைகலையும், பின்கலையுமாகிய இரண்டுங்கூடி யிருகால்களின் பெருவிரலின்மேல்நின்று நடுவேஒரு கத்தரிக்கோலபோல்மாறி நாசிமுனையைமுட்டிநிற்கும் அதைவிரும்பிப்பார்த்தால் வலிவுபொருந்தியசுழிமுனையின் முனைமூலத்தைநோக்கிச் சிரசளவும் ஆதாரமாய்நிற்கும், சிங்குவையோ நாக்குக்குள் அன்னத்தையும் தண்ணீரையும் அமைத்ததாகும் எ-று. (கசச)

வட்டமிட்டபுவியதனில்குருநனிற்கும்வலதுதாள் காந்தாரிவாக்கில்நிற்கும், இஷ்டவலம்புருடனிடதாளவாய்நிற்கு மிருந்திடுஞ்சங்குனியும்லிங்கத்தாள்வாய்நிற்கும்,சட்டமுடன்குருசனிற்கும்பானன்தாள்வாய்சார்வாகுந்தசநாடிசமைந்தநேர்மை, அஷ்டதிசைபுகழுமுடலுயிருமாக ஆதாரவாயாவிநின்றதருள்செய்வேனே.

(இ-ள்.) வட்டமிட்டபுவியில் குருநிற்கும் காந்தாரி வலதுதாள் வாக்கில் நிற்கும், அலம்புருடன் இடதுதாள்வாயில்நிற்கும் சங்குனியும்லிங்கத்தாள்வாயில்நிற்தும். குருஅபானன் தாள்வாயினிற்கும், இப்படியேதசநாடி நின்றவிதமும் எட்டுத்திசையோர்களாலும் புகழப்படுகின்ற உடலுமுயிருமாக ஆதாரவாய் நின்றநிலையை அருள்செய்வேன் எ-று. (கசங)

பேரானபிராணன்பெருமூலந்தன்னில் பிலத்தவீராறங்குலத்தில்பீடவாங்கி, நேரானகண்டமதிலெட்டெட்டாகி நிலைபிசகாநாலுமதுவெளியிலோடும், சீரானவபானனுந்திக்கமலத்தின்கீழ் திறமாகமலசலத்தைக்கழித்துநிற்கும், ஈருனவியானனுண்டவன்னந்தண்ணீரெழுபத்தீராயிர நாடியிலுஞ்சென்றே,

(இ-ள்.) பேர்பெற்றபிராணவாயுவானது பெரியமூலாதாரத்தில்வலிவுள்ள பன்னிரண்டங்குலம் வெளியேவாங்கி கோர்த்தகண்டத்தில்எட்டாகி, மற்ற

காலும்வெளியிலோடும், சிறப்புப்பெற்ற அபானன்உந்திக்கமலத்தின்கீழ்நின்று
மலசலத்தைக்கழித்துக்கொண்டுவரும் கடைசியாசவியானன்உண்ட அன்னத்
தையும்குடித்தசலத்தையும் எழுபத்திராயிரநாடியிலுஞ்செலுத்துவிக்கும்எ-று.

நின்றிலங்குநாடியதுபிறித்துவைக்கும் நிகழ்ந்திடுமுதானன்செ
ரிப்பித்தேகிற்கும், ஒன்றிலங்குஞ்சமானனுண்டவன்னந்தண்ணீரொ
ருவருக்குமேறவொட்டாதிருக்குமாகில், தன்றிலங்குநாகனுமேவிக்
கல்கக்கல் தனைமிகுத்தங்கூர்மனிருவிழிநீர்பாச்சல், அன்றிவிழிசிமி
ட்டிவைக்குந்திரிகரன்றா னயாசம்சோம்பல்தும்பலசதியாமே.

(இ-ள்.) உதானன்தின்ற உண்டியைச்செரிப்பிக்கும், சமானன் உணவா
திகளை அளவுப்படி சரிப்படுசதும் நாகன் விக்கல், கக்கல்பண்ணுவிக்கும், கூர்
மன் இருவிழிகளினின்றும் நீர்பாய்ச்சுதலும், விழிசிமிட்டுதலும்பண்ணுவிக்கும்
திரிகரன் ஆயாசம், சோப்பல், தும்மல், அசதி, இவைகளையுண்டாக்கும்எ-று.

வசதிநகைத்திடுவனெனும்வழலையாவன் வதைத்திடுவன்தனஞ்
செயனுமுச்சியேறி, நிசதிநின்றுமேலாகத்துடிக்கச்செய்வன்நிரந்தர
மாயாதாரமேலாய்நின்பன், நிசதியினல்சரீரத்தில்வாய்வுக்கெல்லாம்
நிஷ்களமாயதிகாயநிலைத்ததாண்டே, இசைத்ததிருமூலனு ருரைத்த
வண்ணமினியதொருஞானவெட்டியியம்பினனே.

(இ-ள்.) தனஞ்சயனனவன் உச்சியிலேறிவதைத்திடுவான், துடிக்கச்செ
ய்வான் எப்பொழுதும் ஆதாரங்களுக்குமேலாகவே நிற்பான், சரீரத்திலுள்ள
வாயுவுக்கெல்லாம் அதிகாரியாய் நிலைத்திருப்பான் ஆண்டையே நீகேளும்
ஆயின் ஞானவெட்டியாகிய நான் திருமூலர்சொன்னபடியே சொன்னேன்.

நிரந்தரமாய்மூலமென்றபாண்டந்தன்னை நீடுவகினடத்திவைத்
துமோசஞ்செய்தல், தரந்தரமாய்கருவியெல்லாமாண்டபின்புதனஞ்
செயனுமகண்டவெளிசார்ந்துயேகி, அறுந்துதசநாடியெல்லா மசை
வெல்லாம்போயாதாரமாறுமகன்றசைவுமற்று, சிறந்தவுடலுயிக் கூ
றிசெயலுஞ்சொன்னேன்தெரிசனமுங்கண்டுதிருவுருசொன்னேனே

(இ-ள்.) எப்பொழுதும் மூலாதாரமென்கிறபாத்திரத்தை நீண்டஉலகத்
தின்கண் நடத்திவைத்துப்பின் மோசஞ்செய்தல் ஆகியகாரியத்தால் கருவிக
ளெல்லாம் ஒடுங்கியபிறகு தனஞ்சயனனவன் அகண்டவெளின் சேர்ந்து தச
நாடிகளெல்லாமறுந்து, அப்படியறுந்ததினல் எந்தஅசைவுமில்லாமல்ஆறுதா
ரமும்போய் அதின் அசைவுமற்று சிறப்புப்பொருந்திய உடலுயிர்க்கூறுஞ்சிற
ப்புஞ்சொன்னேன் தெரிசனமுங்கண்டு திருவுருசொன்னேன் எ-று. (கசகூ)

திருவுருதன்மலர்தரித்தபரனைப்போற்றிச்செப்புகிறேன்குறை
க்கருவிதெளிந்துதானும், மருவுமதிமலர்க்கமலவிதழின்மேவும்மதா
சர்வாணியருள்மகிழ்ந்துவென்னை, அருவுருவாய்கருவிகாணுதியெல்

லாமடிபிசகா நடுவணையுமுடியுஞ்சொன்னாள், குருவருளாலம்பிகை ப்பெண்கமலம்போற்றி கூறுகிறேனுடலெடுத்தவரலாறுண்டே.

(இ-ள்.) நிதமும் திருமேனியின்கண் அழகியமலரைத்தரித்தபராபரனை நமஸ்காரஞ்செய்து மற்றைபகருவிகளையுணர்ந்து சொல்லுகிறேன். பொருந்திய தாமரைமலரில்வசிக்கின்ற சர்வாணிகிருபையோடு என்னைமகிழ்ந்து எனக்கு அருவுருவாய்நின்று கருவிகரணாதிகளை யெல்லாம் யாதொரு தப்பிதமுமில்லாவண்ணம் நடு. முடி ஆதியைச்சொன்னாள். ஆகையால் என்னுடைய குருவருளைக்கொண்டு அம்பிகையின்தாமரையைப்போற்றிஇந்தஉடலெடுத்த விதத்தைச் சொல்லுகிறேன் எ-று. (க௫௦)

கொச்சகம்.

வாரானகொங்கைமட மாதுகருக்குழியில்
பாராமல்வந்துதித்து பரதவித்துநின்றேன்காண்
ஊராங்கருவூரை யுற்றதுணையென்றுநம்பி
மாராட்டத்துள்ளேயான் வந்துசமைந்தேனே.

(இ-ள்.) கச்சிறுக்கிய தனபாரத்தையுடைய ஒருபெண்ணின்கருவில்யாதொன்றையுங் கவனியாமல் வந்துதித்து பரதவித்துநின்றேன், ஏனென்றால் கருவூரையே மிகுந்ததுணையென்றுநம்பி அந்தப் புத்திமாறுட்டத்துள் நான் வந்துதித்தேன் எ-று. (க௫௧)

பாராமலேயெழுந்து பத்தியருள்சித்திபெற
நீர்மேற்குமிழியென்று நினைவிலறியாமல்
சீர்மேலெழுந்தசிவ நாதவிந்துதன்னருளால்
ஊர்மேல்வளர்ந்துமன துள்ளமதிகெட்டேனே.

(இ-ள்.) ஒன்றையுங் கவனிக்காமலே யெழுந்து பத்துபால் திருவருசித்தியையடைய இந்தத்தேகத்தை நீர்மேற்குமிழிபோன்றதென்று நினைவிலறியாமல் சிறப்பாகவெழுந்த சிவசொரூபமான நாதவிந்துக்களின் திருவருளால் இவ்வுலகத்தின்கண்வளர்ந்து மனந்தடுமாறினேன் எ-று. (க௫௨)

காயாபுரிநகரிற் கனககிரிமேவிவளர்
மாயாப்பிறவியெனு மகிழ்ந்திருப்பதெக்காலம்
தாயாய்முலைகொடுத்துச் சார்ந்தென்னையீன்றகுரு
தேயாவணிவிளக்கே செம்பொனருளம்பிகையே.

(இ-ள்.) காயாபுரிஎன்கிற ஊரிலுள்ளகனககிரியில்பொருந்திவளர்கின்ற ஒழியாதசென்மத்தை மகிழ்ந்திருப்பது எக்காலம்? எனக்குத்தாயாய்ப் பால்கொடுத்துவளர்த்த என்னைப்பெற்றகுருவே!தேயாமணிவிளக்கே!செம்பொன்போலும் திருவருள்சுரக்கின்ற அம்பிகையே! எ-று. (க௫௩

அம்பிகைபெண்செம்பொன்மணி யமிர்தாசபானமருள்
நம்பிதிருவம்பரமே நாடிநடனம்புரிவாய்

உம்பாருள்நாதவிந்துவேசர்கருவியென்றறிவால்
கும்பமுனியானுரைத்தகொஞ்சும்ரத்னமாமதியே.

(இ-ள்.) அம்பிகைப்பெண்ணாகிய செவந்த மாணிக்கம்போலும் அமிர்தரசபானத்தையருள் செய்கின்றநம்பியார் எழுந்தருளியிருக்கின்ற திருவம்பரத்தைவிரும்பி நடனஞ்செய்குவாய், மேன்மைமிக்கதும் அரியதுமான நாதமும் விந்துவும் ஒருகருவியாகும், ஆகையால்ஒன்றின் அறிவினால் கும்பமுனியாலுரைக்கப்பட்ட கொஞ்சும்ரத்நமாமதியே எ-று. (௧௫௪)

ஆதியந்தநிர்க்குணமே யண்டபிண்டமேவுதிருச்
சோதிநடனம்புரியுஞ் சுழிவீட்டுவாசலிலே
நீதிக்கருவூர் நிலையாய்க்குடியிருந்து
சாதிகுலமெல்லாந் தவிர்ந்துசதுர்மேல்வளர்ந்தே.

(இ-ள்.) ஆதியும், அந்தமும், நிர்க்குணமுமானபொருளே அண்டபிண்டங்கள்பொருந்திய திருச்சோதிநடனம்புரியுஞ் சுழிமுனைவாசலில்நீதிபுரியும் கருவூரிலே என்றும்நிலைத்துக் குடியிருந்து சாதிகுலம் எல்லாந்தவிர்ந்து சதுரகமேலேவளர்ந்து எ-று. (௧௫௫)

வெண்பா.

தூராதகும்பிதனில் துலையாதபாண்டமதில்
வீராகவீற்றிருந்தேன் மேல்வீட்டில்-நேராக
சண்டனணுகாமல் சதுஷ்கமலசந்நிதியில்
அன்றுதித்துவந்தேன்கா ணண்டே.

(இ-ள்.) அடைபடாதகும்பியும், ஒழியாதபாண்டமுமாகிய வீட்டில் மிகவும் வெற்றியாக மேல்வீட்டில் வீற்றிருந்தேன். நேராக எமன்வந்து சேராவண்ணம் நாவிதழ்த்தாமரைமலருஞ் சந்நிதியில்அன்று உதித்துவந்தேன் எ-று.

பசுபாசயோனிதனில் பாராமலேயமுந்தி
விசுவாசபாதகராய் விரகழிந்து-நிசுவாச
நதியிற்கரையோர நவசித்திரமண்டபத்தில்
விதியேகெதியெனவே விந்து.

(இ-ள்.) பாசத்தையுடைய பசுவின்யோனியில் யாதொன்றையுங்கவனிக்காமலேயழுந்தி விசுவாசக்காட்டுகின்றபாதகராயிருந்து விரகழிந்து நிசுவாச நதியின்கரையோரத்தி லிருக்கின்ற நவசித்திரமண்டபத்தில் விதியினாலுண்டான விந்துவே கதியென்று எ-று. (௧௫௭)

விந்துவழியறிய மேதினியில்யானுதித்து
வந்தவழிகண்டறியா மையல்கொண்டு-தையலுடன்
விரகமதுசுகமே யின்பமதுவேகடலில்
அவாமதுவாய்வினையென் றறி.

(இ-ள்.) நான் விந்துவின்வழியை யறியும்பொருட்டு உலகத்தின்கண் வந்துதோன்றி வந்தவழியைக்கண்டறியாமல் மயக்கங்கொண்டு பெண்களுடன்கூடிடும்விரகமே அசமென்று அதில்வீழ்தல் பாம்பிற்வாயிற்சிக்கும் வினையென்றறியக்கடவை எ-று. (கரு அ)

கலித்துறை.

சுருதிமுடித்த திரிகோணவட்டச் சுழிமுனையில்
இருந்துவளர்ந்து கருவுருவாகி யினிதசையான்
கருதிவிளங்கு மதிமலர்வாசங் கனகிரிமேல்
சதுஷ்கோணவீட்டிலிருந்து மெய்ஞ்ஞானத் தலமறிந்தே.

(இ-ள்.) வேதத்தில் முடிவாகச்சொல்லப்பட்ட முக்கோண வட்டமாகிய சழிமுனையில் இருந்து வளர்ந்து கருவுருவாகி ஆனிதாகக்கருதி விளங்குகின்ற கனகிரிமேல் நாற்கோணவீட்டிலிருந்து உண்மைஞானத்தலத்தை யுணர்ந்து.

மடலோலைகொண்டு வெழுதாதசோதி வடிவதனைச்
சடமேவுகின்ற வகையுரைத்தேன்சர்வ காலமெல்லாம்
உடல்மேவுகின்ற கருவூரதுதனி லுள்ளதெல்லாம்
திடமாகயானுஞ் சபைமேவிநின்று தெளிவிப்பனே.

(இ-ள்.) ஓலைகொண்டு இப்படிப்பட்டதென்று எழுதவொண்ணாத தேஜோவடிவினை தேகத்தின்கண் அடைகின்ற விதத்தைச்சொன்னேன் எக்காலத்திலும் தேகத்திலிருக்கின்ற கருவூரில் உள்ளவற்றை யெல்லாத் திடமாகயானும் சபையிலேவந்துநின்று தெரிவிப்பேன் எ-று. (கசு0)

வசையமுறை- தரு.

வசையஞ்சொல்லுகிறேன்-ஆண்டைகேளீர்
வசையஞ்சொல்லுகிறேன்.

(இ-ள்.) என் ஆண்டையே! நீர்கேளீர், நான்வசயஞ்சொல்லுகிறேன்.

வசையமினிஐந்தும்வசனிப்பதாகவும் வகுக்கமாவாசையம்பருவசையமும்ரெண்டு சுசையமலவசையஞ்சலவசையமும் ரெண்டுசுக்கிலவசையமுட னைந்துங்காணுண்டைய, அசைதலைந்துகுணமுமறிய வசையமதினுக்கையரட்சித்தருளுமாண்டேயுனதுபதம், நிசைதலம்பிசைமாது நிலைத்தபடியுரைக்கும்நெறியைத் திருவள்ளுவன்நிகழ்த்தஞானவெட்டியான். வசை

(இ-ள்.) இனி ஐந்து வசயத்தையுஞ் சொல்லும்போது மாவசையம் பருவசையம் மலவசையம், சலவசையம், சுக்கிலவசையம் என்றுஐந்தாகும், இவற்றின்குணம் தேகத்தைப்போஷித்து வளர்த்தலாகும், இதுவும் அம்பிகைப்பெண்சொன்னபடியே யாகும் எ-று. (கசுக)

அன்னந்தண்ணீரிருக்குமிடமுமமாவாசையமதனை யினிபிரிக்குமிடமும்பருவசைய,முன்னுமலமுஞ்சேருமிடமுமலவசையமூறியேர்

ரதுசேருமிடமுஞ்சலவசையம், சொன்னபதிக்கெட்டாத சிவமூல
நாதவிந்துசுக்கில வசையமென்றுசொல்வேனாகமப்படி, தன்னைத்த
னையறிதல்தலமுமறிதலுமே சங்கையாவதுஞான தத்துவக்கட்டளை
யாண்டே. வசை

(இ-ள்.) சோறுஞ்சலமு மிருக்கிற விடம்மாலவசையமும், அவைகளைப்பிரி
க்குமிடம் பருவசையமும், மலஞ்சேருமிடம் மலவசையமும், நீர்சேருமிடம்
சலவசையமும் விந்துசேருமிடம் சுக்கிலவசையமும் என்று ஆகமப்படிசொல்
லுவேன். ஆகையால் தன்னையறிவதும், தலமறிவதும், சங்கையாவதும்,ஞான
தத்துவக்கட்டளையுமாகும் எ-று. (௧௯௨)

கோசமயமுமைந்துங் குறியறிதலும்பேத குணமாமன்னமயத்
தால்பிராணமயமிரண்டு, வாசமுமன்னந்தனிலும்பிராணமயமுந்தோ
ன்றுமன்னமயத்தில் பிராணமனோமயங்களுந்தோன்றும், நிசமாம
னோமயத்தில்விக்கியானமயமுந்தோன்றும், நிருவிக்கியானமயத்தி
லானந்தமயமுந்தோன்றும், இசைவாமெண்சாணுடலி லெழுபத்தி
ராயிரமுமிருந்துகாத்துரட்சித்து இருவினைகளுஞ்சூழ. வசை

(இ-ள்.) கோசமயமூர், ஐந்தின்குறிப்பையறிவதும் பேதகுணமாம்,அன்
னமயத்தால்பிராணமயம் இரண்டும் வாசமாம், அன்னமயத்தில் பிராணமயந்
தோன்றும், அதிலேயே பிராணமனோமயங்களுந்தோன்றும், மனோமயத்தில்
விக்கியானமயந்தோன்றும், நிர்விக்கியானமயத்தில் ஆநந்தமயந் தோன்றும்.
இப்படியாவற்றிற்கும் இசைவாகிய இந்தஎண்சாணுடலில் எழுபத்திராயிர நர
ம்புகளுஞ்சேர்ந்து காத்துரட்சிக்கும் இருவினைகளுஞ்சூழ எ-று. (௧௯௩)

மூலாதாரத்தில்சுவாதிஷ்டானமுமறிதல் மூலமுமணிபூரகமனாக
தம்விசுத்திகாணுமேலாமக்கினையுமாதாரமுமாறுவிதமாய்விசிதமிது
வறிய விதியைவெல்லலாமோசொல், மூலமெனுங்குய்யத்துநடுவேசு
வாதிஷ்டான முதலானதுவேலிலங்குஞ் சிவமேஞானப்பிரகாசம்நா
லுமணிபூரகம் நாபிக்கமலமதுநாடியவனாசதமு மிருதையமென்றி
துகாணும். வசை

(இ-ள்.) மூலாதாரத்தில் சுவாதிஷ்டானத்தையறிவதும் மூலம், மணிபூ
ரகம் அனாகதம் விசுத்திமேலாகிய ஆக்கினைஆக ஆறுவிதஆதாரமாயினஇவை
களையறிந்து கொண்டதினால் விதியைவெல்லலாமோ? மூலமெனறுசொல்ல
ப்படும் ஸ்தானத்துநடுவே சுவாதிஷ்டானமுதலானதாம், லிங்கஞ் சிவஞானப்
பிரகாசமாகும், மணிபூரகமானது நாபிக்கலத்திலுள்ளதாம்,நாடப்பட்ட அநா
கதமோ இருதயமென்கிற இடத்திலுள்ளதாம் எ-று. (௧௯௪)

நின்றதிதுவிசுத்திக்கண்டந்தனில்நினைக்கும் நேராவாக்கினையின்
மேல் மதியச்சண்டறியலாம, மண்டலமூன்றுமறிதல் வன்னியெனு

மக்கினிமகிழ மண்டலமிதுவகையறிவதுநல்லோர், அண்டர்கள்மு
னிவர்போற்று மாதித்தமண்டலமெய்தல் அதினுடுத்திடுஞ்சந்திரவ
கண்டமண்டலஞ்சூழும், கண்டமெப்படியண்ட மண்டலமறிந்தெந்
தன்கருத்தில்நினைத்தபடி கருவிதொண்ணூற்றாறும். வசை

(இ-ள்.) விசுத்தியானது கண்டஸ்தானத்திலாடும் ஆக்கினையின்மேல்சந்திரமண்டலங்கண்டறியலாம் இப்படிமண்டலமூன்றையும் அறிவது எப்படியென்றால், வன்னியென்றுசொல்லப்பட்ட அக்கினிமண்டலமானதும் சூரியமண்டலத்தையடைவதும் அதிலிருந்துபிறந்தபெரியசந்திரமண்டலஞ்சூழும் கண்டம் எப்படியோ அப்படியே ஆகாயமண்டலத்தையுமறிந்து எம்முடைய மனத்தில் நினைத்தவண்ணம் தொண்ணூற்றாறு கருவிகளும் எ-று. (௧௬௫)

அக்கினிமூலந்தொடங்கி நாபிக்கமலவிதழளவாகியே யுதித்து
ஆதித்தமண்டலமீறி, திக்கில்திக்கிலினிய நாபிக்கமலமெய்தல்திசை
களெட்டதற்குந் தொட்டளவிற்றெளிந்திலகும், தக்கபுகழுஞ்சந்திர
மண்டலமிருதயத்தில்சார்ந்துசார்வாய் தொடங்கிசடைமுடியடிநடு,
விக்கிரமகதிர்மதிசூழக்கினிமண்டலமூன்றும் விளங்குமதுரத்தமிழ
மிர்தசிந்துரத்தினம். வசை

(இ-ள்.) அக்கினியையுடைய மூலாதாரந்தொடங்கிநாபிக்கமலவிதழ்மட்டும் உதித்திருக்கின்ற ஆதித்தமண்டலத்தைத்தாண்டி திசைகளிலிருக்கின்ற நாபிக்கமலத்தையடைவதும், திசைகள்எட்டின் அளவிற்கும் விளங்குகின்ற சந்திரமண்டலமானது இருதயத்திலிருந்து வளர்வதாகும், இப்படிசொல்லப்பட்ட அக்கினி, சூரியன், சந்திரன் என்கிறமூன்று மண்டலங்களும் விளங்கும் எப்படியென்றால் சமுத்திரத்திலுண்டான இரத்தினம்போலும் எ-று.

மும்மலமூன்றுமுதிக்கு முன்னமேமுறைமையறி முனையுமாண
வமாய்கை மோகமதாகியகாமியம, நிர்மலசொரூபநிலைநினைவுமுக்கு
ணஞ்சொன்னேன்நெறியைசொல்லவுஞானநேசமே யறியலார்காண்
அம்மெனுநானென்றுநாவை ஆணவங்காத்திடினுமேயபசயமேதன
க்குயாவரறியாக்கோபம், தம்முயிர்போந்தனைக்கொன்று தனையறி
யாமல்நிற்குந் தன்புத்தித்தானறிந்தாலுந்தானொருவரைக்கேட்கும்.

(இ-ள்.) ஆணவம், காமியம், மாயைஎன்கிறமூன்றுமலங்களும் பிறப்பதற்குமுன்னமேமுளையும் ஆணவம், ஆகையால் அதிலுண்டான முக்குணங்களையுஞ்சொன்னேன், அதின்நெறியைச்சொல்லவென்றால்ஞானநேசமேயறியவில்லையாகையால் அனசொல்லலாகாது ஆணவமானது நானென்று சொல்லும்படி நாவைக்காத்துக்கொண்டிருப்பதனால் அதற்குயாவரும் அறியாக்கோபமும் தன்னுயிர்மாற்றிக் கொல்லுதலாகிய காரியத்தைச்செய்யும் சித்தமோ என்றால் தானறிந்ததை மற்றொருவரைக்கொண்டு விசாரிக்கும் எ-று. (௧௬௭)

நம்பிமனதுவேறாய்காமியந்தனைக்கொண்டுநானுலங்கண்டதுக்
செல்லா நானென்றுமாசைப்படுதல்,வம்புமிகவுஞ்செய்தல்மாதர்மங்

னையர்மேலு மயல்கொண்டுவிரகத்தால்வாதுபோராடல்பேசல், தும்
பமூன்றுதித்திடும் வகையையாவர்கள்காண ருடிவாய்வாதமும் பித்
தஞ் சுகந்தசேத்துமமூன்றும், தம்பனமுள்ளவாய்வதுமோடிக்கலக்
கமதாய் தாபமுஞ்செய்தேயக்கினி சார்ந்துமத்திபஞ்செய்தல். வசை

(இ-ள்.) மனதே காமியத்தை வேருய்க்கொன்ற இவ்வுலகத்திற்கண்ட
பொருள்களுக் கெல்லாம் ஆசைப்படுதல், மிகவும் வம்புசெய்தல், பெண்கள்
மேல் விரகங்கொண்டு வாதுபேசிச் சண்டையிடுதல், ஆகியமூன்றும் செய்யும்
வகையை யாவர்கள்காணுவர், பின்னர்வாதமும், பித்தமும், சேத்துமம் மூன்
றும் அதின்குணமும் எப்படியென்றால் வாதமானது ஓடிக்கலக்கமாய்தாபஞ்
செய்து அக்கினியைச்சார்ந்து மத்திபஞ்செய்தல் எ-று. (கசுஅ)

வாசமுள்ளபிராணத்தின் வாய்வுகெட்டிட்டுமோடி வளருமக்கி
னியதைமடக்கி மத்திபஞ்செய்தல், நேசமுடனேபித்தம்வன்னியோ
டணுகித்து நிறைந்துமத்தித்துசலம் நெடியவினையுண்டாக்கும், சேத
மிகவுண்டாகுஞ் சேத்துமரோமத்துவாரம் சிறந்துவோடியிடைபின்
பிரியாச் சிநேகஞ்செய்தால், மாதராசையிலிந் நாடிபின்னிட்டடங்கி
மறிந்தறியாமல்தாது மடங்குமென்றுகையாலும். வசை
க

(இ-ள்.) வசிக்கின்றபிராணவாயுவானது கெட்டிட்டு ஓடிவளர்கின்ற அ
க்கினியைமடக்கி மத்திபஞ்செய்தலாம், பித்தமானது வன்னியுடன் கலந்து
நிறைந்து மத்தித்துச்சலத்தையும் நெடியவினையையுமுண்டாக்கும், சேத்தும
மானது சேதம்மிகவுமுண்டாக்கும், ஓடி இடைகலையையும் பின்கலையையும்
பிரியாமல் சிநேகஞ்செய்தல், பெண்கள்ஆசையில் இந்நாடியானது பின்ன
டங்கிமடங்கி அறியாமல் தாதுதடையாய்கிற்கும் ஆகையாலும் எ-று. (கசுகூ)

இச்சைமூன்றுனவித மினியுரைக்கும்வகைகா ணிதுவேத்திரவி
ச்சைலோக விச்சையுமாகும், பட்சமாமர்த்தவிச்சையுமிதன்கூறறிய
வெந்தன் பரிபூரணவம்பிகைபாதமலர்பணிந்தேன், அஷ்டதிக்கும்
புகழு மகத்தீசருள்போற்றியடியன றிருவள்ளுவனவனிமீதிலிந் நூல்
நிஷ்டையோகத்தின்ஞான நிசழ்த்தமூன்றுவகைநிகழு மிச்சையதின்
சுகத்தைக்கண்டவனுண்டே. வசை

(இ-ள்.) உயிர்களுக்கு இச்சையானது மூன்றுயிருக்கும் வகையையினிச்
சொல்லுவேன்கேளும். அவையாவன, புத்திரவிச்சை லோகவிச்சை, அர்த்த
விச்சைஎன மூன்றுகும். இவற்றின்கூற்றை அறிவதற்கு எங்கும்நிறைந்த அம்
பிகாதேவியின் திருவடித்தாமரையைபபணிந்தேன். பின்னர் எட்டுத்திசைக
ளும் புகழுகின்ற அகத்தீசருடைய திருவருளைப்போற்றி திருவள்ளுவனுகிய
அடியேன இவ்வுலகத்தின்மேல் இந்நூலை நிஷ்டையிலும், யொகத்திலுமி
ருந்து அங்கே ஞானமுணர்த்த மூன்று இச்சையின்குணங்களையும் நான்கண்
டவன் ஆண்டை எ-று.
(கஎ0)

புத்திரன்இச்சையின்குணம்பொருள்மேலாசைப் படுதல்புவியில் மண்ணின்பெண்ணாசை புவனமாளவுஞ்செய்தல், அர்த்தத்தின்மேலுமதிக வாசைப்படுதல்நெஞ்ச மறிதலோகவிச்சையின்விதியின்பயனுரைத்தல், வெற்றிப்பாரிலுயர்ந்த காணியாட்சிவிளம்பல் வெகுநாளுறவின்முறை௷ருந்தகாதுவிளம்பல், உற்றகாரியமுணர்ந்திச்சையத்தின்மேலாத லுசிபிப்பணிகள்செய்து விசிதம்பார்த்திடுமாதல். வ

(இ-ள்.) புத்திரவிச்சையின் குணமானது பொருள்மேல் ஆசைப்படுதல் உலகத்தில் மண்ணாசைபெண்ணாசையுண்டாதல் அர்த்தத்தின்மேலும் ஆசைப்படுதலாம், லோகவிச்சையின்குணமானது உலகத்தில்உயர்ந்த காணியாட்சியைவிரும்பல் வெகுநாள் உறவின்முறையாரைதகும் தகாததைச்சொல்லுதல் பொருந்தியகாரியத்தைத் தெரிந்து அதின்மேலிச்சையாதல், முக்கியமாகிய காரியங்களைச்செய்து நன்மைதீமைபார்த்தல் எ-று. (களக)

அர்த்தவிச்சையினகுண மதிககாமியந்தேடியன் பதிகமுமாலசையின்பமதிலுண்டாதல், எத்திசையிலனந்தசாதியிலுமங்கையரின்னரிவர்களெனுமெண்ணமனுமிச்சித்தல், சத்திவிரகுதாமசங்கையிலுமனதாய் சார்ந்துவிகாரமெய்தல் தனைப்புகழ்ந்துணர்வாதல், வித்தையென்னுமிச்சைவா லாறுன்மூறின்விபரமெடுத்துரைத்தே னண்டையே தொடுத்தேனு நவிந்தாலே வசை

(இ-ள்.) அர்த்தவிச்சையின்குணமானது அதிகமாகச் செல்வந்தேடி அன்புஅதிகமாய் இன்பமுண்டாதல், எந்தத்திசையிலும் எந்தச்சாதிப் பெணகளையும்விரும்புதல், விரகத்தில்மனமாதல் தன்னைத்தானேபுகழ்தல், என்னும் மூன்று இச்சையின்விவரத்தை நாதவிந்தின்கிருபையால் சொன்னேன் எ-று.

குணவிசிதலட்சண மதிலுதித்தபடி குறித்துமூன்றுவிதமாய் விரித்துச்சொல்வேன்காணும்,மணமதாகியகுண ராசததாமசம்இரண்டுமகிழுஞ்சாத்திகத்தோடு புகழூமூன்றுவிதமாம், துணமாம்ராசதகுணம் வெகுளிபலபேசாமல் துதித்திடுவோர்தமக்குக் கொடுத்திடுதலுமேன்மை, பணம்விசிதவேண்டிய பாக்கியங்களளித்தல்பண்புபாராட்டலாதல் பலவுபகாரஞ்செய்தல். வசை

(இ-ள்.) குணவிசிதலட்சணத்தை மூன்று விதமாய் விரித்துச் சொல்லுவேன், அவையாவன ராசதகுணம், தாமசகுணம், சாத்துவிககுணமுமாகும், அவற்றின்குணத்தைப் பேசுமிடத்து ராசதகுணத்தின் குணங்கள் பலகோபவார்த்தைகளைப்பேசல், துதிப்போர்க்குக் கொடுத்தல், வேண்டியபாக்கியம் கொடுத்தல், பலவுபகாரஞ்செய்தல் எ-று. (களங)

தனைச்சார்ந்தோர்கள்தமக்குதகமைகாத்திடும்பேசல்தனதுதமுயிர்போலுஞ்சார்ந்தூரட்சித்திடுதல்,இனம்வேண்டிடுதல் பகையிகத்தல்பலகலைகளினைசந்துலகிலகங்கொண்டிருத்து வாழ்தலுமுண்மை,

கனமுமினமுநலம்புகழும் வாஞ்சையொடுக்குங்கருதந்தாடாண்மை
யின்பங் கருவிலமைத்தபடி, முனையும்ராசதகுணந்தனையேயறிவிப்ப
து மெனையேபுசழ்வதில்லை துணையேயோதவிந்தருள் வசை

(இ-ள்.) தன்னைச்சார்ந்தவர்களுக்கு நன்மையைப் பேசுதல், தம்முயிர்போல்காக்குதல், சுற்றம்விரும்புதல், பகைநீக்கல், பலசாஸ்திரங்களிற் சொன்னவண்ணம் உலகில்வாழ்தல், தாளாண்மைஇவைகளைக்கருவிலமைத்தபடி நடப்பித்தல் முதலியனவைகளாம் எ-று. (௧௭௪)

மிருளுந்தாமசகுண விசிதமேன்மேல்விளம்பல் மிகுதியாதொ
ருபழிவிகடம்வஞ்சனைசெய்தல், அலறும்வழிப்பாடாகவொழித்தல்
வணக்கமாற வரண்டுவரும்வெகுளி யதனைவிரும்பலெனல், பிரளல்
செய்தநன்றியைப் பிரித்தலுறுதிமாறல் பெரிதாய்விக்கைதமிகவும்பே
சல்கடூரம்வாஞ்சை, முரளுமுகத்திடறு பகையுடனேயும்வாழ்த்தல்
முன்புரைத்தபழியே முனைதல்கூறலுமாண்டே வசை

(இ-ள்.) தாமதகுணத்தின் செய்கையாவதும் மிகுதி, பழிவிகடம், வஞ்சனை முதலியவைகளைச்செய்தல் வழிபாடொழித்தல், வணக்கம்மாறல், கோபத்தைவிரும்பல், பிறழல், செய்தநன்றியைமறத்தல், உறுதியின்மை, விக்கைதபேசுதல், கடூரம், வாஞ்சை.முகத்தில்பகைக்குறி,வாழ்த்தல், பழிசொல்லல் எ-று.

கொலைகள்சாமியமும்பொய் குறித்தல்கோள்கள்பொல்லாங்கு
குசிதம்யாவையும்புகழ் குரோதங்கடூரமெய்தல்,அலைதல்காமத்தினி
லைகுரோதமதிதசங்கையசத்தியநாள்தோறுமெய்தலறிதலாண்டை
யேகேளீர், பலபலவும்கடிசிலதுதொழில்விகற்பம் பகர்தல்பாவியெ
னவுஞ்ஜெகதலமுமதியா, கலகப்பிரியனெனுமுலகமாத்தியஞ் சொல்
லுங்கருவில்தாமசகுணகாட்சியிதாண்டையே. வசை

(இ-ள்.) கொலை, காமியம்,பொய்பேசுதல், கோள்சொல்லல் பொல்லாங்கு, குரோதம், கடூரம், கர்மத்தினுலலைதல், தினமும் அசத்தியம்பேசுதல், தொழில்விகற்பம், உலகத்தார் பாவியென்று சொல்லும்படி நடந்துகொள்ளல் முதலியவைகள் கருவின்கண் தாமசகுணத்தின் செய்கைகளாக அமைத்ததாகும் எ-று. (௧௭௫)

அதிதசத்துவகுண மறிதலனேகவித மனைத்தும்படைத்தகர்த்
தன்மனதுளிருப்பதெனில்,விதித்தமதங்கடிவுவாய்மைதயவொடுக்க
மிகுத்தசாந்தகமைதன கினைவுதகைந்திடுதல்,உதித்தவன்புபெருமை
புகழ்தல் குணவிசிதமுரிமைமறைபினிறைதருமமானமியக்கல்,நதித்
தநல்லோர்க்கீதல்வுறி ஞோர்களைவாழ்வித்தல் கருதுமிறைவனடிப
ணிதல்நலமறிதல். வசை

(இ-ள்.) சத்துவகுணத்தின்செய்கைகளைச் சொல்லுமிடத்து அநேகவிதமான உலகத்தைச்சிருஷ்டித்த கர்த்தன் மனதின்கண் இருப்பதென்றால்

வேதத்திற்சொல்லப்பட்ட கேள்வி, கடிவுவாய்மை, தயவுஒடுக்கம், சாந்தம் தகைமை, நல்லகினைவு, அன்பு, பெருமைபுகழ்ச்சி சற்குணம், வேதத்திற்சொல்லப்பட்ட தருமம், மானம்பாராட்டல், நல்லோர்க்கீதல், அறிவுடையோர்களை வாழ்வித்தல், ஈஸ்வரனைவணங்குதல நன்மையுணர்தல் எ-று. (௧௭௭)

மகத்துக்களின்மனதுமகிழ்ச்சிவருவதெனில் மலர்க்கமலபதத்தில்வணக்கஞ்செய்திடுதலால், அகற்றும்பழிபகற்றல் விளையும்பிணியொழித்த லதிதநல்லோர்பெரியோ ரவர்களுக்குப்பொருளுமீதல், இதலத்திறமுந்தேடலுறவின்முறை யதிகமினமுஞ் சுற்றத்தாரையுங் கனமுங்காத்துரக்ஷித்தல், மிகுத்தல்பசியகற்றலதிதியபரதேசிகள் விரும்புமன்னபலாதி விளங்குமேவுமீதாண்டே. வகை

(இ-ள்.) பெரியோர்களை மகிழ்விக்கும் நிமித்தம் அவர்களுடைய திருவடித்தாமரைகளில் வணக்கஞ்செய்தல், பழிபாவம் நீக்குதல், நோயைநீக்குதல் பெரியோர்களுக்குத்தானமீதல், இல்லறதருமந்தேடல், சுற்றத்தாரை ரட்சித்தல். பசியைநீக்குதல், அதிதிபரதேசிகளுக்கு அன்னபலாதிகளீதல் எ-று.

ஆத்திரைவாசங்கள்செய்த வருமறையோரைக்காணலருள் தேவதைகளுக்குமாகுபலிகொடுத்தல், தேத்தியஞானப்பிரகாசந் தெளிந்தவர்கள்தமக்கு சிந்தையையகற்றி யுபசாரஞ்செய்திடுதலால், போற்றிடும்புண்ணியஞ் செய்தலின்பசுகந்தமலர் பூசுரர்தமக்குநலம் புகழும்பூசையளித்தல், வீற்றிடுஞ்சாத்தியகுணவிசிதலட்சணங்கண்டு விளங்குமூன்றின்விபரம் விதித்தவாயதுஆண்டே. வகை

(இ-ள்.) ஆத்திரை வாசங்கள்செய்தல், பிராமணர்களுக்கும் தேவதைகளுக்கும் ஆகுதிகொடுத்தல், ஞானப்பிரகாசந் தெளிந்தவர்க்கு உபகாரஞ்செய்தல் புண்ணியஞ்செய்தல், பிராமணர்களுக்கு மலர்களால் பூசைசெய்திடுதல், முதலியவை சத்துவகுணத்தின் லட்சணமாம், இவ்வண்ணம் மூன்று குணங்களையும் விதித்ததாகும் எ-று. (௧௭௮)

நாதவிந்ததினாலே நரகசொர்க்கமிரண்டும் நவிலுநல்வினையுந்தீவினையுநாடியவாறில், வேதங்களுமுதித்தசாரம் விண்ணுமண்ணுமில் விளங்குநல்வினையும்வந் துதித்தல்புண்ணியஞ்செய்தல் ஓதுந்தீவினையுஞ்செய்திடும் பாவங்களுமெய்த லுலகமாதிதமிவ்வாறுடலெடுத்துவமையால், மாதுவப்பிகையெந்தன் மனதுக்குணர்வித்த வரலாறறிந்தின்னால் வசனித்தேனுண்டையே. வகை

(இ-ள்.) நரகம், சொர்க்கம், நல்வினைதீவினை. இவையிரண்டும் நாதத்தினாலும், விந்தினாலுமாகும், இங்ஙனம், உதித்தசாரம் விண்ணும்மண்ணுமி நல்வினைவந்துதித்தல் புண்ணியஞ்செய்தல், தீவினைவந்துதித்தால் பாவஞ்செய்திடுதல், ஆகிய இவ்வாறு உடலெடுத்து உவமைபால் அம்பிகைப் பெண்ணுகிய

தாய் எம்முடைய மனத்தி லறிவுறுத்தின வரலாற்றையறிந்து இந்நூலைச் சொன்னேன் எ-று. (௧௮௰)

ராகமிதுவெட்டான நடத்தையிவ்வாறறிதல் கலத்த காமக்குரோத லோபமோகமதாகி, அகந்தனிலுதித்தமதமாச்சரியத்தோடுமமைத்திடலுமிடும்பையறிதல்வேட்கையிதுகாண், பாசமதாகியதேகஞ்சரீரங்களிலுதிக்கும்பலனேயின்னதினிதும்பகர்ந்துசொலுவேன் காணும், தேகக்கட்டளையின்வாறு செய்கைசெந்துகட்கெல்லாந்தெரிந்து சீர்பிசகாமல்திருத்த ஆண்டையேகேளீர். வசை

(இ-ள்.) அஷ்டராகத்தின்குணத்தை எவ்வணம் அறிவதென்றால், காமம் குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், இடும்பை, வேட்கை இவைகளாம், இவைகள்சரீரங்களிலுதிக்கின்ற பலனேயாகும், இங்ஙனமே எல்லாச்செந்துகளின் தத்துவங்கள் பிசகாமல்சொன்னேன் எ-று. (௧௮௧)

மாதரைக்கண்டாசைகொண்டிடுங்காண் விரகதாபமயல்கொண்டதிதகாமம்வருதல்மன்மதபாணம், பேதபேதமில்லாமல்பிதற்றும் வணக்கமில்லாபிணக்குமதிதகுரோதந் தனக்குந்தனைத்தெரியா, ஒதுமனதிலொன்றை நினைத்தபடிமுடித்தவொருபிடியாய்ப்பிடித்லுறுதிவிடாதுலோபம், ஏதுவாகிலும்பெருமை யின்பசுகாறிசுக மெய்து மனமகிழ்ச்சி யிதுவேமோகாதிமோகம். வசை

(இ-ள்.) இவற்றுள்காமமாவது பெண்களைக்கண்டு ஆசைப்படுதல், விரகம் தாபம், மயல்இவைகளாம், குரோதமாவது பேதாபேதமில்லாமல் பிதற்றுதல் வணக்கமில்லாமை இவைகளாம், லோபமாவதுஒன்றைநினைத்தபடிமுடித்தல் ஒரேபிடியாய்ப்பிடித்தல், உறுதிவிடாமை, இவைகளாம், மோகமாவது பெருமை, இன்பம், சுகமடைதல், மனமகிழ்ச்சி, இவைகளாம் எ-று. (௧௮௨)

சூதுமனதிலெண்ணல் துடியாய்க்கோபமுரைத்தல்தொடுத்திடலும்பழி துன்பமெய்திடுமதம், யாதொருகாரியங்களி லதுவிச்சை மனதெய்த லானந்தம்பெருகியின்பமடையு மாச்சரியங்காண், வாதுபோராடலொருசொல்லாயிரம்விரிவாய்வணல்கொண்டாங்காரமெய்தல் வருமிடும்பையுமாதல், வேதுவித்வேஷணம் பலவும்பலவுமெண்ணல் மெய்பொய்யாங்காரங்கொள்ளல்வேறுசெய்தலும்வேட்கை.

(இ-ள்.) மதமாவது மனத்தில்வஞ்சகநினைத்தல், கோபமாய்வார்த்தையாடல், பழிக்கும், துன்பத்திற்கும் அஞ்சாதிருத்தல், எந்தக்காரியங்களிலும் மனேவிச்சைசெய்திடுதல், இவைகளாம், மாச்சரியங்களாவது வாதுசெய்தல் போராடல், ஒருசொல்லை ஆயிரஞ்சொல்லாக வளர்த்தல். அதிககோபங்கொண்டு ஆங்காரமாய்ப்பேசல், இவைகள், இடும்பையாவது வித்வேஷம் பலவுஞ்செய்தல், மெய்யைப்பொய்யாக்கொள்ளல், ஆங்காரம், வேறுசெய்தல் இவைகளாம் எ-று. (௧௮௩)

ஆகமத்திலுதித்தாரகமத்தின்பரிட்சை பதிதகுணலட்சணம்வி
திதவாறுமலெட்டும், பாகமதாயுரைத்தேன்பகவான்சொற்படிபா ல்
பலகலையுந்தெளிந்துபழம்பொருள்களைக்கண்டு, ஏகவஸ்துவொன்று
லேயெடுத்தேன் தத்துவநெறியெறும்புகடையாயானை யெண்பத்து
நான்குமுதல், தோகைமாதவம்பிகைசொல்லுஞ் சூட்சமறிந்தேன்
சுருதிமுடிவைக்கண்டு தொடுத்தேன்ஞானவெட்டியான். வகை

(இ-ள்.) வேட்கையாவது ஆகமங்களிலிருக்கின்ற விஷயங்களின் பரிட்சைமிகுர்தகுணலட்சணம் இவைகளாம். ஆகியராகம் எட்டையும் பாகமாயுரைத்தேன் சிவபெருமானுடையசொற்படியேபலகலைகளையுந்தெளிந்துபழம்பொருள்களைக்கண்டு ஏகவஸ்துவாகிய ஒன்றினால் எறும்புமுதல் யானைவரைக்குமுள்ள எண்பத்துநான்குலட்சம் சீவராசிகளின் தத்துவநெறியை அம்பிகாதேவியின் கிருபையாலறிந்தேன் பின்னர்வேதத்தின் முடிவைக்கண்டு ஞானவெட்டியைப் பாடினேன் எ-று. (௧௮௪)

அவத்தையைந்துமொவ்வொன்றாய்விரித்துச்சொல்வேன்காணு
மாக்கிரசாக்கிரசொப்பனஞ்சுழுத்தியொடுதுரியம், பலத்தைப்பவனு
தீதத் துரியாதீதத்தோடைந்தும்படைத்தா ரெண்சாணுடலிலெடுத்
தார் ஜெகத்துள்ளோர்க்கும், இவத்தையெனுஞ்சென்மமிதிலுதித்த
துகாணுமெவரெவர்க்குமிதுவேயேகவஸ்துவிதாகும்,தவத்தில்மிகுத்
தவத்மமெய்ஞ்ஞானநெறி தத்துவமறிந்துதன்னைத் தானறிந்திடுமே
சொர்க்கம். வகை

(இ-ள்.) பஞ்சாவஸ்தையின் நாமங்களையும் குணங்களையுங் ஒவ்வொன்றாக விரிதுச்சொல்லுவேன், அவை எவையெனில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி துரியம், துரியாதிதம் எனஐந்தாம் இவைகளை இப்பூமியில் எண்சாண் உடம்புபெற்றுள்ள எவர்க்கும் இதுவே ஏகவஸ்துவாகும், இதனால் தவம் உண்மைஞானம், நெறிதத்துவம் இவைகளையறிந்து தன்னைத்தானறிந்திடும் சொர்க்கம் எ-று. (௧௮௫)

ஆக்கிரமுஞ்சாக்கிரம் நிற்குமதுவும்லலாடஸ்தானத்தி லறிதல்
நெற்றிநேர்மையமசைதல்காயத்தோடென்னில், வாக்கிற்சொற்பன
த்திற்கும் வாழ்தல்கண்டஸ்தானத்தில் மருவியகருவிகளமைத்த வா
றுண்டையே, விக்கிரமச்சுழியின்முனையிருதயகமலந்தனில்விளங்குந்
தானமறிதல் இன்பமிதுவாறுகாணும், நிக்கிரகதுரியஸ்தானநேரு
மேநாபிக்கமலம் நிரந்தரமாயிருத்தல் நிலைக்குஞ்சரீரமென்னில்.

(இ-ள்.) சாக்கிராவஸ்தைக்கு இடமாவது லலாடஸ்தானமாகும், சொப்பனஸ்தானம் கண்டஸ்தானமாகும், சுழுத்தி யவஸ்தைக்குஇருதயஸ்தானமாகும், துரியாவஸ்தைக்கு நாபிக்கமலமாகும், இந்தஇடங்களில் இந்த அவஸ்தைகள்நின்று சரீரத்தைநிலைப்பிக்கும் எ-று. (௧௮௬)

உத்தமதுரியாதீத மூலாதாரஸ்தானத்திலுறுதிபெற்றிவகுமிவ் விதத்திலுதித்தவாறு, தத்துவந்தொண்ணூற்றாறுஞ்சரீரந்தனிலுதிக் குந்தகமையறிந்துவந்தென்தாய்சொல்லயானறிந்து, வித்திலுதித்த வாறும் விளங்குங்கருவின்வாறு மிகுத்ததத்துவந் தொண்ணூற்று ரைவிதிக்கும்வாறும், கர்த்தனருளாலுடல்கருதரித்தநேர்மையுங்கரு விகரணாதிகள்கண்டு ஆய்ந்தவனாண்டே. வசை

(இ-ள்.) துரியாதீதத்திற்குஇடமாவது மூலாதாரஸ்தானமாகும்இப்படிப் பட்ட உறுதிபெற்ற உலகத்தில் உதித்தவிதத்தையும், தொண்ணூற்றாறுதத் துவங்களும் உதித்தவரலாற்றையும் எம்முடைய தாய்சொல்ல நானுணர்ந்து விதையிலுதித்தவிதத்தையும் விளங்குகின்ற கருவின்விதத்தையும், கடவு ளின் கிருபையால் உடலில் கருதரித்தவிதத்தையும் கருவிடையும், கரணங் களையும் ஆய்ந்தவன் எ-று. (கஅஎ)

சித்தாதிகள்மகிழும் பெரியோர்களும்புகழுஞ் ஜெயம்பெறவே யுலகில் செந்துக்களெல்லாந்தழைக்க, உத்தமயோகிகளெந்தனுறுதி யிகவுங்கண்டுயோகவான்திருவள்ளுவனுலகிலவனேஞானி, வித்துவா னெனமகிழ்ந்து வேதவேதாந்தசாரம் விளங்கினார்சளமீர்தவிசிதாத் னபீடம், உத்தமரெனுமுனிவர் சிவசிங்காதனமீந்து வுரையறிந்து மொழிந்த வுசமையிதெனுமாண்டே. வசை

(இ-ள்.) சித்தர்கள்மகிழும் பெரியோர்களும் புகழும் செந்துக்களெல் லாந்தழைக்கவும் சற்குணர்களான யோகிகள் எம்முடைய உறுதியைக்கண்டு திருவள்ளுவன் இவனேயோகி ஞானிவித்துவான் என்றுமகிழ்ந்தும் வேதவே தாந்தசாரம் விளங்கினவர்கள் விசிதரத்நபீடத்தில் வாழ்கின்ற முனிவர்களும் வாழும் சிவசிங்காதனத்தின்மேல் சொல்லறிந்து சொன்னஉவமை இதுவா கும் எ-று. (கஅஅ)

கர்த்தன்செய்கைவிதிகாண் கருவிலமைத்தபடி காரணசற்குரு வாக்கியங்கண்டாலல்லோதெளியும், பெற்றபேர்களிப்படி வித்தின் சம்பிரதாயதகள் பேசும்பேசினலென்ன பிராணயமறியலாமோதத் துவந்தொண்ணூற்றாறுந் தானேநீறநீருக்கி சாதித்தால்காயாதிகற் பஞ்சாயுச்சியமறியலாகும், கித்தசித்தம்வாசிகொண்டுய்த்து வூதினு லல்லோசெத்தபிணமெழுந்து சத்துஞ்சித்தறியலாம் வசை

(இ-ள்.) சர்வேஸ்வரனுடைய செய்கையேவிதியாகும். ஆனல் இதுகரு விலேயே ஏற்பட்டுத்தியதாம், இதன்பொருட்டுகாரணகுருவின்வசனத்தைஉண ர்ந்தாலல்லவோதெரியும். இந்தவண்ணம் வித்தின் சம்பிரதாயங்களைப் பேசி னல் என்னபலன்? இதனல்பிராணயாமத்தை யறியலாமோ? தொண்ணூற றுதத்துவங்களையும் நீருக்கிச்சாதித்தால் காயகற்பத்தைஉணரலாகும் அங் ஙனம் சாதிப்பவர்க்கு வாசியைதினம் ஊதவேண்டும் அப்படிஊதினல் செத்த

பிணமும் எழுந்து சத்துப்பொருள் இதுவென்றும், சித்துப்பொருள் இதுவென்றும் அறியலாகும் எ-று. (கஅக)

விருத்தம்.

விரிவானதருவமெனு மூலவீட்டில் வேதமதுக்கெட்டாதரூபமாகி,கருவாகித்தெவிட்டாதகனியுமாகிகதிராகிமதியாகிகாற்றுமாகி உருவாகியுடலாகியுயிருமாகி,யொளியாகியலகையெனுமுடலுக்குள்ளே, யருவாகியருள்ஞானசொரூபியாகி யங்கமதிலிங்கமதா யமைந்தேனண்டே.

(இ-ள்.) விரிந்ததருவமென்கிற மூலவீட்டில் வேதத்திற்கெட்டாத ரூபமாய் கருவாகியும், தெவிட்டாதகனியாகியும், கதிராகியும், மதியாகியும், காற்றாகியும், உருவாகியும், உடலாகியும், உயிராகியும், ஒளியாகியும் உடலுக்குள் அருவாகியும், திருவருளுடைய ஞானசொரூபமாகியும் அங்கத்தில் லிங்கமாய் அமைந்தேன் எ-று. (ககo)

மறைகடந்துவெளிதாண்டி சுழிமுனைக்குள்ளே மறைநான்குமறியாதமதியைக்காணக், கரைகடந்துசுழிக்குநடு வணையிலுள்ளே கதிரிலகுந் திருநாட்டுக்கமலவீட்டில், நிரையறிந்தகதலியடிமானுக்குள்ளே நிலையாதசெங்கநதி கரையின்மேலும், திரைமேவுந்திருநடனவீட்டுக்குள்ளே சிவந்தெழுந்துகொழுந்தாகி வளர்ந்ததாண்டே.

(இ-ள்.) வேதத்திற்குள் காணப்படாமல்வெளிதாண்டிச்சுழிமுனைக்குள் நான்குவேதங்களாலும் காணப்படாத மதியைக்காணுதற்கு அளவற்ற சுழிமுனையின் நடுவணையினுள் கிரணங்கள்வீசுகின்றதிருநாட்டின் கண்ணுள்ளகமலவீட்டில் வரிசையாயுள்ள கதலியடிமானுவுக்குள் செங்கநதி கரையின்மேல் விளங்குகின்ற திருநடனவீட்டுக்குள் சிவந்து எழுந்து கொழுந்தாகி வளர்ந்தது எ-று. (ககக)

முத்துதிர்ந்துகுலைசாயுமூலநாடு முனையறிந்துகலை சாயுமுவணநாடு சித்திருந்துவிளையாடுந்தெய்வநாடுதிவ்யரத்னபொக்கிஷமாஞ்செல்வநாடு, சத்திசிவமிருந்தி திருநடனஞ்செய்யுஞ் சதாசிவனுங்கொலுவிருந்து வாழ்ந்தவீடு, அத்திபுரமிலகுகின்ற கருவூர்நாட்டிலறைவீட்டில்குடியிருந்து வமைந்தேனண்டே.

(இ-ள்.) முத்தானது உதிர்ந்து குலைசாய்கின்ற மூலாதாரவீட்டில்சுழிமுனையையறிந்து கலைகள்பாய்கின்ற உவணநாடும், சித்துப்பொருளானதிருந்து திருவிளையாடல்செய்கின்ற தெய்வநாடும், உயர்ந்தரத்நபொக்கிஷமாகியசெல்வநாடும், சத்தியுஞ்சிவனுமிருந்து திருநடனஞ்செய்வதாகிய சதாசிவன்கொலுவிருந்து வாழ்ந்தவீடும், அத்திபுரம்என்றுசொல்லுகின்றஇந்ததேகத்தின்கண் கருவூரென்கிற நாட்டில் குடியிருந்து அமைந்தேன் எ-று. (ககஉ)

ஜாதிகுலம்வகுத்திலகும் வித்துநாடு தானுதித்துபத்துதிங்கள் வளர்ந்தநாடு, நீதிமறைசாஸ்திரமாம்வேதநாடுநெறிபலவுஞ்சகலகலை

திக்தநாடு, சோதிமதியாகின்ற துலங்குநாடு சுழிநாடுவளநாடு தொண்டநாடு, பாதிமதிதனையணிந்த பரமநாட்டில் பதியெனவே குடியாக வாழ்ந்தேனண்டே.

(இ-ள்.) சாதியையும், குலத்தையும் பிரித்துவிளங்குகின்ற விந்துநாடும் பத்துமாதம்வரைக்கும் வளர்ந்திருந்தநாடும் நியாயவாபில்விளங்குகின்றவேதம் சாஸ்திரம் விளக்குகின்ற வேதநாடும், சகலநியாயங்களும், சகலசாஸ்திரங்களும்பிறந்தநாடும், பிரகாசம்பொருந்திய மதியாயிருந்துவிளங்குநாடும், சழிமுனைநாடும், வளநாடும் தொண்டைநாடும், அர்த்தசந்திரனைசடாபாரத்தின்கண் தரித்தபரமேச்சுரன் எழுந்தருளியிருக்கின்ற உயர்தநாடுமாகிய கருவூர்நாட்டில் யாவரும் தலைவனென்று சொல்லும்படி உயர்குடியாக வாழ்ந்தேன் எ-று.

தேனருவியமிர்தநதிக்கசிந்துபாயுந்தேவர்சித்தர்முனிவர் துதித்திலகுநாடு,ஞானிகள்வந்துதித்திலகுங்கருவூர்நாடுநல்வினையுந்தீவினையுமமைத்தநாடு,தானவனாய்நின்றிலங்குமரூபநாடுசற்குருவுஞ்சந்நிதியுந்தழைத்தநாடு, வானதிகொண்டறுசுவையையொழித்தநாடுவானவர்கள்மகிழுமணி மந்திரனண்டே.

(இ-ள்.) தேனருவியும், அமிர்தநதியுங்கசிந்துபெருகும்படி தேவர், சித்தர் முனிவர் இவர்கள்துதித்து விளங்குகின்றநாடும், ஞானிகள்வந்து பிறந்து விளங்குகின்ற கருவூர்நாடும், நல்வினைதீவினைகள் உண்டுபண்ணினநாடும், தற்சொரூபமாய்விளங்குகின்ற அரூபநாடும் ஞானாசிரியரும், அவர் எழுந்தருளியிருக்கின்ற சந்நிதியுந்தழைத்தநாடும், ஆகாயகங்கையைக்கொண்டு அறுசுவைகளையும் ஒழித்தநாடும், தேவர்கள் மகிழ்கின்ற மணிமந்திரநாடும் எ-று.

அண்டபிண்டமிரண்டுமுற்றிலகுநாடு அருணனெனுஞ்சோமனவதரித்தநாடு, மண்டலமூன்றுதிக்குமருள்கொந்திநாடுமாமறையுமாகமங்கள்வாழுநாடு, கண்டனந்தகருவூர்நாடுக்குள்ளே கனகரத்னமாதுவொளிவாகின்ற, வென்றதிருவம்பிகைபெண்விளங்கும் வீட்டில் மிகுத்தவறைக்குள்ளிருந்து வமைந்தேனண்டே.

(இ-ள்.) அண்டமும்பிண்டமும் பிறந்து விளங்குகின்றநாடும், சூரியசந்திரர்கள் பிறந்தநாடும், சோமசூரியாக்கினிகளென்னும் மூன்றுமண்டலங்களும் பிறக்குந்திருவருளையுடையகொந்திநாடும்,வேதாகமங்கள்வாழ்கின்றநாடும், ஆகியகருவூர்நாட்டுக்குள் கனகரத்தினம்போலும்ஒளிவிடுகின்றஅம்பிகைபெண் விளங்குகின்றவீட்டில் பெரியஒருஅறையிலிருந்து நான்உண்டானேன் எ-று.

அந்தமுளநவசித்திரக்கூடந்தன்னி லகண்டமெனுந்தீபவொளிவாகுநாடு, சந்தனமுங்குங்குமமும்விளைந்தநாடு சர்வவுபிரெடுத்துடலாயமைத்தநாடு, செந்தியொளிசிவனுமையும் பிரகாசிக்குஞ்சிறபிறையுமமிர்ப்பாலந்தேவநாடு, வெந்தணலுமெழுந்துதிருநடனமேவுமேல்வீட்டினின்று வருவானேனண்டே.

(இ-ள்.) அழகிய ஒன்பதுவகையாகிய சித்திரக்கூடத்தின்கண் ஆகண்டமென்று சொல்லப்பட்ட தீபப்பிரகாசமாகும்நாடும். சந்தனமும் குங்குமமும் பிறந்தவீடும், சகலபிராணிகளும்இருந்து உடலாயமைத்தநாடும், செவந்தமேனியையுடைய சிவனும், உமையம்மையும் விளங்குகின்ற சிறுபிறையும் மயிர்ப்பாலமுமுள்ள தெய்வநாடும், வெவ்வியமழுவானது எழுந்து திருநடனஞ்செய்கின்ற யேல்வீடுமாகிய அரியஇடத்திலிருந்து ரூபமாயமைந்தேன் எ-று.

உருகருவாய்நின் றிலங்குமுந் திநாடுவுத்தமர்கள்சித்தர் தவம்பெற்றநாடு, மருநாடுவானுடுமலரினுடு மதமுடனேமாச்சரியமானநாடு, சிறுநாடுகருநாடுசெந்திநாடு செங்கதிபொங்குமுயலசிறந்தநாடு, அருநாடுகுருநாடுவகண்டநாட்டி லருள்பெறவேயுருவாகி யறிந்தேனுண்டே.

(இ-ள்.) கருவின்கண் உருவாய்விளங்குகின்ற உந்திநாடும்.உத்தமர்களும் சித்தர்களுந் தவஞ்செய்கின்றநாடும், மருநாடும், வானுடும்மலரினுடும். மதமும் ஆச்சரியமுமானநாடும், சிறுநாடும், கருநாடும், செந்தில்நாடும், செவந்தகதியானது பொங்குகின்றசிறந்தநாடும், அருநாடு, குருநாடும், அகண்டநாட்டில்திருவருளைப்பெற உருவாகியறிந்தேன் எ-று. (௧௯௭)

கால்வாங்கிவட்டமிட்டுமேலேநின் றுகமலதிருவாசலின்கீழ்கருதியானும், மேல்வாங்கியுயருகின்றவன்னியோடேவெளிகடந்துநாற்சதிரவீட்டுக்குள்ளே, சேல்வாங்கிநாலிழைத்துப்பாவுமோட்டிச் சித்திரமாய்குழிதனிலேநிசவுமாக்கி, தேல்வாங்குவிழிமடவா ளுள்ளே சித்திரமாயுடலெடுத்துவளர்ந்தேனுண்டே.

(இ-ள்.) சரம்வாங்கிவட்டமிட்டுமேலேயிருந்து கமலவாசலின்கீழ்பானும் மேலேவாங்கியுயர்கின்ற அக்கினியுடன்வெளியேதாண்டிநாற்சதுரமாகியமூலவீட்டுக்குள்ளிருந்து சேல்வாங்கி நாலனுற்றப்பாவுவோட்டி அழகாகக்குழியிலேநெய்துசேல்போலுங்கண்களையுடையபெண்களதுவயிற்றிற்குள்ளாகநான் அழகான உடலெடுத்துவளர்ந்தேன் எ-று. (௧௯௮)

வசையமைந்துநின்றவரலாறுசொன்னேன் வசனித்தேனவரவர்கள்வகையுஞ்சொன்னேன், விசையமெனுமூன்றுக்குள் விரிவுஞ்சொன்னேன் விபரமதநயவர்கள்செய்கைவிளக்கஞ்சொன்னேன், அசைவில்லாமண்டலமூன்றருளுஞ்சொன்னேன் அறிவுடையகோசமைந்துமதீதஞ்சொன்னேன், தசவாய்வுந்தாதுநின்ற தலமுஞ்சொன்னேன் சரீரத்தினின்றதெல்லாஞ் சாற்றினேனே.

(இ-ள்.) ஐந்துவசையங்களிருக்கிறவிதத்தையும், அவரவர்கள்வகையையும் மூன்றுகுணங்களின்விரிவையும், அவரவர்கள் செய்கையையும், மூன்றுமண்டலங்கலின்விரிவையும், ஐந்துகோசங்களையும், அதீதங்களையும், பத்துவாயுவுக்களையும், நாடிகளிருக்கும் இடமுமாகிய சரீரத்தனுள்ளவெல்லாவற்றையுஞ் சொன்னேன் எ-று. (௧௯௯)

அஷ்டகுணராகமெட்டுங்கூறுஞ்சொன்னே னவர்கள்செய்கை விபரமறிந்தனந்தஞ்சொன்னேன், நஷ்டமில்லாநல்வினை தீவினையுஞ் சொன்னேன்நற்குணமுந்துற்குணமுநயந்துசொன்னேன் கஷ்டமெனுமும்மலத்தின்கருத்துஞ்சொன்னேன் கருவறியாமூடர் குணக்காட்சிசொன்னேன், தீட்சையெனுமூன்றெழுத்தின்திறமுஞ்சொன்னேன் திருமுதலாம் வீட்டில்குடியிருந்தேனுண்டே.

(இ-ள்.) எட்டுக்குணங்களையும், எட்டுராகங்களையும் அவரவர்கள் செய்கைகளையும், விவரமாகவுணர்ந்து அநேகஞ்சொன்னேன். நல்வினைதீவினைகளையும் நற்றுணர்க்குணங்களையும், மும்மலங்களின் கருத்தையும், கருவுகள் தெரியாதமூடர்களின் குணங்களையும் தீட்சைமூன்றெழுத்தின் வலிமையையும் அழகியமுதல்வீட்டில் குடியிருந்ததையுஞ் சொன்னேன் எ-று. (௨௱)

ஊனிழிந்தவுடலுக்குளுயிரின்வாறு முற்றதுலதத்துவமுந்தொண்ணூற்றாறுந், தானெடுத்தவுறவின்முறைநின்றநேர்மை தனித்தனியேபிறித்துவகைசபையிற்சொன்னேன், தேனருவிபாயும்திருநாட்டுக்குள்ளே சேர்ந்தெழுந்தகருவியெல்லாஞ்சேர்க்கையாக, கானெடுத்தவுடலுமிந்தப்படியேயாச்சு நயந்தருளுமாண்டகுலமறிகிலேனே.

(இ-ள்.) உடலுக்குள்ளிருக்கும் உயிர்தன்மையையும், தொண்ணூற்றாறு தத்துவங்களையும், சுற்றத்தார்கள் நின்றவிதத்தையும், தனித்தனியேபிரித்து சபையின்கண்சொன்னேன், தேனுனது அருவியைப்போல் பாய்கின்ற திருநாட்டுக்குள்ளே சேர்ந்துண்டானகருவிகளையெல்லாம் நன்றாகச்சொன்னேன்

கொச்சகம்.

வறுமைதவிர்ந்துமிக வாழ்நாடிவீதியில்யான்
கர்மவினையாலுங் கட்டிவிட்டேன்கருவீடாய்
பெருமையுடனேமகிழ்ந்து பேருய்வளர்ந்ததினால்
அருமைகுலையாமலே யம்பிகையைம்போற்றினேனே.

(இ-ள்.) தரித்திரம்நீங்கிவாழ்கின்றநாட்டுத்தெருவில்நான்கர்மவினையால் கருவீடொன்றுகட்டிவிட்டேன். அவ்வீடானது பெருமையுடன்மகிழ்ந்துவளர்ந்ததினால் அருமைகெடாமல் அம்பிகைப்பெண்ணைத் துதிசெய்தேன் எ-று.

திரைபோட்டுஆடுகின்ற தில்லைவனச்சோலையினான்
கரைபோட்டணைகோலி காயாபுரிநாட்டில்
உரைகேட்கன்றவெளி யுற்பனமாந்தற்பொருள்கண்
டறைவீட்டுக்குள்ளிருந்து வம்பிகையைப்போற்றினனே.

(இ-ள்.) திரைச்சீலையாடுகின்ற தில்லைவனச்சோலையின்கண் நான்கரையைப்போட்டு அணைகோலி காயாபுரிஎன்கிறநாட்டில் பலர்சொல்லையுங் கேட்டு அகன்றசிதாகாசமாகிய ஞானப்பொருளின் விசேடத்தைக்கண்டு மூடிய அறைக்குள்ளிருந்து அம்பிகைப்பெண்ணைப் போற்றினேன் எ-று. (௨௱௧)

நங்கைசங்கையில்லாத ஞானதிருவீட்டிலும்யான்
கெங்கைக்கரையிருந்து கேளிக்கையாடையிலே
அங்கத்திருக்கோயி லம்பிகைப்பெண்மாதருளால்
பங்கம்வராமலுமே பதியிற்குடியிருந்தேன்.

(இ-ள்.) அம்பிகைப்பெண் எழுந்தருளியிருக்கின்ற ஆசங்கை யில்லாத அழகியஞானவீட்டிலும், கங்கைக்கரையிலும் இருந்து கேளிக்கையாடும்போது அப்பெண்மணியின் திருவருளால் யாதொருகுற்றமும்வாராமல் அந்தப்பதியில் குடியிருந்தேன் எ-று. (௨௱௪)

சித்திரதனுக்கோடியெனுஞ் செங்கநதிகெங்கைவளர்
பத்திரமாயானிருந்தே பங்கமதுவாராமல்
நித்திரையுஞ்சொப்பனமு நேர்மைகடந்தேவெளி
சத்தியெனுமம்பிகைப்பெண் தாள்பணிந்துபோற்றினனே.

(இ-ள்.) அழகியதநுவின் முனையென்கிற செங்கநதியின்கண் யாதொரு பங்கமும்வாராமல் பத்திரமாகநானிருந்தேன், அப்போதுசழுத்தியும் சொப்பனமும்கடந்து ஏகவெளியாகிய அம்பிகைப்பெண்ணின் திருவடிகளைப்பணிந்து துதிசெய்தேன் எ-று. (௨௱௫)

ஆறாய்ப்பெருகதி யங்குவளர்கெங்கையில்வாழ்ந்
தோராயிரக்கமலத் தொன்றிருநாலுந்தியின்கீழ்
மாறுதருந்தவஞ்செய் மாமதுரவம்பிகையை
நேராய்ப்பணிந்துவருள் நின்றுவரம்பெற்றேனே.

(இ-ள்.) ஆற்றைப்போல்பெருகுகின்ற கங்காநதியின்கண் வாழ்ந்து அங்கே ஒரு ஆயிரம்தாமரைகளையுடைய உந்திக்கமலத்தின்கீழ் ஒழியாமல் அரிய தவத்தைச்செய்கின்ற தேன்போலினிக்கும் அம்பிகையை நேராக நின்று பணிந்து திருவருள் வரம்பெற்றேன் எ-று. (௨௱௬)

வெண்பா.

விரிவாந்தருவெளி வெய்யனொடுங்குகின்ற
கருவாமபெருங்குழியில் கால்வளர்ந்தே-னறிவாக
சிரசுரூபமான தேனொழுகுமண்டபத்தில்
வாசுரூபமாய்வளர்ந்து வந்தேன்.

(இ-ள்.) விசாலமாகிய தருவெளியின்கண் சூரியனொடுங்குகின்ற கருவாயாகிய பெருங்குழியில்காற்றாகவளர்ந்தேன். அறிவையடையும்பொருட்டுசிரசுஉண்டாகிய தேன் ஒழுகுகின்றமண்டபத்தில் அரசுரூபமாய்வளர்ந்துவந்தேன்

நால்வாங்கிநின்றதொரு நாய்யதிருவீட்டில்
கால்வாங்கிவன்னிக் கலந்தே-மேல்வாங்கி

அன்னைசிறுவம்பிகையி ஞத்தாளருட்கமலம்
என்னையழைத்தமு தீந்தாள்.

(இ-ள்.) நூல்போலுஞ்சரமாறி நின்றதாகிய நுண்மையான அழகியவீட்டின்கண் சரத்தைப்பிராணாயாமஞ்செய்து அக்கினியோடு கலந்து மேலேவாங்கி அன்னையாகிய சிறுவம்பிகைப்பெண் என்னையழைத்து அமிர்தங் கொடுத்தாள் எ-று. (௨௱௮)

கலித்துறை.

வாங்கித்திரைகொண்டு வம்பிகைபாத மலரடியில்
தேங்கித்தெளிந்து சிவநாதவிந்து சிறுவரைக்குள்
ஓங்கிவளர்ந்து வொருகொழுந்தோடி யுலகமெல்லாம்
தாங்கிப்படர்ந்து சதுர்மேற்குடியிற் றவமிருந்தே.

(இ-ள்.) சரத்தைப் பிராணயாமக்கிரமப்படியேவாங்கி அங்கேசிதாகாசத்திலிட்டிருந்த திரைச்சீலையை நீக்கிக்கொண்டு அம்பிகைப்பெண்ணின் திருவடித்தாமரையில் படிந்து அதின்குணங்களைத்தெளிந்துநாதவிந்துவாகியசிறிய அறைக்குள்வளர்ந்து ஒருகொழுந்தோடி உலகமெல்லாவற்றையுந்தாங்கிப் பரவி நாற்கோணத்தின்மேல் குடியிருந்து தபஞ்செய்து எ-று. (௨௱௯)

அழியாதமூலக் கருவீடுதன்னி லமைத்தவிந்து
செழிவானநாத முறைந்திடும்போது சிவமதற்கு
கழியாதவெட்டுங் கழிந்திடினுங் கருத்தினில்தான்
ஒழியாததுநின்று வயதேயதற்கு வுரைசெய்வேனே.

(இ-ள்.) என்றுமழியாதகருவீடாகிய மூலாதாரத்தில்வந்த விந்துவும்நாதமும் ஒன்றாய்ச்சேருங்காலத்தில் அதற்குச்சிவமென்று பேராகும். அதுஎண்வகைக்குணங்களும் கழிந்துவிடும்நாளில் கருத்தில்நீங்காமல் நின்றுவருகின்ற அதற்குவயது சொல்லுவேன் எ-று. (௨௱௰)

மருவிப்பிறந்த வலங்காரவீதி மாளிகையில்
உருகித்தெளிந்து வொருதுளிபாய்ந்த வுடலுயிராய்ப்
பெருகித்ததும்பி மயிர்ப்பாலப்வகைப் பெருங்கரைமேல்
கருவிப்பலகுலத் தாலேயுடலொன்று கண்டுகொண்டே.

(இ-ள்.) இங்ஙனஞ்சேர்ந்துபிறந்த அலங்காரவீதியிலுள்ள மாளிகையில் உருகித்தெளிந்து ஒருதுளிபாய்ந்து உடலும்உயிருமாய்பெருகி மயிர்ப்பாலமாகிய வகைக்கரையின்மேல் பலகுலத்தால் உடலொன்று எடுத்தது எ-று.

விருத்தம்.

உண்மையெனுங்கருவிகள் தான்தொண்ணூற்றாறு முடலெடுத்த நேர்மையெல்லாமுறையாய்ச்சொன்னேன், நன்மையுள்ளநாதவிந்து கூடும்போதுகல்வினையுந்தீவினையுமமைத்தவாறு, தண்மையுள்ளஜெக

சோதிவகுத்தவீட்டில் சமைந்திருந்தமைந்தருக்கு வயதுஞ்சொல்ல வண்மையெனுமம்பிகைப்பெண்ணருளினலே வசனித்தேனறிந்தமட்டும்வசனித்தேனே.

(இ-ள்.) தொண்ணூற்றாறுகருவிகளையும், சரீரமெடுத்தவிதத்தையும் முறையாய்ச்சொன்னேன், நன்மையாகியநாதமும் விந்துவும் சேருமபோது நல்வினையும் தீவினையும் உண்டானவிதத்தையும்சொல்லி சர்வேஸ்வரனல் உண்டாக்கப்பட்டவீட்டில் இருந்த மைந்தருக்கு வரும்வயதை அம்பிகைப்பெண்ணின் அருளால் அறிந்தவரைக்குஞ் சொன்னேன் எ-று. (உகஉ)

ஊனெடுத்துவுலகுக்குளுதித்தபால னொருமூன்றுதிங்களினில் மடிந்தவாறும், கூனுடனேகுருடுசெவிடானவாறுங் குறைந்துகைகால்சப்பாணியானவாறும்,வானெடுத்துவாறுதிங்கள்மடிந்தவாறும் வளர்பத்துதிங்கள் சென்றுமாண்டவாறும், தானெடுத்துப்புவிதனிலேபிறந்தவாறுஞ் சவமாகிநின்றதுவுஞ் சாற்றுவேனே.

(இ-ள்.) சரீரமெடுத்து உலகத்திற்குள்பிறந்தபாலன் மூன்றுமாதங்களிலிறந்தவிதத்தையும், கூன், குருடு, செவிடு,ஆனவிதத்தையும்,கைகால்சப்பாணியானவிதத்தையும், ஆறுவதுமாசத்திலிறந்தவிதத்தையும், பத்தாவதுமாதத்திலிறந்து மீண்டும்பிறந்து இறந்ததுஞ்சொல்லுவேன் எ-று. (உகந)

பத்துவயதானபின்பிறந்தவாறும் பருவத்தில்பதினைந்தில்மடிந்தவாறும், மற்றுமொருவிருபதிலேமாய்ந்தவாறுமறுவிருபத்தஞ்சதிலேமடிந்தவாறும், சித்ததிதமுப்பதிலேசெடமுமாய்ந்துசெப்பிடில்முப்பதுவுவஞ்சில் செத்தவாறும், உற்றதொருநாற்பதிலேயுயிர்போமாண்டு வுயர்கின்றவைம்பதிலே யுடல்போமாண்டே.

(இ-ள்.) பத்து, பதினைந்து, இருபது, இருபத்தைந்து, முப்பது, முப்பத்தைந்து, நாற்பது, ஐம்பது, இவ்வயசுகளில் இறந்துபடுவதுமுண்டு எ-று. ()

அன்னையெனுங்கருவதனிலுதித்துப்பாரிலவதரித்துஐந்துபத்திலிறந்தவாறும், வின்னமாயறுபதில்மடிந்தவாறு மிகவறுபத்தஞ்சதிலேமாய்ந்தவாறும், இன்னவிதமெழுபதிலுமிறந்தவாறு மெழுபத்தஞ்சதுவுமதில் மாண்டவாறும், சொன்னவிதமெண்பதிலுஞ் சொக்கும்வாறுந் தொண்ணூறுஞ்சென்றபின்பு சொல்வேனுண்டே.

(இ-ள்.) தாயின்கருவின்கண் அவதரித்து அறுபது,அறுபத்தைந்து எழுபது, எழுபத்தைந்து, எண்பது, தொண்ணூறு, இவ்வயசுகளிலும் இறந்துபடுவதுண்டு எ-று. (உகரு)

பூவாகிபிஞ்சதிலேமடிந்தவாறும்பூத்தமலர்காயாமல்போனவாறும், மாவாகிகருக்குழியில்கரைந்தவாறுமரக்கொடியோடேமடிந்துதாய்ந்தவாறும், மேவிநின்றுவிரைப்பழுதாங் போனவாறும் விரைத்

தவிரையை முளைத்துவிளைவித்தவாறும், பாவாகியச்சதிலே பூட்டி செய்துபடைத்தகரு விபரமதைப்பகர்வேனண்டே.

(இ-ள்.) பூ, பிஞ்சு, பூத்தமலர்காயாமல் போனதும், மாவாகிக்கருக்குழியில்இறந்தவிதத்தையும், மரத்தின்கொடியோடு காய்த்தவிதத்தையும்விரைப்பழுதால் போனவிதத்தையும், விதைத்தவிரைமுளைத்து விளைவித்தவாறும், அச்சிலேபாவாகப் பூட்டிசெய்து படைத்தகருவின் விவரத்தை இனிமேல் சொல்லுகிறேன் எ-று. (உ௧௬)

ஆயுர்விர்த்தி-தரு.

வயதுசொல்லுகிறேன்-நூருண்டுக்கும்-வயதுசொல்லுகிறேன்.

(இ-ள்.) நான்மனிதர்கட்கென்று ஏற்படுத்தியிருக்கின்ற நூறுவருஷங்களுக்கும் வயதுசொல்லுகிறேன் எ-று.

வயதுசொல்லுவேனினிநாதமும்விந்துவு மாதர்கருக்குழிவீதி விட்டேகிபான், துயரமைத்துச்சுழிவீட்டுவாசலில்துய்யசெகப்புடன் வெள்ளையுங்கூடிப்பின்,உழுதுபயிரிடுமம்பரவீதிவிட்டோங்கிச்சுழிமுனைத்தாங்கிமேடேறிகாண், அழுதாத்துமத்தின்கருவியின்பாசமறிந்திடுபூருவமத்தலமாறியே. வயது

(இ-ள்.) நாதமும், விந்துவும், விளங்குகின்றபெண்களுடைய கருக்குழியைவிட்டு நான்வெளியில்வந்து சுழிமுனையாகிய வீட்டுவாசலில் செவப்பாகிய நாதத்துடன் வெள்ளையாகியவிந்துவுங் கூடிப்பின் உழுதுபயிர்செய்கின்றஅம்பரவீதியைவிட்டு வளர்ந்து சுழிமுனையைத்தாங்கி மேட்டின்மேலேறு ஆத்மதத்துவத்தின்கருவிகளை பாசமென்றுஉணர்ந்திடும்பூர்வதலங்களைமாறி எ-று.

நூற்றொருமாவினில்வேற்றுமையில்லாமல் வீற்றிருக்கும்விந்து நாதமுங்கூடினுல், சாஸ்திரவேத சடாக்ஷரமந்திரந் தப்பாதுவயது நூறுகாணுண்டையே, சித்திரமாளிகையில்பத்திப்பிராணவாய்வுவித்துடனுதம் விளக்கியேமேவிடில், சுத்தயான்யோகி சுகாதீதஞானிகளத்தன்செயல் நூற்றைம்பதுவயதுகாண். வயது

(இ-ள்.) சாஸ்திரங்களில் சொல்லுகிறபடி வேற்றுமையில்லாம லிருக்கின்றவிந்துவும் நாதமுங்கூடினுல் வேதத்தில்விதித்த கிரமப்படிவயதுநூருகும் விந்துநாதங்களில் பிராணவாயு கலந்தோடினுல் நூற்றைம்பதுவயதுள்ளயோகியாவன் எ-று, (உ௧அ)

ஆராய்ப்பிருதிவுமோடிக்குறையாமலங்குலம் பன்னிரண்டாகவும்பாய்ந்திடில், நேராகுமெண்ணரைநாழிகையோடிடில் நிர்ணயம் வயதுநூருண்டையதப்பாது, பாரறியும்பிருதிவியுமப்புவில்பாய்ந்திடினும் விந்துநாதமுங்கூடிடில், சீரறியுங்கிரியைவாசிவசமதாய் சித்திபெறும்வயது நூற்றைம்பதாண்டையே. வயது

(இ-ள்.) வாயு பிருதிவியில்குறையாமல் ஓடி பன்னிரண்டங்குலம்பாய்ந்தால் வயதுநூறாகும், அப்புவில் பாய்ந்தால் நூற்றைம்பதுவயதாகும் எ-று.

இப்புனில்பாய்வதுமசைகின்றபோதினிலக்குவப் பதினொன்றாக
வும்பாய்ந்திடில்,மெய்ப்பாகவொண்ணேகால்நாடிகையோடிடில்மே
தினியோர்கள் வயதெண்பதாண்டையே, ஒப்பிலாவப்புவிலோடிய
பானுமோங்கிப்பாய்ந்துவோராறுமீராறதாய், இப்படிநாதவிந்தேகி
யிளகிடி விதுவயதெழுபதிருப்பதுமாண்டையே. வயது

(இ-ள்.) அப்புவின் வாயுகலக்கின்றகாலத்தில் பதினொராங்குலம் ஒன்றேகால் நாழிகையாயுமானல் வயதுஎண்பதாகும், அப்புவில் அபானன் ஒருவழியிருவழியாகப்பாய்ந்து நாதவிந்து இளகினல் எழுபதுவயதாகும் எ-று.(௨௨௦)

கூறியலாய்வுபத்தங்குலம்பாய்ந்துக் குறைந்துநாலங்குலமோடி
க்சழிந்திடில், மாறியமைந்தர்க்குவபதெனுங்கொஞ்சம் வகுத்தேன்
புவியிலுரைத்தேன்காணண்டையே, தேறியபானனுதானனிடத்திற்
சிநேகிதஞ்செய்து வெட்டங்குலம்பாய்ந்திடில், சீறுமஞ்சங்குலமோ
டிக்கழிந்தபின் செய்வினை தந்தையால் பைவினையாண்டையே.வயது

(இ-ள்.) அபான வாயுபத்தங்குலம் பாய்ந்து நாலங்குலமோடிச்செலவாய் விட்டால் வயது கொஞ்சமாகும். அபானன் உதானனிடத்தில் சிநேகஞ்செய்து எட்டங்குலம்பாய்ந்து அஞ்சங்குலம் வெளிப்பட்டுச்செலவானல்தந்தையாலுண்டான வினையின் பலநேர்த்த தேசமாகும் எ-று. (௨௨௧)

தேய்வினில்வாய்வுவசைகின்றபோதினில்சேர்ந்தொருநாழிபத்
தங்குலமோடிடில், மெய்யுடல்விந்துநாதமுங்கூடினல்வீணல்லவயது
ஆறுபத்தாண்டையே,பாயும்பிராணனபானனுஞ்சேர்ந்திடில் பாவி
யேவிந்துவுநாதந்தொடங்கிடில், மாயுங்கருவிவெவ்வேறதுவாகிப் பி
ன்மைந்தர்க்குப்பாதி மரணம்வந்தெய்துமே. வயது

(இ-ள்.) தேயுவினில்வாயுவானது அசைகின்றபோது பத்தங்குலம் ஒரு நாழியோடினல் விந்துவும்நாதமுங்கூடினல் வயதுஅறுபதாகும், பிராணனும் அபானனுஞ்சேர்ந்து விந்துவும்நாதமுங்கூடினல் பாதிவயதில்மரணஞ் சம்பவிக்கும் எ-று. (௨௨௨)

சொல்லும்பத்தங்குலமோடியெட்டங்குலந்தொங்கிச்சுழித்துச்
சிதறிக்கடிந்திடில்,மெல்லியின்கெர்ப்பந்தரித்திடும்போதினில்விரை
ந்துவயதுகுறைந்திடுமாண்டையே,மொல்லல்செய்பிராணவாய்வுமெ
ட்டங்குலம்கூதிரண்டங்குலந்தூறியேபாய்ந்திடில், வல்லியின்கெர்ப்
பம்வயிறிடிகண்டுமயங்கி வயதுதியங்கிடுமாண்டையே. வயது

(இ-ள்.) சொல்லுகின்ற பத்தங்குலம்ஓடி எட்டங்குலம் தொங்கிச் சுழித்துத் தெறித்துக்கடிந்தால் கெர்ப்பந் தரிக்கும்போதே வயது குறைந்துவிடும்,

பிராணவாயுவானது எட்டங்குலம்பாய்ந்து இரண்டங்குலம்மோடி வெளிப்படு மானல் அப்பெண்ணின்வயிற்றில் நோய்கண்டுகர்ப்பம் அழிந்திடும் எ-று. ( )

வாய்வினில்வாய்வுஅசைந்துறவாடிபின் னுழிகைமுக்காலொன் பதங்குலம்பாய்ந்திடில், தாயினீர்நாதமும்விந்துந்தரித்திடில் தப்பா துவயதுமும்பதாம்மாண்டையே, பாய்ந்திடும்பிராணன்வியானனுங் கூடிப்பின்பாங்காய்நாதவிந்திலாறுமுணடங்குலம், தாழ்ந்துநெட்டி ட்டுக்கருவிலமைம்பதுந்தான்வயது முப்பத்தஞ்செனுமாண்டையே

(இ-ள்.) வாயுடன்வாயுச்சேர்ந்து உறவாய்ப்பின்னுழிகை முக்கால்வரைக் கும்ஒன்பதங்குலம் பாய்ந்தால் அப்பொழுது நாதமும்விந்துவுங்கூடினல் முப் பதுவயதாகும், பிராணனும் வியானனும் நாதவிந்துக்களில் ஆறங்குலம் வரை க்கும் தாழ்ந்து கெட்டிட்டுவதினல் முப்பத்தைந்து வயதாகும் எ-று. (உஉச)

ஆகாசம்வாய்வுதசைந்துறவாகிடி லரைநாழிவிந்துரெண்டங்கு லம்பாய்ந்திடில், சாகாதுநாதமும்விந்துந்தரித்திடுஞ் சார்வாகும்வய துமுப்பத்தெட்டாண்டையே, வேதமதாகியகூர்மன்கிரிகரன் விந்து நாதத்தினில்மிகுத்தெழுவங்குலம், வாகமதாகியரைநாழிகை பின்பு வளர்ந்துபாய்ந்திடில் வயதுகாணுற்பதே. வயது

(இ-ள்.) ஆகாசமும், வாயுவுமுறவாகிவிந்துவில் அரைநாழிகைவரைக்கும் இரண்டங்குலம்பாய்ந்தால் முப்பத்தெட்டுவயதாகும் கூர்மனும், கிரிகரனும் விந்து நாதங்களில் அரைநாழிகைவரைக்கும் எழங்குலம்பாய்ந்தால் நாற்பது வயதாகும் எ-று. (உஉச)

அக்கினியாகிபசுழியின் முனைதன்னிலடர்ந்துவாய்வு அரையங் குலமோடிடில், சித்தியநாதமுமவிந்துந் தரித்திடுஞ்சிதறிக் கருவிலு றைந்திடுமாண்டையே, தக்கபுகழுஞ்சுழிமுனை தன்னில்தயவாகவாய் வுமிணங்கியபோதினில், பக்கஞ்சிதகியேபாய்ந்திடிலும்பின்பு பாக மாய் விந்துகரைந்திடுமாண்டையே வயது

(இ-ள்.) சுழிமுனையில் வாயுஅடர்ந்து அரையங்குலமோடினல் நாதவிந் துக்கள் சிதறிக்கருவிலமைந்திடும், சுழிமுனையில் வாயுசேர்ந்தால் பக்கத்தில் பாய்ந்தால் பின்பாகமாய்விந்துவானது கரைந்திடும் எ-று. (உஉக)

ஓடியேவாய்வதுடனேவிரைந்திடிலோ மென்றநாதமும்விந்துந் தரித்திடில், கூடியதிங்களொன்ணரையதுக்குள் குழவிகரைந்துவெ ளியாகுமாண்டையே, நாடியபக்கால்வாய்வுஞ்சேர்ந்திடில் நாத மும்விந்துநயந்ததுபோகமாய், மேடியேநின்றுமிசவுந் தரித்திடில் விழலாய்கரைந்து விழுந்திடுமாண்டையே. வயது

(இ-ள்.) வாயுவானது ஒடத்தரிதப்பட்டால் நாதமும்விந்துவுந்தரித்தால் ஒன்றரைமாதத்திற்குள் குயந்தைகரைந்து வெளிப்படும். நான்குபக்கங்களிலும் வாயுசேர்ந்தால் விந்துவானது வீணாகக்கரைந்து விழுந்துவிடும் எ-று.

திக்கெல்லாம்வாய்வுசிதறிநடக்கையில் செப்பரிநாதம் விந்துந் தரித்திடில், சக்கல்திருவாய்வுதிங்கள்மூன்றுக்குள்ளே கருகவிசறைந்துவெளியாகுபாண்டையே, சக்கரம்போலுஞ்சுழன்றிடில்வாயுவுந் தாணிரைந்தோடிடில் நாதவிந்தாவதும், பக்ரமுறைதந்துகெர்ப்பங் கரைந்தங்ஙனே பார்க்கத்திங்கள் நாலில்மார்க்கமீ தாண்டையே.

(இ-ள்.) வாயுவானது அஷ்டதிக்குகளிலும் சிதறிநடக்கையில் நாதமும் விந்துவும்தரித்தால் மூன்றுமாதத்திற்குள் கர்ப்பம் கரைந்து விழுந்துவிடும் வாயுசக்கரம்போல் சுழன்றுவந்தால் நாதவிந்துக்கள் பக்த்திலுறைந்து நான்கு மாதங்களில் கர்ப்பம் கரைந்துவிழும் எ-று. (உஉஅ)

உந்தியில்வாய்வுசந்துகெட்டிட்டிடிலோங்காரநாதமும் விந்துந் தரித்திடில், சந்தேகமில்லைதிங்களொன்றிலெகெர்ப்பமுந்தண்ணீராய்க்கரைந்துவெண்ணீராகுமாண்டையே, கூறியவாய்வுங்குறுக்கேசுழன்றிடில் கொள்கையாநாதமும் விந்துமுதித்திடில், மாறிடுமைந்தனீரொன்பதுதிங்களில் மாளப்பிறந்தினிமாய்ந்திடுமாண்டையே.

(இ-ள்.) வாயுவானது கொப்பூழில்கெட்டிட்டால் அப்போது விந்துவும் நாதமுங்கூடினால் ஒருமாசத்தில் கர்ப்பங்கரைந்துவிழும் வாயுவானது குறுக்காக சுழன்றால்கூடும் நாதவிந்துக்கள் சேர்ந்து பிறந்தால், பதினெட்டுமாதங்களில் உயிர்விடுவதுண்மை எ-று. (உஉகூ)

தூறியகுண்டலிவட்டத்தினுள்ளே சுழித்திடும்வாய்வு முதித்திடும்போதினில், வேறில்லைகெர்ப்பந்தரித்துப்பிறந்தபின் மெய்யாய் திங்களொன்றய்யவேமாண்டிடும், தில்லைப்பதிதெனு மெல்லையில் வாய்வுசெழித்துநடக்கையில்சேர்ந்துநாதவிந்து, வல்லமையாகத்தரித்துப்பிறந்தபின் வருஷமீராண்டினில்மாண்டிடு மாண்டையே

(இ-ள்.) குண்டலிவட்டத்தினுள் வாயுவானது சுழித்துப்பிறந்தால் அக்குழவிபிறந்த ஒருமாதத்திற்குள் இறக்கும். ஆகாயத்தின்கண்வாயுவானது செழித்து வடக்கையில்பிறந்து உருவானகுழந்தை இரண்டுவருஷத்தி லிறக்கும்.

செல்வ ஆணும்பெண்ணுஞ்சேர்ந்துரதிகேளி சித்திரலீலைசெயில் செயவிந்துநாதமும், தொல்லைமைந்தன்பிறந் தல்லல்வயதொன்றில் சொன்னேன்மடிந்திடில் சூதில்லையாண்டையே, வல்லமையாய்வந்து வாழ்பவித்தாசையால்மாதர்மயல்கொண்டணுகிடாமல்மனம்தொல்லைவாராதெனுந்திங்களோராண்டினில்தோகைபெனும்புணர்ந்தோர்களின்வல்லமை.

வயது

(இ-ள்.) புருஷஸ்திரீகளிருவரும் சித்திரலீலைகள் செய்தால் மைந்தன் பிறந்துவயதொன்றில் மடிந்திடுவான், பெண்கள்மேல் மயக்கங்கொண்டுபுணர்ந்தோர்களின் வல்லமையால் ஒருவருஷத்தில் குழந்தைபிறக்கும் எ-று. ( )

போதும்போதாதொருவாண்டுதசையெனும்போகிபோகமிது பிசகாதிடில்,எதுவூழ்வினையாகமத்தோர்சொலுமேதுவினைப்பயனேதுபிணிவரா, மாதுபோகந்தசத்திங்களீரைஞ்சுதான்வாததேகிவலுவாகுநூறாண்டுக்கும், சாதுசாத்தியகுணதாதுவலுத்திடுந்தந்தையிந்தமநிலைமைந்தன்பிறவியே வயது

(இ-ள்.) ஒருவருஷம்வரைக்கும் பிசகாமல்போகித்தால் எப்படிப்பட்டவினையுமணுகாமல் வலுத்ததேகமாய்ப்பிறந்து நூறுவயதுவரைக்கும்தேகம்வலுத்திருக்கும். இதுதந்தையின்மதியால் மைந்தன்பிறந்ததாகும் எ-று. (உசஉ)

விருத்தம்.

மூலமதில்வாய்வுநின்றிலங்கும்போதில்முதலான நாதவிந்துநித்தநேர்மை, ஆலவிடங்கடித்ததுபோது லாண்டுமூன்றிலதுவுயிர்போமைந்தன்மடித்தாக்கைவேறும், ஞாலமுடன்வாய்வுசுழிசிதறியோடில் நாதவிந்துநித்துவயதஞ்சில்மாள்வான்,கோலமுடன்குண்டலியில்வாய்வுமோடில் கொடியமைந்தன்வயதெட்டில் மாய்ந்தவாறே.

(இ-ள்.) மூலத்தில்வாயுவிருந்து விளங்கும்போது முதலானநாதவிந்துக்களால் உண்டானஜென்மமானது மூன்றுவதுவயதில் மடியும், வாயுவானது சுழிமுனையின்கண் சிதறிச்சிதறியோடினால் அப்பொழுதுதரித்த குழந்தையானது ஐந்துவயதில்மரணமாகும். குண்டலியினிடத்தில் வாயுஓடினால் அந்தக்குழந்தை எட்டாவதுவயதில் மரணமாகும் எ-று. (உகூகூ)

குறித்துநின்றுவாய்வுந்திக்கமலந்தன்னில்குமுறியேநாதவிந்துதரித்ததாகில், வறிதாகுமைந்தருக்குவயதீரைஞ்சுவாய்வுஞ்சுழியடங்கில் வயதிருபத்தைஞ்சு, பரியவட்டச்சுழினைவிட்டுவிடத்தில் வாய்வுபாய்ந்திடவு நாதவிந்துபதினாறென்க, நெறியானவாயுவிடைபின்னிட்டேறில் நிலைக்கின்றநாதவிந்திருபதாண்டே.

(இ-ள்.) வாயுவானது உந்தியில்குமுறியோடும்போது நாதமும்விந்துவுஞ்சேர்ந்தால் பத்துவயதில்மரணமாகும் வாயுவானது சுழிமுனையில் தம்பித்தால் இருவத்தைந்து வயதில்மரணமாகும், வாயுவானது சுழிமுனையில்விட்டு இடதுபக்கத்தில் வேகத்தோடுபோய்ந்தால் பதினாறுவயதில் மரணமாகும், வாயுவானது இடைகலையிலிருந்து பின்கலைக்கு எதினால் இருபதுவயதில் மரணமாகும்

கங்குல்பகலற்றவிடந்தன்னிலேதான் கருதிமுனையாடுகின்றநாதவிந்து, சங்கையில்லாதிபோகஞ்செய்யும்போதுதாதுவிந்துகருவூறிலுதித்தசங்கை, இங்கிதமாயிடைகலையிலுதிக்கப்பெண்ணாமியல்வா

சப்பின்கலையி லுதிக்க ஆணும் அங்கமதாயுபையத்தி லுதிக்கமேலும் ஆணிரண்டுமொருவழியிலமைத்தவாறே.

(இ-ள்.) இராப்பகலற்றவிடமாகியசிதாகாசத்தின்கண்வாயுவானதுவிளங் கும்போது போகஞ்செய்தால் அந்தவிந்துவானது வாயுஇடைகலையிலோடும் போதுபாய்ந்தால் பெண்குழந்தையும், பிங்கலையிலோடும்போது பாய்ந்தால் ஆண்குழந்தையும், இரண்டுகலையுமொத்து நடக்கும்போது பாய்ந்தால்அலியு மாய்பிறக்கும் எ-று. (௨௯௫)

எழுந்ததிருமண்டபத்திலிருந்தநாத மியல்பானகருவூரி லுதிக்கும் போதில்,கொழுந்துமதியிடைகலையில்பெண்ணேயாகுங்குறைவில்லல் ப்பின்கலையிலாணேயாகும், வழிந்தெழுந்தவிருகலையி லுதித்ததானா வசனித்தோய்பெண் ணுடனேயாணேயாகும், செழுந்தெழுந்தசாதி வகை யிரண்டுஞ்சொன்னேன் ஜெகநாதர்கிருபையினால் தெளிந்த நாலே.

(இ-ள்.) உண்டான அழகியஸ்தானத்திலிருந்தநாதமானதுகருக்குழியில் பாயும்போது இடைகலையானால்பெண்ணும் பிங்கலையானால்ஆணுமாகும்.இர ண்டுகலையுமொத்து நடக்கும்போதுஆனால் அலியுமாகுமென்று ஜெகநாதர் கிருபையால் சொன்னே எ-று. (௨௯௬)

உதித்திலகுநாதவிந்துவட்டந்தன்னி லுட்புகுந்தகருவூரி லுதித் தபோது, துதித்திலகுஞ்சூரியனில்வாய்வுசேர்ந்தால் சுழிகலையுமாறி னதாலிரண்டுமாணும்,விதித்திலகுஞ்சந்திரனில்வாய்வுசேர்ந்தால்விக ற்பமில்லாப்பெண்ணிரண்டுமுதிக்கலாகும்,கதித்திலகும்பலபலவாய் நின்றதானால் காற்றதினாலாகாதரவியுமாமே.

(இ-ள்.) உண்மையால்விளங்குகின்ற நாதவிந்துக்களின்வட்டத்தில் உள் புதந்தகருக்குழியில் பிறந்தபோது வாயுவானது சூரியனிற்சேர்ந்தால் ஆணா கும், சந்திரனில்வாயுசேர்ந்தால் பெண்ணாகும், இன்னும்பலபலவிதமாய்வாயு சேர்ந்தால் பலபலவிதமாகக் குழந்தைகள்பிறக்கும் எ-று. (௨௯௭)

கொச்சகம்.

வேதமறைக்கெட்டாத மிகுத்தகருவூர்வெளியாம்
நாதமுடன்விந்ததுவு நடுவணையிற்சேர்கையிலே
சூதாகுநாடிசிறு துடித்தேவகுத்ததென்றால்
பேதமில்லையாணானால் பிறமுகமும்பாராரே.

(இ-ள்.) வேதங்களுக்கெட்டாத கருவூர்வெளியில் நாதவிந்துக்கள் நடுவ ணையிற்சேர்கையிம்நாடியானதுசிறிதாய்துடித்துவகுத்ததானால்ஆனால்யாதொ ருவித்தியாசமுமில்லை, ஆனால் அவன்வயதில் பிறர்முகத்தைப்பாரான் எ-று.

சக்கரநின்றாடுகின்ற சத்தமுயர்வீட்டிலொரு
சுக்கிலசுரோணிதமுந் துய்யக்கருவூர்தனிலே

அக்கரயாம்பின்கலையு மதிர்ந்துதுடித்துதென்றால்
திக்கினியப்பெண்ணால் திருட்டுமிகச்செய்வாரே.

(இ-ள்.) சக்கரத்தின்கண் ஆடுகின்றஉயர்ந்தவீட்டில்சுக்கிலசுரோணிதஞ் சேர்ந்தகருவூர்வீட்டில் பின்கலையிலதிர்ந்து துடித்ததானால் பெண்பிறக்கும், ஆனால்மிகுந்த திருட்டுவேலைசெய்வாள் எ-று. (உங்க)

நிலையாய்கலையோதி நின்றுதிருவீட்டிலொரு
அலையாதநாதவிந்து அணிவரையிற்சேர்கையிலே
துலையாமிடதுகலை துரியமதிலேயிரண்டால்
விலைமதிக்குமாணாகும் வெகுதிருட்டுசெய்வாரே.

(இ-ள்.) சாஸ்திரங்களில்சொல்லப்படும் அழகியவீட்டிலிருந்து நாதவிந்துக்கள்சேர்கையில் இடைகலைப்பக்கமாகச்சேர்ந்து துரியஸ்தானத்தில் பிறழ்ந்தால் ஆண்பிள்ளைபிறக்கும், ஆனால்மிகுந்த திருட்டுவேலை செய்வான் எ-று.

வெண்பா.

சண்டவெளிதாரகையில் சச்சிதாநந்தமதில்
கொண்டலெனுநாதவிந்து கூடினால்-ஒன்றதுவும்
முட்டிசுழிநாடி மூன்றுந்துடித்தக்கால்
வெட்டிமடிந்திடுவார் வீண்.

(இ-ள்.) மிகுந்தவெளியாகிய நட்சத்திரம்பொருந்திய சச்சிதாநந்தத்தில் நாதவிந்துக்கள்சேர்ந்தால் அப்பொழுது அந்தவிந்துநாதங்கள் சுழிமுனையில் முட்ட அதனால் நாடிமூன்றுந்துடித்தால் பிறப்பவர்கள்வீணாக வெட்டி மடிவார்கள் எ-று. (உசக)

அரியயனுங்காணாத ஆதிதிருநாதவிந்து
மரியதனுவீட்டில் வருமோ-குறியாக
வளருஞ்சுழிமுனைதான் மாறிதுடிதுடித்தால்
கழுவிலுயிர்விடுவார் காண்.

(இ-ள்.) விஷ்ணுபிரமர்களால் காணப்படாத முதன்மையாகிய நாதவிந்துக்கள் அருமையாகிய தேகமென்னும் வீட்டில்குறியாகவளர்ந்தால் அப்பொழுது சுழிமுனையானது மாதிமாறித்துடித்தால் கருவிலேயே மாள்வார் எ-று.

கலித்துறை.

மதிபாதவீட்டி லதிபோகஞ்செய்து மனமகிழ்ந்து
பதியானநாத விந்ததுங்கூடியே பயிராகியபின்
சதியாகநின்று சுழிமுனைநாடித் தயங்கினதால்
கெதிவேறுமில்லை வெகுநோய்கள்கண்டு கிடந்தனரே.

(இ-ள்.) பெரியோர்கள் மதிக்காதவீட்டில் அதிகபோகஞ்செய்து மனஞ் சந்தோஷித்து நாதவிந்துங்கூடிப்பயிரானபின் அதுசுழிமுனையைநாடி மயங்கினதால் அவர்கள்பிறந்தபின்னர் வேறுகதியின்றி நோயால் வருந்துவார்கள்

கருத்தையிருத்தி யனுராகமாய்கை கலக்கையிலே
மருத்தெழுநாதமும் விந்ததுங்கூடி மருவியபின்
அருத்திடும்வாச லப்பாற்சுழிமுனை யசைந்ததென்றால்
தரித்திடுமைந்தர் சுரம்வந்துசூழ்ந்து தயங்குவரே.

(இ-ள்.) மனம்ஒருமித்து அநுபோகமானமாய்கையைச்சேர்கையில்நாதமும் விந்துவுங்கூடியபின் அவ்வாசலுக்குஅப்பால் சுழிமுனையானதுஅசைந்ததானால் பிறந்தபிள்ளைகள் சுரத்தால் வருந்துவார் எ-று. (உசச)

விருத்தம்.

வையமெனும்பதினாலுலகுக்குள்ளே வகுத்தெழுந்தசாதிகுலமாண்பெண்ரெண்டும், சையோகஞ்செய்கையிலேநாதவிந்து தரித்த கெர்ப்பந்தனக்குவயதுரைத்தேன்கேளீர்,குய்யமெனும்வச்சிரப்பை தனில்வளர்ந்தகுழவியர்க்கேவயதின்றகுறியுஞ்சொன்னேன்,மெய்யெனவேயோடுகலைநாலினாலே விளைகின்றபொருளையெல்லாம்விளம்புவேனே.

(இ-ள்.) இந்தப்பதினான்கு உலகத்திற்குள்சாதி, குலம், ஆண், பெண் கர்ப்பத்திற்குவயது இவைகளைச் சொன்னேன், குய்யமென்கிற வஜ்ஜிரப்பையில் வளர்ந்தகுழந்தைகளுக்கும் வயதுசொன்னேன், |இனிநான்குகலைகளினாலுண்டா|கும் பொருளைச் சொல்லுகின்றேன் எ-று. (உசரு)

சுழியெழுத்துமரியெழுத்துமிரண்டுங்கூடி சுக்கிலமே சிவயமெனுஞ் சொல்லும்போது, கழியெழுத்துகாதனாலுலகமாச்சு கனகஜெகசாலமெனுங்காட்டிவைத்து, வெனியெழுத்தாம்அவ்வதிலே உவ்வுங்கூட்டி விளங்குகின்றகுண்டலியிலுதிக்கும்போது,குழியெழுத்தில் வளருகின்றமைந்தர்கெல்லாங் குருடுசெவிடானவகை கூறுவோமே.

(இ-ள்.) சுழியெழுத்தும், அரியெழுத்துங்கூடிச் சிவயமென்று சொல்லும்போது அந்தநான்கு எழுத்தினால் உலகம்உண்டாச்சு கனகசகஜால மென்னும் வித்தையைக்காட்டி அவ்வில்லில் உவ்வைக்கூட்டி விளங்குகின்றகுண்டலிசத்தியில் பிறக்கும்போது குழியில்வளர்ந்த குழந்தைகளுக்கெல்லாம் குருடு செவிடு இவைஉண்டான விதத்தைச் சொல்லுகிறேன் எ-று. (உசசு)

தப்பாதுகருவூரின்வெளியிலேதான் தாண்டியுயர்நாதவிந்துதிக்கும்போதில், வெப்பதிசசப்பாணிநொண்டியாக விதிக்கின்றகருவியிலேவிளங்கும்வாறும், ஒப்பதிதவொருகாலு மொருகைநொண்டியோங்கியொருபுறமுடலுதிக்குநேர்மை,கற்பானகலைநாலில்வகுத்து நின்ற கருத்தையுமேயின்னதென்று காட்டுவேனே.

(இ-ள்.) கருக்குழிக்குவெளியில் நாதவிந்துக்கள்பிறக்கும்போது வெம்மையதிகத்தால் சப்பாணியும், நொண்டியுமாகவிளங்கும், இனி அவயவங் குறைந்து பிறக்கின்ற விதத்தைச் சொல்லுகிறேன் எ-று. (உசஎ)

அவயவங்குறையுமுறை-தரு.

வித்தில்வின்னமெய்துமாண்டே-இனி
வினைப்பயனருளுவேனாண்டே.

(இ-ள்.) விதையில்பின்னம்வருகின்ற வினைப்பயனைச்சொல்லுவேன்எ-று

சோத்திரத்தோடுதொக்குந் தொடாதே தண்டித்துப்போனால் அகம்-வேற்றுமையாயுடல் வேறுகூறுகிடுமாண்டே, மாத்தியசட்சு சிங்குவை யாக்கிராணமருவாதேபோனால்-அந்த-வேற்றிடு நாக்குமூக்கு விழியுங்குறையுங்காணாண்டே. வித்தில்

(இ-ள்.) சோத்திரத்துடன் தொக்கானது தொடாமல் தண்டித்துப் போனால் மனம்வேறுபட்டு உடலும்வித்தியாசமாகும், சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் இவைகள்சேராமற்போனால் நாக்கு, மூக்கு, கண் இவைகள்குறையும்.

சத்தபரிசரூபந்தான துஞ்சாராமற்போனால்-மதி-வெத்திச்செவிடடனே குருடும்விவேகமில்லாததாண்டே-புத்திரசமுங்கெந்தம்பொருந்தாமற்போய்விடுமாகில்-வாக்கு-எத்தனைசொன்னாலுஞ் செவியிசைவுபடாது ஊமையாண்டே. வித்தில்

(இ-ள்.) சத்தம், பரிசம், ரூபம் இவைசேராமற்போனால் செவிடு, குருடு, அறிவீனம் இவைகளுண்டாம் புத்திரசம், கெந்தம் இவை சேராமற்போனால் ஊமையாகும் எ-று. (௨௪௧)

தூக்கியரசமுங்கெந்தந்தொந்தித்திராதெனுமாகில் உடல்நோக்கியகைகாலும் வாய்நொடித்துச் சப்பாணியாமாண்டே-வாக்கியபாதமும்பாணிவ துவுபஸ்தஞ்சேராதென்னில்-லிங்கம்-ஒங்கியசுரணையற்று வொடுக்கங்கொண்டிடுங்காணுமாண்டே. வித்தில்

(இ-ள்.) ரசமும், கந்தமும்சேராவிட்டால் சப்பாணியாகும் பாதம், பாணி உபஸ்தம் இவை சேராவிட்டால் தாதுவிர்த்தியில்லாத பேடியாம் எ-று. ( )

வசனங்கெமனந்தானமதுவுஞ்சேராதிடில்-என்னில்-வார்த்தைமசக்கல்நடத்தவெனில் கொடுத்தல்வாராதுகாணாண்டே-விசர்க்மானந்தமிரண்டுஞ்சேராதிடில்காணும்-மூல-மிசக்கல்மலசலமும்விடுவித்திடாதுகாணாண்டே. வித்தில்

(இ-ள்.) வசனம், கமனம், தானம் இவைசேராவிட்டால் வாக்கு சாமர்த்தியம் முதலியவை உண்டாகா, விசர்க்கம், ஆநந்தம் இவைசேராவிட்டால் மலசலங்கள் வெளிப்படா எ-று. (௨௪௩)

மனமாங்காரஞ்செயலும் வசனித்திராதிடில்வாதம்-கன-கினைவைக்கொண்டுவிசாரித்தியல்புகோபத்தைப்போக்குமாண்டே - செனனச்சித்தமுமற்சிசித்தமுடலும்வேறாய்ச்-சிதறி-இயல்புதினமுமதியுமன்புந்தயவுங் குறைந்திடுங்காணாண்டே. வித்தில்

(இ-ள்.) மானம், ஆங்காரம், செயல்இவைகள்சேராவிடில்மாதாகும், மிக்கபுத்தியைக்கொண்டு விசாரித்தல் கோபத்தைப்போக்கும் செனனம்சித்தம், முயற்சியுடல் இவைகள்சேராவிட்டால் நயைமுதலியவைகுறையும் எ-று.

பரிவாகிடுதல்நெஞ்சமறிவொன்றதுஞ்சேராதேபோனால் -இந்தப்பரியாசம்புவியதனில்பாரிலொன்றுநடக்காதாண்டே, சிறியத்துரியகலை சுழியிற்சேராதிடிலும்போனால்-விழியும்-சிதறிச்சுருங்கியிருமுழியுங்கலங்கிடுங்காணாண்டே. வித்தில்

(இ-ள்.) நெஞ்சமும், அறிவுஞ்சேராமற்போனால் பரியாசம் முதலியவை உண்டாகா, துரியகலையானது சுழியிற்சேராமற்போனால் கண்கலங்கிபோகும்

இடைபின்கலையுஞ்சுழிமுனையுஞ் சேராதிடிலும்வேறாய் இன்பமிடறுங்கூனாய்குருடாய்முருடுமொண்டியுமாகுமாண்டே-திட-சிங்குவைபுருடனிரண்டுஞ்சேராதிடினுமாகில்-அன்னம்-திடப்படாதுசெவியுஞ்சிமிட்டிடாதுகாணாண்டே. வித்தில்

(இ-ள்.) இடைகலை, பிங்கலை, சுழிமுனைஇவைசேராவிட்டால் கூன், குருடு, முருடு மொண்டி இவைகளுண்டாகும், சிங்குவைபுருடன் இவைசேராவிட்டால் செவிகேளாது, கண்சிமிட்டாது எ-று. (உ௫௪)

காந்தாரியத்திரண்டதுஞ்சலந்துறவாடிடாதாகில்-நல்ல-கந்தமுஞ்சந்தஞ்செவியுங்கருதாள்குறைந்திடுகாணாண்டே சுந்தரவலம்புருடன் சங்குனிரெண்டதுஞ்சேராதாகில்-இந்த-மைந்தனிடதுதாள்வாய்தாதுலிங்கம் குறையுமாண்டே. வித்தில்

(இ-ள்.) காந்தாரி, அத்திஇவைசேராவிட்டால்மூக்குவாசனை யறியாது செவிகேளாது, அலம்புருடன், சங்குனி இவைசேராவிட்டால் இடதுகால், இடதுவாய், தாது இவைகுறையும் எ-று. (உ௫௫)

பேதமாகியக்குரோதன்பின்புசேராதிடிலும்போனால்-பித்தும்பிதற்றுஞ்சுரணையற்றுப்பிறியுமறிவுசொக்குமாண்டே-யோதகப்பிராணனபானன்வியானனுஞ்சேராதிடிலுமாகில்-பிரியா-பேதித்துவன்னமுமலம் பிறித்துவிடாதுகாணுமாண்டே. வித்தில்

(இ-ள்.) குருசேராமற்போனால் பித்தல், பிதத்தலுண்டாய்புத்திசொக்கும் பிராணன், அபானன், வியானன் இவைசேராவிட்டால் அன்னமும், மலமும் வேறுவேறுபிரியாது எ-று. (உ௫௬)

உதானனுஞ்சமானன்கூர்மன்னுகந்துசேராதிடிலுமாகில்-சலம்இதக்கமில்லாமல்மனஞ்செலுத்தேப்பமிடுப்பிக்குமாண்டே-கூதனாங்கிரிசரனு மாறியேசேராதிடிலுஞ்சேர்ந்தால்-பார்வை-நீதவிழிமாறிடுஞ் சாதனையிதாகிடிலுமாண்டே. வித்தில்

(இ-ள்.) உதானன், சமானன், கூர்மன் இவைசேராவிட்டால் சலம் எப்பம்வராது, இரிகரன்மாறிச் சேர்த்தால் பார்வைமாறும் எ-று. (உ௩௯)

சத்தமுயிர்தேவதத்தன்வித்திலுஞ்சேராதிடிலுமாகில் நல்லபுத்தியுங் கெட்டாவிவிக்கல் நகைப்புஞ்சிரிப்பில்லைகாணுண்டே-மத்தலத்தனஞ்செயனு மவ்விடர்விட்டதுசோராதாகில்-சுத்தம்- வித்தையும் பத்தியுங்கல்வி விழலாமுள்மாந்தபித்தமாண்டே. வித்தில்

(இ-ள்.) உயிராகிய தேவதத்தன்சேராவிட்டால் புத்தி கொட்டாவி,விக்கல்சிரிப்பு இவை உண்டாகா தனஞ்செயன் சேராவிட்டால் வித்தை, புத்தி கல்வி இவையில்லாயாய் உளமாக்தை, பித்தம் இவைகளுண்டாம் எ-று. ()

வால்வதுவுமீரைஞ்சுவளர்பிறையுமீரெட்டுமோடில்-வாசி-தேய்பிறையுமீராறு தேறுநாடியுந்தசைமாறிகலே - பாயுந்தேகாதிதேகம் பகிரண்டங்களாவிபாய்ந்தும்-அமைத்திடும்நோயுமூழ்வினைமீறிநோக்குங்காசமோடிசாடிவினை. வித்தில்

(இ-ள்.) தசவாயுவுக்களும், வளர்பிறைபதினாறும்,தேய்பிறைபன்னிரண்டும் தசநாடிகளும் ஒன்றுக்கொன்றுசேர்வதும் சேராததுமாய் விகற்பங்கொள்ளில் அண்டபகிரண்டங்களில் ஆவிபாய்ந்து நோயுண்டாகி வினைமீறும்எ-று

## விருத்தம்.

மருவுபருங்கைலைநகாகண்டவீதிமறைபிலகுந்திரைகடந்துநாதவிந்துஉருவுயர்ந்தபதின்மூன்றுங்கோட்டின்மேலுமோங்கியொருதுளியிறங்கிதிரண்டுமேவி, கருவளரும்பெருதிக்கப்பாலேதான் கனகரத்னவீட்டிலொருவீடுகட்டி, குருவிருந்தமண்டபத்தில் குடிதானேறி கூடிநின்றகுறிகளெல்லாஞ் சொல்வேனுண்டே.

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய கயிலையின்கண் அண்டவீதியில்வேதங்கள் விளங்குகின்ற திரையைக்கடந்து நாதவிந்துக்கள் ரூபத்தாலுயர்ந்த பதின்மூன்றுவது கோட்டின்மேல் ஒருதுளியிறங்கிக்கருவளர்கின்ற பெருகுகின்ற ஆற்றிசுப்பால் காகரத்தினவீட்டில் ஒருவீடுகட்டி குருவிருந்தமண்டபத்தில் குடியேறி கூடிநின்ற குறிகளையெல்லாஞ் சொல்லுவேன் எ-று. (உ௪0)

ஆதியென்றநாதவிந்தமைந்தவாறு பளவற்றகருவிலுருதரித்தவாறும், நீதியுடனின்றுவயதுரைத்தவாறும் நிலைமையில்லாக்கருக்கரைந்துநின்றவாறும், வீதியிலேபிறந்தெழுந்துபோனவாறும்விவரமதையின்னதென்றுவிதித்தவாறும், பாதிமதிசடையணிந்தபரனேபோற்றி பத்தியுள்ளபெரியோர்கள் பாதம்போற்றி,

(இ-ள்.) முதன்மையாகிய நாதவிந்துக்கள் அமைந்தவிதத்தையும், அளவற்ற கருவின்கண் உருத்தரித்த விதத்தையும், வயதுசொன்னவிதத்தையும் கருவுகள்கரைந்தவிதத்தையும், வீதியில்பிறந்தெழுந்த விதத்தையும், அவை

களின்விவரங்களை இன்னதென்றெடுத்துரைத்தவிதத்தையும், அர்த்தசந்திர னைத்தரித்த சிவபெருமானுடைய திருவடிகளையும், பெரியோர்களுடைய திருவடிகளையும் சிந்தித்துச்சொன்னேன் எ-று. (உகக)

வடிவெழுதிமுடியாதநாதவிந்துமாறியுயிர்கலைபிறிந்துயாத்தில்
மேவும், முடிவிலொருமலரெனவேபூத்தவாறு முனைசாய்ந்தவாடா
மல்பிஞ்சின்வாறும், குடிலமெனுநடுவணையில்கருக்குள்வாறுங் கூடி
யிருகால்வாங்கியடியிற்பாய்ந்து, மடிமீதில்கருவியெனும்வீடுண்டாக்
கிவகைவிபரமாகவெல்லாம் வகுத்தேனுண்டே.

(இ-ள்.) ரூபங்களை இன்னதென்று எழுதிமுடியாதநாதவிந்துக்கள்மாறி உயிர்க்கலையானது பிரிந்துபராபரத்தில் பொருந்தியிருக்கின்ற முடிவிடத்தில் ஒருமலர்பூத்தவிதமானது முனைமட்டும்சாய்ந்து வாடாமல்நின்றுபிஞ்சுகண்டானவிதமும், குடிலமென்றசொல்லுகின்ற நடுவணையில் கருத்தரித்தவிதமும் இரண்டுக்கூடி வாங்கி அடியில்பாய்ந்து மடியின்கண்கருவியென்கிற ஒருவீட்டையுண்டாக்கி அதின்விவரங்களையெல்லாஞ் சொன்னேன் எ-று. (உகஉ)

உருவெடுத்துவந்தவரலாறுசொன்னேன் ஊமைசெவிடா
ன துருவுஞ்சொன்னேன், கருவுதித்துநின்றசைவு வயதுஞ்சொன்
னேன் கலைபிறிந்துமாறுகின்ற கருத்துஞ்சொன்னேன், துருவெடுத்
துபூரகத்திலுதித்துநின்ற துயரமெல்லாம்விபரமுடன் சொன்னேன்
காணும் அறிவறிந்தபெரியோர்கள்புவியின்மீது லவர்மகிழவவனி
யுள்ளோரறியத்தானே.

(இ-ள்.) உருவெடுத்துவந்தவிதத்தையும், ஊமையுஞ்செவிடுமான விதத்தையும், கருபிறந்திருக்கும் வயதையும், கலைபிரிந்துமாறும் விதத்தையும் பூரகத்திலுண்டானதுயரங்களையும் உலகத்திலுள்ளவர்களறியும்படி சொன்னேன்

விற்பனமாந்துருவெளிக்கப்பால்நின்றமேலான சகலகலைநாவி
னுலே, இப்பாரிலுதிக்கின்றமைந்தர்க்கெல்லா மியல்பானவறுமை
நலமிகவுஞ்சொன்னேன், கற்பானகற்பனையாலெழுந்தபாண்டங்கரு
விலுயிராகின்றகருத்துள்ளோர்க்குச், சப்பாணிஉன்குருடாயான
நேர்மை சாதகமாயானறிந்து சாற்றினேனே.

(இ-ள்.) விளங்குகின்றதுருவமென்னும்வெளிக்குஅப்பாலிருக்கும்நான்கு கலைகளினால் இவ்வுலகத்தில் பிறக்கின்ற பிள்ளைகளுக்கெல்லாம் வறுமையும் பொருண்மையும் வருவதைச்சொன்னேன், கற்பனையாலுண்டானதேகமானது கருவின்கண உயிராகின்றகருத்தையும், சப்பாணி, கூன், குருடு, ஆனவிதத்தையுந் நானறிந்துசொன்னேன் எ-று. (உகச)

கோச்சகம்.

நாற்சதுரமண்டபத்தில் நவ்வும்மவ்வும்ரெண்டிருந்து
நீச்சுடரைமூட்டியேதான் செங்கமலவீடதனில்

பேச்செழும்பாதகூஷரத்தில் பேசவுருவாய்ப்படுதல்
காச்சியுருக்கியொரு கருங்குகையில்விட்டனரே.

(இ-ள்.) நாற்சதுரமண்டபத்தில் நவ், மவ், ஆகிய இரண்டுமிருந்து நீச்சுடரைமூட்டி செங்கமலவீட்டில் பேச்சுகிளம்பாத அட்சரத்தில்உருவாக்கிஒரு கருக்குகையில் விட்டார்கள் எ-று. (உசுரு)

விட்டகுறைதன்னிலொரு விந்துகுறையாகாமல்
நட்டுவிளைவித்தேனே நடுவணையிலேயிருந்து
மூட்டியெழுந்துமுனை மூலசுழிநால்வரையில்
கட்டியுருக்கியதில் கருத்தால்வளர்த்தேனே.

(இ-ள்.) விட்டகுறையினால் ஒருவிந்துவுங் குறையாமல் நட்டுவிளைவித்தேன் நடுவணையிலிருந்து முட்டியெழுந்து சூலமுனையின் நான்குகீற்றிலும் கட்டியுருக்கி அதின்கருத்தால் வளர்த்தேன் எ-று. (உசுசு)

உள்ளிருந்தகள்ளரையு மூனெடுத்தநேர்மைகளும்
புள்ளிருந்தவாழ்மனையிற் புகுந்துரைத்தவாழ்த்தல்களும்
தெள்ளிருந்ததீவினையுந் தேகமிதித்தாக்கையதும்
வள்ளலெனுமம்பிகையின் வாய்மொழியாற்கண்டேனே.

(இ-ள்.) உள்ளேயிருந்ததிருடர்களையும், சரீரமெடுத்த நியாயங்களையும் புள்ளிருக்கும் வீட்டில்புகுந்து சொன்னவாழ்வுகளும், இத்தேகத்தின் தீவினைகளும் அம்பிகையின் திருவாக்கினாற் கண்டேன் எ-று. (உசுஎ)

கலித்துறை.

தாக்கிப்பொருந்தையில் மூலத்தினாதமுந்தாதுவிந்தும்
நோக்கிக்கலந்துரு வாகியநுனியூசிவழி
நீக்கிப்பகுத்த கலைநாசிபாலுநிரந்தரமாய்
வாக்கிலுயர்ந்த கனிபாகினின்றுவளர்ந்தனனே.

(இ-ள்.) மூலத்தில் நாதமும்விந்தும்தாக்கிக்கூடும்போது இரண்டுங்கலந்துஉருவாகி ஊசிவழியேநாசியால் நிரந்தரமாய் வாக்கிலுயர்ந்தகனியாய் இருந்து வளர்ந்தனன் எ-று. (உசுஅ)

கருத்திலிருளை யகற்றிவெளியிற்கதிர்மதியில்
விருத்துவகுந்து விபரமதாய்வெற்றியாகவேதான்
வருத்தமில்லாமல் சுழிவீட்டுவாசல்மதிநடுவில்
ஒருத்தனுமாகி வெகுஞாயங்கொண்டுதிக்கின்றனனே.

(இ-ள்.) கருத்திலுள்ள அஞ்ஞானத்தைநீக்கி வெளியிலுள்ள சூரியசந்திரர்களில்விருத்தத்தை வகுத்துவிவரமாகவும் வெற்றியாகவும் யாதொருவருத்தமுமில்லாமல் சுழிவீட்டு வாசலுக்குநடுவில்தான் ஒருத்தனேயாய் உண்மைஞானத்தைக்கொண்டு உதிக்கின்றனன் எ-று. (உசுகூ)

இருளையகற்றி மருளை விளக்கியேகாக்ஷரத்தில்
பொருளையடுத்துப் பயனறிந்துள்ளம்புவனம்விட்டு
அருளையடுத்து அறைவீட்டிலோட்டியடைந்துவைத்துத்
தளிரைவளைத்துத் தெவிட்டாக்கனியுண்டுதூங்கினனே.

(இ-ள்.) இருளையும், மருளையும்நீக்கி ஏகாட்சரப்பொருளையடுத்து அதின் பயனையுணர்ந்து மனமானதபிரகிருதி தத்துவத்தைவிட்டு அருளையெடுத்து அறைவீட்டி லடக்கஞ்செய்து தளிரைவளைத்துத்தெவிட்டாதகனியையுண்டு தூங்கினேன் எ-று. (உஎ)

வெண்பா.

முக்கோணச்சக்கரத்தில் முப்பாழுக்கப்புறத்தில்
சட்கோணவீட்டுத்தலைபடியில்-அக்கோணம்
வெளியில்வளர்ந்தருளும் வெங்கநதியான
குழியில்வளர்ந்த குழவி.

(இ-ள்.) முக்கோணசக்கரத்திலும், முப்பாழுக்கப்புறத்தில்விளங்குகின்ற அறுகோணவீட்டுத்தலையிலும் வளர்ந்தருள்கின்றவெங்கநதியென்கிறகுழியில் வளர்ந்தகுழந்தை எ-று. (உஎக)

வாசிகட்டிப்பந்தடித்து மாறியிருகாலால்
நேசமுடனேபிடித்து நின்றறிந்து-ஓசைதனில்
ஆதிச்சிலம்பொலியை யண்டந்தனிலெழும்ப
நீதியுடனேவளர்ந்து நின்றேன்.

(இ-ள்.) வாசியைப்பந்தாகக்கட்டியடித்து இரண்டு கால்களால்மாறி அதை பிரியமுடன்பிடித்து, ஆதிச்சிலம்பின்நாதம் அண்டத்திலெழும்ப நான் வளர்துநின்றேன் எ-று. (உஎஉ)

ஒட்டுப்பலகை யொருசாண்சிறுவீட்டில்
முட்டிவளர்ந்து முனையடியில்-நட்டு
அனந்தகம்பத்தடியி லகத்தியனேகண்டு
இன்பமுடன்யான்வளர்ந்தே னினி.

(இ-ள்.) ஒட்டுப்பலகையாகிய ஒருஜாணுக்கட்டப்பட்ட சிறியவீட்டில் முட்டிமுட்டி வளர்ந்து முனையடியில் நட்டுவைத்தகம்பத்திற்கடியில் அகஸ்திய முனிவரைக்கண்டு நான் இன்பமுடன் வளர்ந்தேன் எ-று. (உஎங)

விருத்தம்.

இப்படியேவிழிமடவார் கெர்ப்பத்துள்ளே யினிவளர்ந்தநேர்மையெல்லாமியம்புங்காலெ,எப்படியுந்தப்பிதங்களினிவாராமல் என்றலேயறிந்தமட்டுமியப்பினேன்காண்சொற்படியுஞ்சுழிமூலவீட்டுக்

குள்ளே தகையானகருவிநின்றசூக்ஷாசூக்ஷம், இப்படியேவகுத்து ரைத்த மைந்தர்க்கெல்லாம் இனியமுறை யிப்புவியிலியம்புவேனே.

(இ-ள்.) இந்தப்பிரகாரமே பெண்கள்கர்ப்பத்தில் வளர்ந்தவிதங்களையெல்லாஞ் சொலலுமிடத்து யாதொருதப்பிதமுமில்லாமலே சொன்னேன். அப்படியே சுழித்தமூலவீட்டுக்குள் கருவிகள்நின்ற சூட்சாசூட்சங்களை யெல்லாம் சொல்லுவேன் எ-று. (௨௭௪)

பத்தானதிங்கள்சென்றுபிறந்தபாலன் பாக்கியமனுபவித்துபாதேசியாகி, விஸ்தாரமானபரிகரியுமேறி விட்டகுறைதவிர்ந்துடனே யிரந்துவுண்ணும், அஸ்தானதிரவியத்தில்வாழ்ந்துமாறி அதுகடந்து வையமடுத் ததுவுமுண்டு, சித்தாடுகின்றசிவயோகியாகித் திரிந்தவகையறிந்தமட்டுஞ் செப்புவேனே.

(இ-ள்) பத்துமாதங்களுஞ் சென்றபின் பிறந்தபாலகன் பாக்கியங்களையெல்லாம் அநுபவித்துப்பரதேசியாய் குதிரை,யானைமுதலியவற்றிலேறி உடனே, விட்டகுறைதீர்ந்தபின் இரந்துண்டபின் சிவயோகியாய் திரிந்தவிதத்தைச் சொல்லுகிறேன் எ-று. (௨௭௫)

ஒருத்தனவன்கருத்தாலேயுலகமாள்வன் உகந்துலகில்வாழ்ந்து இரந்துண்டுவாழ்வன், பெருத்தொருவன்புவியாசை பிரித்துக்கொள்வன்பிராணன்வெறுத்தகமீறிப்பிதிர்களாவன், துரைத்தனங்கள்செய்துபெருஞ்சிவிகையேறி, சுவைமாறிசிவயோகஞ் செய்துவாழ்வன், வெறுத்திந்தச்சபைதனிலே யாண்டேகேளீர் விபரமெல்லாம்வெளியாக விளம்புவேனே.

(இ-ள்.) ஒருவன்உலகத்தையாள்வதும், ஒருவன் இரந்துண்ணுவதும்ஒருவன் உலகத்தைப்பிடித்துக்கொள்வதும், சிலர்பிதிர்தேவதைகளாவதும், சிலர் சர்வாடம்பரத்துடன் பல்லக்கேறி அதுமாறி சிவயோகஞ்செய்து வாழ்வதும் சபையின்கண் விவரமாகச்சொன்னேன் எ-று. (௨௭௬)

சுந்தரஞ்சேர்நாதவிந்து மூலந்தன்னில் துளிபெருகியொருமடையிலோடும்போது, அந்தமில்லாமுகபேத மானவாறும் அழகுமஷ்டவயிஸ்பரியமமைந்தவாறும், சந்ததமிழுரைத்தவர்கள்கற்றவாறும் சந்நியாசிதவசிகளாய்ச்சார்ந்தவாறும், கந்தமர்ப்பூங்குழலைவெறுத்துநின்ற சாரணத்தையின்னதென்று கருதுவேனே.

(இ-ள்.) அழகியநாதவிந்தானது மூலத்தின்கண் ஒருதுளியாயிருந்து,பெருகி ஒருமடையிலோடும்போது முகரூபங்களுண்டான விதத்தையும், அஷ்டைஸ்வரிய முண்டானவிதத்தையும், வித்தைகற்றுக்கொண்ட விதத்தையும் சந்நியாசி,தவசிகளானவிதத்தையும், அம்பிகைப்பெண்ணை வெறுத்துக் காரணத்தை நினைப்பேன் எ-று. (௨௭௭)

அறிவறிந்தமனுபோகஞ்செய்யாமாண்பர் ஆதிவிந்துநாதமென்றுமறியாமாண்பர், கருவறிந்தபொறியடங்கிச்சித்தானார் கருத்துமனம்ரெண்டாகியோகியானார் திருவுடனேசேராமல்ஞானியானார் தேசமதில்பூசைசெய்யுஞ்சைவரானார், குருவுடனேசிஷனென்றுமிருவரானார் குறிப்பறிந்துபிண்டமதிற் கூறுவேனே.

(இ-ள்.) அறிவினாலுணர்ந்தும் அநுபோகிக்காதமனிதர்களும், ஆதிவஸ்துவிந்துநாதங்களென்றுணராதமனிதர்களும். கருவறிந்துபொறியடங்கி சித்தரானவர்களும், யோகியானவர்களும், ஞானியானவர்களும் சைவரானவர்களும், குரு, சிஷரிருவர்களுமாகிய இவர்களுடைய குறிப்பறிந்து பிண்டத்திற் சொல்லுவேன் எ-று. (௨௭௮)

அலையாமல்பசியறிந்துஉண்ணும்பேரும் அனுதினமுந்துயரமதிலழுந்தும்பேரும், நிலையாமல்நினைவுதடுமாறும்பேரும்நித்திரையில் பயந்தெழுந்துநின்றபேரும், தலையாமலுலகமெல்லாந்திரிந்தபேரும் சேர்ந்துமொருசந்திதனில்மடிந்தபேரும், மலையாமல் போர்க்களத்தில்ஜெயித்தபேரும் வகுத்தவிந்திலுதித்தவகை வசனிப்போமே.

(இ-ள்.) அலைந்து திரியாமல்பசியை யறிந்துஉண்பவர்களும், தினமும் துன்பத்தில்படிந்தவர்களும், புத்திதடுமாறுகிறவர்களும், நித்திரையில் பயந்தெழுந்திருப்பவர்களும், உலகங்களிலெல்லாந் திரிந்தவர்களும், ஒருசந்தில் சோர்ந்துஇறந்தவர்களும், யுத்தகளத்தில் ஜெயமடைந்தவர்களும், சொல்லப்பட்டவிந்தினாலுதித்த விவரத்தைசொல்லுவோம் எ-று. (௨௭௯)

மந்திரங்கள்கல்விமிகக்கற்றபேரும் மகத்தானசாஸ்திரங்கள் வகுத்தபேரும், சிந்தையெனுங்கிரியைதனிலிருந்தபேரும் ஜெகஜாலமறிந்துலகில்வாழ்ந்தபேரும், அந்தமெனும்யோகமதிலடர்ந்தபேரும் அனுதியெனுஞானமறிந்தமைந்தபேரும், இந்தவகையிப்படியேயானவாறும் எனையீன்றகுருவருளா லியம்புவேனே.

(இ-ள்,) மந்திரம், கல்வி, சாஸ்திரம்இவைகளை மிகுதியாகக் கற்றவர்களும் கிரியையிலிருந்தவர்களும், ஜெகஜாலவித்தையால் வாழ்ந்தவர்களும், யோகிகளும், ஞானிகளும், அந்தந்தத்தொழிலிலான விதத்தையுங் குருவருளால் சொல்லுகின்றேன் எ-று. (௨௮௦)

இடைபின்கலையளவு-தரு.

ஆராறமைத்தவிதியாண்டே-கருவூரினில்
யானும்விதித்தவிதியாண்டே.

(இ-ள்.) கருவில் யார்யார் அமைத்தவிதியோ அதுதான் எற்படுத்தியதேயாகும் எ-று.

பார்தனிலேகருவூர் பாலனமைந்தவிதி,சீர்பெறுஞ்செல்வமுண்டானசெய்தியைச் சொல்லுவேனுண்டே, தாரணிதனிலே தந்தைதாயுமிருவர்கூடி, கருவிரதிகேளிதானாடியபோதினில். ஆரா

(இ-ள்.) உலகத்தில் கருவூரிலேபாலகனுண்டானவிதத்தையும், செல்வமுண்டானவிதத்தையும் தந்தைதாயிருவர் கூடியபோது உண்டானதாகச் சொல்லுகின்றேன் எ-று. (௨௮௧)

ஓடுங்கதிர்மதியுமொன்றுடனிரண்டும்வளர்ந்தால்,நீடுலகும்புவியில்வாடுவார்வறுமைகொண்டு, ஓடுமதியுங்கதிரோடிரண்டொன்றாய்ந்தால், வீடுமிழந்து வையமேலுந்தரித்திரவான்காணும். ஆரா

(இ-ள்.) ஓடுகின்றசூரியனுஞ் சந்திரனும் ஒன்றுகூடி வளர்ந்தால்உலகத்தில் தரித்திரத்தால்வாடுவார்கள் மேற்சொன்ன இரண்டும்ஒன்ருய்ப் பாய்ந்தால் வீடுவாசல்களிழந்து மிகுந்ததரித்திரர்களாவார்கள் எ-று. (௨௮௨)

முதல்மூன்றும்பூரணச்சந்திரன் விதமாயமைக்குமைந்தன், சுதனருள்கல்வியும்பாக்கியமதிகலைபதினாறெனில்,அதுவுமல்லாமனாலிலருணன்சோமனுங்கூடில், விதியமுறையில்மைந்தன் விவேகியோகவானுண்டே. ஆரா

(இ-ள்.) முதலில்மூன்றுகலை பூரணசந்திரனால் அதில்பிறந்தபாலகன் கல்விமானும், பாக்கியவானுமாவான், பதினாறு அல்லதுநான்குகலைகளானால் அதில் சூரியனுஞ்சந்திரனுங்கூடினால்விவேகியும், யோகவானுமாவான்எ-று.

நாலுகலைபிரியாரவிதன் மதிவளரில்," பாலன்தனக் கெந்நாளும் வாலப்பருவங்காணும், காலையில்பாலன்னஞ்சுவைசுகியோடதுமாறுதுகாலனணுகாதஷ்ட சனயோகவான்காணும். ஆரா

(இ-ள்.) நான்குகலைகளும்பிரியாமல் சூரியசந்திரர்கள் சேர்ந்தால் பாலகன் எப்பொழுதும் பாலப்பருவமாகவே யிருப்பான் அன்றிஉயர்ந்தயோகவானுமாவான் எ-று. (௨௮௪)

வஞ்சிகெர்ப்பந்தனிலே வளருமதியஞ்சானால், மிஞ்சும்புகழ்பாக்கியங் கொஞ்சும்யோகவானுண்டே, ரஞ்சிதக்கருக்குழியிலாதலால் மதியாறானால், செஞ்சொலும்பார்தனிற்காணி செழிக்கும்பதியுண்டெனில். ஆரா

(இ-ள்.) பெண்ணின்கர்ப்பத்தில் அஞ்சுகலைகளானால் மிஞ்சும்புகழையுடையயோகியாவான், ஆறுஆனால்பதியுங்காணியும் மேன்மேலுண்டாகும்.

மாதுவிழிமடவாள்வதிகூலகெர்ப்பந்தனிலுக்.தாதுமதியேழெனில்தழைத்துவாழ்வார்கள்செல்வம்சாதனமிதுதப்பாதுநாதவிந்தாலனேகம்பேதாபேதங்கள்கோடி மேதினியோர்களிவ்வாறு. ஆரா

(இ-ள்.) கர்ப்பத்தில்எழானார்செல்வர்தழைத்துவாழ்வார்கள்,இதுதப்பா து.நாதவிந்துக்களால்அநேகவிதங்களாகவித்தியாசப்படுவது சகசமாகும்எ-று.

விருத்தம்

கங்குநதிநகரிலங்கருவூர்நாட்டில்கதிர்மதியாலெடுத்தபலன்கணக் சதாக,மங்கையுடல்மாதுகெர்ப்பந்தனிலேவிந்துமகிமையதாயவதரி த்தவண்மையெல்லாம், சிங்காரமாகவெந்தன்தெளிவினாலே திங்கள் பத்திலுதித்தமைந்தன்செயலேகண்டு, செங்கமலமங்கை யம்பிகைப் பெண்மாது செப்பிடிலுங்கருத்தைபினி தெளிவிப்பேனே.

(இ-ள்.) கங்குநதியையுடைய கருவூர்நாட்டில் சூரியசந்திரர்களால் எடுத்தபலனானது பெண்ணின்கர்ப்பத்தில் விந்தின்மகிமையால் உண்டானதாகும், ஆகையால்பத்துமாதங்களிலு முண்டாகுஞ் செய்கைகளைக்கண்டு பிண்டோற்பத்தியைச் சொல்லுகின்றேன் எ-று. (௨௮௭)

பிண்டோற்பத்தி-தரு.

தெந்தின தின தினனா-தின தின-தெந்தின தின தின-தின தினனா.

திட்டமுடன்லெட்டவெளியில்-கலையெட்டில்-செனித்தருள்செர்ப்பமதினுற்பவத்தைக்கேள், வட்டமதிவிட்டகுறையால் -செல்வம் வளர்ந்திடுந்திருமுகம்விளைந்திடுங்காண், அட்டதிசையம்பரத்திலே சுழிபின்முனை-ஆதாரகுண்டலிதனகத்துக்குள்ளே,விட்டமதியொன்பதிலே-விந்துதரிக்கவிஜையராஜாங்கயோகவாசஞ்செய்வார்- தெந்தி

(இ-ள்.) திட்டமுடனே ஆகாயத்தின்கண் எட்டுக்கலையில் பிறந்தகர்ப்பத்தின் உற்பவத்தைக்கேளும், விட்டகுறையினால் செல்வம் வளர்ந்திடும், திருமுகம் விளைந்திடும் அஷ்டதிசைகளும் சுழிமுனையின்கண் ஆதாரகுண்டலியின்வீட்டுக்குள் விட்டமதிஒன்பதில் விந்துவானது தரிக்கவிஜயராஜாங்கயோகவாசஞ்செய்வார்கள் எ-று, (௨௮௮)

உதித்தபெருந்துறைமூல-ஊத்தைக்குழியி - லுற்பனமாகவே கெர்ப்பந்தரித்ததென்றால், பதித்தசமதிலுதித்தால்-விந்துசிவ-பாருலகிலட்டசித்துமாடிடுவர்காண், விதித்தவிதியறியாத-கருக்குழிதன் வீதியிலுநாதமதுமேவிடிலுமே, பதித்தமதிபதினொன்று -லட்டசுக பாக்கியசிவயோகராஜயோகியிவர்காண்-தெந்தின.

(இ-ள்.) திருப்பெருந்துறைமூலமாகிய ஊற்றைக்குழியில் கர்ப்பந்தரித்து பத்துமாதத்தில்பிறந்தால் அஷ்டசித்துக்களுமாடுவான், பதினோராவதுமாதத்தில் பிறந்தால் அஷ்டபோகபாக்கியமுள்ள ராசயோகியாவான் எ-று.

எண்ணிரண்டாங்கோட்டினிலே-சுரோணிதமென் -றிருக்கின்ற நாதமெனுமுதிக்கையிலே, பன்னிரண்டில்மதியானா-லிப்புவியில்-பா

ராஜங் தூரத்தினஞ்செய்தரசாள்வார், உன்னிதச்சுழிமுனையிலே-செர்ப்பந்தரித்து-உற்பனமாகவேமதிபதிமூன்றானால், இன்னிதராஜாங்கந்தனில்-மந்திரியாகி-யேகசக்கிரவர்த்திகட்குயோக்கியவான்காண் தெந்தின.

(இ-ள்.) பதினோராவதுகோட்டில்சரோணிதமாகிசாதம்பிறக்கும்போது பன்னிரண்டாங்கோட்டில் சந்திரனானால் அரசாள்வார், சுழிமுனையில் கர்ப்பந்தரித்து மதிபதிமூன்றானால் மந்திரியாய் ஏகசக்கிரவர்த்தியாவான் எ-று.

மதிசந்திரன்பதினாறில்-செர்ப்பந்தரிக்க- வந்தவதரித்தமைந்தன் விந்துபலன்கேள், பதிகருவூர்தனைவிட்டு-அம்புவியில் பாலகனவதரித்தால்ஞானியாவார்காண், மதிரவிநடனஞ்செய்யும் - பூர்வக்கியான-வாசிவசமாகும்ரசவாதமுமெய்தும், அதிவிதயோசதிரைவான்-மறுபிறவி-யாதலாலாண்டவன்-செயலமைப்பிதுவே-தெந்தின

(இ-ள்.) சந்திரனானவன் பதினாறு கலைகளுடனிருக்கும்போது கர்ப்பந் தரித்தால் ஊரைவிட்டு ஞானியாவான், அன்றி இடைகலைபிங்கலைகள்நடனஞ் செய்யும், பூர்வக்கியானமுண்டாகும், வாசிவசமாகும், யோகவானாவன். மறுபிறவியிலாண்டவன்செய்கை அமைக்கும் எ-று. (௨௧௧)

பாதகஞ்செய்திடுங்கருவூர்-அவ்வூரினில்-பதிக்குள் மைந்தனுதிக்கப்பலனதுகேள், மூவஞ்சுமதியானால்-அம்மதியில்- முக்குணமதாகிவளர்சகுணவான்காண், மேவுங்கருவூர்தனிலே - செர்ப்பந்தரிக்க மேதினிதனிலேமைந்தன்வீதிவந்தபின், பூவுலகில்மூவுலகமே- கர்த்தவ்யமெனும்-புகழுடையமும்மூர்த்தியீஸ்பரன்காண்-தெந்தின.

(இ-ள்.) பாதகஞ்செய்கின்றகருவூரில் பாலகன்பிறந்துபலனைச்சொல்லுமிடத்து மதிபதிஉனர்தானால் முக்குணமாகிவளர் சற்குணவானாவான்; இவ்வனந்தரித்தமைந்தன் கர்த்தவ்யமென்னும் பெயரையுடைய ஈஸ்வரனாவான்

மருவுயர்திருவீட்டில்-கருவூரினில்-வந்துதித்த மைந்தர்களும் வரும்போது, பெருகியமதியீரெட்டில்உதித்திலகும்- பிரபஞ்சமுழுந்திரக்கடலுலகுங், கருவிலுதித்தபலன்-இப்புவிதனில் -கனயோகச்சித்ததிகர்த்தனிவர்காண், அருமறையோர்புகழும்-அப்புவிதனில் அட்டஅவதானியெனைமனைவர்தொழும்-தெந்தின.

(இ-ள்.) கருவூரில்வந்து பிறந்தபிள்ளைகளும், பதினாறுகலைகளில் உதித்தால் உலகமுழுவதிலும், எழுகடலிலும் யோகசித்தியுடையவனாவார்கள் மேலும் உலகத்தினகண் அஷ்டாவதானியென்றயாவராலும்புகழவும்படுவார்கள்

இந்துமதிவிந்துநாதமு-மிரண்டுங்கூடி-என்னுடைய தந்தையுடனன்னைசேர்ந்திடில், மைந்தனாய்க்கருக்குழிதனிலவதரித்துவந்துதித்தபாக்கியமினி விந்தையாய்சொல்வேன், விந்துதிக்கும் விட்டகுறை

கான்-இந்தமதி-அந்தணர்முனிவரெல்லாம்வந்துதித்தனர், செந்தமிழ்க் கவிதையாய்ந்தனர்-ஞானப்புலவ-ரைந்துபூதமைந்துந் தெளிந்தவராண்டே-தெந்தின.

(இ-ள்.) இந்தவிந்துநாதம் இரண்டுங்கூடி என்னுடையதந்தையோடுதாயுஞ்சேர்ந்தால் மைந்தனுகக் கருக்குழியிலவதரித்து இருந்த பாக்கியத்தைச் சொல்லுகின்றேன்கேள். விந்துதிப்பதேவிட்டகுறையாலாகும் இதனாலன்றோ பிராமணர்களென்றும், முனிவர்களென்றும் வந்துபிறந்தார்கள். ஞானப்புலவர்களெல்லாம்ஐம்பூதங்களையுந்தெளிந்தவராகும் எ-று. (௨௧௪)

விருத்தம்.

காரணத்தால்நாதவிந்துகருவூர்தன்னில் கலந்துவுருவாகிவந்த கருத்தையெல்லாம், சீர்படைத்தபுவிதனிலே வகுத்துயானுந் தெளிவாகதெரிந்தமட்டுஞ் செயலாய்சொன்னேன், வாரணமாஞ்செங்கமலவீட்டுக்கப்பால் மாறுகலைநாலதுவால்வகுத்தநேர்மைபேர்படைத்தபதினாறிலொன்றுபோனால் பேருலகில்தவசியெனப் பிறப்பாராண்டே.

(இ-ள்.) நாதவிந்துக்களின் காரணத்தால் கருவூரில்கலந்து ரூபமடைந்து வந்தகருத்தை, இவ்வுலகத்தில் தெரிந்தவரைக்குஞ்சொன்னேன், செங்கமலவீட்டுக்கு மாறுதலாய்விதித்தவிதத்தை பதினாறிலொன்றுபோவதாகிய பதினைந்தாவதுகலையானால் தவசியாகப் பிறப்பார்கள் எ-று. (௨௧௫)

குருவிருக்குமுப்பாலேதான்குய்யகடுமையத்தின்குறிப்புக்குள்ளே, கருவுறையுநாதவிந்துகலக்கும்போது சுதித்தகலைமதியிரண்டு குறைந்ததாகில், விருப்பமுடன்பார்தனிலேபிறந்தபின்பு விளங்குஞ் செல்வம்பாதியிலேகழிந்துபோகும், பருவமுள்ளபதின் மூன்றுங் குறைந்ததாகில் பரதேசியாகிடுவார் பாரிலாண்டே.

(இ-ள்.) ஞானசிரியர் வாசஞ்செய்யும் முப்பாழுக்கப்பால் குய்யத்தின்கடுமையத்தில் குறிப்புக்குள் நாதவிந்துக்கள் கருவூரில்கலக்கும்போது இரண்டுகலையுடைய சந்திரகலைகுறைந்தால் அக்குழவிஉலகத்தில் பிறந்தபின்பு இருக்கின்றசெல்வத்தில் பாதிபோகும், மதிமூன்றுக்குக்குறைந்தால் பரதேசியாய் விடுவார் எ-று. (௨௧௬)

சிறுபிறைக்குள்திரைமறைந்து சிறந்தவீட்டில் சித்துவித்தை கல்விதருநாதவிந்து, ஒருதுளிகொண்டிருதுளியி லுறையும்போது வுதித்தகலைகாலதனாலாண்டியாவார், தருவணையுங்கலையுமைந்ததானாற்கேளீர் சாந்தசற்குணமழகுஞ்செல்வமட்டாம், பெருமையெனுமாறிலுஞ்சன்னசியாவார் பேர்பெரியபேழினிலுமகுதியாண்டே.

(இ-ள்.) சிறுபிறைக்குள் மறைந்து விளங்குகின்றவீட்டில் சித்தவித்தைகலையுடைய நாதவிந்துக்கள் ஒருதுளியானது இருதுளியில் கலக்கும்போது பிறந்ததினால் ஆண்டியாவார்கள், அந்தக்காலத்தில் ஐந்துகலையானால் குண

மும், அழகும், செல்வமுங்குறையும், ஆறுகலையானால் சந்நியாசியாவார்கள், ஏழானால் அதிதிகளாவார்கள் எ-று. (௨௯௭)

வட்டமதியெட்டுகலைகுறைந்ததாகில் வகுத்தவுடல்பெருத்திருக்குமவளர்ச்சியுண்டாம், விட்டமதிகலையொன்பதுங்குறைந்ததாகில் வீறுகப்பிறந்துவளர்ந்திரந்துண்பார்கள், சட்டமதிகலைபத்திற்குறைந்ததாகில் சாகுநாள்பரியந்தந்தரித்திரனாவார், தொட்டகலைநீங்கிவிடாதிருக்குமாகில் தொல்லுலகிலுள்ளவர்களறிந்திடுமே.

(இ-ள்.) சந்திரகலைவட்டுக்குக்குறைந்தால் உடல்பொருந்திருக்கும். வளர்ச்சியுண்டாம், ஒன்பதுக்குக்குறைந்தால் பிச்சையெடுத் துண்பார்கள் பத்துக்குக்குறைந்தால் சாகும்வரைக்குந் தரித்திரராவார்கள், இங்ஙனம் கலைகள்நீங்சாமலிருந்தாலே சொல்லக்கூடும் எ-று. (௨௯௮)

வடிவுகொண்டதிருமூலத்திரைக்குள்ளேதான் மருவுகின்றநாதவிந்துவமைத்தபோது, முடிவுகின்றமதிகுறைந்து பதினொன்றாகில் முதலானவாழ்வுபிருமீபாமூடர், மிடிகொண்டுவிருளகற்றி வளர்ந்துமென்மேல் மேலானமல்கலையுமீராறாகில், குடியிருக்குங்குறையில்லாதாச்சுதாகில் குவலயத்தினாற்பதிலே சித்தராண்டே.

(இ-ள்.) ரூபங்கொண்ட திருமூலத்திரைக்குள் பொருந்திய நாதவிந்துக்கள் சேர்ந்தபோது மதிகுறைந்து பதினொன்றானால் மூடர்களாவார்கள், இருளைநீக்கியகலை பன்னிரண்டானால் நாற்பதுவயதில் சித்தராவார்கள் எ-று.

சிவ்வெழுத்துமவ்வெழுத்துமிரண்டுங்கூடிச் சிறந்திருந்த அவ்வெழுத்தில்வவ்வுஞ்சேர்ந்து, நவ்வெழுத்திலுதித்தருளு மைந்தர்க்கெல்லாம் நயந்துசரிவாழ்த்தின்பின்னிரந்துண்பார்கள், மவ்வெழுத்து நவ்வெழுத்துமிரண்டுஞ்சேர்ந்து மகிழும்யவ்விவ்வவ்வெழுத்துஞ்சிவ்வுண்டாகி, இவ்வுலகிலுதித்தருளும்பாலர்க்கெல்லாமினியசரிபாதில்வாழ்ந்திரந்துண்பாரே.

(இ-ள்.) சிவ், மவ், என்கிற எழுத்துக்கள் இரண்டுங்கூடிச் சிறந்திருந்த அவ்வென்னுமெழுத்தில் வவ்வானது சேர்ந்து நவ்வெழுத்தில்பிறந்த பிள்ளைகளெல்லாம் சிலநாள்வாழ்ந்தபின் இரந்துண்பார்கள், மவ்வெழுத்தும் நவ்வெழுத்தும் ஆகியஇரண்டுஞ்சேர்ந்து அதில்சவ்வுண்டாய் பிறந்தபிள்ளைகளெல்லாம் பாதிநாள் வாழ்ந்தபின் பிச்சையெடுத்துண்பார்கள் எ-று. (௩௱)

கொச்சகம்.

துரியாதிதவீடதனில் சொற்பனத்துக்கப்புறத்தில்
மரியாதெழுந்திரண்டும் வந்தேதகலக்கையிலே
விதியாய்வளர்ந்தமதி விண்ணேகியம்பரத்தில்
பதினாக்குறைந்ததென்றால் பார்மீதில்வாழ்வாரே.

(இ-ள்.) துரியாதீதமென்கிறவீட்டில் சொப்பனவஸ்தைக் கப்புறத்தில் விந்துநாத மிரண்டுங்கலக்கையில் வளர்தமதியானது விண்ணுங்கேகி அம்பரத்தில் பதினன்குகலைகள் குறைந்தால் உலகத்தில்வாழ்வார்கள் எ-று.

வாழ்ந்துசமர்த்தாகியபின் வான்புவியிலுள்ளமட்டும்
தாழ்ந்துகுணவிங்கிதமாய் சாவுமட்டுந்தாரணியில்
சூழ்ந்துலகத்துள்ளிருந்து துய்யகருஆத்துமத்தில்
ஆழ்ந்தமறைநூல்பார்த்து அம்புவியில்வாழ்வாரே.

(இ-ள்.) அங்ஙனம்,பிறந்துசாமர்த்தியம் வந்தபின் உலகத்திலுள்ளவரைக்கும் நற்குணவானுபிருந்து தமதுஆத்துமதத்துவத்தில் சகலசாஸ்திரங்களையும் பார்த்துவாழ்வார்கள் எ-று. (கூாஉ)

கருவூர்வெளிதனிலே கமலமலர்நாதவிந்து
விருவாந்துருவமதில் மெய்ப்சலந்துநிற்கையிலே
அறிவாசமுவஞ்சு மானமதிதான்குறைந்தால்
. குருவுடனேசிஷனுமாய் குவலயத்தில்வாழ்வாரே

(இ-ள்.) வெளியாகிய கருவூரின்கண் விளங்குகின்ற தாமரையில் நாதவிந்துக்களானவை துருவத்தில் உடலைக்கலந்து நிற்கையில் பதினைந்து கலைகள் குறைந்தால உலகத்தில் குருவுஞ்சீடனுமாக வாழ்வார்கள் எ-று.(கூாங)

சத்தியருள்புத்தியதாய் சுகந்ததிருநாதவிந்து
உத்தெழுந்துருக்சலந்து வுற்பனங்கொண்டுதையிலே
முத்துளித்தேனிந்தமதி மூவஞ்சுமேகழித்தால்
பத்திதருமந்திரமும் பலகலையும்பார்ப்பாரே.

(இ-ள்.) சத்தியின் திருவருள் விளங்குகின்ற புத்தியாய் நாதவிந்துக்கள் உருவிற்கலந்து தொடங்கியுரும்போது பதினைந்துகலைகளுஞ்சுழித்தால் மந்திரங்களையும பலகலைகளையும் பார்ப்பார்கள் எ-று. (கூாச)

வெண்பா.

மருவிக்கலவித்தெளியு மாறியுயர்நாதவிந்து
கருவியுறவாகக் கலக்கையிலே-பருவமதாய்
நின்றுவளர்ந்தகலை நேரில்பத்தாறுக்குறைந்தால்
கண்டுகொளுந்தரித்திரவான் காண்.

(இ-ள்.) நாதவிந்துக்கள்சேர்ந்து உறவாகக்கலக்கும்போது பருவமாகவளர்ந்தகலைகள் பதினாறுங்குறைந்தால் தரித்திரவானுவான் எ-று. (கூாரு)

சண்டவெளிதாக்கையிலே தாவித்தநாதவிந்து
அண்டமதைத்தாண்டி யனுகினல்-மண்டலத்தில்
சாவளவுமேவறுமை தரித்திரத்திலேயமுந்தி
மேகவினை சூழ்ந்திடுங்காண்மேல்.

(இ-ள்.) பிரசண்டவெளியைக் காக்கும்போது நாதவிந்துக்களிரண்டும் அண்டத்தைத்தாண்டிச்சேர்ந்தால் உலகத்தில்சாகிறவரைக்கும் தரித்திரத்திலிருந்து பின்மேகவினையானது தொடரும் எ-று. (௫௱௪)

கலித்துறை.

கலையேபகுந்த மெய்ஞ்ஞானசோதி கருத்தினுள்ளே
நிலையேகெதிபென்று நின்றுகொண்டே நெடுங்காலமெல்லாம்
புலையேநிகழ்த்தி புமையம்பிகை யிருபொற்பதத்தில்
மலேவயசற்றிப் பதிமேலுநின்று வணங்கினனே

(இ-ள்.) கலையிற்கண்டிருந்து மெய்ஞ்ஞானசோதியானது மனத்திற்குள் உண்மைநிலையேகதியென்று கலையெல்லாம்நின்றிருந்து|உமாதேவியாகிய அம்பிகைப்பெண்ணின் திருவடிகளில்விழுந்து மயக்கத்தைநீக்கி வணங்கினேன்.

தாருகும்பிஞ்சுசுழி முனைவாசல் சிறுவீட்டுக்குள்ளே
மாருதவிந்துவு நாதமுங்கூடி மருவையிலே
பேருதநின்று மதிகாலிலம்பிகை பேசிநின்றால்
ஆருகிலிங்கமு நாதாந்தயோகி யம்பரமே.

(இ-ள்.) புதராகிய சுழிமுனையென்கிற சிறியவீட்டுக்குள் ஒழியாதவிந்துவும் நாதமுங் கூடுகையில் மதியின்கலைநான்கில் அம்பிகைப்பெண்பேசி நின்றால் லிங்கமும் நாதாந்தயோகியும் அம்பரவாசியுமாவான் எ-று. (௫௱௮)

குடிகொண்டமாதர் மாயக்குழிதனிற் கொண்டுமனம்
படிகண்டுநின்று வளர்ந்துகொண்டேன் மதுபானத்திலே
அடிகண்டுபோற்றி யம்பிகைப்பாதமருள் புரிய
முடிகண்டுநின்று வணங்கியேகாக்ஷர மூலத்திலே.

(இ-ள்.) பெண்களது கருக்குழியின்கண் மனம்வைத்து மதுபானத்தினால் வளர்ந்தேன், அம்பிகைப்பெண்ணின் திருவடிகளை அவள் அருள்புரிதற்பொருட்டு ஏகாட்சரபீஜத்தால் நின்றுவணங்கினேன் எ-று. (௫௱௯)

விருத்தம்.

மதுரமதுவொருபுற மாய்சோந்தவீட்டில் மதியமிர்தம் நின்றிலங்குமூலவீட்டில், கதிருதையஜெகச்சோதியானபீடங்கனகரத்நநாதவிந்திரண்டுங்கூடி, சிதருமலொருமுனையிலுதித்துமேலுஞ்செடமெடுத்தமார்க்கமினிசெப்பக்கேளீர், பதருமல்யானருள பெரியோர் பாதம்பணிந்திருநால் பெருமையெல்லாம்பகர்வேனுண்டே.

(இ-ள்.) மதுரங்களெல்லாம் ஒருபக்கமாய்ச்சேர்ந்ததும்,மதியமிர்தம்விளங்குவதும்,கதிருதயம்போல் தேஜோமயங்கொடுக்கின்றபீடமும்கனகரத்தினமாகிய நாதவிந்துக்களிரண்டுகூடி ஒருமனையிலுதித்த வீடுமாகிய கருவூரில்

செடமெடுத்தமார்க்கங்களை இனிமேல் சொல்லுகின்றேன் கேளுங்கள், அங்ஙனம்அதைச்சொல்லுதற்பொருட்டு பெரியோர்களுடைய திருவடிகளைவணங்கினேன் எ-று. (௯௱௰)

மந்திரமும்சாஸ்திரமும்பிறந்தவீட்டில்மறைநூலைவிதித்தவயன் வாழ்ந்தவீட்டில், தந்திரமாய்சர்வவுடலெடுத்தவீட்டில்சதாசிவமுநடனம்புரிந்திருந்தவீட்டில், சுந்தரஞ்சேர்நாதவிந்துதித்தவீட்டில் துருத்தியுடற்குள்ளுமொருவுடலாய்நின்ற,இந்திரன்தன்பதிக்குமேலறைவீட்டுள்ளே இப்படியேயென்னுடல்தான் சமைந்ததாண்டே.

(இ-ள்.) மந்திரங்களும், சாஸ்திரங்களும்பிறந்ததும், பிரமதேவன் வாழ்ந்ததும் சர்வதேகங்களுண்டானதும், சதாசிவன் திருநடனம் புரிந்ததும் அழகிய நாதவிந்துக்கள்சேர்ந்ததும் உடற்குள் உடலாயிருப்பதுமாகிய மேல்வீட்டில் என்தேகமுண்டாயது எ-று. (௯௱௧௧)

கருவினுடலெடுத்தவிதக் கருத்துஞ்சொன்னேன் காரணமாய்க் கருவிநின்ற கணக்குஞ்சொன்னேன், மருவியுறவாகின்றமைந்தர்க்கெல்லாம்வயதுகுறைவாகின்றமார்க்கஞ்சொன்னேன்பெருகின்று கலைகுறையுமிரண்டுஞ்சொன்னேன் பிறந்துலகில்வாழ்ந்திருந்த பெருமைசொன்னேன், குருவுடனேசீஷனுறவாகின்ற கூர்மையறிந்தெந்திரத்திற் கூறினேனே.

(இ-ள்.) கருவின்கண் சரீரமெடுத்த விதத்தையும், அப்போது கருவிகளிருந்தகணக்கையும், பிள்ளைகளுக்குவயது குறைந்துவரும்மார்க்கத்தையும் கலைகுறையும்விதத்தையும் உலகத்தில் வாழ்ந்திருக்கும் பெருமையும்குருவுஞ்சீடனும் கலந்திருக்குந் தன்மையையுஞ் சொன்னேன் எ-று. (௯௱௧௨)

சித்துவிளையாடுநவரத்னபீடஞ் சிறந்தசத்திவல்லபைதன் னருளினாலே, வித்திருந்தவிட்டமறிந்துவகண்டஞ்சொல்லி வேதமறியாதவுடல்வகுப்புஞ்சொல்லி, கொத்திருந்துகுலைசாயுந் தலமுஞ்சொல்லி குருவானநாதவிந்தின் கூறுஞ்சொல்லி, முந்துதித்தசிறுவீட்டுக்குள்ளேயிந்த முறைப்படியே கருவியெல்லா முடிந்ததாண்டே.

(இ-ள்.) சித்தாடத்தக்க நவரத்தினபீடஞ் சிறந்தவல்லபையின் இருபையினால் வித்திருந்த இடத்தையறிந்து வேதங்களா லறியப்படாத சரீரத்தின் வகுப்பைச்சொல்லி கொத்திருந்து குலைசாயுந்தலத்தையும் குருவானநாதவிந்துக்களின்கூற்றையும் சொல்லி முந்துதிர்ந்தசிறுவீட்டுக்குள்இந்தமுறைப்படியே கருவிகளெல்லாம் முடிந்ததாகும் எ-று. (௯௱௧௩)

தன்னினைவைத்தானறியு நாதவிந்து தரிசனத்தை யாட்டியது மேலும்பூட்டி, உன்னினதால்யானுமொருசடலமானேன்உறுதுணையானெனுந்தனுந்திக்குள்ளே, என்னினைவையானறிந்து கருவூர்நாட்

டில் இப்படியேசிறுகுழந்தையானுமானேன், முன்னினைவைத்தவிர்த்தந்த மூலத்துள்ளே முடிந்தவகையிவ்விதங் காணுச்சுதாண்டே.

(இ-ள்.) தன்னுடைய எண்ணத்தைத்தானேயுணரும் நாதவிந்துக்களின் தரிசனத்தைக்காட்டினேத்ததால் நானும்ஒருதேகமெடுத்தேன், உற்றதுணையுமானேன், இவைகளையெல்லாம் நானேயுணர்ந்து கருவூர்நாட்டில் சிறுகுழந்தையானேன், அப்பொழுது பூர்வக்கியானமானது நீங்கிவிட்டது ஆகையால் மூலாதாரத்தில் இப்படிமுடிந்ததாகும் எ-று. (௩௧௪)

தாங்கிநின்றகருவிதுக்குள்யானும்வந்து தரித்தபின்பு அன்னையென்னைச்சடத்திலேதான், பாங்கதுவா வெனைச்சுமந்த ஆத்தாளுக்குப்பளபளப்புந்தளதளப்பும்பாரின்மீது, ஓங்கியொருஅடியெடுத்து வைத்தபோது உள்ளமெல்லாம்வேதனையால் நொந்துவாடி, சாங்கியமுந்திங்களொரு ஐந்துக்குள்ளே சாதகமாய்முடிந்தவகை சாற்றுவேனே.

(இ-ள்.) தாங்கிருந்தகருவுக்குள் நானும்வந்து தரித்தபின்னர் அன்னையானவள் என்னைப்பக்குவமாய்த் தாங்கிவளர்த்தாள், ஆனால் அவள் அம்யாதங்களில் பட்டகஷ்டங்களுக்கு அளவுசொல்லப்படாது ஆனால் ஐந்துமாதங்களுக்குள் சாங்கியம்முடிந்தவிதத்தைச் சொல்லுகின்றேன் எ-று. (௩௧௫)

நடக்கையிலேயிருகாலுமசைவுஞ்சேர்ந்துநாவிலிந்தவசனத்தையுரைக்கக்குன்றி, படுக்கையிலேயொருபுறமாய்புரண்டுருண்டுபத்தாவைக்கண்டவுடன்பார்க்குங்காலே, முடக்கையிலே மேனியெல்லாமூதிவாடி மெய்க்கரத்தில்கனத்ததொருமைந்தர்தன்னை,எடுக்கையிலே தள்ளாடிசோபமாகி யிப்படியேசுமந்திருந்தா ளென்தாயாண்டே.

(இ-ள்.) அப்படி நடக்கும்போது இருகாலசைவுகளுஞ்சேர்ந்து படுக்கையிலே ஒருபுறமாய்ப்புரண்டுருண்டு பத்தாவைக்கண்டவுடனே காலைமுடக்கும்போது மேனியெல்லாமூதியும் வாடியும், கைகளில்பிள்ளைகளை எடுக்கையில் தள்ளாடிச்சோபமாய் இப்படியே என்தாய்சுமந்து கொண்டிருந்தாள் எ-று.

சாந்தமாயெனைச்சுமந்தஅன்னையார்க்குசரீரமதில்வடிவு நிறந்தங்கம்போலாம், ஆய்ந்தமதிபூரணம்போல்முகமேயாகும் அழகுமதியொளிவதுபோல்புருவமாகும்,தோய்ந்தவிழிநிறமதித குமிழியாகுஞ்சொல்லறியநாசியதும்வசிகளாகும்,காய்ந்தமலர்க்கொப்பானஇதழேயாகுங் கனத்ததந்தங்கருநாகக்கனிபோலாண்டே.

(இ-ள்.) என்னைச்சாந்தமாம்ச் சுமந்திருந்த தமக்கு நிறந் தங்கம்போலாகும் முகம் பூர்ணசந்திரன்போலாகும் மதியொளிபோல்புருவமாகும்,கண்கள் வாளாகும், மூக்குகுமிழாகும், இதழ்மலரிதழாகும், தந்தம் கருநாகக்கனிபோலாகும் எ-று. (௩௧௭)

வரையெழுந்தக்கதிரவன்போல்செருக்சமுற்று வயிரமிட்டிழைத்தசித்திரமார்புமாகும், நிரைவெடுத்துஅலையதுபோற் சிறந்தவுந்தி

செவ்விளநீர்க்கொப்பான கொங்கைரெண்டும், நிறைபடுத்தத்தேளி யைப்போல்கணுக்காலாகுந்தொந்திவயிறுஆலிலைபோல்துவண்டுகாண ல், நிறையடுத்தபுத்தகம்போலொத்தபாதம்நேராகநானிருந்தபாண் டமாண்டே.

(இ-ள்.) உதயகிரியினுதித்த சூரியனைப்போல் செருக்கடைந்து வயிரமி ழைத்த சித்திரமார்பாகுங், அலைபோன்றதொப்புளாகும் செவ்விளநீர்போன் றகொங்கையாகும், தேளியைப்போல்கணுக்காலாகும்,ஆலிலைபோல்வயிறுகும் புத்தகம்போன்றபாதமாகும், இவையெல்லாங்கூடியது நான்வாசஞ்செய்து கொண்டிருந்த பாண்டமாகும் எ-று. (௯௧௮)

இருந்ததலம் விட்டெழுந்திருக்க அஞ்சியென்மனதாலறுசுவை யைவாங்கஅஞ்சி, சிறந்தருளுந்தெய்வதலம்போகஅஞ்சிஜென்மவினை நீராகிமுழுகஅஞ்சி, பரந்தவயிறினிலிருந்து பாடுபட்டார்பாலகனுய் வளர்ந்து விந்தப்பாரில்வந்தேன், வருந்தியென்னை வளர்த்தெடுத்த அன்னைகெர்ப்பம் வயிறுதனிலிப்படியே வளர்ந்தேனாண்டே.

(இ-ள்.) இருந்தவிடத்தை விட்டெழுந்திருக்கப்பயந்து என்மனதாலறு சுவைகளையும் வாங்குதற்கஞ்சியும், தெய்வஸ்தலங்களுக்குப்போக அஞ்சியும் ஜென்மவினைதீர்ந்து முழுக அஞ்சியும், வயிற்றிலிருந்தே பாடுபட்டு பாலகனுய் வளர்ந்து இந்தஉலகத்தில வந்தேன், அன்னைவயிற்றிலும் இப்படியே வளர்ந் தேன் எ-று. (௯௧௯)

ஊனில்லையுறக்கமில்லையுணர்வுமில்லையுறவாகச் செயவிஜையயோ கமில்லை, நாளில்லைநகைப்பதில்லைநலந்தானில்லைநல்லறிவுசற்குணமு நாட்டமில்லை, வீணில்லைவிருப்பமில்லைவிகற்பமில்லை மெய்தளர்ந்து மேனிபுண்ணாய் மெலிந்துஅன்னை, ஆணில்லையென்றுமனநொந்து வாடி அங்கமதிலிப்படியே யமைந்ததாண்டே.

(இ-ள்.) ஊண், உறக்கம், உணர்வு, விஜயயோகம்,நாள் நகை.நன்னடை நல்லறிவு, சற்குணம், நாட்டம், வீண், விருப்பம், விகற்பம் ஆண் இவைகளில் உலவேனென்று மனம்மிகவும்வாடி அங்கத்தில்சேர்ந்தேன் எ-று. (௯௨௦)

கையாரச்செய்கின்றதொழிலுமில்லைகாலாறநடக்கின்றசுறுக்கு மில்லை, மையானவிழிமடவாளுறவுமில்லை மனதாரஅள்ளியிடுந்தரும மில்லை, செய்கின்றவாழ்க்கையில்லைச்செழிப்புமில்லை சேர்ந்தணைந்த தந்தையின்மேலாசையில்லை,ஐயாறுநாள்முதலாய்மூன்றுநாளும்அங் கமெனுந்திருக்கோயிலமர்ந்தேனாண்டே.

(இ-ள்.) கையாரச்செய்கின்றதொழில், நடக்கின்றநடை பெண்களுறவு தருமம், வாழ்க்கை. செழிப்பு தந்தைமேலாசை, முப்பத்துமூன்றுநாளும் திரு க்கோயிலில் பொருந்தியிருந்தேன் எ-று. (௯௨௧)

ஓரடிதானெடுத்துவைத்தா லுடலுங்குன்றி யொத்தவிடைசிறுத்துகொங்கையுடல்கறுத்து, ஈரடியாய்நடந்தந்திக்காலுமீறிச்செப்பரியஅன்னைமனஞ்சலித்துவாடி, காரிடியுமின்னல் கருமனமேதுஞ்சி கன்னமுகில்வருஷித்துக்கடினமாகி, ஆரடிபடுக்குமன்னை கெர்ப்பத்துள்ளே அமைத்திந்தப்படியாக வளர்ந்தேனுண்டே.

(இ-ள்.) ஒரு அடி எடுத்துவைத்தால் சரீரமானது குறைந்துஇடைசிறுத்துகொங்கையும் சரீரமுங்கறுத்து நடந்து உந்திக்காலானதுமீறிதாயின் மனஞ்சலித்து வாடிவருந்துவதையெல்லாம் பொறுத்துநானிருந்தேன் எ-று.

உருவாகித்தலைகீழ்கால்மேலேயாகி யூனாகியொப்பரிய வுடலுமாகி, தருவாகிசண்டனணுகாமலாகிசடம்வளர்ந்து ஒன்பதுதிங்களிலேயென்னை, திருவாகிதனஞ்செயன்தானெழுந்துவோங்கிதீர்க்கமுடன்தலைமேல்கால்கீழேநோக்கி, அருவாகியன்னையுட கருவூர்தன்னில் ஆதியெனுஞ்சோதியைத்தா னர்ச்சித்தேனே.

(இ-ள்.) ரூபமுண்டாய்தலைகீழுங் கால்மேலுமாகி ஒப்பில்லாத சரீரமாய் எமன்அணுகாதபடி சரீரமாக வளர்ந்து ஒன்பதுமாசத்தில்தனஞ்சயனென்பவன் வளர்ந்துயர்ந்துதலைமேலும் காலகீழுமாகமோதியடித்து மாற்றிவைத்த கருவூரில் ஆதியாகிய சோதியைநான் அர்ச்சித்தேன் எ-று. (௧௨௩)

அகத்திலோரகமெனவே வீடுங்கட்டி அஷ்டகருவிக்குலத்தைக்குடியாய்நாட்டி, ஜகத்திலுயர்வேதமறியாதசூட்சும சிறந்தருளும்வயதுபிரமாணங்கூட்டி, யுகத்திலெழுசாஸ்த்திரத்தால்முடியாவண்ணமுற்பத்தியானவகை யுண்மைகாட்டி, குகைத்தலத்திலிருந்தவன்னைகருவூர்க்குள்ளேகும்பிட்டகோயிலெல்லாங்கூறுவேனே,

(இ-ள்.) மனத்தில் ஒருசிறுவீடுகட்டி கருவிகளையெல்லாங் குடியாகநிறுத்தி, வேதங்களாலுமறியப்படாத சூட்சமாகியவயது பிரமாணங்கற்பித்து குகையாகிய அன்னையின்கருவூருக்குள்ளே கும்பிட்ட கோயில்களை யெல்லாஞ் சொல்லுகின்றேன் எ-று. (௧௨௪)

## ஆறுதாரதரிசனை-தரு.

குப்பிட்டுக்கொண்டேன்காண்-கணேசனைக்
குப்பிட்டுக்கொண்டேன்காண்.

(இ-ள்.) நான் கணேசனைக் கும்பிட்டுக்கொண்டேன் எ-று.

கும்பிட்டுக்கொண்டேன் குருவருள்பாதத்தில் கோயில்திருக்காணிமூலத்தின்வாசலில், வெம்பிட்டக்கனியை யின்பிட்டுவுண்டருள்வெத்திமதகரி சத்திதன்பாதத்தில், அம்பிகையாகியஆதிபராஞ்சோதிஅண்டத்தைவிட்டு அணுகியமூலத்தில், அம்பக்கனியுண்டுதம்பிக்கைபாதத்தைநம்பிக்கையாக நாற்கோணவீட்டுக்குள், கும்பி

(இ-ள்.) குருவின் திருவருள் விளங்கும் பாதத்திலும், கோயில்திருக்கனி மூலத்திலும் குண்டலிசத்தியின்பாதத்திலும் அம்பிகையாகிய பரஞ்சோதி அண்டத்தைவிட்டுச்சேர்ந்த மூலத்திலும், அம்பக்கனியைப் புசித்த தம்பிக்கையாக நாற்கோணவீட்டில் தும்பிக்கையையுடைய கணபதியின் திருவடிகளைக் கும்பிட்டுக்கொண்டேன் எ-று. (௯௨௬)

துன்பமகற்றுஞ்சுழிமுனைவீட்டில்தொலையாத துயரந்தொலைத்திடும் வீட்டினில், நம்பனருள்புகழன்புதருமூலம் நாலிதழ்மீதிலேநாயகன் பாதத்தை, சின்மயசிற்பரஞ்சித்ரமணிவாசல் அன்னையருள் திருஅம்பிகைத்தன்பதம், உன்னிதமானசுழிமுனைவீட்டினில் தன்னைத்தானறியுந்தந்திமுகனருள். கும்பி

(இ-ள்.) துன்பத்தையும், தொலையாத துயரத்தையும், தொலைக்கும் சிவபெருமானுடைய அன்பானது வளர்கின்ற சுழிமுனைவீட்டில் தன்னைத்தானறியும் யானைமுகனருள்பெற எ-று. (௯௨௭)

. செங்கதிர்சந்திரன் தங்கியவீட்டினில் திருநடனம்புரிந்தப்புக் கோட்டினில், ஐங்கரன்வல்லபைசங்கரிபாதத்தில் ஆனந்தமூலத்தில் நானின்றனுதினம், சங்கையணிபுந்திருமலர்ச்சோலைகமலமலராயிரத் தெட்டிதழில், திங்கள்மதிவளர்சிங்காசனத்தில்எங்கள்குருபரனீசன் பொற்பாதமே கும்பி

(இ-ள்.) சூரியனும் சந்திரனும் சேர்ந்திருக்கும் வீட்டில் திருநடனம் செய்து அந்தப்பக்கத்திலிருக்குங் கோட்டில் கணபதிவல்லபை, சங்கரிஇவர்கள் பாதத்திலும், ஆநந்தமூலத்திலும் நான் இன்று எப்பொழுதும் கமலமலர்ஆயிரத்தெட்டிதழில் சிங்காசனத்தில் எங்கள்குருபரனுடைய திருவடிகளை எ-று.

முத்திதருஞ்சுழிமூலத்தின்வாசலில் முன்னேமறித்தெழு சந்நிதிவீதியில், தந்திமுகவனும் வல்லபையாகிய சத்திநாற்கோணச் சதுரிதழ்மேலேபான், சித்திதருஞ்செயல் வித்தியாதனத்தில் உத்தமர்சூழலகாசாள்வது,மத்தகசநவரத்தினகுண்டலிவல்லபைமுன்பதமுல்லாசமென்சொல்வேன். கும்பி

(இ-ள்.) மோட்சமளிக்கின்ற சுழிமுனையின் மூலவாசலில்முன்னேவிளங்குஞ் சந்நிதிவீதியில் விநாயகனும் வல்லபைச்சத்தியும் நாற்கோணத்திலிருக்க அவர்களுடைய திருவடிகளின் விநோதத்தை நானென்னவென்று சொல்லுவேன் எ-று. (௯௨௮)

சொல்லும்பதிக்குமோ ஞலிதழ்கோணஞ்சுழித்தெழுந்தகூதாந் தும்பியருள்முகம், வெல்லும்விதியை விதித்தருள்கர்த்தன்பிரம்மாசரஸ்வதிபாதத்தைக்கண்டுநான், அல்லளகற்றுமகண்டமது கடந்தப் புறஞ்சித்திர மணிமலர்வாசலில், வல்லபையாகியபிரம்மாசரஸ்வதிவச் சிரமேடைநடு ரக்ஷகன்பொற்பாதம். கும்பி

(இ-ள்.) இதற்குமேல் நாற்கோணவீட்டில்விநாயகருடைய எற்பாட்டின் படிபடைக்கின்றபிரமதேவன்.சரஸ்வதிஇவர்களுடையதிருவடிகளையும்எ-று.

ஆதிமறைநூலும் வேதம்வகுத்தவநாயன் தன்னுபிக்கமலத்துதித்தவன, சாதிகுலத்தைவகுத்தசரஸ்வதி தந்தைபிர்மாவை நான்சிந்தைகொண்டர்ச்சித்து, சோதியனுஞ்சுழிமூலஸ்தானங் கடந்தோது மறைநாதவிந்தினருள்பதம், வீதியெனுஞ்சதுஷ்கோணத்தி லங்கிய பிர்மாசரஸ்லதிபாதம்பணிந்தேன். கும்பி

(இ-ள்.) ஆதியாகிய வேதங்களையுஞ் சாஸ்திரங்களையும் வகுத்தவரான நாராயணன் நாபிக்கமலத்திலபிறந்தபிரமனையும், சாதிபேதங்களை வகுத்த சரஸ்வதியையுங் கும்பிட்டுக்கொண்டேன் எ-று. (௯௯0)

சொன்னபதிக்குமேலக்ஷரம்பத்துத்துலங்கியவீடுபிறைகோணத்தாலயம், வன்னமில்லாததில்மாலுடன்லட்சுமிவீற்றிருந்தார்மணிபூரகவீட்டினில், வன்னமலர்மணி பூரகந்தன்னில் வளர்ந்தபிறைபோலெழுந்தவக்கணத்தில், நன்னயநாபிக்கமலத்தி லட்சுமிநாரணன்பாதத்தில் காரணமாகவும். கும்பி

(இ-ள்.) மேற்சொன்னபதிக்கு மேல்விளங்குகின்ற வீடானதுபிறைகோணமாகவும் விஷ்ணுவுஞ் சரஸ்வதியும்வீற்றிருப்பதாகவும், மணிபூரகம் என்னும் பேருடையாகவும் இருக்கும் ஆகையால் அவர்களுடைய திருவடிகளை காரணமாக எ-று. (௯௯௧)

உருத்தமதிக்குமப்பாலேழுகோணம் உயர்கின்றஅக்ஷரம்பன்னிரண்டாம்வீட்டில், திருத்தமிருக்கின்றருத்திரனுருத்திரியை தேடிக்கதலியடிக்குள்ளேகண்டுயான், இருநாலிருத்தியொருநாளையோட்டியெழுந்துவளர்ந்தக்கதலியடியினில், மருவியருத்திரிதன்பதம்வணக்கத்துடன்கண் டிணககத்துடனே. கும்பி

(இ-ள்.) அந்தக்கோணத்திற்கப்பால் முக்கோணமாகும்,அட்சரமேபன்னிரண்டாகும், அங்கேருத்திரனும் ருத்திரியும்வீற்றிருப்பார்கள்,அங்கேஎட்டுக்கலைகளைநிறுத்தி நான்குகலைகளைப்போக்கி வளர்ந்திருக்கின்ற கதலியடியில் அவர்களுடைய திருவடிகளே வணங்கி எ-று. (௯௯௨)

காரும்விசுத்தியறுகோணவாலேபுங்கண்டுசொள்ளும் பதினறிதழுக்ஷரம், திருமயேஸ்பரதேவரிருப்பிடஞ்சீராய் மயேஸ்பரிவாதத்தைக்கண்டுயான்தேருங்கரியுஞ்சிவிகைபரியுந் தெரிசனங்காட்டியருளுஞ்சுழித்தியில், மாருருவாகிமயமாய்விளங்கும் மயேஸ்பரன்பாதத் மயேஸ்பரிபாதத்தில். கும்பி

(இ-ள்.) பின்னர் விசுத்திஎன்கிறவீட்டில் அறுகோணமாகிய சக்கரத்தில் பதினறிதழ்களிலுமுள்ள அட்சரத்தில் மகேஸ்வரனும், மகேஸ்வரியும் மகிழ்ந்திருப்பார்கள் அவர்களுடைய திருவடிகளை வணங்கி எ-று. (௯௯௩)

வித்தியாதனகன மேவுஞ்சிவாலயமேருவிணைக்கிணைலலாடஸ்தானந்தனில், அத்திபுரத்திலருளுஞ்சதாசிவ னுமிமனோன்மணிதாயார் தன்பாதத்தில், சித்தியருள்சத்தவட்டத்திலங்கியசிற்பரத்தக்ஷரந்தற்பொருள்ரெண்டினில், முத்தியாகின்றபதிக்கு மேலப்புறமோனம் வளர்ந்தெழுந் தக்ஷரமொன்றிலே கும்பி

(இ-ள்.) லலாடஸ்தானத்தில் சதாசிவனும்மனோன்மணித் தாயும் வீற்றிருப்பார்கள், அங்கேசிற்பரமாகிய உப்பொருள்களைவணங்கி எ-று. (கூகூச)

அன்பிருநூறு மிருபத்துநான்கும் அகண்டகடாக மதுபடைத்தாக்கினை, துன்பமகற்றுவாலாம்பிகைபாதத்தில் தொண்டுசெய்தர்ச்சனைகண்டுமகிழ்ந்துயான்,இன்பமதிமலரன்புவைத்தம்பிகையேகாக்ஷரங்கொண்டிவாகாசமேருவில்,தன்மயசுயரூபசுகாதீதங்காட்டியே தந்தனரிந்திரசங்கிரப்பிரகாசனே. கும்பி

(இ-ள்.) இருநூற்றிருபத்துநான்கு புவனக்களையும்படைத்து அவைகளையெல்லாந் துன்பமணுகாதபடி காக்கின்ற வாலாம்பிகையின் திருவடிகளில் ஏகாட்சர தியானத்துடன் வணங்கி எ-று. (கூகூடு(

சுழித்தாளைமூன்று மெழுத்தாளைமூலம்விழித்தாளைக்கண்டு அழித்தாளையம்பிகை, யிழித்தாளையாக்கினைக்கேகியெழும்பும் பரத்தாளிணையடி பாதம்பணிந்துயான், அழையாளையன்னநடையாளையின்பத்துடையாளைமூலத்திடையாளையம்பிகை, பழையாளைலோகம்பதினாலுங்காத்தாளை தழையாளையென்னுடதாய்பதங்கண்டுயான். கும்பி

(இ-ள்.) சுழித்தவளும், மூன்றெழுத்தவளும், மூலத்தில் |விழித்தவளும் அம்பிகையும், ஆக்கினைக்குச்சென்று எழும்பும்பாதத்தாளும்;ஆகிய அவளுடைய திருவடிகளைப்பணிந்து எ-று. (கூகூசு)

துல்லியைமெல்லியை ஒல்லியைமெல்லியைநல்லியையெல்லியை வல்லியைக்கண்டுயான்,அல்லிநகர்விட்டகண்டவெளிகடந்தத்திபுரத்துக்கேகசுழிமுனை, துல்லியமாமதி சூழ்நகர்மாளிகைசுத்தப் பெருவெளிதாத்தனிருப்பிடஞ், சொல்லிலடங்கா திருவெளிதனில் துரியாதீதமட வாலயங்கண்டுயான். கும்பி

(இ-ள்,) துல்லி, மெல்லி, ஒல்லி, முல்லி, நல்லி, எல்லி, வல்லிஎன்னும் பெயருடையவளாகிய பெண்ணைக்கண்டு நான் அல்லிநகரத்தைவிட்டு அகண்டவெளியைக்கடந்து சுழிமுனையாகிய மதில்சூழ்ந்தமாளிகையில் துரியாதீத பெண்ணைத்தரிசித்து எ-று. (கூகூஎ)

மதியைப்பிடித்துநிதியைத்தரித்து விதியைப்பிடித்துப்பதியிலடைத்துக்,கெதியையடக்கிச்சதியையொடுக்கிஅதிவிதவம்பிகையாத்

தாளைக்கண்டியான், விதிமதிரெண்டு மிறுக்கியிருக்கி விளக்கித்தலக்கிப்பெருக்கிவித்தாக்கி, நதிவலமாக்கியடக்கியேபின்கலைநாடு நடுவணைகூடுறவாகவே. கும்பி

(இ-ள்.) மதியைப்பிடித்து நிதியைச்தரித்து விதியைப்பிடித்துப்பதியிலடைத்து கதியைமடக்கி சதியையொடுக்கி அம்பிகையாகியதாயைச்கண்டு விதியையும் மதியையுமிறுக்கிக்கட்டி தலக்கிப்பெருக்கி வித்தாக்கி இடைகலை பின்கலை, நடுவணை. இவைகளில் கூட்டுறவாக்கி எ-று. (கூகூஅ)

பாணிச்சியம்பர காணிச்சியெண்ணுடல்ஊணிச்சிப்பிரசங்கவாணிச்சியுத்தண்ட, வேணிச்சியாக்கினை மேவும்வாலாம்பிகை ஆணிப்பொற்கமல அம்பிகைபொற்பதம், பாணிச்சடைச்சியை பங்கலலைச்சியைப்பத்திபிடைச்சியை வெத்திநடைச்சியை ஆணுப்பறைச்சியை வாணுதுரைச்சியை அம்பிகைப்பாதத்தைநம்பினேனன்பனுன்.

(இ-ள்.) பாணிச்சி. அம்பரகாணிச்சி, என்னுடலூணிச்சி, பிரசங்கவாணிச்சியுத்தண்டவேணிச்சி, ஆஞ்ஞையில்வாழும் வாலாம்பிகை, கெடாத அம்பிகை. பாணிச்சடைச்சி பங்கவலைச்சி, பத்தியிடைச்சி, நாடச்சிபறைச்சி துரைச்சியாகிய எம்மாதாவின்பாதத்தை நம்பினேன் எ-று. (கூகூகூ)

ஆசைப்பெருங்கடல் வெள்ளத்தினுள்ளே அழுந்தியுடலையெடுத்துமயிர்பால, மோசைச்சிலம்பொலிகேட்டுவாலாம்பிகை யுத்தமியாகிய சத்திதன்பாதத்தை, பாஷைபதினெட்டும் வாசம்பொருந்தியதேசதேசாதிகள்ராஜர்பணிந்திடும், செசபுவனமீதாளுஞ்சக்ரவர்த்திபூசிதபிர்மசதாசிவசம்புவை. கும்பி

(இ-ள்.) ஆசையாகிய பெரியகடல் வெள்ளத்துளழுந்தி உடலையெடுத்து மயிர்ப்பாலத்தின் சிலம்பொலியைக்கேட்டு வாலாம்பிகையின் திருவடிகளை வணங்கினேன் எ-று. (கூச0)

## விருத்தம்.

மரகதத்திபரிபுரத்திவாமிவாலைமகுடரத்னவம்பரத்தி மதுரவின்பம் திருபுரததிசெழுங்கரத்தி தில்லைவாழுஞ் செயபுரத்திமாபரத்தி சிறுபெணணுத்தாள், அரிபுரத்திமகுடான ஆதிசோதியகண்டத்தியுகண்டத்தியலகையான, திருபுரத்திகருவிருத்திசெழிக்கவந்த சிவகாமிகமலமலர்தெரிசித்தேனே.

(இ-ள்.) மரகதத்தி, பரிபுரத்தி, வாமி, வாலைமகுடரத்தினவம்பரத்தி திரிபுரத்தி, செழுங்கரத்தி, தில்லையில்வாழுஞ்செயபுரத்தி, மாபரத்தி, சிறுபெண்ணுகிய ஆத்தாள், அரிபுரத்தி, ஆதி, சோதி, அகண்டத்தி, உகண்டத்தி, அலகையான திருவுறுத்தி, கருவிர்த்திசெய்யவந்த சிவகாமியின் கமலமலபதந்தரிசித்தேன் எ-று. (கூசக)

வாரிடைச்சிகார்க்குழைச்சிவதனம்பேச்சி வாழ்பறச்சியாம்ப றச்சிவட்டமீதில், சீர்புரச்சிமாவிடைச்சிதிங்கள்சூட்சிசெங்கனலாற் சிவந்தெழுந்தசிறுபெண்ணார்கல், ஆர்விழிச்சிபோர்நடைச்சியதியசூ ட்சிஅழகிடைச்சிதுடிநடைச்சியகமில்லாத, பூரணத்தி யம்பணத்தி பருவமையம் பொருளானவம்பிகையைப் போற்றினேனே.

(இ-ள்.) வாரிடைச்சி, கார்குழைச்சி, வதனப்பேச்சிவாழ்பிறச்சி ஆழ்பறைச்சி, சீர்பிரச்சி, மாவிடைச்சி, செவந்தகனலால்திரண்டெழுந்தசிறுபெண்ணுத்தாள், ஆர்விழிச்சி போர்நடச்சி, அதிகசூழ்ச்சி அழகியஇடைச்சி, துடிநடைச்சி, பூரணத்தி, அம்பணத்திமுதலியபேருள்ளவளை துதித்தேன எ-று.

காத்தாளையகண்டமதின்கருத்தினளை கனகசபைவட்டமதில்க திரானான, மூத்தாளைமூவருக்கும்தாயானளை முப்புரத்தையெரித்த மூலச்சுழியினளை, பாத்தாளைபற்பகநிகரையாத்தாளை பதினாலுஉல குக்குந்தாயானளைப், பூத்தாளைப்பூவிலொருபிஞ்சானளைப் புகழுமா தளம்பூவின்வடிவானளை.

(இ-ள்.) காத்தாளை, அகண்டத்தின்கருத்தினளை, கனகசபைவட்டத்தில்மூத்தாளை மூவருக்குந்தாயானவளை, முப்புரத்தையெரித்த மூலச்சுழியினளை பத்மகநிக்கரையாத்தாளை, பதினான்குலகங்களுக்குந்தாயானவளை, பூத்தாளை பூவிலொருபிஞ்சானளை, புகழத்தக்கமாதளம்பூவின் நிறமுடையவளை எ-று.

சித்தர்கள்தான்பதினெண் பேராத்தாள்சொன்ன செயலெல் லாங்கண்டுணர்ந்து தெளிந்திட்டார்காண், வித்ததிதநாதபரிபூரணத் தின்விபரமெல்லாங்கண்டுணர்ந்துமேன் மேல்வாழ்ந்தார்கூத்தாடிதி ருநடனக்குவட்டிலேதான் கும்பமுனியால்தெளிந்தோர் கோடா கோடிதீர்த்தாளை யென்கலியைச்சிறுபெண்மாது செம்பொனிறவம் பிகையைத் தெரிசித்தேனே.

(இ-ள்.) பதினெண்சித்தர்களுக்குந் தாய்சொன்ன செயலெல்லாங்கண்டு தெளிந்து நாதபரிபூரணத்தின் விவரமெல்லாவற்றையுங் கண்டுணர்ந்துஉயர்ந்தபதவியில்வாழ்ந்தார்கள், அல்லாமல்கும்பமுனியின் திருவருளால்தெரிந்து கொண்டவர்கள் அநேகர் ஆனாலும்என்னுடைய கலியைத்தீர்த்த வாலாம்பிகையைத் தரிசித்தேன் எ-று. (உசச)

ஆரணத்திநாரணத்தியாகமத்தி அகண்டத்திசம்பரத்தியாதியான காரணத்திவாரணத்திகனகசத்திகமலமர் கருணைவெற்பில்காட்சிதந் தசிரணத்திமாரணத்தி திங்கள்சோதி செம்பரத்தியம்பரத்திசிவகா மத்திபூரணத்திபொற்கமலப்புருவத்தாயைப் புவனமயேஸ்பரி கம லம் போற்றினேனே.

(இ-ள்.) ஆரணத்தி, நாரணத்தி, ஆகமத்தி, அகண்டத்தி, அம்பறத்திஎல்லாவற்றிற்கும் முதன்மையானகாரணத்தி, வாரணத்தி, கனகசத்திகமலமல

ரைக் கிருபைவைத்து எனக்குக்கடாட்சித்தசீரணத்தி, மாரணத்தி திங்கள் சோதியம்பரத்தி சிவகாமிபூரணத்தி, ஆகிய பொற்கமலப் புருவத்தாயைப் போற்றிசெய்தேன் எ-று. (௲௪௫)

கனல்கோடிரவிகோடிகாந்திகோடிகருநாசுழிமுனைகோடிமின் னல்கோடி,அனல்கோடிமுகில்கோடியண்டங்கோடி அகண்டமண் டலங்கோடியளவில்லாத, சுனைகோடிசுழல்கோடிசூக்ஷக்கோடிசூக்ஷ சடாதாங்கோடி சுடர்தான்கோடி, புனல்கோடிவினைகோடி தாபங் கோடிபுகழ்வணங்கித் திருவடியைப்புகழ்வேனன்றே.

(இ-ள்.) கனல், ரவி, காந்தி, சுழிமுனை, மின்னல், அனல் முகில், அண் டம், அகண்டம் சுழல் இவைகள்கோடியாகவிருக்கின்ற புகழ்ச்சியை வணங் கித் திருவடியைப் புகழ்வேன் எ-று. (௲௪௬)

கொச்சகம்.

என்னையுருவாக்கியுட லெண்ணெழுத்தைமெய்யாக்கி
அன்னையெனுமண்டபத்தி லம்பரமாஞ்சிற்பரத்தில்
கன்னல்விழிமாமறைச்சி காதலருளும்பறைச்சி
உன்னிதவாலாம்பிகையேனுட் பொருளைப்போற்றினேனே.

(இ-ள்.) என்னைரூபகப்படுத்தி அஷ்டாட்சரங்களையும் மெய்யாக்கி அன் னைவீற்றிருக்கும் மண்டபத்திலும், அம்பரமாகியசிற்பரத்திலும் கன்னல்விழி யையுடையமறைச்சியும், காதலையருளும்பறைச்சியும் வாலாம்பிகையு மாகிய உட்பொருளைப் போற்றிசெய்தேன் எ-று. (௲௪௭)

முட்டவிருசூட்டி முகமறியாவம்பிகையை
தட்டழியாவட்டமதில் தானவனாய்தானிருந்து
மட்டுமறிபன்னிரண்டில்வாங்குமொருநாள்தனில்
கட்டியிறுக்கிநல்ல கருத்தால்துதித்தேனே.

(இ-ள்.) இருசுட்டிகளையணிந்த முகமறியாத அம்பிகைப்பெண்ணை வட் டாகாரத்திலிருந்து பன்னிரண்டுகலைகளில் வெளிவிடாமல்உள்வாங்குகின்ற நான்குகலைகளால் கட்டியிறுக்கி நல்லஎண்ணத்தோடு துதிசெய்தேன் எ-று.

மறைநாலும்வாழுகின்ற மாமறையுந்தாண்டியப்பால்
கரைகடந்துயான் மகிழுங் கருவீட்டிலேபுகுந்து
திரைகடந்துநின்றுவளர் திருவீட்டுக்கபபுறத்தில்
அரைகடந்தசோதிசுட ரம்பிகையைப்போற்றினேனே.

(இ-ள்.) நான்குவேதங்களையுங்கடந்து அப்பால்நான் மகிழ்கின்றகருவீட் டிற்புகுந்து அலையைக்கடந்துநின்ற அழகியவீட்டுக்கப்புறத்தில் சோதிவடிவா கிய அம்பிகைப்பெண்ணைத் துதிசெய்தேன் எ-று. (௲௪௯)

ஷ ஆனந்தக்களிப்பு-தரு.

தனன தனன தந்தனனு-தான-தனன தனன தனன தந்தனனு.

நாற்கோணசக்கரவீட்டில்-நல்ல-கலிதழான நடுவணைக்கோட்டில், தீர்க்கமாயெனையுருகாட்டி-வைத்தகண-சித்திவிநாயகா நித்தஞ்சரணம், சட்கோணத்துள்ளலங்காரம்-பிர்ம-சரஸ்பதி பாதபங்கயத்தைநான்மறவேன், தற்காத்தருள்புரிந்தோன்-சிவ-சம்போசதாசிவ சங்கராசரணம்-தனன.

(இ-ள்.) நாற்கோணவீட்டிலே நான்கிதழ்களையுடைய நடுவணைக்கோட்டில் என்னையுருக்காட்டிவைத்த சித்திவிநாயகர்க்கு தினமுஞ்சரணஞ் செய்கிறேன்;-கூட பிரமசரஸ்வதியின் பாதங்களையும், சிவசம்போசதாசிவசங்கரனுர் திருவடிகளையும் வணங்கினேன் எ-று. (௫௰)

ஆசாபாசமுந்தவிர்ந்து-நல்ல-ஆனந்தஞானக் கடலில்மூழ்கி, பூசாபலன்செய்துவைத்த-ரத்ன-பொன்னுங்கணபதி யின்னஞ்சரணம் நேசபரிபூரணத்தின்-மதுர-வாசமலாருள்கணேசனேசரணம்பேசும் பெருமூலாதாரஞ்-சுழியின்-பிராண குண்டலிபொற் கமலத்தைமறவேன்-தனன.

(இ-ள்.) ஆசையாகியபாசத்தைநீக்கி ஆநந்தஞானக்கடலில் மூழ்கி பூசைசெய்துவைத்தவொற்கணபதிசரணம், பரிபூரணத்தின்மதுராவாசமலரையருள்கின்ற கணேசனே ச ணம், பேசுகின்ற மூலாதாரத்திலுள்ள குண்டலிசத்தியின் பொற்றமரைகளை மறவேன் எ-று. (௫௰௧)

அடிநடுமுடியுமறிந்து-நல்ல-அகண்டசாக்ரஞானக்கடலி லிருந்து கொடியபாசத்தைப்பிரித்து-நிதம்-குடியாகும்பிர்மாவைநோக்கினேன்சரணம்பிடிபடாதரவிமதியும்-இதை-பலமாய்ப்பிடித்துயான் வாசிகொண்டேதி துடியொருசாதனையாண்டில்-துன்ப-மகலும்பிர்மாவையான்தொழுதடிசரணம்-தனன.

(இ-ள்.) அடிநடுமுடிகளையுணர்ந்து அகண்டமாகியஞானக்கடலிலிருந்து கொடியபாசத்தைப்பிரித்து தினமும்பிரமனைநோக்கினேன், ஆனல்அவனுடையசரணம்பிடிபடவில்லை ஆகையால்ரவிமதிகளைப்பலமாகப்பிடித்துவாசியைக்கொண்டோதி ஒருவருஷத்தில் சாதனைசெய்து பிரமனைத்தரிசித்தேன் எ-று.

உந்திக்கமலத்தின்மேலே-நல்ல-முக்கோணவட்டத்தினுள்ளே பிரகாசஞ், செந்திசிங்காசனத்துள்ளே-சிவ-சித்திதரும்பாருத்திரிசரணம், சந்திரப்புட்கரணிதன்கரையில்-சித்திரச்-சாவடி மண்டபசாலைநடுவில், கெந்தசுகந்தவிலாசம்-விநோத-அந்தபரிமள அகண்டவிலாசம்-தனன.

(இ-ள்.) உந்திக்கமலத்தின்மேல் முக்கோணவட்டத்தினுள்செந்திசிங்காசனத்திற்குள் சர்வபிராணிகளுக்குஞ்சித்தியைக்கொடுக்கின்ற உயர்ந்தருத்திரிசரணங்களை சந்திரபுஷ்கரணிகரையிற் சித்திரச்சாவடிமண்டபத்தின் சாலை நடுவில் கந்தசுகந்தவிலாசத்துடன் கண்டேன் எ-று. (௫௰௩)

காயமன்றோரையடுத்து- நல்லகாணுதருபகருத்தைக்கொடுத்து மாயாவிசுத்திப்படைத்து-வாழும்-மயேஸ்பரன் பாதத்தைமறவேன் காணுண்டே தூயபதிகளுந்தாண்டி-நல்ல-சுக்கிலத்தாடுஞ்சதாசிவந்தாண்டி, தாயுநானுமறவேண்டி-குரு - தற்பரஞானப்பிரபந்தமிதாண்டி-தனன.

(இ-ள்.) காயமென்றவர்களையடுத்து நல்ல காணுதருபக்கருத்தைக்கொடுத்து மாயாதவிசுத்தியைப்படைத்து வாழ்கின்ற மகேஸ்வரன் பாதத்தை மறவேன், பின்னர் பரிசுத்தமான பதிகளையெல்லாந்தாண்டி சுக்கிலத்திலாடுகின்ற சதாசிவனையும், மனோன்மணியையும் மறவேன் எ-று. (௫௰௪)

தும்பிமதகரிவீட்டில்-நல்ல-சுக்குலநாதமிரண்டையுமூட்டிவெம்பாலுருவையுங்காட்டி-வைத்த-அம்பிகையுன்பதம்நம்பினேன்சரணம்தம்பித்துவாசிரெண்டேதி-மதி-சார்வானசுக்குலத்தாலேகொண்டேததி,மப்பித்துஎண்சாணளர்ந்து-வைத்த-வாலாம்பிகைப் பதமறவேன்காண்சரணம்-தனன.

(இ-ள்.) தும்பிக்கையையுடைய மதம்பொழிகின்ற விநாயகருடைய வீட்டில் நல்லவிந்துநாதமிரண்டையும்மூட்டி கொடியபாலரூபத்தையுங் காட்டி வைத்தஅம்பிகையே உன்னுடையதிருவடிகளை நம்பினேன் வாசியிரண்டையுந்தம்பித்து மதியைச்சார்ந்த சுக்கிலநதைக்கொண்டு ஏற்றி எண்சாண்தேகத்தை அளந்துவைத்த வாலாம்பிகையின் திருவடிகளை மறவேன் எ-று.

ஊதியதாரைவெளியில்-நல்ல-உம்மென்று மோங்காரவூத்தைக்குழியில், வீதியிலென்னையழைத்து-வைத்த-மெல்லியேயம்பிகை வல்லியேசரணம், சேதியறிந்தேன் காணம்பாள்-மதி-சேரும்பதி யறிந்தாழுரைக்காட்டி, மேதினியோர்களெல்லாம்-ஞான-வெட்டியானென்றுமகிழ்ந்தாரே-தனன.

(இ-ள்.) ஊதியதாரையானது உம்மென்று ஒங்கார ஊற்றைக்குழியையுடைய வீதியில் என்னையழைத்துவைத்தவல்லியே அம்பிகையாகிய வல்லியே சரணம், உன்னுடைய சோதியையுணர்ந்தேன்சரணம், சேரும்ஊரைத் தெரிந்துகொண்டால் அங்கேஊரைக்காட்டி உலகத்தவர்களெல்லாம் ஞானவெட்டியானென்று மிகவும்மகிழ்ந்தார்கள் எ-று. (௫௰௬)

சிங்காரஅம்பரவீதி-நல்ல,சிற்பரவானந்ததற்பரசோதி,ஆங்காரகூத்தோடேவெற்றி-நின்ற-அம்பிகையுன்பாதநம்பினேன் சரணம் நீங்காமற்பிரகாசவீட்டில் - நின்று - நெடுநாளிருந்த நிலையெல்லாங்

கண்டு, தீங்கில்லாச்செகச்சோதிபாதம்-சென்ம-சாகரமுள்ளநாள்வரையு நான் மறவேன்-தனன.

(இ-ள்.) அழகிய அம்பரவீதி நல்லசிற்பர ஆநந்ததற்பரசோதி ஆங்காரக்கூற்றைச் செயித்த அம்பிகையே உன்னுடையதிருவடிகளை நம்பினேன்சதாபிரகாசம்வீசுகின்ற வீட்டில் நெடுநாளிருந்து அந்தநிலைகளையெல்லாங்கண்டு கெடுதலில்லாத ஜெகச்சோதிபாதத்தை நானுள்ளவரைக்கும்மறவேன் எ-று.

விருத்தம்.

திருமருவுங்கருவூரி லுதித்துப்பத்துதிங்கள்சென் றுபாரில்வந்த செய்கையெல்லாம், கருவுருவாயான்வளர்ந்துகண்டகாட்சி சாயமெடுத்துழன்றதன்பின்கருத்துமாறி, உருவெடுத்துமனையாட்டிக் கையிற்சிக்கி உபாயமதாயான்விலங்கியுலகத்துள்ளே, இருவருமேயொருமனதாய் குருவுஞ்சீஷன் இருப்பதுபோலில்லமதிலினிவாழ்ந்தேன்

(இ-ள்.) அழகியகருவின்கண்தோன்றி பத்துமாதங்களுங்கடந்துஉலகத்தில்வந்து அங்குள்ளகாரியங்களை யெல்லாங்கண்ட காட்சியையுடையதேகத்தையெடுத்துத் திரிந்ததன்பின் கருத்துகளெல்லாம் மாறிப்பின் பெண்சாதிகையிலகப்பட்டு விலகி உலகத்திற்குள் இருவரும் ஒருமனதாய் குருவுஞ்சீடனுமிருப்பதுபோல் வீட்டின்கண்வாழ்ந்தேன் எ-று. (௬௰௮)

இனியிருந்துவாழ்ந்தசங்கையெவருங்காணார்இகத்தில்ரதிபுருடனிருந்ததுபோலுள்ள, வனிதையுடன்மாய்கைதனில் மயங்கிடாமல் மனுநீதிதவறுமல்மனையாள்கையில். தனைநினைவாய்தாயுடனே மைந்தன்கூடித் தானிருக்கும்பாவனைபோல்தனதாயொத்து, நானிந்தப் படியெரியுங்கும்பிக்காகநயந்துநெய்தல்செய்துயிந்தநாட்டில்தானே

(இ-ள்.) அங்ஙனமிருந்துவாழ்ந்த சங்கையை எவருங்காணமாட்டார்கள் இகத்தில் ரதியும்மதனனும் கூடியிருந்ததுபோலுள்ள பெண்ணுடன்மாய்கையிற்சிக்காமலும், மநுநீதிதவறுமலும் மனையாள்கையில் தனித்தநினைவாகி தாயுடன்பிள்ளை கூடியிருக்கும் பாவனைபோல் தாயானவளொத்து இந்தப்படி கும்பிக்காகநயந்து இந்தநாட்டில் எ-று, (௬௰௯)

நாட்டிலனைவோரிருக்குநடத்தைபோலும்நாயகனும் ரதியுமுறவாடும்போதும், ஊட்டியுணர்விக்குமன்னசுவைகள்போலுமுடுத்துகிலாபரணமுகமைபோலும், காட்டியநாள்திதிகள்கர்மங் கருதுபோலும், கவிதைபுலவோர்கள்வரப்போகும்போலும், தேட்டினிலுமாகுதிகள்பூசைபோலுந்தேவதைக்குமுபசாரஞ்செய்தல்தானே.

(இ-ள்.) உலகத்தில்யாவரிருக்கும் நடத்தையைப்போலும், ரதியும்மதனனுமுறவாடும் போலும் உண்பிக்கும் அன்னசுவைகள்போலவும், உடுத்துவஸ்திராபரணம் உவமைபோலும், நட்சத்திரம், திதி, கர்மம் இவைகளைநினைப்பது

போலவும், வித்துவான்கள் வரப்போகும்போதும், ஆகுதிகள் பூசைநைவேத்தியங்களுக்கும் உபசாரஞ் செய்தல்வேண்டும் எ-று. (௫௯௰)

இந்தவிதமாயிருந்து வுலகந்தன்னில் இனியிருந்துவாழ்ந்தது போலெடுத்தேன்ஞானம், பைந்தமிழிற்குயர்ந்த அகத்தீசர்வந்துபலகலையுமெனக்குரைத்துப்பாலித்தார்காணெந்தைகுருபரனையனுதினமும்போற்றி பெடுத்தவடியறிந்துநடுமுடியுங்கண்டு, சுந்தரமாங்காயசித்தியோகசித்தி சிவரூபசித்திஞானசித்தி துதிபெற்றேனே.

(இ-ள்.) உலகத்தின்கண் இப்படியிருந்துவாழ்ந்ததுபோல் ஞானமுமெடுத்தேன் பசியதமிழ்க்குருவாகிய அகஸ்தியர்வந்து பலசாஸ்திரங்களையுமெனக்குக்கற்பித்தார் ஆகையால் எந்தந்தையாகியகுருவை தினமுந்துதித்து அடிநடுமுடிகளையுணர்ந்து காயசித்தி, யோகசித்தி, சொரூபசித்தி, ஞானசித்தி இவைகளைத் துதிசெய்தேன் எ-று. (௫௯௧)

பெற்றபேரிப்படிதானமைக்கும்வாறு பிரபல்லியம்விளங்கஇந்நூற்பிரசங்கத்தைச், சித்தருக்குஞ்சிவயோகிஞானத்தோர்க்குந் தெரிந்திடயான்தத்துலத்தின்செயல்களாய்ந்துமுத்தமிழால்பூருவத்தின் கருவூர்காட்டில் மூலமெல்லாம்வெளிதிறந்து முன்னேசொன்னேன், கற்றறிவோர் ஞானவெட்டிவேதாந்தத்தின் கற்பனையைக்கண்டறிவோர் கருத்துள்ளாரே.

(இ-ள்.) பெற்றவர்கள் இப்படியேஉண்டாக்கும்பிரபல்லியம்விளங்க இந்நூல்பிரசங்கத்தை ஞானவெட்டி என்கிறபேரினால் தமிழ்ப்பாஷையில் சொன்னோம் ஆனால்வேதாந்தத்தின் கற்பனையைக் கண்டறிபவர்களே கருத்துள்ளவர்களாவார்கள் எ-று, (௫௯௨)

கருத்தறிந்துகருவறிந்துகமலவீட்டில் கருணைமதியமிர்தரசபானரூட்சம், பொருத்தமதாயருள்விந்துகாரசாரம் பூரணத்திலிலகுஞ்சுழிபுகலையாய்ந்து, தரித்திரமும் வறுமைபகன்றருள்பெற்றுசான்சமுசயங்கள்விளங்கசங்கைதமிழாற்சொன்னேன், குருவினருள்புகழ்பெறவுமினிதான்கூறுங் கோடானகோடிரகசியமுஞ் சொல்வேன்.

(இ-ள்.) கருத்தையும்மர்மத்தையுமுணர்ந்து கமலவீட்டில் கிருபையையுடைய அமிர்தரசபானத்தின் சூட்சத்தைப்பொருந்தி விந்துகாரசாரங்கள் பூரணசுழி இவைகளைத்தரிசதவிசேடத்தால் தரித்திரம்முதலியவைநீங்கி சமுசயங்களொன்றுமில்லாமல் கோடானுகோடி ரகசியங்களைச்சொல்லுவேன் எ-று.

சொன்மொழி யறிந்துவெகுகுரூக்ஷங்கண்டு சுழிபின்முனையறிந்துகற்பசுகாதீதத்தில், வல்லமையாய்செகச்சோதிவிளங்கும்வீட்டில் மதியும்ரவியொளியுமணிமுடியுநேர்மை, அல்லலற்று திருநடனக்கமலவீட்டில் ஆயிரத்தெட்டிதழினின்று அமிர்தமுண்டு, நன்மைதன்மையறியசிவயோகஞான நற்கமலநாதவிந்தின்நடனமாண்டே.

(இ-ள்.) அப்படி சொல்லப்பட்ட சொற்களையுணர்ந்து சுழிமுனையையு மறிந்து சுகாநீதத்தில் வல்லமையால் சோதிவிளங்கும்வீட்டில் மதியும்சூரியனும், அல்லலற்ற திருநடனக் கமலவீட்டில் ஆயிரத்தெட்டிதழில்நின்ற அமிர்தபானம்பண்ணி நன்மை தீமைகளையுணர் சிவயோகஞானகமல வித்தின் நடனமாகும் எ-று. (௩௰௪)

ஜெனனகாலதரிசனை-வண்ண-தரு.

தானதனந்தனனா-தன, தானதனந்தனனா-தன
தானதானனா-தானதானனா-தானதானனாதானதனனா

சோதிப்பெருந்துறையிலுயர் நாதவிந்துநித்துசுக்குலமாகியமூலமேலுந்திடு ஞாலமுமிந்திரசாலமதாகவே,விதிநடுவணையிலுடலாம் வளர்ந்தெழுந்துவிவேகமும் வைபோகமும்வெகுபாவமுங் கருவூர்தனில்வாழ்கவே,ஆதியென்றம்பரத்தில் வாலாம்பிகைபாதத்தில்கொண்டஆசையும்பசுபாசமும்விட்டுநேசமதாகவேநின்றுவணங்கியான், பாதிமதியணிந்தசிவபாதபங்கயத்தில்பதிவீட்டிலே கெதிகாட்டியே எனைஅழைத்துவளர்த்து அமிர்தமூட்டினள் அம்பிகைபாதமருள் புரிவேனே-தான.

(இ-ள்.) விளங்குகின்ற பெருந்துறையில் நாதவிந்துக்கள் தோன்றி சுக்கிலஸ்தானத்திற்குமேலும் இந்திரஜாலமாக நடுவணையின்கண் சரீரமாகவளர்ந்தெழுந்துவிவேகம், வைபோகம்பாவம் இவைகளுள்ளகருவூரில் முதல்வஸ்துவாகிய பரவஸ்துவில் வாலாம்பிகையின் திருவடியில்கொண்ட ஆசாபாசங்களை விட்டுநின்றுவணங்கி பாதிசந்திரனைத்தரித்த சிவபெருமானுடைய பாதங்களில் கதியைக்காட்டி என்னை யழைத்து வளர்த்து அமிர்தமூட்டினவளாகிய அம்பிகையின் திருவருளுக்குப் பாத்திரவானாவேன் எ-று. (௩௰௫)

வாழ்வுபரிந்தருளுந் திருவாலாம்பிகைபதத்தில் சதுர்வாசலில் சவுகாசமாபிரயாசைமுத்துபூஞ்சோலைவிட்டேகினன்,பாழுமுப்பாழ் கடந்துகருவூர்கடந்துநின்று ஆதிலாவியபரமேவியும்துரைசாமியிருந்ததிசாரமேநம்பினேன்சூழ்ந்திரிபுரத்தில்சுகஞானப்ரகாசமதில்மலர் தூபமும் வன்னிதிபமும் வலமாகவன்பாய்வணங்கிப்பணிந்தியான், தாழ்வுவாராமலுமே பசியாரவுமமிர்தமுண்டுவெகுசாகர முஞ்ஞான மார்க்கமுங்கருநீக்கியபிராமி நின்பதம்போற்றிபேவாசியறிந்துமலர் பொழிந்தேனே-தான.

(இ-ள்.) வாழ்க்கையை விளைவிக்கின்ற வாலாம்பிகையின் திருவடிகளில் நான்குவாசலில்சாவகாசமாய் பிரயாசைப்பட்டுமுத்திப்பூஞ்சோலையையும்முப்பாழையுங்கடந்து காரசாரங்களையே நம்பினேன் ஆகையால் அங்கேதூபதீப நைவேத்தியங்களால் வலம்வந்துவணங்கி யாதொரு தாழ்வும்வாராமலும் பசி

நீக்கவும் அமிர்தபானஞ்செய்து மிக்கபெரிதாகிய ஞானமார்க்கத்தால்கருவை நீக்கி அபிராமியின் திருவடிகளைபோற்றி வாசியையுணர்ந்து மலர்பொழிந் தேன் எ-று. (ருசுசு)

தாயகமாகினதால்சிவ தற்பரைபொற்பதத்தில் பலசாஸ்திரங்க ளுங்கோத்திரத்தோடு சூஸ்திரமேசெய்யுஞ்சூதுகள்விட்டந்த,ஆயனை ரமனையில் மணியானபூரகத்தில்வாலாம்பிகைப்பதமாமலர்மதிவிலா சமேவியவண்ணக்கவியருள், ஓயாமல்வாசிகொண்டு கண்டமூதிடுந் தாரையிலே யமுதாட்டமு மதிலாட்டமும் ரவிகூட்டமுங் கமலவீட் டிலூதித்துக் கருவூரில்வந்தியான், காயசித்திபெறவும் உடல்மாயா மருந்தறிந்தேன் கலைவாசியுமதிபேசியு மிருநாசிசுவாசமிறந்து மீரு மலுமிருந்துலகத்தோ டுணர்ந்துவாழ்ந்தேன்-தான.

(இ-ள்.) தாயாகையால்தற்பரையின் திருவடிகளில்சாஸ்திரங்களும் கோத்திரங்களும், சூஸ்திரஞ்செய்யுஞ் சூதுகளைவிட்டு ஆயன்வகுத்தவீட்டில் பூரகத்தினால் மனோன்மணிபாதத்தை விலாசமாக இடைவிடாமல்வாசிகொண்டு கண்டத்திலூதுந்தாரையில் ஊதிஇரண்டுநாசிகளின் சுவாசமும் மீருமல் இருந்து உலகத்தாருடன்கலந்து வாழ்ந்தேன் எ-று. (ருசுஎ)

ஊதுந்துருத்தியிலே தாரையோடாமலோங்காரங் கொண்டதிவோக்கியமுங் குருவாக்கியமும் அருள்பாக்கியந்தந்து பாலித்துவாலாம்பிகை,சூதுகவுடுறையாசிறுவீட்டிலேயமைத்துதிருவாலையைமுடிமேலேறியொரு நாலையுங்காட்டியே ஞானம்புகழ்ந்தருள், பாதகடுமன்செய்திடும்பசுபாசம்விட்டகன்றுபலந்தாரும் நிலையூறும்கலைநாடுங்கருவூரிலேறுங்குடிவளர்வேதவெளியறியாசாரம் வெண்மதிவெண்சுடர்வெகுநேமியைசிவகாமியை அபிராமிபதமறவாமலனுதினமசடறவும் யான்வணங்கினேனே-தான.

(இ-ள்.) ஊதுகின்ற துருத்தியில் தாரையானது ஓடாமல்ஓங்காரத்தைக்கொண்டு குருவின்சகாயத்தால் வாலாம்பிகையைக்கண்டு மேலேறி நான்கு கலைகளையுங்காட்டி கருவூரிற்சென்று அபிராமியின் திருவடிகளையான்வணங்கினேன் எ-று. (ருசுஅ)

மூப்புரமுச்சுடரில்-சிவ-மூன்றெழுத்திலேமூலச்சுழியில் ஞாலப்பதியில்-மலர்-முத்திதருஞ்சிவசத்திப்பிரகாசமே,தற்பரமாகியதோர்சுவாதிஷ்டான ஆலையத்தில்சரஸ்வதியும சதுர்முகனும்-பல-சாதிவகுத்தவர்பாதம்பணிந்துயான், அப்புவுமானதோ மணிபூரகத்திலேதானலைகடலில்மலைவளவில்-ஒரு-ஆலிலைமேல் திருமால்திருலட்சுமிசிற்பரைமுக்கோணதிரள்-சுதலிவட்டமதில்வருஞ்சேர்ந்து வல்வினைதீர்ந்துமாறிடகாய்ந்துருத்திரனுருத்திரிதன்பதங்-கலங்காமல்வணங்கிக்கருதினேனே-தான.

(இ-ள்.) முப்புரம் மூன்றுசுடர்கள், சிவபெருமானின் மூன்றெழுத்திலும் மூலச்சுழியிலும் முத்தியைக்கொடுக்கின்ற சிவபிரகாசமாகிய சுவாதிஷ்டானம் என்கிற இடத்தில் சரஸ்வதியும், பிரமதேவனும் பலசாதிகளை வகுத்தவர்களாகையால் அவர்களைப்பணிந்து மணிபூரகத்தில்வாழ்கின்ற விஷ்ணுவும் லட்சுமியும், அநாகதத்தில் வாழ்கின்றருத்திரனும், ருத்திரியும் ஆகியஇவர்களுடைய திருவடிகளைவணங்கினேன் எ-று. (௫௬௯)

தெண்டிரைவாழ்புவியுஞ்ஜெகமுழுதுநாதவிந்துநல் -கனத்தேடலுங்-கவிபாடலுமதிகூடலுங்நடமாடலும்போலவே,கண்டுமகிழ்ச்சிபெறமதிகாட்டும் விசுத்தியிலேகதிசாயமும் வெகுஞாயமும்வைத்துமாயமாகிமறைத்தசூழ்த்தியிலே-மண்டல-மூன்றதுபோல் அறுகோணவாசலிலேகலைமாறவும்பதினறிலேஇருநாலையிருக்கிநாளையும்விட்டவர்வெண்டிருமலர்பொழியும்விசுத்திமயேஸ்பரத்தில்வெகுவேசமுஞ்சகலகிதமுமலர்நாதம்புரியுமயேஸ்பரிதன்பதமயங்காமலனுதினம் வணங்கினனே-தான.

(இ-ள்.) தெள்ளியகடல்சூழ்ந்த உலகமுழுவதும் நாதவிந்துக்களால் கவிபாடலும், நடமாடலும்போல் மகிழ்ச்சிபெறமதிகாட்டும் விசுத்தியிலே வெகுஞாயம்வைத்து மாயமாய்மறைத்தசூழ்த்தியில் மூன்றுமண்டலத்தைப்போல அறுகோணவாசலில் பதினறுகலைகளில் எட்டுக்கலைகளையுங் கட்டி நான்குகலைகளையும்விட்டு விசுத்தியென்கிற இடத்தில் மகேஸ்வரியின் திருவடிகளை அநுதினமும் வணங்கினேன் எ-று. (௫௭௦)

ஆக்கினைவட்டமதில் வளரவ்வளவுவ்வாகி சிறுவரையிலேவட்டத்திரையிலேதெண்டிரையிலே பொருளொன்றெனநின்றவர், தூக்கியபாதமுடன் சுடர்நோக்கியே நின்றனுநாவாசிதூக்கியேமதிநோக்கியே வினைபோக்கியேகாயத்தில்பூரணத்தினருள்,உக்கிரமாய்நற்கமலமோராயிரத்தெட்டிதழில் ஒளிவாகியேசுழிதாவியே யுறவாகவேமதிசூடியசெஞ்சடைமீதிலணுகிநான், பாக்கியவானெனுமேபாரில்பாசவினையகற்றிபாரிசாதகத்துடன்மேலிருந்துடல்வாழும் மகிழ்ந்துயிருந்துநான்வணங்கச்சதாசிவமனோன்மணியைவாழ்த்தினனே.

(இ-ள்.) ஆக்கினையாகியவட்டத்தில்வளர்கின்றஅவ்வுடன்உவ்லாகிசிறுவரையின்வட்டத்தில் தூக்கியபாதத்துடன்வாசிதூக்கிமதியைநோக்கிவினைபோக்கிச்சரீரத்தில் பூரணத்தின்திருவருளை உக்கிரமாய் நல்லகமலம் ஆயிரத்தெட்டில்சுழியைத்தாவி உறவாகச்சந்திரனைத்தரித்த சடாபாரத்தின்மேல்சேர்ந்துநான்பாக்கியவானென்று உலகத்தில்மாசவினையைமாற்றி மகிழ்ந்திருந்துநான் சதாசிவன்மனோன்மணி இவர்களைவாழ்த்தினேன் எ-று. (௫௭௧)

நவ்வுடன்மவ்வாகியோடும் நானிந்தவீதியிலேவருஞாயமுமுயர்சிதமும் வெகுநீதமுமாகவேநின்றுபொற்பதத்தில், சிவ்வுடனவ்வதி

லேவாசிதேரோடும்வீதியிலே மதிதேங்கிடையாமலுமோங்கிப்பானு விலதீங்கில்லாத்தெளிந்து ஆக்கினையில், அவ்வில்வளர்ந்தருளுங்கமல மாயிரத்தெட்டிதழில் அருகாகநின்றதிலானவெண்மதி தாள்சிறந்த சதாசிவன்பாதத்தில், வெவ்வையுந்தானடக்கிசத்தம் ஏகாந்தவீதியி லே இருகாலிலேயுருவாகுமருகாகவும்நின்றுமே ஆண்டேவணங்கி கினேன் ஆதிசதாசிவனை யனுதினமறவேனே-தான.

(இ-ள்.) நவ், மவ், இவைகளிருக்கின்ற வீதியில் ஜெயமும், ஈதமும், நீத மும்வரும், ஆகையால் அவ்விடங்களில் நின்ற அழகியதிருவடியில் சிவ்வுடன் அவ்வால்வாசியாகிய தேரோடும்வீதியிலே புத்திதியங்காமல்தீங்கில்லாமல்தெ ளிந்து ஆயிரத்தெட்டிதழில் ஆதாரமாகவிருக்கின்றசதாசிவன்பாதத்தில்ஏகா ந்தவீதியில் வணங்கினேன் எ-று. (கூ௭௨)

விருத்தம்.

நாற்சதுரமூலமதில்கணேசபீடம் நல்லறிவுபுத்திதரும் பிரமபீ டம், ஊர்ச்சிதமாம்பூரகத்தில்திருமால்பீடம்உற்றதொண்ணூற்றாறு கருவிபீடம், தீச்சுடரில்செங்கதலிதோப்புக்குள்ளே சிறந்ததொருரு த்திரன்தன்தேவபீடம்,மேற்சதிரமானதொருமஹேசபீடம்விளக்கு சதாசிவனிருதாள் பீடம்போற்றி.

(இ-ள்.) நாற்கோணங்களையுடைய மூலாதார கணேசபீடமும், நல்லறி வைப்புகட்டும் பிரமபீடமும், அதற்குமேல் மணிபூரகத்தில் விஷ்ணுபீடமும் தொண்ணூற்றாறுதத்துவங்களின்பீடமும், செழுமையான வாழைதோப்புக் குள் ருத்திரனுடையபீடமும் அதற்குமேல் மகேஸ்வரபீடமும், அதற்குமேல் சதாசிவனுடையபீடமும், ஆகிய இவைகளுக்குவந்தனஞ் செய்கிறேன் எ-று.

விரைந்துநின்றஐம்பூதந்தன்னைக்காட்டி விழாமலுமேபொன்று கிமேலேநோக்கி,உரைந்துநின்றமனத்தையடிமூலம்வைத்து ஓங்கார வீட்டுக்குள்புகுந்துலேவி, விரைந்துபிறவிக்கடலைக்கடந்து யானுமே லான ஆக்கினையின்பதியிலேவறி,இறவாமலிந்தவுடலெனக்குச்சொரந் மிருந்ததனலம்பிகையை வருந்தினேனே.

(இ-ள்.) விரைந்திருக்கின்ற பஞ்சபூதங்களையுங் கீழேவிழாமற்காத்துமே லேநோக்கிப்பார்த்து மனத்தை மூலத்தின்கண்வைத்து ஓங்கார வீட்டிற்குள் சென்றுபிறவிக்கடலைக்கடந்து ஆக்கினையிலேறி இந்தஉடலைஎனக்குச்சொந்த மாயிருந்ததனல் அம்பிகையைக்கண்டு என்னுடையகஷ்டத்தைச் சொல்லி வருந்தினேன் எ-று. (கூ௭௪)

விஸ்தாரவிருமடவாள்கெர்ப்பத்துள்ளே விளங்கியினியிப்படியே யிருந்துவாழ்ந்தேன், ஆஸ்தானநாதவிந்திரண்டுங்கூடி யருவாகியுரு வாகிவளர்ந்தவாறும், ஆஸ்தானமெனுங்கருவூாதனில்நின்று அழகு

திங்களொன்பதுஞ்சென்றனவாறும், வாஸ்தானசித்திர கருவூரில் மேவி வணங்கிதெரிசித்ததலம்வசனித்தேனே.

(இ-ள்.) விசாலமாகிய கண்களையுடைய பெண்களது கர்ப்பத்திற்துள் விளங்கும்படி இப்படியே யிருந்துவாழ்ந்தேன், ஆனல்நாதமும் விந்துவுமிரண்டுங்கூடி ஆஸ்தானமென்னுங் கருவூரில்நின்று மாதமஒன்பதும் சென்றல்சத்திரமாகிய கருவூரில்சேர்ந்து தெரிசித்த தலத்தைச்சொன்னேன் எ-று.

வீறுபெற்றகருவூரு நாட்டுக்குள்ளே விளங்கவும்யான் சொந்தமென்றிருந்துவாழ்ந்து,பேறுபெற்றசதாசிவனைபோற்றிசெய்து பெருமையுள்ளதிங்களொருபத்துமாச்சு, தூறுபெற்றகருவூரின்வளப்பமெல்லாஞ்சொல்லிவிட்டேன் கணக்கதுவாயினிதான்கேளீர், கூறுபெற்ற இப்புவிக்குள்யான்பிறந்த குறிப்பையினியறிவதற்குக் கூறுவேனே.

(இ-ள்.) வெற்றிபெற்ற கருவூர்நாட்டுக்குள் யான்சொந்தமென்று வாழ்ந்து பேற்றைப்பெற்ற சதாசிவனைப்போற்றிசெய்து பத்துமாதத்தில்கருவூரின் வளப்பத்தையெல்லாஞ் சொல்லிவிட்டேன் இந்தஉலகத்திற்குள் நான்பிறந்த குறிப்பை இனிசொல்லுவேன் எ-று. (௩௭௬)

சிறந்தருளுநாதவிந்திரண்டுங்கூடி செடலமெனத் திரண்டுவந்த செய்தியெல்லாம், கறந்தபால்காய்ச்சியதைத் தோச்சுபின்னுங்கடைந்தெடுத்தவெண்ணையைப்போல் பிரித்தயானும், தெரிந்தமட்டும்வகுத்துரைக்குங்கருவூர்க்குள்ளே செழித்தநாள்முந்நூறுஞ்சென்றதாகில், மறந்திருந்துசெய்தசிவபூசைவிட்டு வாழ்புவியுலுதித்தவகைவசனிப்பேனே.

(இ-ள்.) சிறந்தநாதமும்விந்துவுங்கூடிச் சரீரமெடுத்துவந்தசெய்கையெல்லாம் கறந்தபால்காய்ச்சி அதைத்தோய்த்துப்பின்னர் கடைந்தெடுத்த வெண்ணெய்போல் பிரித்து நான்தெரிந்தவரைக்கும் வகுத்துச்சொல்லுங் கருவூர்க்குள் முந்நூறுநாட்களுஞ் சென்றதானல் செய்திருந்தசிவபூசையை விட்டு உலகத்தில் பிறந்தவிதத்தைச் சொல்லுவேன் எ-று. (௩௭௭)

ஆணவமுமாய்கையொடுகாமியம்விட்டு அனுகியிந்தப்படியாக நம்பியானும், தானுவமாய்வீற்றிருந்தேன் கருவூர்நாட்டில்தயங்காமல்திங்களொருபத்துமாச்சுவானுதலாள்கருவுக்குள் வளர்த்திசொன்னேன்வயதாச்சுநானிருந்தகாணிபோச்சு,ஊனுதலாயடுத்திருந்த அரையைவிட்டு உண்மையுடன்வெளியில்வந்த துரைசெய்வேனே.

(இ-ள்.) ஆணவம் மாய்கை.காமியம் இவைகளைவிட்டுஇந்தப்படியாகநம்பிநான் கருவூர்நாட்டில்வீற்றிருந்தேன், இங்ஙனம் பத்துமாதங்களுமானபின் கருவுக்குள் வளர்த்தியைச்சொன்னேன், வயதாச்சு, நானிருந்தகாணிபோச்சு அடுத்திருந்த அறையைவிட்டுஉண்மையாய்வெளியில்வந்ததைச்சொல்லுவேன்

சுழிமூலத்தடிவாசல்கருவைத்தாண்டி தூங்காமல்தூங்கிவெகு ஞானங்கொண்டு, ஒளிவாசலுட்புகுந்தங்கின்றமேனி உற்றவபிராமி யிவளுருவங்கண்டு,சுழிநாளுஞ்சுழியேர்திபொருவரோடுங்கருதாமல் பேசாமல்சலக்கமெய்தார்,பழிபாவமென்றறியார்தனஞ்செயன்றன் பாதவத்தைப்பார்த்துலகில்போவென்றானே

(இ-ள்.) சுழித்தலையுடைய மூலாதாரத்தின்வாசலினது கருவைக்கண்டு தூங்காமல்தூங்கி ஞானத்தையடைந்து தேஜோமயமாகிய வாசலுக்குள் புகுந்து அபிராமிசத்தியின்ரூபத்தைக்கண்டு கழிந்துபோகின்ற நாள்களையுஞ் சுழிமுனையில்மாட்டி யாவரையும்நினைக்காமல் பழிபாவங்களை உணராமல் தனஞ்செயனானவன் பாவங்களை நோக்கிப்பார்த்து உலகத்திற்போவென்று ஆஞ்ஞாபித்தான் எ-று. (௫௭௧)

கொச்சகம்.

முன்னாளிருவினைகள் மூண்டுவருமென்றறிவில்
தன்னாலறியாமல் தானவனாய்வீற்றிருந்து
எந்நாளுஞ்சொந்தமென்று எண்ணிமனம்புண்ணாகி
விண்ணே தனஞ்செயனும் வெளிப்போவென்றுதைத்தானே.

(இ-ள்.) பூர்வத்திற்செய்த இருவினைகள் பெருகிவருமென்றுஉணராமலிருந்ததனால் தனஞ்சயனும்வெளிப்பட்டுப்போவென்றுஉதைத்துத்தள்ளினான்.

ஆசைப்பசுபாச மகன்றபதிவீட்டிலேதான்
நேசமுடனின்றினியான் நித்திரைகள்செய்கையிலே
ஓசைச்சிலம்பொலியி லோங்குந்தனஞ்செயன்தான்
வேஷமவன்மாறிவந்து வெளிப்போவென்றுதைத்தானே.

(இ-ள்.) ஆசையாலுண்டானபசுபாசங்கள்நீங்கியபதிவீட்டில் நான்நித்திரைசெய்கையில் அங்குண்டான ஓசைச்சிலம்பொலியில் விளங்குகின்றதனஞ்சயன் ரூபமாறிவந்து வெளியேபோவென்று உதைத்தான் எ-று. (௫௮௧)

ஆடுநதிக்கரையி லம்பரமாமம்பரத்தில்
சூடுமலர்ப்பதத்தில் தூங்கியிருக்கையிலே
கூடுதனிலிருந்த கூட்டுறவுபோதுமென்று
வீடுந்தனஞ்சயனும் வெளிப்போவென்றுதைத்தானே.

(இ-ள்.) திருக்கூத்தாடுகின்ற நதிக்கரையின்கண் விளங்குகின்ற வெளியில்தோன்றுந் திருவடிகளில் தூங்கியிருக்கையில் கூட்டுறவுக்குக் கெடுதிவருமென்று தனஞ்சயனானவன் வெளிப்போவென்று உதைத்தான் எ-று. ()

நம்பிக்கருவூரில் நாடிச்சுழிமுனையில்
அம்பிகையைப்போற்றிசெய்து யானிருப்பதென்றறிந்தேன்
எம்பித்தனஞ்செயனு மென்முகத்தைப்பாராமல்
வெம்பியொருகாலெடுத்து வெளிப்போவென்றுதைத்தானே

(இ-ள்.) கருவூரில்நம்பி சுழிமுனையின்கணுள்ள அம்பிகாதேவியைநமஸ்காரஞ்செய்து நானிருக்குமிடமென் றுணர்ந்திருந்தேன். அப்படியிருந்தும் தனஞ்சயனுனவன் அதைக்கவனியாமலே எட்டி உதைத்து வெளியில்தள்ளினுன் எ-று. (௯-௮௩)

வட்டமதிபூரணத்தில் மாறுந்தனஞ்செயன் தான்
விட்டதிங்கள்பத்தாச்சு வெளியேபோவென் றுதைந்தான்
அஷ்டதிசையானதிரு ஆறாரகந்தனிலே
கஷ்டமணுகாமனுமே கருக்குழிவிட்டேகுவனே.

(இ-ள்) தனஞ்சயனுனவன் பூரணசந்திரனில் கடந்தபடியால் பத்துமாதங்களும் நிறைந்தபின் வெளியேபோவென்றுசொல்ல நானும்வெளியில் வந்தேன் எ-று. (௯-௮௪)

சலித்துறை.

தீராப்பிறவிக்கடலையறுத்துச் செழுஞானங்கொண்டு
கூரானவம்பிகைப்பார்பதமேவிக் கொடிதாகவென்னை
நேரானதிங்கள்பத்துஞ்சென்று நிலைத்துதென்று
பாராத்தனஞ்செயனேர் பாதந்தூக்கிப் படவுதைத்தே.

(இ-ள்.) கெடாதஜென்மசாகரத்தை யொழித்து ஞானத்தைக்கொண்டு அம்பிகையின் திருவடிகளைச்சேர்ந்து பத்துமாதங்களும் பூர்த்தியானபின் தனஞ்சயனுனவன் வெளியேபோவென்று உதைத்தான் எ-று. (௯-௮௫)

குடிவாழ்க்கைவிட்டுப் பசுபாசமற்று குருவினிட
அடிபோற்றிநின்று வமிர்தமுண்டேன் வாலாம்பிகையை
முடிபார்த்துநின்றவள் பாதாரவிந்த முழங்கையிலே
இடிபார்த்தனஞ்செயன் தலைமேலுதைத்து விருத்தினனே.

(இ-ள்.) இல்லறவாழ்க்கையைவிட்டு பசுபாசங்களொழிந்தகுருவின் திருவடிகளைநமஸ்காரஞ்செய்து அமிர்தமுண்டு வாலாம்பிகையைத் தெரிசித்து அவளுடைய திருவடித்தாமரைகளை நினைக்குஞ்சமயத்தில்தனஞ்சயனுனவன் என் தலைமேலுதைத்தான் எ-று. (௯-௮௬)

வாளாகிநின்றவிழிமடவார்கள் மயக்கம்விட்டு
தேளாகியோடும் பசியைவிட்டுச் சிவஞானத்திலே
மூளாமல்நின்றந்த வம்பிகைப்பாத முழங்கையிலே
கீழாலேபோவென் றுதைத்தான் தனஞ்சேயன்கிடுகிடவே.

(இ-ள்.) வாள்போலுங்கண்களையுடைய பெண்களின்மயக்கத்தை விட்டுப்பசியைவிட்டுச் சிவஞானத்தில் ஒழியாமல்நின்று அந்தஅம்பிகைப் பெண்ணின் பாதத்தைவணங்கையிலே தனஞ்சயனுனவன் நான்கிடுகிடு எனும்படி உதைத்துத்தள்ளினுன் எ-று. (௯-௮௭)

தான்மோகங்கொண்டந்த மூலத்தின்வாசலில் சார்வுவிட்டு
வான்மோகங்கொண்டந்தவம்பிகைபாதத்தில்வணங்கையிலும்
நான்மோகங்கொண்டு தனஞ்செயன்பார்த்துநடவுமென்றால்
யான்மோகங்கொண்டே னபிராமியுந்த னடைக்கலமே.

(இ-ள்.) மோகங்கொண்டமூலாதாரத்தின்வாசலில் சேர்க்கையைவிட்டு அம்பிகைப்பாதத்தில் வணங்கியிருக்கும்போது தனஞ்சயன்பார்த்து என்னை வெளியில் நடக்கச்சொன்னான், ஆனால்நான் அங்கிருக்க மோகங்கொண்டவனாகையால் அபிராமியின்திருவடிகளில் அடைக்கலமடைந்தேன் எ-று. ()

வாவென்றழைத்து சிவ்வென்றவீட்டில் வரைதனிலே
வேவென்றுஆயி விதித்துவைத்தாளெந்தன் வேதனைகேள்
போவென்றுதைத்து தனஞ்செயன்வந்து போடுகிறான்
ஆவென்னுசக்கரத் தபிராமியுந்த னடைக்கலமே.

(இ-ள்.) என்னைவாவென்றழைத்து சிவ்என்கிற ருத்திரனார்வீட்டில் இருக்கச்செய்தால் அங்ஙனஞ்செய்தும் தனஞ்சயனானவன் வந்துபோவென்றுதைத்து என்னிடத்தில் போடுகின்றான் ஆகையால் அபிராமியிடத்தில் அடைக்கலமடைந்தேன் எ-று. (௫௮௯)

தாங்கிமூலக்கருக்குழிபாசை தயவுவிட்டு
தேங்கிக்கருணைத் தித்திக்கவுண்டு செழித்தேயிருந்தே
ஓங்கித்தனஞ்செயன்புவிதனில் போவென்றுதைத்துகின்றான்
ஆங்கியசக்கரத் தபிராமியுந்தனடைக்கலமே.

(இ-ள்.) தாங்கின மூலாதாரமாகிய கருக்குழியின் ஆசையைவிட்டு கிருபையானது இனிக்கவுண்டு செழித்திருந்து தனஞ்சயனானவன் உலகத்தில் போவென்று உதைத்துகின்றான், ஆகையால் முக்கோண சக்கரத்தில் குடியிருக்கும் அபிராமியானவள் அடைக்கலமாகும் எ-று. (௫௯௰)

ஒழியாதகேணி மூலத்தினாசை யொழித்துவிட்டு
வெளியேகியம்பிகை யாதாரவிந்த மிகத்துதித்தேன்
பழியாகவந்து புவிமீதிற்போவென்று படவுதைத்தான்
அழியாதசக்கரத் தபிராமியுந்த னடைக்கலமே.

(இ-ள்.) மாயையுள்ளளவும் நீங்காதகருக்குழியின் ஆசையைவிட்டு அம்பிகையின் திருவடிகளைமிகவுந்துதிசெய்தேன், ஆனாலும்தனஞ்சயனானவன் பூமியிற்போவென்று உதைத்தான், ஆகையால் அபிராமியே அடைக்கலமாவாள்.

கலைநாலைக்கட்டி யபிராமிபாதங் கருத்தில்வைத்து
மலையாமல்நின்று வணங்கினேன்வல்ல தனஞ்செயனும்
துலையாப்புவிதனிற் போவென்றுதைத்துத் தாத்துகிறான்
அலையாதசக்கரத் தபிராமியுந்தனடைக்கலமே.

(இ-ள்.) நான்குகலைகளையும் வெளிவிடாமற்கூட்டி அபிராமியின் திருவடிகளை மனத்தில்வைத்து வணங்குகின்றேன். ஆனால் தனஞ்செயன் மாத்திரம் பூமியிற்போவென்று உதைத்துத்தள்ளினான், ஆகையால் அபிராமியே அடைக்கலமாவாள் எ-று. (௩௧௨)

வெம்பாலுயர்ந்த கருவூர்காட்டை விளம்புகின்றேன்
வம்பாய்த்தனஞ்செயன் வந்துதைத்தானிந்த வாழ்புவியில்
நம்பாதேயென்மதி நான்சொந்தமென்று நம்பிவிட்டேன்
அம்பாளனுக்கிரகத் தபிராமியுந்த னடைக்கலமே.

(இ-ள்.) கருவூர்காட்டில் நானிருந்தபொழுது நடந்தசெய்தியாதென்றால் தனஞ்சயனானவன்வந்து உதைத்துப் பூமியிற்போவென்று தள்ளினான், அங்ஙனமேவெளியில்வந்த நான்என்னுடைய மதியையே சொந்தமென்று நம்பிவிட்டேன், ஆகையால் எனக்குஇனி அபிராமியே அடைக்கலமாவாள் எ-று.

ஊருறவிட்டு கருவூருநாட்டினுக் குள்ளிருந்து
நேருறவாகி யம்பிகைபாதத்தை நீக்கிவிட்டு
பாருறவிட்டுத் திங்கள்பத்தாச்சுதிப் பார்தனிலே
ஆருரைவிட்டு அவனியில்வந்த தறைகுவனே.

(இ-ள்.) கருவூர்காட்டுக்குள்ளிருந்து அம்பிகைபாதத்தைநீக்கிவிட்டு பத்துமாதங்களும் நிறைந்தபின்னர் அதைவிட்டுப்பூமியில் வந்துபிறந்ததைச்சொல்லுவேன் எ-று. (௩௧௩)

வெண்பா.

நாடியகுண்டலியில் நாடுஞ்சுழிமுனையில்
கூடிக்கருவூரில் குடியிருந்து-கூடியதோ
ஆசைவிட்டுப்பாசம்விட்டு அம்பிகையின்பாதம்விட்டு
தேசம்விட்டுவந்தேன் செயல்.

(இ-ள்.) குண்டலியிலும், சுழிமுனையிலுஞ்சேர்ந்து கருவூரில்குடியிருந்து ஆசாபாசங்களைவிட்டுஅம்பிகையின்பாதங்களையும்விட்டுபூமியில்வந்தேன்எ-று

பிண்டங்கீழ் நோக்குற்றமுறை-தரு.

திரும்பிக்கொண்டேனே-அம்பிகையின்-திருவடிவிட்டேனே.

(இ-ள்.) அம்பிகையின் திருவடிகளைவிட்டு உலகமுகமாகத் திரும்பிக்கொண்டேன் எ-று.

திரும்பிக்கொண்டேன் தில்லை யெல்லையும்விட்டு சிவகாமிபாதச்சிலம்பொலிவிட்டு,வருந்தித்துதித்தகருத்தையும்விட்டுவாலாம்பிகைபதத்தின் வாழ்க்கையைவிட்டுநான் ஆருமறியாவம்பரம்விட்டுஅசாரகாரத்தகண்டம்விட்டாக்கினை, மேருவின்பூசைவிதியையும்விட்டு விளங்கியம்புவியில் மேவித்துலங்கிநான்-திரும்.

(இ-ள்.) தில்லைஎல்லையையும், சிவகாமிதிருவடிகளையும்வாலாம்பிகைபாதத்தையும்,யாவராலுமறியப்படாதஅம்பரத்தையும், அகாரஉகாரங்கள்வாழ்கின்றகண்டத்தையும், மேருபூசையையும்விட்டு பூமியில்விளங்கினேன் எ-று.

கட்டுங்கலைபதினாறையும்விட்டு கருத்தாயிருந்த சனத்தையும் விட்டுமே, வட்டமதிபூரணத்தையும்விட்டுமகிழ்ந்திதழாயிரத்தெட்டிதழ்விட்டுநான், ஒட்டுங்கலைபன்னிரண்டையும்விட்டுடல் ஒன்பதுவாசலுடன்கட்டறுத்துமே, நட்டுவனாடுங்கனகசபையைவிட்டலகையென்றகருநாட்டைவிட்டேகினான்-திரும்.

(இ-ள்.) கட்டவேண்டியபதினாறு கலைகளையும், கருத்தாயிருந்த கனத்தையும், பூரணசந்திரனையும், ஆயிரத்தெட்டிதழையும் பன்னிரண்டுகலைகளையும்விட்டு ஒன்பதுவாசல்களையுங் கட்டறுத்து கனகசபையைவிட்டு அலகையென்ற கருவூரைவிட்டுப்புறப்பட்டு எ-று. (௫௯௭)

வன்னியின்மூலமுமூலத்தைவிட்டு மருவியான்வாழ்ந்திடு மாளிகைவிட்டுமே, உன்னிதமாஞ்சிறுவீட்டையும்விட்டுஉகந்தகருவிபுறமுறைவிட்டுயான், சென்னிவளர்திருவீட்மையும்விட்டு தெளிந்தபஞ்சாக்ஷரசேர்வைவிட்டேகினான்,. பன்னுமலர்க்கமலாலையம்விட்டுப்பராபரன்பாதம் பணிந்துவிட்டையனைத்-திரும்

(இ-ள்.) அக்கினிமூலமாகிய நடுமூலத்தையும்.நான்வாழும்மாளிகையையும், சிறுவீட்டையும், உறவினரையும், சென்னிவளர்திருவீட்டையும் பஞ்சாட்சரச்சேவை யையும்விட்டு பராபரனைப்பணிந்து எ-று. (௫௯௮)

தூக்கியபாதநடனமும்விட்டுச் சுழிமுனைச்சக்கரச் சூக்ஷம்விட்டாலயம், கோக்கித்திருமதிளோரத்தைவிட்டுநொடிக்குளிப்புவியினுண்மையறியவும், நீக்கிநின்றுடுநிலைதனைவிட்டுநிராமயபூரணநேசம் விட்டங்ஙனே, சீக்கிரமாகக்கருவூரைவிட்டுத் திரும்பிக்கொண்டேகி, னசெய்தியீதாண்டையே-திரும்.

(இ-ள்.) நடிக்கின்றநடனத்தையும், சுழிமுனைச்சூட்சச் சக்கரத்தையும் மாயையைநீக்கும் நிலையையும், பூரணநேசத்தையும் விட்டுக் கருவூரைவிட்டு உலகமுகமாகத் திரும்பிக்கொண்டேன் இதுவேசேதியாகும் எ-று. (௫௯௯)

விருத்தம்

துய்யமதியமிர்தசுழி முனையும்விட்டேன் தூங்காமல்தூங்குகின்றயோகம்விட்டேன், மெய்நிறைந்தநடனமிடுங் கருவூர்விட்டேன் விசிதரத்னவம்பிகையின் வீடும்விட்டேன், ஐயமறயான்வளர்ந்தகுகையும்விட்டேன் ஆசைவிட்டேன்பாசம்விட்டே னூர் விட்டேன் பையவினையகற்றுபணை முடியும்விட்டேன் பரதேசியாயிருந்தபதிவிட்டேனே.

(இ-ள்.) தேஜஸமைந்த சுழிமுனை தூங்காமல்தூங்கும் யோகம், கருவூர் அம்பிகையின்வீடு, மான்வளர்ந்தகுகை, ஆசைபாசம், ஆரூர் வினையையொழிக்கும்பணுமுடி, பரதேசியாயிருந்த பதி இவைகளைவிட்டேன் எ-று. (சா)

அல்லலற்று அம்பிகையினருள் தான்விட்டேன் அண்டபிண்டநிறைந்வன்னியசைவும்விட்டேன், வல்லமையால்வாருதியைக்கடந்து விட்டேன்மயிர்ப்பாலமேறியப்பால்வைகைவிட்டேன், சொல்லரிய பெருவெளியம்பரத்தைவிட்டேன் சுகதுக்கமிரண்டமைத்த சூட்சம் விட்டேன், புல்லறிவால்நின்றபரசபையும்விட்டேன் புவியில்வந்து பூருவத்தின்பொருள்விட்டேனே.

(இ-ள்.) துன்பம், அம்பிகையின்திருவருள், அண்டபிண்ட நிறைந்தவன்னி, வாரிதி, மயிர்ப்பாலம், வைகை, பெருவெளி, சுகம், துக்கம், பாசம், பூர்வத்தின்பொருள் இவைகளைவிட்டேன் எ-று. (சாக)

மந்திரசாஸ்திரமுமறைவகையும்விட்டேன் மதியும்ரவிகடந்த சித்திரவாசல்விட்டேன், சுந்தரஞ்சேரமிர்தமுண்டசுகத்தைவிட்டேன் சுருதிமுடிவானசுகாதீதம்விட்டேன், தந்திரமாய்வீற்றிருந்தவீடும் விட்டேன் சச்சிதானந்தசபைதானும்விட்டேன், அந்தமாயனந்தமென்றஆசைவிட்டேன் அம்மைசிங்காதனம்விட்டவைவிட்டேனே.

(இ-ள்.) மந்திரசாஸ்திரம், வேதவகைகள், மதிரவிகளைக்கடந்த சித்திரவாசல் அமிர்தமுண்டசுகம், சுகாதீதம், சச்சிதானந்தசபை, அம்பிகையின் சிங்காதனம் இவைகளைவிட்டேன் எ-று. (சாஉ)

அகங்கொண்ட முக்கோணத்தறைவிட்டேகி அலகைநெடுவீதி விட்டுஅடியும்விட்டேன், புகல்சித்திப்பேறுபெற்றயோகம்விட்டேன் பூசையனுஷ்டானமெனும்புதுமைவிட்டேன், ஜெகமுழுதமமைத்த குருபீடம்விட்டேன்திரையகற்றும்பிரகாசத்தெளிவும்விட்டேன்யுகவளநாடுறையும் வன்னியுணர்வும்விட்டேன் உலகுதனில்வரும் விதியையுரைப்பேனுண்டே.

(இ-ள்.) புத்தியினால்நினைக்கப்பட்டமுக்கோண அறையைவிட்டுப்போய் நெடுவீதியைவிட்டு யோகம்விட்டு அநுஷ்டானப்புதுமையைவிட்டு, குருபீடம் விட்டுபிரகாசத்தெளிவுவிட்டு உலகத்தில்வரும் விதியைச்சொல்லுகின்றேன்.

காயாதசுதலிவனத்தோப்பும்விட்டேன் கருவிலுயிரமைத்தவருங்கருவூர்விட்டேன், தாயானவம்பிகைப்பெண்சார்புமவிட்டேன்சதுஷ்பீடம்விட்டுச்சலநதியும்விட்டேன் தூயதூராதூரக்குழியும்விட்டேன் துரியாதீதங்கடந்துசுழலும்விட்டேன், மாயாமல்வாழ்கவென்றுமவுனம்விட்டேன் வாழ்புவியில்பிறக்கவினி வருவேனுண்டே.

(இ-ள்.) காயாகதலிவனத்தோப்பையும், கருவூரையும்அம்பிகைப்பெண்ணையும், சாற்கோணபீடத்தையும், சலகதியையும், தூர்க்குழியையும் துரியாதீதத்தையும், மவுனத்தையும்விட்டு உகத்தில் பிறக்க இனிவருவேன் எ-று.

லை கொண்டிச்சிந்து-தரு.

(தந்தன தன தனனு-தானதன-தந்தன தன தன-தானதானனு)

இடைகலைபின்கலையுஞ்-சுழியின்முனை-யேகபுரமாகியதோர்திரிபுரமும், கடைபின்கலைமதிளுங்-கருவூர்-காட்டைவிட்டேன்சிறுவீட்டைவிட்டேன்,மடமயிலார்புரமு-மதிநதியின்-வாசல்விட்டேன்சோதிநேசம்விட்டேன், திடமுடனானிருந்த-சிவ-சிங்காதனம்விட்டேதிருவருளும்விட்டேன்-தந்தன.

(இ-ள்.) இடைகலை, பின்கலை, சுழிமுனை, திரிபுரங்கள்கலைமதிள் கருவூர்க்காடு, சிறுவீடு,நதிவாழ்வாசல்நேசம், நானிருந்த சிவசிங்காதனம், திருவருள் இவைகளைவிட்டேன் எ-று. (சாடு)

நடனபொற்கமலம்விட்டேன்-அம்பரவெளி- நயனவிழிமதுரநாடும்விட்டேன்,அடாலைக்கடலோர- மலைகடலினலையும்விட்டேன்திருமலையும்விட்டேன், வடதிசைநாடும்விட்டேன்-கனகரத்ன - மாலும்விட்டேனிருகாலும்விட்டேன்,திடமெனுமுடலைவிட்டேன்-சித்திரக்கூடஞ்சிங்காரசெங்கதிகங்கைவிட்டேன்-தந்தன.

(இ-ள்.) நடனஞ்செய்யுந் தாமரையையும், அம்பரவெளி நாட்டையும், கடலோரம், மலைவடநாடு, உடல், செங்கதி இவைகளைவிட்டேன் எ-று.

அலகைதன்வீதியிலே - ஜலமதினி -னணியும்விட்டேனெந்தன்தொனியும்விட்டேன், மலைதனையகழ்த்தில்வைக்கும்- இந்திரபீடவாசல்விட்டேனேகூடம்விட்டேன்,உலகெலாம்நிறைந்துநின்றநடுவணைபி-னூரைவிட்டேனதிபாரம்விட்டேன்,சிலகேணி மேடைவிட்டேன்தேவர்கள்வாழுந்-தில்லையனந்தபுரத் தெல்லைவிட்டேன்-தந்தன.

(இ-ள்.) அலகைவீதியில் எந்தன்தொணி, இந்திரபீடவாசல், கூடம்,நடுவணை, தேவர்கள்வாழ்கின்ற தில்லையின் எல்லைமுதலியவைகளை விட்டேன்.

மருவுயர்வன்னிவிட்டேன்-கதிர்மதியின்-வாசல்விட்டேன் ரதிபூசல்விட்டேன், இருவினைநாடும்விட்டேன்-நானிருந்த-இடத்தைவிட்டேன்சூழுமடத்தைவிட்டேன்-அருவுருவாகிநின்ற-அகத்தியர்தனருளும்விட்டேனப்புமலரும்விட்டேன்,கருவூர்மாறிவிட்டேன்-பறையிலங்கும்-காட்சிவிட்டேனெந்தன் கருத்தைவிட்டேன்-தந்தன.

(இ-ள்.) சோமசூரிய, அக்கினிகள், ரதியின்பூசல், இருவினைநாடு நானிருந்தவிடம், அகஸ்தியர் திருவருள் கருவூர் பறைவிளங்குங்காட்சி, என்னெண்ணம் இவைகளையெல்லாம் விட்டேன் எ-று. (சாஅ)

திருப்பெருந்துறைவிட்டேன்-புஷ்கரணி-தீர்த்தம் விட்டேன்தெய்வநதியும்விட்டேன்,இருகரைநதியும்விட்டேன்- மண்டபத்தடியீசனிருக்குங்கொடிமுடியும்விட்டேன்,மருமலர்கனகரத்ன-வம்பிகைபதம்வணங்கியேமலரடிகமலம்விட்டேன், உருவருளுறவும்விட்டேன்உக்கிரவிசை-உலகுவிட்டேன்மேருதறக்கம்விட்டேன்தந்தன

(இ-ள்.) திருப்பெருந்துறை, இந்திரபுஷ்கரணிதீர்த்தம், தெய்வநதி இருகரைநாடு, மண்டபத்தினடி, ஈசனிருக்குங்கொடிமுடி அம்பிகையின்திருவடி திருவருளுறவு, உலகு, மேருதர்க்கம் இவைகளைவிட்டேன் எ-று. (சாகூ)

அலையாப்பதியும்விட்டேன்அமிர்தநதி-அதுசடந்தேயக்கினி ஆற்றைவிட்டேன், தலையாக்கடலும்விட்டேன்- சுகதுக்க-தாறும்விட்டேனுடல்கூறு-விட்டேன்,நிலையாநதியும்விட்டேன்-கரையேறிநீஞ்சிவிட்டேகலைபாஞ்சுவிட்டேன்,ஜலசெங்கநதியும்விட்டேன்ஜலநதியின்சார்பும்விட்டேன்கரையேறிவிட்டேன்-தந்தன.

(இ-ள்.) அலையாப்பதி, அமிர்தநதியைக்கடந்த அக்கினியாறு தொலையாக்கடல், சுகதுக்கத்தாறு, உடல்கூறு, செங்கநதி, சலத்தின்சார்பு இவைகளையெல்லாம்விட்டுக் கரையேறிவிட்டேன் எ-று. (சாழ)

மந்திரகிரியும்விட்டேன்-மயேந்திரகிரி-மதிளும்விட்டேன் மகமேருவும்விட்டேன்,இந்திரபதியுமவிட்டேன்-ஈரைஞ்சிதழ்எல்லைவிட்டேனெந்தன்தொல்லைவிட்டேன்,சந்திரநாடும்விட்டேன்-சுகந்தபரிசந்தனசவ்வாதுவீசுஞ்சந்நிதிவிட்டேன், இந்திரசாலம்விட்டேன்-இமையகிரி-யிகிதமாகவேசங்கப்பலகைவிட்டேன்-தந்தன.

(இ-ள்.) மந்திரகிரி, மகேந்திரகிரி, மகமேரு, இந்திரபதி பத்திதழெல்லை எந்தன்தொல்லை, சந்திரநாடு பரிமளம்வீசுஞ்சந்நிதி, இந்திரஜாலம்,இமயகிரி சங்கப்பலகை இவைகளைவிட்டேன் எ-று. (சகக)

படியிருமூன்றும்விட்டேன்அறுவரையின்பாரும்விட்டேன்திருவூரும்விட்டேன,அடியெனுமரத்தைவிட்டேன்-நானிருந்த -ஆலயம்விட்டேன்பகடசாலையும்விட்டேன், வடிவுள்ளதிரையும்விட்டேன்கருமாளிகையின் - மதிளைவிட்டேன் செவுன கவனம்விட்டேன் இடிமின்னல்கனலைவிட்டேன்-ஈராறுமிருப்-பாறும்விட்டே னெருப்பாறும்விட்டேன்-தந்தன.

(இ-ள்.) ஆறுபடிகளையும், ஆறுதாரங்களையும், திருவூரையும், அடிமரத்தையுப், நானிருந்தஆலயத்தையும், திரையையும், கருமாளிகையின் மதிலையுங், கவனத்தையும், இடி, மின்னல், கனல்களையும், நெருப்பாற்றையும்விட்டேன் எ-று. (சகஉ)

பூரகநாடும்விட்டுடன்-திருமால்தன்-பூஞ்சோலையும் விட்டேனெக்கியசாலையுப் விட்டேன்,சாரைபிரமலத்தைவிட்டேன் பிரகாசவெளிதடத்தைவிட்டேனெனதிடத்தைவிட்டேன்,கூழியாப்பாலம்விட்டேன்-சல்லிக்கொடியின்-குறிப்பும்விட்டேன் முகப்புச்சிறப்பும்விட்டேன்,ஏறிதழ்நாடுவிட்டேன்-நானிருந்த இருப்பும்விட்டேன் திரையின்மறைப்பும்விட்டேன்-தந்தன.

(இ-ள்.) பூரகநாடு, திருமால்வாழும்பூஞ்சோலை,யாகசாலை,பிரகாசவெளி கூழியாப்பாலம், சல்லிக்கொடியின்குறிப்பு. முகச்சிறப்பு, நானிருந்தஇருப்பு திரைமறைப்பு இவைகளைவிட்டேன் எ-று, (௪௧௩)

சீர்புகழும்பூரசத்தில்-நானிருந்த-தேசம்விட்டேன் சுகசந்தோஷம்விட்டேன்,ஆரூர்திருநாட்டைவிட்டேன்-சரஸ்பதியி - ஞலையம் விட்டேன்சதுஷ்கோணம்விட்டேன், மூர்வதிதநாதமும்விட்டேன் மூவர்க்குமுதல்முத்தியெனுஞ்சத்திசிவ மெத்திசைவிட்டேன்பேரூரவதானியும்விட்டேன்-அம்பிகைமாதுபேர்பெரியபீடம்பிசகாமலும் விட்டேன்-தந்தன.

(இ-ள்.) சிறம்புப்பொருந்திய பூரசத்தில் நானிருந்ததேசம், சுகசந்தோஷம் ஆரூர்நாடு, சரஸ்வதியாலயம் நாற்கோணவீடு, விந்துநாதங்கள், சத்திசிவங்கள் அம்பிகையின்திருவடி இவைகளைவிட்டேன் எ-று. (௪௧௪)

சித்தியருளாணியும்விட்டேன்-தில்லைவழியுங்- திருவுருவானசுழிநடுவும்விட்டேன்,கத்தரிக்கோல்மாறல்விட்டேன்-கலைபிரளா - கங்நதிகெங்கைக்கரை பொங்கமுப்விட்டேன், அத்திபுரநாளதும்விட்டேன்-நாதமுவிந்து-மணுகியத்திருமுகச்சாலையும்விட்டேன், எத்திசைபடைத்தருளும் -பிரமாவுடைப - ஏகசர்வேசரிருந் தாசிர்மம்வந்தேன்-தந்தன.

(இ-ள்.) சித்தி, அருளாணி, தில்லைவழி, சுழிநடு கத்தரிக்கோல்மாறல், கங்கைநதி, அத்திபுரம், நாதவிந்துக்கள் திருமுகச்சாலை, ஆசிர்மம்இவைகளை விட்டேன் எ-று. (௪௧௫)

விருத்தம்.

திரிபுரத்தைத்தணலாகவெரித்தவீசன் திருநடனம்புரிந்தருளுந் தேவநாதன்மருமிகுத்தமயிர்ப்பாலங்கருவூர்நாதன்வல்ல அறுகோணமதில்வாழ்ந்தமூர்த்தி, அருவமதுக்கப்புறத்தே யமைத்தவிந்து அணுகுகின்றவெல்லைவிட்டு சுவாதிஷ்டானம், திரிபுரத்துவீதியிலே வாழ்ந்தேன்யானும் சிவஞானசிவபூசைசெயல்விட்டேனே.

(இ-ள்.) முப்புரங்களையும் எரித்த ஈசனும், நடம்புரியும் நாதனும், அறகோணத்தில் வாழ்ந்தமூர்த்தியும், சுவாதிஷ்டான எல்லையில்வாழ்ந்து சிவஞானம் சிவபூசைகளை விட்டேன் எ-று. (௪௧௬)

மாருட்டதிரைகடந்துவெளியிற்குள்ளே மன்னுயிரைவகுத்த லிங்கவட்டத்துள்ளே, ஆராடியத்துடனேயன்னையார்தான் அங்க மெல்லாநொந்துமனஞ்சலித்துவாட, பாராட்டங்கொண்டுபரதவித் துநெஞ்சம்பாதமலால்தனஞ்செயனும்படவுதைக்க, வீராட்டங்கொ ண்டுசுவாதிஷ்டானத்தின் வீதிதனில்வந்து வீற்றிருந்தேனண்டே.

(இ-ள்.) மாய்கையாகிய திரையைக்கடந்துஆகாயத்தின்சன்வகுத்தலிங் கவட்டத்திற்குள் அங்கமெல்லாம்நொந்து மனஞ்சலித்துபரதவித்து தனஞ்ச யன் உதைத்துத்தள்ள சுவாதிட்டானவீதியில் வந்திருந்தேன் எ-று. (௪௧௭)

வந்துகுடியிருந்ததிருநாட்டைவிட்டேன் மாறுகின்றநத்தரிக்கோ ல்வட்டந்தன்னில், விந்துநின்றுவிளங்குநதிமையத்துள்ளே விளங்கு சுவாதிஷ்டானவெளியிலேதான்,மூந்திநின்றபாதநடுவரையிலேதான் முதலான மூன்றெழுத்துமுனையின்கீழே, எந்தனிடவெண்ணமெல் லாம்பொம்யுமாச்சு ஏளிதமேநிலையாச்சுஇருந்தேனண்டே.

(இ-ள்.) அங்ஙனம்வந்து குடியிருந்தநாடு, விந்திருந்தஸ்தான மூன்றெ ழுத்தின்முனை, இவைகளிலெல்லாம் எம்முடையஎண்ணம் பொய்யாச்சுஎளி தம்நிலைத்தது எ-று. (௪௧௮)

அடுத்துநின்றவன்னிநதிக் கரையைவிட்டேன் அலகைநின்று வாழ்ந்ததொருவீதிவிட்டேன், முடித்திருந்தமனதையெல்லாம் பா ழாய்விட்டேன், முக்கோணச்சக்கரத்தின்முதலைவிட்டேன், கடுத்த தெர்ப்பசயனம் விட்டேன்காணிவிட்டேன் கதிர்மதியுந்துலங்குபுவி கருத்தைப்பார்க்க,துடுக்கெனவேதனஞ்செயன் தானுதைக்கவென் னைத் துயரமுடன்பிரமாவின்தெருக்கண்டேனே.

(இ-ள்.) வன்னிநதிக்கரை, அலகைவாழ்ந்தவீதி, மனப்பாழ்,முக்கோண சக்கரத்தின்முதல், தர்ப்பைசயனம், இவைகளைவிட்டு சூரியசந்திரர்கள்விளங் குகின்ற பூமியைவிடும்படி தனஞ்சயனுனைவன்உதைக்க நான்பிரமாவின்தெரு வைக்கண்டேன் எ-று. (௪௧௯)

அக்கரந்தான்முன்மறித்துப்பின்னேதள்ள அலகையொருபுற மதனிலெழுந்துநோக்கச், சிக்கெனவேதேவதத்தன்மேலே நோக்க த்திடுக்கெனவேதனஞ்செயன்தான்கீழேநோக்க, மக்கசிக்குப்பட்டு மூன்றுவருத்தமாகி வாழ்புவியில்வரப்பட்டபாடுமெத்த,எக்காலந்து யரமதையாறுவேனோ இருந்தகும்பிவிட்டுவந்தஏழ்மைதானே.

(இ-ள்.) எழுத்துக்கள் பின்னிருந்துதள்ள அலகையானதுநோக்க,தேவ தத்தனும் மேலேநோக்கத் தனஞ்சயன்கீழேநோக்க, சிக்குப்பட்டலைந்துவருத் தமாய் வெளிப்பட்டுவந்த ஏழைநானேயாவன் எ-று. (௪௨௦)

அக்கினியால்திரிபுரத்தைத் தணலாய்மூட்டி அதீதமதாய் வரு ணசலமயமாய்ப்பாய்ந்து, திக்கினியவாய்வுகடுங்காற்றுவீசிசெந்தண

லாய்துரத்தியெமன்றிதான்மூட்ட,மிக்கதிருவெனேவளர்த்தகுபோன் தானுமேல்வாங்கிகைக்கனிபோல்விளங்கச்செய்தான்,இக்கடுசாயிசானனிரக்சங்கொள்ள இந்திரனுமெனேக்கடிந்து இழுக்கின்றனே.

(இ-ள்.) அக்கினியால் திரிபுரத்தையெரித்து வருணசலமய மாய்ப்பாய்க்து நடுக்காற்றுனதுவீச என்னேவளர்த்தகுபோன் என்னேமேல்வாங்கிவிளங்கச் செய்தான், ஆகையால்இந்திரனுனவன் என்னேக்கோபித்து இழுக்கின்றுன்.

இந்தவிதம்பட்டசளம் யானுந்தாயும்இப்புவியில்செனிக்குமுன்புஇருந்தநேர்மைகந்தமலர்ப்பூங்குழலாளாத்தாளென்னேக்கருக்குழிவிட்டினிவரும்போதநந்தம்வேசா, ரந்தமனஞ்சலித்துமிகஆத்துமக்கோல் மளவறிந்துதுன்பமெல்லா மாண்டேகேளீர், விந்தையினியுரைப்பதெல்லாம்வருமப்போது மிகுவருத்தம்பட்டசளம் விளம்புவேனே.

(இ-ள்.) இந்தவிடத்தில் இப்புவியில்வரும்போது பட்டகஷ்டம் மெத்தவுண்டு ஆகையால் அவைகளை இனிசொல்லுவேன் எ-று. (௪௨௨)

பிறவித்துன்பம்-தரு.

பட்டசளமெத்தவுண்டாண்டே-வருகையில்நான்
பட்டசளமெத்தவுண்டாண்டே.

(இ-ள்.) நான்வரும்போது பட்ட கஷ்டம் அதிகமுண்டு எ-று.

வட்டமிட்டபாறைவிட்டு அஷ்டசுழிமூலவாசல், கிட்டியேகிட்டிடுக்கிலே முட்டிநான்வருகையிலே, நெட்டவேதனஞ்செயனுங்கிட்டிசேரிடாமல்நேரே, தட்டிமுட்டிடாமல்பாய்ந்து ஒட்டியேநெட்டணையாக-பட்ட.

(இ-ள்.) நான்வட்டமிட்ட பாறையைவிட்டு சுழிவாசலில் முட்டிவரும்போது தனஞ்சயனுனவன் பாய்ந்துநெட்டினுன் எ-று. (௪௨௩)

மெட்டுகள்மேடுகள்காட்டச் சிட்டுகள்பாய்ந்ததுபோலும்,எட்டியேதனஞ்செயனும்விட்டிடாமலேயுதைக்க,கட்டுகள்கறடில்லசமல்முட்டுகள்முடுக்கில்லாமல், திட்டுகள்திரட்டில்லாமல் சட்டமேயனுபவித்து-பட்ட

(இ-ள்.) மேடுபள்ளங்களிலெல்லாம் தனஞ்சயனுனவன்என்னேயுதைக்க முட்டுமுடுக்கில்லாமல் திட்டுகள்திரட்டில்லாமல் கஷ்டத்தையநுபவித்து. ()

தக்கநீதமுக்கோணத்தில் மக்குசிக்குச்சக்கரத்தில், அக்கரத்துவெளிதனில் சிக்கிநான்வருகையிலே, உக்கிரமதாகியமூலம்விக்கிரசுழிபக்கமிக்க, நிக்கிரவம்பரத்தைவிட்டுசுக்கானேத்திருப்பிவர-பட்ட.

(இ-ள்.) அதிதமாகியமுக்கோணசக்கரத்தில் இரண்டுபக்கங்களிலும் நெருக்குண்டுவருகையில் நான்பட்டகஷ்டத்தை என்னவென்றுசொல்லுவேன்

பக்கமேயிடைகலேபின்னக்கரைதட்டாமற்பாய்ந்து, சுக்கிரனு நித்தவேளே லக்கினம்ராசியறியும், திக்குதிக்கெட்டாமல் சூழுமக்க ரையாவிசேராமல், இக்குழிவூத்தையைத்தாண்டியுக்கிரான்வருகை யிலே-பட்ட.

(இ-ள்.) பக்கங்களிலும், இடைகலேயிலும், தட்டாமற்பாய்ந்து எந்தக்க ரையிலுஞ்சேராமல் ஊசதைக்குழியைத்தாண்டி நான்வரும்போது எ-று.

கருக்குகையும்தனிலுருக்கமாவுதைத்து, அரக்குமண்டபத்கடி- பெருக்கநான்வருகையில், வருத்தம்பாராமல்தனஞ்செயனும்பாதத் தினலே, துரிதத்துடனுதைத்துதூரத்திவிட்டெனேக் காணும்-பட்

(இ-ள்.) அந்தக்கருக்குகையில் உருக்கமாகஉதைத்து அரக்குமண்டபத்த டியில் தனஞ்சயனவன்சீக்கிரமாகஉதைத்துஎன்னேவெளியில்துரத்திவிட்டு

அருக்கனுநித்தனெதிர் குறுக்கேயெதிர்ப்படையில்,முறுக்குக ளாயிடக்குறுக்கப்பன்னுக்கும்வந்து, சுருக்கச்சுழியை விட்டுக்கருக் குழியைக்கடந்து, உதைக்கத்தனஞ்செயனுமடக்கில்லாவருகையில்,

(இ-ள்.) சூரியமண்டலத்திற்குக் குறுக்கேமுறுக்குகளாய் இறுக்கப்பின் னுக்குவந்துகருக்குழியைக்கடந்து தனஞ்சயனவன்உதைக்க எ-று.(சஉஅ)

உச்சிதமாகியகண்டத்தொனியிலோடியதாரை,மச்சுழலண்டத் தைவிட்டு வருகஆண்டையேகேளீர், தற்சுரூபமதாகி சத்தியெனுநா தவிந்து, சிச்சிதரூபமாய்வந்தசிதம்பரவீதிதன்னில்-பட்ட.

(இ-ள்.) சிறந்தகண்டத் தொனியிலோடிய தாரையானது அண்டத்தை விட்டு சிதம்பரவீதியில் எ-று (சஉகூ)

அச்சுழல்தாரைவெளியி லருளுஞ்சங்கையைவிட்டு, விச்சுவரூப ங்கடந்து மேதினிவருகையில்நான், நச்சுக்குழலடியில் நடுவணையின் பின்னுக, இச்சையுடனேதனஞ் செயனுமெனேயுதைக்க-பட்ட.

(இ-ள்.) அந்தச்சுழல் தாரையானது வெளியில்வருஞ் சங்கையைவிட்டு விஸ்வரூபத்தைத்தாண்டி நச்சுக்குழலுக்கு அடியில்நடுவணையின்பின் தனஞ் சயனவன் என்னையுதைக்க எ-று. (சஙo)

ஓதுந்தாரைவெளியி லூதுஞ்சங்கையைவிட்டு, சூதுசெய்யுமக் கினித் தூணேரம்வருகையில்நான், வாதுஇறவேதனே மாதர்மனது நோக,சேதியெனது அன்னேச்செய்வினேப்பயனேதென-பட்ட.

(இ-ள்.) சொல்லப்பட்டதாரையின் வெளியிலூதுகின்றசங்கையைவிட்டு அகாகதத்திற்குச்சமீபத்தின் இருக்கின்ற அக்கினிஸ்தம்பத்தின்ஓரமாகவரும் போது என்னுடையதாயின் மனதுநோகக் கஷ்டப்பட்டாள் எ-று. (சஙக)

பேதாபேதங்கள்மெத்சப்பேதித்துதனஞ்செயனும்,பாதாரவிந்தத்தினும்படவேயெனையுதைக்க,தூதுஅபானனேட்டித்தொடர்ந்துமூலத்தின்கீழே, தாதுகுலுங்காநடித்தனஞ்செயனுந்தள்ளிட-பட்

(இ-ள்.) மிகுந்தவித்தியாசத்தைக்கொடுத்துத் தனஞ்சயனானவன் தன்னுடையகால்களால் உதைத்துத்தள்ள அபானனானவன் எட்டிதொடர்ந்துமூலாதாரத்தின்கீழ் தாதுவானது குலுங்கும்படி தள்ளினான் எ-று. (௬௩௨)

அடங்குஞ்சக்கரந்தனிலமைக்குமதனைவிட்டு,முடங்கிச்சுழியின்வாசல்முனையில்வருகையில்நான், தொடங்கித்தனஞ்செயனுஞ்சுருக்காய்பாதத்தினும், விளங்கக்குலுங்குதைக்கவெளியினிலம்புவிவர.

(இ-ள்.) அடங்குகின்ற சக்கரத்தில் பொருந்திய சுழிமுனையின்வாசலில் வருகையில் தனஞ்சயனானவன் வெருசுறுக்காக உதைத்துத்தள்ள வெளியில் வரப்பட்ட எ-று. (௬௩௩)

செடமெண்சாணுங்குலுங்க சிவமெய்ஞ்ஞானம்விளங்கக்குடவயிறுங்குலுங்கக் கையைவிட்டகம்வர, மடவாதலையமீராறுமணிவாசலொன்பது, செடமுமெண்சாணுடலுந்திரையைவிட்டுமேவர-பட்ட

(இ-ள்.) எண்சாண்தேகமானது குலுங்கவும், உண்மைஞானம் விளங்கவும், வயிறானது குலுங்கவும், ஆலயம்பன்னிரண்டும்,வாசல்ஒன்பதுந்தாண்டி திரையைவிட்டு எ-று. (௬௩௪)

ஓங்காரத்தொளிதனி லுதித்தகோணமொன்பதில், ஸ்ரீங்காரத்தொளிவட்டத்தெருவில்வருகையில்நான், நீங்காநெல்லிக்கனிபோல்நிலைத்தசபையைவிட்டு, தீங்கில்லாதஅக்கினித் தெருவில்வருகையில்நன்-பட்ட.

(இ-ள்.) பிரணவஒளியின்கண்ணுதித்த நவகோணத்தில் ஸ்ரீங்காரமென்னுந்தெருவில் வரும்போது ஒழியாதநெல்விக்கனிபோல் சபையைவிட்டுகெடுதலில்லாத அக்கினித்தெருவில் வரும்போது எ-று. (௬௩௫)

ஆங்கத்திருக்கேணியிலமைத்தசக்கரத்தினில், தேங்கநின்றலகையின்தெருவில்வருகஆண்டே, வாங்குமூலச்சுழியில் வளர்ந்தஅக்கினியின்கீழ், தாங்கத்தனஞ்செயனுந்தடக்கலில்லாதுதைக்க-பட்ட,

(இ-ள்.) அவ்விடத்தில் திருக்கேணியில்பொருந்திய சக்கரங்களில்நின்று அலகைத்தெருவில் மூலச்சுழியில் வளர்ந்த அக்கினியின்கீழ் தனஞ்சயனானவன்உதைக்க எ-று. (௬௩௬)

காலைவருத்தம்வாசிநாலைப்பறித்துவுயிர், சாலப்பெருத்தச்சித்திரச்சாவடிவருகையிலும், மூலாதாரச்சுழியில் மூவனபிரமத்துக்கப்பால், யாலினுடசந்திதிமணிபூரசத்தில்வளர்-பட்ட.

(இ-ள்.) காற்றைவருத்த மின்றிக்கட்டி உயிரைச்சித்திரச்சாவடிவருகை யில் மூலாதாரச்சுழியில் பிரமனுக்கப்பால் மாலினுடைய சந்தியில் எ-று.

இலைகாலிருவிலக்கமறிசகலெலனைமறிக்க,தலைகாலுமேநகரதனஞ் செயனுதைத்திட, மாலையின்மாதுமங்கைகள்வாலை கெர்ப்பமதனில், ஓலமுச்சுழியி னோரம்வருகையிலும்-பட்ட.

(இ-ள்) தனஞ்சயனனவன்உதைக்கப்பெண்களுடையகுளக்கர்ப்பத்தில் மூலச்சுழியின் ஓரத்தின்வருகையில் எ-று. (௪௩௮)

சிறந்தவர்கள்வயுற்றில் செனித்தபிறகுதிக்க,அறிந்தவர்கள் கருவிலமைப்பதில்லையாண்டே, வரந்தருமம்புவியில்மன தாகந் தஅன்னையும், பிறந்தாலொருபுத்திரன் பின்னும்போதுமென்றதால்-பட்ட.

(இ-ள்.)சிறந்தவர்கள் வயிற்றில் தரித்தபிறகு அறிந்தவர்கள் கருவில் அமைப்பதில்லை வரங்கொடுக்கின்ற உலகத்தில் மனஞ் சந்தோஷித்துப் பெற்ருல் ஒருபுத்திரன்போது மென்றதால் எ-று. (௪௩௯)

நிரந்தரிகப்பிரகாசநிலைத்தருட்சத்தைவிட்டு, துரந்தரிகமாகத் துரியாதிதமருகே, பரசபையுங்கடந்துதுரைசாமியின் துணை, மறவேன்கமலபதமதியைத்தாண்டிவருக-பட்ட.

(இ-ள்.) நிராதாரப்பிரகாசத்தின் நிலைத்தருட்சத்தை, விட்டு துரியாதிதத் தினருகேபரசபையைக்கடந்து துரைசாமியின் துணையடியைமறவேன் வெள்ளிய சந்திரமண்டலத்தைத்தாண்டி வருக எ-று, (௪௪௦)

இனமாய்த்தனஞ்செயன்வந் தென்னையேயுதைத்துசுழி, கனகரத் தினமூலங்கருநிக்காட்டியுதைக்க, செனனமிந்தப்படிதான் சிவசுரூபமதாக, புனலருவிகள்பாய பொறியைவிட்டுவரவும்-பட்ட.

(இ-ள்.) தனஞ்சயனனவன் என்னையுதைத்து கழித்து விளங்குகின்றமூ வத்தின்கண் உதைக்க சிவசொரூபமாக புனலருவிகள்பாயப்பொறியைவிட்டு வரவும் எ-று. (௪௪௧)

மனம்புத்தியுமாங்கார மகிழுஞ்சித்தமதனுல்,இனமாயென்னைப்பிரியாதிழுக்கத்தனஞ்செயனுல் சுனையிலருவிபாயுஞ்சுழியிலமிர்தமோட, முனையைவிட்டொளிவீசமுகப்பைவிட்டுவரவும்-பட்ட.

(இ-ள்.) மனம், புத்தி. ஆங்காரம், சித்தம்ஆகிய இவைகள் என்னைப்பிரியாமலிழுக்கத் தனஞ்சயனுல் அமிர்தம்வீசம் முகப்பை விட்டுவரவும் எ-று.

சாக்கிரஞ்சொற்பனந்தாண்டி தனியேவெளிப்படையில், ஆக்கிமத்தனஞ்செயன்வந்ததட்டி யுதைத்திடவும், சீக்கிரமதாகிய பிராணன்சிறியேபின்னிட்டுத்தள்ள, தூக்கிய அபானவாய்வுதொடர்ந்துதைத்திடும்போது-பட்ட.

(இ-ள்.) சாக்கிரம், சொப்பனம்இவைகளைத்தாண்டி வெளியில் தனஞ்சயன்வந்து அதட்டிஉதைக்க பிராணவாயுவானது கோபித்துப் பின்னிருந்து தள்ள அபானவாயுவானது தொடர்ந்து உதைக்கும்போது எ-று. (௪௪௩.)

ஆக்கிரமதாகியகேணிஆரூர்மண்டபந்தாண்டிநோக்கியேநான் வரும்போதுநொடிக்குள் வாசியுஞ்சிற,பார்க்கப்பார்க்கப்பலவும்பரிபூரணவிலாசம்,ஏர்க்கவாசனைவீசி வெளிப்படவும்பிரகாசம்-பட்ட.

(இ-ள்.) கேணிகள்நிரம்பிய திருவாரூர்மண்டபந்தாண்டிநான்வரும்போதுசீக்கிரத்தில்வாசியானது சிறபரிபூரணவிலாசமேற்கவாசனைவீசவெளிப்பட

சுழியின்முனையைவிட்டுத்துரியந்துரியாதீதம், வழியில்வருமளவில்மாறியேகலைகள்பாய, இழியாக்கேணியில்வீழ்ந்து இருவினைகளுஞ்சூழ, தொழியாவறுமையில்லாச் சுடரைத்தாண்டிவரவும்-பட்ட.

(இ-ள்.) சுழிமுனையைவிட்டு துரியம்துரியாதீதம்என்பவைகளின்வழியாகநான்வரும்போது கலைகள்மாறிப்பாயக் கேணியில் விழுந்து இருவினைகளுஞ் சூழாமலும் வறுமையில்லாமலும் சூரியமண்டலத்தைத்தாண்டி எ-று. ()

அழியாப்பதவிபெற்று அம்பிகைபொற்கமலத்தில்,கழியாவரம் பெற்றுயான் கருவூர்விட்டுவரவும், ஒழியாப்பாச வினைகளொழித்து வோங்காரவாசல், பொழியமதியமிர்தம் வழியமதுரவின்பம்-பட்ட.

(இ-ள்.) அழியாதபதவியைப் பெற்று அம்பிகையின் திருவடிகளில்கழியாத வரத்தைப்பெற்று நான்கருவூரைவிட்டுவர, நீங்காதபாசவினைகளையொழித்து ஓங்காரவாசலில் மதியமிர்தம்பொழிய எ-று. (௬௪௬)

விருத்தம்.

ஒத்துநின்றபிராணனெனைமேலேநோக்கஒருமையினலபானனதுவோங்கித்தள்ள,வெற்றியெனுஞ்சமானனுமேபின்னே தாக்கமேலான வியானனதுமறிக்கமுன்னே, சித்தமேயுதானனதுந் திசையைநோக்கத்திடுக்கிடவேகூர்மனவன்விழிதான்மீட்ட, சத்தியுயர்கண்டவெளிமேலேறித் தனஞ்செயனுமுதைத்தென்னைத் தள்ளினனே.

(இ-ள்.) சகலகருவிகளிலுஞ்சமமாய்க்கலந்துநின்றபிராண வாயுவானது என்னைமேலேபார்க்கஅபானவாயுவும் நெருக்கித்தள்ள சமானன்பின்னே தாக்க வியானன் மறிக்க உதானன் திசையைநோக்க, கூர்மன் விழியைமீட்க, தனஞ்சயனுனவன் உதைத்துத்தள்ளினன் எ-று. (௪௪௭)

தஞ்சமெனுமம்பிகின்றகருவூர்க்குள்ளேசதுரகிரிகாணவுந்தானிருந்தவென்னை, துஞ்சத்துவமொடுசோபவினையுண்டாகிருதுசெய்துநாகனுந்தான்துரோகஞ்செய்தான், வஞ்சமறவெனைவளர்த்தேதேவதத்தன்வருத்தமிகச்செய்துபின்னுர்துரத்தினன்காண், கஞ்சமலர்ப்

பாதத்தால்கோபித்தேதான் கருத்துகந்து தனஞ்செயனு முதைத்திட்டானே.

(இ-ள்.) ஆதாரஇடமென்று நம்பியிருந்த கருவூருக்குள் நாற்கோணமலையைத்தரிசிக்கவிருந்த என்னைசூதுசெய்து நாகனெனவன் துரோகஞ் செய்தான் என்னைவளர்த்த தேவதத்தன் அதிகவருத்தப்படுத்தி வெளியில் துரத்தினான் இவர்களெல்லாம், இப்படிசெய்ய தனஞ்சயன் உதைத்துத் தள்ளினான் எ-று,

இடைகலைபின்னிருகலையுமிழுக்குமுன்னேயிபல்பானசுழிமுனைதானிழுக்கப்பின்னை, தடமகுடசிங்குவையும்புருடன்ரெண்டுஞ்சந்திகட்டிமறித்தவர்கள்மாறித்தள்ள, திடமுடையகாந்தாரியத்தியோடுதீர்க்கமுள்ளவலம்புருடன்சுழியிலேறஅடவுடைசங்குனியுங்குருதன்தானுமலமலக்கமூலமதிலழுத்தினானே.

(இ-ள்.) இடைகலை, பின்கலை சுழிமுனை இம்மூன்றும்இழுக்க, சிங்குவை புருடன்இவையிரண்டுஞ்சந்துகட்டி மாறிமாறித்தள்ள காந்தாரி, அத்தி, அலம்புருடன், இவர்கள் சுழியிலேற சங்குனியும், குருவும்மலக்க மூலத்திலழுத்தினார்கள் எ-று. (௪௪௯)

சிட்டர்கள்தா னருகினிலிருக்கும்போது சிறந்திருந்தநாதவிந்துருவுமாகி, வட்டமதில்நானிருந்தலிங்கள்பத்தும் வரிசையுடனேயிருந்துவாழ்ந்தபோது, பட்டபாடதிகமெத்த பாடுபட்டேன் பகரஅதைக்கணக்கெழுதிமுடியாதாகில், கட்டமில்லாக்கனகசபை நடனங்கண்டோர் கருவுடையார்புவியில்வந்து கருதார்தானே.

(இ-ள்.) சிஷ்டர்கள் அருகேயிருக்கும்போது சிறந்திருந்தநாதவிந்துக்கள் உருவமாகி பத்துமாதங்களுமிருந்து வாழ்ந்தபோது அதிகபாடுபட்டேன்ஆகையால் அதுகணக்கெழுதிமுடியாதாகும், கனகசபையில் நடனஞ்செய்வதைத் தரிசித்தவர்கள் உலகத்தில் வந்துபிறவார்கள் எ-று. (௪௫௦)

வேற்யானவெளிகடந்து அப்பாலேதான்வேதமுயிர்நாதவிந்திரண்டுங்கூடி, மயிர்ப்பாலங்கடந்துஅறுகோணந்தாண்டிவரையெழுந்தமூங்கில்வட்டத்தடியுந்தாண்டி, அப்பாழைக்கடந்துவட்டத்தடிபார்க்குள்ளேஅம்பரத்தின்வெளியில்வந்தமைந்தேனண்டேஇப்பாரிற்பெரியோர்கள்மனமுகந்து எந்தனுடவரலாற்றை யியம்பக்கேளீர்.

(இ-ள்.) மலைபாயிருக்கின்ற வெளியைத்தாண்டிநாதவிந்துக்களிரண்டுங்கூடி மயிர்ப்பாலத்தையும்அறுகோணத்தையும், முப்பாழையுங்கடந்து அம்பரத்தின்வெளியில் வந்துசேர்ந்தேன், ஆகையால்இனி என்னுடையவரலாற்றைச்சொல்லுகிறேன் கேளுங்கள் எ-று. (௪௫௧)

கொச்சகம்.

ஒட்டுப்பலகைதனிலொருசாணதுக்கருகே
நட்டசுழிகம்பமதினடுவணையின்வீதியிலே

மட்டத்தனஞ்செயனு மாறிவுடபாதமதால்
விட்டவுதையாலே வெங்கநதியோரம்வந்தேன்.

(இ-ள்.) அங்குள்ள ஒட்டுப்பலகைக்கு ஒருசாண்தூரத்தில்நாட்டப்பட்ட சழியாகிய கம்பமிருக்கும் நடுவணைவீதியில்தனஞ்சயனானவன்மாறிவந்துகொடுத்தஉதையினால் வெங்கநதியோரத்தில் நான்வந்தேன் எ-று. (௪௫௨)

முன்னிழுக்கப்பின்னிழுக்க மூவர்மறித்திழுக்க
என்னைச்சுமந்தஅன்னை யினிவேதனைப்படவும்
தன்னிரக்கமில்லா தனஞ்செயனுந்தானெழுந்து
சன்னல்வழிதிறக்கத் தாவியுதைத்தானே.

(இ-ள்.) வாயுவுக்கள்முன்னும் பின்னுமாகஇழுத்ததால் என்னைத்தாங்கியதாயானவள் வருத்தப்பட்டும் கொஞ்சமுமிரக்கமில்லாத தனஞ்சயனானவன் தாவிஉதைத்தான் எ-று. (௪௫௩)

வெண்பா.

உதைத்தவுதையாலே யுள்ளமெல்லாநொந்துஅன்னை
பதைத்துத்துடித்துப் பரதவித்தாள்-சகத்திலே
ஊற்றுக்காலோடே யொருகொம்பிருந்ததந்த
ஆற்றுக்கால்தந்தமர்ந்தே னண்டே.

(இ-ள்.) அந்தஉதையினால் நான்மிகவும்நொந்து பரிதவித்தாள், அதன்பின்நான் ஆற்றுக்காலில் வந்துசேர்ந்தேன் எ-று. (௪௫௪)

கலித்துறை.

கூடிக்குலாவி யன்னைபிதாவுங் குழைந்துருகி
வேடிக்கையாக விரும்புகின்ற வெளிநாதவிந்து
ஓடிக்கலந்து வுருண்டுதிரண்டுரு வானபின்பு
நாடிப்புவியில் நான்வருபாடதை நாடறிந்தே.

(இ-ள்.) தாயுந்தந்தையும் வேடிக்கையாய்ச்சேர்ந்து விரும்பினதால் வெளிம்பட்ட நாதவிந்துக்கள் ஒடிக்கலந்துதிரண்டு உருவானபின் நான் உலகத்தில்வரும்பாடு நாடறிவதே எ-று. (௪௫௫)

பிறந்தவகை-தரு.

தனனந்தன தனன-தானதன-தனனந்தனதன-தானதனன.

பிர்மாபதிகடந்துது ருதத்தை-பெருவெளியாகியதோர்திட்டுகடந்து, இருமாவொருமாவில்-வருந்தியதோ-ரின்பரசமா யிருந்தகெங்கைகடந்து, மருமாலெழுத்தோடே-தில்லைம்பதியில் - வாழ்ந்துடனே வீற்றிருந்தகெதியைவிட்டு,அரிமாலயன்தேடி-அறியாத-அம்பரத்திலாடுகின்ற பம்பரம்விட்டேன்-தனனந்,

(இ-ள்.) பிரமஸ்தானத்தையும்பெருவெளித் திட்டையும் கடந்துகங்கையினிடஞ்சென்று தில்லைப்பதியில்வாழ்ந்து இருந்தகதியைவிட்டு பிரமவிஷ்ணுக்களால் தேடியறியப்படாதஅம்பரத்தில்நடிக்கின்றபம்பரத்தைவிட்டேன்

குறிப்பாயென்னைவளர்த்த-முதலான-குய்யமூதல் நடுவணைமையமும்விட்டு,அறியாதெழுந்துநின்ற-செங்கநதி-ஆடுகின்றதில்லைவெளியம்பரம்விட்டு,சிறியாப்பிறையான-சிதம்பரத்தின்-திருக்குளக்கருக்குகைமுறுக்கைவிட்டு, வறியடிமூங்கிலிலே-நின்றதொரு-வாசவுகாசமெனும் நேசமும்விட்டேன்-தனனனூந்.

(இ-ள்.) என்னைவள்ர்த்த குய்யமுதல் நடுவணையையும், தில்லையம்பலத்தையும், திருக்குளக்கரையையும்விட்டுமூங்கிலிலிருந்த ஒருநேசத்தையும்விட்டேன் எ-று. (௪௫௭)

கரையொருபுறமாக-வரவழைத்து-கைக்கிளிபோல் வைத்திருந்தசக்சரம்விட்டு,திறையாமறைவீட்டில்-வீற்றிருந்த-சீர்கமலத் திருக்கேணிவாசல்விட்டுக், கரையாதணையும்விட்டு-எனைப்பிரிந்து-முன்மறித்துப்பின்னெழுப்புஞ்சந்நிதிவிட்டு, கரையாநலையும்விட்டு-நானிருந்த-காணியுஞ்சங்கதாரையின்வேணியும்விட்டேன்-தனனூந்.

(இ-ள்.) கரையின் ஒருபக்கமாக உள்ளங்கைநெல்லிக்கனிபோ லிருந்த சக்கரத்தைவிட்டு மறையாகியவீட்டில்வீற்றிருக்கும் திருக்கேணிவாசலைவிட்டு என்னைப்பிரிந்தெழுப்பின சந்நிதியையும்விட்டு நானிருந்தயாகசாலை முதலியவைகளையும்விட்டேன் எ-று. (௪௫௮)

ஒட்டியபடிமுட்டியும்விட்டு - நின்றதொரு - ஆத்தைக்குழியானதொருசேற்றையும்விட்டுக், குட்டிமறைச்சுட்டியும்விட்டு-மெய்ஞ்ஞானபர-குருவானஅன்பறிவுகூறையும்விட்டு,மட்டுமேயெண்சாணுடலிரண்டுசாணு-மாறியேவளர்ந்தகருவூரையும்விட்டு, சட்டெனச்சக்கரத்ததனில்-தனஞ்செயனுந்-தாக்கவுமேயென்மனதுயேக்கமும் விட்டேன்-தனனூந்.

(இ-ள்.) அடிமுடிகளையும், சேற்றுக்குழியையும், மறைச்சுட்டியையும் மெய்ஞ்ஞானக்கூற்றையும் கருவூரையும், சக்கரத்தில் தனஞ்சயனெனவன் தாக்கவிட்டுவிட்டேன் எ-று. (௪௫௯)

தொக்குத்தொட்டெழுத்தையுங்கொண்டு-அம்பரத்தினில்-சேரதிசடனம்புரியும்வீதியும்விட்டு,தக்சபுகழ்சுழியைவிட்டு- நந்திகொலுவின்-தட்த்தினில்வீற்றிருந்தேன்திடத்தைவிட்டு, திக்கினியாநாடும்விட்டு-சிவமிகுந்த-செந்தியொளிசிவசிங்காதனத்தைவிட்டு, அக்கினிகம்பத்தையும்விட்டு-அடுந்துவிளை-யாடவுகாமிருந்ததின் கூடம்விட்டாண்டே-தனனூந்.

(இ-ள்.) நொக்கைத்தொட்டவழுத்தைக்கொண்டு அம்பரத்தில்நடனஞ் செய்ம்வீதியையும், சுழியையும், நந்திகொலுவையும், நல்லநாட்டையும், சிவ மிருந்த சிங்காதனத்தையும் விட்டு எ-று. (௪௧௦)

மக்கச்சிக்கச்சக்கரத்திலேவருகையிலே-மாறிதனஞ்செயனுமே மீறியுதைத்தான்,உக்கிரமதாய்நானிருந்தபாண்டத்துக்கு வுடம்பெ ல்லாநொந்துமெத்த தள்ளாட்டமாய், பக்கமுள்ளமாதர்கள் வந்து- அன்னையவட்கு-பத்திரமாயெச்சரிக்கையுத்தரஞ்சொல்லி, சிக்கியே நான்வருகையிலே-சுமந்திருந்த - சித்துடம்புதத்தளிக்கச் சத்தமிட வே-தனனாந்.

(இ-ள்.) சக்கரத்தில் நான்வரும்போது தனஞ்சயனானவன் என்னைமிதி யுதைத்தான், ஆகையால் உடம்பெல்லாம் நொந்து மிகவும்தள்ளாடியிருக்கை யில் பெண்கள்வந்து தாய்க்குமிகவும் எச்சரிக்கைசொல்லி உடம்புதத்தளிக்க

தோய்ந்ததுக்கமிகவதிக-சுற்றிலும்நின்ற-தோகையர்கள்மெள் ளவந்துவள்ளலுதவ, கைத்தலத்தையிருத்திக்கொண்டு-அன்னையவ ட்கு-கைலாகையாகவுமைமெய்லாகையால், மெத்தனவேயிருந்தவர் கள்-இருபுறமும்-வீற்றிருந்தமாதர்களும்பார்த்திருக்கவுஞ் சாஸ்திர வேதங்களோதும்-வெகுசித-சாந்தகுணமாகமொழி தாழ்ந்துரைக்க வும்-தனனாந்.

(இ-ள்.) சுற்றிலும் நின்றுகொண்டிருந்த பெண்கள்கைலாகு கொடுத்து வெகுசார்தமான சொற்களால் தாழ்மைசொல்லிக் கொண்டிருக்கவும் எ-று.

சூஸ்திரமாய்சலக்குடத்தை-முன்னையும்விட்டு சுகமுடனென்னு டலைப்பின்னையும்விட்டு,காத்திருந்தமருத்துவச்சி-அவளிரண்டு-கரத் தில்விரலைத்தொட்டுஅழுத்தினளே,வேற்றுமுகமாகவேதான்-முந்தி யன்னையும்-வெகுண்டுவெகுண்டுமிரண்டிடவும,கூற்றுவனுய்சமைந்து தென்று-அன்னைமிகவுங்கூச்குரலாய்ச்சத்தமிக நோக்கிடவேதான்.

(இ-ள்.) மிகவுஞ்சூட்சமாக பனிக்குடத்தை முன்னதாகவிட்டு என்னு டைய உடலைபின்னர்விட்டு வெளியில்வருமபோது மருத்துவச்சியானவள் அ வளுடைய இரணடுகைகளாலும் வேற்றுமுகமாக அழுத்தவே அப்போது தாயானவள் மிகவுங்கூக்குரலிட்டுக் கூவ எ-று. (௪௧௩)

சையோகஞ்செய்யும்போது-இருந்தமனஞ்சந்தோஷந்தப்பியே பின்சந்தோஷமாய்,நொய்யதிருநாதவிந்து-வரும்போது-நுண்மைய யறியார்பெரியோராண்மையறியார்,பைதனிலுந்திரண்டுருண்டு-வரு கையிலும்-பந்தியுடனேயுலகில்புத்திரனென்று,ஐயமறஅறிந்துகொ ள்வார்-என்னைச்சுமந்த-அன்னையுடலருத்தத்தையாருமறியார்-தனனா.

(இ-ள்.) பெண்ணும் புருஷனுங்கூடின காயத்திலிருந்த மனசந்தோஷங்கேட்டு நாதவிந்துக்கள் வரும்போதுபையில் திரண்டுருண்டு உலகில்புத்திரனென்று உதிக்கும்போது தாய்பட்டவருத்தத்தை யாவருமுணர மாட்டார்கள் எ-று. (௪௬௪)

வெய்யவனுதித்தநாட்டில்-வெகுசாயனும் - வேதனைகளாகவந்துபிறந்துவிட்டேன்,வையகமெலாந்துதிக்கும்-பிர்மாவுடைய -மைந்தன்சரஸ்வதியெந்தனன்னையுமாச்சு, தய்யபாபிர்மநிஷ்டை-உதித்தருளுஞ்-சுகந்தபரிபூரணஞானகுலங்காண், செய்வினையாலமைத்தபூர்வக்கியான-சிந்தியருளாலமைத்தசெய்கையிதாண்டே.

(இ-ள்.) சூரியமண்டலத்தின்கண் நான்வேதனைகளை மிகவுமநுபவித்து உலகத்தில்பிறந்து விட்டேன் நானே பிரமதேவனுடைய பிரமநிஷ்டையாலுதித்த ஞானகுலமாகும் ஆனால் இதுவென்னுடைய பூர்வஞானத்தாற்சொல்லப்பட்டதாம் எ-று (௪௬௫)

விதிமதியிரண்டளவால் - விந்துநாதமு -மிகுத்தவச்சிரக்குகைபைதனிலே,அதிகசுக்கிலசுரோணித-மிரண்டுங்கூடி அமைத்தபடியால்யோகசாதகத்தால்,பதியராஜாங்கயோக -தீட்சைபலத்தின்-பக்குவமுதித்திப் பாரில்வந்தேன்,நிதியயிஸ்வரியத்துடன்-விளங்குகின்றநித்தியசவுக்கியகுலமுற்றவனுண்டே-தனனுங்.

(இ-ள்.) விதிமதிகளின் அளவுபோல்விந்துநாதங்கள்கருப்பையில்கூடினசாதகத்தாலும் ராஜாங்கயோகதீட்சையின்பலத்தாலும் பக்குவம்பிறந்துஇந்த உலகத்தில்வந்து பிறந்தேன் ஆனல்நான் ஐஸ்வரியத்துடன் விளங்குகின்றசவுக்கியகுலத்தில் வந்தவனுவேன் எ-று. (௪௬௬)

திருவுருகருவிதுமூண்-டமைத்தகுல-தெய்வீகதிரிமூர்த்தி யானவரலாறு, மருவளர்சுகந்தபரி-மதிரவிபின் - மாமலர்க்கமலரத்னபூமலர்காணும், அருதிருவுருவாகி-பிர்மாதிகுலம்-அவனிதனிலுதித்தஅமிசையினல், குருவனுக்கிரகசெயலால்-குவலையத்தில் -குறைவொன்றுமில்லகாணிந்தவகையாண்டே-தனனுங்.

(இ-ள்.) திருவுருவில்கருப்பையின்கண் அமைத்ததெய்வத்தன்மைபொருந்திய திரிமூர்த்தியால் வரலாருனது சுகந்தத்தையுடைய சூரியசந்திரர்களின் கமலமலர்போலும் உலகத்தின்கண் அமிசையினலுதித்து குறைவொன்றுமில்லையாகும் எ-று. (௪௬௭)

விருத்தம்

உந்திவிட்டுப்புவிபதனிலமைத்துயானும்உதித்துசிறுசிற்றிடைப்பெண்மாதரெல்லாம், ஏந்திபிருகரத்தாலுமணைத்துஅன்னை எனையெடுத்துவொருபுறத்திலிடத்தினர்கள்,நொந்துபட்டஅன்னையர்க்

குத்துகிலும்வாங்கி நுண்மையதாயடிவயிறுதாங்கக்கட்டி, விந்துவிட்டோன்கோத்திரத்தின்குலங்கள்வாழ்க விளங்குபுத்திரன்பிறந்தனெனவிளம்புவாறே.

(இ-ள்.) கருப்பையைவிட்டு உலகத்திற்பிறந்து சிற்றிடைப்பெண்களெல்லாமேந்தி என்தாயின் ஒருபக்கத்திற்கிடத்தினார்கள் அங்ஙனம்பெற்றதாயின் வயிற்றைக்கட்டி தந்தையின்கோத்திரம் விளங்கவென்று வாழ்த்துவார்கள்.

எடுத்தென்னைக்கிடத்திவைத்து மாதரெல்லாம்ஏறெடுத்துஎன்முகத்தைப்பாக்கும்போது, படுத்துயான்கிடக்கையிலுந்தும்பல்மீறபற்றிடவுங்குளிர்ந்தஜலம்பொழிந்தேயாதர்எடுத்தெந்தன்முகந்தனிலுமிறைக்கும்போதிலேற்றமணிபூரகத்தைநோக்கியானும், அடுத்திருந்தஅருளையெல்லாமேவிமேவி யம்புவியிலாசைகொண்டமைந்திட்டேனே.

(இ-ள்.) பெண்களெல்லாரும் என்னையெடுத்துக் கிடத்தி என்னுடைய முகத்தை பார்க்கும்போது நான் தும்பினால் குளிர்ந்த சலத்தையெடுத்து என் முகத்திலிறைப்பார்கள் அப்போது நானும் திருவருளைப்பெற்று உலகத்திலாசைகொண்டு பிறந்தேன் எ-று. (௪௬௯)

விண்ணைவிட்டுவெளிதனிலும் யானும்வந்து விரும்பியெனைச்சுமந்திருந்தஅன்னைபார்த்து, கொண்ணுவிட்டுப்போகவந்தகூற்றனென்றுகொடூரமுடனென்முகத்தைக்குறித்துச்சிந்தை, கண்ணெடுத்துப்பாராமல்சலிப்புண்டாகிக் கலையாகிமூன்றுபட்டினியுமாச்சு, எண்ணமிட்டுக்கொண்டிருந்தேனறைக்குளேதோனெடுத்தெனக்குவுதவிசலங் கொடுத்திட்டாரே.

(இ-ள்.) என்னைவிட்டு வெளியேவந்த என்னைத்தாயானவள் பார்த்துக் கொன்றுவிட்டுப்போகவந்த எமனென்று கோபக்குறியினால் பாராமல்மூன்று நாள்வரைக்கும் பட்டினியாயிருந்தாள் அதன்பின்னர் என்னைச்சில ரெடுத்து ஆகாரங்கொடுத்தார்கள் எ-று. (௪௭0)

ஆகமதில்நானிருந்து வந்தபோது அங்கமேல்லாம்வேதனையாவீன்றஅன்னை, தாகமுடன்மனசோபமிகவுமாச்சுசஞ்சலத்துக்காளானேனமையோவென்று, வேகமுடனென்னை யொருபுறத்திற்போட்டு வெறுமையுடனவளுமொருபுறமேசாய்ந்து, கோபமினியறியாமல்நாப்போது கூகூவென்றழுதுசத்தங்கூப்பிட்டேனே.

(இ-ள்.) உடம்பினுள் நானிருந்து வெளியில் வந்தபோது வேதனையோடு பெற்றதாய்க்கு மிகவுஞ்சோபமுண்டாய்சஞ்சலத்துக்கு ஆளானேனேயென்று என்னை ஒருபக்கத்திற்போட்டு அவள் வெறுமனுகமற்றொருபுறஞ்சாய்ந்துஇருந்தாள் அப்போதுநான் அவளுடையகோபத்தை உணராமல் கூச்சலிட்டழுதேன் எ-று. (௪௭௧)

என்வருத்தமறியாமலப்போபாவிஎன்கிடந்துகூவுகிறுயென்ன பாவ,முன்வருத்தமூன்றுநாளுபாசமாச்சமூர்ச்சையுடனெனக்கிளப்புமிகவு'மாச்சு, என்வருத்தமறியாமலயிர்தங்கேட்டுஎனழுதாயென்றனக்கோர்பிராணனில்லை,பின்வருத்தங்கொண்டுநீவருவாயென்றபுத்திசற்றுமறியாமல் பிசகினேனே.

(இ-ள்.) அப்பொழுது பாவிஎன்னுடைய வருத்தந்தெரியாமல் என்கூவுகிறுயென்று தாயும்மற்றவர்களும் என்னைப்பழித்தார்கள் எ-று. (௪௭௨)

ஆங்காதபசிபாச்சுஎனக்குஅன்னை அவள்வருத்தமினியறியசதமுதேல்யானும்,மாங்காரங்கொண்டெழுந்துஒங்காரத்தைமடக்கியேபிடித்திழுத்து மருந்தேவைத்தாள், நீங்காமலருகிருந்தமாதரெல்லாம் நிலையாகபலஅவிழ்தஞ்செய்துகூர்ந்தார்,பாங்காகஅறையதுக்குள் மூன்றுநாளும் பசியுடனேயானவளும்படுத்திட்டோமே.

(இ-ள்.) எனக்கு அடங்காத பசியாயிருந்ததனுல் தாயின் வருத்தத்தை அறியாமலழுதேன் அப்பொழுது அவள்எனக்கு முலைகொடுத்தாள் பின்னர் அங்கிருந்தவர்களெல்லாரும் மருந்துகொடுத்தார்கள் இப்படியே அந்தஅறைக்குள் மூன்றுநாள்வரைக்கும் பசியுடனேயிருந்தோம் எ-று. (௪௭௩)

வீறுகநாள்மூன்றுங்கழித்துமேவிவிரும்பி யென்னைச்சுமந்திருந்தஅன்னையார்க்கு வாறனமாதர்வந்துவென்னீர்விட்டு மதனருதகந்தெளியசிரமேல்விட்டு, சீராகஎனக்கொக்கசல்நீராட்டி செடமதுவின்கசடெல்லாஞ்சுத்திசெய்து, நேராகஇருந்தஅறை புகுந்துமேன்மேல் நிலமுரைத்துத்திலதநெற்றிக்கிட்டார்தானே.

(இ-ள்,) அப்படி மூன்றுநாளுங்கழித்து என்னைச்சுமந்திருந்த தாய்க்கு வெந்நீர்விட்டு குளிப்பாட்டி சுத்திசெய்து அவளிருந்த அறையின் நிலத்தை தேய்த்துப் பொட்டிட்டு எ-று. (௪௭௪)

மூளாதபசியெடுத்துஅறைக்குள்ளேதான்முழுசலிப்பால்குழல்கோதிசிகையும்போட்டு, தாளாமல்வீற்றிருக்கும் க்ஷணத்துக்குள்ளே தயவாகஅறுசுவையோடன்னமுண்டு,தேளானபசியாறியடைக்காய்கொண்டு செழித்தபின்புஎன்முகத்தைப்பார்த்தாள்தானே,கேளானமாதரெல்லாமுடனிருந்து கிருபையுடனென்னையெடுத்துக்களித்திட்டாரே.

(இ-ள்.) அந்தஅறைக்குள் கொடியபசியெடுத்தமையால் சலிப்பாய் குழலைக்கொதியிருக்குஞ் சமயத்தில் சுற்றத்தார்கள் அறுசுவையுடன்கூடிய அன்னத்தைக்கொடுக்க உண்டுபசியாறி வெற்றிலைப்பாக்கு போட்டுக்கொண்டபின் என்னுடைய முகத்தைப்பார்த்தாள் அதின்பின்னர் பெண்களெல்லா என்னையெடுத்துச் சந்தோஷித்தார்கள் எ-று. (௪௭௫)

மட்டில்லாப்பசியெடுத்த அன்னையார்க்குமதிமயக்கந்தெளிந்து கனைசோபநீங்கி, தட்டில்லாசந்தானமுதித்ததென்று சார்வாகபக்ஷ மன்புமிகமென்மேலாய், வீட்டிலருகிருந்துமைந்தனருமையாக மிக மகிழ்ந்துமுகமணைத்துமுத்தந்தந்தாள், கொட்டியான்சப்பாணியிரு கரத்தால்கூர்முகத்தில் சிறுநகைப்புங்கொண்டாள்தானே.

(இ-ள்.) தாய்க்குப்பசியெடுத்துச் சோபநீங்கியபின்னரே பிள்ளை பிறந்த தென்று என்னையெடுத்தணைத்து முத்தங்கொடுத்தாள் பின்னர்புன்சிரிப்பை யுங்கொண்டாள் எ-று. (௪௭௬)

தேகமெல்லாங்குளிர்ந்தன்னைதெளிந்துமேவி செடவருத்தந்தீர்ந் துஎன்மேலிரக்கமாகி, ஆகமெலாங்குளிர்ந்துசந்தோஷமாகி அதீத மையமிட்டுச்சிமுகமுத்திட்டு,பாகமுடனெடுத்தன்னைமடிமேல்வைத் துப் பரிவாகக்கொங்கைமலர்வாயிலீந்தாள், தாகமினிதெளியவே யமிர்தமுண்ட சட்டமதைவின்னதென்று சாற்றுவேனே.

(இ-ள்.) தாயானவள் தேகங்குளிரந்து வருத்தநீங்கியபின் சந்தோஷத் தையடைந்து உச்சியிலும் முகத்திலும் முத்தங்கொடுத்து என்னை மடிமேல் வைத்து முலைப்பால்கொடுத்தாள் அங்ஙனம் அமிர்தங்குடித்தவிதத்தைஇனி சொல்லுவேன் எ-று. (௪௭௭)

காமப்பாலமிர்தமுண்ணுங்கருவைச்சொல்லக் கருத்தையினிய ருள்வதென்ன ஆண்டேகேளீர், சோமப்பாலுண்டதனுல் சோதிகா ணுஞ் சுத்தமதியமிர்தமுண்டால்சுழிதான்காணும், வாமப்பாலுண் டபலன்பெரியோரானுர் மதுரசஞ்சீவியையுண்டோர் ஞானியானுர் தூமதிதபாலமிர்தமுண்ணுநேர்மை சொல்லுகிறேனமிர்தரசச் சுகத் தையாண்டே.

(இ-ள்.) காமப்பாலுண்டதைவிடச் சோமப்பாலுண்டால் சோதிகாணும் சுத்தமாகியசந்திராமிர்த பானஞ்செய்தால் சுழிமுனைகாணும்மதுரசஞ்சீவியை யுண்டார் ஞானமாவார் சந்திரர் மதியமிர்தம்உண்ணும் விபரத்தைச் சொல்லு கிறேன் எ-று. (௪௭௮)

சுகத்தில்சுகமதிகசுகசூக்ஷாசூக்ஷஞ் சொர்க்கபதியானபதஞ்சுக ஞானங்காண்,அகத்திலிருந்ததிரசபானஞ்சூக்ஷமாறுமறியாதவெகு அநந்தசூக்ஷம்,மசூத்துவத்தையானுரைக்களவியோராண்டே வான் புவியுஞ்செகமுழுதுமதற்கொவ்வாது,இகபரமும் பரமுமிதுவானசூ க்ஷமிருதயத்திலிருந்தவிதமினிசொல்வோமே.

(இ-ள்.) சுகத்தில் சூட்சாசூட்சஞ் சொன்னுல் அதுஉள்ளத்தி லிருந்து யாருமறியாதசூட்சமாகும் ஆகையால் நான் அதைச்சொல்லுவதென்றுல்யாவ ருக்குஞ் சம்மதமாகாது ஆயினும் என்னுடைய மனத்திலிருந்து உண்டான விதத்தை இனிசொல்லுகின்றேன். (௪௭௯)

கொச்சகம்.

மாமதுரபானரச வாமரசநாமதிய
கோமளமாதன்னைக்கெர்ப்பக் குகையைவிட்டுநாபிவழி
பூமலர்வாழம்புவியில் பிறந்திருப்பதாமாகில்
காமக்குரோதமோகக் காமியத்தில்செல்வாரே.

(இ-ள்.) மாரபானரசத்தை நாம்உணர பெண்ணாகிய தாய்கர்ப்பக் குகையைவிட்டு நாபிவழிவார் உலகத்தில் பிறந்திருப்பதானால் காமக்குரோதமோக காமியத்தில் போவார்கள் எ-று. (சஅ0)

எத்தேசகாலமிருந் தெண்சாணுடல்மீறி
பத்தாபிரம்வருஷம்பாரிலிருப்பரர்காண்
உத்தமர்கள்சித்துவினைந் தூரிலிருந்துச்சிதமாய்
கர்த்தனருள்சித்திபெற்றுக் காயசித்திசெய்வாரே.

(இ-ள்.) எந்தத்தேசத்திலும் எந்தக்காலத்திலுமிருந்து எண்சாணுடனே பிறந்தாலும் அதற்கு வரையற்ற அளவுகாலங்கடந்து பதினாயிரம்வருஷம் வரைக்கும் உலகத்திலிருப்பார்கள் ஆகையால் உத்தமர்கள் சித்துசெய்து ஊரிலிருந்து விசேஷமாய் கடவுளின் கிருபையைப்பெற்று காயசித்தி செய்வார்

கலித்துறை.

நாபிக்கமலத் தருள்வாசல்புக்கிடு நற்கமலந்
தாபித்துஅன்னை வளர்கெர்ப்பவாசல் தனையடைத்து
கோபித்தபான னுதைத்திடயோனிக் குறவழிபோய்
ஆபித்ததவருஞ் சிவயோகவாச லதுவழியே.

(இ-ள்.) நாபிக்கமலத்திலிருக்கும் வளர்கின்றவாசலை யடைத்து அபானனானவன் உதைக்க யோனியின் வழியேபோய் சிவயோகவாசலின் வழியே.

வழியோனிமூடி யுந்தியின்வாசல் வரும்பெரியோர்
கழிவில்லைதேக மூத்தைக்குழியதுங் கலைபிராளா
பொழிமலர்வாச மதிமலர்வீசும் புகழுடையா
ருழிவதுமில்லை யபானனுதைத்ததுணர்ந்திடுவேன்.

(இ-ள்.) யோனிவழியைமூடி நாபின்வாசலில் வரும்பெரியோர்கள் யாதொரு இழிவுமின்றி அபானனுதைத்ததை நானறிவேன் எ-று. (சஅ௩)

வெண்பா.

காமப்பாலுண்டு கருக்குழியிலூறும்
நாமப்பாலுண்ண நல்விதியோ-சோமப்பால்
உண்டுகடைத்தேற உந்திவழிவருகா
இன்றுவினை யொழியாதினி.

(இ-ள்.) காமப்பாலாகிய மூலைப்பாலைக்குடித்துகர்ப்பாசயத்திலூறுகின்ற நாம் வாமப்பாலுண்ணமுடியுமோ? ஆகையால் உந்திவழியில் வாராதவினைகம க்கு ஒழியாது எ-று. (௪௮௪)

வாமப்பாலுண்டு மகிழ்பெறுவதாமாகில்
காமப்பாலுண்ணக் காரணமோ-ஏமப்பால்
இருகாலொருகாலி ரவிமதியொன்றானால்
குறுகிவரும்வாய்வதுவின் கூறு.

(இ-ள்.) வாமப்பாலையுண்டு மகிழ்வதானால் காப்பாலுண்ணக் காரணம் ஒன்றுமில்லை ஆனால்இடைகலையும் பின்கலையுமொன்றானால் வாயுவின்கூறு குறையும் எ-று. (௪௮௫)

விருத்தம்.

சந்திரபுட்கரணிமதிமதுரவாசஞ்சைதன்னியப்பா லமிர்தமருவிசூழும்,இந்திரியகர்மரசமிருந்தமாதர்எனையீன்ற அன்னையவளியல்புதன்னால்,மைந்தன்திருவள்ளுவனையுதித்துமேலும் மதனசூதகந்தீர்ந்துவரும்பாலுண்ண, விந்தவினியானுரைப்பேனுண்டேசேவீர் விபரமதாயமிர்தமுண்ணும் விதிசொல்வேனே.

(இ-ள்.) வாசம்பொருந்திய சந்திரபுஷ்கரணியின் பாலமிர்தமானது சூழ்கின்ற இந்திரியமாகிய காமரசமிருந்த பெண்களில் என்னைப்பெற்ற தாயினியல்பினால்நான் திருவள்ளுவனைப்பிறந்து சூதகந்தீர்ந்துவரும் பாலையுண்ண அதினால் ஞானம்பிறந்து அமிர்தமுண்ணும் விவரத்தைச்சொல்லுகிறேன் எ-று.

பாலுண்ணல்-தரு

அமிர்தமுண்டேன்காண்-மதிமல-ரமிர்தமுண்டேன்காண்.

(இ-ள்.) நான் சந்திரனுடைய மலர்ந்த அமிர்தத்தையுண்டேன் எ-று.

அமிர்தமுண்டேன்மதியாதாரமாகவுமன்னை தன்மார்போடணையவைத்தாசையால், குமிர்தமாமதிபாலைத்தாராமலுங் கொடியபாவி காமப்பாலைத்தந்தனள், திமிர்தமேதிருநடனம்புரியுமமிர்தந்தந்தனளன்னையின்பத்துடன்,வமிர்தமாமதுமலர்கொண்டுவீசும் வச்சிரஉஞ்சல்மீது நித்திரைசெய்துயான்-அமிர்த.

(இ-ள்.) சந்திரனைவன் ஆதாரமாகவும்தாயின்மார்போடணைத்துஆசையினால் மதியமிர்தத்தைக் கொடுக்காமல் காமப்பாலைக் கொடுத்தால் பின்னர் வச்சிர ஊஞ்சலின்மீது என்னைக்கிடத்த நான்நித்திரை செய்தேன் எ-று. ()

ஒங்குங்கேளிக்கையில்மாதுகொங்கைதனை யொத்தக்கரத்தாலுமஸ்தகத்தைத்தொட்டு, தாங்கியேநிற்கவும்பாங்கியணைக்கவும் தாவிமடிமீதிலேறியிருந்துயான், தேங்கியமாதுகளேங்கியிருக்கவுஞ்சித்தி

ரப்பீதாம்பர மெத்தையின்பேரிலும்,பாங்கியுமன்னை யதிசசந்தோஷமாயணைத்துப் பாலனுக்கமிர்தமூட்டினள்-அமிர்த

(இ-ள்.) வளருகின்ற விளையாட்டில் பெண்ணின்ஸ்தனத்தை கரங்களால்தொட்டுநிற்கப் பாங்கியானவள் அணைக்கத்தாவி மடியின்மேலேறி யிருந்து நான்வுங்கியிருக்கச் சித்திரமெழுதிய பட்டுமெத்தையின்மேல் அன்னையானவள் அதிகசந்தோஷமாயணைத்துப்பால் கொடுத்தாள் எ-று. (௪௮௮)

இன்றுஅறைக்குள்ளே மூன்றுநாள் பட்டினியின்ப மெல்லாம் வெகுதுன்பமதாச்சு, வென்றுபிறவிக்கடலிலிலங்கியவேழத்தைவிட்டுயானேசத்துடனுமே, அன்றுபிறவிக்கருநாட்டிலதுவிட்டகம்பரம் வம்புவிவாழ்க்கையில், கண்டுமிருந்தக்காட்சிகள்யாலையுங்காமப்பாலுண்டிடுங்காரணங்காண்கிலேன்-அமிர்த.

(இ-ள்.) பிறந்த அறைக்குள் மூன்றுநாள்வரைக்கும் பட்டினியாயிருந்து பிள்ளையைப்பெற்றபின் உண்டான துன்பங்களெல்லாம்பூர்வவினைப்பயனாகும் ஆனால் நான்காமப்பாலுண்ட காரணமானது எனக்குத்தெரியவில்லை எ-று.

ஆதரவாகவே யென்னையடுத்து அழகாய்கொடுங்கையி லென்னையணைத்துடன்போதரவாகவுமென்முகம்பார்த்தவுடன்பொல்லாத காமப்பாலென்தாயிவூட்டினள்,ஊதுந்துருத்தியில்நாதவிந்தாணியும் ஊறிக்குகையிலுருவதுவாகியும், சூதுகளாகவுடலைக்கொண்டுவந்தேன்தொல்லுலகிற்பொல்லா காமப்பால்தந்தனள்-அமிர்த.

(இ-ள்.) தாயானவள் என்னை ஆதரித்தெடுத்து அணைத்து என்னுடைய முகத்தைப்பார்த்து முலைப்பாலை எனக்குண்பித்து வளர்த்தனள் எ-று.

செல்வச்சிற்றடியும்ரெண்டடிவைக்கவும்திரும்பச்செங்கைவளர் கொங்கையைக்கிள்ளவும்மூலத்தடியில்முகத்தோடணைத்துடன் மூட்டியே காமப்பாலூட்டியேதந்தனள், வாலைசிற்றடியேஞாலமுதாட்டுறேன் வாருமப்பாவென்றுமார்மேலணைத்துமே, கோலமதாகவுங் கொங்கைமலர்தனைக் கூப்பிட்டுப்பாலனும்வாப்பிட்டுரிஞ்சவும்-அமி

(இ-ள்.) செல்வச்சிற்றடியில் இரண்டடி எடுத்துவைக்கத் தாயானவள் கண்டு ஆநந்தங்கொண்டு என்னைமார்போடணைத்து முலைப்பாலைக்கொடுத்தனள் பின்னர் அப்பாவாருமென்றுகூவி மார்போடணைத்து முலைகொடுக்கப் பிள்ளையும் உறிஞ்சிக்குடிக்கவே எ-று. (௪௯௧)

ஐயுறவேகருவூர்திருநாட்டினில்ஆதரவும்விட்டுப் பார்தனில்வந்துமே,வையகத்தாசைவருமென்றறியா மனதிலெண்ணமல் மயங்கிநின்றேகியான்,பொய்யாசையின்பப்புதுமையைவிட்டுமே பொல்லாப்பசிகாமப்பாலையுண்டாகையால், மெய்யானபுத்திமறந்துஅசதியுமிந்தவிதம்வருமென்றறியாமலும்-அமிர்த.

(இ-ள்.) சந்தேகத்துடன் கருப்பாசயத்தில் ஆசையைவிட்டு உலகவாசை வருமென்றுணராமல் மயங்கிநின்று பொய்யாகியஆசையைவிட்டுமுலைப்பாலையுண்டுஉண்மையறிவைமறந்து அசதியும்இந்தவிதம்வருமென்று அறியாமலும்.

மாய்கைக்கடலில் வருஞ்சையோகஞ்செயில் மாதர்க்கருக்குழி கெர்ப்பந்தரித்ததில்,உய்வினைமைந்தனுதித்துப்பத்துதிங்களில் ஓங்கிகிப்பிறந்துடன்தாங்கிபால்தந்தனள், காமப்பாலென்றறியாமலும் பாசக்கடலினிலழுந்தாமலும்பாசங்கொண், டோங்கியவாமப்பால் தந்துணரவொட்டாமலும் உதிரப்பால்தந்துவூட்டினளன்னையே-அ

(இ-ள்.) மாய்கைக்கடலில் ஸ்ரீபுருஷர்களிருவருஞ் சையோகஞ்செய்தால் பெண்களது கருப்பாசயத்தில் கர்ப்பந்தரித்து பத்துமாதங்களும்வளர்ந்துபிறந்தபின் எனக்குமுலைப்பால்கொடுத்தாள் ஆனால்அதைக்காமப்பாலென்றுஅறியாமலும் மாயக்கடலில்படியாமலும் வாமப்பால்கொடுக்கும் விதத்தைஉணராமலும் உதிரம்பாலையூட்டினாள் எ-று. (௪௯௩)

செங்கநதிபற்பத்தீர்த்தங்கொள்ளாமலும் திரோதாயிமாயையின்பாசக்கடல்விட்டுச், சங்கநதிசந்திரபுட்கரணியாணம்சாரைநீருண்டுதவமுஞ்செய்யாமலும், பருதிமதியறியாமலுஞ்சோதியின்பாலமிர்தந்தனைப்பார்த்துணராமலும், கருதியுமன்னைக்காமப்பாலைத் தந்துடன்காட்டினள்முத்தமிட்டாட்டினளூஞ்சலில்-அமிர்த.

(இ-ள்.) கெங்கநதியின் தீர்த்தத்தைக் கொள்ளாமலும் திரோதாயியின் பாசக்கடலைவிட்டு சந்திரபுஷ்கரணியில் பானஞ்செய்துதவஞ் செய்யாமலும் சூரியசந்திரர்களை யறியாமலும் தேஜஸின்வந்த அமிர்தத்தைஅறியாமலும்எனக்கு தாயானவள் பாலைக்கொடுத்து முத்தமிட்டாள் எ-று. (௪௯௪)

இடைகலையைக்கொண்டு பின்கலையிலூட்டி யேகாக்ஷரத்தைக் கொண்டினியறியாமலும்,மடமயில்மாதவள்மாய்கைப்பாலூட்டியும் வைத்திருத்துஞ்சலில்சுற்றியுமாட்டினள், கெர்ப்பக்குழிதனில் கியானதத்துவமாய்உற்பவித்துமுடலாவிபொருளுடன், கற்பனைபிரமன் கடாக்ஷத்தினாலருள் முற்பவஞ்செய்தபூசாபலனுண்டையே-அமிர்த

(இ-ள்.) இடைகலையைப் பின்கலையில்சேர்த்து ஏகாட்சரத்தால்மாய்கைப்பாலையூட்டி ஊஞ்சலில்மாட்டி கருப்பாசயத்துள் ஞானதத்துவமாய் உற்பவித்து உடல்ஆவிபொருள் இவைகளைப்பிரமதேவனது கிருபையால்உணர முன்ஜென்மத்தில் செய்தபூசாபலனாகும் எ-று. (௪௯௫)

அண்டரண்டபகிரண்டமாயிரத்தெட்டாக்கினைமேவுஞ்சதாசிவசம்புவால், எண்டிசையுமீரேழுலோகங்களுங்கண்டுமகிழ்ந்திடக்காரணசற்குரு,பூர்வக்கியானம்புகழ்பாரினிலுதித்தேறுமெய்ஞ்ஞானசித்தாதிகள்பொற்பதஞ், சீர்பெருந்தசதீட்சைவிளங்கிட கூறுமகத்தியமாமுனியின்கிருபை-அமிர்த.

(இ-ள்). அண்டரண்டபகிரண்டங்களும் அடங்கியிருக்கின்ற ஆக்கினையில்வாழ்கின்ற சதாசிவனென்னுஞ் சம்புவால் அஷ்ட திசைகளும் பதினான்கு லோகங்களும் கண்டு சந்தோஷிக்கக்காரணராகியஞானகுருவின்பூர்வஞானம் உதித்து மெய்ஞ்ஞானத்தையடைந்த சித்தாதிகளுடையதிருவடிகளோதசதீட்சைவிளங்க அகத்தியமாமுனி கிருபையால் எ-று. (௪௬௬)

விருத்தம்.

செங்கதிரோனுதித்துவளர்புவியிற்குள்ளே செனித்தவுடல்பிறந்ததுநாளொன்பதாச்சு,சங்கையுடனிருந்துவந்தசூதச் சடங்கறுத்து அங்கசுத்திக்ஷணத்திற்செய்து,இங்கிதமாயருகிருந்தமாதர்க்கெல்லாம்இன்பமுடன்தேகமெல்லாம்நீர்களாடி,பங்கயமாமெனைவளர்த்திக் கொடிபுதைத்துப்பலவிதமாயமுதுகொண்டுபடைத்திட்டாரே.

(இ-ள்.) சூரியனானவன் வெளிச்சத்தைக் கொடுக்கின்ற உலகத்தில் பிறந்து ஒன்பதுநாளாச்சு ஆகையால் நானிருந்துவந்த அசுத்தத்தை நீக்கிச்சரீரத்தைச் சுத்திசெய்து சமீபத்திலிருந்தபெண்களெல்லாம்குளித்துபின்என்னை வளர்த்திகொடியை வேறோரிடத்திற் புதைத்துபலவித அமுதத்தைப் படைத்தார்கள் எ-று. (௪௬௭)

மந்திரத்துக்கெட்டாத நாதவிந்தை வரவழைத்தவவனவளும் வேறுகாண்க, விந்துவிட்டேயனுபோகஞ்செய்ததந்தைவிந்துவொரு புறந்தனில்வெவ்வேறுகாண்க,தந்திரமாய்வயதுதந்தகலையுங் காண்க சார்விருக்குமருத்துவச்சிதானுங்காண்க,சுந்தரமாமகத்தில்தேவதையைவேண்டி தூபமொடுதீபநைவேத்தியந்தந்தாரே.

(இ-ள்.) மந்திரங்களுக்கெட்டாத நாதவிந்துக்களைவரவழைத்தஅவனும் அவளும் விந்தைவிட்டதந்தையின்விந்து ஒருபுறத்தில் நின்றதினால் அதுவும் வயதைக்கொடுத்த கலைகளும், மருத்துவச்சியும் ஆகியஇவர்கள் வேறானதால் இவர்களைநீக்கி அகத்திலிருக்குந் தேவதைகளைநோக்கி தூபதீபநைவேத்தியங்கள் கொடுத்தார்கள் எ-று. (௪௬௮)

அகத்திலுள்ளசாஸ்திரங்கள்முடிந்தபின்பு அவரவர்களாறுபசியானபின்பு, மகத்தானபெரியோர்களருகேநின்று வரிசையுடனன்னையுமேயென்னைப்பார்த்து, ஜெகந்தனிலேவெகுகோடிகாலம்வாழ்ந்து ஜென்மித்தோர்வயதுபெற்று செழித்துவாழ்வாய், வகுத்துவைத்தநேர்மையறியாமலாண்டே மாண்பரெல்லாமிப்படியே வாழ்த்தினாரே.

(இ-ள்.) சர்வசம்மதமான அந்தரங்கத்திலிருந்த சாஸ்திரங்கள் முடிந்தபின்னர் அவரவர்கள்பசியாற பெரியோர்களெல்லாம் என்னைப் பார்த்தார்கள் அப்போது என்னைப்பெற்றவளும் என்னைப்பார்த்து அநேககாலம்வாழ்ந்துஒரு வயதை பெற்றிருப்பதை யுணராமல் பெரியோர்களெல்லாம் என்னை வாழ்த்தினர்கள் எ-று. (௪௬௯)

சூதகமாயானிருந்த அகத்தைவிட்டு சிறுவனைத்தானிருகரத்தி லேந்திமென்மேல்சாதகமாய்கொடுங்கைதனிலணைத்துப்பின்புசயன மிகப்பார்த்துஅன்னையகத்திலுற்று, பேதமிலான்அன்னைபிதாஅழகு சுற்றம்புகழ்பெறவும்வாழ்த்தி,ஆலாத்திசுற்ற ஆதாரவாயகத்திலெனை க்கிடத்துவைத்து அருள்பெறவுமன்னையுந்தானமுதீந்தாளே.

(இ-ள்) நான்சூதகமாயிருந்த விடத்தைவிட்டு சிறுவனை இரண்டுகைக ளாலுந்தாங்கி அணைத்து அன்னைக்குச் சமீபத்திலிருந்து என்னுடையஅழகை வாழ்த்தி ஆலஞ்சுற்றி எனக்குமுலைப்பால் கொடுத்தாள் எ-று. (௱)

சீரணியுஞ்சிற்றிடைக்குத் தண்டைக்காலில் செழித்ததுடையி டையதுக்கேயரைஞாணிட்டு,நேராகவிருகரத்தில் காப்புநல்கிநெற்றி தனில்சிந்தூரப்பொட்டுஞ்சாற்றி,கூறுனஇருவிழிக்குமையிட்டேபின் கொண்டைதனில்ரத்தினத்தால்சுட்டியிட்டு, ஆராரோவென்று தொ ட்டிலசையத்தானும் ஆட்டினளிருகரத்தை நீட்டினளே.

(இ-ள்.) அதின்பின்னர் குழந்தைகளுக்கணியவேண்டிய ஆபரணங்களை யெல்லாமணிந்து தொட்டிலிற்போட்டு வெகுஅழகாக என்தாயானவள் தொ ட்டிலாட்டினள் எ-று. (௱௧)

நவரத்னஉஞ்சல்தனிலெனையேவைத்து ரதிமாதுமங்கையர்கள் ருகேசூழ்ந்து, கவனமுடன்பலகலைகள்சிந்துபாடி கருதினரெனைத் தள்ளிக்கவிகளோசை, தவனம்வருகாமல்சைந்தாட்டினர்கள்தாயா ன அன்னையுமேயமிர்தமூட்ட, அவரவர்கள்பகுதிமுறையதாகஆட்டி னரசையவுஞ்ச லாட்டினரே.

(இ-ள்.) நவரத்தின கஜிதமாகிய ஊஞ்சலில் என்னைவளர்த்தி பெண்க ளெல்லாம் முறையேசூழ்ந்து ஒருவர்மாற்றி ஒருவர்ஆட்ட என்னைப் பெற்றதா யான்வள் இடையேயிருந்து அன்னமூட்டினள எ-று. (௱௨)

தொட்டிலாட்டுஞ்சிறப்பு-தரு.

ஆட்டினர்தொட்டிலிட்டு அன்னையுமென்னை
ஆராரோவென்றுஉஞ்ச லாட்டினர்காணும்.

(இ-ள்.) என்னுடைய தாயானவள் என்னைத்தொட்டிலிட்டுஆராரோ! ஆராரோ! என்கிறசத்தத்துடன் தொட்டிலாட்டினர்கள் எ-று.

ஆட்டினருஞ்சல்தனிலன்னை நானுமசையாமல் நித்திரைகள் செய்தேனென்டே, சூட்டியபொற்பணியொருபுறமிருக்க இருசெங் கையிந்தவளை தான்குலுங்க, கூட்டியசிங்காரதிருஷ்டிக் கதவடைக்க கோட்டைக்காரர்கொல்லர்கண்டுஎனை மறிக்க, பாட்டியவுஞ்சலசைய நாட்டிமடமாதர் பாதசங்கீதமூதபாங்கிகளாட-ஆட்டி.

(இ-ள்.) என்க்குத் தரித்திருக்கும் நகைகளெல்லாமசைய சகலபெண்க ளும்இசைபாட சர்வமங்களத்துடன் தொட்டிலையாட்டினர்கள் எ-று, ()

ஈராறும்வாங்கிசுழிமுனைமேனின்றுபின்புஇருகாலைக்கட்டியொருமேலூமூட்டி;கூரானவாசிமுனைவழிநடக்கநல்லகோகிலம்போலன்னையென்மேல்சிந்துகள்பாட, வீரானமாதர்வந்து வீணைவாசிக்க-அன்னை-மேலணைத்துக்கொஞ்சிமுத்தமேவிதுதிக்கச்,சீரானகொங்கைமடமாதுகள்பாட சித்திராதர்கூடமெல்லாம்பிரகாசிக்கவே-ஆட்டி.

(இ-ள்.) பன்னிரண்டு கலைகளைவாங்கி சுழிமுனையின்மேல்நின்றவன்னுடையதாயானவள் நல்ல இசைகளை வாசிக்க வேறுபெண்க ளெல்லாம் பாட கூடமெல்லாம் பிரகாசிக்க எ-று. (௫௱௪)

கண்டமத்திலொன்றுடனிரண்டுமாறவும்-வளர்-காலோடிநாலுமதின்மேல்துதிக்கவும் கொண்டதிருச்சக்கரத்திலொன்றுசுழிக்க-என்மேல்-கோகிலச்சிந்துகள்பாடிஅன்னை துதிக்க,நின்றுநடனஞ்செய்தல்ரஞ்சிதங்கள்போல்-மாதர்-நேசமுடன்பக்ஷம்வைத்துப்பாசமுடனே, வண்டுமொழிக்கிள்ளையெனுமாதர்கூடியே- மதுரவாக்கியமுடனேபதங்களோக்கியமதாக-ஆட்டி.

(இ-ள்.) கண்டஸ்தானத்தில் பன்னிரண்டு கால்களையுங் மாறவும்-திருச்சக்கரத்திலொன்று சுழிக்க என்மேல்வேண்டிய இந்துகளைப்பாடி அன்னையானவள்துதிக்க மற்றபெண்கள் உயர்ந்தவாக்கியங்களையுடைய பதங்களைப் பாடவும் எ-று. (௫௱௫)

சொற்பனஞ்சுழுத்தியெனுஞ்சாக்கிரத்தினுநல்ல-துரியந்துரியாதீதமுஞ்சேர்ந்துமேலாடக்,கற்பனையால்நித்திரைவந்துற்பத்தியினுல் பின்னுங்-கருத்தினுல்தெரிசனங்கள்கண்டுநிற்கையில், விற்பவமதாகிவளருற்பனத்தைக்காணெந்தன்மெய்தனில்துய்யமதிமையமத்திலும் தற்பொருளின்கற்பனையாலெப்போது மாண்டையெந்தன் சாதனையால்வாசிவந்து சட்டமதாச்சே-ஆட்டி.

(இ-ள்.) சொப்பனம் சுழுத்தி, சாக்கிரம், துரியம்துரியாதீதம்இவைகளை மேலேபாட வழக்கத்தினுல் நித்திரைவந்து கருத்தினுல்தரிசனங்களைகண்டு நிற்கும்போது தற்பொருளின் கிருபையினுலும் பழக்கத்தினுலும் வாசிவந்து சட்டமாச்சு எ-று. (௫௱௬)

குறைவிலாமலமெப்போதுமுறைவின்முறைகள்கூன்கோதாட்டிமுத்தாட்டியன்னைதாலாட்டியே, சராசரவென்றுவுஞ்சல்பதுமைகளாட நல்லசதுர்கூடமெல்லாநிறைந்துதாதிகள்பாட, அருவிநதிக்கரையிலளவாய் சென்றப்பொறிஐந்துபுலனைந்தகளை அழைத்துக்கொ

ண்டுநல்ல,முறிகிக்கனலெழுந்தச்சுழிமுனைக்குள் மெத்தமுழங்கையு டலசைத்துக்குலுங்காமனும்-ஆட்டி.

(இ-ள்.) சுற்றத்தார்களெல்லாங் எப்போதுங்கூடியிருந்து முத்தங்கொடுத்துத்தாலாட்டி நான்குகூடங்களிலும் தாதிகளிருந்துபாட அருவிநதிகள் வரைக்கும் ஐம்பொறி ஐம்புலன்களை யழைத்துக்கொண்டு சுழிமுனைக்குள் முழங்கையும் உடலும் அசைந்துகுலுங்காமல் எ-று. (ஞாஎ)

கள்ளஇந்திரியமதைக் கருத்தில்வைத்துபின்பு கலையிலீரேழும தைச்சுழியிலடக்கி,உள்ளத்திலும்பாழ்க்கதவைப்பூட்டியெனக்கு அன்னை உறக்கம்வரஉஞ்சலினில்சிறக்கவேநின்று,வள்ளலெனுமன்னையுமாமதுரமூட்டிதாலாட்டிவைத்தணைத்துச்சற்றுமவள்புத்திகலையாமல்எள்ளளவெனைக்கைவிடாஏந்தியேயன்னை பின்னுமெடுத்துமடிமீதினில்வைத்துப்பிரியாது-ஆட்டி.

(இ-ள்.) கள்ளத்தன்மையைப்பெற்றுள்ள இந்திரியங்களைமனத்திலடைத்து பன்னிரண்டுகலைகளையுஞ்சுழிமுனையிலடக்கிப்பாழுங்கதவைப்பூட்டிஎனக்குத்துக்கம்வர மதுரவாசகத்தால் தாலாட்டி அன்னையின்புத்தியானது சிறிதுங்கலையாமல் என்னையெடுத்து மடிமேல்உட்காரவைத்து எ-று. (ஞாஅ)

சுத்தவெளிகோட்டையிரண்டுங்கதவைமூடி நல்லசித்திரவீதியலங்கையின்பாரியோடவும்வைத்துமேசோதிவிசுத்திவாசிகலைகள்சுவாசமாறியபோதுகவிகளாறியேநின்றுசித்திரத்தெருவீதியும்வாசியோடவும் நல்லதெசவாய்வுபத்தும் பெருவிசையோடவுமூல, முத்திரைகம்பத்தடியில் நித்திரைசெய்ய சென்மமுன்னும்பின்னு மென்னைத்தள்ளியன்னைதயவாய்-ஆட்டி.

(இ-ள்.) சுத்தவெளியாகிய ஆகாசத்தின்கண் விளங்கும் கோட்டையின் இரண்டுகதவுகளையும்மூடி நன்றாய்ச்சித்திரிக்கப்பட்டிருக்கின்றவீதியில் பாரியோடவும் விசுத்திவாசலில் சுவாசங்கள்மாறியபோது அந்தத்தெருவிலும் வாசியானதுஓடவும் தசவாயுவுக்களும் மூலத்திலோடவும் நித்திரைசெய்ய அன்னையானவள் என்னைமுன்னும் பின்னுந்தள்ளி எ-று. (ஞாகூ)

இருபத்தோராயிரத்தறுநூறுபேரு மிழுத்துஞ்சலெனைததள்ளிக்கருத்துகந்துசுவாசம், வருத்தம்பாராமனுமே வைத்தணைத்துமே மதிமாமலர்கொங்கை வலக்கைவாயிலூட்டினள், சுருக்காய்திருத்தமதாகவும்பானமிர்தமுண்டேன் வாசிசுழியில்கலை கொண்டிழுத்தே தொடர்ந்துமேவிஅந்தத், திருத்தமுடனும்வச்சிர உஞ்சலசைய மாதர்தெளிந்துகவிகள்பாடி யெனைத்தள்ளவே-ஆட்டி.

(இ-ள்.) இருபத்தோராயிரத்து அறநூறுசுவாசங்களையுமிழுத்து ஊஞ்சலானது என்னைத்தள்ளி சுவாசத்தின்வருத்தத்தைப் பாராமலேவைத்தணைத்

துக்கொங்கையை வலதுகரத்தால் பிடித்துஎனக்குஊட்டி வச்சிரதொட்டிலை மாதர்களெல்லாங்கூடி கவிகள்பாடி என்னைத்தள்ள எ-று. (௯௰)

விருத்தம்.

இருந்தவுரந் தன்னையிருநாடிநீட்டி யியல்பானசுழிமுனைதான் கிடத்திவைக்க, கருவானகூர்மனவன்கதவடைக்க சனகசக்கிரதிரிகர்த்தன்சுழித்தியோட, அருவமெனுங்குபேரனுந்தான்சுழியிலே ஆதாரமைம்பூதமூலஞ்சேர, மருநாமலென்னையன்னை தொட்டிலாட்ட வன்னிநதிக்கரைமேலுந் தூங்கினேனே.

(இ-ள்.) எப்பொழுதுமிருந்த புரத்தை இரண்டுநாடிகளையும்நீட்டிச்சுழிமுனையில் கிடைத்திவைக்க அங்கேகூர்மனுனவன்வந்துகதவைமூடவும்குபேரன்சுழிமுனையிலேறவும் ஆருதாரங்களும் பஞ்சபூதங்களும் மூலாதாரத்தில் சேரவும் என்னைதாயானவள் தொட்டிலிலிட்டாட்டவும் நானும் வன்னிநதிக்கரையின்மேல் தூங்கினேன் எ-று. (௯௧)

தொட்டிலிட்டுஅன்னையென்னை ஆட்டிநிற்க சுகந்தெளிந்துசுழுத்திவிட்டெழுந்தசோதி,முட்டிமுட்டி துடித்தகர்மப் பகையைபார்த்துமுறுக்கினஞ்செருக்கையிலே யன்னைதானும், சட்டிமுட்டிமுட்டென்னையெடுத்தணைத்துகனக்கும்பஸ்தனவமிர்தம் வாயிலீந்தாள் எட்டியெட்டித்தவழ்ந்தன்னைமடிமேலேற எளிதாகவிளையாடி யிருந்தேனுண்டே.

(இ-ள்.) என்னுடையதாயானவள் என்னைத் தொட்டிலிலிட்டு ஆட்டிநிற்க சுழுத்தியிலிருந்தெழுந்த சோதியானது முட்டிமுட்டி துடித்த காமப்பகையைப்பார்த்து செருக்கிமுலைப்பாலைக்கொடுத்து வந்தாள் நான் அதையுண்டு எட்டிஎட்டித்தவழ்ந்து தாயின்மடியின்மேலேறி விளையாடினேன்எ-று.

பாராட்டிப்பலவிதமாய் வளர்த்தாளன்னை பதியானபாகமெல்லாமோடியாடி, சிராட்டிவீதியெங்குந்தவழ்ந்துயானும் சிற்றடியால் தத்தடியிட்டிருந்தேன்பின்பு, நீராட்டிமையுமிட்டு திலதந்தீட்டிநேர்மையொருவர்னமதாய் வளர்த்தாளன்னை, ஆராட்டியெனைவளர்த்து புவியிலேதான் அருமையுடன்பிறந்து வயதைந்துமாச்சே.

(இ-ள்.) என்னுடைய அன்னையானவள் என்னைப்பலவிதமாய்ப்பாராட்டிவளர்த்தாள், நானும்தெருவில் தத்தியோடி விளையாடியிருந்தேன். பின்னர் என்னை குளிக்கச்செய்து மையிட்டுப்பொட்டிட்டு மிகவும் ஆசையாய் வளர்த்தாள், அங்ஙனம் வளர்த்துவருகையில் ஐந்துவயது உண்டானது எ-று.

அந்தமுள்ளதிங்களொரு ஐந்துமாச்சு அருமையதாயெனைவளர்த்தஅன்னைதந்தை, சந்தமுள்ளசாஸ்திரங்கள் கல்விநூல்கள் சமத்தானகணக்கெழுத புவியின்மீதில், விந்தையுடன் பிழைக்குமென்று

பள்ளிதன்னில் வேதியர்கன்வசத்திலே வைத்தமேலும், எந்தனுள்ளமகிழ்ந்தவொருதிங்கட்குள்ளே பெண்ணறிவுஞ்சாஸ்திரமு மெழுதினேனே.

(இ-ள்.) இங்ஙனம் ஐந்துவயதுவந்தவுடன் என்னைப்பெற்றோர்கள் நல்லாசிரியனைத் தெரிந்து பள்ளிக்கூடத்தில விட்டார்கள் நானு அங்ஙனம்விட்ட ஒருவருஷத்தற்குள் எண்ணும் சாஸதிரமும் எழுதினேன் எ-று. (௫௧௪)

கற்றறிந்தேன்சாஸ்திரங்கள் கல்விநூல்கள் கருத்தறியவயதெனக்குஈரைந்தாச்சு, சித்தறிந்துவிளையாடகவனமாச்சு செயலறிந்து மாதர்களைச் செயிக்கலாச்சு, வித்தறிந்துவிளையாடி வயதுபோச்சு மேன்மேலும்பொருளாசைமிகவுமாச்சு, பற்றில்லாவுறமுறையுமேனுண்டாச்சு பார்மீதில்பேராசை படைத்திட்டேனே.

(இ-ள்.) சாஸ்திரங்கள், நூல்கள் இவைகளைக்கற்றறிந்து சித்துணர்ந்து விளையாடக்கருத்துண்டாச்ச பெண்களைவெல்லலாச்சு, விளையர்டிவிளையாடி வயதுபோய் பத்துவயதுஉண்டாயிற்று அதின்மேல் பொருளாசைமிகவுமுண்டாய் உலகத்தில் போராசைக்காரனுனேன் எ-று. (௫௧௫)

கருத்ததனில்முன்னிருந்த அறிவுப்போச்சு கனத்தபொருளாசையெனக்கதிகமாச்சு, விரித்தபுவிபெண்டிர்மக்கள்மயக்கமாச்சுவேகமுடன்பொருளாசைமேன்மேலாச்சு, வருத்தமுடன்பலசூதும்பொய்கள்பேசி வாய்மைதெரியாமீல் மிகவாழ்ந்தேன்பானும், உருத்தமுடன்தரித்தபடியுலகுக்குள்ளே உகந்தவெகுபாக்கியங்கொண்டிருந்தேனுண்டே.

(இ-ள்.) என்னுடைய எண்ணத்தில் முன்னிருந்த அறிவுபோய்ப் பொருளாசையதிகப்பட்டு பெண்பிள்ளைகளின்மயக்கம்மேன்மேல்பெருக, பலசூதும் பொய்களும்பேசி, உண்மைதெரியாமல் நான்மிகவும் வாழ்ந்தேன் பின்னர் வெகுபாக்கியவானுவேன் எ-று. (௫௧௬)

விதமானபுவிதனிலேயான்பிறந்து வெகுதனமுமாடுமக்கள்பெண்டீர்சுற்றம், திதமாகவாழ்ந்து இனியிருந்தநாளில் நிஷ்டைசிவபூசையினுநிபுணனுனேன், சதமானமோக்ஷமுனக்களிப்பேனென்றுசமத்தானகாரியத்தின்குருக்கள்வந்து, பதமானஅருள்பெற்று வாழ்வீரென்றுபதியில்வந்து திக்ஷைதந்துபகர்ந்திட்டாரே.

(இ-ள்.) உலகத்தில்பிறந்து இப்படிவாழும்நாளில் நிஷ்டையிலும் பூசையிலும் நிபுணனுனேன், அப்போது காரியகுருவானவர்வந்து உனக்குமோட்சங்கொடுப்பேனென்று சொல்லி தீட்சைசெய்தார் எ-று. (௫௧௭)

கொச்சகம்,

ஜெனனமுத்திசித்திபெறுந் தெய்வசித்திமோக்ஷவரை
இனமறிந்துவுலகுதனி லீடேறிவாழ்ந்தவற்கு

கனகரத்னமேலதிக காரியமாஞ்சற்குருவர்
தினமறிந்துதீட்சைவைத்து இயம்பினவசறெப்திலேலே.

(இ-ள்.) ஜெனனத்தில் அடையவேண்டிய மோட்சத்தையடைந்து உலகத்தில் ஈடேறுவதற்கு குருவின்தீட்சைவழியேதினமும் நடந்துகொண்டேன்

அஷ்டஅயிஸ்பரியமதும் யானளித்துவாணபுவியில்
கஷ்டமணுகாமலுமே காரியகுருக்கள்வந்து
இஷ்டமறைவேதசிவ இன்பமருள்பூசைவிதி
சிஷ்டையெனக்களித்து தீக்ஷைவைத்துஓதினரே.

(இ-ள்.) காரியகுருவானவர் விரைந்துவந்து உனக்கு அஷ்ட ஐஸ்வரியங்களுமுண்டாகக் கடவதென்றுசொல்லி திட்சைசெய்தார் எ-று. (௱௧௯)

கலித்துறை.

கைப்பொருள்வாங்கி யுபதேசஞ்சொல்லி கருதியேதான்
மெய்ப்பொருளாவி மேன்மேலெனக்கெய்து விளக்கமறி
மைப்பொழிதேவ மந்திரக்கியான வாறுதன்னை
கைப்படிதீக்ஷை தவமிதுவென்று சாற்றினரே.

(இ-ள்.) என்னுடைய கைப்பொருளைப்பெற்று உபதேசித்து உடல்பொருள், ஆவி, இந்தமூன்றையுந் தம்முடையதாகக்கொண்டு தேவமந்திரஞானத்தை தீட்சைசெய்தார் எ-று. (௱௨0)

கனமானபூசை பலிதூபதீப காரணமாய்
இனமாகச்சொல்லி யெடுத்துரைத்தாரிந்தப் பூமிதனில்
தனகனமேவி சிவபூசைஓம தற்பணமே
உனதனுஷ்டான உபதேசவாக்கிய மோதினரே.

(இ-ள்.) கனத்தபூசை, பலி தூபம், தீபம்இவைகள்காரணமாகபூமியின்கண் சிவபூசை, ஓமம், தர்ப்பனம், அநுஷ்டானம் முதலியவைகளை உபதேசித்தார் எ-று. (௱௨௧)

வெண்பா.

அவ்வும்உவ்வென்று ஐயுங்கிலிச்சவ்வும்
சிவ்வுமவ்வென்று செப்பினார்-யவ்வெனவும்
நகரமகர நாடியருளோமெனவும்
பகரமெனுந்தீக்ஷைபிது பார்.

(இ-ள்.) அவ் உவ், ஐயும், கிலி, நவ், மவ்யும், சவ்வும், சிவ்வும், மவ், யவ், ஓர், என்றுசொல்லி இதுவேதிட்சையென்றுஞ் சொன்னார்கள் எ-று. ()

எட்டிரண்டும்பத்து வினியதொருதீக்ஷை
அஷ்டமாசித்திவிளையாடு-மிஷ்டமுடன்

ஐயஞ்சுமாற அவனிமுதல்வான
மெய்யிதுபார்ஜெகவசிய மேல்.

(இ-ள்.) அகார உகாரங்களையும், தசதீட்சையை தீட்சாமார்க்கமாக உபதேசித்து அஷ்டமாசித்துக்களையும் இதனால் ஆ-க்கூடுமென்று சொன்னார், ஆகையால் அங்ஙனஞ்செய்தால் ஜெகவசியமுண்டாகும் எ-று. (ருஉ௩)

சிவபூசைசெய்தவிவரம்-தரு,

பூசைகள்செய்தேன்காண்-சிவக்கியான
பூசைகள்செய்தேன்காண்.

(இ-ள்.) நான் சிவஞானங்கொடுக்கத்தக்க சிவபூசை செய்தேன் எ-று.

வாசிக்குதிரைமேலேறிக்கேசரத்தின்வழியோடே சென்றுச்சுழியறியாமலும்வேசிக்குளாசைவிரகத்துடனேயான்வெறும்பூசைமனியாட்டிவீணுக்கேயான், ஆசித்துசற்குருதெய்வமிதுவென்று அர்ச்சித்துஆத்துமந்தன்னையறியாமல், நேசித்துப்பூசை நிஷ்டையறியாமலும்நின்றேநிமித்தமாய் கண்டுருசெய்தேயான்-பூசை.

(இ-ள்.) மூச்சென்கிற குதிரையின்மேலேறி,கேசரமார்க்கமாகச்சென்றுசுழிமுனையையறியாமல் வேசியர்விரகத்துட்சிக்கி வெறும்பூசைமனியையாட்டிவீணுக்கு குருவும், தெய்வமும் இதுவேயென்று அர்ச்சனைசெய்து நிஷ்டையையுணராமல் குருட்டுப்பூசைசெய்தேன் எ-று. (ருஉச)

கோலமறியாமல்காலையில்வில்வக்கொழுந்தைமுறித்தினி கூடைகள்போலவும்,சாலவுந்தேவாரமோதித்துதித்துடன் சங்கையறியாமல்பங்கம்பட்டேயினி, காலைதனிலெழுந்தாலையஞ்சுற்றிக்கருத்தினில் வாசியைக்கண்டுதுதியாமல், சீலமலரையுயிரென்றறியாமல் சென்றுபறித்துயான்கொண்டுவந்தர்ச்சனை-பூசை.

(இ-ள்.) பூசையின்கோலத்தை நன்றாயுணராமல் அதிகாலையில் வில்வக்கொழுந்தைமுறித்து கூடைகள்போல்தேவாரபாராயணஞ்செய்து உணராமல் இனிகாலையிலெழுந்தால்வாசியைகொண்டுதுதியாமல்வீணாக தர்ச்சனைசெய்து

வானத்திலெழுந்தவாலாம்பிகையை மதியாலறிந்துகெதியடையாமலும்,எனந்தனில்முளைத்தெழுந்தக் கொழுந்தையிறுக்கினானினி முறுக்கிக்கிள்ளியே, ஞானப்பிரகாசமெய்ஞ்ஞான விந்தாகையால் நாடிக்கருவூரில்நாதத்துடன்கூடி, மீனமேஷமறியாமல் குருவந்து வீணதாம்பூசைவிருதாவிற்செய்யவும்-பூசை.

(இ-ள்.) ஆஞ்ஞையின்கண்விளங்கும் வாலாம்பிகையை அறிவினாலுணர்ந்து மோட்சமடையாமலும் மெய்ஞ்ஞானவிந்தையைநாடிக்கருப்பாசயத்தின்கண் நாதமாகிய சுரோணிதத்துடன்கூடி மீனமென்றும், மேஷமென்றும் அறியாமல் குருவானவர்வந்து வீணாகப்பூசைசெய்யவும் எ-று. (ருஉ௫)

ஆத்துமலிங்கத்தமுரிபைக்கொண்டு அறிவினலர்ச்சனையான்று தியாமலும், பார்த்திபலிங்கம்பிடித்தருமண்தனைப்பாலித்துப்பூசித்துக் கங்கையைத்தூற்றினன், பூத்தமலர்க்கொண்டறுத்து ஆவிடைமேல்பொழிந்து அர்ச்சனைவழிந்துபாய்ந்தமே, வேற்றுமையென்றறியாமலுங்காரிய வீணர்சொற்படியேயானும்பூசித்தேனே.

(இ-ள்.) ஆச்துமமாகியலிங்சத்தை அமுரிகொண்டு அறிவினலர்ச்சனைசெய்து. துதியும் பார்த்திபலிங்கத்தைப்பிடித்து பாவித்துப்பூசைசெய்து கங்கையைத்தூற்றினன், பூத்தபுஷ்பத்தைக்கொண்டறுத்து நந்தியின்மேல்போட்டு அர்ச்சனைசெய்து வேற்றுமையென்றுணராமல் காரியவீணர் சொல்லின்பிரகாரம் நான்பூசைசெய்தேன் எ-று. (ருஉஎ)

தில்லைக்குளத்தின் கரைநந்தவனத்தில் முல்லையிதழ்கொண்டு அர்ச்சனைசெய்யாமல்,கல்லைத்தெய்வமென்றுசொல்லறியாமலும்வில்வமலரை வெடுக்கென்றுபோட்டுயான், அல்லல்லோ இதுயானுமறியாமல்அம்பாபூசையடுத்துங்கிடையாமல்,வெல்லுநீரிறைத்துப்புவிக்குள்ளாக வெகுவுயிர்கொன்றுவதைத்துப்பெலிசெய்து.

(இ-ள்.) தில்லைக்குளத்தின்கரையிலிருக்கின்ற நந்தவனத்திலிருந்துமுல்லைமலரைகொண்டுஅர்ச்சனைசெய்யாமல்கல்லைதெய்வமென்று சொல்லுகின்றசொல்லையறியாமலும்வில்வமலரைசீக்கிரத்திலிட்டுவெகுஉயிர்களைபலிசெய்து

தெண்டிரைக்குள்ளேசெழித்தமலர்க்குள்ளேஜீவனிருப்பதுபாவமென்றுஞ்சற்றே, கண்டறியாமல்கருத்தால்பறித்துக் கடைத்தேறபூசைநடத்தினேனிப்படி, அண்டர்கள்போற்றுமுடலுக்குள்ளாத்தமம்அங்கிருப்ப தென்றறியாமல்யானுமே, வண்டக்குருக்கள்மொழிதவறாமலு மனத்தினலேவலுவாயுருசெய்து-பூசை

(இ-ள்.) தெளிந்தகடலாற்சூழப்பட்ட உலகத்திலுள்ள செழுமலர்க்குள்ஜீவனுயிருப்பது பாவமென்றுஉணராமல் எண்ணத்தால்பதித்துக் கடைத்தேறுதற்குப் பூசைநடத்தினேன் இப்படிதேவர்களால் துதிக்கப்படுகின்றதேகத்திற்குள் ஆத்துமா இருப்பதென்றுணராமலும், ஆசாரியன்சொல்லைத் தவறாமலும், மனத்தால் வலிவாகச்சபித்து எ-று. (ருஉக)

காரணசற்குருபாதமேநம்பியே பூரணத்தைப்பார்த்துபூசைகள் செய்தேன்காண், தாரணியென்றறியாமலுநேமகந்தான்செய்து ஆத்துமலிங்கமறியாதே,வாரணிமாமலர்வாலாம்பிகைபதம் வாழுங்கருவூரில் வாழ்ந்திடும்போதிலே, பாரனைபாகியவாசியை வாவென்றுபாலித்துஅன்னையின்பாதம்பணிந்தேனே-பூசை.

(இ-ள்,) காரணஞானகுருவின் திருவடிகளைநம்பி பரிபூரணவஸ்துவைக்கண்டு பூசைசெய்தேன் ஆனல்தாரணையென்று ஒன்றுஇருக்கிறதென்றுணராமல்நேமகஞ்செய்தும்,ஆன்மலிங்கத்தையுணராமல்வாலாம்பிகைவாழுங்கருவூ

ரில்வாழும்போது வாசியைவாவென்றுவரவழைத்து என்னுடையதாயின் திருவடிகளை வணங்கினேன் எ-று. (௫௬௦)

விந்துநாதத்தொனியந்தம்பொருந்தியசுந்தர ஞானச்சுகாதீதம் பெற்றுமேஇந்திரியசுகஇன்பச்சுழிமுனைசந்தனகுங்குமகந்தபரிமள தத்துவக்கியானந்தவமறியாமலும் உத்தமஞான உபதேசங்காண்கிலார், வித்துவித்து நாதசத்தறியாமலும் பெற்றபேரிப்படி சித்தர் சொல்வாக்கியம்-பூசை.

(இ-ள்.) விந்துநாதங்களின் தொனியானதுவிளங்குஞ் சுந்தரஞானசுகாதீதம்பெற்ற இன்பத்தைவிளைவிக்குஞ்சுழிமுனையில்சர்வபரிமளங்களையுடைய தவத்தையறியாமலும் உபதேசஞானத்தைக் காணாதவர்கள்பெற்றபேர் இப்படியேயாகும் அதுவும்சித்தர்கள்சொல்லும் வாக்கியமாகும் எ-று. (௫௬௧)

மூலச்சுழிமுனைவாலைகுண்டலியே ஞாலத்திலேறிமெய்ஞ்ஞானமுங்காண்கிலார், பாலத்திலுமயிர்ப்பாலமறியாமல்காலத்திலுஞ்சற்பசாதனைசெய்யாமல்,ஆதாரமாறுமேலாதாரங்காண்கிலார் வேதாகமத்தில்விவேகமறியாமல்,நாதாக்கள்சொற்படிஞாயமறிந்துமேபேதாபேதமறிந்தாதியைக்காண்கிலர்-பூசை.

(இ-ள்.) மூலச்சுழிமுனையிலுள்ள வாலையாகியகுண்டலி வீற்றிருக்கின்ற உலகத்தில்போய் உண்மைஞானத்தைக் காண்கிலார், அன்றிபாலத்திலும் மயிர்ப்பாலத்தைய’றியாமல், தக்கவயதில்கற்பசாதனை செய்யாமல் கீழாதாரம் மேலாதாரம் இவைகளைக்காணாமலும் வேதாகமங்களின்விவேகத்தை யறியாமலும் நாதாக்கள்சொற்படி ஞாயத்தையறிந்து பேதாபேதங்களைக்காணமாட்டார்கள் எ-று. (௫௬௨)

மூத்திதருஞ்சுழிசித்திரக்கூடத்தினில் அத்திமுகனருளர்ச்சனை பார்த்திடார், சித்தியருள்சிவசின்மயரூபமேநித்தம்பூசியாமல்நின்று மயங்கிறான், பஞ்சபூதமறியாமலு மஞ்சுறுவஞ்சகக்சாரியபஞ்சகுருக்களால்,எஞ்செயலொன்றுமினியறியாமலு நெஞ்சகமேநிலையாமலும் யாதொரு-பூசை.

(இ-ள்) மோட்சத்தைக்கொடுக்கின்றசித்திரக்கூடத்தில்விநாயகருடைய அர்ச்சனைகளைப் பார்த்திடார், சின்மயசொருபமே நித்தமும்பூசியாமல்மயங்கி பஞ்சபூதத்தை யறியாமலும் மனம்நிலையாமலும் தான் எ-று. (௫௬௩)

மதிமலராயிரத்தெட்டிதழ்சுற்றிலுங்கெதிபெறுஞ் சிவக்கியானமறியாமல், விதிமலர்சுழிமேவுஞ்சிங்காதனம் பதியறிந்துபஞ்சாக்கினைகாண்கிலார், பத்துடன்தீக்ஷைப்பாலித்துச்செய்யாமலுஞ்சத்திசிவசுரூபத்தையறியாமல்,இத்தனைகாலமிருந்தவஞ்ஞானமேயெத்தனை பூசையியல்புமறிகிலேன்-பூசை.

(இ-ள்.) சந்திரனுடைய மலர்களிலுள்ளஆயிரத்தெட்டிதழ்களிலும்மோட்சத்தைக்கொடுக்கின்ற சிவஞானத்தையுணராமல் சுழிமுனையி லிருக்கின்ற சிங்காதனப்பதியையறிந்தும் பஞ்சாக்கினியைக்காணுதவர் தசதீட்சையைச் செய்தும் சிவசத்திகளின் ரூபங்களையுணராமல் இத்தனைகாலம் அஞ்ஞானத்திலிருந்து பூசையையறியாமல் எ-று. (௧௩௪)

நாளுநாளுமிகநாடி யென்னுளுமே நாதன்றிருவடிநானறியாமலும், கோளுங்காரியகுருவினலிப்படி கூறறியாமலுங் கூட்டத்துடனேயான், நூறுநூறுநூறுகோடிசதுர்யுகம்நாடிநாடிஞானம் யானினிகாண்கிலா, தூறுந்தூறுஞ்சித்தர்தூறினலிப்படி வாடிவாடிவாசிமாருட்டமாகியே-பூசை.

(இ-ள்.) தினமும்நாடி ஈசனுடைய திருவடிகளை நான்உணராமலும்காரியகுருவினல் இந்தக்கூற்றை யறியாமலும் அநேசயுகங்கள் ஞானத்தை விரும்பிக்காணுமல் சித்தர்கள் பழித்ததனுல் இப்படிவாடி மாருட்டத்தையடைந்து

உள்ளத்திலுள்ளமொருமைப்படாமலும்ஊதுந்தாரை சுழியோசைகாணுமலும், வள்ளலெனுஞ்சிவமாதுவம்பிகையின் மலர்பொற்பாதமகிழ்ந்திருக்காமலும், அண்டபிண்டம்சண்டகடாகமுமண்டலமூன்றுமதிலர்ச்சனை, கண்டதாரையறிந்துதிடும்வாசியைநின்றறியாமல் நிராதரங்காண்கிலா-பூசை.

(இ-ள்.) மனத்தில்மனம் ஒருமைப்படாமலும் ஊதுகின்றதாரையில் சுழிமுனையின் ஓசைகாணுமலும் அம்பிகைப்பெண்ணின் திருவடிகளைக்கண்டுமகிழாமலும் அண்டபிண்டங்களும், அண்டகடாகமும் மண்டலங்கள் மூன்றும் ஆகிய இவைகளைக்கண்டணிந்து கண்டத்தினின்றுந்தாரையையறிந்துஊதுக்காணமாட்டாமல் எ-று. (௫௩௪)

காயசித்தியறியாத கருத்தினைமாயசித்திமகிழ்ந்துடன்மாய்கையில்,பேய்கள்கூத்துகளாடிபேரின்பங்காண்வாய்மதத்தால்ஜெகவாழ்க்கையில்சிக்கியான், காரமுஞ்சாரமுங்கண்டறியாமலும் ஊருகள்தோறுமுழன்று அலண்டுமே, தேறுமெய்ஞ்ஞானசிவபதம் போற்றிடார் வேறுடன்காரியவித்தையில்சிக்கியே-பூசை.

(இ-ள்.) காயசித்தியாலுணரக்கூடாதகருத்துள்ளபொருளைபேய்களெல்லாம் பேரின்பங்களை கூத்தாடுகின்றபொருளைகாணுமல்நான் உலகவாழ்க்கையில்சிக்கி, காரசாரசகளைக் கண்டறியாமலும் ஊர்களிளெல்லாந் திரிந்து அலண்டு உண்மைஞானத்தையும், சிவபதத்தையும் போற்றுமல் வேறுகாரியங்களில் அகப்பட்டு எ-று. (௧௩௭)

உப்புடன்புளியுவர்ப்பறியாமலும்சொற்படிசொற்குருவாஞ்சையாலிப்படி, கைப்பொருள்தோற்றுக் கருத்தறியாமலு முற்பகபூசாபலனருள்முத்தியில், காரிக்குதிரைக் கனவேகப்பாச்சலின் ஏறியங்

குபடியிறுக்கிமூலத்தினில், சாரிவாராமல்தனிப்படவேஜெகாசாரியர் கையிலகப்பட்டுயானுமே-பூசை.

(இ-ள்.) உப்பு, புளிப்பு, உவர்ப்பு, இவைகளை யுணராமலும், குருவின் சொல்லின் வைத்தவிருப்பத்தினால் கைப்பொருளைத்தோற்ற நல்லெண்ணத் தையறியாமல் பூசாபலத்தால் முத்தியில் வேகமாயோடும் குதிரைப்பாய்ச்ச லின்எதிர் மூலாதாரத்தில் இடசாரிவலசாரியாக வராமல் பெண்களிடத்திலக ப்பட்டு எ-று. (௫௰௮)

காட்டாதுவாசிவணக்கில்லையானுமேகட்டினாலெட்டுடன்மட்டு ப்படுமது,எட்டாதஎட்டுமேகஷ்டமிராதிடில்அஷ்டதிசைசுத்தியண் டம்பாய்ந்திடவும்,ஒன்பதுவாசல்பஞ்சபூதமாளிகைஓராறுசத்துஈரா றுமதில்களும்,பொன்புசக்கிரக்கோட்டைநவரத்னபீடம் பூரணச்சந் திரபுஷ்கரணிசுற்றி-பூசை.

(இ-ள்.) வாசியைக்கட்டாமலும் அப்படி கட்டினால் எட்டுடனேயடங்கா மலும் அதுவும் கஷ்டமிராமல் எட்டுத்திசைகளையுஞ்சுற்றி அண்டத்திற் பாய வும் நவவாசல்களிலும்,பஞ்சபூதங்களிலும் நியமித்தமாளிகையில் ஆறுசுற்று களும், பன்னிரண்டு மதில்களும், சக்கராகாரமாகிய கோட்டைகளும்நவரத் தினகஜிதமாகிய பீடங்களும் பூரணசந்திரபுஷ்கரணிகளும் ஆகிய இவைக ளைச்சுற்றி எ-று. (௫௰௯)

அச்சுநகர்சுத்திஆறது ஏழுமேகச்சிப்பதிகமலாலயஞ் சூழ்நகர் தச்சனுளிபடாதண்டபிண்டங்களும்மச்சுமாளிகையில்வச்சபொருள் கண்டு,பூட்டுந்திறவுகோல்மூட்டுஞ்சுழிமுனை பூரணச்சந்திரபொற்கம லாலையம், வீட்டிலிருந்துவிளங்குந்திரவிய மெய்ஞ்ஞானபொக்கிஷம் விந்துநாதத்தொனி-பூசை.

(இ-ள்.) உயிரென்னும் பட்டணத்தைச்சுற்றி அங்குள்ள ஆலயஞ்சூழ்ந்த தச்சனுடைய உளிபடாத அண்டபிண்டங்களும் மச்சும் மாளிகைகளிலும் வைத்தபொருள்களைக்கண்டு திறவுகோலைமூட்டுஞ் சுழிமுனையில் பூரணசந் திர கமலாலயவீட்டிலிருந்து உண்மைஞான பொக்கிஷமாகிய விந்துநாதங்க ளின் ஓசையை, எ-று. (௬௰)

சுழிமுனையேவிழிமாய்கைப்பெருங்கடல் சூக்ஷசடாதாரமூலத் தின்குண்டலி, அழியாமதிமலரர்ச்சனைசெய்துவிந்தமிர்தபானமாரா தனைகண்டுயான், ஆழிக்கடல்கடந்தமிர்தபானமேவழியறிந்து மது வெனுமாறினால், ஊழியுமேவினையோடிப்பறந்திடும் வழியறிந்துவி னாட்டம்வினாடிகாண்-பூசை.

(இ-ள்.) சுழிமுனையின்கண் மாய்கையாகிய பெரியகடலைத்தாண்டி ஆறு தாரங்களுக்கு முதன்மையாகிய மூலாதாரத்தில் விளங்குகின்ற குண்டலிசத் தியை அர்ச்சனைசெய்து அமிர்தத்தை ஆராதனைப்பொருளாகவைத்து என்னு டையதீவினைகளெல்லாம் ஓடிப்பறக்கும்படி பூசைசெய்தேன் எ-று. (௬௰௧)

விருத்தம்

மருவுயர்ந்தகமலமலராயிரத்தெட்டிதழின்வளர்மதியைவேண்டி
திருவுயர்ந்தவம்பிகைபெண்சீர்பாதபங்கயத்தில்தெரிசித்தேதான்
கருவுயர்ந்தவளநாடுதில்லைநதிக்கரையோரங்கருதிவாழ்ந்தேன்
அருவுருவாய்மெய்ஞ்ஞானமருளியகத்தியரெனக்கருள்தந்தாரே.

(இ-ள்.) விசேஷித்தவாசனையையுடைய ஆயிரத்தெட்டிதழ்களையுடைய தாமரைமலரில் வாழ்கின்ற மதியமிர்தத்தை வேண்டி அம்பிகையினுடைய திருவடித்தாமரைகளை நமஸ்காரஞ்செய்து தில்லையிலுள்ள நதியிற்கரையோரத்தில் நான்வாழ்ந்திருந்தேன், அப்பொழுது அகஸ்தியரானவர் எனக்குமெய்ஞ்ஞான உபதேசஞ்செய்தார் எ-று. (௫௪௨)

இடைகலைபின்சுழியின்முனையிலகுமதிரவியொளி தனியல்பாய்நின்ற, கடல்பெருகுமதரவின்பவமுர்தந்திபுகழ் கருணைகருவூர்நாட்டில், விடமருந்திசிவரூபஞானவாரி யருள்விளங்குஞ்சோதி,திடமருவுங்கமலமலரம்பிகையைப் போற்றியினிதெரிசித்தேனே.

(இ-ள்.) இடைகலை, சுழிமுனைவிளக்குகின்ற சந்திரசூரியர்கள் இவற்றின்ஒளியினியல்பாயிருந்த கருணையையுடைய கருவூரில்முன்னர்ஆலகாலவிஷத்தையுண்ட ஞானக்கடலாகிய சிவபெருமானுடையதேஜஸை விளக்குகின்ற அம்பிகையைத் துதிசெய்து தரிசனஞ்செய்தேன் எ-று. (௫௪௩)

கொச்சகம்.

ஆசைப்பயனுரைத்து வசடுதனைத்தீர்ப்பமென்று
பாசமிகப்பூண்டிந்தப் பார்மீதில்பொய்யுரைத்து
காசுபணம்பறிக்குங் கசடர்கள்தன்சொற்கேட்டு
நேசமுடன்பூசைசெய்த நிச்சயம்விளம்புவேனே.

(இ-ள்.) ஆசையின்பயனையுடைய அசடுகளையெல்லாந் தீர்ப்போமென்று பாசம்மிகவுங்கொண்டு அதினால்உலகத்தில் அதிகபொய்பேசி காசு, பணங்களைப் பறிக்கும் சண்டாளர்களுடைய சொல்லைக்கேட்டுநான்பூசைசெய்தவுண்மையைச் சொல்லுவேன் எ-று. (௫௪௪)

தீராப்பெருங்கவடு செய்வினையினாலுரைத்த
நேராப்பொய்யாசைசொல்லி நேர்மையருளாலுரைத்து
ஏராப்பணம்பறிக்கு மிவ்வுலகிற்குருதர்களால்
பேராலிலகுபிதிர்ப் பூசையில்மயங்கினனே.

(இ-ள்.) கெடாதகவடானது செய்வினையினால் வந்ததென் றுணர்ந்தும், பொய்பேசி ஏராளமானபணத்தைப் பறிக்கின்ற இவ்வுலககுருதர்களால் பிதிர்பூசையில் மயங்கினேன் எ-று. (௫௪௫)

### வெண்பா.

மனத்திலுந்தான்வளர்க்க மலர்க்காவியிரண்டுளதா
இனத்திலிதையறிந்த இயம்பினேன்-கனத்திலேன்
காரியத்தின்குருவே காரணமாய்நின்றதல்லால்
வீரியமேயென்றேயுரைப்பார் வீண்.

(இ-ள்.) மனத்தில்உண்டான மலர்க்காவனம் இரண்டுண்டு ஆனால்நான் இதை இனத்திலுணர்ந்துசொன்னேன், ஆகையால்காரியகுருவேகாரணகுருவாகவந்தவரென்று சிலர்சொல்லுவார்கள் அதுவீண்வார்த்தையாகும் எ-று.

நீட்டியிருகரத்தால் நெடியகிளைடியவளைத்து
கூட்டிமலரெல்லாங் கொய்தேன்காண்-சூட்டியதோர்
கும்பிட்டாலேதாச்சு குவலயத்திலொன்றுமில்லை
வெம்பிட்டால்பாவம்வரும் வீண்.

(இ-ள்.) இரண்டுகைகளையும்நீட்டி பெரியகிளையைவளைத்து அதிலுள்ள புஷ்பங்களையெல்லாங் கொய்தேன் கும்பிட்டால் என்னவுண்டு? ஒன்றுமில்லை வெம்பினால் பாவம்வரும் எ-று. (உசஎ)

### கலித்துறை.

உதிக்கின்றவேளையி லெழுந்தோடியானவ னுட்புகுந்து
கதிக்கின்றகந்த மலரெடுத்தேன்சன பாவமென்று
விதிக்கின்றநெஞ்சினில் சற்றறியாமல் விரைந்துகொய்தேன்
துதிக்கின்றமோக்ஷம் வருமென்றுபூசை துணிந்துசெய்தேன்.

(இ-ள்.) காலையில் நந்தவனத்துட்சென்று வாசனைபொருந்தியமலர்களைக்கொய்தேன், ஆனால்அதுபாவமென்றறிந்தேனில்லை ஆயினும்அங்ஙனம்கொய்தமலர்களால் பூசைசெய்தேன் எ-று. (உசஅ)

தீர்க்கரம்போலவுஞ் சீர்மேவுஞ்சித்திசிறந்தபின்பு
பார்க்கின்றபேருக்கலங்காரமாய் சனபத்தியுடன்
சேர்க்கையில்தூளிதமுடல் நதியாடியதிருடரைப்போல்
ஏர்க்கையில்மந்திர மோதலெனையன்றியெதிரில்லையே.

(இ-ள்.) உலகத்தில் பார்க்கின்றவர்களுக்கு வெகுஅலங்காரமாய் பக்தியுடனே விபூதிஉத்தூளனஞ்செய்து மந்திரங்களை ஜெபித்துவந்து அதினால் எனக்கு ஒருவரும் எதிரில்லை எ-று. (உசகூ)

### விருத்தம்.

பத்தியுடனொருமலரைக் கரத்திலேந்திபரிவாகக்கடுகில்பதினாறிலொன்றை, வெற்றியுடனர்ச்சனைகள்செய்வோமென்றால்விளங்குமிந்தநினைப்புவருமுலகுக்கெல்லாஞ், சத்தியொருகொடிக்குள்ளே யகம்

புகுந்துசொல்லுகிறேன் பொல்லாதமனதைநாடி,சத்தியுடன்சிவனி ருந்தநிலையைக்காணார்சரியென்பார்மனக்குரங்குச்சாரிடாதே.

(இ-ள்.) உள்ளன்புடன் ஒருமலரைக்கையில் தாங்கிஅர்ச்சனைசெய்வோ மென்றால் மனக்குரங்கானது நிலையில்நிற்காமல் ஓடுகின்றது ஆனால் உலகத் தார்கள் பூசைசெய்ய வேண்டுமென்பார்கள் எ-று. (௫௦)

நீரில்முழுகும்போதுபொருள்மேலாசை நிலையானகரையில்வந் தால்நிலமேலாசை, கூர்ந்துநெற்றிதனிலுயவெண்ணீறணியும்போது குறிப்பானமக்கள்பெண்டிர் சுற்றத்தாசை, ஊர்தனிலுமந்திரங்க ளோதும்போதுஉற்றபசியாகுமனமதின்மேலாசை,பார்தனிலேதே வாரமோதும்போது பலவிதமாய்மனமோடிப்பார்த்துதாண்டே.

(இ-ள்.) ஸ்நானஞ்செய்யும்போது பொருள்மேலும்கரையில்வந்தால்நில த்தின்மேலும், விபூதிதரிக்கும்போது பெண்டுபிள்ளைகள்மேலும் மந்திரதியா னஞ்செய்யும்போது பசியின்மேலும், தேவாரமோதும்போது பலவிதத்திலும் மனஞ்சென்றது எ-று. (௫௧)

சித்தமுடன்செபதபங்கள்செய்தோமென்பார் செப்புகிறேனவர் களுடசெய்தியெல்லாங்,கர்த்தனுடபாதமலர் நினைக்கமாட்டார்காடு சுற்றியோடியபின்கலங்குவார்கள், நித்தியமுடன்நிஷ்டையிலும் நிற் கமாட்டார் நிலத்திலுள்ளவாசையெல்லாம்நினைத்துகொள்வார், சத் தமுடன்தேவாரங்கூகைபோலுஞ் சதாநித்தியமோதிகுடி கெடுப்பா ராண்டே.

(இ-ள்.) நல்லசுத்தசித்தத்துடன் பூசைசெய்தோமென்று சொல்லுவார் கள் ஆனால்அவர்சொல்வது மாத்திரமேயல்லாமல் பலபலவிதமாகக்கலங்கிதே வாரமோதும்போது கூகைபோல்கதறி குடிகெடுப்பார்கள் எ-று. (௫௨)

மறவாமலனுதினமும்பூசையென்பார் மாந்தர்களுங்காணிதந்து கோடிவாங்க, இறவாமல்புவிதனிலேயிருப்போமென்றுஇடும்பரெல் லாம்தலைகீழாயிறந்துபோனார்,உறவானகாயமிதுவொடுங்கும்போது உலுத்தர்கள் தன்பின்னர்கைகாசும்போகா, அறிவாலேயறியாமல் புவியிலுள்ளோர் அலகையெனத்திரிந்துலகமலைந் தாராண்டே.

(இ-ள்.) நாங்கள் தினமும் மறவாமல் பூசைசெய்தோமென்று சொல்லி பொருள்மேலாசை கொள்வார்கள் ஆகையால் அவர்களிறந்துபட்டால்அதின் மேலேயே அவரவர்கள் உயிர்விடுவதால் பின்பிசாசாக அலைவார்கள் எ-று.

மண்மலத்தில்யானும்வந்துபிறந்தபின்பு மருவுபெண்டிர்மக்கள் கற்றமாடுகன்றுங், தன்கரத்தால்வெகுகாசுசெம்பொன் காணிதா னிதனில் தனம்பெறவுஞ்சார்ந்தேனென்று, என்றுமிந்தவாழ்க்கை யெனக்கேற்குமென்று இருந்ததினால்திருவள்ளுவ னிசைந்துபார்த்

தேன் ஒன்றுமில்லைபிரபஞ்சம் வீணதாச்சு உகந்தெந்தன்சாதிகுல முறைசெய்வேனே.

(இ-ள்.) இவ்வுலகத்தில் நான்பிறந்தபின்னர் பெண்கள் பிள்ளைகள் சுற்றத்தார் செல்வம் இவைகளைமிகவும் அநுபவித்து இப்படியேயிருக்குமென்று பார்த்தால் ஒன்றுமில்லையாய் உலகம்வீணாச்சு ஆகையால் திருவள்ளுவனாகிய என்னுடைய சாதிகுலத்தைச் சொல்லுவேன் எ-று. (௫௫௪)

ஜாதிவேற்றுமை-தரு.

சாதிகுலமானவகைசபையிலாண்டே-நின்று
சாற்றுகிறேன்சாதகமா யானறிந்தாண்டே.

(இ-ள்.) இந்தச்சபையில் நானறிந்தவண்ணம் சாதி குலம் ஆனவிவரத்தைச் சொல்லுகிறேன் எ-று.

ஆதிகுருவானசிவநாதவிந்துமே-சுளிபி-லணுகிமுளைபெறுகியாகமம்வந்து, வீதியெனுந்திருவாலங்காட்டகத்திலே-சேர்ந்து-மிகுத்தசுக்கிலமென்றுங்குலங்காணுமாண்டே, நீதியெனுமூலம்விட்டுநாதவிந்துமே-பறையில் - நின்றிலங்குஞ்சுக்கிலத்தா லெடுத்தவுடல்தான், சோதிபிதாஞானகுலஞ்-சாதியார்-செந்துக்களாவது மொருசாதியிதாண்டே-சாதி.

(இ-ள்.) ஆதிகுருவாய்விளங்குநாதவிந்துக்களிரண்டுஞ் சுழியில்சேர்ந்து ஆகத்தில்வந்து திருவாலங்காடென்னும் சருவூர்சேர்ந்து வந்ததினால் எங்கள் குலம்சுக்கிலகுலமாகும் எங்கள்சாதிஉலகத்திலுள்ளபிராணிகளெல்லாம் எ-று.

மூலமதிலானசுழிசதுஷ்கோணத்தி-லிலகு - முதலெழுத்தாகுந்தும்பிமுகவனென்றுங், கோலமுள்ளக்குஞ்சரத்திலின் செம்புகிறமாவெள்ளை-கூறுகுமெங்கள்-குலம்வம்மிசங்காணும், ஓராறுதித்தெழுந்துமோங்குபுவியில்-தாங்கி-உதித்துவுருவெடுத்து உற்பனமதாய்,பாலமதாகுமேலிங்கத்திருவாலங்காடு-முன்பு-பாப்பிரமமெந்தனுக்குச்சேர்ந்தகுவமாண்டே-சாதி.

(இ-ள்.) மூலத்திலிருக்கின்ற நாற்கோணத்தில் வீற்றிருக்கும் விநாயகனுடைய வெள்ளைக்குலமும் எங்கள்தாய் பன்னிரண்டுசரங்களும்தோன்றிவெளிவரும்லிங்கஸ்தானமாகிய திருவாலங்காட்டில் நடிக்கும் பரப்பிரமமும்என்னைச்சேர்ந்தகுலமேயாகும் எ-று. (௫௫௬)

திருவுருமேலானநதிஅறிவுடைய-மாயன்செங் கமலமேவுந்திருசிறந்திருக்கும்நேயன், கருவூருநாட்டிலிலகு மதியின்பிறைகோணங்கல்வியும்வாழ்வுந்தரும் திதிசெய்யுமுபாயன், மருவுறைஅக்கினிசூழ்ந்தமுக்கோணத்தின்வீடு- அந்த-வட்டத்திலமர்கின்றருத்திரகுலங்காணும், பறையிருக்கும்நாதவிந்து பாப்பிரமவீடு-இந்தப்பாரிலென்னையறியாமல் பறையனென்றாராண்டே-சாதி.

(இ-ள்.) அதற்கப்பால் சென்றால் கருவுருகாட்டில் மதிபிறைவீட்டில் விளங்கும்விஷ்ணுவும், அதற்கப்பால் அக்கினிசூழ்ந்த முக்கோணவீட்டில் வாழும்ருத்திரனும், என்னுடையகுலமேயாதும், ஆகையால் அதையறியாமல் பறையனென்று சொன்னார்கள் எ-று. (௫௭)

கண்டத்தினுள்ளேயமைத்தறுகோணங்காட்டி-சோதி-கருணைமயேஸ்பரத்தின்வம்மிசந்தானண்டே, நின்றதமையன் பொய்யல்ல என்குலங்காண்-சொல்வேன்-நீள்புவியில்ஈசனென்று பேர்குறித்தாராண்டே, அண்டபிண்டங்களுப்ரெண்டுமொன்றதா-மிரண்டு -மாயிரத்தெட்டி தருனில்யானுதித்தேன்காணும், என்றுமெவ்வுயிர்க்குமென்குமெறும்புகடை-யானை-யாருக்கு மென்தந்தைசதாசிவன்காணண்டே-சாதி.

(இ-ள்.) கண்டத்தினுள் அறுகோணத்தில் விளங்கும் மகேஸ்வரனும் என்குலமாகும், முறையிலேயோ எனக்குத் தமையனாகவேண்டும்தப்புறம்சதாசிவனே எனக்குத்தகப்பன் இப்படியெல்லாமிருக்க என்னைச்சிலர் பறையனென்று சொன்னார்கள் எ-று. (௫௮)

பொங்குங்கடல் சூழுலகம்பதினாலுங்கூடி-புவனமிருநூற்றிருபத்துநாலுமேவும், எங்குநிறைந்தேயெழுந்துவளர்கின்றசோதி - எங்கள்குலஞ் செங்கதிரில்பங்கமில்லைகாணும், கங்குல்பகலுங்கதிருமதிசூழும்-வானங்-காரணமாகஇரண்டுகூடிவருமாயில், திங்களும்ஞாயிறுமெங்கள்குல-மென்மேலாகுஞ்-சேர்ந்ததிந்தப்பறையினால்நேர்ந்ததிதுஆண்டே-சாதி,

(இ-ள்.) பதினான்குலோகங்களும்இருநூற்றிருபத்துநான்குபுவனங்களும் ஆகிய எல்லாவிடங்களிலும் நிறைந்துநின்ற தேஜோரூபமுள்ள எங்கள்குலமாவது யாதொருபங்கமுமில்லாதாகும், சந்திரனும்சூரியனும் கூடிவருவதாகையால் இந்தஇரண்டின்குலமும் எங்களுடையதேயாகும் எ-று. (௫௯)

கற்றிடுங்கல்விகருச் சித்தமகிழ்ந்திடும்-புத்தி- சருத்திலிருந்துமதியுகந்திடுங்காணுஞ், சத்தப்பிறக்கையில்கூடசரஸ்பதியு-மெங்கள்சாதியிலுதித்தயெந்தன் தாய் தந்தைகாணண்டே, வித்தையும்புத்திவிளங்குஞ்-சதுஷ்கோணபீட-மெய்ஞ்ஞானகுலத்தில்பிர்மவேதகுலங்காணுஞ், சுத்தகுலபிர்மசுக-சூழுங்கரணதி-சோதிமயமாதிகுலஞ்சொர்னமயமாண்டே-சாதி.

(இ-ள்.) கற்கின்றகல்விக்கு மனமகிழ்கின்ற சாஸ்வதியும் நாற்கோணவீட்டில்விளங்கும் பிரமதேவனும் எங்கள்குலமேயாகும், ஆகையால் எங்கள்குலமானது சொர்னமய மானதாதும் எ-று. (௬௰)

துய்யமதிசூழும்பரை-அம்பரவீதி-சூக்ஷ்சடாதார சோதிமூலத்தில்காணும், வையமுழுதுப்படைத்தவாலாம்பிகை-யாண்டே-வான்

புவியுமெங்கள்குலவம்மிசங்காணும், செய்யதிருகருவூரிலிலகுமவன்-காட்டில்-செங்கநதிபொங்குகரையெங்கும்பிரகாசிக்கும், மையசுழி மூலம்வளர்வாலாம்பிகையெங்கள்-வர்க்கத்தில்வாழும்பரைதான்வம் மிசங்காணுண்டே-சாதி.

(இ-ள்.) பரிசுத்தமாகிய சந்திரன் சூழ்கின்ற ஆகாசவீதியில்உலகமுழுவதையுஞ் சிருஷ்டித்த அம்பிகையும் தேவலோகத்தாரும் கருவூரில்செங்கநதிக்கரையோரத்தில் வாழும்பரையும் எங்கள்குலமேயாகும் எ-று. (௫௬௧)

விருத்தம்.

சுக்கிலசுரோணிதமீது இலகுபரிபூரணத்தின் செயல்தன்னாலே எக்குலமும்நாதவிந்தாலெய் தும்வகைவளப்பமெல்லாமிடரில்லாமல் பக்குவமாயகத்தியர்தன் னுபதேசமருள பரிபாஷையாய்ந்து,திக்குமெட்டுப் பதினாறுகோணமதி லண்டபிண்டந்திசையுமொன்றே.

(இ-ள்.) அஷ்டதிக்குகளிலும் பதினாறுகோணங்களிலும், சுக்கிலசுரோணிதங்களினாலேயே குலம் உண்டாவதாகலான் அகஸ்தியருடையபரிபாஷையையாராய்ந்து எங்கள்குலம் அந்தக்குலமேயாகும் எ-று. (௫௬௨)

என்றானமனிதர்பல செனனமொன்று செந்துவொன்று வுலகமொன்று, நின்றிலங்கும்வானமொன்று புவியுமொன்று அண்டரண்டம்கிலேதானென்று, இன்றுமன்றுங்கதிர்மதியு மின்னளினி காற்றுமழையெல்லாமொன்று, தென்றலகெலாம்படைத்தநாதவிந்தாலெடுத்தவுயிர்செனனமொன்றே.

(இ-ள்.) மனிதர், உலகம், வானம், புவி, அண்டரண்டநிலே, சூரியன்சந்திரன், இடி, காற்று, மழை, இவைகளெல்லாவற்றையுமுள்ள நாதவிந்துக்களாலெடுத்த உயிர்சென்மமாகும் எ-று. (௫௬௩)

சாதிவகை-தரு.

சாதியைச்சொல்லுகிறேன்-என்னாண்டையே
சாதியைச்சொல்லுகிறேன்.

(இ-ள்.) என்னுடைய ஆண்டையே! நான் சாதியைச் சொல்லுகிறேன்.

சாதியினில்பரப்பிரமகுலத்தினில் தந்தையெனுஞ்சதுர்வேதசிகாமணி, சோதிதனில்ஞானசூக்ஷசடாதார துய்யமதிசந்திரஜயனெங்கள்குலம், பூதாதியைந்தும்புனலில்மருவிய வேதாகமத்தில் விளங்குஞ்சகாதீத, மாதாரமூல மேலாதாரமீராறடங்கிய வீட்டினிலாண்டையென்சாதிகாண்-சாதி.

(இ-ள்.) சாதியில்பரப்பிரமகுலத்தில் தந்தையென்னும் நான்குவேதசிகாமணிதேஜோமயத்தில் ஞானசூட்சசடாதார சந்திரஜயன் எங்கள்குலமாம்,ஐம்

பூதங்களும் சலத்தில்சேர்ந்த வேதாகமங்களில் விளங்குகின்ற சுகாதீதத்தை யுடைய மூலத்தில் மேலாதாரமடங்கிய பன்னிரண்டுகலை வீட்டினில் விளங் குஞ் சாதியாகும் எ-று. (௨௬௪)

ஓதிவைத்தபிர்த் ஓங்காரதீட்சைதான் ஒகோகோவானம்புவிப டைத்தாகையால், ஆதியுமந்தமெனக்குளடங்கிய ஆக்கினைசத்தமதீ தமென்குலமே, பிர்மக்ஷத்திரியர்வைசியர்சூத்திரர் பேதமறையிது நாலுநாலும்விளங்கிடும், கர்மிகள்கூடிகோத்திரமுண்டாக்கினர் கலி யுகமிது வரலாறுகாணாண்டே-சாதி.

(இ-ள்.) பிரமதேவனுடைய பிரணவதீட்சையே உலகத்தைப் படைத்த தாகையால் பிரம, க்ஷத்திரிய, வைசியசூத்திரர்களாகிய நான்கு வருணத்தா ரையும் நான்குவேதங்களும் கூறுகிற்கும், ஆயினும் இக்கலியுகத்தில் கருமி கள்கூடியே கோத்திரமுண்டாக்கினர்கள் எ-று. (௨௬௫)

அந்தரவட்டத்தின்வானம்புவிக்குள் அலங்காரமாகப்பதினாலுஞ் சேர்ந்திடுஞ், சந்திரன்போலுந்துலங்கியபூரண சாதிகுலந்தன்னிலா திகுலங்காணும், இந்திரனக்கினியேமனிருதிவாய் வேகவருணன்கு பேரனீசானியன், சந்திரப்பிரகாசத்தின்மூலத்திலுள்ளே தழைத்திடு மென்குலசாதியிதாண்டையே-சாதி.

(இ-ள்) அட்சரவட்டத்துள் சந்திரன்போல்விளங்குகின்றகுலத்தில், இந் திரன், அக்கினி, எமன். நிருதி, வாயு, வருணன், குபேரன், ஈசானன், ஆகிய இவர்களின் சாதியாகும் எ-று. (௨௬௬)

முப்பத்துமுக்கோடி தேவர்முனிவர் முதலானஇந்திர நாரதர் கின்னரர், உற்பத்தியாகவுநாதவிந்தாலேயுதித்தவாறெல்லாமாதித்த ன்குலங்காணும், அம்புவியாலுமனேகவுயிர்களும்அண்டபிண்டமதி லாச்சுதனேகமுந், தப்பில்லையேபரையம்பிகைதன்குலஞ்சாம்பசதா சிவன்தந்தைகாணாண்டையே-சாதி.

(இ-ள்.) முப்பத்து முக்கோடி தேவர்களும், முனிவர்களும், முதலியஇந் திரர், நாரதர், கின்னரர், நாதவிந்துக்களா லுதித்தவர்கள் இவர்களெல்லாம் சூரியகுலமாகும், ஆனால்உலகத்தில் நானும் இன்னும் அநேகஉயிர்களும்பரை யின்குலமாகும், எங்களுக்குத்தகப்பன் சதாசிவனாவான் எ-று. (௨௬௭)

சிற்பரையானசிவசம்புவன்குலஞ் செந்துக்களெல்லா மென்சா தியின்வம்மிசந், தற்பரைசோதிப்பிரகாசவர்க்கத்தினில் சாம்புவனெ ன்குலசாதிகாணாண்டையே, சின்மயமென்மயம்பொன்மபன்தன்மய ஞ்ஜீவசெந்தாதிஜெகமயமானதும், நன்மயனாதச்சிரோமய மென்கு லம் நாதனென்வம்மிசநற்குலமாண்டையே-சாதி.

(இ-ள்.) ஞானசத்தியாகிய சாம்பவன்குலம்என்சாதியாகும்,சின்மயமும் பொன்மயமும் என்மயமாகும், ஜீவசெந்தாதி என்னுடைய வமிசமேயாகும்.

பறைபதினெட்டும்படைத்ததென்வம்மிசம்பாருலகாதீதம்பார்க்கப்பலவிதஞ், சீரருள்ஞானச்செழுஞ்சுடராதீத திருவுருமூலச் சிவசாம்புவன்குலம், ஆதியுமந்தமநேகமுண்டான அண்டகடாகமாதீத செகங்களுஞ், சோதியருள் சுழிமூலத்திலேசுக ஞானகுலத்திருவள்ளுவனுண்டையே-சாதி.

(இ-ள்.) பறைச்சாதிமுதல் பதினெண்சாதிகளையும் படைத்ததென்னுடையவமிசமேயாகும், உலகத்தில்பார்த்தால்பலவிதமாகவிருக்கும், ஆதியந்தங்களாயிருக்கின்றசெகங்களும்சுழிமூலங்களையுமுணர்ந்ததிருவள்ளுவன்றானே

சிஷ்டியிலுந்திருவள்ளுவனுயன் தெளிந்தவேதாந்தச்சிவஞானசாதிகாண், அஷ்டதிக்கெங்கும்புகழ்சிவசாம்புவன் ஆண்டையேயுந்தனருள்பரசொர்க்கமே, சோதிச்சுழிமுனை தில்லைப்பதிநகர் ஆதிக்கருவூர்வளர்திருநாட்டினில், ஓதியவள்ளுவசாம்புவனுலகாதீதமெங்குமுதித்தவருண்டையே-சாதி.

(இ-ள்.) திருவள்ளுவன்தெளிந்த வேதாந்தத்தில்விளங்குஞ் சிவஞானசாதியும், அஷ்டதிசைகளிலும் புகழப்படும் சாம்புவனும், சொர்க்கவாசியும், சுழிமுனைப்பதியிலும் ஆதிக்கருவூரிலும் வளரும் திருநாட்டில் முன்சொன்ன திருவள்ளுவனால் உதித்ததாகும் எ-று. (௫௭௰)

எங்கும்புகழ்திருசாம்பசதாசிவன்எங்கள்குலவம்மிசாதி வர்க்கத்தினில், இங்கதினுலகாதீதமீரேழுங்கெங்கையுமக்கினிவாய்வுசத்தங்களும், பிர்மாவிஷ்ணுருத்திரன்மூவரென்வம்மிசம்பேரும் பிரகாதிதநாடுலகம்புகழ்-சாதி.

(இ-ள்.) எவ்விடத்திலும் புகழப்படுகின்றசதாசிவன் எங்கள் வமிசத்திலுள்ளகங்கையையும், அக்கினியையும் கொண்டிருப்பதால் அவனும், பிரமவிஷ்ணுருத்திரர்களும் என்னுடைய வமிசமேயாகும், இதுசாம்பவமூர்த்தியால் ஏற்பட்டதாம் எ-று. (௫௭௧)

மண்ணும்விண்ணும்வன்னி வாய்வுசத்தங்களும் பண்ணுமறைவேதநாலுமுதித்தவ, ரண்ணுமின்னு மாறுசாஸ்திரசூக்ஷமும் எண்ணுமினியென்குலத்திலுய்த்தவாறு, வேதியரிட்டகட்டளைப் பிரகாரமும் மேதினியோர்கள்விளங்குமனுநீதி, ஆதியென்றேபலசாதி குலவர்க்கஞ் சேதியாணபெண்ணிருசாதிகளாவதுஞ்-சாதி.

(இ-ள்.) பிருதிவி, ஆகாயம், அக்கினி, வாயு, நான்குவேதங்கள், ஆறுசாஸ்திரங்களின்சூட்சம், இவைகளெல்லாம் பிராமணர்களிட்ட கட்டளைப்படி பலசாதிவர்க்கங்களை நியமித்தார்கள் எ-று. (௫௭௨)

இப்படியேகுறித் தெங்கும்பிரகாசமாய் சற்பனையாய்மறைவேதங்களோதினர், எப்போதமேயுல கெங்கும்வழக்கமாய் சொற்படி

சொல்லிடுஞ் சூதகளாண்டையே பிர்மக்ஷத்திரியர் வயிசியசூத்திரர் கர்மசூஸ்திரங்கள் கட்டினார் நால்விதி, தர்மவிசேஷ சுயஜெகசால மே வர்மமறிந்தருள் வள்ளுவனாதினான்-சாதி.

(இ-ள்.) இந்தப்பிரகாரமே எவவிடத்துக்குறித்து வேதியர்கள்சொன்னார்கள், இதுசொன்னபடியே சொன்னதாசம், பிரம, க்ஷத்திரிய, வைசியசூத்திரர்கள் கர்மசூத்திரங்கட்டினார்கள், அதையறிந்து திருவள்ளுவனாகியான்உலகத்திற் சொன்னேன் எ-று. (௫௭௩)

இந்தவிதமென்றறியாருலகில்லெந்தன்குலத்தையிகழ்ச்சிகள்பேசினார், உந்தன்செயல்திவசாம்புவமூலமே அந்தவிதியொடன்றறியாரென்னாண்டையே, மாலப்பறையனென்றேசோன்சோழனுமாடுகள் செத்துமேவாறறிந்தானதே, யோலமென்றேபறையுண்ணும்படிசெய்தார் ஒகோபாவிகாளுற்பத்திகாண்கிலார்-சாதி.

(இ-ள்.) உலகத்தில் இந்தவிதமென்று எங்கள்குலத்தை யறியமாட்டார்கள், ஆனால் கட்சிகள்மட்டும் பேசினார்கள், ஏனென்றால் இதுசாம்பவமூர்த்தியின் கட்டளையென்றறியாமையால், இங்ஙனமிருந்தும் என்னைமாடுதின்னும் பறையதினன்றே இகழ்ந்தார்கள் எ-று. (௫௭௪)

ராஜாங்கஞ்செய்த நடத்தையிதின்குறி வேதாகமத்தில்விதித்தவாறல்லகாண், ஆசாரமல்லபீசாபலவோகமே கோசபீசத்தில்குலங்கள்செனித்ததே, மனிதனைப்பிறந்தவனிபீதினில் மானுகாளுங்கள் வளப்பமறிவதும், யோனிநாலல்லவோயேழுவகைப்படி யோகதிசைஞானமெட்டில்விளங்குமே-சாதி.

(இ-ள்.) ராஜாங்கத்தாசெய்த அடத்தைவேதாமெங்களில் யாவரும்எற்படுத்தவில்லை, இதுஆசாரமல்ல, ஆனால்சோகமென்னும் விதையிலிருந்துகுலங்கள்பிறந்ததாம். ஆகவே எல்லாக்குலங்களும்விளைவது யோனியாலல்லவோ ஆகையால் ஞானவெட்டியாகியநான் அதைவிளக்குகின்றேன் எ-று. (௫௭௫)

விருத்தம்.

அருபுரத்தில் மனோன்மணியென்தாயேயாகு மடுத்தவட்டஞ்சதாசிவன்தான்தந்தையாகுந், திரிபுரத்தில்மயேஸ்பரனுந் தந்தையாகுஞ்செவந்தகனல்ருத்திரனுமுன்னோனாகும், சிறுபிறைக்குளிருந்தவரென்தமையனாகும் ஜெகம்படைத்தபிர்மாவுஞ்சகோதரன்தான், பருமிகுத்த ஐவருக்குள்பின்னதாக வந்துதித்தசாம்புவனும்யான்காணுண்டே.

(இ-ள்.) அருபுரத்திலிருக்கின்ற மனோன்மணி என்தாயும் அதற்கடுத்தவட்டத்தில் சதாசிவனும் திரிபுரத்தில்மகேஸ்வரனும், கனல்ருத்திரனும்என்

தந்தையர்களாம், சிறபிறைக்குள்ளிருந்த விஷ்ணுஎன் சகோதரனும், இவர்களுக்கெல்லாம் பின்னேபிறந்த சாம்பவனே நானும் எ-று. (௫௭௬)

ஓங்காரசத்தங்குண்டலியேயாகும் உன்னறியுங் குண்டலியென் பாட்டனாகும், ரீங்காரமானவுடல்மச்சையேழும் நிலவரங்கனெங்களுறைமுறைதானாகும், ஸ்ரீங்காரமானதெல்லா முதிரமாகுஞ்செனித்தவுடலென்தாயின் கூறேயாகும், நீங்காதநாதவிந்துதித்த நேர்மைநிள்புவியிற்பிறந்தாரென்குலத் தாராண்டே.

(இ-ள்.) பிரணவநாதமானது குண்டலியும் அவர்என்பாட்டனும் ரீங்காரமான உடலிலிருக்கின்ற எழுமச்சைகளும் சாதியாகும், ஸ்ரீங்காரம்உதிரமும் ஆதும் ஆயின் இத்தேகம்சத்திகூறுகும், இங்ஙனமிருப்பதால் உலகத்தில்பிறந்தவர்களெல்லாம் என்னுடைய சாதியாராகும் எ-று. (௫௭௭)

இந்தவிதமென்குலத்தா ரென்றுமேவி யென்னுள்ளேபார்க்கஇந்தப்படியேயாச்சு, சந்தையந்தானறியாமல்நீங்கள் நீரில்தவளையைப்போல்வேதமெல்லாஞ் சாற்றுகின்றீர், வந்தவழியறியார்க்குமந்திரமேதுவகையறியாமாந்தருக்குச்சாஸ்திரமேது, விந்துதித்துப்புவிதனிலேபிறந்தபேர்க்கு வேறில்லைசாதிகுலஞ் சரிதானுண்டே.

(இ-ள்.) இப்படியே என்சாதியாரென்றுவந்து இருக்கின்றவர்கள் இவர்களே நீங்களிதையறியாமல் நீரிலுள்ளதவளையைப்போல்உளறுகிறீர்கள்வந்தவழியையறியாதவருக்கு மந்திரமும், வகையறியாதவர்க்குசாஸ்திரமும்,என்ன பிரயோசனம், விந்துவினால் உலகத்திற்பிறந்து வந்தபேர்களுக்கும் சாதியும் குலமும் சரியேயாகும் எ-று. (௫௭௮)

சத்தேழுபுவிதனிலேபிறந்துயானுஞ் ஜாதிகுலமானவகை சார்வாய்ச்சொன்னேன், சித்தமுள்ளநாதாக்களறிந்துகொள்வார்தீங்கானமாந்தரிதையறியமாட்டார்,கற்றவரைப்பழிப்பவர்களுலகமாண்பர்கசுமாலமடையர்சொல்லுங்கவியைப்பாடி, வித்தையிலுமலங்காரக்கவிதானென்பார் வீணர்கள்தான்வீண்புளுகுவிளம்புவாரே.

(இ-ள்.) எழுலகத்திலும் மாறிமாறிப்பிறந்து சாதிகுலமான விதத்தைச் சொன்னேன் இதைப் பெரியோர்கள் தெரிந்து கொள்வார்களேயன்றிநீயோரறியமாட்டார்கள், உலகவாசிகள் கற்றவர்களை யவமதித்துப் பொய்யர்சொல்லையே நம்புவார்கள் எ-று. (௫௭௯)

வியாசர்சொல்லும்பாரதத்தில் வெகுபொய்வீணும்மேதினியோர்மாய்கையினில்விரும்பச்சொன்னார், ஆய்ந்துகவிபாடி விட்டான்கம்பன்வம்பன் அதிதராமாயணத்தி லனேகம்பொய்தான்,சாயாமலதிவீரபாண்டியன்சொல்லுந் தமையந்திசரித்திர நைடதமுஞ்சொன்னார்,சுயமாகா திதுகவிகள்சுத்தப்பொய்தான் தொடுகவிமாணிக்கவாசகர்சொன்னாரே.

(இ-ள்.) வியாசர்பாடியபாரதம் வெகுவீண்பொய்யாம், அங்ஙனம் உலகத்தார்கள் மயங்கச்சொன்னார், கம்பன்பாடிய இராமாயணத்திலும் அதிக பொய்யே, அதிவீரராமபாண்டியன்பாடிய நைடதமும் சுத்தபொய்தான் மாணிக்கவாசகரோ தொடுகவிபாடினார் எ-று. (௩௮௦)

தேவாரமானதிருவாசகத்தைச் செகத்தோர்கள்படித்து மெத்தத்தியங்கினர்கள், பேயானஆண்டிகட்குப்பிழைப்புக்காகப் பேசிவைத்தார்மற்றொன்றும்பிசகோஇல்லை, சாவாதார்மாய்கைதனி லடிபட்டோர்க்குத்தளர்ந்தபின்புஞானவிதிசாராதென்னில், துவாதசாந்தவெளியறிந்தோரல்ல சுக்கிலமுமழிந்தபின்புதுலைகொர்தானே.

(இ-ள்.) தேவாரதிருவாசகங்களை உலகத்தார்படித்து மிகவும்மயங்கினர்கள், ஆனால்அது ஆண்டிகள்பிழைக்கப்பாடி வைத்ததேயன்றிவேறல்ல ஆகையால் இதையெல்லாம் நம்பாமல் சுக்கிலத்தைச் செலவிடாமல் துவாதசாந்த வெளியைப் பாருங்கள் எ-று. (௩௮௧)

கொச்சகம்.

நீடுலகுமாய்கைதனில் நின்றழிந்தால்நாதவிந்து
காடுசுடுகாடொழிய காயசித்தியாகுமோசொல்
பேடியர்கள்மோடிதனில் பேய்மனமேபின்றுடரத்
தேடுவதேதன்ஞானவிதி தேகமழிந்தாலழிந்தே.

(இ-ள்.) பெரிய உலகத்தார் மாய்கையிற் சிக்கியழிந்தால் நாதவிந்துக்களால் சுடுகாடுசேர்வதே யல்லாமல் காயசித்தியுண்டாகுமோ? உண்டாகாது, பேடிகளுக்குத் தங்கள்மனமானது பொறிகளிற் செல்வதால் அவர்களுக்கு ஞானம் என்னபலனையுண்டாக்கும் எ-று. (௩௮௨)

சிழுதிரமச்சையுவர் தேங்குமடமாதருவி
வாழுங்கசுமாலந்த மாரிபொழிந்தேயொழுகு
மூழ்குஞ்சலமூத்திரப்பை மூலப்பாழுத்தையினில்
ஊழியெமதற்குழிக்கோ வுயிர்ப்பெலிக்குளாமனமே.

(இ-ள்.) மனமே! நாளும் நீரைசலமொழுகுகின்ற பெண்களுடையயோனிக்கு ஆசைப்பட்டு உயிர்ப்பலிக்குள்ளானேம் எ-று. (௩௮௩)

கலித்துறை.

ஊத்தைக்குழிதனி னாதவிந்தூறி யுடலெடுத்தால்
நாற்றமெண்சாணுட லவ்வழிக்கேமன நாடிடுங்காண்
சோற்றுத்துருத்தி யெரிகும்பிமாய்கை துலைத்துவிடா
காற்றும்வசப்படா ஞானசுகாதீதங் காண்கிலரே.

(இ-ள்.) ஊத்தைக்குழிக்குள் நாதவிந்துக்கள் ஊறிசரீரமெடுத்தால் பின்னர் அத்தவழிக்கே மனம்நாடும், ஆகையால் சோற்றுத்துருத்திக்கே யுழலும் மனிதர்கள் ஞானசுகத்தைக் காணமாட்டார் எ-று. (௩௮௪)

ஜெகத்தாசையோனி மறவாதசேனி செழுங்கனல்பார்
அகத்தாமலெப்படி யக்கினிசூழ்ந்திடு மவ்வனலில்
உகத்தாசைவைத்து வுழன்றிடுவோர்க்கென்ன வுற்பத்திகாண்
அகத்திற்பிறந்து கடலைக்கடந்தவர்க் கமைப்பதுவே.

(இ-ள்.) உலகவாசையிற்பட்டு யோனியைமறவாத மாந்தர்கள் அக்கினி சூழ்ந்திடும் அனலில் உழலுவார்கள். பெரியோர்களோவென்றால் உள்ளேபிறந்துங் கடலைக்கடக்கவே நினைப்பார்கள் எ-று. (௫௮௫)

பஞ்சவிந்திரியம் பாயுமாறறதின் பாய்ச்சலிலே
தஞ்சவரமிருந் தாடுதுகாண்விட நாகசர்ப்பம்
மிஞ்சுமிம்மூலச் சுழிநாதவிந்து வெளிவருதால்
கஞ்சமலர்த்திரு கருணைமெய்ஞ்ஞான கற்பகமே.

(இ-ள்.) பஞ்சேந்திரியங்களும் பாயும்பாய்ச்சலில் நாகசர்ப்ப மொன்று ஆடுகிறது அதும்வமூலச்சுழியில் நாதவிந்துக்களின் கருணையாகும் எ-று. ()

அரவங்கடிக்க விடமேறிடுமுன் னதற்குமொரு
திரமாய்மணிமந்திர சிவஞானபூபதி செய்முறைகாண்
இரவாதிருக்க ரசசூதகற்ப மினிதறிந்து
பிறவாதிருக்கச் சுழிமுனைகாணப் பிறப்பில்லையே.

(இ-ள்). பாம்புகடித்தால் விஷமேறும், ஆகையால் அதற்குமுன்னே ஒரு மணிமந்திரஞ்செய்து கொள்ளவேண்டியதுகிரமமாம், அன்றிசாவாதிருக்கரச கற்பத்தையறிந்தும் பிறவாதிருக்கசுழிமுனையைத்தெரிசித்துமிருக்கவேண்டும்

ஞானப்பிரகாசத்தின் னாட்டத்திலே மணநாடிமுன்
வானத்திலேசுத்த மேகங்கள்கூடிப்பின் வாரிதனில்
பானத்தையுண்டு பசியாறும்பாவனை பண்மையைப்போல்
சோனைப்பொழிந்த வுலகாதியெங்குந் துதிப்பதுவே.

(இ-ள்.) ஞானதேஜஸின்நாட்டத்தில்மனமானது நாடுதற்குமுன் ஆகாயத்தில் சுத்தமேகங்கள் கூடிப்பிறகு சமுத்திரசலத்தைப் பானஞ்செய்வது போல் ஈஸ்வரதரிசனவிசேடத்தால் சந்திரபானஞ் செய்யவேண்டும் எ-று.

ஒன்றுணர்பூரண ஞானசுகாதித மொன்றறிய
கண்டுணர்வோர்க்கெய்து நாதவிந்துற்பத்தி காயத்திலே
நின்றறிவானந்த பேரின்பசோதி நிராமயத்தை
அன்றுமின்றென்றல்ல பிரபஞ்சமாய்கை யகற்றுவதே.

(இ-ள்.) ஞானபரிபூரணத்தில் நின்று ஞானத்தை ஐயந்திரிவற உணர்வதை பிரபஞ்சமாய்கையே நீக்குவதாகும் எ-று. (௫௮௬)

செந்துகளாவது மிந்திரியத்தினில் சேர்க்கையுங்காண்
டிந்தவிதமென்றறிந்திடிலாரென்ன காரணமோ

ஐந்துருநாதவிந் தாவதுமேசெனித் தம்புவியில்
விந்தையென்சாதி லோகாதிலோகம் வெளிப்படுமே.

(இ-ள்.) செந்துக்களாவது இந்திரியத்தில் சேர்க்கையென்று அறிந்திடாதது என்னகாரணமோ? நாதவிந்துக்களிரண்டும் உலகத்திலுண்டாய் விந்தைவிளைவிப்பது ஒருயோகமேயாகும் எ-று. (௫௯௦)

வெண்பா.

எங்கள்குலவிந்தி லெறும்புகடையானைமுதல்
செங்கமலவபிசத்தில் சேருமே-உங்கள்குலம்
வந்துதித்தவண்மை வரலாறுதிருவள்ளுவனால்
அந்தவிதிகண்டறி யாதே.

(இ-ள்.) எங்களுடைய குலத்திற்கு முதற்காரணமாகிய வீந்தினில்யானை முதல்எறும்புவரைக்குஞ்சேரும் ஆகையால்உங்கள் குலமானது திருவள்ளுவனால் வெளிப்படையாக வந்ததாகும் எ-று. (௫௯௧)

உள்ளம்பெருங்கோயி லுற்றுணர்வதாமாகில்
எள்ளளவின்சொன்னமறப் பொன்னமயம்-உள்ளபடி
ஒன்றென்றுலகு வுன்குலமுமென்குலமுங்
கண்டறிவதென்மொழியில் காண்.

(இ-ள்.) மனமே பெரியகோயிலாக அறிந்தால் எள்ளளவும் மறப்பில்லையாதும் உள்ளபடியே உன்குலமும் என்குலமும் ஒன்றேயென்றறி எ-று.

உலகவுற்பத்தி-தரு.

தனனாந்தனதனனாந்-தனதன-தனனாந்தனதனதனனா.

ஞானசிகாமணியே-தெய்வ-நாயகனால்ஜெகமாதிதமும், வானமும்புவியுமுதல்-மதி-சந்திரனும்ரவிசூரியனுங், கானவொளிவீசும்-கார்-மேகங்களுமிடிமின்னல்களுந், தானைவிளங்குமுயல்-மாரி-தாபரமும்வாய்வுசாகரமுஞ், சேனாபதியிலகும்-சத்த-தீவுதீவாந்தகசெந்துகளுஞ், சோனைபருவிவளர்-சுழல்-சோதிப்பிரகாச விருட்சங்களும், தேனூறல்பாயுமந்த-சல-செம்புநதிமகமேருகளும், பானுகனல்சொரியும்-வன்னி-பாயுஞ்சூதரசக்கேணியுமே-தன

(இ-ள்.) ஞானசிகாமணியாகியே! ஜகமெல்லாமும். வானம் உலகம், சந்திரன். சூரியன், கானல், மேகம், இடி, மின்னல்கள், தாபரம், வாயு, கடல்: சேனாதிபதி, தீவு, தீவாந்தரசெந்துக்கள், அருவி, சோதிவிருட்சங்கள், செம்புநதி மகம்மேரு, வன்னி, சூதரசச்கேணி இவையாவும் எ-று. (௫௯௨)

நவரத்தினம்விளையுங்-திவ்விய-நாகரிகசெந்துநாடுகளும், எவ்வர்ணமாய்விளங்கும்-சந்திர-இந்திரபக்ஷியன்னபக்ஷிகளும் புவனங்களி

ல்மிகுத்த-அண்டபூச்சக்கிரவாளகிரிசூழிடமுங்,கவனுதிராக்ஷதர்கள் பிரவி-கந்தருவதேவகந்தருவர்,பவனமளாயிடுவர்-பகி-ரண்டமளாவி யகவனுதிகள், தவத்தில்மிகுத்ததவம்-ஏழி-சங்காரஞ்சூழ்நடுரோமபுரி, சிவஞானசித்திபெற்ற-குளிகைசித்தர்கள்வாழும்தீபாந்தரமும்,புவனஏமகிரியும்-கெந்தி-மாமலைராக்ஷதரூபகமே-தன.

(இ-ள்.) நவரத்தினம்விளையும் நாகரீகநாடுகளும்,பிராணிகளும் இந்திரான்னப்பட்சிகளும், பூசக்கரவாளகிரி சூழுமிடமும், இராட்சதர்கள்,கந்தருவர் தவசிகள், ரோமபுரிவாசிகள், சிவஞானசித்தியையடைந்த சித்தர்கள்வாழுந்தீவுகளும், ஏமகிரியும், கெந்திமலையில் ராட்சதரும் எ-று. (௱௯௪)

பொதிகைநகரெனுமே-இந்தப்-புவனஞ்சூழ்சாகர மத்திபத்தில் அதிதமென்னலருள-மெத்த-அதிசயரோமபுரிகளில்,நதிரூதக்ஷேணி யொன்று-அது-நற்சதிரம்நூறுகாதவழி,மதிகோடி ரப்பையொளிரவி-மாமதிக்குக்கதிரெட்டியதாய்,விதியாலமைப்பதென்ன -அண்ட- மேருவுஞ்சுற்றிமதிள்சூழ்ந்திடும், பதியாயுதித்திடுங்காண்-பஞ்ச-கர்த்தரிருப்பிடமஞ்சுசபை,கெதிவாள்கயிலாசகிரி-சுற்றிக்- கேணியொன்றுரூதவாலரசங், கொதிதான்கொடுத்திடுமே- சித்திரைக்கோடை தனில் சித்தர்கொண்டுபோவார்-தன.

(இ-ள்.) பொதிகைமலை, இவைகள்சூழ்ந்த கடலின்நடுவில்இருக்கும்ரோமாபுரியில் ரூதக்ஷேணியொன்று நூறுகாதவழிசதுரத்திற்கு மிகுந்தபிரகாசத்தைக் கொடுத்துககொண்டிருக்கும், அதைச்சுற்றிலும் மதில்கள்சூழும், அதுவேபஞ்சமூர்த்திளிருப்பிடமுமாகும், இது சித்திரைக்கோடைக் காலங்களில் கொதியாய்கொதிக்கும், அப்போது சித்தர்கள்வந்து அதையெடுத்துக்கொண்டுபோவார்கள் எ-று. (௱௯௫)

எண்ணுஞ்சிரஞ்சீவிதான்-அந்த-ஈசனருள்காயசித்திபெற்றோர் மண்ணும்விண்ணுள்ளளவுந்-தேகம்-மரணமவர்க்கொரு காலமில்லை உண்ணுமறுசுவையில்-அப்பு-உப்பொன்றுமாகா திருப்பவர்காண், தின்னும்பதார்த்தங்களில்-ஜீவ-செந்துவகைகளுயிர்வகைகள், உண்ணும்படியகற்றி-யோக-சாதனையில் நித்திரையொன்றறியார், அண்ணலருள்பதமே-நித்திய-மர்ச்சித்துமூல அமிர்தமுண்பார், கண்ணை மூடியறியார்-மவுனக்-கண்ணுடிமீதில்சருத்துணர்வார், சென்னட்டமாயிருந்து-தெச-தீக்ஷைபெற்றுக்கவனம்பாய்ந்திடுவார்-தன.

(இ-ள்.) சர்வேஸ்வரனுடைய காயசித்தியைப்பெற்றிவர்கள் என்றுஞ்சிரஞ்சீவிகளாம், ஆகையால் அவர்களுக்கு ஒருகாலமும் மரணமில்லை, அவர்கள் மாமிசத்தைநீக்கி சாகபக்ஷமேசெய்வார்கள். அன்றி எப்பொழுதும் யோசநித்திரையையே செய்வாரேயன்றி சழுத்திநித்திரைசெய்யார் தசதிட்சைபெற்று கவனம்பாய்வார்கள் எ-று. (௱௯௬)

சதாசிவசாம்புவனல்-ஜெகக்-தானே படைத்துயிருண்டாச்சு,
இதானவாறறிந்திடிலோர்புவி-யெழுவகைதோற்றநால்யோனியுமே
தாகமத்தினுற்பத்தியால்-பரை-சோதியொளிவில் சுயம்பதுவாய், வி
தானமாவதெறும்புகடை-யானை-யாவதுவேமுன்பின்னேகமுயிர்,வி
தாவிதங்களானபல-விந்து-நாதமதுவிளைவானதுகாண்- குதாவெனு
ம்புரைசாம்புவனல்-அண்ட-கோளகைவடவாக்கினிமுதலாய்மதாவி
ஞேதபேதமதால்-வரும்-வந்தவழிபறிந்திந்தவிதம், இதார்த்தமாக
இனியுரைக்கும்-எங்கள்-தெய்வம்வேறுஉங்கள்தெய்வம்வேறே-தன

(இ-ள்.) சதாசிவனென்னுஞ் சாம்புவனல்சகம்படைக்கப்பெற்றஉயிருண்டாச்சு, நால்வகையோனி, எழுவகைத்தோற்றம் இவைகளிலுற்பத்தியாய்பலவிதபேதங்களாக விந்துநாதங்களால் விளைந்ததாகும்,ஆகையால்உண்மையாக எங்கள்தெய்வமும் உங்கள்தெய்வமும் வேறுவேறே எ-று. (௬௬௭)

உலகம்பிறந்தவிதம்-பரையுந்திதனில் பிர்மயேந்திரங்காண்,கல
கப்பிரியர்கூடி-புராண-கட்டளைவெவ்வேறுபிரித்துணர்வார்அலகை
யதினளவா-லான-அச்சதுவேயறிந்துச்சிதமாய்,சிலபேர்மதயேதங்
கள்-மனு-செய்கையினல்விதிநூல்களுமேபலபலபேர்கள்கூடிபரிபா
ஷையறிந்துபகர்ந்திடிலோர், நிலவுபொழிமதுரஞ்-செக-நீடுலகாதித
மேதழைக்க,மூலகாதிதம்புகழும்-திரு-வள்ளுவ சாம்பவனுற்பவத்
தை, புலையனென்றேயுரைத்த-மவுனப்பொக்கிஷமே ஞானகக்கிஷங்
காண்-தன.

(இ-ள்.) உலகமுண்டானவிதமானது பரையின்உந்தியில் பிரமயந்திரத்தாலாகும், அதைவிட்டுச் சிலகலகக்காரர்கள் வெவ்வேறாகப் புராணகட்டளை பிரித்துவைத்தார்கள், சிலர்மதபேதங்களைப்பேசியும்,சிலர்பரிபாஷைபேசியும் திருவள்ளுவனுற்பவத்தை பறையனென்று சொல்லுகிறார்கள், ஆயினும்அவர் ஞானகக்கிஷம்போன்றவர் எ-று. (௬௬௮

அம்பிகையின்பொற்கமலம்-பணிந்-தர்ச்சனைசெய்து அடியனு
மே, எம்பிதிரவியத்தை - மூலநாதவிந்தையுண்டு நான்வெளியாம்,
தும்பிமுகனருளில்-துரியந்-துரியாதீதங்கடந்தேதுதித்து, தம்பித்தி
டைகலைபின்-மூலஞ்சாதித்து வாசிகொண்டேயெழுத்து-கும்பிதனிலி
ருந்த-ரத்தினங்-கோடானகோடிதிரவியத்தை,செம்பொனருள்பொ
ருளும்-இனி-சித்திக்கவாசிகொண்டேதிறந்தேன், பம்பகமாயிருந்த
கொல்லர்-பத்துந்தசவாய்வுநித்திரைசெய்து,தெம்பாயிருக்கையிலே
திவ்யசெங்கதி யகழிதாண்டிவிட்டேன்-தன.

(இ-ள்.) அம்பிகையின் திருவடிகளைவணங்கி அர்ச்சனைசெய்து அடியேனும்நம்பி திரவியத்தைச்சேகரித்து விநாயகனுடையகிருபையால்துரியம்துரியாதீதம் இவைகளைக்கடந்து துதிசெய்து வாசிகளைஇழுத்துச்சாதித்து வீட்டி

விருந்த அநேகதிரவியங்களை எல்லாம் எடுத்துகொடுத்து சந்தோஷமா யிருக்கையில் செங்கநதியைத் தாண்டிவிட்டேன் எ-று. (௫௯௯)

மூலாதாரங்கடந்து-முனை-முச்சுடர்வட்டமதில்கடந்து, பாலமதுகடந்துவாசி-பாய்ந்துவிட்டேன்சதுஷ்கோணம்விட்டேன்ஞாலத்திலேயறிதல்-பிர்ம-ஞானசுவாதிஷ்டானங்கடந்து, சீலம்பொழியும்ரத்னக்-திரு-மால்மணிபூரகமீதருகே, சந்திரபுஷ்கரணி - திவ்வியசாவடிசித்திரமண்டபத்தில், இந்திரசுரு -சித்தி-பெற்ற-எமனுட்டுச்சித்தரிருபதுபேர், வந்துமறிந்தார்கள்-போட்டேன்-வாசிக்குதிரைமேலங்குபடி, அந்தரமாயெழும்பி-சவாரி-யனுகதக்கோட்டை முக்கோணவட்டங்-தன.

(இ-ள்.) மூலாதாரம்,முச்சுடர்களின்வட்டம்,பாலம்,சதுர்கோணம்,பிரமஞானத்தைக் கொடுக்கின்ற சுவாதிஷ்டானம், திருமால்வாழும் மணிபூரகம் சந்திரபுஷ்கரணி சாவடிசித்திரமண்டபம்,இவைகளைஎல்லாங்கடந்துபோகும்போது எமனுட்டுச்சித்தர்கள் இருபதுபேர்வந்து தடுத்தார்கள், அப்போதுவாசியாகிய குதிரையின்மேலேறி அந்தரமாய்க்கிளம்பி அனுகதக்கோட்டையாகிய முக்கோணவட்டத்துள் எ-று. (௬௦௦)

ஈராறுசுற்றமதில்-வன்னி-யெய்துஞ்சலநதியான்கடந்து, நேராய்வரக்குதிரை-அது-நிர்ப்பந்தமாய்ப்பாய்ந்துஓடையிலே,ஆராய்ந்துமுப்பதுபேர்-கயிலை-அதிதசித்தர்வந்தடக்கையில்தான், மாராடியேமறித்தார்-வாசி-வல்லமையாலேவிசுத்திவந்தேன்,அறுகோணஞ்சுற்றிமதில்-அது-ஆறுபத்துநெருப்பாறருகே, துருக்கல்மண்டபமும்-கனக-சொர்னத்தினுல்ரத்தினச்சாவடியில்,திரிமூர்த்திமூவருமே-தேவ-சித்தர்களும்வீற்றிருக்கையிலே, கருணைமலர்பொழிந்து - மூவர்-கண்டுமகிழ்ந்துகளிகூர்ந்தனர்-தன.

(இ-ள்.) பன்னிரண்டுமதில்களையுடைய சலநதியைக்கடந்து வாசிக்குதிரையானது நிர்ப்பந்தமாய்ப்பாய்ந்து ஓடும்போது முப்பதுபேர் கயிலைச்சித்தர்கள் வந்துதடுக்கையில், அவர்களையெல்லாம் வாசியின்வல்லமையால் தாண்டிவிசுத்திவந்தேன் அங்கே அறுகோணத்தைச்சுற்றி மதில்கள் அறுபதிருந்தன அன்றிக்கனகமண்டபமும், ரத்தினச்சாவடியுமிருந்தன,அங்கேதிரிமூர்த்திகளும்வீற்றிருக்கையில்கிருபைஎன்னும் மருர்பொழிந்து கண்டுமகிழ்ந்தார்கள்,

திருவள்ளுவனென்னவே-ஞான-திஷ்டியினுற்கண்டுதேவர்களும் அருவுருவாய்மதுரமலர்-வாசம்பொருந்தியஆசிர்மத்தில், இருமென்றவர்களுமே-கமல-இங்கிதஞானசுகாதிதத்தில்,உருவாய்சொற்கப்பதமே-உப-தேசமுந்தந்துமுத்தியளித்தார், கருணைகடாக்ஷம்பெற்றுவாசிக்-காரிக்குதிரைமேல்சேனிவைத்து,ஏறிகனவேகமதாய்-அந்த ஈரெட்டுமாமதில்தாண்டியபின்,குறிப்பாய்வருகையிலே-பின்-குவட்டு

சித்தர்முப்பத்தாறுபேர்கள், மறிப்பாய்மறித்திடவும்-வாய்வு -வாசி யென்றபொடிதூவிவிட்டே-தன.

(இ-ள்.) பின்னர் நான் திருவள்ளுவனென்றுணர்ந்து அவர்களுடைய ஆசிரமத்தில் இருக்கச்சொல்லி இங்கிதஞான சுகாதிதத்தில் உபதேசஞ் செய்து மோட்சங்கொடுத்தார்கள், அவர்களுடையகருணைகடாட்சத்தைப் பெற்ற வாசிக்குதிரையின்மேல் ஜினிவைத்து வேதமாபேறி மதில்தாண்டியபின் பின்மலையிலுள்ள சித்தர்கள் முப்பத்தாறுபேர் தடுக்கவும் வாசியென்றபொடியைத் தூவிவிட்டேன் எ-று. (௬௱௨)

விசுத்தியறுகோணங்-கரவி-வேகத்தினால்நடுமையத்திலே,உசத்தியதாயறிந்தேன்-வாசிஒகோகமலபீடமருகே,நிசுத்தம்வராமலுமே கொண்டு-நேசமதாகமயேஸ்பரனுர், வசுத்தசித்தாதிகளும-திருவள்ளுவனே ஆசிர்மந்தனிலே,கனகரத்தினபீடங்-கருணை-கமலமலர்பொழிந்தேயருள,நினைவாய்மயேஸ்பரனும்-ஞான • நிஷ்டைதந்துயோக தீட்சைவைத்தார், இன்பமாயுபதேச - முத்தி -பின்பத்துடன்தந்து அன்னெனும்,மனதுகளிகூர்ந்து-சொற்சு-மாமதிமோட்சவரையளித் தார்-தன.

(இ-ள்.) விசுத்தியாகிய அறுகோணவீட்டில்வேகத்தினால்நடுமையத்தில் சித்தாதிகளெல்லாம் திருவள்ளுவர் ஆசிர்மத்தில் மயேஸ்வரனும்எனக்கு ஞானநிஷ்டையைக்கொடுத்து யோகதீட்சைசெய்தார், அல்லாமலும் மோட்சவரையையுந் திருவருள்செய்தார் எ-று. (௬௱௩)

தத்துவந்தொண்ணூற்ருறும்-அதில்-தசவாய்விலகப்பட்டபேர்களையான், சுற்றத்தாரெண்ணுமல்-இவர் - தூரத்தாரென்றசற்றிவிட்டேன்,சத்தமதிலிருந்து-மூன்று-சாக்கிரவீடுமத்திபமதில்-கர்த்தரிருப்பிடங்காண்-தெய்வ-கமலமலராயிரத்தெட்டினில், சித்திரச்சாவடியும்-ரத்தின-திவ்வியமாமணிகோபுரமும்,ரத்தினமதில்பதினறு-ஜிவரத்தினகோட்டைசுற்றிமதிலும், பத்தியுடன்வரவும்-வாசிபதினறு நதிசூழ்நதியருகே,தெத்துகாத்திடும்பேர்கள்-திரு-வள்ளுவ னென் றறியாமலுமே-தன.

(இ-ள்.) தொண்ணூற்ருறு தத்துவங்களும். அதில்சேர்ந்த தசவாயுவுக்களும், ஆகியஇவற்றை சுற்றத்தார்களென்றெண்ணுமல் தூரத்திவிட்டேன்,சத்தத்திலிருந்து சாக்கிரவீட்டுமத்தியில் தெய்வமலர் ஆயிரத்தெட்டிதழில் கர்த்தரிருக்குதாகும், அங்கேதிவ்வியமணிகோபுரமும், ரத்தினமதில் பதினறும், வாசிபதினன்குஞ்சூழும் நதியின்சமீபத்தில் திருவள்ளுவனென் றுணராமல் காக்கின்றபேர்களும் எ-று. (௬௱௪)

எழுபத்திராயிரம்பே-ரொழுங்-கோடிவரும்போ தினியதுகாண் வழுவாமலேயினிதான்-கவன - வாசிகொண்டுசினிவைத்துதன்மேல்

இழுக்தறுங்குபடி-பானதி-லேறியேசவாரிதூறிடவும், தொழுதேன்
சத்தியனை-துதி-செய்து ஆக்கினையிலேகினனே, அருள்பெற்றிலகுசுழி
சத்த மாக்கினைவந்து அடிபணிந்தேன், இருள்போய்நிலவு பொழிந்தி
னி-யேக்கமெல்லாம்விட்டு தூக்கமற்று, கருவாய்விளங்குநாத-விந்து
கர்த்தவ்வியத்தைக் கண்டேமகிழ்ந்தேன், பொருளாஞ்சதாசிவமும்
சத்திப்பொற்கமலநாடிப் போற்றிசெய்தேன்-தன

(இ-ள்.) எழுபத்திரண்டாயிரம்பேர்களும் எழுந்து ஓடிவரும்போது யாதொருகுற்றமுமில்லாமல் வாசியைக்கொண்டு சினிவைத்து அதன்மேலிழுத்துக்கட்டி ஏறிச்சவாரிசெய்து வணங்கினேன், அதன்பின்னர் ஆக்கினையிற்சென்று திருவருளைப்பெற்று விளங்குகின்ற சுழிசுத்தத்தைக்கண்டு அங்குள்ளவருடைய திருவடிகளைவணங்கினேன். அதினால் இருளானது போய்நிலவபொழிந்து எக்கமும் தூக்கமுமற்று கருவாய்விளங்கும் நாதவிந்துக்களின் கர்த்தவியங்களைக்கண்டுமகிழ்ந்து பின்னர் அங்கேதலைமைப் பொருளாயிருந்த சதாசிவன், மனோன்மணி இவர்களுடைய திருவடித்தாமரைகளைபோற்றுதல் செய்தேன் எ-று. (௬௫)

கதிர்மதிவான்புவியும்-நின்று-காத்திருந்துபணிசேயவல்செய்யும்
விதிமதிநின்றிலகும-விஷ்ணு-மண்ணுமுதல்வன்னிவாய்வதுவும், நதி
பதிகாரதுவும்-நவ-கோடிசித்தர் விந்துநாதமதும், துதிநிதியு மெழு
தோற்ற-மதுந்-தொழுததோத்திரஞ்செய்துபணிந்திடுங்காண், முப்
பத்துமுக்கோடி-முனி-தேவர்மூதல்செந்துமிநகங்களும், நாற்பத்தெ
ண்ணாயிரம்-ரிஷி-நாரதர் கின்னரர்கிம்புருடர், இப்படியாயிருக்கும்-
இந்த-வேளைதனிற்கண்டு யான்பணிந்தேன், ஒப்பனையாயெனக்கு-
சொற்க-யோகதீட்சையுபதேசஞ்செய்தார்-தன.

(இ-ள்.) சூரிய சந்திரர்கள், ஆகாயம், பூமி இவைகளைக்காத்திருந்து பணிவிடைசெய்யும், விதிமதி, விண், மண், வன்னி, வாயு, நதிபதி, சாரம், நவகோடிசித்தர், விந்துநாதங்கள், எழுநிதியும்; ஆகிய இவைகளெல்லாம்தோத்திரஞ்செய்யு, அன்றி முப்பத்துமுக்கோடிதேவர்கள், முனிவர்கள் முதலியஜீவசெந்துக்களும், நாற்பத்தெண்ணாயிரரிஷிகளும், நாரதர், கின்னரர், கிம்புருடர், இவர்களெல்லாம்சூழ்ந்திருக்கும்வேளையில் நான்வணங்கினேன், அவர்கள்எனக்கு சொர்க்கயோகதீட்சை உபதேசஞ்செய்தார்கள் எ-று. (௬௬)

கலித்துறை.

பரமசிவவென்று யான்வாசியூதிநல் லாக்கினையில்
தினம்வைத்துகண்டத் தமர்வாசல்கீழ்வரை திசைபிசகா
மனம்வைத்துகும்பித்துச் சுழிமூலநாடி வாசிகொண்டு
தினந்துதித்தவரை யண்டத்தில்புக்கித் தெரிசித்தனே.

(இ-ள்.) யநமசிவவென்று சொல்லவாசியை ஊதிநல்ல ஆக்கிஞஸ்தானத்தில் திணமும்வைத்து கண்டத்தில் பொருந்தியவாசலுக்குக் கீழ்த்திசைவடீர யில் யாதொருகுற்றமுமீல்லாவண்ணம் மனத்தைதவைத்துக் கும்பகஞ்செய்து மூலநாடி வழியாகச்சென்று தெரிசித்தேன் எ-று. (கூாள)

வயநமசிவவென்று வாசிகொண்டாக்கினை மதிரவியாய்
தயிரியமாய்கண்ட தாரையில்நேசந் தனித்துநந்து
மயமாகுமூல வாசியினலந்த வட்டத்இலே
செயமாய்மேல்நோக்கி ஆக்கினைபுக்கி தெரிசித்தனே.

(இ-ள்.) வயநமசியென்றுசொல்லி வாசியைக்கொண்டு ஆக்கிஞஸ்தானத்தில் தயிரியமாய் சந்திரசூரியர்கள்பாயுங் கண்டதுவாரத்தில மனக்களித்து மூலத்திலிருந்துண்டான வாசியினல் செயமடைந்து அதின்பின்னர் மேல் நோக்கி ஆக்கிஞஸ்தானத்தில்புகுந்து தரிசித்தேன் எ-று. (கூாஅ)

சிவயநமாவென்று வாசிகொண்டவரை சேவித்துமுன்
தவநெறியாய்கண்ட தாரைகீழ்நோக்கித் தவறுவரா
முவனச்சுழிமுனை திரிகோணவட்டமூலத்திலே
தீவரமாயெழுந் தாக்கினைபுக்கித் தெரிசித்தனே.

(இ-ள்,) சிவயநமவென்னும் நடுவிணையைமாறுவதாகியவசிய பஞ்சாட்சரத்தினல் வாசியைக்கொணடுவெறி பஞ்சமூர்த்திகளையுந்தரிசித்துவணங்கிமுன்னதாக தவத்தின்மார்க்கமாய் கண்டதாரையின் கீழேநோக்கி யாதொரு தவறுதலும் வாராவண்ணம் சுழிமுனையிற்சென்று அங்குள்ள திரிகோண வட்டத்தின்மூலத்திலே சீக்கிரமாயெழுந்து ஆஞ்ஞைக்குச்சென்று அங்கெழுந்தருளியிருந்த சர்வேஸ்வரனைத் தரிசித்தேன் எ-று. (சுாகூ)

மசிவயநவென்று மூலங்குடிகொண்டு வாசியினல்
வசிபொக்கிஷங்கொண்டு வாவென்றுவாசி மதிரவியில்
ராஜராஜசோகங் கும்பித்துவூதி சுழன்றெழுந்து
தெசவாய்வெழுப்பி ஆக்கினைபுக்கித் தெரிசித்தனே.

(இ-ள்.) மசிவயநவென்கிற மந்திரபீஜத்தினல்மூலாதாரத்தில்குடியிருந்து அங்குள்ள்வாசியினல் வசிஎன்னும் பொக்கிஷத்தைப் பெற்றுக்கொண்டு அதினல்மீண்டும் வாசியைவாவென்றி அழைத்து சந்திர மண்டலத்திற்கும் சூரியமண்டலத்திற்கும், மத்தியில் ராஜயோகமார்க்கஞ் செய்யத்தொடங்கி கும்பகஞ்செய்து வாசியைநன்ருயூதி சுற்றிஎழுந்து பத்துவாயுவுக்களையு மெழுப்பி ஆக்கினையிற்சென்று தரிசித்தேன் எ-று. (கூாய)

நயசிவயவென்று ஐவகைரநாடி நலம்பெறவும்
தமதுலகாதீதம் பரப்பிர்மமூல சந்நிதியில்
எமலயிகாண மதிரவிகூடி யிசைவுபட
திபிர்தச்சுழியில்நின் ருக்கினைபுக்கித் தெரிசித்தனே.

(இ-ள்.) நமசிவயவென்னும்பீஜத்தினால் பஞ்சமூர்த்திகளையும்நாடிநன்மையையடையவும், தங்களுடையலோகாதீதமாகிய பரப்பிரமத்தின்மூலச்சந்நிதியில் எமலபியானது காணவுங், சந்திரசூரியர்கள் தங்களுக்குள் இசைந்துகூடவும் அந்தகாரமாகிய சுழிமுனையிலிருந்து ஆஞ்ஞையிற்போய்த் தரிசித்தேன்.

ஐவர்தெரிசனஞ் சத்திசதாசிவ மஞ்சுருவும்
பைவினைநீக்கி மதிரவிகற்பம் பழுதுவரா
தைபிறைகொண்டு தசதீக்ஷைபத்துஞ் சார்ந்திடிலோர்
வையகம்வானம் புவிமுதற்கொண்டு வசியமதே.

(இ-ள்.) பஞ்சமூர்த்திகளுடைய தரிசனமானது சத்தியும் சிவமும்பயப்படும்படியான வினைகளைநீக்கிமதிராகற்பங்களுக்கு யாதொரு குற்றம்வாராமல் தைபிறைமுதற்கொண்டு தசதீட்சைகளையுஞ்சேர்ந்தால் மண்ணுலகம், விண்ணுலகம் இவைகள்யாவும் வசியமாகும் எ-று. (௬௧௨)

கொச்சகம்.

பராபரயொன்றுலெடுத்த பஞ்சகர்த்தாளைவரையும்
தராதலமீரேழுமுயிர் ஜாதியொன்றுண்பெண்ணல்லவோ
நிராதரத்துள்ளேயிலகும் நீர்மேல்நெருப்பென்றறியார்
துராகதமாய்வெவ்வேறு சொன்னார்சுலோகமதே.

(இ-ள்.) பராபரையென்னும் ஒருவஸ்துவினால்உண்டானபஞ்சகர்த்தர்களையும் பதினான்குஉலகங்களையும்உயிர்களையும், ஆண்பெண்களையும் நிராதலத்துள்விளங்கும்சர்வபொருள்களையும்நீர்மேல்நெருப்பென்று உணரமாட்டார்கள் ஆசையால்உலகத்துள் வெவ்வேறுகருத்தமைந்தசுலோகங்கள் சொன்னார்கள்

அல்லாகுதாவெனவு மைந்தும்கரம்வைத்துபணிந்
தில்லில்லாவெனத்துதித்து யினிமுடிசாய்ந்தேதொழுவார்
சொல்வாருபதேசம் சூதர்களுஞ்சூலைவைத்தி
வெல்வார்ஞானப்பிரசங்கம் வெகுகிறிஸ்தவர் மனமே

(இ-ள்.) அல்லாஹுதாவென்று ஐந்துகைகளையும்வைத்துப்பணிந்து இல்லில்லாஎன்று துதித்துமுடியைச்சாய்த்து வணங்குவார்கள், சூதர்களெல்லாம் உபதேசஞ் சொல்லுவார்கள் கிறிஸ்தவர்களெல்லாம் ஞானபிரசங்கஞ் செய்து வெல்லுவார்கள் எ-று. (௬௧௪)

ஆத்துமம்பிறந்ததின்பின் னதிலிருப்பதென்னவயம்
பூத்தானமாம்புதைத்துப் போட்டுரவைசல்லாவை
சாற்றுமலர்பொழிந்து சாய்ந்துமுடிதானசைய
காத்துசலாஞ்செய்தெங்கள் கர்த்தனேயெனத்துதிப்பார்

(இ-ள்.) ஆத்துமாவானது சரீரத்தைவிட்டுப்பிரிந்தபின்னர் அந்தச்சரீரத்தில் என்னஇருக்கிறது? ஒன்றுமில்லை ஆகையால்அந்தசவத்தை மெதுவாகத்

பதைத்து ரவைசல்லரவை மேலேபோட்டு புஷ்பங்களால் அலங்காரஞ் செய்து முடிதானுஞ்சாய்ந்து சலாஞ்செய்து எங்களுடைய தலைவனேயென்று துதிசெய்வார்கள் எ-று. (கூகரு)

உங்கள்தெய்வ முண்டெனவுய்வேறுசெய்து
அங்கங்கள்வேறுளதா யாகமங்களுற்பவித்தார்
பங்கமதாய்வேறுசெய்யும் பாதகரேயங்குமிங்கும்
எங்கெங்குமாய்நிறைந்த ஈசனென்றறிகிலீரே.

(இ-ள்.) உங்கள்தெய்வமென்றும், எங்கள்தெய்வமென்றும்வெவ்வேறாக வுரைத்து ஆகமங்களையெடுத்துப்பேசுவீர், ஆகையால் இங்ஙனம் குற்றமடையும்படி வேறாகச்சொல்லும் பாதகர்களோ நீங்கள்சர்வேஸ்வரனொருவனே எங்கும் நிறைந்தவனென்று உணரமாட்டீர்கள் எ-று. (சுகசு)

மதபேதகண்டனம்-தரு.

உங்களுக்குமெங்களுக்கும்பேதமாமோ-ஆண்டே
உள்ளுணர்ந்துபார்க்கவெராருளள்ளளவில்லை.

(இ-ள்.) ஆண்டையே! உள்ளேநன்றாயாராய்ந்துபார்த்தால் உங்களுக்கும் எங்களுக்கும் ஏதாவது பேதமுண்டோ? ஒன்றுமில்லை எ-று.

அங்கமந்தரங்கமனுபோகஞ்செயி-லாண்டேஅவரவர்ச்சுதிரம் கேளிவேறேபுண்டோ-விந்து-,திங்களுஞ்செய்ரதிகேளி யுங்களுக்காண்டே-அது-செகப்பாமோஎங்கள்விந்துகறுப்பாமோ-பின்னு, மங்களஞ்சேரம்புவிலமைத்தவிந்து-புவியில்-மாதர்கருக்குழிதனிலமைத்தவிந்து-பிர்ம, இங்கிதமுளையெழும்ப அங்கமாச்சு-இரண்டும்-எந்தன் விந்துதந்தைவிந்து மொன்றாய்ப்போச்சே-உங்க.

(இ-ள்.) அங்கமானது அந்தரங்க அநுபோகஞ்செய்கிற காலத்தில் அந்த கேளிக்கையில்உங்களுக்கும் எங்களுக்கும் வித்தியாசமுண்டோ? இல்லைஅன்றி எங்கள்விந்துகறுப்பும், உங்கள்விந்துசெவப்புமாகுமோ! ஆகாதுஆகையால் இந்தவிந்து இரண்டும் ஒன்றாகையால் பெண்ணின் சுரோணிதமும், ஆணின் வித்துவுங்கூடி சரீரமுண்டாவது ஆகவேஇரண்டின் சம்பந்தத்தால் என்னுடையவித்துவும் தந்தையினுடைய விந்துவும் ஒன்றேயாச்சுது எ-று. (சுகஎ)

ஊற்றுக்கால்மாறுதகங்கைஒடக்கரையில்-நல்ல-உன்னரியநாதவிந்துதங்குகையிலும்-மறு வேற்றுமையாயுங்கள் விந்துபெருத்ததென்ன-பேதம்-விளங்கவுமெங்கள்விந்துசிறுத்ததென்னசொல்லும் மாற்றநீதமுண்டோ இந்தஊத்தைக்குழியில்-வேறு-மனிதர்களோ பிறப்பார்மாதர்குழியில்-உடல்,பார்த்துகறையேறினவர்க்கென்றேசாதிஜெகம்-படைத்தரக்ஷகன்சொன்னபாதையிதாண்டே-உங்க.

(இ-ள்.) ஊற்றுக்காலைப்போலமாருதகங்கைநதியின்கரையின்கண்ணிலை த்தற்கரிய நாதவிந்துக்களின் குகைகளில் சேரும்போது உங்களுடையவிந்து பெருத்ததும், எங்களுடையவிந்து சிறுத்ததும், உண்டோ? இல்லைஎங்கள்மா தருடைய கருக்குழில் வேறுமனிதர்களோ பிறப்பவர்! இவைகளை யெல்லாங் கண்டறிந்த கடையேறினவர்களுக்கு சாதிஒன்றேயாகும், உலகத்தைப்படை த்தகடவுள் சொன்னவழி இரண்டேயாதும் எ-று. கூகஅ)

மூலக்கருகுழிபில் நாதமும்விந்தும்-நல்ல - முன்னும்பின்னுங் கூடியுருவாகிவெளிபில்-வித்து, ஒலமுள்ளபாலரமைத்துதித்தபின்பு ஆண்டே-உங்கள்ஜென்மம்எங்கள்ஜென்மம் வெவ்வேறு சொல்லும் பேதம்-ஞாலமுள்ளதேகமெல்லாநாதவிந்தின்கூறு-பின்னும் -நம்மு டையஉம்முடையதேகம்வேறோசொல்லும்-ருத்திரன், ஆலவிடமுண் டசிலனுருமிந்தக்கூறு-அரு-ளாதிபுமந்தமுமிந்தக் கூறதுவுமாண்டே உங்க.

(இ-ள்.) மூலாதாரமாகிய கருக்குழியின்கண் சுரோணிதமும்,சுக்கிலமும் முன்னும்பின்னுமாகக்கூடிரூபமாகி வெளியில்வித்துவானது பாலர்களாக அ மைந்தபின்னர், உங்களுடையஜென்மமும், எங்களுடையஜென்மமும், வெவ் வேருகுமோ சொல்லுங்கள் ஞானமுள்ளதேகமெல்லாம் நாதவிந்துக்களின் கூருகும் பின்னும் எம்முடையதேகமும், உம்முடையதேகமும் வெவ்வேருகு மோ? ஆகாது ஆகையால் ருத்திரன் ஆலகாலவிஷத்தையுண்ட சிவபெருமா னுகிய இவர்களும் இந்தக்கூறேயாகும் எ-று. (கூககூ)

அச்சதுவுகின்றதெல்லா மாண்டையினிகேளும்- அதிலெழுந்த பலவுயிருமெல்லாமொன்று - மேலும் உச்சிதனுட னுனக்குச்சந்தத் தென்னவுண்மை-உறுதி-யெந்தனுடலதுதாழ்ந்ததென்ன சொல்லும் இச்சடலமச்செடலமிரண்டுமொன்று-ஆண்டே- இம்மயமுமம்மயமு மெல்லாமொன்று, வச்சதென்னதச்சதென்னரூபமெல்லா மொன்று வளமானமயமதுவும் வஸ்துவெல்லாமொன்று-உங்க.

(இ-ள்.) அச்சென்றஉயிரானது இருக்கிறவிதங்களையெல்லாம் ஆண்டை மாரே! இனிகேளுங்கள், உயிர்களெல்லாம் உண்டானவிதம் ஒன்றேயாகும், ஆனல்உயிராகிய உனக்குஉடலுண்டானது என்னவுண்மை!என்னுடையசரீர மானதுதாழ்ந்ததென்ன? இந்தச்சரீரமும் அந்தச்சரீரமும் ஒன்றுதானே? இ தன்மயமும் அதன்மயமும்ஒன்றே ரூபங்களும்ஒன்று, வஸ்துவும்ஒன்றுஎ-று.

ஊணியனுபோகஞ்செய்ய சுந்தரலிங்கம்-எண்சாண் -உந்தனுக் குமெந்தனுக்குஞ்சரிதான்காணும் - மாது, வாணிவிந்துஉந்தனுக்கு வசந்ததுண்டோ-நல்ல-வஸ்துவிந்துஎந்தனுக்குக்குறைந்ததுண்டோ மேலும்,நாணிதனுலிங்கமெல்லா மொன்றேலிங்கஞ்-ஜெக-நாதவிந்தி

ஞானுதித்த விந்ததிதானுண்டே-எபி, நாணியென்றதசைவெல்லாம
சைவுமொன்றே ஆதியந்தமென்று முருவாக்கி யானவாறுண்டே.

(இ-ள்.) ஊன்றி அநுபவிக்கின்ற அழகியலிங்கத்தால் எண்சாணுகஉடம்பானது அமைவதுயாவருக்கும்பொதுவாம், விந்துவில் உயர்ந்த விந்தென்றும் தாழ்ந்தவிந்தென்றும் இரண்டுவகையுண்டோ இல்லை அன்றிஇந்தஉலகத்தில் லிங்கமெல்லாம் ஒன்றேயாகும், அங்ஙனமாயலிங்கங்களில் ஜெகரதருடைய விந்துவினுல் இந்தலிங்கம் உதித்ததாகும், இவ்வளவும் அவாவினுல்ரூபமாயமைந்ததாகும் எ-று. (௯௨௧)

உருவென்னபுவிதனில் பிறந்தவர்க்கு-ஆண்டே- உற்றுணர்ந்து பார்க்க நாதவிந்துமென்று-திரு,கருவென்ன இருவரும்வளர்ந்தவீடு அதைக்-கண்டுகொள்ளும் ரெண்டுருவுமொன்றேகாணும், அருளரு வென்ன ஆணதுவும்பெண்ணதுவுங்-அமைத்தமென்ன ரெண்டுமொன்று ஆண்டையேகேளீர்-இது, கூறுமறிந்தோர்கள்கதிர்மதியுங்கண்டோர்-இனங்கூறறிந்துவாசிகொண்டு அமுதுண்டாராண்டே,

(இ-ள்.) ஆண்டைமாரே! உலகத்தில்பிறந்தவர்களுக்கு நன்முயாராய்ந்து பார்த்தால் நாதமும்விந்துவும் ஒன்றேயாகும், கருவென்பது இருவரும்வளர்ந்தவீடாகும் இங்ஙனம் வளர்கின்ற இரண்டுருவமும் ஒன்றேயாகும், அதுஆண் பெண்ணென்பதாம், இந்தஇரண்டுங் கூடுதலாலே ஜெகமுண்டாவதாகும் இவ்வரலாற்றை உண்மையாகவுணர்ந்தவர்கள் கதிர்மதியைக்கண்டவர்களாவார்கள், இவர்களிற்சிலர் இதையுணர்ந்து பின்னர்வாசியைக்கொண்டு அமிர்தத்தையுண்டவராவார்கள் எ-று. (௯௨௨)

அங்குலமுமங்குரெட்டிப்பிரமாணமாண்டேஇதுஉஅங்குமுண்டுஇங்குமுண்டுஅறிந்துகொள்வீர்-மதி,சங்கவெளிகண்ட லிங்கமங்கு எங்காணுஞ்-செயல் - தனக்கொன்றுஎனக்காறுகணக்காரோ சொல்லும்-உங்கள்,மங்கையும்விந்தளவினுல்மைந்தரும்வந்த-இந்தவழியறிந்து ஒன்றமைத்தபிறப்பிரண்டே-முன்பு, இங்குமங்குமெங்குந்தானுமிந்திரியங்காண்-வந்த, எறும்புகடை யென்பத்துநான்குயிருமொன்றே-உங்க.

(இ-ள்.) இதற்குப் பதினறங்குல பிரமாணமாகும் அது எவ்விடத்திலும் ஒரே அளவேயாகும்;ஆஞ்ஞாசங்கமத்தில்காணப்படுகின்றலிங்கவொளியும்எங்குமொன்றேயாகும், அங்குடைக்குஞ்செய்கைகளுக்கு நானென்றும்அந்நியர்களென்றும் கணக்கில்லை, பெண், பிள்ளைகளெல்லாம் விந்தினது அளவினுல் வந்ததாகும், இந்தவழியையுணர்ந்துவர்தபிறப்புஒன்ருே? இரண்டோ! எறும்புமுதலிய சர்வஜந்துக்களின் பிறவிகளுக்கும் இந்திரியமே ஆதாரமாகும் எ-று

இக்குலந்தனிலெழுந்தஜீவராசி-இந்த-இகந்தனிலும்விளைந்தஇந்திரியங்காண்-ஜெக,மக்குலங்களாவதுமனேகமுயிர்காண் ஆதிஅந்த

மிதுரெண்டுகூடியசாந்தமிதுகாண்-கண்ட, துக்கமேஜெகமனைத்துந்
துன்பமிதுவாம்-அருள்- துரியாதீதங்கடந்தோர்சூக்ஷதேகங்காணுங்
அன்னை, மக்கள்மதாருமீன்ற வாலாம்பிகைதான்-வகை-வையகமும்
வானமிருமாதளவாலாண்டே-உங்க.

(இ-ள்.) இந்தக்குவத்தில் உண்டான சீவராசியானது இவவிடத்திலுண்டான)இந்திரியத்தின் குணங்களாகும் இந்தக்குலங்கள்தவிர அந்தக்குலமாகியநாதத்தில் உண்டாவனவும்சிலவுண்டு ஆகையால்ஆதியந்தமாகியஇந்தஇரண்டுங்கூடினால், இந்தப்பிறவிசொந்தமாகும் உலகத்தி லிருக்கின்ற பிறவிகளெல்லாம் இன்பதுன்பங்களை அநுபவிக்கலாகும் துரியாதீதத்தை தாண்டியவர்கள் சூட்சதேகத்தையுடையவர்களாவார், தாய்மக்கள் மாதர் இவைகளைப் பெற்ற வாலாம்பிகையின் திருவருளாய்யாவும் உண்டாயினவாகும் எ-று. ()

பள்ளையாடுசெம்மறியின் குட்டியாமோ-நல்ல-பசுவைக்கிடாம
ருவக்கிடாரியாமோ-பின்னுமுள்ளமதிலென்குலத்திலுன்குலஞ்சேர்
ந்தால்)புத்திரன்-உன்னுதொன்றோஎன்னுதொன்றோ உணர்வீர்கா
ணும்-இனி,துள்ளுஞ்சேவல்கொக்கைச்சேர அண்டமாமோ-செழும்
நாரைக்கோழியைச்சேர குஞ்சதாமோ-நல்ல,பள்ளப்பாகல்வித்தது
வுஞ்சுரையாமோ-யிந்தபக்ஷியினும்பேதாபேதந்தோன்றுமாண்டே.

(இ-ள்.) பள்ளையாடு, செம்மறிக்குட்டி, உயர்ந்தபசு எருமைக்கடாகடாரிஇவைகளாகுமோ?பின்னர்என்குலத்தில்உன்குலம்சேர்ந்தால்உண்டாகின்றபுத்திரன் உன்னுடையவனோ! என்னுடையவனோ?இதையுணர்ந்துபாருங்கள் இனிதுள்ளுகின்றசேவல், கொக்குமுதலியவற்றைச்சேர, அவை அண்டமாகுமோ!காரையானதுகோழியைச்சேரக்குஞ்சாகுமோ?பாகல்வித்துசுரைச்செடியாகுமோ? ஆகையால் இந்தப்பட்சிகளிலும் பேதாபேதமுண்டாகும் எ-று.

எவ்வளவும்பிழையில்லை யென்நூல்காணும்-எந்தன்- குருவான
அகத்தீசருள்தான்காணும்-வேரு,கள்ளர்கள் வெவ்வேறுபிரித்துக்
கருத்திலெண்ணி-ஞானங் - கண்டகண்டவிதம்சொல்லிக்கலங்கினார்
காண்-பின்னுந், துள்ளித்துள்ளிவாய்ப்பினத்திதுக்கிப்பார்க் கிலே
சஞ்செய்தி-சொன்னாலுஞ்செவிகேளாது துர்மார்க்கர்காணும்-மாது
வள்ளலெனுமம்பிகைபெண்வரத்தால்வந்த-திரு - வள்ளுவசாம்புவ
மூர்த்தி வம்மிசமாண்டே-உங்க.

(இ-ள்.) என்னூலில்கொஞ்சமும் தப்பிதமில்லை அப்படியிருப்பதுஅகஸ்தியர் திருவருளாலாகும் கள்ளர்களா யுள்ளவர்க ளெல்லாரும் வெவ்வேறாகப் பிரித்துச்சொன்னார்கள் சிலர்மிகுதியானவிஷயங்கள்தெரிந்தவர்கள்போன்று துள்ளிப்பினத்தி துக்கங்கொள்வார்கள், நன்மையைச்சொன்னாலும் காதில் கேளாத நானேபரமேஸ்வரியின் திருவருளால்வந்த திருவள்ளுவசாம்பவமூர்த்தி வமிசமாவேன் எ-று. (௧௨௩)

விருத்தம்.

கமலமலராயிரத்தெட் டிதழில்வளர்திலகுமதிகருவூர்நாட்டில் குமிழியொருதளியில்பதி ஞயிரத்திலொரு தளிதோய்ந் தெருதிக் கூர்ந்து, அமிர்தமதியின்பசுக மதுரசர்வாணியி லமைத்தவிந்தால்தி மிர்தமாய் ஜெகநாதரருள இந்தவகையெல்லாந் தெளிவிப்போமே.

(இ-ள்.) ஆயிரத்தெட்டுதாமரையிதழில்வளர்ந்து விளங்குகின்றகருவூரில் பதினுயிரங்குமிழிகளில்ஒன்றுபடிந்துவந்தஅம்பிகையினுல் உமைத்தவிந்தினு ல்வந்துஜெகநாதர் அருள்கொண்டு இந்தவகைகளையெல்லாந்தெளிவிப்போம்

அண்டர்களுமுனிவர்களு மறியாதவெகுசூக்ஷ மறியலானேன் துண்டர்கள்தான்கூடிவெகு மதபேதமுணர்ந்துமொழிதொகுப்புண் டாக்கி, கண்டகண்டப்படியெல்லாம்நூல்வசனமாய்க்குறித்துக் கவி கள்பாடி, எண்டிசைமாணுக்கரிவைஉண்மையென்று மயங்கவைத்து இறந்திட்டாரே.

(இ-ள்.) தேவர்களும் முனிவர்களும் உணராதவெகுசூட்சங்களை உண ரலானேன், வீணர்களெல்லாரும் ஒன்ருகக்கூடிவெகுவாகமதபேதங்களைஉண ர்ந்து ஒருகூட்டமுண்டாச்கி கண்டபடியெல்லாம் கவிகள்பாடி அவைகளை யே உண்மையென்று மயங்கும்படிவைத்து இறந்தார்கள் எ-று. (கூஉஅ)

கொச்சகம்.

கொத்திப்பிறப்பிலது கொம்பிளம்பாவைவிட்டு
பத்திமுளைத்ததுவமிதி பாவலதுவாகுமோதான்
சுத்தியுடன்பூசைசெய்யுஞ் சுந்தரரேயென்மனையில்
சத்தியைநீசேர்ந்ததனுல் தரியாதோகெர்ப்பமதே

(இ-ள்.) பிறப்பில்லாததும், இளம்பாவையாகியபத்திமுளைத்ததும் சுத்தி யாகாமல் பூசைசெய்யுஞ் சுந்தரனே! என்னுடையவீட்டில் சத்தியைநீசேர்ந் ததினுல் கர்ப்பம்தரிக்கமாட்டாதோ? எ-று. (கூஉகூ)

இஞ்சியிடமஞ்சளுண்டோ ஏலமிடசுக்காமோ
நஞ்சுகந்தஎட்டியினும் நல்லஎலுமிச்சையுண்டோ
தஞ்சுயுகழ்பூசைசெய்யுஞ் சுந்தரரேயென்குலத்தில்
வஞ்சியைநீர்சேர்ந்ததனுல் மைந்தன்தரியாதோ.

(இ-ள்.) இஞ்சிநட மஞ்சள்உண்டாகுமா? ஏலம்போடச்சுக்கு உண்டாகு மா விஷமுள்ளஎட்டிபோட எலுமிச்சையுண்டாகுமா? மிகுந்த கீர்த்தியுள்ள பூசையைச் செய்கின்ற சுந்தரரே! என்னுடையகுலத்தின் பெண்ணை நீசேர்ந் ததினுல் குமாரன் உண்டாகானே? எ-று. (கூ௩௦)

அம்புலியின்மானதனை யரியவராகம்புணர
கும்பிலிநவாகியதங் குட்டியளிக்குமோதான்

நம்பிறவியந்தணரே ஞாயமுள்ளசூத்திரரே
வம்புரைத்தீரென்குலத்தை மருவவுருவாகாதோ

(இ-ள்.) உலகத்தில் ஒருமானைப்பன்றிபுணர அதின்வயிற்றில்குட்டியுண்டாகுமோ? நம்பிறப்பிலுள்ளபிராமணரே! ஞாயமதிர்த சூத்திரரே! நீங்கள்என்குலத்தைத் தூஷித்தீர்கள் ஆயினும் இதில் கலந்தால் உருவாகாதோ எ-று.

கலித்துறை.

குட்டிக்கிடாவும் பசுமேல்மருவக் குறியென்னகாண்
முட்டியெருது முதிப்பதுண்டோ ஜெகமூடர்களே
மட்டிக்கிடாவுக்கு மாவின்பிறவிக்கும் வாறறிந்தால்
எட்டிக்கனிவந் தெலுமிச்சையாகுமோ ஈனர்களே.

(இ-ள்.) கிடாக்குட்டியானது பசுவின்மேல்ஏற எருதுஉதிக்குமா? ஓமூடர்களே! கிடாவுக்கும் பசுவின்பிறவிக்கும் வரலாற்றை உணர்ந்தால் எட்டிக்கனியானது வந்து எலுமிச்சைக்கனியாகுமோ? எ-று. (௬௱௨)

வெண்பா.

மச்சமதைக்கூர்மம் மருவிக்கலவிசெய்தால்
உச்சிதமாய்நாதவிந்து வுருவாமோ-நிச்சயமாய்
எந்தன்குலத்தி லியல்வானவேதியரே
வந்தணைந்தால்விந்துவுரு வாறு.

(இ-ள்.) மீனை ஆமைபுணர்ந்தால் நாதவிந்துக்கள் ரூபமாகுமோ? உண்மையால் எங்கள்குலத்தில் பிராமணர்கள் வந்துபுணர்ந்தால் விந்துஉருவாகும்

முல்லைமலர்கம்பநட்டு முக்காலுநீர்தெளித்தால்
மல்லிகைப்பூவாசம் வருமோதான்-தொல்லுலகில்
சோதிவிந்துநாதந் துளியிலுபிராமவர்க்கு
ஜாதிகுலபேதமில்லைத் தான்.

(இ-ள்.) முல்லைச்செடியைப் போட்டு நீர்விட்டுக்கொண்டு வந்தால்அது மல்லிகையின்மணம் வீசுமோ? இவ்வுலகத்தில் விந்துநாதம்காரணமேயன்றி சாதிபேதமில்லை எ-று. (௬௱௪)

கலித்துறை.

ஈரேழுலோகம் பதினாலுயர்ந்திரு காலுபர்ந்த
நேரானஜாதி ஆண்பெண்ணிரண்டும் நிரந்தரமாய்
பேரானசெங்கதிர் சந்திரனுண்டண்ட பிண்டமுண்டு
சீரானஅன்னமுந் தண்ணீருமுண்டு தெய்வமின்றே.

(இ-ள்.) பதினான்கு லோகங்களிலும் சாதி, ஆண் பெண் இரண்டேயன்றி, வேறில்லை அவைகளும், சூரியசந்திரர்களும், உண்மையினும், அன்னந்தண்ணீர் உண்மையினுமேயாம் எ-று. (௬௱௫)

புத்தியில்லாமல் வெகுகோடிமந்திரம் புலம்பியுமே
சத்தியில்வாழ்ந்து தியங்குவர்காண் சர்வலோகமெல்லாஞ்
சுத்திதசாதியின் பேதகங்தன்னைச் சொல்லுமவர்
எத்திப்பணத்தைப் பறிக்குந்திருட ரியம்புவனே.

(இ-ள்.) நற்புத்தியில்லாமல் அநேககோடி மந்திரங்களை ஐபித்துவாழ்ந்து மயங்குவார்கள் உலகத்திலுள்ளமனிதர்கள், அப்படியிருப்பதால்சாதிபேதஞ் சொல்லுகிறவர்களெல்லாம் பணம்பறிக்குந்திருடர்களேயாவார்கள் எ-று.

விருத்தம்.

மண்டலத்திற்குருக்களென்று பேரும்பெற்று மகத்தானதூளி தமணிந்துகொண்டு, குண்டலங்கள்செவியிலிட்டுக்குல்லாசாத்திகோ கரணங்கெசகரண மிரண்டுஞ்சுற்று, தெண்டிரையிற் பலவிதமாய்ப் பொய்கள்சொல்லி சீஷருக்குமுபதேசந்தெளியச்சொல்வார், ஒன்று மில்லையவர்கள்கையில்வித்தையாச்சு உழ்ளவர்த்தமான மிதையுரை செய்வேனே.

(இ-ள்.) உலகத்தில் குருக்கள்மாரென்று பேர்படைத்து,உத்தூளனமாக நீற்றைப்பூசி குண்டலங்கள்காதிலிட்டு மற்றகள்ளவேடங்களையெல்லாமணிந்து, பலபொய்கள்சொல்லி, சீடர்கட்கு உபதேசஞ்செய்துவருகிறார்கள் அவர்களிடத்தில் ஒன்றுமில்லை எ-று. (௬௯எ)

நேத்திரத்தில்துகில்வாங்கி யுடுத்திக்கொள்வார் நின்றவரைவவ் வியென்றுந்தூரத்திக்கொள்வார்,கோத்திரங்கவிளங்கமுத்திதருவோ மென்று கூறுசொல்லிநீரதனைக்குழைத்துச்சாத்தி, சாஸ்திரத்தைச் செவிதனிலுமாண்டேகேளீர் தவமாகுமஞ்செழுத்தைச் சாற்றுவார் கள்,ருத்திரத்தையின்னதென்றறிந்துபார்க்கச்சொல்லரியவைம்பூத மாச்சுதாண்டே.

(இ-ள்.) கண்மூடிஎதிர்நின்றவரைத் தூரத்திக்கொள்வார்கள் மோட்சங் கொடுப்போமென்பார்கள் திருநீறணிந்து சாத்திரத்தைவிரித்து பஞ்சாட்சர சபஞ்செய்வார்கள் ருத்திரத்தை இன்னதென்று ஆராய்ந்துபார்த்தால் ஐம் பூதமாச்சு எ-று. (௬௯௬)

உற்றுநின்ற சாஸ்திரத்தைப்பார்த்துபார்த்து ஊணுகிடையா மலுந்தான் பிரட்டிப்பேசி, பத்தரென்றுங் குருக்களென்றும் வகுத் துச்சொல்வார்பரகதியுந்தருவமென்றுபணம்பறிப்பார், வித்துநின்ற விடங்காணார்வேருங்காணார் விளங்குபரந்துலங்குகின்றவீடுங்காணார் எத்தவமுந்தருவமென்றுலகஞ்சுற்றி யெளியோர்கள் பாவமில்லாமி னிகொள்வாரே.

(இ-ள்.) சாத்திரங்களைப்பார்த்து உணவில்லாபலபத்தரென்றும், குருக்க ளென்றும் தம்மைச்சொல்லிக் கொள்வார்கள் மோக்ஷமுங்கொடுப்போமென்

பார்கள் பணத்தைப்பறிப்பார்கள் அவர்கள் யாதொன்றையும் உண்மையாக வுணராத மூடர்களே யாவார்கள் எ-று. (சுஙக)

உடலெடுத்தநேர்மைகண்டால் குருக்களாகும் உள்ளுணர்ந்து பாராதார்மருக்களாகும் செடமெடுத்தவுயிர்கள்கண்டால்தீக்ஷையாகுஞ் செயலறியார்குருபூசைதெளிந்துகூடார், குடலெடுத்தபசியறிந்தாலாசானுகுங்குறிப்பழிந்துகொள்ளாதார்பேசானுகும், சுடலடுக்குங்கணக்கது வுமானதாலுஞ் சொல்லுகிறேன்மந்திரமும் நில்லாதாண்டே.

(இ-ள்.) சரீரம்வந்தவரலாறுணர்ந்தால் குருக்களாகும் உள்ளுணர்ந்துபார்த்தவர் மருக்களாகும் உயிரைக்கண்டால்தீட்சையாம்,செயலறியார்குருபூசையைத்தெளிந்து கூடார் குடலெடுத்தபசியறிந்தால் ஆசானுகும்குறிப்பறியாதர் பேசானுதம் சுடலையடுக்கும் கணக்கானதினுல் மந்திரங்களும்நிற்கா எ-று.

அடியானபாதமதும்வளர்ந்ததெங்கே ஆதிநடனம்புரிந்ததந்தையெங்கே, வடியானமூங்கிலெங்கேவட்டமெங்கே வளர்ந்தெழுந்த ஆயிரத்தெட்டிதழுமெங்கே, கொடியானமகமேருவளர்ந்ததெங்கேகுருவென்றுஞ்சீஷனென்றும்பிறந்ததெங்கே,முடிவானசிரமெங்கேசடலமெங்கே முதலிருந்தகுருவெங்கே அமைத்ததேதோ.

(இ-ள்.) அடிபாதம் வளர்ந்ததும், நடனம்புரிந்ததந்தையும், மூங்கிலும் வட்டமும், ஆயிரத்தெட்டிதழும், மகமேருவளர்ந்ததும் குருவென்றும் சீஷனென்றும், பிறந்ததும், சிரசும், சடமும், குருவும்எங்கே? அவைகளை அமைத்தது எதோ? எ-று. (சுசக)

ஓதுகின்றவேதமதுபிறந்ததெங்கேஉன்னியநீரிரைக்கு மிடமுயிருமெங்கே, வாதுகள்செய்யமந்திரமும்பிறந்ததெங்கே, மறைவேதசைவர்களும்பிறந்ததெங்கே, சூதுகள்கண்டிவையறிந்தால் குருக்களாகுந் தொல்லுலகிலறியாதார் நம்மிலொன்று, எதுமில்லாமற்பொய்களவுசொல்லார்தானும் இவைராஜயோகியென்று மியம்பலாமே.

(இ-ள்.) வேதம் பிறந்ததும்,நீர்இரைப்பதும்,வாதுசெய்யமந்திரமும்,வேதசைவர்களும், பிறந்ததும்எங்கே? அவைகளையுணர்ந்தால் குணங்களாவார்கள் அறியாதவாகள்நம்மைப்போலொருவராவர்இவைகளன்றிஎல்லாவற்றையுமறிந்துபொய்களையற்றவர்கள் இராஜயோகிகளொன்றுசொல்லபடுவார்கள் எ-று.

விட்டகுறைவருமளவுமுபதேசங்காண் மெய்யுடலுந்தளர்ந்துபுவிமேலுநோக்கித்தட்டழிந்துவிழும்போதுஓதிவைத்தசாஸ்திரத்தில் க்ஷணப்பேரதுமறிக்கபோமோ,எட்டுரெண்டுமறியாதார்குருக்களாமோ என்னையினிப்பறையனென்றுந்தள்ளலாமோ, மட்டமரும்பூங்குழல்வாலாம்பிகைப்பெண்வங்கிசத்திலுதித்தசாம்புவனுகானே.

(இ-ள்.) விட்டகுறைவரும் வரைக்கும், உபதேசம்வந்து உடல்தளர்ந்து பூமியில் சாஸ்திரங்களை ஆராய்ந்து எட்டும், இரண்டும் உணர்ந்தவர் குருக்கள்களோ? என்னை பறையனென்று அவர்கள் தள்ளலாமோ? நானோ வாலாம்பிகைப்பெண்ணின் வமிசத்தால்பிறந்த சாம்புவனல்லவா எ-று. (௬௪௩)

நரகமதைதவிர்த்துசொர்க்கந்தருவோமென்பார்நாட்டிலுள்ள காரியமாங்குருக்கள்வந்து, நரகமதுநின்றதற்குபிறந்தானென்னநமனைஎமனைவெல்லகானேயென்பார், இரப்பிறப்பு மறிந்துணர்ந்துஉரைத்தானாகில் எம்பிரானென்றவரைப்பணிவேன்காணும், மறுபிறவியுண்டென் பாருலகத்தாசான் மதியெனதுகருத்தினிலுங் காணேனுண்டே.

(இ-ள்.) நரகத்தைநீக்கிச் சொர்க்கத்தைக் கொடுப்போம் என்பார்கள் எமனைநானே வெல்வேனென்பார்கள். அவர்கள் இறப்பிறப்பையுணர்ந்துசொன்னால் எம்தலைவனென்று அவரைப்பணிவேன் எ-று. (௬௪௪)

இருவினையுந்தனையுரைத்துயுலகத்தாசான் இறந்தவுடல்விழுந்தாவிபிரிந்தபின்பு, மறுசெனனமாகிவந்துடலெடுத்து வாழ்புவியில் வருவமென்றுவகுத்துச்சொல்வார், குருவறிந்துபுவியில்வந்துவயது நூறிகுறிப்பாகப்பிறந்திருந்தால் குழந்தையாமோ, அறிவதிகநற்பிறவிபிறப்பாரென்று மதிதவெகுபொருள்களெலாம் பறிப்பாராண்டே.

(இ-ள்.) உலகவாசானானவன் இருவினைகளையுஞ்சொல்லி இறந்த சரீரத்தில் ஆவிபிறந்தபின்பு மறுஜெனனமாய்வந்து சரீரம்எடுத்து உலகத்தில் வருவோமென்று சொல்லுவார்கள் புவியில்வந்து நூறுவயது வரைக்கும் பிறந்து பிறந்து இறந்தால் குழந்தையாகுமோ? ஆகையால் பிறவி யறுப்போமென்று சொல்லி பொருள்பறிப்பார்கள் எ-று. (௬௪௫)

வித்திருந்தால்விளைவுமுண்டு மரந்தானுண்டுவேரற்றால் மரமதுவுந்தளுக்குமோசொல், சத்தியமாமொழியவுங்காணுண்டே கேளீர் சாஸ்திரத்தைமெய்யெனவுநம்பொண்ணாது, செத்தசவமுயிரொடுங்கிநின்றபோது சிறுமதலையாய்ப்புவியிறபிறப்பதேது, இத்தையினியறியாதஉலகத்தாசான் இறந்தவுடல்பிறக்குமென்றியம்புவாரே.

(இ-ள்.) விதையிருந்தால்விளைதலுண்டு, மாமுமுண்டு, வேரற்றால் மரம் துளிர்க்குமோ? சாஸ்திரங்களை மெய்யென்று நம்பக்கூடாது செத்தபிணம் உயிரொடுங்கிநின்றபோது சிறுகுழந்தையாய்ப்பூமியில்பிறப்பதுஎது? இவைகளையறியாதவுலககுரு இந்தவுடல்பிறக்குமென்று சொல்லுவார்கள் எ-று. (௬௪௬)

பாதமதுமாயிரந்தானுள்ள அட்டை பதறியதுகாதவழிநடக்குமோசொல், பேதமில்லாசாஸ்திரங்கள் நமக்குச்சொல்லும் பிரபலம் போல்தூக்கம்வருமறிந்திடாது, வேதமதைநமக் குரைப்பாரவர்கள்

தங்கள் விதிப்பயனையின்னதென்றுவிளங்கமாட்டார், நாதவிந்தவுற் பவமேயெவருங்காணார் நாட்டிலுள்ளகுருக்களறியார்கள்தானே.

(இ-ள்) ஆயிரங்கால்களுள்ள அட்டைகள் காதவழிதூரம் நடக்குமோ? சாஸ்திரங்களை நமக்குச்சொல்லுவதை யுணராது தாக்கம்வரும், அதையறிய வொண்ணாது நமக்குவேதத்தைச் சொல்லுவார்கள் அவர்கள்விதியை உணர மாட்டார்கள் நாதவிந்துக்களின் ஜனனத்தை உலகத்தில் யாவருமறியமாட் டார்கள் எ-று. (௯௪௭)

பாரானவுலகத்து மாண்பர்க்காகப் பகிர்ந்துரைத்தே னறிவுள் ளோரறிந்துகொள்வீர், கூரானகோழியுடன் போத்துமாகிக்கொடி தானவலியனுடன்காடைகேளீர்,பேரானகடுநாரை கோட்டான்கிள் ளைபெரிதானகெருடனுடன்குட்டிநாரை, சீரானசகுனமது நமக்குக் காட்டுந் தீங்கதுக்குவருவதுதான் தெரியாதாண்டே.

(இ-ள்.) உலகத்து மனிதர்களுக்காகச்சொன்னதை அறிவுள்ளவர்களா கிய நீங்கள் அறிந்துகொள்வீர்! கோழி! கள்ளிக்காக்கை! கருங்குருமான்! கா டை! நாரை! கோட்டான்! கிளி!கருடன், இவைகள்சகுனம்தீங்காகும் எ-று.

இலக்கணநூலறிந்துகவி யினமாய்ப்பாடும் இவர்களுரைப்பது வாஞ்சையிகத்துக்கொக்குஞ்,சிலைகள்கல்லுமனிதர்கள்மேல்சீர்தான் கோணுசெம்பொன்பொருள்பறித்துமிசசெகத்தில்வாழ்வார், துலக் சமில்லாக்கவிமிகவுந்தொடுப்பார்புஷ்பந்தொடுப்பதுபோல்வயிறுவ ளர்த்திடுஞ்சூதாகும், கலக்கம்வருமவரவர்க்கே யெழுத்தெல்லாம் போய் கர்மவினையாலொழிய வருந்துவாரே.

(இ-ள்.) இலக்கணநூல்களைக் கற்றுக்கவிபாடி மனிதர்களிடம்பொருள் தேடுகின்றவர்கள் வயிறுவளர்ப்பதன் நிமித்தமே இவர்களெல்லாம் கர்மவினை யால் வருந்துவார்கள் எ-று. (௯௪௯)

ராசிலக்கினமிருபத்தேழுங்கற்று நாடதிலுயிரந் தையமுண்டே செல்வார்,வாசியிருந்தலவும்மாவாசிகாணார்வயதுகுறைந்திடுநாறில் சுவாசங்காணார், கோசபீசத்தொழிலுங்குறியுங்காணார்குறிப்பறிந்து மூலத்தின்குறியுங்காணார், ஆசுமதுரக்கவிதைபாடும்பேர்க்கு அவர வர்க்கிரட்டியிவர்களனுபோகந்தானே.

(இ-ள்.) பன்னிரண்டுராசிகள்! நட்சத்திரங்கள் முதலியவற்றைக் கற்பா ர்கள்! வாசிகாணார் இதனால் வயசுதறைந்திடுர், கோசபீசத் தொழில்காணார், மூலாதாரக்குறிப்புகாணார், இவர்கள்பழக்கம் என்னபழக்கமோ எ-று. (௯௫௦)

தனக்குவரும்வழியறிந்துவிதிக்கமாட்டார் தரணிதனிலெவருக் குஞ்சாஸ்திரஞ்சொல்வார், செனிக்கும்வினை நல்வினையுந் தீவினையுங் காணார் தேய்பிறையும்வளர்பிறையுஞ் செப்பார்காணும், சுணங்கன

துபோல்திரிந்து ஜோஸியஞ்சொல்வார் சூதர்களைப்போ லொரு பொய்சொல்வாரில்லை, எனக்குமுனக்காதியிலும் விதித்ததந்தைஇந் திரியக்கூறறிந்து இயம்பாராண்டே.

(இ-ள்.) தன்விதியறியார், அன்னியர்விதியைச்சொல்வார்கள்! நல்வினை தீவினைகளையுணரார்! தேய்பிறைவளர்பிறைகளையுணரார்! சோதிடம் சொல்வார்கள், சூதுவர்களைப்போல் பொய்சொல்லுவார்கள், இந்திரியங்களின் கூற்றையுணரார்கள் எ-று. (௯௬௧)

அந்தணரும்வேதியருஞ்சாஸ்திரிமாரு மகிலமெல்லாமிரட்டுகின்றஆசான்மாரும்,சந்தமதாய்சொல்லிபென்கைப்பொருளும்வாங்கி சாஸ்திரத்தால் முகூர்த்தமெனுஞ்சாந்திசெய்வார், எந்தன்விதிவந்ததென்றால்நானும்போறேன்எனக்குசற்றுங்குறைந்ததென்றாலினியங் கேது, சொந்தமுடனுங்கள்மனைவேதமோதுந் தொலுலகிலுள்ள மட்டும் வாழொண்ணாதே.

(இ-ள்.) பிராமணர்கள்முதலிய சாஸ்திரிமாரகளும், உலகத்தை மருட்டுகின்றபொய்க்குருக்களும்! கைப்பொருள்களைவாங்கிசாஸ்திரங்களால்முகூர்த்தசாந்தி சொல்லுவார்கள் அவரவர்கள் விதிப்படி அவரவர்கள்போகின்ற வழிக்குபாரிருந்தென்ன எ-று. (௯௬௨)

தனக்கவஸ்தைவருகிறதையறியாமற்றான் சாஸ்திரங்கள்சொல்லி வயிறுதனைவளர்ப்பார், கணக்காகவகுத்துமிவை பார்க்கும்போது கருத்திலுந்தான்மறுபிறவிநனவிற்காணேன்,எனக்குமுத்திதருவமென்றாரவருமாண்டார்எளிதானதீக்ஷைபெற்றுமிவருமாண்டார் உனக்கெனக்கென்றறிந்து வுரையுணர்ந்துகொள்வார் உகமையறிந்தவருரைத்துப்பறையென்றாரே.

(இ-ள்.) தனக்குத் துன்பம் வருவதையுணராமல் சாஸ்திரங்களைச்சொல்லிவயிறுவளர்ப்பார்கள்! இவற்றால் மறுபிறப்பில்லையென்றேஉணர்ந்தேன் எனக்குமோட்சம் கொடுக்கின்றோமென்றவரும் தீட்சைபெற்றவர்களும்மாண்டார்கள் உனக்கெனக் கென்றதையுணர்ந்து எம்மைப்பறையன் என்கிறார்கள்.

உகமையறியாமனிதர் கோடாகோடி உரையறியாமாந்தரொரு கோடிகோடி,வகையறியாசாஸ்திரிமார்கோடாகோடி வண்மையில்லாதெளிவுடையோர்கோடாகோடி நிகையாமலெனைப்பறையனென்றுசொல்லுந் நிங்கானமாந்தரெனைத்தள்ளினார்கள், நகைபுரிந்து புரமெரித்தசோதிநாதன் நவினபுவிபடைத்தவகை நாம்சொல்வோமே.

(இ-ள்.) தன்மையுணராதவர்கள் அநேகர்,சொல்லுணர்ந்தவர்கள் வகைதெரியாதசாஸ்திரிகள் அநேகர், தெளிவையுடையவர்கள் அநேகர், மனத்தி

சையாமல் என்னைப்பறையனென்று சொல்லுகின்றதீயவர்கள்என்னைத்தள்ளினார்கள் ஆனால் ஈஸ்வரசிருஷ்டியை நான்சொல்லுகிறேன் எ-று. (௲௫௪)

ஈஸ்வரசிருஷ்டி-தரு

ஆதியானசோதியிந்தப்புவிபடைத்த-மூன்னோர்
அருமையைச்சொல்லுகிறேனண்டைகேளீர்.

(இ-ள்.) பூர்வத்தில் கடவுள் இவ்வுலகசிருஷ்டி செய்ததைச் சொல்லுகிறேன் எ-று.

ஆதியில்லை அந்தமில்லைரூபமில்லை-காலம்- அண்டரண்டபேரண்டமும்பிண்டமில்லை,ஜாதியில்லைநாதியில்லை ஆண்பெண்ணில்லாக்-காலங்-தாணுவாய்நாதவிந்தவூணுதலாக, ஓதியதோர்வேதமில்லைமறையோரில்லை-சாஸ்திரம்-ஒன்றுமில்லையன்றுமின்றுமொன்றதாச்சு-இந்த,சேதிவரலாற்றியநாள்செல்லுஞ்-ஜெகம் - ஜெனனமெடுத்தாலிந்ததேகங்காணுண்டே-ஆதி.

(இ-ள்.) ஆதி அர்தம்! அரூபம், ரூபம், காலம்,அண்டம், பகிரண்டம், பேரண்டம்,பிண்டம், சாதி, நாதி, ஆண், பெண், காலம், நாதம், விந்து வேதம்,சாஸ்திரம், பிராமணர்முதலியவர்களில்லை இதைவரலாறறியச் சிலநாட்கள்செல்லும் அவ்வாறே இந்தத்தேகம்வந்த வடைவுமாகும் எ-று. (௲௫௫)

மின்னலிடிக்காற்றுமழைகொண்டதுமில்லை- நல்ல-விண்ணுமில்லைமண்ணுமில்லைவேதமுமில்லை-மேலுஞ்,சென்னலில்லைஅன்னமில்லைதண்ணீருமில்லை - இந்த-ஜெகதலம்படைத்தவகை செப்புவேன் காணும்-ஆதி, பின்னுமில்லைமுன்னுமில்லைபேருவகிலில்லை-வளம்-பெருமையைச்சொல்லவும்யானும் பேர்தானில்லை-முன்பு,தன்னையறிந்தென்னைவளர்த்தன்னையினாலும் - இந்த-சர்வலோகமானவகை சாற்றுவேனுண்டே-ஆதி.

(இ-ள்.) மின்னல், இடி, காற்று, மழை, விண்,மண்,வேதம்,சொன்னம் அன்னம், தண்ணீர், இவைகள்யாவுமில்லை. இந்தச்சகம்படைத்தவிதம் பின்னும், முன்னும், பேருலகு, முதலியவைகளுமில்லை என்னையறிந்து என்னை வளர்த்த அன்னையினாலும் சர்வலோகசிருஷ்டியைச் சொல்லுகிறேன் எ-று.

ஈரேழுபதினாலுலகுமெங்செங்குமில்லை-நல்ல-இமையோர்களிந்திராதியில்லாதநாளில்-ஆதி,பேரிருபத்தேழு நக்ஷத்திரங்களில்லாக்காலம்-பேருலகும்வந்தவகைபேசுவேன்காணும்-அந்தம், வேரேழுவாரிதி வானம்வந்தவகைகாண்-இந்த-மண்ணும்விண்ணுமூற்பவித்தமார்க்கமிதாகும்-புவி, காருலகுமேபடைத்தகர்த்தனருளால்இந்தக்கருத்தையுநூல்விதியாய்கண்டேன்காணுண்டே-ஆதி.

(இ-ள்.) பதினான்குலோகங்களெங்குமில்லை இந்திராதியர்களில்லை, இருபத்தேழுநட்சத்திரங்களில்லை இப்படிப்பட்டகாலத்தில் உலகம் வந்தவிதத்தைப்பேசுவேன் வாரிதியும், வானமும்வந்தவகையாகும் இது உற்பவித்தவிதமிதுவாகும். இவ்வண்ணம்படைத்த கர்த்தனுடைய திருவருளால்இதையறிந்து நான்கண்டேன் எ-று. (௬௫௭)

தாபரசங்கமுமில்லைசெந்துகளில்லை-நல்ல-தாணுவாய்விளங்குங்கதிர்தண்மதியில்லை, பாரதனிலாதித்தன் நக்ஷத்திரமில்லாக்-காலம்பார்படைத்தஓர்முதலைப் பாடுவேன்காணும்-ஆதி, ஆரபாரமாயுலகிருதானமூடி-மேலும்-ஆதியெனறஜெகத்திருள்முனைதானடி-விந்துவாராதெழுபாருக்குள்ளே விளங்கியிருந்த-நன்றாய்- வழுவாமலுமெழுந்தவாறுசொல்வேனுண்டே-ஆதி.

(இ-ள்.) தாவரம், சங்கமம், செந்துக்கள். சூரியசந்திரர்கள், நட்சத்திரங்கள், இவைகளில்லாதகாலத்தில்படைத்த ஒருமுதலைநான்பாடுகிறேன் அவைகள் இருள்வெளிவந்த வரலாற்றைச் சொல்லுவேன் எ-று. (௬௫௮)

பாரானவட்டம்பத்தனந்தங்கோடி-நல்ல- பரிவாசலதுரெட்டிப்பசருவேன்காணும்--னல், நேரானவன்னியதுமிரட்டியதாகும்-நிலைநெறியானவாசிவெளிரெட்டியதாகுபபின்பவாறதொருநாதத்திலும்விந்துந்தோன்றி-மதி-வலுவானவிந்தில் சதாசிவனுந்தோன்றி-செயல், சீரானசதாசிவத்தில் மயேஸ்பரன்தோனறிபின்பு-சிறந்தமயேஸ்பரத்தில் ருத்திரன்தோன்றி-ஆதி.

(இ-ள்.) அவ்விந்து வட்டத்தில் வாசலில் இரட்டித்தவன்னியாகும் நிலையானவாசிவெளி ரெட்டியாம் நாதத்தில் விந்துவும் விந்துவில்சதாசிவனும்அவனில், மகேஸ்வரனும், அவனில்ருத்திரனும் உண்டாம் எ-று. (௬௫௯)

உதித்தொருருத்திரனில்விஷ்ணுவுந்தோன்றி-மேலும் .ஊன்றியும்விஷ்ணுவுக்குள்பிர்மாவுந்தோன்றி-யுடல்,கதித்ததொரு பிரமாவிலாத்துமந்தோன்றி-கரு-கனமானஆத்துமாவிலாகாசந்தோன்றி-ஆண்டே,.சோதித்தஆகாசந்தனில்வாயுவுந்தோன்றி-சித்தி- சிறந்தருளும்வாய்வதுக்குள்தேயுவுந்தோன்றி-மூலங்,கதித்ததேய்வுதனிலுமப்புவுந்தோன்றிமிகவுஞ்-சதிரான அப்பதுக்குள்பிருதிவியாண்டே.

(இ-ள்.) அங்ஙனம் உதித்தஉருத்திரனில் விஷ்ணுவும் அவ்விஷ்ணுவில் பிர்மாவும், பிர்மாவில ஆத்துமாவும், ஆதமாவில் ஆகாசபூதமும்ஆகாசத்தில் வாயுபூதமும், வாயுவில் தேயுபூதமும் தேயுவில் அப்புபூதமும் அப்புவில் பிருதிவிபூதமும் தோன்றும எ-று. (௬௬0)

விருத்தம்

வளர்ந்தருளும்புவிதனிலு மாண்டேகேளீர்வளமாகும் வித்தில்லாவிளைவுண்டாகி, தளர்ந்ததித அஞ்சுருவாயாணியாகிசர்வலோகங்

களுக்குத்தானுவாகி, தெளிந்தெழுந்த அண்டபிண்டம் கண்டமாகி ஜெகத்திலுள்ளஜீவசெந்துசெழிக்கத்தானுங், குளிர்ந்தருளுமாதாரக் கமலமாகிக் கொண்டுநின்றசுழிமுனையாமகமேராண்டே.

(இ-ள்.) உலகத்திலுள்ள ஆண்டமார்களே! நீங்கள்கேளுங்கள் வித்தில்லாமல் விளைந்ததாய் பஞ்சரூபமாய் உயர்ந்ததாய்அசைவற்றதாய்அண்டபிண்டங்களான ஜெகத்திலுள்ள ஜீவர்கள்செழிக்க ஆறுதாரக்கமலமாய்நின்றசுழிமுனையே மகமேருவாகும் எ-று. (௬௬௧)

ஒங்காரமாவதுவுமகமேராகும் உதித்துநின்றபர்வதத்தைச்சுற்றிமேவும், நீங்கசிது அசையாதகிரிதானுண்டுநினைவரனுமேதெனவே யாண்டேகேளீர், வாங்கார அகாரமுடன்உகாரம்ரெண்டு மருவிநின்றநகாரமுடன்மகாரததோடு, பாங்கானசிகாரமூடன்வகாரய்ரெண்டு பரிவானயகாரமதாலக்ஷரமுண்டாச்சே.

(இ-ள்.) பிரணவமே மகமேருவாதம் அர்தமலைச்சுற்றி மற்றொருமலையுண்டு அகாரஉகாரங்கள் இரண்டுட் கலந்துநின்ற பஞ்சாட்சரங்களும் அவ்விடமுண்டு எ-று. (௬௬௨)

கூறுகின்றஅக்ஷரமுமஷ்டவெற்பாய் கொள்கிறதோர்சுழிமுனை தான்மகமேராகும், மேருவெனுமெழுந்த நாளிமுனையிலேசான் விரிவதிலுஞ்சிவசிங்காதனத்தின்மீதில், சீர்கொண்டபார்வதியுஞ்சிவனுமங்கே ஜெகந்தழைக்கஎழுந்தருளி யிருப்பாரொக்க, பேர்கொண்டவிருவருந்தானிருந்தவீட்டில் பேசுகிறேனெனமூன்று மொன்றுச்சாண்டே.

(இ-ள்.) மேற்சொன்ன எட்டட்சரங்களும் அஷ்டகுலபர்வதமாய் சுற்ற மகமேருவென்னும் சுழிமுனைவில் சிவசிங்காதனத்தில் பார்வதியுஞ் சிவனும் உலகந்தழைக்குநிமித்தம் எழுந்திருப்பார்கள் அப்படிஅவர்கள் எழுந்தருளியிருக்கும் வீட்டின்கண் மூன்று இருந்தவரலாற்றைப் பேசுகின்றேன் எ-று.()

மூன்றுபதியேதென்றுலுணரக்கேளீர் முதல்மேலுமடியினிலும் நடுவில்தானும், வேன்றுமகாமேருவுந்தான் முடியிலாதல் விதமாக எழுந்துநிற்குமேன்மேலாச, தோன்றிநிற்குங்கயிலாச மிதுதானென்றுதுடர்ந்து நிற்பாரீஸ்பரனீஸ்பரியுந்தானுய், தாண்டிமுடியாதவொளிபிரகாசத்தைச் சொல்லுகிறேனுவசெங்குஞ் சுபஸ்தமாண்டே.

(இ-ள்.) மூன்றுபதிகளாவன முதல், நடு, அடியென்னும்மூவிடங்களைக் கொண்டமகாமேருவின் முடியில்தோன்றுவது கயிலாசமாகும் இனி அவர்களின் பிரகாசத்தைச் சொல்லுகிறேன் எ-று. (௬௬௪)

அக்கினியுமேருவுக்கடிதானகும் ஆதித்தனதினடுவில்பிரகாசிக்கும், திக்கினியசந்திரனுமுடியதாகுஞ் செப்புகிறேனதற்கப்பாலள

வற்றேபாழ், தக்கினிமுப்பாழதுக்கு மூன்றுபேருஞ் சாற்றுகிறேன் சிவம்பாழாஞ்சத்திபாழாம், வைக்கினிபோல்பரமதுக்குப்பரையினு ட்டங் கருத்துபோலளவற்ற பெரும்பாழாண்டே

(இ-ள்.) அக்கினியானது மேருவுக்கு அடியாகும் அதின்நடுவில் சூரியன் பிரகாசிப்பான் சந்திரன் மேருவுக்குமுடியாகும் அதற்கப்பால் மூன்று பாழா கும் அவையாவன சிவன்பாழ், சத்திபாழ், பெரும்பாழ் என்பன எ-று. ()

அளவற்றபெரும்பாழின் வெளியிலேதான் ஆதியுமனாதியுமாய் ரூபமாகி, அளவற்றபேரொளியா யனேகங்கோடி ஆணுமல்லபெண் ணுமல்ல அலியுமல்ல, விளைவற்றுநின்றதல்ல விளையாதல்லவித்தாகி நாதாந்தஞானரூபக், கலைபெற்றுஇலங்கும்பிரகாசமான கதிர்மதியி லொருபுறமாய்மலராப்பூத்தே.

(இ-ள்.) பெரும்பாழின்வெளியில் ஆதியநாதியால் வேரொளியாய் ஆண் பெண் அலியற்றதாய் மலர்போல் பூத்ததால் எ-று. (௬௬)

கண்ணுருவாய்க்கண்டதல்லகாணுதல்ல கருத்தாலுமதித்ததல் லகருதாதல்ல, என்னுருவாய்நின்றதல்ல இல்லாதல்ல எழுதிமுடிந்த திந்ததல்ல அறியாதல்ல, விண்ணுருவுமானதல்ல ஆகாதல்ல வேதம றையொழிவதல்லஒழிபாதல்ல, நண்ணுதலின்நின்றதல்லநில்லாதல்ல நயம்பெறவஞ்சுயம்பெனும்பிரகாசமாண்டே.

(இ-ள்.) கண்களுக்கு உருவங்கண்டதும், காணாததும் கருத்தால் மதிப்ப தும், எரிக்காததும், எண்ணுருவாயும், எழுதிமுடிவதும், ஆகாரரூபமும், வேத ங்களில்பேசவதும், அல்வ சுயம்பிரகாசமாய் நிற்பதாகும் எ-று. (௬௭)

மந்திரத்தால்கற்பத்தால்கற்றாதல்லவாசித்துஅறிந்ததல்லஅறி யாதல்ல, தந்திரத்தாலெடுத்தல்ல எடுக்காதல்லக்ஷணத்துக்குளிருப் பதல்லதனதேயல்ல, சுந்தரமாய்ரூபமல்ல அரூபமல்லசொல்லாதவ டிவல்ல சோதிரூபம், அந்தரமாய்நிராதார வெளியிலேதான் அடியி லொருகொடிமுடியாய் தழைத்ததாண்டே.

(இ-ள்.) மந்திரத்தாலும் கற்பத்தாலும்உணர்வதல்லபடித்து அறிந்ததும் அறியாததுமல்ல, தந்திரத்தால்எடுத்ததும் எடுக்காததுமல்ல க்ஷணத்திலிருப் பதல்ல சனதல்ல, ரூபமல்ல, அரூபமல்ல, சொல்தாதவடிவல்ல அந்தரமாய் ஆதாரமற்ற சிதாகாசத்தில் அடியில்ஒருகொடிமுடியாய்த் தழைத்தது எ-று.

தழைத்தெழுந்த கயிலாசந்தள்ளிடாமல் தாங்கினதுமேதென் றால்நிராதாரந்தான், வழைத்தநிராதாரத்தை ஆதாரந்தாங்கும்வள மானஆதாரந்தன்னைத்தானும், முளைத்தெழுந்தமூலாதி பாதந்தாங் கும் முதல்மூலமக்கினிதான்சூக்ஷமாகி, செழித்தெழுந்த மூலாதிபா தமாண்டே செப்புகிறேன்மேல்மேலாய்சிறந்துநின்றே.

(இ-ள்.) அப்படி தழைத்தெழுந்த கயிலாயமானது தள்ளாமற்றுங்கினது என்னவென்றால் மூலமுதலிய ஆறுதாரங்கள் கீழ்மேலாய்நின்றதேகாரணமாகும் எ-று. (கூகூக)

ஆதாரமாவதுமண்டந்தானாய் அழகானபொன்னிறங்காண்மகமேராகும், நிராதாரமாவதுவுமஷ்டவெற்புநெரியது நிதானமெனுஞ்சிவரூபங்காண், சூதானகயிலாசமீதானத்தில்தோன்றிய நிராதாரகூக்ஷங்கண்டாய், தாதுநிராதர மதிலாதாரந்தோன்றி தழைத்தவாதாரமதில்பிருதிவியாண்டே.

(இ-ள்.) ஆதாரமாவது அண்டமாகும், மகாமேரு பொன்வர்ணமாகும் அஷ்டகுலபர்வதங்களே நிராதரமாகும், இவைகளேசிவரூபமாம் இதில்தோன்றிய நிராதாரகூட்சத்தில் தழைத்த ஆகாயத்தில்பிருதிவியுண்டாயிற்று எ-று.

வந்துதிக்கும்பிருதிவியிலன்னந்தோன்றிவகையானஅன்னமதில்மச்சைதோன்றி, சிங்ஙையுள்ளமச்சைதனி லுதிரந்தோன்றிதிரமானவுதிரமதிலுனீர்தோன்றி, முந்திநின்றவூனீரில் நிணமுந்தோன்றிமுதலானநிணமதில்சுக்கிலந்தான்தோன்றி, விந்துநித்தநாதமதுமிரண்டுங்கூடிவிரிந்துகலந்தழைத்தவகைவிளம்பினேனே.

(இ-ள்.) இப்படியுண்டான பிருதிவிபூதத்தில் அன்னமும் அதில்மச்சையும் அதில்உதிரமும் அதில்நீரும், அதில்நிணமும், அதில்சுக்கிலமும் அதில்நாதமும்சேர்ந்து உலகத்தில் உயிர்கள்உண்டாயின எ-று. (கூஎக)

சென்னல்முதலானதவவிந்துங்கூடி செழித்துலகந்தழைத்துபுவிவளர்ந்துமேவி, அன்னமயந்தன்னிவொருஅவ்வியந்தோன்றிஅவ்வியத்தில் சத்ததீவுகளுந்தோன்றி, முன்னைவருந்தாதுவினில் நாற்காற்செந்து மேலானபக்ஷிநரர்தாபரங்கள், சொன்னவிந்திலமைந்தஜீவராசியோடு தொல்லுலகிலூர்வனவுந் தோன்றுமாண்டே.

(இ-ள்.) இவ்வாறுஉண்டாய் அன்னமயத்தில் அவ்வியங் காணப்பட்டு அதில்சததீவுகளும், நாற்நாற்செந்துகளும், பட்சிகளும், நரர்களும், தாவரங்களும் ஊர்வனவும் தோன்றும் எ-று. (கூஎஉ)

ஜெனித்தவகையெவ்வாறு விளம்பக்கேளீர் ஜெகந்தழைக்க எழுந்தபரஞ்சிந்தைகூர்ந்து, மனித்தசதாசிவனையருள் புரிந்துமேவும் மகத்துவசதாசிவனுமயேஸ்பரற்குச்சொல்லதனித்துமயேஸ்பரனும் ருத்திரற்குச்சொல்லசாதகமாய்ருத்திரன்மாலுக்குச்சொல்ல, இனித்திருந்ததிருமாலை யழைத்துரைக்க எழுந்தருளநாலுலகுந் தழைத்ததாண்டே.

(இ-ள்.) பிறந்ததெப்படியென்றால் பரம்சதாசிவனைப் படைத்து சதாசிவன் மகேஸ்வரனுக்குச்சொல்ல அவன்உருத்திரனுக்குச்சொல்ல அவன்திருமாலுக்குச்சொல்ல, அவன்பிரமனுக்குச்சொல்ல நாலுலகமும் தழைத்தன.

மண்டலமுந்தழைக்க்அயன் நினைத்தபோது மருவுமுமையாளு டையாளன்னையாளுள், நின்றஅயனந்த வட்டப்பீடமானார் நேராகு மோரெழுத்துநாதமாச்சு, அண்டமதில்நின்றசதாசிவன்தான்காணு ம்ஆதிபரநாதமதில் விந்துவானார், என்றிருவர்மனமகிழ்ந்து லிங்கத் துள்ளாயிருந்துலகம்ஜிவசெந்து தழைத்ததாண்டே.

(இ-ள்.) இவவண்ணம் பிரமதேவன் நினைத்தபொழுது உமையவள் தா யாகியும் அரன்சக்திபீடமாயும் ஆகஓரெழுத்து நாதமாச்சுது அண்டத்திலிரு ந்தசதாசிவனும் ஆதியாகிய உயர்ந்தநாதத்தில் விந்துவானார்என்கிற இவர்கள் மனமகிழ அவர்கள்லிங்கத்துள்ளிருந்து உலகிற்செந்துக்கள்தழைத்தனவாகும்

திருமாலுமூலமதாய் நின்றுமேவி செழித்துஅயன்லிங்கமதாய் வளர்ந்துஓங்கி, கருவானசத்தியதுநாதமாச்சு கருதும்பராபரமென வும்விந்துவாச்சு, மருவானசிவனுமையும்நாதவிந்து மண்ணிலெழுதா பாரமும்வளரலாச்சு, உருவாகுமுகில்நாதந்துளியேவிந்து உகந்துலக ந்தழைத்துயிருமெமேத்ததாண்டே.

(இ-ள்.) விஷ்ணுவும் மூலமாயிருந்துசெழிக்கபிரமன்லிங்கமாய்வளர்ந்து யர்ந்து, சத்திநாதமாக பெரியபரம்பொருளாய் விந்துநின்றுசிவனும் உமாதே வியும் நாதவிந்துக்களாயிருந்து ஏழுவகைத்தோற்றங்களும் உண்டாயினவாம்

என்றுமுள்ள படிபுவிகள்தழைத்தவாறும் எண்ணரியஜீவசெந் துவளர்ந்தவாறும், கண்டறியும்ஜெகம்படைத்த கருத்தின்வாறும் கருவிகரணாதிமுதல் செனித்தவாறும், ஒன்றுபொரு ளொன்றறிந்து வளர்ந்தவாறும் உள்ளுணர்ந்துபாராதாரறிந்தவாறும், தெண்டிரை யில்விளங்குகின்றபரத்தின்வாறுந் திருவுளத்தால்நினைக்கஇந்தப்படி தாணண்டே.

(இ-ள்.) எந்நாளுமுள்ளவாறே உலகந்தழைத்த விதமும், அளவிற்கரிய ஜீவஜெந்துக்கள் வளர்ந்தவிதமும் உலகசிருஷ்டியின் காரணமும், கருவிகரணா திகள்உண்டானவிதமும், ஒருபொருளையொருபொருள் உணர்ந்தவிதமும்உள் ளேயறிந்து பாராதவர்கள் உணர்ந்தவிதமும், உலகத்தில்விளங்கும் பராபரத் தின்விதமும், மனத்தால் இதைஉலகத்தில் நினைக்கவேண்டும் எ-று. (௧௭௧)

படர்ந்தெழுந்தபுவிதனிலு மாண்டேகேளீர்பலநூலுஞ்சாஸ்தி ரங்கள்விதிக்கவேண்டி, சடைமுடிமேல்கரித்தருளும் பரத்தைநோக் கிதாளிணையில் விழுந்துபிரமாசரணஞ்செய்து, திடத்துடனேஜெகந் தழைக்கத்திருத்திமேலாம்திதிவாரம்நாள்கள் திங்கள்சிறும்சேவனும் விடுத்துயினியதில்விதிப்போ மியல்பாய்த்தானும்மெல்லடியில்விழுந் துவாய்புதைத்துநின்றான்.

(இ-ள்.) இவ்வாறுவிரிந்த உலகத்தின்கண் பலசாஸ்திரங்களையுண்டாக்க வேண்டி சடாபாரமுள்ள பரயசிவனை நோக்கித் திருவடிகளில் விழுந்து நமஸ்

காரஞ்செய்து திட்டமாக உலகத்தழைக்கும்படிசெய்து மேலாகியதிதி வாரம் நட்சத்திரம், மாசம், இவைகளை எடுத்துச் சொல்லுகிறோம் என்றுசொல்லி வாய்புதைத்துநின்றான் எ-று. (கூளள)

அடியில்விழுந்தெழுந்து பராபரனைநோக்க ஆதிபராபரனுமவ ரேதுசொல்வார்,கொடியமகாமேருவெனும்வரைதானுள்ளே குடியி ருந்தமுப்பாழுக்கப்பாலேதான்,படியுமொருஆறுவரை அதிகந்தோ ன்றும் பகர்ந்தவரைகடந்தந்த வட்டத்துள்ளே, முடிவிலொருவரை தோன்றுஞ்சூக்ஷத்துள்ளேமுதல்வேதம்பரையதுக்குள் முடிந்ததா ண்டே.

(இ-ள்.) கால்களில் நமஸ்காரஞ்செய்து பரமசிவனைப்பார்க்க அவர்சொ ல்வதாவது மகாமேருவுச்குள்ளிருக்கும், முப்பாழுக்கப்பால் ஆறுதாரங் காண ப்படும் பின்னர் ஒருவட்டந்தோன்றும் அதன்முடிவில் ஒருவரை தோன்றும் அதில்முதல்வேதமான இருக்குமுடிந்தது எ-று. (கூளஅ)

அரன்மொழியைக்கேட்டுஅயனுண்டேகேளீர் அடுக்கானஅக ண்டவெளியதனிலேதான், வரமளித்துவாணிலெழு லிங்கத்துள்ளே வகுத்துரைத்தசரஸ்பதியின்கருவிலேதான், திருவிருந்துவிளையாடும் விரிவுக்குள்ளேசெழித்தசுழியொடுங்கிநின்ற பரையைவிட்டு அறிவ றிந்தபலநூல்கள்புவியிலேதான் அறிந்தமட்டும் வகுத்துரைத்துப் பிறந்தேனுண்டே.

(இ-ள்.) இவ்வாறுசொன்ன பரமசிவனுடைய வார்த்தையைக்கேட்டு பிர மனனவன் தான் அறிந்துகொண்டவரைக்கும் சிருஷ்டிக்க அதில்பிறந்தவன் நான் எ-று. (கூளக)

பரையைவிட்டுநானுதித்துவந்தமாத்திரம் பகர்ந்தெழுந்துஅய் யரென்னையுகந்துமேவி, கரையடங்காலிங்கமதைப் படைத்துவைத் தோங்கருதுகின்றசரிதையுடன்கிரியையோகம், துரையறிந்தஞான மிதுநாலுவேதஞ் சொல்லிவைக்கவேண்டுமென்று வேண்டினார்கள், நிறைபறிந்துஅவரவர்க்குலபித்தாரீசன் நீள்புவியிலிறப்பிறப்புமிரண் டும்போச்சே.

(இ-ள்.) பராபரையைவிட்டு நான்பிறந்துவந்த மாத்திரத்தில் ஐயரான வர் என்னையடைந்து லிங்கத்தைப்படைத்து வைத்தோம் சரியை, கிரியை யோகம் ஞானம் இவைகளைச்சொல்லி வைக்கவேண்டுமென்று என்னைவே ண்டினார்கள் எ-று. (கூஅ௰)

இந்தமொழிஐயரென்னைப்பார்த்துமேவி எடுத்துரைக்கப் பார் த்தடிமையியம்புங்காலே, யெந்தைபிரானீயாச்சுநீநானுச்சுளனைவகுத் தபரைக்குள்ளே யிருந்திட்டேனன், சந்தேகஞ்சொல்ல இனிவேண்

டாமென்று தாள்பணிந்தெழுந்துநின்றுகரங்குவித்த,விந்துதனிலே பிறந்தஜெனனமாச்சு மேலானபலவிதமாய் விதித்தோமாண்டே.

(இ-ள்.) இப்படி ஈஸ்வரரானவர் என்னைப்பார்த்துச்சொல்ல அடிமையாகியநான் அவருடைய திருவடிகளில்விழுந்து நமஸ்காரஞ்செய்து வரம்சொல்லுவேன் உலகத்தில் ஜீவராசிகளெல்லாந் தழைக்கும்படி உங்களையெல்லாம் நான்சிறப்பிப்பேனானல், உலகத்தார் என்னைத்துதிக்கவேண்டும் என்ன அது கேட்டு உலகத்தில் நீர்போமென்று அருளிச்செய்யவேண்டுமென்று அர்ச்சனைசெய்தேன் எ-று. (கூஅக)

வேதமெனும்புராணநூல்விதிக்கச்சொல்லி விளம்புகின்றஐயரடிவிழுந்துபோற்றி,சாதகமாயொழுவிபரம்புகழ்வேன்காணுந்தரணிதனில்செந்துவெல்லாந்தழைக்கவேண்டி, போதகமாயுஞ்சனையான்புகழ்வேனாகில்புவிதனிலுமதுகண்டு துதிக்கவேணும் ஆதரவாய்மண்டலத்தில் நீர்போமென்றும் அருள்புரியவேணுமென்று மர்ச்சித்தேனே.

(இ-ள்.) வேதம், புராணம் இவைகளை உண்டாக்கச்சொல்ல,நான் அவருடைய திருவடிகளில்விழுந்து நமஸ்காரம்செய்துவணங்கி ஒருபுறமாய் நின்று தேவரீரை நான்புகழ்வேனானல் மற்றஉலகஜனங்கள் என்னைப்புகழும்படி நேரிடும் எனக்கு அவைகளையெல்லாம் விட்டு அருள்புரியவேண்டும் எ-று.

திருவடிபொற்பாதம்போற்றித் துதித்தேன்யானும் தேவசிவசாம்புவனார்பட்டந்தந்தார்,பொருளாகுந்திருமால்கார்முகிலுமானார் புகழ்ந்துருத்திரன் அக்கினியுமின்னலானார், சிறப்பானபதினாறும் வீட்டுக்குள்ளே சிறந்தமயேஸ்பாரிடியுங்காற்றுமானார், மறப்பாகநின்றசத்திராதமானாள் மருவுபரவெளியுமதுமேகமாண்டே.

(இ-ள்.) திருவடிகளைத் துதிசெய்தேன் அதினால்எனக்குச் சாம்பசிவனார் பட்டங்கொடுத்தார் திருமால் கார்முகிலும் ருத்திரன் அக்கினியும் மின்னலும் பதினாறிதன்கொண்ட விசுத்திவீட்டிற்குள் சிறந்திருக்கும்மயேஸ்வரர்இடியுங் காற்றும் சத்திராசமும் பரவெளிமேகமுமாக ஆனார்கள் எ-று. (கூஅங.)

துய்யவெளியருந்ததியின் குலந்தானுகுஞ் சொல்லுகிறேனவனைவரவழைத்தயானும்,வையகத்தோர்புகழ்ந்தேற்றவூனுக்குள்ளே வகுத்திருப்பதேழுநக்ஷத்திரமுமாகும்,ஐயமறும்வானில்நக்ஷத்திரங்களெல்லாம்ஆதிசிதாசிவனருளாலானதாறுய்செய்யபுகழன்னமதில் நின்றவில்லுஞ் சிறந்தருளுஞ்சிறுபரையால் வளர்ந்ததாண்டே.

(இ-ள்.) ஆகாயம் அருந்ததியின்குலமாகும் ஆகையால் அவனைநான்வரவழைத்து உலகத்தார்புகழ்ந்து துதிசெய்ய சரீரத்திற்குள்ளே வகுத்து இருபத்தேழுநட்சத்திரமுமாகும் வானிநட்சத்திரங்களெல்லாம் சதாசிவனுடையதிருவருளால் உண்டானவிதமும், அன்னத்திலிருந்தவில்லும் சிவசத்தியினால் வளர்ந்தது எ-று. (கூஅச)

அவையதுக்குள்ளேயேழுவாரமாச்சு அவன்குலமென்றென்கு
லத்திலமைத்தவாறும், இவையடக்கத்தாலுஞ் செழுந்திதிகளாச்சு
என்னைவகுத்துப்பறைக்குலத்தியம்பலாச்சு, திவையடக்கதுள்ளிருந்த
பிரமத்துள்ளே செயலானசராசரமும்பிறக்கலாச்சு, தவ்விருந்தவப்
பிரமப்பிரபையுள்ளே தனித்ததொருசுக்கிரனுருதித்ததாண்டே.

(இ-ள்.) அவைகட்குள்ளாக எழுவாரங்களும் அவனுடைய குலமென்ற
என்குலத்தில் உண்டாக்கினவிதமும் இவைகளெல்லாவற்றாலும் செழுமை
யாகிய திதிகளும்வகுத்து என்னைப்பறைக்குலத்தானென்று சொல்லலாச்சுது
இவற்றிற்குள்ளாகவிருந்த பிரமத்திற்குள் சரம், அசரம்இரண்டும் உண்டா
யின அந்தப்பிரமஜாலத்திற்குள்ளே சுக்கிரனார்உதித்தனர் எ-று. (௬௮௫)

திங்களுடன்திதிவாரம்வகுத்தபின்பு திருவுளத்தின் கமலமலர்
பணியயானும்,சங்கரனாரென்னைமகிழ்ந்ததேதோவென்றார் ததியினுடன
றிந்துலகந்தழைக்கவேணும்,இங்கிதமாயிதுக்கெவரைவைப்போமெ
ன்று எழுந்துகரங்குவித்தடியேன்பணிந்துபோற்றி, கங்கையணிசட
வுளவர்மதியுமானார்கருத்திலறிந்துகமைமயெனமகிழ்ந்திட்டேனே.

(இ-ள்.) மாசம், திதி, வாரம், இவைகளானபின்கமலமலர்பணியநானும்
சங்கரனார் என்மீது மகிழ்ச்சியடைந்து ஏதோகாரணமென்று கேட்டார் சமய
த்துடனுணர்ந்து உலகந்தழைக்கவேண்டும் இங்கிதமாய் இதற்கெவரைப்
போமென்று எழுந்துகைகுவித்து அடியேனனவன் வணங்கித்துதிசெய்துமகி
ழ்ச்சியடைந்தேன் எ-று. (௬௮௬)

செங்கதிராய்ப்புவிதனிலுஞ்சூழ்ந்துமேவுந் திருவுருவங்கொண்டு
பாஞ்செப்பினார்காண், அங்கெனவேயானறிந்து அறிவினாலும்அரு
ளறிந்துஅருபநிலையானும்பெற்றேன், பொங்கமுடன் புகழ்ந்திருந்
தேன்பொருளுங்கண்டேன்,பூரணத்தையொருநாளும்போக்காவண்
ணம், எங்கள்மதியிருந்ததினாலெல்லாமாச்சு யெம்பிரானியம்புநிலை
யான்கண்டேனே.

(இ-ள்.) அவர்சூரியனாய் உருவந்தாங்கி பரவஸ்துவை எனக்குஉணர்த்தி
னார் அங்ஙனமே அதைநான்உணர்ந்து என்னுடைய ஈஸ்வரியினால் அருவநி
லையைப்பெற்றேன் புகழ்ந்துமிருந்தேன் உண்மைப்பொருளையுங் கண்டேன்
பரிபூரணவஸ்துவை ஒருநாளும்போக்காதபடி எங்களுடைய சிந்தைஒரேபடி
த்தாயிருந்ததினால் எல்லாக்குணங்களும் எங்களுக்குஉண்டாச்சுது எம்முடை
யபரம்பொருள் சொல்லுநிலையையும் நாங்கள்கண்டோம் எ-று.

சொன்னமொழி கேட்டெழுந்து சிறுபெண்ணாத்தாள்திருவடி
தான்கமலமலர்துதித்துமேவி,என்னமொழிநீருரைத்தீரென்பிராநே
சா எனக்கடிமையுனையன்றியினியொன்றில்லை, இன்னிலத்திலிருளக
ற்றிவெளியைத்தாண்டி யெழுந்ததொருகடினை முப்பதினுமாகும்,

அன்னவெளிதனையறுக்கத்தோனுவீர்காண் அடியாளுந்தனித்திருக்கமாட்டிலேனே.

(இ-ள்.) மேலேசொன்னசொல்லைச் சிறுபெண்ணாகிய தாய்கேட்டு எழுந்துதிருவடித்தாமரைகளைத்துதித்து என்பிராணநாதரே! நீர்என்னசொல்சொன்னீர் என்ன அதற்கவர் எனக்கு அடிமையாயுள்ளவர்கள் உன்னையல்லாமல் வேறொருவரிலர் ஆகைபால்நீயேகாரணத்தை தனியாயிருந்து அநுபவிப்பாமல் என்ன நான் தனிச்திருக்கமாட்டேன் என்று புகன்றனன் எ-று. ()

தனித்திருக்கதாமென்றுவுமைதானேக்கி சச்சிதானந்தபரமேதுசொல்வார், செனித்தபுவிவிளங்குஞ்சலைபதினுருகில் சேர்ந்திருப்போமுன்னிடத்திலகலாமற்றன், கனித்தகலைபொன்றுசகாளொன்றுகக்சருதிடுமூவஞ்சாளைாகும்போது, செனித்தவுயிர்பாதுக்குங்குளிரவென்னில் தெரிந்தொருநாள்பிரிந்திருப்போமறிவிராண்டே.

(இ-ள்,) இவ்வாறு உமாதேவிசொல்ல பரமேஸ்வரர்சொல்வதாவது உலகத்தில் பதினறுகலையோடு பிறந்தால் உன்னிடம்பிரியாமற்சேர்ந்திருப்போம் உலகத்தில்சென்மித்த உயிர்கள்எவைக்கும் குளிர்ச்சிவேண்டுமானல்தெரிந்து ஒருநாள் பிரிந்திருப்போம் எ-று. (௯௮௯)

தப்யமராமானசிவம் விளக்கமேவி தொழுதுமையாள் வணங்கி செங்கதிருமானள், வையகத்திலிருள் தனையேயறுத்துச்சுட்டு மதியதனல்வெளியாகிபொளியாய்நின்றள், ஐயமறஇருவருங்காகைாசத்தில்அகிலபுவனந்தழைக்கப்புட்பம்போலாய்,வெய்யவனும் வெண்மதியுமுலகந்தன்னில் வீற்றிருந்துபுவனமெல்லாம்விளங்கினரே.

(இ ள்.) சிவம்விளக்கத்தை யடையச்சேர்ந்து உமையாள்வணங்கி செங்கதிரானள், உலகத்தில் அஞ்ஞானத்தைநீக்கி மதியினல் ஆகாயமாய்இருவரும் அவ்வாகாசத்தில் புஷ்பம்போலிருந்து உலகங்களையெல்லாம் விளக்கினர்கள்.

சத்தியுடன்சிவனுங்கதிர்மதியுமாகி தனித்தபிரமாவெழுந்துகாங்குவித்துமென்மேல், முத்திதருமுதலெழுத்தேதேவாதேவா மூன்றுலகும்நிரந்தரமாய்படைக்கச்சொன்னீர், எத்திசையுஞ்சரிசமனய்விதித்துவைத்தால் எங்கள்சொல்லுமேலாகவேணுங்காணய்,இத்தலத்திலுள்ளோர்களெனைத்தான்போற்ற வெழுபாத்திலொருபுதுமையருள்தானென்றே.

(இ-ள்.) மேற்படி இருவரும் சூரியசந்திரர்களாயிருக்கப் பிரமதேவன் எழுந்து நமஸ்காரஞ்செய்து மோட்சத்தைக்கொடுக்கும் முதலட்சரசொரூபியே தேவதேவா! என்னை மூவுலகங்களையும் சிருஷ்டிக்கும்படி அருள்செய்தீர், அவ்வாறேசெய்தேன் இவ்வுலகத்தார் என்னைப்புகழும்படி கிருபை செய்யவேண்டும் எ-று. (௯௯௧)

அந்தணருமடியிணையைத் தொழுதுமேவ அம்பரவிலாசருமேயருளுநேர்மை,விந்துபரநாதமதுமொன்றதாகி விளைந்ததுகாணென்

பத்துநாலுலக்ஷம், செந்ததாக்குள்செனித்துயிராய் கிறைந்துமேவி செகதலத்தினமதுயிர்க்குஞ்சேர்க்கையில்லா, எந்தவிதமாகவுந்தான் புதுமையுங்கள் இடத்திலுந்தான் தருணமென்றியம்பினரே.

(இ-ள்). பிராமணர்கள் வணங்க, சிவன்கலப்பினால் எண்பத்துநான்குலட்சம் ஜீவராசிகள் உண்டானதென்று சொன்னார் எ-று. (௬௯௨)

தாவரிதுஎன்றபரந்தன்னைநோக்கித்தாள்பணிந்துகரங்குவித்துசதுர்பிர்மாவும், வரைதனிலுபகின்றபராமனகமகிழ்ந்துலள்ளவெனுந்திருபரைக்குள்வருக்கச்சொன்னார், திருமரைக்குளிருந்தவரைவெளியகாளுந்திருவுளந்தான்கருத்துகந்தேனை தானேக்கி, அரைபுகுந்தஅந்தணர்கள்புதுமைகண்டு அந்தரத்திலறிந்துகொள்ள அருளென்றாரே

(இ-ள்.) பராபரத்தைப்பார்த்து கும்பிட்டு பிரமாவணங்க இரைவன்மனமகிழ்ந்து பராபரைக்குச் சொல்லுகின்றார் அர்தணர்கள்தெரிந்து கொள்ளுமாறு கிருபைசெய்யென்றுஞ் சொன்னார் எ-று. (௬௯௩)

அந்தரத்திலொரு புதுமைபருளுஞ்சொல்லுஅரனடியைப்போற்றகின்று ரான்டேசேளீர், சுந்தரமாந்தம்பிசுக்கிர வாரநாள்தான் சொல்லிமந்தவாரமெனுஞ்சூக்ஷமானர், தத்திரமாஞ்செங்கதிரோனதிவாரம் சர்வவுபிர்நாதனருள்சோமவாரம், மந்திரமங்களவாரம்ருத்திரனும் வளர்ந்தபுதன்மயேஸ்பரன்தான் வகுத்தேனண்டே.

(இ-ள்.) ஆகாயத்தில் ஒருபுதுமையை நான்சொல்லக்கேளீர் வாரமேழுக்கும் எழுதேவதைகளை ஆணைப்படி வகுத்தேன் எ-று. (௬௯௪)

அந்தரத்தில்கின்ற குருவாரந்தன்னில் ஆதிசதாசிவன நுளாலகமேழாகும், விந்தையதாமவரவர்க்குவாரநாள்தான் விளங்கினேம்விபரமதாய்விளங்கக்கேளீர், பைந்தமிழாலருளியதோர்ஞானவாக்கியம் பரமான அகத்தீசர்பகர்ந்தவண்ணம்,இந்தவித நூல்வகையைவிதித்தேன்காணும் இனியுரைக்குஞ்செய்தியெல்லா மியம்பலாமே.

(இ-ள்.) இவ்வாறெல்லாம் செய்தபிறகு ஆதிசதாசிவனுடைய கிருபையினாலும் பெரியோர்கள் அருளினாலும் அகத்தீசர் பணிந்தவண்ணம் இவ்வாறு நூல்விதத்தைவகுத்தேன் இனிசொல்லும் சங்கதிகளை யெல்லாம் சொல்லலாகும் எ-று. (௬௯௫

வாரமினியேழதனைவகுத்தபின்புவள்ளல்பறந்திருமாலையருகேவைத்து,ராகுடனேகேது அணியாகுமென்னில்நளினமலரடியதனைப் போற்றிசெய்வார்,தாரகமாம்பிரமநதிதீர்த்தந்தன்னைத்தனித்தொருநாள்திரிகடுகைமறிப்போமென்றார், ஆரணிந்தோர்சம்மதித்து அருளமேன்மேல் அந்தணர்கள்கண்டுகொள்ள அருள்செய்தாரே.

(இ-ள்) இவ்வாறு ஏழுவாரங்களை உண்டாக்கினபின் திருமலைசமீபத்தில்வைத்து ராகுகேதுக்களைவைத்து பணித்து பிரமனுதிதிரத்தில் குளிப்போமென்றார், ஈஸ்வரனும்சம்மதித்து திருவருள் மேன்மேலும்பெருக அந்தணர்கள் கண்டுகொள்ளுமாறு அருலிச்செய்தார் எ-று. (௬௬௬)

பூரமுடனுத்திரமுமஸ்தஞ்சித்திரை புகழ்சோதிவிசாகமது அனுஷங்கேட்டை, சீரானமூலரோகணியுமென்னில் செயசதையமுத்திரட்டாதியென்னில், ஈராறுங்கூடிநக்ஷத்திரமதாச்சுஎழுந்துவளர்ந்திருக்குமினியியம்புங்காலை, கார்வடியுமாகிநின்றபிர்மாவுக்கு கருத்துலகம்பிறித்துரைக்கக் கருதினரே

அசுவணியும்பரணிகார்த்திகையினோடு அருள்மிருகசீரிஷந்திருவாதிரையுமாகில், திசைபுகழுபுனர்பூச மாயிலியத்தோடுசிறந்தமகம்பூராடமுத்திராடம்,திசமானத்திரிவோணம்விட்டப் பூரட்டாதிரேவதியுமூவஞ்சுநேர்ந்ததாகில், விசுவதிசெங்கதிரதனில் வளர்ந்துமேவும்விரித்துலகமந்தணர்க்குப் பிறித்துணர்வதாமே.

(இ-ள்.) பிறகு அஸ்வினிமுதலிய இருபத்தேழுநட்சத்திரங்களையும்விரித்து அந்தணர்களுக்கு உரைத்தார் அவர்களும் அவைகளை உணர்ந்துகொண்டார் எ-று. (௬௬௭)

கண்டுகொள்ளுமந்தணர்கள்புவியிற்குள்ளாய் வருத்தாலும்வகுத்துரைத்துக்காலம்போக்கும், என்றுபரஞ்சொல்லியருள்புரிந்தமாத்திரம் இணையடியிற்போற்றிசெய்து எழுந்தபின்னும்,நன்றெனவுங்கரங்குவித்து பிர்மாவுக்கு நாயனுருரைத்தபொருளிதுதான்கண்டீர் வண்டர்கள்த ன்புவியதுக்குள்பிறந்தபின்புமனதாலும்வகுத்துரைத்தார்வேதந்தானே.

(இ-ள்.) பிராமணர்களுக்கு உலகத்தின்கண் பா ாயணஞ்செய்து காலம்போக்குங்கள் என்றுசொன்ன மாத்திரத்தில் திருவடிகளைத்தொழுது பிரமாவையும்நமஸ்கரித்து பிராமணர்கள் உலகத்தில் பிறந்தபோது வேதம்வகுத்துரைத்தார் எ-று. (௬௬௮)

வேதமறைபாகமங்கள் பிறந்ததெங்கே வேள்விநன லுதித்தவிதம்பரையிற்குள்ளே , கதிர்முளையுமுளைத்ததெங்கே ரவிதானெங்கே கமலரவியுதித்ததுவும் பரையிற்குள்ளே, போதநதிகிரியுமலைவனங்கள்தானும் புகழனந்தம்பிறந்ததெந்தன் பறையிற்குள்ளே, தீதில்லா சங்கரனுரயன்மால்ருத்திரன் தேவர்களும்பிறந்ததெந்தன் பறைக்குளாண்டே.

(இ-ள்.) வேதங்கள் ஆகமங்கள் கதிர்முளை, கமலரவி யுதித்தது போத நதி, கிரி, வனங்கள், நந்தி, சங்கரன், அயன், மால், ருத்திரன், தேவர்கள் ஆகிய இவைகளெல்லாம் பிறந்த இடங்கள் எவை? எ-று. (௬௬௯)

அந்தணரும்வேதியருமுதித்ததெங்கே ஆசாரம்பிறந்ததெந்தன் பரையிற்குள்ளே, விந்துதித்துப்பிறந்ததெங்கேநாதமெங்கேவெகுவிசிதவுயிர்களெந்தன்பரையிற்குள்ளே, செந்தணலும் பிறந்ததெங்கே ஜெகந்தானெங்கே செகதலமும்பிறந்ததெந்தன்பரையிற்குள்ளேமந்திரமும்பிறந்ததெங்கே மனுக்களெங்கே மனுநீதிபிறந்ததெந்தன்பரைக்குளாண்டே.

(இ-ள்.) பிராமணர்கள் ஆசாரம் விந்து, நாதம், உயிர்கள் அக்கினி உலகம், மந்திரம், மனுக்கள், மனுநீதி இவைகளெல்லாம் பிறந்தஇடம் எங்களுடைய பரைக்குள்ளாகும் எ-று. (எா)

எந்திரமாம்பிறவியெங்கேயெமனுமெங்கே யிருவினைதான்சூழ்ந்திடும்பரையிற்குள்ளேகேந்திரமாநடன சங்கீதமெங்கேகெர்வம் பிறந்துதித்ததெந்தன்பரையிற்குள்ளே,வந்தனமும்பெந்தனமும்பிறந்ததெங்கேமகாமந்திரஞ்செனித்ததெந்தன்பரையிற்குள்ளே, அந்தரவாகாசமிதுபிறந்ததெங்கே அண்டபிண்டமெந்தனுட பரைக்குளாண்டே.

(இ-ள்.) பிறவி, எமன், இருவினைகள் நடனம், சங்கீதம், கர்வம், வந்தனம், மகாமந்திரம் ஆகாசம், அண்டபிண்டம், இவைகள் பிறந்தஇடம்எங்களுடைய பரைக்குள்ளாகும் எ-று. (எாக)

தேவாரம்பிறந்ததெங்கே திருவுமெங்கே திருமந்திரம்பிறந்ததெந்தன்பரையிற்குள்ளே,தாவாரம்பிறந்ததெங்கேசைவமெங்கேசாத்திரங்கள்பிறந்ததெந்தன்பரையிற்குள்ளே,திவையேழுவாரம்,வந்துபிறந்ததெங்கே திதிவாரம்பிறந்ததெந்தன்பரையிற்குள்ளே, கேவலமாதெய்வமறைபிறந்ததெங்கே ஜெகமுழுதும்பிறந்ததெந்தன் பரைக்குளாண்டே.

(இ-ள்.) தேவாரம், திரு, திருமந்திரம், தாவரம், சைவம்,சாஸ்திரங்கள் எழுவாரங்கள் திதி, நாள், தெய்வீகவேதங்கள், ஜெகதலங்கள் இவைகளெல்லாம் எங்களுடைய பரைக்குள் பிறந்ததாம் எ-று. (எாஉ)

கங்கையும்வந்துதித்ததெங்கே கிரியையெங்கே கருத்துலகந்தழைத்ததெந்தன் பரையிற்குள்ளே, துங்கமணியோசைசெனித்திருந்ததெங்கே சோதிசுழிமுனையதுவும்பரையிற்குள்ளே,அங்கமெல்லாமமைத்ததெங்கே ஆத்மமெங்கே அகண்டபரிபூரணமும் பரையிற்குள்ளே,சங்கையில்லாசந்தனங்குங்குமம்பூநூலுந் தரணிமுதலென்பரையில் தழைத்ததாண்டே.

(இ-ள்.) கங்கை, கிரியை, உலகந்தழைத்தல், மணிஓசை செனித்தல் சுழிமுனை சரீரம்உண்டாக்கினது, ஆகம், அகண்டபரிபூரணம் ஆகிய இவைகளெல்லாம் எங்களுடைய பரைக்குள்ளாகும் எ-று. (எா௩)

கொண்டலிடிகாருமெங்கே குறிதானெங்கே கோடிரவிபிறந்த தெந்தன்பரையிற்குள்ளே, அண்டபிண்டம்பிறந்தெதெங்கே யாகாச மெங்கே அக்கினியுமின்னலெந்தன் பரையிற்குள்ளே, பிண்டமெனு மெண்டிசையும்பிறந்ததெங்கே பேருலகம்பிறந்ததெந்தன் பரையிற் குள்ளே, மண்டலமூன்றுதித்தெங்கே வானமெங்கேவஸ்துவெனுஞ் செனித்ததெல்லாம் பரைக்குளாண்டே.

(இ-ள்.) மேகங்கள், இடிகள், குறிகள், கோடிரவி, அண்டபிண்டம்ஆகா சம், அக்கினி, பிண்டம், இவைகளெல்லாம் பிறந்தது எங்களுடைபரைக்குள் ளாகும் எ-று. (௭௱௪)

வித்திருந்துவந்தபரைவீட்டுக்குள்ளே விதவிதமாய்புவியதுக்கு ள்விளங்கும்வாறு, சித்ததினுல்ஜெகம்படைத்தவாறுஞ்சொன்னேன் தெளிவுடையமகத்துகள்தானறிந்துமேவும், மற்றவர்கள்வாய்மதத் தால்தூஷிப்பார்கள் மதபேதமெழுநரகில்விழுவார்மேலும், எத்தி சையுந்தழைத்துவுயிர் தாக்கும்போது எழுவகையுமென்பரைக்குள மைத்ததாண்டே.

(இ-ள்) வித்திருந்து வந்ததான பரையின்வீட்டுக்குள் விதம் விதமாகப்பு விக்குள் விளங்கும் விதமும் மனத்தால் உலகமுண்டாக்கின விதமும் சொன் னேன் இவற்றையெல்லாம் அறிவுள்ளவர்கள் உணர்வார்கள்மற்றவர்கள்தூஷி ப்பார்கள் அவர்களெல்லாம் சத்தநரகங்களில் விழுவார்கள் இவ்வளமாயவெ ல்லாம் எம்முடைய பரைக்குள் அமைத்ததாகும் எ-று. (௭௱௫)

ஜெகதலமும்படைத்தவிதமின்னஞ்சொல்வோம் ஜெகத்திலுள் ள அனேகம்பேர் பொய்சொல்வார்கள், அகமகிழ்ந்துவுணரறிந்தோ ரறிந்துகொள்வார் அறிவில்லாமூடரென்றால் விரிவுசொல்வார், மகித லத்தில்முத்திபெற்றுவாழ்வார்வாழ்வார்மகத்துகளை தூஷணித்தோர் நரகில்வீழ்வார், எகபுவிபடைத்தவகையியல்பாய்ச்சொன்னேன்இன் னிலத்திலுள்ளவர்களினிகாண்பீரே.

(இ-ள்.) செகதலம்படைத்த விதத்தைச்சொல்லுவோம் உலகத்தில் அ னேகர்பொய்சொல்வார்கள் இதைஅறிவுள்ளோர் உணர்ந்துகொள்வார்கள்உல கத்திலுளளவர்களே இனி நீங்கள் இதை உணர்வீராக எ-று. (௭௱௬)

ஒன்றானவித்துகளுமமைத்தசீவன் உதித்தவகைசபைதனிலுமு ரைத்திட்டோம்நாம், நன்றானசாதிபலவிதமதாகிநானிலத்தில்நானே தானன்தான்காணும் அண்டாதபுரமெரித்தபரனுஞ்சொல்ல அருள் கொடுத்துசாம்புவன்தான்மூர்த்தியென்று, குன்றாதவுடல்பரையனெ னுமாண்பர் கூறுவதற்குசாஸ்திரவள்ளுவன்காணுண்டே

(இ-ள்.) செகமான காரணவஸ்துக்குள் உண்டானசீவன் உதித்தவிதத்தைக்சபையினில் சொன்னோம் இவ்வாறே பலசாதிவகைகளையும் வகுத்தார் இவைகளெல்லாம் பரமேஸ்வரன் சொன்னபடி சாம்பவமூர்த்திசொல்லகான் சொன்னேன் எ-று. (௭௱௭)

திக்கிலுள்ளசாஸ்திரங்கள்விளங்கும்போது திருமார்பில்பூணநூலணிந்துமேவி, தர்க்கமிடும்வேதியர்க்குள் திரமுன்பாகதளம்பெரிய வெண்களிறின்பீதிலேறி, எக்கியத்தில்விளைகின்றஅமிர்தமுண்டு ஏகசக்கிரத்துய்யவெள்ளைக்குடையும்பெற்று, அக்கினியாதித்தன் மதிமூன்றுக்குள்ளே அருள்பெற்றுசாஸ்திரங்கற்ற மைந்தனுண்டே.

(இ-ள்.) சாஸ்திரங்கள் விளங்கும்போது பூணுநூல் அணிந்து! தர்க்கமிடுகின்றபிராமணர்கள் எக்கியத்திலுண்டாகின்ற அமிர்தத்தையுண்டுவெள்ளைக்குடையையும்பெற்று!சாஸ்திரங்கள் அமைத்தேன் எ-று. (௭௱௮)

வித்துதனில்நாதமதுமிரண்டுங்கூடி விளைகின்றகருவிலுந் தானுருவதாகி, இந்தவுலகந்தனிலும்பிறந்துயானும் இவ்வாழ்க்கைசெலுத்திவரவீசன்பாதம், எந்தைபிரானடிதொழுதுநூல்களாய்ந்து இருவினைஎன்பயனறிந்திருந்தேன்யானும், வந்தவகையனைத்தும் பரைமகத்துக்குள்ளே வாழ்க்கையெல்லாமுதித்தவகைவசனித்தோமே.

(இ-ள்.) விந்துநாதம் இரண்டுங்கூடி விளைகின்றஉருவத்துடன் இவ்வுலகத்தில் பிறந்து நான் இவ்வாழ்க்கைசெலுத்திவர, ஈஸ்வரன் திருவடிகளில் தொழுது நூல்களை யாராய்ந்து இருவினைகளின் பயனை உணர்ந்திருந்தேன் வந்தவகைகளை யெல்லாமும் வசனிததோம் எ-று. (௭௱௯)

பிறந்தயுவிதனில்வளர்ந்த பெருமைசொன்னேன் பின்புலகந்தழைத்தவகை பிரித்துச்சொன்னேன், சிறந்தேழுந்தஜாதிகுல விளக்கஞ்சொன்னேன், அருந்தமிவழத்தெரிந்தவர்க ளறிந்துகொள்வார் அறியாதமாண்பர்களுமிகழவேண்டாம், இறந்தவுயிரொடுங்கி யுடல்போம்போதந்த இடுகாடுஏகும்வகை யியம்புவேனே.

(இ-ள்.) உலகத்தில் பிறந்துவளர்ந்த பெருமைகளைச்சொன்னேன்!பிறகு உலகந்தழைத்த வகையைப்பிரித்துச் சொன்னேன் சாதிகுலங்கள் விளங்கச்சொன்னேன் உடல் ஒடுங்கச்சொன்னேன் இவைகளெல்லாவற்றையும் அருமையான தமிழைத் தெரிந்தவர்கள் அறிந்துசொல்வார்கள் அறியாதமாண்பர்களும் இகழவேண்டாம் இனி;இந்தக்கூடுபோம் வகையைச்சொல்லுகிறேன்

கொச்சகம்.

அன்னையெனுங்கர்ப்பமதி லந்தமதிலேயிருந்து
நன்னயமாய்பத்துதிங்கள் நானகத்திலேயிருந்தேன்

என்னென்ன அதிசயங்கா ணிவ்வுலகிலேயமைத்து
உன்னிதமெல்லாமமைத்தே னுண்மையிதுகாண்கிலரே.

(இ-ள்.) தாய்கர்ப்பத்தில் பத்துமாதங்கள் இருந்தபோது என்னென்ன அதிசயங்கள் அமைக்கப்பட்டனவோ அவைகளைக் காண்கிலர் எ-று.

அம்புவியிலேயுதித்து ஆய்ந்துபரிபாஷைதன்னை
வம்புலகத்தார்வசிய மாய்கையடித்தேயிறந்து
கும்பித்னிலேயுழன்று குண்டலிதன்பொற்கமலம்
நம்பியிருந்தேசிலநாள் ரகசியத்தைக்காண்கிலனே.

(இ-ள்.) உலகத்தின்கண் பிறந்து பரிபாஷைகளை யாய்ந்து வசியமுணர்ந்து கும்பிக்குழன்று குண்டலியின் கமலத்தைநம்பியிருந்து சிலநாள் ரகசியத்தைக்காணேன் எ-று. (௭௧௨)

அண்டரண்டவான்புவியு மாகமத்தினுட்பொருளும்
கண்டிதமாயான்விளங்குங் காயமதிலேயறியும்
வண்டரெனைநீசனென்ற வாறுதனையேயொழித்தேன்
விண்டரகசியமதனை விளக்கமதுகாண்கிலரே.

(இ-ள்.) அண்டரண்டப்பொருளும், அகத்தின்பொருளும் காயமதிலறியவும் நீசனென்றென்னை யொழித்தேன் ரகசியத்தின் விளக்கத்தை காணப்பட்டனர் எ-று. (௭௧௩)

வையமதிலேயுதிக்கு மாண்பர்களேயுங்களுயிர்
மெய்யென்றிருந்தசைவு வெளிப்படுவதென்னவிதம்
ஐயமில்லாவாழ்ந்துலகி லாண்மையகம்பூண்டமதி
பொய்யினுமிவ்வாழ்க்கையது போகுஞ்சுடுகாடுளதே.

(இ-ள்.) உலகத்தில் பிறக்கும் பெரியோர்களே! உங்களுயிர்மெய்யென்று இருந்து வெளிப்படுவதுபோல ஐயமில்லாமல்வாழ்ந்து வையகம்பூண்ட பொய் யென்கிற இந்தவாழ்க்கையானது சுடுகாடுபோகும் எ-று. (௭௧௪)

கலித்துறை.

வீடானமூலச் சுருநாதவீட்டில் விளங்கும்விந்து
நீடாகிலோகந் தழைத்துப்பெருகி நின்றிலங்குந்
தேடாதழித்த பொருளானபொக்கிஷந் தேடியென்ன
காடானகாடு சுடுகாடுசேர்வதுங் கண்டிலரே.

(இ-ள்.) சுழிமுனை வீட்டில் விளங்குகின்ற விந்துவானது உலகந்தழைத்துபெருகியிருந்து விளங்கும் தேடாமல் அழித்தபொருளான பொக்கிஷத்தைத்தேடிஎன்ன? காடானசுடுகாட்டிற் சேர்வதையுங் கண்டாரிலர் எ-று.

எழுவகைத்தோற்றமும் நால்வகையோனியி லெய்திடினும்
பொழியச்சுரோணிதம் நாதவிந்துட்பொருள் போதகத்தால்
கழியக்கழிய கடலுயிர்தேய்பிறை கண்டிருந்
தழியப்பெருவுதுறை யென்னுளிருந்து மனித்தியமே.

(இ-ள்.) எழுவகைத்தோற்றமும் நால்வகையோனிபிற்சேர்ந்தாலும் நாதவிந்துக்களின் சேர்க்கையினுல், வளர்பிறை தேய்பிறைகண்டு எத்தனைநாளிருந்தாலும் இந்தச்சரீரம் அநித்தியமானதேயாம், எ-று. (எகசு)

என்னுளிருந்தென்ன முன்னுளனுப்படி யிந்தவுடல்
தன்னுலழிவதுந் தானறியாதென்ன தந்தைவிதி
உன்னுலழிவது முடலுயிர்காய மொழிவதுங்கண்
டன்னுளனுப்படி கண்டுமிருந்தறி யாதவரே.

(இ-ள்.) எத்தனைநாட்கள் இருந்தாலும் என்ன? முன்னுள்வினைப்படி இந்தஉடலம் அழிவதை அறியாததென்ன? தந்தைவிதியினுல் உடல்,உயிர்ஒழிவதைக்கண்டும் மருந்தறியாபிவரே யாவார் எ-று. (எகஎ)

யோனிக்குளாசை யொழியாதனித்திய முங்களுயிர்
தேனுக்குளின்பஞ் சுசாதீதயோவருஞ் சிற்றின்பத்தில்
ஊனற்றுக்காய முடலற்றுப்போம்பொழு தொன்றறியா
ஈனர்க்குச்சொர்க்கஞ் சுடுகாடொழிய இனியில்லையே,

(இ-ள்.) யோனிக்குள் ஆசையொழியாமையால் உங்களுயிர் இந்தச்சரீரத்தில் அநித்தியமாயிருக்கும் ஆகைநால் எவருஞ்சிற்றின்பத்தில் மூழ்கியதனுல் ஊனற்றுக்காயமற்று போகும்பொழுது ஒன்றுமறியாத ஈனருக்குச்சொர்க்கமானது சுடுகாடுதவிர வேறொன்றில்லை எ-று. (எகஅ)

வெண்பா.

இந்தவுடல்காய மிறந்துவிடுமிவ்வுலகில்
வந்தவழிதானறியா வாழ்க்கையோ-இந்தவுடல்
அற்பக்குழியதனி லரவமிருப்பதெனுங்
கற்பகத்தையாண்டிருமே காக்ஷி

(இ-ன்.) இந்தச்சரீரம் இறந்துவிடும் ஆகையால் வந்தவழியை யறியாமை வாழ்க்கையாமோ இந்தவுடலானது அற்பக்குழியில் அரவமிருப்பதென்னும் கற்பத்தை யுண்டிருந்தால் காட்சியாகும் எ-று. (எகக)

ஞானமறிந்தோர்க்கு நமனில்லைநாள்தோறும்
பானமதையுண்டுபசி யாறினுல்-ஞானமது
கண்டாலுடலுயிருங் காயம்வலுவாகும்
உண்டாவயிர்தரச முண்.

(இ-ள்.) ஞானிகளுக்கு எமனில்லை தினமும் அமிர்தபானமுண்டுபெசியா தினல் ஞானங்கண்டால் உடலும் உயிரும் பலத்தையடையும் ஆகையால் நீ அமிர்தரசத்தை யுண்ணுவாய் எ-று. (௭௨௦)

சுழியறியார்க்கென்ன சுகமறியார்க்கென்னகுரு
வழியறியார்க்கென்னவெய்தும் வாறுகாண்-சுழியறியா
மூலமறிந்தவ்வழியில் முத்தியடையார்க்குநமன்
சாலனவர்க்கேமரணங் காண்.

(இ-ள்.) சுழியறியார்க்கும் சுகமறியார்க்கும் குருவழியறியார்க்கும்என்னை பலனெய்தும்? ஒன்றுமில்லை ஆகையால் மூலத்தையறிந்து அவ்வழியில்முத்தி யடையாதவர்களுக்கு காலனுண்டாவான் எ-று. (௭௨௧)

வேதமறைஞான மெய்புணர்வதாமாகில்
நாதனருளால்பதவி நாடுமே-வேதமறை
நாலுபொருளுண்டுனது நற்பொருளின்வாறறிய
பாலுமதுநெய்யெனவும் பார்.

(இ-ள்.) வேதத்திற்சொல்லப்பட்ட ஞான அறிவுண்டாகில்நாதனுடைய கிருபையில் பதவியுண்டாகும் நான்குவேதங்களின் பொருளுணர்ந்து உனது பொருளின் தன்மையை யுணர்பவனும் நெய்யெனவும் பார்ப்பார் எ-று.

மேற்படி-தரு.

அரகரசிவசம்புவே யருள்புரியும்
பரமானந்த சின்மய குருவருள்ஞானச்சுழிமதிமலர்பொழியும்

(இ-ள்.) பரமானந்த சின்மயகுருவருளையுடைய ஞானச் சுழிமுனையின் கண்சந்திரபானம் பொழிகின்ற அரகரசிவசம்புவே! நீ அருள்புரியவேண்டும்.

திருப்பெருந்துறையருள்மதிமயிர்பொழியுங் கருவூர்தனில்மே வியசெழித்திடுஞ்சுழிதேனருவிபாய்ந்துவழியும் மருகருசுவம்புகழ் மூலச்சுழியிலகுங்கரியுரித்துத்தரித்த கதிர்கொண்டுபுரமெரித்தசிவச ங்கரனே-யருள், திரிபுரமெரிதனல்கொண்டுவீசும் பரனேயென்னையா ளகொள்ளவருஞ்-சிவசிவ-உடலாவிவிட்டெழும்புமாகில்,சுருள்பம்ப ரமாடியசூக்ஷம்விட்டேகுதே-காயம்-நீர்மேற்குமிழி சுழிமுனையைவி ட்டுச்சோபித்துச்சொக்குதே-ஆவி-அரகர.

(இ-ள்.) கருவூரின்கண் சுழிமுனையின்கண் தேனருவிபாயும் மூலாதாரச் சுழியில்விளங்கும் யானைத்தோலைத்தரித்த திரிபுரதகனஞ்செய்த சங்கரனே! பரனே! என்னை ஆண்டுகொள்ளவருகின்ற சிவ! சிவ! உயிரானதுஉடலைவிட்டு எழும்புங்காலத்தில் ஒன்றுமில்லாமற் போகிறதன்றோ? ஆகையால் இக்காயம் நீர்மேற்குமிழி போல்லாதாகும் எ-று. (௭௨௨)

ஊறுந்துருத்தியில்காற்றையுமே பிடித்தடைத்து - பொய்-புட லெடுத்துமேவுகந்துவாழயான் மகிழ்ந்திருந்தேனேயாண்டே-மனம் பேதமில்லாமலெண்சாணுடல்மாளிகையில்பிரியாமலென்னுயிர்பிரா ணனுக்குமொரு பிசக்கில்லாதிருந்தேன்-இனி,வேதஞ்சொல்லும்படி மாதர்கருக்குழியில் தசதிங்களிருந்துடன் விளங்கிவாழ்ந்திருந்தலங் கிர்தமாகவே-கரு, நாதவிந்துண்மையைநானறியாமலுமே மிகமகிழ் ந்துபூருவம் நாயகியாள்கருக்குழியில் வாழ்ந்தேனே-அரகர.

(இ-ள்.) காற்றுத்துருத்தியைப்போன்றபொய்யானசரீரத்தையெடுத்துவா ழ்வதற்கு நான்மிகவுஞ் சந்தோஷங்கொண்டிருந்தேன் எண்சாண்சரீரமாகிய மாளிகையில் என்றும்பிரியாமல் என்னுடையஉயிராகிய பிராணனுக்கும் ஒரு பிசகில்லாமல் இருந்தேன் வெளிவந்தபிறகு இருந்த இவ்விதந்தவிர இனிவே தஞ்சொல்லுவதுபோல மாதர்களுடைய கர்ப்பக்குழியில் பத்துமாதங்க ளிரு ந்துவிளங்க வாழ்ந்திருந்து கருவானநாதவிந்துக்களின் உண்மையைநான் அறி யாதபடியே வாழ்ந்திருந்தேன் எ-று. (எ௨௫)

விண்ணுள்ளகாலமிவ் வாழ்க்கையைபெண்ணியே-நான்- இருந் தென்னுடல்மெலிந்துடனுயிரலைந்துதேடியே-ஞானம்,நண்ணுதலே சிவநாதபராசுருப மிருதாளிணையி-லடி-நம்பினேன் அன்பு அருள்தரு மம்பரமே-விழி,கண்ணுள்ளபோதருள்காக்ஷியளித்தருளுஞ் -சிவசா ம்புவசதாசிவகாரணமான கடாக்ஷமெனக்கருள்வீர்-கெதி, உன்னு டல்நம்பியுடலெடுத்தாவியதுமெய்ஞ்ஞானசிரோமயமுதித்திடுந் தா ரையிலோடி யொளித்தசைவே-அரகர.

(இ-ள்.) ஆகாயமுள்ளவரைக்கும் இந்தவாழ்வை விரும்பிநான் இருந்து பலவிதமாய்மகிழ்ந்தேன் ஆகையால் சிவ! சிவா! உம்முடைய திருவடிகளையே நம்பினேன் நீரெனக்கு அருளிச்செய்யவேண்டும் எ-று. (எ௨௬)

கெங்கையிலெழுந்த பங்கயநீரதுபோலும்உடலதுக்குயிரினிகீர் த்தியாய்வாழ்ந்துடல்நாற்றிசையிலுறங்குஞ்-சந்திரன்-திங்கள் கதிர் மதியெங்குந்தழைத்தருளுஞ்சிவஞானப்பிரகாசமேதெண்டனிட்டே உயிரொண்டியாய்ப்போகுதே-சிவ, செங்கதிர்சந்திரன்போலுமிருந் துறவாடிஆக்கைதனிலுயிர் சேடத்தையும்விட்டுப்பிரிந் துடனெழுந் தோடி-வன்னி, வெங்கனலோடியவிந்துநாதம் பிரிந்தேதான்பிராண வாய்வதுமிகவுந் தேய்பிறையாகியமேதினிவாழ்க்கை-அரகர.

(இ-ள்.) கங்காதீர்த்தத்திலுண்டான தாமரைநீர்போலும் உயிரானதுகீர் த்தியமாய்வாய்ந்து நான்கு திசைகளிலும் உறங்குகின்ற சந்திரன் சூரியன் தழைத்திருந்தும் சிவஞானப்பிரகாசமே நான்அடையும் வஸ்துவென்று தெண் டனிட்டு உயிர்ஒண்டியாய்ப்போகுதே ஆகையால் உலகவாழ்க்கையானது தே ய்பிறைபோன்றதாகும் எ-று. (எ௨எ)

சூஸ்திரபொம்மைபோல பாத்திரமாகவுமெண்ணி ஆண்மைகொண்டாகமந்தொல்லுலகிலெந்தன்வாழ்க்கைசெலுத்தியே-திருமாத்திரையோடிருக் தழலுமம்பிகைபாகாமாசிலாமணியேவள்ளலெனுமுயிருள்னடக்கமாகுதே-சிவசிவ-போற்றிய சின்மயபூரணஞானப்பிரகாசம்சிவஞானசவுந்தர புவியின்வாழ்க்கையை விட்டுடலாத்துமம்பிறந்தே-புடல், சாத்தியதேகமிவ்வாழ்க்கை யறிந்தவர்ஞானிபுவிதனில்-மிக்கதத்துவந்தொண்ணூற் ருறுமறிந்தவர்கியானி-அரகர.

(இ-ள்.) சூஸ்திர பொம்மையைப்போல் பாத்திரமாகஎண்ணி ஆண்மையைக்கொண்டு அம்பிகைபாகனே! மாசிலாமணியே! சிவ! சிவா! இச்சரீரஉண்மையை அறிந்தவர்கள் ஞானிகளாவார்கள் தொண்ணூற்ருறு தத்துவங்களையும் உணர்ந்தவர்கள் கியானிகளாவார்கள் எ-று. (௭௨௮)

மாடுமக்கள்பெண்டீர்சுற்றமு மத்தமென்றுசை - வெகு-காலமிருக்கயான் வாழ்க்கையையெண்ணியும் வாழ்புவியிற்பிரியாமல்-இந்தக்கூடும்பிரிந் தயம்பரநாட்டினிலிலகுங்குறியறிந்துடன், கோமளவல்லிவாலாம்பிகை சீர்பதம்பணிந்தேன்-திரு, ஆடுஞ்சக்கரத்தினம்பிகைபர்கனேயருளேயிருந்த ஆவியென்னைவிட்டு அப்புறம்போய்விடுமாகில்-பின்னுந்,தேடும்பொருளதுவீடுங் காணிகளுமெய்யா-இந்தஜெகதலந்தனில்வாழ்வு மிருத்திடுமென்னே-அரகர.

(இ-ள்.) மாடு, மக்கள், பெண்டீர், சுற்றம், இவைகளோடு வெகுகாலமிருக்கநான் இதவாழ்வை உண்மையினதென்றெண்ணி இந்தச்சரீரத்தைவிட்டுப்பிரிந்து உயர்ந்த அம்பரநாட்டினில்விளக்குங் குறிப்பையறிந்து கோமளவல்லியாகிய வாலாம்பிகையின் திருவடிகளைவணங்கினேன். ஆனால்இந்தஉயிர் இந்தச்சரீரத்தைவிட்டகன்ருல் தேடும்பொருள் வீடு, காணி இவைகளெல்லாம் வீணேயாம் எ-று. (௭௨௧)

ஆதியனுதியுன்பாதங் கெதியென்றிருந்தேன் அதிபிரியத்துடனே அற்பப்புழுக்குரம்பை யிதென்றறியாமலெனுண்டையே, நீதியாய்மெய்யென்று ஆணவங்கொண்டுலகநேராய்-பிர்மநேசமேவூனுதலாயிருந்திப்படியானே-சுழி, சோதிநீதி யறிந்தோதிடுஞ் சாம்புவன்காணும் உடலுயிர்களுஞ்சொக்கித்தேய்பிறையாய் மாயாவுடலுங்கண்டம், ஊதிமூலத்தின்தாரையினலு முடலுமுயிர்களு மூனெடுத்தேவெகுநாள்களிருந்துறவாடி-அரகர.

(இ-ள்.) ஆதியனுதியான உன்னுடைய பாதமேகெதியென்று நம்பியிருந்தேன் இதுஅற்பமான புழுக்குரம்பையென்று அறியாமல் இதிலிருந்து உறவாடினவனனேன் எ-று. (௭௩0)

பாரில்பேராசைகொண்டுழன்று வெகுபொருள்தேடிபாதவித்துவிருதாவாச்சுதேயறியாமல்-கர்த்தன், சிறுமரவமுப்புரத்தையெரித்

தசிவன்தாள்-இணையடி-தெண்டனிட்டுவுயிர் ஒண்டியாய்போகுதே ஆத்துமாவிகிதம்,பேரிகைகொட்டிமுழங்க - சங்கீதங்களாலும் பிராணன்பிரபல்லியத்தொடுவாழ்ந்தது பொய்யதாய்ப்போச்சே-முன்பு, நாரியர்கையில்யான் சிக்கியிருந்ததும்போதும்-மாய்கை -நாட்டத்திலும்வெகுநாள் கழித்திடலாச்சே-அரகர.

(இ-ள்.) உலகத்தில் பேராசைகொண்டு உழன்றமிக்க திரவியங்கள் தேடி பாதவித்து விருதாவாச்சுது, ஏனெனில் இந்தச்சரீரத்தை விட்டு ஆன்மா பிரிந்துவிட்டால் எதுஇருந்தாலும் என்னபயன்? ஒன்றமில்லை இவைகளெல்லாம் மாயாவாழ்வேயாம் எ-று. (௭௧௧)

மடலுக்குள்வாசமுமாறியே யோடுமேபிரிந்து-உயிர்-வளர்ந்த காயஞ்சுடலைக்கரைதேடுதறிந்து-பின்னும், உடலுக்குளாவியொடுங்குதேபோகுதேயாண்டே-ஞான-உத்தமர்கள்சித்த மூறுதிபெற்றிடலாச்சு-வித்தை, கெடமலைக்குயிர் கீர்த்திபெற்றலகில்-வாழ்ந்தேன்-மனு-கேள்வியுதாரணம்ஞானப் பிரசங்கமாய்த்தெளிந்தேன்-வஸ்து செடமதுக்குள்ளிருந்து மூலாவியநேச-முடல்சித்திரப் பணிகளாபரணம்பூண்டிடும்வாசம்-அரகர.

(இ-ள்.) புஷ்பத்துக்குள் வாசனையானது மாறிமாறிப் பிரிந்தோடுகிறது உயிரானது வளர்ந்தகாயமானது சடலைக்கரையைத்தேடுகிறதுஉடலுக்குஉள்ளாகவே உயிரானது ஒடுங்கிப்போகிறது ஞானோத்தமர்கள் மனவுறுதியடையலாச்சுது ஆகையால் கீர்த்தியடைந்து உலகத்தின்கண் வாழ்ந்தேன் இன்னும் அநேகவகையான ஆபரணாதிகளையும் பூண்டேன் எ-று. (௭௧௨)

எண்ணினவெண்ணமெனக் குதவாதென்னமாயம்-செயல்-இந்திரியநாதசுக்கிலசுரோணிதகாயம்-லபி,வெண்ணிடுஞானச்சுழிமுனைகுக்ஷவுபாயம்-வாசி-மேலுங்கீழுங்கண்ட தாரையிலூதிடுஞாயம்-கடல், தண்ணீரிலுப்புகாரசார முண்டமாயம் ஞானதற்பரைசோதிசுகாதீதமார்க்கசகாயம்-குரு, புண்ணியத்தால்செய்த பூசாபலன்முன்னோர்வாசம்-யோக-புத்திரனாகப் பிறப்பதுந் தந்தைவிசேஷம்-அரகர.

(இ-ள்.) எண்ணின எண்ணம் எனக்குஉதவாதது என்னமாயம்? சுக்கிலசோணிதங்களாலுண்டான சரீரம் சுழிமுனைசூட்சவுபாயத்தால் இரேசகபூரககும்பகங்கொண்டு கண்டதாரையில் ஊதும்ஞாயம் கடல்நீரினால்காரசாரங்களுண்டாம் குருபுண்ணியத்தினால் பூசாபலனாகும் யோகபுத்திரனாகப் பிறப்பதும் தந்தையின்விசேஷம் எ-று. (௭௧௩)

ஆணவமாய்கைகாமக் குரோதத்தில்மோகம்-அழிந்-தானபின் புத்திரபாக்கியத்தாலின்பசோகம்-தனம், வேணுமாபரணபூஷணமாளிகைதாபம்பின்னுமேதினியாசைஜவபோகத்தினால்சுகதேகம்மன

காணும்பலகர்மத்தினுல் செய்கைகோபம் - புசவி - கலியாணிடியேறி சவாரிபுகழவும்வேகம் -பொருள்,தோணூர்றரும்பதவாரும்பசிபதி யாகம்ஞானசொர்கம்வந்தெய்தலுங்கற்பத்திஞல்சொல்வதாண்டே.

(இ-ள்.) ஆணவமாய்கையினுல் உண்டானகாமக்குரோதமோகமானவை யழிந்தபின், புத்திரபாக்கியத்தால் இன்பசோகமுனியாக வேண்டும் இன்னம் அனேகவிதசந்தோஷங்களுமுண்டாகும் இவையனேத்துங்கற்பத்திஞல்சொல்லுவதாகும் எ-று. (௭௰௪)

விருத்தம்

நம்புதலாய்வாழ்ந்த வெகுநாள்கள்தானும் நன்றுமனந்தனனி லுந்தானெண்ணியாலும், அம்புவியில்மாடுக்கள்பெண்மர்சுற்றம் அயிஸ்வரியமிப்புவியிலறிந்தேன்காணும்,இன்பமுடன் சுகித்திருக்கஇனிதானென்று இருந்ததெல்லாமேனிதமாயிழந்தேன்காணும், எம்பிரான்விட்டகுறையிருந்தாலும் என்னூரில்நடம்நோக்கி யியம்பலாச்சே.

(இ-ள்.) நம்பிவாழ்ந்த நாள்களெல்லாம் மனத்திற்பலவேறெண்ணி பலவை ஐஸ்வரியங்களேயும் இவ்வுலகத்தில் எண்ணினேன் அதனுல் இருந்தவைகளேயெல்லாம் இழந்தேன் இவையனேத்தும் விட்டகுறையினுலாம் எ-று.

ஊழியுள்ளகாலமெல்லா மொழிந்துபோச்சே ஊனேடேயுயி ரொடுங்கியூரிற்சென்று, ஆழிதிரையான்விட்டேக்கடுத்தவிட்டில் அருளுடனேபொருளார்சுஅடங்கலாச்சு, ஈழியற்றயிவ்வுலக வாழ்க்கை தன்னில் எளிதமாயிருக்கெதன்னசங்கண்டார்கள், யாழியுடன்மக்கள்சுற்றமடவார்தானுந் துணேயாகஒருத்தரவர்க்காண்கிலேனே,

(இ-ள்.) இவ்வாதிருந்தலால் ஊழிக்காலவரை யிருந்தாலும் வாழ்ந்தவாழ்க்கையெல்லாம் விட்டு ஒண்டியாய்ப் போகவேண்டியதேயாம் எ-று. (௭௰௬)

கருவிதனிலுதித்தசிறுகாலிருக்க சுனுக்காலும்பாதம்பிரலேந்தாங்காண, மருவுநகத்தொடுகெண்டைக்கால் முழங்கால்வளர்ந்தபெருந்துடையுடனேயிடையிருக்க, திருவோடுவயிறிருக்க அரையிருக்கத்தேடியறியாதலிங்கஞ்சுபம்பாய்காண,உருவான அறிவுபுத்திமனமிருக்க ஒருத்தனுமாதனிவழியே யுடன்செல்வேனே.

(இ-ள்.) கரசாணுதிகளான அவயவங்களோடு கூடியிருக்க நான்கடையியாக ஒண்டியாய்த்தான் போகிறேன் எ-று. (௭௰௭)

ஆதரவாய்விசர்க்சந்தானருகேகாண அடுத்தவுள்ளம் கைவிரலிரைந்நகக்காண,பேதமில்லாப்புறங்கைமுழங்கையிருககப்பெரும்பிடரிமுதுகுவிலாக்கொடியிருக்க,சாதகமாய்கண்ட மண்டலங்கள்மேனி

தனித்துதனியாகவென்னைச்சுமந்திக்க, ஓதியேவேதாந்த மந்திரமிருக்க ஒடுங்கிப்போயொருத்தனுமாய் தனிச்சென்றேனே.

(இ-ள்.) விசர்க்கமுதலியவைகளிருக்க நான் கடைசியில் ஒண்டியாகத் தான் போகின்றேன் எ-று. (எங-அ)

நல்லோர்கள்பெரியோர்கள்வாசந்தன்னை நயம்பெறவுங்கேட்ட செவிதானிருக்க, சொல்லாதமுழுவசனமுடையநாவும்சுகமானவாய்கள் தந்தமிதழிருக்க, கில்லாதஆங்காரமுனையிருக்கநீலம்போலொளி விழியுமிருக்கத்தானும், எல்லாருமென்னையெடுத்து வாழ்ந்திருக்கஇடு காடுயேகிப்போயொருவனுனேன்.

(இ-ள்.) ஞானிகளுடைய வார்த்தைகளைக்கேட்ட செவியிருக்க நாமுதலியவைகளுமிருக்க, எல்லாரும் என்னை எடுத்துவாழ்ந்திருக்க இடுகாட்டுக்கு போய்நான் ஒருவனுனேன் எ-று. (எகூ)

தாழ்வாயுமேல்வாயுந் தானிருக்கத் தனித்துவளர்ந்தெழுந்தவுண்ணுவிருக்க, வாளானவேல்புருவங்கீழ்புருவம் வாசமெனுமூக்கிருக்கவழிதான்காண, நீள்வாசியோடுகலைநாலிருக்க: கிலைகாயாவிரியெனுமாகிகழ்ந்திருக்க, கோளானகருவிவிட்டுக்கலையுநாலுங் கொண்டொடுங்கிப்போம்பொழுது ஒருவனுனேன்.

(இ-ள்.) இருவகையான வாயுக்களிருக்க உணவுமுதலியவைகளுமிருக்க எல்லாம் ஒடுக்கிப்போகும்பொழுது நான் ஒருவனுனேன் எ-று. (எசய)

அசவுபிறந்தவ்விடத்திலவ்வுந்தோன்றி அக்ஷரமாமவ்வெழுத்தில்நாடிதோன்றி, இசவதுவாய்கருவிதொண்ணூற்றாறுந்தோன்றியெலும்புதசைபுடைநரம்புஇதுவுந்தோன்றி, நிசவுபழுவெலும்புவீரேட்டுந்தோன்றிநேரானகொடுங்கைகளிரண்டுந்தோன்றி, முசவுமுட்டுக்காலெட்டுவளையுந்தோன்றி முதிர்ந்துசெனித்துருவாகி யொருவனுனேன்.

(இ-ள்.) அசைவுபிறந்த அவ்விடத்தில் அகாரமுண்டாய் அதில்நாடிகளுண்டாய் பிறகு ௯௬-கருவிகளுமுண்டாய் இன்னும் பல அங்கங்களெல்லாமுண்டாயிருக்க கடைசியில் நான் ஒருவனுனேன் எ-று. (எசக)

இடையிறெடுபின்கலையு மிரண்டுஞ்சேர்த்து இயல்பானசுழிமுனையென்றுருவமாகி, செடமதுக்குள்வழியதுதாய் வாசலாகிதேகமதிலுடனுண்ட செய்கைதன்னுல், மடமதுவாயிடுகாடுகந்தலாகி வருமெண்சாணுடலதுவாய்மடியப்பாய்ந்து, சுடுஞ்சுழியாய்சூளையாய்த் தார்க்குழியுமாகி துர்ப்பாவையினம்பதியஒருவனுனேன்.

(இ-ள்.) இடை, பின், கலை, சுழிமுனை இவ்வுருவங்களால் இன்னும் பலவாறாய் எண்சாணுடம்பால் பின்னர் ஒருவனுனேன் எ-று. (எசஉ)

கருமீரல்செழுமீரல்பொலிவாய்நின்ற களிதமாய்காறலுமாயித்துந்தானாய், வருபொருமல்செழுமனுமாய்கிருமிசூழ்ந்து வகைதோதுவழியுடையமலமுமாகி,மிருவுமுன்னூற்றறுபதுமுழக்குடலுமாகி முப்பத்திரண்டுமுழப்பெருங்குடலதாகி,உருவெனுமாய்நவத்துவாரவாசலாகி யுதிரசுக்கிலமதுவாய் ஒருவனானேன்.

(இ-ள்.) கரிய ஈரல்முதலிய உறுப்புக்களாயமைந்து கடையில் நான் ஒருவனேயானேன் எ-று. (௭௪௩)

மலஜலயிந்திரியமெனுமதுமூன்றாகி லச்சிரத்தோல்போர்த்துவழிபலவாய்த்தோன்றி, நலமெனுமூணரைக்கோடி ரோமத்துவாரம் நாலெட்டுஉறுப்பதுவாய்விரலிருபதாகி,விலகுயிர்நான்குயிர்க்குயிராயென்சாணீளம் விரும்புநால்சாண்பெருமன்வாய்கண்மூக்கு, செவியுஞ்சடம்பிருதிவியதின்கூறாகி திருத்தமதாய்காலிரண்டு மொருவனானேன்.

(இ-ள்.) மவம் ஜலம், இந்திரியம், மற்றபிருதிவிபூதத்தின்கூறான அம்சங்களோடிருந்த கடையில் நான் ஒருவனேயானேன் எ-று. (௭௪௪)

காமிரண்டும்பதினாறுகயிறாய்நின்று கருறுவீணைத்தண்டுதெருவுமாறாய், இலமேவுமெட்டுத்தூண்முப்பதுவுஞ்சந்து எழுபதுபேரொலும்புமுச்சாணெலும்புதானாய், முதிர்முச்சாணெலும்பொடுசதையுமேவி முக்கியமாயெண்பலமீரலுமாய்த்தோன்றி,உதிரமது நானாழியுறுய்புந்தானாயுடலது நாற்பதுவாசலொருவனானேன்.

(இ-ள்.) இரண்டுகாமும் பதினாறுகயிறாய் நிற்றல்முதலியவிஷயங்களோடுகூடியிருந்து கடையில் ஒருவனேயானேன் எ-று. (௭௪௫)

இனமறிதலுதிரமாங்கிஷமுமேதையெய்துமத்திதசையோடுசத்ததாது, வினவுபலமுப்பத்திரண்டுமாகும்விளங்கும்பழுயதினறுமிகவுஞ்சேர்ந்து, முனைமுதுகுதண்டுபனிரெண்டு கோர்வைமிக்ககளஞ்சசைவதுமேயஞ்சதாகி,செனனநரம்பேழ்சவ்வுமெலும்புங்கூடி செடலமதாய்சதைமேவி ஒருவனானேன்.

(இ-ள்.) உதிரம், மாங்கிஷம், மேதை இவைமுதலிய அங்கங்களோடுகூடி சவ்வும் எலும்புங்கூடியிருந்து கடையில்நான் ஒருவனேயானேன் எ-று.

நலமிந்தப்பிடரியினில்நாடிதோன்றி நரம்புபின்ன லெழுபத்தீராயிரமதாகி,அலமிந்தஅசவுடல்தான்துவைக்கல்தோன்றி ஆருயிரும்நாற்பத்துஆறுந்தானாய், துலக்கமெனுந்தொழுகையிரண்டாயிரத்துள் துடர்ந்துவளர்ந்தேயிலகு மாயிரமாயென்னில்,பலபலவாய்பதினாறுகோணமாகி பதியகுண்டலியுமானதொருவனானேன்.

(இ-ள்.) பிடரியில் நாடிகள் உண்டாய் எழுபத்திரண்டாயிரம் என்னும் தொகையைப்பெற்று மற்றும் உபயங்களையெல்லாம் பெற்றுக்குண்டலியுமா கடையில் நான் ஒருவனேயானேன் எ-று. (௭௪௭)

நாடிநரம் பேழுத்தீராயிரத்தில் நலத்தகரம்பதனில் புறநாடி தோன்றி, கூடிநின்றவிஷ்ணுருத்திரநாடியாகி கூரானயிடைகலைபின் கலையுமோடி, மூடிமுதுகெலும்புபழுபதினாறாகி மூடுகெழுபத்தொரு துவாரக்குழியுமாகி, ஆடியதோரையுழக்குதிரமாகி அசலெடுத்தவு டலதுவா யொருவனானேன்.

(இ-ள்.) எழுபத்திராயிரம் நரம்புகளில் புறநாடியுண்டாய் பிரமாவிஷ்ணு ருத்திரநாடிகளாம் இடகலை பின்கலையாம் ஓடிஉடலுக்குள் ளிருக்கக் கடையில் நான் ஒருவனேயானேன் எ-று. (௭௪௮)

ஆதாரமதில்நாழிவாதந்தோன்றி அடுத்தமூன்னுழிபித்தநாலு ழிசேத்மம், பேதமில்லாமூணரைக்கோடி ரோமத்துவாரம்பிரியமெ னுமெண்கோடி மலத்துவாரம், சேதமில்லாவைம்பலமா முதிரமாகி திருத்தமாங்கிஷநூறுபலமூன்றாகி, வேதமாங்கெந்தமெண்பலனுமா கிவுளங்குமிந்தவுடலெடுத்தொருவனானேன்.

(இ-ள்.) அவைகளில் வாதநாடி, பித்தநாடி, சேஷ்மநாடி என்கிறவைக ளாம் அல்லாமலும் மூன்றரைகோடி ரோமத்துவாரமும்எண்கோடி மலத்து வாரமும் ஐந்துபலம் உதிரம் முதலியவைகளாயிருந்து கடையில் நான் ஒருவ னேயானேன் எ-று. (௭௪௯)

விளங்குமுடல்ரோமநாற்றெட்டுகோடிமேதையிருநூறுபலமே லதாகி, களங்கமில்லாபெலத்ததோல் முன்னூற்றாறு கருதுபலமா மாறுதினம்பலந்தான், அளங்கமுன்னூற்றேழுபலங் குடலுமாகும் அதிகமாமலம்வழுக்கை நாற்பலமுமாகும், திளங்குஞ்சிவுரிதானுங் கண்கள்நாலுஞ் சிறக்கநாற்களஞ்சதுவா யொருவனானேன்.

(இ-ள்.) மும்மலங்களும் மேதை இருநூறுபலம்தோல்முன்நூற்றுறுபலம் என்பவைகள் முதலியவைற்றோடிருந்து கடையில்நான் ஒருவனேயானேன்.

நாவுநாற்களஞ்சதுவா யுதித்தவாறும் நற்கெந்தமூக்கு முக்கள ஞ்சதாகில், மேவுமிருகன்னநாற்களஞ்சதாகி யெலும்பெல்லா நூற் றொருபலமாமென்க, எவவுமேயிறைச்சிபல நூற்றறுபத்தஞ்ச யியல் பாகுமுப்பலந்தான் மூளையாகும், தாவுந்தாமரைமொட்டு ஐயங்கள ஞ்சு கலப்பையுமுழகிகளமொருவனானேன்,

(இ-ள்.) நாற்கழஞ்சுநாவும் மூக்கு முக்கழஞ்சும் இருகன்னங்கள்நாற்கழ ஞ்சும், எலும்பெல்லாம் நூற்றொருபலமும், இறைச்சி, நூற்றுப்பதினைந்து,

மூளை மூன்றுபலம் தாமலாமொட்டு ஐந்துகழஞ்சு சலப்பை ஒருமுழங்களம் இருந்தகடையில் நான் ஒருவனேயானேன் எ-று. (எ௲௧)

எண்சாணுதேகமதாய் படைத்தவாறும் இயல்பானகருவிதொண்ணூற்றாறின்வாறும், கண்பார்க்கவுடலெடுத்த காயக்கூறும் சணக்காகதத்துவத்தின்கருத்தின்வாறும், நண்பாகநாமெடுத்த வறலாறெல்லாம் நலத்தவசைவதினுடையநாட்டத்தாலும்,பண்பாகஇந்நூலாயிரத்தன்னூறில் பாடுபட்டசெய்தியெல்லாம்பகர்வேனுண்டே.

(இ-ள்.) எண்சாண்தேகம் கருகள்தொண்ணூற்றாறு வசயம்இவைகளின் தன்மைகளையெல்லாம் இந்நூல் ஆயிரத்தைந்நூற்றில் பாடுகிறேன் எ-று.

மதிரவியாய்ப்பிரகாசவொளிவாய்மேவும் வாறிதினாலெடுத்தவ ரலாறுதன்னை, விதியறிந்தஞானவெட்டி விளங்குநந்நூல் விட்டகுறைதொட்டகுறையெய்துமாகில், துதித்துமகிழ்ந்தகத் தீசர்பாதம் போற்றி ருசூக்ஷமெல்லாம்வெளியாகச்சொல்வேன்காணும்,பதித்துகற்பசாதனையைப்பகர்வேனுண்டே பதினெண்பேர்பதம்பணிந் தர்ச்சித்தேனே.

(இ-ள்.) சந்திரன், சூரியன் இவர்களின் ஒளியாய்பொருந்திய ஞானவெட்டியென்னும் நூலானது விட்டகுறை தொட்டகுறையுள்ளவர்களுக்கேகைகூடும் ஆகையால்பதினெட்டுசித்தர்கள் பாதங்களைநான் அர்ச்சனைசெய்தேன்

திருவுருவாய்விளங்குஞ்சிவஞானசத்தி ஜெகதலமெலாம்படைத்தசிறுபெண்ணுத்தாள், அருவுருவாமம்பிகைப்பெண் ணருள்தன்னாலே அகண்டபரிபூரணமாயளவில்லாத, மருவுமலர்க்கமல விதழ் மூலாதாரம் மகிதலத்திலிலகுவடிவானசோதி, கருவிருந்துநடனமிடுங்கருணைஞான கதிர்மதியையின்னதென்று கருதுவேனே.

(இ-ள்.) சிவஞானசத்தியாகிய வாலாம்பிகைப்பெண்ணின்கிருபையினால் கதிர்மதியை இன்னதென்று எடுத்துச்சொல்லுவேன் எ-று. (எ௲௪)

கற்பசாதனை-தரு.

அதிவிதகாயகற்பமருளுவேனுண்டே-சரஸ்பதி
அமிர்தசந்திரபுஷ்கரணிதீர்த்தமுண்டே.

(இ-ள்.) அதிகசிறந்தகுணத்தையுடைய கற்பசாதனையின் குணத்தை நான் அருளிச்செய்வேன் எ-று. (எ௲௫)

மதிபொழிந்தனுக்கிரகபேரின்பத்தேன்மதுரம்-லஸ்து-வாருதிபானம்வாலாம்பிகையி னருளமிர்தம்-சுழி, துதிபெருமூலாதாரத்திலுங்கருவின்பம்-நாத-சுக்கிலவிந்துசரோணிதமும் பேரின்பம்-மதி

விதியிதுசோசபீசமும் விந்துநாதம்-சூத-விந்ததுவுஞ் செத்திநாதமீ
தால்ரசவாதம்-புகழ்,பேதிப்பதுமறுபத்து நாலுபேரைக்கட்டும்-
வாசி-பேரண்டஞ்சுற்றியுமெட்டுமதிபதியாட்டம்-அதி.

(இ-ள்.) மதியின்குணத்தால் வாலாம்பிகையின் அருளமுதமும் அதினல் இன்பமும் விந்துநாதமும் அதினல் சூதகந்திநாதமும் அதினல் ரசவாதமும் இதனல் ௬௪-சரக்குகளையும் கட்டுகின்ற ஆட்டமுமாகும் எ-று. (௭௫௬)

நாற்பதுக்குள்சற்பமுண்டிடுவோர்க் கென்னபோதம்-வெகுநாள்கள்கழிந்தநரைத்ததினல் சொல்லும்பேதம்-ஆனல்,சற்பத்தினருளமிர்தமேயுண்டுமறந்தால்-செட-அர்பமதாகி யழிந்திடுமாகங்குறைந்தால்-இன்பம், சொற்பமென்றெண்ணிடுங்கற்பங்கொண்டழிந்தோர்கோடி-சூக்ஷ, சுழிமுனையறியாதென்ன மாந்தர்கள்பேடியுடல்-உற்பக-மாசிபடாவிருந்தவர்க் கெய்தும்-தேக, மூத்தைக்குழியிலடிபட்டபேர்க்கென்னமுழுதும்-அதி.

(இ-ள்.) கற்பசாதனம் ௪௰-வயதில்செய்தால் நரையுண்டாகாது தவறி கற்பஞ்செய்து அழிந்தவர்கள் கோடாகோடி சுழிமுனையறியார்கள் பேடிகள் ஆகையால் தேகப்பற்றுள்ளவர்கள் ஒருபயனையுமடையார்கள் எ-று. (௭௫௭)

விந்ததிசார்மூவப்புநதி கங்கைசாரை-மதி-ரேமவியசந்திரபுஷ்கரணியூசிநீரை-ரோம,இந்திரியமிதுவாரியமுரிகார்மேகம்-எழு- கடலுவறுசுவை யினில்வரும்வேகம்-அருள், தந்தைவிதிசருநீர்பதினறுடன்கூடி-சல-சாகரமாவதெண்சாணுடலுற்பவந்தேடிக்-கியான, மந்திரபஞ்சாக்ஷரமெனுமக்ஷரமுமாகும்-கற்ப-மாமதுரவின்பத்தேனெனுமாமலர்சூழும்-அதி.

(இ-ள்.) வெண்சாரை கருநெல்லிகளால் சந்திரபுட்கரணிநீரைரோமேந்திரிய துவாரவாயிலாகவரும் கருநீர்பதினறுடன்கூடி எண்சாணுடலமான உற்பவத்தைத்தேடி மந்திரபஞ்சாட்சரத்தினல் இன்பத்தேன்என்னும் மலர் சூடும் எ-று. (௭௫௮)

அதிகாரத்தினலன்பத்தோரக்ஷர மிதுபானம்-உடல்-ஆத்துமாநீர்மேற்குமிழிபிடுமிதுவானம்- ஆசை,மாகரத்தினல்செகமாதிதமுமயல்மோகம்-மத-மாச்சரியகாமக்குரோதத்தினல்சுகபோகம் -வினையகாரத்தினலெமனிப்படிபாசக்கயிறுசொண்-டுயிர் -எழுந்தெண்சாணுடலழிந்துப்போய்விடுமாகில்-சனி,விகாரத்தினலு மழிந்தேசபுவனமும்வாடி-மயல்-வின்பத்தினல் சுடுகாடுமரணமுந்தேடி-அதி.

(இ-ள்.) அகாரங்காரணமாக ஐம்பத்தோரெழுத்துகளுமாம் அதுபோல சரீரமயம் இதுவோநீரின்மேற்குமிழியாம் ஆகையால் இந்தச்சரீரம் அநேக அட்சரங்களால் முடித்துகடையில் மரணமாகும் எ-று. (௭௫௯)

அண்டசராசரபுவனமே யருள்படைத்தேன்-புகழ்-ஆதியனாதி யறுபத்தினால்தீக்ஷைவிதித்தேன்-கரு-கண்டேனமுரியேகாக்ஷகமென்றதினாலும்காயஞ்-சித்தியதாங்கற்பதேகவஜீகரத்தாலும்அது-நின்றுஓராண்டுகொண்டற்புதமாய்சரமாறி-யானும்-நிற்பந்தமாய்வயிராக்கியமாகவுந்தேறி-வாரி-யுண்டேனமிர்தத்தைக் காலையுமாலைவிடாமல்-மித-மோடிடுஞ்சாரையதுநடுமையங்கோடாமல்-அதி.

(இ-ள்.) அண்டம், சரம், அசரம், இவைகளில் அருளைப் படைத்தேன் அறுபத்துநான்கு திட்சைகளையும் உண்டாக்கினேன் கற்பமுண்டால் சரீரம் நிலைக்குமென்னும் வழியையுங்கண்டேன் யேகாட்சரத்தினால் காயஞ்சித்தியாம் அற்புதமாய்சரமாறியானது நிர்ப்பந்தமாய் வயிராக்கியமாகவுந்தேறிகாலைமாலை இடைவிடாமல் அமிர்தபானம்பண்ணி சாரையின்கடுமை கொடாமல்

தூய்யவெண்சாமரைமுன்பின் னகற்றிகடுமையம்-தறிசெய்து சிவயகமஒங்கிலியெனுமமையம்-கற்ப, மையமில்லாமலடிக்கடி-மாறியில்லத்தில்-எந்தன்-ஆத்துமாவீறிவிளஙகமென்மேலுமகத்திலதொழில், வையகத்தோரிணங்காமல் தறிசெய்தமாறி-உடல்-வயிறுகும்பிகடைத்தேறும்படி செய்துமீறி-யானும்,செய்விதத்தால் பசியாறிபொருபோதுமன்னம்-எந்தன்-ஸ்திரீயுடனேசீக்ஷனாக யிருவருமின்னம்-அதி.

(இ-ள்.) பரிசுத்தமான வெண்சாரையில் முன்னும்பின்னுமகற்றி நடுமையத்திற்றறிசெய்து சிவயநம, ஓம், கிலீம், ஐயும்என்று யாதொரு சந்தேகமுமில்லாமல் அடிக்கடிமாறி என் ஆத்துமாவானது மேன்மேலும் வீறிவிளங்கவும் உலகத்தோர்சம்மதியாமல்செய்து மாறுதலையடைந்துசெய்யும்வகையினால்பசிதீர்ந்து ஒருபோதும் அன்னத்தை ஸ்ரீயுடனே சீடனுமாய் இருவரும் எ-று.

அகமில்லாமலவனி சஞ்சாரஞ்செய்யாமல்-தினம்-அமுரியேநடுவணை அகாரம்பொய்யாமல்-கற்பம், சுகஜீகரயின்பமதாகபேயுன்பம் மேலுஞ்-சுத்தஜெலம் செலவானது போகவுமமிர்தம்-நதி, யாகமாயோடுஞ் சமுத்திரநீரொருபாண்டம்-அது-பானமதைவெகு பத்திரமாகப்பிர்மாண்டம்-இது,ஏகவஸ்துவெனும் வன்னியிட்டெரித்துப் பார்-அன்னம்-மிகவுண்ணும்பதமேலுங் கறிவகைக்கூட்டும்-அதி.

(இ-ள்.) மனமில்லாமலும், சஞ்சாரஞ்செய்யாமலும் நடுவணையாகிய அகாரம்பொய்யாமலும், சுத்தஜலம் செலவானதுபோக பாகமாகஓடும் சமுத்திரநீரை ஒருபிண்டத்திற்கக்கி வெகுபத்திரமாக பிரமாண்டம் இதை ஏகவஸ்து என்றுசொல்லுகின்ற வன்னியிலிட்டெரித்துப் பார்த்து அன்னம்மிகவும்உண்ணும்பதத்தில் கறிவகையையுங் கூட்டும் எ-று. (எசுஉ)

இனமதாய்லருஞ் சுத்தசலப்பனிநீர்தான்-இடாஎங்கும்விடாமல்வெகுபதனமறுவகையை-கற்பங், கனம்பொருந்தியகாயகற்பமுப

வாசம்-செடங்-காந்திசுயம்புச்சுகாநிதசோதிப்பிரகாசம்-பானம்தினந்தினமறவாமல்சரமாறியுண்டேன்-உடல்-செங்கனலால்செவந்தெழுந்தசூரியன்கண்டேன்-தேக,மனம்புத்தி சித்தமாண்மையும் வெந்துநீறாச்சேகோல-மாதுமரபதிசாரையறுபதால்போச்சே-அதி.

(இ-ள்). சாதியாய் வருகின்ற சுத்தசலமே பனிநீராம்எங்கும்விட்டுவிடாமல் அறுவகைஉருசியை கனம்பொருந்திய காயகற்ப உபவாசசுயம்புசகாநிதசோதிப்பிரகாசமானபானத்தை தினமுமறவாமல் சாத்தைமாறிப்புசித்தேன் அதனால் அந்தக்கரணங்கள் வெந்துநீறாயின கோபமானதும் அறுபட்டுப்போயிற்று எ-று. (௭௯௩)

கொச்சகம்.

வாரிபுகழ்மாமதுர வஸ்துவெனும்பானமதால்
வீரியமென்றேயிருந்த விந்துபாழாச்சுதுகாண்
நாரியர்தன்மாய்கைவிட்டு நான்பிரிந்தேனேதனவால்
மாகிபொழிந்தேயமிர் வாலைரசமுண்டேனே.

(இ-ள்.) மதுரவஸ்துவால் விந்துபாழாச்சுது நாரியர் ஆசையை விட்டுப்பிரிந்தேன் வாலைரசாமிர்த முண்டேன் எ-று. (௭௯௪)

மண்டலமெலாம்புகழு மந்திரபஞ்சாட்சரத்தை
அண்டமெல்லாஞ்சோதனைசெய் தாகினுமேபாரறிவார்
நின்றனுலகாதிதமு நிராமயத்தைக்காணாமல்
கண்டேன்குருமுனியால் காயகற்பங்கொண்டேனே.

(இ-ள்.) மந்திரமாகிய பஞ்சாட்சரத்தை சோதனைசெய்தாலும்யாவர் அறியவல்லவர்? ஆனால் நான்மட்டுங் குருமுனியால் உணர்ந்து காயகற்பங் கொண்டேன் எ-று. (௭௯௫)

உப்பதுவுமப்புமய மோகோதிருமாலின்மயம்
அப்புவினால்மிப்பா ழமைத்ததுகாண்சுன்னமதால்
செப்பிடிலுங்காயகற்பஞ் சென்றதுமோராண்டுவரை
இப்பொருளைபத்திரமா யிச்சையுடனுண்டேனே.

(இ-ள்.) அப்புவினால் உண்டானது உப்பாகும் அதுவுந் திருமாலின்மயமாம் அதனால் முப்பாழுஞ் சுண்ணமாய் எரிந்ததாம் காயகற்பம் ஓராண்டுவரைக்கும் இச்சையாயுண்டேன் எ-று. (௭௯௬)

கற்பமிதுஅற்பமல்ல காயகற்பங்காலைரவி
உற்பகமூன்றுகுமுக்கா லுடன்கடிகைசென்றதின்பின்
விற்பனைகொண்டன்னைமிக வேதனைவாராதிடிலும்
சிற்பவயிராக்கியத்தில் நின்றுகடைபேறினனே.

(இ-ள்.) இக்கற்பம் அற்பமானதல்ல, மாலை, காலை, நடுவென்னும்மூன்று விதமாம் முக்கார்கடிகை சென்றதின்பிறகு மிகவும் வேதனைவராமல், வயிராக்கியமாக விருந்து கடைத்தேறினேன் எ-று. (௭௬௭)

கலித்துறை.

வேதாகமத்தில் மறைசூழ்ந்திலகும் விந்துவழி
ஆதாரமாறுஞ் சுழிமூலசூட்சும மாரறிவார்
சூதானவிந்து ரசசூதகற்பச் சுகாதிதங்காண்
நாதாக்கள்போற்று மறுநீரமுரி நதியறிந்தே.

(இ-ள்.) வேதாகமங்களிற்சொல்லுகின்ற விந்தின்வழியேவந்த ஆறுதாரங்களையும்யாவர் அறிவார்கள்? இதுவே சுகாதீதமாகும். இதைநாதாக்கள்ஆறுநீரென்றுணர்ந்து போற்றுவார்கள் எ-று. (௭௬௮)

தினங்கொண்டமுரி திங்களொன்றாகில் திகழமிர்தம்
புனல்வாரிசூழு மதுபானமாறு புகழ்கடிகை
மனங்கொண்டுமன்ன போசனமுண்டு மதியையுண்டு
கனங்கொண்டிடுங்கற்பஞ் சரமாரியேந்திக் கருதினனே.

(இ-ள்.) இவ்வமுரியானது ஒருமாதமானால் புனல்கடல்சூழும் மதுபானமாய் புகழ்கின்றகடிகைகள் ஆறும்கொண்டு போசனமாக மதியமிர்தமுண்டு சரமாறிக் கற்பஞ்சாதித்தேன் எ-று. (௭௬௯)

மறுதிங்கள்மூன்று அதிகாலையுண்டு மதியமிர்தம்
அன்றுமூன்றுந்தள்ளி மறுகடிகைசென்றான அளவதின்பின்
நிறுவாகரத்தி- லுணர்வான அன்னை நிமிஷமிராள்
கிருபாகரமது பானத்திலேறியான் கீர்த்திபெற்றேன்

(இ-ள்.) மூன்றுமாதம்வரைக்கும் காலையிலுண்டு ௩௰-கடிகை தள்ளிச்சென்றால் நன்மையாமென்றடைந்து நான் கீர்த்தியைப்பெற்றேன் எ-று.

வருந்திங்கள்நாலு கடிகையீராறு மதுரரசப்
பெருகும்புஷ்கரணி கடல்சூழ்ந்தவாரி பேரின்பங்காண்
அரும்பொருளான அமுரியுண்டேனந்த வேளைதள்ளி
குருவானபொசனங் களிகூர்ந்துமேனிக் கூறுவனே.

(இ-ள்.) நாலாவதுமாசத்தில் பன்னிரண்டுகெடிகை புட்கரணியில் பேரின்பமுண்டாம் ஆகையால் அமுரியுண்டேன் அவ்வேளையில் குருபோசனங்கண்டுகளித்து அதின்மேனியைக் கூறுவேன் எ-று. (௭௭௧)

வெண்பா.

பூத்தமலர்வாசம் பொருந்துபரிபூரணத்தில்
வீற்றிருப்பதஞ்சு திங்கள் வெண்மதிகாண்-பூத்தமலர்

கடிகைபதினைந்துங் கண்டிதமாயுண்டமூரி
நெடியமலரன்னமது நேர்.

(இ-ள்.) புஷ்பவாசனைபொருந்தும் பரிபூரணத்தில் அஞ்சுமாசம்வீற்றிருப்பது வெள்ளியசந்திரனும் அவ்விடம்பதினைந்து கடிகை அமுர்தபானஞ் செய்தேன் எ-று. (எஎஉ)

இந்தப்படியதுமூன் றியல்பால்கடிகைதினம்
அந்தந்தநாள்பிசகா தாறுதிங்கள்-இந்தப்படி
முன்னூழியின்குறையா மூன்றுகடிகைக்குமேல்
அன்னாளோராண்டுமது வுண்.

(இ-ள்.) இப்படியே ஆறுவதுயாசத்தில் கடிகைக்கறைக்குதவருது ஓராண்டுவரைக்கும் உண்ணுவாய் எ-று. (எஎ௩)

வாலைப்பருவம்வாதம் வருமுப்பதுக்குள்
காலைரவிகொண்டுஇது காண்கிலுமே-வாலை
நாற்பதுக்குள்மேலதிக நற்பொருளையுண்பவர்கள்
சீலமருள்காலையன்னஞ் செப்பு.

(இ-ள்.) பாலப்பருவமாகிய முப்பதுக்குள்ரவிகொண்டுகண்டால்நன்மை நாற்பதுக்குமேல் நல்லபானஞ்செய்கிறவர்கள் காலைசெய்யும் அன்னத்தினவிதியைச்சொல் எ-று. (எஎச)

பத்துமொருவஞ்சும் பதினைந்துமொருபத்துங்
கற்றுணர்வதிவ்வயது காண்கிலார்-பத்தியுடன்
உச்சியொருவேளை யுணர்வீராயன்னமது
இச்சையுடன்கொண்டுணர்வ தின்பம்.

(இ-ள்.) இருபத்தைந்து வயதுவரைக்கும் கற்றுணர்வதில்லைபத்தியோடு உச்சியில்மாத்திரம் ஒருவேளையுண்பீரானல் அதுஇன்பந்தரத்தக்கதாம்.

விருத்தம்.

அரிவிந்துமதியமிர்தமதுரவாரிஅவ்வெழுத்தில் பிரணவமாயரவம்பூண்டு,கரியுரியுந்தரித்துசிவரூபமாகிகருக்குருவாம் நாதவிந்தின்கருத்தினாலும், விரிந்துபலபலவிதமாய்விளங்குஞான வெட்டியருளாயிரத்தைந்நூற்றுக்குள், துரியபொருள்சூக்ஷமெல்லா மாய்ந்துகற்பஞ் சொல்வனினியாண்டையிந்நூல் சூக்ஷந்தானே.

(இ-ள்.) விந்துவாகிய மதியமிர்தமானது அகரம்என்னும் அட்சரசம்பந்தத்தால் பிரணவமாய் சத்தம்பூண்டு சிவரூபமாய் நாதவிந்தின்காரணத்தினால் பலபலவிதமாய்விளங்குகின்ற ஞானவெட்டி ஆயிரத்தைந்நூற்றுக்குள் சூட்சமெல்லாம் ஆராய்ந்துகற்பஞ்சொல்லுவேன் இனி ஆண்டையே! இந்நூலின் சூக்ஷம் இதுவேயாம் எ-று. (எஎ௫)

நாதசத்திபிருதிவியாய்மூலந்தோன்றி நாதாந்தப்பேரொளியா யுகாரந்தோன்றி, பாதமடிசுழிமுனைக்குளளவில்லாத பரப்பிரமசுரூ பியதாயசுகாதீதத்தில்,மாதாந்தந்தோன்றிநவ நாதத்துள்ளாய்மண் ணுள்ளதாய்ப்பிரபஞ்சவாழ்க்கைபோலும், ஆதாரங்கீழ்மூலச்சத்திக் கூறின் அளவெல்லாம்யானுரைப்பேனுண்டேகேளீர்.

(இ-ள்) நாதசத்தியானது பிருதிவியாய் மூலாதாரத்திலுண்டாய் நாதாந் தமான பெரியஒளிவடிவினதாய் உதாரந்தோன்றி பாதமடி சுழிமுனைக்குள் அளவுசொல்லப்படாத பரப்பிரமசொரூபராய் சுகாதீதத்தில் மாதாந்தந்தோ ன்றி ஒன்பதாவது நாதத்துக்குள்ளாக உலகவாழ்க்கைபோன்ற ஆதாரத்தின் கீழ்மூலசத்தியின் அளவுகளையெல்லாம் நான்சொல்லுவேன் எ-று. (எஎ௬)

ஓராண்டுஅமுரியுண்ணக்காலைமாலைஉச்சியொடுவெகுஉபமாயுட் கொண்டேபின்,மாருதகனல்வேகமதிகமாச்சுவன்னியினுலெரியுமிக வளர்ந்துபோச்சு, வீறுமலென்னுடனும்வெந்துபோச்சு வேட்கையி னுல்தேகமெங்கும்வெடித்துப்போச்சு, மீறுதுவென்றுமன மிகவும் விம்மிவேதனைகொண்டேயிருந்த விதிகாணுண்டே.

(இ-ள்.) காலை, மாலை, உச்சியென்னும் மூன்றுவேலைகளும் கணக்காக மிகவும்உபாயமாய் ஒருவருஷம்வரைக்கும் அமுரியுண்டால், கனல்வேகம் அ திகமாகும், அதினுல்எரிமிகவும் வளரும், என்னுடலும்வெந்துபோச்சு, தேக முழுமையும் வெடித்துப்போச்சு, அதனுல்மிதவும் மனம்வருந்தி வேதனைக் கொணடிருந்தேன் எ-று. (எஎஅ)

இந்தவிதமாயிருந்துகவனங்கொண்டு இருக்குமந்தவேளை குறு முனிதான்வந்து, மைந்தனேயென்றழைத்து மகிழ்ந்துமுத்தம் மன தாரக்களிகூர்ந்துவாராய்பிள்ளாய்,சிந்தையுனக்கென்னசிவஞானதே சிசெகந்தனிம்வெகுகோடி காலம்வாழ்வாய், முத்தியுனக்குபதேசந் தந்தேன்தந்தேன் மூவுலகில்சித்துவிளையாடுவாயே.

(இ-ள்.) இவ்விதமாக இருந்துகவனங் கொண்டிருக்கின்ற அந்தவேளை யில் குருமுனிவர்வந்து மகனேயென்றழைத்து மனதாரச் சந்தோஷித்து வா ராய்பிள்ளாய்! நீவிசனப்படவேண்டாம்,சிவஞானியாய்வெகுகாலம்ஜீவிப்பாய் உனக்கு முன்னதாக உபதேசித்தேன் இப்பெரியஉலகத்தில் நீசித்துவிளையா டுவாய் எ-று. (எஎ௯)

கருக்குருவையரிசிபசும்பயறுமாவின் கருதிடில்வெண்ணுவின் பசும்பாலுங்கூட்டி, ஒருபோதுமன்னஞ்சமைத் துண்ணும்போது உடன்கூட்டுமமுரியுப்புஉண்டால்மோக்ஷம், குருவருளைமனதிலெண் ணிரவியிலன்னங் கொள்ளுமதிராத்திரியிலாவின்பால்கொள், அரும் பொருளைமறவாதேயோராண்டாகில் அதிகாலையமுரியுண்டு மதியி லாண்டே.

(இ-ள்.) கருங்குருவை அரிசியும், பசும்பயறும், வெள்ளைப் பசும்பாலுங் கூட்டி அமைத்து ஒருபொழுது உண்ணும்போது, அத்துடனே அமுரியுப்பு கூட்டியுண்டால் மோக்ஷமாம், குருவருளை மனத்தில் நினைத்து ரவியில் அன்னங்கொள்ளு, ராத்திரியில் பசும்பால்கொள், அரியபொருளாகியபரத்தைமறவாதே ஒருவருஷமானால் அதிகாலையமுரி சந்திரசரத்தில் உண்ணுவை எ-று.

அருளெனும்ரவியிருபத்தஞ்சு நாழியானபின்பு மூலமென்றபுளியினேர்மை, கருவுருவென்றெடுத்துஅந்திகருணைமேவி காரமதிலமுரிவிட்டுக்கண்டமாத்திரம், திருவுருவாயுண்ணையிலுங்காரசாரம்செய்தவிதமாயுபமாகதீக்ஷையொன்றும், மருவுகந்தவாசமலரன்னந்தண்ணீர்வசனமதுபோலமுரிகாரமுண்ணே

(இ-ள்.) அருள்என்கிற ரவியானது இருபத்தைந்து நாழிகையானபின்பு மூலப்புளியின் தன்மை கருவுருவென்றெடுத்து கருணையினால்அமுரியைகண்டமாத்திரம்; திருவுருவாம் உண்ணும்போதும் சாரசாரதீட்சையாம், புஷ்பகந்தம்போல் அன்னந்தண்ணீரை அமுரியாம், அதுகாரமுடையதாகும் எ-று.

யோகசாதனை-௬௫.

ஆனந்தபூர்ணதிவ்யபரிமளகெந்தம்-சுழிமுனை
ஆதாரமூலச்சுகந்தசுரோணிதஅந்தம்.

(இ-ள்.) ஆனந்தத்தைவிளைவிக்கின்ற பரிபூரணமான திவ்வியபரிமளகந்தம்போன்றது,சுழிமுனை மூலாதாரம் இவைகளின்சுகந்த சுரோணிதஅந்தம்.

ஞானசுகாதீதசூக்ஷசடாதாரபீடம்-செக-நாதப்பிரகாசப் பிராணவயமேவியமாடம்-கதிர், வானஞ்சூழ்சாகரமேரு தீவாந்தரநாடுபுவிமகிதலங்கருவூர்வளர்நாட்டினில்வீடு-மலை, சோணையருவிசூழ்பானமலாவியசிலம்-மதிவளர்-சோதிமணிச்சித்திரக்கூட மளாவியமூலம்-புனல், கானலுலாவியசிவசிங்காதனமேருசத்தி-காரத்தினு ளவில்லாச்சரக்கெல்லாநீறு-ஆனந்த.

(இ-ள்.) ஞானசுகாதீதமான சூட்சமசடாதாரபீடமாயுள்ளது சேகநாதப்பிராணலயமும் மாடமாயுள்ளது, சாகரமேருதீவாந்தரநாடு,கருவூரில் வீடுபானமேசிலம், சத்திகாரத்தினால் சரக்கெல்லாம் நீறும் எ-று. (௭௮௧)

அந்தத்திலுமூலஆக்கினைமேவும் பிர்மாண்டம்-அனல்-அக்கினிசூழும்ரவிசதிர்வன்னியைகண்டோம்-இவை, சுந்தரநாதச்சுரோணிதசூரியகாந்தி-எங்குஞ்-சுடரொளிவெளிபிர்மகபாலமுமேந்தி - நாபி, உந்தியின்கீழ்வரைகந்தமூலவர்க்ககனிதான்உப்பு-உவரென்றால்மூலப்புளிசவரேமினிதான-வர்னஞ், செந்தூரஞ்சோதி அமுதவிளங்கிய தங்கம்-திரு-மாலுடன்தங்கை சரஸ்வதிமேவிய அங்கம்-ஆனந்த.

(இ-ள்.) மூவாக்கினையில் அக்கினிசூழ்கின்ற வன்னியைக்கண்டோம்; சூரியகாந்திபோன்றதாம், கபாலமேந்தி, உச்சியின்கீழ் சரஸ்வதிமேவி யிருக்கின்ற அங்கமாகும் எ-று. (எஅச)

அம்பிகைவாலையபிராமியென்றும்பிரசங்கம்-பர -அண்டரண்டபகிரண்டமளாவியசிங்கம்-திரு, நம்பியிருந்துலகாதிதம் புகழ்நாதம்பிருதிவி-நாட்டத்திலுங்காயகற்பமுண்டோரசவாதம்-இன்பங், கும்பிதனிலிருந்தேநடனம்புரிவாசி - ஏமங்-கோரக்கர்மூலி சடையென்றுமேபரதேசி-பழம், வெம்புங்கனியென்று எங்கும்பிரகாசமாய்வீசும்இந்த-வீடுதனில்ரெண்டு வெளிதனிலொன்றுநேசம்-ஆனந்த.

(இ-ள்.) அம்பிகை, வாலை, அபிராமிஎன்றபிரசங்கம், பகிரண்டமளாவியசிங்கம், உலகமெல்லாம் புகழ்கின்றநாதம், காயகற்பமுண்பதேரசவாதம், கோரக்கர் மூலிகையே பரதேசி. எங்குங் கனியென்று பிரகாசமாய் வீசும், இந்த வீட்டில் இரண்டுவெளியில் ஒன்றும்நேசம் எ-று. (எஅரு)

சங்கப்பிரசங்கசிங்காரமாயெங்கும்பிரசங்கம்-புவி - தனித்துப்பார்க்கசவுக்காரமாம்பொங்குமேவங்கம் கோசம், லிங்கத்தின்கீழடிவாரத்திலும்பின்னுக்கீசம்-உண்ட-நிர்மலநிர்க்குண பாரையென்றும்திருவாசம் - அருள், அங்கத்திலுமெண்சாண் கும்பிதனில்மலக்கூடுஅதைஆராய்ந்துபார்க்கஅனேகங்கண்சாக்ஷிதான்காடு-பரி தங்கமெனும்வடிவானவாலாம்பிகைசுரூபம்-இதை-சார்ந்துகொண்டுபரிசோதிக்கும் எங்கும்ரூபம்-ஆனந்த,

(இ-ள்.) பிரசங்கசிங்காரமாய் எங்கும் பார்க்க சவர்க்காரமாய்ப்பொங்கும் லிங்கத்தின் கீழடிவாரத்திலும், அருள் அங்கத்தில் எண்சாண் கும்பியில்மலக்கூட்டையாராய்ந்து பார்க்க அனேகக்கண்காட்சி கைகூடும் தங்கசொரூபியான வாலாம்பிகையை வணங்கவேண்டும் எ-று. (எஅசு)

மானுமழுவுமதி மலர்சூடியவாசம்-சத்தி-வாறுயென்னால்சொல்லஎட்டலையிப்படிநேசம்-மூலம், நானுமென்னுண்டை யுன்பாதங்கெதியென்றுநம்பி-வாசி-நானறிந்திப்படிஞானயோகந்தனில்கும் பிரசந்தேனெனுமேமதுபானமதுரமோராண்டு - கற்பஞ்- சென்றுஈராண்டினில்தேகக்கசடுபோய்கண்டு-செடம், ஊனெனுமையத்துறக்கமற்று சிவயோகம்வாசிஉற்பகமூலசிவராச அம்பிகாயோகம்-ஆனந்த.

(இ-ள்.) மான், மழு, சந்திரன், கொன்றை முதலியவைகளைத் தரித்தஈஸ்வரனைக்குறித்து ஞானயோகங்களில் இரேசக, பூரக, கும்பகங்களைச்செய்து சேர்த்தியடைந்த அம்பிகாயோகம் எ-று. (எஅஎ)

காயந்தனில்கசடானநீர்களெல்லா மொழிந்தேன்-கற்பச்-சாதனையாலெமனமனென்றவினையொழிந்தேன்- வாசிதேய்பிறையென்ற

சுவாசத்தினுல்வெகுகாலம்-சிவயோகஞ்செய்துமுத்தி மோக்ஷமடை யவுஞ்சீலம்-இனி,மாயாசத்திகிரியாசத்தியினுல் வளர்பிறைதான்மூல வாசிவசமாகநாதசத்திகற்பத்துறைதான்-கக்கும், நாயிலுங்கடையா கியவள்ளுவனுண்டே-ஞான-சித்திதனில் முத்திமோக்ஷமடையவுங்க ண்டேன்-ஆனந்த.

(இ-ள்.) சரீரத்தில் கெட்டநீர்கள்ஒழிய, கற்பசாதனையினுல் வினைகளை யொழிந்தேன் வெகுகாலம் சுவாசத்தினுல் யோகஞ்செய்து மோட்சத்தைய டையவும், கிரியசத்தியினுல் சமாதியடையவும், வள்ளுவனுனநான் மோட்ச மடையவும் வழியைக்கண்டேன் எ-று. (எஅஅ)

வேதத்திலும்பொருள்மாதுவாலாம்பிகைநாதம்-சத்தியோகத் திலுஞ்சிவஞானசுகாதிதபோதம்-பஞ்ச-பூதத்திலுமூலகுண்டலியாதி யனுதி-ஞான-போதத்திலும்பேரானந்த மகாராஜயோகம்-கியான, போதத்திலுஞ்சத்திபொக்கிஷசூக்திரங்காணும்-இந்தப்புதைப்பொ ருள்திறவாதென்வாசிக்கவேணும்-இது,காதற்றவூசிபறியுமகத்துகள் பேதம்-கை-காட்டத்தொடுகுறிகண்டப்புளிநாதம்-ஆன.

(இ-ள்.) வேதத்தில் பொருளாயுள்ளது எாலாம்பிகைநாதமாம்! போகத் தில்சுகாதீதபோதமாம் பஞ்சபூதத்தில் மகாராஜயோகமாம்ஞானபோதத்தில் சத்திபொக்கிஷ சூத்திரமாகும் இவைகளையுணர்வாசிக்கவேண்டும் இதுகாத ற்றவூசியையுணரும் மகான்கள் கைகாட்டக்காண்பதாம் எ-று. (எஅகூ)

காயென்ற மதுபானமமுரியில்தானும்-ரவி- சத்தியெனுமூலப்பு ளியதிலூட்டியானும்-கற்பந், துறையெனப்படிகடிகையிரண்டுபத்த ஞ்சில்-அந்த-சுகந்தமாமலர் மூலப்புளிகற்பமென்சொல்-பரை,உரை யெனப்படிஅந்திவருநிகழ்காலம்உப-முணர்ந்துஇவ்விதவாண்டுவரு மதிகாலம்-இருள், திரைவிலக்கிரிபாயமாயுண்டிடுங்கற்பம் - தினந்- தெசதிங்கள்வரும்பருவத்தில் கற்பமுவர்ப்பே-ஆனந்த.

(இ-ள்.) மதுபானம் அமுரியிலும் ரவிசத்தியென்னும் மூலப்புளியிலும் அதுவும் பரையின்சொற்படியேயாம் இந்தக்கற்பமானது பத்துமாதத்தில் வருவதான கற்பமாகும் எ-று. (எகூ0)

சொச்சகம்.

அருணனுதயத்திலதி காலைமுதல்கொண்டமுரி
வருணசலபுஷ்கரணி வாருதியையான்மறவா
தருணமிருபத்துமஞ்சுந் தான்கடிகைமேலதிதங்
கருணையுடனுண்டுமிக்க காரமதைக்கண்டேனே.

(இ-ள்) சூரியோதயமுதற்கொண்டு புஷ்கரணியைநான் மறவாமல் இரு பத்தைந்துகடிகைக்குமேல் கருணையோடுண்டு காரத்தைக்கண்டேன் எ-று.

காரமுடன்சாரமதுங் காலைதள்ளிமாலைதனில்
பூரமென்றமூலமிந்த பூரணத்தைக்கூட்டியேநான்
நேரவுருவாக்கிபதம் நேர்மைதவறுமலுமே
சீரதுவாயுண்டுவர தேகமொளிவானதுவே.

(இ-ள்.) கார, சாரங்களை மாலையினல் பூரணங்கூட்டி உருவாக்கித் தவறுமல் உண்டுவரவே தேகம் ஒளிவாய்ந்தது எ-று. (எ௬உ)

சூரியன்போல்காந்தியொளி சோதிமின்னல்போலுமுடல்
வீரியமாகானுணர வேகமொருதிங்களிலும்
ஏறிவிடுஞ்சுன்னமய மிந்திரியநீர்வரும்போல்
தேறிமன்னீரதுவாய் தேகமிந்தக்கூறுமே

(இ-ள்.) சூரியனைப்போலக் காந்திவீசுகின்ற மின்னல்போன்ற சரீரம் அரனுண்டுபண்ண ஒருமாதத்தில் இந்திரியநீர் வருவதுபோல தேகம் இந்தக்கூறுதும்எ-று. (எ௬௩)

பச்சைப்பசைந்ததுமண் பாருஞ்சலநீர்ப்பசுமை
உச்சிதமென்றுலுரைக்க வொன்றுவிட்டுரெண்டுதிங்கள்
வைச்சபொருளெய்தும்பசு மஞ்சள்நிறமாய்வருதல்
மச்சமிதையானறிந்து மார்க்கமினிசொல்வேனே

(இ-ள்.) மண்பசந்தது, இரண்டாந்திங்களில் வைக்கப் பொருள் பசுமஞ்சள் நிறமடையும், இனியதையறிந்து சொல்லுவேன் எ-று. (எ௬௪)

கலித்துறை.

திங்களுமூன்றில் மதுவாரிநாதஞ் செழுங்கனல்போல்
பொங்குநீர்பாய்ந்து வரும்போதுவண்டு பொன்னுருவாய்
தங்கநிறந்திங்கள் நாலுக்குள்ளேவருஞ் சாரையது
மங்கைப்பருவ மஞ்சாகிடுந்திங்கள் வளர்பிறையே.

(இ-ள்.) மூன்றுமாதத்தில் நாதம் அக்கினிபோல்பாய்ந்து வரும்போது வண்டுவடிவாய் வருவதுபோவாம். நாலாமாதத்ல் சாரைபோல்வளரும் எ-று.

வளர்பிறையஞ்சில் புளியதும்வாங்கி வாலைரவி
குழையப்பிசைந்து நீர்விட்டுக்கூட்டி கொடுரவியில்
இழையவும்வைத்திரு சாமஞ்சென்றுகு மினியதுபின்
பழையப்படியுவர் மேலும்படிந்து பகருவதே.

(இ-ள்.) அஞ்சுமாதத்தில் வளர்பிறைபோலாம் ரூபகர சரணுகிகளை திரட்டிப்பாகப் படுத்துவதாகும் எ-று. (எ௬௬)

பார்க்கவிப்பாகம் வரும்பதம்பார்த்து பசைந்தமண்ணை
தீர்க்கமதாயுண்டு செய்விதமாறு திங்கள்தனில்

ஏர்க்கவிவ்வா றிரவிசெம்மானிடு யிவ்விதங்காண்
ஆக்கறியாமல் பசியாறியுண்டு யறிந்திலனே.

(இ-ள்.) இந்தப்பாகம் வர்தபருவத்தைப்பார்க்க பிசைந்தமண்ணை உண்டு ஆருவது மாதத்தில் பசியாறியுண்டு மற்றவிவகாரங்களை அறியாதவனு யிருந்தேன் எ-று. (எசுஎ)

உதிரம்பெருகி பசுமையதாய்நரம் போடிருக்கும்
மதுகம்புளகித்து சத்தேழுதிங்கள் வாருதியும்
விதுரம்பிறந்து தேகாதிதேக மினுமினுப்பாய்
மதுரமெல்லாஞ்செழுஞ் சூரியன்போல்வரும் பாரிதுவே.

(இ-ள்.) ஏழாவது மாதத்தில் ரத்தம்பெருகி பசியநரம்புடனிருக்கும்இளஞ்சூரியனைப்போலவும் வரும் எ-று. (எசுஅ)

எட்டினில்திங்க ளுருவாகிப்பிண்ட மென்சானுடல்போல்
முட்டிவிலாவு மிருபக்கஞ்சூழ்ந்து முடுகியுதைத்
திட்டுகளோடி வயிறுதொந்துள்விம்மி தேகமெல்லாங்
கட்டியிழுக்கு மடமாதுக்கேயது காரணமே.

(இ-ள்.) எட்டாவது மாசத்தில் ரூபங்களெல்லாம் நிறைந்து எண்சாண் உடலைப்பெற்று விலாவின்இரண்டு பக்கங்களிலும் நெருங்கி வுதைத்து வயறு நொந்து விம்மித்தேகமெல்லாங் கட்டியிழுக்கும் எ-று. (எசுகூ)

வெண்பா.

சேர்ந்துமனம்வாடி சூழ்ந்துவருநித்திரையும்
கூர்ந்துமிகநானிருந்த கொள்கைபார்-சேர்ந்துமிக
மாய்கைமசக்காகி வாந்திமிகவுண்டஅன்னம்
பாய்ந்துவிடும்வாய்வதுவும் பார்.

(இ-ள்.) அதினால் தாயானவள் மிகவும்மனம்வாடி நித்திரையும்அதிகரித்து இருந்தகொள்கையைப்பார் மயக்கமாய் வாந்தியாய் அன்னகோசத்தில் வாய்வுவந்து வருத்தஞ்செய்யும் எ-று. (அ0)

எட்டியடிவைக்க யென்மசக்கையென்னுடம்பு
கட்டியிழுத்தேமறித்த காரணம்போல்-வெட்டி
மண்டையிடிசூழ்ந்து வலிவயிறுகுத்தலுடன்
சண்டகண்டநோய்கள்வருங் காண்.

(இ-ள்.) இவைகளெல்லாமானபின் சரீரத்திற்குக் கண்டகண்ட நோய்களெல்லாம் சரீரத்தைவாட்டும் எ-று. (அக)

அஷ்டதிங்கள்நாத மடிக்கடிநீர்பாய்ந்துடலில்
கஷ்டமதுவாய்செழுமை காணுங்காண்-அஷ்டதிங்கள்

வாருதியாம்விந்து மலப்புளியிலுமுடம்போய்
சேருமுப்புஉப்பதுகாண் சேர்ந்து

(இ-ள்.) எட்டுமாதங்களில் நாதமானது அடிக்கடிசேர்பாய்ந்துசரீரத்தில் கஷ்டத்தினால் செழுமைகாணும் எட்டுத்திங்களில் வாழதியில் உப்பாகும்.

சுன்னங்கடுங்காரஞ் சூலதுகாண்பிண்டம்
அன்னமயமானவர லாறுபோல்-சொன்னேன்
வீரியமாய்நாதவிந்து விந்தேகவாச்சாரங்
காரந்திங்களொன்பதனில் காண்.

(இ-ள்.) கடுங்காரமான சுண்ணம்போன்றதாம் பிண்டம் அதுவே அன்னமயமான வரலாறும். நாதவிந்து நவாச்சாரம் காரமானது திங்களொன்பதிலாகும் எ-று. (௲௯)

விருத்தம்

கதிர்மதியுங்கூடிகடுஞ்சூலதாகி கருவுருவாய்திரண்டுஒருருபமாகி, மதிபெருங்கதிரொளியுலுருகிப்பாய்ந்துமகிதலத்தில்வச்சிரப்பையதன்மேல்சூழ்ந்து, உதிரசுக்கிலங்கூடிதிங்கள்பத்தில உருவதுவாய் தேகமதாயுதித்தவாறும், அதிதஜெகமமைத்ததுபோ லாண்டேகேளீர் அரிவிந்துநாதமுஞ்சேர்ந்தானவாறே.

(இ-ள்.) சூரியசந்திரர்கள் இருவருங்கூடிக் கருவாய்திரண்டுஒருரூபமாய் உருகிப்பாய்ந்து உலகத்திற் பைமேற்சூழ்ந்து உதிரமும் சுக்கிலமுங்கூடி பத்தாவது மாசத்தில் உதித்தவிதமும் சொன்னேன் எ-று. (௲௰)

இந்தவுடல்நாதவிந்துகாரசாரம் இரண்டதுவுங்கூடியொரு ரூபமாகி, விந்தையைநானுரைப்பதினியாண்டேயேன்மேல் மேதினியில் மாதுகெர்ப்பந்தரிக்கும்போதில்,அந்தவிதபரிட்சையைப் போலானவாறின் அடைவெல்லாம்யானறிந்துஅருளப்பின்னை, தந்திரமாயுடலெடுத்தகூறின்வாய்வால் தசவாய்வினுற்பவத்தைச் சாற்றுவேனே.

(இ-ள்.) நாதவிந்துக்களின் காரசாரங்கள் இரண்டுங்கூடி ஒருவடிவமாய் ஆனவிதத்தை யுரைப்பேன். உலகத்தில் கர்ப்பந்தரிக்கும்போது பத்துவாயுக்கள் உற்பவத்தைச்சாற்றுவேன் எ-று. (௲௧)

வேறு-கவி.

நாதவிந்துரு வானவிதங்களை
யாதலால் யானுரைத்திடமேதினி
பூதமைந்துரு காரசாரத்தினால்
ஊனுறைந்துரு வானதுவாயுவே.

(இ-ள்.) நாதமும் விந்துவும் உருவாகின்றவகைகளை நான்சொல்வதற்கு உலகத்தில் ஐந்துபூதங்களும், காரசாரத்தினால் உருவானதுவாயுவாம் எ-று.

வாயுவின்தச பத்தும்விளங்கிட
மாதுகெர்ப்ப மதிலுருவாறுபோல்
தேய்வுவன்னி செனித்திடுமுப்பினல்
காரசாரங் கடுஞ்சுன்னமாண்டையே.

(இ-ள்.) பத்துவாயுக்களும் விளங்க கர்ப்பத்தில்உருவாமாறுபோல்தேய்பிறையாகியவன்னி உப்பினலுண்டாகும் காரசாரங்கள் கடுஞ்சுண்ணமாகும்.

சயிலமாமிர தங்களுதகமுந்
தயிலலேகியந் தானுருவஞ்சதும்
மயிலமாமதி சூரியகாந்தியால்
அகிலமேவிஅம் மாவுபடருமே

(இ-ள்.) இரதங்களும், சலங்களும், தைலம் லேகியம்ஆன உருஅஞ்சும் சந்திரசூரியகாந்தியினல் அந்தமாவுபடரும் எ-று. (அஈஅ)

அஞ்சுருவாய்தச திங்களிலைங்கோலம்
பஞ்சபூதம் பனிக்குநீரது
நெஞ்சமேநீர்க் குமிழுக்குள்ளேசலம்
வஞ்சிமாது மாதாந்தமிறங்குமே.

(இ-ள்.) பஞ்சவடிவங்களாய் பத்துமாதங்களில் ஐங்கோணம் பஞ்சபூதங்களாகப்பனிக்கும் நீர்க்குமிழிக்குள் மதுவானது மாதாந்தம் இறங்கும் எ-று.

இடியிடிமின்ன லிடித்துவயிறுவலி
துடியதாய்காதச் சுரோணிதநீரது
படிபடுபடீலென் றுகும்பஸ்தலம்
முடிகண்டுபாலன் முற்பத்தியாண்டையே.

(இ-ள்.) இடிபோல் இடித்து வயிற்றுவலிகாதசுரோணிதநீரானது படிப்படியில் குபீல்குபீலென்று கும்பஸதலமாய் வந்துபாலன் உற்பத்தியானன்.

ஆகுமிந்தப்படி யானதுகற்பமுந்
தோகையர்க்குமிப் படிதொந்தித்திடும்
பாகமூலப் புளியெனுநீரது
ஆகமப்படி யான்கொண்டேனண்டையே.

(இ-ள்.) இந்தவிதமாய் கர்ப்பமானதாம் பெண்களுக்கும்இவ்விதமேதொந்திப்பாம் மூலப்புளியென்னும் நீரை ஆகமவிதிப்படியின் கொண்டேன்எ-று

வாசிதாரணை-தரு.

பாலன்பிறந்தது காண்-என்னண்டையே
பாலன்பிறந்தது காண்.

(இ-ள்.) என் ஆண்டையே! பாலன்பிறந்தான் எ-று.

யாலன்பிறந்துலகாதிதமுன்செங்கோல், ஆளப்பிரபஞ்சமூவுல குமேபுகழ், காலனில்லைசற்பகோடியுகாந்திரம்,ஞானப்பிரகாசமெய் ஞ்ஞானசிரோமயம்-பாலன்.

(இ-ள்.) செங்கோல்கொண்டு உலகங்களையெல்லாம் ஆளுதற்பொருட்டு ஞானமயமான பாலன்பிறந்தான் எ-று. (௱௧௨)

அண்டபகிரண்டமும்மண்டலம்புகழ், நின்றபிர்மாண்டமளாவி யமெருஞ்சூழ், தெண்டிரைப்பதினலுலகுமஷ்ட, திவுதீபாந்தரதே வர்களுமகிழ்-பாலன்.

(இ-ள்.) அண்டமும், பகிர்அண்டமும் புகழ்கின்ற பிரமாண்டம் அளாவி யமேருவைச் சூழ்கின்ற பதினன்குலோகக்களும், தேவர்களும்மகிழ எ-று.

விந்துநாதங் காரசாரமுங்கூடி, மேலானகருவிகரணதிகள் சூழ வும், அந்ததசதிங்க ளுற்பத்தியாயிந்த, அவனிமீதிலகம்விட்டுப்பாரி னில்-பாலன்.

(இ-ள்.) விந்துநாதங்களுடன், காரசாரங்களுங்கூடி, கருவி,கரணதிகள் சூழ உலகத்தின்கண் எ-று. (௱௧௪)

மாலைப்புளிமதியமிர்தங்காலையில், வாலைப்பருவ மோராண்டுவ ரும்பதஞ், சீலத்துடனெருகாலைபோசனங்கொண்,டாவினமிர்தமதி விதமாண்டையே-பாலன்.

(இ-ள்.) மாலையிலுண்டாம்புளியமிர்தமானதுகாலையில்வாலைப்பருவமுண் டாகின்ற ஓராண்டுவரும்பதத்தில் சீலமாக அமிர்தபோசனங் கொண்டு எ-று.

பூருவக்கியானம் புகழ்வேதசாத்திரம், ஆறுமேலுமாருதாரமீ ராறுமே, சீருடன்ஞானச் சிவயோகசித்திபெற்றுத், தேறுங்கற்பந் தசதிங்களோராண்டினில்-பாலன்.

(இ-ள்.) பூர்வக்கியானம், வேதம், சாஸ்திரம், ஆருதாரங்கள், சிவயோக சித்தி, பத்துமாசங்கள் அல்லது ஒருவருஷத்தில் எ-று. (௱௧௬)

உப்பும்புளியுற வாகுமைங்காயமாய், செப்பவெண்ணுது சிவரூப மாதலால், இப்படியாய்முதல்தீட்சையுதாச்சுது, கைப்புமுறிந்துகன கமீதாண்டையே-பாலன்.

(இ-ள்.) உப்பும், புளியும், உறவாய் ஐங்காயமாய் சிவரூபமதலால் இது முதல்தீட்சையாகும், அதனல் கைப்புமுறிந்து கனகமாச்சுது எ-று. (௱௧௭)

மாதுவாலாம்பிகைமார்க்கத்தினலே, மதியமிர்தங்கொண்டுமல ப்புளின்சுன்னமாய், வேதசாரம்விவேகத்தினலுடல், வேறுகூறுச்சு து பாருமீதாண்டையே-பாலன்.

(இ-ள்.) வாலாம்பிகையின் வழியினால் மதியமிர்தங்கொண்டு சுண்ணமாய் மலப்புளியானது விவேகத்தினால் உடல்வேறுகூறுச்சுது எ-று. (௮௪௮)

உதகமிதாகு மவருப்புசுன்னமும், பதமீராண்டுடன் பாகமுஞ் சென்றது, நிதங்கொண்டிப்பொருள் நிர்மலத்தாய்பதம், விதமறிந் தயான் வேதைமூவாண்டினில்-பாலன்.

(இ-ள்.) உவர்த்தஉப்புச்சுண்ணமும் இரண்டுவருஷபாகஞ் சென்றது ஆகையால் நிர்மலமானதாயின் பாதத்தை விதமுடன்உணர்ந்து மூன்றும்வருஷத்தில் எ-று. (௮௪௯)

பானச்சுழிமுனைவானம்புவிகலை, பாயவும்காசகப்பூரகந்தன்னிலும், ஞானகற்பமுண்டு வாசிகும்பித்துடன், கியானசூக்ஷக்கிரியை மோனமதாகவும்-பாலன்.

(இ-ள்.) சுழிமுனை, வானம், புவிகலைகளில்பாயவும் ரேசக பூரகங்களில் ஞானகற்பமுண்டு வாசியைக்கும்பித்து சூக்ஷமான கிரியையாகிய மோனம் உண்டாவதாகவும் எ-று. (௮௫௦)

சித்தியருள்முத்தி மோக்ஷசுகாதீதம், நித்தங்கண்டதாரை சித்தத்துடனேயும், புத்திரயோகவித்துவாமிசனைகவுந், தத்துவந்தொண்ணூற்றுமறிந்துடன்-பாலன்.

(இ-ள்.) கைவல்யத்தைக் கொடுக்கின்ற மோக்ஷ சுகாதீதத்தை நித்தங் கண்டு அதின்தாரையை நல்லஎண்ணத்துடன் யோகவித்வாம்சனைகவும் தத்துவந்தொண்ணூற்றாறுமறிந்து எ-று. (௮௫௧)

அதிதத்துடன்மதி சந்திரசூரியர், பதியறிந்துபகிரண்டம்பாயவுங், கெதியடையு மகாராஜயோகத்தில, பதம்பெற்றருச்சனை யிதியறிந்துடன்-பாலன்.

(இ-ள்.) சூரியசந்திரர்கள் பதியையறிந்து பகிரண்டத்தில்பாயவும்கெதியையடையவும் மகாராஜயோகத்தில் திருவடிகளைப்பெற்றுவிதியறிந்தர்ச்சனை செய்து எ-று. (௮௫௨)

தினந்தினமதியமிர்தம்பொழிய, தனகனசச்சத்துஞ்சித்துமாடவும், புனல்சொரியவும் புஷ்கரணிதீர்த்தத்தில்,இனமிப்படிகாணேகாந்தமாகவும்-பாலன்.

(இ-ள்.) பிரதிதினமும் மதியின்அமிர்தம்பொழியவும் கனகரத்தினசித்தாடவும், புஷ்கரணிதீர்த்தத்தில் ஏகாந்தமாகவும் எ-று. (௮௫௩)

காயசித்திகருகற்பத்திலுடல், மாய்வதேது மரமுயில்லைகாண், தாயுமம்பிகை தான்வசமானதால், நாயிலுங்கடையவது முண்மையே-பாலன்.

(இ-ள்,) கற்பத்தினால் காயசித்திபெறவும் மரணமில்லையாம் அம்பிகையின்வசமானால் காயினுங்கடை யாவதுஉண்மை எ-று. (௮௨௪)

கொச்சகம்.

தந்தைமதியா லுதித்து தாரணியி லுஞ்சிலநாள்
வந்துபிறந்துபுவி மாய்கைதனிலேயுழன்று
அந்தமதியாலெனது ஆகமச்குருக்களினால்
விந்தைசிலநாள்கிரிகை மெய்யென்றிருந்தேனே.

(இ-ள்.) தகப்பன் அறிவால் உதித்து உலகத்தில் சிலநாள் மாய்கையில் உழன்று என்னுடைய ஆகமக்குருக்களினால் சிலநாள் கிரியையை மெய்யென்று இருந்தேன் எ-று. (௮௨௫)

பொய்க்குருவினாலெனது பொக்கிஷமெலாஞ்சிறந்து
கைப்பொருளெல்லாமிழந்தேன் காரியருருக்களினால்
இப்படியாய்மேதினியில் யான்சிலநாள்போனபின்பு
மெய்க்குருமுனியருளால் மெய்ஞ்ஞானம்பெற்றேனே.

(இ-ள்.) அப்படிப்பட்ட மெய்க்குருவினால் என்னுடைய பொக்கிஷக்களெல்லாஞ்சிறந்து கைப்பொருள்யாவற்றையும் போக்கடித்துக்கொண்டேன் காரியகுருக்களினால் இவ்வாறிருந்து சிலநாள்சென்றபின் மெய்க்குருவினால் மெய்ஞ்ஞானம் பெற்றேன் எ-று. (௮௨௬)

எண்சாணுடலதனி லெய்ந்தொண்ணூற்றாறுவிதங்
கண்ணாரத்தத்துவத்தின் காக்ஷியெல்லாங்கண்டுணர்ந்து
மண்ணாசைபெண்ணாசை மாய்கைபொருளாசைவிட்டு
விண்ணாசைகொண்டுநெறி மெய்ஞ்ஞானம்பெற்றேனே.

(இ-ள்.) எண் சாண் அளவுள்ள இரத்தச்சரீரத்தில் தொண்ணூற்றாறு தத்துவங்களைக் கண்டுணர்ந்து மூவாசைகளையும்விட்டு உண்மை ஞானத்தைப் பெற்றேன் எ-று. (௮௨௭)

கற்பமென்றாலற்பமல்ல காயசித்தியாவதற்கு
உற்பனமேயானறிந்து வுண்டேன்மதியமிர்தம்
தற்பரத்தாலெண்சாண் சரீரமதைச்சுத்திசெய்து
முற்பவமோராண்டுசென்று முதல்தீக்ஷைபெற்றேனே.

(இ-ள்.) கற்பம் என்பது எளிதல்ல, அதற்காகமதியமிர்தம் உண்டேன் சரீரசுத்திசெய்து ஒருவருஷஞ்சென்று முதல்தீட்சை பெற்றேன் எ-று.

வெண்பா.

முதலிருந்தவூழ்வினையை மூப்பாழைச்சுட்டுமனம்
பதறாமலுறியாமல் பாடுபட்டேன்-முதலிருந்த

நய்வினையுந்திவினையு நாடாமனும்பறந்து
வல்வினையைப்போக்கிவிட்டேன் வாறு.

(இ-ள்.) முதலிருந்த வினையைச்சுட்டு மனத்தினுல் பாடுபட்டேன் நல்வினை தீவினைகள் நாடாமல் கொடியவினையைப் போக்கிவிட்டேன் எ-று.

காயசித்தியாலெனது கர்மவினைபோக்கியபின்
மாயசித்திமூலசுழி வாய்க்குமே-காயசித்தி
மூலப்புளியதனுல் முதல்தீகைஷயாச்சுதினி
காலமென்னரெண்டாண்டில் காண்.

(இ-ள்.) காயசித்தியால் என்னுடைய கர்மவினைகளை போக்கினபின் மூலச்சுழிகிடைக்கும் ஆகையால் முதல்தீட்சை ஆச்சுது. இதற்குக்காலம் இரண்டு வருஷத்திலாகும் எ-று. (அ௲0)

சலித்துறை.

பானத்தைக்கொண்டு மூலத்தையூட்டிப் பழுதுவரா
தேனத்தையுங்கிளி யாகவுஞ்செய்து யிதுபதமாய்
மோனத்தையுண்டு யதிகாலேவாசி யோகத்திலும்
ஞானத்தில்நின்று மவுனம்வைத்தேன்சுழி நாமறிந்தே.

(இ-ள்.) அமிர்தபானத்தைக்கொண்டு மூலத்திற்கூட்டிப் பழுதுவரா தேனைக்கிளியாகச்செய்து மோனத்தையுண்டு அதிகாலையில் வாசியோகத்தில் ஞானத்திலிருந்து சுழியையறிந்து மௌனத்தில் மனம்வைத்தேன் எ-று.

சுழிமுனையோகஞ் சதுர்நாலுசாமந் தொடுசரமாம்
வழியும்பேரின்ப மதுவாரியுண்டு வளமதுவாய்
சுழியாமல்காலையு மாலையுமுச்சி கண்டத்திலும்
அழியாப்பதவியில் வாசிகொண்டேதி யருள்பெற்றனே.

(இ-ள்.) சுழிமுனையோகம் நாலுசாமஞ்செய்து பேரின்பமதுவை யுண்டு திரிகாலங்களிலும் அழியாப்பதவியைப் பெற்றேன் எ-று. (அ௲உ)

தினமொருவேளை யதிகாலைமூலப் புளிதெளிவாய்
மனமிக்கவுண்டு வருங்காலமாண்டு வருஷமதும்
கனமிப்படியினங் காலையிலுண்டு மாலைவிட்டேன்
இனமிந்ததிங்கள் தசபத்துமிவ்வித நெஞ்சகமே.

(இ-ள்.) நாளைக்கொருவேளை அதிகாலையில் மூலப்புளியை யுண்டு ஒருவருஷமானல் நன்மையாகும் எ-று. (அ௲௩)

ஆண்டிதுமூன்று தீகைஷரெண்டாகு மளவறிந்தேன்
வேண்டியமாது ரதியெனக்காக விரும்பிநின்ருள்

தூண்டிப்பூரகம் பூட்டியிழுத்திடுஞ் சொற்பமதாய்
ஊன்றிசுழிமுனை வாசியைக்கொண்டு ஊதினனே.

(இ-ள்.) மூன்றுமாண்டில் இரண்டாம்வருஷத்தின் அளவறிந்து எனக்காக அம்பிகைவருந்துபடியால்நான் சுழிமுனையில்வாசிகொண்டூதினேன் எ-று.

முன்னாளமுரி தசபத்துத்திங்கள் முதற்கொண்டியான்
அன்னாள்முன்னூறு மமுரியுண்டேனது யென்னவிதம்
சொன்னாள்சடச்சுத்தி முன்னாளிருந்த சுகவினையை
என்னால்மதிகொண்டு சுட்டுநீறுக்கி யினப்பிரித்தே.

(இ-ள்.) பத்துமாதம்முதற்கொண்டு அமுரிஉண்டேன்எப்படியென்றால் மதியைச்சுட்டு நீறுக்கி யினத்தைப்பரித்து எ-று. (௮௰௫)

இருவினையாகிய கர்மதுர்ப்பாதக மெய்திடினும்
கருநீறுக்கி பானத்தினாற்சுட்டு கணைதொடுத்தேன்
உருசியெண்சாணுடல் பிரமாதிகற்ப முண்டிடவும்
சுருக்கிக்கறியுப் பமுரியுப்பானதின் சூதறிந்தே.

(இ-ள்.) இருவினையான கர்ப்பபாதகங்வந்தாலும் கருகிநீறுக்கிப் பானத்தினாற்சுட்டுக் கணைதொடுத்தேன் பிரமாதிகற்ப முண்ணவும் வானத்தின் சூதையறியவும் எ-று. (௮௰௬)

விருத்தம்.

கர்த்தனருள்சிவதீக்ஷைப் பதினொன்றுந்தான் காயசித்தியோகசித்திவாதஞ்சித்தி, வர்த்திகமாய்சித்திசெய்துமாவின்பாலுமன்னமதுமிரண்டளவால்பற்றுேயில்லை, வெற்றியெய்தாக்கறிவகைகள் மூலஞ்சேர்ந்தால் வெறும்பாழு கல்மசத்தால் வேகமில்லைப், புத்தியில்லாப்பழுப்பேறும் வெண்மையில்லை புளியில்பழுதுண்டாகி புழுக்களாண்டே.

(இ-ள்.) சிவதீட்சைபதினொன்றும், திரிவிதசித்திகளையுமடைந்துகற்பம் புசித்துப்புளியில் பழுதுண்டானால் புழுக்களாகும் எ-று. (௮௰௭)

புழுக்கள்செனித்துயிர்களதும் புளியைக்கொல்லும்புளிப்பாழு உவர்ப்பாழுதுவர்ப்பும்பாழு, களிப்பாழுகருவிகற்பங் காயம்பாழு காரமதுஞ்சாரமதுஞ்சயிலம்பாழு, அளியாதுபுளியருந்த ஆண்டே சொல்லும் ஆவின்பாலன்ன மதுமிரண்டும்போதும், வெளிப்பாழாய் போகாமல்புளிதானுண்டேன்வேகமென்ன அதிவேகம் விரும்பினேனே.

(இ-ள்,) புழுக்கள்சனித்து உயிர்களுடைய புளியைக்கொல்லும் அளியாதபுளியையிருந்த ஆவின்பாலும் அன்னமும் அருந்தவெளிப்பாழாய்ப் போகாமல் வேகமாயிருந்தேன் எ-று. (௮௰௮)

கற்பமுண்ணுமுறையும் பத்தியமும்-தரு

கற்பமுண்டேன்காண்-மூலப்புளி-கற்பமுண்டேன்காண்.

(இ-ள்.) மூலைப்புளி என்னும் கற்பத்தையுண்டேன் எ-று,

கற்பமென்றமதி சாரைபைக்கொண்டேன், சத்திநாதமூலப் புளியதுங்கூட்டி, உற்பவமாசமூன் றுண்டிற்காலைமாலை, உண்டுமகா ராஜயோகந்தனில்நின்று-கற்ப.

(இ-ள்.) கற்பம்என்கிற சந்திரன் என்னுஞ் சாரையைக்கொண்டுசத்தி நாதமூலப்புளியைக்கூட்டி மூன்றும்வருஷத்தில் காலை மாலையிலும் உண்டு மகாராஜயோகத்திலிருந்து எ-று. (௮௬௯)

அன்னமாவின்பாலும்பின்னம்வராமலும்,ஆக்கைதனில்வேகஞ் சேர்க்கையில்லாமலும், முன்னேமூன்றேமுக்கால்கற்பஞ்சாதித்துப் பின், அன்னமுண்டேன்வாசி அப்பியாசஞ்செய்துயான்-கற்ப.

(இ-ள்.) பாலுஞ்சாதமும் பின்னம்வராமல் சரீரத்தில்வேகசேர்க்கையில் லாமலும், முன்னேமூன்றேமுக்கால் நாழிகைகற்பஞ் சாதித்துப்பின் அன்ன முண்டு வாசியப்பியாசஞ்செய்தேன் எ-று. (௮௭0)

கதிரவன்முகங்கண்டதிகாலையில், மதிதனில்மலப்புளியதுமூட் டி, விதியிதுவிட்டகுறையிந்தப்படி, துதிசெய்துமூலச் சுழியில்நின் றுநான்-கற்ப.

(இ-ள்.) அதிகாலையில் சூரியன்முகத்தைக்கண்டு, மாலையில் மூலப்புளி யில் முட்டிவிட்டகுறையினால் மூலச்சுழியிலிருந்து எ-று. (௮௭௧)

பானத்தினால்வெகுபழக்கஞ்செய்திட, ஞானசித்திக்கொருகளி ப்புண்டாச்சுது, ஊனிருந்தானுயிர்யோகம்நிலைத்திடும், நானிருந் திவ்வித நாட்டத்திலுஞ்சுழி-கற்ப.

(இ-ள்.) அமிர்தானத்தினால் மிகவும்பழக்கஞ்செய்து ஞானஞ் சித்திப்ப தற்கு ஒருகளிப்புண்டாச்சுது, சரீரம் இருந்தால்யோகம் நிலைக்கும். நானிருந் ததினால் இவ்விதம்செய்தேன் எ-று. (௮௭௨)

காலைதன்னில்புன்னைக்காயளவுரெண்டு, மாலைதனிலபதமாகும திலொன்று, சிலம்பொழிந்திடுந்தேனருவிபாயும்,ஞாலத்திலும்வாசி நாட்டம்புரிந்துயான்-கற்ப

(இ-ள்.) காலையில் புன்னைக்காயளவுகொண்டு மாலையில்தேனருவிப்பாய் வதையுண்டு, வாசிநாட்டம்புரிந்து எ-று. (௮௭௩)

அண்டத்தில்வாசி யகண்டத்தில்பாய்ந்திட, கண்டத்தில்தாரை கடகத்திலூதியே, மண்டலமூன்றும் வலமாகச்சுற்றியே, தெண்டனி ட்டுசிவ சத்தியைபூசித்து-கற்ப.

(இ-ள்.) வாசிஅண்டத்திலும் அகண்டத்திலும் பாய்ந்திட, கண்டத்தில் ஊதி மண்டலம்மூன்றும் வலமாகச்சுற்றிதெண்டனிட்டுசிவசத்தியைபூசித்து

சண்டப்பிரசண்டசராசரந்தாண்டியான், குண்டலி வாசியைக் கும்பித்துஸ்தம்பனம், நின்றுகண்டதாரைநிர்ப்பந்தமாகவும்,உண்டு மூலச்சுழி ஊதிமேல்நோக்கியே-கற்ப.

(இ-ள்.) சண்டப்பிரசண்ட சராசரங்களைதாண்டி குண்டலியின் வாசியைக்கும்பித்து கண்டதாரையில் நிர்ப்பந்தமாய் இருந்து மேல்நோக்கி மூலச் சுழியிலூதி எ-று. (அசங)

தந்தைவிதிதலை சுற்றிச்சிமிட்டவும், இந்தவிதமிகுஇரண்டுவிஞடிகாண், அந்தராசயோகமாண்டுநாளுக்குநாள்,எந்தஒருதிங்களிவ் விதமாண்டையே-கற்ப.

(இ-ள்) தந்தைவிதிவரவும், இரண்டுவிஞடிகளாவது ராஜயோகமாண்டு இரண்டுதிங்கள் முயற்சிக்கவேண்டும் எ-று. (அசசு)

வாசியென்றால்பிராண வாய்வுமெழுந்துடன், வீசி யெழுந்து மேல்மூலஆக்கினையினுல், பூசிதமாயண்ட ரண்டமளாவியும், நாசிதனில்பனிரெண்டங்குலம்பாய்ந்து-கற்ப.

(இ-ள்.) பிராணவாயுஎழுந்து வாசிஎழுந்து மூலாக்கினையில் அண்டரண்டமளாவியும் நாசியில் பன்னிரண்டு அங்குலம்பாய்ந்து எ-று. (அசஎ)

ராஜயோகந்தசதிங்கள்வாலாம்பிகை, நேசத்துடனின்றுநிர்மல ரூபமாய், வாசிநிலைத்திடமூலாதாரத்தினில், பாசமென்மேல்வைத்துப் பூசிதமாகவும்-கற்ப.

(இ-ள்.) பத்துமாதங்கள் ராஜயோகஞ்செய்து நிர்மலசொரூபமாய் மூலாதாரத்தின்மேல் வைத்துப்பூஜிதமாக எ-று. (அசஅ)

உண்டபின்கற்ப முள்விந்துவிசாரணை, கண்டத்திலூதி கலைபிரளாமலும், இன்றுமூலத்தின்விஞடிகள்ரெண்டுமே, ஒன்றசைவாய் நவத் துவாரமொட்டாமலும்-கற்ப.

(இ-ள்.) கற்பம்உண்டபிறகுவிந்துசாரணையைக் கண்டஸ்தானத்திலூதிக்கலைபிறழாமல் நவத்துவாரங்களும் அசைவற்றிருந்து எ-று. (அசகூ)

மனம்புத்திசித்தமாண்மையொன்றுகவும்,இனமிந்தவாசியேறியண்டத்தினில்தினமுன்றுவேளைசாதனைசெய்துயான், முனைசுழியில் மூதண்டம்பாயவும்-கற்ப.

(இ-ள்.) திரிவிதகரணங்களும்ஆண்மைஒன்றுகவும்வாசியினுல்எதிக்கண்டத்திலிருந்து மூன்றுவேளை சாதனஞ்செய்து மூதண்டத்தில்பாயவும் எ-று.

வங்கென்றுவூதி வாலாம்பிகைமூலத்தில், வாசிவாவாவென்று மார்பிருத்தியுஞ், சிங்கென்றுவூதிசிவரூபத்தினுல், மங்கென்றுமேற்றியும் வாசிசுபாரினில்-கற்ப.

(இ-ள்.) வங்வன்றுரேசித்து வாலாம்பிகையுள்ள மூலாதாரத்தின்கண் வாசி, வாவா என்றுசொல்லி அனுகதஸ்தானத்திருத்தி, சிங்என்று சிவசொரூபத்தினுல் மங்என்று வாசியைஎற்றி எ-று. (அடுக)

இவ்விதமாகஇருத்திமேல்நோக்கிட கல்விச்சுழியில் கதவுந்திறந்திடும், பல்லிப்படர்ந்த பரஞ்சுடர்காணவும், அவ்விதமாக ரகசியமாண்டையே-சற்ப.

(இ-ள்.) இவ்வண்ணம் இரண்டுகண்களும் மேல்நோக்க சுழிமுனையில் கதவானதுதிறக்கும், அதனுல் பரஞ்சுடரைக் காணவும் வந்தரகசியம் எ-று.

மூலச்சுழிமுனைமுடிவிலிருந்து, பாதத்திலேறியும் பானுவினுல் வாசி, யாலத்தினுலிந்திரஜாலமதாகவும், தூலத்திலும்வெகு சூக்ஷத்தைக்கண்டுயான்-கற்ப.

(இ-ள்.) சுழிமுனைமூலத்தின் முடிவிலிருந்து பாதத்திலேறிச் சூரியனுல் வாசியின் இந்திரசாலமாக தூலமார்க்கத்திலும் சூட்சவழியைக்கண்டு எ-று.

நித்திரைசோம்பல்நிகழ்த்தமதிதனில், சுத்தவயிராக்கியஞ்சூக்ஷசுகாதிதம், சத்திநாதமூல சைதன்யத்தினில், கர்த்தனருள்பதங்கண்டுமகிழ்ந்துமே-கற்ப.

(இ-ள்.) நித்திரை, சோம்பல் இவைகளைச்சொல்ல சுத்தவயிராக்கியம் சூட்சசதாசிவம், சத்தியநாதம் சைதன்னியத்தில் அருள்கின்றபதத்தைக்கண்டு சந்தோஷித்து எ-று. (அடுச)

தேகமெனுமெண்சாண் சித்திதருஞ்சுழி, யாகமதுதனி லமுரியுங்கொண்டதால், வேகமதுமீறிமிக்கனலால்சடம், யோகசித்தியோராண்டினிலாண்டையே-கற்ப.

(இ-ள்). சரீரம்வன்கிற எண்சாணுடம்பில்! அமுரியைக் கொண்டதினுல் ஒருவருஷத்தில் யோகசித்திகைகூடும் எ-று. (அடுடு)

அமுரிமூலப்புளி ஐந்தோராண்டினில், அமிர்தகுருதவிந் தானும் வனுவதாய், குமிறிமலைசாகரநீரெல்லாம், அமுரிமாறி அதுசுத்தநீரதாம்-கற்ப.

(இ-ள்.) அமுரியும், மூலப்புளியும் ஐந்தாம்வருஷத்தில் குருதவிந்துகளாலும் மலைக்கடலின் நீரெல்லாம் உவர்மாறிச் சுத்தநீராம்எ-று. (அடுசு)

காயாதிநற்பக்காரணத்தானுமே, ஞாயாதிஞாயஞானம்வந்தெய்திடில், வாய்த்திடசலமலமுமாறினுல், காயாதிகற்பங் காணுவோர் ஞானியே-கற்ப.

(இ-ள்.) சரீரசிகற்பத்தினுல் ஞானம்வந்தாலும், சலமலங்கள்மாறினுல் காயாதிகற்பங்கள் காணும் எ-று. (அ௰௭)

பாழ்வினைபோக்கி முப்பாழ்கடந்தானந்தம்,சூழுஞ்சுடாமணி சோதிப்பிரகாசத்தில், ஆழிதிரைகடந் தண்டத்திலேறியான், வாழி மேன்மேலும் மணிவிளக்கேற்றியே-கற்ப.

(இ-ள்.) பாழாகியதீவினையைப்போக்கி முப்பாழையுங்கடந்து ஆனந்தம் விளங்குகின்ற சுடர்கின்ற தேஜஸாவை சோதிப்பிரகாசத்தில், சமுத்திரத் தைத்தாண்டி அண்டத்தில் ஏறிவிளக்கேற்றி எ-று. (அ௰அ)

சூழும்வாலைச்சுரூபமெடுப்பதும், வாழுமுப்புமயத்தை யறுப்ப தும்,வேள்வித்தொண்ணூற்றருவரும்நீறினுல், பாழும்பாழுமுப்பாழு ம்போம்நீறியே-கற்ப.

(இ-ள்.) வாலைசொரூபம் எடுப்பதும் உப்புமயத்தை யறுப்பதும் வெள்வி யில் தொண்ணூற்றுறுபேரும் நீறினுல்முப்பாழும் பாழாம் எ-று. (அ௰௯)

யானைசென்னு யதுக்குள்மரணமும், பூனைவாலிபுலிக்குள்மரண மும், தேனைபானந் திசையுண்டவர்க்கொரு, ஞானபோதமெய்ஞ் ஞானிகளாவரே-கற்ப.

(இ-ள்.) யானை செந்நாய் இவைகளுக்குள்மரணம், பூனை எலி புழுக்குள் மரணம், அமுர்தம் உண்டவர்கள் மெய்ஞ்ஞானிகளாவார்கள் எ-று. ()

ஈனருக்காயெடுத்துஞானமோ, ஏனென்றேனு யியம்புதீர் மாது கள், ஆனதாலுமறிந்துபாரங்கனே, ஞானமுஞ்சுழி நாட்டமறிவ ரே-கற்ப.

(இ-ள்.) ஞானம் ஈனருக்காகவா எடுத்தது? அதைஎன் அவவாறுசொல் லுகின்றீர்கள்? ஆகையால் நீங்கள் அறிந்துபார்த்தால் ஞானச்சுழிமுனை நாட் டததை அறுவீர் எ று. (அ௧௧)

அன்னைதந்தையருளாலறிவதோ, உன்னும்பாதியுற்பத்தியமை ப்பதால்,வின்னம்வாராவிதியிருந்தால்மதி, சொன்னேன்கற்பச்சுகா திதசுகமதே-கற்ப.

(இ-ள்.) ஞானமானது அன்னைதந்தைகளின் கிருபையினுல்உணர்வதோ குற்றம் வராதபடி விதியிருந்தால் சுகாதிதகற்பசாதனத்தைச் சொன்னேன்.

வேறு-விருத்தம்.

பழகமூவாண்டிலும்தசமும்பாயும் பரிகைஷப்பார்த்தருளிய வழக் கம், அழகதுமுடையஅம்பிகைக்கமல மனுதினமர்ச்சித்துப் பணிந் தேன், மழைகனநடையும்ரவியெனுங்காற்று மனிதர்சஞ்சாரமுமாய்

ணை, பிழையகற்றிடவுஞ் சோம்பலுந்தூக்கம் பிதற்றலுங் கோபமாகாதே.

(இ-ள்.) இதில்பழகினால் மூன்றுவருஷத்தில் உதகம்பறவும் அம்பிகையின் திருவடிகளை அர்ச்சனைசெய்து பிழைக்க சர்வதீவினைகளும் ஆகா எ-று.

தள்ளுவதபினிகஞ்சாவெனுமதுவுந் தகர்த்துமேற் கரிவகைசுவையும், விள்ளுவதினதான்பசும்பயறுடுபால் மிகவும்பச்சரிசியுஞ் சமைத்து,எள்ளதோர்கரியவேம்புடனமுரிஉப்பதுமுளகுடன்தூளாய், சள்ளையில்லாமலொருபோதுண்டமுதசாம்புவனுட் கொண்டதிதுவே.

(இ-ள்.) தள்ளுவது, அபினி, கஞ்சா, மதுவாய் பசும்பயறு பால், பச்சரிசி, கருவேம்பு, அமுரிஉப்பு மிளகுதூள் இவைகளைச்சேர்த்து ஒருபோதுண்ணவும் எ-று. (௮௬௪)

அன்புடன்மூன்றுண்டதுவரைமுதற்கொண்டருளினேன் மகாராசயோகம், இன்பதேனுற்றமிதுபுளிசுன்னமிருவகைகற்பங்கொண்டடைவாய், பின்பதுசெலுத்திச்சென்றதுபோகப் புளிதனைப்பதனஞ்செய்திடவும், தென்பெனுஞ்சேதஞ்செய்கையுமில்லையார் திருத்தமாய்ப்பாண்டத்திலடைத்தே.

(இ-ள்.) மூன்றுவதாண்டில் இன்பமாகியதேன்பேசன்ற புளிசுண்ணமாகிய இருவகைக்கற்பங்களைக்கொண்டு புளியைப்பதனஞ் செய்யவேண்டியது இதனால் யாதொருசேதமுமில்லை எ-று. (௮௬௫)

உதகமென்றமுரியுனதுள்கின்றிலகு முவாரசமுசிரீ துண்ணப்பதமெனும்புளியொன்றமுரியாலுளதால்பாகமாய்பாண்டங்கொண்டடக்கி, வீதமிதுபாகஞ்சமாதிவைத்திருந்தமிகுந்தமுப்பதுவயதண்டம், சுதனருளாலும் பற்பஞ்செய்துணரச் சூக்ஷமேசொல்லுவேனுண்டே.

(இ-ள்.) சலமென்று சொல்லப்பட்ட அமுரியானது உனக்குஉள்ளேயிருந்தால் உன்சரீரம்நெடுநாள்களுக்கு அழியாததாகும். இந்தச்சூட்சமோகற்சூட்சமாகும் எ-று. (௮௬௬)

மதுரத்தேனின்பாமலப்புளியிரண்டுமார்க்கமாய்கரைந்துநாள்மூன்றும், பதனமாயில்லமேல்மூடிசெய்து பதமதாய்நீர்தெளிந்தது நீர், விதமெல்லாங்குப்பிதனிலடைத்துபின் மேருவென்றெனு மண்டமதனைச், சுதமதாய்ச்சுற்றித் தயமதின்கம்பால் தூளதாயிடித்துமாவதுவே.

(இ-ள்.) தேன், மலப்புளி இந்தஇரண்டின்வழியாய்க்கரைந்து நாள்மூன்றுபதனஞ்செய்தால்பிறகு குப்பியிலடைத்துமேருவைச்சுற்றிவைக்கவேண்டும்

இடித்துமாக்கருவைவடித்தசூரணமாயினியொருசீலையில்கிழி யாய், முடித்தொருபடிநீர்தோண்டி கொண்டேட்டிமுக்கியமா யாண் டசூரணத்தைத், தடித்ததிற்பாச்சி வன்னியிட்டெரித்து சலமெலாந் தொக்கிச்சுண்டிடுமால், வடித்தொருகல்வம்பாச்சியே பின்புபழம்பு ளியமுரிநீர்விட்டே.

(இ-ள்.) அவைகளை இடித்துபொடியாக்கி கிழியாய்க்கட்டி ஒருபடிநீர் தோண்டியில்விட்டு அதைப்பாச்சி யெரித்து சுண்டும்பதத்தில்உப்பாம்.

வரையிருசாமம்வற்றவற்றதுநீர் வார்த்ததில்மெழுகதுபதமாய்ப் புரையில்லாவழித்துச்சதுர்பில்லைக்கட்டிபுகழ்சுதிர்முகந்தனில்காய்ந் கால், நிரையடியோடுஉள்ளதாய்வைத்து நின்றமேலோடதுமூடி, து றையதாய்சீலைக்கவசமண்ணேழு சூட்டியேபுடமுழமாமே.

(இ-ள்.) வற்றினமெழுகுபதத்தில்வழித்துப் பில்லைதட்டிரவியிற்காய்ந்து மேலோடுமூடிக் கவசஞ்செய்து முழப்புடம் போடவேணடும் எ-று. (அ௬௯)

அந்ததோர்புடமிட்டக்கினிமூட்டியதுதணலாறியபின்பு, இந்த தோரண்டமெடுத்துடன்பார்க்க இந்திரனொளிவதுக்கதிதம், சந்திர புஷ்கரணிசாரையினெட்டஞ் சாரணைசதகோடிதேர்ந்த, மந்திரசுரூப மவுனமந்திரங்காண் மகத்துகள்மறைத்ததுமிதுவே.

(இ-ள்.) புடமாறினபின் பார்க்கஒளியாயிருக்கும் இதையே மௌனிகள் மறைத்த மந்திரமாம் எ-று. (அ௭௦)

கொச்சகம்.

சுன்னக்கடுங்காரமிது சுக்கிலசுரோணிதத்தால்
வின்னமில்லாதண்டபற்பம் வெகுபதனமாய்க்கருதி
தன்னையறிந்தேமதியால் தானறிந்துகற்பமதில்
சொன்னேன்குருபஸ்பமதைத் தொடுத்தேன்பணவிடையே.

(இ-ள்.) இது கடுங்காரமான சுண்ணமாம் இதுவேஅண்டபற்பமாம், இ தையறிந்து கற்பத்தில் உபயோகிக்கவேண்டிய அளவுபணவெடையாம்எ-று.

காரமதில்சாரம்விட்டு கற்பமிதையிலேகியமாய்
சீருடனேபஸ்பமிட்டு செய்விதமாயுண்டேன்காண்
மாறஅதிகாலையிலு மாலையிலுமிவ்விதமாய்
தேறவுங்காணுண்டுதசத் திங்கள்நிறைவேறினதே.

(இ-ள்.) இதில்காரசாரங்கள்சேர்ந்து லேகியமாய் செய்விதப்படி செய்து ண்டேன், பத்துமாதங்களும் இவ்வாறே நிறைவேறினது எ-று. (அ௭௨)

கலித்துறை.

சூதாமாய்கை யடராமல்வாசியைத் தூக்கிவிட்டு
ஊதாமலூதிப் பிராணபமூல முள்ளடங்க

வேதாகமத்தின் விதியையறிந்து கற்பவேகமதாய்
ஆதாரங்காண விராஜாங்கயோக மறிந்திட்டனே.

(இ-ள்.) மாய்கையான து சேராமல் வாசியைத்தூக்கி ஊதாமலூதிப் பிராணயத்தில் உள்ளடங்க வேதாகமங்களின் விதியையுணர்ந்து கற்பவேகமாய் ராஜாங்கயோகத்தை அறிந்தேன் எ-று. (அளங)

மூன்றுண்டுமாச்சுது மூலப்புளியிந்த மூக்கியத்தால்
ஆண்டாண்டுமாண்டு மருள்நாலுமாண்டி லறியும்விதம்
காண்டாபுரமெரித் தானந்தமூலக் கதிர்மதியில்
தூண்டாமணிவிளக் கேற்றிவிட்டேன்திரு வள்ளுவனே.

(இ-ள்.) மூன்றுவருஷங்கள்ஆயின, இவ்வாறு அனுபோகித்து காண்டாபுரத்தைஎரித்த ஆனந்தமயமான மூலாதாரமான கதிர்மதியில்திருவள்ளுவன் தூண்டாவிளக்கை எற்றிவிட்டான் எ-று. (அளச)

திருவானசோதி கருவூருநாட்டில் தேன்பொழியும் [ய்தேன்
பொருளாம்வாலாயபீகை மலர்ப்பொற்பதந்தனில்போற்றிசெ
அருளாமதிமலர் சிவராஜயோக மறிவித்தனள்
குருவபயகத்தி னுபதேசத்தாலுங் குறைவில்லையே.

(இ-ள்.) சோதிமயமான கருவூர்நாட்டில் வாலாம்பிகையின் திருவடிகளை வணக்கினேன், அவளோ சிவராஜயோகத்தை உணர்வித்தாள் எ-று. (அளரு)

தனமேவியகரு காரசாரத்தினில் தான்மருவி
தினமுமைம்பாச மவுனங்கொண்டேன்திரு வள்ளுவனும்
மனமேவியகுரு வாக்கியத்தால்மூல வாசிகொண்டு
புனலாவதுங்கனை சரமாறியேற்றிப் பொழிந்திட்டனே.

(இ-ள்.) செல்வந்தழைக்கும் காரசாரங்களிற்சேர்ந்துமவுனங்கொண்டேன் குருவாக்கியத்தினால் மூலவாசியைக்கொண்டு கனைசரமாற்றி எற்றிப்பொழிந்திட்டேன் எ-று. (அளகூ)

வெண்பா.

கல்லுப்பின்வாறு கருத்தறியாதுண்டுமனு
வல்வினைக்குள்ளாகிமனம் வாடினார்-கல்லுப்பு
வெள்ளைக்கல்லுப்பு வெகுவிதமாயாய்ந்தாலும்
உள்ளமதிலுண்டென்று உன்.

(இ-ள்.) கல்லுப்பின்விதத்தை உணராமல் வலியவினைக்குட்பட்டு வாடினார் வெள்ளைக்கல்லுப்பை ஆராய்ந்துபார்த்தாலும் உள்ளம்மாத்திரம் உயர்ந்த வஸ்துவில் உண்டென்று எ-று. (அளஎ)

என்றுமிந்துப்பு எண்சாணுடலிருக்க
கண்டுமறியாதென்ன காரணமே-என்றுமதி

வாரியமுரியதை வன்னியிட்டுக்காச்சியபின்
வீ ியமாயானுணரு மெய்.

(இ-ள்.) இந்தப்பு எண்சாண் உடம்பிலிருக்க அறியாததென்ன காரணமோ அமுரியைவன்னியிட்டுக் காய்ச்சினபிறகு வீரியமாகும் சீரம் எ-று.

உப்பின்கசடதுபோய் ஊறலதுமாறினதால்
முப்புசுன்னமகமதற்கு மூன்றுபேர்-உப்பதனால்
கற்பாந்தரங்கோடி காயமிதுவலுத்து
செற்பாயும்வாசியினல் தேகம்.

(இ-ள்) உப்பின் ஊறல் மாறினல் முப்புசுண்ணமாகும், உப்பினல்கற்பாந்தரகோடிகாலம் மாயமானதுவலிவுபடும் சரீரமோவாசியினல் வளர்ந்ததாம்.

வாசிவசப்படுதல்-வண்ணச்சிந்து-தரு.

தனனந்தனனந் தனனத்தனன தந்த தனனதனதன தனனதனதன
தனனதனதன தவனதவதன தனதானதானதான தனதந்தந்தனன

ஜெகமேவியவாருலகுந்தனிலிலகும்புரி-யகவாரிதவா னகிலம்புகழ்மதிசந்திரசுகவானுள-பூரணவம்பதிகதிர்சூழ்வடமகமேரதில்வாழ்திருவம்பல-சுடர்மாமணிகனகம்பல-இடைபின்கலை சுழிபின்முனைதுரியாதித தலமேவியநான்கலையொத்துருவஞ்சுற்றினி - யிடபரிசமாய்நடனம்புரி-அருள்சாதனைகருவூர்வளநா-டடன்பாடுள நிருபங்கவில்-அதிவானகர்வந்துதிபெற்றொரு மலர்பொற்பதம்விதிதன்செயலென் தந்தைகூறதிதங்களையுதித்தவந்-தனனந்

(இ-ள்.) உலகங்களிலும்விளங்குகின்ற சூரியன்வலமாகின்றமகமேருவில் நடனஞ்செய்கின்றநாட்டின் என்தந்தை அதிசயங்களை உதித்தவன் எ-று.

மதுபாரமூரியுவரிந்தது-சரிரந்தனிலலிவிந்துகூர்-களிவின்பதரசகெந்தியின்-தசதிங்களுமுண்டமூதேபசு-மமிர்தங்களும் விதபோசனமாய்-விரும்புங்கலைமதிசாரணை-அகங்கொண்ட பகிரண்டமுந்திருவம்பரயுகமண்டல-நதிசூழ்கமலம்வரைசுற்றிதழ்-மணிபூரகமுனைவாசியுமே-கரைகண்டுவனருள் தாவென-துரைகண்டுகையாய்தசவாய்வது-மொருமித்துடன்-அரியாசனமே-எவர்க்குமுபிரெனக்கும்பொருள்-அறுநீர்சுவை-செயநீர்கதிர்-வருமேமதிமனோவேகமாய்-தனனந்

(இ-ள்.) சந்திரனல் உண்டாகும் இந்தசரீரத்தி லுள்ளதேயாம் அதைப் பத்துமாதங்கள் உண்டபிறகு சாரணைகொண்டு பிராணயமம்செய்து பத்து வாயுவும் ஒருமித்து மனோவேகமாய் எ-று. (அஅ௧)

இகம்பாமேவெளியிற்சனி -மதுரத்துடனிடராகிய சஞ்சலத்துதள்துடராமலங் கருவாகியபஞ்சருபத்தினிலுறவக்கணைகதிர்மேவிய

பா-லமிர்தம்பொழியமுதுண்டபின்-கருணாலயஞ்சுழிமேல்சுடர் கவி
யத்தசைகலைகொண்டந்தி-காலையிலும்புளிநீருகை-அருநீர்சுடருசினு
னுளது-கெதியென்றுடன்பசியத்தனை-யெரிகும்பியினில்-குடியேறிய
முனைவாசியும்-பிரியாததுங்கினவென்றுடன் - முதலட்சரந்துடியா
கவு-மொருமித்துடன்-முடிசுற்றிவிணுடித்தறி-தனணுங்.

(இ-ள்.) இகபரவெளியில் நிகரான பஞ்சபூதசொருபத்தில் அமிர்தம்
பொழிகின்றதையுண்டு காலையில்புளிநீரையுண்டு ஒருமித்து முடியாகிய சுழி
முனையைச் சுற்றியறியவேண்டும் எ-று. (௮௮௨)

வழிகண்டினிபாராதிதப்பெருந்-துறையாகியமதவாகியதோரு
சிகண்டதின்முனைதாரையில்-சுழிஙாமலும்-யான்விழிமாதனுக்கி-ரச
ம்பரி-கரைவேதகமாய் ஒருநாளிலும்-பிரியாமலுமபிராமியின்மலர்ப்
பொற்பதம்விதியாய்பணிந்து-தொழுதேயருள் அறுநீர்புளியுமூறவா
ய்ரவிமூலந்தனி-லுருவேகமதாயரியுமரன்பிரமாதிகள்-இமையோர்க
ளுமெவராலறி-புவனந்தனில்கருவாய்வெகுசெந்-தனைவோரின் முட
லிப்படி-கருநெல்லியின்கனியுண்டுவெண் ணதிமாமதி யருள்கண்ட
னர்-தனணுங்.

(இ-ள்.) பெருந்துறையான கண்டத்தின் தாரைமுனையில் அனுக்கிரகம்
பெற்று ஒருநாளில்வாலாம்பிகையின் பாதத்தைவணங்கி கருநெல்லிப்பழத்
தையுண்டு மதியின் அருளைக்கண்டு எ-று. (௮௮௩)

அனைவோர்களுமேஅறியாரதிந்தவராகினு மனவுற்பனமாய்-ம
துரந்தனை யமுதென்றுள-தெவராகினுமிந்தெனமிக்கரு- சுழியென்ற
துதவருமனுநூல்-வழிகண்டுறைமவுனந்தனை - கெவுணுதிகள் வெகு
நாள்யுகஞ்சிவயோகஞ்செய்-தறியாமலுஞ்சவமாகினர்கள் தவஞ்செ
ய்யகமவர்பெற்றுடன்உவர்கண்டறியாருதகங்களி- மதபேதமாயிவர்
ஞானிகளா-யிலகும்புவியுலகங்களில் பரதேசியதாய்சுகபோகிகள் கு
கைசாதனைவயிறுசீவன் கவனத்துடன்-உடல்போய்சுடுகாடேகினர்.

(இ-ள்.) எல்லாரும் உற்பனமாய் நூல்வழியைக்கண்டு மவுனத்தைகெவு
ணுதிகளாற்சித்திசெய்து ஆறமாதங்களில் சித்திபெற்று பரதேசியாய் சாதனை
செய்து உடல்போய்ச் சுடுகாட்டைச் சேர்ந்தார்கள் எ-று. (௮௮௪)

தசவாய்வதுவும்வசமாய்கலை-சுவாசங்களை யசையாமலுமேஅடி
யாகியமூலந்தனில்-விசுலாசியதும்விதமாய்வயிராக்கியத்துட னிசவா
க்கினைகொண்-டினகிங்கெனமவுனந்தனி-லருள்பெற்றுடன் யோகத்
திரு-அருள்யெற்றனுக்கிரகித்துடன்-கெதியாகியதோர்-இருளத்துட
ன்வரமுத்தியில்-திருவாய்மதுரம்பதமேவிய- மோட்சத்துறைகறை
கண்டெனுமே-மதியும்ரவிசிவரூபமும்-குருமந்திரமாய் புகழ்யங்கெ
ன-சுழியின்முனைமுதலட்சரமிதுபின்னிடு-கடையட்சர மறிவித்தனர்

(இ-ள்.) பஞ்சவாயுக்களை அசையாதபடி அடிமூலத்தில் இருளற்று குரு மந்திரவழியினின்று சுழிமுனைமுதல் எழுத்தின்மூலமாகக் கடைஎழுத்தை யும் உணர்வித்தனர் எ-று. (௮௮௫)

சுகசீவனமாய்ஒருபோதமு-தமிர்தங்களில் பெரியோர்களுமே-எரிகும்பிதன்வார்பாடொழிந்-துலகங்களிலும் கருவாளிகள்-அவர் மேவிய-தலவாசமதாய்மருவிப்புனல்-மதுரங்களைமவுனம்பரி துரியா தீதமிடைபின்கலை-சுழியின்முனைகிரிசூழகமாய்-தசதீட்சையி லதிதத் தவஞ்-ஜெகசூஸ்திரமாய்நடனந்திருமடைவாயினி லுயிராகியதோர்-பறவைப்பட்சியடைவைப்போலு-மிவர்தன்னெறி பார்மதிதன்னிட ரவியின்செயல்களைகொண்டுடன்-தசவாண்டினில்புலனைம்புலன்முளை யாந்தர்-தனனுந்.

(இ-ள்.) சுகமாய் ஒருநாள் அமிர்தமுண்டு துரியாதீதத்தில்பிராணாயாமம் செய்து உயிராகியபட்சியை தன்வசப்படுத்தி பத்துவருஷங்களில் பலத்தை யடைந்தார்கள் எ-று. (௮௮௬)

வாய்வோடனல்சேரசையாமலும்-வசமாவதுதேய்போம்பிறை தான்-திறையாலுமலுமதிபூரண-பிறையாவதுமே மதிவன்னியில-உருவாகியபின்னிறவாவுடல்-சேர்வம்பதிகெதியாகியபின்-சிவஞானிக ளவர்பெற்றபோ-துறவறமேமெய்சமென்றிரு-பிறவாரிதுமூன்றிலட்சரம்-மீக்காற்றுணர் பழுதென்றிளையார்-பத்மப்பதங் கருணைபெறு-மறவாதொருநாள் மவுனந்தனில்-கவனம்விடா ரருள்பெற்றடைவா-ரதுர்தச்சிவயோகத்தினில்-திருவள்ளுவனுரைதன்மொழி-தமிழ்வண் ணமு மருள்பெற்றெழும்-தனனுந்.

(இ-ள்.) வாயு, அனல் இவைகள் அசையாமல் தேய்பிறைபோல் சிவஞானக்கள்வர்கள் பெற்றதுறவறமே உண்மையானதென்று இறைவன்பதம்பணிந்து சிவயோகத்தில் அருள்பெற்றிருந்தேன் எ-று. (௮௮௭)

கொச்சகம்.

நற்பிறவியாயிருந்து நாள்தோறுஞானமொழி
கற்பனையால்கண்டறிந்து காலமதுபோக்காமல்
உற்பகமாய்கற்பமதி னுட்கருவினுலுமறி
தற்பரசிகாமணியாய் தாரணியில்வாழ்வாரே.

(இ-ள்.) நல்லஜெனனத்தையடைந்திருந்து தினமும் ஞானமொழியைக் கண்டுணர்ந்து காலத்தை வீணேபோக்காமல் உட்கருவினாலும் தற்பரசிகாமணியாய் உலகத்தில் வாழ்வார்கள் எ-று. (௮௮௮)

அண்டபற்பமுண்டுவர ஆக்கைதனிலுள்ளவினை
உண்டகற்பகாலாண்டி லாழ்வினைவந்தெய்திடினும்

கண்டனனுபோகமதாய் கன்மவினைசூழ்ந்திடினும்
சண்டனதுவாய்லபிக்குஞ் சார்வதுமறிந்திலரே.

(இ-ள்.) அண்டபற்பத்தைப் புசித்துக்கொண்டுவந்தால் சரீரத்திலுள்ள வினைகள் நாலாண்டில்போகும், கர்மவினைவந்தாலும் விளகும் எ-று. (அ௯௯)

கலித்துறை.

வித்தால்வினையு மெய்வாழ்க்கையென்று மிகமகிழ்ந்தேன்
சத்தாகிலுஞ்சளை யாமலுங்கற்பஞ் சாதித்துயான்
எத்தாகவுண்டு இருந்தாண்டுநாலு மினிகடந்து
குற்றமதாக வூழ்வினைவந்து ருடிகொண்டதே.

(இ-ள்.) இவ்வாழ்க்கைரொம்பவும் உயர்ந்ததென்றுமிகவும் சந்தோஷித்தேன் ஆனாலும் கற்பத்தைச்சாதித்து தந்திரமாகவுண்டு நாலாண்டு கடந்தும் ஊழ்வினையானது குடிகொண்டுவந்தது எ-று. (அ௧0)

என்னுக்குளம்பிகை பாதாரவிந்த மினிபணிய
வின்னம்வாராம லூழ்வினையோடி வெளிப்படுங்காண்
அன்னைவாலாம்பிகை அவிழ்தத்தினால்பிணி யற்றுவிடச்
சொன்னார்வயித்திய சூட்சச்சூடாமணி சூழ்தில்லையே.

(இ-ள்.) அகத்தின்கண்ணுள்ள அம்பிகையின் பாதாரவிந்தத்தைப்பணிய ஊழ்வினையானது ஓடும் அவளுடைய ஔஷதத்தினால் நோய்களொழியச் சூட்சமும் சொன்னாள் எ-று. (அ௧௧)

வெண்பா.

இந்தஜெனன மிருவினைக்கீடாக
வந்துதித்தமார்க்க வல்வினைதாண்-இந்த
அவிழ்தத்தினாலறுமே ஆக்கையதுக்குமொரு
தவமதுநாள்முன்செய்த சாந்தி.

(இ-ள்.) இருவினைவயத்தால் இச்சென்மம் வந்ததாகும் அது வாலாம்பிகை ஔஷதத்தால் விலகும் எ-று. (அ௧௨)

கற்பகத்தினாலுதித்த கர்மவினையதுவுஞ்
சொற்பதத்தினாலொழிய சொல்லுவேன்-உற்பத்தி
மதிபிசகாறுண்டக்கால் லல்பிணியுநோயகலும்
அதிவிதமாகற்பத்தா லறி.

(இ-ள்.) கற்பத்தினால் வந்தவினைகளும் சொற்பத்தில் ஒழியவழி சொல்லுவேன் சந்திரபானத்தை தவறுதுண்டால் வலியநோய்களும் ஒழியும் எ-று.

விருத்தம்.

ஆதியாய்விளங்குஞான வெட்டியாயிரத்தைஞ்ஞூறும்
நீதியாய்திகழ்த்தவாலை நிர்மலத்தாளைப்போற்றி

சோதியானந்தரூபன் சுயகுருமுனியின்பாதம்
வேதியன்மொழியஞான மெய்க்குருவிளங்கத்தானே.

(இ-ள்.) ஞானவெட்டி 1500-ல் சொன்ன வாலாம்பிகையின்பாதத்தை வணங்கி அகத்தியமுனிவரை நமஸ்காரஞ்செய்து குருஅருள்விளங்க சொல்லுவேன் எ-று. (அ௩௪)

மானமும்புவியுமேரும் வாருதியனுக்கிரகத்தால்
தேனெனுமொழியினுளே திங்களுமருக்கனும்
ஞானம்வந்தமைந்தபோது நாதவிந்தருளாலெய்தும்
கானெனுஞ்சூதவித்தைக் கைவசமார்ச்சுதாண்டே.

(இ-ள்.) ஆகாயம், உலகம், மேரு,வாரிதி, சூரியசந்திரர்கள்இவைகளின் அருளினல் சூதவித்தை கைவசமாச்சுது எ-று. (அ௩௫)

வேதியர்குலத்தில்யானும் விந்துதித்தளவையெல்லாம்
சாதியென்பரைக்குள்வந்த சங்கடமெல்லாஞ்சொன்னேன்
சோதியானந்தஞானச் சுழிமுனைநடனங்கண்டு
நாதவிந்துதித்தசூக்ஷ ரகசியமறிந்தேனுண்டே.

(இ-ள்.) நான் பிராமணர்குலத்தில் உதித்து சங்கடங்களெல்லாஞ் சொன்னேன் சுழிமுனைநடனங்கண்டு நாதவிந்துக்கள் உதிக்கும் சூட்சரகசியத்தை யறிந்தேன் எ-று. (அ௩௬)

அதியாய்வெளியாய்நின்ற அரூபத்தையறிந்தவாறும்
விஞடியான்பிரியாவின்பம் விந்துநின்றுணர்ந்தவாறும்
பஞமுடிமயிர்ப்பாலத்தில் பழம்பொருள்தெளிந்தவாறும்
கனவுபோல்கண்டகாக்ஷி கற்பத்தாலறிந்தேனுண்டே.

(இ-ள்.) அனுதியான அரூபத்தை உணர்ந்தவிதத்தையும் விந்திருந்தவரலாற்றையும் மயிர்ப்பாலத்தின் தன்மையையும் கற்பத்தால்உணர்ந்தேன்எ-று

அன்னைதந்தை கருவுதனிலுதித்தவாறும் அகிலமதில்யான்பிறந்துவளர்ந்தவாறும்,சின்னவயதளவில் கல்விகற்றவாறும் தெளிந்துலகத்தோர்களுடன்சேர்ந்தவாறும், நன்னயமாய்சற்குருவை யடுத்தவாறும் நம்பிசிவபூசைதனில்நயந்தவாறும், இந்நூல்மொழியாயிரத்தைந்நூறுக்குள்நேர்மையெல்லாமொவ்வொன்றாய்நிகழ்த்துவேனே

(இ-ள்.) பெற்றோர்கள் கருவில்பிறந்தவிதமும் உலகத்தில் நான்பிறந்து வளர்ந்தவிதமும், கல்விகற்றதும், கற்றவர்களுடன் சினேகித்ததும் குருவை அடுத்ததும், சிவபூசையில் விரும்பினதும் இந்நூலில் சொல்லுவேன் எ-று.

அண்டபிண்டம்பிறந்தவரலாறுஞ்சொன்னேன் அகண்டசத்ததீவுகளுமேழுஞ்சொன்னேன், மண்டலஞ்சூழ்வாரிமதிரவியுஞ் சொன்

னேன் வாரமுதல்கிரகஉச்சமாறல்சொன்னேன், கண்டநக்ஷத்திரம துவுங்கருவூர்நாடுகருதொண்ணூற்றாறுஞ்சுட்ட கருத்துஞ்சொன்னேன், எண்டிசையுமஷ்டகுலவெற்புஞ்சொன்னேன் எம்பிரான்வளமெல்லாமியம்பினேனே.

(இ-ள்.) அண்டபிண்டங்கள் சத்ததீவுகளும், மேருவும், கடல், சந்திர சூரியர்கள் வாரம், கிரகஉச்சம், நட்சத்திரம், தொண்ணூற்றாறு தத்துவங்கள் ஆகிய எல்லாவற்றையுஞ் சொன்னேன் எ-று. (௪௯௯)

நால்வகைக்குளெழுவகையு நவின்றவாறும்நாதவிந்தால்ஜெகம் படைத்தநாதன்வாறும், தூல்வுடசூக்ஷமதால் தொகுத்தவரலாறும் தொல்லுலகில் சாதிகுலந்தோன்றும்வாறும், சீலமுடன்பரைக்குள் வந்துசெனித்தவாறும் சிவகுருகடாக்ஷமதால்தெளிந்தவாறும், பால மதில்விழிபடைத்த அண்ணலார்தம்பார்வையினால் யானறிந்துசொல்வேனுண்டே.

(இ-ள்.) நால்வகையோனி, எழுவகைத்தோற்றம், ஜெகமுண்டாயிடவும், ஸ்தூல, சூட்சசரீரங்கள் சாதி, குலங்கள் இவைகளின் வரலாற்றை நான்குருவருளால் உணர்ந்து சொல்லுகிறேன் எ-று. (௫௰௧)

செனித்திடுகற்பக்கூறு தீட்சைசொன்னேன்சிவசத்தியதுகூறு செயநீர்சொன்னேன், வனிதையெனும்வழக்கூறு செயநீர்சொன்னேன்வடிவானமுப்பூவின் மார்க்கஞ்சொன்னேன, புனிதமெனுந்திராவகமுங்கற்பஞ்சொன்னேன் பூபதியுஞ்செந்தூரப் போக்குஞ்சொன்னேன், வினிதமெனுங்காயசித்தி வேதைசொன்னேன் விதரணையாயிந்நூலில் விளங்கினேனே.

(இ-ள்.) கற்பம், சிவசத்தி செயநீர் முப்பூவின் மார்க்கம் திராவகம், கற்பம், பூபதிசெந்தூரம், காயசித்தி, வேதை இவைகளையெல்லாம் இன்னூலில் சொன்னேன் எ-று. (௫௰)

அண்டரெனுமுனிவர்களு மகிழ்ந்துபோற்றும் அணிஞானவெட்டியாயிரத்தைந்நூறும், எண்டிசையும்வானமுதலிடங் கொள்ளாத இயல்பெல்லாம் பாடுகிறேனினிதான்காணும், விண்டபொருள்பிராணயவாசியோகம்வெளிகடந்துமுப்பாழுந்தாண்டிமேலால் கண்டிதமாயானருளப்பதினெண்பேரும் கருணைமகிழ்ந்தனுக்கிரகங் கருதினாரே.

(இ-ள்.) ஞானவெட்டி 1500-ம் உலகாள் கண்டுகளிக்க பிராணயாமவாசியோகத்தை நிரப்பி அனுக்கிரகஞ்செய்தேன் எ-று. (௫௰௧)

சிரஞ்சீவிபதம்பெறவுந் தெளிந்தேன்காணும்சௌனகாதிமுனிவர்களின்செய்கையாலும், மறைத்துவைத்தபுதைப்பொருளை மறைவி

ல்லாமல்வசனிக்க அம்பிகைப்பெண்வாழ்த்தியென்னை,யிறப்பிறப்பு பிணிகடந்துயிருளுந்தாண்டிஇகபரத்தைச்காணவிடை கலைபின்மாறி துரைப்பெண்ணுமமிர்தவடிவானசோதிசூக்ஷசுகாதீதமெனக்குரைத் தாளாண்டே.

(இ-ள்.) சிரஞ்சீவிபதத்தையடையவும் செனகாதிமுனிவர்களின் செய் கைகளால் புதைப்பொருளை மறைவில்லாமல் அம்பிகைப்பெண்வாழ்த்திருட் சசுகாதீதம் எனக்குச் சொன்னாள் எ-று. (கா௨)

மாயாமலிருப்பதுவுஞானவாழ்க்கை மகத்துகளாய்செனிப்பது வும்யோகவாழ்க்கை,தாயானஅம்பிகையின் கமலம்போற்றிதற்பரை க்குள்நின்றிலங்குஞ்சாரகாரம், காயாதிகற்பமுண்டு கருணைஞானக் கடல்வாரி யமுரியுண்டு சுருத்தம்பெற்றால், நாலுங்கடைகெட்டு நம னுமாண்டான் நரகமென்னசொற்கமென்னநாதவிந்தே.

(இ-ள்.) ஞானவாழ்க்கை மாயாமலிருப்பது, மகத்துகளாய்ச்செனிப்பது யோகவாழ்க்கை அம்பிகையின் கமலம்போற்றி தற்பரைக்குள் இன்றவிளங்கு ங்காரசாரம் அமுரிஉண்டு நரகமென்னவென்றால் நாதவிந்தாம் எ-று. (கா௩)

கொச்சகம்

நாதவிந்துயானறிந்து நாடியுடலாவியொன்றாய்
காதல்கொண்டுஞானகற்பக் காயசித்தியால்தெளிந்தேன்
சூதமென்னசுக்கிலங்காண் சுரோணிதமிரண்டளவால்
வாதவித்தையெய்தும்வகை யாறுதன்னைக்கண்டேனே.

(இ-ள்.) நாதவிந்துக்களை நான் உணர்ந்து காதல்கொண்டு காயசித்தியில் தெளிந்தேன்சூதமோசுக்கிலமாம் சுரோணிதமும்,வாதவித்தையடையும்வகை யையும் நான்கண்டேன் எ-று. (கா௪)

வேதரசபானமுண்டு மேவியொருநாள்பிசகா
சாதனைமால்தேவியெனுந் தற்பரையையான்பணிந்தேன்
தாதுவிந்துநாதமுடல் தன்னையேயறிந்தேதனித்தேன்
பேதமில்லாவாசிகொண்டு பின்புகலிதீர்ந்தேனே.

(இ-ள்.) வேதரசபானத்தை உண்டு, ஒருநாள்மால்தேவிஎன்கிறதற்பரை யைநான் வணங்கினேன், விந்து, நாதம் இவைகளை உணர்ந்துவாசியைக்கொ ண்டு பின்புகலிதீர்ந்தேன் எ-று. (கா௫)

கலித்துறை.

சோதிப்பிரகாச மலர்சூடிஞானந் துலங்குரத்னம்
போதித்தகத்தியன் பொற்பதமேவி புகழ்பெறயான்

ஓதத்திலேகடல் மதாரசஞ்சீவி யுண்டபலன்
காதித்ததுஞான பிராணுபவாசி தனையறிந்தே.

(இ-ள்.) பிரகாசமான மலரைச்சூடி ஞானம்விளங்குகின்ற அகத்தியனுடைய பதத்தையடைந்து புகழையடையாான் சஞ்சீவியையுண்டு ஞானபிராணுயாமவாசியை உணர்ந்தேன் எ-று. (சுாசு)

பூசித்துஞான பரிபூரணனந்த பொற்கமலம்
ரேசித்துப்பூரகங் கும்பத்தில்வாசி நிலைபெறவும்
நாசிக்குநேரிரு வாசிப்பிரகாச நாட்டத்திலும்
தேசிகன்சேவடி பாதாரவிந்தந் தெரிசித்தனே.

(இ-ள்.) ஞானபரிபூரணனந்த பொற்கமலத்தைப்பூசித்துபிராணுயாமஞ்செய்து சுழிமுனையில் தேசிகன்பாதாரவிந்தங்களை தெரிசித்தேன் எ-று.

வெண்பா.

அஞ்சுபஞ்சபூத மறிந்தாலனித்தியம்போம்
அஞ்சும்வசப்படுவ தாண்டதனில்-அஞ்சும்
கண்டறிவோர்ஞானக் கடாக்ஷமதில்நினைவு
விண்டறியலாமோ விதி.

(இ-ள்.) பஞ்சபூதங்களை உணர்ந்தால் அனித்தியம்போகும் அஞ்சும்வசப்படுவதுமிகவும் விசேஷமாம் அவைகளையறிபவர்கள் ஞானிகளே யாவார்கள்.

எண்சாணுதேக மெத்தாலென்னுண்டையே
பெண்சாயல்நீக்கிப் பேரின்பம்-எண்சாண்
தேகமழியாமல் சித்திபெறுஞானம்
யோகசித்திபூசைவிதி யுண்மை.

(இ-ள்.) எண்சாண் உடம்பை எடுத்தால் பெண்சாயலை நீக்கிப் பேரின்பத்தை யடையவும் தேகமழியா வரம்பெறவும் பூசிப்பது உண்மையாம்எ-று.

யோகசித்தி-தரு.

பூசித்தேன் பிராணுயவாகியோகம்-ரேசித்துஆண்டே
பூரித்துக்கும்பகங்கண்டேன்பாகம்

(இ-ள்,) பிராணுயலயம் செய்து பூசித்தேன் எ-று.

வாசித்துவாசியையூதி வங்கென்றுந்தம்பித்துலாவி, பூசித்துக்கருவிகளைத்தொடர்ந்து சுட்டறுத்துயான். பூசித்

(இ-ள்.) வாசியை யூதிவவ்என்று தம்பித்து கருவினைத்தொடர்ந்து சுட்டறுத்து நான் எ-று. (காய)

கும்பித்துப்பூரகம்நாடி தம்பித்துக்கும்பகந்தேடி, நம்பித்விமூன்றுண்டுசென்று அம்பிகாயோகத்தில்நின்று, கெம்பிரமாகவுங்கண்ட

தாரையில்வாசியையூதி யெம்பிரான்கமலபதந் தம்பிமுகனைத்தொ
ழுது. பூசித்

(இ-ள்.) பிராணயாமயம்செய்து மூன்றவருஷக்கழித்து அம்பிகையோ
கத்திலிருந்து கண்டதாரையில் வாசியையூதி தம்பிமுகனை வணங்கி எ-று.

நங்கென்றும்வினடி யூதிமங்கென்றஞ்சா நித்துப்பேதி சிங்கெ
ன்றுமூலத்துக்கெற்றி வங்கென்றும்பாதத்தைப்போற்றி,அங்கென்று
ம்வாசிமேலேக வங்கெங்கும்பிரகாசமாக, கங்குல்பகனன்ருகத்திங்
களுங்கதிரோனுகப். பூசித்

(இ-ள்.) ஓம்என்றூதி, மங்என்றரேசித்து சிங்என்ற மூலத்துக்கேற்றி
வங்என்ற வழியைப்போற்றி அங்என்ற வாசிமேல்போக எங்கும்பிரகாசமாய்
இரவும் பகலும் சந்திரர், சூரியர்களாகப் பூசனைசெய்து எ-று. (௬௯உ)

ஒவ்வெனுமூலத்திலோடியொன்பதுவாசலுங்கட்டிஅவ்வெனும்
உவ்வெனுங்கூட்டி அப்புவையுப்புவிலூட்டி,நாசியில்வாசியோடாமல்
வீசியுஞாலம்பாயாமல், தேசிகன்பொற்பதமேவி ஊசியின்முனைவா
ராமல். பூசித்

(இ-ள்.) ஒவ்என்கிற மூலாதாரத்தில்போய் நவவாசல்களையுங்கட்டி அவ்
வையும்உவ்வையுங்கூட்டி நாசியின்கண்வாசி பாயாதபடிதேசிகனாகியகுருவின்
திருவடிகளில் பணிந்து எ-று. (௬௯௩)

ஆகாரமப்புவுமூலமதின்மேழோங்காரமூலம்,பிதாவைத்தொழுது
முத்திபிராணபதீபத்தையேற்றி, கங்கைமதிமலர்தன்கமலபாதாரவி
ந்தம் கெங்காஸ்நானங்கள்செய்துகெவனம்பாயவும்வாசி. பூசித்

(இ-ள்.) மூலத்தின்மேல் அப்பு ஒங்காரமூலமாம் அங்குதந்தையானபவ
னத்தொழுது பிராணயாமத்தைசெய்து கங்கையான மதியாமிர்தத்தில் கங்
ஸ்நானஞ்செய்து கெமனத்தில் யாவும் எ-று. (௬௯௪)

ஆசான்சற்குருநாதரருளாலாண்டையேகேளீர், பாசாபாசமறு
த்துப்பரிபூரணச்சந்திரனை, தேசியெனுங்கெவுனம்வாசிக் குதிரைமீ
தில், நாசிப்புருவநடுவீசித்தும்பாய்ந்து. பூசித்

(இ-ள்.) சற்குருவின் அருளைக்கொண்டவர்களே! கேளுங்கள் ஆசாபாச
த்தையறுத்து பரிபூரணசந்திரனைப்போலகெவனமாகிய வாசிகுதிரையிலேறி
புருவநடுவீதியில் ரேசித்துப்பாய்ந்து எ-று. (௬௯௫)

வினடிகடிகைக்கொன்றுவிதமாச்சுழியில்நின்று, தினநாள்முப்
பதும்வாசியினமிர்தப்படியேசி,கோசமெனுமக்ஷரங்குறித்துஓராண்
டமுரி, நாசமதாகுமுப்பாழ்நசித்துவெண்ணீறதாக பூசித்

(இ-ள்.) கடிகைக்கு ஒருவினடியாக சுழிமுனையிலிருந்து நான்முப்பது
நாழிகைகளும் கோசமென்கிற அட்சரங்களைக்குறித்து முப்பாழும் நசிக்கும்
படி வெண்ணீருக எ-று. (௬௯௬)

பதினெண்பேர்களுஞ்சொன்ன பரிபாஷையுந்தோணுமல் விதி
யின்வசமதென்றுவெறுத்துமெய்க் ,ருகாணுர். பூசித்

(இ-ள்.) பதினெட்டுச் சித்தர்களுஞ்சொன்ன பரிபாஷைகளையுங்காணும
ல்விதிவசமோ என்றுவெறுத்து உண்மைஞானகுருவைக் காணமாட்டார்கள்'

விந்துநாதமேலுமேகங்கருவேசீலம், அந்தமாரியஞ்சூட்சமமுரி
புளியும்வாசம்சிவமுஞ்சத்தியுஞ்சேர்ந்துசெயநீர் தி:ாவகமாச்சு நவ
பாஷாணங்கள்நீறும் நவலோகங்கள்மாற்றேறும் பூசித்

(இ-ள்.) விந்துநாதங்களின்மேல் அந்தமாகிய மாரிச்சூட்சமான அமுரியு
ப்பு ', புளியுங்கலந்து சிவசத்திகள்போல சேர்ந்து திராவகமாச்சுது அதினுல்
நவபாஷாணங்களுந்நீறும் நவலோகங்களும் மாற்றுயரும் எ-று. (௰௧௮)

தேவியெனுமம்பிகை சீர்பொற்கமலநாடி, ஆடியெனுஞ்சுவாசம
ண்டம்பாயவுந்தேடி, ஊதுந்திருத்திவாசிஓசைமூலத்தில்பாய்ந்தால்
வாதமுன்னுக்குளெய்துமதியால்ரவியுந்தோற்றும் பூசித்

(இ-ள்.) உமாதேவி என்கிற அ:பிகையின் சீர்த்திவிளங்குகின்றதிருவடி
களை விரும்பி சுவாசமானது மும்மண்டலங்களிற்பாயும் வண்ணந்தேடி ஓசை
யானது மூலாதாரத்திற் பாய்ந்தால் மதியினுல் ரவியுங்காணப்படும் எ-று. ()

இருவினைகளுஞ்சுட்டு யிறப்பும்பிறப்பொழிந்து, கருவிதொண்
ணூற்றுறுங்கனலல்லவந்துநீராக, வாசியென்றபிராணையம் வாய்வை
க்கும்பித்துமூலம், நாசிவழிவாராமல்ராசயோகஞ் செய்தேன்காண்

(இ-ள்.) நல்வினை, தீவினைகள்என்கிறஇரண்டுவினைகளையுஞ்சுட்டுபிறவி
நீங்கிதொண்ணூற்றுற தத்துவங்களுந்நீருகபிராணயாமவாயுவைக்கும்பித்து
நாசிவழிபறியாமல் ராஜயோகஞ்செய்தேன் எ-று. (௲௨௰)

பஞ்சாக்ஷரமமுரிதஞ் சானதுங்கொண்டாடு, அஞ்சாமனும்வயி
ராக்கியமெண்சாண்தேகத்தைச்சுட்டு, முக்கோணகேசரிவாலைமுனை
யமிடைபின்கலை, அக்கோணைச்சுழிப்பிரகாசமாலையங் தனிலுங்கின்று.

(இ-ள்.) பஞ்சாட்சரங்களைக்கொண்டு எண்சாண்தேகத்தைசுட்டு சுழிமு
னைப்பி:காசத்தில் உயர்ந்திருந்து எ-று. (௲௨௧)

வஸ்துவென்றபானத்தைமருவிமாறவுந்தேகம், அஸ்திகள் தந்த
ங்கள்போலுமமிர்தசஞ்சீவியுண்டு, தன்னைத்தானுமறிந்துசடத்தைச்
சுத்திகள்செய்து, அன்னையம்பிகைபாதம்அவ்வும்உவ்வாலறிந்து. பூ

(இ-ள்.) வஸ்துவானபானத்தைச் சேர்ந்து தேகமானதுமாறவும் அமிர்த
சஞ்சீவியையுண்டு தன்னைத்தான் அறிந்து சடசுத்திசெய்து அம்பிகையின்பா
தங்களை அகர உகரங்களால் உணர்ந்து எ-று. (௲௨௨)

பூருவக்கியானகற்பத்தின்புகழையாரறிவார்காண், பேறுபெற
வும்பெற்றபிரபல்லியமீதாலும், தீக்ஷையென்றுவிரஞ்சுதெசதீக்ஷைக
ளுங்காட்டி, நீச்சனென்றபேர்போக்கி நிலைத்தேன்கருவூர்நாட்டில்.

(இ-ள்.) பூர்வக்கியானமுள்ளதை யாவர்அறிவார்கள்! பெற்றபிரபல்லிய
த்தாலும் பத்துதீட்சைகளையுங்காட்டி சீஷனென்கிறபேரைப் போக்கிக் கரு
வூர்நாட்டில் நிலைத்திருந்தேன் எ-று. (கஉச)

அஷ்டாக்ஷரமாவதுஅமுரிபுளியெனும்பேர், இஷ்டத்துடனுமு
ண்டெட்டெட்டுவித்தைகளாட,வங்குசிங்கென்றவெழுத்தைவாவென்
றழுத்திவாசி, யெங்கும்பிரகாசமாகஇருத்திக்கடிகைவரலாம், பூ

(இ-ள்.) எட்டெழுத்தென்பது அமுரி, புளிஎன்னும்பேராம் அவைகளை
இட்டமாகவுண்டு சுச-வித்தைகளாட வங் சிங் என்கிறஎழுத்தை வாவென்ற
ழுத்திவாசி ஊதிஎங்கும் விளங்கியிருக்க எ-று. (கஉரு)

ஆனைமும்மதங்கொண்டாலடக்கலாமோஅடக்க,வானஞ்சுருங்
கிவிடாதாதோனேதானுஞ்சுருங்கும் பொங்குங்கடல்சூழ் வாரிபொ
ழியப்பொழியபுவனம், எங்கும்பிரகாசமாகுமென்சாண் தேகந்தங்
கம் பூசித்

(இ-ள்.) ஆனையானது மும்மதங்களைக் கொண்டால் அடக்கலாகுமோ?
அப்படி அடக்கினுல் வானஞ்சுருங்காதோ? அமிர்தமானதுபொழியப்பொழிய
எண்சாண்உடம்பானது தங்கம்போன்றதாகும் எ-று. (கஉசு)

அக்கரைமீனைப்பிடித்துச் சக்கரையாகவடித்துச், சொக்கநாத
ரைத்துதித்துநக்கவுந் தேனைமத்தித்து, அஞ்சுமூன்று மிரண்டுமறிய
வாச்சுதுகற்பஞ்,செஞ்சடாதரர்மலஞ்சேவித்துசுழிமுனையை பூசித்

(இ-ள்.) அக்கரையிலுள்ள மீனைப்பிடித்துக்கொண்டுவந்து சர்க்கரையா
வடித்து சொக்கநாதரைத்துதிசெய்து அஞ்சுமூன்றுன எட்டையும் இரண்
டையும் உரைவாச்சுது எ-று. (கஉஎ)

விதியைவெல்லுமதியால்மதியைவெல்லுஞ்சுழியால், பதியைய
றியஞானவழியிதாண்டையே,மதியுன்னுக்குள்ளிருக்கும்வாரிசவாரி
மேலாய், விதியும்வாசிக்கப்போமேவிந்துநாதத்தின்கூறுல். பூசித்

(இ-ள்.) மதியினுல் விதியைவெல்லும், மதியைச்சுழியால்வெல்லும் இது
வே உபபஞானவழியாகும் மதியானது உனக்கு உள்ளாகவிருக்க விதியைவா
சிக்கலாகுமா எ-று. (கஉஅ)

மாய்கையற்று மூலமலமுஞ்சலங்கழிய, பயமதுவுங்கிலேசம்பா
ழாயிந்திரியமாண்டே, இந்தமதியைக்கண்டு வந்தவிதியைப்போக்கி
சொந்தமனையில்நின்று சுந்தரர்க்குமுரைத்தேன். பூசித்

(இ-ள்.) மாய்கையான தெர்ழிச்து மூலமலமுஞ்சலமும் சுழியகிலேசமா னதுபாழாம் இரதமதியைக்கண்டு உண்டானவிதியை போக்கடித்து சொந்த மனையிலிருந்து சுந்தரர்க்கு மூரைத்தேன் எ-று. (கஉக)

விருத்தம்.

பூதலத்தில்மகத்துகள்தான்பொறிபுலனும்வெளியில் விடாப்பூ சித்தார்காண்,வாதசித்திவரும்வாலால்மதிரவியைப்பணிந்துமிகமகி ழ்ந்ததாலும்,வேதமெனுஞ்சாரமுண்டுவிரும்பியுமாதருமேவிந்ததனை ப்போற்றி, பாதமடிமூலமெனும்பச்சையுவரகற்றி மிகபாலித்தாரே.

(இ-ள்.) உலகத்தில் பெரியோர்கள் பலன்களையடக்கிப்பூசித்தார்கள் வந் தசித்தியை யடைந்தார்கள் மதிரவியைப்பணிந்து மிகவும்சந்தோஷத்தாலும் வேதசாரத்தையுண்டு விந்தினைப்போற்றி பச்சையுவரினை அகற்றி எ-று.

கொச்சகம்.

காரமெனும்பூநீரு காயமதிலும்மிருக்க
சாரமதைக்கொண்டு சவுக்காரமதைக்கட்டறியார்
பூரமென்றால்காரமது பூநீரதுவும்புளிகாண்
வீரமென்றவிந்தமுரி வெளியில்வெடியுப்பறிந்தே.

(இ-ள்.) காரமென்கிற பூநீருனது இந்தச் சரீரத்திற்குள்ளிருக்க காரத் தைக்கொண்டு சவர்க்காரத்தைக் கூட்டறியார்கள் பூநீறென்பதே புளியாம் வீரமென்றவிந்தமுரியானது வெளியில்வந்தோம் எ-று. (கருக)

பிருதிவிநகாரமதாம் பிராணனுமகாரமப்பு
இருதயத்திலுமிருந்த இந்திரியமாமமுரி
அறியப்போமோவெளிகா ணம்புவியிலெங்குமுண்டு
சுருதிமுடிவானசுடர் சூக்ஷமறிந்தேமுடிப்பார்.

(இ-ள்.) பிருதிவி காரமாம், பிராணனும்அகாரம் இவையறியப் போகு மோ உலகத்தில் இவைஎவ்விடத்திலுமுண்டு இருதயத்திலும் இதை இந்திரி யத்திலும் வேதமுடிவனை சூட்சாசூட்சத்தை உணர்ந்து எ-று. (கருஉ)

கலித்துறை.

கலிகாலந்தன்னில் மாய்கைப்பெருங்குழி கடந்துமென்மேல்
நலியாதுதேகம் வலுவாகும்விந்து நாதமதாய்
சலியாதுகாய மழியாதுதேகஞ் சாவில்லைகாண்
மெலியாதுஉள்ளம் வாசியைவாவென்று விரும்பினனே.

(இ-ள்.) இக்கலியுகத்தில் மாயைக்குழியிலகப்பட்டு நலிராமல் விந்துபல ப்பட்டு காயமழியாமல் தேகஞ்சாவில்லை உள்ளம்மெலியாமல் வாசியைவாவெ ன்று இச்சைபட்டேன் எ-று. (கருங)

அப்புகொண்டாண்டு ஐயஞ்சுதிங்க ளானபின்பு
சுப்பிரமதாகுஞ் சுயம்பாகுந்தேகஞ் சுத்திசெய்தாம்
இப்புவிதாம்பிர மிருபத்தொருதிற மிகுபலங்கொண்
டுப்பறக்காய்ச்சி யுருக்கியப்பூவி னுடன்விடுமே

(இ-ள்.) சலத்தைக்கொண்டாண்டு இருபத்தைந்து திங்களானபிறகுசுப்பிரமயமாகியசுயம்பாகும் தேகத்தைச் சுத்திசெய்தால் அப்பினுடன் விடும்.

வெண்பா.

இப்பரிட்சைகாண எளிதல்லதேகம்
அப்பதுநீர்கத்தி யானதால்-இப்புவியில்
சுத்தசலமான சுயம்பதுசெம்பாகும்
உற்றவிதிசுத்தியறிந் தூட்டே.

(இ-ள்.) இந்தப்பரீட்சையைக் காண எளிதல்ல, அப்பினீர் சுத்தியானதால் இங்குசுத்தசலமான சுயம்புசெம்பாம் ஆகையால் அற்றுப்போன சுத்தவிதியையறிந்து ஊட்டுவாய் எ-று. (௧௩௫)

அம்புவியில்செம்புகளிம் பற்றுவிடும்மூறலறும்
நம்புவதாரப்புவியினால் யானறிந்து-அம்புவியில்
தன்தேகமூறல்விட தாம்பிரமுமூறலறும்
தென்பொதிகைநாயனருள் சீர்.

(இ-ள்.) உலகத்தில் செம்பானது களிம்பற்றுவிடும் அதனால் ஊறலற்றுவிடும் நம்புவதார் இதைதன்தேகவூறலறுமிடத்து தாம்பிரத்தின் ஊறலுமற்றுவிடும் இது அகத்தியனருளினதாம் எ-று. (௧௩௬)

ஆனந்தக்களிப்பு.

தனனத்தனனதந்தனனா-தான-தனனத்தனனதந்தனதந்தனனா.

மூலாதாரச்சுழிமுனையில்-வாலை-மும்மதவாரிமுச்சுடரினின்றிலகும், ஆலகாலவிடமுண்ட-அரசன்-பாதத்தைநம்பினேன் அம்பிகைபாதம்,பாலன்கணபதிகந்தன்-கமலபாதபங்கயத்தை யான்பணிந்துமேதொழுதேன். தூலவுடலகூக்ஷதேகம்செடஞ்- சுத்தியோராண்டினில்சுகாதீதமாண்டே. தனன

(இ-ள்.) மூலாதாரமென்னுஞ் சுழிமுனையின்கண் வாலாம்பிகை பரமேஸ்வரன் இவர்களுடைய திருவடிகளைவணங்கி சரீரம் ஒருவருஷத்தில் சித்தியாதற்பொருட்டு துதித்தேன் எ-று. (௧௩௭)

கட்டுப்படாதுசெம்பதுகாண்-மூல-காரத்தினால்கரு சேர்ந்தல்லோகட்டும்,வட்டுபோலிறுகியும்வழுவாஞ் - சோதி-வஸ்துவென்ன

சிமயமதுஞ்சேர்ந்தால், எட்டிரண்டும் பத்துவயதாம்-அது -இங்கித நாதச்சுரோணிதத்தாலும், பட்டுவிடுஞ்சரக்கதீதம்-நவ -பாஷாணமுதற்கொண்டுபரிசவேதியதாம். தனன

(இ-ள்.) செம்பு மூலகாரத்தினால் சேர்ந்தல்லவோகட்டும் இறகியும்வலிவாகும், எட்டும்இரண்டும் அறியாமல் பத்துவயதாய் நாதசுக்கிலங்களால் நவபாஷாணமுதல் பரிசனவேதியாகும் எ-று. (௧௩௮)

நமசிவாயமென்றதஞ்சுவிந்து-நாத மூன்றெழுத்தையுங்கிலியும் ஓம்சவ்வு, அமிர்தங்கொண்டுவாசி-ஊது-அடங்காதுஅம்உம்மென்று அக்ஷரம்ரெண்டு,சமரசமாகும்பத்தெழுத்துங்-குரு - சாமிகடாட்சத்தால்சாதித்தேன்காணும், ஏமலபியுகற்றுமிவ்வெழுத்து- எந்தன்-ஆசான்சொல்லவுமினியான் கண்டேனண்டே. தனன

(இ-ள்.) பஞ்சாட்சரங்களும், ஐயும், கிலியும், ஓவ்வும், சவ்வும்உச்சரித்து அமிர்தத்தைக்கொண்டு ஏமலபியை யகற்றி என்னுடைய ஆசான்சொன்னது இம்மந்திரமாம் எ-று. (௧௩௯)

பத்தெழுத்தும்பரியேமம்-சித்தர்-பதினெண்பேர்பாதபொற்கமலமும்யோற்றி, வித்தில்லாப்பூமியுமுண்டோ-விந்து- நாதமில்லாவிடில்வாசியுமுண்டோ,சித்தில்லாச்செந்துகளுண்டோ-சிவ-னில்லாவிடில்தேவர்களுமுண்டோ, கர்த்தனிவராச்சுதாண்டே-கதிர்மதியுமிவர்க்கேவல்காணலாச்சுதுகாண். தனன

(இ-ள்.) பதினெண்பேர் சித்தர்கள் பதங்களைப்போற்றி சிவனில்லாவிட்டால் தேவர்களில்லை ஆகையால் சந்திரசூரியர்கள் அச்சிவனுக்கு ஏவலாளர்களாவார்கள் எ-று. (௧௪௦)

முப்பூவுமூன்றல்லோகாணும் - மூல - வாசிசேரவுநாலுமுடிவல்லோதோணும், அப்பும்உப்பும்வெடியுப்பும்-அச-வானதும்வாய்மறந்துசெப்பார்,இப்பொருள்கண்டுணர்ந்தேன்காண்-எவரும்-இந்நூல்போலொருநூலுமியம்புவாரெவர்காண்,செப்பார்கள் சிவஞானமூலன்-திரு-வள்ளுவனையந்து தெளிந்தயிம்மூலன். தனன

(இ-ள்.) மூலவாசியைநான் சேர முடிவல்லவாகாணும், அப்பும், உப்பும், வெடிஉப்பும்ஆன வாயுவையறிந்தவர்கள் சொல்லார்கள் நான் கண்டுணர்ந்தபடியே சொல்லுகிறேன் எ-று. (௧௪௧)

மதியைக்கொண்டுதேகஞ்சுத்தி-முன்னாள்-வரும் வழலைகளெல்லாமண்ணென்றுங்கொற்றி,நதியைவிட்டுசேடையாக்கி- வழலை-நாலுக்குநாள்வரும் நரகத்தைப்போக்கி, விதியிந்தமலக்கூடு-முன்னாள்வினையிருந்தால்சலநீர்கொண்டுசாடு, சதியனந்தகாமவீடு-ஆண்டு சாரத்தையுண்டு சாதித்துயேதேடு. தனன

(இ-ள்.) சந்திரபானத்தைக்கொண்டு சரீரஞ்சுத்தியாச்சுது வழலைகளெல்லாம் மண்ணென்றுகொற்றி நதியைவிட்டுச் சேடையாக்கி வழலைகளுக்கு நான்வரும் நகரத்தைவிட்டு நீர்கொண்கோமநீட்டி லாண்டுவரைக்கும் சரீரத்தையுண்டு சாதித்தேன் எ-று. (கசஉ)

அலைகடலாவதுசமுத்திரம்-அலை-கடலையுண்டு கலக்கியகற்றிடுமுபத்திரம்,மலசலப்பெருமையைப்போக்கும்-அந்த-வாருதிசலத்திலுல்வழலையைவிலக்கும், பலபலகஸ்திகள்தோன்றும்-பாண்டம்பழமலம்போக்கினுல்பரிட்சைபார்கண்டும், உலைவாயின் மெழுகதுபோலாம்-மனம்-ஒருமித்துஜடசுத்திநிலைகொள்ளாமேலாம். தனன

(இ-ள்.) அலைகளையுடைய கடலானது சமுத்திரமாகும் அக்கடல் நீராபிரண்டு கலக்கியொழிக்கின்ற உபத்திரவமாகிய மலசலப்பெருமையை போக்கும் அந்தநீரால் வழலையை விலக்கலாம் அதினுல்பலபலகஷ்டங்களுண்டாம் உலைவாயில் மெழுகதுபோலவும் ஒருமித்து சடசுத்தியானது நிலைக்க எ-று.

கர்மசாகரமலக்கூட்டை-தந்தை-கட்டினுன் மாய்கைப்பெண்கருவியால்வீட்டை,வர்மமில்லாக்கருநாடு-திரு-வள்ளுவன்செய்கையால்வச்சிரவீடு, பிர்மாதிகற்பத்தையுண்டு-அமிர்த-பேரின்பநதிசுத்தப்பிராணுயங்கண்டு,நிர்மித்தேனகத்தியன்வரத்தால்-நெறி-தவருதெனுஞானவெட்டின் கருத்தால். தனன

(இ-ள்.) காமக்கடலாகிய மலக்கூண்டை மாய்கையாகிய பெண்கருவியினுல் வர்மமில்லாக் கருநாட்டில் திருவள்ளுவன் செய்கையால் பிரமாதிகற்பத்தையுண்டு பிராணுயாமத்தைக்கண்டு நெறிதவருமல் ஞானவெட்டியான் கருத்தால் எ-று- (கசச)

விருத்தம்.

இந்திரனதியுண்டுரவிமலத்தைப்போக்கியிருந்த கர்மக்கசடதனை எல்லாநீக்கி, தொந்தமெனும்தேகசித்தி சுயமாய்ச்செய்து சுகதுக்கமிருவினையைத்துலைத்துமேவி, அந்தஓராண்டுசென்றெடுத்துக் காலை அமிர்தநதிசுத்தசலமறிந்துசாரம்,தந்தைவிதிமுந்திமுன்னுளமைத்தகூறைத்தானவனுயகற்றியருள் சமைந்தவாறே.

(இ-ள்.) இந்திரநதி தீர்த்தத்தைப்புசித்து ரவியில்மலத்தைப்போக்கிகாமக்குற்றங்களையெல்லாம் ஒழித்து தேகசத்தியைச்செய்து இருவினைகளை பிறந்தொலைத்து ஒருவருஷம்கழித்து சுத்தசலத்தையுணர்ந்து முன்கர்மம்ஒழித்து

கொச்சகம்.

சுத்திமுறையானவிதஞ் சொன்னேன்பெருநூலிதனில்
அத்திமுதலெறும்புகடை அமைத்தவாலாறுகளை
சித்தியிந்தநூதனில் சென்றுஓராண்டுபின்பு
வெத்திபெனுமாண்டதுபோல் வெண்மதியால்கண்டேனே.

(இ-ள்.) பெருநூலிற்சொன்ன சத்திமுறையைச்சொன்னேன் யானைமுதல்எறும்புவரைக்கும்உள்ளபடைத்த வரலாற்றை இந்நூலில்கண்டேன் எ-று.

காலைமுதலுண்டமுரி கற்பங்கதிருச்சமும்போய்
மாலைரவிசாய்ந்துகனல் மாறினதால்காலையினில்
சூலதுகாணுவதென்ன சுரோணிதமலப்புளியில்
ஆலவிடமூட்டியவின் னருணனுதயத்திலவைத்தே.

(இ-ள்.) காலையில்முதலிய அமுரிஉண்டு உச்சியிற்கற்பஞ்சாதித்தல் வேண்டும் சூலது என்னவென்றால் சுரோணிதமலப்புளியில் ஆலத்தைச்செலுத்தினபிறகே அருணோதயத்தில் எ-று. (௱௪௭)

கதிருதையமுன்புவரும் காலைதனிலிவ்விதஞ்செய்
மதியுணர்ந்துபின்புவரு மாலைப்புளியுண்பிராய்
விதிமெழுகுபோல்வருதல் வேளை புன்னைக்காயளவு
அதிவிதமாய்நாளுக்குநா னதனஞ்சுண்டைக்காயளவே.

(இ-ள்.) சூரியோதயம் முன்னேவருங்காலத்தில் இப்படிசெய் மதிவரும் காலத்தில் புளியுண்ணுவீர் வேளைக்குபுன்னைக்காயளவாக நாளுக்கு அஞ்சுண்டை உண்ணவேண்டும் எ-று. (௱௪௮)

கலித்துறை.

மூவாண்டில்மூலப் புளிவிந்துஞ்சேர்ந்து முடிக்கும்விதம்
துவாதசாந்த வெளியறியாமல் சொக்கினர்காண்
சாவேதுஞான மெய்ஞ்ஞானவெட்டிச் சார்வறிந்தால்
தாவேதுசார மாயிரத்தைந்நூறின் சத்தியமே.

(இ-ள்.) மூன்றுவருஷத்தில் மூலப்புளியும், விந்துவும், சேர்ந்துமுடிக்கின்றவகையாவது துவாதசாந்தவெளியை யுணராமல் சொக்கினவர்க ளாவார்கள் ஞானவெட்டியின் வழியையறிந்தால் சாவில்லை இதுசத்தியம் எ-று. ()

சத்திக்குள்விந்து சாரமுள்பாய்ந்து சத்தியும்விந்
துத்தமனுச்செனித் திடும்பிள்ளை யுவரதுபொய்
பத்தியசுன்னம் பசைந்தமண் தண்ணீர் பாய்ந்திடுநாள்
உத்தியசெம்பு உருக்கியன்னீரினி லூட்டிடுமே.

(இ-ள்.) சத்திக்குள்ளாக விந்துவானது சாரமுள்ளேபாய்ந்து சத்தியையும் விந்துத்தமனுய்ப்பிறக்கும் தண்ணீர்ப் பாய்கின்றநாளில் செம்பையுருக்கி அந்நீரிலூட்டுவாய் எ-று. (௧௫௦)

வெண்பா.

உருக்கியீரேழுவிசை யுனீரில்சாய்த்திடவும்
சுருக்கிமணியதுவாஞ் சொன்னோ-உருக்கிவிட

சழிம்பதுவுமூறலிலாக் காரமெனுஞ்சாரமதால்
அழும்புவருகாதிடி னு மாண்டே.

(இ-ள்.) அவ்வாறுஉருக்கி ஏழுவுசைசாய்க்கவும் அதுஒருமணியா கும்சொன்னோம் களிம்பும் காரத்தாலறும் எ-று. (கூருச)

அயமுதலுநாக மதிதசருவங்கம்
சுயமதுகாண்வேணவங்கஞ் சுத்தி-அயமதுகேள்
வங்கமிருநாகம் வருதல்பதினைந்திறங்
குங்கிமணியாகுமதின் கூறு.

(இ-ள்.) அயம், நாகம், வங்கம், சுத்திசெய்து பதினைந்துதாம் உருக்க மணியாகும் எ-று. (கூருஉ)

மலைப்புளியும்வாரி வருமுத்தநாளில்
உலையதனில்விந்துஅய மூதினல்-மலைப்புளிநீர்
காய்ச்சியநூறு காரமெனுஞ்சாரமதில்
தோச்சுவிடுவீரெனச் சொல்.

(இ-ள்.) பூநீற்றை நல்லநாளில் வாருக்கொண்டுவந்து உலையில் வைத்து ஊதினல் காரமாய் நிற்கும் எ-று. (கூருக)

மூசையதிலிட்டு மூடிமண்சீலைகனம்
ஓசையிடுங்காண் துருத்தி யூதினல்-மூசையினில்
உருகிமணியாடு மூலரசத்தினலும்
சுருகியயச்செம்பதுவாஞ் சொல்.

(இ-ள்.) அதைமூசையிலிட்டுமூடி மண்சீலைசெய்துதுருத்தியினல் ஊதினல்உருகிமணியாகும் குங்குமப்பூவர்னம்வரும் ஊதினல் மாற்றேழாம் எ-று

இருவங்கநாக மிரும்பதுவுஞ்செம்பு
மருவுபணவிடைக்கு வாங்கு-முருகவுமே
குகையிலிட்டுஊதக் குங்குமப்பூவர்னம்
மெழுகதுவா மூதிடுமாற் றேழு.

(இ-ள்.) வெள்வங்கம், கருவங்கம், நாகம், இரும்பு, செம்பு வகைக்குப் பணவெடை சேர்க்கவேண்டும் எ-று. (கூருரு)

வேறு-விருத்தம்.

குருமுனியால்மாற்றேழு வருதலதுகுணங்குறியாய் குறித்துப் பார்த்தேன், கருவுருவாயருளியதோராயிரத்து ஐந்நூறின்கருவலவயாய்ந்து, அருவுருவாய்குருவினுட அனுக்கிரகமெனக்சுளித்த அருளினலும், சுருபநிலைகூக்ஷமெல்லாஞ்சோதித்துப்பார்த்தவர்கள்சொர்க்கஞ்சேர்வாம்.

(இ-ள்.) குருமுனியினால் மாற்றேழுவருவதைக்குறித்துப்பார்த்தேன் ஆயிரத்தைந்நூற்றில்அருவாயும், உருவாயும்,குருவனுக்கிரகத்தாலு ,சொருபநிலையின் சூட்சங்களையெல்லாம் சோதித்துப்பார்த்தார்கள் சொர்க்கம்புகுவார்கள்

வேறு-கவி.

விந்துநாதம் விதித்தஅவ்வாழினால், அந்தகார மதுவெளியாச்சுது, சுந்தரக்கருசொன்னார்பேதாபேதம், வந்துதாண்டே வழலைப்பிரகாசமே.

(இ-ள்.) விந்து, நாதங்களை உண்டாக்கினவிதத்தினால் அந்தகாரமானது வெளியாய்விட்டது. பேதாபேதங்களாகிய கருவைச்சொன்னார்கள் அதுவே வழலையின் விளக்கமாம் எ-று. (௩௫௭)

காரசாரங்கதிர்மதிவாழ்க்கையால், வாருதிவரமாவெளிப்படும்சாரங்கொண்டு சரமாறியேற்றினால், தேறலாந்தசு தீட்சையிதாச்சுதே.

(இ-ள்.) காரசாரங்களாகிய கதிர்மதிகளின் வாழ்வினால், காற்றுவரும் விதம் வெளிப்படும் காரத்தைக்கொண்டு சரத்தைமாறி எற்றினால் தசதீட்சையினால்தேறலாம் எ-று. (௩௫௮)

பூதலம்புகழ் பூரணசற்குரு, நாதவிந்துநடத்தையையோதினால் வாதஞான வழலைப்பெருமையை, மாதுவாலை வசனமிதாகுமே.

(இ-ள்.) உலகத்தார் புகழ்கின்ற பரிபூரணமானஞான குருவானவர்நாதவிந்துக்களின் செய்கையைச்சொன்னால் வழலையின் பெருமையைச் சொன்னதாகும் எ-று. (௩௫௯)

அந்தவானமளாவியமாமலை, யெந்தனாசானியம்பினாராதலால், வந்துகாக்ஷிமகிழ்ந்துஅகத்தியன், விந்துநாதம விளங்கினாராண்டையே.

(இ-ள்.) அந்தஆகாசத்தை அளாவியமாமலையில் என்னுடைய ஆசானானவர்சொன்னார் ஆதலால் அவருடைய காட்சியைச்சந்தோஷித்துஅகஸ்தியனார் விந்துநாதத்தில் விளங்கினார் எ-று. (௩௬0)

பூரசுன்ன பூனீர்புளிநாதமாம், வீரம்விந்து வெள்ளைக்கல்லுப்பதாம், காரசாரங் கதிர்மதிரெண்டினால், தேறுஞானச் சிவபண்டிதர்களே

(இ-ள்) பூரசுண்ணமாவது பூநீறும்புளியும், நாதமுமாம், வீரமாவது விந்துவும், வெள்ளையும்கல்லுப்புமாம் காரசாரம், சூரியசந்திரர்கள் இவ்விரண்டினால் சிவஞானத்தேர்ச்சியாய்ப் பண்டிதர்களாவார்கள் எ-று. (௩௬௧)

அப்புப்உப்பும் அமுரிமூலப்புளி, உப்புமப்பு முன்னுக்குளதிர்தபின், கைப்பும்உப்புக் கவிழுறிந்திடில், முப்புசுன்னமுடிந்தது ஆண்டையே.

(இ-ள்.) அப்பு, உப்பு, அமுரி, மூவப்புளி, ஆகையால் இவைகளை உணர்ந்துகைப்பும்உப்பும் கசிவற்றவிட்டால் முப்புச்சுண்ணம்முடிந்ததர்கும் எ-று.

சிவமுஞ்சத்தி சிவத்திலிருப்பதாம், கவனம்வேணுங்கனகமுன்னுக்குள்தான், மவுனவாலைமதிகொண்டுவூட்டினுல், கவனமேதுசாரத்தினுல்கட்டுமே.

(இ-ள்.) சிவமுஞ்சத்தியும் சிவத்தில் இருப்பதாகும் கவனம்வேண்டியகாலத்தில் கனகம்உன்னுக்குள்ளாகும், மௌனமாகியவாலையைமதியமிர்தத்தைக்கொண்டு ஊட்டினுல் கவனமணி சாரத்தால்கட்டும் எ-று. (௧௬௩)

சாரமாண்டு சரமாரியேற்றினுல், காரஞ்சத்தியுங் கைவசமாகிடில், தேறினுன் திருவள்ளுவனிவ்விதம், ஏறலாகு மிருவினையில்லையே.

(இ-ள்.) சாரத்தைஉண்டு சரத்தைமாறி எற்றினுல் காரமுஞ்சத்தியுங்கைவசமாகும், அகையால் இருவினையுமில்லையாகும் எ று. (௧௬௪)

விந்துநீரும் விளங்கியபானமும், அந்தநீரும் அமுரியுண்டாண்டுகாண், இந்தப்பாதை யிரவிதினந்தினம், வந்தவாழ்க்கை மருவிசாதித்தெனே.

(இ-ள்.) விந்துநீர்விளங்குகின்ற பானமும், அந்தநீர் அமுரியுண்டுஆண்டுவருவார்கள் இந்தவழியில் சூரியனுனவன் தினந்தினமும்வந்தவாழ்விற்பொரிந்தி எதையுஞ்சாதித்தேன் எ-று. (௧௬௫)

மாயாசத்தி மலப்புளிவந்தவா ருயுநூல்க ளனேகம்விதித்தனர் ஒயும்நாய்போ லுழன்றலைவார்கள்தம், மாய்வதில்லை மகத்துகளாண்டையே.

(இ-ள்). மாயாசத்தியானமலப்புளி வந்தவிதத்தை ஆயுள்வேதத்தில் அனேகமாகச்சொன்னுர்கள் திரியும் நாயைப்போல் உழன்று அலைவார்கள்சிலர் உண்மையை உணர்ந்தவர்கள் மாய்வதில்லை எ-று. (௧௬௬)

மானமூமபி மானிகள்வாறுகாண், சோனைபாயுஞ் சுகாதிதசுக்கிலம், வீணுரைத்துவீடுகிறீர்பானநீர், தேனையுண்டுதெளிந்தனராண்டையே.

(இ-ள்.) மானமாவது, அவமானமுள்ளவர்களுக் கேயாம் சோனைமழைபோல்பாய்கின்ற சுகாதிதசுக்கிலத்தைவீணுக எடுத்துப்பேசுகிறீர் அறிவாளர்கள் பேரின்பத்தேனையுண்டு தெளிந்தார்கள் எ-று. (௧௬௭)

உண்டநீரு உன்னுக்குள்ளேபாய்ந்திடில், சண்டனில்லை - சாக்காடெய்வதில்லைகாண், அண்டர்கோனத்திசர்தெரிசனங்கண்டபோதுகலிவாராதாண்டையே.

(இ-ள்.) உண்டநீரானது உனக்குள் பாயுமானுல் எமனுமில்லை.மரணமும் வராது அகத்திசனுடைய தெரிசனத்தைக் கண்டபோதே கலிவாராதாகும்.

சார்மதிகதிர்சோதிவிளங்கிய, சீர்புகழ்திருவள்ளுவனேதினன் பார்விளங்கிய பாடல்மூவைந்நூறு, பேர்வளம்பெரியோரறிவார்களே.

(இ-ள்.) மதிப்பிரகாசம் போன்ற ஒளிவிளங்கின திருவள்ளுவன் சொன்னான் இந்தஆயிரத்தைஞ்ஞூறு இதைப்பெரியோர்களாயுள்ளவர்கள் உணர்வார்கள் எ-று. (௯௯௯)

ஞானவெட்டிநன்னூல்பதினைந்துநூறு, தேனெனுமொழிசெப்பியவாறினால், வானஞ்சூழ்கடல்வாரிப்பொழியவும், மோனஞானமொழியைக்கௌண்டையே.

(இ-ள்.) ஞானவெட்டியின் ஆயிரத்தைந்நூறு பாடல்களைக் கொண்ட இந்தநூலானது பெரியோர் இன்பமாய்ச்சொன்னதினால் அதின்மௌனஞானவிதிலையைக்கேட்பாய் எ-று. (௧௦௦௦)

வேதஞானவிளங்குமகத்துகள், பாதபங்கயப்பன்மலர்சூடயான், வாதபண்டிதமாமுனிவாறினால், சூதவாலைச்சுழிமுனைகாணுமே.

(இ-ள்.) வேதஞானத்தில் விளங்குகின்ற மகான்களின் திருவடிகளை வணங்கச் சுழிமுனையானது தோன்றும் எ-று. (௲௧)

பஞ்சரத்தினம்பன்மலர்சூடியான், நெஞ்சறிந்துநிகழ்த்தவெள்ளேட்டினில், செஞ்சடாதரதெய்வசிகாமணி,கஞ்சமலர்க்கண்டபேர்சொல்வாரரோ.

(இ-ள்.) பஞ்சரத்தினமான பலவகைப்பட்ட மலர்களைத்தரித்துமனமறிந்துசொல்ல, வல்லவர் ஈஸ்வரதரிசனை செய்தவர்களாவார்கள் எ-று. (௲௨)

பதினெண்பேர்கள் பரிபாஷையாய்ந்தியான்,விதியறிந்துவிளங்கும்ரகசியம், மதிரவிமலர்வாரிச்சொரிபடம்கெதியறிந்துகிருபைக்கடல்மூழ்கினோர்.

(இ-ள்.) பதினெண்சித்தர்களின் பரிபாஷைகளையுணர்ந்துவிதியையுணரும் ரகசியத்தை கிருபாசமுத்திரத்தில் மூழ்கினவர்கள் உணர்வார்கள்எ-று.

தத்துவந்தொண்ணூற்றாறுஞ்சுடாவிடில், கற்றுஞானக்கருவறியார்கள்காண், பெற்றும்பேறுபிறப்பொழியாமலும், சித்துமாய்கையில் தேகமழிவதே.

(இ-ள்.) தொண்ணூற்றாறுதத்துவங்களையுஞ் சுடாவிட்டால் ஞானக்கருவை உணரார்கள் பேறுபெற்றும் பெறுமலும் பிறப்பொழியாமலும், சித்தின் மாயையினால் தேகம் அழிவதேயாம் எ-று. (௲௪)

சுத்தஞான சுகாதீதமென்பது, வித்துபானம் விளைவினுதிப்பதாம், வத்தர்சுத்தர்பண்பேர்பதினெட்டுபேர், கர்த்தனுங்கருவாய்செனித்தார்களே.

(இ-ள்.) சுத்தமாகிய ஞானசுகாதீதம் என்பது வித்துபனத்தில் உதிப்பதாகும், பத்தர்கள், சித்தர்கள் பதினெட்டுப்பேர்கள்கருவாகப்பிறந்தவர்களாவார்கள் எ-று. (௧எ௫)

கொச்சகம்.

கருணையானந்தசிவ காமியருள்பாதமலர்
திருவடியும்போற்றிசெய்து செங்கமலமேவிவளர்
குருமுனியால்தீட்சைபத்துங் கோணமல்கூர்ந்துமிக
அருள்புரிந்துகாயசித்தி யனுக்கிரகம்பெற்றேனே.

(இ-ள்.) கருணானந்த சிவகாமியின் திருவடிகளைவணங்கி குருமுனியால் தீட்சைகள் செய்துகொண்டு காயசித்தி அனுக்கிரகம் பெற்றுக்கொண்டேன்

கண்டுகளிகூர்ந்துகுரு காரணத்தால்சித்திபெற
அண்டக்கல்லுப்பதனை யானறிந்தேனுதியுப்பை
விண்டுவிடும்ஞானவெட்டி மெய்ப்பொருளையானுரைக்க
எண்டிசையினல்லோர்க ளிப்பொருளைக்காண்கிலரே.

(இ-ள்.) கண்டுசந்தோஷித்து குருவின் காரணத்தால் சித்தியடைந்த அண்டக்கல்லான உப்பைநான் அறிந்தேன் ஞானவெட்டியான் உண்மைம் பொருளை நான்சொல்ல எண்டிசையிலுள்ளவர்கள் இதை உணரார்கள் எ-று.

வெண்பா.

ஆனைக்கல்லாரறிவ ரம்புவியிலும்மனிதர்
சோனகரால்வந்தவித சொர்னஉப்பை-யானைக்கல்
பானமென்றநீரமுரி பாண்டமதிலும்படினால்
தானதைகொண்டேகடலைத் தாக்கு.

(இ-ள்.) உலகத்தின்கண்யானைக்கல்லை யாவரறிவார்கள்? சோனகரால் வந்த சொர்ணஉப்பை அதில்ஒருபடி பாண்டத்திலிட்டு அமுரிகால்படியூற்றுவாய் எ-று. (௧எ௮

கொச்சகம்.

இவ்விதம்பிராணமது வேயிடித்துஇப்படிதான்
அவ்விதநால்நீர்படிக்கு ஆனதுக்கல்லோர்படிதான்
கவ்வியபூனீரதுகேள் கானகத்திலும்விளையும்
எவ்விதமென்றேயறிய இன்னீரில்தாக்கிடுமே.

(இ-ள்.) இந்த அளவிலேயே ஒருபடியுப்பிட்டு பிறகு காட்டில் விளையும் பூநீறையும் அதில்போடுவாய் எ-று. (௧எ௯

கலித்துறை.

அருள்மேவிக்கல்லு ஆனைக்கல்லுப்பு ஆதியுப்பு
திருமேவிபவன்னி செங்கனலூட்டித் திருத்தமதாய்

உருநேச்சுத்தி யுடன்சுண்டக்காச்சி யுற்பவமாய்
பருவப்பதங்கொண்டு பானநீர்விட்டு பகர்ந்தலம்பே.

(இ-ள்.) ஆனைக்கல்உப்பு ஆதியுப்பாம் வன்னியானசொல்கனவிலேயூட்டி திருத்தமாய் சுண்டக்காய்ச்சிபருவத்தைக்கண்டுபானநீரைவிட்டுஅலம்புவாய்

அனலுக்குநீருக்கு மசையாதுகல்லுப் பதையெடுற்து
முனைமேவியகுளி கல்வத்திலிட்டு முகுளிதமாய்
வினையேகுமண்ட வெண்கருவிட்டு வெகுண்டொருநாள்
இணையாட்டிமைப்பதமெழுபோல் வருஞ்செய்கையியம்புவனே

(இ-ள்.) கல்லுப்பானது, அனலுக்கும், நீருக்கும் அசையாததாம் அதை எடுத்துக்கல்வத்திலிட்டு அண்டவெண்கருவை இட்டுவெகுண்டு ஒருநாள்மெழுகுபோல்வருஞ் செய்கையைச் சொல்லுவேன் எ-று. (௲௮௧)

அலைமோதியமேரு வுறையாகச்சேர்ந்து அருணன்பட
மலைமேவியப்பு கிலவிந்துவீசி வாருதியால்
கலையாமீரெட்டு சலநீருங்கட்டிக் கல்லுப்பதாய்
விலைமேவிசோனகர் பெரியோர்கள்வாங்கும் விற்பனையே

(இ-ள்.) அலையால்மோதப்பட்ட மேருவில்சேர்ந்து அருணனனசூரியன் தாக்க மலையிலிருந்த இந்துவானசந்திரகிரணம்வீசிக் கடலில் பதினாறுகலைகளின்சலமும் நீருங்கூட்டிக் கல்லுப்பாய் விற்பனையாம் எ-று. (௲௮௨)

இந்திரனுப்பு இதுமெழுகாட்டி யிரவிதனில்
சந்திரனுப்பைச் சதுர்பில்லைதட்டிடை தானதுகொண்
டந்திரனுப்பு அதுசரக்காக அருணனதில்
பந்தனஞ்செய்து பரிவாகவட்டிப் பகர்ந்திடுமே.

(இ-ள்.)இந்திரனுனஉப்பு இதுமெழுகையாட்டிச் சூரியனில், சந்திரன் உப்பைச் சதுர்பில்லைதட்டடைகொண்டு அந்திரஉப்பைச்சரக்காக அருணனில் மர்த்தனஞ்செய்து பரிவாக அரைத்துச்சேர்ப்பாய் எ-று. (௲௮௩)

கதிர்முகநாடி மேல்வட்டமூடி கருணைபெற
மதிசிலையேழு மண்செய்துவாலை வன்னிமுகம்
அதிவிதமாக முயன்றெடுத்தூதி அதையெடுத்து
நதிமேவுஞ்சந்திர பனிசுத்தநீரில் நாடிடுமே.

(இ-ள்.) சூரியவட்டத்தை விரும்பி மேல்வட்டத்தைமூடிக்கருணைபெற சீலைமண் ஏழுசெய்து, வாலையிலிட்டு அடுப்பிலிட்டு ஊதிசுத்தநீரில் நாடும்.

வெண்பா.

பனிவீசுமாகி தனிபங்குனியிலும் மிறங்கும்
தனியாகச்சுத்த சலந்தான்பிடித்து-பனியதுநீர்

வெண்ணிறமாய்நின்றதொரு மேதினிபிங்கானதிலும்
நன்பெறவுஞ்சுத்தசல நாட்டு.

(இ-ள்.) மாசியிலும் பங்குனியிலும் சுத்தசலத்தைப்பிடித்து ஒருபீங்கானில்வை எ-று. (௧௮௫)

இந்திரன்தன்விந்தி லிட்டிடுங்கற்சுண்ணமது
வெந்தசுன்னக்கல்லிரைந்து வேகுமே-இந்திரநீர்
பட்டுவிடுமேகரைந்து பாறையுப்பூன்றதனல்
இட்டிடுமஞ்சுன்னத்தி லெய்தும்.

(இ-ள்,) இந்திரனுடைய இந்திரகற்சுண்ணத்தை இட்டால் கற்சுண்ணமானது இரைந்துவேகும் இவ்வாறு அஞ்சுதினமானபின் நீறும் எ-று. ()

நீரதுமேலும்படியும் நேர்மைநிலவுப்பதுவாய்
பாரதின்மேல்கத்திகொண்டு பாய்ச்சினல்-நீரதின்மேல்
கண்டனைக்கீறிவிட கல்லுப்புமேல்படியும்
மண்டலத்தில்பாறையுப்பா மறி.

(இ-ள்.) மேலும், கீழும் உள்ளநிலஉப்பாய்பாய்ச்சினல்,கல்லுப்பின்மேல் படியும், ஒருமண்டலத்தில் பாறையுப்பாகும் எ-று. (௧௮௭)

விருத்தம்.

மண்டலந்தான்கழிந்தபின்எடுத்துப்பீங்கான்வாருதியென்றதிற் சுன்னகல்லுப்பாகும்,கண்டஉப்புஇவ்வளவும்பாரையுப்பாம்கல்லுப்பு இதையறியார்கண்கெட்டுதிசென்றுட்டமாய் சிலபேர்நாய்போல் சுற்றி செகமெலாமலைந்தலைந்துத்தியங்கினர்கள், குண்டலியின்கமல மலர்தொழுதுபோற்றி குறுமுனியினருள்தெளிந்துகூறுவேனே.

(இ-ள்.) இவ்வாறு ஒருமண்டலஞ்சென்றபிறகுபீங்கானில்வைக்கச்சுண்ணமாகும் இவ்வளவும்பாறைஉப்பாம், இதையுணர்ந்தவர்கள் கண்கெட்டுநாய்போல்சுற்றி உலகமெல்லாம் அலைந்துஅலைந்துதியங்கினர்கள், குண்டலியின் கமலமலரை வணங்கித்துதிசெய்து குறுமுனியின் அருளால்தெளிந்து கூறுவேன் எ-று. (௧௮௮)

அந்தபரிபூரணமாய்விளங்குஞ்சோதி அகண்டபரிபூரணத்தினருளைப்போற்றி, சுந்தரமாயெனையீன்றமாதுவாலைச்சுகாதீதமென்னுளும்மடிதொழுதுபோற்றி, யிந்தவிதிவிட்டகுறையெய்துமாகில் விந்துவிட்டோனவர்பதத்தில்மிகவும்போற்றி,சிந்தையெனுமனம்புத்திசித்தமூன்றும் சிறந்ததிதஆங்காரநாலும்போச்சே.

(இ-ள்.) அப்படிபரிபூரணமாய் விளங்குகின்ற சோதியாய்விளங்கும்அருளைப்போற்றி அம்பிகையின்பாதத்தைவணங்கிவிட்டகுறைவந்தால்விந்துவிட்டவர்பாதம் நமஸ்காரஞ்செய்துசதுர்விதகரணங்களும் வீணாகப்போச்சுதுஎ-று

தத்துவமென்றுதித்ததொண்ணூற்றாறுஞ்சுட்டு தசவாய்வுமொருமித்துத்தானொன்றாகி, பெற்றபிறவிக்கடலைத் தாண்டியேற பெரியோர்கள்வெகுகாலம்பிராணாயத்தால், குற்றமொன்றும்வாராமல்குறுக்கல்சுன்னம் கொண்டுஅனுமானமெனுமமுரிதன்னில், வித்தெனவும்விளங்கும்பாரை வெள்ளைக்கல்லுப்பதுவும்விதித்துதாண்டே.

(இ-ள்.) தொண்ணூற்றாறுதத்துவங்களையுங்கெடுத்து பத்துவாயுக்களும் ஒன்றாய்ச்சேர, பிறவிக்கடலைத்தாண்டிக் கரையேறவும், 'பிராணாயாமத்தால் குற்றம்ஒன்றும் வாராமல் குருக்கள்மார்சொன்ன சுண்ணத்தைக்கொண்டுவெள்ளைக்கல்லுப்பு உதித்தது எ-று. (௧௧௦)

பூருவத்திலுதித்தகடல்கல்லுப்பாகும் பூநீரினுப்பதுவுமமுரியுப்பும்,வாறறிந்தமுப்பொருளுமூன்றுப்பாகும் வகைவகைக்குப்பலமதுவாய்வகுத்துப்பின்பு, சருகாமல்பறங்கிவுப்பு பலந்தான்சூடன்தனையெடுத்துகுளிக்கல்லில்சமையத்தானும்,கருதாமல்வெண்கருவாலிரண்டுசாமம் கணக்காகமையதுபோல்கருதிடீரே.

(இ-ள்.) பூர்வத்தில் உண்டானது கடற்கல்லுப்பாகும் பூநீறும் அமுரிஉப்பும் ஆனமூன்றுஉப்புகளும் வகைக்குப்பலமாகவும், பறங்கிவுப்புப் பலமாகும் சூடன்என்னுங்கர்ப்பூரம் ஒருபலமாம், கல்வத்திலிட்டு வெண்கருவால் இரண்டுசாமம் வரைக்கும் அரைக்கவேண்டும் எ-று. (௧௧௧)

கட்டளைக்கலிப்பா.

கருதியும்வழித்தேயெடுபில்லைகாண்கதிரவன்தனில்காய்ந்தெடுவட்டியில், சுருதிமேல்மூடியொன்றுபுடமதில்துரிதமாய் கனலாறியெடுத்திடும், குருமுனியருள் திருவள்ளுவனுரை கூறிடும்பெரியோர்கள்மகத்துகள், தொழுதுவாலைப்பதம்பணிந்தர்ச்சனை தொழுததால்பணிந்தாண்டேயுணருவார்.

(இ-ள்.) பிறகுவழித்தெடுத்துப் பில்லைதட்டி உலர்த்திப்புடமிட்டு ஆறியபின் எடுத்துவாலையடிவணங்கி அர்ச்சனைசெய்து வணங்கி எ-று. (௧௧௨)

வேறு.

பூநீறுவதும் பூதலந்தன்னிலும்வானிலும்மாசி பங்குனி மூன்றினில், காணிரோகதிர் சந்திரன்விந்தினால் சோனைபாய்ந்துசுகாதீதநீறதாம், பாணியோடிபருதிமுகம்பட தானினிவெண்மை தாரணிதன்னிலும், கோனினிபூமிகாதமெழும்பிடும் வேனினிவிந்துநாதமீதாண்டையே.

(இ-ள்.) பூநீறுவது உலகத்தின்கண் மாசி, பங்குனிமாதங்களில் சந்திரசூரியர்களின்விந்தினால் விளைவதாகும் எ-று. (௧௧௩)

பூமிநாதம்பூ நீறெனும்பேரதாம் வாமியோகிகள் வந்தஅன்று
வினில், நேமமாகநெறியதுவாகவும்பூமிசுற்றிப்புனலடியாமலும், தா
மேவேலி தனித்துச்சோடித்துடன் ஆமேசாறெனுநஅங்தமண்வெட்
டியும், நாமேசொன்னேம் நாளுக்குநாள்மூன்றதும் சோமன்விந்து
நீர் சொ. லியெரித்திடே.

(இ-ள்.) பூமிநாதமேபூநீறென்னும் பேருடையதாம், யோகிகள்தீரத்தமா
டியெடுத்து அமுரிதெளித்து எரிப்பார் எ-று. (கககச)

மூன்றுநாளு முனைதெரியாமலும் மூன்றுமுச்சாண்பூநீர்விட்டெ
ரித்திடும், வேன்றுங்கப்பி யிதுநீலவர்னமும் தோன்றுநாலு தினத்
திலெரித்திடும், ஆண்டுபத்துமடுத்துகற்பங்கொளும் தாண்டிடும்புளி
சுன்னம்பூநீறதும், மீன்றிடும்மிதுபூநீர்க்கெதிரிவா என்றிடுங்கர வித்
தையிதாண்டையே.

(இ-ள்.) இவ்விதஞ் சொல்லப்பட்ட 3-நாளும் முச்சாண்பூநீறு விளைந்தி
டும் எ-று. (ககரு)

விருத்தம்.

சாணுயரமண்களைந்து எரிந்துமேலும் தனித்துஅன்றுள் மறு
நாள்கொண்டருணன்தன்னில், காணுமொருபடி யொருசாண்வெட்
டிமேலும்கண்டுமறுநாளதிதன்காலைதன்னில்,வேணுமந்தபடிமூன்று
நாளுஞ்செய்து விளங்கவுமே நாலாநாளிதனைப்பார்க்க, மூன்றுநாள்
சென்றதின்பின்கம்பியோடும் முன்னுளில்மெரியலிட்டுப் பின்னுளா
ண்டே.

(இ-ள்.) ஒருசாண்ஆழம் மண்ணையெடுத்து மறுநாள்சூரியனில் ஒருபடிகா
ணும் இவ்விதம் மூன்றுநாள்செய்து நாலாவதுநாள் இதைப்பார்க்க கம்பிஓடும்
அதைமிதித்து மறுநாளில் எ-று. (கககூ)

பின்முன்னுள்சுடைநாலுமெரியல்வேகம்பேதித் திருகால்கொ
ண்டு உதைத்துமேலாய், உன்னிதமாம்மெரியலிடப்பூதான்பூர்க்கும்
ஓரங்குலப்பிரமாணமுயாமென்னில், இன்னமினிநாலாநாள்கிளிஞ்ச
லாலும் எடுத்துவெகுபதனமாய்குப்பிச்சேற்றி, சொன்னகுருநாலு
மெழுபதமாயாட்டி சூக்ஷமதாயைம்பதெருப்புடத்தில்நீற்றே.

(இ-ள்.) இந்தநாட்களில் வேகமாய் மிதிக்கப்பூபூக்கும்,அதுஒருஅங்குலம்
பிரமாணமாயிருக்கும் அதைக்கிளிஞ்சலில் எடுத்துக்குப்பியில் பதனம்பண்ணி
மெழுதுபதமாட்ட 50-எருபுடத்தில் நீருக்கும் எ-று. (ககஎ)

நீற்றிடவுஞ்சுன்னமதாங்கொடியுவேகம் நிறமென்னசந்திரனுக்
கொளிபோதாது, வீற்றிடவுங்கல்லுப்புச்சுன்னந்தன்னை விளங்கவெ

குபெரியோர்கள்விரித்துச்சொன்னார், நாற்றிசையில்நவகோடிமுனிகள்சித்தர் நடனசூஸ்திரஞானவெட்டிமேலாம், மாற்றியேபிறந்திடவும்வாசியோகம் மாறுகலைபதினாலும்வகுத்தாராண்டே.

(இ-ள்) அவ்வாறுசெய்தால் கொடியவேகமுள்ளசுண்ணமாகும் நிறமோசந்திரன்ஒளிபோலவும், கல்லுப்புச்சுண்ணத்தைப் பெரியோர்கள் விரித்துச்சொன்னார்கள், அதையேஞானவெட்டியிலும் சொன்னதாம் எ-று. (௯௯௮)

இப்படியாய்நவகோடிகோடாகோடியிலகுபதினெண்பேர்கள் மகிழத்தானும், கற்பகமேதிருவருளேகருணைஞான கமலவிதழாயிரத்தெண்மலரின்மேலும், உற்பவமேமுன்னோர்கள் மோட்சம்பெற்ற மூலசுழிமுனைநடுவில்நடனஞ்செய்யும்,தற்பொருளேசடாதரத்திலகுஞ்சோதி சாம்புவனென்றேஜெகமும் புகழ்ந்தாராண்டே.

(இ-ள்.) இவவாறே பதினெண்சித்தர் முதலியோர் மகிழ்ச்சியடையமுன்னோர்கள் மோட்சம்பெற்ற மூலச்சுழிமுனைநடுவிலுள்ள சடாதாரத்தில் சாம்பவனென்று உலகமுழுமைக்கும் புகழ்ந்தார்கள் எ-று. (௯௯௯)

திரிமூர்த்திவம்மிசத்தில் தோன்றுஞான திருவள்ளுவநாயனைஞ்ஜெகமும்போற்ற, கருவூருவிளங்குநகர்கமலபீடம்கருணையானந்தவர்க்கத்தமிழால்ஞானம், சருமேசிவக்கியானவெட்டி பதவினாலும்தரணிதனிலறிவுள்ளோர்சாதாக்கல்விவருமமிசைபெரியோர்கள் தீக்ஷைபாலும்,வள்ளுவனானுரைத்தமொழிவாறு ஆண்டே.

(இ-ள்.) மும்மூர்த்திகளுடைய வமிசத்தில் உண்டான திருவள்ளுவனென்னும் பெயரைப்படைத்து கருவூரில் தமிழ்ஞானத்தில் பெரியோர்கள்உரைத்தபடி திருவள்ளுவனார் சொன்னார் எ-று. (௧௦௦௦)

ஜெகமாய்கையண்டபிண்டமமைத்தவாறும்ஜெகதலமீரேழுபதினாலுங்கூடி, அகமாய்கைஆண்பெண்ணுபுதித்தவாறும் அவனியிலெண்பத்துநான்குபிராய்கின்ற, பகவனருளாலுதித்துப் பாரில்செந்துபலபலவாயுயிரதுவாய்படைத்தவாறும், சுகவசியசேகரமாயெங்குந்தானாய் சுகாதீதமெனவிளங்குஞ்சூக்ஷந்தானே.

(இ-ள்.) உலகமாயையில் அண்டபிண்டங்கள்உண்டாக்கினவிதத்தையும் ஆண்பெண் உண்டானவிதத்தையும், உலகத்தில்செத்துப் பலபலவேதமாய்ப்பிறந்தவிதத்தையும், சொல்லுகிறேன் எ-று. (௧௦௦௧)

முப்பொருளாய்நின்றிலங்கு மதியேவிந்துமுறையானநிலவுப்புகடல்நீருப்பு, இப்பொருளாய்சமைத்தவிதசுன்னம்வாங்கிபிசைந்துகுளிகல்லதனில்நன்றாயாட்டி; சைப்பொருளென்றிதையறிந்து வீரம்பூரம் கருவினிலுப்புழுகுகுரு வண்டுநாபி, செப்பதிதவகைவகைக்குஒருகளஞ்சிகூட்டி சிதையசம்பழத்தினிட ரசத்தால்மாய்த்தே.

(இ-ள்.) மூன்றுபொருள்களாய் விளங்குகின்ற விந்துமுறையான கிலவுப்பு, கடலுப்பு, இவைகளின் சுண்ணத்தைவாங்கிகுழிக்கல்லில்போட்டு,வீரம் பூரம், புனுகு, ரூவண்டு, நாபிஇவைகள் வகைக்கு ஒன்றேகால் வராகனெடை கூட்டிபழரசத்தால் அரைத்து எ-று. (௧௦௦௨)

வேறு-கவி.

மாயமாயமயனமதாகிடும், வாய்வும்வன்னிவருணனுங்கூடினல் தேயதேயசெம்பொன்னிறமாயிடும், பாயபாயபகிரண்டமளாவியே.

(இ-ள்.) மாயமாகியமயனத்தில் வாயு, வன்னி வருணன் இவைகள் சேர்ந்தால் செம்பொன்நிறமாம் எ-று. (௧௦௦௩)

நின்றுநாடிநிகழ்த்தமயனமாய், அன்றுநாளுமன் னுள்முழுதாட்டினல், கண்டிசாடிகணக்கொருவீதமாய், பண்டுளங்களிபார்க்கப் பழமதே.

(இ-ள்.) ஒருநாள்முழுமைக்கும் அரைத்தால் மயனமாம் அதைக் கண்டு ஒரு கணக்கால் பார்க்கப்பதமாம் எ-று. (௧௦௦௪)

கடலுப்பாவதுகடல்நுரைகட்டினல், கல்லுப்பாவதுங்காணுமகத்துகள், செடலவுப்புசிவகங்கைகூடினல், அவனிமீதினிலஷ்டசித்தாடுமே.

(இ-ள்.) கடலுப்பென்பது கடல்நுரையாகும், கல்லுப்பாவது மகத்துக்கள் காணுவார்கள், செடலவுப்பாவது சிவகங்கைகூடினல் பூமியில்அட்டசித்துகளும் ஆடும் எ-று. (௧௦௦௫)

மாதுவாலை வாலாம்பிகைதன்பதம், ஏதுநாதமுமேகத்தின்வாறுகாண், ஊதுந்தாரையுயிர்காணமுரியால், வாதமுன்னெதிர்வந்தெதிர்கிற்குமே.

(இ-ள்.) பெண்ணுன வாலாம்பிகையின் பாதத்தையேற்றி அமுரியினல் ஊதினல்வாதம் எதிர்வந்துநிற்கும் எ-று. (௧௦௦௬)

வேறு-கவி.

வெண்மதிநிலவுப்பையறிந்திடும் வேகமென்ன விதுவீரசுன்னமாம், நண்பெறுமெழுகேவழித்தங்ஙனேநாடியில்லைரவியினில்காய்ந்ததால், அண்ணல்தன்பதமர்ச்சித்துவட்டியில்அடியிருக்கமேலோடு தன்மூடியும், மண்ணதீதமண்சீலை மண்ணேழுமேவன்னியாங் கதிர் வாலையில்வைத்திடே.

(இ-ள்.) வெண்மையான நிலவுப்பை உணர்ந்தால் வீரஞ்சுண்ணமாகும், ஆகையால் அந்தமெழுகை வழித்துப்பில்லை செய்துலர்த்தி இறைவன் திருவடிகளைவணங்கி ஓட்டிலிட்டு மேலோடுமூடி மண்சீலைசெய்து வாலுகத்தில் வைத்து எ-று. (௧௦௦௭)

வைத்துச்சாவல்புடம்போட்டெடுத்துடன்வாணில்குப்பிருவர் தியத்திற்குள்தான், சித்துவாதச்செகவசியம்மதாஞ் சீனச்சரக்கறுப த்துடனுலதும், பற்றுமில்லாப்பனிங்கதுபோல்நிறம் பாருப்பாரும் பரிகைூதன்வேதைகாண், கற்றுமுப்பொருள்காட்டினர் நூல்வகை காணுதொன்றுங் கருதினேனுண்டையே.

(இ-ள்.) சாவல்புடம்போட்டு எடுக்கஎல்லாச்சரக்குகளும் கட்டுதற்குரித் தான பளிங்குபோலாதும், பரீட்சை வேதையாகும் எ-று. (௬௦௮)

ஆண்டுநூறு மடுத்தென்னபாக்கியம் ஆயிரத்தைந்நூறிவ்வாறு காண், கண்டுநூல்கள் கல்லுப்பறியாமலும் காணுங்காணுகருத்தழி யார்கள்காண், மண்டலம்வலிமேவாடுதிரிந்ததால் வண்டர்காணும்வ கையறிந்தாரில்லை, ஒன்றுமொன்றுஉருவறிந்தாலல்லோஓகோபாரு முனதருளாண்டையே.

(இ-ள்.) என்னபாக்கியம் இருக்தென்ன? கல்லுப்பை அறியாமலும் வே றென்றை உணர்ந்தாரிலலை, இவையெல்லாம் உன்னுடைய அருளேயாகும்.

வான்புவிகடல் மண்ணும்விண்ணும்மது எனதுக்கிதுக்கேவல் செய்யுமதாம், நானருள்ஞானவெட்டிக்கெதிரொருநாடியாடியநான் மறைநூல்களும், பானுமாலிபரையென்றறிந்திடார்ஞானமோதுவர் கியானசுகாதிதப், மானுபாவரெனுஞ் சிவமுத்தர்கள்ஆனதால் நற் பொருளறிந்தோதினர்

(இ-ள்.) நான்குவேதங்களும், ஞானவெட்டிக்கிணையாகா இதை சிவமுத் தர்களே அறிவார்கள் எ-று. (௬௦௬௦)

மூப்புமுப்புவென்றோதியநூல்கள்தான் அப்புமப்புவென்றூறி வார்களோ, செப்பினர்பதினெண்பேர்மகத்துகள்தப்புமோசுத்தசா கரநீரெலாம், அப்புவினருளானஅவ்வாறினுல்கைப்பையேகளிம்பற் றுற்கசடறும், இப்புவிஜெகவீணைசைகொண்டுவர் கைப்பையுண்டுங் கருத்தறியார்களே.

(இ-ள்.) முப்புஎன்றுசொல்லுகின்றநூல்களையாவர் அறிவார்களோ?பதி னெண்சித்தர்கள் அறிவார்கள்மற்றவர்கள்இதன்கருத்தைஅறியமாட்டார்கள்

வாரிவாரிமகராசமாவதால் நீறிடும்நவலோகமும்ரத்தினம்,தே றுந்தேறும்வெண்வங்கமொருபலம் சேரதாய்முப்பு சுன்னங்களஞ்சி டை, சாரிசாரிசாரித்துநீறதால்ஆரபாரமதின்கீழ்மேல்பூசியின்,நீறிநீ றியநீற்றினமாகிடும் ஆறியுங்கதிர்வாலைரவியதே

(இ-ள்.) நவலோகமும், நவரத்தினமும் முன்சொன்னதால் நீறும்,வெள் வங்கம் ஒருபலம், முப்புசுண்ணம் கழஞ்செடை பூசிரவியுலர்த்தி எ-று.

அந்தரத்தருள் தாமரைமூலிதான் அங்ஙனே அரைத்தங்கியும் பூட்டிமேல், இந்திரக்கவசங்களுஞ்சீலைமண் ணேழுஞ்செய்து இரவி யில்வைத்தெடுத், தந்திரப்புடங்குக்குடமாமதில் அந்தவங்கமதிகிற வெண்மைதான், சந்திரனொளிபோலும்பிரகாசமாய் வீந்தையாமிது வெள்வங்கம்நீறுமே.

(இ-ள்.) ஆகாசதாமரை மூலிகையை அரைத்து அங்கிபூட்டி சீலைமண் 7-செய்து குக்குடபுடம்போட வெள்வங்கம்நீறும் எ-று. (௧௦௧௩)

நீற்றினால்நவலோகமும்நீற்றிடும்நேர்மைநேர்மைநிசரிதுக்கொ க்குமோ, சாற்றினார்குருவெள்வங்கச்சுன்னமாம்தாம்பிரபஞ்சாஸ்தி ரவேதைகாண், சூத்திரமிதுசொன்னாரகத்தியன் தொட்டதெல்லாந் தொடுகுறியாமிது, பார்த்துப்பார்த்துப் பலபேர்மயங்கினார் பாடு பட்டால்பலனுண்டுஆண்டையே.

(இ-ள்.) இதனால் நவலோகத்தையும் நீற்றிவிடலாம், இதற்கு வேறெது வும் ஒப்பாகாது. தாம்பிரபற்பமோ சாஸ்திரவேதையாகும் இவைகளுக்கெல் லாம் பாடுபட்டால் தான் பலன் உண்டு எ-று. (௧௦௧௪)

இந்தசுன்ன மெடுத்துக்களஞ்சிடை யெந்தெந்தசரக்கெல்லாமி சைந்திட, தொந்தங்கோடிதொடுத்துமிழ்நீரதால் அந்தந்தசரக்காவ துமோர்பலம், அந்தமாய்குழைத்தந்தசரக்கின்மேல் இந்தப்பாகமி துகவசஞ்செயில், கந்தப்பூமலரம்பிகைபொற்பதம் சிந்தைவலத்துத் தெரிசித்துப்போற்றிடே.

(இ-ள்.) இந்தச்சுண்ணத்தில் கழஞ்சுஎடுத்து எந்தச்சரக்குகளும்சுண்ண மாக உமிழ்நீரினால் அரைத்துதடவி ஈஸ்வரியைசிந்தித்து எ-று. (௧௦௧௫)

பூரணச்சந்திரன்போலொளிவீசிய தாரணைத்தசதீட்சைதவறிடி ல், காரணக்குருகண்டுமகிழ்ந்திடும்வீரியத்தாதுவும்விந்துங்கட்டிடும் காரியமாஞ்செந்தூரத்திற்காயமும்தேரிடுமொருதிங்களுணர்ந்ததால் மாறமாறமதியமிர்தம்மது சேரச்சேரச்செந்தூரமொழிவதே.

(இ-ள்.) பூரணசந்திரனைப்போல ஒளிவீசினதாரணை தசதீட்சையின்விதி தவறினால் எல்லாம் தவறிவிடும் எ-று. (௧௦௧௬)

வேறுவிருத்தம்.

முத்துடன்பவளம்பச்சையும்வயிரமுழுவயிடூரியங்கெம்பு, முற் பகப்புஷ்பராகமுமிவைகள்முதிர்ந்திடமரகதத்தோடு, சத்தெனுமஷ் டரத்தினமிதுகாண் தனிவகையொவ்வொன்றுபலந்தான், தரணியில் வேதை சத்துகளிலகுஞ் சந்திரனுப்புவாலதிதம், வித்தெனுங்குளிக் கல்தனிலு மொவ்வொன்றுய்விளங்கிடுமுப்புவின்சுன்னம், இதுபண

விடைகொண்டருள்பெறஅமுரி விந்துநீர்தனிலிருசாமம், கற்றவர் கமல பொற்பதமடியேன் கருத்தில்வைத்தர்ச்சனைசெய்து, காரண குருவின்கடாக்ஷமும்புரிய கனகவேதையுமருள்கூர்வாம்

(இ-ள்.) நவரத்தினங்களும் வகைக்குஒருபலம் சந்திரனுப்பால் குளிக் கல்வில் அரைத்து முப்புசுண்ணம் பணவெடைசேர்த்து பெரியோர்களைவண ங்கி புடஞ்செய்தால் குருவேதையாம் எ-று. (௧௦௧௭)

கனகவேதையுமாமெழுகதின்பதத்தில் கண்டிடைவழித்து பில்லை யதாய், கருணைகூர்ந்திலகுங்கதிர்முகம்படவும் காய்ந்ததைவட்டியில் தாக்கி, வினவிதைத்தனைமேல்மூடிச் செய்கைவிசிதமாய் சீலைமண் ணேழு, விக்கிரமாய்ரவிதன் சுவாலையில்வைத்து மிருபுடமைம்பது எருவில், தனமிதுவெனுமேபுடமெனுமாறித் தனையெடுத்தனுக்கிர கம்புரிய, சத்துமுத்ததனில் தந்திரமொளிவாய் சங்கற்பவிகற்பமில் லாமல், இனமதாயிலகுமிதயுவரசமாமெடுத்துடனுருக்கினுலுருகும் எவர்செயலிதுகா ணமைப்பிருந்ததனை லெய்திடுமினி யுரைப்பதி துவே.

(இ-ள்.) கனகவேதையாம் இதைமெழுகுபதத்தில் வழித்துப் பில்லையா க்கி உலர்த்திஅகலிவிட்டு மேல்மூடிச்சீலைசெய்து சுவாலையில்வைத்து ஐம்பது எருவில்புடமிட பற்பமாம் மறுபடிஎடுத்து உருக்கினும் உருகும் எ-று.

செழுங்கனலொளிவாமழகுதன்விசிதஞ்செழித்திடும்பவளமோர் பலமாய், தெளிந்தநற்கலுவ மதனிலிவ்வகைபை திருத்தமாயூட்டி மென்குருவில், அழகந்தமுன்னிடைகொண்டமூரிவிட்டாட்டியருளிரு சாமமவ்விதமாய், அதைவழித்திலது மெழுகுபோல்வருதலருமுகம் படவருளி, தெளிந்ததோர்வட்டி யதினதையூட்டிசிரமுடிமேலதாய் மேவி, செய்கைமண்ணேழு சீலையுந்திரமாய் செப்பிடில்சந்ததுமிசை வாய், விடமெனுமருணன்கனவினில்தாக்கி விளங்கிட ரெருவுமன் பதனில் மேலதாய்புடம்போட்டியல்புசத்திறங்கும் வெண்ணிறமதி யொளியிதுவே.

(இ-ள்.) பவழம் ஒருபலம் கல்வத்திலிட்டு குரும்ருந்து பணவெடைபோ ட்டு அமுரியாலரைத்து இருசாமமானபின்பு வழித்துஉருட்டி உலர்த்திஅகலி லிட்டு ஏழுசீலைமண்செய்து 50-எருவில் புடமிட சந்திரன் ஒளியைப்போன்ற சுண்ணமாம் எ-று. (௧௦௧௮)

ஜெகமெலாநிறைந்த வடிவழகுடையதிருமலர்க்கமலபொற்பத த்தில்,சீஷனென்றடியேன் சாம்புவனெனும்பேர் தெக்ஷணமூர்த்தி யின்செயலாய்- புகழ்விலங்கதிதம் ராஜரத்தினமாம் பூமலர்பச்சை யோர்பலமாய்.புரையில்லாக்கலுவ மதனிவிட்டுபமாய் பொற்குரு

பணவிடையூட்டி, அமலர்வீசுமதியொளிவிளங்கு மமுரிவிட்டாட்டி
ருசாமம், அதிதமாமெழுகுபதமெனும்வருத லதனையேவழித்துபில்
லையதாய், உகையதாய்க்கதிர்தன் முகம்படஅனலிலுணர்ந்தெடுத்து
டன்வட்டியதனில், உபமதாயடக்கிமேல்மூடிச்சீலையுறுத்தமண்ணை
மூசெய்விதமே.

(இ-ள்.) உலகமெல்லாம் நிறைந்த அழகுடைய நான்சிடனென்று சொல்லி, பச்சையில் ஒருபலம்கல்வத்திட்டு குருபணவெடை சேர்த்து, அமுரிவிட்டு ஆட்டிஉலர்த்தி புடம்போட சுண்ணமாம் எ-று. (௧௦௨௦)

வேறு-விருத்தம்.

அதிவிதிக்கதிர்தன்னொளிவதும்வீசு அருணனில்முகம்பட அருளி,
அனுக்கிரகம்புரிய ஐந்துபத்தெருவிலக்கினியாலதூமூட்டி, துதியசுத்
திசர் மலரடிபணிந்துதொழுதுடன் தோத்திரஞ்செய்து, தொடுத்த
னலாற்றிபசைந்தசத்தளவின் சுகாதிதமெனுஞ் சொல்லஎளிதோ
உதித்தசத்தொளிதானுவரசமிதுபேருலகினில்நிலவதுக்கதிதம் யோ
கியாய்ஜெனித்து யோனிதன்வழியிலுற்பவித்த மைத்தவனொருவன்
விதிதன்விந்ததனால் தந்தையுந்தாயும் விரும்பிசையோகத்தி மிசை
விளஙகுவார்பெரியோ ரவரிருப்பிடமே வீடுவந்துரைப்பதுமேலோ

(இ-ள்.) மேற்படி மருந்துமுடிந்தது யோகியாய்ப்பிறந்தவர்கள் எற்பதித்தினவிந்தினால் தந்தைதாய் விரும்பியசையோகத்தின் மேல்விளங்குபவர்கள் பெரியோர்களே அவர்களிருப்பிடத்தை உரைப்பதுமேலோ எ-று. (௧௦௨௧)

சுகாதிதஞ்சொலவும் ராஜரத்தினமாஞ்சுடரொளியிலகியவயிரம்
சுழிமுனையிலகு மதியெதிமதின்பேர் துகையுளதிதுவடிவுளதாய்செ
காதீதமனைத்துமடிபணிந்தொழுது திருவுளமுயன்றனருளால்,தேவ
ராயுதிப்ப தரிதரிதுலகில் சித்தராய்ஜெனிப்பதுமரிது,தகாதுலகதித
மனிதராய்ப்பிறந்துதரித்திரஅமிசையிலழுந்தி, தந்தைதாய்செய்கை
பூசாபலயோகஞ் சற்குருபயனிவைதவத்தில், யுகாயுகமளவுமனித்தி
யந்த தினந்தினமொழிவமுலகினில்வாழ்க்கை, உடலுயிர்வளத்தி
நாதவிந்துளதா யொருவானயுலகெலாம்படைத்தே.

(இ-ள்.) சுகாதீதஞ்சொல்லவும் ராஜரத்தினமான சுடர் இலங்குகின்றவயிரம்வடிவுள்ளதாய் தேவராகவும், சித்தராகவும் பிறப்பரிது மனிதராய்ப்பிறந்து தரித்திரஅமிசையில் அழுந்தி தந்தைதாய் பூஜாபலயோகத்தினால் பிரதிதினமும் நாதவிந்து உள்ளதாய் ஒருவன் உலகமெல்லாம் படைத்து எ-று.

விருத்தம்.

வயிரமொருபணவிடைகாண் கலுவத்திட்டு மகத்தானகுருவில்
பணவிடைதானாட்டி, சயிலமெனுமுதகமாஞ் செயநீருகும் தனைவிள

ங்கமதியமிர்தசலத்தாலாட்டி, அயிலவிதஅறிவாரோ ஆண்டேகே ளீர் அதுமெழுகுபோல் மயனமதுகாணெய்தல், குயில்மொழிமாத ம்பிகைப்பெண்குறித்துச்சொன்ன கூறதனலிருசாமங் கூர்வதாமே.

(இ-ள்.) ஒருபணவெடை வஜ்ஜிரத்தைக்கல்வத்திலிட்டுகுருவில்பணவெ டைசேர்த்து வைக்கஜெயநீராகும் அதைமதியமிர்த சலத்தாலரைத்து மெழு குபோலானல் இருசாமம்பொருத்து எ-று. (௧0௨௩)

கூறினதோர்மெழுகெடுத்து சதிரப்பில்லை குறிப்பாகசெய்துரவி மூகத்திலுட்டி, வீரியமாயிரவிசுடவட்டிக்சேற்றி மேலொருதன்வட் டியதுமிகவுமூடி, தெரியசந்துவாய்புதைந்துசீலையேழு செய்துசதிர் முகம்படவுஞ்செலுத்திமேவி, நெறியுடையவைம்பதெருப்புடத்திற் கந்து நிசரில்லாவச்சிசத்தி னேர்மையாண்டே.

(இ-ள்.) சொன்னமெழுகைப் பில்லைசெய்து உலர்த்தி அகலிவிட்டு மே லோடுமூடி ஏழுசீலைசெய்து உலர்த்தி 50-எருவிற்புடம் போட்டால் ஒப்பற்ற சத்தாகும் எ-று. (௧0௨௪)

நிகரில்லாசத்துவிளெளிவோகோடி நிலைவதித்துய்யநிறமதியோ கோடி, சுசவதிதவஜிகரவைடூரியச்சத்து தொட்டகுறை யிருந்தத ல்சொல்வேன்காணும், திகம்பரவைடூரியத்தில் பலமொன்றிட்டு சிவகுருவின்பணவிடைதானேக்கத்தாக்கி, அகமானஅமுரிவிட்டிரு சாமத்தில் ஆடையிலுமெழுகுபதமாச்சுதாண்டே.

(இ-ள்.) உச்சத்தின்ஒளிவுகோடியாகும் நல்லவெண்மை நிறமாம் இது வோ வைடூரியச்சத்து தொட்டகுறைஇருந்தால் சொல்லுகிறேன் இந்தவைடூ ரியத்தை பலம்ஒன்று எடுத்துகுருவில் ஒருபணவெடை கூடப்போட்டு இரு சாமம் அமுரியிலரைத்து மெழுகுபதமாச்சுது எ-று. (௧0௨௫)

கண்டுமெழுகெடுத்துசதுர் சீராய்வாலைக்கதிர்முகவன் சுவாலை யடிக்கடிசதானல், நன்றுதனிவட்டியிலிமடக்கிவட்டி நடுமூடிசந்தது மண்சீலையேழு, அன்றிரவிமுகம்படவும் ரவியில்வாலை யைம்பதெரு ப்புடந்தனிலுமடக்கிவன்னி, வென்றபுடமாற்றியெடுத்துடைத்துப் பார்க்க மிகவும்வைடூரியத்தின் சத்ததாண்டே.

(இ-ள்.) அதைக்கண்டு மெழுகைஎடுத்து, சீலைசெய்து உலர்த் அகலி விட்டு மேலோடுமூடிச் சீலைசெய்துஉலர்த்தி 50-எருவில் புடம்போட்டு எடுத் துப்பார்க்க வைடூரியச்சத்தாகும் எ-று. (௧0௨௬)

தரணிதனிலிதையறிய பெரியோர்சொல்ல சாற்றினேனிதை யெடுத்துப்பதனம்பண்ணி,குறைவதுவந்தெய்தாமல்குருவைப்போ ற்றிக் கும்பமுனிதிருவடியைப்பணிந்து யானும், மறைவுகளில்லாம லின்நூல்ஞானவெட்டி வசனித்தே னயிரத்தைந்நூறுக்குள், துறை

கோடிமுறை கோடிதொர்தங்கோடிதொட்டதெல்லாம் பலிதபெனுஞ்சொன்னாண்டே.

(இ-ள்.) இதைபெரியோர்களுடைய சொற்படி இவ்வுலகத்திற் சொன்னேன் இதில் யாதொருகுறைவும் வாராதபடி குருவைத்துதிசெய்து கும்பமுனிதிருவடிகளைப் போற்றி தொட்டதெல்லாம்பலிக்க 1500-ஆன ஞானவெட்டிசொன்னேன் எ-று. (க0உஎ)

பூரணச்சந்திரன் மதியைவிதிக்கப்போமோ புஷ்பராகத்தினுட சத்துநேர்மை, காரணத்தைமனதினுன்னிக்கவலை நீக்கிக்காசினியோர்செப்தொழிலில்கருதார்மேலோர், வாரணமுனிவரெனுந்தெட்சணையன் வரத்தாலுந் திருவள்ளுவன்வசனகாவியம், ஞானெனுமதிவீர ஞானசிங்கம் துரைசாமிபிரம சிருஷ்டிசூக்ஷமாண்டே.

(இ-ள்.) பூரணசந்திரன் மதியைவிதிக்கப்போமோ புட்பராகத்தின்குணத்தைமனத்தில் எண்ணிக்கவலையைநீக்கி உலகத்தவர்கள் செய்கின்ற தொழிலும் தெட்சணையன்வரத்தால் திருவள்ளுவன் வசனகாவியமாச்சொன்னபிரம சிருஷ்டி இதுவேசூட்சமாகும் எ-று. (க0உஅ)

சூக்ஷா திருக்ஷமெனும்புஷ்பராகம் தூக்குமொருபலமாகக் கலுவத்திட்டு, பட்சமெனக்களித்தகுருபாதம்போற்றி பரிகுருவில்பணவிடைகொண்டமுரியாலும், தட்சணமுமிருசாமமிடைவிடாமல்சாதித்துஆட்டிவழித்துண்டையாக்கி, யிட்சணமுஞ்சதுரடைபோல் பதமாய்வாலை யிரவிமுகம்படவுலரவெடுத்தாலாண்டே.

(இ-ள்.) புஷ்பராகம் ஒருபலம்கல்வத்திலிட்டு குருவடியைத்துதித்துகுருவில் பணவெடைசேர்த்து அமுரியில் இரண்டுசாமம் அரைத்து உண்டையாய் உருட்டி உலர்த்தி எ-று. (க0உகூ)

வலுவானவட்டிதனிலடக்கிமேலும்வட்டியதுமேல்மூடிமண்ணுஞ்சீலை, விலுவாகசந்துமண்மேலுமூடிவெகுவாலைரவியதனில் விளங்கமேவி, செலவாசாதெருவதுகேளஞ்சுபத்து செவந்தவன்னிமூட்டிகனலாறிச்சென்று, பெலமானசத்தததான்பெரியோராலும் புவியிலமைத்தெவர்களும்புதுமையாண்ட.

(இ-ள்.) பலத்த அகலிலிட்டு மேலோடுமூடி மண்சீலைசெய்து உலர்த்தி ஐம்பதுஎருவில் புடமிட்டு எடுத்துப்பார்க்க புதுமையாம் எ-று. (க0ங0)

சத்துகளின்சித்து அறுபத்துநாலுப் தமிழ்முத்துக்கொப்பான வெள்ளேடில்லை, கற்றவர்கள்பழிப்பவரோகவிக்கொவ்வாதால் காரணத்தையறியார்காண் மற்றபேரும் முத்தர்நவசித்தர்மற்றுள்ளோரெல்லாம்முனிவனெனப்புகழ்ந்தேத்துமுதல்வரான, வித்துவானுயுதித்தாற்கிடைத்ததேது விந்துத்துதோனவர் செயல்வாழ் விதித்ததாண்டே.

(இ-ள்.) அறுபத்துநான்கு சித்துகளுமாடலாம் இதன்மகிமையை சொல்வதற்கு எடிடங்கொடுக்காது வித்துவானுற் சொல்லுவார்கள் எ-று. (௪0௯௧)

கொச்சகம்.

ராஜரத்தினரதிதான் ரத்தினத்தால்கோமேதகமாம்
பேசவரிதே பெரிதோ பேருலகிலாரறிவார்
தேகமதிலும்மனந்தனு சென்னிதனிலும்பலங்கொண்
டாசைவைத்துப்பாடுபட்டா லாண்டேயரைப்பதுவே

(இ-ள்.) ரத்தினங்களில் கோமேதகம் மிக்கஉயர்ந்ததாகும் அதின்பெருமையையார் அறிவார்கள்? தேசங்களில் அனந்தம்பேர் ஆசைவைத்துப் பாடுபட்டால் நன்மையையடைவார்கள் எ-று. (௪0௯௨)

பாரிலிருந்தேயுற்ற பண்டிதரேயுங்கள்புத்தி
தாரிகளிலேமயங்கி தாபந்திரியப்படபோ
நாரியர்தன்கையிலகப் பட்டபுலிப்பூனையைப்போல்
ஊரிலிருக்குநரி யுபாயமதால்வாழ்ந்திடுமே.

(இ-ள்.) உலகத்திற்பிறந்த பண்டிதர்களே! உங்கள்புத்திகெடுதற்கோபுலியினிடத்தகப்பட்ட பூனையைப்போலஊரில் இருக்கும்நரிஉபாயமாய் வாழும்.

விருத்தம்.

கலைபரவும்அம்பிகையேவாலைதேவி கருணையெனக்கருள்புரிந்த காக்ஷியாலும்,வனுத்தன்னிக்கனுவமதில்மருவுமப்புவகையதனிலொரு பலங்கொண்டமுரியூட்டி, நிலைத்துவிடுமயனமெழுகதுபாகத்தில்நிகழாமல்சதுரடையாய்நிகழ்த்திவாலை, கலைபதுவுமுருகிபனி ரெண்டுமோடில் காந்தியொளிபடவும்ரவிசுடிசதாண்டே.

(இ-ள்.) அம்பிகை எனக்குக்கிருபைசெய்ததனுலும், உப்புவகையில் ஒருபங்கில் அமுரிசேர்த்துமெழுகுபதத்தில் பனிரண்டுசாமம் அரைக்கவேண்டும்

கலித்துறை.

கெடியானவட்டி தனிலூட்டிமேவி மேல்மூடியதும்
அடியானசிலை வனுவேழுசெய்து அருணன்முகம்
படவும்படமெரு அஞ்சு த்தோர் புடமாறிப்பின்
தொடவுமதித சோமேதகச்சத்து சோதிப்பதே.

(இ-ள்.) அதை அகலில்வைத்துமேல்மூடி எழுமண்சிலைசெய்துஉலர்த்தி ஐம்பதெருவில் புடந்தீர்ந்தபின் கோமேதகச்சதாகும் எ-று. (௪0௯௩)

மாகதவாலை பரிபூரணத்தின் மலரடியில்
வரமேபளித்த குருமுனிபாத மடிதொழுது

நிரமேமரகதம் பலமொன்றுபார்வை நிதந்தருவீர்
சரமேவியபதங் கலுவத்தினிலிட்டுத் தாவியுமே.

(இ-ள்.) வாலையின் திருவடிகளிலும், குருமுனிபாதங்களிலும் தொழுது மரகதத்தில் ஒருபலங் கல்வத்திலிட்டு எ-று. (௧௦௩௬)

சற்குருவிந்து நாதமுங்கூடி சருவினதால்
வற்கமும்பொருளின் பணவிடைகூட்டி மதியமிர்தம்
முற்கமதாக விருசாமமாட்டி முன்பதமாய்
உற்கந்தவிர்ந்து சதுரடைசெய்து உலர்த்திடுமே.

(இ-ள்.) விந்துநாதமுஞ்சேர்ந்து சருவினதினால் முப்பொருளிலும் பணவெடையளவுசேர்த்து மதியமிர்தத்தால் இரண்டுசாமமரைத்து உலர்த்தவேண்டும் எ-று. (௧௦௩௭)

கதிர்கோடிவாலை ரவிசூடுபட்டு கடிசதுவாம்
பதிமேவிவட்டி மேல்மூடிசெய்து பாகமதாய்
மதியேழுசிலை மண்பூசிபின்பு வைத்துபதம்
மிதமேவுவைம்ப தெருச்சூடியேவன்னி வீசவுமே.

(இ-ள்.) சூரியனுடைய உஷ்ணந்தாக்கி உலர்ந்தபின் அகலிலிட்டு மேல்மூடிச்சீலைசெய்து ஐம்பதெருவில் புடம்போடவேண்டும் எ-று. (௧௦௩௮)

வெண்பா.

மரகதமாஞ்சற்று வானிலெழுமில்லை
திரமிதுகாண்பதனமிது செப்பினோம்-மரகதத்தில்
ஊரினிலுண்டாய்ந்து உத்தசெய்திபாடுபட
சாரிவரலாங்கடல்சூழ் தான்.

(இ-ள்.) மரகதத்தில் உயர்ந்தது ஊரிலுண்டாம் அதையுணர்ந்து எடுக்கவேண்டும் எ-று. (௧௦௩௯)

மாலின் திருவாவிலகு மாதவத்தோர்கண்டறிந்த
ஆலிலைமேல்பள்ளிகொள்ளு மாயன்-மாலின திரு
அவ்வெழுத்தும்பேசு மறிவாலறிவறியும்
உவ்வெழுத்தால்வாய்மூடு வோம்

(இ-ள்.) மகத்தாகிய தவமுடையவர்கள் கண்டுணர்ந்த விஷ்ணுவின் அக்ஷரங்களால் வாய்மூடுவோம் எ-று. (௧௦௪௦

நீலமாணிக்கமது நின்பலமொன்றுயிடை
வாலைகுருயிடைபணமாய் வாங்கி-நீலமணி
புரையில்லாக்கலுவமது பூட்டியிருந்துச்சூட்டி
உரையமெழுசாம முணர்.

(இ-ள்.) நீலவர்ணமுள்ளமாணிக்கம் ஒருபலத்தில் குருபணவெடைசேர்த்து விர்தநீரினாலாட்டி மெழுகாக்கவேண்டும் எ-று. (௧௦௪௧)

மயனமெழுகு மதியமிர்தநீரூட்டி
வயதுகுறையாதிடைக்கு வன்னி-மயனமெழு
சதிரிடைபோலிலகுந் தனுகதிரோன்தன்முகத்தில்
பயமதுகாண்வாராது பார்.

(இ-ள்.) மெழுகை மதியமிர்தநீர்ஊட்டி வயது குறையாதபடி சேர்த்து உலர்த்தவேண்டும் எ-று. (௧௦௪௨)

மண்வயிரவட்டி வைத்துமேல்வட்டியதும்
நன்பதிதண்சிலை நாட்டி-மண்வயிர
ரவியில்முகம்படவு நன்னயமாயைம்பதெரு
திரவியமாவன்னியதுஞ் சேர்.

(இ-ள்.) அகலிலிட்டு மேல்மூடிச் சீலைமண்செய்து உலர்த்தி ஐம்பது எருவிற்புடம் போடவேண்டும் எ-று. (௧௦௪௩)

மாறிகனலாற்றி மாறிசத்துநீலமணி
கூறுமாணிக்கமதுக் கொவ்வாது-மாறுகனல்
வித்துநவசத்து மிகவுமொருசுரூபம்
வைத்துகுரு பணவிடைகா ணுண்டே.

(இ-ள்.) ஆறினபின் ஆற்றிவைக்கவும், நீலமானது மாணிக்கத்துக்கு ஒப்பகாது வித்தின் நவசத்தானதைவைத்துகுருவில்பணவெடைசேர்தது எ-று.

அமுரியுடன்றேங்கு அதுபத்துக்கொன்றுயிடை
சமுரியுடனூட்டிக் சருங்குகையில்-அமுரியுடன்
கதவானசத்ததற்குக் கருதிமயம்ரேசித்து
பதனங்குகைமுக்கால் பார்.

(இ-ள்.) அமுரியினாலரைத்து குகையிலிட்டு சத்தில் ரேசித்து குகைக்கு முக்காலாயிருக்க வேண்டும் எ-று. (௧௦௪௫)

வேறு-கவி.

ஒடுகுகைசீலைவயல் காடுகளின்தோறும்,நீடுமிருவஞ்சுகர கால்களதின்வாறும், தேடுகிலமண்வளைகலதோறுமெடுமூடி, கூடுகுகைசந்துபிசைந் தாடும்ரவிகூடே.

(இ-ள்.) அத்தக்குகைக்கு சீலைமண்செய்துவெயிலில் உலர்த்தவேண்டும்.

கொல்லனுலையில்லமடக்கமிக ஆறுவெல்லலாமிதற்குவித மூன், றுவிசையேற்று வல்லுமையிதற்குவடிவான நவரத்னம், சொல்லவெதோவவேதனின் சூக்ஷமாறிரா.

(இ-ள்.) அதைக் கொல்லனுடையஉலையில் மடச்சிமிகவும்ஊதி மூன்று விசையும் இவ்வாறுசெய்து எடுத்துக்கொள்ளவேண்டும் எ-று. (க0சஎ)

வெண்பா.

சூக்ஷிதுக்கின்னஞ் சுகாதிதமாய்போசனங்கொள்
வாசமலர்வீசும்வச்சிர தேகம்-சூக்ஷிது
பச்சைமாணிக்கம் பருமணிபோ லுண்டையதாய்
வைச்சபொருளாண்டே வயசு

(இ-ள்,) இதற்குச்சுகாதிதமாய்ப் போஜனங்கொள் இதனால் வஜ்ஜிரதேகமாம் பச்சைமாணிக்கம் பருமணியைப்போல் உண்டையாம் எ-று.

பச்சையிதுரத்தினம் பட்டவெளிப்பிரகாசம்
சத்துளமரசமிதுகா ணுண்டே-சத்ததுவும்
ஆற்றதுகாண்களிம்பு அறுபத்துநா லுமது
சேத்ததுகாணமுரியினல் சீர்.

(இ-ள்.) இந்தப்பச்சைரத்தினமானது பிரகாசமுடையதாகும் இதுவே உபரசமாம் இதனால் சத்தில் களிம்பில்லையாகும் இந்தஅறுபத்துநான்கு சரக்குகளும் அமுரியினல் செத்ததாம் எ-று. (க0சகூ)

வேறு-கவி.

சத்துநவரத்னமிது எத்ததுமுடைத்து, வித்துகுருசுன்னமது வீரமணிகூட்டி, யெத்ததுமதிப்பிறைபின் விந்துநீரிலாட்டி, ஒத்தொருவிநாடியினி லெத்துகுகையாண்டே.

(இ-ள்.) நவரத்தினங்களின் சத்து என்ன முடைத்தானதாகும் இதற்கு வீரமணிகூட்டி விந்துநீரினல்ஆட்டி ஒருவினடிசென்றபின் குகையில்வை.

ஊதியெலிகாரமிடவூதவுருகுங்காண், வீதமொருகிண்ணிகுகையேழுமெழுகூட்டி, வாதிகருமுடிகரு மண்ணதுவினலும், தாதுவடிகட்டிவருஞ் சத்தமிதுவாண்டே.

(இ-ள்.) அப்படிஊதி வெங்காரமிட்டால் உருகும் அதை வடிகட்டினல் சத்துவெளிப்படும் எ-று. (க0இக)

கிண்ணமதில்சூதமொரு சேருவதிலூட்டி, வண்ணதிருமேனி ரசம்வாங்கியதில்சேர்த்து, கொண்ணைசரக்காமதுவினலுங்கடையச் சேர்வெண்ணிறமதாகிரச வெண்ணையதுவாமே.

(இ-ள்.) ஒருகிண்ணத்தில் ஒருசேர் இரசம்விட்டு மேனிரசம் அதில்சேர்த்து கொண்ணையினலும் கடைய வெண்ணிறமானரசவெண்ணையாகும்எ-று.

வெண்ணையில்வெங்காரமிடவிராகனிடைபூட்டி, கண்ணின்மணி போலவுங் கருங்குகையிலிட்டு, கிண்ணியதுவேகம்பட ரத்னமிதுதங்கம், மண்ணினுடகாலவரை வாள்பகர்வளாண்டே.

(இ-ள்.) அந்தவெண்ணையில் வெங்காரம் வராகனெடை குகையில்வைக்கவேண்டும் எ-று. (க0டுடு)

மூசையிலடக்கியுமி மேலுங்கரிதாக்கி, ஒசையிடவூதியிடு உண்மையிதுகண்டாய், வாசமலரம்பிகை வாலாம்பிகையைப்போற்றிவா சரதசூதமணி வாலையருளாண்டே.

(இ-ள்.) ஊதில்மணியாம் அம்பிகையைவணங்கிஅவளுடையஅருளினுல்

இம்மணியும்பாலிலிட எண்விதநீர்வாங்கும், அம்பலர்கடாக்ஷமதுவாயிரத்தெண்மாற்று,சம்புதிருவள்ளுசதாசாம்பவனுமாகில்,அம்புவியில்வாதிக ளறிந்துவருகாணேன்.

(இ-ள்.) இந்தமணியைப்பாலி விட்டால் எண்விதநீரையும்வாங்கும் ஆயிரத்தெட்டு மாற்று ஆகும் இதை உலகத்தில் வாதிகள் அறிவார்கள் எ-று.

காரியெனும்வங்கங்கருவங்கமதுசேர்தான், வாரியயச்சட்டியிடு வட்டியதுமூடி, நாரியர்சுரோணிதமதாகுமுருவீயின், சீரியரசத்தையிடுசேருக்கொருபலமே.

(இ-ள்.) இதில் கருவங்கம் ஒருசேர் அயச்சட்டியில்,இட்டுமூடி சேருக்கு ஒருபலம் ரசம் விடவெண்டும் எ-று. (க0டுசு)

வங்கசலநீருருவி யூதிவிடவுருகும் வாங்குப்ரசசூதமணி வாலைரசமாகும், ஒங்குமனேகுப்பியி லுறுத்திரசவாதி ஒகோபுவனங்கள்மயலோகவயமாண்டே, யெங்கு'மதிதீபவொளிசூழுமுனைமீதில்ஐங்கரன் பதக்கமல செங்கதிர்விலாச, மங்களமிவைதொழிலுரைத்த பரிவேதைதங்கரசவங்கமிது சாக்ஷியறியாண்டே.

(இ-ள்.) வங்கத்தை உருக்கஉருகும் இதுவேவாலை ரசமாகும். குப்பியில் வைத்து எ-று. (க0டுஎ)

வெண்மதிவெண்வங்கரசமேவுமபத் தாடிவித்து ஒருசேருருக வெண்சாரணைமூறி, உண்ணும்ரசமோர்பலம தாகவிடுவிர்காண் ஒடுருகஆடிசலமோடியதுபாயும்,கண்ணும்ரசவாலையதுசூதமணிபேமெடண்ணுவிடுஞ் சுத்தசலவெள்வங்கநீருலும், கொண்ணுவிடுமே குளிகைகோடிபரிவேதை குப்பியிலடக்கிரசங் கொண்டிடவுஞ் செய்யே.

(இ-ள்.) வெள்வங்கத்தை ஒருசேர் உருக்கி வெள்ளைச்சாரணை ரசத்தை ஒவ்வொருபலமாகவிட்டு ஒடிப்பாய்ந்தால் சூதமணியாகும் அதினுல் கோடிவேதையாடலாம் எ-று. (க0டுஅ)

இந்தரசமாமதுவுமேமரசமாகும், அந்தரசதேய்வுஇடை யயமதிருபத்தும், இந்தகுகைதன்னிலதுநீரதுரோலாகில், அந்தமதிவங்கமோ வராகனிடையூட்டே.

(இ-ள்.) இந்தரசமணியானது ஏமரசமாம் வங்கத்தைநீர்எடுத்து ஒருவராகனெடை சேர்ப்பாய் எ-று. (கoருக)

ஊட்டியுமியூதிபெடுபத்தரைபுமாகும் ஒடிமிரசிதமெனுமொண்ணரையுமாகும், காட்டியவெண்வங்கரச முப்பதொருவஞ்சம் காட்டையில்வராகனிடை கனகமதுவாண்டே, எட்டினில்வதிப்பதனுபோகியருளாலும் எட்டியிதுபத்தரையு மேருமயமாகும், நீட்டிடுங்காரியசலசூதரசவேதை நாட்டினிலுமுண்டுரச நன்பரிசப்புகையே.

(இ-ள்.) அப்படிசேர்த்து உமிநெருப்பில் ஊதிஎடுத்தால் பத்தரைமாற்றும் இதில் மற்றலோகங்கள் சேர்க்குமளவுவெள்ளி ஒன்றரையும். வெள்வங்கம் முப்பதும் ரசம்ஐந்தும், கனகம்ஒன்றும் வராகனெடை கணக்காகக்கூட்டவேண்டும் இவைசாஸ்திரங்களில் சொல்லியமுறைகளேயாகும் அன்றிக்காரீயம் சூதம் சம்பந்தப்பட்ட வேதைகளும் உலகத்தில் உண்டு எ-று. (கoசுo)

புகைக்குஉமிசூதரச வங்கமிதுகோகுபொன்மயவ்வராகனிடைபோடுங்கருநீரு, துகைக்குபதினயிர மணங்குஇடைதேய்வு சூக்ஷமிதுசூதமிதுசூதமிதுசொன்னேன், நகைக்கரசவாதமிதுக் கேவலதுசெய்யும் ராஜர்களுநாடுமகிழ்நாமிவர்க்கமைத்த, வகைக்குநவலோகபரிதங்கமயமாகும் புகைக்குமிகருண்டோசெய பூபதிகாணுண்டே.

(இ-ள்) இது சூதரசவங்கமாகும் பொன்மயமுமாகும் இதுவேவெகுசூக்ஷமாம் இதுவேஉயர்ந்த ரசவாதமாகும் இதுவேபூபதியாம் ஆகையால் இதற்கு ஒப்பானதொன்றுமில்லை எ-று. (சoசுக)

## வே று.

கிண்ணமதிலன்னமொடு ஆவினமிர்தங்கள், அன்னபருசுவையுமொடு அதிதவகைபெல்லாம், இன்னவகையுள்ளசட மென்னநிறமாகும், வர்னபரிதங்கவொளி சொன்னேனதொழிலாண்டே.

(இ-ள்.) கிண்ணத்தில் அன்னமும் ஆவின்பாலும் அறுசுவைகளும்சேர்த்துபுசித்த சரீரமானது தங்கஒளியாகும் எ-று. (கoசுஉ

அமுரியிதிலுண்ணசடமாக்கையழியாது, அமிர்தவொளியுதியுங்கதிர்வழலையதினாலும், அமிர்தரசபாணமுறு காயம்பெலமாகும் அமுரிரவிமதிதரச வேதையொடுவாமே.

(இ-ள்.) அமுரியில் தின்ன சரீரம் அழியாது, மதி, வழலைமுதலியவைகளும் அமிர்தரசபானத்தினால் உறுதியாம் எ-று. (கoசுந)

கற்பமதிலுண்ணசடசொற்பமதுவல்ல,விற்பசுவினைதரசபானமதினாலும், உற்பகநரம்புதசநாடிவலுவாகும், இப்பொருளறிந்தவர்கள் கற்பனைசெய்வாரே.

(இ-ள்). கற்பமுண்டசரீரம் அற்பமல்ல, வினோதரசபானத்தினாலும் தசநாடிகளும் வலிவாம் இதையுணர்ந்தவர்கள் கற்பசாதனைசெய்வார்கள் எ-று.

அக்கினிமிகுந்துவள ர்ந்தமதுகோடி, திக்கினில்சித்தாதிகளுஞ் செய்கையுணர்வாரோ, கைக்கனியிதற்குமணி மந்திரமறிந்தால்,அக் கரையுந்தாண்டியனுக் கிரகம்பெறுவாரே.

(இ-ள்.) அக்கினிமிகுந்து வளர்ந்தவைகள்கோடிசர்வதிக்குகளிலுமுள்ள சித்தர்களெல்லாம் செய்கையை உணரமாட்டார்கள்இதின் மணிமந்திரத்தை யுள்ளபடி யுணர்ந்தால் அந்தக்கரையைக்கடந்து அனுக்கிரகத்தையடைவார் கள் எ-று. (க0சுரு)

முப்புவுமறிந்துவுரைதப்புமோகைபாகம். இப்படியுடற்குறியுஞ்செப்பிடுஞ்சாஸ்திரம், சொற்படியுரைத்த திருவள்ளுவனுணர்ந்த இப்புவியிலும்மறிவ ரெந்தனுரைபாண்டே.

(இ-ள்.) முப்புவினைஉணர்ந்தும் கைபாகம்தப்பாகாது இப்படியெல்லாம் சரீரக்குறிப்புகளையெல்லாஞ் சாஸ்திரஞ் சொல்லாநிற்கும் என்னுரையை இவ்வுலகத்தார்களெல்லாம் உணர்வார்கள் எ-று. (க0சுசு)

வேறு-கவி.

ஆடலாங்கடலுப்புவினால்ரசம் காடெலாமுடல்காந்தமலரினால் ஓடெலாம்ரசவாதிகள் தேடினும், வீடெலாம்வெளி வேதைக்குருவதே.

(இ-ள்.) கடலுப்பினால் ரசவேதைசெய்தாடலாம் காடெல்லாம் உண்டாயிருக்கின்ற மலரினால் ஓட்டுகளெல்லாம் வறிகள்தேடினாலும் வீடுகளிலெல்லாம் வேதைக்குரு இருக்கின்றன எ-று. (க0சுஎ)

உப்பென்றுஞ்ருவானஉப்பேதுகாண், செப்பினார்தெட்சணையனருளினால், கைப்புமாறிக்கடல்நுரைகட்டியும், வைப்புகாண்கடல் வாரிக்கல்லுப்பதே.

(இ-ள்.) உப்பென்றுசொன்னால் தெட்சணையன் சொன்னதே உப்பாகும் அதனால் கைப்பானது மாறிக்கடனுரையின் கட்டியே சமுத்திரக்கல்லுப்பாம்

காந்தமாமலர்காட்டினிலுப்புகாண், ஆய்ந்துபார்க்க அடிமூல சுன்னமாம், மாய்ந்துமாய்ந்துவரும்புளிமாறினால், தோய்ந்துஅப்பவுந் தோய்ந்ததுசொக்குமே.

(இ-ள்.) காந்தமாமலர் என்பது காட்டிலுள்ளஉப்பாகும்அதைஆராய்ந்து பார்த்தால் அடிமூலம் சுன்னமாம் புளிப்புமாறினால் அதுவும் கெட்டுவரும் அப்புவில் தோய்ந்துசொக்கும் எ-று. (க0சுஅ)

அமுரியுப்புமப்பூவுங்கடசலம், அமுரியுப்புமடி மூலம்புக்கினால் அமுரியுப்புமம் மண்ணதில்பூர்க்குமாய் அமுரிமூல மதிதசுன்னங்களே,

(இ-ள்.) அமுரிஉப்பும், அப்புவும் கடல்சலமாம் அவைகளின் அடிமூல த்திற்புகுந்தால் அமுரியுப்பும் மண்ணிற்பூக்கும் பிறகுசுண்ணமாம் எ-று.

காந்தமாமலர்கதிரோனுஞ்சூரியன், ஆய்ந்துபாருமதுபுளிமண்ணுதான், சேர்ந்துதான்கடலுப்புவுங்கூடினுல், ஈந்துதானுமீதுகிசரிப்லையே.

(இ-ள்) காந்தமலர்என்பது சூரியனும் ஆராய்ந்துபார்த்தால் அதுபுளியானுலும் மண்ணினுலும் சேர்ந்தால் அத்துடன் கடல்உப்பு கூடினுல் இதற்கு வேறேரொப்பில்லை எ-று. (௧௦௭௧)

காடுகாடுகாடென்றலறிவரோ, காடுதான்சருகண்டமகத்துகள் வீடுவீடுவீடென்றுனுன்னுக்குள்ளே நாடுநாடெலாம்நாடித்திரிவதே.

(இ-ள்.) காடு, காடு, என்றுசொன்னுல் யாவரும் உணரமாட்டார்கள் காட்டின்மர்மத்தைக் கண்டமகத்துக்கள் வீடு, வீடு, என்றுல் உனக்குள்ளேயாம் அதைவெளியில் திரிந்துபார்ப்பதில் பயனில்லை எ-று. (௧௦௭௨)

வறுமையேன்வரும்வாதிகளுங்களுக், கருமையில்லை காண்கல்லுப்பறிந்ததால,உருமையாயருவானக்கல்லுப்புதான்,சிறுமையேன் வருஞ் சித்தர்சொன்ஞர்களே.

(இ-ள்.) வாதிகாள் உங்களுக்கு வறுமை ஏன்வரும்? கல்லுப்புணர்ந்தால் கருவில்லை கல்லுப்பினுல் சிறுமைவராது எ-று. (௧௦௭௩)

வேறு-கவி.

இடைபின்மேவுகலைசுழியிலங்குமதியிரவிசூழுமணி முடியினில், விடபரங்கிரியிலமிர்தஞான சுகவெளிகடந்துஒளிமேவியான், சடைமுடிமகுடமலர்பொழிந்தருளில் தற்பரத்தினடிதொழுதுயான்,நிடதராஜயோகவாலைகுண்டலிபி னிருவிதாளடியைபணிகுவாம்.

(இ-ள்.) இடைகலை, பிங்கலை, சுழிமுனை இவைகள்சூழும் உச்சியில்விளங்குகின்ற ஞானசகாயத்தைக்கடந்து சடைமுடியின்கண் அருள்பொழிந்து தொழுது நிடதராஜயோகநிலைமையில் முன்னேனடியைவணங்குவாம் எ-று.

மகிதலங்கருவூரிலகுநாடியல்புகல்வாரிசூழ்மதுரவேணியில், அகிலமேவுசுதிசந்திரபுஷ்கரணி அமிர்மாமதிதன்ரவிபதம், பகிரதிகள் திருநடனபொற்சமலயாதபங்கயமுநாடியான், செவுனருகூசடாதரமேவிவளர்கெதியில் நின்றுதொழுதேத்துவாம்.

(இ-ள்.) உலகின்கண் கருவூரில் சமுத்திரஞ்சூழ்ந்த மதுரமான வேணியின்கண் சந்திரபுஷ்கரணி பாய்கின்றவிபாதத்தை விரும்பி சடாதார கெதியிலிருந்து தொழுது துதிப்போம் எ-று. (௧௦௭௫)

மருவுஞானவொளி மதிவிளங்குமணி மலர்முடிக்கமலமீதினில் கருவூர்நாடுதிரு நடனகாயபுரி கருணைஞானதமிழ்பொழியவும், திருவருளமிர்த ஞானவெட்டிதெளிந் தோதியானுமிவை கூறுவாம், இருள்விளங்குமனுக் கிரகசோதியரு ளென்னூலின் மொழியையோதுவாம்.

(இ-ள்.) ஞானதேஜசையுடைய மணிமவர்போன்ற முடிச்தாமரையின் மேல் கருவூர் நாடாகியகாயாபுரியில் கருணைஞானதமிழ்பொழியவும் இருளானது விளக்குகின்ற கிரகசோதியை நான் சொல்லுகிறேன் எ-று. (க0எசு)

பொதிகைமேவுமகத்தீசராவெனதுபோதஞான தமிழ்வாக்கியம் மதிவிளங்கும்ரவிசுடர்பதம்ரவி மலர்பொழிந்துகிதாழு தோதினன், விதியிருந்துமதிபாலுணர்ந்துவிழி சுழியறிந்துதமிழ் பொழியவும், பதியஞானபரிபூரணத்தினடிபாதபொற்கமலம் பணிகுவாம்.

(இ-ள்.) அகத்தியரால போதஞானத்தமிழ் வாச்கியமாகசுடர்பாதத்தை வணக்கி மலர்பொழிந்துதொழுது சொன்னன் ஆனல்பரிபூரணத்தின் பாதப் போதைப்பணிகுவாம் எ-று. (க0எஎ)

சண்டமாருதக் குழம்பையானருள சனகனாதிபல முனிவரும், அண்டர்கோனருள் பதினெண்பேர்கள்மகிமாயிரத் தைந்நூறதும் தெண்டிரையுங்கடல்மேரு தோறுஞ்சிவஞான சித்தர்கள்புகழ்ந்திட கண்டிரோஜெகதி மானுகாளுடலில் காயசித்தி குழம்பாண்டையே

(இ-ள்.) சண்டமாருதக்குழம்பை நான்சொல்ல சனகன்முதலிய பலமுனிவர்களும் பதினெண்பேர்சித்தர்களும் சிவஞானசித்தர்களும் புகழ இது காயசித்தி குழம்பாகும் எ-று. (க0எஅ)

தன்னைத்தானறிய சண்டமாருதமுஞ் சாம்புவனருளுஞ் சார்புவி, மன்னர்மண்டலிகாராஜபூபதிகள் மகிதலத்தினிலும் வாழ்பவர், உண்ணுங்கற்பமதுக் கொன்றுகோடிபல ஊழ்வினைக்குமிது அவிழ்தமாம், வென்றிடும்வினையைவேதையாமிதனில் வெகுப்பிதப்பிணி நோய்விடுவதே.

(இ-ள்.) தன்னைத்தான் அறிய சண்டமாருதமுஞ் சாம்புவன் அருளும்சார்பும் ராஜராஜர்கள் மகிழ அநேக ஊழ்வினைகளுக்கெல்லாம் ஔஷதமாம் இதனால் வெகுபேய்ப்பிணி விடுகெனவாகும் எ-று. (க0எகூ)

மூலசுத்தியிதில் மும்மலங்களறு முன்னோர்சொல்லுங் கரிசாலைதான், வாலையாகும்ரச வாதமும்வருதல்வானோர்சொல்வதும்வல்லாரையேன், காலைமாலையதுங்காரசாரமுணர் காயசித்தியாங்கற்பமாம் சோலைமாமலர் விலாசவாசமெனு ருக்ஷருக்ஷசடாதாரமெ,

(இ-ள்.) இதனால் மும்மலங்களும் நீங்கும் முன்னோர்களாற் சொல்லப்பட்டகரிசாலையே வாலையாகும், ரசவாதம் வருவதும் நேலர்கள் சொல்வதும் வல்லாரையாகும் காலைமாலைகளில் காரசாரமுணர்ந்தால் காயசித்தியாகின்ற கற்பமாகும் இதுவேகுருகுளிகையுமாம் எ-று. (கoஅo)

சண்டமாருதக்குழம்பு-சரு.

சண்டமாருதக்குழம்பிது சாறுமென்றெண்டே-பிர
சண்டதேகமொழிந்தேவச்சிர தேகமாகன்றே.

(இ-ள்.) இது சண்டமாருதக்குழம்பாகும் இது இத்தேகத்தை வஜ்ஜிர தேகமாக்கும் எ-று.

அண்டரண்டம் வானத்தளாவிய மாமலைகுழும்-வேணி-அற்புத சந்திரபுஷ்கரணிதீர்த்தம்வாழும்-கதிர், மண்டல மண்டரண்டங்களுலாவியவாசி-மதி-மண்டலஞ்சூடியமாமலர் ஞானோபதேசி-கழி, தின் றிலகுங்கெதன்பொதிகைவளர்தெக்ஷணயன்-சகம்-நீடிலகும்புகழ்ச் சித்தபூசிக்குநேயன்-அருள், கண்டுபொற்கமல பாதபங்கயத்தை நாடி-பிர-சண்டமாருதக்குழம்பையருளுவேன்தேடி. சண்

(இ-ள்.) அகஸ்தியர்முதலிய பெரியோர்களுடைய திருவடித் தாமரைகளைவிரும்பி பிரசண்டமாருதக்குழம்பை யான்பாடுவேன் எ-று. (கoஅக)

பாமண்டலமண்டரண்டங்களும் பேதிக்கப்போடும்-ராம-பாணத்துக்குப்பின்னிலைக்குப்போகாமலுஞ்சாடும்-சா, மண்டலங்கட்டியறுத்திடலாந்திவ்விய அஸ்திரம்-சார-காரத்தின் வழுபத்துநால்வருமெம்பாத்திரம்-சுர, பாணத்தினுல்மேகத்திவுதியாத்திரமேகும்-சேத்திமந்தொண்ணூற்றாறுமொருபக்ஷத்தில்மீறியும்வேகும்-கரை, காணப்பிரசண்டத்தைச் சொல்லஎன்றால் வெள்ளேடில்லே- கர்மகோய்கள் தொலைந்து வச்சிரதேகமாங்கல்லே. சண்ட

(இ-ள்.) அண்டரண்டங்களைப் பேதிக்கும், ராமபாணத்துக்குப் பின்னிடையாத வெகுதிவ்வியாஸ்திரமாம் ஆதலால் அறுபத்துநான்கு சாரக்குகளும் எவ்வளவு? மேகம் ஓடிப்போம், 96-சேத்ரம் 15-நாளிலும் போகும், தேகம் வஜ்ஜிரமாகும் எ-று. (கoஅஉ)

வெறண்டுங்காண்விரணமுழிப்பறந்திடுந்தஞ்சம்-மேகம் - இருபத்தொன்றுந்தூசிபோலபறந்திடுஞ்சிங்கம்-வருங், கண்டகுலைக்ஷயகாசமகோதாசிகக்குன்மம்-குத்தல்-கண்டைபிடிமதமேக மகோதரந்தம்பம்-வாய்வு, அண்டவாதமகோபாப்புசர்ணிகழும் விஷநோய் நெஞ்சலிதாண்டைவலி தொண்டைவாரமுபவுத்திரஞ் சுரநோய்புகை, கொண்டிபுண்புரைகளண்டப்புற்றும் யோனிப்புற்றும்-முட்டல்வாதம் சூலிவாதஞ்சந்துவாதங்கன்னப்புற்றும். சண்ட

(இ-ள்.) ஊழ்வினைபறக்கும், மேகம் 21-ம், சூலை, க்ஷயம், காசம், அரோசகம், குன்மம், குத்தல், மண்டையிடி, மதுமேகம், மகோதரம், வாயு, அண்டவாதம், அரையாப்பு, வயிற்றுநோய், நெஞ்சுவலி, தொண்டைவலி, தொடைவாழை, பவுத்திரம், சுரம், புண்புரைகள், அண்டப்புற்று, யோனிப்புற்றுகுடல்வாதம், கூனிவாதம், சந்துவாதம். கன்னப்புற்று இவைகளெல்லாம் சொஸ்தமாகும் எ-று. (௧௦௮௩

சூதங்கெந்தியரிதாரமனோசிலைபூரம்-கெவுரி-சூஸ்திரநாபியிருவி
நிருவிஷம்லிங்கம்பத்தும்,சோதியீரைஞ்சுவராகனிடைகொண்டுசிலை
கயிறு-தொங்கவிட்டுப்பாண்டந் தோளாந்திரமெனும்வாலை -அமுரி
விதநாலுங்கொன்று மூலப்புளியெனுங்காரஞ்-சீனம், வெங்சாரம் பூ
நீர்வெடியுப்புதேனுப்புச்சாரம்-பானம்-வேதைஉப்பு அய்புலிந்துப்
புடன்மேனியுருவி - வளையில், மேவுமீரஞ்சுவிசிதமறிந்தருள் போற்
றே.
சண்ட

(இ-ள்.) ரசம், கந்தகம், அரிதாரம், மனோசிலை. பூரம், கௌரி, சூத்திரநாபி, இருவி, நிர்விஷம் லிங்கப்புற்று, பலகரை இவைகள்வகைக்குபத்துவராகனெடை கொண்டு சீலையில்முடிந்து பாண்டத்தில் தோளாந்திரமாய்விட்டு அமுரிவிட்டு மூலப்புளிஎன்கிற வெங்காரம், படிகாரம், சீனவெங்காரம், பூநீறு வெடியுப்பு, தேனுப்பு, சாரம், இந்துப்பு, மேனியுப்பு நாயுருவிஉப்பு: வளையலுப்பு இந்தப்பத்தும் எ-று. (௧௦௮௪)

லவணமீரஞ்சுமிடைசரக்கவ்விடைதூக்கி-சாரங்-கவனத்துடன்
காரநீர்தெளிந்தேயன்னீர்தாக்கி-இன,மவுனத்துடன் காரசாரத்தில்
நீறதில்பூட்டி-உப்பு-லவணத்தையும்பொடிசெய்து நாதவிந்திலூட்டி
பாகங் கெவுனத்திலும்பாண்டங்கேசரமாகவுஞ்சாற்றி-வாலை-புவனை
யெனும்பதம்போற்றித்தோளாந்திரமேற்றிக்-கனல்,கவனமதாகநீர்
தொக்கிடவன்னியதைத்தாழ்த்தி-சோதி-கமலப்பிரகாசஒளிவுவரும்
பதமாற்றி.
சண்ட

(இ-ள்.) ஒவ்வொன்று பத்துவராகனெடை எடுத்துப்பொடித்து அப்பாண்டத்தில் அமுரியில்போட்டு அடுப்பேற்றி எரித்துசலம்வரளுஞ் சமயத்தில் அடுப்புத்தீயைக்குறைத்து எ-று. (௧௦௮௫)

பார்த்துவரும்பதம்பாச்சிப்பீங்கானதில்காரம்-பின்னுங்-கார்த்
துக்கதிரவன்வேகம்படஒருவாரம்-இதை,சேர்த்துவைத்திடுஞ்சர்க்க
ரையைப்போல்வரும்பாகம்-மருந் - தேத்துந்தோளாந்திரமெடுத்து
மேவிடும்வேகம்-ரசம், வேற்றுமையில்லாமிகவுமேன்மேல் சுற்றிப்
பாரும்-மெழு-கேத்துஞ்சரக்கதிதங்களைத்துமேதேறும - அருள்,
சாற்றிமதிமலர்சற்குருமாமுனிபாதம்-வகை-நீற்றுஞ்சரக்கு நிகரிது
க்குத் தொந்தபேதம்-புகழ்.
சண்ட

(இ-ள்.) அந்தச்சமயத்தில் அக்குழம்பைப் பீங்கானில்வைத்து ஒருவாரம்வரைக்கும் சூரியனில்வைத்தால் அதுசர்க்கரையைப்போலவரும் அந்தச் சமயத்தில் தோளாந்திரத்தைஎடுத்து இதற்குச் சேர்க்கவேண்டிய சரக்குகள்.

வாதமடக்கியுந்திப்பிலிசுக்குடனேமம்-வளர்-சீரகம்ரெண்டு அரத்தைப்பறங்கிக்குரோசானி-கடுகு, வீரம்வராகனிடை பொன்னிறமதாய்மேவும்-கனல்-ரீதமதாய்பதமாக்கசரக்கிதைவெதுப்பும் -பின்பு,பேதம்வராமல்பொடி பிலக்கநாட்டியிடித்து-ஆண்டே, சேதம்வராதேந்தன்செய்பதங்கள்வாமுடித்து-மேலும்,நாதவிந்துகருவூர்வளநாட்டினிலிலகும்-வேதஞானமொருநன்னூலாபிரத்தைந்நூறுமாய்ந்தோ-ரிது. சண்ட

(இ-ள்.) ஆமணக்கு, திப்பிலி, சுக்கு, ஓமம். கருஞ்சீரகம்,நற்சீரகம், சிற்றரத்தை, பறங்கிச்சக்கை, குரோசாணி ஓமம், கடுகு ஒவ்வொன்றும் ஒவ்வொரு வராகனெடை நிறுத்திப் பொன்வறலாய் செய்து சூரணஞ்செய்து எ-று.

அதுமதுரங்கோஷ்டங்கடுகரோகணிகடுக்காய்-சிங்கி-அக்கரகாரமாவாரையுங்காக்கணஞ்சிவதை-பிதூர்,துதியீரஞ்சு மெடுத்துப்பொன்வறுப்பாய்தொடுத்துப்-பொடி-விதித்துவடித்துகஸ்தூரி குங்குமங்காயம்-பச்சை,மதித்திடுங்குரேசனை வகைமிதுமஞ்சு-மகிழ்-வதிதமொன்றுவராகனிடைவகைக் கொன்றுளங், கதித்திடுமுன்போலபொடியதுஞ்செப்துபாகம்-பதங்-கச்சூருந்திராட்சி பனைவட்டுந்தேங்காயின்கரியும்-இவை சண்ட

(இ-ள்.) அதிமதுரம், கோஷ்டம், கடுகுரோகணி,கடுக்காய்,கடுக்காய்ப்பூ அக்கராகாரம், ஆவாரைசமூலம், காக்கட்டாம்வேர், சிவதை, பீதரோகணி இப்பத்தும் எடுத்துப்பொன்வறலாய் வறுத்து சூரணஞ்செய்து கஸ்தூரி, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், கோரோசனம், இவைவந்தும் ஒவ்வொரு வராகனெடை பொடிசெய்து, கர்ச்சூர் திராட்சை, தேங்காய்கதியும் சரியாய்ச்சேர்த்து எ-று. (கoஅஅ

பொருந்துமம்பிகைப்பொற்கமலபதம் பணிந்து-வாளம்-மருந்தைச்சுத்திவசப்படுத்தி அவ்வசையில்-பதம், இருந்தமருந்துமிவ்விடைய்ம்பதுவராகன்-நெடுந்தருந்தமாகத்தொடுத்துசற்குருவைத்தொழுது-சுகம்,விருந்தமுன்மருந்தருந்திடுநூறுமாச்சுபற்பம்விராசனிடையசெம்புவெண்ணிறமாகவும்பாச்சு-குரு-புருவத்தி னடுசுழிமுனைமலர்சொரிந்து-புகல்,புனிதமாமெனுங் குளிக்கல்தனில்பரிந்துசெய்கை. சண்ட

(இ-ள்.) அம்பிகையின்பாதத்தை வணங்கி சுத்திசெய்தவாளம் ஐம்பது வராகனெடை சேர்த்து குருவைவணங்கி இவைகளெல்லாவற்றையுங்கல்வத்திலிட்டு எ-று. (கoஅகூ)

கோமட்டிமாதளம்பழத்தநின்ரசம்விடுத்து-இணைகுறுக்கிடாமலுமூன்றுநாளாட்டிமயனம்மெரி,யாமணக்கின்வித்தில்தயிலயாமதுமிறக்கி-அருள்-அத்தயிலம்விடும்பதமாயாட்டி முன்போல்-இவை பூமணக்குங்கருநொச்சிவெள்ளறுகுதுளசி-டனல்- கண்டுபொற்கையான்வல்லாரைகரிசாலைபிரமி-சங்கும்-எமாசமெறிந்தெலுமிச்சம்பழரசந்தான்-இதை, பிணைவிடாமல்வகைக்குமூன்றுதினமருவி. சண்ட

(இ-ள்.) புளிப்புமாதளம் பழரசம்விட்டு ௩-நாள் அரைத்து, ஆமணக்கின் தயிலத்தினுல் ௩-நாள் அரைத்து, கருநொச்சி, வெள்ளறுகு, துளசி, புனல் தண்டு பொற்கையான், வல்லாரை, கரிசாலங்கண்ணி, பிரம, சங்கு, எலுமிச்சம் பழச்சாறு இவைகளால் ஒவ்வொன்றுக்கு மும்மூன்று நாள் அரைத்து.

வகைக்கொன்றுவித மூன்றுநாளிராதமூலி-செய்கை - வகையநாயுணர்முப்பத்தைந்துநாளாட்டியும் வழித்து-இவை, தகைகணக்கறிந்தொருமனதொன்றுககமாய்-பின்னுந்-துன்பம்வராமலுமின்பசையோகவைராக்கியம-மயில், நகைசகைதது மினுக்கிக் குலுக்கள் வாசம்-மேலும்-காடிநாடிடாமலும் ராசயோகந்தனில் நேசங்குருஉகையிதற்கு வாலாம்பிகைபாதமென்றுடே-தொழு, துள்ளங்களிந்துடன்வள்ளலெனும்பதம்போற்றி. சண்ட

(இ-ள்.) இப்படி ௩௫-நாளரைத்து குருமுதலானோர் திருவடிகளை உண்மையாய் உள்ளபடிவணங்கித் தோத்திரஞ்செய்து எ-று. (௧0௬௧)

சண்டமாருதக்குழம்பை வழித்துச்சிமிளில்-ஏனஞ்- சார்வாய் வெகுபந்தனங்களடைவாய் நெற்பாண்டம்-மறை, மண்டலம்வைத்துவாலாம்பிகைபொற்பதம்பணித்து-வரும்,வல்வினையூழி மகாசுரஞ்சன்னிகள்மாந்தம-யாலே-½தண்டிடுமுக்கல்பிரளியுமன்னுட னிசுவும்மிக, கக்கல்கறுத்தகிரகதோஷமுங்கவிசை-வலி - நின்றிடுமூர்ச்சையும்விக்கலுமேப்பமுமிரைச்சல்-உஷ்ணம்-வெதுப்புமதுப்புங் காக்கவலியதுங்கொறுக்கை. சண்ட

(இ-ள்.) மேற்படியாக அரைத்தசண்டமாருதக்குழம்பை வழித்துபதனம் பண்ணி நெற்சமாதிவைத்து ௧ மண்டலம் சென்றபின்வாலாம்பிகையைப் பணித்து வல்வினையால்வரும், சுரம், சந்நிமாந்தம், முக்கல், பிரளி, அன்னு, இசிவு, கக்கல் கிரகதோஷம், கவிசை, வலி, மூர்ச்சை, விக்கல், எப்பம், இரைச்சல் உஷ்ணம், வெதுப்பு காக்கைவலி, கொறுக்கைவலி எ-று. (௧0௬௨)

குமரகண்டவலியக்கினிமந்தமுங் கொலைநோய்-குடி-கெடுக்கும் வாய்வினுல்மூடிக்குக்கடிப்புப்பிடிப்பும்-இவை-திமிருடன் தசவாய்வுமெழுப்பிடுங்குழப்பு-கிண்டி,திப்பிலிசுக்குடன்மிளகுந் தேனைவிட்டரைத்து-அதில்-சமாசமெனுங்கட்டிக்கழஞ்சிப்பிரமாணம்-உண்டை

தனையதாக்குள் குழம்பிட்டுத்தாக்கிடுநோய்க்குாளி-அவிழ்தமிதுவெ
ஆங்காலையில் நோயதக்கருது-மிக்க, அவிழ்தமூட்டி முன்னம்வேம்
புடன்யதிரி. சண்ட

(இ-ள்.) குமரகண்டவலி, அக்கினிமாந்தியம், கொலைநோய், வாதப்பிடிப்பு, திமிர்தசவாயு. இவைகளுக்கு சுக்கு, திப்பிலி, மிளகு இத்தேன்விட்டரைத்து கெச்சைக்காயளவெடுத்து அதற்குள் குழம்பைவைத்து காலையில்கொடுத்து, வேப்பிலைகருக்கிக் காஷாயஞ்செய்து மாலையில் கொடுக்கவும் எ-று.

அகாரஉகார ஒங்காரமூன்றெழுத்தினாலு மதமாகும் பிணிநோயகன்றுவிடும்படி அதமாய், சிகாரவகாரநகாரமவ்வெழுத்தும்-செபி
தெளிந்துட நாற்றியெட்டுஉதிரூபமாய், விகாரமதாகிய நோய்கள்
பறந்திடுஞ்சுகமாய் விதி-மேலிஅவிழ்தம்விளங்கிடுமெஞ்சுகாளசுமாய்
காலை சுகாதிதசுகமொருவேளை கணக்காய்சொன்னோம்தொழிலாளி
யாலுல் மணிமந்திரமெனுமவிழ்தம். சண்ட

(இ-ள்.) அகர, உகர, ஓங்காரம்என்னும் மூன்றட்சரங்களினாலும் நோய்கள் நீங்கிவிடும்படி சிகார,வகாரங்களைச்செபித்துக்கொடுக்க சர்வநோய்களும் சுகமாய்ப்பறந்தோடும். இம்மருந்தைப்-நாள் காலை.மாத்திரம்ஒருகணக்காகச் சாப்பிடவேண்டும் தொழிலாளியினால் மணி மந்திர, ஔஷதம் கைகூடும்.

பிரசண்டமாருதபேதாபேதம் பிறித்தாண்டே-சொல்லும்-பெ
ரியோர் வரப்பிரசாதகர்த்தா விநகண்டே-பிணி-குறைவாராதகாண்
பத்தியமு மிச்சாபத்தியம்-குலை-குலைந்துநோய்கள்போங்குணவல்லி
யமிந்தகுழம்பு பின்புதிரையில்லாமலுஞ் சுக்குடன்திப்பிலி மிளகும்
வென்னீர், திலுசதைக்கொண்டுசுரசமாமதில்தேனுங்கிண்டி- பரவசமிது அவிழ்தமுங்கொண்டு பாச்சி-பரி-பூரணமாசவுங் காலையி லஞ்சு
நாள் முன்போலருள். சண்ட

(இ-ள்.) பிரசண்டமாருதமான இன்பேதாபேதத்தைப்பெரியோர்களின் வரப்பிரசாதத்தினால்சொன்னேன் இந்தமருந்தைத்தின்று இச்சாபத்தியங்காக்கவேண்டியது அப்படியிருந்தால் நோய்கள்நீங்கும் இதைசுக்கு மிளகு, திப்பிலி இவைகளைச்சுரசஞ்செய்து தேன்விட்டு அதிற்கொடுக்க 5-நாளில் காலையில் சாப்பிடவேண்டும் எ-று. (கoகரு)

வாலப்பருவம்வருமளவில் வந்தகுன்மம்-மதி-மயங்கியுங் கடல்
புக்கிடும்பாரிதுபரிக்ஷை-பின்னும்,மாலைப்பருவமது நாலும்பத்துட
ன்சென்றால்-வஸ்து-பானத்திலுங்குழம்பெடுத்துக் கிண்டியிட்டேட்டி
இன்பச், சோலைமறப்புடைகொசுவித்தேனதில்பாச்சிஇந்த - சூலைப
தினெட்டுக்குன்மமெட்டும்பறந்தோடும்சொல்லும், வேலைவிழிமட
மாது சூதகத்தினோய்க்குமிதுவிடுமந்தப்பாக மேதினியோர்களுக்
காமே. சண்ட

(இ-ள்.) அதனல் குன்மம் நிவர்த்தியாகும், இந்தக்குதம்பை சாருய அநு பானத்திற்கொடுத்தாலும் கொசுத்தேனிற்கொடுத்தாலும் சூலகுணமாம்குத கநோய்க்கு எ-று. (௧0௯௯)

கொச்சகம்.

வேல்பொழியுமாது வின்பரசவாலையருள்
பாலுமெனக்கூட்டிமதி பானமிர்தமேபொழிய
ஞாலமெனுஞானவெட்டி நன்னூல்விதியாய்விளங்கும்
ஓலமிடுமம்பிகையை யுள்ளுணர்ந்துகண்டேனே.

(இ-ள்.) இன்பரசவாலாம்பிகையின் அருள்கொண்டு பாலில் அனுபானி த்துக் கொடுக்கவேண்டியது. இவைகளெல்லாம் ஞானவெட்டியான் என் னும் நல்லநூலில் சொன்னபடியுணர்ந்து நான்கண்டுகொண்டேன் எ-று.

தேனருவிபாய்ந்துசலங் தேங்குமடையோங்கிவளர்
வான்பொழியுநாதவிந்து மார்க்கமிந்தவாறதனல்
நான்மகிழ்ந்துநோய்தனக்கு நாட்டிலனைவோர்க்குமிது
ஞானபண்டிதர்க்குவிள்ளும் ஞாயமிதைக்காண்கிலரே.

(இ-ள்.) தேனருவியானது பாய்ந்து சலந்தேங்கி அதினல்மடையானது பிறந்து வளர்ந்துபொழிகின்ற நாதவிந்துக்களின்மார்க்கம்இந்நூலிற்சொன்ன படியால் நான்மகிழ்ந்து நாட்டிலுள்ளயாவர்க்கும் ஞான பண்டிதர்களுக்கும் சொல்லும் ஞாயம் இதுவாகும் இதைஎல்லோரும் உணரமாட்டார்கள் எ-று.

கலித்துறை.

பதினறுகண்ணி மதிரவிசூழும் பாடலையான்
விதிவாறின்மூல விவேகத்தினலறி விட்டகுறை
அதிவீரஞான திருவள்ளுவன்மொழி யவனிதனில்
நிதிமேவியதன மளித்தாலுமிந்நூல் நிகழ்விலரே.

(இ-ள்.) பதினறுகலைகளையுடைய சந்திரசூரியர்கள் சூழும் பாட்லைகான் நல்லவிவேகச்தினுலும் விட்டகுறையினுலும் திருவள்ளுவன்சொல்ல, சொன் னதாகும் கோடிதனங்கொடுத்தாலும் இந்நூலானதுயாவருக்கும்பயன்படாது

கற்றாலுஞானக் கருத்தறிந்தோர்கள் கமலபதம்
பெற்றாலுஞ்சித்திப் பேரின்பக்கல்வி பிறவாமுத்தி
வைத்தாலும்வெற்றி மருவியவர்பதம் வணங்கவும்யான்
சித்தாதிசித்தர் பதினெண்மர்தந்த திரவியமே

(இ-ள்.) ஞானக்கருத்தை உணர்ந்தவர்களின் திருவடித் தாமரைகளைப் பெற்றாலும் பிறவாதமுத்தியைவைத்தாலும் அவர்களுடைய பதங்களைவணங் கும் நான்சித்தர்களின் திருவடிகளை வணங்கின திரவியமாம் எ-று. (௧௧00)

வெண்பா.

கண்டீரோபண்டிதரே காலைதனில்கிண்டியது
சண்டமாருதக்குழம்பைச் சாற்றினல்-எண்டிசையில்
சீரகமாங்கஷாயத்தில் தேனும்பஞ்சதாரையிட்டு
நீரதுவுநாள்மூன்று நேர்.

(இ-ள்.) பண்டிதர்களே! நீங்கள்உணர்ந்தீர்களோ? காலையில் சண்டமாருதக்குழம்பை சீரகமஷாய அனுபானத்தில் தேனும், சர்க்கரையுங்கூட்டி-3 நாள் கொடுக்கவேண்டும் எ-று. (ககoக)

நீர்ச்சுருக்குநீர்க்கடுப்பு நீரடைப்புநீர்சுரப்பு
பாரதிதமேகமதும் பட்டுப்போம்-நீரதனல்
நிம்பப்பழத்தினுட னீரதுவிட்டூட்டியபின்
கம்பிதந்திமேகம்போங் காண்.

(இ-ள்.) நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு,நீர்சுரப்பு மேகம்இவைகள் குணமாம், எலுமிச்சம்பழச்சாற்றில்கொடுத்தால் தந்திமேகம்குணமாகும்.

வாதமுதல்வாய்வும் வரும்பித்தசேத்துமங்கள்
மாதவிடாசூதகமு மாண்டுபோம்-கோதையே
அவரைதொவரை அரக்கீரைதூதுளங்காய்
விரையில்லாக்கத்திரிப்பிஞ் சாம்.

(இ-ள்.) வாதக்காரணமானவாயுவும், பித்தங்களும், சேத்துமங்களும், மாதவிடாய்கலைத்து சூதகமும்குணமாம் பத்தியம்;— அரைக்கீரை, தூதுளங்காய், அவரை, துவரை, விரைப்பிடியாத கத்திரிப்பிஞ்சுமாகும் எ-று.

இருவினையால்தாக மெடுப்பதனலென்றறிந்து
கருத்தறியாதென்னவிதம் காரணமோ-இருவினைநோய்
விகாரமதுசன்னிவிடு மூன்றுநாளதனில்
அகாரமதுநீதன லாம்

(இ-ள்.) தேகமானது நல்வினை, தீவினைகளால் எடுப்பதாம் இந்தக்கருத்தையறியாதது என்னகாரணமோ? அவ்வினையினலுண்டாகின்ற சந்நி 13-க்கும் 3-நாள் பனிநீரில் அனுபானிக்கவும் எ-று. (ககoச)

சாரமதில்கிண்டி சண்டமாருதக்குழம்பு
தேறவுங்காணிஞ்சிரசந் தேனும்-சாரமதில்
அதிகாலையுண்ண அகலுஞ்சுரதோஷம்
சதிசெயுஞ்சன்னியும் போம்.

(இ-ள்.) இஞ்சிரசமும் தேனுங்கலந்து அதிகாலையில் உண்டால் சுரதோஷங்களுஞ் சந்நியும்போகும் எ-று. (ககoரு)

விருத்தம்.

ஆத்தையாமணக்கெண்ணெய்பாடாதோடை அதின்ரசத்திற்கு ழம்பதுவள் ன்றிதாக்கி, சுரசமிகஅவிழ்தமதையுதையகாலைச் சூரி யனைக் கதித்துப்பணிந்துடனுமுண்ண, பரிட்சையனுபோகமென்ன சத்தபேதி பலாபலந்தைக்கண்டுமருந்தூட்டுவீராய் வாட்சியொடு வாய்வுதசவாதம்பித்தம் மருவிவெகுநாள்ரிருந்தமந்தம்போமே.

(இ-ள்.) சிற்றாத்தை சிற்றாமணக்கெண்ணெய், ஆடாதோடை, இரசத்தில் ஒன்றில்குழம்பில் ஒருகுன்றிமணியளவுகொடுத்தால் வாட்சி, தசவாயுக்கள்வா தபித்தம் நாள்பட்டமந்தம் இவைகள்தீரும் எ-று. (௧௧௦௬)

அன்றவிட்டுப் பின்புகைய காலந்தன்னிலுமிக் குழம்புதனில் குன்றிதானுக்கொன்று, கண்டிரேபண்டிதரேபாலருக்குங் கருதாமுன் புசெய்கைவிதங்கருதியவர்காண், தெண்டிரையில் குழந்தைகளுக்கிசு வுமூர்ச்சைத் தெளிந்திடுங்கானப்பசுமுமள்ளுந்தீரும், கண்டுமொன் றுப்ப பிரளிசத்திவிக்கல்மூர்ச்சை சாந்தமாஞ்சாந்தமில்லா மறுநா ளுட்டே.

(இ-ள்.) உதயகாலத்தில் குழம்பில்குன்றி 4-கொடுக்க பாலர்மாந்தம்வலி மூர்ச்சை, உப்பிசம், அள்ளு, பிரளிவளி, வாந்தி, விக்கல், மூர்ச்சைஇவைகள் குணமாம் மறுநாளுங் கொடுக்கவேண்டியது எ-று. (௧௧௦௭)

நாவரட்சிதோஷமொடு சுரமுஞ்சன்னிநாள்தோறுங் கனசுரமு நாடுங்காலை, நாவுகரித்திடவிதாக்குழம்பிற்குன்றி தனையெடுத்துநாவி ரண்டுபாகம்வாங்கி பூவைபர்க்குமுன்பதாகாணவில்தேய்த்துப் புகல் வீராம் கடுவென்னீரையாழாக்கு, பாவையெனுமைந்தருக்குப் பின் புஆண்டே பாச்சிவிடுகுழம்புகுன்றி கால்பங்கூட்டே.

(இ-ள்.) இதில் ஒருகுன்றி நாவில்தேய்த்து அவ்யாழாக்கு வெந்நீர்கொ டுத்தால் நாவரட்சி, தோஷம், சுரம், சன்னி, தினசுரம் இவைகள்தீரும் எ-று.

ஊட்டுதிலத்துளசி அவித்துடன்சாற்றைக்கொண்டுரைத்துமரு ந்துடனேயுட்கொள்வீராகில், சாட்டியமாங்கிருமிபழமலமும்போத் துக் கக்கசுயுள்ள வாய்வுமுதல் ரெணமுந்தீரும், பாட்டிலிக்தப் படி சொன்னேனும் பாரில்பாண்பர் பண்டிதரேயுங்களுக்குப்பலிதமாகும் நாட்டினில்காலாயிரத்துநானூற்றெட்டு நல்வினையுந்தீவினைபுகாடா தாண்டே.

(இ-ள்.) திலத்துளசி சுரசத்திற்கொடுத்தால் கிருமி பழையமலம் சகதை யைப்பற்றினவாயுக்கணங்கள் இவைகள்தீரும் எ-று. (௧௧௦௯)

பரத்தைபர்க்குப்பழம்புளிப்புமானீர்கூட்டி பாலருக்குமருந்தூட் டிப்பால்தானூட்டி, காஞ்சன்னிதோஷமுதற் கிச்சாபத்தியம் கண்

டைக்காய்வற்றலரைக் கீரையாகும், உரிசையென்றஉப்புவறுத்துள் ளுக்கூட்டு ஒருபோதுமன்னமதுமுண்பீராகில், அறிவீராய்தசவாய் வுநோய்கட்கெல்லாம் ஆகாதுமாங்கிஷமு மாகாதாண்டே.

(இ-ள்.) பத்தியம் பழம்புளியும் மிளகுநீரும் சேர்க்கவேண்டும் குழப்தை களுக்கு மருந்துகொடுத்துபால்கூட்டு, சுரஞ் சந்நி இவைகளுக்கு இச்சாபத் தியம் அவை சுண்டைவற்றல், அரைக்கீரை, உப்புவறுத்தும், ஒருவேளை சாப் பாடும் வாதநோய்களுக்கெல்லாம் மாமிசம் உதவாது எ-று. (ககக0)

பாசியுடன்பருப்புமொச்சைக்கடலைமச்சம்பாக்குவெற்றிலைபுக லைசுண்ணும்போடும் காசியெனுங்கட்டியொடுகனிகள்தேங்காய் கன் னலொடுநல்லெண்ணெய்காற்றுநித்திரை பொசிப்பெடுத்தபின்புரவி யுறக்கமாகா பொழுதுகதிர்போனபின்பு புகல்வீராகில், தூசிபோல் பறந்துவிடுந் துன்பம்போகுந் துரைராஜபண்டிதர்க்குச் சொல்வீரா ண்டே.

(இ-ள்) பச்சைப்பருப்பு, மொச்சைக்கொட்டை, கடலை, மீன், பாக்கு' வெற்றிலை புகையிலை, சுண்ணும்பு, காசுகட்டி, பழவகைகள், தேங்காய். கரு ம்பு நல்லெண்ணெய். காற்று, நித்திரை, உண்டபின்தூங்கல், இளவெயிலி லிருத்தல் இவைகளாகிய அபத்தியஞ்செய்யாதிருந்து மாலைவெயில் விரும்பி ஞல் தூசைப்போல நோய்கள்பறந்துபோய்விடும் இவ்விதிகளைத் துரைராஜ பண்டிதர்கள் சொல்வார்கள் எ-று. (கசகக)

மாதர்கருக்குழியில்செனித் திடுநோய்சூலை வகையாறுவிதமது வுமணங்குகாலை, பதராகுங்கருக்குழியில் சதைதான்மூடிப் பாயாது விந்ததுவும் பாழாய்ப்போகும, விதுரமாங்கருக்குழியில்கிருமிசூழ்ந் தால்விந்ததனையுண்டுவெறும்பாழாம்பூமி, போதரவாய்கருக்குழியில் பூநீர்காரம் பூர்க்குமந்தப்பூமியைப்போல் பூத்தலாண்டே.

(இ-ள்.) பெணகளுடையகருப்பையில்உண்டாகும்யோனிச்சூலைகள்ஆறு விதமாகும் அவையாவன கருக்குழியில்சதைவளர்ந்து இருந்தால் அவ்விடத் தில் விந்துபாயாதிருப்பது ஒன்று, கருக்குழியில கிருமிகூடினல்அவ்விடத்தில செல்லும்விந்துவை அப்புழுக்கள் புசித்துவிடும் இது இரண்டாவது கருக்கு ழியில் பூநீறுபூக்கும் பூமியைப்போல எ-று. (கககஉ)

பூர்க்குமந்தப் பூநீருஉவருண்டானல் புளிப்பாழுவிந்ததனைப்பூ நீருண்ணும், எர்க்காதுஇடம்விட்டுஇடந்தான்விந்துஇருப்பிடம்விட் டிடம்பாய்ந்தா லினிசெல்லாது, கார்க்காதுகருக்குழியில் வாய்வுஞ் சேரக் கட்டிடுமேர்காதவிந்து கனல்நோய்சேரும், பார்க்கபனிச்குட முடையும்பனிநீர்போனல் பாழாகும்விந்ததுவும் பாழ்தானுண்டே

(இ-ள்.) உவர்பூக்கும் அதனுல்விந்துவை உப்புஉண்ணும் இதுமூன்றுவது விந்தானது இடம்விட்டுஇடம் செல்வதினுல் விந்துபாய்கிறதில்லை இதுநான்

காவது, கருக்குழியில் அதிகமாகவாயுசேர்ந்தால் விந்து அவ்விடம்செல்லாது இதுஐந்தாவது சம்போககாலத்தில் இருவருடைய உஷ்ணத்தினால், விந்து ஜலரூபத்தையடையும் இதுஆருவது இந்த ஆறுவகைக்காரணங்களால்விந்து வீணாய்ப்போகிறதேயொழிய கருதங்குகிறதில்லை எ-று. (௧௧௧௩)

ரதிபுருஷரிருவருந்தான் புணரும்போது நாயகிதன்கருக்குழியில்நாதவிந்து, விதியுமதியிரண்டவும்நீருய்ப்போகுமிஞ்சி இடியிடிக்குமிந்தவேகம்போலாம்,பதியைவிட்டுப்பதியிழந்துபாயும்விந்து பரத்தையரெண்சாணுடலும்பஞ்சுபோலாம், அதிவிதமாய்ப்புணர்ந்ததனாலண்டபின்னம் அண்டஇடியிடித்துபோலாகுமாண்டே.

(இ-ள்.) ஸ்திரீபுருஷர்கள் இருவரும் புணரும்போது விந்து, சோனிதம் இரண்டும் சலமாய்ப்போகும் இடியிடிக்கின்றவேகம்போல்இடம்விட்டுஇடத்திற்குப்பாயும் ஏனெனில்பெண்களுடைய எண்சாணஉடம்பும் முழுமையும் பஞ்சுபோன்றதாகும் இப்படியிருக்கப் புணர்வதினால் அண்டத்தில் இடியிடித்துபோலாகும் எ-று. (௧௧௧௪)

இந்தவிதம்யானறிந்துஅநுபோகத்தை யினியுரைத்தேன்யாவர்களுமினமாய்க்காண, அந்தமுடனறுவகைதன் சூலையாலும் அநுகாதுபுத்திரேட்சையமைக்கும்வாறு, சந்ததமாய்சதைசூடில் சதையைத்தின்னசண்டமாருதக்குழம்பிற்பணந்தானென்று, விந்தையுடன்சிலைதனில்விரவிப்பூசி மிகுந்தரவிமுகந்தனிலும் விளங்குவீரே.

(இ-ள்.) இவ்விதமாக நான்தெரிந்துகொண்ட அநுபோகத்தையாவரும் உணர்தற்பொருட்டு நான்சொன்னேன் மேலேசொன்ன ஆறுவிதமான கர்ப்பச்சூலையினாலும் புத்திரபாக்கியம் உண்டாகமாட்டாது இவ்வகையான கருப்பக்குற்றங்கள் ஆறுநாள் முதலாவதானகருக்குழியில் சதையடைத்தல் என்னும் ரோய்க்கு மேற்படி சண்டமாருதக்குழம்பில் 1-பணவெடை எடுத்துசிலையில் வெயிலில் உலர்த்தவேண்டும் எ-று. (௧௧௧௫)

வற்றிடநீர்த்திரியிலன்னீர்சண்டமருவியபதனமதாய் வைத்துப்போற்றி, சத்தியெனும்பரத்தையர்க்குஅவிழ்தங்குன்றி சண்டமாருதக்குழம்புசாற்றுவீராய், பத்தியந்தான்சங்கன்பழச்சாறுவாங்கி பலமஞ்சில்மருந்திழைத்துப்பாச்சுங்காலே, சித்தியதாஞ் சதைகரைந்து சூலைதிருந் தீபதனையாவிதனில்செலுத்திடீரே.

(இ-ள்.) உலர்ந்தபிறகு அதைப்பத்திரப்படுத்திவைத்துக்கொள்ளவேண்டும் பிறகு மேற்படிகுழம்பில் ஒருகுண்டுமணியளவு உள்ளுக்குக் கொடுத்துப் பத்தியம்வைத்து சங்கம்பழச்சாற்றிலிழைத்து குழம்பைப்பிரயோகிக்கவேண்டும், இதனுல் சதைகரைந்துவிடும் எ-று. (௧௧௧௬)

இருள்சூழுமதிதனிலுமிருக்கும்வீட்டில் இத்திரியைக் கொளுத்திரவிதனிலுமாட்டி, சருக்குழிக்குமையநடுநேராய்வற்றிகருதிடவம்

யோனிவிழி புகைதான்பாய, சுருக்கமுடன்மாதுமண வாளற்கிந்த
சூட்சமிதையறிக்கையிட்டுச்சொல்லிச்செய்யும், சுருக்கமுடன்புகை
யோனிவழியேபாய்ந்து சதையெல்லாஞ்சுருங்கிவழிசாந்தமாமே.

(இ-ள்.) முன் மருந்துபூசித்திரித்து வைத்திருந்ததிரியை ஒருஅறையில் அப்பெண்ணையிருக்கச்செய்துகொளுத்தி அதில்வரும்புகையையோனிக்குள் போகும்படி செய்யவேண்டும், அதினால் அச்சதைகளெல்லாஞ்சுருங்கிவழிதாராளமாகும் எ-று. (௧௧௧௰)

சாதுரியமங்கையர்க்குத்திரிநாளிந்தசண்டமாருதக்குழம்பைத்
தாக்கும்போது, வாதுசெய்யுஞ்சூலையினால்மலடுமென்று மாமுனிவ
ரெனக்குரைக்க யானுஞ்சொன்னேன், தீதுவாராது ஒருவேளையன்
னந் தீங்கானவிளிகையுஞ்சேர்க்கலாகா, பூதத்தில்பெண்மலடுபுகலப்
போகா புருடன்மலடெனுமிகவும்புகல்வதாண்டே.

(இ-ள்.) பெண்களுக்குமேற்படி திரிப்புகையினால் அனேககுணமுண்டு சண்டமாருதக்குழம்பைக் கொடுக்கும்போது சூலையினால் மலடாவாளென்று முனிவர் எனக்குச்சொலல நானுஞ்சொன்னேன் இதனால்யாதொருகுற்றமும் உண்டாகமாட்டாது இதற்குப்பத்தியம் ஒரேவேளை போஜனஞ்செய்யவேண்டும் புளியும்புகையும் சேர்க்கக்கூடாது உலகத்தில்பெண்மலடு சொல்லக்கூடாது ஆண்மலடுஉண்டென்று சொல்வது வழக்கமாகவிருக்கின்றது எ-று.

சேவலமாச்கிருமியினால் சூலையொன்று கிரிகிக்கும்விந்ததனைக்
கெற்சித்துண்டால், மேகவுமடமங்கையர்க்கு மலடென்றென்னில்
மேதினியோர்புகழ்வதுகாண்மெய்யென்றெண்ணி, பூவுலகில்செபத
பங்கள்பூசைநேமம்பிரார்த்தனைகள்செய்துபின்னும்புத்திரன்காணூர்
ஆவதினாலதற்கவிழ்தமுண்டேகேளீர் அதிநசண்டமாருதத்தையரு
ள்வதாமே.

(இ-ள்.) அசேதனமானகிருமிகளினால் ஒருசூலைஉண்டு அக்கிருமிகள்அவ்விடம்செல்லும் வித்துவைப்புசிக்கிறபடியால் கருதங்குகிறதில்லை. இதைமலடென்று சொல்லுவார்கள் அப்படிசொல்வதினால் கோவில், குளம், செபதபம் முதலியவைகளைச் செய்வார்கள் அப்படிசெய்தும் அனேகர்பிள்ளைகளில்லாதவர்களாகவருகிறார்கள் ஆகையால் அப்படிப்பட்ட ஸ்திரீகளுக்கெல்லாம் சண்டமாருதக்குழம்பைக் கொடுக்கவேண்டும் எ-று. (௧௧௧௧)

அவிழ்தமென்றகுழம்பதனில் குன்றிவாங்கி ஆகாசகெருடனந்
தக்கிழங்குச்சாற்றில, கவனமதாய்க்குழைத்துஅதில் கற்கண்டிட்டு
காலைதனில்மூன்றுநாள்கருகும்போது, புவனையருள்பதம்போற்றிப்
புகட்டும்போது பொல்லாதகிருமியிருந் திடத்திற்சென்று, முவனம
தாய் குழம்பதனின்வேகத்தாலும் மூடுபனிபோல்சூழ்ந்து முடிக்குந்
தானே.

(இ-ள்.) மேற்படி குழம்பில் ஒருகுண்டுமணி அளவுஎடுத்து ஆகாச கருடன் கிழங்குச்சாற்றில் குழைத்து அதில்கொஞ்சம் சீனாகற்கண்டு போட்டுக் காலையில்மாத்திரம் மூன்றுநாள் கொடுத்தால் அந்தக்கிருமிகள் இருக்கும் இடத்திற்குப்போய் மூடுபனிபோல் முடக்கும் எ-று. (௧௧௨௦)

முடக்குமிருபணயிடைதான்சீலைக்கூட்டி மூன்திரிபோல்திரித்து மூலரவிதான்வீச, படுக்குமந்தப்பாவனைபோல்கவிழ்ந்துமுடிபாவையர்தன்யோனிகடுமையந்தாக்கக்கொதித்திடச்சொல்புகையதுகாண் கொடுக்கும்போதுகொலைசெய்யுங்கிருமியெல்லாங்கொடியாய்வீழும் தடுக்கவொண்ணாமனாலுந் தடுக்கப்போகா சாந்தகுணமாமூன்று நாளிலாண்டே.

(இ-ள்.) அந்தக்குழம்பில் இரண்டுபணவெடை எடுத்துச்சீலையில் தடவி திரியைப்போலத்திரித்து கவிழ்ந்து படுக்கச்சொல்லி அந்தஸ்திரீயின் யோனியில் புகைபிடிசதால் அந்தப்புகையைவாங்கினபோதே கிருமிகளெல்லாம் கொடிபோல ஒன்றின்பின்னொன்றாக வெளியிலே வந்து விழுந்துவிடும் எமனாலுந் தடுக்கமுடியாது இப்படிசெய்தால மூன்றுநாளில் குணமாகும் எ-று.

ஊஷணத்தால்கடுங்காரமுடலுண்டாகிஉப்பதானால்விந்துப்பாயுருவமாறி,வேழ்வினையாங்கருக்குழியும் வெந்துப்புண்ணாகும்வெகுவிதஞ்செய்தாலும்விந்துதரியாதெனக, பூஷணமாய் போசனமுண்டுணந்ததாலும் பொல்லாதஉட்காரச்சூலையாலும். ஏஷணையாயெரிந்தசயிலங்கள்மாறி யிரத்தமெல்லாங்கருகிளைத்திடுவாராண்டே.

(இ-ள்.) வெட்டையினால் சரீரத்தில் கொடியகாரமுண்டாகி உப்பதனால் விந்துப்பு உாமாறக்கருக்குழியானது வெந்துபுண்ணாய்விடும் அதற்கு அனேகவிதமான சிகிச்சைகளைச்செய்தாலும் விந்துஅவ்விடத்தில் நிலைத்துநிற்கிறது போஜனங்கள்நன்றாய் அதிகமாக கொண்டதாலும் உள்ளேயுண்டான கடுங்ரச்சூலையினாலும் மலையான இடங்கள்மாறி இரத்தமானதெல்லாம் கருகிச்சரீரம் இளைத்துப்போவார் எ-று-
(௧௧௨௨)

இவ்விதங்களறியாம லுலகமாண்பர் எடுத்துரைப்பாரிதுமலடு என்னபாவம், செவ்வையினிமலடுகளைச்சிவனாலுந்தான் ஜெயிக்கமுடியாதுஜென்மக்கூறென்பார்காண், அவ்விதமாயுரைத்திடுவா ரவனிமீதில் அழைத்துவிதமறியார்களாண்டேகேளீர், கவ்விடவுங்குழம்பதனில்குன்றிவாங்கி கர்ப்பூரவெற்றிலைச்சாறதனிற்காணே.

(இ-ள்.) இத்தன்மைகளையெல்லாம் உலகத்திலுள்ளவர்கள் உணராமல் மலடென்று எடுத்துச்சொல்லுவார்கள் ஐயோ! இதவென்னபாவம்! அப்படி பெண்மலடிருந்தால் அம்மலட்டைச்சிவனாலும் ஜெயிக்கமுடியாது அதுஜென்மக்கூறுகையால் என்றுசொல்லுவார்கள்; இவ்விதமெல்லாம் சொல்லுவார்களேயொழிய அதுவந்தவிதத்தைஉணரமாட்டார்கள் ஆகையால்அவர்களுடைய

சொற்களையெல்லாம் ஒருபொருட்டாகக்கொள்ளாமல் மேற்படி சண்டமாருதக்குழம்பில் ஒருகுண்டுமணி யளவுஎடுத்து கர்ப்பூரவெற்றிலைச்சாற்றினுல.

ஊட்டிடவுமூன்றுநாள் மூன்றுவேளை உள்ளிருந்தவவர்களெல்லாநீரில்சேர்ந்து, சாட்டியமாய்மலசலத்தைச்சாடுஞ்சாடும் சடத்திலுள்ள கனல்வேகஞ் சாரித்தேபோம், மேட்டியிந்த கருக்குழிதான் மென்மேல்சுற்றி வெண்மதியுஞ் செங்கதிரோன் விளக்கத்தாலும் நாட்டிவிடுங்குழம்பதனை முன்போல்வற்றி நயந்துதிரிபுகையதனால் நமனேய்போச்சே.

(இ-ள்.) இழைத்துமூன்றநாள்காலையில்மாத்திரம் கொடுத்தால்மலசலங்களைவெளிபிற்சாடும், அதனால்சரீரத்திலுள்ள உஷ்ணவேகம் நீங்கும் இப்படியாவதினால் கருப்பாசயமானது நல்லவிளக்கத்தையடையும் ஆகையால் முன்போலவே திரிப்புகையூட்டினால் மௌனம்போலிருந்தநோய்போச்சுது எ-று.

அடுத்தபுகைமூன்றுநாள்கொடுக்கும்போது அவ்விடத்திலிருந்தபுண்களாறிப்போகும், தடுத்தூரவிமாண்பர்களுந் தடுக்கப்போகா சாபமெய்துமவநசியமசியசுவாகா, தொடுத்தவிழ்தமனுபோகி ராசயோகிகுவலயத்தில்ஞானபண்டிகனாய்வாழ்வார், தொடுத்தேன்திருவள்ளுவன் வாக்கமிர்தவாக்கியஞ் சூக்ஷசடாதார சுழிதொழுதேனண்டே.

(இ-ள்.) முன்சொன்னபடி புகைகள்மூன்றநாள்கொடுத்தால்அவ்விடத்திலிருந்தபுணகளெல்லாம்ஆறிப்போகும் இதைஎவராலுந்தடுக்கமுடியாது அப்படிதடுத்தால் சாபம்வரும் மவநசிய, மசியசுவாஹா. என்றுஉச்சரித்துமருந்துகொடுத்தால் உலகத்தில்ஞானபண்டிதர்களாகவாழ்வார்கள ஈஸ்வரன்உள்ள சுழிமுனையை வணங்கினேன் எ-று. (௧௧௨௫)

தொடுத்ததிந்த சண்டமாருதத்தை போற்றி சூக்ஷமில்லாமிந்நூலில்சொல்வேன்காணும், கொடுத்துவிட்டாருலகருக்கு மதியோவில்லைகுணமில்லைவேதாந்தக் கூறுமில்லை, விடுத்துவிட்டாராமாகில் வினையோயில்லை மெய்க்குருவையறியாதவீணர்வீணர், அடுத்துபணிரெண்டாண்டு ஆசான்சொல்ல அறியலாஞ்சாரவித்தை அண்டேகேளே.

(இ-ள்.) இந்தச் சண்டமாருதக்குழம்பைப் போற்றிசெய்து இந்நூலின்கண் உள்ள சூட்சங்களையெல்லாஞ் சொல்லுவேன் உலகவாசிகளுக்கு புத்திகிடையாது குணமில்லை வேதாந்தக்கூற்றுமில்லை. விடுத்துவிட்டால் வினையில்லை இவர்களெல்லாரும் மெய்யாசானை உணர்ந்தவீணர்களாவார்கள்ஆசானைப்பன்னிரண்டுவருஷம் வரைக்கும் அடுத்திருந்து தொண்டுசெய்து சாரவித்தையை அவர்சொல்ல உணர்ந்துகொள்ளவேண்டும் எ-று. (௧௧௨௬)

சூதகத்தில்வாய்வதுபோய்சொக்குங்காலே சுருதிபெனும்வன்னி பித்தந்துணையாய்ச்சேரு, மாதவிடாய்நாகமதும் வஸ்துக்கட்டு மாதாந்தங்கட்டினதால் மாதுதேகம், ஊதவுடல்சீரமெல்லாங் கருப்பைதுந்து உதிரநீர்சூசிகா வாய்வுந்தோன்றி, வாதனையால் வயிறுடம்பெருத்துவூதி மகத்தான அடிமூலம்வாதஞ்சேர்ந்தே.

(இ-ள்.) பெண்களுக்குச் சூதகத்தில்போய் வாயுதங்குங்காலத்தில் அப்போது அக்கினியானபித்தமும் துணையாகக்கூடும்.மாதவிடாயான நாதமானது கட்டிப்போகும்,அப்படி அதுகட்டினதால்,பெண்ணின்சரீரம்ஊதும்,உதிரங்கூட்டி நீர்கோக்கும் அதினால் சூசிகாவாயுதோன்றும் அப்போது மூலத்தில் வாயுசேரும் எ-று. (ககஉஎ)

மாதருக்கிவ்விதக்கூறு மருவுங்காலேமங்கையர்க்கு மனிதர்சொலும்வாறுகேளீர், சூதகமுங்கட்டினதால் கெர்ப்பங்காணுந்றோகையர்கள்கண்டுமந்தவிதஞ்சொல்வார்காண், நாதமென்றசூலையினல்கெர்ப்பசூலை நாட்டிவிதையறியபண்டிதஞ்செய்வாரோ, வேதமிந்தசூலையினல் மலமென்பார்கள் வினைப்பயனையொழித்திடவும் விளங்காரண்டே.

(இ-ள்.) பெண்களுக்கு இவ்விதம் உண்டாகுங்காலத்தில் சூதகம்கட்டினதாகும் இதை உலகத்தினர் உணராமையால் கர்ப்பமென்று சொல்லுவார்கள் இந்தக்கர்ப்பச்சூலையினல் இதற்குவயித்தியஞ் செய்வார்களோ செய்யமாட்டாமல் மலமென்றுசொல்லி விடுவார்கள் அன்றிக்கர்ம நிவர்த்தியையுஞ் செய்யமாட்டார்கள் எ-று. (ககஉஅ)

கெற்பக்கோளறிந்துவினையொழித்தோன்ஞானிசேதமிலாராஜபண்டிதனேயோகி, தற்பவித்தசூலையது நாதசூலைசுக்கிலமுஞ்சுரோணிதமு மிரண்டுஞ்சேரா, கற்பகமாம்விந்துஒருவழியிற்பாயுங் கருக்குழியில் சுரோணிதமுங்கலக்காதாகில், முற்பகஞ்செய் தனுபோகக்கூறிலலாகாண் முச்சுடரினுதித்ததெனுமொழியலாமே.

(இ-ள்.) இவ்விதமானகர்ப்பக்கோளை உணர்ந்து இருவினைகளையும் ஒழியப்பெற்றோனேஞானியாவான் இதையுணர்ந்த ராஜபண்டிதனே யோகியாவான் கர்ப்பசூலையானது நாதமானபெண்ணின் சுரோணிதத்திற் சம்பந்தப்பட்ட சூலையாதலால் சுக்கிலத்துடன் அச்சுரோணிதஞ்சேரமாட்டாது அப்படிகலக்காததினல் விந்துவானது வேறொருவழியிற்பாயும்கருப்பஸ்தானத்தில் சுரோணிதங்கலக்காதானல் அநுபோகக்கூறில்லாமல் விளங்கும் எ-று.

மொழிவதுங்காண்சண்டமாருதக்குழம்பில் முன்பாகங்குன்றியிடைமூன்றுநாளும், அழிஞ்சிவேர்த்தயிலமதில் பலந்தான்வாங்கி அத்தயிலந்தனிலரைத்து அதன்பின்கேளீர், பழையபனைக் கற்கண்டுந்தேனுங்காசும்பகுந்துடனுஞ்சேர்த்துவுணர்ந்திடுவீராகில், மழை

யதுபோல்வாரியது மலத்தைப்போக்கு மனதுதிடச்சித்தமதாய் மகிழச்சொல்லே.

(இ-ள்.) இதற்குச் சண்டமாருதக்குழம்பில் குன்றிமணியளவு எடுத்து அழிஞ்சில்வேர்க்குழித்தயிலம் ஒருபலத்திற்கலந்துபழையபனக்கற்கண்டு தேனு இவைகள்வகைக்கு காசெடைசேர்த்து 3-நாள்காலையில் மாத்திரம்கொடுத்தால் மலங்கழிந்து சுகமாகும் எ-று. (௧௧௯௰)

துவரைமுள நீருஞ்சுண்டை வற்றல்கூட்டி தூதுபத்திரியினுட வற்றல்சேர்த்து அவரையரைக்கீரைமுளகதுவுங்காயம் அதிபேதிக் காலின்மோர்சுக்குஓமம், விவேகஞானவெட்டியருள்பணிந்துபோற்றிவெள்ளுள்ளிசீரகமுமரத்தையோடு, தவராதுயிவ்வகைகள் சேராதென்னில் தகர்த்துவதும் புளிகையுந்தள்ளலாமே.

(இ-ள்.) பத்தியமோ துவரை, மிளகுநீர், சுண்டைவற்றல், தூதுவளங்காய்கற்றல், அவரைப்பிஞ்சு, அரைக்கீரை, மிளகு, பெருங்காயம் சேர்த்துக்கொள்ளலாம் பேதி அதிகமானல், பசுமோர், சுக்கு, ஓமம், சேர்க்கவேண்டும் வெள்ளைப்பூண்டு, சீரகம், சன்னராஷ்டம், இவைகள் சோராவிட்டசல், புளி புகை இவைகள் கட்டாயம் நீக்கவேண்டும் எ-று. (௧௧௯௧)

தள்ளுவதுயெட்டுநாள் திரிநாளுண்டு சண்டமாருதக்குழம்பில் பணந்தான்ரெண்டு, தெள்ளிமையால்திரியதுகாண் முன்போல்செய்துதீங்கில்லாமூவேளைபுகைவானூட்டி, எள்ளளவும்பிழைவராதெண்சாண்தேகம் இருந்தகெர்ப்பச்சூடதுபோய்சூலைபோகும், கள்ளமில்லாநீர்களெல்லாங் கடலேபுக்குங் கருக்குழிபுஞ்சுத்தியதாய்க் கருதலாமே.

(இ-ள்.) இவ்வாறு மூன்றுநாள் மருந்துசாப்பிட்டால் எட்டுநாள்பத்தியங்காக்கவேண்டும் இதுவன்றி மூன்றுவேளை முன்சொன்னமாதிரி சுற்றிப்புகையுங்காட்டவேண்டும் இப்படிசெய்தால் எண்சாண் சரீரத்திற்கு கொஞ்சமும் குற்றமுண்டாகமாட்டாது கர்ப்பச்சூடுநீங்கிச் சூலையும்நீங்கும் சரீரத்திற்கோத்திருக்கின்ற நீர்களெல்லாம் கடலில்நுழையும், கருப்பாசயமும் சுத்தியாய் விடும் எ-று. (௧௧௯௨)

வாதமென்றதேகியென்று லஞ்சுநாள்தான் மருவும்பித்ததேகியென்றால்நாலுநாள்தான், நாதசேத்துமதேகிமூன்றுநாள்தான்நயந்துசண்டமாருதத்தை நாட்டுங்காலே, வேதமெனுங்கியானபொருள நீதமிந்நூல் விதித்தவிதியெள்ளளவும் விதம்போகாது, காதலிந்த சாஸ்திரத்தைக்கண்டபேர்கள்கைவிடார்கருக்குழியில் கருதுவாரே.

(இ-ள்.) இந்தமருந்தை வாததேகமுள்ளவர்கள் ஐந்துநாளுர், பித்ததேகமுள்ளவர்கள்நான்குநாளும், சேத்துமதேகமுள்ளவர்கள்மூன்றுநாளும்சாப்பிட

வேண்டும் ஆகையால் இந்நூல்மடுமையை யுணர்ந்தவர்கள் எள்ளளவும் தவறி நடக்கமாட்டார்கள் எ-று. (௧௧௩௩)

வெந்துகருக் குழியதுவும் புண்ணாய்ப்போகும்வெட்டையினால் தேக மீறிப்பாய்ந்து, உந்தியெனுங்கமலமதிலபிரணங்கண்டு ஒரிடியாயிடித்துவயிற்று வலியுண்டாக்கி, தந்திரமாய்கிடை கொடுக்காபிரட்டல்சோபந் தாபம்வருஞூழ்வினையாய் சடத்திலெய்தும், யிந்துவெனுஞ் சுரோணிதமிரண்டுங்கூடி யிருக்குமந்தகாலமதில் வாய்வாலாண்டே.

(இ-ள்.) அதிகவெட்டையினால் கருப்பாசயமானதுபுண்ணாய்வெந்து அதினால் தொப்புளில்விரணமாய் இடித்து வயிற்றுவலியுண்டாய் படுக்கை தங்காமல் பிரட்டல், சோபம், தாபம், இவைகளெல்லாம் பூர்வவினைப்பயனால்சரீரத்தில்வந்துசேரும் இவைகளெல்லாம் போககாலத்திலுண்டாகும் வாயுவினால் நிகழ்வதாம் எ-று. (௧௧௩௪)

வாய்வுமனுசரிக்குமட மாதர்க்கேதான் மாதாந்தங்கட்டியதுமருவுநாளில், பாயும்ரதிபுருஷருமேபுணர்வாராகில் பரிதியெனுநாதமதில்விந்துஞ்சேரில், தேயுவெனுங்கனலேகக்கனலினாலுஞ் செவ்விளநீர்போலவுமே யுதிரஞ்சாயும், பேயதனால்பெரும்பாடு அதீதமென்பார் பேருலகிற்கல்லெரியு முனியென்பாரே.

(இ-ள்.) இப்படி வாயுசேர்கின்றபெண்களுக்கு மாதாந்தமானது கட்டுகின்றநாளில் பஞ்சபுருஷசையோகஞ்செய்தால் நாதத்தில் விந்துசேரும்போது தேயுவின்வேக வுஷ்ணத்தினால் செவ்விளநீர்போல உதிரமுண்டாகும்இதுவேபெரும்பாடாம். இதனைபேயென்றும், கல்லெறிமுனிஎன்னும் உலகர்கள் சொல்லுவார்கள் எ-று. (௧௧௩௫)

சாயுமடைமதகில் சலஞ்சரித்தாப்போல் தங்குதடையில்லாமல் சாகுமாப்போல், ஓயாமலுதிரமதுமோடிப்பாயும் ஒருதிங்கள் நாதவிந்துஒக்கச்சேர்ந்து, மாயுமடமங்கையரோடனுபோகித்தால்மருவியுமேபோகமதில் மகிழ்ந்தாராகில், துயிருமூன்றதுநாலுமஞ்சுமாறுதுகையேழுஎட்டிரண்டும்பத்தும்பாழே.

(இ-ள்.) உடைந்த மதகிலிருந்தும் சலம்ஓடுவதுபோல இடைவிடாமல் உதிரமானது ஓடிப்பாயும், இதில்புணர்ச்சியில் விருப்பங்கொண்டால் பத்து மாதம்வரைக்கும் பாழேயாகும் எ-று. (௧௧௩௬)

கருவுருவாய் திரண்டுகெர்ப்பங்கருதுமாப்போல் காசினியில் யாவர்களுங் கணக்கென்பார்காண், உருவதுமுண்டாச்சிதென்பாருலகவாதர் உருதியென்பார்தருதமனென்பாருகமையென்பார், சிறுவரெனும் புத்திரனென்பார் திருமாதென்பார் சிலபேரிதுவென்ன

செய்கையென்பார், வருவதுசெய்வினையிதென்பார் வலர்பாண்டெ ன்பார் வசனமெடுத்துரைப்பவர்கள்மர்தராண்டே.

(இ-ள்.) கர்ப்பர்திரன்வதைப்போல எல்லாரும் மாசக்கணக் கென்பார்கள் தவிர, சிலர் பிள்ளையென்றும், சிலர்பெண்ணென்றும் சொல்லுவார்கள், சிலர் இதுகர்ப்பமல்ல, பாண்டுரோய் என்பார்கள் எ-று. (ககஙஎ)

பத்துதிங்கள்சென்றுசரியாச்சுதென்பார் பாரில்மடமாதர் வந்து பரிசோதிப்பார், கற்றுணர்ந்தபேர்கள் பெருவயிறென்பார்கள்கடிந் துரைக்குஞ் சிலபேர்கள் குளியதென்பார், குத்தமில்லாப்பலபலவா ய்யொசிப்பாராகாண் கூருவேனுண்டை யினிகுறித்தயானும், சுத்த மெனுஞ் சண்டமாருதக்குழம்பில் சூட்டியெடுத்தொருகுன்றி கொ டுக்கத்தானே.

(இ-ள்.) இவ்வாறு பத்துமாதங்கள் சரியாய் விட்டதென்பார்கள் பிறத சிலர், பரிசோதனை செய்வார்கள், கற்றவல்லவர்கள் இதைமகோதரம் என்று சொல்லுவார்கள், சிலர் குளிதானென்பார்கள், இப்படிக்கெல்லாம் பலபல வாய்ப்பேசுவார்கள், எப்படியிருந்தாலும் இந்தச்சண்டமாருதக் குழம்பில் ஒரு குன்றி எடுத்து எ-று. (ககஙஅ)

கொடுக்கலாந்தூதுளத்தின்யழத்தின்சாற்றில்குழம்பொருபண விடையான்பொரித்துக்காயம்,மடக்கலாமிந்தளடைபதினெட்டிட்டு மத்தித்துமூன்றுநாள்மடந்தைக்கீந்து, கெடுக்குமந்த உதிரமதாஞ் சூலைபாயின், கெடுதிமலசல உதிரமெல்லாம்போக்கும், விடுக்கலாங் கருக்குழியுஞ் சுத்தியாகும் விளங்குமுன்பு திரிபுகையை விளங்கலா மே.

(இ-ள்.) தூதுவளைப்பழத்தின் சாற்றில் அனுபானஞ்செய்து பெருங்காயம் 4-குன்றி எடைபொரித்துக் கூடச்சோத்து 1-குன்றி எடை பணவெட்டிட்டு மத்தித்து 3-நாள் காலையில்மாத்திரம் அப்பெண்ணுக்குக்கொடுத்துப்பார்த்தால் சூதகத்தில் உதிரந்தங்குதல் சூலைகருக்குழிசுத்தி இவைகள்குணமாம்.

சண்டமாருதத்திரியை முன்போல்பாகந் தாக்கானயோனிவழி புகைதான்செல்ல, முண்டனெனும் வாய்வுகனல் மேகசூலை முச்சுட ரில்வெட்டைகனல்மூலமெட்டும், கண்டிதமாய்குழம்பு அதிவேகத் தாலும் கண்காணுமோடி அனல்புக்குமாகில், உண்டிடவுமுதிர்சூலை யோடிப்போகும் உடல்சுத்திகருக்குழிதன் புண்கள்போமே.

(இ-ள்.) பிறகு இந்த குழம்பின்திரியை யோனிவழியாய்ப்புகைகொடுத் தால் வாயு, வெட்டை, மேகசூலை, மூலக்கனல், இவைகளெல்லாம் குழம்பின் வேகத்தாலும் சுத்தியாம் சூலையும்ஒடும் கருக்குழிப்புண்கள் ஆறும் எ-று.

அறுவிதத்தால் சூலையெய்தும் கெர்ப்பக்கோள்கள் அடைவுத னையறிந்திந்தயவிழ்தத்தாலும், பரவசமாய்சொன்னதின்றால் யோ

க்காக பரிக்ஷயனுபோகமிதைப்பாரில்மாண்பர், செருவமில்லாப் பண்டிதற்குச் சொன்னேனுண்டே கேவலமாயிருந்ததனு லென்ன வாய்க்கு, மாறுபடாஞானவிதி யறிவோனுகில்மகாராஜபூபதிபண்டி தனே ஆண்டே.

(இ-ள்.) கர்ப்பக்குற்றம் ஆறுவிதங்களையும் உணர்ந்து இந்த அவிழ்தம் யோகிக்காகச் சொன்னதாதலால் இதை உலகவாசிகள் பயனடையகர்வமில் லாத பண்டிதர்களுக்காகச் சொன்னேன். கேவலமாயிருந்தால் ஒன்றும்வாய் க்காது இதுவேமகாராஜபூபதியுமாகும் எ-று. (ககசக)

வேறு-விருத்தம்.

அன்னையபிராமி சிரோமணியருளா லாண்டையினி யவுழ்தஞ் சொல்வேன், நன்னயமாய் சண்டமா ருதக்குழம்பிற் குன்றியிடை நல்குவீராய், மன்னர்மண்டலீகருமே மகிழ்ராஜபண்டிதனை வணங்கி ப்போற்றி, யின்னிமித்தமறியா சுகசன்னியதும் விலங்கிடவுமினி சொல்வேனே.

(இ-ள்.) தேவியின் கிருபையினல் ஒளஷதஞ்சொல்லுவேன், சண்டமா ருதக்குழம்பில் குண்டுமணியளவுகொடுத்தால் மகாராஜபண்டிதர்களெல்லாம் வணங்கிப்போற்றுதல்செய்ய, சுகசந்நிநீங்கும் விதத்தைச் சொல்லுகின்றேன்

வேம்பினுடவித்ததனில் வெள்ளாட்டுப்பிச்சது விட்டிழைத்து மேலும், செம்பதுவின்பற்பமொருஅரிசியிடைக்குழம்புமரைக்குன் றித்தாக்கி, நம்பியிதுநாலுமொருமித்தவர்க்கு நாவதனில்நன்றுய்த் தேய்த்து, வெம்புதலைவாராமல் வென்னீருங்குடிப்பித்து மிகச்செய் வீரே.

(இ-ள்.) வெள்ளாட்டுப்பிச்சியில் வேப்பம்பருப்பைஇழைத்து அதில்தாம் பிரபற்பம் அரிசி எடையும், சண்டமாருதக்குழம்பு அரைக்குண்டுமணிஎடை யும்கூட்டி நாக்கில் நன்றுய்த்தேய்த்து வெந்நீர் கொடுக்கவேண்டும் எ-று.

நயனமிருவிழியதனில்கலிக்கமிடுக் கடுகளவுநாடியேற்ற, பயம ணுகுஞ்சன்னியதும் பறந்துவிடுஞ்சரபானம் பாய்ந்தாற்போலும், துயரணுகா திருவிழியதனில்நீர்த்தாரை சொரியுமாகில், சயனமி துகனல்வேக மென்சாணுதேகமெல்லாந் தணலாமாண்டே.

(இ-ள்) கண்களுக்குக் கலிக்கமிட்டுப் பார்த்தால் சுகசந்நி சொல்லாம லோடிவிடும், சரபாணம் பாய்ந்தாற் போலக்கண்ணில் நீர்வந்தால் எனகண் அளவுள்ள சரீரமெல்லாம் கனல்வேகமுண்டாம் எ-று. (ககசச)

தனல்பாயபாதாதி கேசம்வரையனல்சூழுஞ் சன்னிதோஷம், அனலருவியரிக்குவிதந் தொண்ணூறுகடிகைமனேவேகத்தாலும்,

புனல்சொரியும்பேதியர்தம் பத்தியமுந்துவரைமுள நீருங்கூட்டும்
அனல்வேகமடங்கிடுங்கா ளொருவேளையன்னமதுமருளுவீரே.

(இ-ள்.) அவ்வாறு அக்கினிமயமாகவேதோண்ணூறுகுடிகைக்குபேதியாகும் பத்தியம் துவரை, மிளகுநீர் சேர்க்கவேண்டும் ஒருவேளைதான் சாப்பாடு கொடுக்கவேண்டும் எ-று. (கக௪டு)

மூன்றுநாளிந்தவிதமொருவேளையவிழ்தமதுமுணருங்காலேநின்
றுயிருநாசியிலு முன்சொன்னவற்றியதுநசியமேத்த, பண்டுபழகின
தோஷஞ்சுகசன்னிபறந்தோடும்பாரில்விட்டு,கண்டுமிந்தப்பெரியோ
ர்கள் கருத்ததனுலெனக்குரைத்த கருவிதாண்டே.

(இ-ள்.) இப்படி மூன்றுநாள்காலையில் மாததிரம்புசித்துமுன்னேசொன்னவர்த்திப்புகையை மூக்குக்கு நசியங்கொடுத்தால் சுகசன்னியானது போய்விடும் இதுஎனக்குப் பெரியோர்கள் சொன்னதாகும் எ-று. (கக௪சு)

கொச்சகம்.

காயாபுரியிலகுஞ் சன்னியபிராமியருள்
தாயாமதியமிர்தந் தந்துவரமேயளித்தாள்
மாயாமருந்தறிந்தேன் வாசிகொண்டுநான்மகிழ்ந்து
சாயாவிருக்ஷமதின் சஞ்சீவிகண்டேனே.

(இ-ள்.) இக்காயத்தின்கண் விளங்குங் கன்னியான அபிராமியம்மையானவள் எனக்கு மதியமிர்தங்கொடுத்து வரமுங்கொடுத்தாள், அதனுல்மாயாத மருந்தை உணர்ந்தேன். வாசியைக்கொண்டு நான் மகிழ்ச்சியடைந்து சாயா விருட்சத்தின் சஞ்சீவியைக்கண்டேன் எ-று. (கக௪எ)

மதுரசஞ்சீவியுமே வாச்சுதுகாணுண்டுசென்றுல்
விதுரனெனுஞானசிங்கம் வெட்டியருளால்மொழியும்
சதுர்முகஷட்கோணவரைத் தாண்டிசண்டமாருதத்தைச்
சுதனருள்தன்கிருபையினுல் சோதிமதியாயெனக்கே.

(இ-ள்.) மதுரமான சஞ்சீவிகைகூடினபடியால்சண்டமாருதக்குழம்பை நான்சொன்னேன் எ-று. (கக௪அ)

கலித்துறை.

பிரசண்டமாருத மெய்ஞ்ஞானபோத பிரபந்தமாய்
வரமுத்திஞான குருமுனிவாக்கிய மகிழ்ந்தெனக்கு
திரமாய்விதேகமுங் கல்வியின்பேரின்பத் தேன்புகழ்ந்து
சரமாயாதீத துரைராஜபண்டிதன் சதுர்மறையே.

(இ-ள்.) இது குருமுனிவர் திருவருளினுல் நான்குவேதம் போல்வதான ஞானவெட்டியை அருளிச்செய்தேன் எ-று. (கக௪கூ)

வீராதிவீர வீரஞான வெட்டியெனும்
பேராற்பிரசண்ட மாருதபாணப் பிரயோகமதால்
வேரானநோய்க ளதமாய்பறந்து வெளிப்படவும்
தோராதவுழ்த மதுபானஞ்சொல்லத் தொடங்கினனே.

(இ-ள்.) வீரமுள்ள ஞானவெட்டி என்கிற பாணப்பிரயோகத்தினல் சகலநோய்களும் பறந்துபோகும், அவைகளை ஆடுதற்கு அனுபானஞ் சொல்லத் தொடங்கினேன் எ-று. (ககஉ௰)

வெண்பா.

கண்டீரேபண்டிதரே காலைதனில்குன்றியது
சண்டமாருதக்குழம்பைச் சாதித்தால்-எண்டிசையில்
மண்டலத்தோர்காண்க மருவியொருவேளை
அண்டிபஞ்சதாரையினி யாம்

(இ-ள்,) பண்டிதர்களே! நீங்கள்பார்த்தீர்களா? காலையில்சண்டமாருதக் குழம்பைக் குண்டுமணியளவு எடுத்துச்சர்க்கரையில்கலந்துகொடுத்தால்எ-று

வாதமுதல்வாய்வும் வரும்பித்தசேத்துமங்கள்
மாதவிடாய்சூதகமு மாண்டுபோம்-கோதையே
அவரைதுவரை யரைக்கீரைதூதுளங்காய்
விரையில்லாக்கத்திரியை மேவு.

(இ-ள்.) வாதம்முதலியவாயுவும், பித்தமும், சேத்துமமும், மாதவிடாய் குற்றமான சூதகவாயுவும், நீங்கும் அவரைச்காய், துவரை, அரைக்கீரை, தூதுளங்காய், விரைபிடியாத கத்தரிக்காயும் ஆகும் எ-று. (ககஉஉ)

விருத்தம்.

சம்பழத்தின்சாறதனில் கற்கண்டிட்டு சண்டமாருதக்குழம்பு குன்றிகூட்டி, நம்புதலாயதிகாலைதனியேயுண்ணநாவரட்சி சுரதோஷஞ்சன்னிதீரும், அம்புவியில்மூன்றுநாளிச்சாபத்தியம் அகன்றுவிடுமாண்டையினியறையக்கேளீர், கெம்பீரதானமிது வதிதவேக்கங்கேட்டீரோபண்டிதரே கேள்வியாண்டே.

(இ-ள்). எலுமிச்சம்பழச்சாற்றில் கற்கண்டுபோட்டுஅதில்சண்டமாருதக் குழம்பில் ஒருகுண்டுமணியளவுசேர்த்து அதிகாலையில் தின்னநாவரட்சி, சுரம் தோஷம், சந்நி, இவைகள்நீங்கும் இப்படி 3-நாள் கொடுக்கவேண்டும்இச்சா பத்தியம் வைக்கவேண்டும் இதனல் சர்வரோகங்களும் நீங்கும் இதன்மகிமை பண்டிதர்களே! நீங்கள் கேட்டீர்களா? எ-று. (ககஉ௩)

வேறுவிருத்தம்.

அதிவீரசண்டமாருதக்குழம்பிலொருகுன்றி அவுழ்தந்தன்னில் துதிசெய்துமாவிலிங்க மூலமெனும்வேர்தயிலங் கழஞ்சிதூக்கி, விதி

யதுவாய் மிளகுசுக்குதிப்பிலிமென்பொடியிலத் தேன்விரவிக்கொண்டு சதிசெய்யும்வினையதுகாண் சச்சுவாய்வது தசைக்குஞ் சாற்றுன்றே.

(இ-ள்.) வீரத்தன்மையுள்ள சண்டமாருதக்குழம்பில் ஒரு குன்றியளவு மாவிலங்கவேர்க்குழித்தயிலம் கழஞ்சில்சுக்கு மிளகு, திப்பிலி, இவைகளைப் பொடித்துதூவி தேன்விட்டுக்கிண்டிகொடுத்தால் சச்சுவாயுவுசொந்தமாகும்

சதிசெய்யுங்குமரகண்டன் பாரிசமும்பச்சைதொந்திதமர்வாய்வோடு, மதிமயக்குமுசல்வலியும் காக்கைவலிமூர்ச்சைபதும் வாதரோகம், இதுக்கதிகமுன்னிசிவு பின்னிசுவுபிரைப்பிரும லெழும்புஞ்சுவாசம். அதிதமெனும்வாய்வுதசை வையஞ்சுமோரஞ்சு மகனுமாண்டே.

(இ-ள்.) கெடுதியைவிளைவிக்கின்றதுமரகண்டவலிக்கும் முயல்வலிக்கும் காக்கைவலிக்கும், மூர்ச்சையையுண்டாக்குகின்ற வாதரோகத்திற்கும் முன்னிசிவுக்கும், பின்னிசிவுக்கும், இரைப்பிருமல், சுவாசம் இவைக ளெல்லாம் சொஸ்தமாம் எ-று. (௧௧௫௫)

பட்சமிந்தப்படியவுழ்த மதிகாலையொருவேளைபாலித்தேதான் துஷ்டிவினையகற்றுமஷ்ட குன்மவலிமூலமெட்டுந் தலைந்துபோகும் கஷ்டமென்றகர்மமெல்லாமவுழ்தத்தாலசலுமெனுங் கருதிறோங்காண், இஷ்டமெனும்பத்தியந்தா னியம்பிடுவீரன்னமிதுவேளைதான்.

(இ-ள்.) இவ்விதம் இவ்வௌஷதத்தை அதிகாலையில் ஒருபட்சம்வரைக்கும் ஒருவேளைசாப்பிட்டால் சர்வவினைகள்ஒழியும் அஷ்டகுன்ம வலிமூலம் எட்டும் தொலைந்துபோகும் இதற்குபத்தியம் உரைக்கிறேன் எ-று. (௧௧௫௬)

விருத்தம்.

திரிபுரத்தையெரித்தமதி ரவியைப்போற்றி ஜெனகாதிரிஷிகள் பதினெண்பேர்போற்றி, கருதரித்துநாதவிந்துகமலப்போற்றிகனகரத்ன தீபசுழி முனையைப்போற்றி, மருமலரம்பிகை ஞானகுருவைப்போற்றி மதிதகுண்டலிகமலபதயோற்றி, நிருபமணிமகுடமுடிவானசோதி நிர்மலத்தாய்பதம்பணிந்து நிகழ்த்துவேனே.

(இ-ள்.) முப்புரங்களையும் எரியச்செய்த சந்திரசூரியர்களைப்போற்றிசெய்து ஜெனகாதிரிஷிகளையும், பதினெட்டுச் சித்தர்களையும் போற்றிசெய்து கருஉண்டான விந்துவின் கமலத்தைப் போற்றிசெய்து, கனகரத்தினம்போல் விளங்குகின்ற சுழிமுனையைப்போற்றி, அம்பிகையையும், ஞானகுருவையும் போற்றிசெய்து, குண்டலிசத்தியின் கமலத்தைப்போற்றிசெய்து நிர்மலமான ஆத்தாளின் திருவடிகளை வணங்கிச் சொல்லுகிறேன் எ-று. (௧௧௫௭)

பஞ்சாமிர்தக்குளிகை-தரு.

பஞ்சாமிர்தகுளிகையைப்பாரும்-பூபதியாண்டே
ரஞ்சிதநாதவிந்தாலுநா னுண்டுகண்டேன்.

(இ-ள்.) ஆண்டே! பஞ்சாமிர்தக் குளிகையை நீர்பாரும் இதுவேபூபதி குளிகையுமாகும் அதின்மகிமையை நானே உண்டுதெரிந்து கொண்டேன்.

கஞ்சமலர்க்கணேச கமலபாதாரவிந்தஞ் செஞ்சொல்மொழி மெய்ஞ்ஞான திருவள்ளுவன்பிரபந்தம்-ஜெகமும்பணியமதி யமிர்த பரிபூரண-திருவம்பலமிகுஞ் சுழியின்முனைகருணை தெரிசித்தொழு மலர்சூடியும் வருஷித்துதி தமிழ்பாடியும். பஞ்சா

(இ-ள்.) கணேசன் திருவடிகளைத்தொழுது உண்மைஞானத்தையுடைய திருவள்ளுவன் பிரபந்தத்தை உலகத்தார்களெல்லாரும்வணங்கும்படிதிருவம்பலத்தில் விளங்குகின்ற சுழிமுனையைத் தெரிசித்து மழையைப் போல் வருஷித்து தமிழ்த்துதிபாடியும் எ-று. (௧௧௫௮)

சூதங்கெந்திமால்தேவி துய்யபாஷாணலிங்கந்-தினுசொன்றுக்குப் பலந்தானிடையதும்-துகையஞ்சது கிளிகொண்டொருபத்தநுவுகமை-தொழுதநாதமொன்றிடை யமுரிநாலுமந்திடை சுகமெய்ப்பொருளதுசுத்தியில் தகமைப்படி யனலக்கினி. பஞ்சா

(இ-ள்.) ரசம், கந்தகம், அரிதாரம், வெள்ளைப்பாஷாணம், லிங்கம்இவ்வைந்தும் வகைக்குஒருபலம்சொண்டு கிழிகட்டி அமுரி 4-படி ஒருபாத்திரத்தில்விட்டு அதில்தொங்கவிட்டு எ-று. (௧௧௫௯)

வீரமென்றவிந்துநீர் காரமென்றநாதநீர்-வீரமும் பூரமுநன்றாய்மேவியும்-விரவிய-சாடியி லிரவிமதியைச்சாடி-மிசவும்வைத்து நான்மூன்றுதெளியவைத்துநாளெடும் விபரத்துடன்கிளிதொங்கிட கமலாக்கினி யனல்வீசிட. பஞ்சா

(இ-ள்) அக்கினியிலேற்றி நன்றாய்ச்சிறுதியாக நாள்மூன்று எரித்துஎடுக்கவேண்டும் எ-று. (௧௧௬௦)

நீர்தொக்கிடநாதவிந்ததிதஅட்வொட்டுப்பு-நிறமுந் துல்யமதி போலவுநிலவுபோல் நிகரிலகுதிசையி லுலகுமிகபுகழும்-நெடியகளலமிர்தபடிசமெனும்லவணம்நிசம்பத்தொருகதிர்காந்தியில் துருவெண்மதிவொளிவீசவும். பஞ்சா

(இ-ள்.) அதினால் ஜலம்வரள மேர்படி சரக்குகளெல்லாம் நல்ல குணமான சுத்தியாகும் எ-று. (௧௧௬௧)

அஞ்சுபஞ்சபூதத்தி லாடுஞ்சரக்குதஞ்சு - ஆனால்சுத்திதாண் டேபஞ்சுங்கட்டினமாச்சு-அமுரியுவர்க்கனலில் விபரமதுசலநீர்-புக

லரவியிளெனி நிறமுஞ்செழுமையுரு அதுபந்தன மிதுசிப்பியில்வெ
குபந்தன யுகையாய்வரும் பஞ்சா

(இ-ள்.) மேற்படி பஞ்சபூதசாக்குகள் ஐந்தும்சுத்தியாகவே கட்டினதா
கும் அதினல் செம்மையும் வெண்மையுமாகும் எ-று. (௧௧௪௨)

இருவிசூஸ்திரநாபிநிருவிசாஸ்திரபேதி-யேலமிதஞ்சுவகையின
மதும்-இடைபலமுமவ்ளித கடல்நுரையுமிளகுப்-பிநசிரகமுஞ்சுக்கு
வகையுமிடையுபல மெடுமஞ்சினை திடமித்தொரு-இனமாமிவைமன
மேவிசிர். பஞ்சா

(இ-ள்.) இருவி, சூத்திரநாவி.நிருவிஷம். சாத்திரபேதி.ஏலரிசிஇவ்வை
ந்துவகைச் சரக்குகளும் ஐந்துபலம், அதிமதுரம் பலம்-1 கடல்நுரை, மிளகு
கருஞ்சீரகம், நற்சீரகம், சுக்குஇவைகளும் வகைக்கு ஒருபலம் இவைகளை
எல்லாம் எடுத்து எ-று. (௧௧௪௩)

சாதிக்காயும்பத்திரி செண்பகஞ்சவ்வாது-சட்டஞ்சந்தனங்கஸ்
தூரிகுரோசனையுங்-தவளநிறமதிபடிகமடநெகன-தனதுபசுமைபொ
ளிகனலும்பூரமதுகாண்சரிதானிடை யிதுரோகணியது காலரைபல
மாவதும். பஞ்சா

(இ-ள்.) சாதிக்காய், சாதிபத்திரி, சண்பகப்பூ, சவ்வாது புனுகுசட்டம்
சந்தணம், கஸ்தூரி, கோரோசனம், பச்சைக்கர்ப்பூரம் இவைகளும் ஒவ்வொ
ருபலம் கடுகுரோகணி முக்கால்பலமும் எ-று. (௧௧௪௪)

சருதுஞ்சீனச்சரக்கு வகைபலமரைகாண்- கடைசரக்கதுவஞ்ச
ங்கணக்காய்பலமதுகாண்-சுடினம்வினவுசரக்கதிதமதுகாலெனகடுரா
மில்லாவகையுங் கருதுமைந்திடைகாணும் சவனத்துடனவலேசது
சயனத்துடன் சரிபார்த்திடை. பஞ்சா

(இ-ள்.) சீனகாரம் பலம்அரை எடுத்துமற்றுமுள்ளசரக்குகளையும்சரியா
கநிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும் எ-று. (௧௧௪௫)

கொச்சகம்.

மதிரவியுநாதவிந்து வந்தவரலாறறிய
மதியும்ரவிவாதபித்தமண்ணும் விண்ணுமேபடைக்த
மதியுங்கதிர்சோதிமின்னல் வாரிபொழிந்தேசொரியும்
மதியுஞ்சலசூஸ்திரமாய் வந்தவகைகாண்கிலரே.

(இ-ள்.) நாதவிந்துக்கள் வந்தவிதத்தையுணர வாதபித்தங்களையும், பூமி
யையும் ஆகாசத்தையும் உண்டாக்கின வாரிபொழிந்து சொரிகின்ற சூத்திர
மாய் வந்தவிதத்தை யாவரும் உணரமாட்டார்கள் எ-று. (௧௧௪௬)

கதிருதையநாதவிந்து கண்டுமனமென்றுருவை
திருமருவெண்சக்கரைபோல் தீக்ஷைபத்துஞ்சென்றதுகாண்

அருவுருபோல்அவ்வும்உவ்வும் அன்னந்தண்ணீருண்டபலன்
வருவதுமுன்போனதெல்லா மதிரவியாற்காண்கிலரே.

(இ-ள்.) நாதவிந்துக்கள் சூரியோதயத்தில் கண்டுமனமொருமித்து செய்யத் தசதீக்ஷைகளுஞ் சென்றன அவ்வும், உவ்வும் அன்னந்தண்ணீர் உண்ட பலனும். இவைகளையெல்லாம் மதிரவிகளால் காணமாட்டார்கள் எ-று.

கலித்துறை.

நாலஞ்சொன்றுகி பிருதிவிநாத ரசமுறவாய்
மாலானஅப்பு மால்தேவியுப்பு மதிரவியும்
மேலானதீப நதிமேவுஞ்சோதி மெய்க்குருவை
ஆலாலமுண்ட சிவனுலுஞ்சொல்ல அறிகழஞ்சே.

(இ-ள்.) பஞ்சபூதங்களின்குணங்களும், அவைகளின்காரியங்களும் ஒன்ருகிநின்ற தேஜோமயமான குருவின் மர்மத்தை சிவனுலும் உணரமுடியாது.

இருபத்துஒன்று மொருமித்துசுற்றி யினிமருந்தை
ஒருமித்துநாடி யபிராமிபாத மொருபொழுதும்
அறுபத்தில்நின்று கமலாலயத்தி லருள்தன்னையே
புருவத்தினேரில் துரியாதீதத்தைப் போற்றினனே.

(இ-ள்.) சத்திசெய்த இருபத்தொருதினுசுகளையும் அரைப்பதன் பொருட்டு சழிமுனையை வணங்கினேன் எ-று. (ககசுக)

வெண்பா.

இந்தசரக்கதனை யிட்டுகுளிக்கல்லில்
விந்துகருநாய்த்தலைசன் வெண்மதிபால்·இந்தசரக்
காட்டியொருவாரமது தானதின்பின்தேசியின்பால்
ஆட்டியதுமுன்போலா மாண்டே.

(இ-ள்.) இவைகளைக்கல்வத்திலிட்டு தலைச்சன் குட்டிபோட்ட கருப்புநாய்ப்பாலால் ஒருவாரம் அரைத்து கழுதைப்பாலால் ஒருவாரம் அரைக்கவேண்டும் எ-று. (ககஎ0)

கேசரியின்பால்விடங் கேட்டீரோ ஆண்டையினி
மேஷம்வெள்ளையாடதின்பால் விட்டு-கேசரியை
பொற்கமலமேவி பூமலரையான்பணிய
சொற்கபரஞானமதி சொல்.

(இ-ள்.) பிறகு வெள்ளாட்டுப்பால்விட்டு ஏழுநாள் அரைக்கவேண்டும்.

விருத்தம்.

மதிநிலவுரவியொளிமருவுக்கன்பாலில் வாரமொருநாள்பிசகாமயனமாட்டி, கதிருதையமிஞ்சிரசமதனுலேழு கர்ப்பூரவெற்றிலைச்சா

றதனிளேழாம், சிறுகீரைமூலமிடித்தொன்றுகேட்டு சுத்தசலம்விட்டுஅனல்படியொன்ருக்கி குருகுமிந்தகியாழமிட்டு வாரமாட்டி கொடிதாகமெழுகுபதங்குடோரியாண்டே.

(இ-ள்.) பிறகு எருக்கம்பாலில் ஒருநாள்லாட்டி, மறுநாள்தொட்டு காலையில் இஞ்சிச்சாற்ருல் ஏழுநாளும், கம்மாறு வெற்றிலைச்சாற்ருல் ஏழுநாளும், சிறுகீரைச்சமூலம் இடித்து எட்டுபடி சலம்விட்டு 1-படியாகச் சுண்டக்காய்ச்சின கஷாயத்தால் ஒருவாரமும் அரைக்கவேண்டும் எ-று. (ககஎஉ)

குடோரியெனுங்குளிகைநிழலுலர்த்தல்வாரங் குடோரமில்லா சிறுபயர்போல்குளிகைசெய்து, மிடைபயறினிடையதுகா ணிடைவெவ்வேருய் இருந்தமருந்திடைகுறைந்தாலிதுவேகங்காண், மடையர்களேகவனமில்லாமதிவேறுனல் மருந்ததுவுமிடைகுறைந்துமனிதர்க்கூட்ட, புடமதுகொண்டதுபொழியுங்காந்திவீசும் பொல்லாதகிராணிசுரதோஷமாண்டே

(இ-ள்.) பிறது சிறுபயறுபோலுருட்டி இந்த மாத்திரையை ஒருவாரம் நிழலில்உலர்த்தி வைத்துக்கொள்ளவேண்டும் அரைக்கச்சொன்ன விதியால் குறையாமல் அரைக்கவேண்டும் எ-று. (ககஎங)

பாவமென்னசெய்தொழிலின் தோஷத்தாலும் படித்துகுருஆசானைப்பணியாதாலும், ஆவதென்னஅருள்பொருளு மறியாதாலும் அடுத்ததசதீக்ஷைகொண்டுஅரைத்ததாலும், மேவிதிறப்பதுவாசல் திறவுகோலால் வெளியாகும்வெளியில்பரவெளியுங்காணும், தேவரிஷியோர்பணியுஞ் சுழினைதீபஞ் சேர்ந்தொருநாள் கடிகையொன்று தெரிசித்தேனே.

(இ-ள்.) செய்யும்வேலையின் கெடுதியினலும், ஆசானைப்பணியாததாலும் திருவருட்பொருளை யுணாததாலும், தசதீட்சைபெற்று அமைத்தாலும்,வாசல் திறவுகோலால் வெளியாகும், அவ்வெளியில் பரவெளியுந்தோன்றும், தேவரிஷிகள் பணிகின்ற சுழிமுனைத்தீபத்தைச்சேர்ந்துஒருநாள்கடிகைஒன்றுவரைக்கும் தெரிசித்தேன் எ-று. (ககஎச)

மாதரைவிட்டகன்றுகற்பமறிபாதாலும் மவுனமென்றேவாசிகொண்டுமாருதாலும், வேதனையாம்விந்துவிட்டொழிந்ததாலும் வீண்வேஷமெடுத்துலகில்விறுதாவாலும், பாதையறிந்தென்னகுறைபடிக்காதாலும்பாழ்யோனிக்காகமடிந்திடுவாராகில்,சூதகவித்தையமுரியென்றகூட்சத்தாலுஞ் சுகஞானபதவிதனில் சொக்கார்தானே.

(இ-ள்.) மாதனைவிட்டுவிட்டு கற்பத்தைஉணராததாலும்,மவுனவாசியைமாருததாலும், விந்துவைவிட்டொழித்தலாலும், வீண்வேஷமெடுத்ததாலும், இன்னும் அனேகவிஷயங்களாலும் சுகஞானபதவியில் சேர்க்கமாட்டார்கள்.

சாத்தியமென்றசன்னி சுரதாபசன்னிதானெழிய
மாற்றிவிடுமோஅவுழ்த மந்திரபஞ்சாக்ஷரத்தை
எற்றிவிடுமோர்குளிகை யிஞ்சிரசந்தனிலும்
கார்த்திடுநாள்மூன்னுதினங் காலையொடுமாலையுமே.

கொச்சகம்.

(இ-ள்.) சாத்தியமாயுள்ள சன்னி, சுரம், தாபசன்னி இவைகளை நீங்கி ஒருகுளிகை இஞ்சிச்சாற்றில் மூன்றுநாள் இருவேளையுங்கொடுக்கவேண்டும்.

தாந்தரிகசுன்னிசுரந் தாபசன்னிவாதசன்னி
ஆந்தரிகப்பித்தசன்னி யையமெனுஞ்சேத்மசன்னி
விந்தைசுகசன்னிகுறி மேகமதுபோங்கறுத்து
சுந்தரமாய்பிரதாபஞ் சொல்லிதுயாற்றுமதே.

(இ-ள்.) தாந்திரிகசந்நி, தாபசந்நி, வாதசந்நி பித்தசந்நி, ஐயசந்நி, சுகசந்நி, இவைகளையெல்லாம் நீக்கும் எ-று. (கசள)

கலித்துறை.

வாதத்தில்மூன்று பித்தத்தில்ரெண்டு வன்னியொன்று
தாதுத்தமத்த மீரஞ்சுவாயில் சார்ந்துதெனில்
பூதந்தலைப்பட்டு நானாவினோதம் புலப்படுமாய்
சாதந்தமிதுவறி யாமலுமாண்பர்கள் பேசுவரே.

(இ-ள்.) வாதத்தில் மூன்றும், பித்தத்தில் இரண்டும், வன்னி ஒன்றும் தசவாயுக்களிற் சேர்ந்ததானல் பூதமானது வெளிப்பட்டு நானாவினோதங்கள் தோன்றுவதாய், கிளைக்குமென்ற பெரியோர்கள் சொல்லுவார்கள் எ-று.

மூலாக்கினிதன்னில் பித்தமும்வாதமு முண்ணிழைந்தால்
காலாக்கினைகொண்டு வன்னியும்வாயுவுங் கருதினதாய்
வேலாக்கினைரண சூராதிவீர விகாரமந்தம்
பாராமல்பூத வேதாளம்போல் வந்துபாயுமதே.

(இ-ள்.) பித்தமும், வாயுவும் முன்னதாக மூலாக்கினையில் நுழைந்தால் காலாக்கினிபோன்ற உஷ்ணத்தைப்பெற்றுவாயுவும் அதிக்கிரமித்ததால்விகாரஞ்செய்கின்ற மந்தமானது வேதாளம்போல வந்துசேரும் எ-று. (கசஎக)

வெண்பா.

வெள்ளெருக்குமாவிலிங்கு வேர்க்கொடியும்வேலிபுனல்
மெள்ளவிடுமுருங்கை வேர்பட்டை-உள்ளபடி
இஞ்சியதின்சுரச மினியசரியஞ்சுமிடை
அஞ்சுபஞ்சபூதரச மாம்.

(இ-ள்.) வெள்ளெருக்கு, மாவிலிங்குகொடிவேலி,புனல்முருங்கைவேர் இவைகளின் பட்டைகளின் சுரசமும், இஞ்சிச்சாறும் சமன்கூட்டி எ-று.

காலைபதுமாலை கதிருதையகாலத்தில்
வாலைப்பருவத்தில்வரும் வாதசன்னி-காலைதனில்
இஞ்சியதோடஞ்சு மினியசுரசமதில்
அஞ்சிலொருகுளிகை யாம்.

(இ-ள்.) காலை, மாலை, உச்சி, இக்காலங்களில் வாதசன்னிக்கு இஞ்சிச் சுரசத்தில் ஒருகுளிகை கொடுக்கவேண்டும் எ-று. (ககஅ0)

வேறுவிருத்தம்.

விரவியனல்வெதுப்பியெட்டுக் கொருபங்காய் சுரசமதுமினிநீர் வாங்கி, துறவியெனுமமிர்தபஞ்சாட்சர மெனவுந்தொடுத் தவுழ்தஞ் சுகபோகிக்குநிறுவியெனுஞ்சன்னியதுவசைவிபாதோஷமதுந்தீருந் தீரா, சுரமிந்தநீரதனி லிழைததுமருந்திருவிழிக்குஞ்சூட்டிடீரே.

(இ-ள்.) அந்தச் சுரசத்தைப் பாகப்படுத்தும்விதம் எப்படியென்றால் அனலினிடத்தில் வெதுப்பி எட்டில் ஒன்றாகக்குறுக்கி அந்தச்சுரசத்தில் ஒரு குளிகை கொடுப்பதுடன், கண்களுக்குங் கலிக்கம்போடலாம் எ-று. ()

பனிநீர்போல்நீர்த்தாரை கடிகைதொண் ணூற்றுறுவிழிபகட்டி மூடி, இனியமருந்தனுபானஞ் சுரசமிருவேளையிடு மிழைத்துநாவில், சனியன்யிடுஞ் சன்னிசுரந்தாபம்விடுந்தாந்தரீகந்தலைமேற்கொண்டா மனிதனல்லவென்றுபுகைவற்றி வசியங்கள்செய்துமாற்றலாமே.

(இ-ள்.) நீர்த்தாரைநோய்க்கு இந்தச்சுரசத்தில் வேளைக்குஒருமாத்திரை யாக இரண்டுவேளைகளும் கொடுத்தால் அந்தரோகந்திரும், தாந்திரீகசன்னி வந்து கூடினால் மேற்படியே மாத்திரைகொடுத்து புகையுங்கொடுத்தால்சாந் தமாம் எ-று. (ககஅங)

வேறு.

சூஸ்திரசன்னிவாதந் தொடும்பித்தசேத்மசன்னி
வேற்றுமைபலதொந்தங்கள் விகாரத்தினிடரினாலும்
சேத்துமமிகவும்விம்மி சென்னியகனலுண்டாகும்
பார்த்தீரோவேதஞான பண்டிதரறிகிலீரே.

(இ-ள்.) பலபலதந்திரமாய்வரும் சந்நிவாதமும், பித்தசேத்ம சன்னியும் பலபலவான தொந்தரோகங்களும், இவைகளாற் சீதளம்மிகுதிப்பட்டுசிரசில் சிதோஷணங் எறித்துன்பமுண்டாக்கும் எ-று. (ககஅச)

நாபியில்சூடுண்டாகி நற்குளஞ்சிதறிப்போகும்
நாபியில்வாதஞ்சேரில் நமனதாய்வாய்மீறும்

நாபியில்தோஷமெய்தும் நாவரட்சியுமேயுண்டாகும்
நாபியில்பித்தஞ்சேரில் ஙளிர்குளிர்சுரங்காணுண்டே.

(இ-ள்.) நாபிஸ்தானத்தில் சூடுஉண்டாகுமானால்தோஷத்தையடையும் நாபிஸ்தானத்தில் வாதஞ்சேருமானால் வாயுஎமனுகும், இவைகளால்நாபியில் தோஷமுண்டாய், நாவறட்சியுமுண்டாகும், நாபியில் பித்தஞ் சேருமானல் ஙளிரும், குளிர்சுரமும் உண்டாகும் எ-று. (ககஅடு)

கன்றிடுங்குடைச்சலண்டங் கதிர்மதியிடியுங்குத்தல்
அண்டிடுந்தாபசோப மருட்பிரள்கடுக்குங்கைகால்
குண்டியும்வாய்பித்தங் கொலேவயிறிடிக்குமுஷ்ணம்
கண்டிரோஆண்டேயிந்த காரசாரத்தின்வாறே.

(இ-ள்.) அதினால் குடைச்சலுண்டாகும், மண்டை இடி, குத்தல், தாபம் சோபம், கைகால்கள்கடுத்தல், குண்டிக்காயில்வாயு, பித்தம், கொலேயும்வயிறும்வலிக்கும், உஷ்ணமுண்டாம் இவைகளெல்லாம் மேற்படிகாரசாரமருந்துகளால் வசப்படும் எ-று. (ககஅசு)

கொச்சகம்

குரோசனேகஸ்தூரிபச்சை குங்குமஞ்சவ்வாதுசட்டம்
அறுவகையினேர்பழந்தான் அறுத்ததனிலுங்குழைத்து
மாறுமணிமாத்திரைகாண் வைத்ததிலுந்தேனுமிட்டு
கூறதுவாய்மூன்றுதினங் கொண்டிருக்கலாமறியே.

(இ-ள்.) கோரோசனம், கஸ்தூரி, பச்சைக்கர்ப்பூரம், குங்குமப்பூ, சவ்வாது, புனுகுசட்டம், இந்தஅறுவகை மணப்பொருள்களில் ஒன்றுனபுனுகு சட்டத்தினால் அரைத்து மாத்திரைசேர்த்து தேன்விட்டு 3-நாள கொள்ள வேண்டும் எ-று. (ககஅஎ)

ஆரேழுசன்னியது மாகுமனுபானமதால்
ஈரேழுவாதசுர மிஞ்சிசுரசந்தனிலும்
பாரேழுமேபடைத்த பஞ்சாமிர்தக்குளிகை
காரார்கணேசனருள் கர்மவினையேகிடுமே.

(இ-ள்.) இந்தஅனுபானத்தினல் பதின்மூன்றுசன்னிகளும்தீரும் வாதசுரமானது இஞ்சிசுரசத்தில்தீரும், இவைமுதல் கர்மரோகங்களும் பஞ்சாமிர்தக்குளிகையினல் கணேசனருளமுன்னிட்டு நீங்கும் எ-று. (ககஅஅ

கலித்துறை.

கொட்டாவியிட்டு விக்கலுமேப்பமுங் குன்மக்ஷயம்
ஒட்டாச்சயமீளே உப்பிசமன்ன விரோசனமும்
தொட்டால்வலிவயர் காசமுஞ்சத்தி சுவாசபித்தங்
கட்டோடுசன்னி சுரங்குளிர்குத்தல் கடல்புக்குமே.

(இ-ள்.) கொட்டாவியைவிட்டு, விக்கல், எப்பம்முதலியவற்றோடு உண்டாகின்ற குன்மம், க்ஷயம், ஈளை, உட்பிசம், அன்னத்துவேஷம்,பேதிவயிற்றுவலி காசம், சுவாசபித்தம் சன்னி, சுரம், குளிர், குத்தல் இவைகள கடலிற் போய்விழும் எ-று. (௧௧அ௧)

ஆடாதோடைரச மாதண்டைத்தும்பை யதில்பூரசங்
கோடாசலைரசம் பொற்றலையிஞ்சி குறித்திருமுன்
றுருயசுரசம் வகைக்குப்பலங்கொண் டன்னீரினில்தேன்
நேராய்சரியிடை மாத்திரையொன்று நிகழ்த்திடுமே.

(இ-ள்.) ஆடாதொடைச்சாறு, ஆதண்டைச்சாறு தும்பைப்பூச்சாறுகோடாசலச்சாறு, பொற்றலைக்கையான்சாறு, இஞ்சிச்சாறு, இவைகளைக் கலந்து வகைக்குப்பலங் கணக்காகக்கொண்டு தேன்சரிஎடைவிட்டுக் கலந்து அதில் ஒருமாத்திரை கொடுக்கவேண்டும் எ-று. (௧௧௧௰)

உரைத்திருவேளை விழிக்கொருவேளை யோரைந்துநாள்
துரைப்படிநோய்க ளகல்வதுநன்று சின்னாட்கள்சென்றால்
முறைப்படிவற்றி புகைகொண்டுநாசி முடுக்குடனே
மறப்புனல்நீறு நதியாய்ப்பெருகி வழிந்திடுமே.

(இ-ள்.) இவ்வாறு இரண்டுவேளைகொடுத்து ஒருவேளைகண்ணுக்கும்கலிக்கம்போடவேண்டும். இப்படிஐந்துநாள் செய்தால் நோய்களெல்லாம் விலகும் சிலநாட்களானால் வர்த்திபுகைபிடித்து நாசியிற்கொண்டால் நீர்வடிந்து சுகமாகும் எ-று. (௧௧௧௧)

வேறு-கவி.

சண்டமாருதக்குழம்பின்வேகஞ்சத கோடிகோடிவினைசருவிபோங்
கண்டபோதுசுரசன்னிதோஷங்கடல் புக்கிபோடிவிடுங்காண்கிலார்
விண்டவேதையிதில் சண்டமாருதமும் வெள்ளிசெம்பதுவெவ்வேற
தாய், துண்டுதுண்டம்வராகனேரிடையுந்தூக்குவாய் தகடுரூக்ஷமே

(இ-ள்.) சண்டமாருதக் குழம்பின்வேகத்தால் சதகோடி நோய்கள் விட்டொழியும் அவைகள் சுரஞ் சந்நி, தோஷங்களாம் வெள்ளி, செம்பு இவைகள் வகைக்கு ஒருவராகனெடை சேர்த்துஉருக்கிதகடுசெய்ப்பா அடித்துஎ-று.

ரசிதமாவதும் ஐவராகனிடை தகடிலிந்தகுரு காற்பலம்
விசிதமாயமுரி யுடனும்வைத்துகுழை மேலுஞ்செம்பதுமேபூசிடு
கசிடுங்கதிரில் காய்ந்ததின்னுமியில் காட்டுமஞ்சுமுற மாமெடு
நேசுகிழதுமேல் வன்னியிட்டுகனல் நீறினுமியி னேர்மையே.

(இ-ள்.) அந்தவெள்ளில் காற்பலம் சண்டமாருதக்குழம்புகூட்டிக்குழைத்து செம்பின்மேற்பூசிசூரியனில்உலர்த்தி உமிப்புடம்போட்டெடுத்தக்கொள்ளவேண்டும் எ-று. (௧௧௧௨)

நீறியாறியது பாருஞ்செம்பினொளி நேரிதுக்குவய தெட்டதாய்
மாறிசீவனமும் வாழ்வீர்நாடதிலும் வாகிவாவெனவும் ரேசிநான்
வாரியொடுநில்ல வங்குசிங்கெனவு மாறிவாழ்வீர்கண்ட தாரையில்
ஆசியண்டவரை கீழுமேலுமிது ஆவிநின்றிட மறிந்திடே.

(இ-ள்.) பிறகு ஆறினபிறகுபார்த்தால் வயசுஎட்டாகும் அதைவைத்துக் கொண்டு ஜீவனஞ்செய்து வாழலாம் எ-று. (ககக௪)

பாருஞ்செம்புபசும்பொன்னின்வர்னமதுபரிசவேதைகுருபாதைகாண்,வாரிவெள்ளியதுவராகனூறுஇடைவாங்கிடுங் குருவிற்கால்பலம்
வேருமேயமுரி விட்டுமதித்துயது வெள்ளிமேலுந்தகடாதிதம்
போகுமேகதிரில் வாலைவீசுகனல் போடுமுன்னுமுயல் புடமிடே

(இ-ள்.) இந்தச்செம்பானது பசும்பொன்னின வர்னமாகும் இதுநிற்க வெள்ளி நூறுவராகனெடைஎடுத்து கற்பலம் சண்டமாருதக்குழம்பு தகட்டில் அமுரியினால் இழைத்துப்பூசி உமிப்புடம் போடவேண்டும் எ-று. ()

தகடுநூறுவரை கனலில்போடபுடங் தவளமென்றநிற ரசிதமாற்
முகடுமேவரா வயசுபத்தரையு மோடியாகிபொன் ஞணிதான்
அகடுமேயிலைபார் சீவனஞ்செய்து அம்புவிதனிலும் வாசமாய்
எகடுதன்வரா மவுனசாதனையி லெய்திடுமமுரி மாறிடே.

(இ-ள்.) மேற்படி தகட்டைப்புடம்போட்டதினால் வயசுபத்தரையாகும் அதைக்கொண்டு ஜீவனஞ்செய்து மௌனசாதனையில் இருப்பார்கள் எ-று

மாறிமாறிவர வாசியூதிவர வாசிவாசியதும் வீசியுந்
தேறிதேறியொரு நாளுநாளுமுனி தேகசுத்திசித ரூமலும்
வாரிவாரிகட லாழியானசல மாறமாறகதிர் வாலைகாண்
சூரிசூரியனுந் தேகதேகமொளி சுருபசூக்ஷ்சுக சுத்தியெ.

(இ-ள்.) அம்மௌனத்தில் மாறி மாறி வாசியை ஊதி நாள்தோறும் இடைவிடாமற்செய்து சொண்டிருந்தால் தேகமானது சொருபசுத்தியையடையும் எ-று. (ககக௭)

வருஷமொன்றுமதி மாறமாறகதிர் வர்னமாமதிவேதைகாண்
புருஷனேடுரதி போகமோகமது போலுங்காரசாரபோதனை
பரிட்சையாய்வருதல் காயதேகியெனும் பாடுபாடுவெகு பாடுகாண்
அருனிலங்குமதி சந்திரபுஷ்சுராணி யமிர்தசஞ்சிவீயி னட்டமே.

(இ-ள்.) ஒருவருஷம்வரைக்கும் சந்திரகலையை மாறி மாறிக்கண்டால் புருஷனேடுரதி கலவைபோலாம் காரசார அனுபோகம் வெகுபாடுபடக்கூடியதாகும் அமிர்தசஞ்சிவியினட்டம் எ-று. (ககக௮)

நாலுங்கண்டுவெகு நாள்கள்சென்றுஉடல் நாடிநாடி வெகுநாளதும்
போலுங்கற்பமுண ரம்புவிதனிலும் பூதலத்தில்சில ஞானிக

ளாலும்வாதரச யோதனைச்செபவி லாவிதானுஞ்சுடு காடுபோ
தேலுங்தேலிடினுங் காரசாரகுரு தேடிதேடியலை வார்களே.

(இ-ள்.) மேலேகான்கையுக்கண்டு அநேகநாள்சென்ற சரீரத்தை நாடி வருந்தி சுடுகாடுபோய்ச்சேர்ந்தாலும் காரசாரமார்க்சத்தைத் தேடித்தேடியே அலேவார்கள் எ-று. (௧௧௯௯)

மாதுயோனிதனில் வாழ்க்கைநாள்சிலதுவாடிவாடிசிலமாய்கையால்
ஓதுநாள்முழுது மோடியோடியுழன் றூர்களம்புவியி லோசிலர்
வாதினுல்சிலது நோய்களால்சிலதுவறுமையால்சிலதுநாள்கள்போ
ஏதுகாயந்தளர்ந் தான்பின்புசட மேதுநாள்தினமு மில்லையே.

(இ-ள்.) ஸ்திரீயின்கர்ப்பக்குழியில் சிலநாட்களிருந்துவாடிச்சிலமாய்கையால் உலகத்தின்மேல் ஓடிஓடித் திரிந்து வருந்தினுர்கள், வாதினுல்சிலரும், நோய்களால்சிலரும் வறுமையால்சிலரும், ஆகையால் இப்படிகாலங்க ளொல் லாங் கழிந்துவீண் ஆனுர்கள் எ-று. (௧௨௦௦)

சயிலமஞ்சும்ரவி கானலுண்டுவர தானுந்தன்னறிய லாகுமோ
சயிலமாதுவின் சாரமாவதளில் சத்துமசித்துமவிளை யாடலாம்
சயிலக்காணுதக தயிலஞ்சுண்டுஞ்சை தன்னியத்தில்மனஞ் சாரிடா
சயிலமஞ்சுமது தானேதானதுவாய் தாதும்வலுவ தாகுமே.

(இ-ள்.) பஞ்சமலைகளும் சூரியன்கானலைப்புசித்துந்தன்னைத் தானறித லாகாது அதுகைகூடினுல் சத்துஞ்சித்துங்கலந்து விளையாடலாகும் சைதன் யத்திலும் மனஞ்செல்லுவதாகும் இதனுல் தாதுவும்வலிவாகும் எ-று. ()

வேறு-விருத்தம்.

மூலகுண்டலி மும்மதவாரிசூழ்
ஆலமுண்டயான் மா௳ திருபொற்பதம்
வாலிகுண்டலி மாமுகனைத்தொழ
சீலமாமலர் சேவடிபோற்றுவாம்.

(இ-ள்.) மூலாதாரத்தின்கண் தூங்கும்குண்டலிசத்தி,ஆலகாலத்தைஉண் டவன், பிரமன், விஷ்ணு விநாயகன் இவர்களுடையதிருவடிகளைத்தொழுது வணங்குவோம் எ-று. (௧௨௦௨)

அண்டாண்டபகி ரண்டமண்டல அகண்டகுண்டலியின்பொற்பதம
நின்றிலங்குமதி வாரிசூழ்மருவி நிகழுலாவியவன் நிர்மலம்
கண்டதாரையுட லாதியந்தசுழி கருணைஞானதமிழ் கருதயான்
தென்றலாவிகதிர் திருப்பரங்கிரியில்திசைமுகன்கமலன் போற்றுவா

(இ-ள்.) அண்டரண்டபகிரண்டங்களிலும் வியாபித்திருக்கின்ற அகண் டகுண்டலியின்பொற்பாதங்களும்,நிர்மலத்தின்பொற்பாதங்களையும்போற்றி இத்தமிழைப்பாடுதற்கு திருப்பரங்கிரியில் சதுமுகனை வணக்கஞ்செய்வோம்,

வேறு.

வெற்றிதருஞானவெட்டி ஆயிரத்தைம்பதுக்கு மேலாமஞ்சில்
சித்திதருங்காயகற்ப நாலாண்டுசென்றதின்பின் செனித்தநோய்க்கு
முத்திதருமவிழ்தமொடு வாதவயித்தியமுமுப்பு முடித்தவாறும்
சத்தியமாமமிர்தமுண்டு சண்டனையுஞ்செயித்துநிலே சாதித்தேனே.

(இ-ள்.) ஜெயத்தைக்கொடுக்கின்ற ஞானவெட்டி ஆயிரத்தைந்நூறு நாலாண்டுசென்றபிறகு காயகற்பங்கைகூடும் இந்தநூலில் ஔஷதங்கள், வாதங்கள், வயித்தியங்கள், முப்புமார்க்கங்கள் முதலியவைசொல்லும்இதனால்எமனையும் ஜெயிக்கலாம் எ-று. (௧௨௦௪)

இத்தலத்தில்முன்னோர்கள்மறைத்தமறைப்பொருள்களெல்லாமியம்
பலானேன், கற்றறியார்கற்றுணா கற்பசித்தியோகசித்தி காயசித்தி
சித்தநிதசத்துஞ்சித்து மித்துருசத்துருக்களில் செய்திபெல்லாம்
ஞத்தமிழால்குருமுனியி னனுக்கிரகமிருந்ததனல் முடிந்ததாண்டே.

(இ-ள்.) இந்தஉலகத்தில் பூர்வாசாரியர்கள் மறைத்த சிலவற்றை நான் சொல்லத்தணிந்தேன் ஆனல் அவைகளையாவரும் கற்றுணர மாட்டார்கள், அப்படிகற்றுணர்ந்தால் அநேகசித்திகளையடைவார்கள், இவைகளெல்லாம் எனக்கு குறுமுனிவருடைய அனுக்கிரகத்தினல் முடிந்தவைகளாம் எ-று.

முடிவதுமெய்ஞ்ஞானகுரு பரனருளாலாறுண்டு முடியவேணும்
வடிவுடையவம்பிகை வாலாம்பிகைப்பெண்ணருள்இந்நூல்மவுனந்த
ன்னில், செடிவீரசிங்கமெனுஞானவெட்டியாலமைத்தகீர்த்திதன்ன
ம், படிபடியாயெய்துமதிரவியதனல்பதம்பெற்றுப்பாரில்வாழ்வார்

(இ-ள்.) அவ்வாறுமுடிவது ஞானகுருவின் அருளினலாகும் ஆறுண்டு பழகினல் வாலாம்பிகையின் கிருபைமேலிட்டு ஞானவெட்டியாலழைத்த கீர்த்தியினல் படிப்படியாய் சகலசித்திகளும் கைகூடும் கற்பஉணவோடுஉலகத்தில் வாழ்வார்கள் எ-று. (௧௨௦௬)

இற்பிறப்புமகற்றகற்பம் வாசியதுநிலேத்துவிட இயம்பலானேன்
சற்பமதின்சாரையினல் சருகினதாலிடையூறு சார்ந்ததாலும்
கற்பமதையுண்டுவருங் காலமதிலவபயித்தியங் கருதுங்காலே [டே
உற்பனநோய்வகுத்திடினுமதற்குவயித்திய அவிழ்தமுரைப்பேனண்

(இ-ள்.) இந்தச் சென்மத்தையொழிக்க கற்பஞ்செய்ய வாசிநிலேக்கவழி சொல்லலாம் சாரையால் இடையூறஉண்டானலும், அக்காலத்தில் உபத்தியம்கேரிட்டாலும் ரோகங்கள் உதித்தாலும் அவைகளுக்கு ஔஷதங்கள்சொல்லுகிறேன் எ-று. (௧௨௦௭)

## கற்பமுண்ணுங்கால் அபத்தியநேரிடுமாகில் அதற்குவயித்தியம்-தரு.

வயித்தியம்பாடுகிறேனண்டைகேளீர்-வயித்தியம்பாடுகிறேன்.

(இ-ள்.) ஆண்டமாரே! நான்வயித்தியம்பாடுகிறேன். அவைகளை நீங்கள் கேளுங்கள் எ-று.

வயித்தியம்பாடுகிறேனுபித்தியமாகவுஞ், சபித்தியமாம்பித்த சாபசோபந்திர, பயித்தியகாசமும் பாண்டுசோகையுஞ்சொரி, பச்சைகிரந்திகாமாலை பறந்துவிட்டோடவும். வயி

(இ-ள்.) யுத்தியாகப்பாடும் வயித்தியமாவது. பித்தம், தாபம், சோபம், பித்தகாசம், பாண்டு, சோகை, சொரி, கிரந்தி காமாலை இவைகளைப்போக்கும் எ-று. (௧௨0௮)

மூலப்புளிதனையும் முறைவாய்மைபோலரைத்து, முருட்டியெடுத்துருட்டித் திரட்டிக்காலைமாலையுஞ், சாலவும்பித்தமுஞ் சோகை க்ஷயமுமதிதகாசந், தானெனும்பரந்தோடவு நானெனுமுரைந்தேனண்டே. வயி

(இ-ள்.) மூலப்புளி என்னும்பொருளை கிரமப்படி அரைத்துத்திரட்டி இருவேளையுபகொடுத்தால் பித்தசோகை, க்ஷயம், காசம் இவைகள் பறந்துபோகும் எ-று. (௧௨0௯)

சுக்குடன்வாதமடக்கி திப்பிலிஓமந்துடனும், உக்கிரமதாகுமுருக்கன் பூவதுஞ்சேர்த்தரைத்திவை, பக்குவமாகியகாலைமாலையும்விடாமலுண்ண, உக்கிரமதாகியநோய்களோடியும் பறக்குமாண்டே.

(இ-ள்.) சுக்கு, வாதமடக்கி, திப்பிலி, ஓமம், முருக்கம்பூ இவைகளைச்சமமாக சேர்த்தரைத்து இரண்டுவேளையுந்தின்னநோய்களெல்லாம் ஓடிப்போகும் எ-று. (௧௨௧0)

அண்டவாதங்கள்வாய்வு அசீரணத்தால்பேதியு, மையிருவாய்வரோசிக மதிதமாய்கடுக்கு, மண்டையிடியுஞ்சூலை கிரந்தியரையாப்புடன், வாதமும்பித்தசேத்ம மாறிடுநோய்களாண்டையே. வயி

(இ-ள்.) விரைவாயு, அஜீரணபேதி, அரோசகம், மண்டை இடி சூலை கிரந்தி, அரையாப்பு, வாதபித்த சேத்தும நோய்கள் ஆகிய இவைகள் நீங்கும் எ-று. (௧௨௧௧)

பூரணமாவதுவைந்து புனல்ாவதுவைந்து, பொறியாவதுமைந்துபுளியைந்துகாயைந்து, ஆரணமாகவரைத்து அமுரிவிட்டரைத்துண்ண, அலறியோடிவொளிக்கு மதிதநோய்களாண்டையே. வயி

(இ-ள்.) ஐந்துபுலன்கள், ஐந்துபொறிகள், இவைகளை அமுரியி ஞல் அரைத்துண்டால் சகலநோய்களும் ஓடியொளிக்கும் எ-று.

காரீயசெந்தூரந்தனில் கரியுப்புதனைக்கூட்டி, கருவாலரைத்து ருட்டிக்காலையுமாலையுமுண்ணநாரியர்கெர்ப்பத்தின்வாய்வுநடக்கும் பிரளயமோடி, நமனென்றதிதநோய்கள் நாடியேபறக்குமாண்டே,

(இ-ள்.) காரீயசெந்தூரத்தில் உப்பைச்சேர்த்து அண்டக்கருவி ஞல் அரைத்துருட்டி இருவேளையும்உண்டால் எமன்போல வரும் நோய்களெல்லாம் நடுங்கிஓடும் எ-று. (௧௨௧௩)

காலையிலிந்துப்புடனே கறியுப்பிட்டுப்பதுவுங், கடுக்காயுடன ரைத்து கலக்கியமுரிதனில்,ஞானமேகொள்ளவுங்குன்மநாடியே க்ஷ யங்களோடி,தேடியேபறக்குநோய்கள்சேதியைகேளுமாண்டையே.

(இ-ள்.) காலையில் இந்துப்பு, கறியுப்பு, அட்டுப்பு,கடுக்காய்இவை களைச்சேர்த்தரைத்து அமுரியில்கலக்கி இருவேளையுங்கொள்ளகுன் மம், க்ஷயங்கள்நீங்கும் எ-று (௧௨௧௪)

கருவிழுதியின்வேரிலோடியேவடவேர்ப்பட்டை, கானகந்தனி னுமிச்சங் காணுவோர்மதியில்கொள்வோர்,ஆலகாலவிஷத்தினமுரி யதின்மேற்கொள்ள, வாலவயதுண்டாகுங் காலனில்லையேஆண்டே

(இ-ள்.) கறுப்புவிழுதியின் வடக்குவேர் பட்டையை அரைத்து அமுரியில்கலக்கிக்கொள்ள பாலப்பருவமுண்டாகும், எமன்வருத லில்லை எ-று. (௧௨௧௫)

கருவசளையுங்கைப்பு காணுவோர்மேருகள்தோறுங் காடுகள் தோறுந்திரிந்தால்காணுமோகருவசளை, திரிபுவனந்திரிந்துங்காடலை வோர்தமக்கு,செழுந்தேன்பொழியுமோசொல்வீரிம்மூலிபார். வயி

(இ-ள்.) கசக்கின்றகருவசளை எங்குங்கிடைக்க மாட்டா எ-று.

வசளைவால்மிளகுட னரத்தைவாதமடக்கி, வரிசையதாய் கழ ஞ்சி வாங்கிடுமனல்வெதுப்பி, வசளை பதுசரக்கும்வாங்கித்தூளதாய் ச்செய்து, வாரியெனுமமுரிவார்த்து விட்டாட்டிமைபோல். வயி

(இ-ள்.) அந்தவசளை, வால்மிளகு, சன்னராஷ்டம், வாதமடக்கி இவைகள்வகைக்கு ஒருகழஞ்சுவாங்கி அமூரியினுல்அரைத்து எ-று.

கதிர்மதியும்வருத லுவகையாக்காலைமாலையும்,கருதிசுண்டைக் காய்பாகங்கண்டுகளிகூறவும், உதையமண்டலமுண்ணபற்பதமதனி லூட்டி, ஒருபணவிடைகொண்டு உணர்ந்துயோகஞ்சாதித்தால்.வயி

(இ-ள்.) இருவேளையும் சுண்டைக்காய்அளவு ஒருமண்டலம்வரை க்கும் உண்டால்பற்பம் பணவெடைவைத்து உண்டு யோகஞ்சாதித் தால் எ-று, (௧௨௧௮)

நீலக்கொடியின்வேருஞ் சாதிப்பத்திரியேலம், நேர்சமனதுவ கையதுவுஞ்சேர்த்தெடுத்து,ஞாலமதினீர்விட்டுரசனேக்க வசமாட்டி, நாற்பதுநாளிருவேளை நாவேயுண்டுவிட்டோங்காண். வயி

(இ-ள்.) நீலோற்பலக்கொடியில்வேரும், சாதிபத்திரியும்,ஏலமும் சமனுகஎடுத்து சலத்தாலரைத்து நாளொன்றுக்கு இருவேளையாக நாற்பதுநாள் உண்டோம் எ-று (௧௨௧௯)

கறுப்புக்கையாந்தகரை கருஞ்சீரகமுஞ்சுக்கும், கடுக்காய்தோ டுங்க மூஞ்சி வகைக்கிவ்விதமாகும், நறுக்கியமுரிதனிலுட னுண்டிரு வேளையும், உபமாய் மண்டலங்கொண்டு உணர்வீரென்னுண்டையே கேள். வயி

(இ-ள்.) கரியகரிசலாங்கண்ணி, கருஞ்சீரகம், சுக்கு, கடுக்காய்த் தோல் அமுரியினுல் அரைத்து நாளொன்றுக்கு இரண்டுவேளையும் ஒருமண்டலம் தின்னவேண்டும் எ-று. (௧௨௨0)

கனகாம்பரமெனவுங் காசிடைகாண்வேரின்தோடுங்,கடுக்காய் கற்கடசிங் காசிடைகணக்கதாகும், செனகாதிதமேவியஅமூகியத ஞலாட்டி, தினமுமிருதன்வேளை யொருமண்டலமுமுண்ண.! வயி

(இ-ள்.) வேரின்தோல் காசெடை கடுக்காய்த்தோல், கடுக்காய்ப் பூ, இவைகள்வகைக்குஒன்று காசெடைஎடுத்து அமுரியினுல் அரை த்து நாளொன்றுக்கு இருவேளையாக ஒருமண்டலம் உண்ண எ-று.

காட்டுமுளகருனே கருத்திலகப்பட்டாக்கால், கறுப்பாயிருந்து கண்டால் பொறுப்பாய்சமூலம்வாங்கி, கூட்டுமிளகுசுக் குங்குரோச னையுங்கஸ்தூரி, கொடுத்துப்பணமரைதா னெடுத்துமதிநீர்விட்டே.

(இ-ள்.) காட்டுமுள்கருணேகிடைத்தால் அதுவுங்கறுப்பு கிடைத் தால் அதின்சமூலமும், மிளகு,சுக்கு,கோரோசனம்,கஸ்தூரி, இவை கள்வகைக்கு அரைப்பணவெடை எடுத்துமதிநீர்விட்டரைத்துஎ-று

மதிநீர்விட்டுமெயன மதுபோல்மெழுகுபதம், வருதலிரண்டுவே ளை மகிழுமண்டலங்காணும், விதியிருந்தோர்தமக்குவிட்டகுறைவந் தெய்தும், வேதசாஸ்திரத்திலுள்ள விசிதமிதுவறியும். வயி

(இ-ள்.) மயனபதமானபோது எடுத்து நாளொன்றுக்குஇரண்டு வேளையாக ஒருமண்டலம் கொள்ளவேண்டும் எ-று. (௧௨௨௩)

விருத்தம்.

காஞ்சபுளிதனேயெடுத்துத்தூளாய்செய்து கம்பியுப்புக்கிடைக் கிடைதான்கலந்தவுண்ண,துஞ்சலென்றகுன்மமெல்லாம்பறந்தோடு ஞ்சனங்கனுக்குஈயாதேதோஷமெய்தும், ஒஞாலென்றபுளியமுரிசா

ரணையுங்கூட்டியுண்டிடவுநோய்பறக்குமுடனேதானும்அஞ்சாதநோய்களெல்லாமமுரிதன்னுல் அலரியதுமுடலைவிட்டகலுமாண்டே.

(இ-ள்.) காய்ந்தபுளியைத்தூள்பண்ணி கம்பியுப்புக்குச் சமனுகக் கூட்டிக்கலந்துண்டால் குன்மங்களெல்லாம் நீங்கும், இன்னுமுள்ள ரோகங்களும் உடனேநீங்கும் எ-று. (கஉஉச)

அகலவும்பத்தியங்சாணுமருளக்கேளு அவுழ்தமதில்கோளாறு அனேகமார்க்கம்,புகலவுநாதாக்களுரைத்தமிர்தவாக்கியம்பூட்டினுர் வெகுநூல்கள்புனிதமார்க,விகற்பமில்லை,மனுரைமறப்பாய்ப்போச்சு வெளியாகப்பாடியுமே விகற்பமாச்சு, உறையதுவாயுரைத்திடுநூல் செய்தியெல்லாம்உரைதவறுதுரைத்துவிட்டா ரொளியாய்த்தானே.

(இ-ள்.) அதற்குப்பத்தியம் ஔஷதத்தின் கோளாறுகள்அநேகவிதம் இருநாதாக்கள் சொன்னவாக்கியமாகும். இதைவெட்டவெளியாய்ப்பாடினதினுல் விகற்பமாச்சு, அப்படியிருந்தும் நூலைத்தவறுதுசொன்னுர் எ-று. (கஉஉரு)

காலசருங்கையெரியுங் கண்வாய்கூசும் கண்டமதுபச்சைப்புண்ணுதிதங்காணும், ஆலவிடந்தீண்டினதுபோலாந்தேகம்அசதிமெத்ததீபனமுமதிகங்காணும், வாலையொருதிங்களுமூன்றுச்சுதானுல் மயக்கமெனும்பேதியதாமனந்தாளாதுகோலமெனுமனதுமேதேறவேணுங் கொடிதாகக்கொண்டறிந்துகொள்ளலாமே.

(இ-ள்.) காலசரும், கையெரியும், கண்கூசம்,வாய்கூசும்,கண்டம் பச்சைப்புண்போல்நோவுட், விஷந்தீண்டினதுபோல் சரீரம் ஆகும், சரீரம்அதிகஅசதியாம், பசிஅதிகப்படும், இப்படி 3-மாதங்கள்இருந்தால் பேதிரோகம்உண்டாகும், இவைகளுக்கெல்லாம் மனந்தேர்ச்சியை யடையவேண்டும் எ-று. (கஉஉசு)

உள்ளிருந்தநோய்களெல்லாம் வெளியேகாணும் உடம்பெல்லாம்புண்ணுகவெந்துநீறு, மெள்ளிலைபோல்மேனியெல்லாந்தடித்துக்காணும் இந்திரியமுடைந்தல்லோதண்ணீராகும். கொள்ளியால் சுட்டபுண்போல்நாபிவேகுங்குமட்டுவதாலவுழ்தத்தைக்கொள்ளொட்டாது, துள்ளிவிழுந்தாலறுமதாமெரியுந்தேகம் சுருக்கெனவும் நீர்கடுப்புந்தோன்றுந்தானே.

(இ-ள்.) உள்ளிருந்த நோய்களெல்லாம் வெளிக்கிளம்பும், உடம்பெல்லாம் வெந்துபுண்ணுதம், சரீரம் எல்லாம்தடிப்பு உண்டாகும் இந்திரியம் உடைந்துதண்ணீராம், நாபிகொள்ளிக் கட்டையினுற் சுட்டபுண்போலாகும் இவ்வளவும் ஔஷதவேகத்தினுல் உண்டாவதாகும், நீர்க்கடுப்பும் உண்டாகும் எ-று (கஉஉஎ)

ஒட்டொட்டாய்மேனியெல்லாங்கடுப்புத்தோன்றும் ஊதுமது நீர்த்தாரையுடனேபுண்ணும்,கட்டிவைத்தபழங்கனிபோல்தேகங்கா

ந்தும் கலகலென்றுநரம்பெல்லாந்தளர்ந்துகாணும், முட்டியல்லோ
வாய்வு அங்கேயேறிமீளும் முறைமையைந்துதிங்களுக்கு ளொருமை
யாகும், ஒட்டியம்போல்வடமயிலாள் தன்னைநம்பி ஓங்காரபீடமதி
லூறிடாமே.

(இ-ள்.) சரீரம்முழுமைக்கும் கடுப்புண்டாகும்,உடனே நீர்த்தாரைபுண்ணாகும், பழம்பழம்போல் சரீரம்கன்றும், நரம்பெல்லாந்தளர்ந்துவிடும், வாயுஏறிஇறங்கும், ஐந்துமாதங்களுக்குள் குணமாம் பெண்ணைநம்பி ஓங்காரத்தின்கண் மனத்தைவைப்பாம் எ-று.

கற்பமுண்ணும்போது நேரிடுந்துன்பம்-தரு.

தனானந்தன தனானா-தான-தத்தனாந்தான தன தனானா.

அண்ணமாரேகேளீரோ-அந்த-அஞ்சுதிங்கள்படும் பாடதனில்
என்னவென்றுயானுரைப்பேன்-நல்ல-இடிபோலிடிகள்முழங்கிடவே
மன்னமன்னர்கூடியல்லோ-நல்ல-மல்லுயித்தியங்கள்வளர்ந்ததுபோ
ல், தன்னுடலுந்தன்னுதல்ல-விந்து- தாமரைதண்ணீர்போல் தான்
வருதல், சொன்னேன்படும்பாடு-இந்நூல்-சூதென்றுந் தள்ளிடலா
காது,உண்டால்தெரியுமதாம்-அமுரி-உடலுக்குள்தொண்ணூற்றாறு
வருமே,சென்றாலுயித்தியங்காண்-மீளா-சித்திரவதையிதைநீயறிந்து
பண்டுபழகினதால்-பின்பு-பாவையருடன்சேராதே. தனானந்

(இ-ள்.) அண்ணன்மாரே! கேளுங்கள், அஞ்சுமாசங்கள் படுகிற கஷ்டத்தை நானெப்படியென்று சொல்லுவேன் நல்ல இடிகளைப் போல்சத்திக்க நல்லயுத்தம்உண்டாக்கினதுபோல, தன்சரீரம் தன்னுடையதல்ல, விந்து தாமரைத்தண்ணீர்போல் வருதல் இவ்விதம் படும்பாட்டைச்சொன்னேன் இந்தநூலைச்சூதானதென்று தள்ளிவிடக்கூடாது அமுரிஉண்டால் உடலிலிருக்கின்ற தொண்ணூற்றாறு பேரும் கஷ்டப்படுத்துவார்கள் ஆகையால் இதைஉணர்ந்து பெண்களுடன் சேரவேண்டாம் எ-று. (௧௨௨௯)

கண்டாலும்பேசாதே-மெத்த-கடினமதாம்பேதிதாளாது, நர
ம்புஎலும்புகளும்-பச்சைநாடிகளுள்ளடசைகளும்போம், கரும்புமு
றிந்ததுபோல்-அஸ்தி-கட்டுதளர்ந்துவிட்டுவிடுங்காண், துரும்பாகிடு
ஞ்சடலம்-செல்லுத்-தூணையரித்ததுபோல்காணும், வருமேயனே
கம்வினை-மட-மாதுமயல்கொண்டணுகாதே,அந்தியினிற்கொள்வத
ற்குபுளி-சந்திற்கிடக்குதுதானறிந்துந் தன்னைப்போலிருக்குமதாங்
சற்பந்-தானேயறிந்திடும்பேர்களுக்கு முன்னமேயான் சொல்லிவிட்
டேன்-அந்த-முக்கோணமாகியகேசரியை. தனானந்

(இ-ள்.) அவர்களைக்கண்டாலும் பேசவேண்டாம்பேதிபெருகும் நரம்புகளும், எலும்புகளும், மச்சைகளும் நாடிகளிலுள்ள ரத்தப்ப

சைகளும்போய்விடும், கரும்பானது ஆலைபிடத்தில்முரிந்துவிடுவது போல எலும்புகள் கட்டுதளர்ந்துவிடும், சரீரம்தூண்களைச்செல்லரித்ததுபோலாகும், இவைகளெல்லாம் பெண்களின்மாய்கையினால்நேரிடுவதாகையால் அந்தமாய்கையைவிட்டு மாலையினில்மூலப்புளிகற்பங்கொள்ளவேண்டும் எ-று. (௧௨௯௦)

அன்னம்போலிளமயிலாள்-அந்த-அம்பிகை பாதத்தை நம்பினேன்யான், என்னைப்போலெளியவர்கள் - இனி-எங்கெங்குமுண்டு பார்வையகத்தில் சாதியில்விந்திஸ்பரகாண்-எந்தன் -தாயோபராபரைதானளித்த, வேதியர்குலங்காணும்-பிர்ம வேதவேதாந்த விதித்தகுலம்,நாதன்பரகுருவாம்-பிரமநாதாந்தத்திலவதரித்தோர், பேதா பேதங்களெந்தன்-சாதி-பிரபல்லியமெவராரறிவார், ஆறுந்தான் திங்களிலுந்-தேகம-அசதிகள்மெத்தவுறக்கமதால், மாறுததுமக்க-மங்கமாதிதமுதமுமனல்தேகயதே. தனனுந்

(இ-ள்.) அன்னநடையையும் இளையமயிற்சாயையுமுடைய அம்பிகையின் திருவடிகளை நான்நம்பினேன் ஆகையால்என்னைப்போல எளியவர்கள் இவ்வுலகத்திலிரார், நானேசாதியில்விந்தீஸ்வரன், என்னுடையதாயோபராபரையாவள். என்னுடையகுலமோ வேதியர்குலமாம். ஈஸ்வரனேபரமகுருவாகும்.எங்களுடையசாதியின்பிரபல்லியத்தையாவர் அறிவார்கள்? எ-று. (௧௨௯௧)

தோராதுடல்கூசுந்-தொண்ணூற்றாறுகருவியுறுஞ்சோபமதாம் வேறாய்வெவ்வேறுபடுத்தி-மாது-வேதனைபோலுடன்வேசாறும், வீறுடன்பசிகோபங்-கனல்-வேகமெத்தகாணும்பூரணத்தில், கூறுடனறிந்துகற்ப-மதி-கொண்டாலல்லோதேகக்கூறுகாணும்,தேறுவது மேழுதிங்கள்-மாது-செல்வமயக்கங்கள்பொல்லாதுபேறுபெற்றறிந்தோர்கள்-பிரம சற்பமதின்கூறுபிரபல்லியமே,யெட்டாந்தான் திங்களிலும்-மெத்த-கொட்டாவிவிட்டாலுயிர்போகும், பட்டால்தெரியவரும்-பாடு பட்டதனால்பாலையாவதுகாண். தனனுந்

(இ-ள் .) இவ்வாறுகற்பமுண்டால் தொண்ணூற்றாறு தத்துவங்களும் வெவ்வேறாய்கிற்கும், பசி, கோபம், கனல்இவைகள் அதிகப்படும் தேகம்வந்தகூறறுநன்றாய்க்காணும். இவ்வாறவெழுமாதங்கள் சென்றால் பிரமகற்பத்தின்கூறு பிரபல்லியமாயிருக்கும எட்டாவது மாசத்தில் கொட்டாவிவிட்டால் உயிர்போகும் பட்டால்தான் அருமை தெரியவரும் எ-று. (௧௨௯௨)

விட்டால்விந்துவெந்திடுங்காண்-வினை-மீளாது காபக்குரோதத்தினால், செட்டாருலகருமே-மாது-சேணியோனிதனில்கேவலமாய், ஒன்பதுகாண்திங்களிலே-பின்-னுபாயமதாகவுந் தேறவேணும், ஜென்மவினைப்பயன்போகுஞ் சிவ-யோகராஜங்கச் செயல்காணும், பொன்போலுடல்விளங்கும்-மாயப்-போதனைகண்டவர்போய்மீளார்ஐம்பூதமாரறிவார்-மதி-அப்புஅறிந்தோரவர்மாளார்பத்தாந்தான்

திங்களிலும்-துயர்-பாலன்படுப்பாடுமெத்தவுண்டு, சற்றூர்சவியார் காணியங்-கற்பங்-காயசித்திபெற்றல்சாலனில்லை. தனஞ்

(இ-ள்) விந்துவை வெளியில்விட்டால் அதுவெந்துபோகும் செய்தவினைநீங்காது ஆகையால் உலகத்திலுள்ளவர்கள்காமாதிகளால் கெட்டார்கள், ஒன்பதாவது, பத்தாவதுமாதங்களில் பிள்ளைபடுந் துயரும் மிகவுங்கொடிது எ-று. (௧௨௫௫)

வித்தால்விளைவுமுண்டு-மிகு-வேதனைமெத்தவெகுபாடு, சற்றூகிலும்பொறுக்காச்-சடஞ்-சாக்காடுசாகாதிருப்பதுபார், உற்றூருறவின்முறை-சுற்றத்-தார்களொருதுணையானறியேன், இதுக்குமருந்தது வும்-புவியில்-எங்குமில்லைகருகண்டறியார், உதவாதினியறியேன் கற்ப-முண்டிடுவோர்மாற்றதுகாணும், இறவார்கதிர்மதியால் செடமெண்சாணுடலும்வலுத்திடுங்காண் பரவசமாயளித்தேன்-ஜென்மபாதகஞ்செய்தால்பறந்துவிடுந், துரைராஜயோகத்தினுல்-துன்பஞ் சேராதுகற்பச்சுகாதீதமே. தனஞ்

(இ-ள்.) விதைவிதைத்தால்விளைவும் அனேகப்உண்டுமிகுந்தவேதனைவெகுபாடு கொஞ்சமாவதுபொறுக்காத சரீரமானது சாவாதிருப்பதற்குவழிப்பார், உற்றூர்முதலியவர்களை நான்அறியமாட்டேன், இதற்குமருந்தோ உலகத்தில்எங்குமில்லை. கற்பமுண்டவர்கள் மாத்திரம் இறக்கமாட்டார்கள். இதனுல்எண்சாண் உடம்புபலப்படும் சென்மத்தில் பாவருசெய்பக்கூடாது ராஜயோகத்தினுல் துன்பம் உண்டாகமாட்டாது இதுவேகற்பசுகாதீதமாகும் எ-று.

விருத்தம்.

திங்கள்தசபத்தாச்சுபாலனுர்க்கு சிறுவனுமேபிறந்திட்டான்திங்கள்பத்தில், கங்கையணிசடையாரைப்போற்றிசித்தங்கருத்தாலுமெடுத்துலகில் செனித்தேன்காணு, மங்கையுடன்வாதாடியமிர்தங்கொண்டு மனேன்மணிதன்பாதமறவாமல்போற்றி, அங்கிருந்தவண்மையெல்லாமுறைப்பேன்காணும் ஆதிகுருபாதமறவாமல்தானே.

(இ-ள்.) பிள்ளைக்குப் பத்துமாதமாச்சுது பத்தாவது மாசத்தில் பிள்ளைபிறந்தான் பரமேஸ்வரனைத்துதிசெய்து உலகத்தில்பிறந்தேன் அம்பிகையோடுவாதாடி அமிர்தத்தைக்கொண்டு அவனுடைய திருவடிகளைத்துதிசெய்து அவ்விடத்திருந்தஉண்மைகளையெல்லாம் சொல்லுவேன் குருவின்திருவடிகளை மறவாமலிருந்து எ-று.

மூலமெனுவச்சிரப்பை வீட்டுக்குள்ளே மூங்கில்முளைபோலதுவுங்காரசாரம், வாலைபருளாலமைத்தவாறுதன்னுல் மதிரவியுங்கூடியதுமிரண்டுஆண்டில், பாலனதுபோல்ஜெனித்துப்பிறவியாகி பத்துதிங்கட்குள்ளுஞ்சிறுபாலனுகி, தூலமிந்தமூலயதி லுதித்தவன்மை சொல்வேனினிகாயம்வந்த சூக்ஷமாண்டே.

(இ-ள்.) மூலாதாரம் என்கிற வஜ்ஜிரம்போன்றபையுள்ளவிட்டுக்குள்ளாக மூங்கில்முளையைப்போல வாலாமபிகையின் அருளினால் காரசாரங்கள்உண்டாக்கினவிதமும், மதியும்ரவியுங்கூடி இரண்டுவருஷத்தில் பாலனைப்போல்பிறந்து பத்துமாதங்களுக்குள் சிறியபாலனுய் இனிமூலத்திற்பிறந்த தன்மையைச் சொல்லுகின்றேன் எ-று.

காயசித்தி-தரு-

காயம்வலுத்ததுகா-ணண்டே-காயம்வலுத்ததுகாண்.

(இ-ள்.) ஆண்டையே! சரீரமானதுவலுமையடைந்தது எ-று.

காயம்வலுத்ததுமாய்கைமரைந்தது, கவலைதெளிந்தது சகலமொழிந்தது, நேயனருள்பணிந்தாக்கைவலுத்தது, நீயென்றுநானென்று நேசமொழிந்தது.
சாயம்

(இ-ள்.) சரீரமானது வலிமையடைந்தது! அதனால் மாய்கைமறந்தது, கவலைதெளிந்தது, சகலமும்ஒழிந்தது, இவைகள்எல்லாம்நீக்கவே ஈஸ்வரனுடைய கிருபையினால்சரீரமும் மிகுந்தவலிவை யடைந்தது, நீ! நான்என்கிற இருபகுப்புஒழிந்தது, அத்துவிதநிலை உண்டானது எ-று.
(௧௨௬௭)

கூற்றுவனென்கிற கொடூரமழிந்தது, கோடானகோடிவியாதியிறந்தது, யேற்றியிருந்தஇகழ்ச்சிமறந்தது, என்னுள்ளேயீஸ்பரன தன்னையறிந்தது.
காயம்

(இ-ள்.) எமன்என்கிறகொடூரமானது முழுமையும் நீங்கினது, கோடானுகோடிகணக்கான வியாதிகள்பிறந்தன, இருந்தஇடத்தின் இகழ்ச்சிமறந்து விடப்பட்டது, எனக்குள்ளாகச் சர்வேஸ்வரனை உணர்ந்தது எ-று.
(௧௨௬௮)

வாசமாய்நித்திரைபாசமறந்தது, வையகந்தோர்கள் வசியம்பிறந்தது தூஷணையற்றது பூசைநைவேத்தியஞ் சொல்லுமந்திர செபஞ் சொக்கியும்போச்சுது.
காயம்

(இ-ள்.) நித்திரையானதுபாசமறந்தது, உலகத்தில்ஜனங்களுக்கு வசியம்பிறந்தது, தூஷணைஒழிந்தது, பூசைநைவேத்தியம்,சொல்லுகின்ற மந்திரசெபம் இவைசொக்கிப்போச்சுது எ-று. (௧௨௬௯)

தத்துவந்தொண்ணூற் ரூறும்பிரிந்தது, தாதுகள்நாடிசடமும் வேறுச்சுது, சுத்தசலமென்ற முரிதேனுச்சுது, சுகஞானதீயஞ்சுழி காணலாச்சுது.
காயம்

(இ-ள்.) தொண்ணூற்றாறு தத்துவங்களும்என்னைவிட்டுபிரிந்தது தாதுகளாகிய நாடிகளும், சடலமும் வெவ்வேறுய்விட்டது, சுத்தசலமானதுதேனுச்சுது, ஞானதீபச்சுழியைக் காணலாச்சுது எ-று.

காமப்பாலுண்டகருத்துமழிந்தது, காமக்குரோதலோபங்க ண்டிதமாச்சுது, வாமப்பால்கொண்டுமதியொளிகண்டு, மகிழ்ச்சிய டைந்து வச்சிரதேகமாச்சுது. காயம்

(இ-ள்.) காமப்பாலைப்புசித்த கருத்தானது ஒழிந்தது, காமம் குரோதம் லோபம் இவைகள்கண்டிக்கப்பட்டது. வாமப்பாலைப் பானம்பண்ணி மதிதேஜஸைத்தரிசித்து சந்தோஷித்ததனல் வஜ்ஜிர தேகம் ஆச்சுது எ-று. (கஉசக)

மூலத்தினுள்ளமுப்பாழுமறிந்தது, முன்னமேயன்ன மயமும் பிரிந்தது, ஞானத்திலேறவும்வாசிவளரவும், ஞானசிரோமய கியான வாணுண்டையே. காயம்

(இ-ள்.) மூலத்தின்கண்ணுள்ள முப்பாழும்அழிந்தது, அதற்குமுன்னரே அன்னமயமும் என்னைவிட்டுப்பிரிந்தது, வாசியானது ஏற ஏற நான் ஞானவானுனேன் எ-று. (கஉசஉ)

ஓராண்டுக்குள்ளே யுடல்வெவ்வேருச்சுது, ஓங்காரத்துள்ளே யுயிருறவாச்சுது, நீங்காதவாசிநிராமயமாச்சுது, நின்னுள்ளேநின்மயம் நேசமதாச்சுது. காயம்

(இ-ள்.) ஒருவருஷத்துக்குள்ளாகச் சரீரம் வெவ்வேருச்சுது, ஓங்காரத்துக்குள் ஆன்மாகலந்தது, ஒழியாதவாசியினல் நிராமயம்ஆச்சுது,உனக்குள்உன்னுடைய நிலைவெளிப்பட்டது எ-று. (கஉசங)

பிராணுயவாசியும் பின்னிட்டிழுக்காமல் பேசுமூலாதாரம் வாசம்பொருந்திட, வீருனவாயுவுந் தசபத்துங்கூடியு, மேவியொருமித்துத் தாவியுமொன்றதாய். காயம்

(இ-ள்.) பிராணுயாமத்திற்குரிய வாசியானதுபின்கொண்டுஇழுக்காமல்மூலாதாரமானதுமனங்கொள்ளதசவாயுவுங்கூடிஒருமித்ததாய்

பத்துமொருமித்துப்பாய்ந்திடுநாடிதான், நித்தம்வாசியதுநேர் பிசகாமலும், சத்துஞ்சித்தானந்த முத்தியருள்தருஞ், சித்தியனுக்கிரகசுத்தமதிமலர். காயம்

(இ-ள்.) தசவாயுக்களும் ஒன்ருகச்சேர்ந்து பாய்கின்றநாடிதான் தசவாயுக்களையும் தவருதபடியிருந்து காக்கின்றது எ-று. (கஉசரு)

நித்தம்வாசியூதி நின்றுருசாதியும், மற்றதுகைப்பு அப்புவஞ்சுன்னமாம், பெற்றபேரிப்படிபேர்பெறுஞானிகள்,உத்தமர்சொல்லுமுண்மையிதாண்டையே. காயம்

(இ-ள்.) தினந்தோறும் வாசியைஊதி நின்றிருக்கின்ற சாதியும், கைப்பும் அப்பும் கலக்கச்சுண்ணமாகும், இதுவேஉத்தமர்களாகிய ஞானிகள்சொல்லுகின்ற உண்மையாகும் எ-று. (கஉசசு)

வாசிநிலையாதேன் மாண்டிடுந்தேகமும், பாசம்வைத்து விசுவாசித்துஊதிடும், பேசபேசவெகுகோடிரகசியம், ஈசனருள்படியனுக்கிரகநிலையினில்.
காயம்

(இ-ள்.) பிராணாயாமம் கைகூடாவிட்டால் சரீரம்விழுந்து விடும். ஆகையால்மனத்தை நன்றாகவைத்துஊது. இதுவேபெரிய ரகசியமாம் இதுஈஸ்வரன் சொன்னபடியே நான்சொன்னதாகும் எ-று.

இந்தவாசியூதி எத்தேசகாலமும், அந்தப்படியனுக்கிரகநிலையினில், சிந்தைவைக்காமலுஞ் செய்கைவிதப்படி, விந்தையதாக விளங்கினாராண்டையே.
காயம்

(இ-ள்.) எக்காலமும் இவ்வாசியைவூதி அனுக்கிரகநிலையில்மனத்தை வைக்காமல் விந்தையாகவிளங்கினார்கள் எ-று. (௧௨௪௮)

சந்தையங்கள்வாரா சாக்ஷிநூலைப்பாரும், வந்தவழிவருமாறலகப்படும், எந்தன்கருத்தறிந்தந்தவிதிப்பயன், நிந்தனையுமில்லாநீடூழிவாழ்வார்களே.
காயம்

(இ-ள்,) சந்தேகங்கள் உண்டாகாத சாக்ஷிநூற்களைப் பாருங்கள் பார்த்தால்வந்தவழியைஉணரலாம், மாறுவதும்ஏற்பம்என்னுடைய கருத்தைஉணர்ந்து நிந்தனையில்லாமல் நீடூழியாகவாழ்வார்கள்எ-று

கட்டும்வாசியறுகால் பன்னிரண்டினால், நெட்டிட்டேறுமலும் நீஞ்சிடநீஞ்சிட, மட்டுப்படுமிந்த அம்பிகாயோகமுந், தட்டுப்படுங்கனம் பலசோதியில்.
காயம்

(இ-ள்.) கட்டவேண்டியவாசி செவ்வையாகக்கட்டுப்படாமல்பன்னிரண்டு அங்குலம்வரைக்கும் பாய்வதினால் அதுநீஞ்ச நீஞ்சப்பலமாய் ஏறுகிறது ஆகையால் அம்பிகாயோகமும்தட்டுப்படும்பொன்னம்பலசோதியில் எ-று. (௧௨௫0)

அட்டியில்லாமலு மாண்டையினிகேளும், ஒட்டிக்கண்டதாரை ஓயாமலூதிடுங், கெட்டிகெட்டிவச்சிர தேகமதாகிடும், நெட்டிநெட்டியேற நிர்மலசுரூபமே.
காயம்

(இ-ள்.) ஆண்டையே! தடையில்லாமற்கேள் கண்டதாரையிற்சேர்ந்து ஓயாமல்ஊத கெட்டியான வஜ்ஜிரசரீரயாகும். ஆகையால்நெட்டிநெட்டி ஏறினால் நிர்மலசொரூபமாகும் எ-று. (௧௨௫௧)

நாளுநாளுக்கு வினாடிவினாடிகொண், டாளுந்தினந்தினமப்படியேறினால், ஏழுமேழும்பதினாலுலகங்களும், சூழுஞ்சூழுஞ்சுகாதீதங் காணுமே.
காயம்

(இ-ள்.) நாள்தோறும் இப்படிசெய்து ஏறினால் பதினான்குலோகங்களுக்கும் சுகாதீதமுண்டாகும் எ-று. (௧௨௫௨)

விருத்தம்.

தராதலவிராசர்களுந் துரும்பதாச்சு தரணிதனிலுள்ளவர்களெறும்பதாச்சு, தராதுரைகளனுவளவுதுன்பம்போச்சு துலையாதசெகமாய்கைதுலைந்துபோச்சு, மாராதசுடர்கோபமாறிப்போச்சுமகிதலமுமண்டரண்டமறியலாச்சு, வீராதிவீரவென்றும் வேகம்போச்சு வேதாந்தசாரமெல்லாம் வெளியாய்போச்சே.

(இ-ள்.) இவ்வண்ணஞ்செய்ததினுல் அரசர்களெல்லாரும் துரும்புக்கு ஒப்பானுர்கள். உலகவாசிகள் எறும்புக்குஒப்பானுர்கள் சகல துனபங்களும்ஒழிந்தன கோபங்கள்நீங்கின அண்டரண்டங்களின் உண்மையைஉணர்கின்ற சக்திஉண்டாச்சுது வீராதிவீரன் என்று சொல்லும அகங்காரம்போய் சாந்தமுணடாச்சுது. வேதாந்தசாரங்களின் உண்மை ஐயந்திரிபற உணரலாச்சுது எ-று. (கஉடுரு)

கல்லுமலைகரடெல்லாம்பொன்னதாச்சு கண்பட்டவிடமெல்லாங்கயிலையாச்சு நல்வினைதீவினைக்கவுழ்தங்கற்பமாச்சு நாடினபேரெலலோர்க்குஞானமாச்சு, சொல்லவல்லபெரியோர்க்குத்தெய்வமாச்சு சூரியப்பிரகாசவெளிதோணலாச்சு, புல்லறிவுகொண்டோர்க்குப் பேய்தானுச்சு பூரணத்தையறிந்தவர்க்குஞானமாச்சே.

(இ-ள்.) கல். மலை, கரடு இவைகளெல்லாம் பொன்னுய்விட்டது. பார்க்கின்ற இடங்களெல்லாம கயிலாசமாச்சுது, இருவினைகளுக்கு ஔஷதம் கற்பமாச்சுது இவைகளைவிரும்பினவர்களுக்கு ஞானமாச்சுது சொல்வதற்குவல்லவர்களான பெரியவர்களுக்கு தெய்வமாச்சுது அங்ஙனம் உணர்ந்தவர்களுக்கெல்லாம்தேஜோமயம்விளங்கலாச்சுது அறிவீனர்களுக்கு இவைகளெல்லாம்பேய்பிடித்த வாருயிற்று பரிபூரணத்தை உணர்ந்தவர்களுக்குஞானமும் உண்டாச்சுது எ-று.

கொச்சகம்.

காலையிலுண்டாலமுரி கடும்பேதிகாணுமதாம்
மாலையிலுண்டாலமுரி வருமேபெருவாழ்வு
காலையிலுநின்று தடுமாறிப்போகாமல்
மாலையெனும்பாதமலர் வணங்கினேன்பூரணமே.

(இ-ள்) அமுரியைக்காலையில்உண்டால் அதிகபேதிஉண்டாகும் மாலையில்உண்டால் பெருவாழ்வுஉண்டாகும், இவ்வேளைகள்தடுமாறிப்போகாமல் வாலாம்பிகையின் திருவடிகளை வணங்கினேன்எ-று

விருத்தம்.

சொல்லவொண்ணுப்பூரணத்தைச் சொல்வேனுண்டேசோதிம்தியாயிருந்தசூக்ஷந்தன்னை, வெல்லவொண்ணுதாயிரத்தைந் நூறுக்குள் விரித்துரைத்தேன்மகத்துகளின் மறைப்பெல்லாந்தான்,வல்ல

வன்சொல்லவில்லை அம்பாள்சொல்ல வசனித்தேன்கற்பவிதிமார்க்க மெல்லாம்,நல்குவேன்பட்டசளம்நன்மைதீமைநயந்திங் நாலறிவதற் குநல்குவேனே.

(இ-ள்.) சொல்லுதற்குக்கூடாத பூரணலட்சணத்தை நான்சொல் லுகிறேன் சூரியசந்திரகிரணம் போலிருந்தசூட்சத்தை இந்த 1500-க்குள் சொன்னேன். நான்என்னுடைய வல்லமையாற் சொல்லவில் லை உமாதேவிசொல்ல நான்சொன்னேன் எ-று. (கஉருசு)

பூரணமுறை-தரு.

பூரணஞ்சொல்லுகிறே-னாண்டைகேளீர்
பூரணஞ்சொல்லுகிறேன்.

(இ-ள்-) ஆண்டையே! நான்பூரணத்தைச் சொல்லுகிறேன் எ-று.

பூரணகும்ப முனியனுக்கிரகத்தைப், பொன்போலிருத்திடுமை ம்பத்தோரக்ஷரங், தாரணையாகவுந்தற்பரலிங்கஞ்,சதாசிவஞானசடா க்ஷரங்கண்டியான்.
பூரண

(இ-ள் ) அகஸ்தியருடைய அனுக்கிரகத்தைபெற்று ஐம்பத்தோ ரட்சரங்களையும் உச்சரித்து சதாசிவஞானசடாட்சரத்தைக் கண்டு.

காலத்திலேறியபோதகந்தன்னைக், கருவாலறிந்துஅறிவறிந்த ர்ச்சனை, ஞாலத்திலுங்கண்ட தாரையிலும்வாசி, நாமறிந்தூதிடவா மப்பால்கொண்டுமே.
பூரண

(இ-ள்.) காலத்திலுண்டான ஞானத்தைக் காரணங்கொண்டுணர் து அர்ச்சனைசெய்துகண்டதாரைவழியாய்ஊதிவாமப்பாலைகொண்டு

பச்சைப்பசுங்கிள்ளைப் பாலகன்தன்னையும், பாவியறியாதபா னையானதால், உச்சிதம்வேறுண் டுலகத்தைச்சுற்றியும், ஒன்றுங்கி டையாம லுண்டார்களாண்டையே.
பூரண

(இ-ள்.) இளம்பாலகனை பாவிகள் அறியாமையால் உலகத்தைச் சுற்றிச்சுற்றி ஒன்றுங்கிடைக்காமற் கெட்டார்கள் எ-று. (கஉருகூ)

தேசங்களோடித் திரிந்தலையாமலுஞ், சென்மமீடேறத்தசதீட் சைசெய்துயான், மோசம்வாராமலும்வாசிகண்டதாரை,ரேசித்துப் பூரண விலாசத்தைநிரம்பினேன்.
பூரண

(இ-ள்.) பலதேசங்களிலும் ஓடிஓடித்திரிந்து அலையாமலும்ஜென் மமானது ஈடேற தசதீட்சைசெய்து நான்யாதொருமோசமும்உண் டாகாமல் கண்டதாரையில் ரேசித்து ஊதிப்பூரண விலாசத்தைநம் பினேன் எ-று.
(கஉசு0)

அந்தநல்லுப்பதைச்சந்தித்துக்கொள்வதும், ஆனல்வெகுமோ சமாக்கினையும்வரும், தந்தையுப்பகன்றுபேதிகடைத்தது, சாரகார வேகத்தாலுஞ்சுன்னமாண்டே.
பூரண

(இ-ள்.) அந்த உப்பைச்சந்தித்துக் கொள்வதும் ஆனல் மிகுந்த மோசமும் ஆஞ்ஞாபனையும்சேரிடும், ஆகையால் அவ்வுப்பைவிட்டு சாரகாரவேகத்தினல் அதைச் சுண்ணமாக்கவேண்டும் எ-று.

காலையில்மூலப்புளியுண்டீராண்டினில், மாலையிலுஞ்சந்திரமாம திமாறிடும், வாலைப்பருவம்வருஷமீராண்டுபோய், மூலச்சுழிமுனை முத்தியுமெய்துமே. பூரண

(இ-ள்.) காலையில் மூலப்புளியையுண்டு இரண்டுவருஷத்தில்மாலையிலும்உண்ண சந்திரகலைமாறும், வருஷம் இரண்டுசென்றல் மூலச் சுழிமுனையினல் மோட்சமுண்டாகும் எ-று. (௧௨௬௨)

சத்திசிவமொரு மித்துஈராண்டினில், சுத்தவைராக்கியஞ் சூக்ஷ மித்நூல்முறை, வித்தைவேதைக்கு வேதாந்தக்கருக்கடை, சித்தரா ணர்சிலர் சின்மயசித்தியே. பூரண

(இ-ள்.) இரண்டுவருஷத்திற் சத்தியுஞ்சிவமுங்கலந்துஇருந்தமையால் சுத்தவயிராக்கியமுடன் வேதாந்தக்கருவின் கடைசியால்சித்தராணர்கள் சிலர் ஞானசித்தியை யடைந்தார்கள் எ-று. (௧௨௬௩)

அஞ்சுபஞ்சபூத மாதரவாயிந்த, நெஞ்சநேர்நடுமையத் துவாரமில், நஞ்சுபோலுமிருந்தாடியநாதனுங், கொஞ்சியேமேவிகுழந்தை போலாவரே பூரண

(இ-ள்.) பஞ்சபூதங்களின் ஆதரவினல் பத்துவாரத்தில்தலைவனும் குழந்தையாய் விளையாடக்கூடிய பதத்தையடைவார்கள் எ-று.

வாலைவாலைவரும்வயதேகலை,மாறிமாறிமடக்கஅஸ்வங்களைநீலமேகச்சுவ் வாரியூதியூதி, வினடிகால்கள் வெளிவராதாண்டையே

(இ-ள்.) சரமாகிய அஸ்வங்களை மாறிமாறிமடக்கினல் சரக்கால் வெளியில் வராது எ-று. (௧௨௬௫)

காலைமாலையதி காலையில்வாசியும், ஆலமுண்டஅமிர்தத்தினல் மூலமும், பாலையுண்டுவான்குமுறிப்பாலுடன், சோலைவாழும்சிற்று மணக்கெண்ணையே. பூரண

(இ-ள்.) அதிகாலையில்வாசி ஊதினல் ஆலமுண்டவனுடைய அமிர்தத்தில்பாலையுண்டு வான்குமரிப்பாலுடன் சிற்றுமணக்கெண்ணையும் எ-று. (௧௨௬௬)

மூலசுத்திமூன்னளதிகாலையில் பாலுமென்னப்பகுந்துசரிசமன் நூலுஞ்சோதி யுள்ளுக்குஒருபலங், காலையில்கரிசாலையுமுண்டிடே.

(இ-ள்.) மேற்படி எண்ணையினல் மூலத்தைச்சுத்திசெய்து அதிககாலையில்பாலும் முன்எண்ணையும் சரிசமனகச்சேர்த்து அதில் ஒரு பலமும் கரிசலாங்கண்ணியுஞ் சாப்பிடவேண்டும் எ-று. (௧௨௬௭)

சிற்றுமணக்குச் செழுமலர்மேவிய, முத்தாடியான முன்னமே யெண்ணைதான், சித்தமாமூலிச்சாறுஞ்சரிசமன், வைத்துவாலைக்க திர்முகமாண்டையே. பூரண

(இ-ள்.) சிற்றுமணக்கினல் ஆடினஎண்ணையும், கரிசலாங்கண்ணிச்சாறும் சரியாகக்கலந்து சூரியன் முனவைத்து எ-று. (௧௨௬அ)

பூமிபாரம் புவியில்நாளுக்குநாள், சாமிநாவினுண்ணுக்கு அண்ணுக்குமேல், நாமியொன்றுபெருவிரல்தோய்த்துடன். நாமினூட்டினன் நாவினில்தேய்த்திடே. பூரண

(இ-ள்) நாளுக்குநாள் பூமிபாரமானது மிகுதிப்படுகிறதே ஒழிய வழலைவாங்கிச் சுசுத்தையடைகிறதில்லை, ஆகையால் மேற்படி சாற்றைநன்றாய்க்குழைத்து பெருவிரலிற்றேய்த்து அண்ணுக்கிலும்உண்ணுக்கிலுந் தடவவேண்டும் எ-று. (௧௨௬௯)

சாய்க்கச்சாய்க்கச் சரித்திடுங்கோழையும்,வாய்க்கவாய்க்கவழலையுமற்றது, தேய்க்கதேய்க்கச்செனித்திடுஞ்சேத்துமம்,தோய்க்கத்தோய்க்கச் சுழிமுனைகாணுமே. பூரண

(இ-ள்.) அவ்வாறுதடவித் தலையைச்சாய்த்து நாக்கைத் தொங்கவிட்டால் கோழையும்வழலையும் ஒழிந்தது. ஒழியவே சேத்துமம் என்னுஞ்சீதளம் ஒழிந்து சுழிமுனைகாணும் எ-று. (௧௨௭0)

மண்டலமிந்தப் படிமூலமாவது, வாங்குஞ்சிறுகுடல் வாங்குமூலப்புளி, கண்டதோர்பலங் காலையிலுண்டு, கர்மமலமுந்துர்மாங்கிஷமேகுமே. பூரண

(இ-ள்.) இப்படி ஒருமண்டலஞ்செய்தால் கல்மிஷமும், துர்மாங்கிஷமும் நீங்கும் எ-று. (௧௨௭௧)

பாலுஞ்சாதம் பதமாகும்வகைகரி, வேலுமயில்மீதில் வாலசுப்பிரமண்ணியர், மேலுங்கண்டகாக்ஷி விளக்கமருளியுங், கோலாகால குமரகுருபரன். பூரண

(இ-ள்.) இதற்குப் பாலுஞ்சாதமும் சாப்பிடவேண்டும். அப்படி சாப்பிட்டால் சுப்பிரமணியனின் திருவருள்கைகூடும் எ-று.

என்குருசுவாமியெனக்குபதேசிகன், பொன்போலும்பூரணன் போதித்தனுக்கிரகம், அன்புவைத்துசுழியப்பார்சதனை, முன்பனுக்கிரகம் பூரணமாச்சுதே. பூரண

(இ-ள்.) உண்ணுகின்ற குருவாயுள்ளசாமியும்,எனக்குஉபதேசஞ்செய்பவனும் முன்னின்று எனக்குப்பூரணத்தையருள்செய்தான்.

வழலைக்கபமுமலமும்மலமும், விழலாகப்போச்சுதுவேதனையாச்சுது, சுழலும்ரவிமதிசுத்தமொன்றாச்சுது, சோதியொளிநாதச்சுரோணிதம்வாச்சுது. பூரண

(இ-ள்.) வழலைஎன்னும் கபமும், பலமும், மூன்றுமலங்களும்தீந்துபோச்சுது, வேதனையுண்டாச்சுது ரவியும்மதியும் ஒன்றாச்சுது, சோதியின்ஒளியும், நாதமாகியசுரோணிதமும் கைகூடினது எ-று.

மும்மலமற்றதுமூன்றுமண்டலத்தில, தம்மையறியசகத்திரமாச்சுது, நன்மைதிமையு மிம்மையும்போச்சுது, நாதவிந்தாலும் நவசித்திரவீடாச்சுது. பூரண

(இ-ள்.) திரிமலங்களும் மூன்றுமண்டலத்தில் அற்றது தன்னைத் தான்அறிந்தால் சகத்திரமாச்சுது, நன்மை, தீமை, இம்மை இவைகள்போய்விட்டன. நாதவிந்துக்களால் நவசித்திரவீடுஉண்டாச்சுது

விந்துநீரு வெளியிலுலாவிய, அந்தவாய்வு அதுசப்தத்துடன் எங்களுசானெனக்குபதேசமு, மைந்தனென்று மகிழ்ந்துரைத்தார்களே. பூரண

(இ-ள்.) விந்தும் நீரும்வெளியின்கண் உலாவின அந்தப் பத்து வாயுக்களின் கலந்ததாம். இதைநான்மகனென்று என்னுடையகுரு எனக்கு சொன்னதாகும் எ-று. (கஉஎசு)

விருத்தம்.

புளியதனையுண்டதனலாவதேது பூரணத்திலேறியல்லோதேறவேணும், வெளியானவிந்துவைத்தானறியவேணும் வேதாந்தசாரமதைக்கட்டவேணும், கனியானகாரணத்தையறியவேணும் காரமுன்சாரமதைக்கட்டவேணும், எளிதல்லவிந்தமுரியிதனலாச்சுஇன்னமொன்றுசொல்லுகிறேனினிதானுண்டே.

(இ-ள்) மூலப்புளியையுண்டதினல் ஆகும்நன்மைஎன்ன? பூரணத்தில் ஏறியல்லவோதேறவேண்டும். வெளியாயுள்ள விந்துவைத்தான் உணரவேண்டும். வேதாந்தசாரத்தைக்கட்டவேண்டும், காரணத்தைஉணரவேண்டும், காரசாரங்களைக்கட்டவேண்டும், விந்தாகிய அமுரி இதனலாச்சுது இனிஇன்னமொன்று சொல்லுகிறேன் எ-று.

வெண்பா.

கேளும்புளியுப்பால் கேசரம்போய்பாய்ந்துவிடும்
நாலுநாளாண்டுதிங்கள் நானறிந்தேன்மீளவுடல்
கண்டேன்கனகசபை காயசித்தியாலறிந்து
உண்டேன்பரந்தனிலும் ஓம்.

(இ-ள்,) புளியினலும், உப்பினலும் கேசரம்போய்ப் பாய்ந்துவிடும், நான்குநாளாண்டு ஒருமாதத்தில் நான்உணர்ந்தேன், மறுபடியும் சரீரத்தைக்கண்டேன்கனகசபையைக்காயசித்தியிலுணர்ந்து ஓம்என்னும் அமிர்தத்தை பரத்தில் உணர்ந்தேன் எ-று. (கஉஎஅ)

சரக்குளிகை-தரு.

குளிகைகட்டிக்கொண்டேன்-சூதரச
குளிகைகட்டிக்கொண்டேன்.

(இ-ள்.) சூதம்என்னும்பெயருள்ள ரசக்குளிகைகட்டிக் கொண்டேன் எ-று-

குளிகையெனுமூல பாதத்திலுநின்று, வெளியொளிதற்பரவெண்மதிசாரத்தில், நளினமதாகவு நாதத்தைக்சேர்த்துடன், புளியிலங்கித்துமே பூரணத்தோடவும். குளிகை

(இ-ள்.) மேற்படிகுளிகைஎன்கிற மூலபாதத்திலிருந்துதற்பரமாகிய வெள்ளியசந்திரசாரத்தில் நாதத்தைச்சேர்த்து பூரணத்திலோடவும் எ-று. (௧௨௮௦)

காரசாரத்தைக் கரைத்தொருபாண்டத்தில், வீரத்தையுங்கிளியாய்கட்டிமேலுடன் சாரத்தைக்காரத்தையேபொடிதூளாய், நீரதிலிட்டு நிகழ்த்திருசாமமே. குளிகை

(இ-ள்.) ஒருபாத்திரத்தில் காரத்தையுஞ்சாரத்தையும் கரைத்து அதில்வீரத்தைக் கிழியாய்க்கட்டி காரத்தையுஞ்சாரத்தையும்பொடி செய்து அந்தநீரிற்போட்டு எ-று. (௧௨௮௧)

பார்த்துவன்னியனல் பாய்ச்சுங்கமலாக்கினை, ஊரலையற்றுவீரமுற்பனமாகுங்காண், காரசாரசுன்ன சங்கைவேகத்தினால்வாரதினாலது வஸ்துவுங்கட்டிடும். குளிகை

(இ-ள்.) இரண்டுசாமம்வரைக்கும் கமலாக்கினியாகஎரித்தால்வீரத்தின் குற்றநீங்கிச்சுத்தமாகும் இதனால் சகலபொருள்களும்கட்டும்

விந்துடனுதமிகவைதச பத்துடனாகிடில், அந்தமிது சுன்னமாகிடுமாண்டையே. குளிகை

(இ-ள்.) விந்துவும், நாதமும் வைக்கும்பதம்வந்து அனலாலுஞ் சவ்வீரம்வலிவாகும், இதுபத்துடனால் இதுசுண்ணமாகும் எ-று.

சவ்விரசுன்னஞ்சாக்கையிறுக்கிடும், எவ்விதமாஞ்சரக்காவதுஞ் சுன்னமாய், கவ்வியுமீய்ந்திடு நீரிற்குழைத்துமே, நவ்விக்கடுங்கதிர் நாடியசுன்னமே. குளிகை

(இ-ள்.) சவ்வீரத்தால் ஆகின்றசுண்ணமானது மற்றச்சரக்குகளை நன்றாய்இறுக்கிக்கட்டும் எவ்விதலோகங்களும்சுண்ணமாகும் இந்த வீரசுன்னத்தை நீரிற்குழைத்துப்பூசி லகுபுடம்போடச் சுண்ணமாகும் எ-று. (௧௨௮௪)

வீரசுன்னத்தால் வெகுவேதையாகிடும், மேலுந்துரிசுக்குவிராகனுமிநீரால், சாரசுன்னம்பட மேலுங்கவசமாம், சூரியதனில்சுட சுன்னமதாகிடும். குளிகை

(இ-ள்.) வீரசுண்ணத்தால் அதிகவேதையாகும் மேலும்ஒருவராகனெடை அருசுக்கு ஒருகழஞ்சு வீரசுண்ணத்தை உமிநீராற் குழைத்துக் கவசஞ்செய்து வெயிலில்வைக்கச் சுண்ணமாகும் எ-று.

பாச்சுங்கழஞ்சுப்பாஷாணமசிக்குதமேல்,தேச்சுக்குருவினில்செங்கதிரில்பட, வாச்சுதமுரியில் மாட்டிரவியினில், கூச்சமில்லாமலுங் கூறிதுவாண்டையே. குளிகை

(இ-ள்.) பாஷாணத்துக்குமேலும் அவ்வாறே வீரசுண்ணங்கழஞ்சை உமிநீரைக்குழைத்துப்பூசி வெயிலில்வைக்கச் சுண்ணமாகும்.

தசபத்துடனிடை தாளசம்வாங்கிடும், விசையதாயிடில் விராகனுமாகிடில், கசையஓர்கழஞ் சாமதுசுன்னமும், இசையஅமுரியில் வேதைக்கவிழ்தமே. குளிகை

(இ-ள்.) தாளகமும் இவ்வாறேசெய்தால் சுண்ணமாம், இவைகட்கு எடைவிளக்கம் எப்படியென்றால், ஒருவிராகனெடை சரக்குகளுக்கு ஒருகழஞ்சுசுண்ணமாம் எ-று. (௧௨௮௭)

தாளகந்தன்னைத் தணல்கதிர்வேகமில்,ஆகமப்படியனலும்படபட தூளதாகிடுஞ்சுன்னமதாகிடும் ஆளுமேவருகாதுகாணூரலே.

(இ-ள்.) தாளகத்தை வெளியில்வைத்தால் அந்தச்சூரியக்கிரணம் பட்டபட தூள்மயமான சுண்ணமாகும்ஊறலும்உண்டாகமாட்டாது

லிங்கமொருபல மாகவிளங்கிடில், அங்கதைவீர ஜெயசுன்னமுன்னிடை, வங்கத்தினீரில் மதிவிட்டிழைத்துடன், பொங்கிப்புத்தாகிடில் போச்சுதுசுன்னமே. குளிகை

(இ-ள்.) ஒருபலம்லிங்கத்துக்குமேற்படிசுண்ணத்தை அப்படியே செய்தால் அதுவுஞ்சுண்ணமாகும் எ-று (௧௨௮௯)

தாரமாந்தனி சுன்னமதாகிடில், வீரமாவதிதுக்கு இணையதாய் தாரசுன்னமுந் தங்கமுஞ்சேர்ந்திடில், தாரஞ்செம்புத் தவளமதாகுமே. குளிகை

(இ-ள்.) அரிதாரம் தனிபாகச்சுண்ணமானல், வீரமும் காரத்தில் இதற்குஒப்பாம் ஆகையால்தாரசுண்ணமும் தங்கமுஞ் சேர்ந்தால் தாரச்செம்பானது தவளநிறமாகும் எ-று. (௧௨௯0)

கேசரிதன்கிருபாகரமேவிய, வாசமாமதிவாழ்க்கைமுயற்சியான், பேசும்பேசாதெழுத்தறவோதினும், மேஷமேது விளங்குமகத்துகள். குளிகை

(இ-ள்.) உமாதேவியின் கிருபையைப்பெற்ற மகான்களே இதன் மகிமையை உணர்வார்கள் எ-று. (௧௨௯௧)

வாசியென்றசும்மா வாவென்றழைத்தால் நேசமுன்னாள்நெ டுநாளல்லவோ, ஆசைவைத்து அமுரியோராண்டுநீர் பாசம்பாசம் பரியாசமில்லையே. குளிகை

(இ-ள்.) வாசியைவாவென்றழைத்தால் நெடுநாளல்லவோ ஆகும் அன்பினால் ஒருவருஷம்வரைக்கும் ஆசைவைத்துப்பாய்ச்சப்பரியா சமில்லை எ-று. (௧௨௬௨)

தேசியென்றால்செழுந்தேனுணருமாய், ஊசியாவதொரு முனை காணுவாய், வாசிவாசிவருமென்றழைத்ததால் மாசில்லாக்கதிர்மா றலறிகுவாம். குளிகை

(இ-ள்.) தேசிஎன்று சொன்னால் செழுமையாகிய தேன்கிறமாய் ஊசிஎன்றால் ஒருமுனைகாணுவதாகும், வாசிவரும்என்று அழைத் ததினால் குற்றமற்ற கதிர்மாறல் உணர்வாம் எ-று. (௧௨௬௩)

கண்டுகண்டு கனவுமறிதலால் நின்றுநாளுநெடுநா ளலுவலேன் கண்டகண்டக் கருத்தைப்படைத்ததால், அன்றுமின்றுஅறிந்தவர் ஞானியே. குளிகை

(இ-ள்.) மவுனத்தைக் கண்டுகண்டுணர்தலால் நெடுநாள்பழக்கத் தினால் கண்டகண்டகருத்தை உண்டாக்கலால்என்றும்உணர்ந்தவர் கள் ஞானிகளேயாவார்கள் எ-று. (௧௨௬௪)

வேறு-விருத்தம்.

விஜையமெனும்ரசகுளிகை மனோவேகஅதிதமெனும் விதித்த சங்கை, பசைந்தமண்ணீருண்டபலன்தீகைஷயிரண்டுடன்சேரப்பனி ரெண்டாண்டில், விசையகுருதீகைஷவச மாவதுவுங்கடினமதுஇசை யுமாகில், அசவதுகாணிருபத்தோ ராயிரத்துஅறுநூறு மடியிற் சேர்ந்தே.

(இ-ள்.) வெற்றிஎன்கிற ரசக்குளிகையானது மனோவேகத்தைக் கொடுக்கத்தக்கது, பன்னிரண்டாண்டில் குருதீகைஷசெய்து இருப த்தோராயிரத்து அறுநூறுசுவாசத்தையும் உள்ளில்வாங்கி எ-று.

விருத்தம்.

மூலமதிலடங்கிசுழியண்டம்பாய்ந்து முடியில்நின்றுநடுவணையி ன்முனைக்குள்ளாகி, ஆலவிடமாமதுரவாசியுண்டு அடியில்நின்றுமே லெழுப்பிஅண்டம்புக்கி, காலையினுமாலையிலுந்தாரைபூதி கமலமலர் குண்டலிவல்லபையைப்போற்றி, வாலையெனுமம்பிகைப்பெண்வடி வென்னுத்தாள் வசனமதுவால்வாசிவசமதாச்சே.

(இ-ள்.) மூலத்தில்அடக்கி சுழிமுனையாகிய அண்டத்திற்பாய்ந்து உச்சியிலிருந்து நடுவணையின்முனைக்குள்ளாகி வாசியையுண்டுஅடியி லிருந்து மேல்வரைக்கும் எழுப்பி அண்டத்திற்புகுந்து காலை மாலை

இருவேளையுந்தாரையூதி குண்டலியாகிய வல்லபையைப் போற்றி செய்து வாலைஎன்கிற அம்பிகைப்பெண்ணுன என்னுடைய ஆத்தாளின்வாக்கு வசமாச்சுது எ-று. (கஉகூசு)

ஒன்றுனவுடலுயிரு மொன்றுய்ப்போச்சு ஒளிவானசசிமதியு மொருமிதாச்சு, கண்டரோமகத்துகளைச்சூரியசந்திரன் கதிர்மதியு மொருசுருபக்காணுங்காலே, அன்றுடம்பிராணுயவாசியூதிஅசைவதும்பிரியவொட்டா அமிர்தமுண்ணும்; சென்றுடுமிவ்விதமா யுலகில் வாழ்வார் சிவயோகமிதுவறிந்தால் ஞானிதானே.

(இ-ள்.) இங்ஙனஞ்செய்ததால் சரீரமும், உயிரும், ஒன்றுய்ப்போச்சுது சூரியசந்திரர்கள் ஒருமித்துவிட்டார்கள். மேற்படி சூரியசந்திரர்களால் மேலானசொரூபத்தைக் காணும்போது பிராணுயாமத்தால்வாசியையூதி அமிர்தமுண்டுசிவயோகிகளாய்வாழ்வார்கள்எ-று

மனோதிடங்கூறல்-தரு.

தனந்தனந்தன தானனே-தன-தனந்தனந்தனதானனே.

மனமினம்பொருந்திசையருள்தானே-மனந்-துணிந்து நீமிகவிழுவானேன்-கன-மினமனந்துடல்விழுகாதே-ஞானக்-கவியறிந்து நீ மறவாதே.
தனந்

(இ-ள்.) ஞானகலையை நீஉள்ளபடி உணர்வாயானல் மனோதிடமுண்டாகும் எ-று. (கஉகூஅ)

மூலப்-புளியெனுங்கற்பமிதுதானே-வாலைப் - பருவமாய் வருவோனே-காலை-அரவத்ததினிடவெண்சாரை-மாலை- அமுரித்ததுவிஷமறவாதே.
தனந்

(இ-ள்.) இதுவே மூலப்புளி என்னுங்கற்பமாகும், காலை, மாலை, இரண்டுவேளையும் வெண்சாரையை உண்ணவேண்டும் எ-று.

புவி-இசைந்துவாய்மொழிவாராதே-தவ-மிருந்து ஒருநிலை பிரியாதே-மது-வருந்தியறுசுவையதமாக-குரு-விருந்தசுழிமுனை யருள் பெறவும்.
தனந்

(இ-ள்.) உலகத்திற் சந்தோஷித்து என்சொல்லைத்தவருமல்ஒரே நிலையாகத்தவஞ்செய்து குருஎழுந்தருளியிருந்த சுழிமுனையின் அருளையடையவும் எ-று. (கநூ00)

கண்-சிவந்துபோமதுபாராதே-மதி-குலைந்துகாணிதுசாராதே உண்-ணுகந்துதசதிங்களுமதிபால்-உடலுயர்ந்துவேதனையுணராதே

(இ-ள்.) அப்போது கண்ணுனதுசிவந்துபோகும் சந்திரன்குலைந்து காண்பன் இவ்வாறு பத்துமாதங்கள் பழகவேண்டும் எ-று.

அறி-வறிந்தபின்னவராரரோ-சுழி-அமர்ந்திருந்தபின்னறிவாரோ-இது-ஒருவிருந்ததின்மலக்கூடு-இன்ப-மிசைந்திருந்த துற்கந்த வீடு.
தனந்

(இ-ள்.) அறிவினால் உணர்ந்தபிறகு வாரோ? சுழிமுனையானது அமர்ந்திருந்ததை உணர்வாரோ? இவைகளை உணர்ந்தால்இன்பவீட்டையடைந்தபடியாகும் எ-று. (௧௫௦௨)

மனம்-பிரிந்திருந்ததின்பேராரோ-அது-தெரிந்தபேரிதைசொல்வாரோ-தன-மிருந்தபொக்கிஷமதுதானே-வினை-யொழிந்துபோமதுகுருதானே.
தனந்

(இ-ள்.) மனமானது பிரிந்திருந்ததின் பேராரோ? அதை உணர்ந்தவர்கள் இதைச்சொல்வார்களோ? இதுவேதனமிருந்த பொக்கிஷம் போன்றதாம் எ-று. (௧௫௦௩)

இடை-கலைக்குமறவாதுருவாமோ-பின்-கலைக்குஒருவழிகுறைவாமோ-கட-லலைக்குநதிபாரெதிராமோ-அலை-கடலிதுக்கொருநிகராமோ.
தனந்

(இ-ள்.) இடைகலைக்கும், பின்கலைக்குங்குறைவுண்டாகுமோ? கடலுக்கு உலகம் எதிராகுமோ? எ-று (௧௫௦௪)

உந்திச்-சுழியினில்நீமனமே-வாசிஉழன்றுமேலங்குபடிமாட்டிமூல-சந்திரபுஷ்கரணிநதிமூழ்கிதிவ்வியசமுத்திரசலத்தினுவர்நீக்கே

(இ-ள்.) மனமே! நீ உந்திச்சுழியில் வாசியையூதிச் சந்திரபுஷ்கரணிநதியில் முழுகி சமுத்திரநீரின் உப்பைநீக்கி எ-று. (௧௫௦௫)

திரு-வனந்தகுருபரசிவஞானம்-ஜெக-மளைத்துஞ்-செயல்பெறுமெய்ஞ்ஞானம்-குரு-வரத்தினருள்விட்டகுறைவிதிபார்-மதி-பரத்தில்கெதிபெறுநாளுண்டே.
தனந்

(இ-ள்.) சிவஞானமானது உலகமெல்லாம் புகழ்கின்றமெய்ஞ்ஞானமாகும் குருவின் கிருபையானது விட்டகுறையினால் வந்த செய்கையாகும் எ-று. (௧௫௦௬)

நந்திக்குருபரநாதனருள்-திரு-நாமத்தைநயந்துவுணர்ந்துருகிஇன-மிந்தப்படிரவிமதிநாட்டமிகுந்-திரு-வினையொழித்தேநானுண்டே.
தனந்

(இ-ள்.)நந்தியின் நாமத்தைவிரும்பி ரவி,மதி, நாட்டத்தில்அதிகநோக்கம்வைத்து வினையை நீக்கிக்கொண்டேன் எ-று. (௧௫௦௭)

முக்கோணச்சுழிமுனைமுனைநடுவே-மூலா-தாரக்கணபதியருள்தனினும்நாம் எக்காலந்தொழுதேபணிவோம்-என்-றேங்கி விளையாதேமனமே.
தனந்

(இ-ள்.) முக்கோணவடிவாகிய சுழிமுனையின் நடுவில் மூலாதாரக்கணபதியினுடைய திருவருளைப்பார்க்கிலும் அவனுடைய அருளைமனமிளைக்காமல் எக்காலும்பணிவோம் எ-று. (௧௫௦௮)

பிர்ம-சதுர்முகனருள் திருமலரடியில்-மதி-தவமொருநிலைபெற
ஓராண்டு-கர்மச் சடமொருவினையொருஒழியதவம் -அருள் - தருஞ்
செதிபரகுருயோண்டே- தனந்

(இ-ள்.) பிரமதேவனுடைய திருவடிகளில் ஒருநிலையையடையஒரு
வருஷம்வரைக்கும் சர்மச்சடமானது ஒழியதிருவருள் செய்யும்.

கண்டமகத்துகள்விண்டதில்லை-கற்பங்- கருத்தையறிந்தவராரு
மில்லை-செகம்-எண்டிசையனைத்துமேயாராய்ந்தா-ரதி-லெவரெவரெ
ன்றறிவாய்மனமே. தனந்

(இ-ள்.) தெரிசித்தமகான்கள் வெளியில் சொல்ல மாட்டார்கள்,
சற்பத்தின் கருத்தையுணர்ந்தவர் ஒருவருமில்லை உலகமுழுவதும்
ஆராய்ந்துபார்த்தாலும் ஒருவரையும் உணரமாட்டாய் எ-று.

குயில்-போலிளமொழிமடமாது-இரு-கொங்கையெனும் விழி
பார்வையினால்-மய-லகிலமுழுதும்யோனிக் கேணிதனில் விழுந்தரா-
வங் கடித்துமாண்டிடுமனமே. தனந்

(இ-ள்.) பெண்கள்கொங்கையின்மேல் வைத்தபார்வையினால் மய
க்கமுண்டாய் யோனிக்கேணியில் விழுந்து அரவங்கடித்து மாள்வர்

இரு-விழிசிமிட்டுவள்ஸ்தனபாரம்-கலை-யெடுத்து முகமுருவது
காட்ட-வருந்திப்-பின்தொடர்ந்தவள் மாமயலாள்-வாடைப்-பொடிய
தும் போட்டியல்வாய்மனமே. தனந்

(இ-ள்.) இரண்டுகண்களையும் சிமிட்டுவாள், ஸ்தனங்களிலுள்ள
வஸ்திரத்தை எடுத்துவிடுவள், அப்படிசெய்வதால் அவளுக்குப்பின்
தொடர்ந்து அவளுடைய வாடைப்பொடியால் மயங்குவாய் எ-று.

இரு-தொடையரவப்பாம்பதுகடிக்க-மருந்-தெவருமறியாரிவ்வுல
குதனில்-அருள்-விரகமதுகாமக் குரோதமெனும்-விஷம்- விக்கிரமெ
னுமறிந்திடுமனமே. தனந்

(இ-ள்.) இரண்டுதொடைநடுவிலுள்ள பாம்புகடிக்குமருந்துயாவ
ருமுணரமாட்டார் ஆகையால்காமக்குரோதமென்பது விஷமிக்குந்
தன்மையுடையதென்று அறிந்துகொள்ளுவாய் எ-று. (௩௩௩)

நிலவுபொழியுமதிசந்திரகலை-வரு-மிரவுபகலதுமாறிடவும் -சனல்
மனமுஞ்சலமதுரேதுபாய்த-லலை-கடறிமிதுக்குநிகராமனமே தனந்

(இ-ள்.) இரவும், பகலும் சந்திரகலைபாய்வதினால் மலசல வித்தி
யாசை மில்லாமல் கடல்போல்வரும் எ-று. (௩௩௪)

சுழி-பின்முனையிலகும் நடுவணைகாண்-சொன்ன-துரியமதிநில
வுபொழியவரும்-விழியி னொளிவுமறைமதிசலநீர்-விட்ட- விதியென்
னவிந்துநீராமனமே. தனந்

(இ-ள்.) சுழிமுனையின்கண் விளங்குகின்ற நடுவணையானது உயர்ந்தஇடமாம் அதுவேவிட்டகுறை என்ன வந்தவிந்துநீராகும் எ-று.

பஞ்ச-பூதாதியஞ்சும்பர வெளிதான்-அப்பு-பருதிமதியிரண்டும்பழகினதால்-நெஞ்சுப்-புண்ணாகிடுங்காண்கடுங்காரம்-நின்ற -நிர்மலம்போக்கிடுங்காண்மனமே. தனந்

(இ-ள்.) பஞ்சபூதங்களும் பரவெளியாம் இவைகள் கடுங்காரமுள்ளவைகளாம் எ-று. (௧௫௱௧௬)

மும்மலம்-போக்கிடு முப்பாழ்மூலசுத்தி-முதல்-முத்தி சித்தியுமெய்தல்முனைசாணல்-அருள்-ஞானசித்தி மெய்தல்காயசித்தி-ரவிநடனமென்னலருள் நாமுரைப்போம். தனந்

(இ-ள்.) மூன்றுமலங்களையும் நீக்கிவிடும், முத்திசித்தியும்·எய்தும் இவைகளையெல்லாஞ் சொல்வோம் எ-று. (௧௫௱௧௭)

கொச்சகம்.

அண்டமெல்லாஞ்சூழ்ந்துநின்ற ஆதித்தனென்றேயறிய
மண்டலமெல்லாமொளிவாய் வளர்பிறைபின்சூக்ஷமதை
கண்டேன்மதிமலர்பார் கனகவம்பலத்தினருள்
உண்டேன்வெண்சாரையதை யோகசித்தியாலறிந்தே.

(இ-ள்.) சர்வஅண்டங்களிலுஞ் சூழ்ந்திருக்கின்ற சூரியனையுணர மண்டலமெல்லாம் ஒளியுடையவனை வளர்பிறையின் சூக்ஷத்தைத் தரிசித்தேன் பொன்னம்பலத்தில் அருளையுண்டேனே யோகசித்தியையடைந்தேன் எ-று. (௧௫௱௧௮)

சித்திதருஞானவெட்டி செங்கநதியாற்றருகே
சத்தியாமவேதாந்தவொளி தாய்ப்பதத்திலேதுதித்து
முத்தியாமுப்பாழ்கடந்து மூலசுழிதன்னருகில்
மத்தியத்தில்நின்றுமதி வாமப்பாலுண்டேனே.

(இ-ள்.) ஞானவெட்டியில் வேதாந்தவெளியாகிய தாயின் திருவடிகளில்துதித்து முப்பாழையுங்கடந்து மூலச்சுழியின்மத்தியி லிருந்து வாமப்பாலை உண்டேன் எ-று. (௧௫௱௧௯)

சொல்லப்போகாவதனின்காண் சுகபோகவேளைதனில்
வெல்லப்போகாதுகண்டாய் வேதாந்தகற்பமதை
அல்லல்போவென்றுலகி லலைவதனாலாவதுண்டோ
வல்லமையால்கொங்கணர்க்கு வாய்த்ததுகாணிப்பொருளே.

(இ-ள்.) சுகபோகவேளையிற் சொல்லக்கூடாதென்றால் வேதாந்தகற்பத்தை இதுவே கொங்கணருக்குக் கிடைத்ததாகும் எ-று.

எத்திசையுமேபுகழு மிந்திரன் தனக்குரைத்த
புத்திகிலேயாமலுமே புதுமைசேட்டிருந்தகமை
சத்திதனைவிட்டுலகில் தடுமாறியேதவிர்த்த
வெற்றிபெற்றகொங்கணர்க்கு விரித்துரைத்தார்வள்ளுவரே.

(இ-ள்.) இந்திரனுக்குச்சொன்ன இதைவள்ளுவர் கொங்கணருக்குச்சொன்னர் எ-று (கூ௨க)

தாயார்சரஸ்வதியுந் தந்தையெனும்பிர்மாவாங்
மாயாப்பிறவியினல் வந்தார்புவியதனில்
ஓயாக்கவலேபெற்று வுடன்றுலகில்வாழாமல்
காயாம்பிறவிதன்னைக் கற்பத்தால்கண்டேனே.

(இ-ள்.) சரஸ்வதியும் பிரமதேவனுந் தாய்தகப்பன்மார்களாம் இவர்கள் மாயப்பிறவியினல் உலகின்கண் வந்தார்கள் ஓயாக்கவலேயினல் உலகில்வாழாமல் பிறவியைக் கற்பத்தாற்கண்டேன் எ-று.

கொள்வதுமெப்படியெனது குருவருளேயென்றுநம்பி
உள்ளமதிகலங்கி யுலகிலுலவுவதேன்
கள்ளமல்லஇந்நூல் கசடர்தனக்கெய்துவதோ
வள்ளுவனர்தாமுரைத்த வசனமதிதப்பாதே.

(இ-ள்.) என்னுடைய குருவின் அருளினல் கொள்வதென்றுநம்பி மனங்கலங்கிவசிப்பது ஏன? இதுபொய்நூலல்ல கசடர்களுக்குக் கிட்டாது வள்ளுவர் சொன்னவாக்கு தப்பாது எ-று. (கூ௨௩)

விருத்தம்.

கொள்வதென்னமூலமென்ற காரந்தள்ளி கொண்டிடவுந்தினந் தோறு மாண்டஞ்சாச்சு, தள்ளுவதுமெண்ணைசுன்னங் கடுகோடுள்ளி சாதித்துவருந்தையிலும் பேதிகாணும், அள்ளுவது மூலமென்ற புளியைமாற்றி அந்தியிலும் புளியருந்தி யருளேநோக்கி, கள்ளமல்ல வீரமுண்டா லஞ்சாண்டாகில் கடினமெத்த எழுதிங்கள் கருத்த தாமே.

(இ-ள்.) மூலம் என்கிறகாரத்தைநீக்கி தினமுஞ்சற்பங் கொள்ள அஞ்சாண்டில் எண்ணெய், சுண்ணவகைகளினல் பேதியுண்டாகும் ஆகையால் மூலப்புளியைமாற்றி, காலேயில் புளிதின்றுதிருவருளைத் தெரிசித்து வீரமுண்டால் அஞ்சாண்டானல் கடினம்மெத்தவாகும் எழுமாதத்தில் கற்கருத்துண்டாம் எ-று. (கூ௨௪)

கன்னியெனுமம்பிகைப்பெண்வடிவென்தாயார்கல்வியிலுமுயர்ச்சிமெத்தகாமரூபி,உன்னிதமாய்பூருவத்தில் மூலத்தாய்தான் ஓங்காரத்துள்ளொளியாயுலவுமாத்தாள், வன்னிஎனும்வலேயறுத்து மேரு

தாண்டிவாசியிலுஞ்சிவயமெனவைத்தவூதி, சென்னியெனுங்கருணை கொண்டமூலத்தாயை தேடுதற்குமிகவரிதுசெப்புவேனே.

(இ-ள்.) அம்பிகைப் பெண்ணான என்னுடையதாயார், கல்வியால் உயர்ந்தவள் காமரூபி, உங்கட்குத்தாய் அவளைக்காண மேருவைத் தாண்டி சிவபஎன்றுஊதி தேடுவதற்கு மிகவும் அருமையாகும்.

செப்பிடினுந்தாயெனக்கும்பிள்ளையானாள் தேவியம்பிகையவட்குச்சீஷனானேன், ஒப்பிதமாய்குருவானாளடியேனானேஒகோகோ வேதப்பெண்ணுநவுமானாள், இப்பிறப்பிற்பெண்ணாகி நீசப்பெண்ணாப் எண்டிசையும்புகழ்பெரியதெந்தன்வாக்கை, அப்புவியின் பூவதிந்துமுப்பூவொன்றாகி லகிலபுவனங்களுக்குமிகமென்மேலே.

(இ-ள்.) அவளுக்குச்சீடனானேன், வேதசொரூபியானாள், இப்பிறப்பில் நீச்சப்பெண்ணாய் எங்களுடைய வாழ்க்கைக்கு உரியவளானாள் ஆகையால் முப்பூவையுணர்ந்து செய்தால் அச்செய்கை சகல புவனங்களுக்கும் உயர்ந்ததாகும் எ-று. (௧௩௨௬)

இன்னமினிசொல்வதெந்தன்வாழ்க்கையாலும்எச்சாதிப்பெண்ணாகியிருந்தாலுந்தான்,அன்னையெனுந்தாய்தந்தை பிள்ளைசுற்றம் அவராரோநானாரோ அகலத்தள்ளி, வன்னியதைநம்புதலாய் மனதாய் நின்றேன்வாகானபூரணத்தில்மருவினேன்யான்சென்னிதனில்மாதர்களைக்கண்ணிற்கண்டால்தேசம்விட்டுமறுதேசஞ்சிறந்திட்டேனே.

(இ-ள்.) எங்கள்வாழ்வினாலும், எந்தச்சாதிப்பெண்ணா யிருந்தாலும் சுற்றமுதலியோர் யாவருமவென்றுதள்ளி, வன்னியைநம்பிஒருமனமாய்நின்றேன் பிறகு பூரணதிற்கலந்தேன் பெண்களைக் கண்டால் மறுதேசயபோய்விடுவேன் எ-று. (௧௩௨௭)

உந்தியெனுமோங்காரமூலகற்பம்உறுதிபெற்றுமண்டலந்தான் கடந்தபின்பு,வந்துதிக்குஞானகற்பமோராண்டுண்ண வரிசையுடன் கொள்ளவுமேவகைதான்வேணும், உந்தியெனுஞானசற்பமாண்டேயொன்று ஒரெட்டாம்பன்னிரண்டில்முடிந்துபோச்சு,அந்தலபிதள்ளுண்டு அசடும்வாரா தகமிளிதலேலபியுமமைத்ததாண்டே.

(இ-ள்.) உந்திஎன்கிறமூலகற்பத்தில் மண்டலம்வரைக்குங்கடந்த பின்பு ஞானசற்பம் ஒருவருஷம்வரைக்கும் உண்ணவகைவேண்டும் இவ்வாறுபன்னிரண்டு ஆண்டில்கற்பம்முடிந்துபோச்சுது அப்படி செய்தால் அந்தலபிதள்ளுண்டு யாதொரு அசடுவாராது எமலபியும் அழைத்ததுஆண்டே எ-று. (௧௩௨௮)

எமனுக்கும்நமனவளாயிருந்தாளாத்தாள் ஈஸ்பரருக்குத்தமக்கதிகமிவள்தானாச்சு, காமனைக்கண்ணாலெரித்தகதைபோலாச்சு சருவியெல்லாமாண்டதுவுங்கசடுபோச்சு, பூவதுபோவீருந்தஉப்புமயம் பொன்னாச்சு பொன்மேருகிரியிவட்குமணிவதாச்சு, வீமனுக்குவிமலியும்போல்தேகமாச்சு வெகுசுருக்குமிகநன்று விந்துப்பாண்டே.

(இ-ள்.) எமனுக்கும் எமனையிருந்தாள் ஆத்தாள் ஈஸ்வரனுக்கும் உயர்ந்தவளானாள், இதுகாமனைக் கண்ணுலெரித்த கதைபோல் ஆச்சுது கருவி யெல்லாம் இறந்தன உப்புமயம் பொன்னாச்சுது, மேரு மலையானது இவளுக்கு அணுவாச்சுது. யமனுக்கும், விமலியும் போல் தேகமாச்சு விந்துவின்வித்தை வெகுசுறுக்கு. எ-று. ௧௩௨௯

கொச்சகம்,

ஐங்காயமாச்சுதுகா ணைந்தாண்டுகற்பமுண்ண
தங்கநிறமாற்றதிகச் சாட்சியறிந்தேனுமமாய்
வெங்காயமாமதித வெள்ளைக்கல்லுப்பதனால்
பங்கமில்லாமலுண்டால் பத்தியத்திற்பழுதில்லையே.

(இ-ள்.) ஐந்து வருஷங்கற்பமுண்ண ஐங்காயமாச்சுது, தங்க நிறமுள்ளதாஞ்சரீரம். வெள்ளைக்கல் என்கிற உப்பினால் உண்டால் குற்றமில்லை. எ-று. ௧௩௩0

பத்தியத்திலேபழுது பாகமதுமுன்தவிர்ந்தால்.
அத்தியத்திலுங்கனல்கொண் டசீரணத்தால்பேதியெய்தும்
சுத்தமதிப்பாலுடனுஞ் சொர்னமலருண்டதனால்
சித்தியெய்துலேகியந்தான் செப்புகிறேனறிந்தே.

(இ-ள்) பத்தியத்திற் பழுதுவந்தால் அந்தியில் சூடுண்டாய் அசீரணபேதி யுண்டாகும் மதியமிர்தத்தால் மீண்டும் அது சித்தி யடையும் எ-று. ௧௩௩௧

கலித்துறை.

அஞ்சாண்டில்கற்ப மருந்தப்புளியு மதுபடவும்
நஞ்சாகும்பேதி யடிக்கடிக்கேவ கமனதுவாய்
கஞ்சாவதும்பட மலங்கட்டுக்கிராணி கண்களும்போம்
இஞ்சொற்றிருவள்ளுவ நாயனுமுண்ட இயல்பதுவே.

(இ-ள்) ஐந்துவயதில் கற்பம்கொண்டால் அதில்புளிப்பட்டால் பேதியுண்டாம், கஞ்சாபட்டால் மலங்கட்டும் அதனால் கிராணியும் போம். எ-று. ௧௩௩௨

மாமாந்தகற்பம் பனிரெண்டுமாண்டு வந்திடினும்
நான்மாத்திரங்கறி களறுப்பிரமாணம் நடந்தறியேன்
தேன்மொழிவேல்விழி மாதர்சம்போகஞ் செய்திடினும்
தான்போய்மரணஞ் சுடுகாடுயேகுஞ் சவமதுவே.

(இ-ள்.) பன்னிரண்டு வருஷம் கற்பங்கொண்டாலும் கடுகளவு கூடநான் தவிரவில்லை அக்கற்பமுண்ணுங் காலத்தில் ஸ்திரீபோகஞ் செய்தால் மரண மாவார்கள். எ-று. ௧௩௩௩

கற்பலேகியம் தரு.

லேகியங்கொண்டேன்காண்-நாயகற்ப
லேகியங்கொண்டேன்காண்.

(இ-ள். நான் காயகற்பலேகியங் கொண்டேன். எ-று

லேகியங்கொள்வனி னியருளின்பம் அளாவிய அண்டபிண்டமப்புவின்காரமும். தாவிப்பிடித்துச் சரக்காதிதங்களும், பாகமதாகவும் பாண்டம்விட்டேபதம்-லேகி.

(இ-ள்.) இனிலேகியங்கொள்ளுவேன், அண்ட பிண்டங்களும் அப்பு வின்காரமும், சரக்குகளும் ஆகிய இவைகளை யெல்லாம் சூரணித்துபாகமாய். எ-று. ௧௩௩௪

ஆகியதுக்கு ளகலாமலும்படி, தாவிநாதவிந்து தாக்கியேசூரணம், மேவியதற்பா வேதசாஸ்திரத்தினால், பூவதுலேகியம் பொன்னிறமாகவும் லேகி.

(இ-ள்.) இவைகளோடு நாதவிந்துக்களையுங் கூட்டி பொன்னிறம்போல லேகியஞ்செய்து. ௧௩௩௫

பெற்றிடுமெய்ஞ்ஞானங் கற்றறிந்தோதிடும், சுத்தவானாகியுஞ் சித்தர்பதம்பெற, வித்ததிகங்களா லுத்தமர் சொல்மொழி, சத்தியமாகவும் நித்தம்பூசிக்கவும்-லேகி.

(இ-ள்.) உண்மைஞானம் உணர்ந்து துதிக்கின்ற சித்தர்களுடைய திருவடிகளையடைய பெரியோர்களுடைய சொற்படிசத்தியமாய் நித்தியமும் பூசைசெய்யவும். எ-று. ௧௩௩௬

மூலத்திலேறி முனைபிரளாதலும் காலத்திலுங் கற்பகாயம்பெலப்பட, ஞாலத்திலும்வாசி நாடிச்சுழிமுனை, பாலத்தினாலறி வாகி தினந்தினம்-லேகி.

(இ-ள்.) மூலாதாரத்தின் கண் ஏறி அவ்விடத்து முனைவிரள் வலில்லாமல் கற்பத்தினால் சரீரம்பலப்பட வாசியைநாடி சுழிமுனை வழியினால் நித்தியமும். எ-று ௧௩௩௭

அப்புமுப்பு மறிந்துப்பை யகன்றமே, கைப்பொருள்விந்துக் கருத்தழியாமலும், மெய்ப்பொருளாவி விலங்காமலும்படி, தற்பரை சோதிபானந்தமீதாகவும்-லேகி.

(இ ள்.) அப்பையும், உப்பையும் உணர்ந்து நிலவுப்பைநீக்கி கருத்து அழியாமல் உண்மையான உயிர்போகாமலும்சோதிசொருபமாகவும். எ-று. ௧௩௩௮

சத்தியெனுநாத மூலப்புளிதனில், சாரநீர்கொண்டுடன் வீரமதாகவும், நித்தமனுசரிவாசி கொண்டுதாரை, சித்தியோகராஜதேகம் வலுத்திடும்-லேகி

(இ-ள் ) நாதமாகிய மூலப்புளியில் சாரநீரைக்கொண்டு வீரமாகவும், வாசிகொண்டுதினமும் அனுசரித்து ராஜயோகஞ்செய்தால் தேகம் வலுக்கும். எ-று. ௧௩௩௯

அரிசிபிதென்று ஜெகமறியாமலும் உரிசைகொண்டுமெனு ஓடித்திரிக்குடன், வரிசையென்றங்கடை தருசியிதென்றுமே வாதஞ் செய்தேயூரல் மாற்றிடுவாமலும் லேகி.

(இ-ள்.) இதுதான் துரிசிஎன்று உலகத்தார் அறியாமல் ஊறலை மாற்றாத படிவருந்துவார்கள். எ-று, ௧௫௪௦

முக்திகொடுக்குஞ் சிவசத்திதன்பதம், மூலாதாரத்தின் கருவி யறுத்திடும், வெற்றியதாகசமைத்து உட்கொள்ளவும், மேலாணசேகரமேறிப்பறக்கவும் லேகி.

(இ-ள்) மோட்சங்கொடுக்கின்ற உமையின் பாதத்தைக்காண பலவழியாய்மேலேறவும். எ-று. ௧௫௪௧

நாசிவழியிற் சுவாசத்தைவிட்டுடன், ஊசிகண்டதாரை யோகஞ் செய்யாமலும், பூசிதமாகவும் ரேசித்திடாமலும், வாசியறிந்துடல் மாளுவதில்லையே லேகி.

(இ-ள்.) மூக்குவழியாகச்சுவாசத்தை விட்டுயோகஞ் செய்யாமலும் ரேசிக்காமலும் வாசியுணர்ந்து சரீரம்மாள்வதில்லை எ-று.

சயிலமிரத மூதகமுங்கூடியுந், தற்பரானந்தசிவ சத்திகிருபையால் அகிலம்புகழ்காயமைங்காயமாமிது, தயிலமதாகியும் தானது லேகியம் லேகி

(இ-ள்.) சயிலமுதலியவை கூடி சிவசத்திகிருபையினால் ஐங்காயமாவதில் தயிலமாகியும்-வரும்லேகியம். எ-று ௧௫௪௩

பிருதிவுமப்பு தேய்வுடன் வாய்வதுவும், பேர் பெரியசத்தமைந்துமங்காயமாய், அரிதத்துடன்பஞ்ச பூதமொன்றாகியுஞ், சூக்ஷமகாரண லேகியமாச்சுது லேகி.

(இ-ள்) பஞ்சபூதங்களுமே ஐங்காயமாகும். அவைகளே சூட்சமமாய்லேகியமாச்சுது. எ-று. ௧௫௪௪

தன்னைத்தானறிந் தாக்கைபிலத்தது, சாம்பசதாசிவ சங்கரனுச்சுது, அன்னையென்னைப்பெற்ற அம்பிகையால்செட, அன்னையும் விந்துடல் முத்தியுண்டாச்சுதே லேகி.

(இ-ள்.) தன்னைத்தான்உணர்ந்தமையால்சரீரம்புலப்பட்டது அதனாலேயேசங்கரனுச்சுது அன்னையினால்முத்தியும்உண்டாச்சிது எ-று,

மூலப்புளியில் மூலாக்கினிதேன்றியும்,மூலாதாரத்தி னிலப்புவுந்தோன்றிடய, ஆலவிடமதி லக்கினிதோன்றியும் அக்கினியாலசவாகிடும்வாயுவே லேகி

(இ-ள்.) மூலப்புளியில் மூலாக்கினிஉண்டாய், மூலாதாரத்தில் அப்பு உண்டாய், விடத்தில் அக்கினிதோன்றி, அந்த அக்கினியினால் வாயு அசையும்.

தூல்மெனும்வாய்வு சத்தமுண்டாகியுந் தோன்றியஞ்சுபஞ்ச பூதமென்றாகியும், மூலபஞ்சாட்சர நாதனிருப்பிடம், நந்திகொலுவிலிருப்பதமூரியே லேகி

(இ-ள்.) ஸ்தூலவடிவாகிய வாயுவில்சத்தமுண்டாகியும், அதனால் பஞ்சபூதங்களும்ஒன்றாகியும், பஞ்சாட்சரசொரூபியாகியஇறைவனுடைய இருப்பிடம் நந்திசொலுவிருக்கும் இடமாம் எ-று, ௧௩௪௭

அமுரிபஞ்சாட்சரமஞ்செழுத்தாச்சுது, அண்டமெனுஞ்சிவலிங்கமதாச்சுது, குமிறிடும்சாகரம் வெண்மதியாச்சுது, கோசபீசமெனுங் குருலிங்கமாச்சுதே லேகி,

(இ-ள்.) அமுரியேபஞ்சாட்சரங்களும், சிவலிங்கமும், வெள்ளிய சந்திரனும் கோச பீஜமென்னும் குருலிங்கமும் ஆச்சுது. எ-று.

கோசந்தனிலிரு கூறதுமாச்சுது கூறியபீச மடிமூலமாச்சுது, வாசிநின்றேகுகை புளிசுண்ணமாச்சுது வாலகுண்டலியின் பீடமதாச்சுதே லேகி,

(இ-ள்.) கோசத்தில் இரண்டுகூறாச்சுது பீஜமோ அடிமூலமாச்சுது புளி சுண்ணமாச்சுது அதுவவேகுண்டலிக்குப்பீடமாச்சுது, ()

விருத்தம்.

மதியிருந்தாடனமிடும் பிராணாயத்தில் மதுரமிருந்திலகுமின்ப மவுனபீடம், செறிபெருங்காண் மகத்துகளின்மோக்ஷபீடங்கெவுனசகுளிகையிருந்தாடும்பீடம், துதிபெறவுமெஞ்ஞான சுகாதீதங்காண் சோதிசுடர் மணிவிளக்கில் தூண்டாநின்ற, விதியைவெல்லும் விசித ரத்னபதியைவீசும் விருத்தபஞ்சரவணத்தை விளம்பினோமே,

(இ-ள்.) பிராணாயாமத்தால் மௌனபீடம்கைகூடும் இதுவே உண்மை ஞானசுகாதீதமாகும் விதியையும் வெல்லும் ஆகையால்பஞ்சரத்தினத்தைச் சொன்னோம். எ-று. ௧௩௫௦

வாதமுறை-தரு,

வாதவிதிபாடுகிறேன்-ஆண்டேகேளீர்-வாதவிதிபாடுகிறேன்,

(இ-ள்.) ஆண்டையே! நான் வாதவிதியைப்பாடுகிறேன் நீங்கள் கேளுங்கள். எ-று.

வாதவிதிபாடுகிறே னாதமதிலுமிருந்து, சோதிமணிபூரகத்தை சூட்டியுஞ்சூக்ஷமதுவாய், பச்சைத்துருசியதைச்சத்திநாதநீரிலூட்டி அச்சமறவும் ரவியில் வைத்துப்பார்நாலுசாமத்தில், வாத

(இ-ள்.) பச்சைநிறமுள்ள துருசை நாதநீரில்சேர்த்து 4-சாமம் வரைக்கும் சூரியனில் வைத்தால். எ-று. ௧௩௫௩

ஊாலறமேகளிம்பு வேறில்லைசுன்னமதாகுஞ், சிருள்ளதுதத்தைக்கட்டுமேருவும் பொன்மயமாகும் அம்பிகைபெனக்குரைத்தசெம்பிரசுன்னமதாகும், நம்பியுங்கற்பமதனைவம்பு செய்தாலுமுண்டால்.

(இ-ள்.) களிம்பற்றுச்சுண்ணமாகும் ரசத்தைக்கட்டும், பொன்மயமாகும் ஈஸ்வரி எனக்குச்சொன்னது எ-று. ௪௩௫௨

ஆண்டுதசமானது பின்னறுபத்துநால்வரையு, மாண்டுவிடவுமருந்துவாச்சுதறிவாய்மனமே, தசவாண்டதின்பின்சுற்பஞ் சடசித்தியானதின்பின், பசுமையறவேளுமை பார்க்கப்பளிங்கதுவாண்டே.

(இ-ள்.) பத்துவருஷம்வரைக்கும் கற்பமுண்டால் 64-சரக்குகளையும் ஜெயிக்கவழி ஏற்படும். சரக்குகளும் வெண்மையாகும். எ-று

கற்பசாதனையில்லாமல் கனகஞ்செய்வார்களில்லை. அற்பமூலிகைதழையா லாவதுமுண்டோமனமே மூலப்புளியைவிட முத்தியுமுனக்கேதுகாண், ஆலகாலவிஷமே யமுரியாண்டொன்றுண்டால்.

(இ-ள்) கற்பமில்லாமல் பொன்செய்பவர்களில்லை, மூலிகை தழைகளால் ஆகாது, மூலப்புளியை விட்டு முத்தி கிடையாது அமுரியைஒருவருஷம் உண்ணவேண்டும் எ-று. ௪௩௫௪

அமுரியாண்டதுமுண்ண அம்புவால்காலனுமேது, விமலசர்வாணியின் விளக்கமதாமனமே, வாதவித்தையாவடுகென்ன சூதகவித்தை சாணமுரி நாதமும்விந்துவுங் கூடிநவலோகம் பொன்னதாச்சு,

(இ-ள்) அப்படியுண்டால் காலனில்லை ஈஸ்வரியின் கிருபையுண்டாகும் வாதவித்தையோ சூதவித்தை நாதவிந்துக்கள் சேர்ந்ததினால் நவலோகங்களும் பொன்னேயாச்சுது எ-று. ௪௩௫௫

இப்படியாகியசெய்தி யாவரறியாதவிதம், முப்பூவும்பூரணங்கூடிமுடித்தல்லோசெலமாச்சு, வாத

(இ-ள்) இவ்விதசெய்கையை யாவருமறிவார்கள், முப்பூவும்பூரணத்தினாலல்லவோ சலருபத்தையடைந்தது, எ-று, ௪௩௫௬

கருங்கடல்நீரையுண்டு கைப்பதுமாறினவிதம், ஆருமறியார்களோபின்னதுசுத்தநீர்மகிமை, வாய்கொண்டு வுண்டசலத்தை மாறிடமாறிடகாயங், தேயசுமதிதசித்தி தேகமும்வலுத்ததாண்டே

(இ-ள்,) மேகம் சமுத்திரத் ஜலத்தைஉண்டு உப்புமாறினதும் யாவருமுணரமாட்டர்களோ? அந்தநீரைஉண்ணசுண்ணச் சரீரம்வலிவையடைந்தது, எ-று

காயாதிலேகியமிது கருதக்காலனுமேது, மாயாதுவாசி யொன்றுனல் மரணமடையாசாகில், வாய்வுயிரஞ்சுமொன்றாய் மாறிமாறிதாரையில் ஒயாமலூதியூதிடும் யோகாதியோகமிதாச்சே வாத

(இ-ள்.) காயாதிலேகியத்தைஉண்டால் எமனில்லை மரணமில்லை தசவாயுக்களையும் பிராணுயாமஞ்செய்தால் யோகமாச்சுது எ-று,

எழுபத்தீராயிரநாடி நரம்பிலிருந்தசவு, பழுதுவாரதுகாணும் பாருஞ்சாதனையாண்டே, வாத

(இ-ள்,) இதனால் 72000 நரம்புகளுக்கும் குற்றம்வராமற்பாது காக்கவேண்டும், எ-று கங்டுரு

கொச்சகம்,

மூட்டுவாய்மூலகற்ப மூக்கியமதாயாண்டுபத்து
ஆட்டுவாய்பொட்டிதனி லடைத்தரவமாவதுபோல்
நாட்டுவாய்கும்பமுனி நாதனருளாலுங்கற்பம்
பூட்டினேன்குருவருளின் பொக்கிஷத்தைவிண்டேனே.

(இ-ள்.) பத்துவருஷம் வரைக்கும் பாம்பை ஆட்டுவதுபோல பொக்கிஷத்தைவிட்டேன் எ-று. கஙகூ0

ஞானவெட்டியாயுலகில் நானுதித்துப்பாடுபட்ட
பானரசகற்பமதைப் பாடிவிட்டேன்கைமுறையாய்
வானம்புவியுள்ளவரை வாழ்ந்துலகிலும்புகழ்
தானவனும்முத்திபெற்ற சங்கையறிவாய்மனமே.

(இ-ள்) நான்உலகத்தில் ஞானவெட்டியாய்ப்பிறந்து பாடுபட்டு பாடிவிட்டேன். ஆகையால்மனமே! நீமற்ற விஷயங்களின் சங்கைகளை உணருவாய். எ-று. கஙகூக

விட்டகுறையாலுதித்த விந்தினிடசெய்கையினால்
தொட்டதொருகற்பமெல்லாஞ் சூட்சசித்தியாச்சுதுகாண்
பட்டசளமெதகயிங்கப் பாருலகிலேயறியார்
வட்டமுலையாளுரைத்த வசனமதுதப்பாதே.

(இ-ள்.) விட்டகுறையினால் எல்லாம் சித்தி, யாச்சுது, உலகத்தாரும் உணர்வார்கள் இது ஈஸ்வரிசொன்னதாம், எ-று. கஙகூஉ

கலித்துறை.

அஞ்சாண்டுகற்ப மானபின்பத்திய மாறுண்டுதனில்
வெஞ்சனங்கூட்டும் வகைவிதஞ்சொல்ல மேவிடினும்
ரஞ்சிதநாடு கருவூர்விளங்க நாமறிந்து
வஞ்சமில்லாமல் வெஞ்சனங்கூட்டு மகிழ்ந்ததையே,

(இ-ள்.) கற்பத்தாண்டு அஞ்சானபின்பு ஆருவதாண்டில் வெஞ்சனல் கூட்டவேண்டும், எ-று, கஙகூங

விருத்தம்.

வெற்றிதரும்பத்தியந்தா னுவின்பாலும்வெள்ளாட்டின்பாலும மதுவொன்றுவேளை, புத்திதரும்பச்சரிசிபயறும்பாசிபொசிப் பதற்குப்

போசனமாம் புகழ்தான்மெத்த, சித்திபெறும் புளியாரைகொடிக்கப் போடு சிறுகீரைசீரகமுங்கரிபவேம்பு, முத்திதரு மிளகு பசுநெய்நானு கும் முக்கியமிதுபின்பதுகேள்முறைதானுண்டே.

(இ-ள்.) பத்தியம், பசும்பால், வெள்ளாட்டுப்பால், பச்சரிசி, பச்சைப்பயறு, புளியாரை, சிறுகீரை சீரகம், கரிவேம்பு, மிளகு, பசுநெய், இவைகள் முக்கியமாகும். எ-று ௪௩௬௪

ஆண்டையினிகேளும் புளிசுன்னத்தாலும் அதிகவித்தைவாத மெல்லாமடங்கலாச்சு, தாண்டவமாய் நடனமிடும் கணேசன்சத்திதா யானவல்லபையுந்தானேதோற்றும், மாண்டிடும்பேரில்லை யிந்தவைய மீதில் மகத்தான கற்பமுண்டால் மாய்கைபோச்சு, பூண்டிந்தவுலக மெல்லாஞானியானல்புவி எல்லாந்தேவர் களாய்ப்பிறப்பாராண்டே.

(இ-ள்.) ஆண்டையே! கேள் புளிசுண்ணத்தால் வாதவித்தை முடிந்தது உலகத்தார்களெல்லாம் ஞானிகளானல் புவியெல்லாந்தேவ ராய்ப்பிறப்பார்கள். எ-று ௪௩௬௫

அறிந்திடுக்காண் புளியமுரி மாலையுண்ண அப்பவும் ரவியி லுண்ணவயதைந்தாச்சு, பிரிந்துகொள்ளும் புளிசுன்ன மமுரிகூட்டி போன வாலையிலுந் தயிலம்வாங்கி, தெளிந்தபுளி சுன்னமதைய முரிக்கேற்செய ரோய்சரக்குகளில் சுருக்குமேற்ற, குறித்தரசம்ரவி யில்சுருக்கிட விஞ்சாகுங் கூகூகூவாதமிதிற்கொள்ளை தானே.

(இ-ள்.) புளியையும், அமுரியையும், மாலையிலுண்ண அப்புவும் ரவியில் உண்ணவயது ஐந்தாச்சுது. புளிசுண்ணத்தைக்கூட்டி வாலை யில்தயிலம்வாங்கி அமுரிக்கேற்றி செயரோக்கிச் சரக்குகளுக்கு சுரு க்குகொடுத்தால் வாதங்கொள்ளையாகும். எ-று. ௪௩௬௬

ஞானவெற்றி-தரு.

வெற்றிக்கொடிகட்டினேனுண்டே-சூக்ஷாதிசூக்ஷ
வெற்றிக்கொடிகட்டினேனுண்டே.

(இ-ள்) சூட்சாதி சூட்சமாகிய வெற்றிக்கொடியைக்கட்டினேன் ஆண்டையே? கேள். எ-று.

எத்திசை தனிலறிய சத்திநாத விந்துக்கூடி, புத்திமயங்காமல் நின்றசித்தியுமறிந்தேனுண்டே, அண்டபிண்டங்களுமேவு மண்டல மெல்லாம்புகழுங், குண்டலி வாசியைக்கொண்டு கண்டிடசாதனை செய்து. வெற்றி

(இ-ள்.) எவரும் உணர, நாதவிந்துக்கள்கூடி குண்டலி வாசி யைக்கொண்டுகண்டிதமானசாதனைகள் செய்து. எ-று ௪௩௬௭

ஆதியந்தமாய்நிறைந்த அம்பரவெளியில்நின்று, சோதியாகு சுன்னம்புளியுஞ் சுக்குலசுரோணிதத்தால், நீதிநினைவாலறிந்துநிச்சய மனந்தெளிந்து, சாதனைஎன்னுக்குள் நாடுந்தனஞ்செயனைசெயித்து.

(இ-ள்.) ஆகாயவெளியிலிருந்து சுண்ணப்புளியுஞ்சுக்கிலசோணிதத்தாலென்றுணர்ந்து மனந்தெளிந்து தனஞ்செயனைச்செயித்து,

காலனென்றநாமனைக்கட் டறுத்துக்கடந் தமுப்பாழ், ஞாலன்றவுட்கருவி நாடியேயடக்கியபின், மாதுமயலால மைத்தவல்வினைக்கோராஸ்திரங்கொண், டேதுதாரைவாசிநிறுலோட்டியேவெட்டியெரித்து வெற்றி

(இ-ள்.) காமனைச்செயித்து முப்பாழையுந்தாண்டி ஈஸ்வரியின் கிருபையினால் தாரையில் பிராணயாமஞ்செய்து எ-று. ௧௩௬௯

பாலுடையஸ்தன்னியமயல் பாவையர்களைத்துலைத்து, சிலமுடனேயெனது சிஷர்மனம் மெய்க்கவுமே, உற்றார்சுற்றத்தார்களுமுலகுதனிலுள்ளோரும், பெற்றாசையைவிட பெண்டிராசையை விட்டு

(இ-ள்.) பெண்களுடைய மாயையைத்தொலைத்து சிடர்களுடையமனஞ் சந்தோஷிக்கவும் மற்றஉறவின்முறையார்கள் எல்லாருடைய ஆசையையும் விட்டு எ-று, ௧௩௭௦

மொய்த்த என்மேல்மனதை மெய்யிலுமிகநொந்துசூற்றமறமாது தன்னாசைசூடோரம் விட்டுனதுபதம், உற்பனமத்தியானமது கற்பனசாரத்தையுண்டு, விற்பனமூலப்புளியைவிதமாயுண்டு தேறினேன்.

(இ-ள்,) ஈஸ்வரியைத்தியானித்து மூலப்புளியை யுண்டுதேறினேன், எ-று ௧௩௭௧

தேகசித்தியுமாச்சு தீவினைகளும்போச்சு ஆகமப்படியாச்சு ஆயிரத்தைந்நூறுமாய்ந்தால், இந்நூல் ஞானவெட்டியிலெடுத்தேன்முறைபிசகாநன்னூல் ஞானகாவியம் யான்வெளியா யுரைத்தேன் வெ

(இ-ள்,) தேகசித்திஉண்டாச்சுது தீவினைகள்போச்சுது ஆகமப்படி ஆச்சுது.இந்நூலில் நான்ஞானத்தைவெளியாயுரைத்தேன் எ-று

விருத்தம்,

புத்தியினில் மத்தியானமது அமுரியுண்டேன் பூரணத்தைமாலைதனில் புளிதானுண்டேன், சத்தியினால் சொல்லுமிந்த கருவியெல்லாஞ் சண்டாளவாய்வு மெங்கேசாருந்தானும், வெற்றியதாமந்திகாசந்திலே மூன்றும் வேகமில்லை குரு முறைமைவிளம்பினேன்பார் நித்தியமனு பதிதகாயகற்பம் நீடூழிகாலமதும் வாழ்வாராண்டே,

(இ-ள்) மத்தியானத்தில் அமுரியுண்டேன் மாலையிற்புளியையுண்டேன் இவ்விதியேநானுஞ் சொன்னேன் இதை அனுசரித்தால் நீடூழிகாலம் வாழ்வார்கள் எ-று, ௧௩௭௧

ஆண்டொன்றிலே தேகசுத்தியமூரியாச்சு அதுதள்ளியாண்டு முதல் கற்பஞ்சித்தி, தாண்டவமாயிரண்டாடில்மாற்றுரெண்டுசோதித்

தால் மூன்றாண்டில்மாற்றுமூன்று, நாண்டாகும் நாலாண்டில்மாற்று நாலு சொல்லிவிட்டோமைந்தாண்டில் மாற்றைந்தாகும், பூண்டாகு மாறாண்டில்மாற்றுமாறு பொன்மயமாமேழாண்டிலமாற்றுமேழாம்.

(இ-ள்.) ஒருவருஷத்தில் தேகசுத்தியாச்சுது, இரண்டாண்டில் கற்பசுத்தியாச்சுது, மாற்றும்இரண்டாச்சுது மூன்றாண்டில்மாற்றுமூன்று நாலாண்டில் மாற்றுநான்கு, ஐந்தாண்டில் மாற்றுஐந்து ஆறாண்டில் மாற்று ஆறு எழாண்டில் மாற்றுஎழாம். எ-று. ௧௩௭௪

மாற்றெட்டாமாண்டினிலும் வயதுமெட்டு மாறிடவும் புளியமுரி லேகியஞ்செய்து, வேற்றுமைகள் வாராது ஒன்பதாண்டில் இதுபுளிய மமுரியுமே வேகச்செய்து, பார்த்தவன்னிதனிலுங்களிபதமாய்பாகம் பகருவாய்பத்தாண்டில் மாற்றுப்பத்து, பூத்திடுபூரீறுபுவிதனிலுமூலப் புளியிருந்துபனிபடவும்பூர்க்குழப்பே.

(இ-ள்.) எட்டாண்டில் மாற்றுஎட்டு, புளியையும், அமுரியையும் லேகியஞ்செய்து ஒன்பதாமாண்டில் புசிக்கவேண்டும். எ-று. ௧௩௭௫

இந்தவிதஞ்செய்திடுவோர்க்கெய்துமுப்பு இகந்தனிலுமுவர்சவுடுமுப்பாகாது, வந்துஅடைந்திந்தவிதி வினிமேல்காணும் மறைத்தபொருளணைத்துமிந்நூல் வகையாய்சொல்வேன், சுந்தரப்பெண்ணமிர்தமடமாதுவாலைச் சூக்ஷமெல்லாமெந்தனுக்குச் சொன்னாள்மேலும் அந்த விதம்பத்தாண்டுந்தாண்டியேற அருள்வேன்காணளவை யினியருள்வேனுண்டே.

(இ-ள்.) இவ்விதஞ்செய்கிறவர்களுக்கு உப்புகைகூடும். உவருஞ்சவுடும் உப்பாகாது இந்நூலானது மறைத்தபொருள்களை யெல்லாம் வெளிப்படையாகச்சொல்லும், ஈஸ்வரியானவள் சகலசூட்சங்களை யெல்லாம் எனக்குச்சொன்னாள். அந்தவிதம்பத்தாண்டுந்தாண்டிஏற, இனி அளவைசொல்லுகிறேன். எ-று. ௧௩௭௬

பத்தாண்டுகடந்தபின் பதினொன்றாண்டில் பத்தரைக்குமதிகமதாம்பசும்பொன்தேகம், சித்தானதிங்கள் ரெண்டுமாற்றுமொன்றுதிங்களுமேநாலதுக்குள் மாற்றுரெண்டு, வித்தாகுமாறுதிங்கள் மாற்றுமூன்று மிகுநான்குஞ்சென்றபின்பு மாற்றுநாலு பத்தானதிங்களுக்குள் மாற்றமஞ்சு பதினொன்றாண்டதுக்குளது பரிட்சையாண்டே.

(இ-ள்.) பத்தாவது வருஷங்கடந்த பதினோராவது வருஷத்திய பத்தரைமாறறுள்ள பசும்பொன்போன்ற தேகமாகும், இவ்வித மாதங்களும், ஆண்டுகளும் ஏற ஏற மாற்றதிகமாகும். எ-று. ௧௩௭௭

ஆறுபத்துமரையும் வயதறிவதேது அம்பிகையால்பதினாறுஅரை மாற்றுச்சு, மாறுவதும்புளியுமப்பு மாறிப்போச்சு வச்சிரத்தாலிட்டிழை

த்தகாயமாச்சு, தேறுவதும்பனிரெண்டாண்டடுத்துக்காத்து சிவகுரு கடாக்ஷமத்தின்செய்கையாலும், பேறுபெற்றமகத்துகள்தான் கடந்த மார்க்கம் பேருலகில்மகானுக்கள்பேசுவரே.

(இ-ள்.) ஆறு, பத்தரை, பதினாறரை, என்னும்மாற்றுகளாயின, பின்னர் அப்புவும்புளியும் மாறிப்போச்சுது இவ்விதம்பன்னிரண்டு வருடங்காத்து மகான்களடைந்த விசேஷகுணத்தை உலகத்தார்எடுத்துப் பேசுவார்கள். எ-று. ௩௩௭அ

திங்களெனுமதிகடந்தால் மாற்றொன்றாச்சு செங்கதிர்மூன்றது கடந்தால் மாற்றுமூன்று, செங்கமலதேகமதாந் திங்கள்நாலில் செம்பொனிறவயததுவுநாலுமாகும், அங்கமெனும்திங்களஞ்சில் வயதைஞ்சாகும் ஆறுதிங்கள்வயதாறு ஏழுக்கேழு, எங்குகதிர்சூரியனுமெட்டுக்கெட்டு இனியொருபத்தாறுதிங்கள் பனிரெண்டாமே.

(இ-ள்.) ஒருமதிதாண்டினால் ஒருமாற்றும், கதிர்மூன்றுகடந்தால் மூன்றுமாற்றும் நான்குதிங்களில் நான்குமாற்றும், திங்கள்ஐந்தில் ஐந்துமாற்றும் ஆறுதிங்களில் ஆறுமாற்றும், ஏழுதிங்களில் ஏழுமாற்றும், எட்டுதிங்களில் எட்டுமாற்றும், பத்து, பனிரண்டுதிங்கள்களிலும் அவ்வாறேகொள்ளல்வேண்டும். எ-று. ௩௩௭௬

வாலையெனும்பதினாறு அரையும்பத்து வதிஇருபத்தாறரைகாண் மாற்றுமாச்சு, காலையெனுங்கற்பமுண்டேன் பனிரெண்டாண்டு கனகமென்னுள்விளைவாச்சு கற்பத்தாலும், சாலையெனுங் கொய்துடுத்து சிறுபெண்ணுத்தாள் செப்பினதோர் வாதமுஞ்செடத்திலாச்சு, ஆலையெனுங் கரும்பினுள்சாறுபோலும் அலைவதில்லையடிசுண்ணமமைத்தவாறே.

(இ-ள்.) வாலை என்கிறபதினாறும், பத்துஞ்சேர்ந்ததிங்களில்இருபத்தாறுமாற்றும்ஆயின இவைகளெல்லாம் பரமேஸ்வரிசொன்ன வகைகளாகும். எ-று. ௩௩௮௦

(யோகஜெயம்-ஏலப்பாட்டு-தரு.)

ஏலேலோ ஏலலோ சிவசிவ ஏலேலோ ஏலேலோ.

(இ-ள்.) சிவ! சிவ! ஏலேலோ ஏலேலோ. எ-று.

கதிர்மதிசூழ்கமலவிதழ்-இடைபின்-கலைசுழலுங் கருணைமலர்பொழியும், விதிகருவூர்நகர்செழிக்கும்-மெஞ்ஞான-வெட்டியருள் வேதாந்தகற்பஞ்சுழியின், முனையருள்புரியும்பரி-பூரணகற்பந்-துரியதுரியாதிதமுமதியிலறுந்தேதான், பொழியமிர்தமதுராசபாண-மதினாலும்-புகழ்விஜைய மாண்டுபனிரெண்டளவுந்தேறி, தொழிலனேகமகாராஜயோகமதில்வாசி - சூக்ஷசடாதாரமதுமீராறுந்தாண்டி, வழிபலசகாதிதசுகசோதிமணிவாசல்வாலைய பிராமிமலர்பாதந்தெரிசித்தே.

(இ-ள்.) கருவூர் நகரத்தில் பரிபூரணகற்பத்தை துரியாதீதத்தில் உணர்ந்து பன்னிரண்டுவருஷம் வரைக்குந் தேர்ந்துதெளிந்து ராஜ

யோகத்தில் பன்னிரண்டாங்குலம் வெளியாவதையும் நீக்கி வாலாம்பிகையின் மலர்பாதத்தை தெரிசித்து. எ-று. ௧௩௮௧

திருவமிர்தமதிமலர்சூழ்-மருவீர்-செழித்தவளர் தேன்பொழியும்
புனல், மருவும்விந்துநாதசத்தி-செனித்த-வாறுதன்னையானருள மூல
மணி, பூரகமனூகதம்விசுத்தி-மூடுதுறை-யாக்கினைசுகாதி சுடர்தாண்டி,
மேலும்வரையாறுதிருவாவடு-துரைதாண்டி-விக்கிரம வியானனையஸ்வம
தாய்பூட்டி, ஞாலமதில் கூர்மமெனுஞ்சீனி - யதைமாட்டி-நாடியதனஞ்
செயனையங்குபடியாக்கி, வாலையருள்பொற்கமலபாதந்-தொழுதேதான்
வாசிதனிலேறிமதியமிர்தநதிபாய்ந்தே. ஏலேலோ

(இ-ள்.) விந்து, நாதங்கள் உண்டானவிதத்தை அருளுவேன்திருவாவடு துறையைத்தாண்டி வியானனைக்குதிரையாகப்பூட்டி, கூர்மனுகியசீனியைமாட்டி-தனஞ்செயனைப்படி யாக்கிவாலாம்பிகையை வணங்கி அமிர்தநதியிற்மடிந்து. எ-று. ௧௩௮௨

தூலவுடல்சூக்ஷமதேகமதாய்-மேனி- துய்யநிறந்தசவாண்டினிலும்
வினை, தாவிவருஞ்சூடுகனல்-ஓராண்டில் - தாபம்வருஞ்சோப மெத்த
அவுழ்தம். போகமெனுங்காமத்தை-வாமத்திலேற்று-பொல்லாதமூதேவி
சாதத்தை மாற்ற, கோவித்து அந்நியைச்சந்தியினில் தள்ளு-குற்பம்-
வீணிலும்போகாதுடலூணியேகொள்ளுநோயற்று போக்கிவிடுஞ்சீரொ
த்துபாரு-வுன்னிதமாய்பத்தியமுநிர்ணயமிதாண்டே. ஏலேலோ

(இ-ள்.) தூலசரீரத்தைச்சூட்சுமமாகப்பண்ணிற்சாதத்தைநீக்கிப் பத்தியமாகவிருக்கவேண்டும் இதுவேநிர்ணயமாகும். எ-று. ௧௩௮௩

காலையிஞ்சியமுரியுண்ணு - தினமுங்-கடுக்காயும் புளியுமுண்ணு
அந்திமாலைசுக்குவிந்தமுரி-சேரு-மருவிநிற்கும்பரிபூரணம்,பாலண்படும்
பாடதும்-பார்க்கவொண்ணாது பாழானபத்தியமும் பாகமதுகேளு தூல
மெனும்கைவசமாகவும்-வேணும்-சூதானபேதியது மூன்றுதிங்களெய்
தல், மாலானபூரணமனோ-வின்பமாகும் - மதுதள்ளினலிற்சந்தியதுவா
கும், நாலுபேர்அஞ்சிலுமடங்காது-பேதிமனுக்குமேலதிக நஞ்சதுகா
ணுண்டே. ஏலேலோ

(இ-ள்.) காலையில் இஞ்சியும், மாலையில் கடுக்காயும்புளியும் உண்டு பத்தியமுங்காத்தால் மூன்றுதிங்கள்வரைக்கும் பேதிகாணும், இவ்வாறு அஞ்சாந்திங்களிலும், அடங்காதபேதியாகும். எ-று. ௧௩௮௪

ஆறுந்தான்திங்களிலுந்-தேகம் - அசதிமெத்த அரோசிநங்காண்
எழாந்தான்திங்களிலும்-உதிரம்-இறங்கும்பெரும்பாடானதுபோ, சீரெ
ட்டுதிங்களினில் சீதளமுங்காணும்-செய்கையொன்பது திங்கள், தேக
மதுவாடும் கூரானபேதியுடன்வாந்தியுங்காணும் கூசாமலேடணையுஞ்

சீதசுரமெய்தும்—வீறுனநோய்களதும்—வேகமிகக்காணும், விக்கலதாகக்கியுருமாறிவிடுமாகில்—நேரானகற்பமுறை பேராகச்சொன்னேன்-நிச்சயமதாகுமிது அச்சமில்லையாண்டே. ஏலேலோ

(இ-ள்.) ஆறுந்திங்களில் சீரம்மிகவும் அசதியாகும் அரோசகங் காணும் ஏழாவதுமாசத்தில் உதிரபேதியுண்டாகும். எட்டாவதுமாசத்தில் சீதளம்உண்டாகும் ஒன்பதாவது மாசத்தில் சீரம்வாடும் வாந்தியும் பேதியுமுண்டாகும் சீதளத்தால் சுரமுமுண்டாகும், விக்கல்முதலியவைகளும்வரும். எ—று. கங அரு

கடல்பெருகுஞ்சமுத்திரத்தில் கப்பல்-கரையோரம்போகையிலும் பூத்தமடல்பெருகும் பாய்மரத்தை-நன்றாய்-மடக்கிநடுமத்தி பத்தில், சுக்கானுடலதனில் வருகின்றசுவாசத்தைப்பாரு-ஒன்பது வாசலுங்கட்டியிருக்கும்—திடமுடனேகம்பத்தினுனியிலுமேறிநீண்டாதமணிசுடரைத்தூண்டாமலேற்றி, புடம்வைத்துகருவிகளைகட்டேயறுத்து-பூரணபஞ்சாக்ஷரபிரணவத்தைமூட்டி-நடுமரஞ்சுக்கானை மையத்திற்பூட்டி, நாடியேமதுவுண்டு யான்பணிந்தேனே. ஏலேலோ

(இ-ள்.) ஒன்பதுதுவாரங்களையுங்கட்டிநடுக்கம்பத்தில் ஏறிசுடரை ஏற்றித்தூண்டாமல் கருவிகளின்சுட்டறுத்துபஞ்சாட்சரபிரணவத்தை மூட்டி சுங்கானைமையத்திற்பூட்டிமதுவை உண்டுநான் வணங்கினேன் என்றவாறு. கங அசு

மதியமிர்தமதுவமுரி—மதுர-வாசியெனுஞ்சாரை வெள்ளை, கற்பம்நிதியகடுங்காரசுன்னம்—அப்பு-நிலவுபொழிஉப்பிதுதே, ரதிதவித அமுரியதமுப்புவுமாச்சு- அமிர்தரசமானது-கள்ளுமதுவாச்சு, மதிரவியுஞ்சுவசத்திவாகியதிலாச்சு-வழலையறி பூரணமும் வஸ்துவெனுமாச்சு-பரிமளசுகந்தமலர் கெந்தமிதுவாச்சு பகரரியசாந்துசவ்வாதுபுனுகாச்சு—துரியதுரியாதீதமுஞ் சுழியின்முனையாச்சு – சொப்பனமுஞ்சாக்கிரமுஞ்சுற்றிவலமாச்சே. ஏலேலோ

(இ-ள்.) அமுரியானது உப்பாச்சு. அமிர்தரசமானது கள்ளாச்சுதுமதிரவிகள் வாசியிலாயின துரியாதீதம சுழிமுனையிலாச்சுது சொப்பனமுஞ் சாக்கிரமுஞ்சுற்றிவலமாச்சுது. கங அள

காயகற்பமாண்டுசதம்-அதின்பின்- கடந்தபின்புவழலைமுறைமூல, சாயசரக்கெடுத்துலர்த்தித்- தயிலங்--தான்புடம் போட்டெடுத்த பின்பு, தனிய-மாயாமல்பார்க்கவு மனோன்மணியின்விந்து மாணிக்க ஒளிவதிதவலைபுப்பாகும், தாயானகெந்திரசகாரசாரந்—தயிலமிதுநாலையுறசோருப் புடம் போட்டு-உபாயமதுவாகவொரு கழஞ்சியிடையுண்டு, முன்னுடலெதிக்குவொளிவாகுமதகோடி—நடமாக போதமயமானந்தங்காட்டும்-நங்கேள் ; பூரணவிலாசத்தில் நின்றே.

(இ-ள்.) காயகற்பசாதனையினால் அநேக ஆண்டுகள்கடந்து வழலையைத்தயிலமாக்கிப்பார்க்க வழலைமுப்பூவாகும், கந்தகம், ரசம், காரம் தயிலம்இவைகளை அரைத்துப்புடம்போட்டு உண்டால் நன்மையாம். என்றவாறு. ௧௩அஅ

முன்னான்கும்பன்னிரெண்டில்கற்ப-முறைதவறாமன துகந்து-உறுதி; அன்னாள்முதலப்பரத்தை-மிகவும் அதிதமதாய்வளரும்விந்துவாசி, தூக்கியிறுக்கிச்சுருக்கியதைப்பாரு சொன்னபடிகண்டமதிலூதி விடுதாரை, தீர்க்கமுடன்செந்தலைதாண்டியதுபாயுந்-தீப ஒளிப்பிரகாச தெரிசனமுமாகும்-மார்க்கமுடனாறிவர், சொன்னேன்கருவாளிமனது ஒருதுத்துவைராக்கியமதுவாக கார்க்கசிலம் பொலியோசைகாணுமது யூபங் கயிலாசபரகெதியில் காட்சிபெறுவாரே.

(இ-ள்.) பன்னிரண்டாண்டு தவறுமற்கற்பஞ் சாதித்து அணலைத்தாண்டி தீபவொளியில் பிரகாசத்தில் கயிலாய சுகத்தையடைவார்கள். ()

இருபத்தோராயிரத்தறுநூறு - சுவாசம்இறக்கிகண்டதாரைதனில் சுருக்கி, கருத்துகந்தமூலக்கருக்குழியில் இருத்தி-கற்பமுண்டு வாசிகருதிடிலும், சுழயிலுற்பனமதாகவொரு ஓங்காரநாடி-ஒன்றானகம்பத்தில் பாயமரமீரெட்டு, விற்பனமதாகபதினாறுகயிற்பூட்டி - வீசிவிடுவாசியதைநாசிநுனிபாயாசொற்பமதுசந்துகள்துவாரமதிலோடா-சொக்கிவிடலாகாது சுவாசமதிலேறி, கற்பனைசுக்கானைரசக்கண்ணாடிபூட்டி-கருதியே விடுசீனிகலப்பையதைநாட்டே. ஏலேலோ

(இ-ள்.) 21,600 சுவாசத்தையும் கண்டத்தில் நிறுத்திஓங்கார நாடியிற்சம்பத்தில் பதினாறுபாய்மரங் கட்டிபதினாறு கயிற்றைக்கட்டி வாசியைநாசிநுனியிற்பார்த்து சந்துக்களிலோடாமல் சுவாசத்திலேறி ரசக்கண்ணாடிபூட்டி அகப்பையை நாட்டுவாய். எ-று. ௧௩௯0

சித்திரமணிமண்டலத்தில் கண்ட தீபவொளிப்பிரகாசமதில் அருள் முத்திபெறுமதியமிர்தம் வாசி முனையிடைபின்கலைபிளா இன்ப-சித்திரவிஸ்தாரசுழிகமல விதழ்நாடி-திருமருவுசோதிமணி தீபசுடர் தேடி-, இத்தலமெய்ஞ்ஞானகுருபரிபூரணவாலையிங்கிதமலர்க்கமலஞ்சிங்காதன மேவி பத்தியுடனும்பணியசத்திசிவரூபம், பச்சையுடனுஞ் செழுமை பார்க்கபரங்காணும்-கர்த்திகசதாசிவமனோமலுப்பிரகாசங்காணுங் கயிலாசகிரி காட்சிபெறுவாமே. ஏலேலோ

(இ-ள்.) அழகியமணிமண்டபத்தில் தீபஒளிப்பிரகாசத்தில், தீபசுடரைத்தேடிச்சிங்காதனத்திலிருந்து பராசத்தியின் வர்ணங்களைப்பார்த்தால் பரம்பொருள்தெரிசனங்காணும், அப்போது கயிலாசமலையின் காட்சியையடையலாம். எ-று. ௧௩௯௧

## விருத்தம்.

இவ்வுலகில்யாவர்களுங்கண்டிந் நூல்ஞானவெட்டி யிகழ்ந்திடாமல், அவ்வம்பரமானந்தசின்மயத்தி னருள்பெறவும் அர்ச்சித்தேன் காண், செவ்வையென்பதடியறிந்துசெய்கையெல்லாமாய்ந்து சிவசத்தி பாதம், எவ்விதமாய்கற்பமுறை யியல்புதனி லினிமோக்ஷ மெய்துவாரே.

(இ-ள்.) இவ்வுலகத்தில் எல்லாரும் இந்நூலைக்கண்டுஇகழ்ச்சிசெய்யாமல் சின்மயத்தின் அருளைப்பெறவும், சிவசத்தியின் திருவடிகளை அர்ச்சனைசெய்தேன், இனிமோட்சத்தையடைவார்கள். எ-று. ௧௩௯௨

எய்துந்தசதீக்ஷைபத்துமிரண்டுபனிரெண்டதுவாம்இனிதானச்சு, பழுதுவருகாமலுமேபாடினதோனர்வாக்கியமதைப்பழிப்பீராகில், எழுநரகில்விழுந்துயுயி ரிருக்களவும் வினைப்பயன்றிந்தெய்துமாகில, தொழுதுவடிவம்பிகையின் மலர்ப்பதமுங் கெதியடைந்தால் சொர்க்கஞ்சேர்வோம்.

(இ-ள்.) தசதீட்சையைப்பெற்று குற்றம்வராதபடி பாடினவாக்கியத்தைப்பழிப்பீரானல் ஏழுநரகில்விழுந்து மாள்வீர். எ-று. ௧௩௯௩

இகத்தாசைபாசமிருந் தென்னுளுழன்றிடுவோர்க் கெதயாதொன்றும், நகைநகைத்துமினுமினுக்கும் விழிசிமிட்டிவரவழைத்து நாணஞ்செய்யும், புகைசூழ்ந்துயிருள்மூடிமாய்கையினி லழுந்திமிகப்போவாராகில், அகத்திலிருந்தருள்ஞான தீபவொளியறியாமலமைத்தாராண்டே.

(இ-ள்.) இம்மையாசையினர்க்கு ஒன்றுங்கிட்டாது அவர்களெல்லாரும் மாயையினல் அழுந்திப்போவார்கள். எ-று. ௧௩௯௪

அனித்தியமிந்தவுயிர் வாழ்க்கையுன்பதுவுமுறங்கு வதுமதுவால் ஞானம், தனுவெனுமன்மதபாண அஸ்திரத்தாலவர்மாளச்சபித்தாரீசன் வனிதையில் லாவுலகம்லில்லைவாழ்க்கை யில்லைபிறவியில்லைமண்ணில்லை, இனமறியநாதவிந்து யியல்பில்லா வுலகமெல்லா மிருள்தானண்டே.

(இ-ள்.) இந்தஉயிர்வாழ்க்கை, அனித்தியமானது அதை நம்புகிறவர்களை ஈஸ்வரன் சபித்தார் பெண்ணில்லாஉலகமில்லை வாழ்க்கையில்லை, பிறவியில்லை, கண்ணில்லை, நீரில்லை, உலகமெல்லாம் இருளேயாம். என்றவாறு. ௧௩௯௫

## கொச்சகம்.

சந்தரரேயெங்கள்குலஞ் சூதுபறைவென்றதுவுஞ்
சந்தயமேயானுரைக்க சாக்ஷியறியாதவிதங்காண்

நிந்தைவுலகாதிதமு தீசனெனவேபழுக்கும்
வந்தவடிகண்டறிந்தால் மாய்கையிருள்மாறிடுமே.

(இ-ள்.) எங்களுடையகுலம், பறைக்குலமாம் வந்தவழியைக்கண்டுணர்ந்தால் மாய்கையாகிய இருளானது நீங்கிவிடும். எ-று. ௧௩௯௬

அண்டமென்னபிண்டமென்ன அம்புவியாதீதமென்ன
கண்டதென்னகேட்டதென்ன காரில்லாமாரியுண்டோ
எண்டிசையெல்லாஞ்செனித்த விந்திரியவுப்புமயம்
நின்றவுப்புவாரியினல் நீடுலகெலாமுவரே.

(இ-ள்.) அண்டம் என்ன? பிண்டம் என்ன? கண்டதென்ன? கேட்டதென்ன? மேகமில்லாமல் மழைபுண்டா? இந்திரியமோ உப்புமயமாகும் அதினல் உலகமெல்லாம் உப்பேயாம். எ-று. ௧௩௯௭

கலித்துறை.

மயமானஉப்பு கடல்சூழ்ந்தவாரிதி மாலின்மயம்
செயலானகாரா மதிசந்த்ரசோதி திருநடனம்
நியமித்தவாழ்க்கை நிராமயத்துப்பு நெறியறியார்
கயமானகைப்பு வுலகமெல்லாமிந்தக் காரணமே.

(இ-ள்.) உப்புக்கடலானது விஷ்ணுமயமாகும் சாரமோசந்திராமிர்ததிருநடனம், நிராமயஉப்பின் செளிவை அறியாதவர்கள் கைப்பறிந்தவர்களாவார்கள் உலகமெல்லாம் இந்தக்காரணமேயாம். எ-று

கொச்சகம்.

உப்புமயமப்புமய மோகோகோ நாதவிந்தின்மயம்
இப்புவியெல்லாஞ்செனித்த இந்திரியவாழ்க்கைமயம்
மைப்பிறுவில்லாமல்ஜெகங் கண்டதென்னகாண்கிலென்ன
முப்பதுகாணுதியிலு முடிந்துவைத்தாசனுமே.

(இ-ள்.) உப்புமயமும், அப்புமயமும் நாதவிந்துகளின் மயமாகும் இந்திரியமோவாழ்வுமயமாகும். முப்பூதை ஆதியில் ஈஸ்வரன்முடித்து வைக்தார். எ-று. ௧௩௯௯

கலித்துறை.

எழுபத்துநான்கு நூராயிரலட்ச மெவ்வுயிர்க்கும்
உண்பதுங்கைப்புவர் சாரத்தினலுயி ருற்பகங்காண்
ஐம்பத்தோராக்ஷர வோங்காரங்கொண்டு ‖ அவ்வெழுத்தில்
உண்பதுறங்குவ துப்பொழிந்தால்செக மொன்றில்லையே

(இ-ள்.) சர்வ ஆன்மாக்களும் உண்பது உப்பன்றோ? ஆகையால் உப்பில்லாவிடில் உலகமில்லையாகும். எ-று. ௧௪00

உப்புவரின்றிச் சடமில்லைகார சராத்திஞல்
அப்புவிஞல்முடிந் தாண்டுபத்துங்கடந் தானபின்பு
செப்புகிறேன்மதிநாலுங்கொன்றேரவி சேர்த்துவிதம்
அப்புவிலுப்புவு மட்டுப்புவொட்டுப்பு மானதுவே.

(இ-ள்.) உப்பில்லாவிட்டால்சரீரமில்லை, ஆண்டுபத்துங்கடந்தபின்புபதிநாலுக்கு ஒரு ரவிசேர்த்துப்பார்த்தால் அட்டுப்பு ஒட்டுப்பாகும். என்றவாறு. கச0க

காரமுஞ்சாரமுங் கம்பியுப்பாகுங் கரைத்துபதம்
சேரவுமூன்று தினஞ்சென்றபின்பு தெளிவிறுத்துக்
கூரவும்வன்னிக் குமிறிடவுஞ்சலங் கொண்டிறக்கி
வாரமதிரவி பீங்கான்தனிலிட்டு வைத்திடீரே.

(இ-ள்.) காரம், சாரம், வெடியுப்பு இவைகளைக்கரைத்து 3-நாள் சென்றபின்பு தெளிவிறுத்து சலத்தை பீங்கானிலிட்டு வெயில்வையுங்கள். எ-று. கச0உ

ஒன்றாகிமுப்பு ஒருருவாகி யொளிவதுவாய்
கொண்டேயொருபலம் பண்ணைச்சவ்வீரங் குறித்துசமன்
நன்றாகுநாதமும் விந்ததுங்கூட்டி ரவிமதியாய்
அன்றாதங்காய மதில்வஞர்விட்டு ஆட்டிடுமே.

(இ-ள்.) இதனுல் முப்புஉண்டாய் நன்மையாம். இதில் 1-பலம் எடுத்து ஒருபலம் சவ்வீரஞ்சேர்த்து நாதவிந்துக்கள் கூட்டி ரவி, மதியாய்சிறுநீர்விட்டு ஆட்டவேண்டும். எ-று. கச0௩

வெண்பா.

விந்துநீர்விட்டு விடாமலிதையாட்டி
அந்தமதுவழித்து அருணனி-லிந்த
முகம்படவும்வைத்த மூடியசீலைதனில்
புகழ்சீலைசெய்துபுடம் போடு.

(இ-ள்.) விந்துநீர்விடாமல் இதையாட்டி சூரியனில்வைத்து சீலை செய்துபுடம்போடவேண்டும். எ-று. கச0௪

ஆறியதோர்பின்பு அதற்குச்சரிசூதம்
வாற்றியமுன்பதமாய் வார்த்து-மீறிடா
ஆட்டியதைவழித்து அருணன்முகம்படவும்
நாட்டுமுழப்புடத்தில் நன்று.

(இ-ள்.) ஆறினபின்னர் அதற்குச்சரிஎடை சூதம்வார்த்து ஆட்டி வழித்து சூரியனிலுலர்த்தி முழப்புடம்போட்டால் நல்லது. எ-று.

நன்றிகாண்கழஞ்சி நாதவிட்டமர்த்தி
தின்றுதுருசிதனில் தொந்தித்து-நன்றறிய

மூலப்புளிகவச மூன்றுமண்சீலையது
ஞாலக்கவுதாரிபுட நன்று.

(இ-ள்.) கழஞ்சுநாத விந்துக்கள் விட்டுமத்தித்து துருசில் தொந்தித்து மூலப்புளியினுல் மூன்று சீலைசெய்து கவுதாரிபுடம் போட்டால் நல்லது. எ-று. கசOரு

முப்பு முடித்தல்-கரு.

முப்புமுடிந்ததுகாண்–மூலப்புளி-முப்புமுடிந்ததுகாண்.

(இ-ள்.) இவ்வாருக மூலப்புளியினுலான முப்புமுடிந்து விட்டது. என்றவாறு. கசOசு

முப்புமுடிந்தது கைப்புமுறிந்தது, அப்புமுப்புங்கம்பியுப்பிது மூன்றினுல், கற்பகஞானவா லம்பிகைதன்னருள், அற்புதமாமலரர்ச்சனைசெய்து யான். முப்பு

(இ-ள்.) முப்புமுடிந்தது. கைப்புமுறிந்தது அப்பு, உப்பு, கம்பியுப்பு இந்த மூன்றினுல் வாலாம்பிகையின் பாதங்களை நான் அர்ச்சனை செது எ-று. கசOஎ

சீனச்சரக்கறு பத்துநாலுஞ்சுன்னஞ், செந்தூரபற்பமுஞ் செயநீர் திராவகம். பாணத்தினுல்குடோரி கட்டுங்களங்கதும், பார்க்கப்பார்க்க சரக் காதிதமுநீறே. முப்பு

(இ-ள்.) சரக்குகள் 64-சுண்ணமாகும், செந்தூரத்திற்கு, பற்பத்திற்குங் காரணமாகும், செயநீர், திராவகம், குடோரி, கட்டு, களங்கு இவைகளுக்குங் குருவாகும், எல்லாச்சரக்குகளும் சலமாகும். எ-று.

துருசிசுன்னமுடிந்தாச்சுது முப்பினுல், தொந்தங் கோடாகோடி சோதிக்கவேதைகாண், பரிசைவேதை யிதிலனந்தங்கோடி, பாடுபட்டுச் செய்தோர்க் கெய்திடுமாண்டையே. முப்பு

(இ-ள்.) முப்பூவினுல் துருசிசுண்ணம் முடிந்துவிட்டது. சோதிக்கவே தையாம் இதுபாடுபட்டுச் செய்தவர்களுக்கே கைகூடும். எ-று. கசOசு

காரீயஞ்சேரொரு சேர்த்துஅயச்சட்டி, கண்டுகனத்திகா ரீயஞ் சலமதாய், வீரியமாமுப்புக் சுன்னங்கழஞ்சிடை, வேகத்துரிசியிடை சரிசுன்னமே. முப்பு

(இ-ள்.) ஒருசேர்காரீயத்தை அயச்சட்டியிலிட்டு அது உருகும் போது முப்பு சுண்ணம் கழஞ்செடையும், துருசிசுண்ணம் கழஞ்செடையும், எ-று. (கசகO)

கம்பியுப்புபதினுறுபலமதில், காட்டிடுஞ்சுன்னங் கலக்கவுமூட்டியுங், தும்பிமுகன்பதம் போற்றியாடுபின்பு, தொந்தித்துக் கிராசமுந் தூவிக்கடைந்திடே. முப்பு

(இ-ள்.) வெடியுப்புபதினுறு பலம் கூட்டி கணேசன் திருவடிகளைத் துதித்து கிராசங் கொடுத்துக்கடைந்து. எறு, கசகக

அஸ்வகெந்திக்கிழங் கவ்விதவேரினல், யிசைவதாகயிருசாமம் வறுத்துடன், பஸ்பமாகும்பருதியொளிவுபோல், நிசமதாகுநிலைகண்ட றிவதே. முப்பு

(இ-ள்.) அமுக்கனுங்கிழங்குவேரினல் இருசாமம்வறுத்து பஸ்பமாகும் பதத்தைக்கண்டறிந்து. எ-று. ௧௪௧௨

பச்சைப்பனையதினேடுசெந்தூரிகம், பழையசட்டிதனில் நடுவைத்துகாண், உச்சிதம்புகழ் செந்தூரந்தன்னிலும், அச்சமிலாவிந்துநாதம் விட்டாட்டிடே. முப்பு

(இ-ள்.) பச்சையாகிய பனையோலையைச் சந்திரிகைசெய்து பழையசட்டி நடுவில்வைத்து அச்செந்தூரத்தை விந்துநாதங்கள் விட்டரைத்து. எ-று. ௧௪௧௩

நாதவிந்துநீர் விட்டொருசாமம், நேரஆட்டி விடாமலுங்காசுபோல், தீதிலாமல் ரவிமுகங்காட்டியும், பேதமில்லாமல் செந்தூரத்தில் மாட்டிடே. முப்பு

(இ-ள்.) ஷை நாதவிந்து சலத்தினல் 1-சாமமரைத்து காசுபோல் பில்லைதட்டி வெயிலிலுலர்த்தி செந்தூரத்தில் கொடு. எ-று. ௧௪௧௪

சட்டிமேலுஞ்சந் தில்லாமல் சீலைமண், கெட்டியாய் கவசங்களுமேலதாய், சட்டியில்லங்காற் றில்லாமலும்படி முட்டிவன்னிமுதல் சதுர்சாமமே. முப்பு

(இ-ள்.) மேற்சட்டிமூடிச் சீலைமண்செய்து 4-சாமம் அடுப்பிலேற்றி. எ-று. ௧௪௧௫

ஒட்டியேகம லாக்கினிதீமிதம், யோகநாதவாலாம்பிகை தன்பதம் வெட்டியால்வீர சாம்பவமூர்த்தியால், அட்டியில்லாமலென்னுண்டே முடிந்ததே. முப்பு

(இ-ள்.) கமலாக்கினியாக மிதமாய்வாலாம்பிகைபாதத்தை நினைக்கமுடிந்தது. எ-று. ௧௪௧௬

கர்த்தனருள்கரு வங்கசெந்தூரமும், நித்தம்பூசித்துடன் நின்றறிவோர்கள்தான், சித்திபெய்துஞ் சிவசத்திபொற்பதம், முத்திமோக்ஷமெய்ஞ்ஞானம்லபிக்குமே. முப்பு

இ-ள். கருவங்கசெந்தூரத்தை பூசித்து நினைப்பவர்கள் மோட்சத்தை யடைவார்கள். எ-று. ௧௪௧௭

இந்திரனுமதி ரவியுங்கதிரொளி, சந்திரசூரியாவிந்துநாதஞ்சேர்ந்து இந்த யெண்சாணுடல் பஞ்சபூதங்கூடி, ரஞ்சிதஉப்பு நவலோக நீற்றுமே. முப்பு

(இ-ள்.) இந்திரன், சந்திரன், சூரியன், விந்து, நாதம் இவைகள் சேர்ந்த இந்தச்சரீரம் பஞ்சபூதஞ் கூடியுண்டானதாம். எ-று. ௧௪௧௮

நீலமேகவர்ன மாலின்மதிமலர், வாலைரூபிவடிவம்பிகைதன்செயல், மூலாதாரமு மண்டலஞ்சூழ்மதி, ஆருதாரமமைத்தாராண்டையே. முப்

(இ-ள்.) திருமாலின் திருவடிகளையும், அம்பிகையின் திருவடிகளையும் துதித்து ஆருதாரங்கள் உண்டானவிதத்தையும். எ-று. ௧௪௧௯

கற்பகோடிகற்ப சாதனைசெய்கினும், உற்பகங்களொருவரறிகிலார், சற்பமாவ ததுகடித்தேவிஷம் கைத்தால் ஞானஞ் கரைகண்டறிவரே. முப்பு

(இ-ள்,) கோடிகாலம் கற்பசாதனைசெய்தாலும் உற்பனத்தை யாவரும் அறியமாட்டார், இவைகளையெல்லம் ஞானங்கரைகண்டவர்கள் அறிவார்கள். எ-று. ௧௪௨0

வங்கசெந்தூர மிருபத்துமேகமும், வாரியேழு கடலேழுஞ்சுழலவும், தங்கமிதுபதி ஞறுகலையினல் கருவங்கசெந்தூர மருவினல் தங்கமே. முப்பு

(இ-ள்.) வங்கசெந்தூரத்தால் இருபதுமேகமும் நீங்கும் இச்செந்தூரம் சரீரத்திற்பட்டால் தங்கமாகும். எ-று. ௧௪௨௧

இந்தத்தேகமிருந்தெவ்வுயிர்க்குமே, வங்கசெந்தூரமது குன்றித்தேனிடை, அந்திடைவாதமடக்கியுமந்திடை, செந்தாவின் கிருதத்திலூட்டியுணருவாம். முப்பு

(இ-ள்.) இந்தச்சேந்தூரத்தில் ஒருகுன்றிவாதமடக்கி, பசும்பால் இவைகளிற்கலத்து கொடுக்கவேண்டும். எ-று. ௧௪௨௨

காரிலுதித்துரு வாயிறுபத்துமே, கட்டளையின்படி மேகங்கள் சூழ்கிலும், சாருமுடல்விந்து நாதத்துலாவியும், பாயுந்தங்காசவங்க செந்தூரங்காண். முப்பு

(இ-ள்.) இந்தச்செந்தூரதால் சரீரம் தங்கவர்ணமாகும். எ-று. ()

குமரிலேகியத்தில் குன்றிடைசெந்தூரம், அமிர்தமேயரைமண்டல முண்பீரால், தமதுதேகம்பொன் காலையுமாலையும், அமிர்தமாகுமாவின் பால் கிருதங்களே. முப்பு

(இ-ள்.) வான்குமரிலேகியத்தில் குன்றி எடை. செந்தூரம் அரைமண்டலந்தின்ருல் பசும்பாலிலும், நெய்யிலும் இருவேளையும். எ-று. ()

பாலுமன்னம் பரிந்து அருந்திடில், வாலையாகும் வயதுயிளமையாம், சூலைகிராணியெட் டெட்டுமெழும்பிடுஞ், சோபதாப மாயாசங் களும்விடும். முப்பு

(இ-ள்.) பாலுஞ்சாதம் சாப்பிட்டு இம்மருந்தைச்சாப்பிட்டால் இளமை வயதுண்டாகும், இதனுல், சூலைகள், கிராணிகள் முதலியவைகள் நீங்கிவிடும் சோபம், தாபம், ஆயாசங்களும் போய்விடும். எ-று. ()

வாதமென்பது பித்தன்நாற்பது, மாறுஞ்சேத்தும மிருபத்துமே கிடும், வாதவிந்து மூலப்புளி சுன்னத்தால் காதமோடி கருங்கடல் புக்குமே. முப்பு

(இ-ள்.) எண்பதுவாதங்கள், நாற்பதுபித்தங்கள், இருபதுசேத்துமங்கள் முதலியவைகள் மூலப்புளி சுண்ணத்தினல் நீங்கிவிடும். எ-று.

விருத்தம்.

அந்தவொளியாயி லகுஞ்சுழிமுனைமீதில் அருள்பரமசிவகுருவே ஆண்டேகேளீர், வந்தவழி முப்புமுன்னுளமைத்தவாறு மனிதர்களில் மறுபிறவி செனித்தவாறும், சுந்தரமே யென்குருவே யகத்யசுவாமி சொன்ன மறுபிறவியென்ன சூக்ஷஞானம், எந்தவிதமாகிலுமே கற்பக்கூறுல் எண்சாணுதேகமது வேறுய்ப்போச்சே.

(இ-ள்.) சுழிமுனையின்மேல் விளங்கும் முப்பூவை உண்டாக்கின விதமும், மறுபிறவி உண்டானவிதமும், கற்பசாதனத்தினல் வேறுகப் போச்சுது. எ-று. ௧௪௨௭

கருவிதொண்ணூற்ருறுஞ் சுட்டகாயமாச்சு காமப்பால் வேறுபடகர்மம்போச்சு, திதிமருவுங்கருவூரு பெலத்தும்போச்சு திருநடனசெகச்சோதியறியலாச்சு, வரும்வினைக்கு மூன்றப்புமுடிந்து போச்சு மகத்தானசெந்தூரம் வசியமாச்சு, பெரியோர்கள் மறைத்தகருவெளியாய்ப்போச்சு பேதபேதங்களெல்லாம் பேசலாச்சு.

(இ-ள்.) தொண்ணூறு கருவிகளையும் சுட்டகாயமாச்சுது, காமப்பால்வேறுகவே கர்மம் போச்சுது, கருவூர்பலத்துப்போச்சுது,தேஜோமயத்தைக்காணலாச்சுது, முப்புமுடிந்துபோச்சுது, செந்தூரங்கள் கைகூடின பெரியோர்கள் மறைதந்தமறைப்பெல்லாம் வெளிப்பட்டுப்போச்சுது, பேதாபேதங்களெல்லாம் பேசலாச்சுது. எ-று. ௧௪௨அ

ரசபஸ்பம் தரு.

சூதரசபற்பங்காண்-ரசசூத-வாலைரசபற்பங்காண்

(இ-ள்.) வாலைரசமாகஎடுத்த சூதரசபற்பம் இதுவேயாகும். எ-று.

சூதமென்ருல்ரச வாதசூதரசம் சோதித்தொருபலஞ் சூட்சமதாகவும், நாதவிந்துகார சாரம் பத்தாண்டினில், மாதுநீர்நாத மருவியும் பாய்ந்திடில். சூதரச

நீதமெனும்விந்து நாதத்திற்பொங்கியும், வேதசாரம் விந்துவென் மதிபாய்ந்திடும், வேதசாரம்பழச் சாறெனுங்கூறிடல், வீதமஞ்சு பலநாத நீராய்மடையே. சூதரச

(இ-ள்) ரசம் ஒருபலத்தை நாதநீர்விட்டுமடியும் வரைக்கும் அரைத்து. எ-று. ௧௪௨௯

தோகையெனுமட மாதுமாதவிடாய் சூதமத்தச்செப்பு பாத்திரந் தன்னிலும், சூதத்தைவிட்டுப் போற்றித் தீபாக்கினை நாதத்தை விட்டிரு நாலுகடிகைக்குள். சூதரச

(இ-ள்.) அதைவழித்து செப்புபரணியில் போட்டுதீபாக்கினியாக நான்கு நாழிகைஎரித்து. எ-று. ௧௪௩0

மாதவிடாய்சருங் கேற்றவாலரச, மேனுமேன்மேலும் வெகுவனுவாகிடும். நாதசத்திமூல நாடிப்புளிக்குளே, சூதவாதசித்திகுகைமலபபுளிசீலையே. சூதரச

(இ-ள்.) அப்படி எரித்து நாதநீரினல் சுருக்குகொடுத்து வந்தால் ரசமானதுவலிவடையும், பிறகுமூலப்புளியினல்சீலைமண்செய்து. எ-று

மலப்புளிசரக் கானதுகுக்கிடம், வன்னியிட்டு அன லாறிசூத பற்பம், பலமிந்தஇடை மாறுதொருபலம், பார்க்கப்பார்க்கப் பளிங்காகும் பிரகாசமாம். சூதரச

(இ-ள்.) மலப்புளிசரக்கினல் இவ்விதஞ்செய்து குக்குடபுடம் போட்டு எடுத்துப்பார்த்தால் ரசமானது உயர்ந்தபளிங்கு நிறத்தையடையும். எ-று. ௧௪௩௨

நலமிந்தவுட லெமனென்றநோய்வினை, நாடிடுமேபதினெட்டுகுஷ்டத்துக்கும், வலையதுவும்வீசும்பஞ்ச தாரைக்கிருதமெனும், அதில் குன்றியிடைவைத் தரைமண்டலமுண்ண. சூதரச

(இ-ள்.) எமன்போன்ற வினைகள் இதைக்கண்டவுடன் நிற்குமோ நிற்கா இதை ஒருகுன்றிஎடை சர்க்கரையிலாவது நெய்யிலாவது ஒரு மண்டலம்தின்றால் 18-விதமானகுஷ்டரோகங்களும் நீங்கும். எ-று.

வாதமடக்கிவேர்க் கொம்புபறக்கியும், இரவுமேகொடிவேலிவேர் தோளதும், வீதஞ்சரியிடை சூரணமாய்ச்செய்து, மேருதேன் கூட்டிக் குழைத்தந்தபற்பத்தில். சூதரச

(இ-ள்.) வாதமடக்கி, சுக்கு, பறங்கிச்சக்கை, சித்திரமூலவேர் பட்டை சரி எடை சூரணஞ்செய்து தேன்விட்டுக்குழைத்து, அந்தப்பற்பத்தில். எ-று. ௧௪௩௪

வேதஞ்சொலும்படி மேகவாய்வுகுத்தல், பேதமானகடி முடக்குப்பிடிப்பதும், சூதபற்பங்குன்றி காலையுமாலையும், நாதனருளரை மண்டலநல்கிடே. சூதரச

(இ-ள்.) ஆயுள்வேதஞ்சொல்லு வதைப்போல, மேகவாயுகுற்றல், கடி, முடக்கு, பிடிப்பு, இவைகளுக்கு ரசபற்பம் குன்றிமணியளவு காலை மாலை இருவேளையாக அரைமண்டலங்கொடுக்க. எ-று. ௧௪௩௫

மூலமெட்டுமூல கிராணியெட்டுவாய்வு குண்மமெட்டுசுரதோஷத் தோடேழதும், நீலமேகங்களிருபத்து ஒன்றுடன், காலையோடிகடல் புக்கி மாறுமே. சூதரச

(இ-ள்.) எண்வகைமூலங்கள், எண்வகைகிரணிகள், வாயுக்கள், எண்வகைகுண்மங்கள், சப்ததோஷ சுரங்கள்இருபத்தோருமேகங்கள் ஆகிய இவைகள்கடலிற்போய்ப்புகுந்து விடும். எ-று. ௧௪௩௬

வாலைசூத மகிமைமகத்துகள், பேதபேதமாய் பேசினர் நூல்களில், நாதவிந்துகார சாரமகிமையால், சூதபற்பமுஞ் சூட்டினேனுண்டையே. சூதரச

(இ-ள்.) வாலைரசத்தின் மகிமையை மகான்களெல்லாம் பலபேதமாகப் பேசினார்கள், நாதவிந்துகளாகிய காரசாரங்களின்மகிமையினால் சூதபற்பத்தைச்சொல்லுகிறேன். எ-று. ௧௪௩௭

ஊழ்வினைப்பய னோடிப்பறந்திடும், மைவிழிமட மாதுசூதகம் போம், பையவினைப்பழி பாண்டுரோகம்விடும் மெய்யிது ஞானவெட்டியி துன்மையே. சூதரச

(இ-ள்.) ஊழ்வினைஓடிவிடும். சூதகவாயுபோகும். பாண்டுரோகந் தீரும் இது உண்மையாம். எ-று. ௧௪௩௮

கர்மாந்தரநோய் கருதிப்பயந்திடும், மர்மமேதுவழலைமகத்துவந், தர்மநோய்க்குத்தகந்தவுழ்தமிட, கர்மநோய்கள் காணாது சுபஸ்தமே.

(இ-ள்.) கர்மநோய்கள் பயந்தோடும். வழலையின் மகத்துவம் தர்மநோய்க்குத்தகுந்த ஔஷதமாகும் ஆகையால்கர்மநோய்கள் கண் காணாதநூரத்தில் ஓடிப்போய் விடும். எ-று. ௧௪௩௯

விருத்தம்

வடிவுடைய திருமால்தன் தேவியான மதிதலத்திலவதரிக்குமரிதாரங்காண், கெடிவீரசிங்கமெனுஞ்சரக்கிதாகும் கேவலமாய்ச்சொல்லுகிறேன் கெருவமில்லா, மடிமீதிலெணைவளர்த்து அமிர்தந்தந்த வாலையபிராமிமலர்க்கமலம்போற்றி, அடிநடுவுமுடியுமெனக் கனுக்கிரகிக்கஅரிதாரபற்பமதையருள்வேணண்டே.

(இ-ள்.) சரக்குகளில் மிகவும் உயர்ந்ததுவும், திருமால்மனைவியுமான அரிதாரபற்பத்தை வாலாம்பிகையின் உபதேசப்படி நான்சொல்லுகிறேன்- எ-று.

அரிதாரபற்பமுறை-தரு.

தாரபற்பமிதுகாண்-திருமாலின்தேவியிதுகான்.

(இ-ள்.) திருமாலின் தேவியானதாரபற்பம் இதுவேயாகும்.எ-று.

தாரந்தனில்திரு மாலின்தேவிபலஞ் சீராய்காலங்கல்லு சுன்னத்தில்தாளித்து நீரமுரிபடி நாலுக்கொன்றுகாரம், நேரத்துடன் மூன்று நாள் கரைத்துப்பின்பு, தாரமூன்று நாளில் தெளியுஞ்செயநீ

தில், வேறொருபடி வெண்காரசாரமும், பூரம்பலஞ்சரி யொக்கத்தூ
ளாக்கிப்பின், தூறிடுநீரினில் தூள்செய்துபோடுமே. தார

(இ-ள்.) ஒருபலம் தாரத்தை ஒருபடி கல்சுண்ணாம்பில் வைத்து 4-படி அமுரிவிட்டுத்தாளித்து 3-நாள் வைத்து தெளிந்தபின்பு அந்த ஜெயநீரில் வெங்காரம், சாரம், பூரம் வகைக்கு ஒருபலம் தூலாக்கி அதில் போட்டு. எ-று. ௪௪௪௧

சாரகாரசெய நீரதும் பீங்கானில் வீறதாரவிடு மெய்ப் பொருள்
முப்பவும், காரநீரினில் கழஞ்சிடைபாய்ச்சியு, மேறநீரு மிறத்துங்கடி
கைதான். தார

(இ-ள்.) இந்தச்சலத்தைப் பீங்கானில் விட்டு ஆகின்றஉப்போடு கூடமுப்பூவுஞ் சேர்த்து. எ-று. ௧௪௪௨

புரசையாவதும் பூமுருக்கநிறம், வரிசையாய்ச் சட்டியில் தார
மும், சுரநீர்செய நீரதுஞ்சாமனல், அருசமாகச் சுருக்கிட்டுப் பாரு
மே. தார

(இ-ள்.) முருக்கம் பூ நிறமாக அயச்சட்டியில் ஒருவாரம் சுருக்கிட்டுப்பாரும். எ-று. ௧௪௪௩

சுருக்கேறவுந்துய்ய வெண்ணரிதாரமாம், மிறுகுங்கட்டிமினுமி
னுப்பேகிடும், இறுகுமுப்புக் கழஞ்சிடைவிந்துநீர், இரண்டுமிழைத்
துக் கவசமுஞ்செய்திடே. தார

(இ-ள்.) இவ்வாரு சுருக்கு கொடுத்தால் அரிதாரம் வெண்மையாய்விடும் கட்டி இறுகிமினு மினுப்பாகும், முப்புகழஞ் செடைக்கு விந்து நீர்விட்டிழைத்து தாரத்திற்குக்கவசஞ்செய். எ-று. ௧௪௪௪

தாரங்கட்டிடுஞ் சத்துகள்வெட்டையாம், ஈரம்வற்றஇனி ரவியின்
முகம், நீறுந்தாரம்பத்தி ராட்சியரைத்துமேல், சோரச் செய்துமே சு
ன்னநீர்சீலையே. தார

(இ-ள்.) தாரமானது கட்டினால் சத்துகள் வெட்டையாகும் ஈரம் வற்றி இனிரவியில் நீறும் அந்தத்தாரத்திற்கு பத்திராட்சியிலே அரைத்துக் கவசஞ்செய்து சுண்ணச்சீலைசுற்ற. எ-று. ௧௪௪௫

சீலைமண்ணுடன் செய்வதருவஞ்சினில், வாலையம்பிகை மாது
அருளினால், சாலமாமலர் தாயைபனிந்துடன். நீலமேதிருமாலைப்பூசித்
தேனே. தார

(இ-ள்.) மண்சீலையுஞ்செய்து அஞ்செருவில்புடம்போட்டு ஈஸ்வரியைத்தியானஞ் செய்து. எ-று. ௧௪௪௬

வன்னியிட்டுப்பார்க்க வாசம்புகைவரா, துன்னிதமாய்பொன்னரி
தாரநீறிடு, மன்னையருள்திரு மாலின்தேவியெனுஞ், சொர்னபற்பந்
துடி சொன்னேமீதாண்டையே. தார

(இ-ள்.) அவ்வாறு புடமிட்டெடுத்துப் பார்த்தால் வாசனையும், புகையும் வராது, அரிதாரம்பற்பமாகும், உலகர்கள் இவ்வரிதாரத்தின் மகிமையை உணர மாட்டார்கள். எ-று. கசசஎ

அரிதாரமதுநீறும் பரிசவேதை, லாதலால் தேயுவி னதுபத்துக் கொன்றிது, காரியமாமெனும் பொன்னரிதாரத்தில், வீரியமென்ன விதமறியார்கள்காண். தார

(இ-ள்.) இதுநீறினதினல் பரிசவேதையாகும், பத்துக்கொன்று தேயுகொடுக்க வேதையாகும். எ-று. கசசஅ

கூறறியுமாவின் கிருதமுந்தேனுடன், சீர்மேவுந்திப்பிலி சிறுமிளகு மது, வாறறியுங்கிராம்பு வாதமடக்கிவேர், சாருஞ்சுக்கதுவும்பலமதா குமே. தார

(இ-ள்:) பசுநெய், தேன், திப்பிலி, மிளகு இலவங்கம், வாதமட க்கிவேர் சுக்கு இவைகள் வகைக்கு ஒருபலமாம் எ-று. கசசகூ

வகைவகைக்குச்சரி சமனைத்தூளாக்கிப்பின், அறியும் பற்பமது குன்றிதன்னிடை, திகையில்லாமல்தேன் கூட்டிகற்பத்தினில், பகை யில்லாதொரு பக்ஷங்கொண்டுணருமே. தார

(இ-ள்) இவைகளைத் தூளாக்கி அரிதாரபற்பத்தில் ஒருகுன்றி எடை சேர்த்து ஒருபட்சஞ் சாப்பிடவேண்டும். எ-று. கசருO

வகையிந்தப்படி காலையுமாலையும், புகையுமேபுளி பொட்டெனத் தள்ளிடுங், துகையதாஞ்சய காசமிருமலுஞ், சுவாசத்தோடிரைப்பாவது நீங்குமே. தார

(இ-ள்.) இப்படி இரண்டு வேளையும், புளியை நீக்கிசாப்பிட்டால் க்ஷய! காச இருமல்,சுவாசம், இரைப்புஇவைகள்நீங்கும். எ-று. கசருக

சாதமிந்தப்படி மேவும் பட்சத்தினில் தாரபற்பமுஞ் சடந்தனிலூ றினல், வாதம் விக்கலுடன் பித்தரோசிகம், வாந்திசந்திசுர சன்னியுமே குமே. தார

(இ-ள்.) இப்படிசாப்பிட்டால் தாரபற்பம் சரீரத்தில் ஊறினல் சகலவாதங்கள் விக்கல், பித்தஅரோசகம், வாந்தி சுரம்சந்நிஇவைகள் நீங்கும். எ-று. கசருஉ

சூதத்தினல்வயிறுவலியுடனுஷ்ணம், வாதத்தினல் பெருவயிறு ந்துறக்குணம் நாதத்தினல் பிரமூலப்பிரமியங், சாசத்தினல் தொண் ணூற்றுறுசயம் விடும் தார

(இ-ள்.) சூதகத்தினல் வரும் வயிற்றிவலி. உஷ்ணம் வாதத்தினல் வரும் பொருமல், மூலம், பிரமியம், தொண்ணூற்றுறுக்ஷயம்இவைகள் நீங்கும்.

பரங்கிப்பட்டைச்சிற்றரத்தைசக்குடன், சிறந்தவாதமடக்கித்திப் பிலியும், நிறைந்ததோர்கொடிவேலிவேர்ப்பட்டையுங், குறைந்திடாமிள கருணையேழுமே. தார

(இ-ள்.) பறங்கிச்சக்கை, சன்னராஷ்டகம், சுக்கு, வாதமடக்கி, திப்பிலி சித்திரமூலவேர்ப்பட்டை, மிளகரணை இந்தஏழும். எ-று. ()

ஏழுவகைக்குச் சரியிடைபாகம்-இடித்துத்தூளதாயினிபதனத்துடன், வாழுமாமலைத் தேன்பசுங்கிருதஞ்சரி, வார்த்துமத்தித்துமதிபற் பங்குன்றியே. தார

(இ-ள்.) சமமாகஎடுத்திடித்து சூரணம்பண்ணிதேன்,நெய்கலந்து அதில் ஒருகுன்றிமணி பற்பம் கசருடு

பற்பங்குன்றியிடை காலையுமாலையும், உற்பகமாயொருபக்ஷமுணர் வீராய், அற்பதேக மசாத்தியநோய்களுந், துற்பலமாவ துந்தூளது வாகுமே. தார

(இ-ள்.) அந்தஅளவாக இருவேளையும் ஒருபட்சஞ்சாப்பிட்டால் துர்ப்பலசாரங்களும் தூண்போலாகும். எ-று. கசருசு

சீறுநாசியடைப்புநீர்பாய்ச்சலும் சேருஞ்செவிதனில் சீழுமடைத் தலும், தேறுங்கபாலத்தின் சூலையும்பாண்டுடன், ஊரைவிட்டேகியு காந்திரமோடுமே. தார

(இ-ள்.) நாசிரோகங்களும், காதுநோய்களும், கபாலநோய்களும் பாண்டுவும் நீங்கும். எ-று. கசருஎ

காசரோகங்கள மேகப்படைகளும், நாசியடைப்புப் புண்புரைச் சிலைகளும், வாசமாகிடுஞ் சீழுங்கிருமியும், மாரியோடும்வலுவானநோய் களே தார

(இ-ள்.) காசம், மேகப்படைகள், புண், புரை, சீழு, கிருமிஇவை கள் நீங்கும். எ-று. கசருஅ

கெற்பகாசங் கிரந்தியுஞ்சூலைகள், அற்பநோய்க்கு அவுழ்தங் கொடுத்திட, முற்பச்செய்கைமூலங்களுமறும், மெய்ப்பொருள்காரபற்பத் தாலாண்டையே. தார

(இ-ள்.) கர்ப்பகாசகம், கிரந்தி, சூலை, மூலங்கள் இவைகள் அப் பற்பத்தால் நீங்கும். எ-று. கசருசூ

கொச்சகம்.

மூலப்புளியமுரிமுன்னேயுள்ளத்திலும்
வாலையதிவாய்செனித்துவாசியினுல்சன்னமாம்

சூலதுவாவந்தமைத்தசூதரிந் துமுப்பூவின்
காலத்திலுங்கற்பமுண்ட காரணத்தினல்முடிந்தே.

(இ-ள்.) மூலப்புளி சுண்ணமானது வாலாம் பிகையின்கிருபையி னல் முடிந்தது. எ-று. ௧௪௬0

முடிந்ததுகாண்தீட்சைபத்து மூலப்புளிசுன்னமதால்
படிந்ததுகாண் முப்புசுன்னம்பார்தனிலுமார்முடிப்பார்
கடிந்தமுரிகற்பசுத்திகாயசுத்தியானதினல்
வெடிந்ததுகாண்சற்குருவால் வெகுசரக்குநீற்றினமே.

(இ-ள்.) ஷை சுண்ணத்தில் தசதீட்சைகள் முடிந்தன, இதையா வரும் முடிக்கமாட்டார்கள், சரக்குகளெல்லாம் சற்குருவருளால் நீறும். என்றவாறு. ௧௪௬௧

கலித்துறை.

ஆண்டுதசபத்து கற்பாதிகற்பத்தினுதரவால்
பூண்டுத்திறந்தந்த மூலப்புளியென்ற பொக்கிஷத்தை
வேண்டிவாலாம்பிகை பாதாரவிந்தத்தில் மேவிடயான்
தூண்டியெனக்குப தேசந்தந்தென்னைச் சோதித்தனே.

(இ-ள்.) பத்துவருஷத்தில் முடிந்தசுண்ணத்தை வாலரம்பிகை யருளிச்செய்து என்னை சோதனைசெய்தாள். எ-று. ௧௪௬௨

சோதியானந்த பரிபூரணனந்த சூக்ஷமதால்
வாதவயுத்திய நானறிந்தம்பிகை மதுமலர்
சாதனைசெய்தொரு ஈராறுமாச்சுது தானறிந்தேன்
நீதிமெய்ஞ்ஞானத்தில் வெட்டியென்றேவேத நிர்மித்தனே

(இ-ள்.) வாலாம்பிகையின் அருளினல் நான் உணர்ந்து ஞான வெட்டி என்கிறபேரால் நான் நிர்மித்தேன். எ-று. ௧௪௬௩

வெண்பா.

வேண்டுமரிதார வேதையிடபாதையிது
தாண்டிதுகாண்முலப் புளிசுன்னம்-வேண்டுலகில்
கண்டால்கலகமது காசமறுஞ்சன்னிசுர
முண்டாலுமூழ்வினைபோம்-போம்.

(இ-ள்.) அரிதாரவேதைசெய்ய இதுவழியாம், மூலப்புளி சுண் ணத்தினல், காசம், சன்னிசுரம், இவைகள் குணமாகும். எ-று. ()

தேனுமனுபானஞ் சேத்துமங்தொண் ணூற்றுறுமது
முளைவிட்டுவோடிவிடு மூழ்வினைபார்-தேனதனல்
நானுணர்ந்தஞானவெட்டி நன்னூலதுவாயருள
பானமதையுண்டதுவும் பார்.

(இ-ள்.) தேனினால் சேத்துமம் 96ம் நீங்கும்? இதுநான் உணர்ந்தவிதி யாகும். எ-று. ௧௪௬௫

விருத்தம்.

இந்தமதியாலெடுத்துரைத்தேன்காணும் எண்டிசையுங் கீர்த்திபெறவிந்நூல்பாடி, சந்தயமெல்லாம் வெளியாய்த்தானேதோற்றும் சங்கையென்றமர்மமெல்லாஞ் சார்வாய்த்தோன்றும், கந்தமலர்ப்பூங்குழலாளன்னைபாதங் கருத்திலவைத்துக்கருவியெல்லாங்கணக்காய்ச்சொன்னேன், இந்தமதியெய்தினதாலாண்டேகேளீர் இனியுரைப்பேன் சவ்வீரசுன்னமாண்டே.

(இ-ள்.) இந்த அறிவினால் நான் இந்நூலைப்பாடி மர்மமெல்லாம் வெளியிட்டேன், இவ்வளவும் வாலாம்பிகையின் அருளினால் சொன்னதேயாம், இனி சவ்வீரச்சுண்ணம் சொல்லுகிறேன். எ-று. ௧௪௬௬

சவ்வீரச்சுன்னம்.

அதிவீரசுன்னங்காண் சவ்வீரமாலகாலவிஷங்காண்.

(இ-ள்.)இதுவீரசுண்ணமாகும், ஆலகாலவிஷம்போல்வதாகும்.எ-று.

விதியிருந்ததி ஞலிந்தசுன்னமு, மதிவிதவீர சவ்வீரபற்பங்காண். மதிரவிராசகெம்பீரபூபதி, கெடிரணசூரமகிபதிராச, அதி

(இ-ள்.) விதியினால் இதுகைகூடும், ராசகம் பீரபூபதி, காசமகிபதிபோல் வதாகும். எ-று. ௧௪௬௭

கட்டுமறுபத்துநாலு சரக்கையும், வெட்டியெறிந்துவெண்ணீறதுபோலவும், கெட்டிகாரசார சிஷ்டையினால்வீரம், பட்டுப்போய் மர்த்தனம் பற்பமதாகிடும். அதி

(இ-ள்.) இது 64-சரக்குகளையும் கட்டும், சுண்ணமுஞ்செய்யும், வீரம்மர்த்தனமாகும். எ-று. ௧௪௬௮

வீரம்படநவரத்தினமர்த்தனம், வேகமிதால் வச்சிரங்களுமர்த்தனம், காரம்படநவலோகமுமர்த்தனம், காலனென்றஎமன்கற்பத்தால் மர்த்தனம். அதி

(இ-ள்.) இப்படி தீர்ந்த வீரத்தினால் நவரத்தினங்கள், வஜ்ஜிரங்கள் மர்த்தனமாகும். எ-று. ௧௪௬௯

தாரத்தினால்செம்பு வங்கமுமர்த்தனம் தங்கமுதல்ரசிதங்களுமர்த்தனம், சாரத்தினால்சரக்காதிதமர்த்தனம், சத்துருமித்துருவறிந்துசெய் மாரணம். அதி

(இ-ள்.) அரிதாரத்தினால் செம்பும், வங்கமும், தங்கமும், வெள்ளியும், மர்த்தனமாம், நவசாரத்தினால் சகலசரக்குகளும் மர்த்தனமாகும் சத்துருவுணர்ந்து மாரணஞ் செய். எ-று. ௧௪௭௦

வீரந்தனிலொரு மேலும்பலமறிந், தேனுமறுவகை நீரிலொரு படி, பானந்தனில்முப்பு நானறிந்தோர்களிச், சேனத்திலுமயச்சட்டிக் குளிட்டுமே அதி

(இ-ள்.) வீரம் 1-பலம் அறுவகைஜெயநீரில் ஒருபடி அயச்சட்டிக்குள்விட்டு. எ-று. கசஎக

காரநீராலுஞ்சவ் வீரஞ்சுருக்கிட, காரசாரசெயநீரினில் கட்டிடு மூரலற்றுமுழுக் கட்டுமிருரெண்டு சாமத்திலுஞ்சுத்த பேதியாமாண்டையே. அதி

(இ-ள்.) சாரநீரினால் சுருக்கிட்டி வைக்கக்கட்டு, ஊரலற்றுக்கட்டும். என்றவாறு. கசஎஉ

முப்புசுன்னந்தனில் மூன்றுபணவிடை. கற்பூரமுங்காடிக்காரமுமைந்திடை, உற்பகநாபியுமுரவெங்காரமும், இப்படிசூதமினமரிதாரமே. அதி

(இ-ள்.) முப்புசுண்ணத்தில் 3-பணவெடை கர்ப்பூரமுங், காடிகாரமும் அவ்வளவே எடை நாபி, உரம், வெங்காரம், சூதம், அரிதாரம். என்றவாறு. கசஎங

மடையன்புனுகு மனோசிலையந்திடை, இடைபிசகாமலு மிந்திடைபூரமும், நடைகுருவண்டு நாதவிந்துநீரில், உடனேமூலப்புளியூட்டியரைத்திடே. அதி

(இ-ள்.) மயில்துத்தம், புனுகு, மனோசிலை அவ்வெடை, எடைபிசகாதுஎடுத்து அவ்வெடை பூரமும், குருவண்டும் கூட்டி நாதவிந்துநீரினால்மூலப்புளி சேர்த்து அரைத்து விடு. எ-று. கசஎச

விந்துநாதத்தினால் விட்டொருசாமமு, மந்தமரக்கு மதுமைபோலாகவும், சந்தயமில்லாசவ் வீரத்தின்மேலெழு விந்தையெனும் ரவிவேகம்படபட. அதி

(இ-ள்.) இப்படி, சாமம்மை போலாம் வரைக்கு மறைத்து சவ்வீரத்தின்மேல் அப்பிவெயிலில் வைக்கவேண்டும். எ-று. கசஎரு

காயகாயகதிர் காணசவ்வீரமு, மாயும்படியதுமாறிமாறியிட. சாயமேறிசரகாயுலர்ந்தாகிடில்வேகங்கண்டுவீரமேவிடுமாண்டையே.

(இ-ள்.) இப்படி காய்ந்தால் சவ்வீரம்மடியும். எ-று. கசஎசு

தனியமூலப்புளி தான்சரகானதி லினியதூளாக்கிடுமொருசட்டினில், கனியஓரஞ் சதுமாரமதுபலம், இனியகீழ்மேலுமிவ் வீரத்தையூட்டிடே.

(இ-ள்.) இப்படிகாய்ந்தபிறகு தூளாக்கி ஒரு சட்டியில் கீழ்மேல் மூலப்புளியைவைத்து இடையில் வீரத்தைவைக்கவேண்டும். எ-று. ()

ஊட்டிமேலோடு ஒரேழுகவசமும், நாட்டிநவிவன்னி நாடிகடிகை யில், நீட்டியனலு மூலாக்கினேபாய்ந்திடில், வேட்டியாகுமிது வீரசுன்ன மிதே.
அதி

(இ-ள்.) மேலோடுமூடி ஏழுகவசஞ்செய்து சூரியபுடம்வைத்து நாலுநாழிகையாலுல் வீரசுண்ணமாகும். எ-று.
௧௬௭௭

வேகம்படவிந்த வீரசுன்னத்தின, லோகங்கள் நீறநுழைந்ததில் பாய்ந்திடில், சாகுமறுபத்து நாலுசரக்கது, மேகமிருபத்து ஒன்றறு மாறுமே
அதி

(இ-ள்.) இந்த வீரசுண்ணத்தினல் லோகங்கள் நீறும் இதனல் 64-சரக்குகளிம் மடியும் மேகம் 21-ம் தீரும். எ-று.
௧௬௭அ

ஆலகாலவிஷமான அவ்வாறினல், காலனேதுபின் கலிவருகாது பார்த்து, மூலமெட்டு முறித்ததுமோடியும், பாலையாவதும்பாருஞ் சவ்வீரமே.
அதி

(இ-ள்.) மூலம் எட்டு முறிந்துபோவதினல் வாலைப்பருவம் வரும், இதனல் எமன் வருதலில்லை. எ-று.
௧௬௭௯

வெள்ளியீரஞ்ச மிதுசுன்னக்குன்றிடை, யள்ளியே மூசையது வுருகும்பதம், கொள்ளியாஞ்சுன்னங் கொடுததிடபத்துகாண், கள்ளமில்லி கனகமிதாண்டையே.
அதி

(இ-ள்.) பத்து எடை வெள்ளியை மூசையிலிட்டு அது உருகும் போது ஒரு குன்றியளவு சுண்ணங்கொடுத்தால் தங்கமாகும். எ-று. ()

தேய்வுமீரெட்டுஞ் செலுத்திட மூசையில்,பாயுங்குன்றிடை பரிட்சையைப் பார்த்திடில், வாய்வு பத்துக்குமே வைத்திடுதேனதில் மாயுமது நோய்கள் மரணங்காணுண்டையே.
அதி

(இ-ள்.) செம்பு 16-க்கு ஒரு குன்றி சுண்ணங்கொடுத்துப்பார்த்தால் மத்தைவேகங்களுக்கு கொடுத்தால் சர்வரோகங்களும் நாசமாகும் என்றவாறு.
௧௬அ௧

அசுவகெந்திபாதண்டம்வேர்ப்பட்டையுந், தினுசுவேரிஞ்சி திப்பிலிச்கோஷ்டமும், அசதிவாத மடக்கிவேர்காற்பலம்,வசதியோர் சமன் வைத்தரைசுரசமே
அதி

(இ-ள்.) அமுக்கராங்கிழங்கும், ஆதண்டைவேர்ப்பட்டையும்,திப்பிலியும் கோஷ்டமும், வாதமடக்கியும் ஆகிய இவைகள் வகைக்குகால் பலம் அரைத்து சுரசம் செய்யவேண்டும். எ-று.
௧௬அ௨

சுரசமாமதில் சூட்டிசுன்னமும், அரிசிதன்னிடை யாவதுங் காண்கிலார் துரிதமாநத் தொடுத்திடுமஞ்சுநாள், பரிதிகாலையுமாலையு மூட்டிடே
அதி

(இ-ள்.) அந்தச்சூரசத்தில் சுண்ணத்தைக் கொடுத்தால் 5-நாள் காலைமாலை 2-வேளையும். எ-று. ௧௬௮௩

ஓடுமூர்ச்சையுள மாந்த முசல்வலி சாடுஞ்சன்னிசந்தி வாதத்தின் தோஷமுந் தேடியுங்கடல் புக்கித்தீவாந்தரம், நாடியோடியு நாசமதாண் டையே. அதி

(இ-ள்.) மூர்ச்சை, உளமாந்தை, முசல்வலி, சந்நி சந்துவாதம், தோஷம் இவைகள் நாசமாம். எ-று. ௧௬௮௪

குமரகண்டன் குலைவலிபாரிசந் திமிர்கள் குஷ்டஞ் செடத்தை விட்டோடுமாய், தமர்தன்வாய்வு தலையிடிவிக்கலுங் குமிறுங்கோள்கள் குலைவலியேகுமே. அதி

(இ-ள்.) குமரகண்டவலி, குலைவலி, பாரிசவாயுதிமிர்கள், குஷ்டங் கள் தசவாயு, தலையிடிப்பு, விக்கல், இவைகள் நீங்கும். எ-று. ௧௬௮௫

திசைகளோடித் திகைத்திடும்வாயுவும் விஜையவீரம் விளங்கிடும் பாகமாய், பசையுநீர்கள் பறங்கிக்கிரந்தியுங் கெசமிகுக் கெதிர்கீடுவராது காண். அதி

(இ-ள்.) பறங்கிக் குஷ்டம், சர்வவாதங்கள் இவைகள் வெகுதூ ரம் ஓடிப்போய்விடும் வீரத்தின் மிக்கபலத்தின். எ-று. ௧௬௮௬

நடனமாதுவா லாம்பிகைதன்னருள் நாதவிந்துமூல முப்புவதால் சடம உடலிலுள்ள வூழ்வினைகளேகிடும், முடமுடக்குக் கடிப்பது மாறுமே. அதி

(இ-ள்) சர்வேஸ்வரியான வாலாம்பிகையின் திருவருளால் சடத் திற்குண்டான ஊழ்வினைகளெல்லாம் போவதுடன் முடக்குவதுபோ கும். எ-று. ௧௬௮௭

ஞானவெட்டி நாதாக்கள் மறைப்பெலாம் பானத்தினால் விந்து நாதத்தினலதும், வானமும்வாரி மழைகள் பொழிந்திடும். தானறிந்தே வீரசவ்வீரத்தாட்டமே. அதி

(இ-ள்.) நாதாக்களுடைய மறைப்புகளையெல்லாம் நானஞானவெ ட்டி பாடினேன் இதனால் வானம்மாரி பொழியும், இவ்வளவும் சவ்வீரத் தாட்டமாம் எ-று. ௧௬௮௮

சூரனென்றசுத்த வீரசுன்னமது, காரசாரத்தினால் கட்டுண்டுபோச் சுது, மாறகொடிவலு வேதைகளாகிடும், வாலசூதத்தை படக்கியே கொல்லுமே. அதி

(இ-ள்.) சுத்தவீர சுண்ணம் இதுவாகும், காரசாரத்தினால் இது கட்டுண்டு போச்சுது, இதனால் வேதைகளாகும், இது சூதத்தைக்கொல் லும். எ-று. ௧௬௮௯

விருத்தம்.

அம்பரமாஞ் சுழிமுனை திருநடனவோசை அகண்டபரிபூரணத்தி லகுஞ்சோதி, தும்பிமுகன் வல்லபைதன் தாளைப்போற்றி சுபத்தில்

சுகமெய்ஞ்ஞான சுகத்தில் நின்று. எம்பிரானெனது குரு முனியைப் போற்றி எள்ளளவும் பிசகில்லை யானும்சொன்னேன், நம்பியுங்காண் பாடுபட்டால் கற்பம்வாய்க்கும் நாதவிந்தறியாரேல் நரகந்தானே.

(இ-ள்.) சுழிமுனையின் ஓசையைச் சர்வதேவர்களுடைய திருவடிகளை வணங்கியான் சொன்னேன் இதில்யாதொரு குற்றமுமில்லை, ஆனால் விந்துகளைத்தெரிந்து கொள்ளாவிட்டால் நரகஞ் சித்திக்கும். என்றவாறு. கசசுய0

நரகமென்றுஞ் சொர்க்கமென்று நடத்தைக்காணார் ஞானமென்றும் யோகமென்று நாட்டங்காணார், துரகமென்றவாசிதனிலேறிஞான சுழிமுனையைக்கண்டமெதி யமிர்தமுண்டு, இரதமென்றபானையைத் தான் குளிகைசெய்து இகபரத்தின் வெளிதாண்டி எய்துங்காலே பரமபத சொர்க்கமென்ற தீபங்கண்டு பரஞ்சுடரில் நின்றுதினம் பணிந்தேனண்டே.

(இ-ள்.) நரகம் என்றும், சொர்க்க மென்றும், போகமென்றும் காணார் உலகர் நான் அவைகளை யெல்லாங் கண்டு சமிமுனைத்தீபத்தைத் தெரிவித்து வணங்கினேன். எ-று. கசசுயக

கொச்சகம்.

கடலலைக்குமூறிவிடுங்காரணம்போல்கண்டமதில்
அடரவுமேதாரைவிட்டு அங்கிருந்தவூதிடவும்
கிடுகிடென அண்டரண்டங் கீழ்மேலுந்தத்தளிக்க
வடம்பூட்டவாசியினல் வங்குகளிருந்தூதினனே.

(இ-ள்.) கடல் அலைகுமுறுவது போலகண்டத்திலிருந்து ஊதும் விதிப்படிவங்கிலிருந்து ஊதுகிறேன். எ-று. கசசுயஉ

ஊதிடவிஞடியெட்டு உள்ளமதில்நின்றுமனம்
சாதனைசெய்தேயடியேன் சற்றுமறியாமலுங்காண்
வீதியிந்தமூலம்விட்டு மேல்வரையில்வாசியொட்டி
யேதியறிந்தேனவிடஞ் சிக்கென்றும்விஞடியெட்டே

(இ-ள்.) இப்படி எட்டுவிஞடி ஊதமேல்வரையின் வாசியை தட்டி அவ்விடத்துள்ள சேதியை உணர்ந்தேன். எ-று. கசசுயங

கலித்துறை.

நாடிடுங்காற்பத்து வோடிடும்வாசி நவத்துவாரத்திலும்
ஆடிடுகர மரவத்தின்சாயலவ் வழிகளெல்லாம்
மூடிடுங்கற்ப மூனேசுழிகாண மூலாக்கினியில்
தேடியொருவழி பாயுங்கலையொன்று தேறினனே.

(இ-ள்.) ஆராயும்போது அரவம் ஓடுவதுபோலநவ துவாரத்திலும், வாசிஓடும் பிறகு மூலாக்கினியைத் தேடிவாயு ஒருவழியாகப் பாயும். என்றவாறு. கசசுயச

காலாக்கினைகற்ப நாதவிந்தூறிய காயத்திலும்
வாலாம்பிகைநின்று வாழ்ந்திருந்தாள்மூலவட்டமதில்
தாலாட்டியம்பிகை யமிர்தத்தைத்தந்து தசவருஷம்
நாலாம்பதவிக் கனுக்கிரகவாழ்க்கையை நாட்டினனே.

(இ-ள்.) நாதவிந்துகள் ஊறினகாலத்திலும், வாலாம்பிகையான வளிருந்து வாழந்திருந்தாள், நாலாவதுபதவியை நாட்டினேன். எ-று.

வெண்பா.

சந்துமதியமிர்தந் தாயாரிருந்தெனக்கு
வந்துகலிதீர்க்கும்வா லாம்பிகைப்பெண் முந்தி
வாதவயித்தியத்தின் வாறறியநாதவிந்து
சூதவித்தையின்னதென்றுசொன்னாள்.

(இ-ள்.) எனக்கு அமிர்தத்தாயிருந்துகலிதீர்ப்பாள்வாத வயித்திய வித்தைகளையுணர சூாவித்தையைத் தெரிவித்தாள். எ-று. கசகூசு

சூதவித்தையின்னதென்று சொல்லவாலாம்கைப்பெண்
வாதவித்தைமார்க்கம் வசனித்தே - சூதவித்தை
ஆண்டுவொருவருஷ மாத்தாளமிர்தமதை
பூண்டறிந்துகொண்டேன் புகழ்.

(இ-ள்.) சூதவித்தையை இன்னதென்று சொன்னவாலாம் பிகை யருளியபடி வாதவித்தைச் சொன்னேன், ஒருவருஷத்துக்குள் அமிர் தத்தைப் பெற்றுக்கொண்டேன். எ-று. கசகூஎ

கௌரிபாஷாணச்சுன்னம்-ஆனந்தக்களிப்பு-தரு.

தனனத்தனனதந்தனா-தான-தனனத்தனனத்தந்தன தந்தனா.

சவுரியமிதுவென்னசிங்கம்-சரக்-கானதில்கெடி வீரகெவுரியுந்தங் கம், கெவுரிசிந்தாமணிகாணும் - கெடி-யானபாஷாணத்தின் பற்பமுந் தோணும்; கௌரியில்கோடிதொந்தங்காண்-கனக-வேதைதாம்பரத்தின் வேதையிதுகாண், எவருமதியாரிச்சூக்ஷம்-எம-மிப்புவியில் பரிபத்துக்கு மோக்ஷம்.
தன

(இ-ள்.) கௌரிபாஷாண சுண்ணமானல் கன வேதையாகும் இதுவே தாம்பிரவேதையாகும், எவரும் அறியாதசூட்சமாகும்.எ-று.

பாஷாணம்பலமொன்று வாங்கி-பழம்-புளிசுன்ன மோரிடைபான நாலிடைதான், காமாயம்போல்க ரைத்ததில்வந்-தெளிய-கருதிடுமூன்று நாள்கணக்குச்சென்றெடுத்து, தாழான்வைவாராதெளிந்து-சல நீர்படி கொண்டுசெவ் வீரத்தின்பற்பஞ், சூழனந்த தாரபற்பங்-கெடிது ருசியின் பற்பமுஞ் சூதபற்பங்காண்.
தன

(இ-ள்.) ஒருபலம் கௌரிபாஷாணம் பழம்புளி சுண்ணம் கால் பலம் சலத்தில் கரைத்துத் தெளியவைத்து 3-நாள் சென்றெடுத்து சவ் வீரபற்பம், அரிதாரபற்பம் துருசிபற்பம், ரசபற்பம். எ—று. ()

சீனம் வெங்காரம் பொட்டுப்பு-சாரஞ்-செய்கைவகைக்கும் பலங் கொண்டு தூளாய், பானத்திலிட்டு மூப்பூவில்-பணம் – பற்பமெல்லா மினியந்திடைதாக்கி, ஈனம் வராமற் கடிகை-ரவிமேல்முகம் வீசிட வைத்து கலக்கி, ஊனதுவைக்கொண்டு பார்க்க-கலியாண முருக்கம்பூ வதுக்கொப்பாம். தன

(இ-ள்.) படிகாரம், வெங்காரம் பொட்டிலுப்பு, சாரம் இவைவகை க்கு 1-பலங் கொண்டு தூளாக்கி முப்பூவில் 1-பணவெடை இவைகளை யெல்லாம் அந்த நீரில் போட்டுச் சூரியவெயிலில்வைக்க முருக்கம்பூவு க்கு ஒப்பாகும். எ—று. கடு00

கண்டதிந்தசெயநீர்காண்-அயங்-கருதியசட்டியில் கெவுரியைத்தா க்கி, விண்டிடவுநாலுசாமம்–மிக-மேன்மேல்வன்னியாக்கினையாகத், தொ ண்டுசெய்து சுருக்கேற்ற-கெவுரி–துவண்டுஇறுகிவலுத்திடுமாகில், நின்ற தைப்பார்க்கவெளுத்து–சந்திரன்-நிலவுபளிங்குவெண்துய்யநிறந்தான்.

(இ-ள்.) அயச்சட்டியில் கௌரியைப்போட்டு இந்தச்செயநீரால் நான்கு சாமம் சுருக்கு கொடுத்தால் கௌரி இளகிக்கட்டும் அதுவெண் மையுமாகும். கடு0க

வெளுத்திடுங்கெவுரியைவாங்கி துருசி-வேகமென்ற சுன்னமுப்பு வின்சுன்னம், அழுத்திடவகைக்குக்கழஞ்சி–அந்த–அம்பிகைநாதவிந்த துசலம்விட்டு, குளிர்த்தியாய்குழைத்ததின்மேல்காண்–கொஞ்சங்கொஞ் சமாய்பூசிரவிதன்முகத்தில்,வளர்த்தியேகாய்ந்தபின்கொண்டு–பின்பு-மல ப்புளியிருபலமாதுநீர் விட்டே. தன

(இ-ள்.) அந்த வெளுத்த கௌரியைவாங்கி துருசி சுண்ணம், முப் புசுண்ணம் வகைக்கு ஒரு கழஞ்சு நாதவிந்து சலம்விட்டு குழைத்து கொஞ்சம் கொஞ்சமாய்ப் பூசிவெயிலில் உலர்த்தி பின்பு மலர்தளி இர ண்டுபலத்தில் நீர்விட்டு. எ—று. கடு0உ

மயனம்போலாட்டி வழித்து–கெவுரி-மலப்புளிசுன்னங் கவசங் கொடுத்து, வயணமதாய்-ரவிவைத்து–மகிழ்ந்-தாறினபின்புமடையன் சுன்னங்காண், நியமதாய்பலம்ரெண்டரைகொண்டினி நின்ற அமுரியி லுப்புமங்கிடைகாண், துயரில்லாமலி ரெண்டுஞ்சேர்த்து–சட்டிச்-சுத்த மாய்கொண்டின்னீரில்பாதி. தன

(இ-ள்.) மைபோலரைத்து கௌரிக்கு வசித்து வெயிலில்வைத்து அதுஆறினபின் துருசிசுண்ணம். இரண்டரைப்பலமும் அமுரியின் இர ண்டரைப்பலமும், சேர்த்து அதில்பாதிகிழிட்டு. எ—று. கடு0௩

பாதியதிலிட்டுகெவுரி-நன்றாய்-பாச்சியேபின்னந்தபாதியுமிட்டு, ஆதியாயத்தியேயத்தி-அதின்-மேலொருசட்டியடக்கமாய்மூடி, நீதியாய்சந்துமண்சீலை-கிலை-நிற்பந்தமாகவுநேராய்முடித்து, தோதியடுப்பின்மேலேற்றி-கம-லாக்கினியாகவுஞ்சாமந்தீமாறு. தன

(இ-ள்.) அதின்மேல் கௌரியைவைத்து மேலும் பாதிசுண்ணம் போட்டு மேல்சட்டி மூடிமண்சீலை செய்து அடுப்பிலேற்றி கமலாக்கினியாக. எ-று. ௧௫௦௪

மாறுமலும்வன்னிமூட்டி - அது-மாற்றித்தீயாறினபின்னெடுத்தே தான், பாராய்கெவுரிசுன்னத்தை-சந்திரன்-பளிங்குநிறமதுக்கதிதமாகும், சீராய்செம்புபதினாறு-குகையி-விட்டுஉருக்குமுகம் தனில்குன்றி, நேராய்ப்பாச்சிவிடும்போது - கெவுரி - நிகரில்லாதசெம்பொன்னி துபத்துமாற்றே. தன

(இ-ள்.) வன்னிமூட்டிதீயாறின பின்னெடுத்து கௌரிசுண்ணத்தைசெப்புபதினாறுபாகம் உருக்கு கௌரிசுண்ணத்தில் ஒருகுன்றிகொடுத்தால் பத்துமாற்றுள்ள பொன்னும். எ-று. ௧௫௦௫

ரசிதம்பத்துக்கொன்றுநாட்டுகுடவன்-நடப்பு இருபதுக்கொன்றியபத்தாம், விசித்தமிந்தகெவுரியாட்டு-வேதை-விஸ்தாரமென்றால் விளங்கவொண்ணாது, பசியொருநாளிலுமில்லை-சென்மப் பாதகஞ்செய்திடுவோர்க்கென்னவாய்க்கும், நிசுத்தமசுத்தமறிந்து-பற்பம்-நேராய்பாடுபட்டுநேரறிந்தோரே. தன

(இ-ள்.) வெள்ளி 10-க்கு-1-ம், பித்தளை 21-க்கு-1-ம், கொடுத்தால் நல்ல வரணமானபொன்னும் பாவஞ்செய்தவர்களுக்கு இது கிட்டாது. எ-று. ௧௫௦௬

நவலோகநவரத்னநீரு-தாத- விந்துநீர்விட்டுக்குழைத்துக் கழஞ்சு இவைதான்பற்பங்களும்நீறும் - பின்னு -மிரும்புரசிதமுந்தங்கமுநீறும், அயச்சத்துகளெல்லாநீறும்-கரு-வங்கம்வெள்வங்கமுங் குடவனுநீறும் சவமாகிலுமெழுந்தோடும்-சத-கோடிசரக்குங்காண்தவளமாமாண்டே.

(இ-ள்.) நவலோகம், நவரத்தினம் இவைகட்கும் அவ்வாறே செய்தால் அவைகளும் நீறும், சர்வலோகங்களும் நீறும், இவைகளால் சலமும் பிழைக்கும். எ-று. ௧௫௦௭

சத்திவிந்து நாதத்தாட்டு-சித்தர் – சமத்தெல்லாங் காரசாரத்தினாட்டு, வெற்றியெய்தும் வேதவாக்கியம்-வீர சாம்புவமூர்த்திகாண்வெட்டியானுண்டே, சித்தியெய்துஞ்செயமாகும்- தச-தீக்ஷைபெற்று மூலந்தெளிந்திடுவோர்கள் முத்தியெய்துங் கெவுரிசுன்னம்-பற்ப-முடிந்தது ஆண்டையேமுப்பூவாலாச்சே. தன

(இ-ள்.) சித்தர்களுடையசாமர்த்தியமெல்லாம்காரசாரங்களுடைய ஆட்டமாம் தசதீட்சைபெற்று தெளிந்தவர்கள் மோட்சமடையும்கௌரி சுண்ண பற்பம் முடிந்தது. எ-று. கடு0அ

வேறு-விருத்தம்.

வேலியெனும் பருத்தியின் வேரஸ்வகெந்தி கெருடனுமேமிளகுஞ் சுக்கும், காலியென்ற சீரகமுங் கார்க்கோலந்திப்பிலியுங்கடுகுவோமம், வால்மிளகு பரங்கியுடன் வகைவகையுமினஞ்சரி தான்சமனாய்க்கொண்டு, சூலியபிராமிபதம் பணிந்துபலமிடை குறைவாய்த் தூக்குவாயே,

(இ-ள்.) உத்தாமணிவேர், அமுக்கனாங்கிழங்கு, கருடன்கிழங்கு, மிளகு, சுக்கு, சீரகம், கார்போகரிசி, திப்பிலி, கடுகு, ஓமம், வால்மிளகு, பறங்கிப்படை, இவைகளைச் சமமாய் எடுத்து. எ-று. கடு09

சூரணமாச்செய்துவடிக் கட்டியதில்பசுங்கிருதந் தேனுங்கூட்டி காரணமாய்பிசைந்துரவி முகம்படவுமூன்றுநாள்கருதிமேலும், வாரணமாம் கழஞ்சியதின் பிரமாணம் லேகியத்தில் வசனிகுன்றி, சாரணையாய் கெவுரிபற்பங் காலையொடு மாலையுமே சாற்றுவீரே.

(இ-ள்.) இவைகளைச் சூரணித்து தேன், பசுநெய் இவைகளைச் சேர்த்துப் பிசைந்து சூரியனில் 3-நாள் வைத்து கழஞ்சுபிரமாணம் லேகியத்தில் ஒரு குன்றியளவு கௌரிபற்பம் வைத்து இருவேளையுஞ் சாப்பிடவேண்டும். எ-று. கடு0க

கொச்சகம்.

சீராய்செழுங்கெவுரி சேர்த்துவுண்ணலேகியத்தில்
தீராயரைமண்டலஞ் செய்கைநிலையானபின்
பாராய்பரங்கியொடு பல்லறணைநாவறணை
மாறிவிடுநோய்பிணிகள் மண்டையிடிபோமதுவே.

(இ-ள்.) மேற்படி லேகியத்தில் கௌரியைச்சேர்த்து அரைமண்டலம் தின்றால் பறங்கிக்குஷ்டம், பல்லரணை, நாவரணை, மண்டை இடி இவைகள் நீங்கும். எ-று. கடுகக

மண்டையிடிகண்வலியு மார்வலிகைகால்குடைச்சல்
குண்டிவலிகுன்மமெட்டுங் குடல்வாதமேகிடுங்காண்
அண்டையிடிவாழையரை யாப்புசிலையோடுபுண்கள்
கண்டமணிமாலையொடு கர்ணிகம்விட்டேகிடுமே.

(இ-ள்.) கண்வலி, மார்வலி, கைகால், குடைச்சல், குண்டிவலி, எட்டுகுன்மம், குடல்வாதம், தொடைவாழை, அரையாப்பு, புண்கள், கண்டமாலை, கரணிகம் இவைகள் விட்டுப்போகும். எ-று. கடுகஉ

கலித்துறை.

விட்டேகுநோய்கள் கோடானகோடி வினைப்பயனும்
கேட்டேகடல்புக்கி சடலம்விட்டேகுங் கெவுரியினல்
கிட்டாதுசன்னி சுரமேழுதோஷங் கிறுகிறுப்பு
தொட்டாலும்பற்பம் விட்டேகுமென்று சொல்கின்றேனே.

(இ-ள்.) கவுரிப் பாஷாணத்தினல் விட்டோடுகின்ற நோய்கள் அநேகங்களால் வினைகளும்கெட்டுக் கடலிலொளிக்கும், அந்தப்பற்பத்தைத் தொட்டாலும் சந்நிசுரம், ஏழுவகைத் தோஷம், இவைகிட்டாமல் விட்டோடுமென்று சொல்லுகின்றேன். எ-று. கறுகஙு

மதுராஜமேகம் வரும்புண்கள்வாய்வு வாதபித்தங்
கெதியில்லையென்று கர்மாந்தரநோய்கள் கிடுகிடுத்து
மதிசந்திரசோதி வாருதிபான மதினளவால்
சதிசெய்யுங்கால னெமனென்றஅஸ்திரந் தலைப்படுமே.

(இ-ள்.) மதுமேகம், புண்கள், வாயு, வாதபித்தம், கர்மநோய்கள், இவைகளெல்லாம் இந்தப்பற்பத்தை எமனென்றெண்ணி அந்தரத்திலோடும். எ-று. கறுகச

வெண்பா.

இஞ்சிசுரசத்தி லிடுங்குன்றிபற்பமது
அஞ்சிப்பயந்தோடு மாறுசன்னி—இஞ்சி
பித்தசுரந்தேனிலிடும் பேசாமலோடிவிடும்
சத்தேழுதோஷமும்போந் தான்.

(இ-ள்.) இப்பற்பங் குன்றியெடையை இஞ்சிசுரத்தில் கொடுத்தால் மாறு சந்நி, பித்தசுரம், ஏழுதோஷம் இவைகள் போம். எ-று. ()

பளிங்குபாஷாண பற்பம்-தரு.

பளிங்குபாஷாண பற்பமென்றுண்டையே
பார்க்கவுஞ் சொர்ணபற்பம்.

(இ-ள்.) பளிங்கு பாஷாணபற்பம் இதுவாகும் ஆனல் இதுபார்ப்பதற்குச் சொர்ணபற்பம் போலாகும். எ-று. கறுகசு

விளங்கலாகும்வெள்ளை வெண்மதிசந்திரன், கல்மசங்களில்லாக் கண்பார்த்தொருபலம், துலங்குந்துய்யநிற சுந்தரமாகிடுங், களங்கமாரும்வெள்ளைப் பாஷாணங்கட்டுமே. பளி

(இ-ள்.) களங்கமில்லாச் சந்திரனைப்போல் வெண்மையாகிய வெள்ளைப் பாஷாணம் ஒரு பலமாகும் இதுதான் கட்டக்கூடிய பாஷாணமாம். எ-று. கறுகஎ

கருவில்மூலப்புளி கண்டதுமோரிடை, சுருபசாரநீர் தூக்கிடுநாளிடை, புருவமாய்கம்பி உப்புவெங்காரமும், புரசனுப்பு உருவியுப் பாண்டையே. பளி

(இ-ள்.) மூலப்புளியாகிய பூநீறு ஒருபலமும், சொரூபசாரமென் கிற பனிநீர் நால்பலமும், கம்பியுப்பு, வெங்காரம், முருக்கனுப்பு, உரு வியுப்பு இவைகளும். எ-று.

கடுகஎ

பூணவணங்கிப் புகழிந்து உப்பது, மீனமிதுசரிபாகஞ்சமனதும், தானேமூலப்புளி நீருறவாக்கியே, சாருமூன்று தண்ணீர்போலாகிடும்.

(இ-ள்.) பூணவணங்கியாகியகுப்பை மேனியுப்பு, இந்துப்பு, இவை களையும் ஒவ்வொருபலமெடுத்து முன்சொன்ன நீரிலுவாக்கி மூன்று நாள் வைத்தால் எல்லாந்தண்ணீராம்.

பளி

தேனேசெயனீரினில் சேருமுப்பூவதின், மானேகழஞ்சிடையதி லிட்டுத்தாக்கியே, காணேஅயச்சட்டி தன்னில்பாஷாணமும், யானும் வைத்துச் செயநீர்சுருக்கானதே.

பளி

(இ-ள்.) பெண்ணே! ஜெயநீராகிய மேற்சொன்னநீரில் கழஞ்செ டை-முப்பூசேர்த்து இரும்புசட்டியில் பாஷாணக்கட்டியை வைத்து அந்தஜெய நீரை சுருக்குக்கொடு. எ-று.

கடுகசு

ஏற்றுநாலு மிடைவிடாச்சாமமும், போற்றிமூலப் புளியொருகன் பலம், சாற்றமோவிந்து நாதனீராட்டிப்பின், ஏற்றவங்கவசமினந்தெரி யாமலும்.

பளி

(இ-ள்.) இந்தப்படி நான்குசாமங் கொடுத்துபூநீறுவேறொருபலம் எடுத்து முன்ஜெய நீராலரைத்து அந்தப் பாஷாணக் கட்டிக்குத் தெரி யாதபடி கவசஞ்செய்து. எ-று.

கடு௨௦

காற்றுவிமுகங் காயவைத்தானபின், மாற்றுமுப்பின் வகை வகைக்கோர்பலம், வேற்றிடாவெள் ளெருக்கன்பால்விட்டது, பார்த்து ஆட்டிப் பாஷாணத்தின்மேலுமே.

பளி

(இ-ள்.) காற்றுவாட்டமாய் வெயிலிலரைத்து சொல்லப்படும் உப்பில் ஒவ்வொன்றில் ஒவ்வொருபலம் எடுத்து வெள்ளெருக்கன்பால் விட்ட ரைத்துப் பாஷாணத்திற்குமேல். எ-று.

கடு௨௧

அட்டியில்லாம லதுகவசங்கன, மருணகாந்தியது முகம்விசிட, கட்டிவைத்துக் கனரவிகாய்ந்தபின், கவசமேழுமண் சீலையதுசெய்தே.

(இ-ள்.) யாதொரு தடையுமில்லாமல் கவசஞ்செய்து வெயிலினு லர்த்தி ஏழுசீலைமண்செய்து. எ-று.

கடு௨௨

நெட்டிடுமேபுடஞ் சோடசமாவது, கெட்டியதாய்சுன்னங் கீர்த்தி யதாகுமால், சொட்டுப்போடுஞ்சுன்னத்தினல் வேதைகாண், வெட்டி டுமேவெள் வங்கமும்வெள்ளி.

பளி

(இ-ள்.) பதினறுவருட்டியில்புடம் போடக்கெட்டியாய்ச் சுண்ண மாகும் அச்சுண்ணத்தினல் வெகுவேதைகள் கைகூடும், வெள்வங்கத் தையும் வெள்ளிடையும் வெட்டும். எ-று. ௧௫௨௩

வெள்வங்கமிரு சேரயச்சட்டியில், கண்விட்டாட்டக் காலாக்கினி தீயினல், பண்பற்றேசல நீரதுபாகமாய், பாஷாணசுன்னம் பணவிடை தாக்குமே. பளி

(இ-ள்.) இரண்டுவேர் வெள்வங்கத்தை இரும்புச்சட்டியிலிட்டு அடுப்பேற்றி அதுநன்றாயுருகி கண்விட்டாடிற் குறைகிறபாகத்தில் இந் தப்பாஷண சுண்ணம் ஒருபணவெடை எடுத்து அதில்போடு. எ-று. ()

எண்விதப்புகை யெட்டுமேகட்டுங், கண்விதப்பத மாகக்கருதினல், விண்ணுமண்ணுமிதுக்கெதிரில்லைகாண், நண்ணுந்தீது வராதுகாணுண் டையே. பளி

(இ-ள்.) உடனே மிகுந்த புகைகிளம்பிப் பின் பதமானவுடனே புகையடங்கிப்பற்பமாகும். எ-று. ௧௫௨௫

சுத்தபற்பஞ்சுக சன்னிதாந்தகரீகஞ், சூலைபேதிசுரதோஷம்சீர ணம். உற்றநோய்களின் வாய்வுடகிராணியும், உள்மூலமாவதுடல்மூல மெட்டதும். பளி

(இ-ள்.) இந்தச் சுத்தமானபற்பமானது சுகசந்நி தாந்திரிகசந்நி சூலை, பேதி, சுரம், தோஷம், அஜீரணம் வாயுகிராணி நவமூலமுதலிய நோய்களும். ௧௫௨௬

வித்தில்மேகம் விப்புருதிகட்டியும், வெக்கைபுண்கள் வெடிசூலை குஷ்டமும், சத்திவிக்கல்சயரோககாசமுங், தானேபறந்திடுஞ்சங்கைக ளில்லையே. பளி

(இ-ள்.) வித்தில் மூளைத்தமேகம், விப்புருதி, கட்டிகள், வெக் கைப்புண்கள், வெடிசூலை, குஷ்டம், சத்தி, விக்கல், க்ஷயம் காசம், இவைகள் தாமே போய்விடும். எ-று. ௧௫௨௭

பற்பங்குன்றிபஞ்ச தாரைக்கிருதந்தனில், பாகமதாகவும் பாச்சுங் காலையாலை, சகற்பநோயோடி நெதிகெட்டுபுக்கிடுங், கிலேசமில்லையரை மண்டலமுண்பீரால். பளி

(இ-ள்.) ஒரு குன்றியெடைப் பற்பத்தைப்பஞ்சதாரைகிருதத்தில் வைத்து அரைமண்டலம் தின்றால் கர்ப்பநோயானது கதியில்லாமலோ டிவிடும். எ-று. ௧௫௨௮

அற்பநோய்தனக் காவின்பாலன்னமும், ஆகுஞ்சருக்கரையந்த விதிப்படி சற்பவிஷங்கடித்தாலு மேறாதுகாண், காரசாரசவு காரமிதான் டையே. பளி

(இ-ள்.) அற்பநோய்களுக்கெல்லாம் பாலுஞ்சோறுஞ் சர்க்கரையுமாகும் இந்தமருந்தைத்தின்றால் சர்ப்பந்தீண்டினாலும் ஏறாது ஏனென்றால் இதுகாரசார சவர்க்காரமாகையால். எ-று. ௧௫௨௯

இந்தபற்பமீரேழுலோகத்திலும், சங்கைகாண்பதரிதரிதாகையால், விந்தைபார்விந்து நாதக்கருவியால், வந்தநோய்கள் வாராது செடத்திலும்.
பனி

(இ-ள்.) இந்தபற்பமானது பதினான்குலகங்களிலும் காண்பதரிது ஆகையால விந்துநாதங்களாலுண்டான நோய்கள் இந்தப்பற்பத்தால் வாரா. எ-று.
௧௫௩0

மந்தமும்வயிறு முப்பசமேப்பமுங், கொந்திடுங்குலைநோய்கள் மறந்திடும், அந்தமாகு மருணனெளிவுபோல், அந்தபற்பமெவர்செய்துண் பார்களோ.
பனி

(இ-ள்.) மந்தம், வயிறுப்பிசம் ஏப்பம், குலைநோய், இவைகள் பறந்திடும் ஆனல் இதை எவர்செய்து உண்பார்களோ? அறியேன் எ-று.

வெள்ளைப்பாஷாண மிதுகற்றறிந்திடில், வேதைகோடிவெள்ளீயம் ரசிதமாங், கொள்ளைகொள்ளைகோடானகோடிவினை, கூறறிந்து கொடுத்திடநோய்கள்போம்.
பனி

(இ-ள்.) வெள்ளைப்பாஷாணவித்தைபாகியஇதைகற்று இருந்தால் அநேகவேதைகள் செய்யலாம், வெள்ளீயம வெள்ளியாகும், நோய்களின்குணகுணங்களையறிந்து கொடுத்தால் அநேகநோய்கள்போகும். என்றவாறு.
௧௫௩௨

விள்ளயில்ல வேதாந்திகள்சூதுகாண், விந்துநாதம்வெளிமறைத்தேகினர், கள்ளமில்லைக் கருதியநோய்களில், காட்டினர்கருகாண்பதருமையே.
பனி

(இ-ள்.) வேதாந்திகள் விந்துநாதங்களைச்சூது செய்து மறைத்துச்சென்றார்கள் சொல்லப்பட்டநோய்களின் கருவை அவர்களால் சொல்லப்பட்ட நூல்களில் கண்டுபிடிப்பது அருமையாகும், ஆகையால் நாம்அப்படிசொல்லவில்லை.
௧௫௩௩

பற்பங்கோடிபலபலநூல்களில், பாடினர்கள்பழம்பொருளாகவும் கற்பங்கோடி கருவறியாமலும், காட்டினர்கள்கனத்தின்வேதைகாண்.

(இ-ள்.) பலபல நூல்களில் அநேகவகையான பற்பங்களையும் கனகவேதையையும், அநேகவிதமான கற்பங்களையும் கருதெரியாதபடி சொன்னார்கள். எ-று.
௧௫௩௪

சற்பஞ்சாரை சவுக்காரமுப்பூவினல், தப்பிதங்களொரு சங்கை வராதிடில், அற்பசண்டாளருக் காகுமாகாதிடில், ஆண்டேஞான வெட்டி ஆயிரத்தைந்நூறே.
பனி

(இ-ள்.) வெண்சாரை சவர்க்காரம் இவைகள் முப்பூவினல் கைகூட வேண்டும், ஆனல் தப்பிதம் ஒன்றும் வாராது, இந்த ஞானவெட்டி ஆயிரத்தைந்நூற்றிலுள்ளபாகம் சண்டாளருக்குக் கைகூடாது. என்றவாறு. ௧௫௬௫

விருத்தம்.

இந்தவிதங்குருமுனிவ ரெனக்குச்சொன்ன ஏழ்மையடியேனுரைத்த இயல்பைக்காண்போர்அந்தரங்கமானதெல்லாம் வெளியாய்ப்பாடி அப்புவியிலனைவருக்குமாசானுக, வந்தவிதிகாணறியஞானவெட்டி வசனித்தவாறுகளின்வரலாறெல்லாம், பைந்தமிழையாய்ந்துவிந்துநாதகற்பம் பாடுபட்டோர்க்கெய்தும்பரகெதிதானுண்டே.

(இ-ள்.) இவைகளையெல்லாம் எனக்குக் குருமுனிவர் சொன்னர் அவைகளை ஞானவெட்டி என்கிறபேரினல் வெளியாகச் சொன்னேன் ஆனல் அதில்சொல்லபட்டவைகள் நாதவிந்துக்களில் பாடுபட்டவர்களுக்கேகைகூடும். எ-று. ௧௫௬௬

கனவதுபோற் கண்டதொரு காட்சியெல்லாங் கற்பத்தாலறிந்தெந்தன்கருத்தினுலும், இனம்பிறித்துஎந்தனுக் குபதேசத்தால் எடுத்துரைத்தேமினிவர்ம மில்லாதாலும், அனைவருக்கு மாயுரைத்த பொருள்தானல்ல மகத்துவத்தா லானதல்லமர்மமல்ல, தனமிதுகாணபொக்கிஷத்தைவெளிவிட்டாலுந் தலைதெறித்து அண்டஇடி சாருந்தானே.

(இ-ள்.) கனவிற்கண்டது போல் கண்டபொருள்களையெல்லாம் கற்பத்தாலும், கருத்தினுலும் எடுத்துச்சொன்னேம் இதுஎல்லார்க்குஞ் சொல்லப்பட்டதல்ல மர்மமல்ல இந்தப் பொக்கிஷத்தைவெளிவிட்டால் இடி விழும். எ-று. ௧௫௬௭

கொச்சகம்.

பூர்த்திருக்குநாதவிந்து பூநீருவானதுகாண்
மாற்றுஇதுபத்தாண்டில் மலப்புளிபூநீரதுவாம்
வேற்றுமைகளில்லையினி மெய்பொய்யறிந்தேமருவ
காற்றுமழைபோலிருந்த காரணத்தைக்கண்டிலரே.

(இ-ள்.) நாதவிந்துக்களேபூத்திருக்கும் பூநீருகும், இதுவே பத்துவருஷத்தில் மலப்புளியாம், இதில்யாதொருவித்தியாசமுமில்லை, உண்மையென்றும் பொய்யென்றும் காற்றுமழைபோலிருந்த காரணத்தைக் கண்டறியவேண்டும். ௧௫௬அ

வஞ்சகமில்லாநூலாய்ந்து வைத்திருப்போர்க்கென்னபலன்
சஞ்சலம்வாராதுவினை சாஸ்திரம்பொய்வாராது
பஞ்சம்வருகாதவற்கு பதினெண்பேர்காயமும்போம்
கஞ்சமலரம்பிகையின் கருணைபெற்றுவாழ்பவரே.

(இ-ள்.) வஞ்சகமில்லாமல் நூலையாய்ந்து வைத்திருப்போர்க்கு என்னபலன் சஞ்சலம்வாராது, சாஸ்திரம் பொய்யாது, இவையெல்லாம் அம்பிகைப் பெண்ணின் திருவருளாலாம் அவளுடைய திருவருளினாலேயே வாழ்வார். எ-று. ௧௫௩௯

கலித்துறை.

இந் நூலையாய்ந்து இகழ்ச்சிப்படுவித்த ஈனருக்கு
தன்னாலனேகஞ் சதகோடிநோய்களில் சஞ்சலமாய்
கன்னன்குறடு கனல்கொண்டுவீசிடுங் காயத்திலும்
சொன்னேன்சொரிகுஷ்டம் வெறிகொண்டுபாய்ந்து சொக்குவரே.

(இ-ள்.) இந்தநூல் நன்றாயாராய்ந்து இகழ்ச்சிசெய்த ஈனர்கள் அநேகநோய்கள் கொண்டவர்களாய் சொரி, குஷ்டம் முதலியவற்றால் பீடிக்கப்படுவார். ௧௫௪0

கற்பத்தையுண்டு கணக்குபத்தாண்டு கழித்தபின்பு
அற்பமிதுவென் றறிந்திட்டதாலல்ல ஆச்சுதென்று
உற்பகஞான ஜெகஜோதியாட்ட முடலதனில்
முற்பகஞ்செய்த பூசாபலயோகமுன் னாள்தவமே.

(இ-ள்.) கற்பமுண்டு பத்துவருஷம் கடந்தபின் உலகவாஞ்சை யாவும் அற்பமென்றுணர்ந்தால் பூஜாபலயோகமானது முன்னாளில் செய்ததவப்பயனால் கைகூடும். எ-று. ௧௫௪௧

வெண்பா.

எஞ்செயலாலெய்து மிவ்விதியுமல்ல
தஞ்செயலாலுண்டோ தந்தைவிதி எஞ்செயலோ
முன்னாளமைத்த மொழிதவறாதன்னாள்
இன்னாளமைப்பதுவு மில்.

(இ-ள்.) இவ்விதியானது எம்முடைய செய்கைகளால்வந்ததல்ல, இதுதந்தையின் விதியாகும், இவை எல்லாம்பூர்வத்திலமைத்ததே யொழியஇன்னாளில அமைக்கப்பட்டதல்ல. எ-று. ௧௫௪௨

சயிலமிரா துதகந் தயிலமது லேகியமும்
அயிலமதிலுதித்த அஞ்சும்—சயிலமது
அஞ்சுருவுமவித்ததனி லமைத்தபடியாமாகில்
சஞ்சலங்காணில்லைத் தவிர்.

(இ-ள்.) சயிலம், கிரதம், தயிலம், லேகியம் ஆகிய வேட்டைகதும்வித்திலமைத்தபடியாகுமேயொழிய சஞ்சலங்களில்லை. எ-று. ()

சாதிலிங்கபற்பம்—தரு.

சாதிலிங்கபற்பங்காண் பஞ்சபூதத்தில்
சோதியானந்தப்பிரகாசங்காண்,

(இ-ள்.) இது சாதிலிங்கப்பற்பமாகும், ஆனால் அதுசோதியானந்தப் பிரகாசமுடைய தாம். எ-று. ௧௫௪௪

ஆதியிலெனக்குள்சாதி வாதிகளனந்தங்கூடி, அந்தரங்கமாப்புதைத் தயிந்த லிங்கவித்தையைநான், அருள்அம்பிகையாலதிகமிதை ஆயிரத்தைந்நூறில், பிரசங்கமறிந்தம்புவியோர்களுக்காக கெம்பீரஉத்தண்ட வாலே, சம்பிரமதாகவிளங்க செம்புலிங்கேசர்பதமே, ஆயிரத்தெட்டிதழில்கமலமலர் பாயிரத்தோடணைத்தும்தமிழ்பொழிய, அகிலமுழுதுஞ் செழித்தவனி யெங்குந்தழைக்க, அலைகடலுமீரேழும் பலகலைகளும்பாய அறிவித்தேன்கற்பம், நாதவிந்தினால்துரியததில்நின்று ஆண்டைஞ்சில் மேதினியோர்களும், ரசவேதைகளுழைத்து லிங்கம்வாதிகளடிபட்டுப் போய், மாண்டதுமிங்கிலிகத்தால் வறுமைகள்சூழ்ந்து, மாளிகைவிடுந் தனங்களுமிழந்து நாய்களதுபோல். சாதி

(இ-ள்.) பூர்வத்தில் எங்களுக்குள் சாதிவாதிகள் அநேகர்கூடி மறைப்பாய் வைத்திருந்த இந்தலிங்க வித்தையை நான் உலகத்தார்களறியும்பொருட்டு அம்பிகைப் பெண்ணையும், சம்புலிங்கேஸ்வரரையும் போற்றி அகஸ்திய முனிவருடைய கிருபையாலும் நாதவிந்தினாலும், சொல்லுவேன், ஆனால் இந்த லிங்கத்தால் வறுமையுண்டாகி, மாளிகை, வீடு, தனங்கள் இவைகளை யிழந்து நாய்கள்போல் சுழன்று. எ-று. ()

காடுகள்தோறுந்திரிந்து பேடியாய்கண்கெட்டுழன்று, ஊதியும்பதியிழந்து வீதியிலுழன்று, வேதைபொய்யென்று வெகுவிதமாய்சேதிகளாய்ந்து, உலகுதனில்என்னுக்குள் விசிதரத்னமிருந்துலவுவதுங், காணாதிப்படியானுமே சுட்டுயிழந்தேன், பொக்கிஷமெல்லாம் யினியென்ன காணும், இவ்வுடலினில் கருநெல்லிதோணும், எவ்விதமாகஇரவிகதி சூரியனொளிவைக்காருமறைத்த, யியல்புஎன்னுக்கு ளிருளுருவைக்காணாட்டாமேக மிருப்பதுங்கண்டேன், கற்பத்தையுண்டு சிறப்பதாய் விண்டேன், காயந்தனிலும் அம்பிகைவாலாம்பிகைப் பெண்ணமிர்தமூட்டியெனக்கு, அருவுருவையுங்காட்டி சுரூபசித்தியளித்து அழைத்து மேன்மேலும், அட்சயப் பாத்திரங்கொடுத்துப் பொன்மேரும் சுழிணையின்முனை. சாதி

(இ-ள்.) காடுகளெல்லாந் திரிந்துபேடியாய் கண்கெட்டுத் திரிந்து லாபங்களையும், பதியையுமிழந்து வேதைபொய்யென்று வெகுவிதமான சேதிகளையாராய்ந்து யானுமே சுட்டு இழந்தேன் என்னுடைய பொக்கிஷங்களை யெல்லாம், இனியென்னவென்றால் இந்தச்சரீரத்தில் கருநெல்லி தோன்றும், சந்திரசூரியர்கள் ஒளிவையும் என்னுள்கண்டேன கற்பத்தையுண்டு இருந்தேன், அம்பிகைப்பெண்ணானவள் எனக்கு நல்ல அமிர்தத்தையூட்டி சொரூபசித்தியைக் கொடுத்து வான்மேருவென்கிற சுழிமுனையில் நிறுத்தி. எ-று. கரிச

அம்பரவீதியில்வாசிபம் பரஞ்சுழன்றதுபோல், கும்பித்துயிடைபின்கலை ஸ்தம்பித்து எங்கெங்கும்பாய, அஸ்வங்களோடசவாரியது

விசுவாசிக்தாட, அண்டங்கள்பாய ஆதாரமாறுங்கடந்து சூதபானத்தையடர்ந்த, அகண்டமண்டலம்வேண்டி யுகசண்டலங்கள்தாண்டி, அரூபியாய்நின்றுசுரூபசித்தி, கருவியைவென்று அண்டவன்செயல், அனுக்கிரகபதவி பெற்றனந்தங்கோடிப்பிரகாசம், அதிதமதிபெருகியமிர்ததீபக்தைக்கண்டு - அர்சித்தப்பணிந்தேன்-மதிமலர் கொண்டனுதினமணிந்தேன்-சொற்கவாசதில் - அகிலுநுழைந்து ஞானவிதியைக் கடந்தப்பால்-அகில மீதினில்வந்த அதிசெயத்தையருள ஆண்டேநீர் கேளீர் பரிசவேதை-ஆகம்பத்தாண்டில்-நாதவிந்துநீர். சாதி

(இ-ள்.) அகாயவீதியில் வாசி பம்பரமானது சுழல்வதுபோல கும்பித்தா இவைகளையும், பிங்கலையும்ஸ்தம்பித்து எங்கெங்கும்பாய அஸ்வங்களெல்லாம் சவாரியோட ஆறாதாரங்களையுங் கடந்து அகண்டமண்டலம்வேண்டிய கமண்டலங்கள்தாண்டி ரூபமற்றவளாய் நின்று அநுக்கிரகப்தவிபெற்று அநந்தங்கோடி பிரகாசம் பெருகி அமிர்ததீபத்தைக்கண்டு அருச்சித்தப்பணிந்தேன், மதிமலர்கொண்டு தினமுமணிந்தேன், சொர்க்கவாசலில் நுழைந்து ஞானவிதியைக் கடந்து அப்பால் அதிசெயத்தையருள பரிசவேதை ஆரம்பஞ்செய்து நாதவித்துநீர். என்றவாறு. ௧௫௬௬

இங்கிதமாகவும்லிங்க மிதிலும்பலமெடுத்து மிகவுங்காரத்திலெட்டுமிடைகாண்பாண்டத்திலிட்டு-மிந்துநீர்சார-மிதமூன்றம்பத் - திடையுமேரெண்டு-மிதமாய்பதம்--இன்பமாய்கரைத்தில்லம் விதமாய் தெளியவைதது யிருக்கமூன்றுநாள்பின்பு சிறப்பாய்செயநீரைவாங்கி, இனியுரைப்பதுகேள் உருவியுப்பு இசைந்துணர்வீராய், நாற்பதுபலம் யிடரில்லாமலதனில்விடவும் விட்டுவுறைய, வெளியில்லாம லடக்குங்கனமாய் பாண்டஞ்சிருசாய், இடையொருபடிதான் லிங்கந்தனையு மளவாய் தோளாந்திரங்கயிறகொண்டு, தாக்கிடுஞ் சுருக்கேறவு மாக்கிடுங்கமலாக்கினை, தாக்கிடுங்கொஞ்சங் கொஞ்சநீர்வாங்கினல் சொன்னபடியா, மதிமலர்பொங்கும் நாதவிந்துநீர் அதிகம்விடாமல் வாலாம்பிகை. சாதி

(இ-ள்.) இங்கு நன்மையாகலிங்கம் ஒருபலம் எடுத்து வெங்காரம் எட்டெடை ஒருபாண்டத்தில் விட்டு பனிநீர் முப்பத்திரண்டெடை சேர்த்து நன்ருய்க் கரைத்து மூன்றுநாள் தெளியவைத்து ஜெயநீர் வாங்கி உருவி உப்புநாற்பதுபலம் ஒரு கனத்தசட்டியிலிட்டு லிங்கத்தை தோளாந்திரங்கட்டி அடுப்பேற்றி கமலாக்கினியா யெரித்து அதிகம் குறைச்சலில்லாமல் வாலாம்பிகையை போற்றி. எ-று. ௧௫௬௭

மறைத்தசூக்ஷமிதுகா ணுரைத்தமதிரவிதான், விரைத்தேன்ஞான வெட்டியில் பரத்தைத்துதித்துயிந்நூல், வேகம்பொல்லாது அதிகவாசந்தேகம் வெல்லாது, மாய்கையடைந்தோர் செய்வதுங்கடினம், பழு

வரும்பலியாதொழுது அம்பிகைபத மெளிதும்விதியிதுகாண் கெவனம் விடாதே, மனக்கவடு கவனம்படாதே சற்குருவினைல், தொட்டகுறை யிருந்தால் விட்டகுறைவருங்காண், தொடுத்தேன்கோடி தொந்தங்கள டுத்தேன், பனிரெண்டாண்டு சொன்னசொல்லரியார்சோமனீரெல்லாஞ், சுருக்கேறித்தொக்காந் தொக்காகிடும்பின், சாரம்பலம்வெங்காரஞ் சம னுகவும்பொடியாம், சாதிலிங்கத்தைவாங்கிச் சாரம்வெங்காரமிட்டு, தான்கிளறிடுமே சலமதாகுமே னிந்தவாறேயிரவிதனில். சாதி

(இ-ள்.) மறைத்த சூட்சமானது ரவிமதியின் செய்கைகளேயாம், இந்த ஞானவெட்டியின் வேகம்பொல்லாது, மாயாசம்பந்தப்பட்டு செய் வதுங்கடினம் இது அம்பிகைப்பாதம் எழுதும்விதியாகும், கெவனம் படாதே, இவைகளெல்லாம் பன்னிரண்டுவருஷம் சொன்னசொல்லறி யார், பனிநீரெல்லாம் சுருக்கேறிதொக்காடும் பின்சாரம் வெங்காரஞ் சமனுகவும் பொடியாட்டசெய்து சாதிலிங்கத்தை வாங்கி வெங்காரத் தையும் காரத்தையுமிட்டுக் கிளரிவெயிலில்வைக்க சலமாய்விடும். எ-று.

சாரநீர்களுஞ்சுண்டக் காரமாமொருதிங்களில், ஈரமுங்கசிந்தால் ரவியெடுத்துக்கதிர்முகத்தில், உலரவைத்திடுவாம் சுன்னமகிதம்உப்பிது காரம், புட்டியிலிட்டுசாதிலிங்கமது சாரணைசெய்யவும்வித்தை, ஒதினு ரென்குருவாசா னுளித்துச்சொல்லவில்லைகாண், ஒகோமாரணமாய் நவலோகங்கள் உவரசங்களுமாய்நவபாஷாணம், உப்பிதுநாலுமீரைந்து பற்பமதாகுஞ்சரக்கு, சொற்பமிதுவென்றெண்ணி அற்பமாகிலும்நினை க்காசுன்னமிதாகும், வெகுபதனம்யின்னஞ் சொல்லுவேன்காண்ஆண் டேகேளீர் அருள்லிங்கத்தின்பேரில், குருவண்டுடனேபூரம் அதிதவீரம் புழுகு உரமுந்தருசிசுன்னம், அருவகைசரக்கும் வகைக்குசமன், சரி யிடைகழஞ்சி வெள்ளைப்பாஷாணம். சாதி

(இ-ள்.) ஒருமாசத்திற்குள் சுரநீர்சுண்டினுல் சாரமாகும் பின் னர் கவுசிவந்தால் உலரவைப்பாய் இந்த உப்பைப் புட்டியிற்போட்டு சாதிலிங்கத்தைச் சாரணைசெய்யும் விதத்தைச் சொல்லவில்லை, இந்தஉப் பை அற்பமாக நினைக்கவேண்டாம் இதின்போக்கை இன்னுஞ் சொல் லுகிறேன் கேட்பாயாக தருசுமுன் முடித்த சுண்ணம், இந்த ஆறுசரக் குகளையும் ஒவ்வொன்று ஒன்றேகால் வராகனெடையாக எடுத்துவெள் ளைப் பாஷாணம். எ-று. ௧௫௪௯

அதனிலிருகழஞ் சுவிதமுங்கலுவத்திட்டு - அடைவாய் நாதநீர் விட்டுத்திடமாயிருகடிகை ஆட்டிபைபோலும் வழித்து ஒலைஅதுபதங் காலும் சொஞ்சடகொஞ்சமாய் ஊட்டிலிங்கத்திமேலு முலரக்கதிர் முகத்தில் வாட்டியடிக்கடி தான்வலுவாய் சுருககேர - வைத்துப்பின்

கவசம் அறுரெண்டாகில்-சித்தர்சொல்முறைகான்-மூலப்புளியின் சுன்
னம்வெண்காரம் தாரந்துருசானத்தில் வெள்ளைகான்-சுடராகியபேரண்
டமெடுமேவழலை யஞ்சு-மிடை கழஞ்சிரண்டு-சரிசமன் கொண்டெடுத்
துக்கல்லதனில்-நாதவிந்துநீர்-யிசைவாயாட்டி மயனம் வசமாய் முன்
போல்கவசம், யிரவிமுகந்தனிலுந்தி வியங்கனிதென்ற-மெடுத்திவைத்
தினிகாண், கரத்தின் வேகம்-விடுத்திடாமலுமேகாயக்காயவும். சாதி

(இ-ள்.) வெள்ளைப்பாஷாணம் இரண்டரைவராகனெடை கூடச்
சேர்த்துக்கல்வத்திலிட்டு நாதநீர்விட்டு நன்றாய்இரண்டு நாழிகைய
ரைத்து ஒலைக்கனமாகலிங்கத்திற்குப்பூசி சூரியனில்வைத்து நன்றாய்
உலர்ந்தபின், பூநீறு, வெங்காரம், அரிதாரம் துருசு வெள்ளைப்பாஷா
ணம் இவைகளைவகைக்கு இரண்டுவராகனெடை யெடுத்துக்கல்வத்தி
லிட்டு நாதவிந்து நீரினலரைத்து முன்போல்கவசஞ்செய்து சூரியனிலு
லர்த்தி எடுத்துவைத்துக் கொண்டால் அதுகாயவேகமதிமாகும்.எ-று.

திருப்பித்திருப்பிரவி முகத்தி லீரமும்வற்ற-குறிப்பதுவாய் மறு
பின்சிறப்பாய் மூன்றுங்கவசம்சாரம் வெங்காரந்துருசி வெள்ளைப்புளி
சுன்னநாலும்-சரிசமனுய்-கழஞ்சுவிதமிரண்டு கலுவந்தனிலட்க்கிகருவி
நாதவிந்துநீர் கலக்கயிருகடிகை-கருதியாட்டிடவு மயன்மீது-வருதலா
னதுகாண்-லிங்கம்தக்குக்-கவசமுன்போல பதமாயருண ஞெளிவுபட
கனதியாகாதிடினுமுலரவுலாவுங்காண்-கனரவிபடவுமுன்பின் திருப்பி-
காய்வுஞ்சத்தில்லா-வேற்றுமைவாரா-திருவுருவின்மலர்தனருள் விசித
கமலஞ் செழுங்தேன்பொழியுஞ் சுழிமுனையில் திருநடனம் - ஜெகச்
சோதியிந்நூல் சுகாதீதத்தின் பிரகாசவெளியில் கருணைஞான. சாதி

(இ-ள்.) திருப்பித்திருப்பி ஈரம்வற்றும்படிவெயிலில்காய்த்துஎடுத்
துக்கொண்டு அதற்கு மூன்றுவதுசெய்யவேண்டியகவசமாவது: நவாச்
சாரம்! வெங்காரம் துருசு, வெள்ளைப்பாஷாணம் பூநீறுசுண்ணம் இவை
களை ஒன்றேகால் வராகனெடை வீதமெடுத்துக் கல்வத்திலிட்டுநாத
விந்து நீராலரைத்துமயனம்போல்வழித்துலிங்கத்திற்குக்கவசஞ்செய்து
வெயிலில்முன்னும்பின்னுமாகத் திருப்பிதிருப்பிக்காயவைத்து சுழிமு
னையில் திருநடனஞ்செய்ய செழுந்தேனைவாழ்த்தி. எ-று. கநிருக

தீபத்தினிலெனது கியாபத்துடனும்வாசியோகத்தினிலிருந்தயாக
மப்படியேயூதி-தசதீட்சையாண்டு-மோக்ஷபதவிதெரிசனம் பெற்றேன்
சுருதிமுடி சுகஜீவனமெனக்குத் தொழிலனந்தபளித்த சூக்ஷமறிந்து
இந்தசுகத்தைச்சொல்லுவேன்காணுந் திதிபெற்றலிங்கம் சுன்னபூபதி
அமுரியுப்பதுசான் முன்டமுடித்த அதுவுப்பதனில் பத்துவிதமஞ்சது
பலங்கொண் டடிகனத்தசட்டியில்குடி எமில்லாதபடி அதனிலிட்டதன்

மேல் கவசம்வைத்து விதித்தஞ்சுபலமும் பின்புமேலிட்டு தனதுமேலு மேன்மேலுஞ் சருவாமலுமேல்மூடி-வெனதுசந்துதெரியாகனதியேழு மண்சீலை-தெரியாமல்செய்து-விவேகத்துடன் அறியாதெவர்க்கும்-அடுப் பிறேற்றி. சாதி

(இ-ள்.) நான்என்னுடைய ஞாபகத்தை சுழிமுனைத் தீபத்தில் வைத்து வாசியோகத்திலிருந்து ஊதிமோட்சஉதவியின்தெரிசனத்தைப் பெற்று இந்தச் சுகத்தைசொல்லுவேன், இனிலிங்கம், சுண்ணம், அமு ரியுப்பு இவைகளை அடிகனத்தசட்டியில் போட்டு முன்கவசஞ்செய்த லிங்கத்தை அதன்மேலிட்டு மேல்சட்டிமூடி சந்துதெரியாமல் ஏழுமண் சீலைசெய்து யாவர்க்குந் தெரியாமல் அடுப்பிலேற்றி. எ-று. ௧௫௱௭௨

அருள்வந்தெய்தும் வன்னியதன் மிகச்சோராமல் — விதியாய்கம லாக்கினை விளங்குக்கடிகையேழு - விடம்விட்டுப்பிறியா - வொருநிலை கொண்-டனல்சுற்றிமுறியா.பதனமாக—எரித்து-ஆறவுமறுநா ளெடுத்து வைத்துமேகாலை—பிறித்துச் செய்கையின்படி பிசகாமலு மெடுக்க—சிவ சிவசம்போ—செம்புலிங்கேச-அரகரசம்போ—சற்குருநாதா அசத்தியருள் சித்திமகத்துவ சிவலிங்கந்-தவத்திலடியனுந்தன் — சபத்திமறவாமலும்-சாதிலிங்கந்தான்—அதிதசுன்ன-மதியந்தடங்காணும்-நாதவிந்திதால்-வீர செயபூபதிவேதைகளுக்குங்கெடி-சூரனெனுஞ் சவ்வீரந்துரைபூபதிக்கு பெட்டி-தாமபரவேதை-விஜைய மன்னால்—சாற்றவுமெளிதா சுகாதிசுக·

(இ-ள்.) திருவருள்விளங்குகின்ற அக்கினியதியபடாமல் கமலாக் கினியாக ஏழுநாழிகையெரித்துப்பின் அக்கினியைமாற்றி ஆறவிட்டு எடுத்துமறுநாள் காலையில்பிரித்துபார்க்க அகத்தியமுனிவர் முதலிய பெரியோர்களது கிருபையால் சாதிலிங்கமானது அதீதசுண்ணமாயிருக் கும், இங்ஙனமானது நாதவிந்தி நீர்களாம், இது வேதைகளுக்குக் கொடிய சூரன்போலாகும் தாம்பிரவேதையுமாகும், இதின்வெற்றியை என்னால் சொல்லமுடியாது. எ-று. ௧௫௱௭௩

விருத்தம்.

பிருதிவியப்புடனுந் தேயுவாய்வும் பலத்தஆகாசமொடு பஞ்சபூ தம், அறிவித்தேன் சாக்கிதகாலஞ்சுமாச்சு அகிலபுவனங்களினிர லார்தான்செய்வார், உருதிமனதொருமையினலோகோதீக்ஷை ஓராண்டு அமுரியுண்டு உடல்வேறானல், குறிபடுமென்னுண்டைதச தீக்ஷைபத் துங் குருவருளால் முடிந்ததனல் யோகவானே.

(இ-ள்.) நான் இப்படிபிருதிவி அப்பு, தேயு, வாயு, ஆகாசம் இந் தப்பஞ்ச பூதங்களையுஞ் சொன்னேன் இதையறிந்து செய்யவல்லவர் யாரென்ருல் ஒரு வருஷம், வரைக்கும் அமுரியுண்டு தசதீட்சையும் முடித்து போவானயின்கைகூடும். ௧௫௱௭௪

யோகமொருவருஷம்பனிரெண்டாண்டென்னில் உதகமதுயிறங் குமுடலழிவோயில்லை தேகமழியாதுயிர்காண்சடமேவச்சிரம் சித்தர் களிவனொருவன்தேவனச்சு, சாகாமலிருந்திடலாம் வினைதான் போச்சு சத்திசிவதீக்ஷையினால் சாக்காடில்லை ஆகமத்திலொளித்து வைத்த பொருள் தானுண்டே அகத்தியரால்யானறிந்து அருள்பெற்றேனே.

(இ-ள்.) பன்னிரண்டுவருஷங்கள் அமுரியுண்டால் சரீரமழிதலி ல்லை, சரீரம் வச்சிரமாகும் இவனும் சித்தர்களிலொருவனாகும், சாகாம லிருந்து வினைகள்போச்சு, சத்திசிவதீக்ஷையினால் மரணமில்லை, இது ஆகமத்திலொளித்து வைத்தபொருளாகும், அகத்தியரால் தெரிந்து கொண்டேன். எ-று. ௬௫௫

அறிவித்தேனீற்றினமுங் காரசாரம் அதினளவால்சரக்கு அறுபத் துநாலும், விரிந்திடுமே நவலோக நவரத்தினங்கள் வெண்ணீறுஞ்சுன்ன மொடுபற்பந்தானும், தெரியவுமே செந்தூரமனுபானங்கள்செய்தொழி லும்வேதையொடுதிறமாய்காணும், பரியாசமாயில கோர்பழியாமற்றுன் பதினெண்பேர்மறைத்த கற்பம்பகர்ந்திட்டேனே.

(இ-ள்.) காரசாரங்களின் போக்கு அறுபத்து நான்குசரக்குகளி ன்வித்தியாசம், நவலோகங்கள் நல்லரத்தினங்கள், சுண்ணம், பற்பம், செந்தூரம், இவைகட்கு அநுபானங்கள் கைபாகம், வேதை, இவை களை உலகத்தில் பழிக்காதபடி பதினெண்பேர்கள்மறைத்தகருவை யெ ல்லாம் நான் அறிவித்தேன். எ-று. ௬௫௬

சாம்புவனென்றேயெடுத்த பேர்தன்னாலுந் தந்தையெந்தன் பிம்ம சரஸ்வதியுந்தாய்தான், நாமெனுமேவிரித்துவிட்ட குறையா லெரதும் நாதவிந்துஉற்பகத்தால ஞானியானேன், வாமெனுமேவஸ்துவுண்டு யோகவானுய் மதிரவியின்பிரகாச ஒளியினாலுந், தேனெனுஞ்செங்கம லர்பூத்தவாசம் ஜெகமெல்லாம் பரிமளிக்கச் செய்தேனன்டே.

(இ-ள்.) சாம்புவனென்று எடுத்தபேரினால் பிரமதேவன் என்னு டையதந்தையாகும், சரஸ்வதியும் என்னுடையதாயாகும்விட்டகுறை யினல் நாதவிந்துக்கள்கைகூடும், அதனால் நான் ஞானியானேன், அங் ஙனமானபின்னர் வஸ்துவையுண்டு யோகியாய்மதிரவியின் ஒளியினா லும், செந்தாமரைமலரின்வாசனையானது உலகமெல்லாம் பரவும்படி செய்தேன். எ-று. ௬௫௭

பரியாசமாகவுமே பழிப்பார் நூலைப் பழித்ததனாலெதுவாய்க்கு ம்பலனேயில்லை, குறிப்பாகரும்பமுனிபாதம்போற்றி குருவருளால்குண் டலியேதொழுதேன்காணும், துரியதுரியாதீதமுங்காட்டி வாசிதுவா தசாந்தவெளிசுழினைகாட்டி, நெறியிசகாமூலமென்ற புளிசுன்னத்தால் நீற்றினமுங்கண்டறிந்து நிலைபெற்றேனே.

(இ-ள்.) நான் என்னுடைய குருவின் திருவருளால் கும்பமுனியின் திருவடிகளைப் போற்றி, குண்டலியைத்தொழுது, துரியம், துரியாதீதம் இவைகளைக்காட்டிவாசிமூலம்விந்துதுவாத சாந்தவெளியைக் காட்டி மூலப்புளியின் சுண்ணத்தினுல் நீற்றினங்களையும் கண்டறிந்துகொண்டேன். எ-று. கடுடுஅ

பலிதமாய்வான்குமரிலேகியத்தைப் பக்குவமாயானருள பாரில் மாண்பர், மெலிந்தசடம்வலுத்திடுங்காண் வினைதானில்லைமேதினியோர்க்காகவுமேவிளம்பலானேன், சலியாதே நீமனதேகெர்வம்வேண்டாம் சாஸ்திரத்தைப் பொய்யென்றுந்தள்ளவேண்டாம், கலியேது கற்பமுண்டால்காயஞ்சித்தி கனகமுனதுள்ளமதில்காணலாமே.

(இ-ள்.) வான்குமரி லேகியத்தையான் பலிக்கும்படி சொல்ல அதைச்செய்து அநுபவித்தால் மெலிந்ததேகமானது வலிவடையும் யாதொருவினையுமணுகாது உலகத்தார்க்காகவே சொல்லவந்தேன்மனஞ்சலியாதை, கர்வம்வேண்டாம் சாஸ்திரத்தைப் பொய்யென்றுதள்ளவேண்டாம், கற்பமுண்பால்காய சித்தியுண்டாகும். எ-று. கடுடுகூ

வான்குமரி லேகியம்—தரு.

வான்குமரிலேகியங்காணும்-மேகாதிமேகந்
தான்பயந்தோடியே போங்காணும்.

(இ-ள்.) இதுவான்குமரிலேகியமாகும், மகாமேகங்களெல்லாம் நிற்காமல் பறந்தோடிப்போய்விடும். எ-று.

நான்மகிழ்ந்துலகருக்கு வான்குமரிலேகியத்தை, யானுணர்ந்துரைவின்ப ஞானவெட்டியான்விதிக்கும், நதிசூழ்ந்திடு அருள்மேவிய மதிசாரநீரெடைநாலது, மலமூலமிதொருகாணிடைகுடமுட்படகரைத்தேவடி. வான்

(இ-ள்.) நான்மிகவும் மகிழ்ந்து வான்குமரிலேகியத்தை இந்தஞானவெட்டியில் உலகத்தாருக்காகச் சொல்லுகிறேன்பனிநீர்நாலெடையும் பூநீறுஒரு எடையுமெடுத்து ஒரு குடத்திலிட்டுக்கரைத்துவடி. என்றவாறு. கடுசூ0

தேனிதைமூன்றுநாள்வைத்துப் பானமுந்தெளியசலம், ஆனதையேனத்திலிட்டு வூனெனுங்கற்றாழையின்வேர், செருக்கித்தது தரித்துத்திடி, பிறித்தத்தனே படிபத்திடை, யினமுனசலமுடன் சேர்த்தினி, புனல்வைத்திடு-வனல்சூழ்ந்திடு. வான்

(இ-ள்.) இந்தத்தேனை மூன்றுநாள் வரைக்கும் வைத்து தெளிந்த ஜலத்தைவேறொருபாண்டத்திலிட்டு அதில்கற்றாழையின் வேர்பத்தெடையெடுத்து நன்றாய் நருக்கி அத்தண்ணீரிற் போட்டுவாலுமுகரந்திரமாக அடுப்பிலேற்றிப் புனல்வைத்திடு. எ-று. கடுசூக

முன்னமேவன்னியைநாட்டி யின்னமுங் கமலாக்கினே, பின்னமுங்வாரமலுந்தா னென்னையுங்கசிந்துவிட, முறியாமலுமலைபட்டழிங்,

தொழியாமலுங்கொதித்தெத்தட, னிருந்துத்துதி மருந்தென்றிவைய
றிந்துப்பதமதுபாகதும் வான்

(இ-ள்.) கமலாக்கினியா யெரித்துயாதொருபின்னமும்வரா வண்
ணம், எண்ணெய் கழிந்து விடும்படி முறிந்து பதங்கெடாமலும் கொ
தித்துவழியாமலும் கைபாகப்படி. எ-று. ௧௫௬௨

கன்னலும்வரும்பாகது நன்னயத்துடனேசீனி, தன்னினம்பலம்
பத்தது உன்னிதமாகவும்விட்டு, கலந்துக்கிளரதுபாகும்போ லிருந்துக்க
னலடிபற்றிடா, மலர்ந்துப்பதம்வருமேவிடில் முறிந்துத்தணலறிந்திப்
படி. வான்

(இ-ள்.) அங்ஙனமெரித்த, கஷாயத்தில் சீனிசர்க்கரைபத்துப்பல
ஞ்சேர்த்துப்பாகம் அடிப்பற்றுமல் வருகின்ற காலத்தில். எ-று. ()

சாதிபத்திரிகிராம்புஞ் சோடசம்பதினறிடை, ஏலமுஞ்சீரகம், ரெ
ட்டியிதக்கு ரெட்டிமிளகு, இயல்பாயெடுமிதுசூரணபலமாய்பொரித்தி
டைமாறிடா, பதமாய்வருமிது பாகுவில் கவரும் படியுடனேயிது.

(இ-ள்.) சாதிபத்திரி, இலவங்கம், இவையிரண்டும் பதினறெடை
யும், ஏலம், சீரகம், இவையிரண்டும் முப்பத்திரண்டெடையும் மிளகு
அந்தஎடையாகவே யெடுத்துஇளவறுப்பாய் வறுத்து சூரணஞ்செய்து
முன்வந்தசர்க்கரைப்பாகானது கிரகிக்கும்படி, எ-று. ௧௫௬௪

பாகதுபோலும்வருதல் பதமாய்லேகியங்காணும், மாவதுமடிபற்று
மல் மார்க்கமாயெடுத்தேனத்தில், வைத்துபரிசுத்தத்துடனித்தம்மருள்
முத்திப்பெற, சித்தத்தனுக்கிரகப்பதஞ் சத்திச்சிவஞானக்குரு. வான்

(இ-ள்.) இங்ஙனஞ்செய்தால் பாகுபோல்வந்து லேகியமாகும்,
இதைஅடிசிக்காம லெடுத்துவேறொருபாண்டத்தில்வைத்து பரிசுத்தத்
தோடு சத்தி, சிவம் குரு, இவர்களின் கிருபையால். எ-று. ௧௫௬௫

தத்துவமெய்ஞ்ஞானநெறி சித்தர்களறிந்துசிவ, சத்தியைப்பூ சித்
துக்கற்ப முத்தியையறிந்துமோட்சம், தனைபெற்றுடன்வினையத்துடல்
கனசித்துகள் மனமொத்துடன், நிலைவைத்துருபரசித்தியிலருள்பெற்ற
னுக்கிரகப்பதம். வான்

(இ-ள்.) இதைச்சித்தர்களுண்டுதத்துவமார்க்கத்தையும், கற்பமுத்
தியையும் பெற்று மோட்சவுருவாய் பெற்று அநுக்கிரகத்திலிருந்தார்
கள். எ-று. ௧௫௬௬

குமரிலேகியந்தனில் குறித்துக்கழற்சியின்காய், அமிர்தமெனவும்
லிங்க மதிதசுன்னங்குன்றியிடை, அதுக்குட் பதிந்திருவேளையுமிதுக்

குப்பொருளரைமண்டலம், விதிக்கும்பசுமமிர்தத் தூடனுதிக்குங்கதி ரொளிபோல்வரும். வான்

(இ-ள்.) இந்தக் குமரிலேகியத்தில் கெச்சைக்காயள வெடுத்து அதில் லிங்கச் சுண்ணம் குன்றி யெடைவைத்து இரண்டு வேளையும் அரைமண்டலம் வரைக்கும் பசும்பாலுடன் சாப்பிட்டுவந்தால். எ-று.

கொச்சகம்.

வான்குமரிலேகியத்தில் வைத்துஅரைமண்டலங்காண்
தான்கருதியுண்டிடவுஞ் சன்னிசுரதோஷமும்போம்
ஊன்வாயுவுளமாந்தை யோடும்விப்பிருதிமுதல்
தேன்மதுரமேகசயந் தித்திப்புநீர்காண்கிலனே.

(இ-ள்.) இவ்விதம் தின்றுவந்தால் சந்நி, சுரம், தோஷம், ஊண் வாயு, உளமாந்தை, விப்புருதி, மதுமேகம் க்ஷயம், இவைகாணப்படா என்றவாறு. கருசுஎ

கட்டியரையாப்புகண்ணை சூலையுடன்கர்ணிகமும்
ஒட்டியப்புண்வாழைசிலை யுட்பிரமிமூலமதும்
ஈட்டியதுபோலிகழ்ச்சி யெய்துஞ்செவிகுத்தலுடன்
மேட்டியென்றேமேகமெல்லாம் விட்டொழிந்துயேகிடுமே

(இ-ள்.) கட்டி, அரையாப்பு, கண்ணசூலை, கர்ணிகம், ஒட்டும் புண், துடைவாழை, சிலை, உள்பிரமியம், மூலம், காதுகுத்தல், மேகம் இவையெல்லாம் விட்டோடும். எ-று. கருசுகூ

மார்புத்துவாய்புத்து வாதபித்தசேத்துமங்கள்
நீர்சுருக்குநீர்கடுப்பு நீராமைநீர்சுரப்பு
தூர்செயுங்குன்மங்களெட்டு சோகையுடன்காமாலை
பேரனந்தநோய்களெல்லாம் பிரிந்துவிடுங்காண்கிலனே.

(இ-ள்.) மார்புற்று வாய்புற்று, வாதபித்தசேத்துமங்கள் நீர்சுருக்கு, நீர்க்கடுப்பு, நீராம்பல், நீர்ச்சுரப்பு, அஷ்டகுன்மம்சோகை, காமாலை, முதலிய அநேகநோய்களெல்லாம் போய்விடும். எ-று. கருஎ0

கலித்துறை.

விஷப்பாண்டுவீக்கமும் விக்கலுங்கக்கல் விரோசனமும்
சுழல்வாதபித்த-சூரணமும்பஞ்சு வாசமுடன்
கழல்வாதசன்னி கறடுமுறடுங் கட்டிகளும்
மழல்வாதம்வாய்வு சொரிகுஷ்டமூல மடிபடுமே.

(இ-ள்.) விஷபாண்டு, வீக்கம், விக்கல், கக்கல், விரோசனம் சுழல்வாதம் பித்தம், அஜீரணம், உப்பிசம், சுவாசம், கழல்வாதம், சந்நி,

கறடுமுறடாகக் கட்டிக்கொள்ளுங்கட்டி அழல்வாதம், குஷ்டவாயு, சொறி, மூலம் இவைஅடிபடும். எ-று. ௧௫௭௧

கடுவன்சிலந்தி கரையானுமீளையுங் கண்ணெரிவும்
வடுவன்பவுத்திரமணிகண்டமாலை பரபரப்பும்
விரியனுங்தேளு மறுப்த்தோராயிர விஷங்களதும்
பருகிக்கடல்புக்கி புகைபோலும்பற்றிப் பறந்திடுமே.

(இ-ள்.) கடுவன், சிலந்தி, கரையான், ஈளை, கண்ணெரிச்சல், படுவன், பவுத்திரம், கண்டமாலை, விரியன் முதலிய விஷகடிகள், முதலியவை புகையைப்போல் பறந்தோடும். எ-று. ௧௫௭௨

தீராதநோய்கள் தெளியாதபித்தங் தினவுடனே
வாராதுகாணும் வழலைப்பெருமையும் வாழ்க்கையினல்
பேராலெடுபடு மமுரியுண்டால்வினை பேர்ந்திடுகாண்
சாராதுமாய்கை நமனென்றதீவினை மாறிடுமே.

(இ-ள்.) தீராதநோய்களும், தெளியாதபித்தமும், தினவும், வழலையின் விசேடத்தால், இவையாவுமுண்டாகா எமனில்லையாய் விடுவன். என்றவாறு. ௧௫௭௩

வெண்பா.

பெண்பாலமிர்தம் விதித்தமதிபானத்தை
உண்பாருலகுதனி லுண்டோ-வெண்பால்
மூலப்புளியருந்த முப்புரத்தைச்சுட்டிடுங்காண்
காலனில்லையெப்போதுங் காண்.

(இ-ள்.) வெள்ளியபாலைப்போல் விதித்தமதுபானத்தைஉலகத்தில் உண்டார்களில்லை, இந்தவெண்பாலையும், மூலப்புளியையும் அருந்தமுப்புரத்தைச்சுட்டுவிடும் எப்போதும் எமனில்லை. எ-று. ௧௫௭௪

மதனப்பாலுண்டு மாய்ந்திடுவதில்லை
மிதமாய்கற்பம் விரும்பினல்-மதனப்பால்
லகரியதுவேக நிராமயத்தையுண்டு
சுகம்பெறலாங்காயசித்தி சொல்.

(இ-ள்.) இந்தமதனப்பாலைக் குடித்துமாய்ந்திடுவதில்லையான் அவ்வோடுகற்பம் விரும்பினல் அது நிராமயத்தையுண்டு சுகத்தையடையலாம், ஆகையால் காயசித்திமார்க்கத்தைச் சொல்லு. எ-று. ௧௫௭௫

சொல்லார்பெரியோர் சொன்னல்வெகுசூக்ஷம
வெல்லாருலகத்தோர் விதியிருந்தால்-சொல்லார்
கண்டாலுங்காரங் கருத்திலதைக்கண்டால்
உண்டாலுமுத்தி யுணர்.

(இ-ள்) பெரியோர்கள்சொல்லுவதைச் சொன்னால் வெகுசூட்சமாம், விதியிருந்தால் உலகத்தவர்கள்வெல்லமாட்டார்கள், அதைக்கண்டால் காரமாகும் உண்டால் மோட்சமாகும், இதைத்தெரிந்து கொள். என்றவாறு. கடுஎசு

நாகபற்மம்-தரு.

தனனந்தன தனனந்தன தன-தத்தனந்தன தன தனனந்.

திருப்பெருந்துறையிலகு மெய்ஞ்ஞானஒளி திருமருவிய மதிமலர் சூழம், பொருப்புனல்நதிபெருகுந்தில்லையனந்த-புருவச்சுழியிடைபின் முனையில்வளர், அருவுருநாதவிந்தின் அமைத்துவரவாறுகளின் சூக்ஷமெல்லாம்யானுரைத்தேன்காண், குருமுனியுரை தவறு மெய்ஞ்ஞான குருவின் மலர்க்கமலம் அடிதொழுதடியதுமர்ச்சனை செய்து, கற்பகக் குண்டலியின்பதங் கருணையருள் காரமுஞ்சாரமுங் கண்டுகருதினேம் பார் தற்பரசிகாமணியின் சற்குருபரன் தாளிணைபொற்பாத மலர்நான் மறவேன், பரப்பிர்மசிஷ்டையினால் சாம்புவனெனும் பாடுகிறேனாகபற்பம் வேகமிதுகாண். தன

(இ-ள்.) திருப்பெருந்துறையில், விளங்கும் உண்மையான தேஜஸுவிளங்கும் திருவிளங்குகின்ற மதிமலர்சூழ்கின்றமோதுகின்ற ஜலத்தையுடைய நதியானது பெருகுகின்றதில்லையில் ஆநந்தம்விளைகின்ற புருவச்சுழிமுனை, இடைகலை, பின்கலை, இவற்றில் வளர்கின்ற அருவுருவாகியநாதவிந்துக்களில் அமைத்தவரலாற்றின் சூட்சங்களெல்லாம் குறுமுனிவர்வாக்கில் தவறாமல்சொன்னேன் இப்படி சொல்லினதினால் தற்பரசிகாமணியின் இரண்டுதிருவடித்தாமரைகளை அடையும் பழக்கத்தினால் கற்பத்தின்வேகத்தையும்சாம்பவனென்று பாடுகிறேன். எ-று.

பாகமதாய்நாலுபலங்காண் இடைபிசகா பானுமதிசாரையது நாலுபடிதான், சேகரமாம் புளிசரக்குக் கடுங்காரமது சேர்த்தொருவடிபிடித்துச்சூரணமதாய், வேகமென்ற அமுரிதனில் காரத்தை யூட்டி விருப்பமுடன்கரைத்துமே லதுமூடி, யாகமப்படிதனைமூன்று நாள்வைத்து அமுரிதெளிவிறுத்து அத்தெளிவினில், சம்பியுப்புச்சீனக்காரம் வெங்காரஞ்சாரங் கடல்நுரையுப்பதஞ்சுவகைக்குசமன், ரம்மிதமாய்பலமதுகாண் குளிக்கல்லினில் நாடியரைத்தேமூடி யதனிலடக்கி, கும்பமதிலுங்கரைத்து மூன்றுநாள்வைத்துக் குடத்திலிருக்குஞ்சலத்தெளிவிறுத்தி, அம்பகமில்லாமலுமே கமலாக்கினி அக்கினியை மூட்டியனல் கெட்டிமையதாய். தன

(இ-ள்.) நாகம் நான்குபலமாகும், பனிநீர்நான்குபடியாகும், மூலப்புளி ஒருபடியாகும், இவைகளைபிடித்துச் சூரணமாக்கி அமுரியில்

கலக்கி அதற்குக் காரத்தையேற்றி அதைமூடி மூன்றுநாள் வைத்து அந்த அமுரியைத் தெளிவிறுத்து அந்தத் தெளிவில் கம்பியுப்பு, சீனகாரம், வெங்காரம், நவாச்சாரம், கடல்நுரை, இவைகள் வகைக்கு ஒரு பலமா யெடுத்து கல்வத்திலிட்டு நன்றாயரைத்து முன்மூடி வைத்திருந்த பாத்திரத்தில் கலக்கி மூன்றுநாள் வைத்து தெளிவிறுத்து அடுப்பிலேற்றிக் கமலாக்கினியாக எரித்து. எ-று. ௧௫௭௮

தொக்காகிசுண்டிடும்பதமாய் எடுத்துஆறச் சூட்டிடும்பீங்கானதனில் சொல்லுவேனுண்டே, உக்கிரமதாய்ரவிதனிலும் எடுத்துவைத்து உலரஉலர கதிர்முகந்தனிலும், விக்கிரமெனும்வெண்ணிரமதாய் உப்பதுவேகம் வெளுத்தசர்க்கரை நிறமென்னசொல்வேன், அக்கரைக்காரங்கள்படவும் அதிதசுன்னம் ஆலகாலவிடமதுக் கெதிரில்லைகாண், ஆதியில்முன்னண்டைபற்பம் கழஞ்சியது அதிதமுப்புசுன்னமதி லொருகழஞ்சு, நீதியாய்சவ்வீரம்பூரம் வகைவகைக்கு நேர்மையாய் கழஞ்சியிடை துருசிசுன்னம், பேதியிலதிதபேதிகாண் இதின்பெருமை பேசினர் பெரியோர் ஜெகஜாலமதா, யிதிலொருகழஞ்சியிடை வகைவகையிதுவகைகளனைத்துமேகமதாய். தன

(இ-ள்.) சுண்டினபதமாகத் தொக்காக்கிச் சூடுசிறிதாறினபின் பீங்கானிலூற்றி வெயிலில்வைத்து உலரஉலர அதுவெண்மையாய் உப்புப்போலாகும், அதில்வேறெந்த வஸ்துக்கள்பட்டாலும் மிகுந்தகாரமுள்ள சுண்ணமாகும் இதற்குஆலகால விஷமும் எதிரில்லை, முன்சொன்ன அண்டபற்பம் ஒன்றேகால் வராகனெடையும் முப்பூசுண்ணம் ஒன்றேகால் வராகனெடையும் வீரம் பூரம் துருசு சுண்ணம் இவைகளிலொவ்வொன்றிற்கு ஒன்றேகால் வராகனெடையுமாகஎடுத்து என்றவாறு. ௧௫௭௯

பனிவிழும்காலமதில எட்டுநாள்விதம் பாகமதுவாக வொருவாரமும் வைத்தால், இனிசலநீரிறங்கும் இதுவென்னமயம் இறுத்து இறுத்துக் குப்பியிதினுள்ளதாய், வனிதையின் மாதவிடைபோல் அக்கினி வீசும் வடித்துவடித்து சலமளவதுவாம், கனதையாயிதை யெடுத்து கைபாகமாங் கருதிமூசையில் நாங்கனலதிகம், உருகும்பதங்களறிந்து செயநீரதனில் ஒரெழுதிரமுருக்கிச் சாய்த்திடவும், தான்வரும் வெள்வங்கமதுபோல் வெட்டையது வாய்வலுத்து கட்டியு மறுதிரமுருக்க, அருகுஞ்சவலையதுபோல் பெழுகதினவா றுச்சரியமறு வெறுதிரமுருக்க, பெருகுந்தங்கத்தினிதங்காண் அதுவலுத்துப் பெருமையென்னல் விளங்கப்பேசிறுகாண். தன

(இ-ள்.) பனியானது விழுகின்றகாலத்தில் எட்டுநாள்வரைக்கும் பக்குவமாய்வைத்தால் ஜெயநீரிறங்கும், அதைஇறுத்து இறுத்துக்குப்பியில் வைத்துக்கொண்டால் பெண்கள் மாதவிடாய்பால் அக்கினிவீசும், அதைவடித்து வைத்துக்கொண்டு சரக்குகள் மூசைபிலுருகும்போது இதில் ஏழுதரம் உருக்கிச்சாய்க்க இது வெள்வங்கத்தைப்போல் வெட்

டையாய் உதிரும், அதைமறுபடியும் எழுதரம் உருக்க அதின் பெருமைஎன்னல் சொல்லமுடியாது. எ-று. ௧௫௮௰

பச்சைவண்டுபோலதுவாம் பசுமைநிறம் பாரதனிலுமாரறிவர் பரகமதுகாண், அச்சமில்லாநைகப்பச்சை சித்தர்கள்செய்யும் அதிசயமென்னுற்றுக் கொண்டதுவீய்ந்தால், மச்சமறிமாத்தறநூறு செம்பதுக்கியவயதென்ன வழலையென்மகிமையதால், நச்சரவமமுரியுண்ட நளினமதால் மீளாதுகற்பச் சாதனைமூலப்புளியின் சுன்னம்படவும், நீறுநவலோகமதுங் காராசாரத்தின் நேர்மையிதினுலும் நவரத்தினநீறும், தாறுமாறு செய்கையதனல் குருவறியா சந்தேகமாகும் வெகுஅந்தேசமாய், தேறினதோர்நாகமதிலும் பலமெடுத்துச் செயவீர சுன்னமதில்வராகன தன ரைகாண்.

(இ-ள்.) அதின் நிறம்பச்சைவண்டுபோலாகும், இதை உலகத்தில் யாவரறிவார்கள், இது சித்தர்கள் செய்வதொன்றுகும் இதைச் செம்புக்குக் கொடுத்தால் மாற்றதிகமாகும், இவையனைத்தும் வழலையின் மகிமையாலாம், விஷம்பொருந்திய அமுரியுண்ட குளிர்ச்சியால் நாதவிந்து என்னும் சாரையானது மிகவுங் காரமாகும், அது கடித்தால் மறுபடியும் மீளாது, கற்பசாதனையானது மூலப்புளியின் சுன்னத்தாலாம், அந்தச்சுன்னமானது பட்டால் நவலோகங்களும், நவரத்தினங்களும் நீறும், இப்படிப்பட்ட நாகத்தை ஒருபலம் எடுத்து அதற்கு அரைவராகனெடை வீரச்சுண்ணம். ௧௫௮௧

வீரசுன்னநாதவிந்துநீர் மென்மேலதாக விட்டுமத்தித்துமேனகமேற்கவசமாய், பரவியும்பூசுரவி ஒளிவுபட பானுவின் முகந்தனிலும்மாகமதுவாய், சுரவியதின்மேற்கவசம் மூலத்தின்புளி சுன்னமொருபலமதில்நாதவிந்துநீர், திரவியமிதுவெனவும் மத்தித்துமேலுந் தீர்க்கமாங் கவசமதுசெய்துமுடித்து, வாலையருள் பொற்கமலம் மலரடியில் வணங்கினேனுண்டை யிருகரங்குவித்து, சாலவும்பூசித்தடியேன் பாறையுப்பதுந் தானதிலொருசேர்கொண்டு விந்துநாதநீர், கோலமுடனுட்டியதை கவசமது குறித்து நாகத்தின்பேரில் கூறதுசெய்து, ஞானமுடன் தாளிலுமிட்டு மேல்மூடிமண்ணு நற்கவசஞ்சிலையது ஏழுஞ்செய்தே.

(இ-ள்.) அந்த வீரசுண்ணத்தை நாதவிந்துக்களின் நீரைவிட்டு மத்தித்து நாகத்தின் மேற்கவசஞ்செய்து வெயிலிலுலர்த்தி மூலப்புளி சுண்ணம் ஒருபலமெடுத்து அதை நாதவிந்து நீராலரைத்து மறுபடியும் நாகத்துக்குக் கவசஞ் செய்து வெயிலிலுலர்த்தி பாறையுப்பில் ஒரு பலமெடுத்து அதை நாதவிந்து நீராலரைத்து மறுபடியும் நாகத்துக்குக் கவசஞ் செய்து வெயிலிலுலர்த்தி பாறையுப்பில் ஒரு சேரெடுத்து அதையும் விந்துநீராலாட்டி முன் கவசத்தின் மேல்மறுபடியுங் கவசஞ் செய்து மூசையிலிட்டு மேல்மூடி கவசஞ்செய்து மண்சிலை ஏழுசெய்து என்றவாறு. ௧௫௮௨

முன்முறைபோல்சாமமது ஒருநாள்முழுது முத்தியெய்த சதுர் சாமமொருகம்பதாய், இன்பமுடனுமெரித்து தீயாற்றியெடுத்தியல்புடனுகசுன்னமெய்துமுறைகாண், தெம்புடனே செம்புருக்கி பத்துக்கு வொன்று திருத்தமதாகவுமே யெடுத்திடவும், அன்புடைய பத்தரை மாற்று அதிகநிறம் ஆருமறியார்களித்த அதிசெயத்தை, பன்னீருமா தலிம்ரசமும் பசும்பாலுந்தேனும் பாகமதுவால்மிளகு சுக்குந்திப்பிலி, யிளநீரும்பலவகைக்கு இதனிலிடும் இச்சரக்கழஞ்சியிடை சூரணம தாய், குன்றியிடைநாகபற்பங் கூட்டிமதித்தித்து கொண்டிடுங்காலேமாலே யங்குணமதுவாய், வேண்டிடுமெரைமண்டலம் விசிதமதாய் விளங்கிடுநாக பற்பமேதினியோர்க்கும். ௩ன

(இ-ள்.) அடுப்பிலேற்றி முன்செய்தது போல்நான்கு சாமம் ஒரே யளவாய்எரித்து தீயையாற்றிப்பார்த்தால் சுண்ணமாகும், அதைவைத்துக்கொடுக்கபத்தரைமாற்றுஆகும், இதையாருமறியமாட்டார்கள், இந்தப் பற்பத்திற்கு அநுபானமானது என்னவென்றால் பன்னீர்மாதுளம் நீர் இவைகள் ஒவ்வொன்று கழஞ்செடையெடுத்துச் சூரணித்து இரு வேளையும் அரைமண்டலம்வரைக்குஞ் சாப்பிட்டால் போகும் நோய்களாவன. எ-று. ௧௫அ௩

அண்டவாதமரோசிகமுஞ் சுவாசகாச மையிரண்டுவாய்வதுவும் சீரணமுங், கண்டமாலேகர்ணிகத்தோடும் பிரமியமுங்காசபித்தபாண்டு விஷபாண்டதுவும், நின்றவயிர்வலிகுன்மமும்நீராமையோடுநீர்ச்சுருக்கு நீர்க்கடுப்புநீரெரிப்பும்போம், இன்றனுகாபுண்புரைகளும்இருபத்தொரு இசைந்தமேகங்கள்மதுமேகமுதலுங், தந்தவலிநாசியடைப்புஞ் சயகாசங்கள் சன்னிசுரதோஷமொடு கிரானியெட்டும், வந்தவிணிவிப்புருதியும் இசிவுவலி வாந்தியோடுசோபதாப ஆயாசமும், வெந்தணலாய் வீசுங் கனலும் வெடிசூலேகள் விக்கலு மேப்பமுடனும் வெதுப்புகளும் அந்தத்தவியாதிகளுமே யுடலும்விட்டு அலறிப்பயந்து அலேகடலிற்விக்கும்.

(இ-ள்.) அண்டவாதம் சுவாசகாசம் அரோசகம், பத்துவாயுவுக்கள், அஜீரணம், கண்டமாலே, கர்ணீகம், பிரமியம், காசம், பித்தபாண்டு விஷபாண்டு வயிற்றுவலி, குன்மம் நீராம்பல் நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு நீர் எரிச்சல் புண், புரைகள் இருபத்தொருமேகங்கள் தந்தவலி, நாசியடைப்புசந்நி, சுரம், தோஷம், அஷ்டகிரானி விப்புருதி இசிவு, வலி, வாந்தி சோபம் தாபம், ஆயாசம், கனல், வெடிசூலே, விக்கல், ஏப்பம், வெதுப்புகள், இவைமுதலிய வியாதிகள் இம்மருந்தைக்கண்டு பயந்து கடலிற்பதுங்கும். எ-று. ௧௫அ௪

விருத்தம்.

விணேப்பயனேயின்னதென்று விரித்துச்சொல்ல யெளிதல்லவெகு நோய்கள் வெளிபட்டேபோம், ஏணேப்போலும் பாடுபட்டுப்பனிரெண்

டாண்டுஎடுத்துரைத்தேன்ஞானவெட்டி பெரியோர்க்காக, கணைதொடுத்துவேதையதுந்தொந்தங்கோடி கருவறிந்து செய்துவிட்டேன் கற்பத்தாலும், தனையறிந்ததன்னைத்தானுண்டதாலுஞ் சகலகலைசெய்தியெல்லாஞ் சாற்றவேமே.

(இ-ள்.) வினைப்பயனை இன்னதென்று விரித்துச் சொல்வதற்கு எளிதல்ல ஆகையால் அநேக நோய்கள் வெளிப்படும் போகும், நானே பன்னிரண்டுவருஷம் பாடுபட்டு ஞானவெட்டியை எடுத்துச்சொன்னேன் இதில் அநேகவேதைகள்செய்துவிட்டேன், இனி இன்றுமுள்ளவற்றைச்சொல்லுகிறேன். எ-று. ௲௫௱௮௰௫

சுருக்கமென்றபற்பவகை கோடாகோடி சொன்னார்கள்பதினெண்பேர்சித்துமார்க்கம், கருக்களென்றகருவியெல்லாங்கணக்காய்ச்சொன்னார்காண்பதுவுமரிதரிதுகல்விமானர், உருக்கமிந்தவுடலுயிரும்நினைக்கவேணும் உடலுமுயிரிருக்தல்லோ அறியவேணும், மருக்கமழுமாதுரத்னவாலைதேவி வடிவமெனுமம்பிகைப்பெண் வாறுதானே.

(இ-ள்.) பற்பவகை அநேகம்பதினெண் சித்தர்களுஞ் சொன்னார்கள், கருவிகளையும் அவ்வண்ணமே சொன்னார்கள், இந்த உலையும்உரையும் நினைக்கவேண்டும் இது அம்பிகைப்பெண்ணின் திருவருளால் ஆகக்கூடியது. எ-று. ௲௫௱௮௰௬

கொச்சகம்.

சுழிமுனைக்குள்ளேயிருந்த சோதியறிந்தாமாகில்
வழிபலவுங்கண்டுமதி மாமதுரகற்பமுண்டேன்
ஒழியாதுகற்பமுண்டா லுடலுயிருமேவலுக்கும்
அழியாதகாயகற்ப மாரறிந்தவுண்பவரா.

(இ-ள்) சுழிமுனைக்குள்ளேயிருந்த சோதியையறிந்தால் உள்ளேயுள்ளபலவழிகளையுங் கண்டு அதிமதுரமாகிய கற்பத்தையுண்டேன்இவ்வண்ணம் ஒழியாமல்கற்பமுண்டால் சரீரம்நன்றாய் வலிவடையும்.எ-று.

வேற்றுமைகளில்லையிந்நூல் வெட்டவெளியார்கவும்யான்
பூத்தமலர்வாசமதைப் புகட்டினேனபூரத்தை
நாற்றிசையிலும்புகழு ஞானவெட்டியாய்ந்துகற்பம்
பார்த்துணர்ந்துவுண்டிடுவோர் பரகெதிக்குப்பாதையிதே.

(இ-ள்.) இந்நூலையாதொரு வேற்றுமையும், இல்லாமல், கற்பமுண்டறிந்துவெளியிட்டேன், ஆகையால் இதுமோட்சத்திற்கு வழியாகும். என்றவாறு. ௲௫௱௮௰௮

கலித்துறை.

காலங்கழிந்து காயம்நெகிழ்ந்து காற்றுமழிந்
தோலுந்துருத்தியும் நாடிநரம்புந் துவண்டபின்பு

சாலவுங்கற்பஞ் சாராதுசார்ந்துஞ் சற்றில்லைகாண்
வாலிப மெய்திடுங் காலத்தில்கற்பம் வசப்படுமே.

(இ-ள்) காலங்களையெல்லாங் கழித்து அதினல்சரீரமழிந்தஆத்துமாவி ன்வலிவுகெட்டு, தோல், துருத்தி, நாடி, நரம்பு இவைகளெல்லாந்தளர்ந்தபி ன்னரும் கற்பம் உண்டால் காலத்தில் வாலிபமானது்கைகூடும் எ-று. ()

வாராதுயோகம் வாசிவசப்பட மதிரவியால்
மாறாதுகற்பம் வலுவந்ததேக வாழ்க்கையினுல்
மீறாதுஞான மிகப்படித்தாலும் வித்தையல்லால்
தேறாதபேருக்கு மெய்ஞ்ஞானவெட்டி தெளிந்திடுமே.

(இ-ள்) யோகவாசியானது வாராது, மதிரவியினுல் கற்பம்வலிவாய் ஞானங்களை எவ்வளவு கற்றாலும் ஞானவெட்டியேதெளிவிக்கும் எ-று. (1590)

கண்கள்விழியு மிருள்சூழ்ந்துநாடி கலகலத்து
பெண்கள்மயல்கொண்டு விழிந்தழிந்தேபெருநோக்கிடமாய்
வெண்தந்தமாறி மெய்நரைகண்டு வினைப்பயனுல்
மண்ணுக்கிடமெனுஞ் சுடுகாடுசொந்த மாளிகையே.

(இ-ள்) கண்கள் இருளடைந்து நாடிகலகலத்து பெண்கள்மேல் மையல் கொண்டு வீழ்ந்தழிந்த பெருநோய்க்கிடமாய் வெள்ளியபற்கள்கருகி மெய்நரைகண்டு வினைப்பயனுல் மண்ணுக்கிடமென்னுஞ் சுடுகாடு சொந்தமாளிகையாகும் எ-று. (1591

வெண்பா.

ஞானத்தெளிவில் நாடிவிடுவோர்தமக்கு
பானத்தையுண்டு பரிக்ஷைபார்-ஞானத்தில்
தெளியாதாராகில் செகமாய்கைசூழ்ந்து
களியுவாரென்றறியுங்காண்.

(இ-ள்) ஞானத்தின்தேர்ச்சியை நாடுவோர்களுக்குபானத்தையுண்டுபரீட்சைபார்த்தால் ஞானத்தில் தெளியாதவர்களாக விருந்தால் உலகமாய்கையானது சூழ்ந்துகளிப்பாரென்றுஉணர்வாயாக எ-று. (1592)

நாடிநரம்பசைந்து நரைதிரையுமுண்டாகில்
தேடியென்னஞானந் தெளியாது-பேடி
மாய்கையதுசூழ்ந்து மாயுஞ்சுடுகாடு
தாயெனக்குச்சொன்னவழி தான்.

(இ-ள்) நரம்புகளெல்லாந் தளர்ந்துநரைதிரைகளுண்டானல் ஞானந்தெளியாது, மாய்கையானது சூழ்ந்துமாயும் சுடுகாடுசொந்தநிலமாகும், இதுஎன்னுடையதாயானவள் எனக்குச் சொன்னதாகும் எ-று. (1593)

காணாதுகண்ட காக்ஷியதயானும்
கோணாதமாய்கை யதின்சூக்ஷ்ங்காணாது
கற்பமதையுண்டால் காயநெகிழாது
தற்பரையெப்பொழுதுஞ் சார்.

இ-ள் காட்சியானது மாய்கையின் சூட்சமாகையால் காணப்படாது கற்பமுண்டால் காயநெகிழாது, ஆகையால் அம்பிகையை எப்பொழுதும் நாடு.

வாலைதிராவகம்-தரு.

தனனுந்தன தனனுந்தன - தத்தனுந்தான தன தனனு.

சீர்மேவியகமலந்-திரு-வம்பிகை பொற்பதம் நம்பியருள், கார்மேவியகருணை - கற்ப-சாதனைகாட்டி யெனக்குரைத்த, பார்மேவுங்கும்பமுனி-குரு-பாதமலர்பணிந்தேயடியேன், தார்மேவியமதரம்-சார-காரப்பெருமையைச்சாற்றிடுனும், ஞானச்சமிரடன-திவ்விய-நாட்டத்திலும் வாசியோட்டத்திலும், வானம்பொழியுமதி-கடல்-வாருதியின் திருமால்பதியில், ஈனம்வராமலுங்காண்-மிக-யோகத்தினல்தவஞானத்திலும், பானமிகவுணர்ந்து-பரி-பாஷையெல்லா மாய்ந்துபாடுகிறேன். தன

இ-ள், சிறப்புப்பொருந்திய அம்பிகையின் திருவடிகளை நமபி, அகஸ்தியருடைய திருவடிகளைப்போற்றி சாரகாரங்களின் பெருமையை ஞானநாட்டத்திலும் வாசியோட்டத்திலும் திருமால்வீட்டிலும்யாதொருகுறையும்வாராமல் யோகத்தினலும், தவஞானத்தினலும்பானம்மிகவுஞ் செய்துபரிபாஷைகளையெல்லாம் ஆராய்ந்து பாடுகின்றேன் எ-று. 1595

சித்திரபூரணவாலை-திவ்விய-திராவகத்தையாண்டேயானுரைப்பேன், வெற்றியெனும் படிகம்-நவாசாரம் பூநீறுசம்பி வெங்காரம், பத்தியுடன்பாறையுருவு-பச்சைக்-கர்ப்பூரமும் நல்லபண்ணையுடன், சதியெனுமாமேனி-பாண்டந் - தானதுவப்பு தசையதுவும், பத்துமொருபாண்டமெனும்-பின்பு - பக்குவமாய் வகையஞ்சுபலஞ், சத்தோடவே மூலம்-புளி-சுன்னமதும்படி சூரணமாய், எத்தாயமுரியெனுஞ்-சார-மேனுமதாய்படிநாற்பதுகாண், சித்தாகவுங்கரைத்து மூன்றுநாளததனைவைத்துச்சேகரமாய் தன

இ-ள். சித்திரமாகிய பூரணமென்னும் வாலைத்திராவகத்தை நான் சொல்லுகின்றேன்கேட்பாயாக படிகம் நவாச்சாரம், பூநீறு, சம்பியுப்பு, வெங்காரம் பாறையுப்பு கடலுப்பு, பச்சைக்கர்ப்பூரம், சவட்டுப்பு, சத்திசாரம், ஆகிய பத்தையும் ஒரு எடையாகவெடுத்து ஒருபாண்டத்தில் போட்டு அத்துடன் மூலபபுளி ஐந்துபலஞ் சேர்த்துச் சூரணமாக்கி அதில் அமுரிநாற்பது பலம் விறுத்திவிட்டுக்கரைத்து மூன்றுநாள் வரைக்கும் வைத்திருந்து எ-று.

ஆனாலுமேசரக்கு - அரிதாரமும்வீரங்கெவுரியதும், தானாகும்
வெள்ளையுடன்-சாதி-லிங்கமும்பூரமனோசிலையும், வேனாசிங்கிய ரா
ம்-விந்து-நாதமென்றால்ரசகெந்தியதாங், தேனானபச்சையதுங்-திரு
நீலகண்டரெனுமேசரக்கு, வகைக்குவகைப்பலமாய்-வறு-வானசரக்
கொருசிலைதனில், திகையாமலுங்கிழியாய்-தினு-சாவதெல்லாங்கட்
டித்தொங்கவிட்டு, துகையாயடுப்பினிலுஞ்- சொன்னேன்-சுத்தமெ
னுங்கனபாண்டமதி, லுகையாய்தெளிவிறுத்து - ஒரு-சாலிலிட்டுக்
கொஞ்சங்கொஞ்சமதாய். தன

இ-ள், பிறகு அரிதாரம், வீரம், கவரிபாஷாணம், வெள்ளைப்பாஷாணம்
சாதிலிங்கம், பூரம், மனோசிலை, மிருதார்சிங்கி, ரசம், கந்தகம், பச்சை, கண்
டர், இவைகள்வகைக்குப்பலம் எடுத்துக்கிழிகட்டி முன்சொன்ன உப்புநீரை
த்தெளிவிறுத்து ஒருபாண்டத்திலூற்றி அதில் இதைத் துலாயந்திரங்கட்டி
நீர்வற்றவற்ற வார்த்து அடுப்பிலேற்றி எ-று. 1597

புரைதான்வராமலுடன்-சீலை - பொட்டணமாய்கட்டித் தொங்
கவிட்டு, வரையாமடுப்பில்வைத்து-வன்னி - மாட்டிடவுங்கமலாக்கி
னிதான், திரையாய்நுரையகற்றி-செழுங்-தேனெழும்பிவருகாமலுட
ன், கரையாமலுஞ்சரக்கு-கனக்-காவதுஞ்சென்று ஆறிடவும், இனமா
யிறக்கியதை-யிருங்-தாறினபின்னெடுத்தாமதனை, கனமாகுவேசரக்
கைக்-கண்டால்- கல்லதுபோலுமிறுகிடுங்காண், மனமேமதிபிசகா-
வரும்மார்க்கமிந்தவுப்புவாருதியால், தனமேபீங்கானிலிட்டி-ரவி-த
ன்முகத்திலிதுகாய்ந்திடினுங் தன

இ-ள், கமலாக்கினியாக எரித்து வெளியேவரும் நுரையை நீக்கி தேன்
போலெழும்பி வாராமலும் கரையாமலும், நன்றாய் வற்றினபின் அதை யிற
க்கி ஆறினபின் எடுத்துப்பார்த்தால்கல்போலிறுகும், இதைப்பீங்கானிலிட்டு
வெயிலில் காயவைத்து எ-று. 1598

கதிர்முகங்காய்ந்திடினுங் - கன- வாலையெனுங்குடந்தன்னலுங்
தான், சதிராகவுஞ்சரக்கைத்-தனிச்-சூரணமாய்ச்செய்துமேலுமதா
யுதிராமலும்படியே-உப்பு-ஒக்கச்சரக்குத்தூளொன்றாக்கி, அதிராம
லுங்குடத்தி-லிட்டு-ஆனபின்பு அக்குடமதின்மேல், செம்பதினாற்செ
ய்ததொரு-செய-பாலையதுக்குடமேல்பூட்டி, தம்பனவதாகவுமே-சீ
லை-சாற்றிடீர் வெண்கருமாவுளுந்து, செம்மையாய்க்கவசமது -செ
ய்து-சீர்பெறவும்வாலுகையடுப்பில், அம்பாளருள்பெறவும்-வன்னி-
அக்கினிமூட்டியெரித்திடுமுன் தன

இ-ள், இங்ஙனம் நன்றாய்க் காய்ந்தபின் வாலையில் பொடித்துப்போட்டு
முன் உப்பையும் எடுத்து அதனோடு போட்டு அதின்மேல் செப்புப்பாலை மூடி

வெண்கருவிட்டு உளுந்துமாவைப்பிசைந்து கவசஞ்செய்து அதைப்பிலேற்றி
அம்பிகையின் திருவருளைப் பெற நெருப்பிட்டு எரிந்திடுமென் எ-று. 1599

பாலையதின்வாயில்-குப்பி-பாச்சியேமேலுஞ்சலம்பொழிய,செ
லமதுவுஞ்சொரியும்-இந்த-திராவகத்தை'யென்னசொல்வேன்காண்
சலமாய்ப் பொழிந்ததின்பின்-தயிலந்-திராவகங்காணேன் ரத்தவர்
ணங்,கலையாமலுமிரங்கும்-இந்தக்-காரணத்தைக்கண்டுஆறெடுப்பார்
ஒருநாழிகைசுருக்கில்-சூத-மோடாது .கட்டிவலித்திடுங்காண், இரு
நாழிகைதனிலும்-ரசம்-மேலும்புகையசையாதிருத்தல், உருவாகவு
ங்கடிகை-தச-மூலவன்னிகமலாக்கினியில், சுருங்கியொடுங்கிவிடுஞ்-
சொன்ன-சொல்லறியும்பத்துநாழிகையில். தன

இ-ள். பாலைவாயில் குப்பியை வைத்து எரித்தால் அக்குப்பியில்சலமிற
ங்கும், அதுவே திராவகமாம், இந்தத்திராவகத்தின் மகிமையையென்னசொல்லு
வேன், அந்தத்திராவகத்தால்ரசத்தை இரண்டுநாழிகைசுருக்குகொடுத்தால்
அது ஓடாமல் கட்டும், இங்ஙனம் ஐந்து முறைபத்து நாழிகை வரைக்குஞ்
செய்தால் ரசம் குளிகையாகும் எ-று. 1600

குளிகையிதுவேகஞ்-சித்திக் - கொங்கணர்க்கிந்த முறையளித்
தேன், அழியாதுமூலப்புளி-சரக்-காகிடிலும்புடமஞ்சதுகாண், வழி
யாயதில்பதிந்து-வன்னி-வாட்டிடவு முதலொன்றெரிவு, சளையாதிர
ண்டுமூன்றும்-நாலுஞ்-சங்கையில்லையஞ்சுதானெருவாம், அஞ்சுபுட
ம்மதுகாண்ஆச்சு - ஆகிலுமேயண்டரங்களும், வஞ்சமதாயுரைக்க -
எந்தன்-வாக்கியங்காணிந்தநூல்பிசகா, நெஞ்சறிவாலுரைத்த-வாசி
-நேர்மையினல்குளிகைபாய்ந்திடலாம், பஞ்சபூதமென்றல்லவோ -
கொண்டு-பாய்ந்திடலாங்குளிகைவாயிலிட்டே. தன

இ-ள், இந்தக் குளிகையானது மிகவும் வேகமுடையதாகும், இதைநா
ன்கொங்கணர்க்குச் சொன்னேன், இதுமூலப்புளி சரக்கானாலும் இதைஅஞ்
சுபுடம் போடவேண்டும், ஆனல் அஞ்சுபுடத்திற்கும் முதல்புட முதல்ஒன்றி
ரண்டாக வரட்டியை உயர்த்திக்கொண்டேபோய் ஐந்தாவது புடத்திற்கு ஐந்
துஎருவிற்புடம் போடவேண்டும், எம்முடைய மனதினலுரைக்கப்பட்ட இந்
தநூலானது அண்டரண்டங்களிலும் பொய்யாகாது, ஆகையினல் இந்தக்கு
ளிகையைவாயிலிட்டுக்கொண்டு கவனம்பாயலாம் எ று. 1601

நவலோகமும்பழக்கும்-நவாத்தினங்கள் சத்துச்செந்தூரம், இ
வையாகியதயிலம்-இந்த-திராவகங்காணும் வெகுபதனஞ், சவவாகி
லுமெழுந்து-செடஞ்-சாத்தியமானலெழுந்திருக்குஞ்,சிவனாகிலுமித
னை-வெல்லச்-சித்துகளுண்டோக்ஷணத்திலுந்தான்-தாயபிரம்பத்து
க்கொன்றில்-தச-மாற்றதுகாணுஞ்சந்தேகமில்லை, வாமிந்தப்படிதா
னுந்-தயிலம்-மாட்டிடவு நவலோகமெல்லாம், ஆமிந்தப்பத்தரைகா

ணேன்-எந்தன்-ஆண்டவன்சொற்படியானறிந்தேன், நாமிந்தப்படி
பார்த்து-ரச-சூதமோட்டிவிட்டுவன்னியிட்டே.தன.

இ-ள், இந்தத்தயிலமாகிய திராவகத்தால நவலோகம்பழுக்கும், நவரத்தினங்கள் செந்தூரமாகும், ஆகையால்இதைவெகுபத்திரமாககாக்கவேண்டும், இதையெல்லச் சிவனுலுமாகாது, நம்பிரமமானவர்களுக்கு மாத்திரம் பத்துமாற்றுக்காணும், இவ்விதமாகத்தயில்த்தை மாட்டநவலோகங்களெல்லாம்மத்தரைமாற்றுண்டாகும், என்னுடைய குருவின்சொற்படியேயானறிந்தேன், ஆகையால் வன்னியிவிட்டு ரசத்தைபோட்டு எ-று. 1602

வேறு-விருத்தம்.

ஒருகடிகைகமலவன்னி ஒகோகோவொருமரத்தின் சப்பால்தீதான்
வருங்கடிகைபத்துக்குள் வரும்வேகங்கட்டியது வலுக்குமாகில்
சுருபமென்னமூலப்புளி சுன்னமென்றதுகவசஞ் சூட்டியஞ்ச [டே
அருஞ்சிலைமூன்றுசெய்து அஞ்சுபுடம்போட்டெடுக்க அதிதமாண்

இ-ள், ஒருநாழிகை வரைக்குங்கமலாக்கினி யிட்டெரித்தால் தீயானது பத்துநாழிகைக்குள் வேகங்காட்டிவலுக்கும், இப்படியானல் மூலப்புளி சுண்ணத்தினல் ஐந்து கவசஞ்செய்து மண்சிலை மூன்று செய்து ஐந்துபுடம் போட்டெடுத்தால் அதிதமாகும் எ-று. 1603

சூதமென்றயானையது நாதவெனும்விந்தளவில் சுருக்குமேறி
வாதமென்றரசவாதங் கிடுகிடென்றுநடுங்கியே வாய்க்குஞ்சித்தி
காதமல்லதூரமல்ல காரசாரத்தளவால் கண்டுண்டேறி
பேதமில்லாகுளிகையது வெள்வங்கநீர்குடித்துப் பின்புஆண்டே.

இ-ள், ரசமென்கிற யானையானது நாதவிந்துக்களின் சுருக்கேறிரசவாதமானது கிடுகிடென்று நடுங்கிச்சித்தியாகும், காரமல்ல, தூரமல்ல, காரசாரங்களினளவால்கட்டுப்பட்டு யாதொருவித்தியாசமுமில்லாதகுளிகையானது வெள்வங்கத்தின் நீரைக்குடித்துப் பின்பு எ-று. 1604

புடத்துக்கோரொருவதனம் புகழ்நூறுசாரணையில் புதுமைகாணுந்
திடப்படுத்தும்ரசகுளிகை மூலப்புளிகவசமதால் செயமேயாகுந்
தடமினிவங்கமிட்டுச்சேருருக்கிக்குளிகையிடச்சலநீர்வாங்கும்
நடனதிருவம்பிகைப்பெண்ணருளதனுல் ரசிதமதுமீரைஞ்சாண்டே

இ-ள், புடத்திற்கு ஒரு எருவாக நூறுசாரணையில் புதுமையானது காணும், மூலப்புளி, சுண்ணத்தின் கவசத்தால் ரசக்குளிகையானது திடப்படும்செயமாகும், ஒரு சேர்தங்கத்தையுருக்கி அதில் இந்தக்குளிகையைவிட்டால் நீர்வற்றிப்போம், அம்பிகைப்பெண்ணின் கிருபையால் பத்து வருஷம் கிரதமாகும் எ-று. 1605

இக்குளிகைப்பாலிலிட்டுஎடுத்திடவும்பால்கள்கண்டியிருக்குமாகில்
அக்குளிகைவாயிலிட்டு அங்கென்றுங்கண்டத்தினளவாயூத, சக்கர

ம்போல்கழல்மூலசரக்கிருச்குஞ்சார்வில்நின் றுசாதித்தாக்கால்உக்கிரமாயண்டரண்டரண்டமொருநொடிக்குள் சுற்றிவரலாகுமாண்டே,

இ-ள் இச்சக்குளிகையை அந்தப்பாலி விட்டெடுக்க பால் சுண்டியிருக்கும் அந்தக்குளிகையை வாயிலிட்டுகண்டத்தில் அங்ஙன்ற ஊதி மூலத்திலிருந்து சாதித்தால் அண்டரண்டங்களை யெல்லாம் ஒருநொடிப்பொழுதச்சுள்சுற்றிவரலாகும் எ-று. 1606

## விருத்தம்.

இத்தயிலம்ரசிதம் பதிறுைக்கொன்று ஈந்திடவும்வயது பத்துமேன்மேலாகும், சுத்தஅயச்செம்பது வாமிரும்பைக்காய்ச்சி சுருக்கேற்றத்திராமகத்தால்சுயச்செம்பாகும், வித்தையென்னவிது அயமும்விபோற்காய்ச்சுமின்னலொளிவாகும்பதம் பூசும்போதில்,சத்துகளெல்லாம்பிரிந்துகளிம்பற்றேபோய் தாம்பரமாமல்லியின் பூச்சாறதாமே.

இ-ள் இத்தயிலத்தை வெற்றிபதினறுக்கு ஒன்றகொடுக்க வயது பத்தாகும் இரும்பைக்காய்ச்சிச் சுருக்கேற்ற அது அயசெம்பாகும், திராவகத்தால்நல்ல செம்பாகும், இந்தவித்தை வெகு அபூர்வமானதாம் இதைப்பதத்திற்பூசும்போது சத்துகளெல்லாம் பிரிந்து களிப்பற்று தாம்பிரமாய் மல்லிகைப்பூச்சாறாகும் எ-று 1607

## வேறு-விருத்தம்

அயமதுவின் செம்புருக்கிநாகபற்பம் அருளிடவுநாற்றுக்கொன்று, சுயமீதாம்வயதுபத்தரையெனவு மகத்திசர்சொல்லும்சூக்ஷம்பயமேதுபரிவேதைபாடியதோ ஞானவெட்டிப்பலிதமாகுந், தயிரியமாய்செம்பெடுத்துநாகபற்பந் தனைக்கொடுக்கத்தங்கமாண்டே.

இ-ள் அயச்செம்பை யுருக்கி அதற்கு நாகபற்பங்கொடுக்க நூற்றுக்கொன்று சுயமாகும் வயதும் பத்தரையாம், இது அகஸ்தியர் சொன்னசூட்சமாகும், ஞானவெட்டியிற் சொல்லும் பரிவேதையிற்பயமில்லை, ஆகையால் செம்பெடுத்து நாகப்பற்பத்தைக்கொடுக்கத் தங்கமாகும் எ-று 1603

குற்றமொன்றும் வாராது- குறைவேதுகுடவனதும் நூற்றுக்கொன்று, சித்தானதிராவகந்தா னுருக்குமுகந்தனில்சுருக்கச் செயமுமாகும், வித்தானவயதுபத்துவெள்வங்கம்நாலுற்றுக்கொன்றேயூட்ட, பத்தான வயததுங்காண் பரிட்சைபார்நவலோகம் பத்துமாற்றே.

இ-ள் யாதொரு குற்றமும்வாராது, குடவன் நூறு பங்கு ஒருபங்கு திராவகத்தை உருக்கு முகத்தில் சுருக்கு கொடுக்கஜெயமாய்ப்பத்து வயதுமாகும், வெள்வங்கம் நாலுற்றுக்கு ஒன்று கொடுக்கபத்து வயதாகும் எ-று

விருத்தம்.

திராவகத்தில்குன்றியெடைகிருதத்தூட்டி தினமிரண்டு அதிகா
லேமாலேயுண்ண, நரைதிரையுமண்டலத்தில் நாடியோடும் நரம்புகளு
மிறுகிவந்துநன்றாய்கட்டும், கரைகளில்லே துறைகளில்லே தொந்தங்
கோடி கற்பமுண்டுகனகபரிவேதைசெய்து, முறைபிசகாமூலப்புளி
சுன்னத்தாலும் முடிந்ததுகாண்காயசித்திமுப்புவாண்டே

இ-ள் இந்தத்திராவகத்தில் குன்றியெடைநெய்யில்விட்டு இரண்டு நாள்
உண்டால் ஒரு மண்டலத்தில் நரைதிரையோடி நரம்புகளெல்லாங் கெட்டி
ப்பட்டுவிந்து நன்றாய்க்கட்டும், இதற்கு அநேக தொந்தங்களிரும்பதால்கரை
களும், துறைகளுமில்லையாகும், ஆசையால் கற்பமுண்டு மூலப்புளிசுண்ணத்
தின சகாயத்தால் முறைதவறாது பரிவேதை செய்து முடிந்தது. எ-று.

தெளிந்தவர்கள்ஞானவெட்டி யெடுத்து ஆய்ந்துசெயநீருந்திரா
வகமுஞ்செய்தாராகில், களிவேதுகாயகற்பமதுங்குரெட்டிகற்பநோ
ய்பிணிகளெல்லாங்காணுதோடும், அழிவதில்லையுடலுயிரும் வினை
தானேது அண்டபுவனங்களுள்ளகாலம்வாழ்வார், சுழியின்முனை
யிடைகலைபின்சூக்ஷங்கண்டால் சுகாதிதத்திலிருந்து சுகமறிவாரா
ண்டே

இ-ள் நன்றாய்த் தெளிந்தவர்கள் ஞானவெட்டியை ஆராய்து அதிலு
ள்ள ஜெயநீரையும், திராவகத்தையும்செயவாரானல் காயகற்பஞ்செய்துகொ
ண்டாலோகிவதைப்பார்க்கிலும் இரண்டுபங்கு நோய்கள் ஓடிவிடும்,வினையுமி
ல்லையாகும், உலகமுள்ளவரைக்கும்வாழ்வார்கள், சுழிமுனையின்சூட்சங்களை
த்தெரிசித்தால் சுகாதீதத்திலிருந்து சுகமறிவார் எ-று 1611

இத்தயிலமுண்டிடுவோர்க் கென்னபத்தியம் இயல்பானஆவி
ன்பால்கிருதமாகும், சித்தமதாய்கற்பம துக்கானபத்தியஞ் சிவ
யோகியவர்தனக்குச்சொன்னவாறு, உத்தவறுசுவையகற்றுஞானி
க்காகும்உள்ளபடியுண்டுகரையேறலாகும், கற்றறியார்தயிலமது வி
ணேநோய்க்குண்டால் கணக்காகும்புளிபுகையுங்கருதிடாரே

இ-ள் இந்தத்தயிலத்தை உண்பவர்களுக்கெல்லாம் பத்தியம்என்னவெ
ன்றல் பசும்பால், பசு நெய இவைகளும், சற்பமுண்டாலிருக்கும் பத்தியங்க
ளுமாகும், அறுசுவைகளை நீக்குதல் ஞானிக்காகும், அங்ஙனமே யுண்டால் க
ரையேறலாகும், கற்றுணராதவர்கள் தயிலமுண்டால்புளி,புகை குடித்தல்இ
வைகளை நீக்குவார்கள் எ-று 1612

சுறிவகையில்வெள்ளாடுமுசலுமுள்ளான் கவுதாரிகாடையுமா
ங்காணீர்காணும், பிறியமுடனுவின்பால்கிருதமாகும் பிசகாதுபுளி
புகையுந்தள்ளலாகும், குறிப்புடனேகுக்குடமுமச்சந்தானுங் கூட்டி

டமேலாகாதுகுரூரமாகும்,அறிவுடையோர்விதியாதியறிந்தகற்றலாகும் அதீதகுறைசொச்சமில்லாதருளுவேனே.

இ-ள் அன்றி, வெள்ளாடு, மூபல், உள்ளான், கவுதாரி, காடை பசும் பால், பசு நெய், இவைகளாகும், புளி,புகை குடித்தல் இவைகளைநீக்கலாகும் கோழியும், மீனும், கூட்டினல் மிக்கமொரேயாகும், அறிவுடையவர்கள்வியாதியை யறிந்து நீக்குவார்கள் இன்னும் குறைபில்லாமல்சொல்லுவேன் எ-று

வேறு-விருத்தம்.

சீர்மேவுமகாமேக பூபதிலேகியங்காணுஞ் செப்பக்கேளீர், கார்முகவனருள்தெளிர்து அகத்தீசர்கமலபதங்கருதியானும் பூமேவும்வுழ்தமதும்புவிதனிலுமுட்கொண்டோர் புகழ்ந்துவாழ்வார்,தார்மேவுஞ்செனகாதிரிஷிகள்பதம்போற்றியிதைச்சாற்றுவேனே.

இ-ள சிறப்புப்பொருந்தியமகாமேகபூபதிலேகியத்தைச் சொல்லக்கேளுங்கள் கார்முகனுடைய திருவருளைத் தெளிந்து அகத்தீஸ்வரருடைய திருவடிகளை நினைந்து இந்த ஔஷதத்தை உண்டவர்கள் புகழ்ந்து வாழ்வார்கள் ஆகையால் நான் இதை சனகாதிரிஷிகளுடைய திருவடிகளைப்போற்றிற்சொல்லுவேன் எ-று . 1614

மகாமேகபூபதிலேகியம்-தரு.

மகாமேகபூபதிலேகியங்காணும்-மதிரவியொளிமேவிய
செகாதீதசெயராஜபூபதியிதுகாணும்.

இ-ள் இதுமகாமேக பூபதிலேகியமாகும், இது சந்திரசூரியர்களுடையஒளி பொருந்திப உலகத்தவர்கள் அதிசயிக்கும் படியான இராஜபூபதிஇதுவேயாகும் எ-று

சுகாதிதசுகசுழிமுனையருள்திரு, அகாரகாரணஉகாரபிரணவைமகாரமாமலர் மருவியஒளியினில், சிகார ஓம்பரி பூரணகுண்டலி, திருவம்பலகுரு பரசிவமலரடி, கமலந்தனிலருளமிர்மதிபொழிய,நிருபந்தனில்வடிவம்பிகையெனைமகிழ், அவுழ்தங்களில்மிகுஅதிகமருள்பெறவும் மகா

இ-ள் மிகுந்த சுகம் பொருந்திய சுழிமுனையருளையுடைய அகாரகாரணமாகிய உகாரமும் மகாரமுஞ் சேர்ந்தபிரணவத்தில் விளங்குங் குண்டலியும் சிற்றம்பலத்திலிருக்கும் குருசிவத்தின் மலரடியும் சொரூப நிரூபத்தில் அம்பிகையும் என்னை மகிழ்ந்து உபதேசித்த ஔஷதம் இது வேயாகும் எ-று

காரசாரசெய கருதியலவணமும், பாறைசீனம்வெங் காரதுஞ் சாரமுந், தாரபூரசவ் வீரமுங்கெவுரியும், பாரகெந்திபாஷாணமிங்கிலிகமுந், தனையருள்ரசமனோ சிலையதுகூடனு, மினைதசஇடையரை

லமினிதிடமிது, விடைவகைசரிசமனருள்பஞ்சலவணமுங், கடவுளி னருள்பெற அடவிதுபொடிசெய்து. மகா

இ-ள், காரசாரங்களில் ஜெயித்த உப்பாகிய பூநீறும், பாஷாணயுப்பு, படிகாரம், வெங்காரம், நவாச்சாரம், அரிதாரம், பூரம், வீரம், கௌரி, கந்தகம், வெள்ளைப்பாஷாணம், லிங்கம், ரசம் மனோசிலை கர்ப்பூரம், இந்தப்பதினைந்தில் பாஷாணச்சரக்குகள் பத்தும் வகைக்கு அரைப்பலமும் மற்றஐந்து சரக்குகளும்வகைக்கு ஒருபலமுமாக எடுத்துப்பொடிசெய்து எ-று. 1616

சீரகமுங்கருஞ் சீரகமிளகதும், வேருங்கோஷ்டம் வேர்க்கொம்புடன்திப்பிலி, கருஓமங்குரோ சானிவால்மிளகதும், தேவதாரமக்காரமரத்தையுஞ், சீறுநாகமல ரதிமதுரஞ்செவ்வியம், மீதுபிதுரோகணி கூகைநீர்பறங்கியும், சிங்கிவெட்பாலைகார் கோலந்தாணியு, மிங்கிதமெனுங்கடுக் காயுடனிவையதும். மகா

இ-ள், சீரகம், கருஞ்சீரகம், மிளகு, செவ்வியம், கோஷ்டம், சுக்கு, திப்பிலி, ஓமம், குரோசானிஓமம். வால்மிளகு, தேவதாரம் அக்கராகாரம் சவுனராஷ்டகம், சிறுநாகப்பூ, அதிமதரம், பீதரோகணி கூகைநீர, பறங்கிச்சக்கை, கடுக்காய்ப்பூ, வெட்பாலையரிசி, கடுக்காய் இவைகளும் எ-று. 1617

தேவதாரிமுக்கத் தாரிசங்குப்பியும், வேலியுங்கொடி வேலிவெண்சாரணை, வில்வம்விட தாரிவிலாமிச்சு, மொழிஞ்சியுமழிஞ்சுபு மூக்குருவிது, மிளகருணைசெம் பரித்திவேர்விழுதியு, மேனிவெள்ளறுகுவெள்நொச்சி வெண் காக்கணம, விழிபொத்தியுடன் சிவனாதன் வேரது, முன்னையுங்கெருடனுமுசுட்டையின்வேரதும். மகா

இ-ள், தேவதாரி, முக்கத்தாரி, சங்கங்குப்பி, இருவேலி, சித்திரமூலம் வெள்ளைச்சத்திச் சாரணைக்கிழங்கு, வில்வம் விடதாரி, விலாமிச்சவேர் எரழிஞ்சில் இரசழிஞ்சல், அமுக்கராகிழங்கு, மிளகருணை, செம்பருத்தி, வேல், விழுதி குப்பைமேனி, வெள்ளறுகு, வெண்ணொச்சில், வெண்காக்கணம் விழியொதி சிவனார் வேம்பு, முன்னை, கருடங்கிழங்கு, முசுட்டைவேர் இவைகள்.

வகையாகியவகை பலமரைசரிசமன், உகையாய்கதிர்முகமொழிவதுபடாவி, திகையாய்வன்னியு மனலினில்பொன்னிறந், துலகயாய்சூரண மினமிது துடிபெறு, மிடியினம்பொடிபடமிகுபதமிடைகுறை, மறுபடிவெருபத முறையிதுவடிசெய்து, பொடியினையருள் கழிகெதிபெற. மகா

இ-ள், இவைகளையெல்லாம் வகைக்கு அரைப்பலமெடுத்து பொன்வறலாயவறுத்துச் சூரணஞ்செய்து பின் இதைநன்றாய் வஸ்திரகாயம் பண்ணி.

மதுரசஞ்சீவியது இடையரைப்படி, பதியக்கிருதம்பசும் பாலிளநீரதும், மதிதாளிதனிரதுசரிசமனிடை,விதிமதாய்பஞ்சதாரை

பன்னீரதும், விசிதமிதுகருதி விகிசககரைபதமு, மிரதினணலிசிணை மிகவும்வன்னியடா, வினவுங்கமலதீபஞ் சுகவிதரணைபதங், கொதியு மதிபுகல அதிதபாகுவருதல்.

இ-ள் சர்க்கரை அரைவீசையும், பசுநெய், பசும்பால், இளநீர் பன்னீர் இவைகளில் சர்க்கரையைக்கலரத்து அடுப்பேற்றி மெல்லளரித்துப்பா குபச மாய்வந்தால் எ-று. 1620

வருதலால்தருப்பரமிதுவருதிடில், கருதிடில்சரக்கதுபொடிமி டவினில், கறுத்ததாகியே கிளறிடில்கருகிடா, துரிதமாய்வகைசூர ணமிடுபதம், விதமிதையெடுசுட ரதுபகைமுறிபட, கலரவுந்துழவு ணரிதுபரிமளமென, தணலினைகனல்மறி யெனமிதுவசிகரம். மகா

இ-ள் அந்தச்சமயமறிந்து பொடிபண்ணி யிருப்பதை அந்தப்பாகில்சிறுக ச்சிறுகக்கொட்டிக் கிளறி முறியாதபடி அதினை எ-று. 1621

சுகமதாயிறக் கிதிலிடுமருந்தினை, பதமாய்குரோசனை புழுகது வதுமிக, தகனமகஸ்தூரி குங்குமஞ்சவ்வாதுடன், உகமையாயிடை கழஞ்சியிவ்வகையினை, மகிழ்பெறபொடியிவை கலறவுங்கிளறிசை, கெடிபெறுமவுழ்தமுந் தடியடிவினைமதை, கடிவிஷமுதல்பிணி மடி யவுங்கடல்புகல், நெடியலேகியம்வெகு பதனம்பதனமிது. மகா

இ-ள், நன்றுயிரக்கி அதில்கோரோசனை, புநகு, கஸ்தூரி, குங்குமப்பூ சவ்வாது இவைகளைவகைக்கு ஒன்றேகால் வராகனெடைகலந்து வைத்துக் கொண்டால் கடிவிஷம் முதலியநோய்கள் கடலிலோடி யொளிக்கும், எ-று.

வேறு-விருத்தம்.

அம்புவியில்கற்பமுண்டு ஆண்டையினிநோய்கள்வந்தணுகுமா கில், நம்பியிந்தமகாராஜபூபதிலேகியமிதனைநாடுங்காலே, வம்புசெய் தநோய்களதும் வரும்வினைகள்பயந்தோடி மடியுங்கண்டாய், செம் புலிங்கர்பதம்போற்றி லேகியத்தைவெகுபதனஞ் செய்வீர்தானே.

இ-ள், உலகத்தில் கற்பமுண்டு அதினால் நோய்கள் வந்துசேருமானால் இந்தமகாராஜபூபதிலேகியத்தை நாடினால் அந்தநோய்களெல்லாம், பயந்தோ டிமாளும், ஆகையால் சம்புலிங்கேஸ்வரர் திருவடிகளைப்போற்றி இந்தலேகி யத்தைப் பத்திரப்படுத்துங்கள் எ-று. 1623

வாலையெனுமம்பிகையின் மலர்ப்பதமும் பணிந்துமதி யமிர்த முண்டேன், மூலமெனக்களித்துபுளி சுன்னமதின்சூக்ஷமெல்லா மு ணர்ந்துமேலும். ஆலவிஷமதினளவால் சரக்குகளெல்லாமடிந்து அ வுழ்தமாகும், காலனில்லையென்றெந்த னம்பிகையுஞ் சொல்லவுமே கருதினேனே.

இ-ள், வாலையென்கிற அம்பிகையின் திருவடிகளைப்பணிந்து மதியமிர்த முண்டேன், அவள் எனக்கு மூலத்தையருள்செய்து புளி சுண்ணத்தின் குட்சங்களையும், சரக்குகளை மடிக்கும்விதங்களையும், சொல்லி இவைகளை கைமுறைபிசகாமல் செய்தால் எமன்வருவதில்லை யென்றுசொன்னாள் எ-று.

கருதிடினும்வாதபித்தஞ் சேத்துமத்தால்செனித்தவினைகாணு
தோடு,மருவுமந்தமருந்திடினுங் குஷ்டமரைமண்டலத்தில்மறைந்து
போகும்,சுருபமுந்தலேகியந்தான் தூதளங்காய்ப்பிரமாணந்தொடு
த்துமேன்மேல்,அருந்திடினுமதிகாலைமாலையினுமவுழ்தமதை யருள
லாமே,

இ-ள், நினைத்துப்பார்த்தால் வாதபித்த சேத்துமங்களால் வரும் நோய்கள் ஒன்றும் காடா குஷ்டமோ அரைமண்டலத்தில் மறைந்து போகும் இந்தலேகியத்தை இருவேளையும் தூதுளங்காய்பிரமாணஞ் சாப்பிடவேண்டும்.

குன்மமெட்டும்பறந்துவிடக் குறித்திந்தலேகியத்தைக் கொண்
டுமேலும்,இன்பமதாய்பசும்பாலு மிருவேளை தூதளங்கா யினிப்பிர
மாணம்,உண்பதுவுமொருபக்ஷ முணர்ந்திடவும்லேகியத்தை யுட்
கொள்வாராய்,துன்பவினை யேகிவிடு மெளியோருக்கீந்திடவுஞ் சுக
மதாமே.

இ-ள் அஷ்டகுன்மங்களும் போகவென்றால் இந்த லேகியத்தை தூதுளங்காயளவு பசும்பாலில் இரண்டு வேளையும் ஒருபட்சம் வரைக்கு முண்டால் அந்தவினைபோய்விடும் ஏழைகளுக்குக்கொடுத்தாலுஞ்சுகமாகும் எ-று.

கொச்சகம்.

அமுரியுண்ணும்போதுவினை யாகமதிலுஞ்செனித்தால்
குமுறிவிடும்வாய்வதுவுங் குன்றியிடைப்பிரமாணம்
சமுசையம்பாராதுசன்னி தாபசுரநாவரக்ஷி
செமுதியிரைப்பிளைப்புமுதல் சேராமலோடிடுமே.

இ-ள் அமுரியை யுண்ணும்போது வினையானது வந்துசேர்ந்தால் அந்த வாயுவுக்களுக்கு குன்றியளவுகொடுத்தால் சந்நி, தாபசுரம், நாவறட்சி இரைப்பு இளைப்பு இவை ஒடிவிடும் எ-று. 1627

ஆறுசன்னியேழுசுரம் மஷ்டகுன்மங்கிராணியெட்டும்
வீறுமேஅசீரணமும் வெட்டைமுதலுஷ்ணமும்போம்
தேறுந்தசவாய்வுபத்துந் தீபனமில்லாதிடினும்
வேறுகூறிலாமலுமே விக்கல்கக்கல்விட்டிடுமே.

இ-ள். ஆறுசந்நி, எழுசுரம், எட்டுக்குன்மம், எட்டுக்கிராணி, அஜீரணம், வெட்டை, உஷ்ணம், பத்துவாயுவுக்கள், தீபனமில்லாமைவிக்கல், கக்கல் இவைவிட்டுப்போம். 1628

பேதினியிலதிசாரம் பேராமைகாசமதும்
மேதினியினிலுமிருந்த மேகமெல்லாமோடிவிடும்
தாதுபலனுண்டாகுந் தாரணியிலும்மெவர்க்கு
சூதகத்தின்வாய்வதுவுஞ் சொல்லாமலோடிடுமே.

இ-ள் அதிசாரபேதி, ஆம்பல், காசம், சகலமேகங்கள், சூதவாயு இவை யெல்லாம் நீங்கி தாதுவிர்த்தியுண்டாகும் எ-று. 1629

பச்சைகெந்திவாய்வுசட்க பாண்டுக்ஷயரோகமதும்
அச்சமில்லாசோகைமுத லாறென்பதுநாளில்விடும்
இச்சையிந்தலேகியத்தா லெய்தாமிருந்திவினையு
மிச்சமில்லாதேயகன்று வேறுவினைவாராதே.

இ-ள், பட்சகந்த வாயுசச்சவாயு, பாண்டுக்ஷயரோகம் சோகைஇவைகள் ஆறு அல்லது ஒன்பதுநாட்களில் இந்தலேகியத்தால் தீரும் எ-று. 1630

கலித்துறை

காரமுஞ்சாரமுங் கலந்துகரைத்துக் கருதியபின்
சிரந்தநீரின் தெளிவதும்வாங்கித் தெளிவதனில்
தாரமும்வீரமுங் கெவுரிபாஷாணந் தவளம்வெள்ளை
பூரமும்லிங்க மனோசிலைசினம் புகைசரக்கே.

இ-ள் காரமும் சாரமுங்கலந்து கரைத்தெளிவிறுத்து அந்தத்தெளி வில் தாரம், வீரம், கவுரிபாஷாணம், சங்குபாஷாணம், பூரம், லிங்கம், மனோ சிலை இவைகள் எ-று. 1631

புகைசரக்கான அதிதந்தோளாந்திரம் பொட்டணமாய்
வகைவகைக்கட்டி வன்னியிட்டேயனல் வாட்டிடவும்
பகைவிஷமேவி பறங்கிவைப்பாதிடம் படபடத்து
உகையிந்தப்பாகஞ் செய்கையினல்சுத்தி யுற்பனமே.

இ-ள். இந்தப்புகைச்சரக்குகளையெல்லாம் தோளாந்திரமாகக்கட்டி அக் கினியிலிட்டுவாட்டி பறங்கிவைப்புப்போல் படபடத்து செய்தால் சுத்திசெய் தவிதமாகும் எ-று. 1632

துயுசத்துவெள்ளைச் சூதமுங்கட்டித் துலக்கமதாய்
அரிவிந்துநாத மாரறிவாரிதி னுண்மையெல்லாம்
விரிவிந்தச்சுத்திக் கெதிரில்லைகாணிந்த மேதினியில்
கரிவந்துஎந்தன் குடிகொண்டுகெற்பங் கவியில்லையே.

இ-ள், துருசு, வெள்ளை, ரசம் இவைகளைக் கட்டித்துலங்கச் செய்தால் இந்தவிந்து நாதங்களையாரறிவார் இந்தஉலகத்தில் இந்தச்சுத்திக்குஎதிரில்லை யாகும் எ-று. 1633

சலிவருகாது வறுமைகளேது கசடில்லைகாண் ·
ஒளிவிந்தசோதி பிரகாசம்வீசு மொன்பதுவும்
சலியாமல்கட்டுஞ் சரக்குகள்சுண்ணந் தனிமெழுகாம்
பலியாதுவென்று வுரைசெய்யுமூலிகைப்பாதகரே.

இ-ள், தண்டங்களும், தரித்திரமும் வருவதில்லை, இந்தச்சோதிப் பிரகாசத்தால் ஒன்பது சரக்குகளும் கட்டிப்போகும் சரக்குகள், சுண்ணம், தனி மெழுகு இதைபலியாது என்றுசொல்லும் மூலிகைப்பாதர்களே எ-று.

வெண்பா.

மூலிகையைத்தொட்டு முக்கால்சுருக்கிடவும்
சேலியதுவெய்துமெனுங் கேள்விகாண்-மூலிகையால்
பட்டுப்புகைந்துவிடும் பாரசரக்கத்தனையுந்
தொட்டாலுங்கெட்டுவிடுஞ்சொல்.

இ-ள். மூலிகைகளைக்கொண்டு மூன்றுதரஞ்சுருக்குக் கொடுத்தாலும் சேலியாகும் என்னும் கேள்வியானது மூலிகையால் சரக்குகள்புகைந்து போம் ஆகையால் பெரியசரக்குகளைத்தொட்டால் கெட்டுவிடுமென்றசொல்லுக.

வாதிகளுங்கூடி மயங்கித்தழைசளினீர்
வேதையிருக்குதென்று வீண்பாடு-வாதிகளும்
மலைகள்குகைதிரிந்து வைத்திருந்தபொக்கிஷத்தை
அலைந்துசுட்டுக்கரியாக்கினார்.

இ-ள், வாதிகளெல்லாருங்கூடிமயங்கித் தழைகளின்சாற்றினால்வேதையிருக்கிறதென்றெண்ணி வீணகஷ்டப்பட்டு மலைகளு, குகைகளும் திரிந்து வைத்திருந்ததிரவியங்களை யெல்லாம் சுட்டுக்கரியாக்கினார்கள் எ-று.

இந்தவிதஞ்சுட்டு யிரசமதைக்கருக்கி
தொந்தித்திடுஞ்சரக்கைச் சோதித்தார்-இந்தவிதம்
வசப்படுமிதேது வழலையில்லாதோஷந்
தசப்புடத்தில்மூலிகையால் சாம்.

இ-ள், இந்தவிதஞ் சுட்டுஇரசத்தைக்கருக்கி சரக்குகளைச் சோதித்தார்கள், இந்த விதமானது வழலையில்லாத தோஷத்தினால்வசப்படுவதில்லையாகும் ஆனால் மூலிகையால் பத்துப்புடத்தில் மடியும் எ-று. 1637

இப்படியாயுலக மேமமிருக்குதென்று
கைப்பொருளைத்தோற்றுகட னாகினார்-இப்படியாங்
கேள்விமொழியுணர்ந்து கிலேசமதுவாகி
பாழ்வினைகள்சூழ்ந்துவிடும் பார்.

இ-ள், இந்தவிசமாக உலகத்தார்கள் பொன்னிருக்கிறதென்ற சொல் லிக்கையிலிருந்த திரவியங்களையுமிழந்துகடன்காரரானார்கள், ஆகையால் இவர்களுக்குப்பாழும் வினைசூழும் எ-று, 1683

விருத்தம்.

அம்புவியிலுஞ்சிலபேர்வாதிகூடியாகம சாஸ்திரங்களெல்லாம் பரிசோதித்து, நம்புதலாய் சிலபேர்கள் சரக்கைசுட்டு நசித்துநாள் தோறும்வினைநலியுண்டாகி, வெம்புரசமதைக்கொளுத்திவிழியுங்கெட்டுவெறிபிடித்தகுக்கலைப்போல் வேடம்பூண்டு, பம்பகமாய்பரதேசியெனும்பேர்கொண்டு பழம்பொருளைக்காட்டிப்பணம்பறிப்பாராண்டே.

இ-ள், உலகத்தில் சிலவாதிகள் கூடிஆகமசாஸ்திரங்களை யெல்லாம்பரிசோதனைசெய்துநம்பிச்சிலபேர்கள் சரக்குகளைசுட்டு நசித்து ரசசரக்குகளைச் சுட்டதினால் கண்கள் கெட்டு வெறிபிடித்த நாயைப் போல் வேடந்தாங்கிப்பரதேசியாய் பழம்பொருளைக்காட்டுவதாகச்சொல்லிப்பணத்தைப்பறிப்பார்கள்

ஆண்டவகத்தியனைசிவசத்திபூசை யானறிந்தே னகிலமதிலாருங்காணார்,உண்டேனோர்பன்னிரெண்டுமாச்சுமேலும்உள்ளமதுதனிலமுரிபுளியுங்கண்டே, சண்டனையுஞ்செயிக்குங்கணைகற்பங்கொண்டு சரமாரியேற்றநமன்தகித்துப்போனான், கண்டதிந்தசெய்தியெல்லாமுலகத்தோர்க்கு கனமாகத்தோற்றுமிந்நூல் காணீராண்டே.

இ-ள், அகஸ்தியர், சிவசத்தி இவர்கள் பூசையை நானறிந்தேனே,யொழிய உலகத்தில் எவரும் உணர்வில்லைதவிர. உள்ளததில் அமுரியையும்,புளியையுங்கண்டேன்.உடனே கற்பமுண்டேன். அதினால் எமனை ஜெயித்தேன் இந்தச்செய்திகளெல்லாம் உலகததவர்களுக்கு இந்நூல் காட்டும். எ-று

மதனகாமேஸ்வரதயிலம்-வண்ணச்சிந்து-தரு.

மதனகாமேஸ்பரதயிலமிதாமையா-மதிமோகனமாமயல்
மன்மதசுரூப சுகாதிதமாமையா.

இ-ள் இதுமதியை மயக்கத்தக்க மன்மத சொரூபசுகம் விளக்கும்மதனகாமேஸ்வரதயிலமாகும் எ-று.

சுதனருளால்சுகதேககசுகாதிதவாசம்-சாந்துசவ்வாது-சுகந்தபரிமளகஸ்தூரிவீசும்விலாசம்-அப்பிரேக செந்தூரந்-தொழுதருள் குறுமுனிகமலபொற்பதமலர்பணிய-சதுர்பலங்கொண்-டமுரிமூலப்புளியன்னீரினில்கடலைப்பிரமாணந்-தெளிந்தநீரில்-அப்பிரேகமதிலிட்டனலிநீர்சுண்டிடும்வாட்டிக்-குளிக்கல்லினி-லடக்கிநாதவிந்துநீரூட்டியிணைபிசகாதாக்கிடுமேதிரிநாளினையாமலுமெழுகாய்பதமாகுமவ்

விதமாய்வருதல் வழித்தேரவிபில்லையுமழகாய்-உன்னிதமாகவும்-ஆ
ச்சரியமகலடக்கிடுமே லகலதுமூடி-மண்சீலையேழு-மாவியதுஞ் செ
தரு மனுஞ்சந்துகள்கூடி-ரவிமுகத்தி-லருணனொளிவுபட ஆறவும்வா
லைரவியிலடக்கி அம்புவமீதில்-ஆவினெருவில்புடமைம்பதுகையெரு
வினில்தாக்கி அக்கினிவீசு ஆறவும்பூமியதுக்குளாவிதானியபுடமாறி
யம்பிரேகம்வாங்கி, அவ்விதபுடமீரெஞ்சு இவ்விதநாதவிந்துநீரேறி-
மெழுகுபதம்-ஆவல்விடும்விடமல்லாடிரண்டுதினமாட்டி- அன்னுள
து-சென்றப்படியதுவழித்ததுகதிர்முகந்தனிலூட்டி-யிரவிதனில்.

இ-ள் அகஸ்தியருடைய திருவடிகளைப்பணிந்து நான்குபலம்அப்பிரக செந்தூரத்தை அமுரியிலிட்டு அடுப்பில்வைத்துச் சுண்டுகிறவரைக்குமெரித்தும்பின்னெடுத்துக் கல்வத்திலிட்டு நாதவிந்து நீர்வார்த்துமூன்றுநாள்வரைக்து மரைத்துமெழுகுபதமானால் வழித்துபில்லையாக்கி அகலிலிட்டு நன்றாயுலர்த்திமேலகல்மூடி ஏழுமண்சீலை செய்து ஐம்பதுவகை எருவில் புடம்போட்டு ஆறினபின்னெடுத்து இல்விதமாகப்பத்துப் புடம்போடவேண்டும் எ-று.

அகோரப்பிரகாசசுவாலையுமனல்படவீசு-அதிதசுகந்தா- ஐஞ்சு
புடமதுவாகிலுமற்புதநேச-மல்லியின்பூநீர்-அம்பிகைமாதுசுகந்தரே
வ்விதகூறு- குப்பிதனில்-அருளாகசெயம்பெறவேகமதனொளியின்
வாறு-குளிகல்வினில்-அம்புவியோரறியாமல்கெம்பீரசெந்தூரமிதை
நாட்டி- சருஞ்சாவனுதிர-மன்னுள்முழுதுமெழுகதுபதப்வருதலுமா
ட்டி-உறவானபின்பு- அதிதகதிர்முகவனொளிவுபடமிகவுந்தாக்கி- சி
றுசின்னியாலெனும்-அவுழ்தமதின்கீழ்மேலுமரைத்து- மூலிசைந்து
மாக்கி-அகலிலூட்டிகவியமண்சீலை யேழுமேத்தி-மார்க்கமதாக-மதி
யில்குழியிழிசாணிழிய அன்பதுகையில்தாழ்த்தி-வன்னியைமூட்டி-
அருள்குறுமுனிதிருவடிதொழுதர்ச்சனை துதித்த- அங்கியைப்பூட்டி
அதிரிடவுங்கண்டதாரைகொண்டாவியைவிதித்து- மதிமலர்கொண்-
டிருவினையொழியமுப்பாழ்கடந்தப்படிதாண்டி- அம்பியாயோகம்-
வரும்பரசுரூபராஜங்கபூபதிபெனும்வேண்டி-துருயாதீதத்தி-லறிரெ
ண்கலைபிரளாமனும்ரேசித்தயூதி-அடிபணிந்து-அக்கினியெனுமனல
ற்றுச்செந்தூரமிதைசோதிஆராதனைசெய். மதன

இ-ள். இவ்வண்ணம் ஐந்துபுடந்தீர்த்த பின்னர் அரைக்கல்வத்தில்போட்டு சாவல்ரத்தத்தாலரைத்து மெழுத பதமானபின்பில்லைதட்டியுலர்த்தி சிறுசின்னி: ஆல் இந்தத்துளிர்களையரைத்து பில்லைக்குமேலுங்கீழுமாகவைத்து நடுவேபில்லையைவைத்து மேலும்கல் மூடிமண்சீலைஏழுசெய்து எருவில் புடமிட்டு பரயோகசமாதியில் வாசியைமாறுதபடி வைத்துப்பின் அக்கினியைமாற்றிசெந்தூரத்தை சோதித்துப்பார் எ-று. 1642

தாபரமெட்டுசரேழுலோபங்களும் வசியஞ்செந்தூரமுண்ணாகி
ருபாகரசுவாமிக்குவாணசுரூபிகள்வசியம்-மோகனமாது- மோகனி
தாகசுசாதவைபோகிகள்வசியம்மதனவித்து-வாதிருகால்படி ஆவின
மிர்தமதுபாகம்பாண்டத்திலூட்டி-அக்கினிவீரஆவாரையின்கம்பது
ப்நீடி*கமலாக்கினி- அனல்படவேபதம்வருமேதொக்கிடுமேட்டி அ
க்கினிபாற்றி-மிக்கனலாவிபிகழ்க்திபிறக்கிடுமோகம்-யிப்புவிதனிலு
ம்-பிரவுசுடநீரில்வீசாமனுமாற்றிடு வகம்-மதனவித்து- வாரமதாகி
வரும்பதமாறியாமல்கிழனுலாவி-வாலையெனும்பழம்பாண்டமதிட்
டுமலாமல்குழுக்தயிலம் வீரசுகந்தசுரோதமன்மதபோகம்- விரகலா
கிரிமாதுமடந்தையர்நீத விஞேதசம்போகக்-காமலாகரி-வாதுபோ
ராடல்தூராதுரைராஜநும்வசியம் - வையகமீதில் மதனகாமேஸ்வர
தயிலமிதாகிபாகசியம-குழித்தயிலம்-வாடை வீசாமனுமாற்றிடு மெ
ளிவராவேகம்பயிரவத்தின்- மலரடிதொழுதருள்செதிபெறுமிருபத
யோகம்முத்திபெறவும். மதன

இ-ள் எவ்வித சாவரங்களும் பதினன்குலோகங்களும் வசியமாகும்மத
னவிரைநான்குபடி ஆவின்பாலில் ஒருபாண்டத்திலிட்டு அடுப்பேற்றி ஆவ
ரைவிறகினலெரித்துச் சுண்டியபின் அதைக்குழித்தயிலம்வாங்கி, தருமதே
வதையின் திருவடிகளைத்தொழுது மோட்சமடையவும் எ-று, 1643

அதிவிதகுறுமுனியருளிய அவுழ்தசெந்தூரம்பலமிடையொன்றறியு
ஞ்சுத்தித்தகெந்தியதுசமனுறவுசெய்விதூரம்-வெண்ணவியொன்று-
மதூரமும்வகையதும்வசனிருளிக்கல்லினில்தூளாய் மத்தித்திடவும்
மதனவித்திதினிடதயிலம்விட்டிழையதுயாளஒருசாமநேரமாயரை
போலதுவட்டியரைத்தெடுதங்கம்-மெழுகதின்பத-மன்மத சுரூப சி
காமணிதேவப் பிரசங்கம்-வசிகரமைய-மாற்றிடுமேவழித் தேற்றியு
ண்டையதுபோலாக்கிற்- சீலையதனில்வரிசைய தாயொருகிளியது
போல்பதமாக்கி-பின்கலையத்தில்-மதனவித்தாகிய தயிலம்விட்டொ
ருபடிமாட்டி-யிருபக்கத்தில்-வாராதுவாய்சில்லுவாங்கிக்கம்பதுகொ
ண்டுபூட்டி-நடுமத்திபம்-வல்லமை யாக்கிளிமயிரதின் கயிர்கொண்டு
மாட்டி - வன்னியைமூட்டி - வற்றவற்றிடுமத்தன் தயிலமெனுமது
கொண்டேட்டி- தீபாக்கினிகொண் டக்கினிசூடுதுவினிலது சுருக்கது
வனலாவி-கெந்திமெழுகு-அதுவரும்பதமறியனலது மாற்றிடலாவி-
கலசத்தினில்-விடுமேவெள்ளாட்டமுரி பதமாப்படியது கொண்டித
மாய்-சாமந்தனிலும்விதமாய் கமலாக்கினிவிசையாய்சுருக்கேறிடுமி
யல்பாய்-தொக்தமேறிடும். மதன

இ-ள். குருமுனிவரருள்செய்த ஒஷதமாகிய செந்தூரம் ஒருபலம் சு
த்திசெய்தகந்தகம் ஒருபலமும், வெள்ளைபாபி அதிமதூரம், இவைகளும் ஒவ்

வொரு பலமாக எடுத்தகல்வத்திவிட்டு அந்தத்தயிலத்தால்ஒருசாமமரைத்து
மைபோலானபின் வழித்துஉண்டைபோலாக்கி சீலையில்ஒருகிளிபோல்கட்டி
ப்பதமாக்கிப்பின் கலயத்தில் இரண்டுபக்கத்தில் தயிலத்தைவிட்டுஅக்கினியி
லேற்றி வன்னியை மூட்டி மெழுகுகலசத்தில் விடுத்துவெள்ளாட்டமுரியை
பதமாய் விடுத்துக் கமலாக்கினியாயெரித்து.எ-று 1644

மிகவுமெடுத்துமறுகலைமதனிலிடு வேகம் - வெண்ணுவிணுதல்-
புதமுமமுரியதுபின்பொருகலயந்தனில் பாகம்-கிளிக்கொண் டேற்
றி-சுடர்கள்கவியகனல்தொடுத்துக் சூக்ஷமதாகசாலஞ்-சுருங்குதலா
ய்-துடர்ந்துமூன்றுவிசையுங்கடந்து தொந்தமேறிடுஞ்சார்வாய்-கா
மேசரத்தைகோமுட்டிமாதளங்கனி குடைந்து அதுக்குள்நாடிகுறு
ப்பாய்-மண்சீலையேழும்-யிருபத்துடனெருவிலிருத்திப்புடமதுபோ
ட்டெடுத்து - ஆறிடும் பாகம்-யிசையகவசம் பிறித்திதனைக் குளி
க்கல்லினில்விடுத்து-கவசமெடுத்-திவ்விதத் தயிலந்தன்னை யிட்டுமத்
தித்துச்சிமிளேத்தி சடாட்சாங்கொண்-டெட்டெட்டும்மட்டவசியம்
நிஷ்டையுருல்க்ஷமது சாத்தி-சேயமதாக - அவிழ்தமெனு மதனமா
மோகக்காமே சரத்திலாடும்-அம்புவிதனில்-அகிலபுவன செகமதித
லோகாதிதமுங்தேடும்-அஷ்டதிசையும்- அண்டரண்ட பகிரண்ட ம
ண்டலமுமகிழும்-நவசித்தர்கள்-அர்ச்சித்து மதியமுர்த முச்சிதத்து
டன்மதுரம்புகழும்-அருமறைகள்-ஆகமங்களும்புகழ்யோக விதியும
கிழுமாய்ந்து-ஞானேப்-பிரசங்கம்-அடிபணிந்திவர்-துதிமதுர செங்
தமிழ்சிந்துபாய்ந்து-அவுழ்தமெனும். மதன

இ-ள், மறுபடியுமெடுத்தமறுகலசத்தில் கிளிகட்டி அக்கினியிலேற்றி
யெரித்து ஒருசாமமானபின் மூன்று விசையானபின்கடந்துஎடுத்து . இந்தக்
காமேசுரத்தை கோமட்டி மாதுளங்கனியைக்குடைந்துஅதற்குள்இதைவிட்
டுமண்சீலை ஏழுசெய்து இருபத்தோரெருவில்புடம்போட்டு ஆறினபின்னெடு
த்துக்கவசத்தைப்பிரித்து மீண்டும்தயில மிட்டுமெத்தித்துச்சிமிளில்வைத்துச
டாட்சரத்தால்பிரானஞ்செய்துமற்றயாவர்களாலும்துதிக்கப்பெற்று எ-று.()

அலறுநாலாயிரத்துநானூற்று நாற்பத்தெட்டதுமதமாய் - அ
னந்தநோய்கள்-அக்கிரமஞ்சன்னி யீராறிலகுமோரேழுசன்னிவிவு
மாய்-கெந்திமெழுகு-அண்டத்தினுச்சியைக்கீறி கண்டுடன் கடுகளத
அரக்கி-மத்தித்திடவும்-அதிதபூதவேதாள பிதுர்கள்முதல்குறுக்கி-
ஆத்துமம்விட்-டதுவிட்டோடியகலு மனந்தயோசனைதூரமனத்து-
மதுவினுக-அஷ்டகுன்மங்களுமெட்டு துஷ்டநீர்க்கோவையுங்கட்டி
யகற்று மகிசர்ரங்கள்-ஒரெட்டுக்கிராணியது மீரெட்டுச் சூலையதித
மோடுமினமறுந்து-மேதித்த பிரவிதனில் விடுமேகடுகளவுசாடும்-கா
மேசரத்தில்-யெய்தும்பாண்டு ஈரெட்டுபழுதாய்போகும்வினைகள் ப

டுமே-விரகலாகிரி-யின்பமதாகிய போகமிதற்குக் கதலிதனிலிடுமே என்னுப்பிரமாணம்-காராவினமிர்தம்படிகாச்சிடு முக்காலாய்வருங் கருத்தாயுள்ளுக்குணர்ந்து-கவிய பச்சைகற்பூரம் திவ்விய சந்தனத்தோடு அரைத்து-மேலும்பூசி-பாதாதிகேச மென்சாணும் பூதாதி ஐந்தும்பரவிபாயும் பரிமளாதிபரிபூரணவிசிதஒளிவாய்மன்மத சுரூபவடிவா-யெங்களுக்கும்பிரகாசஉல்லாசமாகவுலகில் சல்லாபத்துடனடையுலாவ-ஸ்திரீமோகவின்பம்-உச்சிதமாகத்துடர்ந்து படசமாயெதிர் கொண்டோடிப்பணிவா-ரட்சியுஞ்சுவாமி. மதன

இ-ள், நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டுவியாதிகளும், போகுமெழுவகைசங்கைகளும், கந்தகமெழுகைஉச்சியைக்கிண்டி ஒருகடுகளவை அரக்கிமத்திக்க எமனும்வச்சனுகமாட்டான், அன்றி, அஷ்டகுன்மம், நீர்க்கோவை அதிசாரம் சூலை, இவைகளுக்கு எருமைத்தயிரி லிடவேண்டும், பாண்டு, விரசலாகிரிக்கு வாழைப்பழத்திலிடவும், பச்சைக்கர்ப்பூரம், சந்தனம்: இவைகளையரைத்து பாதாதிகேசம் வரைக்கு மூள்ள என்சாணுடம்பும் பரவி ஸ்ரீபோகத்தில்மிகவும் பிரியமுண்டாய்போகிக்க எதிர்கொண்டுசுவாமி? எனரட்சியும்

உபநயனமாதுகள்விதமதனலீலைகளுயர்ந்து-ஒரேழுகடிகைஉக்கிரமதாகிய விந்துநிக்கிரகத்தானுவிடாமனுணர்ந்து-ஒருராத்திரிக்குள் ஒருமித்தனுடனிருவர்பருவத்துடன்சம்போகம்புணர்ந்து-உனைவிடாமல்தனுவொத்ததிர்ந்து இடைதுடையைத்திருகிகுழை மலர்ந்து-உபஸ்தமது-கனத்துஅடிநடுமுன்தடித்துப் பொருத்துமதமுனைந்து-தசநாடியுமிருத்துக்கப்போதுக்கப்போ பருத்துப்பசும்பாலுடனி நூர்ந்துபின்போதிளநீ-ரஞ்சிதத்துடனும் பஞ்சதாரையைப் புகட்டியதிலுறவாய் தாம்பூலத்துடனும்பஞ்சதாரையைப்புகட்டி யதிலுறவாய் தாம்பூலத்துடன்-கொஞ்சிடும்பச்சைக்கற்பூரம் விஞ்சையதுவாயிழைத்து அறிவாய்-அடைகாயுணர்ந்துதேகாதிமுழுதும்வென்னீர் தெளிவாய்ப் பிடிப்பித் துடனிசைவாய் - தாதுவிடாது - உண்பதுநிம்பம்பழத்திலுள் விரையரைத் துரட்டிப்புணர்வாய்-பாக்கதுப்பிரமாணம் பொங்கமதாகிய விந்துபொருந்திடாமலுங் கக்கும் போக்கும்-காமசலநீர்எங்கெங்கும்வேர்வைகள் பாயுமிளப்புஞ் சோபதாபங் கொண்டிருக்கும்-என்சாணுதேகம்-அங்கங்கேநாடி தளர்ந்துஅசதிகாதுக்குக்குண்டாகியலர்வாள்-அன்னோரமேநீ-தங்கமாகு மதனதயிலமெனுமயனந்தருவாய்- சோபங்க அதீரஙிக்ஷபத் துடனுணர்ந்து நினைவாய்சதாகாலஞ் சம்போகி-சித்தர்களானால் - உச்சிதபோகங்கள் செய்துஉருவாய்நாதசையோகி-ராஜாங்கயோகி. மத

இ-ள், மதனலீலைகளுபர்ந்து எழு நாழிகைவரைக்கும்விந்தவெளியிடாமல்ஒருராத்திரிக்குள் இரண்டுபெண்களை சம்போகிக்கலாம், அன்றியும்ஸ்ரீகள் உன்னைவிடாமல்தருவோடுதேநலைச்சேர்த்துக்சொள்வார்கள், உன்னுடைய

லிங்கமானது தடித்துப்பொருந்தும், நாடிகளும்முருக்கேறும், அப்போதை
க்கப்போது பசும்பாலுஞ் சர்க்கரையுஞ்சேர்த்துக்கொள்ளவேண்டும், தாம்பூல
த்துடன் பச்சைக்கர்ப்பூரம் பூரத்தை யிழைத்துத்தின்னவேண்டும், பின்னர்
எலுமிச்சம் பழத்தின விரையையரைத்து கொட்டைப்பாக்குப்பிரமாணஞ்சா
ப்பிட்டால் வித்துவெளிப்பட்டு போகமானது மிகவுஞ்சிலாக்கியத்தை யுண்டு
பண்ணும் எ-று, 1647

ஆண்டவன்சொற்படியாதிமுனிவருரைத்ததமிழமிர்தம் அரும
றையோர்-உண்டுணர்வதாய் வினைகளின்றொழிவதே யுலகிலுகமைம
துவாக்கியம்-பைந்தமிழோதிய சிந்துபதமா யருளவின்பரசமாய்-வி
தித்தைஆசான்-தந்தைமதிபிந்தவிதிசெந்தமிழ்வினோதகாமேசரமா
ய்-வேதசாரத்தின்-சுந்தரசோதிபிரகாசமந்திரமவுனமலர்பொழியும்
-சுயம்புலிங்கஞ்-சொர்க்ககயிலாசபூரண நற்கமலமாமதுரம்வழியும்-
பேரின்பவெள்ளம்-செந்தமிழமிர்தமதி சந்திரமதுரகலையிழியும்-சில
சமையம்-தென்பொதிகைமேவிவளரென்புகழ்செகாதி ஜெகந்தழை
க்கும்-சிவசெந்துகள்-செவ்விழிக்கர்கசெந்தூரமைவிழிக்காமயூபிகள்
வசிபம்-செனனவாழ்க்கை-விந்துநாதமுஞ் செழித்து ஐந்துபூதமும்
வளுத்துபிருவாம்-விசிதாரத்தினம்-அந்தமுமன்மதனைப் போலாவியு
ம்வளர்பிறை கொண்டாகும்-அரூபியாகி-சந்திரசூரிய ருள்ளவரையு
மெங்கும்பிரகாசந்தழைக்குஞ்-சுழியின்முனை-வருமே யெண்கலையெ
ட்டு மதியமிர்தமுமூட்டுமமைக்குந்-தெட்சணாமூர்த்தி-அடியன் திரு
வள்ளுவனருளுமதுரவாக்கியம் வகுக்கும்-விதித்தவிதி-மதனகாமே
ஸ்பரமும்வாழிமேன்மேலும்வாழி-வாழிகுருவினருள். மதன

இ-ள், இந்தமனதகாமேஸ்வரசவிலமானது ஆதிமுனிவராகிய அகஸ்தி
யருரைத்த மேலான அமிர்தமாகும், ஆகையால் ஈரேழுபதினான்குலகங்களி
லுமுள்ள சகலபிராணிகளெல்லாம்இதனால் மிகவும்வலிவடைந்தார்கள், ஆகை
யால்இப்போது திருவள்ளுவனாகிய நான் சொன்னேன், அதுபற்றிஇந்தத்தயி
லம் வாழக்கடவது, குருவின் திருவருளும் வாழக்கடவது, எ-று. 1648

விருத்தம்.

கும்பமுனியனுக்கிரக வுபதேசத்தால் குருவருளால் மதனகா
மேசரத்தைச் சொன்னேன், எம்பிரான்கிருபையெனக்கெய்துங்கா
லை இப்படியான் பாடுபட்டேனெளியோர்க்காக, அம்புவியில் குறள
டியேன்பாடுநாளில் அனேகபேரென்னையெதிர்த்துஉரைதான் கேட்க,
வன்புலையர்க்கருள யில்லைபெரியோர்கேட்டு மனமகிழ்ந்துஆண்டை
யெனவாழ்த்தினாரே.

இ-ள், அகஸ்தியர்செய்த உபதேசத்தால் நான்மதனகாமேஸ்வரத்தைச்
சொன்னேன், எம்பெருமானுடையகிருபைஎனக்கிருந்ததனால்ஏழைகளுக்க

கப்பாடுபட்டேன், நான் இங்ஙனம் பாடும் போது அநேகர்என்னை ஆட்சேபிக்க அவர்களுக்குரைத்த பொருளைக்கேட்டுபெரியோர்களெல்லாம் மகிழ்ந்தார்கள்

பூருவத்திலன்னையெனுங்கெர்ப்பந்தன்னில்புகழாகயானுதிக்கும்போதிலேதான், மாறுகலை நாற்பதுக்குள் வயதுகாலம் வரும்படியாய்மெய்ஞ்ஞானவாய்த்ததாலும், வேறிருபத்தஞ்சதிலும் புவியில் தானும்வெகுவிசிதநூல்கள துவிதித்தேன்காணும், ஆரறிவா ரறிந்தவர்களவருமாண்டார் யானிந்தகாய கற்பமருளினேனே.

இ-ள், பூர்வத்தில்தாயின் கர்ப்பத்தில்நான்பிறக்கும்போதுவிந்துபாய்ந்த கலையினால் நாற்பதுவயதுக்குள்ளாக உண்மை ஞானம்விளக்கும்படியிருந்தாலநான் இருபத்தைந்துவயதில் சகலநூற்களையுஞ்சொன்னேன், இப்படிசொன்னகாயகற்பத்தை அறிந்தவர்களெல்லாம், இறந்தபடியால்இப்பொழுதுயாவரறியப்போகிறார்கள் எ-று, 1650

முன்னோர்களுரைத்தவிதிமுப்புவாறுமுடித்துவைத்தநூல்களதுமோசம்வாரா, தின்னவிதமென்றறி யாதாலுமாண்டர் எடுத்தமுறைகருவறியாதெய்தாதொன்றும், சொன்னவழியறிந்துகற்பமுண்டுதேறி சுழிமுனையில்வாசிகொண்டுசோதித்தாக்கால், அன்னைய பிராமியருளெய்துஞ்சித்தி-அனுக்கிரக பதவிபெற்று அமைப்பாராண்டே.

இ-ள், முன்னோர்களெல்லாம் முப்பூவால்முடித்துவைத்தநூற்களாகையால் மோசம்வாராது, ஆனால் அதில்சொன்னவற்றைஇன்னவிதஞ்செய்வதென்றறியாமையால் அதில் சொல்லப்பட்ட பாகங்கள் முடியாதென்றுசொல்லுவார்கள், அதை உள்ளபடியேயறிந்துகற்பமுண்டுசுழிமுனையில்வாசியையேற்றினால் என்தாயாகிய அபிராமியின் திருவருள்கைகூடும் எ-று. 1651

வாதவயித்தியமூலப்புளிசுன்னத்தால்மருவிதிருநடனமிடும்வாலைதேவி, நாதவிந்துகாரமெனுஞ்சாரத்தாலும் ஞானவெட்டிமுழுது நிறைவேறுங்காலைகா தமில்லை தூரமில்லைநமக்குள்நின்றகருவறியாநாளேதுகாலமேது, ஓதுமிந்தநூல்களெல்லாமொன்றுலாச்சு உண்மையிதுந்துருதியினாலுபங்காணன்றே.

இ-ள், வாதவயித்தியங்களுக்குதவுகின்ற மூலப்புளியின் சுண்ணத்தினால் திருநடனம்பொருந்திய வாலையின் நாதவிந்தென்கிற காரசாரங்களினால் ஞானவெட்டியிலுள்ள பாகங்கள் நிறைவேறுவதால் நமக்குள்ளிருக்கின்றபரமத்தைத்தெரிந்து கொள்ளக்காலமேன்! நாளேன்! இவையனைத்தும் ஒன்றுலாச்சு ஆகையால் இது உண்மையாகும் எ-று. 1652

கொச்சகம்.

நாதவிந்தென்றறியாது நான்மயங்கினேன்சிலநாள்
பேதமகத்தீசர்சொல்ல பேர்களறிந்தேமகிழ்ந்தேன்

வாதமென்னமுப்புவென்ன வந்தவரலாறுமென்ன
பூதமஞ்சினாலுதித்த பூரணத்னைதக்காண்கிலரே.

இ-ள், நானும்சிலநாள் வரைக்குநாதவிந்துக்களின்பேதம்தெரியாமல்மயங்கினேன், பின்னர் அகஸ்தியர்சொல்லத்தெரிந்துகொண்டேன், வாதமென்பது-என்ன? முப்புவந்தவிதமென்ன! ஐம்பூதங்களினாலுதித்த பரிபூரணவஸ்துவைக் காணமாட்டார்கள் எ-று, 1653

பச்சையென்றவுப்பதுவும் பார்த்தாலுந்துய்யவெள்ளை
உச்சிதமாய்கொண்டுறுதி யுண்டதொருவுப்பதுகாண்
வைச்சபொருளாதியிலும் வாரிதினால்செனித்த
தற்சொரூபமாய்விதிக்குஞ் சங்கையினைதக்காண்கிலரே.

இ-ள், பச்சையென்ற உப்பைப்பார்த்தால்மிக்கவெள்ளையாகும், அதுவே உறுதியான உப்பாகு, ஆனால் ஆதியில்வைத்தபொருளானது தற்சொரூபமாய் விதிக்தும் ஆனால் இந்தச்செய்கையைக் காணமாட்டார்கள் எ-று.

சத்திசிவநாதவிந்து சாரமதுக்காரதும்
புத்தியதனாலறிந்தேன் புளியமுரியானதுவும்
வெத்தியிதுவிண்ணுமண்ணு மேவ்கிழுமாயிருக்கும்
சித்தர்கள்மறைத்துவைத்த செய்கையினைதக்காண்கிலரே.

இ-ள், நாதவிந்துக்களே சாரசாரங்களாம், இதைப்புத்தியினாலுணர்ந்தேன், புளியும்அமுரியும் ஆனதுவிண்ணுமல்ல, மண்ணுமல்லவாகும், இதசித்தர்கள்மறைத்து வைத்ததாகும், ஆனால் இதைக் காணமாட்டார்கள எ-று.

சூதவித்தையாவதென்ன சுச்சிலசுரோணிதங்காண்
வாதவித்தைசெய்துமோசொல் வாருதியைக்கண்டறியாங்
பாதையிந்தமார்க்கமெல்லாம் பாடுபட்டேயான்வெளியா
வேதமிதுவென்றுரைத்த மெய்க்குருவைக்காண்கிலரே.

இ-ள். சுக்கிலசோணி தங்களே சூதவித்தையாகும், வாரிதியைக் கண்டறியாதவர்க்கு வாதவித்தை கைகூடாது, இந்தமார்க்கங்களையெல்லாம்நான் மிகவுங்கஷ்டப்பட்டுணர்ந்து வெளியாய்ச் சொன்னேன், எ-று, 1656

கலித்துறை

சுழியாகியமுனை சிங்காரவீட்டின் சுகாதிதத்தில்
அழியாப்பதவி யருள்பெற்றுஞான அரூபத்திலும்
விழியாய்மனக்கண்ணு வேதாந்தசார வெளிதனிலும்
கழியாமல்காய மருள்காக்ஷிபெற்றுக் கருதினனே.

இ-ள். சுழிமுனையாகிய சிங்காரவீட்டில் அழியாதபதவியைப்பெற்ற அரூபப்பொருளின்கண்கண்ணோக்கம் வைத்துவேதாந்தமாகிய வெளியில் திருவருட்காட்சியைப்பெற்றுசிந்தித்தேன் எ-று. 1657

மதுரம்பெருகு மமிர்தப்பொழியு மதிரவியில்
விதாரங்கணைகொண்டு வீசிவிட்டேனந்த மெய்ப்பொருள்கண்
டெதிர்சேர்வைஞான துரியாதிதத்தி லிருந்துறவாய்
சுதனருள்வாசியை ரேசித்துநின்று துலங்கினேனே.

இ-ள், இனிக்கின்ற அமிர்தம் பொழிகின்ற மதிரவிகளில்கலையை வீசினேன், உடனேவெளிப்பட்ட அந்தமெய்ப்பொருளைக்கண்டு எதிர்சேவைசெய்து ஞானதுரியாதீதத்திலிருந்து வாசியைரேசகஞ்செய்து விளங்கினேன்,

வாசியைப்பாச மறவாமல்கண்ட மதினவழியாய்
நாசியில்வாசி நடவாமலூதி நங்கென்றுயான்
மாசிப்படாமல் மதியுண்டுஆண்டு மறுவருஷம்
தேசிகன்பாதம் பின்பொன்றுதள்ளி தெரிசித்தேன்.

இ-ள், மூக்கினின்றும் வாசியானது வெளிப்படாதபடி நங்என்றுஊதிமதியமிர்தத்தையுண்டு வருஷமானபின்மறுவருஷத்தில் வாசியைக்கண்டத்தின்வழியாய் குருவின் திருவடிகளின் செலுத்திதெரிசனை செய்தோம் எ-று.

மூன்றாண்டுயோகம் பிராணயவாசி முனைசுழியில்
ஆண்டாண்டுசென்று மூன்றாண்டில்வாசி யவடத்திலும்
பூண்டந்தமூலத்தைக் கும்பித்துரேசித்துப் பூரகத்தில்
தீண்டாதசோதி மணிவிளக்கேற்றி தெரிசித்தனே.

இ-ள். மூன்றாவது வருஷத்தில் பிராணாயாமயோகமானதுசுழிமுனைக்குப்போயஅவ்விடத்தில் வாசியைகிழத்திமூலததிற்கும்பித்துரேசித்துபூரிக்கும்போதுதீண்டாதசோதிவிளக்கை போற்றித்தெரிசித்தேன். எ-று

வெண்பா.

அரவங்கடித்தா லாண்டையினிசேளீர்
குறைவதுகாணது குற்றமில்லை-அரவமது
தீண்டினல்போதுஞ் சிரசில்விஷமேறி
மாண்டிடுவார்காயகற்பம்வாறு.

இ-ள். ஆண்டை சர்ப்பங்கடித்தால் குறைவுஒன்றுமில்லை, அதுகடித்தா
லோசிரசில்விஷமேறிமாயா சற்பத்தால் இறப்பர் எ-று 1661

உன்விஷந்தானேறி வுயிர்விடுமேயாமாகில்
தன்விஷத்தாலொன்றறியோன் சாட்சி-உன்விஷமும்
நிழலதுஉன்சாயல் நிற்கையிலுமாண்டு
தழலதுவந்தரவமது சரம்.

இ-ள், விஷந்தலைக்கேறி உயிர்போனல் அது விஷத்தாலென்றறியமாட்டேன், உன் விஷமுங்கூடச்சேர்த்து நிற்பதால் இறப்படதென்றறி. எ-று.

கண்டிதுபார்சாட்சி கற்கோடனாகிலுந்தான்
உண்டுகற்பசாதனைசெய் துலகில்-கண்டிதுபார்
ஙாபியதுபாஷண நஞ்சதுவுண்டாமாகில்
சோபமில்லைதாபமில்லை சொல்.

இ-ள். அசற்குச் சாட்சிசொல்லுகிறேன் கேள், சார்க்கோடனனால் வஸ்
திக்கனுண்டிருந்தால் கோபதாபங்களில்லையாம எ-று. 1663

விஷமுமமிர்தமதா'மித்துருவுஞ்சத்துருவும்
மழலையெனுங்கொண்டு அவர்மடிவார்-விஷவமிர்தம்
மெய்சொன்னேன்பொய்சொன்னேன் விந்துரசபாணம்
பொய்சொல்லுவாரில்லை பேச.

இ-ள், விஷத்தையும்அமிர்தத்தையும்மித்துருவுஞ்சத்துருவுமாகக்கொ
ண்டேமடிவார்கள் விஷமேஅமிர்தமாகும் ஆகையால் நான்இந்தவிஷயத்தை
மெய்யாகச்சொன்னேன், இதுவிந்து, ரசபானஞ்செய்தவர் சொல்லாகையா
ல் பொய்யல்ல எ-று, 1664

நாராயணசெந்தூரம்-தரு

ராஜமேகமகாராஜபூபதியிதுகாணும்-மதுமேகமகோதரம்
பூசிதமாய்வச்சிரகாயம் வலுத்திடுங்காணும்.

இ-ள், இதுமதிமேகம், மகோதரம்,முதலியவற்றைப்போக்கிதேகத்தை
வலிவுசெய்வதால் ராசமேகமகாராசபூபதியாகும் எ-று.

போசராச மகிபூபதி யெனுநள - ராஜமேகநாராயணசெந்தூ
ரமாசிலாமறர்மதிநிகர்கெந்தியு-மீசன்விந்துமிவையிரதமுமிருவகை
யிதுசரிசமனிடை-பணவிடையாவது-மதிமனேசிலையரி-தாரமிங்கிலி
கமுமிதுயிவையிதுபத-முறவுசெய்திரிவகை-யினமறிசரி பணவிடை
சமனுன்பதும். ராஜ

இ-ள், போசராஜன்முதலிய மன்னவர்களெல்லாம் மகிழ்ந்த இந்தநாரா
யணசெந்தூரத்தின் கிரமம் எப்படியென்றால் கந்தகம் இரசம்,மனேசலை,அரி
தாரம், இலிங்கம், இந்தச்சரக்குகளை ஒரு அளவாயெடுத்து எ-று. 1665

ஏகபூதபஞ்சாக்கினை வகையிது-தேககாரசெயநீர் தெளிந்தான
தில்-வேககத்தியெரித்தேபடிநீரினில் - பாட்டிக் குளிக்கல்லினிலும்
பதமருக்கனேடு மலரதிதரசமதனி-லுருக்கும்புளி சுன்னமொருகழ
ஞ்சதுவிடை-சுருக்குந்தின்பதம்புரசைமலர்சலந்-துரிதசிறுதும்பை
செருப்படியின்ரசம். ராஜ

இ-ள், இவைகளை கல்வத்திலிட்டு காரஜெயநீர்தெளிவால், நன்றாய
ரைத்து ஒருகழஞ்சு மூலப்புளி சுண்ணம் அதில்சேர்த்து முருக்கம்பூ, சிறுது
ம்பை, செருப்படி இவைகளின்ரசம் எ-று. 1666

மாதுமாதளையின் மருமலரிதமினில்நாதநீரது சலரசமதுபொ
ழிந் தாதுசிந்திமல்ருபையமெனுங்சலநீர்வாதுமாமயனமாயதுபதம்
வருதலில்-முருக்கன்மலரிதழுஞ்சலதிரசமேழும்வகைக்குவகையொ
ருநடிகையேழரையும், இருக்கமெழுதின்சுறுக்குந்திநந்தினம்-பெரு
க்குமிதுபதங்குறுக்குமேழுசாமம். ராஜ

இ-ள். மாதளம்பூவில் நாதநீர்தெளித்தெடுத்தரசம், சிந்தில் ரசம் இவை
களில் ஒவ்வொன்றிலு ஒவ்வொருநாழிகைவீதம்அரைத்து எழுசாமமானபின்.

ஆட்டிவழித்தெடுத்தருள் பெறகுருபலம்வாட்டிக் குப்பியதுக்
குள்மாற்றியேழுமண்சிலை-யூட்டிமருந்ததுக்குளுறவு செய்திடும் பத
ம்-வாட்டிரவியொளியிலனல்படகனலதுங்-கருதிடிமது குடமரைவி
தமனலது-வதுகுப்பி நிறையமண்ணாவுமதனில்-மறயமண்ணெழுசி
லையருள்பெற-துறையிந்தப்படிவிதமெனும்வாலுகையடுப்பில். ராஜ

இ-ள், நன்றாயரைத்து வழித்து எடுத்து குருவடி துதித்து குப்பிக்குள்
போட்டு எழுமண்சீலைசெய்து ஒருசட்டியில் மணலைகொட்டி அதில் இந்தக்
குப்பியைவைத்து அடுப்பிலிட்டு எ-று. 1668

யாகசாலையடுப்பதுவனலாவிசை-பாகமர்கஅறுசாமமுமிணைவி
டா-வேகமேகநாராயணசெந்தூரங்-தேகசித்திசெய்பாகமறிந்திடில்-
உசிதமெனும் வன்னிமிதமுமிகுபதம்-உதிரும்படியனல் பதறும்ப
கையில்லர்-உபையமறிவிதங் கவனமொருமன-முறுதினடுமையம்வ
ருகவெனும்புகழ். ராஜ

இ-ள், யாகசாலையாகிய அடுப்பின்மேல்வைத்த குப்பியை எரிப்பது மிக
வும் அதிசப்படாமலும் குறையாமலும் ஒரு அளவாக எரிக்கவேண்டும் எ-று.

யோகராசசிலயோகியெனும்பர-லோகலோக தெய்வலோகசெ
காதிகஞ்-சாகரக்கடல்புவனமதிகமும்-யாவருமகிழருள் பெறகுருப
தம்-பரமெகதியெனுமிடைகலை சுழிமுனைநடு-பதிபெறு மதிமலரமிர்த
சஞ்சீவிபதம்-பரவியசருவினிலுறவுசெய்திடுபிணி-பலபலவினையகல்
குலைகுலைந்திடுநோய்கள். ராஜ

இ-ள், உலகத்தின் கண்ணுள்ளயாவரும் மகிழும்படி குருபதமேபரகதி
யென்ற இடைகலை,சுழிமுனைநடு இவைகளில் தங்கிப்பலபலவினைகளும்போ
கும்படி குலைகுலையும் எ-று. 1670

பாசமாசைதுராசைவிஷைசனங்-கோசதீச விதாக்கிரகவேதனை-
பாலைகிரககவக்கிரகபசாசுக-ளேலசாதனைவாலைசஞ்சீவியது-பருதிய
லைதுமெதுபதங்குளிரினை - பதுகுடமுடிசிலைகவசமண் விலகிடில்-
பரிபுரசுகமலர்கிர்த மிவ்வவுழ்தமும்-பதனஞ்செய் வெகுபதமிதுரக
சியமது. ராஜ

இ-ள், பாசம், ஆசை, விநாசம், வேதனை, நவக்கிரகவேதை பசாசு இவை களும்விலகும், ஆகையால் இவ்வௌஷதத்தைவெகு பத்திரமாய்ப்பார்க்கவே ண்டும், எ-று. 1671

போதமெனுமனு பானக் திரிகடுகுதூள் -¦ போதமாவ தாடா தோடைதூதுவளையது மாதுவெனுங்கண்டங்கத்திரிபுட்டவித்-தேர் துரசமுடன்மதுரம்விட்டிழைத்திடில்-அதிகசெந்தூர மதிலரைபண விடைதினம்-விதிகனவிருபட்சம் விலகுநோயெலிகடி-மதிசாஞ் சுய மிளைவருமீரைம்பதகுலை துதிமலரடி-கெதிபெறசுழிமுனை. ௭௩

இ-ள், இதற்கு அநுபானமாவது திரிகடுகுசூரணம் ஆடாதோடைகண் டங்கத்தரி, தூதுவளை இம்மூன்றையும் பிட்டவியல்செய்து பிழிந்தரசம்இந்த இரசமுடையுங்கலந்து கூடதேன்விட்டு இதில் மேற்படி செந்தூரம்பணவெ டையைப் போட்டுக்கலந்து இரண்டுபட்சவரைக்குஞ் சாப்பிட்டால் எலிகடி, சுரம், க்ஷயம், ஈலை, இரைப்பு, சூலை, இவைகள் போகும் எ-று. 1672

வேறு-விருத்தம்.

நாதவிந்துகருவினல்மகாராசமேகவினைநாடாதொன்று
தீதுவருகாதனைத்துக்காளமேக ராஜாங்கசெந்தூரத்தால்
வாதபித்தசேத்துமத்தில்வரும்வினைகள்சிதறியதுமாறிப்போகும்
வேதமிந்தஞானவெட்டிமெய்ஞ்ஞானமறிந்தவர்கள் விளம்புவாரே.

இ-ள், நாதவிந்துக்களின் விசேஷத்தால் மேகவினைகள் எக்காலத்திலு ம்நாடாது, அன்றி இந்தக் காளமேக ராஜாங்கசெந்தூரத்தால்வாதபித்தசேத் துமங்களாலுண்டாகக் கூடியநோய்கள்வாராது ஆனால்இந்தஞானவெட்டியின் மர்மத்தை உண்மை ஞானமுணர்ந்தவர்களே சொல்லுவார்கள், எ-று. 1673

குருமுனிதானெனக் குரைத்தவுபதேசப்படியனைத்துங் குறித் தேனின்னூல்-வரும்வினைபொய்மாறிடவும் வாதவயித்தியமுநன்று ய் வசனித்தேன்காண்சருக்குருவுமறிந்துசிவசத்தியருள்பதம்போற் றிக்கருதுங்காலை-இருள்விளங்குமதிரவியால் பிரகாச ஒளியில்நின்று இனிகண்டேனே.

இ-ள், அகஸ்தியர் எனக்குச் சொன்ன உபதேசப்படி வாதவயித்தியங்க ளைச்சொன்னேன் இனிரவிமதியின் பிரகாசவொளியினின்றுநான்கண்டேன்

விருத்தம்.

கண்டபொருளின்னதென்று விளங்கலானேன் காசினியிலென் மொழியைக்சழித்தபேர்கள், அண்ட இடிவிழுந்து தலைதெரித்துப் போகும் அம்புவிபிறலவர்க்குவினையதீதங்காணும், விண்டபொருள் நாதவிந்தைதவெளிவிட்டோர்கள் மேதினியிலெழுபிறப்பாயுதித்துரா

யாய், தெண்டிரையில்நரகமெனும்வினைதான்சூழ்ந்துதினைக்குளமை த்தமைப்புமாய்மாள்வாராண்டே.

இ-ள், கண்டபொருள்களை இன்னதென்று சொல்லினேன், உலகத்தி ல்என் சொல்லைக்கழித்தபேர்கள் அண்டவிடி விழுந்ததலை சுக்கைப்போகும் அவர்களுக்கு வினைகளுமதிகமுண்டாம், இந்த நாதவிந்தக்களை வெளிவிட்ட வர்கள் எழுபிறவிகளிலும். நாயாய்ப்பிறந்து நரகத்திற்காளாவார்கள் எ-று.

வல்லபை குண்டலியினருள் பதமேபோற்றி வசனித்த ஞான வெட்டிவாக்கியர்தன்னை, அல்லும்பகலுந்துதித்துவருளில்நின்று அ னுதினமுமென துகுரு முனியைப்போற்றி, சொல்பிசகாதொழுது கற்பஞ்சாதித்தோர்க்குசொரனதெரிசனமுஞ்சுழிமுனையுங்காணும், இல்லறதிலிருந்துசிவஞானசூக்ஷம் இனியறிந்தோர்க்கிருவினைவந்தெ ய்தாதாண்டே.

இ-ள், வல்லபையின் திருவடிகளைத் சுதுதித்துசொன்ன ஞானவெட் டியை துதித்துக் கற்பஞ்சாதித்தவர்களுக்கு ழிமுனைதெரிசனங்காணும், இல் லறத்திலிருந்து சாதித்தவர்களுக்கும் வினைவாராது எ-று. 1676

கொச்சகம்.

நவலோகபூபதியை நாமருளநாதவிந்தால்
புவனசராசரமளவும் புகழ்விசையமென்னசொல்வேன்
குவலயத்தில்மானிடர்கள் கொடுமையினால்கோடிவினை
இவையனைத்துமேயொழிய இனியியம்பக்காண்கிலரே

இ-ள், நாதவிந்துக்களின் விசேடத்தால் நவலோகபூபதியைநாம்சொல் லுகின்றோம், இது உலகத்திலுள்ளமனிதர்களின் வினையனைத்தையுமொழிக் கும், ஆகையால் நாம் அதைச்சொல்லுகின்றோம். எ-று. 1677

தீராதுரோகவினை தீருங்காரசாரமதால்
வாராதுவிட்டகுறை வந்தாலிதுகிடைக்கும்
தேராதபேர்களெல்லாந் தேறுவதிந்நூலளவால்
மாறாதுயோகதிசை வந்தால்மறுபடுமே.

இ-ள், வினைகளாலுண்டானரோகமானது நீசாதாரணமருந்துகளால்தி ராது, அவைகளும் காரசாரங்களாலே தீரும், விட்டகுறையினால்கிடைக்கும்இந் நூலால் தெளியாதவர்களெல்லாந்தெளிவார்கள், யோகதிசைவந்தாலே மா றுபடும் எ-று. 1678

கலித்துறை

சாரத்தைக்கொண்டு காரத்தையூட்டித் தான்பிசைந்து
சூத்திரனால்வீடு சட்டிவிட்டேசுக்கில சுரோணிதத்தால்

ஊரலற்றேயுப்பு முற்பொருளாச்சுது உவ்வும்அவ்வால்
வீரமும்பூரமுங் காரமுஞ்சாரம் விளங்குவதே.

இ-ள், சாரத்தைதயெடுத்து அதற்குக்காரத்தை பூட்டிப்பிசைந்துசுக்கில சோணிதத்தால் உப்பானது ஊரலற்றுஉட்பொருளாச்சுது, அவ்வுமஅவ்வினு ல்வீரம், பூரம், காரம் சரம் இவைவிளங்குவதாம் 1679

அல்லாப்பெருமையுஞ் சொல்லால்விளைந்தது ஆண்டொன்றுபோய்
எல்லாமெனக்கு ளிருக்குதுபாரிவை யாரறிவார
மெல்லாரிதைக்கண்டு மெய்யென்றுநம்புவர்!மேதினியில்
நல்லாரைக்கண்டு வெகுநாளவர்பதம் நான்பணிந்தேன்.

இ-ள், எல்லாப்பெருமைகளும் ஒருவருடஞ்சென்றபின் சொல்லாலுண் டானதாகும், எல்லாம் எனக்குள்ளிருக்கிறது இவைகளையாவரறிவார் நானு நல்லாசிரியனைக் கண்டு அவருடைய திருவடிகளிற்பணிந்து தெரிந்துகொண டேன் எ-று. 1680

வெண்பா.

இன்னபொருளென்று யாவரறிந்திலார்
அன்னமதுவாய்நின்ற அம்பிகையை இன்னம்
பூசித்தாலெய்தும் புளியமுரியுண்டறியார்
வாசித்தாலென்னபலன் வாறு.

இ-ள், அம்பிகைப்பெண்ணை இன்னபொருளென்று யாவருமறியமாட் டார்கள், அதைபூசித்தால்கிடைக்கும் புளியாகிய அமுரியையுண்ணுதவர்கள் வாசித்தாலும் என்னபலன்? எ-று. 1681

வாசித்தாலென்ன வருமோபெருவாழ்வு
தூஷித்தால்சாஸ்திரமுஞ் சொல்லுமோ-வாசித்து
மாண்டாரனந்தம் வருமையதுசூழ்ந்து
பூண்டார்சுடுகாடு போய்.

இ-ள். வாசித்தால் என்னவரும், தூஷித்தால்சாஸ்திரஞ்சொல்லுமோ வாசித்துவாசித்து மாணடவர்களநேகர், ஆகையால்வாசிப்பதால் பயனில்லை,

நவலோகபூபதி-தரு.

நவலோகபூபதிகாண் அருள்-குரு-நாதவிந்தாலிதுகாண்.

இ-ள், இது நாதவிந்துக்களாலாகியநவலோகபூபதியாகும் எ-று.

சிவலோகபர கெதியடைமெய்ஞ் ஞானசிரோமய சித்தியருள் பெறும், நவரத்தினஒளி ரவிப்பிரகாசத்தில், தவமதிமலர்கமலபொ ற்பதம்.

இ-ள், நவலோகபாதிலையடைய உண்மை ஞானசித்தியைப்பெறும் நவரத்தினஒளியையுடைய தவமதிபின்தாமரைப்பாதத்தைப்போற்றி, எ-று.

நவ

சவமதாகிலுந் தாள்திறந்தன்னித, மிவையின்னதென் றெழிந் தாமூன்றேமுக்கால், குவலயந்தன்னிலு நமனுக்கிவ்வித அவுழ்தமும னுபானத்துடனருள். நவ

இ-ள், பிணமானாலும்வாரவைத்திறந்த எழுந்தமூன் றேமுக்கால்நாழி கைவரைக்கும் பேசக்கூடியமருந்தஇதவாகும், எ-று. 1683

தங்கமென்றால்பொன் னிமிளைரசிதமுந், தாம்பிரமுமயம் வங்க முநாகமும், இங்கிதமாகிய வெங்கலம்வெண்வங்கம், அங்கமதாகு ங்குடவனேடொன்பதும். நவ

இ-ள், பொன்னிமிளை, வெள்ளி, தாமிரம், அயம், லவங்கம், நாகம், வெ ண்கலம், வெள்வங்கம், பித்தளை இவ்வொன்பதும். எ-று, 1634

சங்குப்பாஷாணங் கெவுரிமனேசிலை, தாரம்வீரம்பூரஞ்சாதிலி ங்கத்தொடு, சிங்கிக்காடிக்கார மொன்பதிதாகிடில், பொங்கமதாய் ப்பதினெட்டுவகையுடன். நவ

இ-ள். சங்குபாஷணம், கவுரிமனேசிலை, அரிதாரம், வீரம், பூரம், சாதி லிங்கம், மிருதார்சிங்கி, காடிகாரம், இவ்வொன்பது மாயபதினெட்டும் எ-று.

சூதங்கெந்தியிரு பத்துவகைசமன், விதஞ்சரியிடை மேலிடுங் காற்பலம். நாதவிந்துகார காரங்கரைத்துநீ, ரேதுநாலுமொன்றுஞ் சேதம்வாராதிடில். நவ

இ-ள், ரசம், கந்தகம், ஆகஇருபதையுஞ்சமமாக வெடுத்து கால்பலம் கார சாரத்தை நாதவிந்துநீரால்கரைத்துயாதொருசேதமும் வாராமல் எ-று.

பூதமஞ்சுங்கூடி நாதவிந்தாச்சுது, பூரணமாம்மூன்று நாள்தெ ளிந்தானபின், மாதவிடாயிந்தநீ துக்குப்பெரு,பேதமில்லநாவலோ கத்தைதராவியே. நவ

இ-ள், பஞ்சபூதங்களுக்கூடி நாதவிந்துக்களாயின இப்படிமூன் றுநாளு நியபின் இதற்கு மாதவிடாய் நீரென்று பேராகும் எ-று 1686

பொடியிதும்ராவி போட்டிடும்நீரினில், புகழென்னநவபாஷா ணமும்பொடி, கெடிரசகெந்தி யவ்விதம்பொடி, துடியிது காரசார நீர்தன்னிலும். நவ

இ-ள். அந்தநீரில் நவலோகங்களையும் வாடியாய் ராவிப்போட்டு நவபா ஷாணங்களையும் பொடிசெய்து போட்டுரசகந்தகங்களையும் அப்படியேசெய்து

பலியவுமிந்தநீர் தனில்பாச்சியு, மடியமவுனலேற்றியடுப்பினில் அடிபத்திக்கரு காமலும் மன்னிபிட், டெரியுமேகம லாக்கினியாக வும். நவ

இ-ள், இவைகளை அந்தநீரிலிட்டு அடிப்பிடிக்காமல் கமாலாக்கினியா யெரிக்கவேண்டும் எ-று. 1688

சோதியிப்படிசுண்டிடும்பாகமாய், தொக்கிடுமே கொதித்தே
வெளிகாண்கிலார், சாதித்திடுங்கொதி சேதம்வராமலும், வாதித்து
நீர்சுண்ட வன்னியுமிட்டிட்டே. நவ

இ-ள், இப்படிபாகமா யெரித்துச்சுண்டி வருந்தருணத்தில் மிகசாக்கிர
தையாக எரிக்கவேண்டும் எ-ற, 1689

ஆதியிந்தநவலோகசிந்தாமணி, யாருரைத்தாரகத்தீசரருளினு
ல், மேதினியோர்கள் வரும்வினைக்காகவும், போதித்தேஞானமெய்
ஞ்ஞானவெட்டியெனும். நவ

இ-ள். ஆதியில் இதைச்சொன்னவர்கள் ஒருவருமில்லை, ஆனல், அக
ஸ்தியர்கிருபையால் உலகத்தாருக்குவரும் வினைகள்போக ஞானவெட்டியாகி
ய நானசொன்னேன் எ-ற. 1690

தொக்குமெறிந்து சுவறிடும்பாகத்தில், இக்கனல்மாறு தெரித்
திடுஞ்சாமமும், அக்கனலாலிருபத்துங்காரசாரம், பக்குவமாய் கட்
டிப் பார்க்கவுருகிடும். நவ

இ-ள், இவ்வண்ணமெரித்து சுவறும் பாகத்தில் நெருப்பை ஒரு சாமம்
வரைக்கும் எரிக்க உருகும் எ-ற. 1691

சக்கரம்போலவுந் தான்படித்தேசார, காரத்தினுப்பினுல் தா
ன்மடிந்தேவிடு, முக்கிரதியாற்றியொருதினம்வைத்து, உபாயத்துட
னுமுடைத்திடும்பாண்டமே. நவ

இ-ள், சக்கரம்போல் காரசாரத்தியல்பினுல் மடிந்து விடும்; அங்ஙனமா
யினபின்னர் நெருப்பையாற்றி ஒருநாள் வைத்து உபாயமாகப்பாண்டத்தையு
டைக்கவேண்டும் எ ற, 1692

இருபத்திரண்டுஇனமுங்கலுவத்தில், அதுவிட்டு அல்லிப்பூவதி
ன்சாரதில், சுரூபமுப்பு வதில்கழஞ்சியிடை, சுருவிதுவெனுங்கானு
ம்வரும்பதம். நவ

இ-ள். மறுபடியும் இவைகளைக்கல்வத்திலிட்டு அல்லிப்பூச்சாற்றுல்முப்
பூகழஞ்சு சேர்த்தரைக்க வேண்டும் எ-ற, 1693

அருபமிப்பொருளல்லிச்செழுமலர், தினமிந்தரசஞ்சேர்த்துஅ
ரைத்திடும், குருவிப்பொழிலகத்தீசரால்வந்த, சுரூபசித்தி சிந்தாம
ணியாண்டையே. நவ

இ-ள், இப்படியே,தினமும் அரைத்துவந்தால் சொரூபசித்தி சிந்தாமணி
யாகும் எ-று. 1694

வாரமரைத்து வரும்பதமாமெழு, காரசாரங்கன வேகத்தினு
லது, தூரமோடுவேதை தாம்பரமாகிடும், பாருங்குளிகைப் பச்சை
ப்பபர்வீதமாய். நவ

இ-ள், இப்படி ஒருவாரம் வரைக்குமரைத்து மெழுகுபதத்தில் பச்சைப் பயறுபோல்குளிகை செய்யவேண்டும் எ-று, 1695

காருமேகத்தினைகனபுகைசூழ்விதஞ், சேருஞ்செம்பதினால்சிறு விடுகட்டியபின், தாரும்பொடிசெய்து தான்புகைவிசினால், ஆருமறியாரதிதமுந்தங்கமே. நவ

இ-ள், மேகநிறமாய்ப்புகை சூழும்பதத்தில் எடுத்து செம்புக்குக்கொடுக்கத்தங்கமாகும் எ-று. 1696

நாலுமூலைசற்சதூரம்புகைபட, வாலைகுண்டலியின் மாமலர்தூவியுஞ், சோலைவயல்புக மும்பிகையால்வரும், ஞாலச்சுழிமுனைநாடியுநாண்மலர். நவ

இ-ள், நான்குமூலைசளிலும்புகைபடக்குண்டலிசத்திக்குமலர்தூவி அம்பிகையால் சுழிமுனையை நாடி எ-று, 1697

பேதாபேதம்பெரியோர்கள்விலங்கிய, நாதவிந்து ரகசியமறிந்தபேர், வேதவேசாரமெய்ஞ்ஞானவெட்டிகாண், பாதைபாதைபெருநூலிதுபாதையே. நவ

இ-ள், பெரியோர்களுடைய பேதாபேதங்களையும் நாதவிந்துக்களின்ரகசியங்களின் ரகசியங்களையும் வேதசாரமாகிய ஞானவெட்டியானது விளக்கிக்காட்டும் எ-று. 1698

## விருத்தம்.

பேச்சுரையின் குடுக்கைதனில்குளிகைதாக்கி லெருவையகத்தீசர்பதந்தொழுதுபோற்றி, வாச்சுதுநாலாயிரத்துநானூற்றுக்குமேல்வதுசொற்சங்காரப்பத்தெட்டுவருநோய்க்கெல்லாம், போச்சுதுகாண்சிவயநமவென்று இஞ்சிப்புகழ்பெறவுஞ் சுரசமதில்புகல்வீராகில், மாச்சிவிடும்பயறளவு முள்ளுக்கேற்ற வாதத்தாலெடுத்த சுரசன்னிபோமே.

இ-ள், பேய்ச்சுரையின் குடுக்கையில் குளிகையை வைத்து அகஸ்தியர் திருவடிகளைப்பணிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டாக வருகின்ற நோய்களுக்கெல்லாம் இஞ்சிரசத்தில் சிவயநம வென்று உச்சரித்துக்கொடுத்தால் வாதத்தினால் வந்தசுரம், சன்னி இவைபோகும் எ-று, 1699

பித்தசுரஞ்சன்னியதுக்கிடுமே தேனில்பிசகாது பயறளவுபின்வாங்காது, உத்தவினைக்கொருவேளைபூட்டும்போதுஉடலிலுள்ளசுரதோஷமோடுமாகில், செத்தசவமானாலுமெழுந்திருக்குந்தம்சிலேத்துமசுரசன்னியதுக்கிடுவீராகில் பற்றதுங்காண்முலைப்பாலில்பயறுப்பிரமாணம் பறந்துவிடுமேகசுரம்பயந்துபோமே.

இ-ள், பித்தசுரம் பித்தசந்நி இவைகளுக்குத்தேனில் பயறளவு கொடுத்தால் சுரதோஷங்களெல்லாம் போய்ச்செத்தபிணமானாலும் எழுந்திருக்கும்

மூலைப்பாலில் பயறளவு கொடுத்தால் சேத்துமசுரம் சேத்துமசந்தி,மேகசுரம் இவைகள் போகும் எ-று. 1700

சுக்குடனே திப்பிலியுமிளகுந்தூளாய் தொந்தித்துப்பயறளவுகுளிகையூட்டி, இக்குளிகையாயிஞ்சியதின் சுரசந்தன்னில் இயம்பிடுமேயொருவேளையி துவுண்பீராய்சொக்கிவிடும் விக்கல்சத்திக் குன்மமெட்டுங் குலைபதினெட்டும பறந்தோடுங்கண்டாய், பக்குவமா யமுதுகொள்ளுமிச்சாபத்தியம் பதார்த்தமென்ன இரைச்சிமீன் பகராதென்றே.

இ-ள், திரிகடுகு சூரணத்தில் பயறளவு வைத்து இஞ்சிசுரசத்தில் ஒருவேளைகொடுத்தால் விக்கல்,வாந்தி,அஷ்டகுன்மம்,பதினெண் சூலைஇவைகள் போகும் பாலாகும்இச்சாபத்தியம், மீன், கறி, ஆகாது எ-று, 1701

பறங்கியொடுசித்தரத்தைதமிளகுஞ்சுக்கும்பற்பதமதாய்பொடிசெய்துபயறப்பிரமாணம், நிரமதுவாகுளிகையிட்டுத்தேனூமட்டிதீண்டிடுவாராமாகில்தினமுமொன்று, குறைநோய்கள் குமரகண்டன்முசல்வலிப்புகுஷ்டம்பதினெட்டுமதுகுடிபோங்கண்டாய், அறம்வளர்த்த அம்பிகைப்பெண்ணருளால் சொன்னேன் ஆண்டையினிமதிதமெல்லா மருளுவேனே.

இ-ள், பறங்கிச்சக்கை சன்னராஷ்டகம், மிளகு, சுக்கு இவைகளைச்சூரணஞ்செய்துபயறு பிரமாணக்குளிகைகூடச்சேர்த்தித்தேனில்லழைத்துக்கொடுத்தால் சூலைநோய், குமரகண்டவலி,முயலகவலி,பதினெண்குஷ்டம்இவைகள் அம்பிகையினருளால் போகும் எ-று 1702

காயமொடு திப்பிலியுமரத்தைசுக்கும் கருதுங்கொடிவேலியின்வேர்பட்டையஞ்சும், சாயமுடன்வகைசமனுய்வறுத்துத்தூளாய்சாற்றிடினுங் குளிகையொன்றுதாக்கிமேனும், உபாயமுடன்வெருசடிப்பிரமாணந்தன்னில் ஊட்டிவிடுமொருதினத்திலோடும்வாய்வு, அபாயம்வருகாது அசிரணமும்போகும் ஐயிரண்டு வாய்வதுவு மகனுமாண்டே.

இ-ள், பெருங்காயம்திப்பிலி, சன்னராஷ்டகம், சுக்குசித்திரமூலவேர்ப்பட்டை இவை அஞ்சையும் சமமாகஎடுத்து வறுத்துப்பொடிசெய்த சூரணத்தில் இந்தகுளிகையொன்று சேர்த்துக்கொடுத்தால் வாயு அஜீரணம இவை போகும். எ-று. 1703

மிளகருணைதிப்பிலி லவுங்கத்தோடே மிளகுடனே சரிசமனுய்பொடிதான்செய்து, களங்கமில்லா ஆவினுடசுருதந்தன்னில் கருதியுமேகுளிகையொன்றுகாட்டிமென்மேல்,விளங்கிடவுமுண்டி தனையிச்சாபத்திய மிதுவருந்தநோய்களது விடுபட்டேபோம, தலங்கிடவுங்காசமறுஞ்சயக்ாசம்போம் சுழற்றலொடுபயித்தியமுஞ் கவறிப்போமே.

இ-ள், மிளகருணை, சிறுதிப்பிலிலவங்கம்மிளகுஇவைகளைச்சமமாகச்சூரணஞ்செய்து கூடக்குளிகையொன்றுசேர்த்துபசுநெய்யிலிழைக்துக்கொடுத்துஇச்சாபத்தியம் வைத்தால் க்ஷயம், காசம், தலைசுழற்றல் இவைகள்நீங்கிப்போகும் எ-று. 1704

கடுகுரோகணி யதுமிளகுஞ்சுக்கும்கண்டுபாரங்கியுங் கடுக்காய்க்கஸ்தூரிமஞ்சள், இடுமிதனைசரிசமனாய்சங்கன்சாற்றிலெட்டரைத்துப்புன்னைக்காயளவுநேரமை, கெடுதியில்லா அவ்விலைச்சாறதனிலூட்டிக்கிலேசமில்லாக்குளிகையொன்றுகிளர்த்துங்காலை, விடுமவுழ்தம்பாண்டுவிஷப்பாண்டுக்கேற்ற விப்புருதிசோகைமுதல்விலகுமாண்டே.

இ-ள், கடுகுரோகணி, மிளகு, சுக்கு, கண்டுபாரங்கி, கடுக்காய் கஸ்தூரிமஞ்சள், இவைகளைச்சமமாகஎடுத்துசங்கஞ்சாற்றாலரைத்துப்புன்னைக்காயளவுஎடுத்து அதில் குளிகை யொன்றுவைத்து கொடுத்தால் விஷபாண்டுவிப்புருதிசோகை இவைகள் போகும், எ-று, 1705

## சிங்கிபஸ்பம்-தரு.

சிங்கிபற்பமுஞ்சொல்வேனுண்டே-மிருதார்சிங்கி
ஜெயவிஜையசுன்னங்காணுண்டே.

இ-ள், ஜயவிஜயசுண்ணமாகிய மிருதார்சிங்கிபஸ்பத்தைச் சொல்லுகிறேன் எ-று,

செங்கமலபூபதிகங்கைநதிபெருகும், பொங்கடல்சூழ்வாரி செங்கநதியில்வளர், எங்கும்பரிமள சுகந்தசவ்வாதுவீசும், குங்கும சந்தனகெந்தமெங்கும்வாசமேவிய.

இ-ள். செங்கமல பூபதியும்கங்கை, நதிபெருகுகின்ற கடலாற்சூழப்பட்டவுலகத்தில் எவ்விடத்தும் பரிமளகந்தம் வீசுகின்ற எ-று, 1706

தங்கமெனுமம்பிகை பன்னிரண்டாண்டுமுதல், கொங்கைமதுவின்பங் திங்கள்மதியுணரும், எங்களியுமிவளாலிறவா துடனாயிரும், இருக்காயசித்தியு முருக்கமதாயளித்தாள்.

இ-ள், பன்னிரண்டாண்டு வரைக்கும் அம்பிகைப்பெண்ணைக்குறித்துத்தவஞ்செய்து அவளைவேண்டிக்கொண்டதின் மேல் அவள் கிருபைசெய்ததுஇதுவாகும், எ-று 1707

சந்திரபுஷ்கரணியில்ஸ்தானபானங்கள்செய்து, உந்தியின்மூலாக்கினை கொண்டுணர்ந்துவாசியோகத்தில், இந்திரபதவிபெற்றுஉரவியெனும்புளியை, அந்தியிலுணர்ந்துமாலை யசடில்லாமலுங்காணும்.

இ-ள், சந்திரபுஷ்கரணியில் ஸ்நானபானங்களை செய்துமூலாதாரத்தைக்கொண்டு வாசியோகத்திலமர்ந்து இந்திரபதவியைப்பெற்று இரவியென்றசொல்லப்படும் மூலசுழியை மாலையில் எ-று, 1708

மந்திரபஞ்சாட்சரத்தைமதியும்,ரவியிதென்று, மறவாமலுங்கு
ருவின் துரைசாமியின்சொல்வாக்கால், சந்தையப்படாமலும்மூலச
ரக்குமமுரியுண்ட, சாதகத்தாலெனது சரீரமிதாச்சுதாண்டே. சிங்கி

இ-ள், பஞ்சாட்சரங்களைமதிரவியென்றுமறவாமலும் துரைசாமிசொல்
லுகின்றவாக்கினாலும், மூலப்புளியையும் அமுரியையும்முண்ட சாதகத்தினா
ல்இந்தச்சரீரமாச்சுது எ-று. 1710

மதியென்றமுரிநாலுபடிநீர்பாண்டத்திலிட்டு, விதியென்றதுவு
ம்ரவிவிளங்குமிதிலொன்றிட்டு,பயதிவதுகரைத்துப்பாகமதாய் வடி
த்து,அதனைமூன்றுநாள்வைத்துஅள்வாய்தெளிவிருத்து. சிங்கி

இ-ள், மதியமுரியாகிய பனிநீர் நான்குபடி ஒரு பாண்டத்தில் விட்டுயூ
நீறு ஒரு படி அதிலிட்டுக்கரைத்துப் பாகமாய் வடிகட்டி மூன்றுநாள்வரைக்கு
ம் தெளியவைத்து இறுத்த எ-று, 1711

நீதிமாய்வீரமுஞ்சார நேர்சவானதுசினமுங்,கெதியாய்பலம்வ
கைக்குக்கெணிதம்பொடியாய்ச்செய்து,அதிதகாரசாரநீரளந்துபடி
தான்வாங்கி,மதுரமதாகும்வெள்ளை விளங்கும்பீங்கானிலிட்டே.

இ-ள், சரியாகவீரம், சவார்சாரம், படிகாரம், இவைகளை, ஒவ்வொருப
லமெடுத்துப் பொடிசெய்து முன்காரசாரநீரில் ஒருபடி எடுத்து ஒரு வெள்
ளைபீங்கானிலிட்டு எ-று. 1712

காரசாரமதுகேருவியபீங்கானிலிட்டு,நீரதனில்பொடியைத்தா
க்கி நெறியாய்ச் சொல்வேன்கேளீர்,கூறயான்மிருதார்சிங்கிக் குண
மாய்பலமிரண்டு, வீரமாய்செயநீரிலூட்டி செலுத்துஞ் செயநீரிலா
ண்டே, சிங்கி

இ-ள், அதில் முன்செய்த பொடியைப் போட்டு மிருதார் சிங்கி இரண்
டுபலம் அந்தச் செயநீரில் போடவேண்டும் எ-று. 1713

சீராயயக்கம்பினால் செயநீரதைதக்கலக்கிப்,பாராய்முப்பூவின்சு
ன்னம்பாச்சிடுகழஞ்சியிட்டு, வீராய்கதிர்முகத்தில்விசிதநாளுக்குநா
ளும்,போராய்வற்றவும்விட்டுப்பீங்கான்பதனம்வைத்தே. சிங்கி

இ-ள், நன்றாய்க் கம்பியினால் கலக்கி முப்பூச்சுண்ணம் ஒருகழஞ்சு அதி
ல்போட்டு வெய்யிலில் வைத்து வற்றும்படிசெய்து அந்தப்பீங்கானைப்பத்திரம்
பண்ணவேண்டும் எ-று. 1714

வற்றவைத்தொருபட்சம்வகையாய்ரவிமுகத்தில்மூக்துமுத்ததை
போலுமுனையில்சுற்றிக்கட்டுங்காண், சித்தர்சொன்னமறப்பைத்தி
ருவள்ளுவனும்விண்டேன்,பற்றிடுஞ்சுற்றிலும்காணும்பசுவின்வெள்
ளைபோலாண்டே. சிங்கி

இ-ள், இப்படி ஒருபட்சம்வரைக்கும் வெயிலில்வைத்தால் அதில் ஓரங்
களிலெல்லாம் முத்துமுத்தாய்க்கட்டும், சித்தர்களெல்லாம்மறைத்துவைத்த
தாகும், ஆகையால் திருவள்ளுவனாகிய நான் அதைவெளிப்படையாகச்சொன்
னேன், ஆனால் அந்தப்பீங்கான் ஓரங்களிலெல்லாம் பசுவெண்ணெயைப்போ
ல்காணப்படும் எ-று, 1715

நித்தநித்தமூடியயக்கரண்டிகொண்டுவழித்து,சித்திபெறவும்பீ
ங்கான்சிறுசாயதனிலிட்டு, சுத்தவெண்ணிறவதாய்துலக்கமாகுமதி
போல்,வைத்தமருந்தாதீதம் வருகும்வெண்ணெயெடுத்தே. சிங்கி

இ-ள், தினமும் மூடி இரும்புக்கறண்டியினால் அதைவழித்தெடுத்து
வைத்துக்கொண்டு வெகுபத்திரமாயிருந்தால் எ-று. 1716

சித்திரைவைகாசிநாளில்திரமாய்கதிர்முகத்தில்வைத்திடும்வெ
ண்ணெயைவாரம் வைக்கவைக்கவெளுப்பாம், புத்துப்போலவுங்க
ண்டால்பின்னும்வைத்திடும்வாரம், சுத்தவெண்ணிறமதாம்சிங்கிசு
ன்னமிதாண்டே. சிங்கி

இ-ள், சித்திரைவைகாசிமாதங்களில் வைத்தால் வைக்கவைக்கவெண்
மையாய் வெண்ணிறமாகும், ஆகையால் அதை ஒருவாரம் வைத்தால்சிங்கிசு
ண்ணமாகும் எ-று. 1717

பற்றுப்படாமல்வெள்ளைபரிவாய்குப்பியிலிட்டு,நித்தம்பூசித்து
வாலைமெய்யருள்பதங்காண்,கர்த்திகத்தினருளால்கண்டேன்சிங்கிசு
ன்னத்தை,வித்துவெனுமமுரிவிந்துநாதத்தாலாச்சே. சிங்கி

இ-ள், பற்றப்படாமல் வெள்ளையாயிருப்பதை அகன்றவாயுள்ள ஒருபு
ட்டியில்வைத்து தினமும்பூசைசெய்துவைத்திருக்கவேண்டும் எ-று, 1718

நவலோகங்களும்பற்பம் நவரத்தினமும்பற்பஞ்,சிவமுஞ்சித்தி
யுங்கூடிச் சேர்ந்துசிங்கிமுப்பாச்சு,புவனந்தனிலும்பொருள் கண்டு
றைசெய்வார்களோ,கெவுனதிகளானாலும்கிலேசப்படுவார்காணும்.

இ-ள், நவலோகங்களும், நவரத்தினங்களும்பற்பமாம் இவ்வுலகத்தில்சி
வசத்திகள் சேர்ந்தபொருளாகையினால் மனுதிகளிலுஞ்செல்லுவதாகும் எ-று

தவத்திலதிதவந்தனிரததனிலென்னகாண், பகத்துவக்களுமெ
ன்னமதிர, கவிங்டிண்வாயுகூகவத்துவங்களுமில்லைகற்பங்காய சித்தி
யால், சவமாகிலுமெழுந்து சற்றேபேசிடுமாண்டே. சிங்கி

இ-ள், தவங்களில்உயர்ந்ததவம் உலகத்தில் எது? மகத்துக்களெல்லா
ம் கற்பசாதனங்கள் செய்துவந்தார்கள். அதனால் செத்தபிணமும் பேசும்

வாய்மொழியால்படித்துவாதாடுவாருலகில், தாயுந்தந்தையும
ல்லாத் தான்பிறக்குமோகிள்ளை,நாய்போலுமேகுலைத்துஞானவாக்
கியமெல்லாம், பேய்போல் தெருத்தெருவாய்பிதற்றிடுவார்களாண்
டே.

இ-ள், வாய் சொல்லால் வாதாடுவார்கள் தாய் தந்தையர்களில்லாமல்பி
ள்ளைபிறக்குமா? ஞானங்களையெல்லாம் பேய் போற்சொல்லித்திரிவார்கள்,

பாயுமில்லாமல்கப்பல்பறந்துவிடுமோசும்மாய்,பாருஞ்சக்கரமி
ல்லாப்பாய்ந்திடுமோவண்டிகாண்,நீயும்வாசியில்லாமல்நேராய்நடக்
கலாமோ,தூயவெளியென்னவார் சுக்கிலசுரோணிதமாண்டே. சிங்

இ-ள். பாயில்லாமல் கப்பலும், சக்கரமில்லாமல் வண்டியும்வாசியில்லா
மல் நீயும் நேராகநடக்கலாமோ? அது போலசுக்கிலசுரோணிதங்களில்லாம
ல்எதுவுமில்லை எ-று, 1722

அன்னமேயம்பிகைமாது அமுரிமூலப்புளியும்,ஆரறிவார்களிந்
த அதிதருக்ஷத்தைதக்கண்டு,சொன்னே மெய்ஞ்ஞானருக்ஷஞ்சுழியி
ன்முனையதுக்குள்,ருதவிந்தறிந்தால்வாத மேவல்கள்செய்யும்.

இ-ள், அம்பிகைப்பெண்ணின் கிருபையால் அமுரியையும் மூலப்புளி
யையும் ஆரறிவார்கள்? நானேஇந்தருட்சத்தைக்கண்டு சொன்னேன்சுழிமு
னையின்ருட்சத்தையறிந்தால் வாதவித்தையானது பணிவிடைசெய்யும் எ-று.

உன்னிதமெனும்பரிதானுருக்கித்தட்டதுபோலும், ஒருபலத்
துக்கொண்ணரையகலமுற்பனங்காணும், இன்னமிருதார்சிங்கியெடு
த்துக்கழஞ்சியிடை,உன்னுமிநீர்க்குழைத்துஉருதெரியாமல்பூசே.

இ-ள், செம்பைத்தட்டுபோலுருக்கி ஒருபலத்தைமிருதார்சிங்கிகண்ணா
ம் ஒருகழஞ் செடைஎடுத்து உமிநீரில குழைத்து அது நன்றாய்மறையும்படி
பூசி எ-று, 1724

பூசிடும்ரவிமுகத்தில் புகலும்பரியுலர,வீசிடுங்கற்பூரமெனும்வெ
ற்றிலைமுதுகாலதும், மாசிபாட்டிக்கவசமதின்மேல் சந்துகளில்லா,
வாசிமண்சிலைசெய்து வதுதெசப்புடமாண்டே. சிங்

இ-ள், வெயிலிலநன்றாய்க்காய்ந்தபின்னர் கர்பூரத்தைமுதுகால் வெற்
றிலைச்சாற்றாலரைத்து அதின்மேற் கவசஞ்செய்துஅதற்குமேல்மண்சீலைசெ
ய்து கெசபுடம்போடவேணடும் எ-று, 1725

வீசியாறியனல்பின்விதமாயெடுத்துப்பாரு, மாசில்லாமனும் பா
தான்மலர்ந்துபற்பதாகும்,வேசிவாலையின்மூல நேசத்துடனேவ ரிசி
நாசிகினிமுனைமுனைமேல் வாசியோகங்களாண்டே. சிங்

இ-ள், அக்கனஞ் செய்துநன்றாயாறினபின் எடுத்துப்பார்த்தால்நன்றா கப்பற்ப மாயிருக்கும் அதையெடுத்துவைத்துக்கொண்டு வாசியோகஞ்செய்ய வேண்டும் எ-று. 1726

வேறு-விருத்தம்.

ரசிதமதுபலமதுக்கு மிருதார்சிங்கிச்சுன்னநளினமாகும்,விசி
தமொருகழஞ்சியிடையுமிநீரில்குழைத்ததற்குமேலும்பூசி,வசியஉத்
தாமணியிலையை.யரைத்துநன்றாய்கவசமிட்டுவண்ணாஞ்சீலை,முசியா
மல்செய்துகெசப்புடந்தனிலுமிவை நீற்றுமொழிந்திடீரே.

இ-ள், ஒருபலம் வெள்ளிக்கு நன்றாய்ச்செய்து முடித்த மிருதார்சிங்கி சுன்னம் ஒன்றேகால்வராகனெடை எடுத்து உமிநீரில்குழைத்து மேலேபூசி அதற்குமேல் உத்தாமணியிலையையரைத்துக்கவசஞ்செய்து அதற்குமேல்சீலை மண்செய்து நாலுவறட்டியிற்புடமிட்டுப் பற்பம்பண்ணிச் சொல்லுவீராக.

வெள்வங்கம்பலபதற்கு மிருதார்சிங்கிச்சுன்னம் விளங்கிடீர்க
ண்,களங்கமில்லாக்கழஞ்சியிடை உமிநீரினால்குழைத்துக் கருதிமே
லும்,விளங்கும் விஷ்ணுகாந்தியரைத் ததிகவசஞ்செய்துமிகவிளங்கு
ஞ்சீலை, குளிங்காமல்கெசப்புடம்போட்டெடுத்துவெகுபதனத்தாக்
கூறுவீரே.

இ-ள், ஒருபலம் வெள்ளீயத்திற்கு ஒன்றேகால்வராகனெடை மிருதார்சிங்கி சுண்ணத்தை உமிநீரிற் குழைத்துப்பூசி அதற்குமேல் விஷ்ணுகாந்தி யிலையையரைத்துக்கவசஞ்செய்து அதற்குமேல் நன்றாகமண்சீலைசெய்து நாலுவரட்டியில் புடமிட்டெடுத்து வெகுபக்குவமாய்ச்சொல்லுவீர் எ-று, 1728

கருவங்கம் பலமதற்கு சிங்கிசுன்னங் கழஞ்சியிடை கணக்காய்
கொண்டு,உருவஉமிநீர்விட்டு மேல்கீழும் பூசியுருதெரியலாகா, அரு
வானசடைக்கஞ்சா அமுரிவிட்டுஅரைத்துரெண்டடையாய்த்தட்டி
விரிவில்லாமற்கீழும் பதியசந்துதெரியாமல் விளங்குவீரே.

இ-ள், ஒருப்பலம் கருவங்கத்திற்கு ஒன்றேகால் வராகனெடை மிருதார் சிங்கி சுண்ணத்தை உமிநீரிற்குழைத்துப்பூசி அதற்குமேல் சடைக்கஞ்சா வை அமுரிவிட்டரைத்து இரண்டுஅடையாய்த்தட்டி மேலும்கீழுமாக உருத் தெரியாதபடி, கவசஞ்செய்து விளங்குவீர் எ-று, 1729

மண்சீலைசெய்துகெசப் புடந்தனிலுநீற்றியதை வளமாய்வைத்
து,உணர்வாகத்தாம்பரத்தி லொருபலங்காண் கழஞ்சிசுன்னம் உமி
நீர்விட்டு,எண்ணமில்லாவிதைக்குழைத்து பதியசந்துமூடியதற்கினி
மேல்காணும், விண்ணெனுமோரிலையரைத்து உமிநீரிற்குழைதன்மி
கக்கவசஞ்செய்தே.

இ-ள், அதற்குமேல் மண்சீலைசெய்து [நாலுவறட்டியில் புடமிட்டெடுத்து அதைவண்மையாய்வைத்துக் கொண்டு பிறகு ஒருபலம் தாம்பிரத்திற்கு ஒன்றேகால்வராகனெடை மிருதார்சிங்கி சுண்ணத்தை உமிநீரிற்குழைத்துப்பூசி அதற்குமேல் ஆகாசதாமரையிலையை உமிநீர்விட்டரைத்துக் கவசஞ்செய்து,

அதிதமருந்தனையிரு அடையாகச்செய்து அதுக்குள்ளேதாக்கி, புரைவருகாமண்சீலைசெய்து கெசப்புடம்போட்டுப்பின்புதானும், முளையினும்பாயுரும்மதற்குச் சிங்கிசுன்னமொரு கழஞ்சியுமிநீர்விட்டு, திரையெனுமில்லாமல்படி குழைத்துஅதின்மேல்பூசிதெளிவாய்த்தானே.

இ-ள், அந்தக்கவசமானது எப்படியென்றால் அந்த இலையை இரண்டு அடையாகச்செய்து மத்தியில்தாம்பிரத்தைவைத்து மூடிமண்சீலைசெய்து நாலுவறட்டியில்புடமிட்டுப்பின்இரும்பு ஒருபலத்திற்கு ஒன்றேகால்வராகனெடைமிருதார்சிங்கி சுண்ணத்தை உமிநீரிற்குழைத்துத்தெளிவாய்ப்பூசஎ-று.

கறுப்பதுகாண் வசளையது கைப்புமலைதனிலிருக்குங்கருவாய் கண்டு, உறுப்படியுமுனதுஉமி நீரதுவிட்டரைத்து வுள்ளங்கீழுமேலும், அறுபடிரெண்டடைநடுவில் பதியவுங்காண்வைத்து மண்ணுஞ்சீலைசெய்து, துரைப்படியும்பிசகாமல்கெசப்புடத்தில் நீற்றியதைச்சுன்னஞ்செய்வார்.

இ-ள். மலைகளில் கிடைக்கின்றகசக்கும் கறுப்புவசளைக் கீரையை உமிநீராலரைத்து இரண்டடையாக்கிக்கீழும்மேலும்வைத்து மண்சீலைசெய்துபிறகுகைபாகம்தவறாமல்நாலுவரட்டியில்புடமிட்டு நீற்றிச்சுண்ணஞ்செய்வார்

எழுதுஒருபலமதற்குசிங்கிசுன்னங்கழஞ்சியிடையியம்புங்காலை அழகுபெறுமுனது உமிநீரதனால்குழைத்து அதின்மேலும்பூசி, உழலைவராதெட்டியெனுங் கொழுந்திலுமி நீரதுவிட்டுருவாயாட்டி, பிழைவருகாதடையில்வைத்துசீலைமண் செய்தடக்கமதாய்புடந்தானுண்டே.

இ-ள், ஒருபலம் எழுகுக்கு ஒன்றேகால் வராகனெடை மிருதார்சிங்கிச் சுண்ணத்தை உமிநீரிற்குழைத்துப்பூசி எட்டிக்கொழுந்தை உமிநீராலரைத்து இரண்டடையாகச்செய்து மத்தியில்மெழுகைவைத்து மூடிமண்சீலைஅடக்கமாகச்செய்து புடம்போடுக எ-று. 1733

போட்டெடுக்க அயச்சுன்னம்பொருமியது பொற்பதமாய்பெரிபோல்நீறு, மூட்டிடவுங்காந்தமொரு பலமதற்கு ஒருகழஞ்சி யுமிநீர்விட்டு, வாட்டிடவுங்குழைத்து வரிதெரியாமல் பூசிவன்னி முகமேவைத்து, மேட்டியெனும்விழுதியிலைக் கொழுந்து உமிநீரதுவால் விட்டு ஆண்டே.

இ-ள். அப்படிபுடம்போட்டெடுத்தால் அதுபற்பமாய்ப் பொறியைபேல் நீறும்சித்த, ஒருபலங்காந்தத்திற்கு ஒன்றேகால்வராகனெடைசிங்கிச்சுண்ணத்தைஉமிநீரிற்குழைத்துப்பூசிப்பின்னர்உருத்தெரியாதபடி விழுதியிலைக்கொழுந்தை உமிநீராலரைத்து எ-று. 1734

இரண்டடைதான்செய்து நடுவில்வைத்துப்பதியவுமேயியல்பர்ய்சீலை,திரளவுங்காண்;கெசப்புடத்தில்நீற்றியெடுத்திங்கள்மதிக்கொவ்வாது, உறவாதுவாய்நவாச்சாரம்பலமதற்குச்சிங்கிசுன்னங்கழஞ்சியூட்டி,பரவஉமிநீர்விட்டுக்குழைத்துஅதின்மேல்பூசிப் பகர்வேனாண்டே.

இ-ள், அரைச்சதை இரண்டு அடையாகச்செய்து நடுவில்காந்தத்தை வைத்து மூடிமண்சீலைசெய்து நூறுவறட்டியில்புடமிட்டெடுத்தால் சந்திரனுக்தோல்வியடையும் படியான வெண்மையாகும்,ஒருபலம்நவாச்சாரத்திற்குஒரு கழஞ்சுசுண்ணத்தை உமிநீரிற் குழைத்துப்பூசி சொல்லுகிறேன்கேள் எ-று

பகரரியஆடுதின்னாப்பாளையம்மான்பச்சரிசிபரிவாய்க் கொண்டு, நிகரிலாஉமிநீர்விட் டரைத்து அதுக்குள்ளடக்கி நெறியாய் மேலும், திகழொண்ணாமண்சீலை செய்து ஒருமுழப்புடத்தில் திறமாய் நீற்றிச், சுகமதுவாய்நவாச்சாரசுன்னமது நீற்றினத்தில்சொர்னமாண்டே.

இ-ள், ஆடுதீண்டாபாளையையும், அம்மான்பச்சரிசியையும் உமிநீராலரைத்துக் கவசஞ்செய்து மண்சீலை நன்றாகச் செய்து ஒருமுழப்புடம்போட்டுநீற்றிவைத்துக் கொண்டால் இதனால்சொர்னம் செய்வதற்காகும் எ-று,

துரிசதுகாண்பலமதற்கு சிங்கிசுன்னங்கழஞ்சியிடைதப்புநீரால், பரிசமெனும்பூசிகருஞ்செம்பனிலையும் பூவுபபரித்துமென்மேல், வரிசைபெறவகைக்குப்படியுமி நீரினாலரைத்துவதுமேல்பூசி, துரியமெனு மண்சீலை மூன்றதுகாண்செய்துமிகச்சொல்வேனாண்டே.

இ-ள், ஒரு பலம் மயில்துத்தத்திற்கு ஒன்றேகால் வராகனெடைசிங்கிச்சுண்ணத்தை எச்சிலில்குழைத்துப்பூசி,மேல்கருஞ்செம்மையிலைபடியும்பூட்டியுமாகக்கொண்டு வத்து உமிநீராலரைத்து கவசஞ்செய்து சீலைமண்மூன்ற செய்துபிறகுசொல்லுகிறேன் எ-று. 17 37

ஐந்துவிரலதுக்குமுத லதுவிரலால் பத்தவைத்து ஐயஞ்சாகில், சஞ்சலமில்லாதபுடம்போட்டெடுக்கத்துரிசதுவுஞ்சங்கையேது, பஞ்சமில்லாதழைகளெல்லாஞ் சலம்பொழியுந்தயிலம்வரும் பாடுபட்டால், வஞ்சமில்லைகற்பமுண்டு வழலையதின் பெருமையினால் வசனித்தோமே.

இ-ள், முப்பதுவரட்டியில்புடமிட்டெடுக்கத்தருசுண்ணமாகும் அதனால் பஞ்சமெல்லாம் பறந்தோடிப்போகும், பாடுபட்டால் தயிலம்வரும், கபடில்லாமல் கற்பமுண்டாகும் இதைவழலையின் பெருமையினால்சொன்னேன்

முன்சொன்னகாரிய முறையதுகாண் சுன்னமதில் முறையக்
கேளீர், யின்னமந்த சுன்னமதி லொருபலந்தான் கல்லுப்பு உகமை
யாகும், உன்னிதமாம்வெண் கருவினிட் டொருசாமமாட்டிவழித்து
ணர்வாய்பில்லை, வின்னமில்லா ரவியுலர்த்தியகலில்வைத்துமேலகலு
ம் விதமாய்மூடே.

இ-ள், முன்முடிந்த கருவங்கச்சுண்ணத்தில் ஒருபலமும் ஒருபலம் கல்லுப்பையுஞ்சேர்த்து வெள்ளைகருவால் ஒருசாமமரைத்து பில்லைதட்டிரவியுலர் 1739
த்தி அகலில் வைத்து மேலகல்மூடி எ-று,

சந்துதெரியாமலுங்காண் மண்சீலையுணரவுஞ்சார்வாய்செய்து,
யிந்தவிதமிதனையிருபத் தெருவில் புடம்போட்டு எடுத்துப்பார்க்க,
அந்தமிகுஞ்சந்திரனுக் கதிதமிந்தக்கருவங்க மார்தான்செய்வார்,
விந்ததிதசுன்னமிதைக் குப்பி தனிலடக்கவெகு பதனஞ்செய்யே.

இ-ள், மண்சீலை நன்றாய்ச்செய்து வெயிலில் உலரவைத்து இருபதெருவில் புடம்போட்டெடுத்துப்பார்க்க சந்திரனுக்கும் மிகுந்த வெண்மையாயிருக்கும் இப்படிப்பட்டமருவங்கம யாவர்செய்வார்கள் இதைக்குப்பியில் பதனம் 1740
பண்ணுக எ-று,

அரிதாரமதுக்குயிர்காணதிதகருவங்கசுன்னங் கழஞ்சிவாங்கி,
உரியஉமிநீரிலிட்டுக் குழைத்ததின்மேல் பூசியபின் னுடனேபாரில்,
பரியாசம்வாராமல் கதிரவன்தன் முகம்படவும் பண்பாய் வைத்து,
பிரியமுடனத்திமரப் பட்டைதனிலுமிநீர்விட்டுப் பிலமாயாட்டே.

இ-ள், அரிதாரம் ஒருபலத்திற்கு ஒன்றேகால்வராக்னெடை கருவங்கச்சுண்ணத்தை உமிநீரில் குழைத்துபூசிப்பின் வெயில்லில்காயவைத்துப்பின் அ 1741
த்திமரப்பட்டையை உமிநீர்விட்டரைக்க எ-று.

மயனமதாயாட்டிவழூத் திடுமூசையதுக்குளரி தாரம்வைத்து,
வயனமது வாகவுந்தான் மேல்மூடி யதினளவால் வலுக்கச்செய்து,
செயம்பெறவுமண்சீலைதிருத்தமதாய் மூன்றுவிதஞ்செய்வித்தேபின்
நயமதுகாணுண்டையெரு பத்ததற்குளடக்கமதாய் நாட்டிடீரே.

இ-ள், நன்றாக வளரத்த மூசையாய்ச்செய்து அதற்குள் அரிதாரம் வைத்து மேலோடுமூடி மண்சீலைவலிவாய் மூன்றுசெய்துபத்தெருவில்புடம் 1742
போடவேண்டும் எ-று.

விருத்தம்.

பூனைக்காஞ்சோரியிலைபங்கம்பாளைபுகழ்சமனுயுமிநீரதுவாலுமை
த்தி, மானேகுகைவலுவதுவாய்செய்துமேவிவாங்குமொருபலந்தரு

சுவளமதாக, தேனேயரித்தாரசுன்னங்கழஞ்சிவீதந் தினுசளவிலுமிநீ
ரால்குழைத்துப்பூசி, ஆனைமுகன் கமலமலர்பணிந்துபோற்றி அக்
குகைமேல்மூடிசந்து அருளுவீரே.

இ-ள், பூனைக்காஞ் சோறியிலை, ஆடுதின்னாப்பாளையிலை இவைகளைச் ச
மனாய்க் கொண்டு உமிநீராலரைத்து வலிவாக மூசைசெய்து ஒருபலம் மயில்
துத்தத்திற்கு ஒன்றேகால்வராகனெடை திருசுகன்னத்தை உமிநீராலரை
த்துப்பூசி அதை அக்குகைக்குள் வைத்து சந்து தெரியாதபடி மூடி விநாயக
ரைப்போற்றி எ-று. 1743

மேல்மூடிசீலைமண்ணுமூன் றுஞ்செய்து மென்மேலும்பத்தெரு
வில்புடந்தான்போட, ஆலவிடமுண்ட சிவனுளும்வெல்லா அறுபத்
துநாலுசரக்குதிதமாகும், வேல்விழியம்பிகைமாது நடனஞ்செய்வா
ள்மேலான கெந்தகமுந் தயிலமாகும், பால்போலு மதியுடைய திற
மொவ்வாது பார்ப்பதற்குந்திருசுன்னம்பாடினோமே.

இ-ள், மேலே மூடி மூன்று மண்சீலைசெய்து பத்து வறட்டியில் புடம்
போட விஷமுண்ட சிவபெருமானும் இந்தத் திருசு சுன்னத்தால் அறுபத்
துநான்கு சரக்குகளும் நீரும், வேல்கணணியாகிய சிவகாமிநடனஞ்செய்வா
ள், கந்தகமும் தயிலமாகும், ஆகையால் இதன் மகிமை விளங்கப்பாடினோம்.

வீரச்சுன்னம்.

வீரமொருபலமதற்குத் தாரசுன்னம் விளங்கியொரு கழஞ்சியி
டையுமிநீர்விட்டு, தேறவுங்காண்குழைத்து அதின்மேலும்பூசி செப்
புகிறேன் ஞானவெட்டித் திறத்தைக்கேளீர், வீறுகின்ற நெருஞ்சுத
ளிலுமிநீர்விட்டுவிமல வாலாம்பிகையைப் போற்றிசெய்து, மீறவுங்
காணரைத்து அதைக்குகையாய்ச்செய்து மேலும்பத்தெருவில் புட
ஞ்செய்வீர்தானே.

இ-ள், ஒருபலம் வீரத்திற்கு அரிதாரச் சுன்னம் ஒன்றேகால் வராக
னெடையை உமி நீரிற்குழைத்துப்பூசி, நெருஞ்சியிலையைஉமிநீராலரைத்து
மூசைசெய்து பத்தெருவில் புடம்போடுவீராக எ-று. 1745

சூதச்சுன்னம்.

சூதமொருபலமதுவுங்கலுவத்திட்டு சுயமான வீரசுன்னங் கழ
ஞ்சுதாக்கி, பேதமில்லா உமிநீர்விட்டுக்கடிகையேழும் பிலமாக் அ
ரைத்துவழித்துண்டையாக்கி, சோதியெனுமூசிப்பாலிலையைவாங்கி
சொல்லுமுமிநீர்விட்டு தொந்தித்தேதான், வீதியெனுமேகுகையது
செய்திலைச்சார்தன்னில் விளங்கவுங்காற்பலம் வாங்கிவிரைந்திடுரே.

இ-ள். ஒருபலம் பாதரசத்தைக் கல்வத்திலிட்டு ஒன்றேகால் வராக
னெடை வீரசுன்னஞ் சேர்த்து உமிநீர்விட்டேழுநாழிகையரைத்து வழித்து

உண்டையாக்கி வுலசிப்பாலேயிலேயைஉமிநீராலரைத்துருண்டைசெய்துமேற்படி இலேச்சாறு கால்பலம் பிழிந்து எ-று. 1746

சாரமதின்சூரவுண்டைத் தோய்த்துத் தோய்த்து சங்கையில் லாரவிமுகத்தில்காயக்காய, மாறியுண்டைசாரதுவுஞ்சுண்டச்சுண்ட மகத்தானகதிர்முகவன்காந்திவீச, ஊரியந்தசாரதுவுமுலர்ந்துபோகும் உண்டைதனையெடுத்து குகைதனிலுநாட்டி, வாறதுவாய்மேல் மூடிமூன்றுசிலை வசனியுங்காண்பத்தெருவில் புடந்தானுண்டே.

இ-ள், அந்தச்சாற்றில் ரசவுண்டையைத் தோய்த்து வெயிலில்வைத்து அந்தச்சாறு நன்றாயுலர்ந்தபின் அவ்வுண்டையையெடுத்துமூன்மூசையிலிட்டுமேல்மூடி மூன் றுமண்சிலைசெய்து பத்தெருவில் புடம்போடு எ-று.

இந்தசரக்குருவிலொரு கழஞ்சுவாங்கி யிரும்பது சட்டியிலும் வெள்ளை வங்கந்தாக்கி, சுந்தரமேயுருகிய துங்கண்விட்டாடும சூட்டிவிடுஞ் சூதகசுன்னந்தொந்தித்தாக்கால், அந்த நீரதிதமெல்லாங்குடித்துப்போடும் அரைகடிகைக்குள்ளா காசிதமாகும், எந்தவிதமாகிலுமேகற்பஞ்சாதித் திருப்பதனுலிம்முறையுமெய்துமாண்டே.

இ-ள், இப்படிமுடிந்த ரசசுண்ணத்தில் ஒன்றேகால்வராகனெடையெடுத்து அயச்சட்டியில் ஒருபலம்வெள்ளி யிட்டு அதுநன்றாயுருகும்போது அதிலிட்டுத்தொந்தித்தால் வங்கத்தின் நீர்வற்றி அரைநாழிகைக்குள் வெள்ளியாகும்இதைக்கொண்டு எந்தவிததிலும் கற்பஞ்சாதித்திருக்கலாம் எ-று

இந்நூலில்சொன்னமுறை யடங்காமற்றான் எண்ணூறுவயித்தியந் தானியம்பலானேன், அன்னூலுமிந்நூலு மார்க்குக்கிட்டு மனுபோகிகற்பமுண்போரவர்க்குக்கிட்டும், பின்னமொருநாளுமில்லை பிழைநூனில்லை பெருநூல்காணுயிரத்து ஐந்நூறிந்நூல், முன்னமேயான்பாடிவிட்டே னுயிரத்துமுன்னூறு முடித்துவைத்தேன்குறளதுவாயுலகோர்க்காண்டே.

இ-ள், இந்நூலில் முறைகள் அடங்காமையால் எண்ணூறென்று ஒருநூல் சொன்னேன், ஆக இதுவும் அதுவும் யார்க்குக்கிடைக்கும், கற்பமுண்ணும் அநுபோகிகளுக்கேகிடைக்கும், இவ்விரண்டிலும்யாதொருபிழையுமில்லை, இதுதான் ஆயிரத்தைந்நூறு, இதற்குமுன் ஆயிரத்துமுந்நூறென்று ஒரு குறள் முடித்துவைத்தேன் எ-று, 1749

இரண்டாயிரத்துமுன்னூற்றுச்சொச்சத்துள்ளே நெறியானதத்துவமுங்கற்பக்கூறும், அண்டரண்டங்கொள்ளாத அதிதமெல்லாம்அடியுநடுமுடிவறிந்து அருளலானேன், கண்டு நவலோகமெல்லா நீற்றிப்போட்டேன் கரையில்லை துரைகளில்லை கருவின்வாறால், விண்டபொருள் நாதவிந்தின்விதியாலாச்சு மேதினியிலிதைபறியார்விளங்குவாரே.

இ-ள், இந்த நூலும் எண்ணூறுஞ் சேர்ந்த இரண்டாயிரத்து முன்னூற் றச்சொச்சத்தன் தத்துவம்கற்பம், அடி, நடு, முடிநவலோகநீற்றல், நாதவிந்து க்களின் விதிஇவைகளைநன்ருய்ச்சொன்னேன் உலகத்தில் இதையறியாதவர் விளங்குவாரோ எ-று. 1750

## வேறு-கவி.

மதிவிஞலுதித்தசூதம் வாரிவிந்துசாரமும்
அதிதமூலநாதசோதி யந்தகாரசுந்தரம்
விதியிஞலிசைந்தமுரி வேதசாரநாலிடை
அதிகாரமோரிடை யளந்துபார்கணக்கிதே.

இ-ள், சந்திரனெளியால் பிறந்தரசமும் சாரமும் நாலெடையாகவும், காரம் ஓரெடையாகவும் சேர்த்து அதில் அமுரிவிடுவது கணக்காகும் எ-று

விண்ணுமண்ணுமேபிசைந்து வேறதாயொருவினம்
பண்ணுமேவிடுங்கழஞ்சி பாகமாய்ப்பிரமாணமும்
எண்ணிடுமெருகுபோலு மேவுமென்மேல்காசிடை
கண்ணிடுங்கதிர்முகத்தில் காய்ந்துமலர்ந்துகண்டிடே.

இ-ள், விண்மண்களாகிய இரசத்தையும், சாரத்தையும், ஒரு இனமா கப்பிசைந்து ஒன்றேகால் வராகனெடை, காசெடைஎன்கிற பிரமாணப்படி உருட்டிவெயிலில் உலர்த்தி எ-று, 1752

பச்சையாவதுதனி பருதியாவதுஞ்சுழி
உச்சிதமெனும்ரவியு காரமும்மூலப்புளி
தக்சொரூபமாமதியின் சாரமுமமுரிதான்
வைச்சதோர்பொருளிதுநேர் வாளமுஞ்சமனதே.

இ-ள், பச்சையென்பது மூலப்புளியும், பருதியென்பது சுழியும். ரவி உகாரம் என்பவைகளும்மூலப்புளியும், சந்திரசாரம் அமுரியும்ஆகும், மேலே எடுத்தசரக்குகளுக்குச் சமன் நேர்வாளமாகும் எ-று, 1753

அகாரமாயமைத்தது மமுரியால்மடைத்ததும்
உகாரமாயுதித்தது முவரிஞல்செனித்ததும்
அகாரமும்உகாரமு மருவுஞ்செகாதிதம்
சிகாரமேசிவசுரூப சித்திமுத்தியாகுமே.

இ-ள், அகாரத்தாலும் அமுரியாலும் படைத்ததும், உகாரமாய்உதை த்ததும் உப்பிஞல் பிறந்ததும் அகாரமும உகாரமும்மருவிஞல் ஜெகாதிதமா னதும், சிகாரமே சிவசொரூபமானதும் சித்திமுத்தியாகும் எ-று, 1754

ஏகமாவதேதுகா ணிசைந்தபாண்டந்தன்னிலும்
வாளமும்வழலேயொக்க மாட்டிசில்லுவாகதாய்

ஏனமேயிசைந்துநாடி யேழுசீலைமண்ணதும்
நானுமிப்படியதாய் நளினசெய்கைபாருமே.

இ-ள், எனமாவது பொருந்திய ஒரு நல்லபாண்டத்தில் வாழயிலையைப் போல இந்தச்சாரக்குகளைப்போட்டுப் பலமாய்ச்சில்லுசெய்து எழுமண்சீலைசெய்து நன்றாய்ப்பாரும் 1755

பூமியில்குழித்தயிலம் போடுமெவ்விதமதாய்
நேமமாயொருவரும் நெருங்கிடாமலும்பதம்
வாமியம்பிகையருள் வாலாம்பிகைமலர்ப்பதம்
சுவாமியென்குருபதஞ் சுகாதிதம்பணிகுவாம்.

இ-ள், அதைப்பூமியில் குழித்தயிலம்போடு இப்படிபோடும்போது யாவரும் நெருங்காமல்வைத்து அம்பிகைப் பெண் திருவடிகளையும்,எம் குருசுவாமியின் திருவடிகளையும் பணிவாய் எ-று, 1756

ஆதியந்தமாய்நிறைந்த அண்டபிண்டஞ்சூழ்ந்திடில்
ஆதியுமநாதியு மதிலுதித்தவாறுகாண்
ஆதியிலமைந்தவிந்து அந்தமூலநாதமாய்
ஆதியில்முன்னோர்மறைத்த அதிவிதமதாண்டையே.

இ-ள், ஆதியும், அந்தமுமாகநிறைந்த அண்டத்திலும் பிண்டத்திலும் சூழ்ந்தால் ஆதியும், அநாதியும் அதிப்பிறந்தவிதமேயாகும், ஆதியிலுண்டான விந்து அந்த நாதத்தின்மூலமாய் பூர்வத்தில் முன்னோரால் மறைக்கப்பட்ட அதீதவிதமாகும் எ-று. 1757

மதிநிறைந்தகுப்பியில் மகிழ்ந்துஇத்தயிலமும்
பதியவும்வெகுபதனம் பாரும்பாரும்பண்பெற
விதியினாலமைத்திந்த விந்துநாதபூரணம்
துதியும்வாதமெண்பதுஞ்சிறந்துபோமிதாண்டையே.

இ-ள், இத்தயிலத்தை குப்பியில் வைத்து வெகுபத்திரமாக நன்றாய் விதியினால் உண்டாகின இந்தவிந்துநாதங்களைப்பூரணப்படுத்தியதால்இந்தத் தயிலத்தினால் எண்பதுவாதங்களும் போகும் 1758

வாதநோய்வரும்பிணி அதீதகாலைதன்னிலும்
வீதமாவதும்பணவிடையெடுத்துச்சீலையில்
காதலாலுணர்த்திடக் கருதுநோய்களோடிடும்
வாதபித்தசேத்துமம் வணங்கிடுங்காணுண்டையே.

இ-ள், வாதரோகங்களுக்கும் இன்னும்வரும் வேறுபிணிகளுக்கும் அதிகாலையில் இத்தயிலத்தில் பணவெடையெடுத்துச் சீனிசர்க்கரையிற கலந்து உண்டால்சர்வநோய்களுமோடும், வாதமும், பித்தமும் சேத்துமம் வணங்கிடும் எ-று. 1759

காலேமாலேயேழுநாள் கருதிடுவீராகிலும்
மாதுசூதவாய்வதும் வயிர்வலிஅ ீரணம்
மூலமும்பவுத்திர முசல்வலியனைத்துமே
சூலேயுஞ்சுரங்கள்சனி தோஷம்போங்காணுண்டையே.

இ-ள். இப்படி எழுநாளேக்குக்காலேமாலே இரண்டு வேளேயும் சாப்பிட்டால் பெண்கள் சூதகவாயு, வயிற்றுவலி, அஜீரணம் மூலம் பவுத்திரம், முதலாகியவலிகள், சூலே, சுரங்கள் சந்நி, தோஷம் இவைகள்போகும் எ-ற,

வாலேபால்கறக்குமே வரும்பிணிகள்மாந்தமும்
சீலமாய்குரோசனேயுஞ் செண்பகப்பூசுக்குடன்
சாலவுங்கஸ்தூரியுஞ் சவ்வாதுமேபுகழுடன்
சாதிலிங்கந்திப்பிலி மிளகும்பச்சைபூரமே.

இ-ள், பெண்களின்பால் மாந்தம் முதலியவைபோக ஒருமெழுகுசொல்லுகிறேன்கேள் கோரோசனம், செண்பகப்பூ, சுக்கு, கஸ்தூரி, சவ்வாது, புநகு, சாதிலிங்கம், திப்பிலி, மிளகு, பச்சைக்கர்ப்பூரம் எ-ற, 1761

பச்சையானஉப்பதும் பழம்புளியமுரியும்
இச்சைநாலுமொன்றதா யிதைக்கரைத்துநீரதாய்
பச்சையுந்தெளிந்துநீர் பரிகரித்துவன்னியில்
உச்சிதமாசுண்டிணு லுவர்ப்புமாமிதாண்டையே.

இ-ள், மூலப்புளி, உப்பு, பழம்புளி, அமுரிஇந்தநான்கையும் ஒன்ருய்க்கரைத்து தெளிந்த நீரை அடுப்பினில் வைத்துக்காய்ச் சினல் உப்பாகும்

அஞ்சுமஞ்சுமொன்றுட னதுபதினென்ருகவும்
சஞ்சலம்வராமலுஞ் சரிசமன்கழஞ்சிடை
பஞ்சபாதகங்களேகி பாரிலும்பறந்திடும்
நஞ்சுமேமுறிந்திடும் ரவிமதியிதாண்டையே.

இ-ள், இந்தப் பதினென்றையும் ஒவ்வொன்று ஒன்றேகால் வராகனெடையாக எடுத்துப்பஞ்சபாதகங்கள்பறக்கும், நஞ்சும்முறிந்திடும், ஆகையால் இதரவிமதிகளாகும் எ-ற, 1763

சரிசமன்மருந்தின தயிலம்விட்டுஓர்தினம்
வருந்திடுமருந்திதை மயனமாய்வருதலால்
பிறந்திடுவதேதுகாண் பிரகாசமாய்மெழுகதாம்
மருந்திதைச்சிமிளினில் வருந்தியேதுதிப்பரே.

இ-ள், இந்தப்பதினென்றக்குஞ் சேர்ந்தஎடைமொத்தத்திற்குமுன்தயிலம் விட்டு அரைத்து ஒருநாளெல்லாம் மயனமாய்வருலதாய் மெழுகாகும்இந்தமருந்தைச்சிமிளில்வைத்து துதிசெய்வீர் எ-ற, 1764

துதித்திடுமாடாதோடை சுரசமாமதிலிதை
விதித்திடுந்துவரையின் விளங்கிடீர்பிரமாணமாய்
மதித்திடுஞ்சனப்பிரளி மாந்தமோடிசுவதும்
கெதித்துவோடிபுக்கிடுங் கெணிதமூன்றுநாளிலே.

இ-ள், இந்தமெழுகைத் துவரைப்பிரமாணம் எடுத்து ஆடாதோடைச் சுரசதனில் கொடுத்தால் சுணப்பிரளிமாந்தம் இசிவு இவைமூன் று நாட்களில் ஓடி விடும் எ-று. 1765

சுரங்கள்சன்னிதோஷமும் கிணங்களள்ளுங்கிராணியும்
சுவாசமும்சிரணமும் பசாசுபூதமோடிடும்
திரமானந்தகக்கல்விக்கல் சோகைபாண்டுவீக்கமும்
சுரங்களேழுமோடிடுஞ் சுரசமிஞ்சியாண்டையே

இ-ள். அறுபத்து நான்குசுரங்கள் சந்நி, தோஷம் கணங்கள் அள்ளுகிராணி சுவாசம், அஜீரணம், பசாசு பூதம், கக்கல், விக்கல், சோகை, பாண்டு, வீக்கம், சத்தசுரங்கள், இவைகள் இஞ்சிசரசத்தால்தீரும் எ-று. 1766

கடுகளவதாகிடுங் கருதிடும்விழிதனில்
விடுமுதல்தலைசனும் விதித்திடும்பால்விட்டுமே
கடுகளவெடுத்துமத்தி கண்கள்ரெண்டில்வீசிட
படும்வினைசுரங்கள்சன்னி பத்துமூன்றுமேகுமே.

இ-ள், கண்களில் கடுகளவுஎடுத்து தலைசன்பிள்ளைபெற்ற பெண்ணின் முலைப்பாலில்இழைத்துத்தடவினல்கொடிவினைகளாலுண்டான சுரங்கள்பதின்மூன்று சந்நிகள் தீரும் எ-று. 1767

சுத்தவானறிவதிந்த சூக்ஷமாங்குழம்பதை
வித்துவான்வயித்தியன் மிகுத்தபண்டிதர்களும்
சுற்றிடுமெய்ஞ்ஞானிகள் கனத்தயோகவாசிகள்
வித்துவானிவர்களுக்கு மேலெவர்களில்லையே.

இ-ள், சுத்தவான் அறிவதாகிய இந்தக்குழம்பை வித்வான், வயித்தியன் பண்டிதர்களும், மெய்ஞ்ஞானிகள், யோகவாசிகள் இவர்களுக்குமேல் எவர்களில்லை எ-று. 1768

வாதபித்தசேத்துமத்தின் வாறறிந்தபண்டிதர்
சூதவித்தைவாசியோக சூக்ஷமத்தைக்காண்கிலீர்
வாதமூலகாடிகாண் மதியும்பித்தவாரிகாண்
நாதவிந்துவாசியும் நடந்தவாறிதாண்டையே.

இ-ள். வாதபித்த சேத்துமங்களின் செயல்களை யறிந்த பண்டிதர்கள் சூதவித்தையையும், வாசியோகத்தின் சூட்சமத்தையும்காணமாட்டார்வாதம்

மூலநாடியும் பித்தம்மதியும்,நாதவிந்துக்களும், வாசியும்,நடந்தவிதம் இதுவா கும் எ-று. 1769

வாதமாவதும்புளி வருவும்பித்தம்வாருதி
சூதவிந்துநாதமுண்டு தேறிடும்வயித்தியர்
பூதமஞ்சுஞ்சேத்துமம் பொறிபுலன்மூலாக்கினி
வேதசாரமூலமும் விளங்கும்பண்டிதர்களே,

இ-ள், வாதமாவதும் புளிமருவும் பித்தவாரிதியையும் சூதவித்துநாதங்களையுண்டு தேர்ந்தவயித்தியர் ஐம்பூதங்களும் சேத்துமமும், பொறிபுலன்களும், மூலாக்கினியும், வேதத்தின்சாரமூலமும் விளங்கும் பண்டிதர்கள்

இசைந்தநாதமூலமு மெழுந்தவாறுகாண்கிலீர்
எழுபத்தீராயிரத்தி லேகபோகமாகுமாய்
பசைந்துமண்ணுந்தண்ணியும் பலிதமாயிதாகவும்
இசைந்தபண்டிதர்களே யெண்சாணிடல்சமைந்ததே.

இ-ள், பொருந்திய மூலநாடியானது எழுந்தவிதத்தைக்காணமாட்டீர் ஆனால் எழுபத்தீராயிரநாடிகள் ஏகபோகமாய்க்கூடி மண்ணுந்தண்ணீருமாய்ப்பலித்து எண்சாணுடலம் உண்டாயிற்று எ-று. 1771

மூலாக்கினியிருந்தெழுந்து முச்சுடர்களானதும்
முப்பாழகடந்தெழுந்திருந்து முனைசுழியறிந்ததும்
காலாக்கினியிருந்தெழுந்து கற்பஞ்சாதித்தப்புரம்
மூலாக்கினிமுடிவில்நின்று முத்திசித்தியாகுமே.

இ-ள், மூலாக்கினியிலிருந்தெழுந்து முச்சுடர்களானதும், முப்பாழையுங்கடந்து எழுந்திருந்து சுழிமுனையறிந்ததும்காலாக்கினியெழுந்திருந்துகற்பஞ்சாதித்துஅப்புறம்ஆக்கினைமூலத்தில் டிவினின்றமுத்திசித்தியாகும்

காலகள்பன்னிரண்டுமூலங் கைகள்பத்துஆறுமே
கால்கள்பன்னிரண்டுநாலும் கட்டிடுங்கழிவிலா
கால்களுமிருந்துமூலா தாரமுங்கதிரொளி
கைகளுங்கலையிரெட்டுங் காணுஞ்சாரகாரமே.

இ-ள், பன்னிரண்டு சரத்தையும் மூலங்கள் பதினாறையும் மேற்படி பன்னிரண்டுகால்களாலுங்கட்டி அழிவில்லாத மூலாதாரமும் கதிரொளியும் கைகளும், பதினாறுகலைகளுஞ் சாரகாரமாகும் எ-று, 1773

சாரகாரம்ரெண்டதுஞ் சரமாறியேற்றவல்லிராய்
சாரகாரமும்பொருந்த சண்டனில்லையில்லைகாண்
சாரகாரவீரபூரஞ் சந்திரசூரியர்கள்தான்
சாரகாரமாறமாற சத்துஞ்சித்தானந்தமே.

இ-ள், காரம், சாரம், இரண்டும் சமமாகிஎத்றவல்லவரானல் இவைபொருந்த எமனில்லையாகும், சாரம், காரம், வீரம், பூரம், சந்திரசூரியாகள், சாரமும், காரமும்மாறமாறச் சத்துச்சித்தாநந்தமே எ-று, 1774

இந்தஎண்சாண்தேகமா யிரவியுமதியுமாய்
இராவுடன்பகலுமாய் பகலுமேயிராவுமாய்
இந்திரனிரவியு மென்னுக்குளேயறிந்தபின்
இந்திரனிரவியு மிராப்பகலுமில்லையே.

இ-ள், எட்டுச்சாண்தேகமாய் இரவியும், மதியுமாய், இராப்பகலாய், பகல்இரவாய் இந்திரனையும், சூரியனையும், எனக்குள் காணுணர்ந்த பின்னர் இந்திரன், சூரியன், இரவு, பகல் இவைகளில்லை எ-று. 1775

வேறு-விருத்தம்.

இருவினையொழித்துஇந்நா விருள்தனையகற்றிஞானக்
கருவியைநீற்றிநீராய் காலனையெரித்துமேலும்
வரும்பெறகெதிக்குள்வாசி மருவியேயமுர்தமுண்டு
அருந்தவஞானசோதி யருளில்நின்றர்ச்சித்தேனே.

இ-ள், இந்நாலானது நல்வினை தீவினைகளையெரித்து அஞ்ஞானத்தை நீக்கி ஞானக்கருவிகளை நீற்றி காலனைநீருக எரித்து வருகின்ற பரகதிக்குள் வாசியுடன்சேர்ந்து அமிர்தமுண்டுஅருமையாகத்தவஞ்செய்கின்றஞானசோதியினருளிலிருந்து அர்ச்சனைசெய்தேன் எ-று. 1776

திருவுருநடனசோதி தெய்வநாயகனென்னுல்
வருமதிரவியினுலு மாய்கைபோய்மவுனமுற்று
கருக்குருதானுய்நின்ற கடவுளின்கமலந்தன்னில்
துரிதமாய்துரியாதீதஞ் சொர்க்கவாழ்பதவிசேர்ந்தே.

இ-ள். அழகிய உருவத்தையுடையநடனஞ்செய்கின்றதேஜோமயமான தெய்வநாயகனுலும்இந்நூலானதுமதிரவியினுலும் மாய்கைநீங்கிமௌனத்தையடைந்துகருக்குருஅவனேயாயிருந்த கடவுளுடையதிருவடிகளில்சீக்கிரமாக துரியாதீதமென்கிறசொர்க்கபதவியைச் சேர்ந்து எ-று. 1777

அதிவிதமாயாசத்தி யம்புவிதனிலும்யாவர்
துதிசெய்துபணிந்துபோற்ற சுகாதிதமறைப்புண்டாகி
விதியிந்தசெய்கையாலும் விட்டதோர்குறையினுலும்
மதிரவியொளியினுலும் வாசியில்மகிழ்ந்தேனண்டே.

இ-ள். மிகுந்த விதங்களையுடைய மாயாசத்தியானவள் உலகத்திலும் எவர்களும் துதிசெய்துபணிந்துபோற்ற சுகாதீதத்தைமறைத்து விதியினுலுண்டான இந்தச்செய்கையாலும் விட்டகுறையாலும் சந்திரசூரியர் ஒளியினுலும் நான்சரத்தில் மகிழ்ந்தேன் எ-று, 1778

## யோகநிலை தரு.

சித்திரவிசிதாரத்தினதிவ்ய அமிர்தமே-செழுந்
தேனருபாயுஞ்சிரோசத்தினதீபமே.

இ-ள், சித்திரம் பொருந்திய திவ்வியரத்தினமிர்தமே செழுமை யான தேனருவிபாயுஞ் சிரோத்தினதீபமே எ-று.

முத்தமிழமிர்தசிவஞானசுரூபி-செக-மோகனவாலாம்பிகைபுவனும்பிகையரூபி,சத்திசிவசாம்பவிசாடக்ஷரிகமலஞ்-சர்-வேஸ்பரிசெகதீஸ்பரியெனைத்தற்காக்கவேணும், வித்தியாதாரணி சர்வாணிவேதநாயகி-மெஞ்ஞானிகள்பூசித்து தெரிசித்துமே பணியுஞ் சுத்தபரிபூரணிசுகாதீத அன்னமே-சுழி-சூக்ஷசடாதாரபிரணவ சோதிமுன்னமே, சித்

இ-ள், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழமிர்தசிவஞானசொரூபியும், ஜெகனமோகன வாலாம்பிகையும், புவனும்பிகையும், சுரூபியும், சத்தியும், சிவையும் சாம்பவியும் சடாட்சரியும், சர்வேஸ்வரியும், ஜெகதீஸ்வரியும், வித்தியாதாரணியும், சர்வாணியும், வேதநாயகியும், உண்மைஞானிகள் தெரிசித்துப்பணியும், சுத்தபரிபூரணியும் சுகாதித அன்னமும், சுழிசூட்சசடாதாரபிரணவசோதியும் ஆகியநீ என்னை முன்னமே காப்பாற்றவேண்டும் எ-று.

சூரியசந்திரகாந்திமின்னலொளிவே-தூல-சூக்ஷகாரணப்பிரகாசசொன்னவொளிவே, வாரிசூழமிர்தபானமாமதுரமே-திரு-வள்ளுவன்சொற்பதவி வாழ்விக்கவருமே, துரிய துரியாதிதமும் வாசியும்பாயும் சுயம்பிரகாசதீப சுடர்சோதிகாரணவுந், தேறியபெரியோர் பாதஞ்சேர்வைசெய்யவுந்-திரு-நடனகாரசாரசெய்கையாண்டையே

இ-ள், அழகிய நடனஞ்செய்கின்ற காரசாரத்தின் செய்கையானது சூரியசந்திரகாந்தியையுடையமின்னளொளிவே, தூலசூக்ஷக்காரணப் பிரகாசத்தையுடையசொர்னவொளிவே, சமுத்திரத்தைசூழ்ந்த அமிர்தபானமதுரமே, திருவள்ளுவன் சொல்பதவிவாழ்விக்கவருமே துரியமதுரியாதீத வாசியும்பாயும், சுயம்பிரகாசதீபச்சுடர்ச்சோதிகாரணவும் பெரியோர்பதஞ் சேவைசெய்யவுமாகும் எ-று. 1780

வாசிவாசிவயநவங்கென் றாதியே-வாசி-வரவழைத்து வாய்வுபத்துமாறியூதியே, தேசிகன்திருவடிதெரிசனம்பார்க்க-சிங்கென்று-கண்டதாரைகொண்டுதினந்தீர்க்க, நாசிநுனிமீதில் சுழிநடன சேர்வை - காண - நாதாந்தசின்மயத்தினரு நாதனைப்பணியவுளசிமுனை மேலதி தவுச்சிகள்கிழுமுள் - மூல - கண்டதாரை யாசையோகவாழ்க்கையே. சித்

இ-ள், வாசிவாசிவயநம, வங்என்று ஊதிவாசி வரவரவமைத்து வாயுபத்தையும் மாறியூதி குருவினுடைய தரிசனம்பார்த்து சிவ்என் றஊதிகண்டதாரையைக்கொண்டு தினமும் நீண்டநாசிநுனியில் சுழிநடனச்சேவையைக் காணவும் நாதாந்தத்தில் விளங்குஞ் சின்மயநாதனை பணியவும் ஊசிமுனையின் மேலும் உச்சியின் கீழு முள்ள மூலகண்டதாரையின் ஓசைமிக்கயோகவாழ்க்கைய எ-று, 1781

ஊதிடுங்கண்ட தாரையிலுஞ்சென்று-மூலம்-உள்ளுக்குள்ளவும்
ரேசித்துக்கும்பியூதிடுந்தாரை, ஆதியானசோதிகண்டுஆராதனைசெய்து அகண்டவெளிகாணுமநதிடத்திலூதவும், பூதாதியைந்தும்பொருந்திபூரணமதிலுஞ்-சுழிபுருவமைய நேரில்நின்று புகருமம்பரமே,
நீதியாய்ச்சதாசிவன்தன்நேசமிங்காண்க நீடூழிகாலம்வாழ்ந்து முத்திநிலைபெற்றேன்காணும். சித்

இ-ள். கண்டத்துவாரத்தில் நின்றஉங்என்றஊதிஉள்ளேரேசித்துகும்பித்து ஊதிடுந்தாரையில் ஆதியான சோதியைக்கண்டு ஆராதனைசெய்து அகண்டவெளியானது காணப்படுகின்ற அந்த இடத்தில் ஊதினால்ஐம்பூதங்களும்,பொருந்தியபூரணத்திலும் சுழிமுனையிலும், புருவமையத்திலும் இருந்து புகழ்கின்ற அம்பரவழியாய் சதாசிவனுடைய குணத்தைக்காணவே நான்சதாவாழ்ந்து முத்திநிலையையடைந்தேன் எ-று, 1782

வேறு-விருத்தம்

சோதியாய்நின்றதிபச் சுழிமுனைக்கமலந்தன்னில்
நீதியாய்வாசியூதி நின்றொருநிலையில்கண்டஞ்
சாதனையோகஞ்செய்து தற்பரத்தருளைப்போற்றி
நாதனைப்பணிந்துமேன்மேல் நான்மலரர்ச்சித்தேனே

இ-ள், தேஜோமயமாய்இருந்ததிபத்தையுடைய சுழிமுனையென்கிறதாமரையில் வாசியையூதியிருந்து ஒரு நிலையில் யோகஞ்செய்து தற்பரத்தருளைப் போற்றி நாயகனைவணங்கி மேன் மேல் புதியமலரைஅர்ச்சனைசெய்தேன்

இருபத்தோராயிரத்து அறுநூறுசுவாசந்தன்னில்
வருங்கலையொவ்வொன்றாக வாங்கித்தேய்பிறையில்லாமல்
அருங்கலைபாலுங்கண்ட அதிசயமனேகமுண்டு
வருவதுஞ்சொன்னேனயான்பர் மாய்கையில்மயங்கினரே.

இ-ள், இருபத்தோராயிரத் தறுநூறு சுவாசத்தில்வருகின்ற கலையை ஒவ்வொன்றாக மாறிவாங்கித் தேய்பிறையில்லாமல் வளர்பிறையாலும் பார்த்ததிசயம் அநேகமிருக்கின்றன. வருவதுஞ்சொன்னேன் பெரியோர் மாய்கையில் மயங்கினர் எ-று. 1784

கொச்சகம்.

இந்தசெனமிருந் தென்னபலனென்னவிதம்
எந்தவிதமாகிலுமே யீசனைக்கண்டேபணிந்தால்

வந்துலபித்தேவிடுங்காண் வாசியென்றதும்பொருந்த
மந்திரமாய்நின்றசுழி வாசிவசமானதுவே.

இ-ள், இந்தப்பிறப்பு இருந்தென்னபலன்? எந்தவிதத்தாலாவது ஈசனைக்கண்டுபணிந்தால் வாசியென்றதுவும் மந்திரமாய்நின்றசுழிவாசிவசமானதவும்வந்துலபிக்கும் எ-று, 1785

வாசியைக்கொண்டூதிகண்ட மார்புநெடுநேர்கீழ்மையம்
பூசிதயபாசமதில் பூரணத்திலும்நினைவாய்
வாசிவாசிவயநமவா வென்றும்விநாடிபத்தும்
நாசிநுனிதீபமதில் நான்பணிந்துநின்றேனே.

இ-ள், வாசியைக்கொண்டு ஊதிக்கண்டம், மார்நடு நேர்கீழ்மையம், பூசிதமாகிய பூரணத்திலும் வாசிவாசிவயநமவா என்றவிஞடிபத்தும் நாசிநுனித்தீபத்தில் நான்பணிந்து நின்றேன் எ-று, 1786

கலித்துறை

நமசிவயவென்று நாட்டத்திலுமனம் நான்மகிழ்ந்து
அமைப்பதும்வந்து அணுகினதால்அவ்வும்உவ்வுஞ்சித்தி
இமைவராலு மிவ்வழிகண்டு இருப்பதுகாண்
நிமைப்போதும்வாசி நிலைத்ததனுல்நெஞ்ச நேர்படுமே.

இ-ள், நமசிவய என்ற சுழிமுனைநாட்டத்திலும் மனதிலும் நான்மகிழ்ந்துவந்ததினுல் அமைப்புவந்து சேர்ந்ததால் அவ்வும் உவ்வும்சித்தியாக தேவர்களாலும் இந்தவழியைக்கண்டுகொண் இமைப்போதுவாசிநிலைத்ததினுல்நெஞ்ச நேர்படும் எ-று, 1787

வாசியைக்கண்ட தாரையிலூதி மருவிமனம்
ரேசித்துப்பூரித்துக் கும்பித்துவாசி நின்றிடவும்
பேசிடும்பேசா திடமுனக்கெய்தும் பிரபல்லியங்காண்
காசிக்கும்ராமே சரத்துக்கும்வாசி காண்கிலரே.

இ-ள், வாசியைக்கண்ட துவாரத்தில் ஊதிச்சேர்ந்துமனம்ரேசித்துப்பூரித்துக்கும்பித்துவாசியானது நின்றவுடன் பேசியும் பேசாத இடமானதுஉனக்குக்கிடைக்கும் இதுபிரபல்லியமாகும், காசிக்கும் இராமேஸ்வரத்திற்கும் வாசிகாணமாட்டார் எ-று. 1788

நடப்புக்கெட்டாத நாதாந்தவாசி நாட்டத்திலும்
அடர்ந்தூதிகண்ட அகண்டம்பெருவெளியம் மூலத்திலுங்
கடந்தந்தமூலக் கருக்குழிநாடிக் கழிந்துவிடா
துடர்ந்துவோங்காரப் பிராணயவாசி தூக்கத்திலே.

இ-ள், நடக்கைக்கு எட்டாதநாதாந்தவாசி நாட்டத்திலும்அடர்ந்துஊதிக்கண்ட அகண்டப்பெருவெளியாகிய மூலத்திலும் கடந்தது, அந்தமூலக்

கருவாசலைநாடித்தாண்டி விட்டால் தொடர்ந்து ஓங்காரமாகிய, பிராணாயாம வாசியானது துக்கத்தில் எ-று, 1789

ஓங்காரங்கொண்டு வாசிகீழ்பாயஉதாரணமாய்
நீங்காமலம்பிகை பாதாரவிந்தம் நிர்ப்பந்தமாய்
வாங்காமல்வாசி மேல்நோக்கிசாதனை வசப்படவும்
தேங்காமல்தேங்கித் திருசிற்றம்பலந்தனைத் தெரிசித்தனே.

இ-ள், ஓங்காரத்தை வாசியைக்கொண்டு கீழ்பாயும்படிஉதாரணமாகநீங்காமல் அம்பிகையின் திருவடித்தாமரையைப்பந்தமாய்ப்பிடித்துவாசியைமேல்வாங்கி நோக்கிச்சாதனையான துவசப்படவுந்தேங்காமல் தேங்கித்திருச்சிற்றம்பலத்தைத்தெரிசித்தேன் எ-று. 1790

எந்நாளுமிந்த வெண்மானுடலி லிருந்தவுயிர்
தன்னால்வளர்பிறை தசைபத்துவாரிவுந் தன்னுக்குள்ளே
முன்னாளில்விட்ட குறைவந்துசூழ்ந்து முடிந்ததுகாண்
இன்னாளிலைவரும் யானுமொன்றாகி யிருந்திட்டேனே.

இ-ள். எக்காலத்தும் இந்த எண்சாண் உடம்பிலிருந்த உயிரினால் வளர்பிறையில் பத்துவாயுவுக்குள் முன்னாளில் விட்டகுறைவந்து முடியவே இந்நாளில் ஐவரும் யானும் ஒன்றாய் விட்டோம் எ-று, 1791

வெண்பா.

கற்பமதனால்முடிந்த காயசித்திவீட்டினிலும்
உற்பகமாய்வாசியிருந் தோங்கினால்-கற்பமதால்
நவரத்தினவீட்டில் நாதனுமேயானுமாய்
அவரொருவனாயிருந்தோ மாண்டே.

இ-ள், கற்பஞ்சாதித்ததால் முடிந்த காயசித்திவீட்டில் வாசியானது உற்பவித்து வளர்ந்தால், அந்தக்கற்பத்தினால்நவரத்தினவீட்டில்குடியிருந்தநாதனும் நானும் ஒன்றாயிருந்தோம் எ-று, 1792

அசைவுறுந்தாலல்லோ வைம்பூதமாச்சுதுகாண்
நிசவோடும்பாவனைபோல் நீஞ்சினேன்-அசைவதனால்
பத்துப்பனையுயரம்பாய்ந்து அண்டகோசரமாய்
நித்தநித்தம்வாசிகொள்ளு நெஞ்சே.

இ-ள், அசைதலிருந்தாலேஐம்பூதமாயின, என்கிறபாவனைபோல் நானும்நீந்தினேன், அப்படிஅசையும் அசைவினால் பத்துப்பனைமாமுயரம் பாய்ந்து அண்ட கோசரமாய் நெஞ்சே தினமும் வாசியானது கொள்ளும் எ-று.

வான்புவியுமாதல் மதியுப்புரவியதனால்
நானுமருள்பெற்று நான்மகிழ்ந்து-ஞானம்

காலுபொருளறிந்தால் ஞானம்வந்துவாய்க்கும்
காலும்பனிரெண்டளவால் காட்சி.

இ-ள், மதிரவிசலிஞலுண்டானஉலகத்தில் நாலும்மகிழ்ந்து திருவருள் பெற்று வானத்திலுள்ள சதர்விதப் பொருள்களையு முணர்ந்தால்ஞானம்வந்து கைகூடும் அதுவும்பன்னிரண்டு அங்குலபனையின் காட்சியாம் எ-று.

ஈராறுமெட்டெட்டு மிரவிமதிகாலும்
வாருகவாசிகொண்டு மாறிஞல்-ஈராறும்
கற்றேரேகற்றூர் காயசித்திபெற்றூர்
வித்தால்வினைந்ததுகாண் விந்து.

இ-ள், பன்னிரண்டு, பதினூறு என்னும் சூரியசந்திரர்கள் சாலும்படியாக சரத்தைக் கொண்டுமாறிஞல் ஈராறுகிய பன்னிரண்டுசரத்தின் கிரமங்களைக்கற்றவர்களே காயசித்திபெற்றவர்கள் ஆஞல்இதுவிந்திஞல் விளைந்ததாகும் எ-று. 1795

விருத்தம்.

அருள்பொருளுங்காயசித்தி கற்பஞ்சொன்னேன் அண்டமதில்நிறைந்துநின்ற கருவுஞ்சொன்னேன், வரும்வினைக்குள்வல்வினையின்மாறல்சொன்னேன்மதுரதமிழ்பொழியுமதிரவியுஞ்சொன்னேன், திருவுருவாய்நின்றிலங்குஞ் சிவமுஞ்சத்திதிங்களின்சந்திரகாந்திதேவமாது, இருவினையையகற்றி யெனக்கமிர்தமூட்டி யெனைவளர்த்த அபிராமிமூலந்தானே.

இ-ள், திருவருள், பொருள், காயசித்தி, கற்பம், அண்டத்தில்நின்ற கருவருகின்ற வினையின்மாறல்கள், சூரியசந்திரர்களின்நிலைமை, திருவுருவாய்விளங்குகின்ற சிவசத்தியின் சந்திரோதயத்தையுடைய அம்பிகைப் பெண்ணனவள் இருவினைகளை நீக்கி யெனக்கு அமிர்தத்தைஉண்பித்து என்னைவளர்த்தமையால் இம்மூலங்களைச்சொன்னேன எ-று, 1796

மூலமெனும்வாசியொளிவானபீடம் மூதண்டப்பிராணையமுனைமேலாக, காலனையுஞ்செயித்தகதிர்மதிநீர்சாரங் காயசித்திகற்பமிந்தக்கருத்திஞலும், ஆலவிடமமுரியிஞலாண்டுக்குள்ளே அதிதசுத்தி ஆச்சுஅப்பிஉப்பிசாரங், தூலவுடல்சூக்ஷமதும் பெலத்துப்போச்சு துவாதசாந்தவெளியறியலாச்சே.

இ-ள், மூலமென்றுசொல்லு கின்றவாசியாசி யதன்வானபீடம் மூதண்டப்பிராணையாரத்தின் மேல் எமனைவென்ற கிரணங்களையுடைய சந்திராமிர்தத்தைச்சாரமாகக்கொண்டு காயசித்தியை யடைந்த எண்ணத்திஞல் ஆலகாலவிடத்தை அமுரியிஞல்ஒருவருடத்திற்குள் அப்பு உப்புவின் சாரத்தால் அதிசுத்தியாச்சு, அன்றிதூலவுடலானது சூக்ஷமாகிப் பெலத்து விட்டது, துவாதசாந்தவெளியும்உணரும்படியாயிற்று எ-று, 1797

வேறு-கவி.

இந்தவாசி யெழுந்திடுமூலமும், அந்தகார மப்புமுப்புங்கூடியும், விந்தையாய்பழ மூலமுமூலமும், வெந்துநீரால்வெடி சுன்னமாதலால், எந்தனுவியெண் சாலுடல்சுத்தியாந், தந்தைவிந்து தரணியில் விட்டநாள், அந்தவோர்குறை அவ்விதமாகிடில், விந்தினுலுடல்வேறுகூறுண்டையே.

இ-ள். இந்தக்காலானது உண்டான மூலஸ்தானமும் அந்தக்காரமாகிய அப்புவும் உப்புவுங்கலந்தும் பழமூலமான மூலஸ்தானமும், வெந்தநீருய்வெடிசுண்ணமாகையால் என்னுடைய உயிரும் எண்சாணுடம்புஞ் சுத்தியாகும் தந்தையானவன் தன்னுடைய விந்தவை உலகமாகியபூமியில் விட்டநாள் அந்தக்குறைவந்தது,இது இவ்விதமாகையால் விந்துவினுலுடலம்பலவகைப்படுவதாம் எ-று. 1798

சாவியுங்கழிந் தோடுவதாகையால், வாலிபங்கள்வளர்பிறைமாறிடும், பாலனுய்வாலி பங்களில்கற்பங்காண், வாலையாமினி வச்சிர தேகமாஞ், சீலவாசி சினேகிதமானதால், தூலமேயுடல் சோதிப்பிரகாசமாய், மாலியேது மறலியுமேதுகாண் சூலிகபாலி சுடர்கோடி தீபமே.

இ-ள், சரமானது தினமுஞ் சேலவாவதாகையாலும், வாலிபங்களும் வளர்பிறைபோவதுபோல்மாறிடும், ஆகையால்பாலனுய்வாலிபதில் கற்பங்கொண்டால் வச்சிரதேகமாகும் அப்பொழுது சுத்தவாசி தேகமாவதினுல் தூலவுடலானது சோதிப்பிரகாசமாகும், அதனுல்எமனென்பவன் இவனுவான்ஈஸ்வரசோதியுண்டாகும் எ-று, 1799

தீபகுண்டஞ் செழுந்தேன்பொழிந்திடுங், கியாபகங்கள் கனேசனிருப்பிடம், பாவமேதுபர மெனும்பாவமுஞ், சாபமேது சாரத்தாலழிந்திடுந் தூபதீபங்கார சாரமுங்காதலால், தாபமெல்லாம் க்ஷணத்திலொழிந்திடும், ஆவதென்ன அழிவதுமன்னமால், சாவதில்லைகாண் சண்டனுமில்லையே.

இ-ள், அக்கினிகுண்டமானது தேன்பொழியும், கணேசனிருப்பிடமே ஞாபகமாகும், பரமென்பதுவே பானமாகும்சாபமென்பதுசாரத்தாலழியும் தூபதீபமென்பது காரசாரம்ஆதலால்தாபமெல்லாம், க்ஷணநேரத்தில்நீங்கும்ஆவதும் அழிவதும் அன்னத்தால் அதுஎழுத்திடில் சாவதுமில்லை, எமனுமில்லை

உப்புங்கார முணர்ந்துருசிப்பதாய், அப்புமுப்புமறிவறிந் துண்பர்காண், இப்பொருள்கண்டிரவிமதியுமே, கைப்பொருளுன் னுள்கணக்கில்லை வேதைகாண், செப்பினர்கள் தெளிந்தபண்போர்க

ளும், அப்படியாண்டேயகத்தியர்வாக்கினல், சொற்படியினிசுரோ ணிதசுக்கும், இப்படிகண்டு யியம்பினேனுண்டையே.

இ-ள்' உவர்ப்பையும் சார்ப்பையுமுணர்ந்துமுசிப்பாதாய்அப்பையும்உப் பையும் அறிவினுலுணர்ந்து தின்பார்கள்,இந்தப்பொருளைக்கண்டேரவிமதியை யும் உன்னுள்கண்டால் வேதையாவதற்குகணக்கில்லை மிகவும்தெரிந்தவர்க ளும் அப்படியே சொன்னர்கள்,நானுஞசுக்கில சோணிதங்கள் கலக்குமார்க்க த்தை மகானுகிய அகத்திய முனிவர்வாக்கினுலுணர்ந்து சொன்னேன் எ-று

வேறு-விருத்தம்.

அந்தணர்முனிவரோடு ஆய்ந்தநூல்பதினெண்பேருஞ்
சாந்தசமாகத்தானுஞ் சாஸ்திரநூல்கள்பாடி
செந்துகள்கள்தனிலுமான்பர் சுத்தராய்தெளியத்தானும்
சுந்தரஞானவெட்டி சூக்ஷமமறிந்திடீரே.

இ-ள், பெரியோர்கள், முனிவர்கள் பதினெண்சித்தர் ஆகிய இவர் கள் அநேகசாஸ்திரங்களைப்பாடினுர்கள், செந்துக்களும் தெளிந்து சித்தாக ஞானவெட்டிசொன்னேனே! இதின்சூக்ஷதையுமறிவீர் எ-று. 1802

ஞானத்தைவெட்டிநாத விந்துவின்கருத்தினுலும்
பானத்தையுண்டுஆண்டுபழக்கமதாகையாலும்
வானத்தினீரால்சுத்தி வாசியால்காயஞ்சித்தி
யூனற்றுஉறக்கமற்று யோகத்திலிருந்தேனுண்டே.

இ-ள், நாதவிந்தக்களின் கருத்தினுலும், காயசித்தி செய்தற்குறிய சுத் திவாசியாலும், ஊனற்று, உறக்கமற்று, ஞானத்தை வெட்டி யோகத்தி லிருந்தேன் எ-று. 1803

யோகத்தின்விதிதானென்ன உடலுயிர்பிலக்கத்தானும்
ஆகமப்படியேஞான ஆயிரத்தைந்நூறுசொச்சம்
பாகமாயாய்ந்துபானம் பழக்கமோராண்டுஉண்டால்
சாகத்தான்போமோஇல்லை சாக்காடுதவறிப்போமோ.

இ-ள், யோகத்தின்விதி என்னவென்றால் உடலும்உயிரும் பலக்கும் ப டிஆகமதிற் சொல்லியவண்ணமே அமுதபானம் பழக்கம் ஒருவருஷம் புசி த்தால் சாவுவருமோ? வாராது என்று ஆயிரத்தைந்நூறுச் சொச்சம் சொல் லும் எ-று. 1804

சாரமோராண்டுஉண்டு சடமதும்வலுக்கச்செய்து
காரமுமிரண்டாண்டில்தான் காலைபோய்மாலையுண்ண
மாறவுங்கழித்துமூன்று வருஷமுங்கடந்துதானல்
வீரமாமுதகம்பாயும் வேதையும்வாச்சுதாண்டே.

இ-ள், ஒருவருஷம் வரைக்கும் சாரமுண்டு தேகத்தை வலுக்கச்செய்து இரண்டாவதுவருஷத்தில் காலையிலாவது மாலையிலாவது உண்டுமூன்றுவது

வருஷத்திலும் அப்படியேசெய்து அவ்வருஷத்தையுங்கடந்தபின்றால் அவனு
க்குத்தேகத்தில் அமிர்தம்பாயுமாம் வேதையும்முடிந்ததாகும் எ-று. 1805

வாலையபிராமியெனுங்கமலந்தன்னில்மலரடியைப்பணிந்துமதி
யமிர்தமுண்டு, பாலையமிர்தமூலமெந்தன் இல்லாவாழ்க்கைப்பன்னி
ரண்டுவருஷமதுஞ்சென்றுமேலும், ஆலவிடமுண்டசிவளருளா லா
ண்டேஆயிரத்துஅந்நூற்றுஅருபத்தொன்றும், சிலமருள்ஞானவெ
ட்டிநிறைந்தசோதிசிவசமையந்தழைத்தருள்வாய்சித்திமுற்றும்.

இ-ள். வாலையபிராமியென்று சொல்லுகின்றதாமரையில் அவளுடைய
மலரடியைப்பணிந்து சந்திராமிர்தமுண்டு இல்லறவாழ்க்கையென்னும் யோ
கத்தில்பன்னிரண்டுவருஷமும்சென்றுவிடமுண்டசிவனருளால் பாடப்பட்ட
ஆயிரத்தைந்நூற்றறுபத்தொன்றுஞ் செய்யுட்களாலாகிய ஞானவெட்டியில்
நிறைந்திருக்கின்ற சோதிமயமாகிய சிவசமயத்தில் தழைத்தருளினால் சித்தி
முற்றும் எ-று. 1806

## வேறு-கவி.

முத்துதித்தவெண்மதி யுதித்தசந்திரமால்மயம்
வித்துதித்தநேர்மையால் விளங்குமிந்நூல்வாய்ந்தனர்
கற்றுதித்தசித்தர்கள் கடந்திடுங்கருத்தினால்
பத்திரண்டிராறுங்கூடி பலித்துதிந்ததீட்சையே.

இ-ள், முத்துக்குள் பிறந்த வெள்ளியசந்திரனது மிக்கசிறத்தைவிதை
யில் பிறந்தவிதத்தால் இயல், இசை, நாடகம்என்னும் மூன்றுநூற்களையாய்
ந்தவர்களும், கற்றசித்தர்களும் உணர்ந்தஎண்ணத்தினால் பன்னிரண்டோறு
ங்கூடிப்பலித்தது இந்தத்தீட்சையாகும் எ-று, 1807

தீட்சைபெற்றிரண்டுடன் தச தீட்சைபெற்றபேர்களும்
தீட்சையானபேர்தமக்கு தீங்குவாராதாகிலுந்
தீட்சையாமீராறும்பெற்ற சித்தர்கட்கதிதமாய்
தீட்சைபெற்றயோகிகட்கு சேதமில்லையில்லையே.

இ-ள், சாதாரணதீட்சைசெய்து கொண்டபின்னர் தசதீட்சைபெற்றவ
ர்களும், ஞானவெட்டிதீட்சைபெற்றவர்களுக் கிணையாகமாட்டார்கள் அவர்
கள்சித்தர்களுக்கு முயர்ந்தவராவார்கள், அங்ஙனம்தீட்சை பெற்றயோகிகட்
கு ஒருக்காலமும் சேதமில்லையாகும் எ-று, 1808

சரிதைகிரியையோகஞான சங்கைகளதீதமாஞ்
சரிதையாவதேதுலக தந்தைவிந்துநாதமும்
சரிதையிலுதித்தஞான சாஸ்திரமறிந்ததால்
சரிதகிரியையோகஞான சாட்சியிந்நூல்காண்பரே.

இ-ள், சரியை, கிரியை, யோகம், ஞானம் இவைகளின் சங்கைகள் அ
நேகமாகும், சரியையாவது எதுவென்றால் உலகத்திலுள்ள தந்தையின்விந்து

நாதங்களாம், சரியையிலுண்டான ஞானசாஸ்திரத்தை உணர்ந்தால் சரியை கிரியை, யோகம் ஞானம் இந்நான்கிற்கும் காட்சி இந்நூலாகும் எ-று,

நூலறிவதேதுகாணுழைந்து பார்த்தபேர்களே
நூலறிந்துபின்புயோனி நோக்கமுமறிவதோ
வாலைபுந்தன் தாயெனு மறந்துதோவிழியொளி
வாலையின்வயிற்றில்வந்து வாரறிந்தபேர்களே.

இ-ள், சாத்திரநுழைந்து பார்த்தவர்கள் நூல்ஆராய்ந்து எது ? அப்படி நூலையறிந்தபின் யோனிநோக்கம் அறிவதாகும்? வாலை உன்றன் தாயைமறக்கலாமோ? விழியொளியையுடைய வாலையின் வயிற்றில் வந்தவிதத்தை யறிந்தபேர்களே எ-று, 1810

யோனியாசைதீனியி லுழலுகின்றமாண்பர்கள்
யோனியாசையாலுயி ரொடுங்குவாறறிந்திலீர்
யோனியிலுதித்தபின் னுபஸ்தங்கொண்டுமாய்கிறீர்
யோனியாசையும்மறந்து ஊதுதாரையோகமே.

இ-ள். யோனியாசைகொண்டு திரிகின்றமனிதர்களே! அதனால் உயிர் போய் விடுவதையறியமாட்டீர், அதிலேபோயிருந்து அதினாலே போயிறக்கிறீர் ஆகையால் அதை மறந்து தான்ஊதுவதாகிய யோகத்தை செய்யுங்கள்.

தாரைகொண்டுவூதியோக சாதனைநிலைத்திடும்
வாதையேது ஆண்டுபின்பு வாரியால்முப்பாழதாம்
வேறுகூறும்மலம் வெறுப்புகொண்டுமாறுமாய்
தேறுங்காயசித்தியெண்சாண் தேகவச்சிரகாயமே.

இ-ள், துவாரவழியாகவூதி யோகசசாதனைசெய்து ஒருவருஷத்திற்குப் பின் அந்த அமிர்தவாரியால் முப்பாழாம், அப்போது வேறுவேறாகச்சொல்லப்படும் மும்மலங்களும் வெறுக்கப்படுமாறாய் எண்சாணுடலமது, காயசித்தியடைந்து வச்சிரதேகமாகும் எ-று. 1812

பசைந்தமண்பழமலம் பரிகரிக்கவல்லிராம்
இசைந்ததீவினையிரண் டினிபறந்துஏகிடில்
பசைந்தமண்ணுதர்மமும் பகர்ந்தகங்கைகர்மமும்
பசைந்தமண்ணுந்தண்ணிகாண் பாரும்உப்புசற்றியே

இ-ள், பச்சைமண்ணாகிய பூநீற்றைப்பரிகாரஞ்செயதால் பொருந்தியதீவினையானது பறந்துபோம், மண்ணானது அதர்மமும் கங்கையானதுகர்மமுமாகும், பசைந்தமணணென்பது உப்புசற்றியநீராகும் எ-று. 1813

உப்பகன்றுகர்மமு மூவர்ப்புகாரசாரமும்
அப்புஉப்புமாற்றினு லவர்பெருமையென்னகாண்
கைப்புமாறமாறதேக காந்தியென்னசூரியன்
உப்புமுன்னைக்கொல்லவந் துளவனென்றறியுமே.

இ-ள், உப்பைபரீக்ஷியசத்பமும், உவர்ப்பு காரசாரங்களும், கொண்டு துப்பையும் உப்பையும மாற்றினல் அவர்பெருமையை என்னவென்று சொல்லுவேன், கைப்பானதுமாறமாற சூரியனைப்போல் தேககாந்தியுண்டாம், ஆகையால்உப்பானது உன்னைக்கொலவந்த உளவனென்று தெரிந்துகொள்ளுக.

கைப்பல்லோஇருந்துஉப்பில் காலனருசூழ்வினை
அப்பல்லோஇருந்துலோக மானதுமழிவதும்
உப்பல்லோவிரகதாப காமிதமுணர்வதாய்
இப்பொருளிருந்தல்லோ எழுந்துஎண்சாண்தேகமே.

இ-ள், உப்பில்கைப்புகலந்திருந்தல்லவா வினைச்சம்பந்தம் பட்டகாலனுவது, அப்பல்லவோ உலகமாயழிவது? உப்பல்லவா விரகதாபகாமத்தைவிளைவிப்பது? அந்தக்காமமல்லவோ எண்சாண்தேகமானது? எ-று. 1815

கெந்திதிராவகம்- தரு.

அந்தபரிபூரணகெந்திதிராவகங்காணும்-அருள
அதின்பிரகாரமகாயிரங்கண்வேணும்.

இ-ள், அழகியகந்தத்தின் திராவகம்இதுவேகாண், சொன்னல் அதின்பிரகாசத்தைக்காண ஆயிரங்கண்கள் வேணும் எ-று.

இந்திரனுந்துய்யவெண்ணாந்தமதியொளிவாய்
இந்தவர்னமுடைத்தால் விந்துநாதநீர்காணும்
இலகுப்ர்-கதிர்சூரியன,அழகுமுலசரகும்படி. அந்த

இ-ள், இந்திரனும், வெண்மதியும், விந்து நாதங்களும் சிறந்தால் இதற்கொவ்வா? சூரியனும் அழகு சாம்பும் எ-று, 1816

அந்தமதிசாரநீரமுரிநாலுபடிகொண்
டறிந்துபாண்டத்தில் தாக்கியகத்தியரைப்பணிந்து
அதுபாளநீர்-கரமால்கரை-வடிஞள்திரி-எடுநாதநீர். அந்த

இ-ள் அழகிய பனிநீர்நாலுபடி கொண்டு ஒரு பாண்டத்திலூற்றி அகஸ்தியரைப்பணிந்து மூன்றுநாள்வரைக்கும் வடிகட்டி எடுத்த நாதநீரை எ-று,

விந்துநாதநீர்கொண்டுவேறொரு ஏனத்திலூட்டி
சுந்தரப்பூநீர்பலம்பத்தொடுத்துடனும்பின்புகாண்
தொழுதப்பணி-வழுவாமலும்-பழுதேதுகா-ணிதுவேகமும் அந்த

இ-ள், இந்தநீரை வேறொருபாத்திரத்தில் வார்த்து பூநீறு பத்துப்பலம் போட்டால் அந்தநீரானது கதிசமாகும் எ-று. 1818

சிந்தையில்லாமல்காணுந்தெளிவாய்மடையன்சுன்னம்
வெந்துநீறுனதுவுமிடவும் பலம்பத்தாகும்
வெகுவாம்கரைத்-ததுமூன்றுநாள்-சொகுசாய்சுத்த-சலநீரது.

இ-ள், கேவனக்கொண்டு வீரச்சுண்ணம் பத்துப்பலமும் கூட்டிப்பேரட் டுமூன்றுநாள் வரைக்கும் நன்றாய்க்கரைத்து வடித்தசுத்தநீரில் எ-று.

துய்யகெந்திதனையுந்தோளாந்திரங்கள்செய்து
துக்கிக்கிழியாய்க்கட்டிச் சுடர்மலம்போல்வன்னி
சொரிந்துக்கனல் பொழிந்துக்குறி-யறிந்தும்பதம்மெறிந்துத்தணல்

இ-ள். சுத்திசெய்தகெந்தகத்தை தோளாந்திரக்கட்டி அடுப்பி லேற்றிக் கமலாக்கினியாக எரித்து எ-று, 1820

எரியஎரியேதணலிதுநீர் தொக்குந்தொங்கிடும்
இனம்பார்கெந்திமெழுகு இளகுமிதனை வாங்கி
எரிப்புத்தனி-விந்துநீர்சல-மிருபத்துட-னெருப்பாறியே. அந்த

இ-ள், அப்படி எரிய எரியானலதிகப்படுவதால் நீர்குறைகின்ற சமயத் தில் கெந்தகமானது மெழுகு போலிளகும், எரிப்பிலிந்த நாதநீலாயும்பதனம் பண்ணி நெருப்பையாற்றி எ-று, 1821

காரசாரசெயநீர்கருதுமிந்தநீர்முன்பு
கருநீரெடுத்தோரினவறுநீர்பதனஞ்செய்து
கணக்காயெடு-பலமொன்றது-எனக்கானதுஇரவிமதி. அந்த

இ-ள், காரசாரசெயநீரை இந்த நீரிலெடுத்துச்சேர்த்துப்பத்திரப்படுத் தி அதில் ஒருபலம் கணக்காயெடுத்து எ-று, 1822

இரவிமதியளவாலிருதசற்பகாலங்கள்
சுரவிகுளிகையினால்சிவராஜாங்கயோகஞ்
சுழிபேதக-முனைமீதினில்-விழிபார்திரு-நடனங்களில் அந்த

இ-ள், சூரியசந்திரர்கள் கணக்கிலுண்டான கற்பகாலங்கள் உயர்ச்சமதி யாலுண்டான குளிகையினால் சிவராஜயோகம் சுழிமுனையிலிருந்து விழிகொ ண்டுபார்த்தால் காணும் திருநடனங்களில் எ-று, 1823

கெந்திமெழுகுதன்னை முந்திக்கலுவத்திட்டு
இந்தநாதநீரிட்டு இணைவிடாமலொருநாள்
இதுநீர்விட-மயனப்பத-மதுபோல்வரும்-வழித்தேயெடு அந்த

இ-ள், அப்படியான கந்தகமெழுக்கை முன்னர் கல்வத்திலிட்டு முன் சொன்னநாதநீரைவிட்டு இடைவிடாமல்ஒருநாள்வரைக்கும்அரைத்துமயனப தமாய் வரும்போது வழித்து எடு எ-று. 1824

மயனங்கொண்டுவாலைரவிதன்னிலும் வருங்காண்
நயனபார்வையுநாடியடிக்கடிவினடி
ரவிதன்சுடர்-கனலொன்பது-கவியும்படியருணனொளி. அந்த

இ-ள், அர்த்தமயனத்தை ஒருவாரம்வரைக்கும் வெயிலில்வைத்து சூரிய னொளியுண்டாம்படி எ-று. 1825

க்ருவாய்மெழுகெடுத்துக் கருவர்தனிலடக்கி
கம்பிபுப்பதுசேர்த்துக்கலக்கஜாமமுமாட்டி
கருதும்பொடி-வருகாண்பதங்-காணுங்கள-வேகத்துடன் அந்த

இ-ள், அந்த மெழுக்கையெடுத்துக் கல்வத்திலிட்டு கம்பியுப்பை அந்த எடைக்குச்சேர்த்து இரண்டுகலக்கும்படி ஒருசாமமாடி பொடியாக வருமென் றபதத்தில் எ-று. 1826

செப்புக்குடத்திலாட்டிச்செம்பிளுல்வாலைபூட்டி
அப்புமதின்மேல்சோர அடிக்கடியும்நீர்பாய
அனல்கொண்டே-யொருசாமு-மனல்சூழ்ந்துடன்-வருதிராவகம்.

இ-ள், அதையெடுத்துச் செம்புவாலையி லிட்டுக் கிரமப்படி ஒருசாமம் எரித்தால் திராவகத்தால் எ-று. 1827

தேய்வைச்சேர்ந்தபாக்கில் நீர்கெந்திசரக்கு
பாயும்ரோகந்தனிலும்பற்பமதாகுமனேகம்
பரிபத்தது-கழஞ்சாவதுங்-குறியொத்துடன்-குகைக்கிட்டுமே.

இ-ள், இந்ததேய்வுச்சாக்கில் கெந்திசேர்த்தால் ரோகம் அநேகம் பறக் கும் அநேகவகையான பற்பமுமாகும், ஆகையால் பொன்பத்து கழஞ்சுஎடுத் துகுகையிலிட்டு எ-று. 1828

மேலுங்கொல்லனுலையில்மேவியருகும்பதம்
வேகமாச்செந்தித்திராவகம்-விடுங்குன்றியிடைவிதம்
மிதங்காண்குகை-யதமாம்யிடும்-வெடிகாண்கெடி-யமைரநாழியில்.

இ-ள், அது கொல்லனுலையில் உருகும்போதுமுன் முடிந்தகந்தகத்திரா வகத்தை ஒரு குன்றியளவு அதில்விட்டு பதமாய் எடுக்கவேண்டும் இல்லையா ளுல்அரைநாழி கையில் வெடிக்கும் எ-று, 1829

சித்தர்சாபவிரத்தி செப்புமிந்நூல்வகையில்
உத்தசெய்தியுண்டா மொருதுளியில்வட்டாகு
மூலகந்தன்னில்-தசதீக்ஷைபிது-ஒருதிக்ஷைகா-ணருள்பெற்றிடில்.

இ-ள், சித்தர்களிட்ட சாபத்தை நிவர்த்தி செய்யவல்ல இந்நூல்போல் செய்யில் அந்தப்பொன்னுனது வட்டாகும் உலகத்தில் சொல்லப்பட்ட தசதீ ட்சைகளில் இது ஒருதீட்சையாம் எ-று. 1830

வெட்டையுருக்கத்தங்கம் வெள்ளையென்னசொல்வேன்காண்
அஷ்டதிசையுஞ்செம்போ னதிதமாற்றுமிருகால்
அதுகுன்றிடை-பரிவெள்ளையும்-ரசிதமிடை-பதமொன்றுகாண்,

இ-ள், அந்த வெட்டையை யுருக்கத் தங்கம் வெள்ளையாகும் மாற்றும் அதிகமாகும், அந்தப்பதிவெள்ளை ஒரு குன்றியும் வெள்ளிஒருபலமும் எ-று.

வேறு-விருத்தம்.

வாடகடந்தோராண்டு மற்றவோராண்டுமுதல் வருகலேசாய்
காரியென்றஉப்புசல மமிர்தபானங்களினல் களிப்பதற்று
வீரியமென்னுல்விளங்க ஆத்மசுத்திதேகசுத்தி விளக்கமாகுந் [டே
தேறிடும்போர்முதற்கொண்டுசெல்கையினுலிருந்தவமுஞ்சித்தியாண்

இ-ள், ஒருவருஷம் கடலைக்கடந்து மருவருஷம் உப்புச்சலஅமிர்தபான த்தால களிபபற்று வீரியத்தினல் ஆத்துமசுததியுமதேகசுததியும் விளக்கமா கும்தேர்நதவர்களுக்கு அரியதவமுஞ்சித்தியாகும் எ-று. 1832

பலமதற்குக்குன்றியிடை பரிவெள்ளையெனுங் குருவைப் பாச் சுவீராய், விலைமதிப்பாரொருவரில்லைவெளிசெம்புகாண்பதறி தெதி ர்வந்தாற்போல், சலமதுபோல்நீர்தெளியு முருக்கிக்குழியினில்விட வுமொருப்பிரகாசந், தளதளெனகிகிகன னகாசூரியனெதிர்வருத ல் காண்கிலீரே.

இ-ள். பலம்வெள்ளிக்கு ஒரு குன்றி குருவைக்கொடுத்தால் விலைமதிப் பாரொருவருமில்லை வெள்ளியென்றும்செம்பென்றுங்காண்பதமிதுசலம்போ ல்நீர்தெளியம் அதின் ஒளி சூரியனெதிர்வருதல் போலாம் எ-று, 1833

நவரத்னமிதுக்குநிகர்நாநிலத்திலறிவனுண்டோ ரவிகாண்தேய் வு, கவையுலகத்தார்தமக்கு எய்திடுஞ்செப்பதுபலங்காண் கனமாய் மூசை, சிவயநமஓங்கிலிவோம்அம்உம்மென்றுசெபிஇருநூற்றெட்டு நூல்வுஅலைகடல்புக்கிதீவுதீவாந்திரத்தில் சொக்குந்தானே.

இ-ள், இந்த நவரத்தினத்திற்கு ஒப்பு உலகத்திலொன்றுமில்லை, இந்த ச்செம்பின்பலமானது சிவயநம ஓம் கிலிம் அம் உம் என்று நூற்றெட்டுருசெ பித்தால் தீவ தீவாந்திரத்தில் கொண்டு போய்ச்சொக்கும் எ-று, 1834

ரசிதசெம்பிகுன்றியிடைதேய்வுசெம்பிமலமதனில்நாடிச் செல்ல உசிதமிதுவயதீரைஞ்சொளிவதுகான்சூரியனையொளித்துப்போடும் வசியமிதுபவுத்திரஞ் செய்மகாமந்திரஎடசணியுமருகையோடும்பசி வரும்போதிதையெடுத்து கரமதனிலிடும்வழிசெல்பரிதானுண்டே

இ-ள், இந்தவெள்ளிச்செம்பு குன்றியெடையில் சேயுவுச் செம்புபலஞ் சேர்த்துப்பார்க்க அதற்கு வயது பத்தாகும், சூரியனொளியைக்கெடுக்கும்,இ துவேவசியமாகும், மகாமந்திர எட்சணியும் அருகில்நின்றுடும், பசிவரும்போ து இதையெடுத்துக்கையிலிட்டால் அது அடங்கும் எ-று, 1835

பரியானமாத்மைதானுடைத்திடவுமகிஷ்டசித்தும்பலிதமாகு ம்,வரியானமண்தவளைசொரியெனும் போதினமமுரிமனிதர்பேரில் பிரியமாய்பொழிந்திடவுஞ்சொரி சொரியாய்தேகமெல்லாம் பேதா பேதம், தெரியுமதுயாவருக்கு மொருநாறுசர குலர்த்திச்செய்கை பாரே.

இ-ள், பரியான இலைதக்கையில்வைக்க அஷ்டசித்தம் பலிக்கும் வரியையுடைய தவளையின் சிறுநீர் மனிதர் மேல்தெளித்தால் அது தவளைச்சொரியென்கிற பேரினையுடைய ரோகமாகும் எ-று. 1836

வரித்தவளையெனுமதுகேள் குழித்தயிலம்காட்டெருவாம்வன்னிமூட்டி, குழித்த அந்தத்தயிலமதி லொருபலந்தானாகமதுங் கொண்டுமேலும், விருத்துருக்கித்தயிலம் விடுமேழுவிசை உருக்குருக்கி விளங்கச் செய்தால், துரிதபச்சை வண்டதுபோ லொளிவாந்தராகாசமோகோடிகோடி.

இ-ள், தவளையைக் குழித்தயிலம்வாங்கி ஒருபலம் நாகத்தை உருக்கித் இத்தயிலத்தை ஏழுமுறை விட்டுவிட்டு உருக்கினால் பச்சைவண்டதுபோல் நிறமாகும் எ-று, 1837

பச்சையென்றஒளிவதுவாம் பரிநின்றகாண் வர்னமதுபரிசோதித்தால், கஷ்டமில்லாநாக பச்சை விலையெல்லா மதிரவிங் கடந்துவோடும்பிச்சையென்றுவருமவர்க்குதிரவியங்கள்கொண்டுவரும்பேசப்போகா, நச்சரவம்பூண்டசிவஞானகுருநற்கமல நான்பணிந்தே.

இ-ள், பச்சைநிறமாயொளி செய்யும் அதைச் சோதனைசெய்தால் கஷ்டமில்லாதநாக பச்சையாம்மதிரவியங் கடந்து ஓடும் பிச்சையென்று கேட்பவர்களுக்கெல்லாம் திரவியங்கொண்டுவரும், விஷம் பொருந்திய சர்ப்பாபரணம் பூண்டசிவஞானகுருவின் நல்ல தாமரைபடிகளைநான் வணங்கி எ-று, 1838

நாகபச்சை தனையெடுத்து மூசைதனிலிட்டு மென்மேல் நாடிக் கொல்லன், வாசதுவாயுலையிலிட்டுஉருக்குமுகம் பறிவெள்ளைவசனி குன்றி, பாகமதாய்தாக்கிடவும் பரிகோடிமதி கோடிபானுகோடி, மோகமெனும்மடுத்தகலில் சாய்திடவுநாகசெம்பைமொழியலாமே.

இ-ள். இந்தநாகப்பச்சையையெடுத்து மூசையிலிட்டு கொல்லனுலையில் வைத்து உருக்குமுகத்தில் பறிவெள்ளை குன்றியெடை அதில்கொடுத்தெடுத்து ஒருபாத்திரத்தில் சாய்க்க நாகச்செம்பாகும் எ-று. 1839

கொச்சகம்.

மதிரவியுமொன்றாகில் மாளுவதேன்மாள்வதில்லை
விதியிருந்தோர்க்கெய்துமிது வித்தனாலாவதென்ன
அதிசெயமாலெபிக்கு மாண்பிறவிநீயானால்
கெதிமோட்சசற்குருவின் கிருபையனுக்கிரகமதே.

இ-ள், சந்திர சூரியர்கள் ஒன்றாகச் சேர்ந்தால் இறப்பதில்லை இதவும் அந்தவிதியிருந்தவர்க்கேகைகூடும்; நீ ஆண்பிள்ளையானால் குருவின் அநுக்கிரகத்தையடைவாய் எ-று. 1840

பச்சையிலுநாகபச்சை பரியில்பனிரெண்டுகளி
வைச்சபொருள்மதிபனூர் மாலின்களியிரண்டொன்றாய்
கச்சவிசேரம்பிகைப்பெண் கருணைமதிபானமதை
இச்சையுடனொருமனதா யிருந்திடினுங்காண்கிலீரே

இ-ள். பச்சையில் நாகபச்சை பன்னிரண்டும், மதிபதினான்கும், மால் இரண்டாவது, ஒன்றாவது கொண்டு வாரிறக்கிய தனத்தாளாகிய அம்பிகையின்சந்திரா மிர்தத்தை உண்டு ஒரு மனங்கொண்டிச்சையுடனிருந்தாலும் காண்கிலர் எ-று, 1341

நாதவிந்தேநகரம் நாறுமலம்போக்கிமறு
சாதனைசெய்தேபெரியோர் தாரணியிலுமறியார்
மாதவிடா துன்பமாய் வாறுதன்மைநாதமுன்னுள்
வேதமிந்தப்படியைவிட்டு வெறுங்கூறுமாடினரே

இ-ள், நாதவிந்துக்களையும்நரகமுண்டாக்கும் மலத்தையும்நீக்கிசாதனை செய்தவர்கள் பெரியவர்களாவார்கள், உலகத்தார் அறியமாட்டார்மாதவிடாய் துன்பங்கள் ஒன்றுமில்லையாம், இம்மனம்வேதங்கள்முறைபிமம், இதைவிட்டு அநேகர் வீணாயாடினார்கள் எ-று. 1842

ஜெகமதிலுநாகசெம்பு சித்தர்செய்வார்வாதிசெய்வார்
அகமாண்பராசையினு லம்புவியிலும்மறிவார்
சுகமதனுபோகசுக சூழுமன்னசாரமுடன்
அகமாயுறக்கம்ரவி அஞ்சைவிடவுஞ்சுகங்காண்

இ-ள், உலகத்தின்கண்நாகச் செம்பைச் சித்தர்களும், வாதிகளுமேசெய்வார்கள், நன்மனமுடையபெரியோர்கள், அறிவார்கள், சுகம், அநுபோகம் அன்னசாரம் உறக்கம், ரவி இந்தஐந்தையும் விட்டு விடச்சுகமாகும் எ-று,

இந்தசுகமன்னவித மேகபோகமாயுலவும்
அந்தபரிபூரணத்தை ஆரறிவாராண்டையேகேள்
விந்தைதபிதநாகசெம்பு மேவிபொருகுன்றியிடை
சந்ததமெனுங்குடவன் தனித்தொருபலமதற்கே

இ-ள், இந்தச்சுகமானது அன்னசாரத்தால்ஏகபோகமாகும், ஆனால் அந்தப்பரிபூரணவஸ்துவேயாவரறிவார்கள்? இது ஒரு ஆச்சரியமாம், இந்த நாகச் செம்பு ஒரு குன்றி யெடையை ஒருபலம் குடவனுக்கு எ-று, 1844

அண்டபிண்டக்கூறறிந்து அக்குகைக்கொலன்னுலையில்
விண்டதிதுவேயுருக்கி மெய்விழிக்கண்ணூடிவரும்
கண்டவுடன்குன்றியிடை காட்டிடவுநாகசெம்பு
உண்டிடுக்குடவனைத்தா னுசுவரைக்குமுண்டிடுமே

இ-ள், அண்டத்தினளவையும் பிண்டத்தினளவையும் உணர்ந்த அந்த மூசையைக்கொல்லனுலையில் வைத்து உருக்கி நன்றாகக்கண்விட்டாடும்போது நாகசெம்பைக் குன்றிமெடை அதில்போட அந்தக்குடவனை நன்றாகமடித்து விடும் எ-று, 1845

கலித்துறை

நீடாழிசூழுங் கதிர்மதிகோடி நிலவொளியாய்
நாடாளும்ராஜ கெம்பீரசிங்க ராஜரிஷி
மேடானமேடி யகத்தீசர்பொற்பதம் வேதரிஷி
கோடானகோடி அதிவிதஞான குருசிஷ்டையே

இ-ள், பெரியசமுத்திரத்தாற் சூழப்பட்ட உலகத்தில் இரணக்கலையுடையகோடி நிலவின் ஒளியாய்நாட்டை யரசாளும் ராஜாகம்பீரசிங்காராஜரிஷியும்உயர்ந்த அகத்தியரும் வேதரிஷியும் ஞானசிரியர்களாகையால் அவர்களுடைய திருவடிகளை வணங்கினேன் எ-று, 1846

ஈரைஞ்சுமாற்று அரைமாற்றுகூடி யிருபத்தரை
பாரஞ்சுபூதம் பொன்னிதுமாச்சுது பார்தனிலும்
ஆறிந்தாங் கரையில்லைகோடி அளவில்லைகாண்
நூறில்லைராச பயமில்லைமோதிரந் தொடுத்திடுமே.

இ-ள், பத்துமாற்றும், அரைமாற்றுங் கூடி இருபதரைமாற்றுகின்றவிடத்தில் ஐம்பூதங்களிற் சேர்க்கையால் பொன்னாச்சுது இதைஉலகத்திலுள்ளார்யாவருமதெரித்தாவெதில்லை, யாதொருதிங்குமில்லை ராஜாக்காளால்யாதொருபயமுமில்லை, ஆகையால் அதை மோதிரமாகச்செய்து போட்டுக்கொள்க எ-று. 1847

ஆக்கினைசத்த மறிவுக்குஞான அண்டவரை
பாக்கியசவுக்கிய மஷ்டாங்கயோகப் பதவியிலும்
நீக்கியநிராதர நிர்மலசுரூப நிஷ்டைதனில்
வாக்கியமெட்சணி யுனக்கேவல்செய்குவள் வசனித்தனே.

இ-ள். ஆக்கினையானது சத்தத்தைக்காட்டும், ஞான அண்டம் வரைக்கும், அஷ்டாங்கயோகப்பதவியிலும், நிராதார சுத்தசொரூப நிஷ்டையிலும் பதியச்செய்யும், அங்ஙனஞ்செய்வதால் எட்சணியானவள் உனக்குஏவல்செய்வாள் எ-று. 1848

மேருவில்வாசங் கருங்கூளிநேசமேதினியில்
காருமேவாசங் காட்டகதேசங் கானகத்தில்
பாருமேபாறை பலகோடிவர்னம் பலவிதத்தில்
பேருமேயொன்று தனியாகநிற்கும்பிறவியதே.

இ-ள், மேருமலையில் வாசமும், கருங்கூளி நேசமும் காட்டில் பலகோடிபாறைகளுள் ஒன்றேதனியாக நிற்கும் அதுவேபிறவியாம் எ-று, 1849

இருவினைபோக்கிக் காயாதிகற்ப மெய்திடுவோர்
அருந்தவஞான ஐயஞ்சுமாற்று அவருளமுங்
கருவியைக்காண்க ஐப்பசிமாசங்கனபிசலில்
குருதனுக்கிரக மெய்மதியூறக் குணமதுவே

இ-ள், நல்வினை தீவினைகளின் போகபோக்கியகாயகற்பம் அடைவோரும், அரியதவஞ்செய்வோரும், இருபத்தைந்து மாற்றுறக்கிருபைசெய்யவும், தோண்றூற்று மகருவிகளைக்காணவும்ஐப்பசிமாசப்பிசலில் ஆசாரியனுடைய அநுக்கிரகம்பெற்றுசக்கிராயிரதமானதுபுத்தியிலூறுங்குணமஇதுவேயாகும்.

அவிடம்போய்சேர்ந்து அநேகநாள்வாச மதினருகே
பவர்நவி கூடும் நாள்வருங்காலம் பாறையின்கீழ்
அவிடத்தில்சேர்ந்து வலைகொண்டுவீசி அறவுளதாய்
மவுனசாபத்தி னிவர்த்திகாணூறு வசனியுமே

இ-ள், அந்த இடத்தில் போய்ச்சேர்ந்து அதின் சமீபத்தில் வசித்திருந்து பௌர்ணமி வருகின்றநாளில் அந்தப்பாறையின் கீழ் இருந்துமௌனஞ்சாதித்துச் சாபநிவர்த்திசெய்து எ-று. 1851

வெண்பா.

நாட்டுக்கருங்காக்கை நாயில்கருநாயானு
பூட்டுங்கரும்பூனையதின் புகள்கேள்-நாட்டுகரு
வாலியின்கருக்குருவி வால்நீண்டபட்சியதுங்
காலைவிலங்குமெரியோந்தி காண்.

இ-ள், நாட்டிலே வாழுங்காக்கையும், நாயில் கருநாயும், கரும்பூனையும் நாட்டுக்கருவலியனும், கருக்குருவியும், வால்நீண்ட பட்சியும், ஓந்தியுங்காண

கழுவுஇறந்திடுவோர் கண்டமட்டுந்துண்டுசெய்து
முழுதுமுரலிலிட்டு வோரிடியாய்-முழுதும்
அண்டத்துடன்மழலை ஆறுடனேஏழாச்சு
என்றறிமூலப்புளிகா ணீது

இ-ள், கழுவிலிறந்தவர்களாகிய இவைகளை கண்டம் வலரக்குந்துண்டு செய்து உரலிலிட்டு இடித்துஇந்தவகையுமேமூலப்புளியாகவைத்துக்கொள்

அப்புவியிலெட்சணியெட் டஷ்டசெகசித்துமதும்
நம்பியொருநோட்டமதாய் நாடினால்-அம்புவியில்
அறுபத்துநாலுமது ஆடுமந்தஅஷ்டகரு
திறவிசட்குவேணுமெனுஞ் செப்பு.

இ-ள், உலகத்தில், எட்சணி எட்டும், அஷ்டசித்து ஒரேநோட்டமாக நாடினால் அறுபத்து நான்கு சித்திகளுமாகும், துறவிகளுக்குஇந்த அஷ்ட கருவேண்டுமென்று சொல்லு. எ-று. 1851

எட்சணிகளெட்டுக்கு மெண்கருவியெண்ணெழுத்துப்
பட்சணிக்குமாகுமிந்தப்பாகம்-தெட்சணிகாண்
அன்னம்வருஞ்சொர்னம்வரும் அயிஸ்பரியக்கியானம்வருஞ்
சின்னவயதாகுமன்னை சொல்.

(இ-ள்.) அஷ்டஎட்சணிகளுக்கும் இது அஷ்டகருவாகும், எண்ணெழுத்தையும்பட்சணிக்கும் இந்தப்பாகத்தால் அன்னம்வரும் சொர்னம்வரும். ஐஸ்வரியஞானம்வரும், இதுசிறுவயதாயிருந்த என்தாயின் சொல்லாகும் எ-று.

என்னையன்னையின்றபல னெவ்விதங்காண்கல்லுரலில்
அன்னைசொல்லயானறிந்து அஷ்டவிதம்-முன்னையுமே
நாடியிபக்கம்பதனுல் நாலிரண்டுஎட்டையுமே
சாடிவிடுநாள் மூன்றுதான்.

(இ-ள்.) என்னை என்தாய் பெற்றபலன் எப்படியோ? கல்லுரலில் அன்னைசொல்லையறிந்து எட்டுவகையையும் இரும்புக்கம்பியினுல் நாள்மூன்றுஇடி

காடடெருவுகொண்டு கண்டதிடம்பாண்டமதில்
நாட்டிமுடிசந்ததமு நாலிரண்டு-காட்டெருகாண்
குழித்தயிலமெண்ணதிதங் கோடானகோடிரவி
பழித்திடலாகாதுவன்னி பார்.

(இ-ள்.) காட்டெருமுட்டைகொண்டு முன்பாண்டத்தில் சந்து தெரியாமல் குழித்தயிலமாக அக்கினியிட்டுவாங்கு எ-று. (௪அ௰எ)

கெந்திமெழுகெடுத்து கேளுமொருகுப்பிதனில்
அந்தரமாய்த்தொங்கலிட்டு ஆனதால்-கெந்திமெழு
குழியில்குழித்தோண்டி கொண்டுகுப்பிபந்தனஞ்செய்
வழியதுவாய்பாண்டம் வைத்துமண்

(இ-ள்.) கந்தகமெழுக்கை யெடுத்து ஒருகுப்பியில் அந்தரமாகத்தொங்கவிட்டு ஒருகுழிதோண்டி குப்பியை அதில்வைத்து அந்தக்குப்பியின் வாய்க்கு வேறொருபாண்டம் வைத்து எ-று. (௧அ௰அ)

எருதுகொண்டக்கினியு மிட்டுஅனுபோகமதாய்
உருவதுவாயானபின்பு வோசைபார்-எருவதுகொண்
டக்கினியைமூட்டியன லாறிவிடும்பதமும்
உக்கிரமதா யிறங்குமே.

(இ-ள்.) எருவடுக்கி நெருப்பிட்டு அநுபோகமாய் உருவானபின் அனலை மாற்றிப்பார்த்தால் தயிலமிறங்கும் எ-று. (௧அ௰௯)

தயிலமிதுபதனஞ் சந்தனஞ்சவ்வாதுடன்
மயிலமதியிலகு மாண்புழுகு-தயிலமது

குங்குமப்பூகஸ்தூரி குரோசனேயுங்கொண்டுயிடை
அங்கமொருகழஞ்சி யாட்டி.

(இ-ள்.) அந்தத்தயிலத்தைப் பதனம்பண்ணி சந்தனம், சவ்வாது, புனுகு குங்குமப்பூ, கஸ்தூரி, கோரோசனம் இவைகளேவகைக்கு ஒன்றேகால்வராகனெடை யெடுத்து தூளாக்கி எ-று. (௧௮௬0)

விருத்தம்-வேறு.

தயிலக்குப்பிதனில் பதனமாமெனவுஞ் தயிலமானதுவுந்தயிலமாகும், கணியவுப்மிழிதன்மண்டலம்பிறகுசாட்சிபாரதுவுமைபதம் குயில்கள்போலுமடமாதுவம்பிகையின் குறைவிலாக்கமல பொற்பதம், கும்பமேவிவரும்வாசிவாவெனவுங்கூறும்ரேசிகண்டதாரையில் ஒயில்கள்போலு மசைவாகியெங்கும்வள ரொவ்வொன்றாதிடுமூதிடு ஓங்காரமூலகனதேவதேவகுருஉழ்வொன்றாதிஉருத்தாக்கவும், கயிலேமேவுசுழிவாலேபுவனேயருள் கமலமும்பணிந்தெழுவதாய், கருணே திரிபுரையுமயேந்திரியாமளேயும் வராகிசாமளேயுமேழதே.

(இ-ள்.) தயிலத்தைக் குப்பியில் பத்திரமாய் வைத்துப்பார்க்க மேருவுந் தயிலமாகும், ஆகையால் இதைவைத்துக்கொண்டு உமாதேவி, அம்பிகைப் பெண் இவர்கள்திருவடிகளே வணங்கிக்கண்டஸ்தானத்து துவாரத்தினின்று வாசிவாவென்று ரேசித்து அசைந்து ஒவ்வொருஸ்தானத்தில் ஒவ்வொருமாத்திரையாகவூதி அந்தஸ்தானங்கள் எழிலுமிருக்கும் சுழிவாலே, புவனே, திரிபுரா, மகேந்திரி, யாமளே, வராகி, சாமளே இவ்வெழுவரையும் துதிசெய்வாய்.

சகாதேவியருள் பாதபங்கையமுந் தாள்பணிந்துமதிமலர்தொழும், சனகாதிரிஷிகள்பதினெண்பேர்கமலபதஞ்சரணபரிபுரசற்குருபதம், அக்கரங்கள்பிதுர் துர்க்கிசாமுண்டியு மாயிரந்தலேகல்லெரிவனும், அகோரவீரஅனுமந்தனேடுகுட்டிற்சாத்தியு மஷ்டபயிரவர்.

(இ-ள்.) சகாதேவியின் திருவடிகள் சநகாதி நால்வர், பதினெண்சித்தர்கள், ஞானசிரியர், அக்கரங்கள், பிதிர்தேவதை, துர்க்கி, சாமுண்டி, ஆயிரந்தலேக்கல் லெறிபவன், அகோரவீரபத்திரன், அநுமார், குட்டிச்சாத்தி, அஷ்டபைரவர் எ-று. (௧௮௬௨)

சக்கரங்கள்சுழிகணேசசுப்ரமண்யசாடன்மாடன்வேதாளமும் சத்தியெட்டுகருபதுமைமயோடுசெப மணியுமெட்டு அஷ்டதிசைபதும், உக்கிரசிலேயிருநாலுடனதித ஒரிரண்டதுகையாசனம், உண்மையுண்மையஷ்டஎட்சணிகளது உனேயும்விட்டு அகலாதுமே.

(இ-ள்.) சக்கரங்கள், கணேசர், சுப்பிரமணியந், சாடன், மாடன், வேதாளம், அஷ்டசத்தி, கரு, பதுமை, எண்வகை ஜெபமணி, அஷ்டதிசை, அஷ்டசிலே நான்காசனம், எண்வகை எட்சணிகள் முதலியோர் உன்னேவிட்டெப்பொழுதும் பிரியமாட்டார்கள் எ-று. (௧௮௬௩)

கட்டிவாமெனவு மோதிரந்தனையுங் கருவிமைதட விசரமதில்
இட்டுஸ்திரீகள் தனைமுகமலர் தடவி யிடதுகைபிடியும் வாவெனவும்,
கெட்டிகாரனெனும்பின் துடர்ந்துவருவார்கள்மாதர்களின்பேதமை
அட்டியேது அவரிட்ட ஆபரணமாதிதம் முனக்களிப்பரே.

(இ-ள்.) அந்தமோதிரத்தில் கருமைதடவிவிரலிலிட்டுபெண்களதுமுகங்களைத்தடவி இடதுகரசகைதப் பிடித்துவாவென்று அழைத்தாயானால்அவர்கள் கெட்டிகாரனென்ற பின்தொடர்ந்துவருவார்கள் பெண்களது அறிவீனத்தால் அவர்கள் அணிந்துகொண்டிருக்கின்ற ஆபரணுதிகளை உனக்குக்கொப்பார்கள் எ-று. (௧௮௯௪)

சார்வகாலமுனை தழுவிபின்தொடர்வர் சரணஞ்சுவாமியெனைரட்சியும், பார்வைவைத்துஅடியாளைகார்த்துபரகெதிக்குளாய்வழிதன்பாலியும், தார்புவிசள்மலைமிருகமாதலவர் சத்திராதிகளுன்முன்வரும், ஆரபாரமிருகஆனையோடுபுலி யனேகமிருகமுதல்வசியமே.

(இ-ள்.) எப்பொழுதும் உன்னைத் தழுவிப்பின் தொடர்வார்கள் சுவாமீ! சரணம் என்னைரட்சியும், எம்மீது கிருபைவைத்து, அடியாளைக்காத்து பரகதிக் குட்படுத்தும், என்பார்கள், அன்றி உலகங்கள், மலை, மிருகம், மாதவர், சத்திராதிகள், மிருகம், ஆனை, புலி அநேகமிருகங்கள் இவைவசியமாகும்.

ஆணவரெவனவுமோதிரக்கரமுமதிதமாக அதின்மேல்பட
வானமேவும்புவி சூழும்பின் துடர வாருஞ்சுவாமியெனவாழ்வியும்
நாளுமுன்பிறகு நாடியுய்வருதல் ஞாயுமாவென் தன்ரட்சியம்
சேனையானைமுதல்சர்வமிருகங்களுந் தேடியும்வருவர்தேவரா.

(இ-ள்.) மோதிரக்கையானது அதின்மேல் படும்படிசெய்து ஆனைவாவென்றால் யானைமுதலிய எல்லாமிருகங்களும் சாமி எங்களைரட்சியுங்கள்என்று சொலவிப்பின் தொடரும் எ-று. (௧௮௯௬)

பரிட்சைபார்பரிதன் மோதிரந்தனையும் பத்தியுமொருவர்கரமதில்
துரிதமாசயிதில் தயிலம்பூசியொரு சின்னபையல்கரந்தன்னிலும்
வரிசையாயவர்தன் கரமுமேவிவிட மானகர்க்கடைபஜாரினில்
குழிசிராப்புகரங் கொடுத்துமாறிவிடு குணமதாம்வயதுபத்துமே,

(இ-ள்.) இந்தப்படி மோதிரத்தைச் தயிலம் தடவி ஒருசின்ன பையன் கரத்தில் கொடுத்து சிராப்புக்கடைக் கநப்பி மாற்றக்குறையாமல் விற்றுவரும்படி கொடுத்துப் பரீட்சைபார் எ-று. (௧௮௯௭)

மாறிவும்வரவுந்தேடிராவுதனில் வசியஒம்ஸ்ரீயும்வாவெனும்
வசியமாம்பரிதன்மோதிரங்கள் பையும்வங்குசிங்கெனவும்வருதலாய்
ஏறிபுமேயுனது இல்லந்தேடிவரும் எமசொர்னமெனும்ரசிதமும்
இனியதோரளவை ஆதிதங்களுமே யாவதுமுனதுசொந்தமாம்

(இ-ள்.) அங்ஙனம் விற்றுவந்தால் அன்று இரவில் வசியம், ஓம், ஸ்ரீயும், வா, வங், சிங், என்று சபித்து அழைத்தால் அம்மோதிரமானது உன்னுடையவீட்டைத்தேடிவரும், அப்போது விற்றுக்கொணர்ந்த பொருளும் மோதிரமும் உனக்குச் சொந்தமாகும் எ-று (௧௮௬௮)

தெறிகிள்கொண்டுமிக வேதையாகிசெகமேவியோடியலைவார்கள்தான், மீறிப்பேய்களதுவாடியோடியழுமேவுஞாயமதுபோலென தேறுந்தேறுசெகஞானபண்டிதர்கள் தெட்சணாயனருள்கிருபையால், தேசதேசரசவாதயோகிகளுந் தேறுந்தேறு ஞானவெட்டியே.

(இ-ள்.) உலகத்திலுள்ளவர்கள் வெறிகொண்டு இதன்விஷயாக அலைவார்கள், பேய்கள் வாடியோடியழும் ஜெகந்நாதபண்டிதர் தெட்சிணாமூர்த்தி இவர்களின் கிருபையால் பலதேசத்து சமயவாதிகளும் யோகிகளும் ஞானவெட்டியைத் தெளிவார்கள் எ-று. (௧௮௬௯)

கெடிதன்னூரான மோடிவைக்கும்விதங்கேள்விநாடதிலுங்கெடியதாம்,கேளுங்கேளும்பெரியோர்கள்செய்கைதனைக்கேட்டுங்கேள்விபதுமில்லையோ, நாடியுஞ்சபையில் மோடிகாரர்வரும் நாமெடுப்பனெனுமோடிதான்,ஞாயமாகவருவார்கள்தானெனவும்யானுமேவிசபைமோதிரம், சாடிமட்சளினில்பசுமைகாணரிசி தயிலமேவியதைதடவியும், தரணிமீதில்பவுத்திரத்தின்மோதிரமுந் தயிலந்தொட்டுதனையெரியவும், மோடிமோடியெடும்பேர்கள்மீதிலேறி ஓகோசெங்குளவிவண்டெனும் ஒருகோடிகோடிகோடிகுளவிவண்டுகளு முயிர்வதைத்து உடல்மாயுமே.

(இ-ள்.) வலிவாக ரணமோடிவைக்கும்விதம் கேள்வி இவைகளுக்குமுதவுமாம். இப்படிப்பட்ட பெரியோர்கள் செய்கைகளைக் கேளுங்கள்,சபையில் மோடிகாரர்கள் வந்து நான் இந்த மோடியை எடுப்பேனென்று வெற்றிபேசினால் நீ அந்தமோதிரத்தை மஞ்சளதடவி கையில்போட்டு அரிசியும் தயிலமும்கலந்து பூமியில்தடவி அத்தயிலந்தொட்டு எறிந்தால், ஓகோசெங்குளவி, வண்டுகள் அநேகமாய்த்தோன்றி உயிரை வதைத்து உடல்மாயும் எ-று.

வேறு-விருத்தம.

மோதிரமுமெடுக்கவருவோர்களதின்சேஷரிசி மொழிவீராகில்
வீதியெல்லாங்கருங்குளவி செங்குளவிகருவண்டு வீசிக்கொட்டும்
சாதிபுளியிலையுருவி தயிலமதுபிரட்டிசபை யோரஞ்சென்று
பேதியிலைதூவிவிட தேளரணைகாலி செய்பாளரவந்தானே.

(இ-ள்.) அம்மோதிரத்தை யெடுக்கவருபவர்கள் அதிலிருந்தசேஷஅரிசியைத் தொட்டால் அவ்விடமெல்லாம் கருங்குளவி, செங்குளவி, கருவண்டு இவைகள் வெளிப்பட்டுக் கொட்டும், புளியிலையையுருவிதயிலம்பிரட்டிசபை-

யோரத்திற்சென்று இலையைத்தூவி விட்டால், தேள், அரணை, செய்யான், பாம்பு எ-று. (கஅஎக)

### வேறு-விருத்தம்.

குளவிவண்டுடனுஞ்செங்குளவியோடுகொடூரமானவிஷமதிதமும் கொட்டுந்தேளரவகாலிசெயபானுடன் கொல்லுமாகிலெரிமண்டலம் அளவிலாதிதஅரவஞ்சூழ்ந்திலுமள்ளிசேஷரிசிதூவிட, அகோரமானபுரமெரிவுதேகமெதுகூறறிந்துஎடுப்பார்களோ,நளினமாகவுங் கமலபாதமதில் நமஸ்கரித்துஅடிதொழுதிட,ராஜாராஜர்மகிழ்போடியாமிதனை நாமிதெங்குமறியோமென, வளமிகாகுமொருநாகசெம்படையவசியமோதிரமும்வாங்கிடில், மையெனுந்தயிலபவிச்சிரிமோதிரமும்வைத்தெடுமெனவும்வாழ்த்தினர்

(இ-ள்.) குளவி, வண்டு, செங்குளவிகொடூரமானவிஷஜெந்துக்கள்தேள் அரவம், காலி, செய்யான்முதலியயாவும் அந்தச்சேஷஅரிசியைத்தூவினமாத்திரத்தில் வந்துசூழ்ந்திடும், அதனால் இன்னும் அகோரமான சுரம், எரிச்சல் முதலியவையுண்டாகும், இதுகண்டவர்கள் இதுயாவராலும்மகிழத்தக்கமோடியாம் இதை நாம் எங்கும் அறியோம், இது நாகச்செம்பினால் செய்யப்பட்ட மோதிரமாகும், இத்தயிலம் மிகவும்சிறந்ததாகும் இதை வைத்தெடு மென்று யாவரும் வாழ்த்தினர்கள் எ-று. (கஅஎஉ)

### வேறு-விருத்தம்.

வாழ்த்தினரென்னைமோடியெடுப்பவர்-மணலையள்ளியதில் கருகூட்டியுந்-தாழ்த்தியோம்சாமளா தேவிசாம்பவி-சவ்வும்ஓம்சிவசங்கரி நசிமசி-போற்றியம்மம்மசர்வகாரணியம்ம-போட்டெரிபெருங்காற்றுமழையுமாய்-சாத்தினர்கக்கிரத்தங்களாய்-சபைகளெல்லாஞ்சற்றேசிரிப்பார்களே.

(இ-ள்.) என்னைமோடி யெடுப்பார்கள்வாழ்த்தினர்கள்மணலையள்ளி அதில்கருவைக்கூட்டி ஓம் சாமளாதேவி, சாம்பவி, சவ்வும், ஓம் சிவசங்கரிநசிமசி என்றுசொல்லி அம்பம் சர்வகாரணி என்னை பெரியகாற்றும் மழையுமாயும் அங்குவந்திருந்தா ரனைவரும் ரத்தம்கக்கி கொஞ்சம்சிரிப்பார்கள் எ-று.

மண்ணைவாரிமலைபோல்தம்போடுவாய்-கண்ணுங்கெட்டுக்கடக்கப்போவார்கள்காண்-சொன்னமோடிசுக்கல்சுக்கலாகுமாய்-கோபதாபந்துயரப்படுவர்தான் - என்னமாயினியிவ்விதமாகினல்-எக்கங்கொண்டுயிளைத்துளறுப்பர்காண்-அன்னவாலைவருகி லிருந்துமேமுன்னமேமொழிமுத்தியளிப்பதே.

(இ-ள்.) மண்ணைவாரிமலைபோல்போகும் கண்கெட்டுப்போவார்கள்சொல்லப்பட்ட மோடியானது சுக்கல் சுக்கலாகும், கோபதாபங்களுடன் துயரப்

படுவார்கள் இவ்விதமாகையால் எக்கங்கொண்டு இளைத்திருப்பார்கள், அப்பொழுது வாலையானவள் சமீபத்திலிருந்து முத்தியளிப்பாள் எ-று. (கஅளச)

இந்தமோடியெடுக்கும்சபை-விந்தையால் குருவெட்டிச்சதுர்திசை-அந்தமாகக்கழற்சியின்காய்தனில்-ஆறுமேயறியாமலு மார்க்கமாய், தொந்தமாகத்துப்பாக்கிமருந்தகாண் -சோதித்தேபலமஞ்சு அந்நூறதும்-தந்திரமிதுதார்புவிமூலைநால்-யிந்தவிதமியம்பிடு ராண்டையே.

(இ-ள்.) இந்தமோடியெடுக்கும் நடுச்சபையானது அதிசயிக்கும்படிகுழிவெட்டி நான்குதிசைகளிலும் கழற்சிக்காயில் யாருமறியாதபடி தொந்தமாகத்துப்பாக்கி மருந்து பலம் ஐந்து நான்குமூலைகளிலும் சொல்லுக எ-று.

நாலுமூலைநடுமையவாமிது-நாடியே கரிவாலைபந்தனம் - தேடிடாமலுஞ்சிலைமண்மூடியுஞ்-சேறங்கில்லுசிறுகத்துவாரமாம்- வாலதாகவளமெனும் நூலினல்-சிலதாகச் சிரங்களைபாச்சியும்-நாலுமேலும்நானிதெரிந்தேவிட-காலமேகளிமண்ணினல்பந்தனம் - வேலையாயிவெளிபிதையானநள்-வீதியில்விரும்பாமலொளித்திடே.

(இ-ள்) நாலுமூலைகளும் நடுமையத்தில் பாலைக் கரியைச்சிலை மண்ணால் மூடிச் சிறுதுவாரமிட்டு பதனம்பண்ணிக் கவளமென்னும் நூலால் நன்ருகக்கட்டி நான்தெரியும்படி களிமண்ணினல் பத்திரம்பண்ணு ஆனல்இதைவெளியில்விடவேண்டாம் எ-று. (கஅளரு)

கதிரவனொளிகாலையில்மோடிதான்-அதிரவுமிடியாகாசமாகவும்-பதறிடாமலும்பாரில்மகாசனம்-பக்கஞசூழப் பலபோதிதமும்-விதியதாகவீட்டெரிபச்சிலை-கெருடனயிரங் கிலியுஞ்சவ்வுமெனும்-மதியிலாடுமகாமந்திரத்தினல்-கதியவுங்கனல்வத்திக்கருதமே.

(இ-ள்•) சூரியனொளிக்கின்ற காலைவேளையில் அதிர்ந்து முடியாகாசம் பறக்காமலும், மகாசனங்கள் பக்கத்தில் சூழ்ந்திருக்கப்பார்த்து பச்சிலையைவிட்டெரித்து ஆயிரமுறை கிலியும் சவ்வும் என்றுசொல்லும் மகாமந்திரத்தினல் கனல்வத்தியை நினைக்கவேண்டும் எ-று. (கஅளள)

கருதும்வன்னிகனல்படவத்தியில்-விருறமோவெடி சத்தங்காணுமாய்-துரிதமாகுந்துப்பாக்கிமருந்திறைல்-தூக்கிவாரிச்சுடர்புகைசூழுமாய்-அரிதுகாய்களது வெடித்தங்ஙனே - பொருதமேபொடியாசவுந்தூசிபோல்-சருபமோடியைச்சூழ்ந்த சபையெலாம்-சொக்கியோடிசுழன்றலைவார்களே.

(இ-ன்.) நினைக்கப்பட்டகனலானது வத்தியில்பட சீக்கிரமாகப் போய் வெடிசத்தமுண்டாகவே புகையானது ஒருவர்முகம் ஒருவருக்குத் தெரியாதபடிசூழ அப்போது அந்தக் கழற்சிக்காய்கள் வெடித்து பொடியாய்த் தூசு

போல் மோடிச்சபையைச் சூழ்ந்துபறக்கச் சபையாரெல்லாரும் சொக்கியோடிச் சுழன்று அலைவார்கள். (௧அஎஅ)

விருத்தம்.

சபைதனிலிலகுமாண்பர் சனங்களுமோடிப்போவார்
அபையமென்றழுதுமோடி பரதவித்தலைந்துபோவார்
உபையமாங்கழற்சிவித்தை யொருகொடிக்குள்ளே தானுஞ்
சபையெனுஞ்சூக்ஷமோடி சூஸ்திரமறிந்திடீரே.

(இ-ள்.) அந்தச்சபையில் விளங்குகின்றமாண்பர்களும், சனங்களும்ஓடிப்போவார்கள், அபாயமென்று அழுது ஓடிப்பாதவிப்பார்கள் இதுகழற்சிவித்தென்று ஒருகொடி நேரத்திற்குட் சூக்ஷமாக அறியமாட்டீர் எ-று. (௧அஎ௯)

வணக்கமாய்மோடிக்காரர் மலரடிக்கமலம்போற்றி
இணக்கம்வைத்தெங்களைத்தா னிடரதுவருகாமேலும்
அணுக்கமாயடியோர்க்காக நன்கருத்ததனைவைத்து
அணுக்கமாருள்வைத்தேதா ஞதரித்தருள்செய்வீரே.

(இ-ள்.) மோடிக்காரர் வணக்கமாய் மலரடியைவணங்கி எங்களை துன்பம் வாராமல் கிருபைசெய்து ஆதரித்து திருவருள் செய்யவேண்டும் எ-று.

செய்கையின்கருத்தினாலுஞ் சேவடிவணங்கும்போதில்
வையகமனிதரெல்லா மகாமோடி வைத்தாரென்று
மையெனுமகிழ்ந்துமேலு மிணையடிதொழுதாரென்றால்
சைபெனமோதிரத்தை க்ஷணம்வையாதெரித்துப்போடே.

(இ-ள்.) செய்கையாலும் கருத்தாலும் சேவடியைப்பணியும்போது உலக மனிதர்களெல்லாம் மகாமோடி வைத்தார்களென்றுவெறுப்பார்கள், அப்பொழுது க்ஷணநேரம் மோதிரம்வையாமல் எடுத்துவிடு எ-று. (௧அஅ௧)

எடுத்துவிட்டியம்பக்கேளீ ரினியதோராவின்பாலில்
விடுத்துடன்மோதிரத்தை விட்டுமேசழுவிப்போட்டு
தடுத்துஓம்சிங்வங்ஸ்ரீயுஞ் சக்கமம்ராராவென்று
தொடுத்துடனுருவஞ்செய்து திருநீறுமவர்மேல்வீசே.

(இ-ள்.) அங்ஙனம் மோதிரத்தை யெடுத்து பாலில்போட்டு நன்றாய்க் சழுவி ஓம், சிங், வங் ஸ்ரீயும், சக்கரம், ராராவென்று செபித்து திருநீறெடுத்து அவர்மேல் போடு எ-று. (௧அஅ௨)

வீசிடும்போதிலுந்தான் வெறிசுரமிரத்தங்கக்கல்
தூசியாய்விடுபட்டேபோஞ் சுகமெனும்சபஸ்தம்வாரே
ஏசிடுமவர்களைத்தா னிருத்திடுஞ்சனங்கள்யாவும்
பேசுமேளிதங்கள்கோடி பின்புரைத்திடுவனண்டே.

(இ-ள்.) அப்படியே போடும்போது எரிச்சல், சுரம், இரத்தங்கக்கல், இவைதுசுபோல் பறந்தோடிப்போகும், ஜனங்களெல்லாம் அவர்களைஎளிதங்கள் பேசினது கொடியாகும் எ-று. (௧௪௮௩)

தயிலமும்வாங்கிநெற்றி தனிலொருபொட்டும்போட்டு
அகிலமாம்புவனந்தன்னி லப்புவியரசர்வீட்டில்
கயிலைநாதனையும்போற்றிக் கடவுளின்கமலம்போற்றித்
தொழிலெனும்வேணசெம்பொன் தூக்கியும்போகலாமே.

(இ-ள்.) தயிலத்தைவாங்கி நெற்றியில் ஒருபொட்டிட்டு உலகத்தில் ஒரு அரசர்வீட்டில் கயிலாசபதியையும், கடவுளையும்நமஸ்காரஞ்செய்துநுழைந்து வேண்டியபொருள்களை யெடுத்துக்கொண்டு போகலாம் எ-று. (௧௪௮௪)

போனதட்சணத்தில்காணும் பொக்கிஷமாந்தங்கொண்டு
தேனெனும்ராஜதேவி ஸ்திரீயுமுன்கரத்தால்தொட்டால்
மானெனுந்தொடருவார்பார் வழுவமைத்துடனுஞ்செல்ல
தானெனும்வசியமாகி சதாகாலம்பிரியாள்தானே.

(இ-ள்.) போனவுடனே காணப்படும் அநேகபொக்கிஷங்களை யெடுத்துக்கொண்டுபோகும்போது ராஜஸ்திரீயைத் தொட்டால் அவளும்பின்தொடர்ந்து என்றும் பிரியாதிருப்பாள் எ-று. (௧௪௮௫)

மையெனுந்தயிலவித்தை மகாஜாலமாடும்மாடும்
சையெனுந்தாயைப்போற்றி தனதுமோதிரத்தைதாங்கி
கையெனுங்குதுவைவைத்துக் கனகமும்வாங்கிமேலும்
செய்கையாயுனதுயில்லந் தேடியும்வருவார்தானே.

(இ-ள்.) இந்தமையென்று சொல்லப்படும்தயிலவித்தையானதுமகாஜாலமாகும், தாயாகிய அம்பிகையைத்துதித்து தன்னுடையமோதிரத்தை வாங்கி குதுவை பொன் வாங்கிவிட்டால் அதுமீண்டும் உன்னிடத்தில் வந்துவிடும்.

கொச்சகம்.

நாடியில்வந்தேடிவர நான்குதுவைத்தநகை
வாடியவர்கிலேசமிட வந்துவிடுமில்லமதில்
ஆடிதிருவம்பிகையி னுத்தாளைப்போற்றிசெய்து
மோடியெனுமிந்தவித்தை விவேகிகளைச்செப்புமந்தே.

(இ-ள்.) நாடி நான்குதுவை வைத்தமோதிரமானது அவர்கள் கிலேசிக்கும்படி என்வீட்டில் வந்துவிடும் பின்னர் ஆத்தாளைப் போற்றிசெய்து இந்த விதத்தை விவேகிகள் அடைவார்கள் எ-று. (௧௪௮௭)

பாடியமோதிரத்தையு பத்திரமாய்வைத்திடினுங்
கூடியருள்தந்தவித்தை கோடானகோடிவரை

வாடாமல்சித்துவித்தை வையமதிலும்மதிகம்
விடுகள்தோறுஞ்சுவைகள் வேண்டியழைத்தேயிடுவார்.

இ-ள், இந்த மோதிரத்தை பத்திரமாய் வைத்திருந்தால்அநேகவித்தைகளாடலாம், வீடுவீடுதோறுமுள்ள சுவைகளையெல்லாம் அழைக்கக்கூடும்.

வேண்டியென்னையாண்டகுரு விவேகமதால்யான்றெளிந்தேன்
ஆண்டேயென்றசற்குருவால் அகத்தியரையான்பணிந்தேன்
தூண்டி குருமாமுனிவர் சூட்சஉபதேசமதால்
ஆண்டிவேஷம்பூண்டுமதி ஆராய்ந்தேன்பூரணமே.

இ-ள், என்னைத்தூண்டிய குருமுனிவர்செய்தசூட்சமான உபதேசத்தால்ஆண்டி வேஷம்போட்டுக்கொண்டு என்னையாண்ட குருவின் விவேகத்தாலும், என்னுடையசற்குருவாலும், அகஸ்திய முனிவரை யான்பணிந்தாலும் ஆராய்ந்தறிந்தேன் எ-று. 1889

ஒன்றுணபூரணத்தை யோகவிதிகாரணத்தால்
அன்றுடமென்மதியா லாய்ந்துவுடலாத்துமத்தை
வென்றேன்வினைப்பயனை வேதனைசாரமதுங்
கண்டேன்கருவிதொண்ணூற் றாறுங்கடந்தேன்சுடரே.

இ-ள். ஒரேபரிபூரணவஸ்துவை யோகத்தையே உணர்வதற்கு முதலாகக்கொண்டு தினமும் என்னுடைய புத்தியினாலாய்ந்து உடலையும் உயிரையும் வினைப்பயனையும்வென்றேன், என்னுடைய தாயின்சாரத்தையும் கண்டேன்தொண்ணூற்றாறு கருவிகளையுங்கடந்தேன் எ-று. 1890

சுட்டுவிட்டேனுப்பதனால் தொண்ணூற்றறுவரையும்
மட்டுமிதமில்லாத வாரியுப்பைநீற்றிவிட்டேன்
கட்டுக்கழன்றதுகாண் கருநீறமுரியினால்
விட்டகுறையாலும்விந்து தொட்டதெல்லாம்பொன்மயமே.

இ-ள், தொண்ணூற்றாறுபேரையும் உப்பினால் சுட்டுவிட்டேன், கடலுப்பை நீற்றிவிட்டேன், கட்டுகழன்ற அமுரியினாலும்விட்ட குறையாலும் விந்துவானது தொட்டபொருள்களெல்லாம் பொன்மயமேயாம் எ-று, 1891

கலித்துறை.

பொன்மயம்பூண்டு மனோமயமாகிய பொக்கிஷமுந்
தனமயம்பூண்ட மதியலங்கார தற்பரத்தில்
தன்மயசற்குரு ஞானப்பிரகாச நாதவிந்தால்
சின்மயமாச்சுது சிற்பரசுரூப சிவசிவமே

இ-ள், பொன்மயமாய் மனோமயமான பொக்கிஷமும் தன்மயத்தையேற்ற அலங்காரதற்பரத்தில் சுரோதயமான ஞானகுருவின் ஞானவொளியையுடைய நாதவிந்துக்களால் ஞானமயமாய் விளங்கியது சிற்பசொரூபசிவமே.

சுரூப சுரூப சூட்சசடாதார சுகாதிதம்
நிருபநிர்பாகா நிரஞ்சனநிற்குண நிராதாரமுங்
குறுமுனியாதி தமிழ்மொழிஞான குண்டலிக்குஞ்
செயசித்திமுத்தி யருள்பெற்றபேர்கள திசயமே.

இ-ள், ரூபாரூபசூட்சமமுள்ள ஆராதாரங்களுக்கும் மேற்பட்ட பரிசுத்த நிருபாகார நிரஞ்சன நிர்க்குண நிராதாரர்களாகிய குறுமுனியானவர் சொன்ன தமிழ்க்கல்வி அருளிச்செய்த முத்திநிலையையடைந்த திருவருள் பெற்றபேர்கள் அதிசயிக்கத்தக்கவர்களே எ-று, 1893

ஜெயசித்திமுத்தி யருள்ஞானதீப சிவபதங்காண்
பயமற்றபோதி லிராப்பகலொன்று பகாறியும்
பயமற்றும்போச்சு வலுவாகு தேகமும் வச்சிரமாம்
சயனத்திலாடவும் அம்பிகாயோகசவுக்கியமே.

இ-ள், ஜெயசித்தி முத்தியானது ஞானதீபசிவபதமாகும், பயமில்லாத சமயத்தில் இராப்பகலின்மயம் அற்றுப்போய்ச்சரீரம்வச்சிரமாகும்; நித்திரையில்சித்தாடல் அம்பிகைப்பெண்ணின் யோகசவுக்கியமாம் எ-று. 1894

ஆண்டாண்டொன்று அதுமூன்று ஆண்டி லசைவதுவும்
நீண்டாடிநின்று நிலையொன்றுமூல நிலையிலிரும்
ஆண்டாண்டு ஆண்டி லம்பிகாயோகம துதனில்
தூண்டாமணிவிளக் கேற்றியதீபச் சுடர்செதியே.

இ-ள். வருஷம் ஒன்றிலும் மூன்றிலும் அசைந்து நின்று ஆறுவது வருஷத்தில் அம்பிகாயோகமாம், அப்பொழுது அழகிய தூண்டாவிளக்குவற்றிய தீபச்சுடரின் செதியுண்டாகும் எ-று, 1895

செடியானசித்து அறுபத்துநாலுங்கிரகிக்கவும்
திடிதபற்றறிந்து அதினதிலுள்ள துன்பங்களெல்லாம்
படிபடியாய்ந்து கருக்கண்டுதேறிப் பலகலையும்
முடிப்பித்துஞான முத்தியுண்டாக்கு முனைசுழியே.

இ-ள், அறுபத்துநான்கு சித்துக்களையும் கிரகிக்கவும், அவற்றிலுள்ள துன்பங்களையெல்லாம் படிப்படியாய்ந்து அவற்றின் மர்மங்களைக்கண்டுதெளிந்தபலசாஸ்திரங்களையும்முடித்துஞானமுத்தியுண்டாக்குவதுசுழிமுனையாம்,

வெண்பா.

முத்திசித்தியுண்டா மூலச்சுழிநடுவில்
சத்திசிவப்ரெண்டுமொன்றாய் தான்தோற்றும்-நித்தியமும்
காலைபொடுமாலை கண்டமதிறும் மசவு
வாலைவயதாதி யிதுமாற்று.

இ-ள், சுழிமுனையின்மூலத்தில் சத்தி - சிவமிரண்டுமொன்றாயத் தரிசனையாம், அதினால முத்தி சித்திக்கும். ஆகையால் காலை-மாலைகளில்கண்டத்தின் கண் அசாபசத்தியே வயதுள்ளவனாவார் எ-று, 1897

மாற்றும்வகையறியார் வாசியெனுங்காணளவு
பார்த்துகொண்டதாரைவிடாப் பாலித்து-மாற்றும்வகை
அன்னைக்கண்ணுட மசவுமதுபிரியா
விண்ணையொட்டி வாசிகட்டுமே.

இ-ள், மாற்றும்வகையையறியமாட்டார்கள், வாசியென்கிற அசைவைப்பார்த்து கண்டதுவாரத்தினின்று சரம்மாற்றும்வகையாவது அண்ணாக்கின் கண் அசபையினின்றும் பிரியாமல் ஆகாசத்தைச் சேர்ந்து வாசியைக்கட்டும்;

மேல்கீழும்வாசி விரும்பவொருவழியாய்
கால்வாங்கிப்பாயாது காலையதும்-மேல்கீழும்
சுவாசமதுமோடாது சொக்காதசவெனவும்
உவாசமதுவூதுமோ டாதே.

இ-ள், வாசியானது மேலும் கீழும் ஓடாதபடி ஒருவழியால் கால் வாங்கிப்பாயாது, மேலுங் கீழுஞ் சுவாசமோடாது, சொக்காத அசபை எனவும் சுவாசமுழுதும், வெளியிலோடாது எ-று. 1899

அன்னமயமதித மடிக்கடிதானுகாது
வின்னம்பரவிபழ மேனுஞ்-சொன்னேன்காண்
பசும்பாலுஞ்செய்கையொன்று பாலாகாமற்றொன்று
விசாவின்பாலொன்றே மேல்.

இ-ள், அடிக்கடி அன்னமயமாகாது, அன்னமானல் பின்ன கண்டாலும், பசும்பால் என்பதொன்று, பாலாகாதது மற்றொன்று, ஆனல் ஆவின்பாலே உயர்ந்ததாகும் எ-று. 1900

வருஷமூவாண்டில் வாசிகொண்டுதாரை
உருவேற்றங்கண்டங்கி முபாயமதாய்-வருஷமாம்
கீழிருந்துமேலுங் கீழ்மேலும்பாயும்விதம்
பாய்வீட்டைசுத்திசெய்து பார்.

இ-ள், மூன்றுவருஷத்தில் வாசியைக்கொண்டு தாரையை கண்டத்தின்கீழ் உபாயமாய் உருவேற்றி கீழுமேலும், மேலுங்கீழுமாக ஓடும்வீட்டைச் சுத்தி செய்துபார் எ-று. 1901

வசியடங்கவுமுன் மலசுத்திகலசுத்தி
பேசினதுஞானவெட்டிப் பேசும்-வாசியது
ஒன்பதுவாரகுழி ஓடாதுசுவாசமது
மென்குருகடாட்சமெனு மேல்.

இ-ள், வாசியானது அடங்கினல் மலசல சுத்தியாகும் இப்படிசொன்
னது ஞானவெட்டி வாசியானது என்னுடைய குருவின்கிருபையாலொன்பது
வாசலின் வழியேயாகும் எ-று. 1902

ஆதியொருவாண்டி லழுக்குகளெல்லாமுறியும்
பேதியிலேயுண்டமுரி பெருமைகாண்-ஆதியிலும்
முழுவயிர்முன்னுண்டில் முக்காலாம்பின்னுண்டில்
பழுதிலேமூவாண்டுவரை பார்.

இ-ள், முதல்வருஷத்தில் அழுக்குகளெல்லாம் முறியும், அமுரியின்
பெருமையுமுண்டு, அதவும் வருஷத்திற்குமுன்னேவயிரமும், பின்னேமுக்
காலுமாகும், இங்ஙனம் மூன்றுவருஷம் வரைக்கும்பார் எ-று, 1903

அரைவயிறுசாதம் புக்கடியுமாகாது
தரையதுவுமொருவேளைச் சொன்னேம்-அரைவயிறு
அதினுலுமாவதென்ன அமுரிபிடியன்னம்
மெதுவாகஅன்னமுண்ணு மேல்.

இ-ள், அரைவயிறு அளவாக ஒருவேளைக்குச்சாப்பிட வேண்டும், மெது
வாக அன்னமுண்டு அமுரிபிடி எ-று. 1904

விருத்தம்.

மூன்மலமேலாமொழியலவணம்போச்சுமுனதுசடமாதிதமுக்
தங்கமாச்சு, தன்மயமாயெடுத்தவிதஞ்சரிதானுச்சு தந்தையில்லாத
ன்மமெப்படியுண்டாச்சு, உன்மயத்தாலுனக்குதந்தை யுருதானுச்சு
உப்புஅந்தப்படிவிதங்காண் யோகியாச்சு, மன்மதங்காணீசனுட ம
வுனமாச்சுமயமான நித்திரையைமாற்றினுரே.

இ-ள், மூன்மலங்கள் ஒழியவேண்டும் போச்சு. அதினல் தேகமுந்தங்
மாச்சு இவ்வனம் எடுத்தது சரியாய் முடிந்தது, தந்தையில்லாமல் ஜென்ம
மெப்படியுண்டாச்சு? உன்னுடையபதத்தினுல் உனக்குத்தந்தைரூபம்வந்தது
மன்மதமல்லவா ஈசனிடத்தில் மௌனமாச்சு, மயமானநித்திரையை அவரல்
லவோ மாற்றினுர் எ-று. 1905

மாற்றினுர்மும்மலத்தைவாரிகுழமலப்புளியுஞ் சலமதனுல்மதி
யினுலும், எற்றினுர் சரமாறி மாலின்பாணம் இந்திரியமெனு மமுரி
ராமபாணம், தூற்றினுர்போலுமிது அறிவோனுகில் சொற்பேதம்
குருபேதஞ்சொல்வாரில்லை, நீற்றினுருப்பதுவும்நீறிப்போச்சுநீற்றி
னத்தைவடிரவியில்நீர்போமாண்டே.

இ-ள், மலப்புளியையும், மும்மலத்தையும், சலத்தினுலும், மதியினுலும்
மாற்றினுர்கள், சரமாரியையும் இந்திரியமென்றும்இராமபாணத்தையும்தேற்றி

னார்கள், சொல்பேதம், குருபேதஞ்சொல்வாரெவருமில்லை, நீற்றினத்தைதரீற்
றினார்கள், அதுவும் சூரியனொளியின் சகாயத்தால் நீரிப்போச்சு எ-று,

இந்தவிதந்தோண்ணூற்றூர்கருவிற்சுட்டுளெண்சாணுதேகமதிலு
ருந்தசுவாசம், வந்தஎதிர்மனிதர்களை விழியால் பார்த்த வகையது
போலுட்கருத்துமணிதீபங்காண்உந்தன்வழியொன்பதுவுமொளித்
துப்போச்சுஒருவழிகாண்போய்வரவுங்வாசியாச்சு, வெந்தணலால்
கட்டியதோர்வாசியோகம்மேலானயோகம்கடந்தோர்களாண்டே.

இ-ள், இப்படியாகத்தொண்ணூற்றாறு கருவிகளையெல்லாஞ்சுட்டுஎண்
சாண்தேகத்தில் இந்தச்சுவாசமானது எதிரேவரும் மனிதர்களைப் பார்த்தது
போல் உட்கருத்தானது மணித்தீபமாகும் உம்முடைய நவதுவாரங்களும் ஒ
ழிந்துபோச்சுபோய்ப்போய்வரவாசியாச்சு, வெவ்விபடீஷ்ணத்தால்கட்டியவா
சியோகம் உயர்ந்ததாச்சு எ-று, 1907

வேறு-விருத்தம்.

இருபத்தோராயிரத்து அறுநூறுசுவாசமதுமெல்லாமொன்று
ம், கருதிரண்டுவுருவதுபோல் பத்தாண்டு கடந்துதச தீட்சைக்கப்
பால்அருவுருவாய்நின்றசவு சரிப்படுங்காண்குறைந்ததெல்லாமாண்
டேகேளீர், குருவருளால்யோகமென்றவழிபெற்ற துறைகளெல்லா
ங்கூறினேமே.

இ-ள், இருபத்தோராயிரத்தறுநூறு சுவாசமும் ஒன்றாய் கருவானது தி
ரண்டு உருவாவதுபோல் பத்துவருஷங்கடந்து பத்துதீட்சையுஞ்செய்துகொ
ண்டு நின்றால் அசைவுசரியாகும், குறைந்ததெல்லாம்குருவருளால்யோகமெ
ன்கிற வழியையடைந்த துறைகளெல்லாங் கூறினேம் எ-று. 1908

அஞ்ஞானம்போக்கிசிவ மெய்ஞ்ஞானத்துறையறிவனேகங்கா
லம், விஞ்ஞானவஸ்துசொல்லுந்தயிலமுறையறிபவராய்தேவஞானி
சன்னாசிமகத்துகள்தான்வசியமெட்சணிசெய்வார் சாஸ்திரஞ்சொல்
வார், எஞ்ஞானமுழுதுமறிந்திருப்பவர்களவரிடத்தெட்சணியும்வா
ழ்வாள்.

இ-ள், அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்துறையையறிவது அநேக
காலம், வஸ்துக்களைச்சொல்லுந் தயிலத்தின்முறைகளை உணர்பவராய்வேத
ஞானி, சந்நியாசி, மகத்துக்கள், இவர்கள் வசியமும் எட்சணியுஞ் செய்வார்
கள், சாஸ்திரஞ்சொல்லு ஞானங்களையெல்லாம் அறிந்தவர்களிடத்தில் எட்
சணியும்வாழ்வாள் எ-று, 1909

விருத்தம்.

வாதவயித்தியஜோஸ்ய மாந்தரீகம் மறுபிறவிஞானசிவவாழ்க்
கைதன்னில், ஜாதியிலும்வம்மிசவான்கல்வித்தானால் தசதீட்சைசய

ம்புவெகுவர்ணங்காணும்,சோதியிதுவயதுநாறுபிறவியாளுல்செகம
திலுஞ்சிவயோகிசெல்வவானும்,சோதிமணிதீபவொளிப் பிரகாசத்
தில்சுரூபமணிநிரூபமதிசுயம்புமுத்தர்

இ-ள் வாதம் வயித்தியம், சோதிடம், மாந்திரீகம், மறுபிறவி, சிவஞான வாழ்க்கை, இவற்றில் சாதியிலும் வயித்திலும் உயர்ந்தவனுனல் தசதீட்சையான துசுபம்புகர்ணங்காணும் நூறுவயதுள்ள ஜென்மமாகுல் உலகத்தில்சிவயோகியும், செல்வவானுமாவான், தேஜஸையுடையமணித்தீபவொளிப்பிரகாசத்தில் சொருபமணி நிருபம் மிகுந்த சுயம்பு முத்தர்களாவர் எ-று.

முத்துநவரத்தினம்போல்முடிந்தருளுந்தம்முன்னேர்கள்பதினெண்பேர்கமலம்போற்றி, சத்திசிவதீட்சைபத்து-மிரண்டும்வாழி சனகாதிமாமுனிசித்தர்வாழி, பத்துநூற்றுயிரத்துமேலாமின்னூற் பரிபூர்ணசொச்சமெனுமிருபத்தெட்டும், வித்தினல்விளைவானசகஸ்திரகளுல்,வேதாந்தஞானவெட்டி விளக்கமுற்றே

இ-ள் இது, முத்து, நவரத்தினம் இவைகளைப்போல் முடிந்த ருளுமாகும், இதவிஷயத்தில் முன்னேர்கள் பதினெண் சித்தர்கள் இவர்கள்பாதம் போற்றிசத்தி தீட்சை சிவதீட்சை, சனகாதி முனிவரும்சித்தரும் தாழக்கடவன ஆயிரத்தைந்நூற்றுச் சொச்சங்களும் நன்னூலான வேதாந்தஞானவெட்டி விளக்கமுற்றுப்பெற்றது எ-று 1910

# ஞானவெட்டியான்-௲௫௱

மூலமும்-பொழிப்புரையும்.

முற்றுபெற்றது.

---

கடவுள் துணை

# பிரயோஜன அட்டவணை

—(*)—


| | பக்கம். |
|---|---|
| தத்துவவுற்பத்தி | 8 |
| தன்வரலாறுகூறுதல் | 16 |
| சரீரவுற்பத்தி | 22 |
| ஆறாதாரவகை இந்திரியவிவரம் | 39 |
| தசநாடிமுறை | 47 |
| வசையமுறை | 51 |
| ஆயுர்விர்த்தி | 68 |
| அவயவக்குறையுமுறை | 76 |
| இடையின்கலையினளவு | 83 |
| பிண்டோற்பத்தி | 85 |
| கெர்ப்பக்குறி | 89 |
| ஆறுதாரதரிசனை | 9[illegible] |
| "ஆனந்தக்களிப்பு | 101 |
| ஜெனனகாலதரிசனை | 105 |
| பிண்டங்கீழ்நோக்குற்றமு | 113 |
| "நொண்டிச்சிந்து | 116 |
| பிறவித்துன்பம் | 120 |
| பிறந்தவகை | 126 |
| பாலூண்ணல் | 134 |
| தொட்டிலாட்டுஞ்சிறப்பு | 138 |
| சிவபூசைசெய்தவிவரம் | 144 |
| ஜாதிவேற்றுமை | 152 |
| ஜாதிவகை | 154 |
| உலகவுற்பத்தி | 161 |
| மதபேதகண்டனம் | 169 |
| ஜாதிபேதகண்டனம் | 170 |
| பொய்க்குருவைவிலக்கல் | 178 |
| ஈஸ்வரசிருஷ்டி | 180 |
| ஜீவலயம் (கொச்சகம்) | 194 |
| "தரு | 197 |
| கற்பசாதனை | 205 |
| யோகசாதனை | 212 |
| வாசிதாரனை | 218 |
| கற்பமுண்ணுமுறையும்பத்ய | 224 |
| அண்டச்சூரணம் | 229 |
| வாசிவசப்படுத்தல் | 231 |
| யோகசித்தி | 238 |
| சர்வசித்தி(ஆனந்தக்களிப்பு) | 243 |
| முப்பூவிலக்கணம் | 244 |
| பூநீருற்பத்தியாகுங்கால ப்அதெடுக்கும்வகையும் | 254 |
| முப்பூவினால்செயமாகுஞ் சரக்குகள் (விருத்தம்) | 259 |
| சண்டமாருதக்குழம்பு | 273 |
| பஞ்சாமிர்தக்குளிகை | 294 |
| ஜன்னிவிவரமும்அதற்க னுபானமும்(கொச்சகம்) | 298 |
| கற்பமுண்ணுங்கால்அபத் தியநேரிடுமாகில்அதற் குவயித்தியம் | 305 |
| கற்பமுண்ணும்போதுநே ரிடுந்துன்பம் | 309 |
| காயசித்தி | 312 |
| பூரணமுறை | 316 |
| ரசக்குளிகை | 320 |
| மனோதிடங்கூறல் | 323 |
| கற்பலேகியம் | 329 |
| வாதமுறை | 332 |
| ஞானவெற்றி | 335 |
| யோகஜெபம்ஏலப்பாட்டு | 338 |
| முப்பூமுடித்தல் | 345 |
| ரசபஸ்பம் | 343 |
| அரிதாரபஸ்பமுறை | 350 |
| சவ்வீரசுன்னம் | 355 |
| கௌரிபாஷாணச்சுன்னம் | 360 |
| பளிங்குபாஷாணபஸ்பம் | 364 |
| சாதிலிங்கபஸ்பம் | 369 |
| குமரிலேகியம் | 376 |
| நாகபஸ்பம் | 380 |
| காஸேதிராவகம் | 386 |
| மகாமேகபூபதிலேகியம் | 392 |
| மதனகாமேஸ்பரதயிலம் | 398 |
| நாராயணசெந்தூரம் | 407 |
| நவலோகபூபதி | 411 |
| சிங்கிபஸ்பம் | 416 |
| வீரசுண்ணம் | 424 |
| சூதச்சுண்ணம் | 424 |
| யோகநிலை | 432 |
| கெந்திதிராவகம் | 441 |
| எட்சணி(வெண்பா) | 443 |
| மோடிவகை | 452 |
| மாந்தரீகம்தஞ்சூரணமுறை | 454 |


பிரயோஜன அட்டவணை முற்றிற்று.



Printed at the S. S. V. Press,
Title Page only, Madras.